தினசரி தியான புத்தகம்

நாளுக்கு ஓர் நல் வார்த்தை

சகோதரி ஸ்டெல்லா தினகரன்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (*E-Books*) இலவசமாக (மத்தேயு *10:8*) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (*Download*) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (*E-Book*) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (*Email*) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

நாளுக்கு ஓர்
நல் வார்த்தை

தினசரி தியான புத்தகம்

சகோதரி ஸ்டெல்லா தினகரன்

வெளியீட்டாளர்:

இயேசு அழைக்கிறார்

16 கிரீன்வேஸ் சாலை,

சென்னை - 600 028.

முதல் பதிப்பு : டிசம்பர் 2006

இரண்டாம் பதிப்பு : மார்ச் 2007

© All Rights Reserved
under international copyright law.
Contents and / or cover may not be reproduced
in whole or in part in any form without the express written
consent of the publisher.

Printed at : Vasanth Prints, Chennai, India
Mobile: [illegible] E-mail: [illegible]

Prayer Tower
(A Unit of Jesus Calls)
A Registered Charitable & Religious Trust
16, Greenways Road, Chennai - 600 028. India Ph : 2495 5555, Fax : 24936988 (Intl 91-44)
Website : www.jesuscalls.org E-mail : dgs@jesuscalls.org / paul@jesuscalls.org

Founder:
Dr. D.G.S. DHINAKARAN, C.A.I.I.B., Ph.D., D.Litt. (Canada)., D.D.(U.S.A.).

அணிந்துரை

"மனுஷனுடைய இருதயத்திலுள்ள கவலை அதை ஒடுக்கும்; நல்வார்த்தையோ அதை மகிழ்ச்சியாக்கும்"

(நீதி. 12:25).

நம்மைப்போன்ற பாமர மக்களானாலும் சரி, பக்தர்களானாலும் சரி, கவலை நம் இதயங்களை ஒருங்கே ஒடுக்கத்தான் செய்கிறது. ஒவ்வொரு நாளும் ஏதோ ஒருவிதமான கவலை நம்மை ஆட்கொள்வது சகஜம், என கீழ்க்கண்ட வேதவசனங்கள் நமக்கு தெளிவுப் படுத்துகின்றன.

"நாளையத்தினத்தைக் குறித்துப் பெருமைப்பாராட்டாதே; ஒருநாள் பிறப்பிப்பதை அறியாயே" (நீதி. 27:1).

"... நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்" (மத். 6:34).

பக்தனாகிய பவுலடிகளும்கூட, கவலைக்கு தப்பவில்லை.

"இவை முதலானவைகளையல்லாமல், எல்லாச் சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது" (2 கொரி. 11:28)

என்கிறார்.

எனினும், எத்தகைய கொடிய கவலையின் சூழ்நிலையிலும் நம் உள்ளத்தின் கசப்பை, மகிழ்ச்சியாக மாற்ற தேவன் பயன்படுத்தும் ஓர் மகிமையான ஆயுதம் தான் "தேவனுடைய நல்வார்த்தை" (எபி. 6:5).

நம் அன்றாடக வாழ்விலும், மக்கள் மூலமாகவும் நமக்கு **"நல்வார்த்தைகள்"** கிடைக்கத்தான் செய்கின்றன. அவைகள் நம்மை உற்சாகப்படுத்துகின்றன அல்லவா! ஓர் உதாரணத்தை நான் கூறட்டும்:

ஒரு சமயம் நடுக்கடலில் போய்க்கொண்டிருந்த ஒரு கப்பலில் குடிதண்ணீர் முற்றிலும் தீர்ந்துவிட்டது. அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் கப்பலே தடுமாறி நின்றது. காரணம், கப்பலைச் சுற்றியிருந்தது உப்புத்தண்ணீர் நிறைந்த ஆழ்கடல் தான். எனவே, கப்பல் தலைவன் திகிலினால் நிறைந்து, தங்களுக்கு உதவுமாறு, அருகிலிருந்த எல்லாக் கப்பல்களுக்கும் அவசர செய்தி (S.O.S.) அனுப்பினான். அப்பொழுது ஒரு குறிப்பிட்ட கப்பலிலிருந்து கீழ்க்கண்ட மறுசெய்தி வந்தது:

"Lower your buckets where you are" (உங்கள் கப்பல் நிற்கும் இடத்திலேயே வாளிகளை தண்ணீருக்குள் இறக்கி மொண்டு கொள்ளுங்கள்).

இந்த அறிவுரை கப்பல் தலைவனுக்கு ஆச்சரியமாக இருந்தபொழுதிலும், மாலுமிகளை அந்த இடத்திலுள்ள கடல் தண்ணீருக்குள் இறக்கி தண்ணீரை சேகரிக்குமாறு கட்டளையிட்டான். அந்த தண்ணீரை சற்று நாவில் எடுத்துவைத்து ருசிபார்த்த பொழுதோ அவன் பிரமிப்படைந்தான். காரணம், அது அத்தனை ருசியான தண்ணீராக இருந்தது. அந்த ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டும் ஒரு நல்ல நீரோடை ஓடிக்கொண்டிருந்ததினால் அங்கு மட்டும் நல்ல குடிதண்ணீர் கிடைக்கும் என்று அந்த கப்பலின் மாலுமி அறிந்திருந்தார்; அந்த **"நல்வார்த்தையை"** அனுப்பினார். அந்த கப்பலிலுள்ள மக்களுடைய கவலை மறைந்தது! கசப்பு மறைந்தது! முகங்கள் மலர்ந்தன!

"ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம்" (நீதி. 25:11)

"மனுஷனுக்குத் தன் வாய்மொழியினால் மகிழ்ச்சியுண்டாகும்; ஏற்றகாலத்தில் சொன்ன வார்த்தை எவ்வளவு நல்லது!" (நீதி. 15:23)

என்ற வேத வசனங்கள் எத்தனை உண்மையானவைகள்!

இதேபோல் நாம் கவலையினால் நிறைந்து தடுமாறும்பொழுது, தேவன் "நல்வார்த்தைகளை" தம்முடைய பக்தர்கள்மூலமும் அனுப்பி நம்மை பூரிக்கச் செய்கிறார்.

"(தீர்க்கதரிசியாகிய) சாமுவேலின் வார்த்தை இஸ்ரவேலுக்கெல்லாம் வந்தது..."

(1 சாமு. 4:1)

என்ற வேதவாக்கின்படி, சாமுவேல் எனும் தீர்க்கதரிசியின்மூலம் தம்முடைய **"நல்வார்த்தைகளை"** இஸ்ரவேல் என்னும் நாட்டிலுள்ள லட்சக்கணக்கான மக்களுக்கு அனுப்பி, அவர்களை தேவன் திடப்படுத்தினார்.

இன்று நம் வாழ்விலும்கூட நமக்கும் பக்தர்கள் வாயிலாக, தேவனுடைய **"நல்வார்த்தைகள்"** கிடைக்கத்தான் செய்கின்றன.

1961-வது ஆண்டு. ஒரு கன்வென்ஷனுக்கு நான் போயிருந்தேன். காரணம், அப்பொழுதுதான் என்னுடைய முதல் ஆண் குழந்தை பிறந்து இறந்துவிட்டது. தாங்கொணா துக்கம்! உடைந்த உள்ளத்துடன் ஆறுதலைத் தேடி அந்தக் கூட்டத்திற்கு நான் சென்றிருந்தேன். கூட்டம் முடிந்தது. பிரசங்கித்த போதகர் எனக்கு அறிமுகமானவர், ஓர் பக்தன்! உண்மையில் ஓர் அப்போஸ்தலன்! அவர் நேரடியாக என்னிடம் வந்து, பின்வருமாறு கூறினார்:

"தம்பி, உங்களுக்கு நேரிட்ட இழப்பைப்பற்றி நான் கேள்விப்பட்டேன். ஆனால், தேவனுடைய பிள்ளைகளுக்கு இழப்பு என்பதே இவ்வுலகில் கிடையாது (நாம் யாவற்றையும் திரும்பப் பெறுவோம்)." இந்த வார்த்தைகள் எனக்கு உண்மையில் தேவாதி தேவனுடைய வாயிலிருந்து நேரடியாக வெளிப்பட்ட வார்த்தைகளாகவே தோன்றின. ஒரு நிமிடம் அதிர்ந்து போனேன். பிறகுதான் என்னைப்புரிந்தால், என் உள்ளத்திலிருந்த கவலையெனும் இருள் மாறி "புதிய நம்பிக்கை" பிறந்திருக்கக் கண்டேன்; பிரமிப்படைந்தேன். "ஞானமுள்ளவர்களுடைய நாவோ ஒளஷதம்" (நீதி. 12:18) என்ற சத்தியத்தை உணர்ந்தேன்.

1959-வது வருடம் எனக்கும், என் அன்பு மனைவி ஸ்டெல்லா தினகரன் அவர்களுக்கும் திருமணமாயிற்று. 1962-வது வருடம் ஆகஸ்ட் மாதம் 10-ம் நாள் அருமை இரட்சகர் மனதுருகி என்னை தம் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணினார். அவரை மூன்று மணிநேரம் முகமுகமாய் தரிசிக்க அருள்புரிந்தார்! இதன்மூலம் என் வாழ்க்கையில் ஏற்பட்ட மிகப்பெரிய மாறுதலைக்கண்ட என் அன்பு

மனைவி, தனக்கும் இதேவிதமான அபிஷேகம் வேண்டும் என்று கெஞ்சி விடாப்பிடியாய் பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தார்கள். ஒருநாள் தேவன் இவ்வாறு அவர்களோடு முகமுகமாய்ப் பேசினார்.

''என் அன்பு மகளே, உன் கணவனை மோசே தீர்க்கதரிசியின் வலதுகரம்போல் உலகம்முழுவதும் நான் பயன்படுத்த விரும்புகிறேன். நீ எந்தவிதத்திலாவது அதற்கு தடையாக நிற்பாயோ?''

எந்தவிதமான தயக்கமுமின்றி, உடன்தானே, என் மனைவி ஆண்டவரிடம், ''இல்லை ஆண்டவரே, நான் ஒருநாளும் அதற்கு ஒரு தடையாக இருக்கவே மாட்டேன்; உதவியாக மட்டும் இருக்க எனக்கு பெலன் தாரும்'' என்று பதில் சொன்னமாத்திரத்தில், தேவன், ''நான் உன்னையும் இப்பொழுது என் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம்பண்ணுவேன்'' என வாக்களித்தார். அவ்வாறே வெகுசில நாட்களில் ஒரு அற்புதமான விதத்தில் அபிஷேகம் பண்ணினார். அன்றுமுதல் ஒரு ஆசீர்வாதமான பாத்திரமாக தேவன் எங்கள் குடும்பத்திற்கு மாத்திரமல்ல, ஊழியத்திலும் பயன்படுத்தி வந்திருக்கிறார்; வருகிறார்.

''தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்'' (பிலி.2:13).

என்ற வேதவாக்கிற்கேற்ப, தேவன் தாமே அவர்கள் இருதயத்தில் பேசி, இதைப்போன்ற ஓர் புத்தகத்தை எழுத, ஒவ்வொருநாளும் மக்களுக்கு தேவனிடமிருந்து ''**ஓர் நல்வார்த்தை**'' வர வழிவகுக்க, அவர்களுடைய இருதயத்தை ஏவி எழுப்பினார். அவ்வாறே இந்த புத்தகத்தை எழுதி முடித்துள்ளார்கள்.

இந்த புத்தகத்தின் முதல் வெளியீட்டினை வாங்கிப் பயன்படுத்தும் மக்கள் யாவரும் ஒருங்கே கூறுவது இதுதான்:

''உண்மையில் ஒவ்வொருநாள் காலையிலும் தேவனுடைய நல்வார்த்தை எங்களை தேடிவருகிறது. எங்கள் சூழ்நிலைக்கேற்ப அந்த வார்த்தை எங்களை உற்சாகப்படுத்துவதாய் இருக்கிறது''. இதற்கு முக்கிய காரணம் என் மனைவி ஓர் உடைந்த பாத்திரம்! எங்கள் இல்லற வாழ்வின் பெரும் பகுதி, ஊழியம் எல்லாம் ''அழுகையின் பள்ளத்தாக்கிலே''யே (சங். 84:6) கழிந்து விட்டன. இந்த புத்தகத்தில் ஆங்காங்கே மறைமுகமாக குறிப்பிடப்பட்டுள்ள ''**கசப்பான**'' அனுபவங்கள் எல்லாம் ''**அழுகையின் பள்ளத்தாக்கில்**'' என் அன்பு மனைவி அனுபவித்தவை தாம்! எனவேதான் அது மக்களுக்கு ''**நல்வார்த்தையைக்**'' கொண்டுவர, அவர்களுக்கு உதவியுள்ளது.

மக்கள் விருப்பத்திற்கிணங்க, இந்த இரண்டாம் பதிப்பினை, கண்ணீர் நிறைந்த ஜெபத்துடன் வெளியிடுவதில் பரவசமடைகிறேன்!

''கர்த்தர், ... நல்வார்த்தைகளையும் ஆறுதலான வார்த்தைகளையும் பிரதியுத்தரமாகச் சொன்னார்'' (சக. 1:13)

என்ற வாக்கின்படியே, இந்த பதிப்பையும் பயன்படுத்தும் ஒவ்வொருவரையும் நாள்தோறும் ''**தேவனுடைய நல் வார்த்தைகளும், ஆறுதலான வார்த்தைகளும்**'' பரலோகத்தின் தேவனிடமிருந்து இறங்கி வந்து ஆசீர்வதிக்க, ஆண்டவர் அருள்புரிவாராக!

டி.ஜி.எஸ். தினகரன்.

HINDUSTAN BIBLE INSTITUTE & COLLEGE

86-89, Medavakkam Tank Road, Kilpauk, Chennai – 600 010.

Rev. Dr. Jebaraj Samuel, M.A., M.Th., Ph.D.,
Former Principal &
Director of Promotion& Public Relations

ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்திற்கு ஏற்றவனாகக் கண்டேன் என்று தாவீதைக் குறித்து தேவனே சாட்சி பகர்ந்தார். தாவீதரசனின் வெற்றி வாழ்க்கைக்கும், பரிசுத்த ஜீவியத்திற்குமுரிய மாபெரும் இரகசியம் அவனுடைய ஜெப தியானமே.

> **"நான் தியானிக்கையில் அக்கினிமூண்டது. என் இருதயம் அனல் கொண்டது, என் நாவினால் விண்ணப்பம் செய்தேன்"**
> (சங்.39:3).

தாவீதின் நாட்களில் மோசேயின் ஐந்து புத்தகங்கள் மட்டுமே நியாயப்பிரமாணமாகக் கொடுக்கப்பட்டிருந்தது. இன்றோ நாம் முழு வேதாகமத்தையும் ஈவாகப் பெற்றுள்ளோம். ஆனால், விஞ்ஞான உலகில் வேகமாக ஓடும் நமக்கு தியானிக்க நேரமில்லை அல்லது மனமில்லை.

இந்த நிலைமையில் அன்பு சகோதரி Dr. **ஸ்டெல்லா தினகரன்** எழுதியுள்ள **"நாளுக்கு ஓர் நல் வார்த்தை"** என்ற தின தியான நூல் ஒரு வரப்பிரசாதம் என்றால் மிகையாகாது. இந்த தியான நூல் வேதாகமத்தின் கோட்பாடுகளுக்குட்பட்டு, நாளுக்கொரு வாக்குத்தத்த வசனத்தின் அடிப்படையில், ஆவிக்குரிய போதனைகளை தெளிவாக விளக்கி; உண்மை சம்பவங்களோடு அழகுபடுத்தி; நாவினால் ஆண்டவரிடம் விண்ணப்பம் செய்ய இனிமையான ஜெபத்தோடு முடிக்கப்பட்டுள்ளது. எந்த மனிதருக்கும் ஆண்டவரோடு நடக்கும் அனுபவத்தை நிச்சயம் பெற்றுத்தரும் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை.

இந்த தியான நூல் ஆண்டவரைப் பிரியப்படுத்துகிற ஒவ்வொரு வீட்டிலும் இருப்பது இறைவன் இயேசுவின் பாதுகாவலையும், ஆசீர்வாதத்தையும் முழுக்குடும்பத்திற்கும் கொண்டு வருவதோடு செவ்வையான பாதையில் நடத்தி, ஜீவனையும், மகிமையையும் பெற்றுக்கொள்ள வழிகாட்டும்.

சகோதரி Dr. **ஸ்டெல்லா தினகரனின்** பேனாவில் எழுந்த மற்றொரு மாணிக்கமாகிய இத்தியான நூல் இறைவன் இயேசுவுக்கு மகிமையையும், இறை மக்களுக்கு இரட்சிப்பின் சந்தோஷத்தையும் கொண்டு வரவேண்டும் என்பதே என் நாவின் வாழ்த்தும் என் இதயத்தின் மன்றாட்டுமாகும்.

நலம் பெற வாழ்த்தும் இறையடியான்

Jebaraj Samuel

அட்டைப்பட விளக்கம்!

"அவர்களோடே அவர் பந்தியிருக்கையில், அவர் அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு, அவர்களுக்குக் கொடுத்தார். அப்பொழுது அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு, அவரை அறிந்தார்கள். உடனே அவர் அவர்களுக்கு மறைந்துபோனார்" (லூக்கா 24:30,31).

ஆண்டவர் இயேசு மரித்து உயிர்த்தெழுந்தபின்பு, தமது சீஷர்களுக்கு தம்மை வெளிப்படுத்தின தரிசனம் இது! இந்த தருணத்தில் சீஷர்கள் தங்கியிருந்த இடத்திற்கு அவர்களோடு சென்று, அவர்கள் பந்தியிருக்கையில் அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு அவர்களுக்கு அவர் கொடுத்தபோது, அவர்கள் கண்கள் திறக்கப்பட்டு, அவரை அறிந்தார்கள். (இதைத்தான் அட்டைப்படம் விளக்குகிறது).

அதேபோன்று இன்றும் ஒவ்வொருநாளும் ஆண்டவர் உங்களிடம் வந்து, தமது வார்த்தையாகிய "அப்பம்" மூலம் உங்களோடு பேசுவார்; உங்களை ஆசீர்வதிப்பார். ஒவ்வொரு முறையும், ஒவ்வொருநாளும் வித்தியாசம் வித்தியாசமான முறையில் தம்மைப் பற்றிய அறிவினால் உங்களை இதன்மூலம் நிரப்புவார். உங்களது சகல குறைவுகளையும் மாற்றி, தம்முடைய நிறைவினால் சம்பூரணமாய் ஆசீர்வதிப்பார்.

– ஆசிரியர்

முன்னுரை

அருமையானவர்களே!

இந்த தினசரி தியான புத்தகத்தை தயாரித்து வெளியிடுவதின் ஒரே நோக்கம், மக்கள் ஒவ்வொருவரும் அன்றாடக வாழ்வில் ஆண்டவருடைய வேத புத்தகத்திலிருந்து அவரால் வெளிப்படுத்தப்பட்டுள்ள அருமையான வாக்குத்தத்தங்கள், அதோடுகூட ஆறுதல்தரும் வார்த்தைகள், இவைகளை சற்று ஆராய்ந்து தியானித்து அதன்மூலம் ஆறுதல் பெற்று, ஆசீர்வாதம் பெற வேண்டும் என்பதுதான்!

ஒவ்வொருநாளும் நாம் சந்திக்க நேரிடுகிற பல்வேறுபட்ட பிரச்சினைகளைப் பார்க்கும்போது, இந்த நாள் என்னவாய் முடிவடையுமோ? என்று எத்தனையோ சமயம் கலக்கமடைகிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலைகளையெல்லாம் ஆண்டவர் மேலுள்ள விசுவாசத்தால் எளிதில் மேற்கொள்ள இந்த **தினசரி தியான நூல்** உங்களுக்கு ஓர் அரிய வழிகாட்டியாய் இருக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய ஒரே நோக்கம்!

இதில் கொடுக்கப்பட்டிருக்கிற ஒவ்வொரு வேதவசனத்தையும், வாக்குத்தத்தத்தையும் நீங்கள் மனப்பாடம் செய்து கொண்டு, அவைகளை உங்களுக்கென்று சொந்தமாக்கிக் கொள்ளும்பொழுது, ஏற்ற சமயத்தில் அவைகள் உங்களுடைய பாதைக்கு தீபமாகவும், வெளிச்சமாகவும், வழிகாட்டியாகவுமிருந்து உங்களை செம்மையான பாதையில் வழிநடத்தும் (சங்கீதம் 119:105,30). கவலைகள், பாரங்கள் யாவற்றையும் உங்களை விட்டு அகற்றி, சந்தோஷமும், மகிழ்ச்சியும் உள்ளத்தில் நிறையும்படி செய்யும் (எரேமியா 15:16). குறிப்பாக வாலிபர்களை பரிசுத்த வழியிலே நடத்தும் (சங்கீதம் 119:9).

ஆண்டவர் தாமே இந்த நூலை அநுதினமும் பயன்படுத்துகிற ஒவ்வொருவருக்கும், ஆறுதல், தைரியம், தெய்வீக நம்பிக்கை யாவற்றையும், அளவில்லாமல் தந்து, நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

– ஆசிரியர்

நாளுக்கு ஓர்
நல் வார்த்தை

ஒத்தாசை வரும் பர்வதம்!

''எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்'' (சங்கீதம் 121:1,2).

வருடத்தை ஆரம்பித்திருக்கிற நாம் ஒவ்வொருவரும், பல்வேறு எதிர்பார்ப்புகளோடு ஆரம்பித்திருக்கலாம். சிலர், இந்த வருடமாவது என் வாழ்வில் சாதனை செய்ய வழி ஏற்படுமா? என்றும், வேறு சிலர், இந்த வருடமாவது நான் விரும்பிய ஆசீர்வாதம் கிடைக்குமா? என்றும், பல்வேறு விதங்களில் சிந்திக்கலாம். எனினும், வேதவசனத்தின் வாக்குத்தத்தத்தின்படி, ஒத்தாசை வரும் ஒரே பர்வதம் (சங். 35:2,3), ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மட்டுமே! ஆகவே, அவரையே உறுதியாகப் பற்றிக்கொண்டு, முழுநம்பிக்கையும் அவர்மீது வைத்து, நாம் விரும்புகிறதற்கு மேலாக, நிறைவான ஆசீர்வாதம் பெறுவோமாக! (எபே. 3:20).

ஒரு குடும்பத் தலைவன் பல வருடமாக தனது பணியில் உண்மையும் உத்தமுமாக உழைத்தும், பெற வேண்டிய ஊதியத்தைப் பெறாமல், தனக்குப் பின்னே சேர்ந்தவர்களெல்லோரும் பதவியில் உயர்வதைக் கண்டு, மிகவும் மனமுடைந்தார். ஒருநாள் ஒரு தீர்மானம் செய்தார். அதன்படி, வேலையிலிருந்து வந்தபிறகு, இரவு உணவை ஒதுக்கினார். ஆண்டவர் பாதத்தில் முழங்காற்படியிட்டார்; தன் வேதனையை அவர் பாதத்தில் ஊற்றினார்! அதன்பிறகு ஒரு தெய்வீக சமாதானம் அவரை நிரப்ப, அப்படியே உறங்கிவிட்டார். இப்படியாக பல நாட்கள் செய்து வந்தார்! ஒரு நாள் ஓர் உயர் அதிகாரி திடீரென்று அவர் அலுவலகத்தை பார்வையிட வந்தார். அலுவலகத்தில் பணிபுரிபவர் ஒவ்வொருவருடைய விபரங்களையும் ஆழமாய் பரிசீலித்துப் பார்த்தார், அதில் இந்த குறிப்பிட்ட நபருடைய உத்தியோக உயர்வில் ஏதோ குறைவு இருப்பதை உணர்ந்து, அவர் அதை மிகவும் நுணுக்கமாய் கவனித்து, ''ஏன் இவருக்கு பதவி உயர்வு கொடுக்கப் படவில்லை?'' என்று சம்பந்தப்பட்டவர்களைக் கடிந்துகொண்டார். ஒரு புதிய பதவியை அவருக்கு வழங்கி, அதற்கு, இந்த நபர் விரும்பிய ஊதியத்திற்கும் மேலான அளவிலே ஊதியத்தைக் கொடுக்கும்படி எழுதி வைத்துவிட்டுப் போய்விட்டார். இது அலுவலகத்திலே யாவருக்கும் பெரிய ஆச்சரியத்தை உண்டுபண்ணியது.

ஆம், கர்த்தரையே ஒத்தாசையாக எடுத்துக் கொண்ட இந்த நபருக்கு, ஆண்டவரே மனித ரூபத்தில் இறங்கி வந்து, இந்த உயர்வைக் கொடுத்து, எல்லோருக்கும் முன்பதாக கனப்படுத்தினார் அல்லவா! இந்த ஆண்டவர் இன்றும் உயிரோடு இருக்கிறார். இந்த நாளில் மட்டுமல்ல, இந்த ஆண்டு முழுவதும் அவருடைய ஒத்தாசையை நீங்களும் கருத்தாய் தேடுவீர்களானால், உங்களுக்கும் இதேவிதமாக அற்புதங்களை என்றென்றும் செய்து, எப்படிப்பட்ட குறை உங்களுக்கு இருப்பினும் அதை மாற்றிப்போடுவார் (சங். 44:26).

ஜெபம்: ''அன்புள்ள ஆண்டவரே, என் வாழ்வில் எத்தனை குறைவுகள்! இந்த வருடமாவது எனக்கு நான் விரும்பும் ஆசீர்வாதம் கிடைக்காதா? என்று என் உள்ளம் ஏங்குகிறது. தயவுசெய்து, இந்த சகோதரனுக்கு உதவி செய்ததுபோல, எனக்கும் அற்புதம் செய்து, இன்றுமுதல் என்னையும் ஆசீர்வதியும். என் வாழ்விலுள்ள குறைவையெல்லாம் அற்புதமாக நிறைவாக்கும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!''

சிறுமையில் நினைவாய் இருக்கிறார்!

"நான் சிறுமையும் எளிமையுமானவன், கர்த்தரோ என்மேல் நினைவாயிருக்கிறார்; தேவரீர் என் துணையும் என்னை விடுவிக்கிறவருமாயிருக்கிறீர்; என் தேவனே, தாமதியாதேயும்"

(சங்கீதம் 40:17).

பல்வேறு நிலைமையில் சிறுமைப்பட்டு, ஒவ்வொருவரும் மனமுடைந்து போகின்றனர். அநேகர் தற்கொலையும் செய்ய நினைக்கின்றனர். காரணம், சிறுமையும் எளிமையுமான நிலைமையில், யாரும் நமக்கு உதவி செய்ய முன்வராதது தான். "ஆனால், அப்படிப்பட்ட சமயத்திலே கர்த்தர் இரக்கமும், உருக்கமும், தயவும் நிறைந்தவராய் நம்மீது நினைவாயிருந்து உதவி செய்ய ஓடோடி வருகிறார் (சங்.72:12). ஏனென்றால், நம்முடைய பாவங்கள், சாபங்கள், பல்வேறு கட்டுகள், தனிமை போன்ற பல்வேறு சிறுமைகளினின்று நம்மை விடுவிப்பதற்காக தம்மையே தியாக பலியாக சிலுவையில் அர்ப்பணித்து, பாடுகளையெல்லாம் நமக்காக பொறுமையோடு சகித்து, மரணத்தை, பிசாசை ஜெயித்தவர் அவரே! ஆகவே, உங்கள் வாழ்வில் சிறுமையை சந்திக்கும்பொழுது ஆண்டவரை நோக்கி ஜெபியுங்கள். அவரே சிறுமையையெல்லாம் மாற்றி, உங்களை ஆற்றித் தேற்றுவார் (2 கொரி.7:6).

கணவனை இழந்த ஒருவள், தன் கணவனின் இறுதி சடங்குகள் யாவும் முடிந்து, தன் உறவினர் யாவரும் வீட்டைவிட்டு போனபிறகு, தன் சிறுமையும் எளிமையுமான நிலைமையை நினைத்து, என்ன செய்வதென்று தெரியாமல் ஒருகணம் புலம்பினாள். மறுகணம், எழுந்து தன் அறைக்குள் சென்று, ஆண்டவரிடம் தன் கண்ணீரையெல்லாம் ஊற்றினாள். கர்த்தர் மனமிரங்கினார், அது முதல் அவள் காரியங்களை பொறுப்பெடுத்துக்கொண்டார். அவள் உள்ளத்தை சமாதானத்தினால் நிரப்பினார். பிள்ளைகள், தாய்க்கு கீழ்ப்படியவும், கருத்தாய் படிக்கவும், தங்களால் இயன்றவிதத்தில் உதவி செய்யவும்தக்கதாக, ஒரு நல்ல இருதயத்தை கொடுத்தார். இந்த விதவையும் எந்தெந்த காரியத்தை ஜெபத்தோடு செய்தார்களோ, அவைகளிலெல்லாம் ஆண்டவருடைய கரம் ஆசீர்வாதமாக இறங்கியது. அவர்கள் வாழ்க்கையை ஆண்டவர் பொறுப்பெடுத்துக்கொண்டார். அவள் செய்ததெல்லாம் வாய்த்தது. கர்த்தர் துணைநின்றபடியால், பிள்ளைகள் விரைவில் படிப்பை முடித்து நல்ல வேலையும், ஆண்டவர் அருளால் பெற்று, தாய்க்கு கிரீடமாக விளங்கினர். கர்த்தர் அவர்கள் ஒவ்வொருவர் மேலும் நினைவாய் இருந்து, கண்கலங்காதபடி காப்பாற்றினார்.

எனக்கு அன்பானவர்களே! நீங்களும் உங்கள் கலக்கங்களையெல்லாம் இந்த விதவையைப் போன்று ஆண்டவர் பாதத்தில் வைத்துவிடுங்கள். அவர் உங்களையும் கைவிடமாட்டார். அவர் நிச்சயம் உங்களையும் ஆதரிப்பார் (சங்.55:22). தாம் சிலுவையில் பட்ட சிறுமைகளை எண்ணிப்பார்த்து, உங்கள் வாழ்வின் சிறுமைகள் யாவற்றினின்றும் விடுதலையாக்குவார்.

<u>ஜெபம்:</u> "என் அன்புள்ள ஆண்டவரே, இன்று நான் எல்லாவற்றையும் இழந்து, சிறுமைப்பட்ட நிலைமையிலே தவிக்கிறேன், தடுமாறுகிறேன். இந்த ஏழ்மை நிலையில் எனக்கு உதவி செய்ய யாரும் முன்வரவில்லை. ஆகவே, உம் பாதத்தை நான் உறுதியாய் பற்றிக் கொள்கிறேன். நீர் ஒருவரே எனக்கு வழி, ஆறுதல், ஆசீர்வாதம்! நீர் என்னை நினைத்தருளி வழிநடத்தப்போகிறதற்காக உமக்கு நன்றி சுவாமி. இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

உண்மை தரும் ஆசீர்வாதம்!

"உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்..."

(நீதிமொழிகள் 28:20).

ஆண்டவர் விரும்பும் ஒரு நற்குணம், உண்மை! "உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்" (1 கொரி.1:9). நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் தம் பிதாவுக்கு உண்மையுள்ளவராய் வாழ்ந்து காண்பித்தார். ஆகவே, நம்மிடமிருந்து அவர் எதிர்பார்ப்பதும் உண்மையுள்ள வாழ்க்கையையே! அவ்வாறு நம் அனுதின வாழ்க்கையிலே எல்லாக் காரியங்களிலேயும் உண்மையைக் கடைபிடிக்க ஆண்டவருடைய உதவியை நாம் நாடும்பொழுது, அவர் நமக்கு உதவி செய்வதோடு, அதினிமித்தம் நம்மை ஆசீர்வதிக்கவும் செய்வார். அவரைத் தேடுவதில் உண்மை, தொழுதுகொள்வதில் உண்மை, அவர் மீது அன்புகூருவதில் உண்மை, அவருக்கு பிரியமான வழிகளில் நடப்பதில் உண்மை போன்று ஒவ்வொரு காரியத்திலும் நாம் ஜாக்கிரதையுடன் நடக்கும்பொழுது, மேற்கண்ட வாக்குத்தத்தத்தின்படியே நிச்சயம் ஆண்டவர் நிறைவாய் ஆசீர்வதிப்பார் (எபி.10:23).

ஒரு அலுவலகத்தில் நேரிட்ட குழப்பத்தின் காரணத்தை சரியாக கண்டுபிடிக்கும் முன்னதாக திடீரென்று ஒருவரை வேலையிலிருந்து நீக்கம் செய்துவிட்டார்கள். அவர் வேலை இல்லாத நிலைமையிலே பலவித கஷ்டங்களை அனுபவிக்க நேர்ந்தது. அந்த வேதனையின் நாட்களிலும் ஆண்டவருக்கு விரோதமாகப் பேசாமல், அவரை அண்டிக்கொள்வதில் அவர் கொண்டிருந்த உண்மையில் கொஞ்சமும் தளராமல், எப்பொழுதும்போல் ஆண்டவருக்கு பிரியமாய், வாழ்ந்து வந்தார். ஒருசிலர் அவரை நிந்தித்து, பரிகசித்தனர். ஆனால், அவரோ தன்னுடைய கண்களை ஆண்டவர் மேலேயே வைத்திருந்தபடியினால், அவருக்குள் ஒரு திடமனம், தைரியம் எழுந்தது. ஒருசில வருடங்கள் கடந்தன! இந்த குற்றத்தை செய்தது யார் என தீர விசாரித்தபோது, உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடித்தனர். உடனே மேலதிகாரிகள் அவரை அழைத்து, மன்னிப்புக்கேட்டதோடு, அவருக்கு வரவேண்டிய எல்லாப் பணத்தையும், பதவி உயர்வையும் கொடுத்து கனப்படுத்தினர்.

ஆம், உங்களையும், உங்கள் "உண்மை"யினிமித்தம் ஆண்டவர் கனப்படுத்துவார். எந்த நிலைமையிலும் ஆண்டவருக்கு உண்மையாய் இருப்பதில் கொஞ்சமும் தளர்ந்து போகாமல் இருங்கள். ஆண்டவர் உங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பார் (எபி.3:5; யாத்.11:3). வேதத்திலே தானியேலைக் குறித்து, "அவன் உண்மையுள்ளவனாயிருந்த படியால் அவன்மேல் சுமத்த யாதொரு குற்றமும் குறைவும் காணப்படவில்லை" (தானி.6:4) என்று வாசிக்கிறோம். ஒருவரும் உங்களை குற்றப்படுத்தாதபடிக்கு உண்மையுள்ளவர்களாயிருந்து, கர்த்தருடைய பரிபூரண ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளுங்கள்!

ஜெபம்: "அன்பு தகப்பனே. இந்த உலகத்தில் உண்மையாய் இருந்தாலும். எத்தனை பாடுகள். எத்தனை சோதனைகள்! ஆனாலும். இன்று நான் உம்மையே உறுதியாய் பற்றிக்கொள்கிறேன். என்னுடைய உண்மை அன்பினை, வாழ்வினை மக்கள் புரிந்துகொள்ளும்படி. நீரே உதவிசெய்யும். அப்படி நீர் செய்வீர் என்று நம்பி. உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"

தேவரீர் எல்லாவற்றையும் ஆளுகிறவர்!

"....தேவரீர் எல்லாவற்றையும் ஆளுகிறவர்; உம்முடைய கரத்திலே சத்துவமும் வல்லமையும் உண்டு; எவரையும் மேன்மைப்படுத்தவும் பலப்படுத்தவும் உம்முடைய கரத்தினால் ஆகும்"

(1 நாளாகமம் 29:12).

உலக வாழ்க்கையில் மனிதர்கள் உங்களைத் தாழ்த்தி தள்ளிவிட முயற்சிக்கலாம். சத்துருவாகிய சாத்தானும் உங்கள் வாழ்வில் பற்பல குறைவுகளைக் கொண்டுவந்து, உங்களை வேதனைப்படுத்த பல வழிகளைக் கையாளலாம் (ரோமர் 16:20). ஆனால், ஆண்டவரோ எல்லாவற்றிற்கும் மேலாக உங்களை ஆளுகிறவர். மட்டுமல்ல, உங்களை மேன்மைப்படுத்தவும், பலப்படுத்தவும் அவரால் மட்டுமே ஆகும். ஆகவே, சற்றும் சோர்ந்து போகாதிருங்கள்.

"பொல்லாதவர்கள் அறுப்புண்டு போவார்கள்; கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்" (சங். 37:9). "தேவனே, நீர் என் ராஜா; யாக்கோபுக்கு இரட்சிப்பைக் கட்டளையிடும். உம்மாலே எங்கள் சத்துருக்களைக் கீழே விழத்தாக்கி, எங்களுக்கு விரோதமாய் எழும்புகிறவர்களை உம்முடைய நாமத்தினால் மிதிப்போம்" (சங். 44:4,5) என்னும் வசனங்களின்படி உங்கள் பயங்கள், சிறுமைப்பட்ட நிலை யாவற்றையும் மாற்ற வல்ல ஆண்டவர் சமுகத்தில் ஜெபத்துடன் காத்திருங்கள். பூமியை சுதந்தரித்துக்கொள்ள அவரே வழிசெய்வார். ஆம்! அவர் ராஜாதி ராஜா! சத்துருக்களை கீழே விழத்தள்ளி உங்களுக்கு ஜெயம் கொடுப்பார்.

ஒரு குடும்பத் தலைவிக்கு கடன் பிரச்சினை, கணவன் குடும்பத்தை கவனிக்காத பரிதாப நிலைமை! பிள்ளைகளால் வேதனை! இப்படி பல்வேறு பாடுகளினால் தனிமையிலே, செய்வதறியாது தவித்தாள், தடுமாறினாள். அப்படிப்பட்ட சூழ்நிலையிலே அவள் மனித ஒத்தாசையை நாடாமல், கர்த்தரையே பற்றிக்கொண்டாள். ஆண்டவரே, இந்த நிலைமையிலே நீரே எனக்காக யாவற்றையும் அழகாய் செய்து முடியும் என்று வேண்டிக்கொண்டாள். அவள் ஜெபித்தபடியே, கர்த்தர் குடும்ப வாழ்வை பொறுப்பெடுத்தார். எல்லாப் பிரச்சினைகளும் ஒவ்வொன்றாக கர்த்தருடைய வல்லமையினால் முறிந்து ஓடும்படி செய்தார். கடன் மாறியது! ஆண்டவர் புருஷனுடைய இருதயத்தை புது இருதயமாக மாற்றினார். அந்த குடும்பம் ஒரு ஜெபவீடாக மாறும்படி, தெய்வீக வல்லமையை அருளிச்செய்தார்.

நீங்களும் இதே கவலையோடு, பாரத்தோடு இந்த நாளில் தவிக்கிறீர்களோ? இந்த சகோதரியைப் போன்று கர்த்தரையே சார்ந்திருங்கள். எல்லாவற்றையும் ஆளுகிற தேவன் பரிசுத்த ஆவியானவரின் நிறைவினால் உங்களை நிரப்பி, எல்லாத் தீங்குக்கும், பொல்லாங்குக்கும் உங்களை விடுதலையாக்கிக் காப்பார் (2 கொரி.3:17).

ஜெபம்: **"என் அன்பு தெய்வமே, இந்த உலகத்தில் எல்லோராலும் கைவிடப்பட்ட நிலைமையிலே நான் இருக்கிறேன். செய்வதறியாது திகைத்துக் கொண்டிருக்கிறேன். என்னை ஆளுகிற தெய்வமாகிய நீர். இந்த நிலைமையை பொறுப்பெடுத்துக்கொள்ளும். இன்றே எனக்கு ஓர் அற்புதம் செய்து, என்னை ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பாரத்தோடு ஜெபிக்கிறேன். எனக்காக நீர் யாவற்றையும் செய்து முடிப்பீர் என்று விசுவாசித்து ஸ்தோத்திரிக்கிறேன். ஆமென்!"**

நிறைவான பலன்!

"உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக" (ரூத் 2:12).

"எல்லாவற்றையும் இழந்து, நிற்கிறேனே! நான் என்ன செய்யப் போகிறேன், எனக்கு உதவி செய்வார் எவருமில்லையே" என்று கலங்குகிறீர்களோ! உலகவாழ்வில் பல்வேறு குறைவுபட்ட நிலை – கைவிடப்பட்ட பரிதாப நிலை – அன்பு காட்டுவோர் எவருமின்றி தனிமை! பல்வேறு இழப்பினால் மனவேதனை – இப்படி பல்வேறான கடின சூழ்நிலைகளின் மத்தியில் தவிக்கும் ஒவ்வொருவரையும், "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிற வர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத்தேயு 11:28) என்று தமது செட்டைகளுக்குள் வந்து இளைப்பாறுதல் பெறும்படி, ஆண்டவர் தமது இரு கரம் நீட்டி அன்புடன் அழைக்கிறார். ரூத்தைப்போல நீங்களும் ஆண்டவருடைய செட்டைகளின்கீழ் வருவது ஒன்றுதான் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள ஒரே வழி (சங்.91:1,4)!

அயல்நாடு சென்று அரும்பாடுபட்டு தன் குடும்பத்தார் யாவரையும் காப்பாற்றினாள் ஓர் இளம் பெண். தன் சகோதர, சகோதரிகள் எல்லோரும் திருமணம் செய்துகொண்ட பின், இந்த பெண்ணைப்பற்றி யாரும் கவலைப்படவேயில்லை. அவள் தனித்து வாழ வேண்டிய ஒரு நிலைமையில், "இனி நான் என்ன செய்வேன்? எனக்கென்று யாருமில்லையே?" என்று கவலைப்பட்டு, கர்த்தருடைய ஊழியர் ஒருவரிடம் தன் பாரத்தை பகிர்ந்துகொண்டாள். அவர் அவளுக்காக ஆண்டவரை நோக்கி மன்றாடினார். நடந்தது என்ன தெரியுமா? வெளிநாட்டில், நல்ல பதவியில் இருந்த ஒருவர், தனக்கு ஒரு நல்ல குணசாலியான, பக்தியுள்ள மனைவி மட்டுமே வேண்டும் என்று தேடி வந்தபோது, போதகர் ஒருவரால் இந்த பெண்ணைப்பற்றி கேள்விப்பட்டு, அவளுடைய அந்தஸ்தை பார்க்காமல் உடனடியாக திருமணம் செய்து கொண்டார். அவள் எதிர்பாராத விதத்திலே, எல்லோராலும் கைவிடப்பட்ட நிலைமையிலே, கர்த்தரே அவள் வாழ்வை, விரும்பினதற்கும் வேண்டிக்கொண்டதற்கும் அதிகமாய் ஆசீர்வதித்து செழிப்பை கட்டளையிட்டார்.

இன்றைக்கு அதே நிலைமையிலே, "ஐயோ, எல்லாவற்றையும் இழந்துவிட்டேனே, என் வாழ்வு செழிக்குமா?" என்று கலங்குகிற அன்பான சகோதரனே, சகோதரியே, ஆண்டவரின் செட்டைகளுக்குள் நீயும் வந்துவிடு; அவர் உன்னையும் கைவிடமாட்டார். ரூத், யோபு போன்ற மக்கள் எல்லாவற்றையும் இழந்த நிலையிலும் தேவனை உறுதியாய் பற்றிக் கொண்டதினிமித்தம் நிறைவான, இரட்டிப்பான பலனைப் பெற்று ஆசீர்வதிக்கப்பட்டதுபோல் உங்களையும் ஆசீர்வதிப்பார்.



ஜெபம்: "என் அன்பு தகப்பனே, என்னுடைய பரிதாப நிலைமையைப் பாரும். எனக்கு உதவி செய்பவரோ, அன்பு பாராட்டுபவரோ இவ்வுலகில் எவருமே கிடையாது. நீர் ஒருவரே என் நம்பிக்கை! நான் வெட்கப்பட்டுப்போகாதபடி, இன்று என்னை நிறைவாய் ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் ஸ்தோத்திரத்தோடே ஜெபத்தை ஏறெடுக்கிறேன் பிதாவே. ஆமென்!"

சஞ்சலமும், தவிப்பும் ஓடிப்போம்!

"கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள்.....சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்" (ஏசாயா 35:10).

அனுதின வாழ்க்கையில் திடீரென்று பலவித வேதனையான சம்பவங்கள் நேரிடும்பொழுது, சமாதானத்தை, சந்தோஷத்தை, ஆசீர்வாதத்தை இழந்து போகிற நிலைமை வரும். அச்சமயங்களில் நாம் எவ்வளவாய் தவித்துப்போகிறோம். இந்த நிலைமையில் கர்த்தர் ஒருவரே நம்மை காக்க வல்லவர்! காரியங்களை வாய்க்கப்பண்ண வல்லவர் (சங்.37:9)! தாவீது மிகவும் நெருக்கப்பட்ட வேளை அது! ஒருபுறம் மனக்கிலேசம், மறுபுறம் யாவராலும் கைவிடப்பட்ட நிலை. ஆனால், அந்த சமயத்தில், "ஒத்தாசை வரும் பர்வதமாகிய" (சங்.121:1) தேவனை நோக்கிப் பார்த்த அவன் திடநம்பிக்கை, பெலனைப் பெற்றான். அதன்பின் நிலைமை யாவற்றையும் கர்த்தர் தலைகீழாய் மாற்றி, தெய்வீக ஆசீர்வாதத்தை அருளிச்செய்தார் (1 சாமு.30:6, 19).

ஒரு அருமையான குடும்பத்தில் மனைவி திடீரென்று வியாதிப்பட்டாள். அதினிமித்தம் குடும்பத்தலைவனின் கையிலிருந்த பணமெல்லாம் கரைந்துபோய்விட்டது. வியாதியும் சுகமானபாடில்லை. மனமகிழ்ச்சியோடு வாழ்ந்த குடும்பத்தில் மனவேதனை தாண்டவமாடியது. எனினும், குடும்பத் தலைவனோ சற்றும் சோர்ந்து போகாமல் எப்பொழுதெல்லாம் நேரம் கிடைக்குமோ அப்பொழுதெல்லாம் தன் பிள்ளைகளோடு, கர்த்தரை நம்பி, வேதத்திலுள்ள வாக்குத்தத்தங்களை பற்றிப்பிடித்துக்கொண்டு ஜெபம் செய்து வந்தார். அதினிமித்தம் சோர்ந்துபோகாமல் கர்த்தருக்குள் உறுதியாயிருந்தார். கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்த அவருடைய காரியங்ளையெல்லாம் கர்த்தர் படிப்படியாக வாய்க்கப்பண்ணினார். மனைவி அற்புத சுகம் பெற்றார்கள். எல்லாரும் ஆச்சரியப்படும் விதத்தில் பணத்தேவைகளையெல்லாம் ஆண்டவரே சந்தித்தார்!

அதே ஆண்டவர் இன்று உங்கள் தேவைகளையும்கூட அறிந்திருக்கிறார். அவரே உங்களுக்கு வழி! நீங்களும் அவரை உறுதியாய் பிடித்து, அவருக்குள் தைரியமாய் இருங்கள். "கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.....அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்" (சங்.1:2,3).

எனக்கு அருமையான தேவனுடைய பிள்ளைகளே, நீங்கள் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்தாலும் உங்களுடைய வழியை கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கை வைத்து ஜெபிக்கும்போது, அவர் உங்களுடைய காரியங்களை வாய்க்கப் பண்ணுவார். அதுமட்டுமின்றி, "நீதிமான்களோ சிங்கத்தைப்போல் தைரியமாயிருக்கிறார்கள்" (நீதி.28:1) என்ற வசனத்தின்படி திடமனமும், தைரியமும் தருவார். அவ்வாறு ஜெயமுள்ள வாழ்க்கை வாழும்படியாக இப்பொழுதே உங்களுடைய வழியை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுப்பீர்களா? (1 யோவான் 5:5).

ஜெபம்: "என் அருமையான இரட்சகரே, நீர் எல்லாக் காரியங்களிலும் என்னை இரட்சிக்க வல்லவர்! எதிர்பாராத இந்த வேதனைகள், சோதனைகள் யாவற்றினின்றும் உம்முடைய வல்லமையினால் என்னைக் காப்பாற்றும். இன்று என் காரியங்களை வாய்க்கப்பண்ணும். வெற்றியுள்ள வாழ்வை நீர் அருளிச் செய்யப் போகிறதற்காக உமக்கு நன்றி. ஸ்தோத்திரம்! ஆமென்!"

நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்!

“ஜாதிகள் கொந்தளித்தது, ராஜ்யங்கள் தத்தளித்தது; அவர் தமது சத்தத்தை முழங்கப்பண்ணினார், பூமி உருகிப்போயிற்று. சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்; யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்”

(சங்கீதம் 46:6,7)

இந்த உலகத்தில் எந்த மனிதரையும் நம்பி, ஒரு பிரயோஜனமும் கிடையாது. இன்று நன்றாய் இருக்கிறவர்கள், நம்பிக்கை தருபவர்கள், அன்பை அள்ளிவீசுபவர்கள், நாளைக்கே வேறுவிதமாய் மாறக்கூடும். “நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை நம்புவதை விட்டுவிடுங்கள்; எண்ணப்படுவதற்கு அவன் எம்மாத்திரம்” (ஏசாயா 2:22). இதுதான் உலகத்தில் நாம் காணும் வேதனையான காரியம். ஆனால், எவ்வித பாடுகள் மத்தியிலேயும் இணையற்ற நண்பராய், கூடவே இருந்து விடுதலை தரவல்லவர், அன்பை வாரிவழங்குபவர், சேனைகளின் கர்த்தரும், யாக்கோபின் தேவனுமாகிய ஆண்டவர் ஒருவரே! அவரே உங்களுக்கும் அடைக்கலமாயிருப்பார் (சங்.46:1).

படிப்பை முடித்து வேலை கிடைத்தால் குடும்பத்திற்கு ஆதரவாய் இருக்குமே என்று, வேலை தேடினான் ஓர் இளைஞன். ஆனால், அநேக நாட்களாகியும் அவன் எதிர்பார்த்ததுபோல் வேலை கிடைக்கவில்லை. அப்பொழுதுதான் ஆண்டவருடைய அன்பு அவன் உள்ளத்திலே இறங்கியது. அதிகாலையில் எழுந்து, அவர் பாதத்தில் அமர்ந்து, வேதம் வாசித்து, தன் வேண்டுதல்களையெல்லாம் அவர் பாதத்திலே ஊற்றினான். என்ன ஆச்சரியம்! அவன் எதிர்பாராத அளவிலே ஒரு அருமையான வேலையை ஆண்டவர் அவனுக்கென்று ஏற்படுத்திக் கொடுத்தார். அவனால் நம்பவே முடியவில்லை. பெற்றோருக்கும், குடும்பத்தினருக்கும் அவன் ஓர் ஆசீர்வாதமான மகனாக திகழும்படியாகவும், ஆண்டவரின் நாமத்தை மகிமைப்படுத்தும் சாட்சியாகவும், கர்த்தர் அவனை மாற்றினார். ஆம்! கர்த்தரை நம்புகிறவர்களுக்கு, அவரை துன்ப நேரங்களில் தேடும்பொழுது, “கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது” (சங்.34:10) என்ற வார்த்தையின்படி அடைக்கலம் தந்து, அவைகள் யாவற்றினின்றும் முற்றிலும் ஜெயம் தருவார் (ரோமர் 8:36,37).

எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே, நீயும் அப்படி மனம் தளர்ந்து போயிருக்கிறாயோ! சோர்ந்து போகாதே! “சிறுமைப்பட்டவனுக்கு கர்த்தர் அடைக்கலமானவர்; நெருக்கப்படுகிற காலங்களில் அவரே தஞ்சமானவர்” (சங். 9:9). கர்த்தரே உனக்கு அடைக்கலம்! அவர் உன்னைத் தூக்கி நிறுத்த வல்லமையுள்ளவராய் இருக்கிறார் என்பதை மறந்து போகாதே! அவ்வாறு தம்மை நம்புகிறவர்களை, தமக்கு பயந்து அடைக்கலமாகக்கொள்பவர்களை தமது தெய்வீக சமாதானத்தாலும் (ஏசாயா 26:3), பெரிதான நன்மைகளாலும் நிரப்பி (சங்.31:19) யாவருக்கும் முன்பாக கனப்படுத்துவார்.



<u>ஜெபம்:</u> “என் அன்பு தகப்பனே, நீரே எனக்கு எல்லாம்! உம்மையன்றி நான் எங்கே போவேன்? உமக்கு முன்பாக என் கல்வி, ஞானம், அறிவு எல்லாம் விருதா. நீரே ஆசீர்வாதத்தின் ஊற்று, அடைக்கலம். <u>இன்று</u> நீரே எனக்கு அடைக்கலமாய் இருந்து, என்னை ஆசீர்வதித்து, கரம்பிடித்து, கைவிடாமல் வழிநடத்தும், ஆமென்!”

தேடுகிறவர்கள் கண்டடைவார்கள்!

"என்னை சிநேகிக்கிறவர்களை நான் சிநேகிக்கிறேன்; அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்" (நீதிமொழிகள் 8:17)

நம்முடைய ஆண்டவராகிய கர்த்தர், நம்மை அளவில்லாமல் நேசிக்கிறார். நாமும் அவ்வாறு அவரை நேசிக்க வேண்டும், தேட வேண்டும், அவரை நோக்கிக் கூப்பிட வேண்டும், என்றெல்லாம் விரும்புகிறார். அவ்வாறு அவரைத் தேடும்பொழுது, தம்முடைய பிரசன்னத்தினால் நம்மை நிரப்பி, நிறைவாய் ஆசீர்வதிக்கவும் காத்திருக்கிறார் (சங்.34:10).

ஆண்டவர் மிகுந்த அன்புடனும், தயவுடனும் ஆபிரகாமை அழைத்து, நீதிமானாக்கி ஆசீர்வதித்து வழிநடத்தினார். அவனும் அவரில் முழு இருதயத்தோடும் அன்பு வைத்து, "அவருடைய சிநேகிதனாக" (ஏசாயா 41:8; 2 நாளா. 20:7; யாக். 2:23) மரண பரியந்தம் அவரோடு நெருங்கி வாழ்ந்து வந்தான். அதேபோன்று தாவீது வாலிப வயது முதற்கொண்டே ஆண்டவரைத் தேடி, அவர்மீது அன்பு கூர்ந்தான். ஆகவே, கறவலாடுகளின் பின்னாகத் திரிந்த அவனை தமது ஜனத்தையே மேய்ப்பவனாக மாற்றி, அவருடைய இருதயத்துக்கு ஏற்றவனாக (அப்.13:22) வழிநடத்தி ஆசீர்வதித்தார்.

தேவனுடைய ஊழியர் ஒருவர் வேதாகமக் கல்லூரியில் பேராசிரியராக பணிபுரிந்து வந்தார். அவர் அதிகாலையில் 4 மணிக்கு எழுந்து, தன் கரங்களை பரலோகத்திற்கு நேராக விரித்து, ஆண்டவரோடு பேசும் பழக்கம் கொண்டிருந்தார். இதனால் அவருடைய அனுதின வாழ்க்கை எப்படி இருந்தது? மோசேயின் முகம் தேவபிரசன்னத்தால் நிறைந்திருந்தது போல் அவர் முகமும், ஏன் அவர் வாழ்க்கையும்கூட தேவ பிரசன்னத்தால் நிறைந்திருந்தது. இதனால் அவர் எந்த காரியம் செய்தாலும் மிகவும் ஆசீர்வாதமாய் இருந்தது. மாணவர்கள் அவருடைய வகுப்பில் மிகவும் அமைதலாக, அவர் வாயிலிருந்து வருகிற ஒவ்வொரு வார்த்தையையும் தேவ பயத்தோடு கேட்டு, ஆசீர்வாதம் பெற்றனர். அக்கல்லூரிக்கே அவர் ஓர் எரிந்து பிரகாசிக்கும் விளக்காயிருந்தார்.

என் அன்பு சகோதரனே, சகோதரியே, நீயும்கூட இதே வண்ணமாக அதிகாலையில் எழுந்து, ஆண்டவரைத் தேடுவதில் கவனமாய் இருக்கிறாயா? இன்று முதல் ஒரு தீர்மானம் செய். தினமும் அதிகாலையில், "ஆண்டவரே நான் உம்மைத் தேடி வருகிறேன், என் வாழ்வெல்லாம் ஆசீர்வாதமாய் இருக்க அருள்புரியும்" என்று ஆண்டவரிடம் உன்னை சமர்ப்பிப்பாயானால் அவர் காலைதோறும் உன்னை எழுப்புவார். கற்றுக் கொள்ளுகிறவர்களைப்போல் அவருடைய தெய்வீக சித்தத்தை அறிந்துகொள்ளும்படி உன் செவிகளை கவனிக்க செய்வார் (ஏசாயா 50:4). நம் முன்னோர்களான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு பெற்ற தெய்வீக ஆசீர்வாதங்களை உனக்கு நிச்சயம் தருவார்! மாத்திரமல்ல! நீ அவரோடு இணைந்து, அவருக்கு பிரியமான சிநேகிதனாக மாறுவாய்.

ஜெபம்: "அருமையான தெய்வமே, நீர் மெய்யாகவே உயிரோடு இருக்கிறீர். எனவே, உம்மைத் தேடுவதில் பயபக்தியையும், ஜாக்கிரதையையும் எனக்குத் தந்து, அதன்மூலம் என் வாழ்க்கை, இன்றும் என்றும் ஆசீர்வாதமாய் இருக்கவும், உமக்கு பிரியமான நல்ல சிநேகிதனாக, சிநேகிதியாக இருக்கும்படி அருள்தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தருக்கு பிரியமான பாக்கியவான்!

``அல்லேலூயா, கர்த்தருக்கு பயந்து, அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்'' (சங்கீதம் 112:1).

கர்த்தருக்கு பிரியமாய் பாக்கியவானாய் வாழ்வது எப்படி? என்பதை இந்த வசனம் தெளிவாய் விளக்குகிறது. தெய்வ பயத்தோடு காரியங்களை சிந்திப்பது, செயல்படுவது, அதோடுகூட, அவருடைய வார்த்தைகளை, கட்டளைகளை தெய்வ பயத்தோடு நிறைவேற்றுவது, இப்படிப்பட்ட வாழ்க்கையே ஆண்டவருக்கு பிரியமானது (சங்.128:1)! எல்லாவிதங்களிலும் இவ்விதமாய் அவரை பிரியப்படுத்துவதில் ஜாக்கிரதையாயிருப்பவர்களின் வாழ்க்கையை பாக்கியங்களினாலும், சம்பூரண நன்மைகளினாலும் நிரப்புவதில் (1 தீமோ.6:17) ஆண்டவரும் கவனமாயிருப்பார். ஆபிரகாம் தான் உண்மையும் உத்தமுமாய் கர்த்தராகிய தேவனை பின்பற்றினதுமன்றி, தன் குடும்பத்தாரும் அவ்வாறு நடக்கும்படி ஜாக்கிரதையாயிருந்தான். கர்த்தரே இதைக் குறித்து சாட்சி கொடுத்திருப்பதாக ஆதியாகமம் 18:19–ல் வாசிக்கிறோம். ஆகவேதான், மேற்கண்ட வாக்கின்படியே அவன் சந்ததி சந்ததியாக பாக்கியம் பெற்றவனாக இருந்தான்.

ஒரு கணவனும், மனைவியும் பிரிந்து வாழ வேண்டிய பரிதாப நிலைமை ஏற்பட்டது. கணவனோ பக்தியுள்ளவர்! மேற்கண்ட வசனத்தின்படி, தெய்வ பயத்தோடு நடந்த ஒரு மனுஷன்! மனைவி அரைகுறையான பக்திகொண்டவள். ஆகவேதான் இந்த பிரச்சினை! மனைவி கணவனுடைய வாழ்க்கையில் பல குற்றங்களை எப்பொழுதும் சொல்லிக் கொண்டிருந்தாள். ஆனால், கணவனோ ஒவ்வொரு நாளும் ஆண்டவருடைய கரத்திலே அதை சமர்ப்பித்து அவருக்கு பயந்து நடந்ததோடு, அவளைப்பற்றி ஒரு குறையும் சொல்லாமல் ஜாக்கிரதையாய் கர்த்தரை நம்பி வாழ்ந்துவந்தார். ஆண்டவர் அந்த மனைவியோடு பேசினார். அவளுடைய இருதயத்தை ஒரு சம்பவத்தின்மூலம் உடைத்தார். அப்பொழுதுதான் அவள் தன்னை முற்றிலும் ஆண்டவருக்கென்று தெய்வ பயத்தோடு ஒப்படைத்தாள். அதன்பிறகு அவர்கள் தேவகிருபையினால் ஒன்று சேர்ந்து இன்பமும் தெய்வீக சமாதானம் நிறைந்ததுமான குடும்பமாக வாழ வழி பிறந்தது.

அன்பானவரே, உங்களிலும்கூட இன்று இதைப்போன்ற வேதனை இருக்கலாம், பிரிவினை இருக்கலாம். நீங்களும் தேவ பயத்தோடு, ஆண்டவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து, அவரை பிரியப்படுத்துங்கள். உங்கள் வாழ்க்கையையும் இன்பமானதாக மாற்ற அவரால் முடியும். இன்று நீங்கள் உங்கள் வாழ்வை ஆண்டவரிடம் ஒப்புக் கொடுங்கள். உங்கள் குறைவுகளை ஆண்டவர் சமுகத்தில் அறிக்கையிடுங்கள். ``தாவீதை என் இருதயத்திற்கு ஏற்றவனாகக் கண்டேன்'' (அப். 13:22) என்று ஆண்டவர் சாட்சி கொடுத்ததுபோல, உங்களைக் குறித்தும் சாட்சி கொடுக்க வேண்டுமென்றால் நீங்களும் என் தேவனே, உமக்குப் பிரியமானதை செய்யவே விரும்புகிறேன் (சங். 40:8) என்று உங்களைத் தாழ்த்தி தாவீதைப் போல மன்றாடுவீர்களா?



ஜெபம்: ``என் அன்பு தகப்பனே, என்னுடைய குறைவுகள், குற்றங்களையெல்லாம் மன்னியும். இன்றுமுதல் உம்முடைய கட்டளைகளுக்கு பயந்து நடக்க, உமக்கு பிரியமாய் வாழ்வதில் ஜாக்கிரதையாயிருக்க, எனக்கு கற்றுத்தாரும். உமக்குப் பயப்படும் பயத்தை எனக்கும், என் வீட்டாருக்கும் தந்து, தேவபக்தியுள்ள சந்ததியாய் நாங்கள் விளங்க உம் அருளை நிறைவாய் தந்தருளும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!''

கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார்!

"...தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?"
(ரோமர் 8:31).

இந்த உலகம் பொல்லாங்குகள் நிறைந்தது. உலக மக்களும் அப்படியே பொல்லாதவர்களாகவே இருக்கின்றனர். 2 தீமோத்தேயு 3:1–5 வசனங்களில் வாசிக்கிறபடி அத்தனை பொல்லாங்குகளையும் இக்காலத்தில் நாம் கண்கூடாகக் காண்கிறோம். இதினிமித்தம் வாழ வழியின்றி தடுமாறுகிறோம். ஆனால், இந்த நிலைமையிலும் கூட அண்ட சராசரத்தையும் படைத்த, சர்வவல்ல ஆண்டவர் நம் பட்சத்தில் இருந்தால், நாம் எதைக் குறித்தும் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. பயமோ, திகிலோ கொள்ளத் தேவையில்லை. ஏனெனில் அவர் பயங்கரமான பராக்கிரமசாலியாக நம்மோடுகூட இருந்து துணை செய்வார் (எரே. 20:11). கோலியாத் பராக்கிரமசாலியாகவும், தன் சரீரத்தை பல்வேறு ஆயுதங்களால் மூடி மறைத்திருந்தபொழுதிலும், இளைஞன் தாவீது தன் பட்சத்திலிருந்த தேவாதி தேவனைக் கொண்டு அவனை சுலபமாக முறியடித்தான்.

ஒரு குடும்பத்தினர் ஆண்டவரை பக்தியுடன் தேடி வழிபட்டு வந்தனர். ஆகவே, அந்த வீட்டில் சமாதானம், சந்தோஷம், ஒற்றுமை யாவும் இருந்தது. யாவரும் இதைக் காணும்படியாக மெய்யான தேவ அன்பினால் அவர்கள் நிறைந்திருந்தனர். ஆனால், அருகில் வாழ்ந்து வந்த ஒரு மனிதன் மட்டும் அந்த குடும்பத்தினர் மீது எரிச்சலும், பொறாமையும் அடைந்தான். அவர்களுக்கு விரோதமாக மந்திர செயல்களில் ஈடுபட்டு, பல தீமையான காரியங்களை செய்து அவர்களை அழிக்க எண்ணினான். ஆனால், "ஒன்றும் உங்களை சேதப்படுத்தமாட்டாது" (லூக்கா 10:19) என்ற வசனத்தின்படி, அவர்களை அழிக்கவோ, அவர்கள் சமாதானத்தைக் கெடுக்கவோ எந்த சக்தியின் மூலமாகவும் அவனால் கூடாமற்போயிற்று. காரணத்தை நேரடியாய் அவர்களிடமே வினவி, "கர்த்தரே அவர்கள் பட்சத்தில் இருக்கிறார், அவரே ஆசீர்வாதங்களுக்கெல்லாம் காரணர்" என்று அறிந்துகொண்டு, அவனும் ஆண்டவருக்கு அடிமையாக மாறினான்.

என் அன்பு சகோதரனே, சகோதரியே, மனிதரை நாடித் தேடாதே! கர்த்தர் உன் பட்சத்தில் இருக்கும்படியாக, அவரையே உறுதியாய் பற்றிக்கொள் (சங்.118:6)! அவர் ஒருவராலேயே உன் ஆவிக்குரிய வாழ்வு, உன் குடும்ப வாழ்வு யாவும் ஆசீர்வதிக்கப்பட முடியும். இன்று இந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள உடனடியாக அவர் பாதத்தில் முழங்காற்படியிடு!

"ஆண்டவரே! நீர் என் உள்ளத்தில் வந்து, என்னோடு தங்கியிரும். சகேயு வீட்டிற்கு சென்று அவனை ஆசீர்வதித்ததுபோல் என் குடும்ப வாழ்வையும் உம் தெய்வீகப் பிரசன்னத்தால் நிரப்பியருளும். நீரே, எனக்கு எதிராக புறப்பட்டு வருகிற சகல பிரச்சினைகளையும், மனிதர்களையும் இல்லாமற் போகப்பண்ணும்" என்று பிரார்த்தனை செய்யும்பொழுது, கர்த்தர் உனக்காக யுத்தம் செய்வார் (யாத்.14:14).



<u>ஜெபம்</u>: "அன்புள்ள ஆண்டவரே. உம்மாலன்றி, இந்த உலகத்திலே ஒரு நிமிடம்கூட என்னால் தனியே வாழ முடியாது. <u>இன்றுமுதல்</u> நீர் என்னோடுகூடவே எப்பொழுதும் இருக்க வேண்டும். நீர் என்னோடு இருக்கிறீர் என்பதை உணர்ந்து. நீர் கொடுக்கும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு. மற்றவர்களுக்கும் ஆசீர்வாதமாக வாழ வழிநடத்தியருளும். உமக்கு நன்றி. ஆமென்!"

கர்த்தர் தரும் பூரண சமாதானம்!

"உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிற படியால், நீர் அவனை பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்" (ஏசாயா 26:3).

இந்த உலக வாழ்வில் சமாதானத்தைக் கெடுக்கும் பல்வேறு காரியங்களை அன்றாடக வாழ்வில் நாம் யாவருமே கண்டு வருகிறோம். திடீரென்று பற்பலவிதங்களில் புயல் வீசுகிறது, வேதனை மேல் வேதனை! வாழ்க்கையே ஊசலாடுகிறது. ஆனால், எப்படிப்பட்ட பிரச்சினைகள் இருந்தாலும் அவற்றின் மத்தியிலும் பூரண சமாதானம் தரக்கூடிய ஆண்டவரை நாம் உறுதியாய் பற்றிக்கொள்ளும்போது, உலகம் தரக்கூடாத சமாதானத்தினால் நம்மை அவர் நிரப்புவார் (லூக்கா 1:79). நமது தனிப்பட்ட வாழ்விலும், குடும்ப வாழ்விலும் மற்றும் எல்லாப் பக்கமும் அவரைத் தேடுகிறவர்களுக்கு உலகம் கொடுக்கிற பிரகாரமாக அல்ல, தாமே தமது தெய்வீக சமாதானத்தை பூரணமாய் அருளிச் செய்வார்.

ஒரு குடும்பத்தில் கணவன் திடீரென்று நோய்வாய்ப்பட்டு, மரணத்தருவாயிலானார். இளம் மனைவி தன் சிறு குழந்தைகளை கையில் வைத்துக்கொண்டு, செய்வதறியாது தவித்து நின்றாள். ஒருகணம் அவள் மனதில் ஒரு எண்ணம் வந்தது. "நாம் ஏன் அழுகிறோம்? ஆண்டவர் நமக்கு உதவி செய்ய காத்திருக்கிறாரே" என்ற விசுவாசம் மேலிட, தன் அறைக்குள் ஓடினாள். தன் சஞ்சலத்தை அன்னாளைப்போல ஆண்டவர் பாதத்தில் ஊற்றினாள். கர்த்தர் அவளோடு பேசினார். "உன் கணவன் மரிப்பதில்லை, அவனைக்கொண்டு பெரிய காரியங்களை நான் செய்யப்போகிறேன்" என்றார். எழுந்து சிங்கம்போல வெளியே வந்தாள். அதை விசுவாசித்தாள். விசுவாசித்த அவள் அப்படியே ஒரு சில மாதங்களில் தேவமகிமையை அவள் கணவன் சரீரத்திலே கண்டாள். புத்துயிர் பெற்று எழுந்த அவர், தேவ வல்லமையினால் நிறைந்தவராய் ஆண்டவர் சேவையிலே அரிய பெரிய காரியங்களை செய்ய ஆண்டவர் கனத்திற்குரிய பாத்திரமாய் எடுத்து உபயோகித்தார். சமாதானத்தை கெடுக்க முயற்சித்த சாத்தான் வெட்கப்பட்டுப்போனான்.

என் அன்பு சகோதரனே, சகோதரியே, நீயும் கலங்காதே! சோர்ந்து போகாதே! இன்று உனக்கும் அதே ஆசீர்வாதத்தை, சமாதானத்தை கர்த்தர் தருவதற்கு ஆவலாய் காத்திருக்கிறார். "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" (யோவான் 14:27). சமாதானப் பிரபுவாகிய ஆண்டவரையே நோக்கிப் பார்த்து, அவரை இறுகப் பற்றிக்கொள்ளும்பொழுது, சமாதானத்தைக் கெடுக்க முயலும் சாத்தானையும், அவனுடைய காரியங்களையும் சீக்கிரமாய் உங்கள் கால்களின் கீழ் நசுக்கிப்போட்டு, எல்லாவற்றிற்கும் மேலான தேவ சமாதானம் தருவார்.

<u>ஜெபம்:</u> "அன்பு தகப்பனே, போராட்டம், துன்பம், துக்கம் நிறைந்த வாழ்வில் நீரே எனக்கு சமாதானத்தைத் தருபவர் என்று விசுவாசிக்கிறேன். சமாதானத்தைக் கொடுக்கும் உம்மிடத்தில் என் காரியங்களையெல்லாம் ஒப்படைக்கிறேன். <u>இன்று</u> யாவையும் நீரே பொறுப்பெடுத்து தெய்வீக சமாதானத்தால் என்னை நிரப்பும், ஆசீர்வதியும், ஆமென்!"

வசனத்தின் மூலம் புத்துணர்வு!

``உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து, பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும்'' (சங்கீதம் 119:130).

ஒருவேளை இன்று எந்தப் பக்கம் திரும்புவது? என்ன செய்வது என்று திகைத்து நிற்கிறீர்களோ? ஆண்டவர் பல்வேறு விதங்களில் உங்களோடு பேசுவார். வேத வசனங்களை வாசியுங்கள், அதன்மூலம் பேசுவார். முழங்காற்படியிட்டு ஜெபியுங்கள், நேரடியாக உங்களோடு பேசுவார். வேத வசனம் உங்கள் மனதின் இருளை மாற்றி, ஒளி நிறைந்த ஓர் புத்துணர்வைத் தரும் (சங்.119:105). ஏனென்றால், அது ஜீவனும், வல்லமையும் உள்ளது (எபி.4:12). அவைகளை நாம் வாசித்து ஆராய்ந்து பார்ப்போமானால், நித்திய ஜீவன் பெறத்தக்கதாக புத்துணர்வு பெறுவோம் (யோவான் 5:39).

ஒரு மருத்துவமனையில் ஒருவர் மரணத்தருவாயில் மனமுடைந்த நிலையில் இருந்தார். அவரோடிருந்த எல்லோரும் வெளியே சென்றுவிட்ட சமயத்தில், தனியே இருந்த அவர் மிகுந்த கலக்கமடைந்தார். நம்பிக்கையற்ற நிலையில் வேதபுத்தகத்தை திறந்தார், "வேத வசனங்களைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம்'' (நீதி. 4:22) என்ற வசனத்தை அவர் வாசிக்க நேரிட்டபோது, திடீரென்று ஓர் புத்துயிர் வந்ததுபோல் இருந்தது. தொடர்ந்து வாசிக்க ஆரம்பித்தார், வாசிக்க, வாசிக்க உண்மையாகவே சரீரத்திலே ஒரு வல்லமை இறங்கியதை உணர்ந்தார். நாளடைவில் எவ்வளவோ முன்னேறி வருவதை அவராலேயே உணர முடிந்தது. மருத்துவர்கள் ஆச்சரியமடைந்தனர். "என்ன மருந்து சாப்பிட்டீர்கள்? இப்படி மாறுதல் ஏற்பட்டிருக்கிறதே?'' என்றார்கள். வேதபுத்தகத்தை அவர்களுக்கு முன்னதாகக் காண்பித்து, "இந்த மருந்தையே நான் தினமும் உட்கொண்டேன்'' என்று மகிழ்ச்சியுடன் கூறினார். அன்று மட்டுமல்ல, தன் வாழ்நாள் முழுவதும் வேத வாசிப்பின் மூலம் விசுவாச வீரனாகத் திகழ்ந்தார்.

"உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்கு சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது'' (எரே. 15:16). எனக்கு அருமையான தேவனுடைய பிள்ளைகளே, எப்பொழுதெல்லாம் உங்களுக்கு நேரம் கிடைக்கிறதோ, அப்பொழுதெல்லாம் வேதத்தை எடுத்து தியானித்து கர்த்தருடைய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளுங்கள்.

எனக்கு அன்பான சகோதர, சகோதரிகளே, இன்று நீங்களும் சரீர சுகவீனத்தைக் குறித்தோ, வாழ்வின் பிரச்சினைகளைக் குறித்தோ, இருளில் இருக்கிறதுபோல் உணர்கிறீர்களா? அதே ஆண்டவர் தமது வார்த்தையின் மூலமாக, எந்த விதத்திலாவது உங்களுக்கும் வெளிச்சம் தருவார், புத்துயிர் தருவார் (நீதி.4:22).

ஜெபம்: "அன்பு தகப்பனே, உம்முடைய வார்த்தைகளை வாசிப்பதில், கேட்பதில் கவனமாய் இருந்து, இன்றும் என்றும் என் வாழ்வு வெளிச்சம் தரும் வாழ்வாக, புத்துயிர் பெற்ற வாழ்வாக விளங்க, இன்று எனக்கு உம்முடைய தெய்வீக அருள்தாரும், ஆசீர்வதியும், ஆமென்!''

சதாகாலங்களிலும் நடத்தும் தேவன்!

"இந்த தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்; மரணபரியந்தும் நம்மை நடத்துவார்" **(சங்கீதம் 48:14).**

இன்று மட்டுமல்ல, என்றென்றும் நம்மோடிருந்து நம்மை கரம் நீட்டி அணைத்து வழிநடத்துபவர் தான் நம் அன்பின் ஆண்டவர் இயேசு கிறிஸ்து! இதை இந்த நாளில் உணர்ந்து அவர் கரத்தில் உங்கள் பிரச்சினைகளை வைத்துவிடுங்கள். தேவன் தனிமையானவர்களுக்கு வீடு வாசல் ஏற்படுத்தி, திக்கற்ற பிள்ளைகளை தகப்பனுக்கு மேலாக கரிசனையாய் விசாரித்து, விதவைகளுக்கு நியாயம் விசாரிக்கிறவர் (சங். 68:6). எனவே, உலகத்தில் யார் உங்களைவிட்டு விலகினாலும், உங்கள் மேல் நினைவாயிருக்கிற உங்கள் பரம தகப்பன் உங்களோடுகூடவே என்றென்றைக்கும் இருப்பார். உங்களை கரம்பற்றி நடத்துவார் என்று விசுவாசியுங்கள் (சங்.40:17).

அயல்நாடு ஒன்றில், ஆண்டவரை சற்றும் அறியாத ஒரு மனிதன் ஒரு நூலகம் சென்று புத்தகங்களை புரட்டிக்கொண்டிருந்தான். அவன் கையில் ஒரு ஆங்கில வேதாகமம் கிடைத்தது. "ஓ வேதபுத்தகமா? இதைக் குறித்து நிறைய கேள்விப்பட்டிருக்கிறேனே! நானும் வாசிக்கட்டும்" என்று வாசிக்க ஆரம்பித்தான். மத்தேயு 28:20 அவன் கண்களிலே பளிச்சிட்டது. அதில் ஆங்கிலத்தில் "Lo" என்று ஆரம்பிக்கிறது. தொடர்ந்து "உலகத்தின் முடிவுபரியந்தம் நான் உங்களோடுகூட இருக்கிறேன்" என்று எழுதப்பட்டிருப்பதைப் பார்த்தான். "Lo" என்பது அவனுடைய பெயர். ஆகவே, இந்த வசனத்தை வாசித்தவுடன் தன்னோடு ஆண்டவர் பேசுவதாக உணர்ந்து, "ஐயோ, குறைவுள்ளவனாகிய என்னோடா தெய்வம் பேசுகிறார்?" என்னுடன் அவர் எப்போதும் இருக்க நான் தகுதியற்றவன் ஆயிற்றே! என வியந்து, தொடர்ந்து வேதவசனங்களை அதிகமாய் வாசித்து, ஆண்டவரைப்பற்றி அறிந்துகொள்ள ஆண்டவர் அருள்புரிந்தார்.

இந்த தேவன் இன்று முதல் உங்களோடும்கூட மரணபரியந்தம் இருப்பார், வழிநடத்துவார். ஆகவே, வீணான கவலைகளை மனதிற்குள் புகுத்தி, சஞ்சலப்பட்டு தவிக்காமல், தேவன் என்னோடு இருக்கும்போது நான் ஏன் கவலைப்பட வேண்டும், அவர் என்னை நிச்சயம் வழிநடத்துவார் என்று உங்கள் கவலைகளையெல்லாம் அவரிடத்தில் சமர்ப்பித்து விடுங்கள் (லூக்கா 10:41,42). "அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்" (1 பேதுரு 5:7). இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்று வாக்குப்பண்ணினவர் நிச்சயமாகவே உங்களை சதாகாலங்களிலும் வழிநடத்தி செல்லுவார்.

<u>ஜெபம்</u>: "என் அன்பு தகப்பனே, <u>இன்</u>று என் மனதில் இருக்கிற சகல பாரங்களையும், கவலைகளையும், தேவைகளையும் உம்மிடத்திலே ஒன்றுவிடாமல் சாட்டிவிடுகிறேன். நீர் பொறுப்பெடுத்துக் கொள்ளும். ஒவ்வொரு நாளும் நீர் என்னோடிருந்து என்னை ஆசீர்வாதமான வழியில் வழிநடத்தும். எத்தகைய நிலைமையில் நான் கடந்து செல்ல நேரிட்டாலும், நீர் என் கரத்தைப் பிடித்து இன்றும் என்றும் கைவிடாமல் காத்து, ஆசீர்வாதமான வழியில் உமக்கு பிரியமாய் நடக்க உமது தெய்வீகக் கிருபையை என்மீது பொழிந்தருள வேண்டுமென்று கெஞ்சிக் கேட்கிறேன் நல்ல பிதாவே, ஆமென்!

ஆதரிக்கும் ஆண்டவர்!

``கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு. அவர் உன்னை ஆதரிப்பார்; நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார்'' (சங்கீதம் 55:22).

இந்த உலகில் எனக்கு ஆதரவு செய்வார் யாருமில்லையே, நான் தானே என் குடும்பத்தை கவனிக்க வேண்டியதாயிருக்கிறது என்று கவலைப்பட்டு கலங்குகிற அருமையான தேவனுடைய பிள்ளையே, இந்த வசனம் உனக்கு நம்பிக்கை கொடுக்கவில்லையா? (1 கொரி.7:32). அதன்படியே உன் பாரத்தையெல்லாம் சுமக்க, உன் அருகில் உன்னை ஆதரித்து தாங்கி வழிநடத்த ஆண்டவர் ஆவலோடிருக்கையில், நீ ஏன் வீணாக கவலைப்பட்டு கலங்குகிறாய்? (மத்.11:28). உங்கள் சுய ஞானம், சுய பெலன், சுய முயற்சி இவைகள் மூலம் எவ்வளவாய் காரியங்களை சாதிக்க எண்ணினாலும் முடிவில் தோல்வியையே கண்டு சோர்ந்து போவதை விட்டு, கர்த்தர்மேல் முழுவதுமாய் சார்ந்து ஜெயம் பெறுங்கள்.

ஒரு தாய் தான் கண்ணீர்விட்டு, ஆண்டவரை வேண்டி பெற்றுக்கொண்ட தன் அருமைப் பாலகன், இளம்பிள்ளை வாதம் வந்து கால் தாங்கித் தாங்கி நடப்பதைக் கண்டபோது, கண்ணீர் வடித்தாள். ``ஐயோ, இந்த பாரத்தை நான் எப்படி சுமப்பேன்? என்ன செய்வேன்?'' என்று தவித்தாள். அதன்பிறகு குழந்தையை தூக்கிக்கொண்டு, ஆலயத்தினுள் புகுந்தாள். கர்த்தரை நோக்கிக் கதறினாள். ``ஆண்டவரே, இந்த குழந்தையை நீரே எனக்கு கொடுத்தீர், உமக்கு ஸ்தோத்திரம்! இப்பொழுதும் இந்த மகனுடைய கால்களை நீர் முற்றிலும் சுகமாக்கி, நல்ல நிலைமைக்கு மாற்றுவீரானால், இந்த குழந்தையை வாழ்நாள் முழுவதும் உம்முடைய சேவை செய்யும் உம்முடைய ஊழியனாக உமக்கே ஒப்புக் கொடுப்பேன், என் கண்ணீரைத் துடைத்தருளும்'' என்று கதறினாள். என்ன ஆச்சரியம்!

ஆண்டவர் ஜெபத்தைக் கேட்கிறவர்! அந்தத் தாயின் விண்ணப்பத்தைக் கேட்டார். கொஞ்சங்கொஞ்சமாக இந்த மகனுடைய கால்கள் நன்றாய் நடக்கும் அளவிற்கும், போட்டிகளிலே, ஓட்டப் பந்தயங்களிலே சேர்ந்து பரிசு பெறுமளவிற்கும் கர்த்தர் அற்புதவிதமாய் அவன் கால்களை மாற்றினார்!

என் அன்பு சகோதரனே, சகோதரியே, வருத்தப்பட்டு பாரம் சுமக்கிற உன்னையும்கூட கரம்நீட்டி அன்புடன் அழைக்கிறார் ஆண்டவர் இயேசு! இந்த தாயைப்போல் நீயும் உன் மனவேதனைகளையெல்லாம் அவர் பாதத்திலே முழந்தாளிட்டு, ஒன்றையும் மறைக்காமல் வைத்துவிடு (சங்.62:8). இன்றுமுதல் அவரை உறுதியாய் பற்றிக்கொள்! உனக்காக அவர் சகலத்தையும் நன்மையாய் மாற்றித் தருவார்! ``கர்த்தர் அரணான நகரத்தில் எனக்கு தமது கிருபையை அதிசயமாய் விளங்கப்பண்ணினபடியால், அவருக்கு ஸ்தோத்திரம்'' (சங். 31:21).



ஜெபம்: ``என் அன்பு தெய்வமே! என்னால் தாங்கமுடியாத எல்லா பாரங்களையும், கவலைகளையும் உம்முடைய பாதத்திலே முற்றிலுமாக சமர்ப்பித்துவிடுகிறேன். எப்படியாவது என் பாரத்தை தலைகீழாய் மாற்றிப்போடும். நீர் நிச்சயம் எல்லாவற்றையும் ஆசீர்வாதமாக மாற்றி என்னை இன்று தாங்கி ஆதரிப்பீர் என்று விசுவாசிக்கிறேன். உமக்கு நன்றி! உமக்கு மகிமை! இயேசுவின் நாமத்தில் ஸ்தோத்திரத்தோடே ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே. ஆமென்!''

கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்!

"கர்த்தர் உன் ஆக்கினைகளை அகற்றி, உன் சத்துருக்களை விலக்கினார்; இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார்; இனி தீங்கைக் காணாதிருப்பாய்"

(செப்பனியா 3:15).

உலக வாழ்வில் இந்த நாளிலே பல்வேறு தீங்குகள் மத்தியிலே, அநியாயங்கள் மத்தியிலே, மனமுடைந்தவர்களாக இருக்கிறீர்களோ? அவரால் உங்கள் ஆக்கினைகளை அகற்ற முடியும். தீங்கைக் காணாதபடி அவர் அருள்புரிவார் (சங்.121:7). ஏனென்றால், அவர் உங்கள் நடுவில் வல்லமை நிறைந்தவராக எழுந்து நிற்பார். எத்தனை சந்தோஷம்! ஆம்! ஆண்டவர் உங்கள் மத்தியில், உங்கள் வீட்டில் வாசம்பண்ணுகிறவரும், உலாவுகிறவருமாயிருக்கிற உங்கள் தேவனாக இருப்பார். இது எத்தனை பெரிய சிலாக்கியம் (2 கொரி. 6:16)!

"வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்கு செய்தார்" (லூக்கா 1:49) என்று ஆண்டவரின் தாயாராகிய மரியாள் கூறினாள். ஆம்! நீங்களும் தீங்கின் மத்தியில் தேவனுடைய வல்லமையை நினைவுகூருங்கள். கர்த்தரையும், அவர் வல்லமையையும் நாடுங்கள். (1 நாளா. 16:11; சங். 105:4) அவர் வல்லமையும் பயங்கரமுமாய் உங்கள் காரியங்களில் உங்களை காத்து வழிநடத்துவார் என்று விசுவாசித்து ஆசீர்வாதம் பெறுங்கள்.

குழந்தை பிரசவிக்க வேண்டிய நிலைமையிலே ஒரு பெண் தனிமையிலே தத்தளித்துக் கொண்டிருந்தாள். எல்லோரும் தன்னைவிட்டு சற்று அப்புறம் போனபொழுது, அவள் ஆண்டவரோடு பேச ஆரம்பித்தாள். "ஆண்டவரே, மனிதரால் எனக்கு உதவி செய்ய முடியவே முடியாது. ஆனால், உம்மால் முடியும் என்று நான் நம்புகிறேன். இப்பொழுதும், இந்த குழந்தையை சுலபமாய் பிரசவிக்க உம்முடைய பெலனால் என்னை நிரப்பும்" என்று ஜெபித்தாள். உடனடியாக தேவ வல்லமை அவளை அளவில்லாமல் நிரப்பியது. அந்த வல்லமையின் மூலமாக எந்த வைத்திய உதவியுமின்றி, குழந்தையை சுகமாக பெற்றெடுத்தாள். மருத்துவமனையில் அறுவை சிகிச்சையின்றி குழந்தையை சுகமாய் பெற்றெடுத்தவள் அன்று அவள் ஒருவள்தான்! காரணம், ஆண்டவர் அவள் நடுவில் நின்று ஆக்கினை வராதபடி, தீங்கு நேரிடாதபடி, யாவற்றையும் அவளுக்காக செய்து முடித்தார்.

இன்று பிரசவ நிலைமையிலோ அல்லது வேறு எந்த பிரச்சினையின் மத்தியிலோ நீங்கள் இருக்கிறீர்களோ? நீங்களும் இதே விசுவாசத்தோடு ஆண்டவரிடம் ஜெபத்தின் மூலம் பேசுங்கள். உங்களையும் அற்புதமாய் அவர் காப்பாற்றுவார்! சத்துருவான சாத்தான் உங்களை அழிக்கவும், துன்பத்துக்குள்ளாக்கவும் பல தீமைகளை கொண்டு வந்து போட்டாலும், கர்த்தர் உங்கள் நடுவில் பெரியவராயிருந்து, அவனுடைய சகல கிரியைகளையும் நசுக்கிப்போடுவார் (சங்.147:5).

ஜெபம்: "என் அன்பு தகப்பனே, இந்த இக்கட்டில் நீர் என்னோடு இருக்கிறீர் என்று விசுவாசிக்கிறேன். இன்று எல்லாவிதத் தீங்கையும், ஆக்கினையையும், பிசாசின் திட்டங்களையும் அகற்றி, ஆசீர்வாதத்தை அருள உம்மால் முடியும் என்று நான் விசுவாசிக்கிறேன். இப்பொழுதும் நீர் என் நடுவில் நின்று அற்புதம் செய்கிறபடியால் உமக்கு நன்றி, உமக்கு மகிமை, ஆமென்!"

ஜெபத்தைக் கேட்கிற தேவன்!

"நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளை யெல்லாம் பெறுவீர்கள்"
(மத்தேயு 21:22).

நம்மில் பலர், தேவைகளினிமித்தம், எதிர்பார்ப்புகளினிமித்தம், "யார் இந்த நிலைமையில் எனக்கு உதவி செய்வார்கள்? என் காரியத்தில் மாற்றம் ஏற்பட வழி உண்டா? நியாய ஸ்தலத்தில் எனக்கு நியாயம் கிடைக்குமா? சரீரத்தில் எனக்கு விடுதலை கிடைக்குமா? என் தேவைகள் இன்று நிறைவேற்றப்படுமா?" என்றெல்லாம் பல்வேறு விதங்களில் மனதில் அலைசடிப்படுகின்றனர். ஆனால், நம் அன்பின் ஆண்டவரோ நம் அலைச்சல்களையெல்லாம் எண்ணியிருக்கிறார். நம் கண்ணீரை யெல்லாம் அவருடைய கணக்கில் வைத்திருக்கிறார் (சங். 56:8).

ஒரு தாய், கீழ்ப்படியாதவனும், தன் மனம்போல் நடக்க விரும்பியவனுமாக இருந்த தன் வாலிப மகனைக் குறித்து அதிகம் கவலைப்பட்டாள். ஒருநாள் அவன் பெற்ற தாயிடமே கொஞ்சமும் மரியாதையில்லாமல், அவள் மனதை வேதனைப்படுத்தும்படியாய் பல காரியங்களை சொல்லிவிட்டு, வீட்டைவிட்டு ஓடிவிட்டான். புருஷனும் குடும்ப காரியங்களை சற்றும் கவனிக்காத கல்மனம் படைத்த ஒரு மனிதன். இந்த நிலையில் இந்த தாய் என்ன செய்வது என்று அறியாமல், கண்ணீர்விட்டு அழுதாள். அந்த சமயத்தில் தான் வேதாகமத்தை வாசிக்க அதை திறந்தபொழுது அவள் கண்களில் மேற்கண்ட வேத வசனம் பளிச்சிட்டது. அதன்படியே ஒரு புது விசுவாசத்துடன், "ஆண்டவரே, நீர் மெய்யான தேவனாய், உயிரோடிருக்கிறவராக, என் காரியங்களை யெல்லாம் அறிந்திருக்கிறீர்! என் மகனுடைய கடின இருதயத்தையும், என் கணவருடைய மாறுபட்ட இருதயத்தையும் மாற்ற உம்மால் கூடும் என்றும், நீர் சொல்ல ஆகும், நீர் கட்டளையிட நிற்கும் (சங். 33:9) என்றும் விசுவாசிக்கிறேன். உம்மை உறுதியாய் விசுவாசித்து பற்றிக்கொள்கிற என் வாழ்வில் நீர் நிச்சயம் அற்புதம் செய்வீர் என்று நம்பி உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். நீர் பெரிய காரியங்களை செய்கிற தேவன் (யோபு 5:9; 9:10). இன்று உம்முடைய கரத்திலிருந்து நான் ஒரு அற்புதத்தை எதிர்பார்க்கிறேன்" என்று பிரார்த்தனை செய்தாள். உடனடியாக அவள் மனதை உலகம் தரக்கூடாத ஒரு பெரிய சமாதானம் நிரப்பியது. தன் கவலைகளை மறந்தாள், கர்த்தரை விசுவாசித்தாள். என்ன ஆச்சரியம்! ஒருசில நாட்களுக்குள்ளாக மகன் திரும்பி வந்தான். தாயின் அன்பை உணர்ந்தான், ஆண்டவருடைய மகனாக, அவருடைய ஊழியனாக மாறி, தாயின் மனதை குளிரச்செய்தான்.

என் அன்பு சகோதர, சகோதரிகளே! இன்று நீங்களும் இதேவண்ணமாக வேத வசனங்களைப் பற்றிக்கொண்டு, அதனால் பெறும் விசுவாசத்தோடு (ரோமர் 10:17), உங்கள் காரியங்களையெல்லாம் ஆண்டவரிடத்தில் சமர்ப்பித்துவிடுங்கள். உங்கள் ஜெபத்தைக் கேட்கிற ஆண்டவர், உங்கள் வாழ்விலும் அற்புதம் செய்வார்.

ஜெபம்: "என் அன்பு தெய்வமே, இந்த உலகத்தின் காரியங்கள் எத்தனை வேதனையை, சஞ்சலத்தை உண்டுபண்ணுகிறது. ஆனால், நான் என் பாரங்களை அல்ல, கவலைகளை அல்ல, உம்மையே நம்புகிறேன். உம்மையே உறுதியாய் பற்றிக்கொள்கிறேன். இன்று நீர் எனக்கு நிச்சயமாக விடுதலை தருவீர் என்று நம்பி, விசுவாசித்து உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். ஆமென்!"

பாதுகாக்கும் ஆண்டவர்!

"நான் அதற்கு சுற்றிலும் அக்கினி மதிலாயிருந்து, அதின் நடுவில் மகிமையாக இருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். ....உங்களைத் தொடுகிறவன் அவருடைய கண்மணியைத் தொடுகிறான்"
(சகரியா 2:5,8).

ஆம், பிரியமானவர்களே! பொறாமையும், நயவஞ்சகமும் நிறைந்த மக்கள் மத்தியிலே நாம் வாழ்கிறோம். இதனிமித்தம் நாம் மனம் சோர்ந்துபோயிருக்கிறோமா? மேற்கண்ட வாக்குத்தத்தத்தின்படி, கர்த்தரையே நோக்கிப்பாருங்கள். அவரையே உறுதியாய் பற்றிக்கொள்ளுங்கள். உலகத்தில் காணப்படும் பொல்லாங்குக்கும், பொல்லாங்கான வைகளுக்கும் நடுவில், உங்களை சுற்றிலும் அவர் அக்கினி மதிலாயிருந்து, உங்கள் மேல் தங்கியிருக்கும் தம்முடைய தெய்வீக மகிமையை மற்றவர்கள் காணும்படி கிருபை செய்வார் (ஏசாயா 64:2). நீங்கள் அவருக்கு பிரியமாய், பயபக்தியாய், நீதியின் வழியில் நடப்பதில் மாத்திரம் ஜாக்கிரதையாய் இருங்கள். தாவீது, கர்த்தர் என் மேய்ப்பராய், என்னை வழிநடத்துகிறவராக இருக்கிறபடியினாலே மரண இருள் போன்ற பள்ளத் தாக்கின் மத்தியில் கடந்து செல்ல நேரிட்டாலும், நான் பொல்லாப்புக்கு பயப்படுவ தில்லை. ஏனெனில் என் மேய்ப்பரும், இரட்சகருமான ஆண்டவர், என்னை கண்ணும் கருத்துமாக காப்பார் என்று எழுதியிருக்கிறான் (சங். 23:1,4).

ஒருசமயம் வடதுருவ ஆராய்ச்சியாளர்கள் சிலர் பனிபடர்ந்த ஓரிடத்திற்கு சென்றார்கள். பகலிலே பணி முடிந்த பின்பு, ஒவ்வொருவரும் இரவிலே ஒரு கூடாரம் போட்டு தங்கியிருந்தனர். காலையில் எல்லாரும் எழுந்து தங்கள் வேலையை கவனிக்க புறப்பட்டனர். அவர்களுள் ஒருவர் கண்விழித்து பார்த்தபொழுது, அவரைச் சுற்றிலும் ஒரே இருள்! வெளிச்சம் ஒன்றுமில்லை. அவர் வைத்திருந்த கேஸ் அடுப்பிலிருந்து சமையல் வாயு கசிவதினால் உண்டான வாசனை வெளிப்பட்டது. "ஐயோ பனி சுற்றிலும் மூடிக்கொண்டிருக்கிறதே, சமையல் வாயு வேறு கசிகிறதே, நான் என்ன செய்வேன்?" என்று ஒரு கணம் கலங்கினார். மறுகணம், இந்த பனிப்படலங்களுக்கு மேலாக, மேகத்திற்கு மேலாக ஆண்டவர் ஒருவர் இருக்கிறார், அவர் சர்வ வல்லவர், அவரால் என்னை மீட்டெடுக்க முடியும் என்று விசுவாசித்தார். ஆண்டவரை நோக்கி ஒரு சிறு பிரார்த்தனை செய்தார். அதேசமயம் மற்ற ஆராய்ச்சியாளர்கள் ஒவ்வொரு இடமாக தேடித்தேடி, கடைசியாக இவர் இருந்த இடத்தை எப்படியோ கண்டுபிடித்து அவரை மீட்டனர்.

உங்களையும் இன்று முழுவதும் ஆண்டவர் அப்படியே எந்த ஆபத்தும், பொல்லாங்குமின்றி, புலம்பல் இன்றி, தமது அருட்கரத்தின் மறைவில் வைத்துக் காப்பார். கவலைப்படாதிருங்கள் (ஏசாயா 51:16)!

ஜெபம்: "என் அன்பு தெய்வமே, நீர் இந்த உலகத்தில் எல்லாப் பொல்லாங்கினின்றும் என்னைக் காக்க வல்லவராய் இருக்கிறீர் என்று எண்ணும் பொழுது எனக்கு எவ்வளவு சந்தோஷம்! இன்றுமுதல் நீர் என்னை விசேஷமாக பாதுகாத்துக் கொள்ளும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் பிதாவே, ஆமென்!"

கர்த்தரால் வரும் ஆசீர்வாதம்!

"கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்"

(நீதிமொழிகள் 10:22).

உலக வாழ்வில் பற்பல ஆசீர்வாதங்கள் ஒவ்வொருவருக்கும் தேவையாயிருக்கிறது. குழந்தை பிறந்த பிறகு, அதன் வளர்ச்சியில் ஆண்டவருடைய ஆசீர்வாதம் தேவையாயிருக்கிறது. அறிவில் தேவையாயிருக்கிறது. அதுபோன்றே ஏற்ற சமயத்தில் திருமண வாழ்வு, நல்ல வேலை போன்ற பலவிதமான ஆசீர்வாதங்களும் மிகவும் தேவையானவைகள்! நீங்களும்கூட பற்பல தேவைகளினால் உண்டான நெருக்கங்களினால், "நான் என்ன செய்வேன்? இவ்வுலகில் எப்படி வாழ்வேன்?" என்று மனதிற்குள் புலம்பிக்கொண்டிருக்கலாம். இப்படிப்பட்ட பயங்கரமான தேவைகள் நிறைந்த சூழ்நிலையில் கர்த்தரை நம்புகிறவர்களுக்கோ அவர் ஐசுவரியத்தை தருவார் (1 நாளா.29:12). **ஐசுவரியம்** என்ற சொல்லில் மேற்கண்ட அனைத்து ஆசீர்வாதங்களும் அடங்கியிருக்கிறது. நாம் அவரை நோக்கிக் கூப்பிட வேண்டும், கேட்க வேண்டும் என்று தான் அவர் விரும்புகிறார். அப்பொழுது நாம் விரும்புகிறதற்கும் வேண்டுகிறதற்கும் அதிகமான அளவில் ஐசுவரியம் கொடுத்து ஆசீர்வதிக்க அவர் வல்லமையுள்ளவராயிருக்கிறார்! (எபே.3:20).

ஒரு இளம் தம்பதியர் வருவாய் பற்றாத நிலைமையில், மாதத்தின் ஒருசில நாட்களுக்குள்ளாக செய்வதறியாது கலங்கிநின்றனர்! அந்த மனைவி தன் கையில் கணவன் சம்பாதித்துக் கொடுத்த கொஞ்சம் பணத்தையும் மிகவும் சிக்கனமாக செலவழிக்க முயன்றபொழுதிலும், மாதக் கடைசி வரும்பொழுது, தயக்கம், தவிப்பு, சஞ்சலம் ஏற்பட நேர்ந்தது. இந்த நிலையில் ஒருநாள் அவர்கள் இரண்டு பேரும் வந்த வருவாயை ஆண்டவர் கையில் ஒருமனதோடு ஒப்புக்கொடுத்தனர். "இயேசப்பா, இனி நாங்கள் அல்ல, எங்கள் முயற்சி அல்ல, நீரே இந்த பணத்தை ஆசீர்வதித்து, அந்தந்த நாளுக்கு வேண்டிய ஐசுவரியத்தை, ஆசீர்வாதத்தை நிறைவாய் தாரும்" என்று முழுமனதோடு ஜெபித்தார்கள். என்ன ஆச்சரியம்! ஆண்டவருடைய ஆசீர்வாதம் அந்த சம்பாத்தியத்தில் இறங்கியது! அற்புதமானவிதத்தில் அந்த கணவனுடைய வருவாயையும் உயர்த்தினார். அதன்பிறகு "கஷ்டம், தேவை" என்ற பெயருக்கே அவர்கள் வாழ்வில் இடமில்லாத அளவிற்கு ஆண்டவர் அவர்களை படிப்படியாக உயர்த்தினார்!

ஆம், கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது (சங். 34:10). எனவே, இன்று நீங்களும் இப்படிப்பட்ட வேதனையற்றதும் கர்த்தரால் அருளப்படுகிறதுமான ஐசுவரியத்தை நாடித்தேடுவீர்களானால், "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும்" (மத்தேயு 7:7) என்று வாக்கருளிய ஆண்டவர் உங்கள் வேதனைகளையெல்லாம், குறைவுகளையெல்லாம் அகற்றிப்போட்டு நிறைவாய் ஆசீர்வதிப்பார்.

ஜெபம்: **"அன்புள்ள ஆண்டவரே, இன்று என்னுடைய வாழ்வின் தேவையையெல்லாம், என் அன்பின் தகப்பனாகிய நீர் அறிந்திருக்கிறீர். இன்னது தேவை என்று உமக்குத் தெரியும். எனினும் நான் விரும்புகிற இந்த குறிப்பிட்ட ஆசீர்வாதத்தை நீர் நிச்சயம் தருவீர். உம்மால் கூடாதது ஒன்றுமில்லை என்று விசுவாசித்து, என் தேவையை உம்மிடத்திலே அறிக்கையிடுகிறேன். உமக்கு நன்றி செலுத்துகிறேன். ஆமென்!"**

காத்திருந்தால் பாக்கியம் பெறுவீர்கள்!

''என் வாசற்படியில் நித்தம் விழித்திருந்து, என் கதவு நிலையருகே காத்திருந்து, எனக்கு செவிகொடுக்கிற மனுஷன் பாக்கியவான்'' (நீதிமொழிகள் 8:34).

நம்முடைய தகப்பனாகிய ஆண்டவர் நம் ஒவ்வொருவருக்கும் இன்னது தேவை என்பதை அறிந்திருக்கிறார். அதைக் கொடுக்க அவராலே முடியும். ஆனாலும், நாம் ஒவ்வொருவரும் அவரை நோக்கிப் பார்க்க வேண்டும், அவருடைய சமுகத்தில் நம்முடைய இருதயத்தை ஊற்ற வேண்டும், அவரையே ஒவ்வொரு காரியத்திற்கும் சார்ந்திருக்க வேண்டும் என்று அவர் அதிகமாக விரும்புகிறார் (மத்.7:8). அப்படி அவரை பற்றிக்கொள்ளும்பொழுது, நமக்கு உதவி செய்வது அவருக்கு லேசான காரியம். இதைத்தான் ஆசா என்ற ஒரு ராஜா, ''பலமுள்ளவனுக்காகிலும், பலனற்றவனுக்காகிலும் உதவிசெய்கிறது உமக்கு லேசான காரியம்'' என்று சொன்னான். அவன் அவரை நோக்கிக் கூப்பிட்டபோது, குறைவான போர் வீரர்கள் அவன் சேனையில் இருந்தபொழுதிலும், அவனுக்காக ஆண்டவர் எழுந்து புறப்பட்டு வந்து எதிரிகளோடு யுத்தம் செய்தார், அதினிமித்தம் அவன் பெரிய அற்புதத்தை கண்டான் என்று 2 நாளாகமம் 14:11–15–ல் வாசிக்கிறோம். ஆண்டவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் (எபி.13:8). தம்மை நம்புகிற, தம்மை நோக்கி வேண்டுதல் செய்கிற தம் பிள்ளைகள் ஒவ்வொருவர் வாழ்விலும் அவர் முன்னதாக சென்று, எல்லாக் குறைவுகளையும் மாற்றி, நிறைவை மட்டும் அருளிச் செய்வார் (ஏசாயா 45:2).

ஒரு குடும்பத்திலே மனைவியாக வந்த ஒரு பெண், அவளது குடும்பத்தினரால் பக்தியாய் வளர்க்கப்பட்டு, புகுந்த வீட்டிற்கு வந்தாள். ஆனால், அங்கோ அதற்கு நேர் மாறாக எல்லாரும் வாழ்ந்து வந்ததைக் கண்டாள். குடும்ப ஜெபம், தனி ஜெபம், வேத வாசிப்பு, ஆலயம் செல்லுதல் போன்ற காரியங்கள் ஒன்றும் அவ்வீட்டில் இல்லை. எப்பொழுதும் வீண் வார்த்தைகளை மட்டுமே அங்கு கேட்க முடியும். இதைக்கண்ட அவள் முதலில் மிகுந்த சோர்வடைந்தாள். ஆனால், அதன்பிறகு நான் ஆண்டவரைத் தேடட்டும், அவரிடத்தில் என் வாஞ்சையை வெளிப்படுத்தட்டும், அவர் எனக்காக யாவற்றையும் செய்து முடிப்பார் என்ற விசுவாசத்தோடு அந்த வீட்டாரின் இரட்சிப்புக்காக ஜெபிக்க ஆரம்பித்தாள். சுருங்கக்கூறின், வெகுவிரைவில் ஒவ்வொரு ஆத்துமாவாக ஆண்டவரண்டை திரும்பும்படியாக, அவளுடைய ஜெபத்தின்மூலமாக ஆண்டவர் செய்தார். குடும்ப ஜெபம் இல்லாத அந்த வீடு, இன்றைக்கு ஜெப வீடாக மாறியிருக்கிறது. காரணம், அந்த ஒரு இளம் பெண்ணின் ஜெப ஜீவியம். காத்திருந்து பாக்கியத்தை பெற்றுக்கொண்டாள்.

அன்பான சகோதரனே, சகோதரியே, நீயும், உன் குடும்பத்தைப்பற்றிய குறைகளை பெரிதுபடுத்தாமல், ஒவ்வொருவருக்காகவும் கர்த்தரை நோக்கிக் காத்திரு. உன் வேண்டுதலை அவர் கேட்டு, உன் வீட்டையும் ஆசீர்வதிப்பார் (கலா.6:2).

<u>ஜெபம்:</u> ''என் அன்பு தகப்பனே, என் வீட்டிலே சமாதானம் இல்லையே! சண்டையும் சச்சரவுமாக இருக்கிறதே! உம்முடைய சமாதானம் என் குடும்பத்திலே இறங்கட்டும். உம் தெய்வீகப் பிரசன்னம் என்னையும், என்னோடு இருக்கிற இந்த மக்களையும் நிரப்பி, இன்பமான தெய்வீகக் குடும்ப வாழ்வை எங்களுக்கு தாரும். இதை உம்மால் மட்டுமே செய்ய முடியும் என்று விசுவாசித்து உமக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த பாக்கியத்தை <u>இன்று</u> நீர் எனக்கு நிச்சயம் தருவீர் என்று விசுவாசிக்கிறேன். ஆமென்!''

கர்த்தரை நம்புங்கள்! அசையாமல் நிலைத்திருப்பீர்கள்!

"கர்த்தரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப்போல் இருப்பார்கள்" (சங்கீதம் 125:1).

சில சமயங்களில் நாம் மிகச்சிறிய காரியங்களையும் தாங்க முடியாமல், மனவேதனைப்பட்டு சோர்ந்து போகிறோம் (எபி.12:3) உதாரணமாக, குழந்தைக்கு ஜுரம் வந்துவிட்டது என்றால், உடனே தாய்மார் ஓவென்று அழுகிறார்கள். இப்படி பல்வேறு பிரச்சினைகள் குடும்ப வாழ்விலோ, தனிப்பட்ட வாழ்விலோ வரும்பொழுது, அதைத் தாங்க முடியாமல் பல சமயங்களிலும் தவிக்கிறோமல்லவா! ஆனால், தாவீது, "கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை" (சங். 16:8) என்று திட்டவட்டமாய் கூறினான். நீங்களும் அதே காரியத்தையே செய்யுங்கள். உங்கள் பயம், திகில், பாரம் யாவும் உங்களைவிட்டு ஓடிப்போகும்.

ஒரு குடும்பத் தலைவனுக்கு திடீரென்று வேலை ஸ்தலத்திலே ஒரு பிரச்சினை. கடினமாக பல வருடங்கள் உண்மையும் உத்தமுமாக உழைத்தவர்! ஆனால், அவருக்குக்கீழே வந்த ஒரு ஊழியர், அவர்மீது பொறாமைகொண்டு மேலதிகாரிகளிடம் வீணான பழியை அவர்மேல் சுமத்தினார். அவர் பொறுமையாய் ஆண்டவரிடம் இந்த காரியத்தை சமர்ப்பித்தார். மேலதிகாரிகளும் சரியாக அதை விசாரியாமல், அவரை பலவிதங்களிலும் கண்டித்தனர். அந்த நிலைமையிலும் அவரோ உண்மையில் மாறாதவராக தெய்வீக பயத்துடன் என்றும்போல் தன் பணியில் ஈடுபட்டார். ஆனால், எதிர்பாராத நேரத்திலே அவருக்கு விரோதமாய் காரியங்களை நடப்பித்த அந்த மனுஷன், தன் மனைவிக்கு ஒரு பயங்கரமான, மரணத்துக்கேதுவான வியாதி வந்திருப்பதை வைத்தியர்கள் அறிவித்தபொழுது மனமுடைந்தான். "ஐயோ, இந்த நீதிமானுக்கு நான் செய்த துரோகம் தான் இதற்கு காரணம்" என்று அவரிடம் போய் மன்னிப்புக் கேட்டு அழுதான். அந்த நீதிமானுக்கு முன்னைக்காட்டிலும் அதிகமான கனமும், மகிமையும், அதே அலுவலகத்தில் உண்டாகும்படி ஆண்டவர் அருள்புரிந்தார்.

ஆம், பிரியமானவர்களே, தாவீது எவ்வளவு பாடுகளின் வழியாய் கடந்து சென்றான். சவுல் ராஜா அவனுக்கு கொடுத்த தொல்லைகள் ஏராளம், ஏராளம்! ஆனால், அவனோ கர்த்தருக்குள் எப்பொழுதும் தன்னை திடப்படுத்திக்கொண்டான் (1 சாமு. 30:6).

அதைப்போலவே நீங்களும் இன்றுமுதல் எதைக்குறித்தும் கவலைப்படாமல், சோர்ந்துபோகாமல், கன்மலையும் உயர்ந்த அடைக்கலமுமாகிய ஆண்டவரையே உறுதியாய் பிடித்துக் கொள்ளுங்கள். அப்பொழுது நீங்கள் அசைக்கப்படாதபடி அவரே உங்களைக் காப்பார் (சங்.62:2).

ஜெபம்: "அன்புள்ள தகப்பனே, இந்த உலகத்தில் சூழ்ச்சிகளும், வஞ்சகங்களும் செய்கிற மக்கள் எங்களை சூழ்ந்திருக்கிறார்கள். இவர்கள் மத்தியில் நானும் தாவீதைப்போல் உம்மையே முற்றிலும் சார்ந்திருக்க, என்னுடைய வலதுபாரிசத்தில் இன்றுமுதல் நீர் எப்பொழுதும் இருக்க வேண்டும் என்று உம்மிடத்திலே மன்றாடுகிறேன். உமக்கு நன்றி, உமக்கு ஸ்தோத்திரம், ஆமென்!"

கண்ணீரைத் துடைக்கும் கர்த்தர்!

"…கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைத்து, தமது ஜனத்தின் நிந்தையை பூமியிலிராதபடிக்கு முற்றிலும் நீக்கிவிடுவார்…"

(ஏசாயா 25:8).

மிகவும் சந்தோஷமாய் இருக்கிறோம் என்று சொல்லுகிற வேளைகளிலே திடீரென்று வருகிறது மரணம்! ஆபத்து! விபத்து! இதை யாரால் தாங்க முடியும். இந்த வேதனை இருதயத்தை உடைத்து கண்ணீரால் நம் முகத்தை நிரப்புகிறது. இந்த வழியாய் கடந்து செல்கிறவர்களுக்குத்தான் அதின் கஷ்டம் தெரியும். மற்றவர்கள், "ஏன் அதையே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்?" என்று ஏளனமாய் பேசக்கூடும். ஆனால், மனிதரால் அந்த சமயத்தில் நமக்குக் கொடுக்கக்கூடாத இளைப்பாறுதல், மகிழ்ச்சி, ஆறுதலை சகலவிதமான ஆறுதல்களின் தேவனாக இருக்கிற ஆண்டவரால் தான் கொடுக்க முடியும்! (2 கொரி. 1:3). இந்த நிலைமையிலே, மரண இருளிலே நடந்து கொண்டிருக்கிற நீங்களும் ஆண்டவரையே நோக்கிப் பாருங்கள். அவரே உங்களுக்கு ஆறுதலும், அரவணைப்பும் தந்து தேற்றுவார் (சங். 91:15).

1986-ம் ஆண்டு மிகவும் சந்தோஷமாக எங்கள் அன்பு மகள் ஏஞ்சலை அழைத்துக்கொண்டு, காரில் வெளியூர் புறப்பட்டோம். ஆனால், விபத்து இடையில் ஏற்பட்டு மகளை இழக்க வேண்டிய சூழ்நிலை வந்தபொழுது, எங்கள் நெஞ்சம் இரண்டாக பிளப்பதுபோல் இருந்தது. கர்த்தர், அந்த நிலைமையிலும் எங்களைத் தேற்றினார், அரவணைத்து, ஆறுதல்படுத்தினார். இந்த வேதனையை புரிந்துகொள்ள முடியாத ஒருவர் ஒருமுறை என் கணவரைப் பார்த்து, "ஏன் இறந்துபோன உங்கள் மகளைக் குறித்து அடிக்கடி கூட்டங்களிலெல்லாம் அழுகிறீர்கள். ஆண்டவர்தான் அவளை எடுத்துக்கொண்டு போய்விட்டார்" என்று சற்று ஏளனமாயும், பரிகாசமாயும் கேட்டார். என் கணவர் பதிலேதும் சொல்லவில்லை. நாட்கள் கடந்தன! அவருடைய ஒரே மகன் நண்பர்களோடு கடலிலே குளிக்க சென்றபோது, அவன் திரும்பி வராமல், மரணம் அவனை எடுத்துக்கொண்டு போய்விட்டது. இந்த அனுபவத்திற்குப் பிறகு அவர் என் கணவரைப் பார்த்து, "ஐயா, என்னை மன்னியுங்கள், நீங்கள் பட்ட வேதனை, சஞ்சலம், தவிப்பு இன்று தான் என்னால் உணர முடிகிறது" என்று கண்ணீர்விட்டு கதறினார். என் கணவர் நடந்ததையெல்லாம் மறந்து, அவரை அணைத்து ஆற்றித் தேற்றினார், அவருக்காக பிரார்த்தனை செய்தார்.

"என் கால் சறுக்குகிறது என்று நான் சொல்லும்போது, கர்த்தாவே, உமது கிருபை என்னைத் தாங்குகிறது. என் உள்ளத்தில் விசாரங்கள் பெருகுகையில், உம்முடைய ஆறுதல்கள் என் ஆத்துமாவைத் தேற்றுகிறது" (சங்.94:18,19). ஆம், இந்த வசனங்களின்படி, எப்படிப்பட்ட சூழ்நிலைகளிலும் அவரே உங்களை ஆறுதல்படுத்தி, அணைத்து கண்ணீரைத் துடைப்பார்.

<u>ஜெபம்:</u> "என் அன்பு தகப்பனே, உடைந்த என் மனதிற்கு நீரே ஆறுதல்! நீர் மரணத்தை சிலுவையிலே ஜெயித்தீர். எனவே, எனக்கும், இந்த கண்ணீரிலிருந்து, வேதனையிலிருந்து <u>இன்று</u> ஜெயத்தைத் தாரும். உம் ஆறுதல் என்னையும் நிரப்பும்படி அருள்தாரும். என் மனதை அழுத்திக்கொண்டிருக்கும் பாரம், கவலை யாவையும் மாற்றியருளும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தர் காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்!

''உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்'' (சங்கீதம் 37:5).

எதிர்பாராத சூழ்நிலைகள் சில நேரங்களில் வந்துவிடும்பொழுது, செய்வதறியாது திகைக்கிறோம். ''ஐயோ, என் மகளின் திருமண நாள் விரைவில் வந்து விட்டதே! பணம் எவ்வளவோ தேவையாயிருக்கிறதே! நான் என்ன செய்வேன்?'' என்று தவிக்கிறோம். இப்படிப்பட்ட பல்வேறு தவிப்புகளை இன்று நாம் சந்திக்க வேண்டியதாயிருக்கிறது. ஆனால், மேற்கண்ட வசனத்தின்படி, நம் தவிப்பை மனிதரிடத்தில் சொல்லி புலம்புவதில் எந்தவித பயனுமில்லை (சங்.118:8). ஆகவே, எவ்வளவுநேரம் ஜெபித்து அந்த காரியங்களுக்காக ஆண்டவரை பற்றிக்கொள்ள முடியுமோ அவ்வளவாய் கர்த்தரிடத்தில் ஜெபத்தின்மூலம் ஒப்புக்கொடுப்போம். (தனி ஜெபம், குடும்ப ஜெபம், உபவாச ஜெபம் - இவைகள் மூலம்). அப்படி ஒப்புக்கொடுக்கும்பொழுது ஆண்டவர், 'எனக்காக யாவற்றையும் செய்து முடிப்பார்' (சங். 138:8) என்ற ஒரு நம்பிக்கையை அவர் கொடுப்பார். மட்டுமல்லாமல், நாம் பயப்படுகிற காரியத்தை அவரே அழகான முறையில் செம்மையான விதத்தில் மாற்றிப்போடுவார்.

2005–ம் ஆண்டு டிசம்பர் மாதம் பெண்கள் மாநாடு ஒன்றை சென்னையில் நடத்த பல மாதங்களுக்கு முன்னதாக ஆயத்தம் செய்ய ஆரம்பித்தோம். அந்த நாட்கள் நெருங்க, நெருங்க, திடீரென்று எங்கிருந்தோ வந்த காற்று, விடாத அடைமழை, புயல் யாவும் எங்களை பயமுறுத்தியது. உடனடியாக, ஒருசில பெண்களாகக் கூடி ''ஆண்டவரே, எங்களால் ஒன்றும் செய்ய இயலாது. நீரே இந்த சூழ்நிலையை மாற்றித் தாரும், பெண்கள் திரளாக வரவும், உம்முடைய ஆசீர்வாதத்தை பெறவும், சமாதானமான சூழ்நிலையை நீர் தரப்போகிறீர் என்று விசுவாசித்து உமக்கு நன்றி செலுத்துகிறோம்'' என்று கருத்தாய் பிரார்த்தனை செய்தோம். ஆனால், அந்த நாளின் காலை பத்திரிகையிலே, அன்று காலையில் தான் புயல் சென்னை வழியாய் கடக்கப் போகிறது என்ற செய்திகள் வெளிவந்தன. எனினும், எங்கள் உள்ளத்திலே ஆண்டவர் நிச்சயம் காரியத்தை நடத்தித் தருவார் என்ற ஒரு தைரியம், திட நம்பிக்கையை கர்த்தர் கொடுத்தார். கூட்டம் ஆரம்பித்தது! பெண்கள் வருவார்களோ என்ற எண்ணத்திற்கு கொஞ்சமும் இடமில்லாமல், எப்பொழுதும் வருகிறதைக் காட்டிலும் அதிகமான பெண்கள் சாரைசாரையாக வந்து இடத்தை நிரப்பினர். புயலின் வேகத்தையும், மழையின் சீற்றத்தையும் ஆண்டவர் தமது கரத்தின் வல்லமையினால் அடக்கி வைத்திருந்தார். அந்த நாளில் புயலுக்கு பதிலாக தேவ பிரசன்னத்தினால் அளவில்லாமல் எல்லாரையும் நிரப்பினார். அற்புதங்களையும், அதிசயங்களையும் செய்தார். உடைந்த உள்ளத்தோடு வந்த பெண்களை ஆறுதல்படுத்தினார். என்ன ஆச்சரியம்!

ஆம், உங்கள் பிரச்சினைகள் எதுவாயிருந்தாலும், இன்று உடனடியாக ஆண்டவர் பாதத்தில் முழங்காற்படியிடுங்கள், அதை அப்படியே குழந்தையைப்போல் அவர் சமுகத்தில் ஊற்றிவிடுங்கள் (சங்.142:1,2)! நீங்களும் அற்புதத்தைக் காண்பீர்கள்! ஏனெனில், கர்த்தரே உங்கள் காரியங்களை வாய்க்கப்பண்ணுவார்.



ஜெபம்: ''என் அன்பு தெய்வமே, நான் என் உள்ளத்திலுள்ள பாரங்களை அப்படியே ஒன்று விடாமல் உம்மிடம் ஒப்படைக்கிறேன். இன்று முதல் என் காரியங்கள் யாவையும் நீரே பொறுப்பெடுத்து, அற்புதமாய் வழிநடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!''

பலவீனனுக்கும், எளியவனுக்கும் இரங்கும் ஆண்டவர்!

''பலவீனனுக்கும் எளியவனுக்கும் அவர் இரங்கி, எளியவர்களின் ஆத்துமாக்களை இரட்சிப்பார்''

(சங்கீதம் 72:13)

சரீரத்தில் பலவீனம் வரும்பொழுது, ஆத்துமாவிலும் சோதனைகள், வேதனைகள் வரும். அப்பொழுது, தவிப்பு, சஞ்சலம், சோர்வு ஏற்படுகிறது. ஆவிக்குரிய வாழ்க்கையிலும் அப்படியே தான்! இந்த பலவீனங்களையெல்லாம் மாற்ற வல்ல தேவாதிதேவனாம் இயேசுவின்மேல் இன்று உங்கள் கண்களை வையுங்கள். எப்பேர்ப்பட்ட பலவீனமாயிருந்தாலும் அதை மாற்றி அவர் உங்களை பலப்படுத்துவார் (2 கொரி. 12:10). ''படுக்கையின்மேல் வியாதியாய்க் கிடக்கிற அவனைக் கர்த்தர் தாங்குவார்; அவனுடைய வியாதியிலே அவன் படுக்கை முழுவதையும் மாற்றிப் போடுவார்'' (சங். 41:3) என்ற வசனம் இதை மிக அழகாய் விளக்குகிறதல்லவா!

எசேக்கியா என்ற ராஜா வியாதிப்பட்டபொழுது, அவன் ஆண்டவரை நோக்கிக் கண்ணீர் விட்டு கதறினான். கர்த்தர் மனமிரங்கி அவனை குணமாக்கினார் (2 இராஜா. 20:3–5). அதேபோன்று ஆத்துமாவில் பலவீனம் வந்து சோர்ந்து போகிற வேளையில் அவர் பெலன் தந்து தைரியப்படுத்துவார், திட மனதைக் கொடுப்பார் (சங். 138:3). தாவீது மிகவும் நெருக்கப்பட்டான். ஆனால், கர்த்தரை தைரியமாய் பற்றிக் கொண்டான். இதினிமித்தம் இழந்த எல்லாவற்றையும் இரண்டு மடங்காய் திரும்பப் பெற்றான் (1 சாமு. 30:6,19). அதேபோன்று அவர் உங்கள் வாழ்க்கையிலும் சகல பெலவீனங்களையும் மாற்றி உங்களை இரட்சிக்க வல்லவராய் உயிரோடிருக்கிறார்.

ஒரு குடும்பத்தில் குடும்பத் தலைவன் மரணத்தருவாயில் மருத்துவமனையில் இருந்தார். இனி எங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்று மருத்துவர்கள் அவரை வீட்டிற்கு அனுப்பிவிட்டனர். வீட்டார் என்ன செய்தார்கள் தெரியுமா? அவரை வீட்டிற்கு கொண்டுவந்து படுக்க வைத்தனர். சுற்றிலும் குடும்பமாய் முழங்காற்படியிட்டனர். கர்த்தருடைய வேத வசனங்களை, வாக்குத்தத்தங்களை ஆண்டவருக்கு நினைவுபடுத்தி, நினைவுபடுத்தி, ஸ்தோத்திரத்தோடு கர்த்தரை நோக்கிக் கூக்குரலிட்டார்கள். துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவனின் (சங். 22:3) பிரசன்னம் அவர்கள் மத்தியில் இறங்கி வந்தது. கொஞ்ச நேரத்தில் சோர்ந்து போய் மிகுந்த பலவீனத்தோடு படுத்திருந்த குடும்பத் தலைவன் அவர்களோடு சேர்ந்து தன் வாயைத் திறந்து மெதுவாக கர்த்தரை ஸ்தோத்திரிக்க ஆரம்பித்தார். சிறிது நேரத்தில் எழுந்து உட்கார்ந்து சற்று சத்தமாக ஸ்தோத்திரம் செலுத்தினார். அதன்பிறகு கட்டிலைவிட்டு கீழே இறங்கி நடந்து நடந்து ஸ்தோத்திரித்தார். தேவனுடைய பிரசன்னம் அவருடைய பெலவீனத்தை, வியாதியை முற்றிலுமாய் மாற்றியது.

நீங்களும், என்னென்ன விதங்களில் பலவீனமடைந்திருந்தாலும், கர்த்தர் உங்களையும் சகல பெலவீனத்தினின்றும் விடுதலையாக்கி தம்முடைய வல்லமையினால் இரட்சிப்பார் (2 கொரி. 13:3).



<u>ஜெபம்</u>: ''என் அன்பு தகப்பனே, நீர் பலவீனத்தில் பலம் கொடுக்கிற தேவன் என்று விசுவாசிக்கிறேன். என் பலவீனத்தை, நீரே மாற்றி, <u>இன்று</u> என் ஆவி, ஆத்துமா, சரீரத்தில் உமது இரட்சிப்பை பரிபூரணமாய் தாரும், இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!''

கன்மலையின் தேனினால் திருப்தியாக்குவார்!

"உச்சிதமான கோதுமையினால் அவர்களைப் போஷிப்பார்; கன்மலையின் தேனினால் உன்னைத் திருப்தியாக்குவேன்" (சங்கீதம் 81:16).

ஆண்டவர் இயேசு இந்த உலகில் உயிரோடிருந்தபோது, ஒருசமயம் அவரைத் தேடி தேனிலும் இனிமையான அவருடைய தெய்வீக வார்த்தைகளை கேட்பதற்காய் மக்கள் திரண்டு வந்திருந்தனர் (சங்.119:103). மூன்று நாட்கள் ஒரு ஆகாரமும் இல்லாமல் அவரோடு மிகுந்த ஆவலோடு தங்கியிருந்தனர். அவர்களை திரும்ப அனுப்ப வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட பொழுது, ஆகாரம் ஒன்றும் கொடுக்காமல் அனுப்பினால், வழியில் சோர்ந்து போவார்களே என்று அவர் நினைத்து, சீஷர்கள் மூலம் பெற்ற ஏழு அப்பங்களையும், சில சிறுமீன்களையும் வைத்து, தேவனை நோக்கி ஸ்தோத்திரித்து ஜெபித்து, ஆயிரக்கணக்கான மக்களுக்கு திருப்தியாக புசிக்கும்படி அருள்புரிந்தார் (மாற்கு 8:1–9). அப்படியே, தாம் தெரிந்துகொண்ட மக்களாகிய இஸ்ரவேல் ஜனங்களை வனாந்தரத்தில் போஷித்து அற்புதமாய் வழிநடத்தினார்.

ஒரு சமயம் ஒரு போதகர் காலையிலிருந்து இரவு வரை மக்கள் மத்தியிலே ஆண்டவரைப்பற்றி கூறி, அவர்களுக்காக பிரார்த்தனை செய்து, மிகுந்த களைப்புடன் தான் தங்கியிருந்த இடத்திற்கு வந்தபோது, ஆகாரம் ஏதாவது செய்து வைத்திருப்பார்கள் என்று எண்ணினார். ஆனால், அவர்களோ கஞ்சி தான் இருக்கிறது என்று சொன்னார்கள். அவருக்கு மிகுந்த கோபம்! – அவர்கள்மேல் அல்ல, ஆண்டவர் மேல் வந்தது. "அந்தக் கஞ்சியை கொண்டுபோய் அந்த இயேசுநாதருக்கே கொடுங்கள்" என்று கோபத்துடன் கூறிவிட்டு, தன் அறைக்கு சென்றார். அப்பொழுது கதவைத் தட்டும் சத்தம் கேட்டு திறந்து பார்த்தபோது, பல கூடைகளில் விதம்விதமான ஆகாரத்தை வைத்துக்கொண்டு பலர் காத்துக்கொண்டிருந்தார்கள். என்ன என்று கேட்டபோது, உங்கள் தகப்பனார் ஒரு பெரிய விழாவை நடத்தி அதில் கலந்துகொண்ட எல்லோருக்கும் சாப்பாடு கொடுத்தார். அதில் ஒரு பகுதியை உங்களுக்கும் கொடுத்து அனுப்பியிருக்கிறார் என்றனர். அதைப் பார்த்த போதகர், முழங்காற்படியிட்டு, ஆண்டவரை நோக்கிக் கதறினார், "அப்பா, இயேசுவே, நீர் எவ்வளவு சமீபமாய் இருக்கிறீர்! அதை அறியாமல் மூடத்தனமாய் நான் கூறிய வார்த்தைகளை எனக்கு மன்னியும், இனி ஒருநாளும் அவசரப்பட்டு பேசாமல், உம்முடைய வல்லமையை குறைவாய் எண்ணாமல் நடந்துகொள்ள எனக்கு கிருபை தாரும் என்று கண்ணீரோடு வேண்டுதல் செய்தார்.

என் அன்பு சகோதரனே, சகோதரியே, நீயும்கூட, அவசரப்பட்டு, புத்தியீனமாய் ஆண்டவருடைய வல்லமையை குறைத்து பேசுகிறாயோ? வேண்டாம், இன்று உன் தேவையை அறிந்த ஆண்டவர், நீ விரும்புகிறதற்கும் நினைக்கிறதற்கும் வேண்டுகிறதற்கும் அதிகமாய் கொடுக்க வல்லவர் (எபே. 3:20) என்பதை மறந்து போகாதே. நீ திருப்தியாகும் வரைக்கும் உன் தேவையை நிறைவேற்றுவார் (பிலி. 4:19).

ஜெபம்: "என் அன்பு தகப்பனே, நீர் பெரியவர், உம்மால் எல்லாம் கூடும். என் தேவைகளையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர். நான் உம்மை ஒருநாளும் குறைவாய் எண்ணாதபடி என் பாத்திரம் நிரம்பி வழியும்படி செய்யும். என் தேவைகளை இன்றுமுதல் என்னை யெல்லாம் குறைவின்றி அருளி, கன்மலையின் தேனினால் திருப்தியாக்கும். நீர் அப்படியே செய்வீர். உமக்கு ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"

கர்த்தரில் பெலன்கொள்ளுகிறவர்கள்...!

"உம்மிலே பெலன்கொள்ளுகிற மனுஷனும், தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டிருக்கிறவர்களும் பாக்கியவான்கள்" (சங்கீதம் 84:5)

நம்மில் அநேகர், மனுஷர்மேல் நம்பிக்கை வைத்து, அவர்களை நாடி ஓடுகிறோம். ஆனால், எல்லாவற்றையும் தம் கரத்தில் எடுத்து நடத்துகிற ஆண்டவரையோ, ஏதோ பெயரளவில் மட்டுமே தேடுகிறோம், அல்லது தேடுவதே கிடையாது. இந்த நிலைமை மிகவும் பயங்கரமானது, ஆபத்தானது. கர்த்தர் தம்மைத் தேடுகிறவர்களுக்குத்தான் நன்மையை அருளுவார் (சங்.34:10). அவரில் நாம் நம்பிக்கை வைக்கும்பொழுது, நம்முடைய வழிகளை பாக்கியமானதாக மாற்றுவார். இதற்குதான் வேத வசனங்களை வாசிப்பதும், அவருடைய சமுகத்தில் அவரோடு பேசுவதும் (ஜெபம் செய்வதும்) மிகமிக அவசியமாயிருக்கிறது. தேவ பெலனால் நிறைந்துகொள்ளாத ஒரு வாழ்க்கை பயனற்றதாக இருக்கும். ஆனால், கர்த்தரைத் தேடி அவருடைய வார்த்தைகளுக்கு கனம் கொடுத்து, அதைப் பின்பற்றுகிறவர்களுக்கோ கர்த்தர் பெலனாயிருப்பார். அதைத்தான் தாவீது தன் மகன் சாலொமோனுக்கு, "நீ உன் பிதாவின் தேவனை அறிந்து, அவரை உத்தம இருதயத்தோடும் உற்சாக மனதோடும் சேவி; நீ அவரைத் தேடினால் உனக்குத் தென்படுவார்; நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார்" (1 நாளா. 28:9) என்று திட்டவட்டமாய் கூறினான்.

பெற்றோரே, உங்கள் பிள்ளைகள் இந்த தெய்வீக பெலனை பெற்றுக்கொள்ளும்படி அவர்களுக்கு சரியாக போதித்து வழிநடத்துங்கள். நீங்களும் அப்படியே இந்த பெலனால் நிரம்பிக்கொள்வீர்களானால், எந்த நிலைமையிலும் பாக்கியம் பெற்று வாழ முடியும்.

என் மகள் ஏஞ்சலை இழந்தபிறகு என் வாழ்வு வெறுமையாய் இருந்தது. இனி நான் எழுந்து ஆண்டவருடைய ஊழியத்தை செய்வது என்னால் இயலாத ஒரு காரியம். ஏனென்றால், என் வாழ்வும், என் மனமும் சுக்குநூறாக உடைந்திருக்கிறதே என்று கதறினேன். ஆனால், எனக்குள் இருக்கிற பரிசுத்த ஆவியானவர், "இல்லை மகளே, நீ பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடிச்செல், நான் உன்னை பலப்படுத்தி உனக்கு சகாயம்பண்ணுவேன், முன்னைக்காட்டிலும் அதிக வல்லமையாய் ஊழியத்திலே நானே உன்னோடிருந்து உன்னை உபயோகிப்பேன்" என்று ஆற்றித் தேற்றினார். உடனடியாக எங்கிருந்தோ வந்த ஒரு தெய்வீக பெலன், தைரியம் என்னை ஆட்கொண்டது. ஆம், என் கவலை, மனக்கசப்பினால் உண்டான வேதனை எல்லாம் என்னைவிட்டு முற்றிலுமாய் அகன்றது. பரிசுத்த ஆவியானவருடைய ஒத்தாசையினால் முன்னைக் காட்டிலும் அதிகமாய் ஊழியம் செய்ய அவரே என்னை பலப்படுத்தி, பாக்கியமான வழியிலே நடத்திக்கொண்டு வருகிறார்.

எனக்கன்பானவர்களே, நீங்களும் சோர்ந்து போகாதிருங்கள். கர்த்தர் உங்களையும் உயர்த்துவார், பலப்படுத்துவார், பாக்கியமான நிலைமைக்கு கொண்டுசெல்வார் (சங்.146:5).

<u>ஜெபம்:</u> "என் அன்பு தகப்பனே, எந்த இருதயத்தையும் உம்மால் மாற்ற முடியும். அதுபோன்றே இன்றும் என் பலவீனம், சோர்வு எல்லாவற்றையும்கூட உம்முடைய தெய்வீக வல்லமையினால் முழுவதுமாய் அகற்ற முடியும் என்று நான் விசுவாசிக்கிறேன். என் பெலவீனங்கள் அனைத்திலிருந்தும் என்னை <u>இன்றே</u> விடுதலையாக்கி, என் ஆவி, ஆத்துமா, சரீரம் மூன்றையும் பலப்படுத்தி, பாக்கியம் நிறைந்த வாழ்வை எனக்குத் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தர் தம் ஜனத்தைக் கைவிடமாட்டார்!

''கர்த்தர் தம்முடைய ஜனத்தை நெகிழவிடாமலும், தம்முடைய சுதந்தரத்தைக் கைவிடாமலும் இருப்பார்''
(சங்கீதம் 94:14).

ஆண்டவர் ஆபிரகாமைத் தெரிந்துகொண்டார். அவன் அவருடைய சிநேகிதனாக மாறினான். அவனை மட்டுமல்லாமல் அவனுடைய சந்ததியையும் தமக்கு சொந்தமான ஜனமாக மாற்றினார் (சங். 135:4; உபா. 7:6). அதேபோன்று உங்களையும்கூட இன்று, பாவம், சாபம், அக்கிரமம் நிறைந்த பொல்லாத வாழ்விலிருந்து மீட்டெடுத்து, சிலுவையிலே சிந்தப்பட்ட தம்முடைய இரத்தத்தினாலே கழுவி, தம்முடைய சொந்த பிள்ளையாக மாற்றியிருக்கிறார். நீங்கள் இந்த உலகத்தில் பாக்கியம் நிறைந்தவர்களாக வாழ முடியும். ஏனென்றால், தமக்கு சொந்தமான உங்களை எக்காரணம் கொண்டும் அவர் நெகிழ விடவேமாட்டார். எந்த நிமிஷத்திலும் கைவிடாமல் கண்ணின் கருவிழிபோல் காப்பார் (உபா. 32:10).

பதினாறாவது வயதில் என்னை அவர் தம்மை அறிகிற அறிவினால் நிரப்பி தமக்கு சொந்தமாக்கிக்கொண்டார். அப்படி அவருக்கு சொந்தமானவர்களை அவருடைய செட்டைகளுக்குள் மறைத்து, ஆச்சரியமான விதத்திலே பாதுகாத்து வருகிறார் என்பதற்கு நானே ஒரு சாட்சி! ஆகவே, இன்றைக்கு நீங்களும் அவருடைய செட்டைகளுக்குள் ஓடிவந்து, அவருடைய சொந்த ஜனமாக மாறி, அவர் தரும் ஆசீர்வாதத்தினால் நிரம்புங்கள். அப்பொழுது அவர் உங்களையும் கைவிடாமல் காப்பார்!

இளம் வயதிலேயே தகப்பனை இழந்த ஒரு வாலிபன், ஆண்டவரை அறியாதவனாய் இருந்த போதிலும், எப்படியோ ஆண்டவரைப் பற்றிய பக்தி நிறைந்த பாடல்களை கேட்டுக் கேட்டு, அதன்மூலம் அவரை அறிந்து கொண்டான். அவர்மேல் ஒரு இனம் தெரியாத பற்றுதல் அவனுக்கு உண்டானது. ஆண்டவருடைய சொந்த மகனாக மாறினான். அவன் குடும்பத்தில் ஒருவரும் ஆண்டவருடைய அன்பை அறியாத நிலையில் அவனுடைய வாழ்க்கையோ முற்றிலும் பக்தி நிறைந்ததாய் மாறியது. நான் அவனை சந்தித்தபோது, அவனுக்கு 20 வயது. ஆனால், அவன் சொன்ன சாட்சி எத்தனை ஆச்சரியமாய் இருந்தது தெரியுமா? கடன் பிரச்சினை தலைக்குமேல் இருந்தது. வீடு விற்க முடியாத நிலை. ஆனால், இந்த வாலிபன் கர்த்தரை நோக்கி அழுத சமயத்தில் ஆண்டவர் அவனை நெகிழவிடாமல், கைவிடாமல் அவன் விரும்பிய காரியம் வாய்க்கும்படி செய்தார். குடும்பமாய் ஆண்டவரை அண்டிக்கொள்ளும்படி அருள்புரிந்தார்.

ஆம், கர்த்தரைத் தேடி அவருடைய பிள்ளைகளாக மாறும்பொழுது, அவருக்கு சொந்த ஜனமாக மாறும்பொழுது, நீங்களும் இந்த ஆசீர்வாதத்தை நிறைவாய் பெற்றுக்கொள்ள, பட்சபாதமற்ற ஆண்டவர் பாசத்துடன் அருள்புரிவார் (அப்.10:34; ரோமர் 2:11; கலா.2:6).

ஜெபம்: **''என் அன்பு தெய்வமே, இந்த உலகில் என்னை நேசிப்பார் யாருமில்லை. எனக்கு சொந்தம் என்று சொல்லிக்கொள்ள இவ்வுலகில் ஒருவருமே இல்லை. ஆனால், நீரோ சிலுவையிலே எனக்காக உம்மையே அடிக்கப்படவும், நொறுக்கப்படவும் ஒப்புக்கொடுத்தீரே! நீர் என்னையும் இந்த வாலிபனை மாற்றியதுபோல் உமக்கு சொந்தமாக மாற்றும். என்னை கைவிடாமல், இன்று உம்முடைய பெலத்தினால் நிரப்பி, ஆசீர்வதியும். இனி உமக்காகவே என்றும் நான் வாழ்வேன். உமக்கு ஸ்தோத்திரம். ஆமென்!''**

விசாரங்களின் மத்தியில் ஆறுதல்!

''என் உள்ளத்தில் விசாரங்கள் பெருகுகையில், உம்முடைய ஆறுதல்கள் என் ஆத்துமாவைத் தேற்றுகிறது'' **(சங்கீதம் 94:19).**

நாம் எதிர்பாராத தீமைகளை சந்திக்கும்பொழுது, பொல்லாத மக்கள் காரணமில்லாமல் நம்மைத் தூற்றும்பொழுது, மற்றும் பற்பல சமயங்களில் எளிதில் சோர்ந்துபோய் தவிக்கிறோம். நம் உள்ளம் சஞ்சலத்தினாலும், விசாரத்தினாலும் ஆறுதலற்று தவிக்கிறது. இப்படிப்பட்ட விசாரங்களை நீக்கி நம்மை ஆறுதல்படுத்துவதற்குத்தான் தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரை ஆண்டவர் அருளிச்செய்திருக்கிறார். ஆண்டவர் இயேசு மரித்து உயிரோடு எழுந்து, பரலோகத்திற்கு ஏறிச்சென்றபின் அவருடைய சீஷர்கள் மிகவும் சோர்ந்து போனார்கள். அவர்களுடைய உள்ளத்தை விசாரங்கள், பயங்கள் நிரப்பியிருந்தது. அந்த நிலைமையில் தான் திடீரென்று இயேசு கிறிஸ்து தாம் உயிரோடிருக்கிறவராக அவர்களுக்கு வெளிப்பட்டு, ''உங்களுக்கு சமாதானம்'' என்றார் (யோவான் 20:19). மாத்திரமல்ல, உங்களோடு என்றென்றும் தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவர் மூலமாக நான் இருக்கும்படியாக நீங்கள் ஜெபம்பண்ணுங்கள், காத்திருங்கள் என்றார் (அப்.1:5; யோவான் 14:16). அப்படியே அவர்கள் காத்திருந்த பொழுது (அப்.1:14), பரிசுத்த ஆவியானவராகிய தேற்றரவாளன் அவர்களுக்குள் இறங்கினார் (அப்.2–ம் அதிகாரம்). வாழ்க்கை மாறியது. விசாரங்கள் ஓடி மறைந்தன. மற்றவர்களை தேற்றும் கருவிகளாக அவர்களை ஆண்டவர் உபயோகித்தார் (அப்.4:13; 5:15,16).

ஒரு பெற்றோர் தங்கள் ஒரே குழந்தையை இழந்தனர். உறவினர் எல்லோரும், இவர்களை எப்படி ஆற்றித் தேற்றுவது? என்று கலங்கினர். ஆனால், அவர்களோ, சோர்வுகளையெல்லாம் தூக்கியெறிந்துவிட்டு, சந்தோஷமாக ஊழியம் செய்ய திரும்பவும் புறப்பட்டனர். எல்லோருக்கும் ஒரே ஆச்சரியம்! இது எப்படி? மனிதரால் இது கூடுமா? என்று யோசித்தனர். ஆனால், அவர்களோ ''பரிசுத்த ஆவியானவரால் நாங்கள் தேற்றப்பட்டோம். அவரே எங்களை உற்சாகப்படுத்தியிருக்கிறார், இனி எங்கள் பிள்ளையை நினைத்து என்ன பயன்? இருக்கும் கொஞ்ச நாட்களில் ஆண்டவருடைய சேவையை செய்வோம், அதன்மூலம் மக்கள் ஆசீர்வதிக்கப்படும்படியாய் ஊழியம் செய்வோம், சந்தோஷம் அடைவோம்'' என்று சொல்லி, பரிசுத்த ஆவியானவரின் பலத்தினால் தேற்றப்பட்டவர்களாக முன்னைக்காட்டிலும் அதிக அளவில் ஊழியம் செய்தனர்.

ஆம், நீங்களும்கூட அதேபோன்று பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப் பெற்று, எந்த நிலைமையிலும் அவரால் ஆற்றித் தேற்றப்பட்டு ஆண்டவருடைய நாம மகிமைக்கென்று எழும்பிப் பிரகாசிக்க பரிசுத்த ஆவியானவர் உங்களையும் மாற்றி பெலப்படுத்துவார் (பிலி.4:13).

ஜெபம்: ''அன்புள்ள ஆண்டவரே, இந்த உலகத்தின் விசாரங்கள், துன்பங்கள், எதிர்பாராத சூழ்நிலைகள், எது என்னை வேதனைப்படுத்தினாலும், நான் அவைகளை பொருட்படுத்த மாட்டேன். நீர் உம்முடைய பரிசுத்த ஆவியினால் என்னை அளவில்லாமல் நிரப்பும், வரங்களினால், வல்லமையினால் உம்முடைய சீஷர்களை நிரப்பினதுபோல் நிரப்பி, என் விசாரங்களையெல்லாம் மாற்றி, மற்றவர்களை தேற்றுவதற்கான கிருபையையும் இன்று எனக்கு தாரும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் பிதாவே, ஆமென்!''

ஆதரவு தந்து காக்கும் அருள்நாதர்!

"பறந்து காக்கிற பட்சிகளைப்போல, சேனைகளின் கர்த்தர் எருசலேமின்மேல் ஆதரவாக இருப்பார்; அவர் அதை காத்துத் தப்பப்பண்ணுவார்; அவர் கடந்துவந்து அதை விடுவிப்பார்"
(ஏசாயா 31:5).

இந்த உலகில் ஒருவர் நல்ல நிலையில் வாழ்ந்திருந்தால் மற்றவர்களுக்கு பொறாமையும், எரிச்சலும் உண்டாகிறது. வெளியில் அருமையாய் பேசுவார்கள், ஆனால் உள்ளத்திற்குள்ளேயோ குமுறுவார்கள். இவனை எப்படி ஒழித்துக்கட்டலாம் என்று பல வழிகளில் சிந்திப்பார்கள். இதுதான் உலகம். இன்றைய உலகம் அன்பற்ற நிலையிலே போய்க்கொண்டிருக்கிறது (2 தீமோ.3:2–5). அவருடைய தாசர்களையோ கர்த்தர் தமது செட்டைகளின் கீழே மறைத்து ஆதரித்துக் காக்கிறார் (ஏசாயா 31:5).

"இயேசு அழைக்கிறார்" ஊழியத்தை ஆரம்பித்து, ஆண்டவருடைய தயவால் அது பலுகிப்பெருகி வந்த நாட்களில், ஒருசில தனி மனிதர்கள் அதன் வளர்ச்சியைக் கண்டு எரிச்சல், பொறாமை அடைந்தனர். இந்த ஊழியத்தை எப்படியாவது ஒழித்துவிட வேண்டும், இந்த ஒரு மனிதன் தானே இதை செய்து வருகிறான் என்று வீணான, தவறான எண்ணம் கொண்டு, பிசாசினால் ஏவப்பட்டு எவ்வளவோ முயற்சித்தார்கள். ஆனால், கர்த்தரோ துணைநின்று, எல்லாத் தீங்கினின்றும் விலக்கிக் காப்பாற்றி, அவருடைய ஊழியத்தை மேலோங்கி எழச்செய்து இம்மட்டும் வழிநடத்தி வருகிறார். அதேபோன்று காருண்யா கல்வி ஸ்தாபனத்தை ஆரம்பிக்கும் போதும், "இதை எப்படி செய்வது? பணம் இல்லையே, பொருள் இல்லையே, ஞானம் இல்லையே, அனுபவம் இல்லையே?" என்று சொல்லி அவரது ஊழியர் சகோதரர் தினகரன் கலங்கியபொழுது, கர்த்தர் ஒவ்வொரு காரியத்திலும் துணைநின்று, தூக்கியெடுத்து வழிநடத்தினார். ஆனால், இதற்கு விரோதமாக எரிச்சல் நிறைந்த பொல்லாத மக்களால் எழும்பிய வீண் வார்த்தைகள், செயல்கள் எங்களால் தாங்க முடியாத அளவில் பயங்கரமானதாக இருந்தது. பல்வேறு விதங்களிலே, பல்வேறு மக்களால், பொறாமையும் சஞ்சலமும் தவிப்பும் ஏற்பட்டபோது, "இந்த வீணான பாடுகள் எதற்கு? தொடர்ந்து கல்லூரியை நடத்தவும் வேண்டுமா?" என்ற நிலையும்கூட வந்தது. ஆனால், ஆண்டவரோ, உங்களுக்கு விரோதமாக உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போம், எவர்கள் உங்களுக்கு விரோதமாய் கூட்டம்கூடுகிறார்களோ அவர்கள் உங்கள் பட்சத்தில் வருவார்கள் என்ற வேதவாக்குகள் அப்படியே நிறைவேறும்படி அருள் புரிந்தார் (ஏசாயா 54:17,15). இன்றோ ஆண்டவர் அத்தனை அளவில்லாத நன்மைகளை காருண்யா கல்வி ஸ்தாபனத்தின்மீது பொழிந்தருளி வருகிறார் என்பது யாவரும் காண்கின்ற உண்மை.

எனக்கன்பானவர்களே, இதேபோன்று உங்கள் வாழ்க்கையிலும் பல்வேறு சூழ்ச்சி நிறைந்த மனிதர்கள் தொல்லை கொடுத்தாலும், கர்த்தரை நீங்கள் உறுதியாய் பற்றிக்கொள்ளும்பொழுது, உங்களையும் ஆண்டவர் தமது செட்டைகளுக்குள் மறைத்து பாதுகாத்து விடுதலை செய்வார் (உபா.32:11,12).

ஜெபம்: "அன்பு தெய்வமே, உம்மையல்லாமல் என்னால் ஒன்றும் செய்யக்கூடாது. ஆகவே, இன்று நீர் கொடுத்த ஊழியம், குடும்ப வாழ்வு, வேலை யாவற்றிலும் நீரே என்னை வழிநடத்தும். பொல்லாங்கானவர்களும், தீயவர்களும் எனக்கு விரோதமாய் எழும்பும் வேளைகளிலெல்லாம் தயவாக என்னை மீட்டு, இரட்சித்து, நீர் என்னோடு இருப்பதை யாவரும் காணும்படி அருள்தாரும். உமக்கு நன்றி. ஆமென்!"

கர்த்தரை நம்புகிறவர்கள் வெட்கப்பட்டுப் போவதில்லை!

"கர்த்தராகிய ஆண்டவர் எனக்கு துணைசெய்கிறார்; ஆகையால் நான் வெட்கப்படேன்; நான் வெட்கப்பட்டுப்போவதில்லையென்று அறிந்திருக்கிறேன்..."
(ஏசாயா 50:7).

தாவீது பற்பல சிறுமையின் வழியாக பல சமயங்களிலும் அவனுடைய வாழ்க்கையில் கடந்து செல்ல நேரிட்டது. சொந்த மகனாகிய அப்சலோம் அவனுக்கு விரோதமாய் எழும்பினான். தேவன் அவனோடு இருக்கிறார் என்பதை கண்ணாரக் கண்ட சவுல் என்ற அரசன் பொறாமையினால் நிறைந்து தாவீதை அழிக்க வகைதேடினான். சீமேயி என்ற மனுஷன் பயங்கரமான கடுஞ் சொற்களால் அவனை நிந்தித்து சிறுமைப்படுத்தினான். இப்படி பற்பல சிறுமைப்படுத்தப்பட்ட நிலைமை அவனுக்கு வந்தபொழுதிலும், அவன் ஆண்டவரையே உறுதியாய் பற்றிக்கொண்டான் (சங். 40:17). "கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன், அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்" (சங். 34:1) என்று அந்த நிலைமையிலும் ஸ்தோத்திரம் செலுத்தினான். எத்தனை ஆச்சரியமான வாழ்வு பாருங்கள்!

ஒரு பக்தியுள்ள தாய் தன்னுடைய ஒரே மகனுக்காக நேரத்தையெல்லாம் செலவழித்து, அவன் எப்படியாவது பக்தியில் சிறந்து விளங்க வேண்டும் என்று போதனை செய்து, பக்தியில் வளர்த்து வந்தாள். ஆனால், அந்த மகன் வாலிபனானபொழுதோ ஆண்டவரை மறுதலித்தான். தாயை கடின வார்த்தைகளால் பேசி வேதனைப்படுத்தினான். கல்லூரிக்கு ஒழுங்காக செல்லாமல், பொல்லாத நண்பர்களோடு உல்லாசமாய் நாட்களைக் கடத்தினான். என்ன செய்வது என்று தெரியாது தவித்த அவள், ஆண்டவரை உறுதியாய் பற்றிக்கொண்டாள். அவருடைய சமுகத்தில் தன் மனக்கிலேசங்களையெல்லாம் ஊற்றி, தெய்வீக சமாதானம் பெற்றாள். ஆண்டவர் அவளுக்கு துணைசெய்து, அவள் ஜெபத்தைக் கேட்டு, அந்த மகனுடைய இருதயத்திலே ஒரு சமாதானக் குறைவைக் கட்டளையிட்டார். அதுதான் சமயம் என்று அந்த தாய் அன்பினால் அவனை அரவணைத்து ஆண்டவரண்டை வழிநடத்தினாள். அவள் விரும்பியபடியே அவன் ஆண்டவரின் அடியானாய் மாறினான். திரும்பவும் கல்லூரியில் ஆண்டவரின் துணையோடு படித்து, தங்கப்பதக்கங்கள் பெற்று வெளியே வரும்படி ஆண்டவர் அவனுக்கு அருள்புரிந்தார். அவளை சுற்றியிருந்த மக்கள் பேசின வார்த்தைகளினால் உண்டான வெட்கம், உறவினர்களுடைய கடின வார்த்தைகளினால் உண்டான வேதனை யாவும் மறையும்படி ஆண்டவர் அருள்புரிந்தார். எந்த இடத்தில் வெட்கப்பட்டார்களோ அதே இடத்தில் வெட்கத்திற்குப் பதிலாக இரண்டத்தனையான பலனை ஆண்டவர் கட்டளையிட்டார்.

எனக்கன்பானவர்களே, நீங்களும் ஆண்ட்வரை பிடித்துக்கொள்ளுங்கள். அவர் உங்களையும் வெட்கத்தினின்று விடுவித்து, இரண்டத்தனையான பலனால் நிரப்புவார் (ஏசாயா 61:7).



ஜெபம்: **"அன்பு தெய்வமே, உம்மால் செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை. என் வெட்கங்களையெல்லாம், மக்கள் அவதூறாகப் பேசும் வார்த்தைகளையெல்லாம் தலைகீழாய் மாற்றிப்போடும். இன்று நீர் எனக்கு உதவி செய்ய வல்லவர் என்று நான் விசுவாசிக்கிறேன். நீர் அப்படியே செய்யப்போகிற தற்காக நன்றி செலுத்துகிறேன். ஆமென்!"**

சமாதானத்தின் தேவன் தரும் கிருபை!

"சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப்போடுவார்..." (ரோமர் 16:20).

இன்றைக்கு மக்களை தனியே சந்திக்கும்பொழுது, விசேஷமாக பெண்கள் கூறும் காரியம், "ஐயோ, என் குடும்பத்திலே சமாதானம் இல்லையே! என்றைக்கு தான் நான் சந்தோஷத்தையும், சமாதானத்தையும் என் வாழ்வில் காண்பேன்" என்பது தான். இதற்கு காரணம் என்ன? பணம் இல்லாத சூழ்நிலை, வறுமை, கடன் பிரச்சினை! புருஷன் குடிகாரனாய், அன்பற்றவனாய், குடும்பப் பொறுப்பை உணராதவனாய் இருக்கும் பொழுது சமாதானக் குறைவு! மனைவி வாயாடியாய் மனம்போல் செலவு செய்பவளாய், குடும்பத்தை புத்தியோடு நடத்த அறியாதவளாய் இருப்பதால் சமாதானமின்மை! பிள்ளைகளால் சமாதானமின்மை! இப்படி பல்வேறு காரியங்களால் இன்றைக்கு குடும்ப வாழ்க்கையிலே சமாதானம் இல்லாத நிலைமை. நீங்களும் இன்று இதே நிலையில் பாரத்துடன் இருக்கலாம்.

தேவாதி தேவனுக்கு **"சமாதானத்தின் தேவன்"** என்று ஒரு பெயர் இருப்பதாக வேத புத்தகத்தில் வாசிக்கிறோம் (1 தெச. 5:23; ஏசாயா 9:6). "ஆண்டவரே, என் உள்ளத்திலே சமாதானப் பிரபுவாகிய நீர் வந்து தங்கியிரும். சாத்தான் கொண்டுவருகிற எல்லாவித சமாதானக் குறைவையும் என்னுடைய காலின்கீழ் நசுக்கிப் போடும்" என்று அவரிடம் இன்று முறையிடுங்கள். அவர் தமது தெய்வீக சமதானத்தைத் தருவார் (யோவான் 14:27).

ஒரு குடும்பத்திலே ஒரே ஒரு பெண் மட்டும் ஆண்டவரை ஏற்றுக்கொண்டு, சமாதானத்தைப் பெற்று சந்தோஷமாக வாழ்ந்துவந்தாள். ஆனால், அவளுடைய குடும்பத்தின் மக்களோ ஒருவருக்கொருவர் சண்டையிட்டு தேவ அன்பையும், சமாதானத்தையும் உணராமல், வாழ்ந்து வந்தனர். ஆண்டவர் ஒருநாள் அந்த பெண்ணிடம், "உன் குடும்பத்தின் இரட்சிப்புக்காக நீ என்ன செய்தாய்?" என்றார். அவள் அப்பொழுதுதான் தன் கடமையை உணர்ந்தாள். தன் குடும்பத்தினரோடு அன்பாகப் பேசி, எல்லா சண்டைகளுக்கும் காரணமான சாத்தானை குடும்பத்தைவிட்டு ஓடும்படி கால்களின்கீழ் நசுக்கிப்போடும்படியாக, ஆண்டவருடைய துணையோடு காரியங்களில் ஈடுபட்டாள். என்ன ஆச்சரியம்! கர்த்தர் அவளோடு துணையாக இருந்தபடியினாலும், அவருடைய கிருபையினாலும், ஒவ்வொரு நபராக சந்தித்தார். முழு குடும்பத்திலும் தேவ சமாதானம் இறங்கி வந்தது.

அன்பானவர்களே, இன்றைக்கு உங்களுக்கும் சமாதானம் நிறைந்த வாழ்வைக் கொடுக்க ஆண்டவர் வாஞ்சிக்கிறார். இந்த நாளிலும்கூட அவருடைய பாதத்திலே உங்கள் சமாதானக் குறைவுக்கான காரணங்களை ஒவ்வொன்றாய் மனம் திறந்து சொல்லுங்கள். அவருடைய கிருபை உங்களுக்கு நிறைவான சமாதானத்தை அருளிச்செய்யும் (1 பேதுரு 1:2).

ஜெபம்: "அன்பு தெய்வமே, சமாதானப்பிரபுவே! என்னுடைய தேவையையெல்லாம் நீர் அறிவீர். சாத்தான் கொண்டுவந்து போட்டிருக்கிற சமாதானக்குறைவை, என்ன காரணத்தினால் வந்திருந்தாலும் மாற்றி, உம்முடைய தெய்வீக சமாதானத்தால் நிரப்பும்படியாக மன்றாடுகிறேன். இன்று நீர் அப்படியே செய்வதற்காக உமக்கு ஸ்தோத்திரம், ஆமென்!"

உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நிச்சயம் நன்மை செய்வார்!

"தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர்; கர்த்தர் கிருபையையும் மகிமையையும் அருளுவார்; உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்" (சங்கீதம் 84:11).

"நீதிமான் தன் உத்தமத்தில் நடக்கிறான்" (நீதி. 20:7) என்று வேத வசனம் சொல்லுகிறது. கர்த்தர் பாவிகளான நம்மை பெயர் சொல்லி அழைத்து, தம்முடைய இரத்தத்தால் கழுவி சுத்திகரித்து, பரிசுத்தமான வாழ்வைக் கொடுத்து, உத்தம ஜீவியத்தையும் செய்வதற்கு பெலனைக் கொடுக்கிறார். கர்த்தர் விரும்புகிற பரிசுத்தம், உண்மை, உத்தமம், இவைகளை நம் வாழ்விலே கவனமாய் தெய்வீக பயத்துடன் கொண்டு வாழும்பொழுது, கர்த்தர் நமக்கு துணையாயிருந்து, நாம் விரும்பும் சகல நன்மைகளையும் அருளிச்செய்வார் (ரோமர் 6:19).

யோசபாத் என்ற அரசன் ஆண்டவரை உத்தமமாய் உண்மை பக்தியுடன் பின்பற்றினான். ஆகவே, ஆண்டவர் அவனோடு கூடவேயிருந்து, எதிரிகள் அவனை எதிர்த்து போராடும்பொழுதெல்லாம் அவன் விசுவாசித்தபடியே அவனுக்கு துணை நின்று, அவனை ஆச்சரியமாய் விடுவித்து காத்தார் (2 நாளா. 19,20-ம் அதிகாரங்கள்). நானும் ஆண்டவருக்கு பிரியமாய் உத்தமமாய் எல்லாக் காரியங்களையும் செய்வதில் ஜாக்கிரதையாயிருப்பேன் என்று தீர்மானம் செய்வோமா?

ஒரு குடும்பத் தலைவன் கோபம் நிறைந்தவனும், ஆத்திரக்காரனுமாயிருந்தான். மனைவியை அடிப்பான், பாத்திரங்களை உடைப்பான். அவனிமித்தம் குடும்பத்தில் எப்பொழுதும் சண்டை தான். ஆனால் ஆண்டவர் கிருபையாய் மனமிரங்கி, அவனை இரட்சித்து தமது தெய்வீக அன்பினால் நிரப்பினார். அவன் முற்றிலும் மாறுபட்டு, இயேசுவின் சாயல் கொண்ட, ஊரார் போற்றும் உத்தம மனிதனாக மாறினான். ஆனால் அவனுக்கோ அதன்பின்பு சோதனைகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்தன. மனைவி மரணத் தருவாயிலானாள். ஒரே மகன் சரியாக கல்லூரிக்கு செல்லாமல் ஊதாரியாக மாறினான். வேலை செய்த அலுவலகத்திலோ அவன் லஞ்சம் வாங்காமல் உண்மையாய் உழைத்ததினால் உண்மையற்ற ஒரு சாராரின் நயவஞ்சக செயல்க்ள். எனினும் இவைகள் எல்லாவற்றின் மத்தியிலேயும் அவன் இயேசுவை உத்தம இருதயத்தோடும், உறுதியான விசுவாசத்தோடும் பற்றிக்கொண்டதால், கர்த்தர் அவன் கூடவே துணை நின்று ஒவ்வொரு பிரச்சினையையும் அழகாய் மாற்றி அவனை ஆசீர்வதித்தார்.

ஆம்! என் அன்பானவர்களே! உத்தம இருதயத்தோடு கர்த்தருக்கு பயந்து வாழுங்கள் (நீதி.8:13). பிசாசும், பிசாசின் மக்களும் கொண்டு வந்து போடுகிற சகல பிரச்சினைகளையும் அவர் தமது வல்லமையால் அகற்றி, உங்களுக்கு துணை செய்து அனுதினமும் காப்பார் (சங்.147:11).

<u>ஜெபம்</u>: "அன்புள்ள நேச தகப்பனே! உத்தம இருதயத்தை எனக்கும் நீர் தாரும்! எல்லாக் குறைவுகளையும் நீரே என்னிலிருந்து மாற்றி, உம் இரத்தத்தால் என்னைக் கழுவி சுத்திகரித்து, புது வாழ்வை எனக்கு தாரும். <u>இன்று</u> நீர் துணை நின்று, ஆசீர்வதித்து என்னை வழிநடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

சமாதானம் அருளி ஆசீர்வதிப்பார்!

"கர்த்தர் தமது ஜனத்திற்கு பெலன் கொடுப்பார்; கர்த்தர் தமது ஜனத்திற்கு சமாதானம் அருளி, அவர்களை ஆசீர்வதிப்பார்" **(சங்கீதம் 29:11).**

இன்று புதிய மாதத்தின் துவக்கத்திலே நாம் வந்திருக்கிறோம். இந்த மாதம் எப்படி இருக்குமோ? என்றெல்லாம் கலக்கத்துடனே நாம் ஒருவேளை இம்மாதத்தை ஆரம்பிக்கலாம். ஆனால், இந்த வசனத்தின்படி, கர்த்தர் உங்களை சகல விதத்திலும் பலப்படுத்துவார் (பிலி. 4:13), உங்களுக்கு சமாதானம் அருளி, உங்களை நிறைவாய் ஆசீர்வதிப்பார். இதை எண்ணி சந்தோஷமாய் இருங்கள். உங்கள் சமாதானத்தை கெடுக்கக்கூடிய காரியங்கள் என்ன நேரிட்டாலும், இந்த மாதம் முழுவதும் அவரே பொறுப்பெடுத்து எல்லாவற்றிலும் தமது தெய்வீக சமாதானத்தை அருளிச் செய்வார். இதற்காக நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இந்த "சமாதானத்தின் தேவனை" உங்களுக்கு சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும். அவர் உங்களுக்குள், உங்கள் வீட்டுக்குள் வாசம் செய்வாரானால் மட்டுமே (2 கொரி. 6:16) இந்த ஆசீர்வாதத்தை உங்களால் பெற்று அனுபவிக்க முடியும் என்பதை மறந்து போகாதீர்கள். உங்கள் உள்ளத்திலேயும், இல்லத்திலேயும் இயேசு இருக்கிறாரா என்பதை யோசித்துப் பார்த்து, உடனடியாக அவரோடு பேசுங்கள். அவரை கூப்பிடுங்கள். உடனே அவருடைய சமுகம் உங்களை நிரப்புவதை நீங்கள் உணரலாம் (யாத். 33:14). அவருக்கு பிரியமில்லாத எல்லாவித தீமையான காரியங்களையும் உங்கள் வாழ்விலிருந்து தூக்கியெறியுங்கள். அப்பொழுது மட்டுமே இந்த மேலான ஆசீர்வாதத்தை இன்றும் என்றும் நீங்கள் பெற்று மகிழ முடியும்.

ஒரு குடும்பத் தலைவர் தன் மகளுக்கு திருமணத்தை முடிக்க தீர்மானம் பண்ணினார். ஏராளமான வேலைகள்! ஆனால், அவரோ கொஞ்சமும் அதைப் பற்றி பெரிதாகக் கவலைப்படவேயில்லை. வீட்டுக்கு வந்த உறவினர்கள், "இதை செய்து விட்டீர்களா? அதை செய்து விட்டீர்களா?" என்று கேள்வி மேல் கேள்வி கேட்டார்கள். ஆனால் அவரோ எல்லாவற்றுக்கும் ஒரு புன்னகையை மட்டும் பதிலாகக் காண்பித்தார். ஒரு சிலர் கோபமடைந்து, என்ன இன்னும் இரண்டு நாட்கள் தான் இருக்கிறது. இப்படி கவலையில்லாமல் இருக்கிறாரே? என்றும் கூட கடிந்துகொண்டனர். ஆனால், அதே சமயத்திலே ஒவ்வொருவரும் ஒரு பாரத்தை எடுத்துக்கொண்டு, தாங்களாகவே சகல காரியங்களையும் அவர் சார்பில் செய்து முடித்தனர். திருமணம் மிகவும் சிறப்பாக முடிந்தது. யாவரிடமும் சிரித்துக் கொண்டே ஒரு காரியத்தை சொன்னார். "கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்" (சங். 138:8) என்பது என் அனுபவத்தில் நான் அறிந்த உண்மை. இந்த திருமணத்திலும், "உங்கள் ஒவ்வொருவரையும் கொண்டுதான் ஆண்டவர் அதை நிறைவேற்றிக் கொடுத்தார். நீங்கள் இல்லாமல் என்னால் இந்த ஆசீர்வாதத்தை பெற்றிருக்கவே முடியாது. உங்களுக்கு நன்றி" என்றார். அப்பொழுது தான் யாவரும் அந்த உண்மையை அறிந்து கொண்டார்கள்.

ஆம்! ஆண்டவர் அப்படியே உங்களுக்கும் மாதம் முழுவதற்கும் வேண்டிய பெலனையும், சமாதானத்தையும் அளவில்லாமல் அருளி ஆசீர்வதிப்பது உறுதியான காரியம் (1 தெச. 5:23)!

ஜெபம்: **"அன்பு தெய்வமே! இந்த மாதம் முழுவதும் நீரே முன் நின்று என்னை நடத்தும். இன்றுமுதல் உமது தெய்வீக சமாதானத்தால் நிரப்பி, என்னை ஆசீர்வதித்து வழிநடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"**

தெய்வ பயம், நம்பிக்கை கொண்டால் பெரிதான நன்மை!

"உமக்குப் பயந்தவர்களுக்கும், மனுபுத்திரருக்கு முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும், நீர் உண்டுபண்ணி வைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது!" (சங்கீதம் 31:19).

இந்த உலகில் நமக்கு முன்பாக இருக்கிற பல பிரச்சினைகளையுமே நாம் ஒவ்வொருவரும் எண்ணி, நாள் முழுவதையும் சோர்விலும், ஏமாற்றத்திலும், சஞ்சலத்திலும் கழித்துப் போடுகிறோம். அதிகாலையிலிருந்து ஒவ்வொரு நிமிடமும் ஆண்டவர் மேலேயே சார்ந்து, அவருக்கு பயப்படும் பயத்தோடு (சங். 118:6), ஆண்டவருக்கு பிரியமில்லாத சகல சிறிய காரியங்களையும், பெரிய காரியங்களையும் வெறுத்து ஒதுக்கி, அவர்மீது முழுவதும் சார்ந்து கொண்டால் அவர் நமக்கு கொடுக்கப் போகிற நன்மைகள் அளவில்லாததாய் இருக்கும் (சங். 147:11).

ஒரு அன்பான குடும்பத்திலே ஒரு கணவனும் மனைவியும் ஏழு வயது நிரம்பிய ஒரு மகனும் வாழ்ந்து வந்தார்கள். ஒரு நாள் அலுவலகத்திலிருந்து தந்தை திரும்பியவுடன் அவரிடம் ஓடோடி சென்ற மைந்தன், "அப்பா, எனக்கு சில பலூன்கள் வாங்கிக் கொடுங்கள், இன்று வேண்டாம், நாளை அலுவலகத்திலிருந்து வரும்போது வாங்கி வந்தால் போதும்" என்றான்! தகப்பனும், "ஓ! கட்டாயம் வாங்கி வருகிறேன்" என்றார். அலுவலகத்தில் இருந்த வேலை பளுவின் காரணமாக அவர் பலூன் வாங்கி வர மறந்தே போனார். ஆனால், ஒருநாள் அவர் மகனைப் பார்த்து இவ்வாறு கூறினார். "என் அன்பு மகனே! நீ அப்பாவை நம்பினால் இப்படித் தான். நீ ஆண்டவருக்கு பயந்த நல்ல பிள்ளை அல்லவா? அவர் மேல் உனக்கு நம்பிக்கை இருக்கிறது தானே?" என்று கேட்டார். "ஆம், அப்பா" என்று மைந்தன் பதிலளித்தான். "அப்படியானால் அவரிடம் கேள். அவர் என்னைப் போல் மறக்கமாட்டார். உடனடியாக உனக்கு வாங்கிக் கொடுப்பார்" என்றார். அந்த மகன் அப்படியே அதை நம்பினான். தனியே போய், "ஆண்டவரே, அப்பா சொன்னதுபோல நான் உமக்கு பயப்படுகிறவன், உம்மை முழுவதும் நம்புகிறவன். எனக்கு நீர் பலூன் வாங்கித் தாரும்" என்று தன் குழந்தை ஜெபத்தை ஏறெடுத்தான். அடுத்த நாள் அப்பா அலுவலகத்திலிருந்து திரும்பினார். வீடு முழுவதும் பலூன்களால் நிரம்பியிருந்ததைப் பார்த்து ஆச்சரியமடைந்தார். மகனை அழைத்து, "இவ்வளவு பலூன் எப்படி கிடைத்தது?" என்று கேட்டார். என் நண்பனுடைய மாமா வெளியூரில் இருந்து நிறைய பலூன் வாங்கி வந்திருந்தபடியால், அவன் மூலமாய் எனக்கும் அதில் ஒரு பங்கு கிடைக்கும்படி ஆண்டவர் செய்தார். நம் இயேசு அப்பா எவ்வளவு நல்லவர்! என் ஜெபத்தைக் கேட்டு உடனே பதில் கொடுத்தார் என்றான்.

ஆம்! பிரியமானவர்களே, முதலாவதாக, கர்த்தருக்குப் பயந்து, அடுத்து அவர் மேல் முழு நம்பிக்கை வைத்து, நீங்கள் விரும்பும் மேலான நன்மைகளை அவரிடம் கேட்டு பெற்று மகிழுங்கள் (சங். 26:1).

ஜெபம்: "அன்புள்ள தகப்பனே, நானும் பல்வேறு பயங்களினால், நம்பிக்கையற்ற நிலைமையிலே சோர்ந்து போய் வந்திருக்கிறேன். இன்று நீர் எனக்கும் இந்த சிறுவனைப் போல் முழு மனதோடு உம்மை நம்பவும் போதித்தபடியால் நன்றி செலுத்துகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

எளியவனைக் காக்கும் இணையற்ற தேவன்!

"சிறுமைப்பட்டவனை அவனிலும் பலவானுடைய கைக்கும், சிறுமையும் எளிமையுமானவனைக் கொள்ளையிடுகிறவனுடைய கைக்கும் தப்புவிக்கிற உமக்கொப்பானவர் யார் கர்த்தாவே, என்று என் எலும்புகளெல்லாம் சொல்லும்"
(சங்கீதம் 35:10).

இந்த உலகத்தில் சிறுமைப்பட்டவர்களையும், எளிமையானவர்களையும் மக்கள் எள்ளி நகையாடுகிறார்கள். உதவி செய்வார் யாருமின்றி அப்படிப்பட்ட மக்கள் தவிக்கிறார்கள், ஆனால், கர்த்தரோ அப்படிப்பட்டவர்க்ள் தம்மைத் தேடும்போது, உடனடியாக வந்து அவர்களை விடுவித்து காக்கிறார் (சங். 9:9,10). எலியா என்ற ஒரு தேவ மனுஷன் ஒரு விதவையினிடத்திலே தேவனால் அனுப்பப்பட்டார். அந்த விதவையின் கையிலே பணமும் இல்லை, பொருளும் இல்லை. ஆனால், அந்த சிறுமைப்பட்ட நிலைமையிலும் ஊழியன் வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைக்கு கனம் கொடுத்தாள் அந்த விதவை. அதினிமித்தம் தேவன் அவளுக்கு இரங்கினார். அந்த விதவையும், அவள் மகனும், மிகுந்த ஆச்சரியமான விதத்தில் பஞ்ச காலத்திலும் நிறைவாய் போஷிக்கப்பட்டனர் (1 இராஜா. 17:8–16).

ஒரு விதவைக்கு ஒரே மகன் இருந்தான். அந்த மகன் மிகுந்த அறிவாளி, ஞானமாய் பேசுவான். ஆனால் அந்த தாய்க்கோ அவனை பள்ளிக்கு அனுப்பவோ, படிக்க வைக்கவோ கையில் பணம் கிடையாது. அந்த சிறுவனோ "அம்மா, கவலைப்படாதீர்கள். நான் எங்கேயாவது போய் சிறிய சிறிய வேலைகளை செய்து பணம் கொண்டு வருகிறேன். ஆண்டவர் நம்மை கைவிடமாட்டார்" என்று தாய்க்கு, உற்சாகமளிக்கும் வார்த்தைகளைக் கூறினான். அதை செயலிலும் காண்பித்தான். கொஞ்சம் கொஞ்சமாக அவளுடைய கவலை மறைந்தது. அவளும் கஷ்டப்பட்டு நாள் முழுவதும் பல இடங்களில் வேலை செய்து, கொஞ்சம் கொஞ்சமாக பணம் சம்பாதித்தாள். இவர்கள் வீட்டுக்கு அருகாமையில் ஒரு நல்ல குடும்பத்தினர் குடியேறினர். சில நாட்களுக்கு பின்னர், இவர்கள் இந்த விதவையையும், அவள் மகனையும் குறித்து கேள்விப்பட்டு அவளை அழைத்தனர். அந்த குடும்பத்தின் தலைவர் ஒரு பெரிய கம்பெனியில் பெரிய பதவியில் இருந்தபடியால், அவளுக்கு ஒரு நல்ல வேலையைக் கொடுத்து, அவர்கள் இருவருக்கும் போதுமான அளவு பணம் கிடைக்கும்படியாய் வழி செய்தார். அதோடுகூட கம்பெனி செலவிலேயே அந்த மகன் படிப்பதற்கும் வழி திறந்து கொடுத்தார். இந்த நிலைமையிலும் தங்களுக்கு வாழ்வளித்த அந்த குடும்பத்திற்கு நன்றியுள்ளவர்களாய், வேலையில் உண்மையுடன் நடந்து கொண்டனர்.

அன்பானவர்களே! நீங்களும்கூட சிறுமைப்பட்டு எனக்கு உதவி செய்வார் யாருமில்லையே என்றெல்லாம் கலங்குகிறீர்களோ? கர்த்தர் மேல் உங்கள் பாரங்களை வைத்துவிடுங்கள். ஆண்டவர் உங்களையும் கைவிடாமல் ஒவ்வொரு நாளும் காத்துப் பராமரிப்பார் (சங். 40:17).

<u>ஜெபம்</u>: "அன்பு தெய்வமே! பணம் இல்லை, பொருள் இல்லை. அன்பு காண்பிப்பார் யாரும் இல்லை என்று வாழ்வில் கசப்பு நிறைந்த நிலைமையில் இருக்கிறேனே, எனக்கும் நீர் உதவி செய்வீர் என்று நான் உம்மையே பற்றிக்கொள்கிறேன். உம்முடைய கரத்திலிருந்து <u>இன்றுமுதல்</u> நிறைவாய் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளவும், எனக்கு நீரே அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

வறண்ட வாழ்வை செழிக்க செய்வார்!

"ஓ, தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்; பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து, வாங்கி சாப்பிடுங்கள்; நீங்கள் வந்து, பணமுமின்றி விலையுமின்றி திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள்"

(ஏசாயா 55:1).

தேவன் மனுபுத்திரரிடத்தில் நடப்பிக்கும் கிரியையில் பயங்கரமானவர் (சங். 66:5). மரித்தவர்களை உயிரோடு எழுப்பினவர்! கடலை தண்ணீரற்ற தரையாக மாற்றி, இரண்டு பக்கமும் கடல் தண்ணீரை மதில்போல நிற்கச் செய்து, தம்முடைய ஜனங்களை அதின் வழியாய் நடத்தி சென்றவர்! ஐந்து அப்பம், இரண்டு மீன்களையும் மட்டுமே ஆசீர்வதித்து, ஐயாயிரத்துக்கும் மேலான ஜனங்களை திருப்தியாக போஷித்தவர்! 38 வருடமாக வியாதியாயிருந்த மனுஷனை ஒரு நொடிப்பொழுதில் முற்றிலும் குணமாக்கினவர்! 12 வருட பெரும்பாடு வியாதியினால் பாடுபட்ட பெண்ணை அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தை அவள் தொட்ட மாத்திரத்தில் முற்றிலும் விடுதலையாக்கினவர்! இத்தனை அற்புதங்களையும் செய்த ஆண்டவர் உங்கள் மீதும் நினைவாய் இருக்கிறார் (சங். 40:17) என்பதை மறந்து போகாதிருங்கள். உங்களை ஆசீர்வதிப்பதே அவருக்கு பிரியமான காரியம் (எண். 24:1). ஆகவே, சோர்ந்து போகாதிருங்கள். உங்கள் வறண்ட வாழ்வு எப்படிப்பட்டதாயிருந்தாலும், அதை நீரூற்றாக்க அவரால் முடியும் என்பதை உணர்ந்து விசுவாசத்தோடு அவருக்கு நன்றி செலுத்துங்கள்.

ஒரு குடும்பத்திலே 4 பெண் பிள்ளைகள். மூன்று பிள்ளைகள் சுமாராக இருந்தபடியால், பெற்றோர் அவர்கள் திருமணத்தை சுலபமாக முடித்துவிட்டனர். ஆனால் நான்காவது மகளோ சற்று கறுப்பாயிருந்தபடியால், அவளுக்கு திருமணமாவதில் சற்று தாமதம் ஏற்பட்டது. எப்பொழுது பார்த்தாலும் தாய் அதையே சொல்லி சொல்லி, அவளை வேதனைப்படுத்துவாள். அவளுக்கு ஒரு நல்ல சிநேகிதி இருந்தாள். அவள் பக்தியுள்ள பிள்ளை. ஆண்டவரால் ஆகாதது ஒன்றுமில்லை. நாம் இரண்டு பேரும் தினமும் கூடி ஒருமனதாய் ஜெபிப்போம். நம் ஜெபத்தை கர்த்தர் நிச்சயம் கேட்பார் என்றாள். இந்த பிள்ளைகளுடைய விசுவாசத்தின்படியே, ஆண்டவர் அற்புதமான விதத்தில் அந்த மகளுடைய திருமணத்தை முடித்துக் கொடுத்தார். மற்ற சகோதரிகளுடைய வாழ்க்கை வெகு சில நாட்களுக்குள்ளாக பல்வேறு பிரச்சினைகளோடு இருள் நிறைந்ததாக மாறியது. அவர்கள் ஆண்டவரை நம்பி தங்கள் வாழ்க்கையை ஆரம்பிக்காத நிலைமையில் இருந்ததே அதற்கு காரணம். இந்த மகளோ ஆரம்பத்தில் இருந்தே தான் கற்றுக்கொண்ட பாடத்தின்படி, கர்த்தரையே நம்பி, ஒவ்வொரு நாளையும் கடத்தினபடியால், அவளுடைய வாழ்க்கை எப்பொழுதும் சமாதானமும், சந்தோஷமும், ஆசீர்வாதமும் நிறைந்ததாய் இருந்தது.

பிரியமானவர்களே! ஆண்டவரைத் தேடும் வாழ்க்கைதான் செழிப்பைக் கொண்டு வரும். எல்லாத் தடைகளையும், பிரச்சினைகளையும் அவருடைய வல்லமை முற்றிலுமாய் மாற்றிப்போடும். உங்கள் வாழ்வையும் அவ்வாறே அவர் செழிக்கச் செய்வார் (ஏசாயா 35:1).

<u>ஜெபம்:</u> "என் அன்பு தகப்பனே, என் தேவைகளை, பிரச்சினைகளை உம்முடைய பாதத்திலே ஊற்றிவிடுகிறேன். <u>இன்று</u> எல்லாவற்றையும் எனக்காக நீர் நிறைவாக்கித் தரப்போகிறதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

சந்ததி சந்ததியாக தெய்வீகக் கிருபை!

"கர்த்தருடைய கிருபையோ அவருக்கு பயந்தவர்கள்மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள்மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது" (சங்கீதம் 103:17).

ஆபிரகாமை ஆண்டவர் அழைத்தார் (ஆதி. 12:1). அதன்மூலமாக, அவர் ஆண்டவரோடு நெருங்கி ஜீவித்து அவருடைய சிநேகிதனாக மாறினார். அவருடைய வாழ்க்கையை ஆசீர்வதித்து, சந்ததி சந்ததியாக தேவ கிருபை அவர் வாழ்விலே விளங்கச் செய்தார். ஒரு தனி மனிதனாக அல்லது மனுஷியாக உங்கள் வாழ்வில் மட்டுமல்லாது, உங்கள் சந்ததியையும் ஆண்டவர் ஆசீர்வதிக்க வல்லமையுள்ளவராய் இருக்கிறார் (ஏசாயா 61:9). இன்றும் உங்கள் வாழ்வை, ஆபிரகாம் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்ததுபோல, நீங்கள் முற்றிலும் ஒப்புக்கொடுங்கள் (ஏசாயா 51:2).

ஒரு வாலிபன் ஆண்டவரை பற்றி கேள்விப்பட்டு, அவர் மேல் தானும் அன்புகூர்ந்தான். ஆனால் ஆழமான பக்தியைப் பற்றி அறிவு இல்லாத நிலைமையில் இருந்தான். சிகரெட் குடிப்பது அவனுக்கு அதிக பிரியம். அது ஒன்றை மட்டும் விடாமல் செய்து வந்தான். அவனுக்கு ஒரு நல்ல மனைவி வந்து வாய்த்தாள். குடும்பத்திலே பல்வேறு பிரச்சினைகள் எழ ஆரம்பித்தது. எப்பொழுதும் சண்டை! அமைதியின்மை! இந்த நிலைமையிலே ஒரு ஊழியர் அவனை சந்தித்தார். "மகனே நீ ஆண்டவரை நேசிக்கிறாயேயொழிய அவரை இரட்சகராக ஏற்றுக்கொள்ளவில்லையே. இப்பொழுதே முழங்காற்படியிட்டு, 'ஆண்டவரே, என் பாவங்களை மன்னியும், என் வாழ்வில் இருக்கிற எல்லா அடிமைத்தனங்களையும் என்னை விட்டு நீக்கி உம்மால் நிரப்பும். நானும் நீரும் ஒன்றாய் இருக்கும் பாக்கியத்தை எனக்கு தாரும்' என்று ஜெபம்பண்ணு" என்று சொல்லிக் கொடுத்தார். அவனும் அப்படியே செய்தான். அவனுடைய வாழ்வு தெய்வீக சமாதானத்தால் நிறைந்தது. அதன்பிறகு குடும்ப வாழ்க்கையிலே தேவ சமாதானம் இறங்கியது. அவன் பெற்ற மகனும் தகப்பனைப்போல் சில சிற்றின்பங்களுக்கு அடிமைப்பட்டிருந்தான். மகன் வாழ்வும் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமே என்று தகப்பன் கண்ணீரோடு ஜெபித்தார். அந்த ஜெபத்தை ஆண்டவர் கேட்டார். அந்த மகனை மட்டுமல்ல, அவன் சந்ததியையுங்கூட இந்த ஒரு மகனுடைய பக்தியின் நிமித்தம் பக்தியுள்ள சந்ததியாக ஆண்டவர் மாற்றினார். பார்க்கிற யாவரும் அவரைக் குறித்து பெருமை பாராட்டினர்.

உங்களுக்கு இந்த சந்தோஷம் வேண்டுமா? அல்லது வேண்டாத அற்ப சிற்றின்பங்களுக்காக ஆண்டவரை விட்டுவிடப் போகிறீர்களா? அவரை தெய்வ பயத்துடன் உண்மையாய் தேடுவீர்களானால் உங்கள் நிமித்தம் சந்ததி சந்ததியாக ஆண்டவர் தமது தெய்வீகக் கிருபையை அருளி ஆசீர்வதிக்கப் போகிறது நிச்சயமான காரியம் (ஏசாயா 65:23).

ஜெபம்: "என் அன்பு தகப்பனே, உம்மை அறிந்தும் அறியாத நிலைமையிலே பல்வேறு சிற்றின்பங்களுக்கு அடிமையாக இருக்கிறேனே! அதைக் குறித்து வீண் தர்க்கம் செய்கிறேனே! இன்று நீர் என் இருதயத்தை மாற்றி, சந்ததி சந்ததியாக என்னையும் ஆசீர்வதியும். எனக்கும் ஆபிரகாமைப்போல் உம்மோடு உறவாடுகிற ஐக்கியம் நிறைந்த வாழ்வை தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

சோர்ந்து போகிற வேளையில் பெலன் தருவார்!

“சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்கு சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார்” (ஏசாயா 40:29).

இன்று பல்வேறு காரியங்களினிமித்தம் நாம் ஒவ்வொருவரும் எளிதில் சோர்ந்து போகிறோம். ஐயோ! நான் நினைத்தபடி படிக்க முடியாமல் இருக்கிறதே! என்னோடு திருமணமானவர்கள் எல்லோரும் குழந்தையை பெற்றெடுத்துவிட்டார்களே, எனக்கு குழந்தை பிறக்காதா? எத்தனை முறை பரீட்சை எழுதிவிட்டேன், ஒவ்வொரு முறையும் தோற்றுப் போகிறேனே! இத்தனை ஆண்டுகளாகியும் திருமணமாகாமல் வயது ஏறிக்கொண்டே போகிறதே, என் வாழ்வில் ஆசீர்வாதம் கிடைக்குமா? கடன் பிரச்சினை ஏறிக்கொண்டே போகிறதே, அதற்கு முடிவே இருக்காதா? இப்படி பல்வேறு பிரச்சினைகள் உங்களையும்கூட தாக்கிக்கொண்டே இருக்கலாம். இந்த வசனத்தின்படி, சோர்ந்துபோயிருக்கிற உங்களுக்கு பெலன் தரக்கூடியவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மட்டுமே என்பதை மறந்து போகாதிருங்கள். நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாய் இருக்க வேண்டும் என்பதே அவருடைய விருப்பம் (ஏசாயா 40:29). ஆகவே இந்த சோர்வுகளையெல்லாம் அவருடைய பாதத்தில் அப்படியே நீங்கள் வைத்துவிடும்போது, உங்களை விடுதலையாக்கி உங்களை மகிழ்விக்க அவர் ஆவலோடு இருக்கிறார். வேத புத்தகத்திலே அன்னாள் என்று ஒரு பெண் குழந்தையில்லாததினால் சோர்வோடு ஆண்டவர் பாதத்தை அணுகியபோது, அவளுக்கு ஒரு குழந்தையை அல்ல, பல குழந்தைகளைக் கொடுத்து ஆசீர்வதித்தார் (1 சாமு. 1:15; 2:21).

ஒரு தகப்பன் தன் ஒரே மகன் பொறியாளராக எதிர்காலத்தில் வர வேண்டும், பேரோடும் புகழோடும் வாழ வேண்டும் என்று பேராவல் கொண்டார். அதற்காக எத்தனையோ தியாகங்களை செய்யவும் முன்வந்தார். ஆனால், கல்லூரியிலே இருந்த முதல்வரோ ஒருநாள் இடம் தருகிறேன் என்று சொன்னவர், அடுத்த நாள் கஷ்டப்பட்டு பணத்தோடு போன வேளையிலே, “அப்பொழுது நான் சொன்னேன், ஆனால் இப்பொழுது இங்கே இடமில்லை என்று நானே சொல்லுகிறேன்” என்று கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளாத குறையாக அனுப்பிவிட்டார். தகப்பனும் மகனும் மனமுடைந்து வெளியே வந்தனர். ஆனால், அந்த மகன் ஆண்டவரை நம்பி அவர் மீது சார்ந்திருந்தபடியாலும், இந்த தகப்பனும் அவனை உற்சாகப்படுத்தியதாலும், கர்த்தர் ஒரு பெரிய காரியத்தை அவன் வாழ்க்கையிலே செய்தார். வேறு கல்லூரியில் படிப்பை முடித்தார். வேலையும் கிடைத்தது. பதவி உயர்வுக்கான சகல தேர்வுகளையும் வெற்றியோடு முடித்து, விரைவில் உயர்ந்த உத்தியோகத்திற்கு அவனை ஆண்டவர் கொண்டு வந்தார். ஒரு பொறியாளருக்கும் மேலாக பல்வேறு ஆசீர்வாதமான நிலைமையில் கர்த்தரே அவனை உயர்த்தினார். அன்று அவன் சோர்ந்து போகாமல் கர்த்தர் மீது சார்ந்து கொண்டபடியால், இத்தனை ஆசீர்வாதத்தையும் அந்த வாலிபன் பெற்றுக்கொண்டான்.

ஜெபம்: “அன்பு தகப்பனே, என் உள்ளத்தில் இருக்கிற கவலைகள், பாரங்கள், சோர்வுகள் எல்லாவற்றையும் உம்முடைய பாதத்திலே ஊற்றிவிடுகிறேன். இன்றுமுதல் நீரே என்னை பலப்படுத்தும். உம்மிலே வைத்திருக்கிற நம்பிக்கையை அதிகமாக்கும். நீர் அப்படி செய்வீர் என்று நம்புகிறேன். விசுவாசித்து உமக்கு நன்றி செலுத்துகிறேன், இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!”

தாகமுள்ளவன் மேல் வரும் தெய்வீக ஆசீர்வாதம்!

"தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன்; உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்"

(ஏசாயா 44:3).

இவ்வுலகத்திலே ஆண்டவரை அதிகமாக அறியாத மக்கள் பல்வேறு காரியங்களில் தாகமாய் இருக்கிறார்கள். அது கிடைக்காதபோது எரிச்சலடைகிறார்கள். கிடைக்கப் பெற்றவர்களைப் பார்த்து பொறாமைப்படுகிறார்கள் (பிர.4:4). உலக வாழ்க்கையின் காரியங்களில் மட்டுமல்ல, ஆவிக்குரிய, பரலோகத்திற்குரிய காரியங்களிலேயும்கூட தாகமாய், வாஞ்சையாய் இருக்கும்போது, ஆண்டவர் நாம் விரும்புகிறதற்கும் அதிகமாக ஆசீர்வாதத்தைக் கொடுக்கிற தேவனாக இருக்கிறார் (சங்.42:1). பூமிக்குரியவைகளையல்ல, மேலானவைகளையே நீங்கள் நாடித் தேடி ஆண்டவரிடத்திலே தாகத்தோடு, வாஞ்சையோடு கேட்பீர்களானால், அவைகளையெல்லாம் அவர் அருளிச்செய்ய வல்லவராயிருக்கிறார்.

பல வருடங்களுக்கு முன்பு 13 வயது நிரம்பிய ஒரு சிறுவன் எங்கள் வீட்டிலே உதவி செய்து வந்தான். என்னுடைய மாமனார் ஆசிரியராக இருந்தபடியால் அவனுக்கு பாடமும் கற்று கொடுப்பார். ஆகவே இரவு வெகு நேரம் வரை எங்கள் வீட்டிலே இருப்பான். அப்பொழுது நாங்கள் ஒவ்வொருவராக ஆண்டவரிடம் தாகத்தோடு கேட்டு, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்றுக்கொண்ட நாட்கள் அது. வீட்டின் முன் அறையில் யாவருமாகக் கூடி இரவிலே ஒரு நாள் ஜெபம் செய்துகொண்டிருந்தபோது, ஆவியானவர் எங்கள் மீது வல்லமையாக இறங்கினார். இதைக் கண்ட அந்த சிறுவன் அடுத்த நாள் என்னிடம் ஓடோடி வந்து, "அக்கா, எனக்கும் இந்த அனுபவம் வேண்டும்" என்று கேட்டான். அடுத்த முறை அவ்வாறே அவன் எங்களோடு ஜெபத்திலே பங்கு கொண்டபோது, ஆண்டவர் அவனோடு பேசினார். "மகனே, உன் தாய் உன் மீது உயிரையே வைத்திருக்கிறாள். அவளுக்கு இதெல்லாம் பிரியமாயிராதே" என்று கேட்டார். அவன் அதற்கு என்ன பதில் சொன்னான் தெரியுமா? "ஆண்டவரே, எனக்கு நீர் தான் வேண்டும். தாயோ வேறு யாருமோ எனக்கு முக்கியம் அல்ல; நீர் தான் எனக்கு வேண்டும்" என்று திரும்பத் திரும்ப சொல்லி ஜெபித்தான். அடுத்த வினாடி என்ன நடந்தது தெரியுமா? ஒரே நாளிலே ஆண்டவர் அவனை இரட்சித்தார். அவன் தாகத்தோடு கேட்டபடி, பரிசுத்த ஆவியினாலும் நிரப்பினார். என்ன ஆச்சரியம்! இந்த விதமான தெய்வீக ஆசீர்வாதம் உங்களுக்கு வேண்டாமா?

இன்று இந்த நிறைவான வாழ்வை நீங்களும் தாகத்தோடு கேட்பீர்களானால், இப்பொழுது அதே ஆண்டவர் உங்களையும் நிரப்புவார். சிறிய வயதோ அல்லது முதிர்ந்த வயதோ, நடுத்தர வயதோ எப்படி இருந்தாலும், ஆண்டவர் உங்களையும் இந்த மேலான நன்மையால் நிரப்பப்போவது உறுதியான காரியம் (யோவேல் 2:28).

ஜெபம்: "அன்பு தகப்பனே, இந்த சிறுவன் எத்தனை தாகத்தோடு கேட்டிருக்கிறான். என் உள்ளத்திலே இந்த தாகத்தையும் வாஞ்சையையும் இப்பொழுது தாரும். மேலான தெய்வீக சந்தோஷத்தையும், பரிசுத்த ஆவியின் நிறைவையும் இன்று எனக்கு தாரும். உமக்கு கோடான கோடி ஸ்தோத்திரம், இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

நமது ஜனத்தின் சிறுமையை மாற்றுகிற தேவன்!

"...கர்த்தர் தம்முடைய ஜனத்துக்கு ஆறுதல் செய்தார்; சிறுமைப்பட்டிருக்கிற தம்முடையவர்கள்மேல் இரக்கமாயிருப்பார்" **(ஏசாயா 49:13).**

குடும்ப வாழ்வின் பிரச்சினைகளால் பல குடும்பத்தினர், சிறுமைப்பட்ட நிலைமையில் தவிக்கின்றனர். எதிர்காலம் எப்படியிருக்குமோ? என் வாழ்நாளெல்லாம் இப்படித்தான் இருக்குமோ? என்று சஞ்சலப்படுகின்றனர் (ஆதி.47:9). உங்கள் பிரச்சினைகள் மலைபோன்றதாக இருக்கலாம். அந்த பிரச்சினைகளை நினைத்து நினைத்து இன்றைக்கு அழுதுகொண்டே இருக்கப்போகிறீர்களா? மலைபோன்ற இந்தப் பிரச்சினைகளை தன்னுடைய தெய்வீக வல்லமையால் மாற்றிப்போட வல்லவராகிய ஆண்டவர்மேல் உங்கள் நம்பிக்கையை வைத்து அவரையே நோக்கிப் பாருங்கள். அப்பொழுது உங்கள் சஞ்சலமும், தவிப்பும் ஓடிப்போம் (ஏசாயா 35:10). ஏனெனில், தம்மை நம்பியிருக்கிற தமது பிள்ளைகள் தமது ஆறுதலால் தேற்றப்பட வேண்டும், சமாதானமாய் வாழவேண்டும் என்பதே அவரது வாஞ்சை!

ஒரு பெண், திருமணமாகி கணவனுடைய வீட்டுக்கு போனாள். எல்லா மக்களும் அவளை பயமுறுத்தினது போன்றே, அவளுடைய மாமியார், ஒவ்வொரு நாளிலும் சிங்கம்போல சீறிவருவார். எப்படி சண்டைபோட்டு இவளை சிறுமைப்படுத்தி, தாய் வீட்டுக்கு ஓடிவிடும்படி செய்யலாம் என்பதுதான் அவருடைய விருப்பம். ஒரு சில நாட்கள் இந்த பெண்ணுக்கு மிக மிக வேதனையாக இருந்தது. தாய் வீட்டுக்கு சென்றுவிடலாமா என்றுகூட எண்ணினாள். ஆனால், அடுத்த கணம், எந்த நிலைமையிலும் என் ஆண்டவர் போதுமானவர் என்று நான் பாடுகிறேனே, இதையும் ஆண்டவர் மாற்றித் தர வல்லவர் என்று விசுவாசியாமல் போனேனே என்று வருத்தம் அடைந்தாள். அதிகாலையில் எழுந்து ஆண்டவரைத் தேடினாள். அன்று தேவபெலன் தன்னைத் தாங்கும்படி கர்த்தர் கிருபை பொழியவேண்டுமென்று பிரார்த்தனை செய்தாள். சோர்ந்துபோகிற நேரமெல்லாம் அப்படியே கருத்தாய் ஜெபம் பண்ணினாள். வாரம் ஒருமுறை உபவாசித்து தன் மாமியாரின் மனம் கர்த்தரால் மாற்றப்படவேண்டும் என்று ஜெபித்து வந்தாள். ஜெபத்தைக் கேட்கிற ஆண்டவர் அவளுக்கு மனமிரங்கினார். பரிசுத்த ஆவியானவர் தந்த தெய்வீக பெலன் அவளை நிரப்பியது; மாமியார் சிங்கம்போல வரும்பொழுதெல்லாம் அவள் சிரித்துக்கொண்டே அதை மேற்கொள்ள தெய்வீக அன்பினால் அவளை நிறைத்தார். நாட்கள் கடந்தன! மாமியாரின் சீற்றம் மறைந்தது! சண்டை குறைந்தது! சமாதானம் குடும்பத்தை நிரப்பியது. மெல்ல மெல்ல மாமியார் ஆண்டவரைப் பற்றி அவளிடம் கேட்கக் கேட்க, ஆண்டவருடைய அன்பைப் பற்றி இன்பமாக அறிவித்தாள். இரண்டு பேரும் ஒரு மனம் கொண்டு ஜெபம் செய்தனர். இன்பமான இல்லறத்தை அவள் பெற்று அனுபவிக்கத்தக்க ஒரு சாட்சியாக விளங்கினாள்.

ஆம்! இதே ஆண்டவர் உங்கள் வாழ்வின் சகல சிறுமைப்பட்ட நிலையையும்கூட மாற்றி, உங்கள்மீது இரக்கம் வைத்து, உங்களை ஆறுதல்படுத்துவார் (2 கொரி.7:6).

<u>ஜெபம்:</u> "அன்பு தெய்வமே! என் பிரச்சினைகள், சிறுமை நிறைந்த வாழ்வையும் கூட அதே போன்று <u>இன்று</u> நீர் பொறுப்பெடுத்துக்கொள்ளும். எனக்கும் பூரண சமாதானம் நிறைந்த வாழ்வைத் தருவீர் என்று நம்பி உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

காயங்களை குணமாக்கும் ஆண்டவர்!

"இதோ, நான் அவர்களுக்கு சவுக்கியமும் ஆரோக்கியமும் வரப்பண்ணி, அவர்களைக் குணமாக்கி, அவர்களுக்கு பரிபூரண சமாதானத்தையும் சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன்"

(எரேமியா 33:6).

உலக வாழ்க்கையிலே சரீரத்தில் ஏற்படும் காயங்களைத் தவிர, மனதில் ஏற்படும் காயங்கள் எத்தனையாய் நம்மை வேதனைப்படுத்துகின்றன. சொந்த வீட்டில் சொந்த மக்களின் வார்த்தைகளால் ஏற்படும் காயங்கள்! நண்பர்களால் கைவிடப்பட்டதால் மனதில் ஏற்படும் காயங்கள்! இல்லாமையின் நிமித்தம் உலகின் மக்களால் ஏற்படும் காயங்கள்! சரீரத்தில் வியாதியின் நிமித்தம் ஏற்படும் காயங்கள்! விபத்து போன்ற காரியங்களினால் ஏற்படும் காயங்கள்! என்று பல்வேறு விதங்களிலே காயமடைகிறோம். ஆனால், எந்த நிலைமையிலும் நம்முடைய கண்கள் சிலுவையை நோக்கிப் பார்க்கும்போது, ஆண்டவர் நமக்காக அடிக்கப்பட்டார், நொறுக்கப்பட்டார். முதுகிலே வாரால் சதையைக் கிழித்து காயப்படுத்தினார்கள், தலையிலே முள்முடி சூட்டினதால் வேதனைப்பட்டார். இப்படி நமக்காக சரீரம் முழுவதும் காயங்களால் நிரம்பினவராக காட்சியளிக்கிற ஆண்டவருடைய தழும்புகளால் நாம் குணமாகிறோம் (ஏசாயா 53:5) என்று வேதம் சொல்லுகிறது அல்லவா? நான் உங்களை குணமாக்குகிற கர்த்தர் என்று அவரே சொல்லியிருக்கிறார். ஆகவே, உங்கள் சரீர காயங்களைக் குறித்தாவது, மனதின் காயங்களைக் குறித்தாவது, சஞ்சலப்பட வேண்டாம் (எரே. 30:17).

1985 ஆம் வருடம் என் அன்பு கணவர் திடீரென்று நோய்வாய்ப்பட்டார். இரண்டு சிறுநீரகங்களும் வேலை செய்ய முடியாத நிலைமையில் இருந்து அதினிமித்தம் சரீரத்தில், மனதில் எத்தனை காயங்கள்! நாங்கள் குடும்பமாக முதலில் கண்ணீர் விட்டோம். அன்பான மருத்துவர்கள் சிலரும்கூட எங்களோடு சேர்ந்து கவலைப்பட்டனர். ஆனால், எந்த நிலைமையையும் மாற்றியமைக்க ஆண்டவரால் முடியும் என்று ஒரே விசுவாசத்தோடு, கண்ணீரோடு நாங்கள் பிரார்த்தனை செய்து வந்தோம். ஆண்டவர் எங்களுக்கு முன்னதாக சென்று அமெரிக்காவிலே நாங்கள் தங்குவதற்காக அன்பு நிறைந்த ஒரு குடும்பத்தாரையும், வைத்தியம் செய்வதற்காக ஒரு அருமையான மருத்துவமனையையும், யாதொரு பணமுமின்றி பல ஆசீர்வாதங்களோடு ஆயத்தப் படுத்தியிருந்தார். ஆறு மாதங்களில் கர்த்தர் அதிசயத்தை செய்து குடும்பத்தோடு நற்சுகத்துடன் கொண்டு வந்து சேர்த்தார். எத்தனை ஆச்சரியமானவர் நம் ஆண்டவர்!

அன்பானவர்களே! மனதின் காயங்களோடு, சரீரத்தின் காயங்களோடு இருதயத்தில் நொறுங்குண்டவர்களாக நீங்களும் சஞ்சலப்படுகிறீர்களா? கர்த்தரை உறுதியாய் பிடித்துக்கொள்ளுங்கள். அவர் அதிசயமானவர்! நீங்கள் விரும்புகிறதற்கும், அதிகமாய் காரியங்களை தலைகீழாய் மாற்றிப்போட, உங்களைக் குணமாக்க அவர் வல்லமை யுள்ளவர் என்பதை மறந்து போகாதிருங்கள் (சங். 147:3).

ஜெபம்: **"அன்பு தகப்பனே! என் காயங்களை மாற்ற நீர் உம்மையே சிலுவையில் அர்ப்பணித்தீரே. உமக்கு கோடான கோடி ஸ்தோத்திரம். இன்று எனக்கும் உதவி செய்வீர் என்று விசுவாசித்து, நீர் தரும் ஆசீர்வாதத்தை நன்றியோடு ஏற்றுக் கொள்கிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"**

ஆற்றித் தேற்றி ஆனந்தம் தருவார்!

"...நான் அவர்கள் துக்கத்தை சந்தோஷமாக மாற்றி, அவர்களைத் தேற்றி, அவர்கள் சஞ்சலம் நீங்க அவர்களை சந்தோஷப்படுத்துவேன்" (எரேமியா 31:13).

இந்த உலக வாழ்க்கையில் என்றென்றும் மகிழ்ச்சியாய் சந்தோஷமாய் இருக்கிறோம் என்று சொல்லவே முடியாது. திடீர் திடீரென்று இன்னல்கள் நேரிடுவதால், அவைகள் யோபுவுக்கு ஏற்பட்டதுபோல் இமைப்பொழுதில் நம் சந்தோஷத்தை மாற்றிப் போடுகின்றன (யோபு 6:3). 1986 ஆம் ஆண்டு, எங்களுக்கு ஆண்டவர் கொடுத்த அன்பு மகள் ஏஞ்சலோடு மிகவும் சந்தோஷமாக காரில் ஏறி விமான நிலையத்திற்கு சென்றோம். ஆனால், வெகு சில நிமிடங்களுக்குள் ஒரு பயங்கரமான விபத்து! மகள் மரணமடைந்தாள்! இப்படித்தான் நம் ஒவ்வொருவர் வாழ்விலும் துன்பம், துக்கம் வருகிறது. ஆனால், தேவாதி தேவன்தான் இந்த துக்கத்தையெல்லாம் மாற்றி நம்மைத் தேற்றுகிறவராக இருக்கிறார். ஆனால், ஆண்டவர் கிருபையாக எங்கள் குடும்பத்தை கட்டி, எங்களை பூரிப்படைய செய்திருக்கிறார். அதுமட்டுமல்ல, அநேக இளம் பிள்ளைகள் எங்களை அன்போடு, "அப்பா, அம்மா" என்று அழைக்கும் அன்பையும் கட்டளை யிட்டிருக்கிறார். அவர் சகலவிதமான ஆறுதலின் தேவன் (2 கொரி. 1:3,4).

ஒரு போதகர் தன் மனைவியோடும், மூன்று பிள்ளைகளோடும், சந்தோஷமாக வாழ்ந்து வந்தார். ஆனால், ஒரு பிள்ளைக்கு நோய் வந்து, அது மரித்துப்போனது. அப்படியே ஒன்றன்பின் ஒன்றாக மூன்று பிள்ளைகளும் மரணமடைந்து விட்டார்கள். மிகுந்த துக்கம்! மனைவியைப் போய் ஆறுதல் படுத்தலாம் என்று அவர் அவளை தேடிப்பார்த்தார். ஐயோ! அவள் உடல் சில்லென்று போயிருந்தது. அவளும் மரித்த நிலைமையில் இருந்தாள். போதகர் மனம் உடைந்து, கதறி, கண்ணீர் விட்டார். துக்கத்தின் மிகுதியினால் விஷம் அருந்தி தன் உயிரையும் மாய்த்துக்கொள்ளத் துணிந்தார். விஷ புட்டியைத் திறந்து விஷத்தை வாயில் ஊற்றப் போகும்போது எங்கிருந்தோ ஒரு தெய்வீக சந்தோஷம் அவரை நிரப்ப, அவரையுமறியாமல் புட்டியைத் தூக்கியெறிந்தார். ஆண்டவரை ஸ்தோத்திரிக்க ஆரம்பித்தார். சிரித்தார், சிரித்தார், சிரித்துக் கொண்டேயிருந்தார். இதைக் கண்ட மக்கள் யாவரும், "ஐயோ, சஞ்சலத்தின் நிமித்தமாக இவர் பைத்தியமாகிவிட்டார் போலும்" என்று சந்தேகப்பட்டனர். ஆனால், அவர் அந்த எண்ணத்தை மாற்றும் முகனாக அவர்களிடம் வந்து, தான் பெற்றது தெய்வீக சந்தோஷம், பரிசுத்த ஆவியானவர் கொடுத்த சந்தோஷம் என்றார்.

ஆம்! என் அன்பு சகோதரனே, சகோதரியே, துக்கத்தின் வேதனை தாங்க முடியாததுதான்! ஆனால் ஆண்டவரோ, இதற்காகவே தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரை நாம் விரும்பிக் கேட்கும்போது நமக்குள் அருளிச் செய்கிறார் (யோவான் 14:16). மகளை இழந்த பிறகு பரிசுத்த ஆவியானவருடைய நிறைவு, சந்தோஷம், வல்லமை இவைகள் தான் எங்கள் வாழ்வையும் மறுமலர்ச்சியடைய செய்திருக்கிறது. உங்கள் கண்ணீரையும் ஆண்டவர் மாற்றி, தமது தெய்வீக ஆறுதலால், சொல்லி முடியாத சந்தோஷத்தினால் நிச்சயம் நிரப்புவார் (1 பேதுரு 1:8).

ஜெபம்: "அன்புள்ள ஆண்டவரே, என் துக்கமும் சொல்லி முடியாதது தான்! எனினும், இன்றுமுதல் என்னையும் பரிசுத்த ஆவியானவரின் சந்தோஷத்தினால் நிரப்பி ஆறுதல்படுத்தி, வழிநடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

சுகந்த வாசனையில் பிரியமாயிருக்கிற ஆண்டவர்!

"...சுகந்த வாசனையினிமித்தம் நான் உங்கள்பேரில் பிரியமாயிருப்பேன்"
(எசேக்கியேல் 20:41).

சரீரத்திலே வாசனை வீசும்படியாக பல நல்ல சோப்பு வகைகள், சென்ட் வகைகள் இருக்கலாம்! ஆனால் வாழ்க்கையில் வாசனை வீசும்படியாய் நாம் என்ன செய்ய வேண்டும்? நம் ஆண்டவருக்கு பிரியமான சுகந்த வாசனை எது? சரீரத்தில் மட்டும் வாசனை வீசும்படியாய் செய்துவிட்டு, ஆத்துமாவில் துர்நாற்றம் நிறைந்து வாழ்ந்து கொண்டிருப்போமானால், எத்தனை பரிதபிக்கப்பட வேண்டியவர்களாய் இருக்கிறோம். சுகந்த வாசனை என்பது நோவா செலுத்தியதுபோல ஸ்தோத்திரபலி நிறைந்த, ஆண்டவருக்கு பிரியமான வாழ்க்கையுமாகும் (ஆதி.8:21)! கர்த்தருக்கு பயப்படுதல் அவருக்கு உகந்த வாசனையாயிருக்கும் (ஏசாயா 11:3). அவரை அறிகிற அறிவின் வாசனை மூலம் கிறிஸ்துவுக்குள் வெற்றி சிறக்கப்பண்ணுவார் (2 கொரி. 2:14).

ஒரு கணவனும் மனைவியும் ஒரு காலனியில் புதிய வீடு ஒன்றை சொந்தமாக வாங்கி, அதில் குடியிருந்தார்கள். சுற்றிலும் இருந்தவர்கள் அவர்களிடம் வந்து "ஐயோ, இந்த வீடு சபிக்கப்பட்ட ஒரு வீடு. இதுவரை இங்கே வந்து வாழ்ந்தவர்கள் ஒருவர்கூட ஆசீர்வாதம் பெறாமலே வீட்டைக் காலி செய்துவிட்டு போய்விட்டார்கள் என்றெல்லாம் கூறி பயமுறுத்தினார்கள். ஆனால் இந்த குடும்பத்தினரோ ஒன்றுக்கும் செவி கொடாமல், அதிகாலையிலும், இரவிலும் மற்றும் சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுதெல்லாம் உள்ளத்தின் ஆழத்திலிருந்து யாவரும் கேட்கும் வண்ணமாக ஆண்டவரை துதித்துப் பாடினார்கள். ஸ்தோத்திரபலி, வீட்டிலிருந்து எப்பொழுதும் சுகந்த வாசனையாக கர்த்தரை நோக்கி சென்று கொண்டே இருந்தது. மாதங்கள், வருடங்கள் சில உருண்டோடின! சுற்றிலும் இருந்தவர்கள் ஆச்சரியமடைந்தனர்! "இதுபோல மற்றவர்கள் ஆசீர்வதிக்கப்பட வில்லையே! நீங்கள் இங்கு வந்த பிறகு வீட்டையும் விஸ்தாரப் படுத்தியிருக்கிறீர்கள். உங்கள் வேலையிலும் உயர்வு வந்திருக்கிறது என்று சொல்லுகிறீர்கள். இது எங்களுக்கு விளங்காத இரகசியமாக இருக்கிறதே" என்றார்கள். அப்பொழுது அந்த வீட்டின் தலைவர், இயேசு கிறிஸ்து எங்கள் வீட்டிலே பிரசன்னமாகி யிருக்கிறார். அவரே எல்லா சாபங்களையும் மாற்றிப்போட்டு ஆசீர்வாதங்களையும் அருள வல்லவர் என்பதை நிரூபித்திருக்கிறார் என்று சாட்சி பகர்ந்தார்.

அன்பானவர்களே, இன்று இந்த வீட்டில் சாபம் இருக்கிறது. இந்த வாசலை மாற்றி அமைக்க வேண்டும், வீட்டை காலி செய்ய வேண்டும் என்று உங்களையும் பயமுறுத்துகிறார்களோ? நீங்களும் ஆண்டவரை போற்றித் துதித்து அதினால் உண்டாகிற சுகந்த வாசனை ஆண்டவருக்கு நேரே செல்லும்படி செய்யுங்கள் (சங்.50:23). அப்பொழுது அவரே எல்லாக் குறைவுகளையும் உங்கள் வாழ்விலிருந்து மாற்றி, உங்களையும் ஆசீர்வாதமாக வாழ்ந்திருக்க அருள்புரிவார்.



ஜெபம்: **"அன்பு தேவனே, வீணாக மனிதர் சொல்லும் காரியங்களைக் கேட்டு மனதைத் தளரவிடாமல், நீர் செய்த நன்மைகளையெல்லாம் எண்ணிப் பார்க்க, நான் ஜாக்கிரதையாய் இருக்கும்படி, இன்று எனக்கு அருள்தாரும். எல்லா சாபங்களையும் என் வாழ்விலிருந்து மாற்றி, என்னை நிறைவாய் ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"**

அதிசயமானவர் தரும் அளவில்லாத ஆசீர்வாதம்!

"நீங்கள் சம்பூரணமாக சாப்பிட்டு, திருப்தியடைந்து, உங்களை அதிசயமாய் நடத்திவந்த உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள்; என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை" (யோவேல் 2:26).

ஆம்! ஆண்டவர் அவருக்கு சொந்தமான ஜனங்களுக்கு, மேற்கண்ட விதத்தில் நிறைவான ஆசீர்வாதத்தை கொடுப்பதில் பிரியமாய் இருக்கிறார். ஒருவேளை நீங்கள் இதுவரையிலும் இயேசு கிறிஸ்துவுக்கு சொந்தமானவர்களாக இல்லாமல் இருப்பீர்களானால், "ஆண்டவரே, என்னை உம்முடைய பிள்ளையாக மாற்றும்" என்று உடனே உங்களைத் தாழ்த்தி ஜெபியுங்கள். அப்போஸ்தலர் 9:6–ல் வாசிப்பதுபோல் ஆண்டவருடைய சித்தத்துக்கு உங்களை ஒப்புவியுங்கள். அப்பொழுது "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்" (யோவான் 1:12) என்ற வசனத்தின்படி அவர் தமக்கு சொந்தமாகும் பிள்ளைகளாகிய உங்களை அளவில்லாமல் ஆசீர்வதிப்பார்.

ஒரு வாலிபப் பெண் "இயேசு அழைக்கிறார்" நற்செய்தி கூட்டத்தில் கலந்து கொண்டு செய்தியைக் கேட்டு, ஆண்டவரை இரட்சகராக ஏற்றுக்கொண்டாள். முடிவிலே "இந்த கூட்டத்தை நடத்த ஏராளம் செலவானபடியால், உங்களில் முடிந்தவர்கள் காணிக்கையை தாராளமாகக் கொடுத்து தாங்குங்கள்" என்று அறிவிக்கப்பட்டது. காணிக்கை போடும் நேரம் வந்தது. "நூறு ரூபாய் கொடுத்தால் போதும்" என்று தன் கையிலே அந்தப் பெண் நூறு ரூபாயை எடுத்து வைத்துக் கொண்டாள். அப்பொழுது ஆண்டவர் அவள் உள்ளத்திலே பேசினார். "மகளே, நேற்று உன்னுடைய பிறந்த நாளுக்கு எவ்வளவோ பரிசுகள் வந்தன. அதிலிருந்து என் ஊழியத்திற்கு இதைவிட அதிகம் காணிக்கை கொடுக்கக்கூடாதா?" என்று கேட்டார். உடனே அவள் உள்ளம் உடைந்து, கைப்பைக்குள் இருந்த அத்தனை ரூபாய் நோட்டுகளையும் எடுத்தாள். எவ்வளவு என்று கூட எண்ணிப்பார்க்காமல் அப்படியே காணிக்கைப் பையினுள் போட்டுவிட்டாள். ஆண்டவர் வார்த்தைக்கு நான் கீழ்ப்படிந்துவிட்டேனே என்று உள்ளத்திலே ஒரு பெரிய சந்தோஷம்! அடுத்த நாள் அலுவலகத்திற்கு சென்றாள். ஒரு கடிதம் அவளுக்காக காத்திருந்தது. அதில் அவளுக்கு மூவாயிரம் ரூபாய் சம்பளம் முன்னைக்காட்டிலும் அதிகரிக்கப்பட்டிருப்பதைக் கண்டு மிகுந்த ஆச்சரியமடைந்தாள். இது கர்த்தருடைய செயல் என்று உணர்ந்துகொண்டாள். "உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்" (2 கொரி. 9:7).

அன்பானவர்களே, நீங்களும்கூட, "ஐயோ, சம்பளம் போதவில்லையே, சிறிய வேலை தானே கிடைத்திருக்கிறது, என் குடும்பத்தை இதைக் கொண்டு எப்படி நடத்துவேன்?" என்றெல்லாம் கவலைப்படுகிறீர்கள் அல்லவா! அதிசயமான ஆண்டவர் உங்களையும் சம்பூரண ஆசீர்வாதங்களினால் திருப்தியடைய செய்து கனப்படுத்துவார் (1 தீமோ. 6:17).

ஜெபம்: "அன்பு நிறைந்த ஆண்டவரே! இன்றுமுதல் உமது வார்த்தை, உமது சித்தம், உமது வழிகள் இவைகளின்படி உமக்கு கீழ்ப்படிந்து நடக்கவும், உமக்கு சொந்தமான பிள்ளையாக, உம்மையே பிரியப்படுத்தி நிறைவான வாழ்வு வாழவும் நீரே என்னையும் வழிநடத்தும். இயேசுவின் நாமத்தில் கெஞ்சுகிறேன் பிதாவே, ஆமென்!"

நம்பிக்கையும், நன்மையும் தரும் அரண்!

"நம்பிக்கையுடைய சிறைகளே, அரணுக்குத் திரும்புங்கள்; இரட்டிப்பான நன்மையைத் தருவேன், இன்றைக்கே தருவேன்" . (சகரியா 9:12).

"கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்" (எரே.17:7) என்று வேதம் சொல்லுகிறது.

எனக்கு அன்பானவர்களே, இந்த உலகத்திலே தேவைகள் வரும்போது, பல மனுஷரை நாம் நாடித் தேடுகிறோம். அவர்கள் எளிதில் நம்மைக் கைவிடுகிறார்கள். வியாதிப்பட்ட நிலைமையிலும் மருத்துவரையே முழு நம்பிக்கையோடு நாடித் தேடுகிறோம். தன்னால் இயன்றதை செய்து முடித்த பிறகு, "அவ்வளவு தான் என்னால் முடியும்" என்று சில சமயங்களில் அவரும் சொல்லி விடுகிறார். கடன் கொடுப்பவர்கள் இதற்குமேல் என்னிடம் வராதே என்று நேரடியாகவே கண்டிப்பாக சொல்லி விடுகிறார்கள். வேலை தேடி செல்லும்போது, "வேலை காலி இல்லை, வீணாக வந்து தொந்தரவு செய்யாதே" என்று தூக்கியெறிந்து அனுப்பி விடுகிறார்கள். இப்படி ஒவ்வொரு நாளும் நம்பிக்கை யற்ற நிலைமையிலே, கண்ணீரிலே நாம் வாழ்கிறோம் அல்லவா? "என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும்; அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது?" (சங். 56:8) என்று தாவீதைப்போல் புலம்புகிற உங்களுக்கு உதவி செய்ய ஆண்டவர் காத்திருக்கிறார். "மகனே, மகளே, வருத்தப்பட்டு உன் பாரத்தையெல்லாம் நீ ஏன் சுமந்து கொண்டிருக்கிறாய், என்னிடத்தில் வா; நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன், நீ விரும்புகிறதை நிச்சயம் தருவேன்" (மத். 11:28) என்று அழைக்கிற அவரே உங்கள் கண்ணீரைத் துடைத்து உங்களுக்கு நம்பிக்கையும், நன்மையும் அருளிச் செய்ய வல்ல அரணுமாயிருக்கிறார் (ஏசாயா 25:8).

ஒரு குடும்பத்திலே ஒரு பெண்ணுக்கு திருமணமாகாத நிலைமை! எல்லோரும் பலவிதமாய் நிந்தையாய் பேசினார்கள். அந்த குடும்பத்தினர் கண்ணீரில் இருந்தனர். அந்த தாய் தன் மகளோடு சேர்ந்து உபவாசத்தோடு ஜெபித்து, கர்த்தரை நோக்கிப் பார்த்தார்கள். என்ன ஆச்சரியம்! ஒரு அருமையான மணமகன் அந்த பெண்ணைக் குறித்து, அவள் பக்தியைக் குறித்து கேள்விப்பட்டு, அந்த பெண் தான் தனக்கு வேண்டும் என்று தேடி வந்தார். அவர் மிகவும் அழகுள்ளவர், அன்பே உருவானவர். நல்ல உயர்ந்த பதவியிலும் இருந்தவர். எல்லோராலும் பரிகசிக்கப்பட்ட அந்த பெண் யாவரும் ஆச்சரியப்படும்படியான விதத்தில், அருமையான ஒரு இல்லற வாழ்க்கையை ஆண்டவர் அருளால் பெற்றுக்கொண்டாள்.

அருமையானவர்களே, உங்கள் வாழ்க்கையிலும் இப்படிப்பட்ட அதிசயத்தை செய்ய வல்லவராகிய ஆண்டவர் மீது உங்கள் நம்பிக்கையை முழுவதுமாய் வைக்கமாட்டீர்களா? உங்கள் சஞ்சலத்தையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, நம்பிக்கையற்ற நிலைமையில் உங்களுக்கு உதவி செய்ய வல்ல ஆண்டவரையே நோக்கிப் பார்த்து, அவரையே பற்றிக் கொள்ளுங்கள் (2 சாமு. 22:33).



ஜெபம்: **"அன்பு தெய்வமே, இந்த உலகில் பரிதபிக்கப்பட்ட நிலைமையிலே நான் இருந்தாலும் நீர் எனக்கு போதுமானவராக இருக்கிறபடியால் இந்த நிலைமையை உம்முடைய சமுகத்தில் அப்படியே ஒப்படைக்கிறேன். எனக்கு நீரே அரணும் கோட்டையுமாக இருந்து இன்றுமுதல் என் வாழ்வை ஆசீர்வாதமாக மாற்றித் தாரும். உமக்கு நன்றி செலுத்துகிறேன், இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"**

சத்தியத்திலே போதித்து வழிநடத்துவார்!

"உம்முடைய சத்தியத்திலே என்னை நடத்தி, என்னைப் போதித்தருளும்; நீரே என் இரட்சிப்பின் தேவன், உம்மை நோக்கி நாள்முழுதும் காத்திருக்கிறேன்"

(சங்கீதம் 25:5).

சில சமயங்களிலே, "எந்த வழியில் திரும்புவது? யாரிடம் போவது? இந்த சமயத்தில் எப்படி செயல்படுவது?" என்று நாம் தவிக்கிறோம். ஆண்டவர் வாக்களித்தவர், வாக்கு மாறாதவர். அவர் உங்கள் இரட்சிப்பின்·தேவன். கரம் பிடித்து உங்களை சரியான வழியில் நடத்த வல்லமையுள்ளவர் (சங்.32:8). நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்று தான். அவருடைய பிரசன்னத்தில் அல்லது அவருடைய சமுகத்தில் முழங்காற்படியிட்டு, அவர் தரும் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள அல்லது அவர் வழிநடத்துதலின்படி நடந்துகொள்ள உங்களை ஒப்படையுங்கள். இதைத்தான் "உம்மை நோக்கி நாள்முழுதும் காத்திருக்கிறேன்" என்று வாசிக்கிறோம். அப்படியே காத்திருப்பீர்களானால் அவர் சத்தியத்திலே, சரியான பாதையிலே, பிரயோஜனமான விதத்தில் போதித்து உங்களை வழிநடத்துவார் (ஏசாயா 48:17).

ஒரு அலுவலகத்திலே பணி புரிந்த மக்கள் யாவரும் பொல்லாதவர்கள். எப்பொழுதும் சண்டை போட்டுக்கொண்டு ஒருவரையும் நிம்மதியாக இருக்க விடமாட்டார்கள். அதில் ஒரு பக்தியுள்ள மகள் இருந்தாள். அவளிடத்திலே பல்வேறு வேண்டாத கிரியைகளையெல்லாம் செய்து, வேண்டுமென்றே அவளை பரிகசித்து தொல்லைப் படுத்துவார்கள். "என்ன செய்வது? இந்த அலுவலகத்தை விட்டு வேறு எங்கேயாவது போய்விடலாமா? அப்படி போக முடியாதே! என் கணவரும், என் குடும்பத்தினரும் இந்த ஊரில் அல்லவோ இருக்கிறார்கள்" என்று அவள் கவலைப்பட்டாள். ஆனால், அடுத்த கணம் அலுவலகத்திலும் சரி, பிரயாணம் பண்ணும்போதும் சரி, ஆண்டவரோடு பேசிக் கொண்டே இருந்தாள். "அன்பு தகப்பனே, இந்த பொல்லாத மக்கள் கரத்திலிருந்து என்னைக் காப்பாற்றும். இவர்களையும் என் ஜீவியத்தின் மூலமாய் உம்மைக் கண்டு கொள்ள வழி செய்யும்" என்று கருத்தாய் பிரார்த்தனை செய்தாள். என்ன ஆச்சரியம்! கொஞ்ச நாட்களுக்குள் ஒவ்வொருவராக தங்கள் சொந்த பிரச்சினைகளின் நிமித்தம் அவளைத் தனியாக தேடி வந்தனர். அவர்களுக்காக கண்ணீரோடு பிரார்த்தனை செய்து ஆண்டவரை பற்றியும், அவரது அன்பை பற்றியும் அவர்களுக்கு போதித்தாள். வெகு விரைவிலே அந்த அலுவலகம் மிகவும் சமாதானமாக, ஆச்சரியமான முறையில் மாறும் படியாய், அந்த ஒரு மகளுடைய தெய்வீக நம்பிக்கையினிமித்தம் கர்த்தர் மாற்றினார்.

இன்றும் "ஐயோ, வேலை செய்யும் இடத்திலே எத்தனை பிரச்சினை! நான் என்ன செய்வேன்?" என்று கலங்குகிற உங்களையும் ஆண்டவர் அப்படியே மாற்றுவார். வீண் வார்த்தைகளுக்கும், செயல்களுக்கும் உங்களை விலக்கி, பரிசுத்தமாய் காத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது நீங்களும் சத்தியத்திலே நடக்கும்படியும், மற்றவர்களுக்கு மாதிரியாக இருக்கும்படியும் ஆண்டவர் கிருபை புரிவார் (யோவான் 8:32).

<u>ஜெபம்:</u> "அன்பு தெய்வமே! அலுவலகத்திலும், ஏன் என் வீட்டிலும் கூட இப்படிப்பட்ட பொல்லாத மக்கள் ஏராளம்பேர் என்னை சூழ்ந்திருக்கிறார்களே! அவர்கள் மத்தியிலே உம்மை வெளிப்படுத்திக் காண்பித்து, அவர்களையும் உம்முடைய வழியிலே வழிநடத்தவும், எனக்கு போதித்து உம்முடைய தெய்வீகக் கிருபையால் <u>இன்றுமுதல்</u> என்னை நீரே வழிநடத்தும். உம்முடைய பாதத்தில் என்னை ஒப்புக் கொடுக்கிறேன், இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"

நல்லவருக்கு தேவன் அருளும் நன்மைகள்!

''தேவன் தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவனுக்கு ஞானத்தையும் அறிவையும் இன்பத்தையும் அளிக்கிறார்''
(பிரசங்கி 2:26).

இந்த உலகத்திலே சந்தோஷமாய், மகிழ்ச்சியாய், ஆசீர்வாதமான முறையில் வாழ்வதற்கு ஞானம், அறிவு தேவையாய் இருக்கிறது. நம்முடைய சொந்த ஞானமோ, அறிவோ சில நேரங்களிலே போதாத நிலைமையிலே நாம் குறைவுபட்டவர்களாய் இருக்கிறோம். வேலை செய்யுமிடங்களில் வேலை செய்வதற்கு போதுமான ஞானமில்லை! குடும்ப வாழ்க்கையிலே சந்தோஷமாய், மனநிம்மதியோடு வாழ்வதற்கு ஞானமில்லை! பள்ளியிலோ, கல்லூரியிலோ படிக்கும்போது படிப்பதற்கு வேண்டிய ஞானம், அறிவு இல்லாததால் தோல்வி! இப்படி வாழ்க்கையிலே தோல்வி மேல் தோல்வியையே பல சமயங்களில் நாம் சந்திக்கிறோம். ஆனால் ''அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது'' (கொலோ. 2:3). ''ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது!'' (ரோமர் 11:33) என்ற வசனங்களின்படி, ஆண்டவரே, நமக்கு தேவையான சகல ஞானத்தையும் அறிவையும் அந்தந்த சமயத்திலே கொடுத்து நம்மை ஆசீர்வதிக்க போதுமானவராயிருக்கிறார் என்பதை உணர்ந்திருக்கிறோமா? நல்லவர்களாக, அவருக்கு பிரியமானவர்களாக இருக்கும்போது, தேவன் இந்த நன்மைகளை நமக்கு அருளிச்செய்கிறார் (யாக்.1:5)!

வாலிபன் ஒருவன் ஆண்டவரை அறிந்திருந்தும், அவருக்கு பிரியமாய் நடக்கும்படி தாய் போதித்து வழிநடத்தி வந்தபொழுதும் பொல்லாத சிநேகிதர்களின் கூட்டுறவால் ஆண்டவரை மறந்து, வீட்டுக்கு தெரியாமல் கல்லூரிக்கு செல்வதை அறவே ஒழித்தான். பெற்றோருக்கு அடங்காத, வேதனையூட்டும் மகனாக வாழ ஆரம்பித்தான். பெற்றோர் கண்ணீர் வடித்து, அவனுக்காக மன்றாடி, ஆண்டவர் பாதத்தில் அவனை ஒப்புக் கொடுத்தனர். ஆண்டவர் அவன் சரீரத்தைத் தொட்டார். சரீரத்திலே ஒரு பயங்கரமான சரும நோய், யாவரும் பார்க்கும்படியாக வெளிப்பட்டது. இதைக் கண்ட அந்த மகன், ''ஐயோ, எவ்வளவு நல்ல பையனாக, பெற்றோருக்கு பிரியமாய் ஆண்டவருடைய வழியில் வாழ்ந்தேனே! இப்பொழுது துன்மார்க்கனாய், இந்த வியாதியை சரீரத்திலே பெற்றுக் கொள்ளும்படி பயங்கரமான நிலைமைக்குள்ளானேனே!'' என்று கண்ணீர் வடித்தான். கர்த்தரை நோக்கி முழங்காற்படியிட்டு மன்றாடினான். இரக்கமும், கிருபையும் நிறைந்த ஆண்டவர் அப்படியே மனமிரங்கி மன்னித்து, படிப்பை முடித்து நல்லதொரு வேலையில் சேரவும், பெற்றோருக்கு இன்பத்தை தருகிற ஒரு அன்பின் மகனாகவும் அவனை மாற்றினார்.

அன்பானவர்களே, உங்கள் வாழ்க்கையும் இப்படி ஆண்டவருக்கு பிரியமானதாக இருக்கும்படியாய், அவரிடமிருந்து தெய்வீக ஞானம், அறிவை பணிவுடன் கேட்டு பெற்று, ஆசீர்வதிக்கப்படும்படி கருத்தாய் கர்த்தரை தேடுங்கள் (நீதி.2:6,7).

<u>ஜெபம்:</u> ''அன்பு தெய்வமே, உம்மை விட்டு தூரமாய் வந்துவிட்ட என்னை தயவாக மன்னித்து, எனக்காக சிலுவையிலே நீர் சிந்தின இரத்தத்தால் என்னை சுத்திகரித்து, நல்ல நிலைமைக்கு என்னையும் மாற்றும். <u>இன்றுமுதல்</u> நன்மையால் என்னை நிரப்பி ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!''

கர்த்தர் நம்மைத் தேற்றுகிறவர்!

''ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன்...''

(ஏசாயா 66:13).

தாயின் அன்பு ஒப்பற்றது! பத்து மாதம் குழந்தையை வயிற்றில் சுமந்து பெற்றெடுக்கிற தாய், தன் உயிரினும் மேலாக தன் குழந்தையை பராமரித்து வளர்க்கிறாள். அந்த குழந்தைக்கு ஏதோ ஒரு தீங்கு வரும் போது, அந்த தாய்க்கு அதை தாங்க முடிவதில்லை. அதினிமித்தமாக, சில சமயங்களிலே தன் மகனுக்கு திருமணமாகி ஒரு தாரம் வந்த பிறகும் கூட, சில தாய்மார், ''இன்னும் எனக்குத்தான் என் மகன் சொந்தம், நான் சமைத்த உணவைத்தான் என் மகன் சாப்பிட வேண்டும்'' என்றெல்லாம் சொந்தம் கொண்டாடுவதால், எத்தனையோ பிரச்சினைகளை குடும்பங்களிலே காண்கிறோம். இதற்கெல்லாம் காரணம், தாயின் அளவில்லாத அன்பு! இந்த அன்பிற்கும் மேலாக நம் ஒவ்வொருவரிலும் அன்பு காண்பிப்பவர் தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து (1 யோவான் 4:8,16)! சில சமயங்களிலே தாய்மார்கூட அன்புத் தாழ்ச்சியினால் கைவிடக் கூடும். இன்றைய நாட்களிலே செய்தித்தாளிலே, பெற்ற தாயே பணவிஷயங்களி னிமித்தம் தன் சொந்த மகனையே கொன்றுவிடுகிறதைக்கூட வாசிக்கிறோம். இந்நாட்களில் தாயன்புகூட குறைந்து வருகிறது. ஆனால், ஆண்டவருடைய அன்போ ஒருநாளும் மாறாதது. எப்பொழுதெல்லாம் கலங்குகிறோமோ, அப்பொழுதெல்லாம் ஓடோடி வந்து நம்மை அணைத்து ஆறுதல்படுத்துகிறவர் தான் நம் ஆண்டவர் (ஏசாயா 49:15).

ஒரு தாய் தன் குழந்தைக்கு அதிக சுகவீனம் ஏற்பட்டபொழுது துடித்துப்போனாள். அந்த குழந்தை உயிர் பிழைக்க வேண்டுமென்றால், ஒரு மருந்தை யாராவது ஒருவர் வாயில் மென்று அந்த மணத்தை அந்த குழந்தையின் நாசியில் ஊத வேண்டும். ஆனால், அந்த மருந்தை நாவிலே யார் மெல்லுகிறார்களோ அவர்களுடைய வாய் வெந்து போகும். அத்தனை கடுமையானது அந்த மருந்து என்று நாட்டு வைத்தியர் கூறினார். எல்லோரும் சற்று யோசித்தார்கள். ஆனால் தாயோ, ''எனக்கு என்ன நேர்ந்தாலும் பரவாயில்லை, என் குழந்தை பிழைத்தால் போதும்'' என்று செயலில் ஈடுபட்டாள். மருந்தை வாயில் போட்டு மென்ற மாத்திரத்திலே, வைத்தியர் சொன்னதுபோலவே நடந்தது. எனினும், கண்களில் நீர்மல்க தன் குழந்தையின் சுகத்தையே எண்ணிப் பார்த்து, தன்னை வெறுத்து அந்த மருந்தை மென்று மணத்தை குழந்தையின் நாசியில் ஊதினாள். குழந்தை பிழைத்துக்கொண்டது! ஆனால் தாயோ, வாய் வெந்துபோய், எத்தனையோ நாட்கள் மிகுந்த வேதனையை அனுபவித்தார்கள். ஆம், இதுதான் ஒரு தாயின் அன்பு!

எனக்கு அன்பானவர்களே! நீங்களும், மனமுடைந்த நிலைமையிலே, என்னைத் தேற்றுவார், எனக்கு உதவி செய்வார் ஒருவருமில்லையே? என்றெல்லாம் கலங்கிக் கொண்டிருக்கிறீர்களோ! அந்த தாய்க்கும் மேலாக தன்னையே சிலுவையில் அர்ப்பணித்த ஆண்டவரின் அன்பு, நீங்கள் கூப்பிடும் பொழுதெல்லாம் ஓடோடி வந்து, உங்களைக் காப்பாற்றும் (2 தெச. 2:16).



<u>ஜெபம்:</u> ''அன்புள்ள ஆண்டவரே. என் வேதனை விவரிக்க முடியாதது. எனினும், தாயினும் மேலான அன்புடைய உம்மையே இறுகப் பற்றிக்கொள்கிறேன். <u>இன்று</u> எனக்கு அற்புதவிதமாக விடுதலை தாரும். நீர் என் ஜெபத்தைக் கேட்கிறபடியால் உமக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்! இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!''

கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்!

"கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்; அவர்மேல் நம்பிக்கை யாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்" (சங்கீதம் 34:8).

இவ்வுலகில், நம் நம்பிக்கை, பற்றுதல், விசுவாசம் இவைகள் ஒவ்வொருவருடைய வாழ்விலும் ஒவ்வொரு விதமாய் இருக்கிறது. இந்த பற்றுதல் ஆண்டவர் மேல் உறுதியாய் இருக்கும்போது, அவர் நல்லவர் என்பதை ருசித்துப்பார்க்கவும், அவர் மேல் நம்பிக்கை வைப்பதால் பாக்கியமான நிலைமையை ஒவ்வொரு நாளும் பெறவும், அவர் கிருபை புரிவார் (எரே. 17:7). அன்பானவர்களே! இந்த அனுபவம் இல்லாததினால் தான் பாடுகள், துன்பங்கள் நம் வாழ்க்கையிலே கொஞ்சம் வந்தாலும், அதைத் தாங்க முடியாமல் தவிக்கிறோம், தடுமாறுகிறோம். இன்று நீங்களும் அப்படிப்பட்ட நிலைமையில் இருப்பீர்களானால், கர்த்தர் நல்லவர் என்பதை தாவீதைப்போல ருசித்துப் பார்த்து பாக்கியம் பெறுங்கள் (சங். 84:5).

ஒரு குடும்பத்தில் சகோதர, சகோதரிகள் யாவரும் ஆண்டவர் மீது அரைகுறையான பக்தி கொண்டவர்களாக இருந்தபோதிலும், வாழ்க்கையில் எல்லா ஆசீர்வாதங்களோடும் நிறைந்து வாழ்ந்தபடியினால், எப்பொழுதும் ஆண்டவரை அரைகுறையான வழியிலேயே தேடி, அதில் திருப்தியடைந்திருந்தார்கள். ஆனால், அவர்களுடைய ஒரு சகோதரி மட்டுமே கர்த்தரை முழு மனதுடன், முழு இருதயத்துடன் தேடினாள். ஆனால், அவளுடைய வாழ்க்கையோ எல்லாப் பக்கங்களிலும், பற்பல தேவைகளினாலும், குறைவுகளினாலும் சஞ்சலம் நிறைந்ததாய் இருந்தது. ஆகவே, அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து, "அதிகமான பக்தியின் நிமித்தம் தான் உனக்கு இந்த சீர்கேடு! எனவே, எங்களைப் போல பெயரளவில் ஆண்டவரைத் தேடினால்போதும்" என்று பரிகாசம் செய்தார்கள். அவளோ அந்தவிதமான துன்ப நிலைமையிலும் என்றைக்காவது ஒருநாள் என் ஆண்டவர் என் வறண்ட வாழ்வை செழிக்கச் செய்வார் என்று விசுவாசத்துடன் உறுதியாய் இருந்தாள். தன் கஷ்டங்களை அவர்களிடம் சொல்லவோ, வெளியில் காண்பிக்கவோ மாட்டாள். நாட்களும், வருடங்களும் கடந்தன! அவளுடைய கணவருக்கு தேவ தயவால் ஒரு அருமையான உயர் பதவி கிடைத்தது. அதினிமித்தம் அவள் எல்லோரைக்காட்டிலும் ஆண்டவர் அருளால் மேலான நிலைமையை அடைந்தாள். கார், பங்களா போன்ற செல்வங்கள் ஆண்டவரால் கொடுக்கப்பட்டன. அப்பொழுது தான் அவளுடைய சகோதர, சகோதரிகளின் கண்கள் திறந்தன.

அன்பானவர்களே! கர்த்தர் நம் ஒவ்வொருவரின் இருதயத்தையும் அறிந்திருக்கிறார். நாம் எவ்வளவாய் அவர் மீது பற்று, பாசம், உண்மையான அன்பு வைத்திருக்கிறோம் என்பதையும் அவர் அறிந்திருக்கிறார். மேற்கண்ட சகோதரி தன் சஞ்சலத்தை பெரிதுபடுத்தாது, அதன் மத்தியிலும் தேவன்மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தர் நல்லவர், என்னைக் கைவிடமாட்டார் என்று விசுவாசித்து நன்மை பெற்றதுபோல் நீங்களும் பெறுங்கள்.

ஜெபம்: **"அன்பு தெய்வமே! இந்த உலகம் பாதி, ஆண்டவர் பாதி என்று இருக்கிற என் நிலைமையை முற்றிலுமாய் மாற்றி உம்மிலேயே முழு நம்பிக்கை வைத்து நீர் ஆண்டவர் என்பதை ருசித்துப் பார்த்து, மற்றவர்களுக்கு முன் நற்சாட்சியுடன் விளங்க, இன்றுமுதல் எனக்கு கிருபை தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"**

கர்த்தர் பெருங்கன்மலையின் நிழலாக இருப்பார்!

"அவர் காற்றுக்கு ஒதுக்காகவும், பெருவெள்ளத்துக்குப் புகலிடமாகவும், வறண்ட நிலத்துக்கு நீர்க்கால்களாகவும், விடாய்த்த பூமிக்கு பெருங்கன்மலையின் நிழலாகவும் இருப்பார்"

(ஏசாயா 32:2).

"நிழல்" என்பது மனிதனுக்கு மிகவும் தேவையான ஒன்று. வெயிலில் களைத்துப் போகும் ஒருவருக்கு "நிழல்" என்பது "இளைப்பாறுதல்" தரும் ஒன்று! அதேபோன்று தான் வாழ்க்கையில் இன்னல்கள், துன்பங்கள் மத்தியில் கடந்து செல்லுகிற நமக்கு இளைப்பாறுதல் தருவதற்காக ஆண்டவர் தம்முடைய கண்களை நம்மீது வைத்திருக்கிறவராக இருக்கிறார் (2 நாளா. 16:9, சங். 11:4; 34:15, 1 பேதுரு 3:12). அவர் பெருங்கன்மலையின் நிழலாய் இருக்கிறபடியால் உங்கள் மனதின் கவலைகளையெல்லாம் மாற்றி, தமது தெய்வீக இளைப்பாறுதலைத் தந்து, உங்களை ஆசீர்வதித்து வழி நடத்துவார். மரியாளின் சகோதரியாகிய மார்த்தாள் தன் வீட்டுக் கவலையினால் பாரம் கொண்டவளாயிருந்தாள். ஆண்டவரோ அவளைப் பார்த்து, "மார்த்தாளே! நீ அநேக காரியங்களைக் குறித்து கவலைப்பட்டு கலங்குகிறாய். தேவையானது ஒன்றே, மரியாளைப் போல் உன்னை விட்டெடுபடாத நல்ல பங்கை மட்டும் தேடு" என்றார் (லூக்கா 10:40–42). அப்படித்தான் அவர் இன்று உங்களோடும் பேசுவார்.

ஒரு கல்லூரியில் தங்களுடைய படிப்பை படித்து முடித்த சில தோழிகள் யாவருக்கும் உடனடியாக வேலை கிடைத்தது. ஆனால், அவர்களுள் ஒரே ஒரு பெண் மட்டும் வேலை கிடைக்காதபடியால் மிகுந்த பாரமடைந்தாள். அவளுக்கு ஒரே கவலை. ஆனால், அடுத்த வினாடி, "நான் ஏன் கவலைகளை சுமக்க வேண்டும். அதற்கு தான் என் நேசர் இயேசு என்னோடேகூட இருக்கிறாரே!" என்று சொல்லி முழங்காற்படியிட்டாள். தன் உள்ளத்தின் கிலேசங்களையெல்லாம் அவர் பாதத்தில் ஜெபத்தின் மூலம் ஊற்றி, ஸ்தோத்திரத்தோடு தன் ஜெபத்தை முடித்தாள் (பிலி.4:6,7). அதுவரை பாரப்பட்டிருந்த அவள் உள்ளம் தெய்வீக சமாதானத்தால் நிரம்பியது. சில நாட்கள் கழித்து, அவள் எதிர்பார்த்ததற்கு மேலாக ஒரு நல்ல கம்பெனியில் அவளுடைய சிநேகிதிகளுக்கு மேலான அளவில் ஆண்டவர் ஒரு உயர்ந்த வேலையைக் கொடுத்தார். ஆம்! கண்ணீரோடு, பாரத்தோடு காத்திருந்த அவள் வாழ்க்கையில் ஆண்டவர் கன்மலையின் நிழலாக இருந்து அவளை ஆசீர்வதித்து காத்து வழிநடத்தினார். சில நேரங்களில் நெடு நாட்களாக ஆசீர்வாதங்களைப் பெற காத்திருக்க வேண்டியது நேரிடலாம். சோர்ந்து போகாமல், கர்த்தரை உறுதியாய் பிடித்துக்கொள்வீர்களானால், ஜீவ விருட்சம்போல், விரும்பினது நிழலாகிய கர்த்தரிடமிருந்து வரும் (நீதி.13:12).

அன்பானவர்களே, நீங்களும்கூட பற்பல பாரங்கள் நிறைந்தவர்களாக, வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறீர்களா? இன்றே நீங்களும் முழங்காற்படியிட்டு, ஆண்டவரிடம் உங்கள் பாரங்களை சமர்ப்பியுங்கள் (சங்.55:22).

ஜெபம்: "அன்பின் இரட்சகரே, கன்மலையின் நிழலாக என்னை காத்த நீர், இப்பொழுதும் கூட இந்த உபத்திரவத்தின் மத்தியிலும் எனக்கு இளைப்பாறுதலைத் தருவீர் என்று விசுவாசித்து உமக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த ஜெபத்தைக் கேட்கிறபடியால் உமக்கு ஸ்தோத்திரம்! இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

வலதுபுறமும் இடதுபுறமும் இடங்கொண்டு பெருகச்செய்வார்!

"நீ வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் இடங்கொண்டு பெருகுவாய்; உன் சந்ததியார் ஜாதிகளை சுதந்தரித்துக் கொண்டு, பாழாய்க்கிடந்த பட்டணங்களைக் குடியேற்றுவிப்பார்கள்"

(ஏசாயா 54:3).

இன்றைக்கு கூட, ஒரு சரியான வீடு இல்லையே, வாடகை கொடுத்துக் கொடுத்து என்னால் சமாளிக்க முடியவில்லையே! எனக்கென்று சொந்தமாக வீடு இருந்தால் எவ்வளவு நலமாய் இருக்கும்? இப்படி பல்வேறு கவலைகளினால் நீங்கள் கலங்கிக் கொண்டிருக்கலாம். யாபேஸ் என்ற மனிதன் தேவாதி தேவனை நோக்கி: "தேவனே நீர் என்னை ஆசீர்வதித்து என் எல்லையை பெரிதாக்கும்" என்று பிரார்த்தனை செய்தான். கர்த்தர் அவனுடைய விண்ணப்பத்தைக் கேட்டார் (1 நாளா.4:10). ஆம்! "இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்" (சங்.34:6) என்ற வசனம் எத்தனை உண்மையானது! ஆண்டவர் பட்சபாதமற்றவர். தம்மை நோக்கிக்கூப்பிடுகிற யாவருக்கும் அவர் நல்லவராகவே இருக்கிறார் (புலம்பல் 3:25).

ஒரு தம்பதியர் பல வாடகை வீடுகளிலே மிகவும் கஷ்டப்பட்டு, வேதனைப்பட்டபடியால், "ஐயோ, நமக்கென்று ஒரு வீடு சொந்தமாக கிடைத்தால் எவ்வளவு நலமாய் இருக்கும்" என்று மனதில் எண்ணினார்கள். அவர்கள் கையிலோ சேமிப்பு ஏதும் கிடையாது. ஆனால், அவர்கள் ஆண்டவர் மீது அளவில்லாத அன்பு கொண்டவர்கள். அவருக்காக தங்களால் இயன்றதை ஊழியமாக செய்யவும், தங்கள் சொற்ப வருவாயில் தசமபாகத்தை ஆண்டவருக்கு கொடுப்பதில் ஜாக்கிரதையாயிருக்கவும் கவனமாயிருந்து, ஆண்டவரை பின்பற்றி வந்தார்கள். "கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும்படிக்கு, இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களை சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன்" (எரே. 17:10) என்ற வசனத்தின்படி, அவர்கள் விருப்பத்தை ஆராய்ந்து அறிந்து, அதை நிறைவேற்றிக் கொடுக்க வழிகளைத் திறந்தார். அவர்கள் அவரிடம் கேட்டது ஒரு சிறிய வீடுதான்! ஆனால் ஆண்டவரோ ஒரு பெரிய வீட்டை ஆச்சரியமான முறையில் அருளிச் செய்தார்.

அன்பு நண்பர்களே, உங்கள் இருதயத்தின் வேண்டுதலையும் ஆண்டவர் அறிந்திருக்கிறார். மேற்கண்ட வாக்குத்தத்த வசனத்தின்படி, "வலதுபுறமும், இடதுபுறமும் உங்களையும் இடங்கொண்டு பெருகச் செய்ய" அவர் வல்லமையுள்ள தேவனாயிருக்கிறாரே! அவர் உங்களை அதிசயங்களைக் காணப்பண்ணுவார் (மீகா 7:15). அவரை உறுதியாய் நம்பி ஸ்தோத்திரிப்பதில் மாத்திரம் கவனமாய் இருங்கள். ஏற்ற சமயம் உங்களை பெருகச் செய்து அளவில்லாமல் ஆசீர்வதிப்பார்.

<u>ஜெபம்:</u> "அன்பு தெய்வமே, உண்மையான உம்முடைய அன்புக்கு நான் என்ன காணிக்கை செலுத்துவேன்? இத்தனை நாட்களும் என்னை நினைத்தருளி வழி நடத்தின உம் அன்புக்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன். யாபேசை ஆசீர்வதித்தது போன்று <u>இன்று</u> என்னையும் வலதுபுறமும் இடதுபுறமும் நீர் பெருகச் செய்வீர் என்று விசுவாசித்து உமக்கு நன்றி செலுத்துகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

ஜாதிகள் மேல் அரசாளுகிற தேவன்!

''தேவன் ஜாதிகள்மேல் அரசாளுகிறார்; தேவன் தமது பரிசுத்த சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறார்''
(சங்கீதம் 47:8).

நம் வாழ்க்கையிலே ஒவ்வொரு நாளின் காரியங்களையும், விசேஷமாக குடும்பத்தை நடத்துவதிலும் நாம் தான் எல்லாவற்றையுமே சாதிப்பதுபோன்று, எளிதில் சோர்ந்து போகிறோம். கவலைப்படுகிறோம். ஆனால், மேற்கண்ட வசனத்தின்படி, உங்கள் குடும்ப வாழ்க்கை அல்லது தனிப்பட்ட வாழ்க்கையை ஆண்டவர் கரத்தில் கொடுத்துப் பாருங்கள். ''ஆண்டவரே, நீர் என்னை அரசாளுகிற தேவன். உம்முடைய பரிசுத்த சிங்காசனத்திலே நீர் வீற்றிருந்தாலும், என்னோடுகூட, என் குடும்ப வாழ்வோடுகூட உலாவுகிற தேவன் நீர் என்று நான் விசுவாசிக்கிறேன். என்னுடைய காரியங்கள் எல்லாவற்றையும் உம்முடைய பாதத்திலே வைத்து விடுகிறேன். விசேஷமாக, இன்று எனக்கு முன்னதாக இருக்கிற பிரச்சினைகள் எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் உம்மிடத்திலே ஒப்புவிக்கிறேன். நீரே முன்னின்று என் காரியங்களிலெல்லாம் எனக்கு உதவி செய்யும். ''நான் உனக்கு முன்னே போய், கோணலானவைகளை செவ்வையாக்குவேன்'' (ஏசாயா 45:2) என்று வாக்குக் கொடுத்தபிரகாரம் என்னைக் கரம் பிடித்து வழி நடத்தும்'' இப்படியாக, அவரிடம் சமர்ப்பித்து விடுவீர்களானால், ஆண்டவர் எப்படி அழகாய் உங்களை அரசாளுவார், ஆசீர்வதிப்பார் என்பதை நீங்களே அனுபவித்து, அதை உண்மையென்று உணருவீர்கள் (சங்.72:8).

காருண்யா பொறியியல் கல்லூரியை ஆரம்பிக்கும் காரியத்தைப் பற்றி, ஒருநாள் வழக்கமான ஜெப நேரத்தில், தேவன் அவருடைய ஊழியரான சகோதரர் தினகரனோடு பேசினார். நான் ஒரு சாதாரண வங்கி ஊழியர். இப்படிப்பட்ட பெரிய பொறுப்பை என்னால் எப்படி செயலாக்க முடியும் என்று முதலில் மலைத்தார் சகோதரர்! எந்த காரியத்தையும் கர்த்தரிடம் சாட்டிவிடுவது அவருடைய வழக்கம். அவ்விதமாகவே பல நாட்கள் இதற்காக கருத்தாய் ஆண்டவரிடம் ஜெபித்தார். ஏராளமான பிரச்சினைகள்! பரிகாசங்கள்! நிந்தனைகள்! இதற்குமேல் ஒன்றும் செய்ய முடியாது என்ற பரிதாபமான நிலைமைகள் பற்பல நேரிட்டபொழுதும் அவரையே உறுதியாய் பற்றிப்பிடித்துக் கொண்டார்.

ஜாதிகள்மேல் அரசாளுகிற ஆண்டவர், இன்று பாருங்கள், ஒன்றுமில்லாத நிலைமையிலும், பணம் ஏதுமில்லாத நிலைமையிலும், அவரே அரசாளுகிற தேவன் என்பதை எவ்வளவு அழகாய் நிரூபித்திருக்கிறார். எத்தனை மாணவர்கள்! எத்தனை கட்டிடங்கள்! ஆண்டவர் அரசாளுகிற தேவனாக, அவரை நம்புகிறவர்களுக்கு நல்லவராக இருப்பார் என்பதற்கு இது எவ்வளவு பெரிய ஒரு உதாரணம் பாருங்கள்!

இதேபோன்று தான் உங்கள் வாழ்விலும், அவர் அரசாளுகிற தேவனாக இருந்து அதிசயங்களையும் அற்புதங்களையும் நிகழ்த்தி, உங்களை மகிழச் செய்வார். ஆகவே, உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள் (1 பேதுரு 5:7).

ஜெபம்: ''அன்பு தகப்பனே! என் வாழ்க்கை மலைபோன்ற பிரச்சினைகள் நிறைந்ததாய் இருக்கிறது. ஆனால், இந்த வசனத்தின்படி, வாக்குத்தத்தத்தின்படி உம்மையே முழுமனதுடன் நம்புகிறேன். நீரே அரசாளுகிற தேவனாக இன்றுமுதல் என்னோடிருந்து, தனி வாழ்விலும், குடும்ப வாழ்விலும் அதிசயங்களை நிகழப்பண்ணுவீர் என்று நம்பி உமக்கு நன்றி செலுத்துகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!''

சத்துருவுக்கு விரோதமாக கொடியேற்றும் ஆண்டவர்!

"...வெள்ளம்போல் சத்துரு வரும்போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய் கொடியேற்றுவார்" (ஏசாயா 59:19).

உலகத்தில் பிசாசு நம்மை எப்படி வீழ்த்தலாம் என்று வகை தேடி சுற்றித் திரிகிறான் (1 பேதுரு 5:8). கொஞ்சம் பக்தியாய் வாழ்கிற தேவனுடைய அடியார்களை பயங்கர சோதனைக்குள்ளாக்கி கண்ணீரின் வழியிலும், சஞ்சலத்தின் பாதையிலும் நடக்க வைக்கிறான். இதில் எத்தனையோபேர் தடுமாறுகிறார்கள். அதுமட்டுமின்றி சில பிசாசின் மக்களும் நன்றாய் வாழுகிற குடும்பங்களை, அலுவலகத்தில் நல்ல பேர் எடுக்கும் மக்களை அழித்துவிட, பொறாமை என்னும் ஆயுதத்தை எய்கிறார்கள். மந்திரம், சூனியம் என்ற பலவித தீய வழிகளை மேற்கொள்கிறார்கள். எனினும், மேற்கண்ட வாக்குத்தத்தத்தின்படி, சத்துருவை ஜெயித்த ஆண்டவர், உங்களையும் இந்த விதமான எல்லா இக்கட்டுகளினின்றும் விடுவிக்க வல்லவராக இருக்கிறார் (கொலோ.2:15)! அவர் உங்களோடு இருப்பாரானால் ஒன்றும் உங்களை சேதப்படுத்த முடியாது (லூக்கா 10:19) உங்களுக்கு விரோதமான எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம் (ஏசாயா 54:17). ஆகவே, ஜெயம் கொடுக்கிற ஆண்டவரையே நோக்கிப் பார்த்து அவருடைய பிரசன்னத்தால் நிறைந்தவர்களாய் ஜாக்கிரதையாயிருங்கள்.

"இயேசு அழைக்கிறார்" ஊழியத்தில் எத்தனை எத்தனையோ இடையூறுகள்! இந்த ஊழியம் வளரக் கூடாது என்று பொறாமையினால் நிறைந்து முயற்சி செய்தனர் சில தீயவர்கள்! பொய்யான வதந்திகளை தங்கள் வார்த்தைகள் மூலமாகவும், பத்திரிகைகள் மூலமாகவும் பரவச் செய்து இந்த ஊழியத்தை முன்னேற விடாமல் நயவஞ்சகமாக பல தீமைகளை செய்தனர் வேறுசிலர்! ஆனால், இவைகளின் மத்தியில் எங்களுடைய கண்கள் இவையெல்லாவற்றினின்றும் எங்களைக் காக்க வல்ல ஆண்டவர் மீதே இருந்த படியினால், அத்தகைய விரோதமான செயல்கள் ஒன்றும் எங்களை பாதிக்காதபடி, ஊழியத்தை சீர்குலைக்காதபடி தேவாதி தேவன் சத்துருக்களின் சகலவிதமான செயல் களுக்கும் விரோதமாக எழும்பிக் கொடியேற்றி ஆச்சரியமாய் வழிநடத்தியிருக்கிறார். ஆகவே, நாங்கள் கர்த்தருக்குள் சந்தோஷமாய் ஊழியத்தை இம்மட்டும் தொடர்ந்து செய்து வருகிறோம்.

எனக்கு அன்பானவர்களே, உங்கள் வாழ்விலும்கூட அப்படியே எத்தகைய பொல்லாப்பு வந்தாலும், கர்த்தர் கூடவே இருந்து உங்களையும் விடுவித்துக் காப்பார். ஆகவே, கவலைப்படாமல் கர்த்தருடைய செட்டைக்குள் உங்களை மறைத்துக் கொள்ளுங்கள் (லூக்.13:34). அவர் உங்களுக்கு விரோதமாக ஒரு வழியில் வருகிறவர்களை ஏழு வழியாக சிதறப்பண்ணுவார் (உபா. 28:7).

ஜெபம்: "அன்பான ஆண்டவரே! பொல்லாத சத்துருக்கள், பொல்லாத பிசாசு கொண்டு வரும் சகல தீங்குகளினின்றும் இன்று என்னைக் காப்பாற்றும், என் குடும்பத்தைக் காப்பாற்றும். நீர் என்னோடுகூட இருந்து என்னை பெலப்படுத்தும். ஒன்றுக்கும் கவலைப்படாமல் உம்மையே பற்றிக்கொள்ள அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

தம்மை அறிந்தவர்களை திடப்படுத்தும் தேவன்!

"...தங்கள் தேவனை அறிந்திருக்கிற ஜனங்கள் திடன்கொண்டு, அதற்கேற்றபடி செய்வார்கள்"

(தானியேல் 11:32).

நம் வாழ்க்கையிலே போராட்டங்களும், துன்பங்களும் சில நேரங்களில் அதற்கு நேர்மாறான காரியங்களும் மாறி மாறி வருவது இயற்கை தான். எனினும், மனிதன் இன்பமும், மகிழ்ச்சியும் நிறைந்த நாட்களிலே சந்தோஷமாய் இருக்கிறான். ஆனால் துன்பமும், உபத்திரவமும் வந்தவுடனே கலங்கிவிடுகிறான். இதுதான் நம் வாழ்க்கையிலே நாம் ஒவ்வொருவரும் அனுபவிக்கிற அனுபவம். ஆனால் தேவனை அறிகிற அறிவு நமக்குள் வரும்போதோ நன்மையிலும் சரி, தீமையிலும் சரி, வாழ்விலும், தாழ்விலும், இன்பத்திலும், துன்பத்திலும் அவரையே நோக்கிப் பார்க்க நாம் கற்றுக்கொள்கிறோம் (எரே.33:3). அப்படி நோக்கிப் பார்க்கிற அவருடைய அடியார்களுக்கு அவர் தமது தெய்வீக பெலனை, திடமனதை கொடுக்கிறார் (தானி.11:32). வேத வசனங்கள் மூலம், தேவ ஊழியர்கள் மூலம் மற்றும் பல்வேறு வகைகளிலே நம்மை உற்சாகப்படுத்துகிறார். நம்முடைய விசுவாசத்தை கனப்படுத்துகிறார்.

வேடிக்கையான ஒரு சம்பவத்தைக் கூறுகிறேன் பாருங்கள். பல வருடங்களுக்கு முன்பு ஒரு சமயம் என்னுடைய வீட்டுக்கு சிலர் விருந்துக்கு வருவதாக கூறியிருந்தனர். ஆனால், ஐந்து பேர் தான் வருவார்கள் என்று எதிர்பார்த்த எங்களுக்கு திடீரென்று இருபத்தைந்து பேராக வந்தபொழுது ஒரு பெரிய அதிர்ச்சி தான் ஏற்பட்டது. என் கணவர் அதைப் பற்றியெல்லாம் ஒன்றும் கவலைப்படமாட்டார். அது எவ்வளவு பெரிய கஷ்டமான காரியம் என்றும் அவர் அறிந்துகொள்ளவுமாட்டார். என்னுடைய சகோதரி அந்த சமயம் என்னோடு இருந்தார்கள். இந்த நிலைமையை நீ எப்படி சமாளிக்கப் போகிறாய்? என்று அவர்களும் பயந்தார்கள். அப்பொழுதெல்லாம் ஹோட்டலில் இருந்து சாப்பாடு வருவிக்கவோ வழியும் கிடையாது, கையில் பணமும் கிடையாது. இந்த நிலைமையில் என் சகோதரியிடம் "ஆண்டவர் நிச்சயம் வழிநடத்துவார்" என்று கூறிவிட்டு, ஆண்டவரிடம் இந்த பிரச்சினையை ஸ்தோத்திரத்துடன் சமர்ப்பித்தேன். ஆண்டவர் தன்னுடைய வல்லமையினால் அத்தனை பேரும் திருப்தியாக புசிக்கவும், மீதமும் இருக்கும்படி அருள்புரிந்தார். நானும் என் சகோதரியும்கூட சாப்பிடுவதற்கு மீதம் ஆகாரம் இருந்தது. இது ஒரு சாதாரண காரியம் தான். ஆனால் கர்த்தரை நம்பினவர்களை அவர் இப்படிப்பட்ட சிறு காரியங்களிலேயும்கூட திடப்படுத்தி வழிநடத்துகிறார். எல்லோரும் போன பிறகு என் கணவரிடம் இந்த அற்புதத்தை பகிர்ந்துகொண்டேன். அவரும் என்னோடு சேர்ந்து ஆண்டவரை ஸ்தோத்திரித்தார்.

எனக்கு அன்பானவர்களே, உங்களுக்கும் வாழ்க்கையில் பல குறைவுகள் ஏற்படலாம். இன்று நீங்களும் ஆண்டவரை நோக்கிப் பாருங்கள். உங்கள் தேவைகள், கண்ணீர், துன்பம், உபத்திரவம், சஞ்சலம் இவைகள் எல்லாவற்றையும் அவரிடம் சொல்லிவிடுங்கள். உங்களை அற்புதமாக வழிநடத்தி திடப்படுத்தி ஆசீர்வதிப்பார் (ஏசாயா 14:32).

ஜெபம்: "என் அன்பு தெய்வமே, உம்மை நம்பினவர்களை, உம்முடைய வல்லமையை அறிந்தவர்களை, நீர் எவ்வளவாய் திடப்படுத்தி வழிநடத்துகிறீர் என்பதை அறிந்து கொண்டேன். என்னையும் நீர் பலப்படுத்தும். தைரியப்படுத்தும். இன்றுமுதல் என் வாழ்வையும் செழிக்க செய்து நானும் ஒரு சாட்சியாக உம்மை மகிமைப்படுத்த அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"

கர்த்தரின் நாமம் பலத்த துருகம்!

"கர்த்தரின் நாமம் பலத்த துருகம்; நீதிமான் அதற்குள் ஓடி சுகமாயிருப்பான்"
(நீதிமொழிகள் 18:10).

ஆண்டவரை நோக்கி ஒரு மனிதன் ஒரு கேள்வியைக் கேட்டான். "நீர் யார்? உம்முடைய நாமம் என்ன?". அதற்கு அவர் "அது அதிசயம்" (நியா.13:18) என்று பதிலுரைத்தார். காரணம் குழந்தையற்ற அவனுடைய மனைவிக்கு குழந்தையை அருளிச் செய்ய, அவர்களைத் தேடி வந்தார். அந்த அதிசயத்தை அவர்கள் வாழ்விலே நிகழ்த்தியும் காண்பித்தார். அவர்களுக்கு பிறந்த குழந்தையும் அதிசயமானதாகவே இருந்தது. ஒரு அசாதாரணமான தெய்வீக வல்லமையை சரீரத்திலே, ஆன்மாவிலே பெற்ற குழந்தையாக இருந்தது. அந்த குழந்தை தான் சிம்சோன் என்ற மனிதன். ஆம், பிரியமானவர்களே, நம்முடைய ஆண்டவர் **அதிசயமானவர்** (ஏசாயா 9:6). இப்படிப்பட்ட ஆண்டவருடைய நாமம் எவ்வளவு வல்லமையுள்ளது பாருங்கள்!

ஒரு சிறுவன் அதிகம் பக்தியில்லாதவனாக வாழ்ந்து வந்தான். ஆனால் தாயோ அடிக்கடி ஆண்டவர் இயேசுவின் அன்பைப் பற்றி அவனுக்கு எடுத்துக் கூறி வந்தார்கள். "மகனே, நீ எந்த சமயத்திலும் ஆபத்தில் இருக்கும்போது உடனடியாக இயேசுவின் நாமத்தை நோக்கிக் கூப்பிடு; அவர் உன்னை உடனடியாக வந்து காப்பார்" என்று சொல்லிக் கொடுத்திருந்தார்கள். ஒரு நாள் அந்த சிறுவனை தன் ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு உறவினர் வீட்டுக்கு ஒரு விஷயமாக அனுப்பினார்கள். இடையில் ஒரு காடு போன்ற சிறு பகுதி இருந்தது. சிறுவனோ ஒன்றுக்கும் கவலைப்படாமல் விசில் அடித்துக் கொண்டு மகிழ்ச்சியாக குதித்து ஓடினான். திடீரென்று பின்னால் இருந்து "புஸ், புஸ்" என்று சத்தம் வந்தது. திரும்பிப் பார்த்தான். பயங்கரமான நாகப்பாம்பு ஒன்று அவனை நோக்கி தொடர்ந்து வந்தது. அவன் திரும்பிப் பார்த்தவுடனே, தலையைத் தூக்கி அவனைக் கொத்துவதற்கு ஆயத்தமாக இருந்தது. அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அப்பொழுது தான் அவனுடைய உள்ளத்திலே, ஆபத்து நேரத்தில் "இயேசுவே" என்று அவர் நாமத்தை சொல்லிக் கூப்பிடு என்று தாய் கற்றுக்கொடுத்தது நினைவுக்கு வந்தது. சத்தமாக, "இயேசுவே" என்று இரண்டு முறை கூவினான். அவ்வளவு தான்! அந்த வார்த்தையைக் கேட்ட பாம்பு, என்ன நினைத்ததோ எதிர்திசையில் வேகமாய் ஓடி மறைந்தது. அவனும் தொடர்ந்து போக வேண்டிய இடம் போய் பத்திரமாய் சேர்ந்தான். அவன் இருதயத்திலே தன்னை பயங்கரமான ஆபத்திலிருந்து காப்பாற்றிய இயேசு சுவாமியின் இனிய நாமத்தை பற்றிக் கொண்டு அவருடைய அடியானாக அதன்பின்பு வாழ்ந்தான்.

எனக்கு அன்பானவர்களே, உங்கள் வாழ்க்கையிலும்கூட இயேசுவின் நாமம் அதிசயமான நாமமாக, உங்களைக் காப்பாற்றும் வல்லமை நிறைந்த நாமமாக, என்றென்றும் இருக்கும் என்பதை மறந்து போகாதிருங்கள் (நீதி. 18:10; பிலி. 2:10,11). எனவே, இந்த நாமத்தின் வல்லமையை சிறியோரும் பெரியோருமாக நீங்கள் உணர்ந்து தாவீதைப்போல் அதன்மேல் உங்கள் முழு நம்பிக்கையையும் வைத்து வாழ்வில் வெற்றி பெறுங்கள்.

ஜெபம்: **"அன்புள்ள ஆண்டவரே. இன்றுமுதல் உம்முடைய நாமம் எனக்கும் அதிசயமானதாகவும், பலத்த துருகமாயும் இருக்கும்படி அருள்தாரும். உமக்கு கோடான கோடி ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"**

உங்களை புதிதும் கூர்மையுமான யந்தரமாக்குவார்!

"இதோ, போரடிக்கிறதற்கு நான் உன்னை புதிதும் கூர்மையுமான பற்களுள்ள யந்தரமாக்குகிறேன்; நீ மலைகளை மிதித்து நொறுக்கி, குன்றுகளை பதருக்கு ஒப்பாக்கிவிடுவாய்"

(ஏசாயா 41:15).

நம்முடைய வாழ்க்கையிலே எத்தனையோ குறைவுகள் நிறைந்து வாழ்கிறோம். வீடு என்று இருக்கும்போது, ஐயோ, சரியான மேஜை இல்லையே, நாற்காலிகள் இல்லையே, படுக்க மெத்தை இல்லையே என்றெல்லாம் குறைப்பட்டுக்கொள்கிறோம் அல்லவா? இது போன்று பல்வேறு தேவைகள் வரும்போது, நிறைவான விதத்தில் நான் ஆசீர்வதிக்கப்படுவேனா என்றெல்லாம் சிந்தித்து வேதனைப்படுகிறோம். ஆனால் மேற்கண்ட வாக்குத்தத்த வசனத்தை சற்று கவனமாய் வாசித்துப் பாருங்கள். ஆண்டவர் "நம்மை புதிதும் கூர்மையுமான யந்தரமாக்குவார்" என்று வாசிக்கிறோம். இப்படி நம்முடைய வாழ்வை பிரகாசமான வாழ்வாக மாற்ற அவர் வல்லவராக இருக்கும்போது, நம்முடைய அநுதின வாழ்வில் சாதாரண தேவைகளையெல்லாம் அளவில்லாமல் அருளிச் செய்ய அவரால் கூடும் அல்லவா? (பிலி.4:19). படிக்க ஞானமில்லையே, குடும்பத்தை நடத்துவதற்கு தேவையான அறிவு இல்லையே என்று பல்வேறு இல்லாமைகளையும் நினைத்து குழம்பிப் போவதற்கு பதிலாக, என்னுடைய ஆண்டவர் சொன்னதை நிறைவேற்ற வல்லவர்! அக்கிரமங்கள், அநியாயங்கள் எல்லாவற்றையும் என் வாழ்விலிருந்து முற்றிலுமாய் ஒழித்து, அவர் விரும்பும் புதுவாழ்வை எனக்கு தருவார் (எபே.2:1) என்று விசுவாசித்து ஜெயம் பெறுவோம்.

ஒரு வாலிபன் எவ்வளவோ கஷ்டப்பட்டு படிப்பான். ஆனால், படித்து முடித்த பிறகு என்ன படித்தான் என்பதை முற்றிலும் மறந்து விடுவான். எவ்வளவோ முயற்சி செய்கிறேனே, நேரத்தை வீணாக்காமல் படித்தாலும் மனதிலே தங்குவதில்லையே, இதற்கு என்ன செய்வது என்று கலங்கினான். ஒரு நாள் வேதத்தை எடுத்து வாசித்தபோது, இந்த வாக்குத்தத்தம் அவன் கண்களுக்கு புலப்பட்டது. உடனடியாக இந்த வாக்குத் தத்தத்தின் மேல் தன் கரங்களை வைத்தான். "ஆண்டவரே, என் அறிவை புதிதும் கூர்மையுமான யந்தரம் போல பலமுள்ளதாக மாற்றும். என்னுடைய குறைந்த வாழ்வின் நிலையை உம்மாலே தான் உயர்த்த முடியும். அதையும் புதிதும் கூர்மையுமான யந்தரமாக மாற்றும்" என்று கருத்தாய் வேண்டுதல் செய்தான். அதை நம்பி விசுவாசித்து அவருக்கு நன்றி செலுத்தினான். நடந்தது என்ன தெரியுமா? அதன் பிறகு படிக்க ஆரம்பித்தபோது, அப்படியே அவன் படித்ததெல்லாம் அவன் மனதிலே பதிந்தது, நிலைத்து நின்றது. வெகு விரைவில் வகுப்பிலே முதல் மாணவனாக அவன் மாறும்படி ஆண்டவர் வழி திறந்தார்.

அன்பானவர்களே, உங்களையும் இதே வாக்குத்தத்தம், குறைவுகள் யாவற்றையும் அகற்றி நிறைவானவர்களாக மாற்றும். தேவனுடைய பிரசன்னம், அவரது வல்லமை அப்படி செய்யும் (1 கொரி.13:10). இதை நம்புங்கள், விசுவாசியுங்கள். கர்த்தர் உங்களை அற்புதமானவர்களாய் புதிதும் கூர்மையுமான யந்தரமாக சகல விதத்திலும் மாற்றுவார்.

<u>ஜெபம்:</u> "அன்பு தகப்பனே, ஒன்றுமில்லாத என் வாழ்வையும்கூட <u>இன்று</u> இந்த வசனத்தின்படி புதிதும் கூர்மையுமான யந்தரமாக மாற்றும். உம்முடைய தெய்வீக வல்லமையினாலே என்னை ஆசீர்வாதமாக வழிநடத்தும்படி அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாற்றுவார்!

"என் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாறப்பண்ணினீர்; என் மகிமை அமர்ந்திராமல் உம்மைக் கீர்த்தனம் பண்ணும்படியாக நீர் என் இரட்டைக் களைந்துபோட்டு, மகிழ்ச்சியென்னும் கட்டினால் என்னை இடைகட்டினீர்" (சங்கீதம் 30:11).

இந்த உலகத்தில் சந்தோஷமாக இருக்கிறோம். எல்லாம் நிறைவாக இருக்கிறது என்று திருப்தியாக வாழ்கிறோம். திடீரென்று எங்கிருந்தோ வருகிறது பயங்கரமான புயல். சுனாமி அலைகள் வந்து இப்படிப்பட்ட பயங்கரமான வாழ்வை பலர் அனுபவிக்கும்படி செய்ததை நாம் கண்கூடாகக் கண்டோம், கேள்விப்பட்டோம். ஆம்! இது தான் உலக வாழ்வு. ஆனால் இப்படிப்பட்ட புலம்பல், திகைப்பு, ஆபத்து இவைகள் மத்தியில் ஆண்டவர் அந்த பிரச்சினைகளையெல்லாம் மாற்றி நமக்கு ஆனந்தத்தையும், களிப்பையும் உண்டாக்க வல்லவராயிருக்கிறார் (ஏசாயா 35:10). அவருடைய பிள்ளைகளாகிய நாம் வாழ்ந்திருக்க வேண்டும் என்பதே ஆண்டவருடைய விருப்பம் (3 யோவான் 2).

1969 ஆம் ஆண்டு எங்களுடைய திருமண வாழ்வில் பத்து ஆண்டுகள் முடிந்திருந்தன. இன்பமான இல்லற வாழ்வையும் இனிமையான இரண்டு குழந்தை களையும் ஆண்டவர் எங்களுக்கு கொடுத்து எங்கள் வாழ்வை வளமாக்கியிருந்தார். எங்கிருந்தோ வந்தது ஒரு புயல்! நற்சுகத்துடனிருந்த என் கணவர் திடீரென்று மரணத் தருவாயிலானார். உங்கள் கணவர் இன்னும் கொஞ்ச நாட்களே உயிரோடு இருப்பார் என்று மருத்துவர் சொன்னதைக் கேட்டபொழுது, என் மனம் சுக்குநூறாக உடைந்தது. என் அறைக்கு ஓடினேன். முழங்காற்படியிட்டேன். ஆண்டவரை நோக்கி அழுது புலம்பினேன். "என் தெய்வமே! உமக்காக தானே ஊழியத்தை சந்தோஷமாக செய்து வந்தோம். இப்படி என் குடும்பம் உடைந்து போக நீர் அனுமதிப்பீரோ?" என்று அழுதேன். உடனடியாக பரிசுத்த ஆவியானவர் என்னை நிரப்பினார். இதற்காகத் தான் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் தேவை என்பதை நான் என்னுடைய செய்தியிலெல்லாம் ஆணித்தரமாக கூறி வருகிறேன். பரிசுத்த ஆவியானவர் என்னோடு பேசினார். "மகளே, உன் கணவர் உயிரோடு எழுந்திருப்பார். இதுவரை செய்த ஊழியம் மிகவும் குறைவு. இனி மிகவும் அதிகமான முறையிலே அவனை நான் உபயோகிப்பேன்" என்றார். அவ்வளவு தான்! அதைக்கேட்ட என் உள்ளம் புது நம்பிக்கை, புது விசுவாசம் கொண்டு துள்ளியது. ஏறக்குறைய நான்கு மாதங்கள் கடந்தன. முழங்காற்படியிடக்கூட முடியாமல் இருந்த என் கணவர் முழங்காற்படியிட்டு கர்த்தரை ஸ்தோத்திரிப்பதை கண்டபோது, என் உள்ளம் துள்ளிக் குதித்தது. கர்த்தரை நான் துதிக்க ஆரம்பித்தேன். பரிசுத்த ஆவியானவர் தம்முடைய வார்த்தையின்படியே முன்னைக் காட்டிலும் அதிகமாக உபயோகிக்க ஆரம்பித்தார்.

ஆம்! உங்கள் புலம்பலையும் இதே ஆவியானவர் தம்முடைய வல்லமையால் தலைகீழாய் மாற்றுவார். ஆனந்தக் களிப்பு உங்கள் வாழ்க்கையை, உள்ளத்தை நிரப்பும்படி அருள்புரிவார் (சங்.92:4).

<u>ஜெபம்:</u> "அன்பு தெய்வமே, நீர் மகத்துவமானவர்! என் புலம்பலை, துக்கத்தை மாற்ற ஒருவராலும் கூடாது. ஆனால் உம்மால் ஆகாதது ஒன்றுமில்லை என்று நான் விசுவாசிக்கிறேன். என் வாழ்விலும் உம்முடைய மகிமையைக் காணும்படி <u>இன்று</u> எனக்கு அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

நீதிமான்களுடைய வீடு நிலைநிற்கும்!

(நீதிமொழிகள் 12:7).

இன்று உலக வாழ்க்கையில் நாம் பார்க்கும் ஒரு பரிதாபமான காரியம், பல குடும்பங்களில் பிரிந்திருக்கிற ஒரு நிலைமை! சிறிய காரியத்திற்கும், அதைத் தாங்க முடியாதபடி "நான், எனது" என்று ஆணவமான எண்ணங்களினால் ஆண்களும் சரி, பெண்களும் சரி பிரிவினையில் போய் நின்றுவிடுகிறார்கள். இது ஆண்டவருக்கு பிரியமானதா? நான் இப்படி செய்யலாமா? கொஞ்சம் பொறுமையாய் இருக்க முடியுமா? என்றெல்லாம் சிந்திப்பதே கிடையாது. ஆனால், இந்த வேத வசனம் என்ன சொல்லுகிறது பாருங்கள், "நீதிமான்களுடைய வீடோ நிலைநிற்கும்." ஆனால், பயபக்தியோடு நீதியின் வாழ்வை தெரிந்துகொள்ள விரும்புகிறவர்கள், கர்த்தரை தங்கள் மேய்ப்பராகக் கொண்டு, அவரை நோக்கிப் பார்ப்பதில் கவனமாய் இருப்பார்கள் (சங்.23:3). குடும்ப ஜெபம், தனி ஜெபம், ஸ்தோத்திர ஜெபம் இவைகளெல்லாம் அப்படிப்பட்ட நீதிமானுடைய வீட்டில் நிலைத்து நிற்கும்.

ஒரு கணவன் மிகவும் பொல்லாதவனாக மனைவிக்கு துரோகம் செய்பவனாக, அசுத்தமான வாழ்க்கையில் ஈடுபட்டு, மனைவியை கொஞ்சமும் மதிக்காமல் வாழ்ந்து வந்தான். மனைவியோ தன் கணவருக்காக தினமும் ஆண்டவரை நோக்கி மன்றாடி வந்தாள். நீதியின் பாதையில் தானும் தன் பிள்ளைகளும் நடப்பதில் ஜாக்கிரதையாய் இருந்தாள். வருடங்கள் பல உருண்டோடின. உறவினர்களும், சுற்றும்முற்றும் இருப்பவர்களும், "நீ ஏன் இவனோடு வாழ்கிறாய்? இவனை விட்டுவிட்டு வேறு எங்கேயாவது போய்விடு" என்றெல்லாம் ஆலோசனை கொடுத்தபோதிலும், கர்த்தருக்கு பயந்து அந்த பொல்லாத மனிதனை உதறித் தள்ளிவிட்டு போய்விடாமல், அவனோடே வாழ்ந்து வந்தாள். ஜெபத்தைக் கேட்கிற ஆண்டவர் அவள் மீது இரங்கினார். இந்த மனிதனுக்கு திடீரென்று சருமத்திலே ஒரு பயங்கரமான வியாதி ஏற்பட்டது. அவனுடைய நண்பர்கள் யாவரும் அவனை கைவிட்டனர். வேலைக்கும் போக முடியாத ஒரு பரிதாபமான நிலைமையில் வீட்டிலே அடைபட்டுக் கிடந்தான். அந்நேரம் மனைவியினுடைய கரிசனை, அன்பு, ஜெப வாழ்க்கை இவைகளையெல்லாம் கூர்ந்து கவனித்து வந்தான். ஐயோ, எல்லோராலும் கைவிடப்பட்ட போதிலும், இவள் என்மீது எவ்வளவு அன்பு காண்பிக்கிறாள், இவளுக்கு துரோகம் செய்து நான் இத்தனை நாள் வாழ்ந்தேனே? என்று அழுதான். அவளிடத்தில் மன்னிப்பு கேட்டான். அவளோ ஆண்டவரின் அன்பை அவனுக்கு எடுத்துரைத்து, ஆண்டவருடைய அடியானாக மாறும்படி உதவி செய்தாள். பிரிவினைக்கு நேராகப் போக வேண்டிய அந்த வீடு, இப்போது நீதியின் வழியிலே அந்த மனைவியின் மூலமாய் நிலைத்து நின்றது.

அன்பு மனைவிமாரே, கணவன்மாரே, நீங்களும் இந்த வழியையே பின்பற்றுங்கள். பிரிந்து போவது ஆண்டவருக்கு பிரியமில்லாத காரியம் (1 கொரி.7:5). கல்லாக உள்ள மனது சதையாக மாறும்படி கர்த்தருடைய சமுகத்திலே ஜெபம் பண்ணுங்கள். உங்கள் வாழ்வும் இன்பமாக இருக்க ஆண்டவர் உதவி புரிவார்.

ஜெபம்: "அன்பு தெய்வமே, என் வாழ்விலே எத்தனை இடறல்கள் வந்தாலும் உம்முடைய வேதவாக்கின்படி, என் வீடு உமக்குள் சமாதானத்தோடு என்றென்றும் நிலைத்திருக்கவும், நீரே எனக்கு பெலன் தாரும், கிருபை தாரும். இன்றுமுதல் நீதியின் வழியிலே நடக்க என்னை அனுதினமும் கரம் பிடித்து நடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கொம்பை மகிமையாய் உயர்த்தும் ஆண்டவர்!

"வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென் றைக்கும் நிற்கும்; அவன் கொம்பு மகிமையாய் உயர்த்தப்படும்" (சங்கீதம் 112:9).

ஆண்டவருடைய சித்தம் அவருடைய பிள்ளைகளாகிய நாம் ஒவ்வொருவரும் வாழ்ந்திருக்க வேண்டும் என்பது தான். விசேஷமாக, அவரை கனப்படுத்துகிற ஒவ்வொருவர் மீதும் அவர் மிகுந்த கரிசனையுள்ளவராய், அவர்களை கனப்படுத்துவதில் கவனமாய் இருக்கிறார் (1 சாமு.2:30). வேதத்திலே யோசேப்பு என்ற வாலிபனைக் குறித்து வாசிக்கிறோம். அவன் கர்த்தர் மீது அதிகமாய் அன்பு கொண்டு, அவரோடு நெருங்கி வாழ்ந்தபடியால், தேவன் அவனுக்கு சொப்பனங்கள் மூலமாய் பின்னால் வருவதை முன்னதாகவே காண்பித்தார். ஆனால், அதினிமித்தம் அவன் பட்ட பாடுகள், சோதனைகள் எத்தனையெத்தனை பாருங்கள். எனினும், அவன் தெரிந்து கொண்ட ஆண்டவர் அவனோடு கூடவே இருந்தார் (ஆதி.39:2,21,23). பதின்மூன்று வருடங்கள் இந்த பாடுகளின் வழியாக கடந்து செல்ல நேர்ந்த போதிலும் கர்த்தர் பேசாமல் இருந்தார். நாம் சில வேளைகளில் ஏன் இந்த பாடுகள், ஆண்டவருக்கு தெரியாதா? என்றெல்லாம் கேட்கிறோம். ஆனால், இந்த வாலிபனோ கர்த்தருக்குள் பொறுமையாய் இருந்தான். முடிவில் எத்தனை ஆச்சரியமாய் அவன் உயர்த்தப்பட்டான், கனப்படுத்தப்பட்டான் என்பதை நாம் வாசிக்கிறோம் அல்லவா? (ஆதி.39:2–5).

வாலிபன் ஒருவன் ஆண்டவருக்கு தன்னை ஒப்புக்கொடுத்தான். வேலையில்லாமல் இருந்த அவனுக்கு அற்புதமாய் ஆண்டவர் சொற்ப வருவாயில் ஒரு வேலையைக் கொடுத்து ஆசீர்வதித்தார். அவன் தகப்பன் கற்றுக்கொடுத்த வழக்கின்படி, அதில் தசம பாகத்தை மெய்யாய் உழைத்த ஆண்டவருடைய ஊழியருக்கு தவறாமல் கொடுத்தான். அந்த ஊழியர் அவனுக்காக கருத்தாய் பிரார்த்தனை செய்தார். தன் சம்பளம் அதிகமாக அதிகமாக உண்மையுள்ளவனாய் கர்த்தருடைய ஊழியத்திற்கு தசம பாகத்தைக் கொடுப்பதை அவன் கருத்தாக செய்து வந்தான். அதுமட்டுமின்றி, ஏழைகளுக்கு இரங்குவதிலும் தாராள மனதுடையவனாக இருந்தான். உற்சாகமாய் கொடுத்த அவன் மீது கர்த்தர் பிரியமாய் இருந்தார் (2 கொரி. 9:7). எத்தனை எதிர்ப்புகள் வந்தபோதிலும், ஆண்டவர் நல்ல உயர் அதிகாரிகள் சிலரைக் கொண்டு அவனுடைய வேலையிலே ஆச்சரியமான முறையிலே மிகுந்த கனத்திற்குரிய முறையிலே அவனை உயர்த்தினார். ஆண்டவரை அவன் உண்மையாய் தேடுவதை அலட்சியமாக எண்ணின மக்கள் இதைக் கண்டு ஆச்சரியமடைந்தனர். அநேகர் அவன் வணங்கிய தெய்வத்தை தாங்களும் பின்பற்றி ஆண்டவருக்கு பிரியமானவர்களாய் மாறினார்கள்.

எனக்கு அன்பானவர்களே, உங்கள் குறைவையெல்லாம் ஆண்டவர் மாற்ற வல்லவர். அவருக்கு பிரியமான சகல வழிகளையும் இந்த வாலிபனைப்போல நீங்களும் மேற்கொண்டு வாழ்வில் இன்றே நிறைவாய் ஆசீர்வாதம் பெறுங்கள் (நீதி.8:32).

<u>ஜெபம்:</u> "அன்பு நிறைந்த ஆண்டவரே! உம்மை நம்பின, உம்மை நேசிக்கிற ஒவ்வொருவருக்கும் நீர் எவ்வளவு கனம், மகிமை கொடுக்க விரும்புகிறவரா யிருக்கிறீர்! என் வாழ்விலும்கூட <u>இன்றுமுதல்</u> குறைவுகள் யாவற்றையும் முற்றிலுமாக மாற்றி, இந்தவிதமாய் மகிமையையும் கனத்தையும் நீர் நிச்சயம் கொடுப்பீர் என்று விசுவாசிக்கிறேன். உமக்கு நன்றி செலுத்துகிறேன். உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

வீடு ஞானத்தினால் கட்டப்படும்!

"வீடு ஞானத்தினாலே கட்டப்பட்டு, விவேகத்தினாலே நிலைநிறுத்தப்படும்"
(நீதிமொழிகள் 24:3).

நம்முடைய வேலைகளிலே நாம் சிறந்து விளங்குவதற்கும், குடும்ப வாழ்க்கையை சிறப்பான முறையிலே நடத்துவதற்கும் ஞானம், அறிவு, புத்தி இவைகள் மிகவும் தேவையாய் இருக்கிறது. தேவனே ஞானமாய் இருக்கிறார் என்று வேதம் சொல்லுகிறது (1 கொரி.1:31). கர்த்தர் நீதிமான்களுக்கென்று மெய்ஞானத்தை வைத்துவைத்திருக்கிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும் (நீதி.2:7,6). சாலொமோன் என்ற அரசன் ஆண்டவரிடத்திலே "ஞானம் வேண்டும்" என்று விரும்பி கேட்டபோது, அவன் விரும்பிய அளவில் மட்டுமல்ல; தான் தெய்வம், தன்னால் எவ்வளவாய் ஆசீர்வதிக்க முடியும் என்பதை காண்பிக்கும் முகனாக அவனுக்கு ஞானத்தை அளவில்லாமல் கொடுத்து ஆசீர்வதித்தார். மற்ற ராஜாக்களும், ராஜாத்திகளும் இந்த ஞானத்தை நேரில் கண்டு ஆச்சரியம் அடையும்படியாக ஆண்டவர் அருள்புரிந்தார். நீங்களும்கூட "எனக்கும் உமது ஞானத்தைத் தாரும்" என்று குழந்தையைப்போல கேட்பீர்களானால், உங்களையும் தம்முடைய தெய்வீக ஞானத்தினால் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் அதிகமாக நிரப்புவார் (எபே. 3:20).

ஒரு வாலிபப் பெண் தன்னுடைய வீட்டிலே பெற்றோரோடு இருக்கும்போது, ஒரு வேலையும் செய்யமாட்டாள். தாய் எவ்வளவாய் கடுமையாக கண்டித்தாலும் அதை விளையாட்டாகவே எடுத்துக் கொள்வாள். அவளுக்கு திருமணமானது. தாய் அவளைக் குறித்து கவலையுடன் அவளுக்காக பிரார்த்தனை செய்து வந்தாள். திருமணமான பிறகு தன் கணவனோடு இணைந்து, ஆண்டவரைத் தேடுகிற பக்தியுள்ளவளாய் மாறி, ஒவ்வொரு நாளும் ஆண்டவரின் துணையோடு தனது இல்வாழ்வை நடத்தினாள். "ஆண்டவரே, இப்பொழுது எனக்கு நீரே துணையாக நின்று யாவற்றையும் கற்றுத் தாரும். குடும்ப வாழ்க்கையை செவ்வனே செய்ய எனக்கு போதித்து வழிநடத்தும்" என்று தினமும் கருத்தாய் ஜெபம்பண்ணினாள். ஆண்டவரோடு பேசுவதில் இன்பம் கண்டாள். தேவன் அவளோடு வாசம் செய்தார். என்ன ஆச்சரியம்! எப்பொழுதும் ஒவ்வொருவரையும் குறை சொல்லும் ஒரு அம்மையார் அவள் வீட்டுக்கு வந்தபோது, "அடேயப்பா! இவள் எவ்வளவு அழகாய் தன் வீட்டுக் காரியங்களில் கவனமாய் இருக்கிறாள். கருத்தாய் நடத்துகிறாள்" என்று நற்சாட்சி பகரும்படியாக, அவள் வாழ்க்கையை ஆண்டவர் அத்தனை அற்புதமாய் ஆசீர்வதித்து மாற்றியிருந்தார்.

அன்பானவர்களே, ஞானத்தின் ஊற்றாகிய ஆண்டவர் இந்த பெண்ணை நிறைத்தது போல் உங்களையும் நிரப்ப, நீங்களும் அவரையே நாடித்தேடுங்கள் (ரோமர் 11:33). பட்சபாதமற்றவராகிய உங்களது பரம தகப்பன் அவரை நோக்கி மன்றாடுகிற உங்கள் ஜெபத்தைக் கேட்டு, உங்களையும் தமது தெய்வீக ஞானத்தினால் நீங்களே ஆச்சரியப்படும்படியான விதத்தில் நிரப்பி ஆசீர்வதிப்பார்.

ஜெபம்: "அன்பு தெய்வமே, ஞானமற்ற எனக்கும் நீர் கூடவே இருந்து இந்த சகோதரிக்கு உதவி செய்ததுபோல உதவி செய்யும். இன்றுமுதல் வேலை செய்யும் இடத்திலே, குடும்ப வாழ்க்கையிலே, என் கல்வி விஷயங்களிலே எனக்கு நீரே யாவற்றையும் கற்றுத்தாரும். என் வீடு உம்முடைய ஞானத்தாலே ஆசீர்வதித்து கட்டப்பட அருள்தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"

(இந்த நாள் நான்கு வருடத்திற்கு ஒரு முறை மட்டுமே வரும். மற்ற வருடங்களில் 28 ஆம் தேதி அன்றே இதையும் சேர்த்து வாசித்து இரட்டிப்பான ஆசீர்வாதத்தைப் பெறுங்கள்).

ஞானத்தின் பாதை சமாதானம்!

"அதின் வழிகள் இனிதான வழிகள், அதின் பாதைகளெல்லாம் சமாதானம். அது தன்னை அடைந்தவர்களுக்கு ஜீவவிருட்சம், அதைப் பற்றிக்கொள்ளுகிற எவனும் பாக்கியவான்"
(நீதிமொழிகள் 3:17,18).

ஞானத்தினால் நிரம்பப்பெற்ற ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் ஜீவ விருட்சம் போல இருக்கும் என்று பார்க்கிறோம். கர்த்தரே நமக்கு ஞானமாயிருக்கிறார். அவரால் நாம் நிரம்பிக்கொள்ளும்போது இந்த ஞானம் நம் வாழ்வில் கிரியை செய்கிறது. அவருடைய வசனத்தை வாசிக்க வாசிக்க அவருடைய பிரசன்னம் நம்மை நிரப்பும் (யோவான் 14:23). விசேஷமாக வாலிபர்களுக்கு வேத வசனம் பரிசுத்த வாழ்வை போதிக்கிறது (சங்.119:9). வாழ்க்கையில் கஷ்டப்படுகிறவர்களுக்கு இது ஆறுதலும் மகிழ்ச்சியும் கொடுக்கிறது (எரே.15:16). இதேபோன்று ஆதி மனிதர்களாகிய ஆதாம், ஏவாள் பாவம் செய்தபொழுது ஆண்டவர் அவர்களைத் தேடி வந்தபோது, அவர்கள் ஒளிந்துகொண்டார்கள். நாமோ நம்முடைய பாவங்களையெல்லாம் அவரிடம் அறிக்கையிடுவோம். அப்பொழுது நம்மை மன்னித்து தமது இரத்தத்தினாலே கழுவி நம்மை சுத்திகரித்து (1 யோவான் 1:9), தம்முடைய பிள்ளைகளாக்கி நம்மோடுகூட வாசம் செய்வார். கர்த்தர் நம்மோடிருப்பாரானால், அவருடைய ஞானம் அந்தந்த நேரங்களிலே நம்மை நிரப்பி நம் வாழ்வை மேன்மையடைய செய்யும் அல்லவா!

ஒரு பள்ளியில் ஒருவர் ஆசிரியராக பணிபுரிந்து வந்தார். மற்ற உபாத்தியாயர்கள் அடிக்கடி ஒருவரோடொருவர் வீண் காரியங்களுக்காக சண்டை போட்டுக்கொள்வதை அவர் கண்டார். இவரோ அவர்களுடைய சண்டைக்கு தன்னை விலக்கி தூய்மையான வாழ்வை மேற்கொண்டிருந்தார். ஆகவே, அவர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து இவரை புறக்கணித்தார்கள். பெரிய நீதிமான் என்றெல்லாம் குறைகூறினார்கள். ஆனால் அவரோ மனதின் ஆழத்தில், அவர்கள் ஒவ்வொருவரும் ஆண்டவருடைய அன்பை உணர்ந்து, ஞானமுள்ளவர்களாகும்படி, கருத்தாய் பிரார்த்தனை செய்து வந்தார். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு ஒவ்வொருவராக தங்களுடைய கஷ்டங்களினிமித்தம் தாங்க முடியாத நிலைமையில் அவரை நாடி வரும்படி வழி திறந்தார். அவர்களுக்காக அவர் கருத்தாய் அன்போடு பிரார்த்தனை செய்தார். அவருடைய ஞானமுள்ள வார்த்தைகள் பொல்லாத அந்த மக்களை முற்றிலுமாக மாற்றி, தேவ சமாதானம் அந்த பள்ளியில் நிறைவாய் வரும்படி ஆண்டவர் அருள்புரிந்தார்.

நீங்களும் ஜீவவிருட்சம் போன்ற தெய்வீக ஞானத்தைப் பெற்றுக்கொள்ள தேவனை நோக்கி மன்றாடுங்கள். கேட்கிற எவருக்கும் அருளிச் செய்கிற ஆண்டவர் உங்களையும் போதித்து, தாம் விரும்பும் பாதையில் வழிநடத்துவார் (நீதி.15:33).

ஜெபம்: "அன்பு தெய்வமே! உமது தெய்வீக ஞானத்தையும் அதன் மூலம் வரும் தெய்வீக சமாதானத்தையும் எனக்கு நிறைவாய் தாரும். அதன்மூலம் என் குறைவுகளையெல்லாம் மாற்றி. இன்றுமுதல் என் வாழ்வை நிறைவாய் ஆசீர்வதியும். உமக்கு நன்றி! ஸ்தோத்திரம்! ஆமென்!"

பரம தகப்பனின் பெருக்கமான அன்பு!

"தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்கு பயந்தவர்களுக்கு இரங்குகிறார்" **(சங்கீதம் 103:13).**

இவ்வுலக வாழ்க்கையிலே ஒரு தகப்பனுடைய அன்பு ஈடு இணையற்றது. தன் பிள்ளை தவறு செய்யும்போது அவன் திருந்தும்படியாக கோபம் கொள்கிறான், தண்டிக்கிறான். ஆனால், அடுத்த கணம், அந்த பிள்ளையின் மீது அன்பு பிரவாகித்து ஓடி, அவன் செய்தது எல்லாவற்றையும் மறந்து, அவனை மன்னித்து மிகுந்த அன்புகூருகிறான். இது தான் ஒரு உண்மையான தகப்பனின் இணையற்ற அன்பு (சங்.103:13)! இந்த அன்புக்காக இன்று எத்தனையோ பேர் ஏக்கங்கொள்கிறார்கள். ஆனால், ஆண்டவரின் அன்போ நல்லவர்களான தகப்பன்மாருடைய அன்பைக் காட்டிலும் உயர்வானது! மேலானது! இந்த புதிய மாதத்திலும்கூட, அன்பே உருவான தேவாதி தேவனுடைய தெய்வீக அன்பு, தியாகபலியாக கல்வாரி சிலுவையில் தம்மையே அர்ப்பணித்த இயேசு கிறிஸ்துவின் அளவில்லாத அன்பு உங்கள் வாழ்வை வளம் பெறச் செய்யும் (1 யோவான் 4:10).

ஒரு அருமையான தகப்பன் தன்னுடைய அன்பு மகனை மிகுந்த பாசத்தோடு வளர்த்து வந்த போதிலும், அந்த அன்பின் மேன்மையை உணராமல் அந்த மகன் பொல்லாத நண்பர்களோடு சேர்ந்து அந்த தகப்பனை ஒருநாள் வாய்க்கு வந்தபடி பேசி, திட்டிவிட்டு, நண்பர்களோடு வேறு ஊருக்கு சென்றுவிட்டான். தகப்பனோ கண்ணீரோடு அவனுடைய வருகைக்காக ஒவ்வொரு நாளும் காத்திருந்தார். ஒரு நாள் ஒரு கடிதம் வந்தது. அந்த மகன் தகப்பனுக்கு, "அப்பா, உங்கள் அன்பை உணராமல், என் கெட்ட நண்பர்களோடு சேர்ந்து, அவர்கள் வார்த்தையை நம்பி, உங்களை உதறித் தள்ளிவிட்டு கேவலமாக வாழ்ந்து வந்தேன். இப்பொழுது தான் என்னுடைய தவறான வாழ்க்கையின் குறைகளை நான் உணர்ந்து, உங்கள் அன்பை நாடித் தேடுகிறேன். இப்படிப்பட்ட பாவியாகிய என்னை நீங்கள் திரும்பவும் ஏற்றுக்கொள்வீர்களா?" என்று கண்ணீரோடு எழுதியிருந்தான். உடனடியாக தகப்பன் தனக்கு தெரிந்த நண்பர் ஒருவரை அனுப்பி அவனை அழைத்து வந்து, அவன் செய்த தவறுகளையெல்லாம், பேசின தீய வார்த்தைகளை யெல்லாம் முற்றிலும் மறந்தவராக, அவனை சந்தோஷத்தோடே ஏற்றுக்கொண்டார். இதுதான் உலகப்பிரகாரமான ஒரு தகப்பனுடைய உண்மையான அன்பு. ஆனால், நம்முடைய பரம தகப்பனோ, நம்முடைய வாழ்வு செழிக்க வேண்டும், நாம் நன்றாய் இருக்க வேண்டும் என்று தன் சொந்தக் குமாரனையே தியாக பலியாக இவ்வுலகிலே அனுப்பி நம்மில் எவ்வளவாய் அன்புகூர்ந்தார் (யோவான் 3:16).

எனக்கு அன்பானவர்களே! இத்தகைய தெய்வீக அன்பு உங்களுக்கு இலவசமாகக் கிடைக்க இருக்கையில், நீங்கள் ஏன் வீணாகக் கவலைப்பட வேண்டும்? அவரை மட்டுமே நோக்கிப் பாருங்கள். நீங்களும் இந்த அன்பினால் உண்டாகும் ஆசீர்வாதத்தை நிச்சயம் பெற்று, இணையற்ற ஆசீர்வாதங்களால் நிரம்புவீர்கள் (உபா.30:20).

ஜெபம்: "அன்பே உருவான ஆண்டவரே, உலக அன்பு என் கண்களை மூடி மறைத்திருக்கிறது. ஆனால், இன்றுமுதல் உம்முடைய அன்பையே நான் முற்றிலுமாய் நம்பி என் வாழ்வை உமக்கென்றே அர்ப்பணிக்கிறேன். இனி ஒருநாளும் தீமையின் பக்கம் என் கண்கள் திரும்பாதபடி, என்னைக் காப்பாற்றும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

பக்திவிருத்தி தரும் தெய்வீக அன்பு!

"...அன்போ பக்திவிருத்தியை உண்டாக்கும்" **(1 கொரிந்தியர் 8:1).**

தேவன் அன்பாகவே இருக்கிறார் (1 யோவான் 4:8,16). ஆகவேதான், தமது சொந்தக் குமாரன் இயேசுவையே இப்பூவுலகிற்கு பாவநிவாரண பலியாக அவருடைய சரீரத்தையே சிலுவையில் அர்ப்பணித்து, அதன்மூலம் தெய்வீக அன்பு நம் ஒவ்வொருவர் உள்ளத்திலும், வாழ்விலும் இறங்கும்படி வழிதிறந்தார் (1 யோவான் 3:1). ஆண்டவராகிய இயேசுவும் தம் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றவும், நம் ஒவ்வொருவர் வாழ்விலும் பாவம், சாபம், அக்கிரமம் யாவற்றினின்றும் நிரந்தரமான விடுதலையை நாம் பெற்று, நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளவும் தக்கதாக தம்மை அர்ப்பணித்து அன்புகூர்ந்தார் (எபே. 5:2). இந்த இரட்சிப்பை நாம் பெறுவதன்மூலம் பக்திவிருத்தியோடுகூடிய தெய்வீக அன்பு நம் உள்ளத்திலும், நம் வாழ்விலும்கூட பெருகும்படி தேவன் கிருபை புரிவார்.

ஒரு தகப்பன், இயேசுவை அறியாமல் தன் மனம்போன வழியில் தெய்வ வழிபாடு செய்து வந்தார். அவர் ஒரு வியாபாரத்தையும் செய்து, அதன்மூலம் செழிப்பான வாழ்க்கை வாழ்ந்து வந்தார். ஆனால், திடீரென்று வியாபாரம் குறைவுபட்டதால், நாளடைவில் செழிப்பு குறைந்து, கடன் சுமை ஏறியது. இதனால் அவர் மனம் தளர்ந்தது. குடிபோதையின் மூலம் தன் வாழ்வின் கஷ்டங்களை மறக்க எண்ணினார். இதைப் பார்த்த அவருடைய மகன் அந்த சமயத்தில், "கடவுளே ஏன் எங்கள் வீட்டில் இந்தக் குறைவு? என் தகப்பனுடைய இந்த பரிதாபமான, கீழ்த்தரமான நிலைமை என்று மாறுமோ? மெய்யான கடவுளாக நீர் இருந்தால் எனக்கு உம்மைக் காண்பியும்" என்று கதறினான். அப்பொழுது திடீரென்று இயேசு அவனுக்கு தரிசனமானார். அவன் எங்கு இருக்கிறோம் என்றே அறியாமல், அவர் பேசப் பேச, முழங்காலிலேயே அவர் பின்னாலேயே சுற்றிசுற்றி வந்தான். அவருடைய அன்பு அவ்வளவாய் அவனை ஈர்த்தது. சற்று நேரத்தில் அவர் மறைந்து போனார். அப்பொழுது யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டு, கதவைத் திறந்தால், அங்கே தகப்பனும் தாயும் நின்றுகொண்டிருந்தார்கள். அவன் முழங்காலிலேயே சுற்றி சுற்றி வந்தபடியினால், அவன் அணிந்திருந்த ஆடையின் முழங்காற்பகுதி கிழிந்து இரத்தம் வழிந்துகொண்டிருந்தது. அறையெல்லாம் இரத்தம்! பெற்றோர் ஆச்சரியத்தோடு அவனை நோக்கிப் பார்க்க, அவன் நடந்ததையெல்லாம் அவர்களுக்கு விவரித்து, "இயேசுவே மெய்யான தெய்வம்" என்றான். அவ்வளவுதான்! அந்த நிமிஷத்திலேயே அவன் வீட்டைவிட்டு அவர்களால் வெளியே துரத்தப்பட்டான். ஆனால், அவனோ அதன்பிறகு இயேசுவின் அடியானாகவும், அவருடைய அன்பைப்பற்றி யாவருக்கும் வெளிப்படுத்தும் உண்மை ஊழியனாகவும் மாறினான்.

அன்பானவர்களே! நீங்களும் இந்த அன்பின் மேன்மையை உணர்ந்து, இன்று முதல் அவரை தெய்வமாக, உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு பக்திவிருத்தி நிறைந்த வாழ்வைப் பெற்று, தேவனுடைய அன்பினால் நிறைந்து சகல பாக்கியங்களையும் பெற்று மகிழுங்கள் (யூதா வசனம் 21).

<u>ஜெபம்:</u> "அன்பின் தெய்வமே, என்னுடைய கண்களை மூடியிருந்த இருளை மாற்றுவதற்காக, நீர் உம்முடைய சொந்த குமாரனையே இவ்வுலகிற்கு அனுப்பினபடியால் உமக்கு ஸ்தோத்திரம்! <u>இன்றுமுதல்</u> நானும் உமக்கு சொந்தமாக மாற, என்னையும் கரம்பிடித்து நடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

நம் பாடுகளை சுமந்த பரிசுத்த தேவன்!

"மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களை சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்"

(ஏசாயா 53:4).

ஆம்! மேற்கண்ட வசனத்தின்படி, நாம் அனுபவிக்க வேண்டிய சகலவிதமான பாடுகளையும், துக்கங்களையும் சிலுவையில் சுமந்து, வாழ்வை வளம் பெறச்செய்ய தம்மையே சிலுவையில் அர்ப்பணித்தார் ஆண்டவர் இயேசு! அவர் எவ்வளவாய் வேதனைபட்டார் என்பதை வேதம் தெளிவாய் விளக்குகிறது. அவரது முதுகிலே வாரினால் அடித்தார்கள். நாற்பதிற்கும் ஒன்று குறைவாக அடிகள் கொடுக்கப்பட்டது. அதினிமித்தம் அவருடைய சரீரம் அப்படியே வாரால் கிழிக்கப்பட்டது. தலையில் முள்முடி சூட்டப்பட்டபொழுது தலையிலிருந்து இரத்தம் சொட்டச்சொட்ட வேதனையடைந்தார். கை கால்கள் ஆணிகள் அடிக்கப்பட்டதினால் அடைந்த வேதனை அளவில்லாதது! இத்தனைக்கும் காரணம், "என் பிள்ளைகள் வாழ்ந்திருக்க வேண்டும், சுகமாய் இருக்க வேண்டும்" என்ற ஆண்டவருடைய அன்பு தான் (1 யோவான் 4:9). இதினிமித்தமாக நமக்குக் கிடைக்கிற ஆசீர்வாதம் என்ன? நமக்கு வருகிற பாடுகள் அனைத்தினின்றும் நமக்கு முற்றிலும் ஜெயம் கிடைப்பதே! அதை நாம் மறந்துபோகக்கூடாது (ரோமர் 8:36,37). கொஞ்சம் பாடு வந்தாலும் எளிதில் சோர்ந்து போகிறோமே, அது அவசியமே இல்லை. சிலுவையை நோக்கிப் பாருங்கள். ஆண்டவர் நிச்சயம் வெற்றியைத் தருவார்.

ஒரு குடும்பத்திலே அன்புத் தாழ்ச்சியினால் எப்பொழுதும் சண்டைகளும், குழப்பங்களும் நிறைந்திருந்தது. என்றைக்கு கொலை விழுமோ என்ற நிலைமை! அதில் ஒரே ஒரு பெண் மாத்திரம் ஆண்டவரது உதவியை நாடினாள். மேற்கண்ட வசனத்தை வாசித்தாள், அதை அப்படியே பற்றிப்பிடித்துக்கொண்டாள். "ஆண்டவரே, இந்த வசனத்தின்படி, இந்த குடும்பத்திலுள்ள சண்டைகள், பொறாமை, எரிச்சல் இவற்றினிமித்தம் ஏற்பட்டிருக்கிற பாடுகளையும், துக்கங்களையும் நீர் மாற்றும். உம்மால் மட்டுமே இந்த குடும்பத்தில் சமாதானத்தை கொடுக்க முடியும் என்று நான் விசுவாசிக்கிறேன்" என்று ஒரு நாளில் அடிக்கடி பலமுறை ஜெபம்பண்ணி வந்தாள். ஆண்டவர் அவள் ஜெபத்தைக் கேட்டார். ஒருவர்பின் ஒருவராக தம் வல்லமையினால் தொட்டு, அவர்களுடைய கல்லான இருதயத்தை சதையான இருதயமாக மாற்றினார் (எசே. 36:26). அதுமட்டுமின்றி, பரிசுத்த ஆவியினாலும் ஒவ்வொருவரையும் நிரப்பினார். சண்டைகள் நிறைந்த அந்த குடும்பத்திலே, மேற்கண்ட வசனத்தின்படி, ஆண்டவர் அந்தப் பாடுகள் எல்லாவற்றையும் சுமந்து தீர்த்தபடியினால், சமாதானம், தெய்வீக சந்தோஷம் இவற்றால் அவர்கள் நிரம்பி வழியும்படி அருள்செய்தார்.

ஆம், எனக்கு அன்பானவர்களே! உங்கள் வாழ்க்கையிலும்கூட, சஞ்சலங்கள், உபத்திரவங்கள் யாவற்றையும் மாற்றி, சமாதானம், தெய்வீக சந்தோஷத்தால் இன்றே ஆண்டவர் நிரப்புவார். இன்று இந்த நம்பிக்கையோடு இந்த வசனத்தை நீங்கள் பற்றிப்பிடித்து, தேவ ஆசீர்வாதம் பெறுங்கள் (கொலோ.1:20)!

ஜெபம்: "அன்பு இரட்சகரே, எத்தனையாய் நீர் எனக்காக சிலுவையில் பாடுபட்டீர், அடிக்கப்பட்டீர், நொறுக்கப்பட்டீர்! என் வாழ்வின் பாடுகளையும், துக்கங்களையும் நீர் தாமே உமது சரீரத்தில் சுமந்து தீர்த்தபடியால், என் வாழ்வை இன்றும், என்றும் உம்முடைய தெய்வீக ஆசீர்வாதத்தால் நிரப்புவீர் என்று நம்பி உம்மை மனதார ஸ்தோத்திரிக்கிறேன். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் பிதாவே, ஆமென்!"

இரட்சிப்பின் வஸ்திரம் தரிக்கச்செய்வார்!

"கர்த்தருக்குள் பூரிப்பாய் மகிழுகிறேன்; என் தேவனுக்குள் என் ஆத்துமா களிகூர்ந்திருக்கிறது;....அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை எனக்கு தரித்தார்"

(ஏசாயா 61:10).

இது எத்தனை அருமையான ஓர் ஆசீர்வாதம்! சில நேரங்களிலே, "எனக்கு சரியான ஆடை இல்லையே! வாங்குவதற்கு கையில் பணம் இல்லையே!" என்றெல்லாம் கவலைப்படுகிறோம் அல்லவா! தேவாதி தேவன் இரட்சிப்பின் வஸ்திரத்தையும், நீதியின் சால்வையையும் நமக்கு கொடுக்கிறார். இது எவ்வளவு இன்பமான வாழ்க்கை! முதலாவது இந்த அனுபவத்தை இந்த லெந்து காலத்தில் ஆண்டவரிடம் கேட்டு பெற்றுக் கொள்வோம் (ஏசாயா 12:3). மற்ற தேவைகளை அவர் நிச்சயமாக கூட்டிக்கொடுப்பார் (ரோமர் 8:32). "என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாங் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" (பிலி. 4:19).

ஒரு ஊழியன் தன்னுடைய ஊழியத்தோடுகூட அலுவலக வேலையையும் பார்த்து வந்தார். ஆனால் ஊழியத்திற்கென்று தன் பணத்தையெல்லாம் செலவழித்து விடுவார். அதினிமித்தம் அவருக்கு பணம் பற்றாக்குறை! குடும்ப வாழ்க்கையிலே எண்ணி எண்ணி செலவழிக்க வேண்டிய சூழ்நிலை. மனைவியும், ஆண்டவரை நேசித்தபடியினால் சந்தோஷமாகவே அந்தக் குறைவுகளின் மத்தியிலும் குடும்ப வாழ்க்கை போய்க் கொண்டிருந்தது. ஒருநாள் அலுவலகம் செல்ல ஆயத்தமாகிக்கொண்டிருந்தபோது, தன்னுடைய சாக்ஸ் (காலுறை) ஓட்டை ஓட்டையாய் இருப்பதைக் கண்டார். தன் மனதிற்குள், "ஆண்டவரே, இன்னும் எத்தனை நாளைக்கு இந்தப் பாடு? எனக்கு ஒரு நல்ல சாக்ஸ் வாங்க பணம் கொடுக்கக்கூடாதா?" என்று சலித்துக் கொண்டார். அன்று மாலை! அவரை பார்க்க ஒருவர் வந்தார். அவர், "ஆஸ்திரேலியா நாட்டிலிருந்து ஒரு நண்பரை முன்பு நான் உங்கள் வீட்டிற்கு ஜெபத்திற்காக அழைத்து வந்தது உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? அவர் ஒரு பார்சலில் உங்களுக்கும், எனக்கும் இரண்டு ஜோடி சாக்ஸ் அனுப்பியிருக்கிறார், இதோ உங்களுடையது" என்று அவர் கையில் ஒரு ஜோடி சாக்ஸைக் கொடுத்தார். அந்த ஊழியரின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகியது. ஆண்டவருடைய அன்பைப் பாருங்கள்! தம்முடைய பிள்ளைகளுக்கு இரட்சிப்பின் வஸ்திரத்தையும், நீதியின் சால்வையையும் தரிப்பித்து அழகு பார்ப்பதோடு, அவர்களுடைய தேவைகளையும் அவர்கள் விரும்பும்பொழுது கொடுத்து ஆசீர்வதிப்பது, எத்தனை அருமையாய் இருக்கிறது அல்லவா? சிறிய விஷயம் தானே என்று நினைக்கிறோம். ஆனால், அதிலும் ஆண்டவருடைய அன்பு எவ்வளவு பெரிதாய் இருக்கிறது!

இன்றைக்கு நீங்களும்கூட, மேற்கண்ட வசனத்தின்படி, உங்களுக்கு இரட்சிப்பின் வஸ்திரத்தையும், நீதியின் சால்வையையும் தருவதோடு, உங்கள் அனைத்து தேவைகளையும் அவர் அருளப்போகிறார் என்று விசுவாசித்து, அவருக்கு நன்றி செலுத்துங்கள் (சங்.116:12,13).



<u>ஜெபம்</u>: "அன்புள்ள ஆண்டவரே, உம்முடைய அன்பு எவ்வளவு பெரியது. நீர் கொடுத்திருக்கிற இரட்சிப்பின் வஸ்திரத்திற்காக, நீதியின் சால்வைக்காக உமக்கு நன்றி. இதன் மேன்மையை <u>இன்றுமுதல்</u> உணர்ந்து உம்மை உறுதியாய் பற்றிக் கொள்கிறேன். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் பிதாவே, ஆமென்!"

ஜீவனை அர்ப்பணித்த ஆண்டவரின் அன்பு!

"கிறிஸ்து நமக்காக தம்மை தேவனுக்கு சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்"

(எபேசியர் 5:2).

தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரன் இயேசு கிறிஸ்துவை உலகிற்கு அனுப்பி, நம்மில் அன்புகூர்ந்ததுபோல, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் நம்மேல் அன்புகூர்ந்து, தம்மையே சுகந்த வாசனையான காணிக்கையாகவும், பலியாகவும் தேவனுக்கு அர்ப்பணித்தார். அவர் தமது சரீரத்தில் எத்தனையாய் வேதனைப்பட்டார்! இத்தனை வேதனைகளையும் அவர் அனுபவித்ததின் ஒரே காரணம், நம் பாவங்கள், அக்கிரமங்கள், சாபங்கள் யாவற்றினின்றும் விடுதலை பெற்று, நாம் கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதுதான் (பிலி.4:4).

J.F. ரோலன்ட்ஸ் என்று ஒரு தேவனுடைய ஊழியர் தேவனுடைய சித்தத்தின்படி ஆப்பிரிக்கா தேசத்திற்கு ஊழியம் செய்ய சென்றிருந்தார். அவர்மூலம் அநேக கிராம மக்கள் ஆண்டவருடைய அன்பை உணர்ந்து, அவரை இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள். ஆனால், ஒரு கிராமத் தலைவன் மட்டும், என் கிராம மக்கள் அத்தனை பேரும் இந்த மனிதன் பின்னால் போகிறார்களே என்று எரிச்சல்கொண்டு, அவரை கொன்றுவிட தீர்மானம் பண்ணினான். ஒருநாள் இந்த தேவனுடைய மனிதரை தன் வீட்டிற்கு வரும்படி அழைத்தான். போகவேண்டாம் என்று அனைவரும் எவ்வளவோ எச்சரித்தபோதிலும், அவர் "தேவ அன்பினால் நிறைந்தவராக என்னை இரட்சித்த ஆண்டவர் அவனையும் இரட்சிக்கட்டும்" என்று அதிகாலையில் எழுந்து புறப்பட்டு சென்று அவன் வீட்டுக் கதவைத் தட்டினார். அவனோ இரவெல்லாம் நன்றாகக் குடித்துவிட்டு, வாய்கூட கொப்பளிக்காமல் கதவைத் திறந்தான். அவரைக் கண்டவுடன் ஒரு கணம் அசந்துபோனான். எனினும், சமாளித்துக்கொண்டு, அவரை உள்ளே அழைத்தான். அவருக்கு தன்னிடமிருந்த வாழைப்பழம் ஒன்றைக் கொடுத்தான். அவர் அந்தப் பழத்தின் தோலை உரித்து, முதலாவது அவனுடைய வாய்க்கு நேராக நீட்டினார். அவனுக்கு அது அதிர்ச்சியைத் தந்தது. "ஐயோ! நான் இன்னும் பல்கூட விளக்கவில்லையே, நீங்கள் சாப்பிடுங்கள்" என்றான். அவரோ, "பரவாயில்லை, முதலாவது நீங்கள் சாப்பிடுங்கள், அதன்பிறகு நான் சாப்பிடுகிறேன்" என்று கட்டாயப்படுத்தி, அவன் வாய்க்குள் பழத்தைத் திணித்தார். அவன் சாப்பிட்ட மீதியை அவர் நன்றாக சுவைத்து சாப்பிட்டார். இந்த அவருடைய தெய்வீக அன்பின் செய்கை, அவனுடைய கொடூர உள்ளத்தை உடைத்தது. "இத்தனை அன்புகொண்ட இவரையா நான் கொலைசெய்ய எண்ணினேன்?" என்று கண்ணீர் வடித்தான். தேவமனிதர் ஆண்டவருடைய அன்பை அவனுக்கு விளக்கினார். ஆண்டவர் அவனுடைய கடின இருதயத்தை மாற்றி அவனையும் இரட்சித்தார்.

ஆம், அன்பானவர்களே, உங்கள் உள்ளத்தையும் இந்த அன்பே உருவான ஆண்டவருக்கு ஒப்புக்கொடுங்கள், மற்றவர்களும் இந்த அன்பை ருசிக்க நீங்களும் கருவிகளாக வேண்டும் என்று உங்களைத் தாழ்த்தி அவரிடம் மன்றாடுங்கள் (1 யோவான் 4:11).

<u>ஜெபம்</u>: "அன்பு தெய்வமே, உம்முடைய ஒப்பற்ற அன்பை நானும் ருசித்து, மற்றவர்களுக்கும் அதை விளக்கிக் காண்பித்து, அவர்களையும் உம்மண்டை வழிநடத்த என்னை <u>இன்றுமுதல்</u> ஆசீர்வதித்து வழிநடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"

அவருடைய தழும்புகளால் நம்மை குணமாக்குவார்!

"நாம் பாவங்களுக்கு செத்து, நீதிக்கு பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களை சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்" (1 பேதுரு 2:24; ஏசாயா 53:5).

நம்முடைய சரீரத்தில் பல சமயங்களில் காயங்கள் ஏற்படும்பொழுது, "ஐயோ, இந்தத் தழும்பு என்றுமே மாறாதோ" என்று பயப்படுகிறோம். அது மறைய முயற்சிகளை செய்கிறோம். அதுபோன்றே நம்முடைய மனதிலே பல காரியங்களினிமித்தம் காயங்கள் ஏற்படும்பொழுது, அதை நம்மால் மறக்கவே முடிவதில்லை. சிலர் பயங்கரமான கடின வார்த்தைகளினால் மனதை வீணாகக் குற்றப்படுத்தும்போது, செய்யாத காரியங்களை செய்ததாக பறைசாற்றும்போது, அவைகள் நம்முடைய மனதிலே ஆறாத காயங்களாக பதிந்து விடுகின்றன (எரே. 15:18). ஆனால், ஆண்டவர் சிலுவையிலே நமக்காகவே அடிக்கப்பட்டு, காயமடைந்தார். அவருடைய காயங்களினால் ஏற்பட்ட தழும்புகள் மூலமாக, நமக்கு ஏற்படுகிற எல்லாவிதமான காயங்களையும் அவரால் மாற்ற முடியும் (நீதி. 20:30).

ஒரு வாலிபப் பெண் அம்மை நோயினால் அதிக நாட்கள் அவதிப்பட்டாள். அதன்பிறகு அவள் முகத்திலே பெரிய பெரிய தழும்புகள் ஏற்பட்டிருந்தபடியால், அதிகமாக கவலைப்பட்டாள். பெற்றோர் கவலையடைந்தனர். எனினும், இந்த வசனத்தை அவள் ஒருநாள் வாசிக்க நேரிட்டபோது, அதை அப்படியே பிடித்துக்கொண்டாள். தினமும் இந்த வசனத்தை சொல்லி சொல்லி, பிரார்த்தனை செய்து வந்தாள். "ஆண்டவரே, சிலுவையிலே நீர் அடைந்த காயங்கள் நிமித்தம் உண்டான தழும்புகள் என்னை இன்றும் குணமாக்க வல்லமையுள்ளதாயிருக்கிறது என்று விசுவாசிக்கிறேன், அதை நம்புகிறேன். மற்றவர்கள் சொல்லுவதுபோல நான் எந்த மருந்தையும் தடவ விரும்பவில்லை. ஆனால், இந்த வசனத்தை, வாக்குத்தத்தத்தை எனக்கு சொந்தமாக்கிக்கொண்டு, நான் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். இந்த என் முகத்தழும்புகள், உம்முடைய காயங்களினால் உண்டான தழும்புகள்மூலம் குணமடையும், என் முகம் முன்னைக்காட்டிலும் அழகுள்ளதாய் மாறும் என்று நம்புகிறேன்" என்று தினமும் விடாமல், ஸ்தோத்திரத்தோடே, விசுவாசத்தோடே பிரார்த்தனை செய்து வந்தாள். என்ன ஆச்சரியம்! அவளுடைய விசுவாசத்தின்படியே, அம்மை நோயினால் உண்டான தழும்புகள், இருக்கிற இடந்தெரியாமல் மறைந்துபோயிற்று (மத். 21:22). முகம் மிகவும் தெளிவாக, பிரகாசமாகக் காணப்படும்படி தேவன் அருள் புரிந்தார்.

ஆம், அன்பானவர்களே, உங்கள் மனதின் காயங்களையும்கூட கர்த்தர் அப்படியே இன்றும் என்றும் மாற்ற வல்லவராயிருக்கிறார். நீங்களும் இந்த வசனத்தைப் பிடித்து, கர்த்தரை நோக்கி மன்றாடுங்கள். கர்த்தர் சம்பாதித்து வைத்திருக்கும் தெய்வீக சுகத்தை பெற்றுக்கொள்வீர்கள் (சங்.147:3).

ஜெபம்: "அன்புள்ள ஆண்டவரே, சிலுவையிலே நீர் அடைந்த காயங்களினால் உண்டான தழும்புகள் எத்தனை மேன்மையானது என்பதை உணர்ந்துகொண்டேன். அவைகள் இன்றும் சரீரத்தில், மனதில், ஆத்துமாவில் உண்டாயிருக்கிற சகல காயங்களையும் மாற்றி, குணமாக்கும் வல்லமை உள்ளதாயிருக்கிறபடியால், உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். இன்றுமுதல் நானும் அதை அனுபவித்து ஆசீர்வாதம் பெற அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

பாவிகள் மேல் பரமனின் அன்பு!

"நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்" (ரோமர் 5:8).

ஆண்டவர், பாவத்தில் ஊறியிருக்கிறவர்களையும், சந்தர்ப்ப சூழ்நிலைகளினால் பாவத்திற்கு அடிமைப்பட்டவர்களையும் தமது அன்பைக்கொண்டு இரட்சித்து, பரலோகத்திற்குப் போவதற்கான வழியை அவர்களுக்கு திறந்து கொடுக்க விரும்புகிறார். அதற்காகவே, சிலுவையில் தம்மையே பிராயச்சித்த பலியாக அர்ப்பணித்தார் (எபே.5:2). பாவத்தினிமித்தம் வேதனைப்பட்டு, அதினிமித்தம் அவரைத் தேடிவந்த ஒரு பெண்ணைப் பார்த்து, "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" என்று கூறி அவளில் அன்புகூர்ந்தார் (லூக்கா 7:50). மற்றொரு முறை பாவத்தில் ஊறியிருந்த இன்னொரு பெண்ணிடம் அன்போடு பேசினதினிமித்தமாக, அவளுடைய பாவ வாழ்க்கையிலிருந்து அவளை மீட்டெடுத்து, ஆண்டவருடைய அன்பைப் பறைசாற்றும் ஒரு நற்சாட்சியுள்ள மகளாக மாற்றினார் (யோவான் 4:39). அதுமட்டுமின்றி, மேற்கண்ட வசனத்தின்படி, சிலுவையிலும் தம்மை நோக்கிப் பார்க்கிற ஒவ்வொருவருக்கும் இரட்சிப்பை அருளும்படி தம்மையே நொறுக்க ஒப்புக்கொடுத்தார்.

சுவிசேஷப் பணியை செய்த ஒருவர் ஆண்டவருடைய தெய்வீக அன்பினால் நிறைந்தவராக, ஆண்டவரைப்பற்றி, அவருடைய அன்பைப் பற்றி தன் கிராம மக்கள் எல்லோருக்கும் பிரசங்கித்து வந்தார். ஆனால், அந்த கிராமத் தலைவனோ அதனிமித்தம் அவர்மேல் பொறாமையும் எரிச்சலும்கொண்டு, தன் அம்பினால் அவரைக் கொன்றுபோட்டான். ஒருநாள் அந்த ஊழியனின் மகன் ஒரு மூட்டையை கையில் எடுத்துக் கொண்டு, இந்த கிராமத் தலைவனை நோக்கி குதிரையில் வந்தான். அவன் தகப்பனை கொன்றதினிமித்தம் தன்னை கொலைசெய்யவே இந்த வாலிபன் வருகிறான் என்று எண்ணிக்கொண்டான். ஆனால், அந்த வாலிபனோ, தன் கையில் வைத்திருந்த அந்த மூட்டையைக் கொண்டுவந்து, அந்த தலைவனின் காலடியில் வைத்தான். "ஐயா, என் தகப்பன் உம்மைப்போலவே இருந்தார். எனவே, என் தகப்பனாருடைய சட்டைகளை யெல்லாம் உமக்குக் கொடுக்க வந்திருக்கிறேன்" என்று அன்பொழுக பேசினான். தலைவனுக்கு ஒரே ஆச்சரியம்! "இந்த வாலிபனின் தகப்பனை நான் அம்பினால் கொன்றேன். ஆனால், இவனோ தன் உள்ளத்தின் ஆழத்தில் இருக்கிற தெய்வீக அன்பினால் என்னைக் கொன்றுவிட்டானே" என்று மனமுடைந்தவனாக, ஆண்டவருடைய அன்பை உணர்ந்துகொண்டான்.

ஆம், பிரியமானவர்களே, இன்று நீங்கள் பாவ வாழ்க்கையில் இருப்பீர்களானால், உங்களையும் இரட்சிக்க இந்த தெய்வீக அன்பு போதுமானதாய் இருக்கிறது. நீங்களும் அதன் மேன்மையை உணராமல், அந்த கிராமத் தலைவனைப்போல், கடின உள்ளம் கொண்டவர்களாய் வாழ்கிறீர்களா? உங்கள் இருதயத்தை சதையானதாக மாற்றவே தேவ அன்பு கல்வாரியினின்று பிரவாகித்து ஓடுகிறது (எசே. 36:26). சவுல், பவுலாக எப்படி மாற்றப்பட்டானோ அப்படியே நீங்களும் இந்த அன்பை ருசித்து, ஆசீர்வாதம் பெறுங்கள்.

ஜெபம்: "அன்பு தெய்வமே, இன்றும் என்றும் பாவத்திலேயே என் வாழ்வை செலவழிக்காதபடி, உம்முடைய தெய்வீக அன்பு என் உள்ளத்திலே பிரவாகித்து ஓடிக் கொண்டேயிருக்கும்படியும், நான் புதிய வாழ்வு வாழும் பாக்கியம் பெறவும் எனக்கு அருள்தாரும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் பிதாவே, ஆமென்!"

பாவங்களை நீக்கும் கிருபாதார பலி!

"நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்"
(1 யோவான் 2:2; எபிரெயர் 8:12).

இந்த உலகத்தில், யாராவது ஒரு சிறு தவறு செய்தாலும்கூட அதை நாம் எளிதில் மறப்பதில்லை, அதை பெரிதுபடுத்தி, பல குழப்பங்களை செய்கிறோம். குறைவுகளை எளிதில் மன்னிக்க மனதில்லாமல் அவைகளை உள்ளேயே வைத்து, "ஒருநாள் வரும், அவன் என்னிடம் மாட்டுவான், அப்பொழுது பார்த்துக்கொள்கிறேன்" என்று கங்கணம் வேறு கட்டுகிறோம். ஆனால், ஆண்டவருடைய அன்பைப் பாருங்கள். நம்முடைய பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் அவைகளை பஞ்சைப்போல் வெண்மையாய் மாற்றும் வல்லமையுடையவர் அவர் (ஏசாயா 1:18). "அவன் பாவி, இவள் பாவி" என்று உதறித் தள்ளிவிடுகிறவர் அல்ல அவர். அதற்கு மாறாக, தாம் சிலுவையிலே தம்முடைய கிருபையினால் பலியானதை நினைத்து, நினைத்து, நம்முடைய குறைவுகள் சிறியதோ, பெரியதோ, எதுவாயினும் அவைகளை தம்முடைய பரிசுத்த இரத்தத்தால் கழுவி, நம்மை முழுவதுமாக சுத்திகரிக்கிறார். இதுதான் "கிருபாதார பலியாக" தம்மையே அர்ப்பணித்த ஆண்டவரின் தெய்வீக அன்பின் வல்லமை (ரோமர் 5:20).

பல வருடங்களுக்கு முன்பு கேரளா மாநிலத்தில் "இயேசு அழைக்கிறார்" நற்செய்திக் கூட்டங்கள் நடந்துகொண்டிருந்தபோது, ஒருநாள் மாலையில் ஒரு மனிதன் அந்த வழியே சென்றுகொண்டிருந்தான். அவனுடைய தாயும், மனைவியும் பக்தியுள்ளவர்கள், ஆண்டவர் இயேசுவின்மேல் அன்பு கொண்டவர்கள். ஆனால் அவனோ, ஒரு சிறு தவறு தனக்கு விரோதமாக யாராவது செய்துவிட்டால்போதும்! அதற்காக எதையும் செய்யத் துணிந்தவன்! அன்றும்கூட யாரையோ தீர்த்துக்கட்டுவதற்காக, கையில் அரிவாளோடு சென்றபோதுதான், "என்ன இவ்வளவு பெரிய கூட்டம்! சற்று பார்த்துவிட்டு போகலாம்" என்று, கூட்டத்தின் கடைசியில் நின்றுகொண்டிருந்தான். அந்த சமயம் பார்த்து, தேவனுடைய ஊழியரான சகோதரர் தினகரன் அந்த திசையை நோக்கிக் கையை நீட்டி, ஆண்டவர் அன்புகூர்ந்து அவனுக்கென வைத்திருந்த நன்மைகளை தீர்க்கதரிசனமாகக் கூறினார். அந்த வார்த்தைகள் அவன் உள்ளத்தை நேரடியாகத் தொட்டன. "ஐயோ! நான் எவ்வளவு பெரிய பாவி! எனக்கா ஆண்டவர் இவ்வளவு பெரிய நன்மைகளை வைத்திருக்கிறார், அவருடைய கிருபையை நான் அறியாமல் போனேனே?" என்று அரிவாளைத் தூக்கியெறிந்துவிட்டு, சாட்சி கொடுக்கும் நேரத்தில் மேடையை நோக்கி ஓடிவந்தான். ஆண்டவர் செய்த இந்த அற்புதத்தை யாவரும் அறியும்வண்ணமாக சாட்சியாகக் கூறினான். ஆம், அன்றுமுதல் அவன் குடும்பம் இன்பமாக, தேவ அன்பினால் நிறைந்த ஒரு இல்லறமாக மாறியது.

எனக்கன்பானவர்களே, ஆண்டவர் எவ்வளவு அன்புள்ளவராய் இருக்கிறார் பாருங்கள். அதற்காகத்தான் தம்மையே கிருபாதாரபலியாக சிலுவையிலே அர்ப்பணித்தார் (1 யோவான் 2:2).



<u>ஜெபம்</u>: "அன்பு தெய்வமே, பாவத்தில் ஊறின என் வாழ்வை பரிசுத்தமடைய செய்வதற்காக கிருபாதார பலியாக உம்மையே சிலுவையில் அர்ப்பணித்தீரே. <u>இன்றுமுதல்</u> என் வாழ்வை, குடும்பத்தை இந்த தெய்வீக அன்பினால் ஒன்றிணைத்து, மகிழச் செய்யும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

பலவீனத்தை மாற்றும் சிலுவையின் வல்லமை!

"அவர் பலவீனத்தால் சிலுவையில் அறையப்பட்டிருந்தும், தேவனுடைய வல்லமையினால் பிழைத்திருக்கிறார்; அப்படி நாங்களும் அவருக்குள் பலவீனராயிருந்தும், உங்களிடமாய் விளங்கிய தேவனுடைய வல்லமையினால் அவருடனேகூட பிழைத்திருப்போம்" (2 கொரிந்தியர் 13:4).

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, மனித அவதாரம் எடுத்து, மனிதனுடைய பலவீனங்கள் எல்லாவற்றையும் சிலுவையிலே சுமந்து மரித்தபொழுது, தேவ வல்லமை அவர்மீது இறங்கியது. அவர் உயிரோடு எழுந்தார். மரணத்தை ஜெயிக்கும் பெலன் அவருக்குள் வந்தது (ரோமர் 8:11). இதனால் தான், பாவத்தினால், அக்கிரமத்தினால், பலவீனமடைந்த ஆத்துமா, சிலுவையை நோக்கிப்பார்க்கும்போது, ஆண்டவராகிய இரட்சகரின் அன்பினாலும், தேவ வல்லமையினாலும், அந்த பலவீனத்திலிருந்து ஆச்சரியமான விதத்தில் விடுதலை பெறுகிறது. சரீர பலவீனத்தையும்கூட அப்படியே தேவ வல்லமை விடுதலையாக்குகிறது. ஆம்! சிலுவையை மட்டும் நோக்கிப் பாருங்கள். அப்பொழுது தேவ வல்லமை உங்களிலும் இறங்கி, சரீரத்திலும், ஆத்துமாவிலும் ஒரு புத்துணர்ச்சியைக் கொடுக்கும் (2 கொரி.12:9).

ஒரு திருடன் ஒரு வீட்டிலே இரவு 12 மணிக்கு யாவரும் நன்றாய் உறங்கிக்கொண்டிருந்த நேரத்தில் திருடுவதற்காக சென்றான். எல்லா விலையுயர்ந்த பொருட்களையும் எடுத்து மூட்டை கட்டி வைத்தான். வெளியில் செல்ல ஆயத்தமானபோது, அவனுக்கு வழக்கம்போல் வருகிற ஒரு பயங்கரமான வயிற்று வலி அப்பொழுது பார்த்து வந்துவிட்டது. இப்படியும், அப்படியும் புரண்டான். வயிற்று வலி குறைந்தபாடில்லை. சத்தம் போட்டால் வீட்டார் எழுந்துவிடுவார்களோ என்ற பயம் வேறு! செய்வதறியாது சுற்றும் முற்றும் பார்த்தான். அப்போது சுவற்றில் இயேசு நாதர் சிலுவையில் தொங்கும் காட்சி கொண்ட படம் ஒன்று தொங்கிக்கொண்டிருந்ததைக் கண்டான். உடனே, "இயேசு நாதரே, நீர் சிலுவையிலே என் பலவீனத்தையெல்லாம் சுமந்தீர் என்று சொல்லக்கேட்டிருக்கிறேனே! இப்பொழுது இந்த வயிற்று வலியை மாற்றும், எனக்கு விடுதலை தாரும்" என்று வேண்டுதல் செய்தான். கர்த்தர் அந்த வேண்டுதலையும்கூட உடனே கேட்டார். அந்த வயிற்றுவலி அப்படியே நின்றுபோயிற்று. அவனுக்கு ஒரே ஆச்சரியம்! அடுத்த நாள் ஒரு போதகரிடம் சென்று "ஐயா, இயேசுநாதரைப்பற்றி எனக்கு சொல்லுங்கள்" என்றான். போதகர் அன்போடு, ஆண்டவரைப்பற்றி தெளிவாக அவனுக்கு எடுத்துரைத்தார். அன்றே ஆண்டவருடைய அடியானாக மாறினான். திருட்டுத் தொழிலைவிட்டு தேவனுடைய மகனாக வாழ்ந்தான்.

அன்பானவர்களே, உங்களுக்கும் சரீரத்திலோ அல்லது ஆத்துமாவிலோ இப்படிப்பட்ட பலவீனங்கள் இருக்குமானால், பவுல் அப்போஸ்தலனைப்போல் சிலுவையை நோக்கிப் பாருங்கள். உங்கள் பலவீனங்கள் அனைத்தையும் மாற்ற தேவன் வல்லமையுள்ளவராய் இருக்கிறார் (கலா.2:20).

<u>ஜெபம்:</u> "அன்புள்ள ஆண்டவரே, என் சரீரத்திலும் ஆத்துமாவிலும் ஏற்பட்டுள்ள பலவீனத்தினிமித்தம் நான் உம்மைவிட்டு எவ்வளவு தூரமாய் விலகியிருக்கிறேன். <u>இன்று</u> என்னோடு பேசினதற்காக உமக்கு ஸ்தோத்திரம். இப்பொழுதே என் பலவீனங்கள் அனைத்தையும் நீக்கி புது பெலன் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

மனச்சாட்சியை சுத்திகரிக்கும் மகிமை நிறைந்த இரத்தம்!

"நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச் சாட்சியை செத்த கிரியைகளற சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்" (எபிரெயர் 9:14).

மனச்சாட்சி நமக்கு ஆண்டவரால் அருளப்பட்டிருக்கிறது. அது "இது குற்றம், இது குற்றமல்ல" என்று நம்மோடு பேசுகிறதாயிருக்கிறது (ரோமர் 2:15). அனனியா, சப்பீராள் என்ற தம்பதியர் துர்மனச்சாட்சியினால் தங்கள் வாழ்வையே அழித்துப் போட்டார்கள் (அப்போஸ்தலர் 5–ம் அதிகாரம்). ஆண்டவர் இயேசு தம்முடைய இரத்தத்தை சிலுவையிலே சிந்தியதினிமித்தமாக இந்த துர்மனச்சாட்சி சுத்திகரிக்கப்படுகிறது. தெளிக்கப்பட்ட இரத்தம், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரம், உண்மையான இருதயம், விசுவாசத்தின் பூரண நிச்சயம், இவைகளையெல்லாம் அந்த இரத்தம் நமக்குத் தர வல்லமையுள்ளதாய் இருக்கிறது (எபி. 10:22). இந்த நல்மனச்சாட்சியை பவுல் அப்போஸ்தலன் பெற்று பிரார்த்தனை செய்ததுபோல, தேவனுக்கும் மனுஷனுக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடைய நிலையில் இருக்க அருள்தாரும் (அப். 24:16) என்று நீங்களும் பிரார்த்தனை செய்யுங்கள்.

ஒரு அலுவலகத்தில் பணிபுரிந்த ஒருவர் "இயேசு அழைக்கிறார்" வல்லமைப் பயிற்சி முகாமில் பங்குபெறுவதற்காக தன் அலுவலக மேலதிகாரியிடம் உத்தரவு பெற சென்றபோது அவர் கடினமான வார்த்தைகளைப் பேசி வேதனைப்படுத்தி அனுப்பிவிட்டார். உடன் பணிபுரிந்தவர்கள் "ஏதோ ஒரு பொய்சாட்சியை சொல்லிவிட்டு போய்விடு" என்றனர். ஆனால், அந்த ஊழியரோ, "ஐயா, இந்த முறை நான் அந்த முகாமில் பங்கெடுக்காவிட்டால் இனி என்னால் போக முடியாது, இந்த ஒரு முறை என்னை மன்னித்துக்கொள்ளுங்கள், உங்கள் வார்த்தையை மீறிப் போகிறதற்காய் நான் மிகவும் வருந்துகிறேன்" என்று அந்த அதிகாரிக்கு தாழ்மையோடு, கடிதம் எழுதி வைத்து விட்டு, முகாமிற்கு சென்றுவிட்டார். அங்கு மிகுந்த சந்தோஷத்தோடு தேவபிரசன்னத்தில் அநேக ஆசீர்வாதங்களை பெற்றுக்கொண்டார். பயிற்சி முடிந்து அலுவலகம் திரும்ப வேண்டிய நாளில் "ஆண்டவரே, உம்முடைய ஊழியத்தினிமித்தமாகவே உண்மையுள்ள மனச்சாட்சியோடு நான் முகாமிற்கு போனதை நீர் அறிவீர், எனக்கு உதவி செய்யும்" என்று ஜெபம் செய்துவிட்டு அலுவலகம் சென்றார். அங்கு போனபோது, அந்த அதிகாரி உயர் அதிகாரிகளிடமிருந்து வந்த உத்தரவின்பேரில் இடம் மாற்றப்பட்டு, வேறு ஊருக்கு சென்று விட்டார். வேறொரு புது அதிகாரி அன்பே உருவானவராக, இவருடைய பெயரைச்சொல்லிக் கூப்பிட்டு, "உங்களுக்கு பதவி உயர்வு வந்திருக்கிறது. அதை கூறுவதற்காகத்தான், எப்பொழுது வருவீர்கள் என்று ஆவலோடு காத்திருந்தேன்" என்று அன்போடு பேசினார். அதைக் கேட்ட ஊழியர் மிகுந்த ஆச்சரியமடைந்தார். உண்மையுள்ள மனச்சாட்சியோடு தேவனுடைய காரியங்களில் அவர் கவனமாயிருந்தபடியினாலே, ஆண்டவர் அவரை எத்தனையாய் ஆசீர்வதித்தார் பாருங்கள்.

ஜெபம்: "அன்பு தெய்வமே, இந்த சகோதரனைப்போல் எனக்கும் நல்மனச்சாட்சியைத் தாரும். உம் இரத்தத்தால் கழுவி சுத்திகரித்து தூயோனாக என்னை நீர் இன்று மாற்றப்போகிறதற்காக உமக்கு ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"

சிலுவையின் உபதேசம் தரும் தேவ பெலன்!

“சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்கு பைத்தியமாயிருக்கிறது. இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது”

(1 கொரிந்தியர் 1:18).

சிலுவையைப் பற்றிய உபதேசம் என்பது சிலுவையின்மூலம் ஆண்டவர் நமக்கு அருளிச் செய்திருக்கிற பல்வேறு வகைப்பட்ட ஆசீர்வாதங்களேயாகும். ஒரு மனிதனுடைய வாழ்க்கையை இந்த உபதேசம் அப்படியே தலைகீழாய் மாற்றிவிடுகிறது. பாவியாய் வருகிற மனிதன் இந்த உபதேசத்தைக் கேட்டு பரிசுத்த வாழ்வைப் பெறுகிறான் (2 கொரி.5:17). மட்டுமின்றி, இரட்சிப்புக்குள் வருகிற ஒவ்வொருவருக்கும் இது தெய்வீக பெலனைத் தருகிறது (2 கொரி.12:9). தேவனுடைய வல்லமை அத்தனையாய் சிலுவையின் உபதேசம்மூலமாக ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் அற்புதங்களையும், ஆச்சரியமான காரியங்களையும் செய்கிறது. கடினமான உள்ளம் உடைய மக்கள், கர்த்தரை அறியாத மக்கள், அவரை அறிந்தும் தேடாத மக்கள், இப்படி பல்வேறு தரப்பட்ட மக்களுடைய வாழ்க்கையை அப்படியே தலைகீழாய் மாற்றுகிறது சிலுவையின் உபதேசம்!

ஒரு கணவன் எப்பொழுதும் குடித்துக்கொண்டிருப்பார். வீட்டில் எந்தப் பக்கம் திரும்பினாலும், மதுநிறைந்த புட்டிகள் தான். ஆனால், அவர் மனைவியோ ஆண்டவருடைய அன்பை ருசித்தவள். சிலுவையின் உபதேசத்தின்மூலம் பரிசுத்தமாக்கப்பட்டவள். தன் கணவனுக்காக அல்லும் பகலும் பிரார்த்தனை செய்து வந்தாள். தேவ பெலன் அவளை நிரப்பியதினிமித்தமாக, விசுவாசத்தோடு, அவர்மேல் நம்பிக்கை கொண்டவளாக, கருத்தாய் உபவாசத்தோடு ஜெபம்பண்ணி வந்தாள். ஒருநாள் என்றும் இல்லாதவண்ணமாக, “இயேசு அழைக்கிறார்” தொலைக்காட்சி நிகழ்ச்சியை கவனமாய் அவர் பார்த்துக்கொண்டிருந்ததைக் கண்டாள். அதுமட்டுமின்றி, அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் தாரைதாரையாய் வடிவதையும் கண்டு ஆச்சரியமடைந்தாள். “கடின உள்ளம் கொண்ட என் கணவரா இப்படி அழுகிறார்?” என்று மெதுவாக அருகில் சென்று பார்த்தபோது, அந்த நிகழ்ச்சியில் அளிக்கப்பட்ட ஆண்டவருடைய சிலுவையின் உபதேசம் மூலமாய் தேவன் அவருடைய இருதயத்தை உடைத்திருந்தார். “ஐயோ, நான் எவ்வளவு பெரிய பாவி, என் சரீரத்தை மட்டுமல்லாமல், என் ஆத்துமாவையும் கெடுத்து நஷ்டப்படுத்திவிட்டேனே, எனக்கும் வாழ்வு உண்டா? என்று அவர் அழுது கொண்டிருந்தார். அன்று முதல்முறையாக இயேசு அருளிய தெய்வீக சந்தோஷத்தால் இருவரும் இணைந்து மகிழ்ச்சியாய் தங்கள் குடும்ப வாழ்வை பரிசுத்தமாய் ஆரம்பித்தனர்.

அன்பானவர்களே! ஒருவேளை உங்கள் குடும்பத்தில் நீங்கள் மட்டும் இந்த சிலுவையின் உபதேசத்திற்கு உங்களை ஒப்புக்கொடுத்து, இரட்சிப்பாகிய பெலனை பெற்றிருப்பீர்களானால், இதே உபதேசத்தின் வல்லமை உங்கள் குடும்பம் முழுவதையும் மாற்றியமைக்கும்படி கருத்தாய் ஜெபியுங்கள். கர்த்தர் நிச்சயம் உங்கள் ஜெபத்தைக் கேட்டு, குடும்பமாக இந்த தெய்வீக பெலனால் நிரப்புவார் (அப்.16:31).

ஜெபம்: “அன்பு தெய்வமே, உம்முடைய சிலுவையின் உபதேசம் எத்தனையாய் மக்களுடைய இருதயத்தை உடைக்கிறது. தலைகீழாய் மாற்றுகிறது. இன்று என்னையும், எனக்கு அன்பானவர்களையும்கூட அப்படியே நீர் மாற்றி உம் தெய்வீக பெலனால் நிரப்பும். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!”

இழந்துபோனதைத் தேடி வந்த அன்பு!

"இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்" என்றார் (லூக்கா 19:10).

இன்று அநேக குடும்பங்கள் சந்தோஷத்தை, சமாதானத்தை இழந்து காணப்படுகின்றன. பரிசுத்தத்தை இழந்து, ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தாமையினிமித்தமாக, பல்வேறு வேதனைகளுக்குள்ளாக குடும்பத்தின் மக்கள் காணப்படுகின்றனர் (யாக்.3:14). வேத புத்தகத்திலே சகேயு என்ற மனிதனைக் குறித்து வாசிக்கிறோம். இயேசுவை அவன் தேடி வந்தபொழுது, உள்ளத்தின் ஆழத்தை அறிந்த ஆண்டவர் அவன் வீட்டிற்கு சென்று, "இன்றைக்கு இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது" என்றார். இன்று உங்கள் குடும்ப வாழ்விலும் இதே இரட்சிப்பின் சந்தோஷத்தைக் கொடுக்க ஆண்டவர் ஆயத்தமாயிருக்கிறார் (சங்.51:12). இந்த தெய்வீகமான இரட்சிப்பின் மேன்மையை சகேயு ஆண்டவரைத் தேடி வந்ததினிமித்தமாக, இலவசமாக பெற்றுக்கொள்ளும் பாக்கியத்தை தேவன் அவனுக்கும், அவன் வீட்டாருக்கும் அருளிச் செய்தார். நீங்களும் இந்த அன்பை அனுபவிக்காமல் இழந்து போயிருப்பீர்களானால், அவரண்டை சகேயுவைப்போல் தேடிவந்து, நிறைவாய் பெற்று மகிழுங்கள் (எபி.2:4).

இளம் வாலிபன் ஒருவன் திக்கற்ற நிலைமையிலே தன்னைப் பராமரிக்க யாரும் இல்லாதபோது மிகுந்த வேதனைப்பட்டான். அதுமட்டுமின்றி, அவன் சரீரம் வலிப்பு வியாதியினால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. ஒரு நாளைக்கு பலமுறை அவனுக்கு வலிப்பு வரும். இனி வாழ்ந்து என்ன பயன்? என்று தன் வாழ்வை முடித்துக்கொள்ள தீர்மானித்தான். ஒருநாள் வீட்டைவிட்டு, தான் எங்கே போகிறோம் என்றே தெரியாமல் நடந்து சென்றுகொண்டிருந்த சமயத்தில், தேவ மனிதர் ஒருவர் கூறிய அன்பு வார்த்தைகள் அவன் காதுகளில் விழுந்தன. "மகனே, ஆண்டவர் உன்னை அழைக்கிறார்! வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிற உனக்கு இளைப்பாறுதல் தருவதற்காக உன்னை அழைக்கிறார்" என்று கூறினார். அவனுக்கு ஒரே ஆச்சரியம்! எங்கிருந்து இந்த சத்தம் வருகிறது என்று அந்த திசையை நோக்கி ஓடினான். அங்கே ஒரு போதகர் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருந்தார். அதுமட்டுமின்றி, அவர் பிரார்த்தனை செய்த சமயத்தில் அவன் சரீரத்திலும் ஒரு வல்லமை இறங்கியதை உணர்ந்தான். மனதிற்குள் ஒரே சந்தோஷம்! வீட்டிற்கு திரும்பி சென்றான். அடுத்த நாள் முழுவதும் அந்த வலிப்பு வியாதி அவனுக்கு வரவேயில்லை. மறுநாள் மாலையில் அதே கூட்டத்திற்கு சென்று ஆண்டவர் செய்த நன்மையைக் குறித்து நற்சாட்சி பகர்ந்தான். இயேசுவின் அடியானாக மட்டுமல்ல, ஊழியக்காரனாக மாறும்படியாகவும் அவன் வாழ்வை ஆண்டவரே பொறுப்பெடுத்து ஆசீர்வதித்து வழிநடத்தினார்.

இன்று உங்கள் குடும்பம் இழந்துபோன இன்பத்தை, உங்கள் இருதயம் இழந்துபோன சந்தோஷத்தை யோபுவுக்கு இரட்டத்தனையாய் அருளியதுபோல் ஆண்டவர் மீண்டும் தர ஆவலோடிருக்கிறார் (யோபு 42:10).

<u>ஜெபம்:</u> "என் அன்பு தெய்வமே, எனக்காக சிலுவையிலே அன்புகூர்ந்து, உம்மையே அர்ப்பணித்தீரே. என்னைத் தேடி வந்தீரே. உமக்கு கோடி ஸ்தோத்திரம்! <u>இன்று</u> என் வாழ்விலும் உம்முடைய தெய்வீக அன்பை, சந்தோஷத்தை, சமாதானத்தை தருவதற்காக உமக்கு ஸ்தோத்திரம்! இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

நம்மை நீதிமான்களாக்கும் இயேசுவின் இரத்தம்!

"நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே"
(ரோமர் 5:9).

உலகில் வாழ்கிற எல்லோருமே பரிசுத்தமாக வாழ்வது கிடையாது. ஆண்டவர் சிலுவையிலே இலவசமாகக் கொடுத்த மீட்பின், இரட்சிப்பின் மேன்மையை அறிந்துகொள்பவர்கள் வெகு சிலரே (1 கொரி. 1:18)! சவுல் என்ற ஒரு மனிதன் ஆண்டவருக்கு விரோதமாக பல காரியங்களை செய்து வந்தான். ஆனால், அவன்மீது இரக்கம் கொண்ட தெய்வம் அவனுக்கு தரிசனமானார். அவனுடைய வாழ்வு தலைகீழாய் மாறியது! இதுபோன்றே ஒவ்வொருவர்மீதும் அன்புகூர்ந்து அவர் தேடி வருகிறார் (அப்.9:3–5). அவருடைய அன்பு எத்தனை பெரியது! இதற்காகவே தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தை சிலுவையிலே சிந்தி, சிலுவையை நோக்கிப்பார்க்கிற ஒவ்வொருவருக்கும் இரட்சகர் பாவத்திலிருந்து மீட்பைக் கொடுக்கிறார் (1 பேதுரு 1:19).

சில வாலிபர்கள் எப்பொழுதும் ஒன்றாகக் கூடி ஒரு குழுவாக இருந்தனர். அனைத்து வாலிபர்களும் ஆண்டவர் இயேசுவின் இரட்சிப்பை தங்கள் வாழ்க்கையிலே பெற்றிருந்தபடியினால் மிகவும் சந்தோஷமாக, அவருடைய அன்பைக்குறித்து ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வார்கள். ஆனால், ஒரு வாலிபன் மாத்திரம் எப்பொழுதும் சந்தோஷம் இல்லாதவனாக, சோகமாக இருப்பான். ஆனால், அவர்களோடு ஒன்றாய்தான் இருப்பான், அவர்களுக்கெல்லாம் இது மிகவும் ஆச்சரியமாயிருந்தது. ஏன் இப்படி இருக்கிறாய்? என்று எவ்வளவோ கேட்டுப் பார்த்தும், அவன் அதைக் குறித்து பதிலேதும் சொல்லவில்லை. ஒருநாள் தனிமையில் முழங்காற்படியிட்டு, "ஆண்டவரே, ஏன் எனக்குள் இந்த சோகம்? எல்லோரும் என்னைவிட சந்தோஷமாய் இருக்கிறார்களே, அந்த தெய்வீக சந்தோஷம் எனக்குள் மட்டும் ஏன் இல்லை?" என்று கண்ணீரோடு ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தான். அந்த வேளையில் இயேசுவின் சிலுவைக்காட்சியைக் கண்டான். அதிலிருந்து ஒரு சொட்டு இரத்தம் தன் தலைமேல் விழுவதுபோல் உணர்ந்தான். அவ்வளவுதான்! அவன் இருதயத்திலிருந்த பாரம், கவலை, சோர்வெல்லாம் அந்த வினாடியிலேயே எங்கோ ஓடி மறைந்தது. ஒரு தெய்வீக சந்தோஷம், இணையற்ற அளவிலே அவன் உள்ளத்தை நிரப்பியது. அன்றுதான் உண்மையாகவே, அவன் இரட்சிப்பின் சந்தோஷத்தைப் பெற்றுக்கொண்டான். மற்றவர்களைப்போல் அவனும் நீதியின் வழியிலே நடக்க, மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாய் இருக்க தேவன் கிருபை புரிந்தார்.

எனக்கன்பான சகோதர, சகோதரிகளே, விசேஷமாக, வாலிபப் பிள்ளைகளே, இந்த வாலிபன் பெற்ற இரட்சிப்பின் சந்தோஷம், நீதிமானாகும் அனுபவம் உங்களுக்கும் வேண்டாமா? ஆண்டவரிடம் கேளுங்கள், இன்றே அவர் உங்களுக்கும் தருவார் (ரோமர் 3:23,24).

<u>ஜெபம்:</u> "அன்புள்ள ஆண்டவரே, எனக்காக, நான் இரட்சிப்பின் சந்தோஷம் பெறுவதற்காக, நீதிமானாக வாழ்வதற்காக, உம்மையே சிலுவையிலே அர்ப்பணித்து, உம்முடைய இரத்தத்தை சிந்தினீரே. <u>இன்று</u> உம்முடைய பரிசுத்த இரத்தத்தினால் என்னையும் கழுவி, பாவம், அக்கிரமம், சாபம் யாவும் நீங்கவும், நான் நீதியின் வழிகளில் நடக்கவும் நீரே உமது தெய்வீகக் கிருபையைத் தாரும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே. ஆமென்!"

சமாதானம் தரும் சர்வவல்லவரின் இரத்தம்!

“அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்கு பிரியமாயிற்று”

(கொலோசெயர் 1:20).

அனுதின வாழ்க்கையிலே சமாதானம் இல்லாமல் இன்று தனி மனிதர்களும், குடும்பங்கத்தினர்களும் தவிக்கிற தவிப்பை சமாதானப்பிரபு மாற்றி, உங்கள் உள்ளத்திலும் இல்லத்திலும் சமாதானத்தை தருவதற்கு வாஞ்சையுள்ளவராயிருக்கிறார் (யோவான் 14:27). அதற்காகத்தான் சிலுவையிலே தம் இரத்தத்தையே சிந்தினார். இந்த இரத்தத்தின் மூலமாக நமக்கு கிடைப்பது தான் தெய்வீக சமாதானம். எந்த நிலைமையிலும் தேவ பிரசன்னம் நம்முடைய உள்ளத்தை, இல்லத்தை தெய்வீக சமாதானத்தால் நிரப்பிக் காக்க வல்லமையுள்ளதாய் இருக்கிறது (யோவான் 20:19).

ஒரு கொள்ளைக்காரன் இரவில் பல மனிதர்களிடம் கொள்ளையிடுவான், பெண்களிடமிருந்து அணிகலன்களைத் திருடி தன் மனைவியிடம் கொண்டுபோய் கொடுப்பான். மனைவி அவன் கொண்டு வரும் விதம்விதமான அணிகலன்களை அணிந்து பெருமிதத்தோடு வாழ்ந்து வந்தாள். ஒருநாள் பகலில் ஒரு சாதாரண மனிதர் ஆண்டவர் தரும் சமாதானத்தைப் பற்றி அழகாய் போதித்துக் கொண்டிருந்ததை கேட்டான். “ஐயோ, நான் ஒரு கொள்ளைக்காரனாய் இருப்பதினிமித்தம் என் உள்ளத்தில் எத்தனை பயம், யார் பார்த்து விடுவார்களோ, காவல்துறையினர் என்னைக் கண்டு பிடித்துவிடுவார்களோ, என்றெல்லாம் எவ்வளவாய் பயந்து பயந்து வாழ வேண்டியதாய் இருக்கிறது, உள்ளத்திலே உண்மையான சமாதானம் இல்லையே” என்று தன் வாழ்வை ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தான். அப்பொழுது அந்த மனிதர், இயேசுவைப் பற்றி, அவர் சிலுவையிலே சம்பாதித்த தெய்வீக சமாதானத்தைப் பற்றி கூறக் கூற, அவன் தன்னையு மறியாமல் ஆண்டவருக்கு தன்னை ஒப்புக்கொடுத்தான். புது மனிதனாக புது இருதயம் பெற்றான். அதன்பிறகு, அவன் உள்ளத்தில் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் பாவம் நீங்கி சுத்திகரிக்கப்பட்ட நிலையினிமித்தம், எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதான மானது வாழ்வு முழுவதையும் நிரப்பியது. பயம், போராட்டம் யாவும் ஓடி மறைந்தன.

எனக்கன்பானவர்களே, இயேசு கிறிஸ்துவின் இரத்தம் எவ்வளவு வல்லமையுள்ளது பாருங்கள்! கொடூரமான மக்களுடைய கல்லான இருதயங்களையும்கூட சதையான இருதயமாக மாற்றி (எசே.11:19), உலகம் தரக்கூடாத தெய்வீக சமாதானத்தை நிறைவாய் அருளிச் செய்யும் வல்லமை படைத்ததாயிருக்கிறது. உங்கள் வாழ்விலும் கூட பாவங்கள், கோபங்கள், பகைகள் போன்ற தீமைகளினால் குறைவுகள் காணப்படுமாயின், ஆண்டவர் சமுகத்தில் அறிக்கையிட்டு, “நீர் சிலுவையில் சிந்திய உம் தூய இரத்தத்தால் என்னையும் கழுவும்” என்று கெஞ்சுங்கள். அப்பொழுது “இரட்சிப்பின் ஊற்றுகளிலிருந்து தண்ணீர் மொண்டுகொள்ளும்” பாக்கியத்தை கர்த்தர் உங்களுக்கு அருளிச் செய்வார் (ஏசாயா 12:3).

ஜெபம்: “அன்புள்ள தெய்வமே, இந்த தெய்வீக சமாதானத்தால் என்னை நிரப்பினதற்காக உமக்கு ஸ்தோத்திரம்! இந்த உலக மக்கள் மத்தியில் நானும் ஒரு சாட்சியாய் இருக்கவும், சமாதான வழியிலே நடக்கவும் இன்றுமுதல் எனக்கு கிருபை தாரும். என் வாழ்விலே என்றென்றும் உம் சமாதானம் நிறைவாயிருக்கும்படி அருள்தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!”

நம்மை பரிசுத்தராக்கும் சிலுவை மரணம்!

"முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும் பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்" (கொலோசெயர் 1:21).

இன்று அநேக மக்கள் ஆண்டவரை அறியாதவர்களாயும், "கடவுளே இல்லை" என்று அவரை மறுதலிக்கிறவர்களாயும், ஏன் அவருக்கு சத்துருக்களாயும்கூட இருக்கிறார்கள். இதனிமித்தமாக பரிசுத்த வாழ்வு வாழ முடியாத சூழ்நிலையிலே அவர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மக்களையும் பரிசுத்தராக, குற்றமற்றவர்களாக, கண்டிக்கப்படாதவர்களாக மாற்ற அவர் வாஞ்சிக்கிறார். அத்தகைய மக்களையும்கூட, "என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா" என்று அன்போடு கேட்கிறார் (நீதி.23:26). என் அன்பு சகோதரனே, சகோதரியே! நீயும் இந்த நிலைமையிலே இருக்கிறாயா? ஆண்டவர் உன்னையும் அழைக்கிறார். இன்று அவரை நோக்கிப் பார்க்கிற ஒவ்வொருவருக்கும் தமது இரத்தத்தின் மூலம் அவர் பரிசுத்த வாழ்வை அற்புதமானவிதத்திலே கொடுக்க வல்லமையுள்ளவராயிருக்கிறார் (1 யோவான் 1:7)!

ஒரு வீட்டிலே இரண்டு சகோதரிகள் இருந்தனர். ஒருவள் அழகும், அறிவும் மற்றும் பல ஆசீர்வாதங்களும் நிரம்பியவள். அதனிமித்தம் தன்னைக் குறித்து அதிக பெருமையோடிருந்தாள். ஆனால், அடுத்த சகோதரியோ, அழகிலும் மற்றும் எல்லாவற்றிலும் சற்று குறைவானவளாய் இருந்தாள். இருவருக்கும் திருமணம் நடந்தது. முதலில் குறிப்பிட்ட பெண் அந்தஸ்து உள்ள ஒருவருக்கு வாழ்க்கைத் துணையாகி, அனைத்து வசதிகளோடும் நல்ல நிலைமையிலே இருந்தாள். ஆனால், அடுத்த பெண்ணோ சாதாரண நிலையிலிருந்த ஒருவருக்கு திருமணமாகி, சாதாரண எளிய வாழ்வையே கொண்டிருந்தாள். ஆனால், சில வருடங்கள் கழித்து, நன்றாய் வாழ்ந்திருந்த சகோதரி, ஆண்டவரை அறியாதிருந்தபடியினால், அவருக்கு முதலிடம் கொடுக்காமல் இருந்தபடியினால், சமாதானத்தை, சந்தோஷத்தை இழந்து, குடும்ப வாழ்வில் பிரிந்து போகும் நிலையிலிருந்தாள். ஆனால், அடுத்த சகோதரியோ, கணவனோடு மனம் ஒத்து தெய்வீக வாழ்வை வாழ்ந்து கொண்டிருந்ததினால் மகிழ்ச்சியாய் இருந்தாள். தன் சகோதரியைப்பற்றி கேள்விப்பட்டு, வேதனையோடு அவளிடம் போய், சிலுவை மரணத்தினாலே தெய்வீக சந்தோஷம் கொடுக்கும் ஆண்டவரை நோக்கி தன் சகோதரியோடு சேர்ந்து கருத்தாய் பிரார்த்தனை செய்து வந்தாள். அதன்மூலம் அந்த சகோதரி தெய்வீக சந்தோஷம், பரிசுத்த வாழ்வு எல்லாவற்றையும் பெற்றுக்கொண்டாள். "எனக்கு இனி என்ன நடந்தாலும் பரவாயில்லை, இது போதும், என் ஆண்டவரை நானும் அறிந்துகொண்டேனே" என்று அகமகிழ்ந்தாள்.

அன்பு சகோதர, சகோதரிகளே, சிலுவையில் ஆண்டவர் தம்மையே பலியாக ஒப்புகொடுத்ததினிமித்தம், அருமையான குற்றமற்ற பரிசுத்த வாழ்வை அவர் கொடுக்கிறார். நீங்களும்கூட உங்கள் வாழ்வை ஆராய்ந்து பார்த்து, அவர் தரும் பரிசுத்த வாழ்வை பெற்று மகிழுங்கள் (சங்.25:8,12).

<u>ஜெபம்:</u> "அன்புள்ள ஆண்டவரே, என்னையும்கூட பரிசுத்த வழியிலே நடத்த, நீர் சிலுவை மரணத்தில் உம்மையே அர்ப்பணித்து, இரத்தத்தை சிந்தி, வேதனை வழியாய் கடந்து சென்றீரே! நீர் விரும்புகிற பரிசுத்த வாழ்வை <u>இன்றும் என்றும்</u> எனக்கு கிருபையாய் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

உண்மையும் நீதியுமுள்ள இரட்சகர்!

"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" (1 யோவான் 1:9).

நம்முடைய வாழ்க்கையிலே நம்மையுமறியாமல் எவ்வளவோ குறைவுகள் காணப்படுகிறது. நாம் எல்லோரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம் (யாக். 3:2) என்று வேதம் சொல்லுகிறது. "நல்லவன் ஒருவனும் இல்லையே" என்று ஆண்டவர் இயேசுவே திருவாய் மொழிந்தருளியிருக்கிறார். இப்படியிருக்க, "நான் குறைவில்லாதவன், நல்லவன்" என்று யாரால் சொல்ல முடியும். அதற்கு பதிலாக முழங்காற்படியிட்டு, பணிவோடு, "ஆண்டவரே, என் குறைவுகளையெல்லாம் நீர் மன்னியும், உம்முடைய இரத்தத்தால் என்னைக் கழுவி சுத்திகரியும்" என்று அறிக்கையிட்டுப் பாருங்கள் (1 யோவான் 1:7). அப்பொழுது மேற்கண்ட வசனத்தின்படி, நம் பாவங்களை மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார் என்பது விளங்கும்.

ஒரு சிறுவன் விளையாடிக்கொண்டிருந்தபோது, தாய் அருமையாய் பல வருடங்களாக பத்திரமாய் வைத்திருந்த அழகான ஒரு கண்ணாடி கூஜாவை உடைத்துவிட்டான். அந்த சமயத்தில் தாயும் தகப்பனும் வீட்டில் இல்லை. அவனது சகோதரி இதை பார்த்துவிட்டாள். அம்மாவிடம் இதைச் சொல்லிவிடுவாளோ என்று பயந்து, அவளிடம் போய், "அம்மாவிடம் சொல்லிவிடாதே," என்று அவளை கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். அந்த சகோதரியோ, இதுதான் தருணம் என்று அவனிடம் ஏராளமாக வேலை வாங்குவாள். அவனும் வேறு வழியின்றி, சகோதரி சொல்லும் காரியங்களையெல்லாம் பொறுமையாக செய்து வந்தான். ஒருநாள், "இதை நான் ஏன் மூடிமறைக்க வேண்டும்? அம்மாவிடம் நேரடியாக சொல்லிவிடலாம்! அவர்கள் அடித்தாலும் பரவாயில்லை, வாங்கிக் கொள்ளலாம்" என்று நினைத்து, அம்மாவிடம் ஓடிச் சென்று நடந்ததையெல்லாம் கூறினான். தாயோ அன்பே உருவானவளாக, "மகனே, நீ உடைத்தது தவறு தான், அந்த உண்மையை சொல்லி விட்டாயே, அது எனக்கு போதும், இனி ஜாக்கிரதையாய் பொருட்களை உடைக்காமல் விளையாடு" என்று சொல்லி அனுப்பினாள். இது அவன் சகோதரிக்கு தெரியாது. அவள் வழக்கம்போல் அவனை மிரட்டி வேலை வாங்க வந்தாள். அவன் உடனடியாக என்ன சொன்னான் தெரியுமா? "இனி நீ என்னை ஏமாற்ற முடியாது. அம்மாவிடம் நடந்ததையெல்லாம் நானே சொல்லி விட்டேன். அம்மாவும் என்னை மன்னித்துவிட்டார்கள்" என்று சந்தோஷத்தோடு கூறினான்.

ஆம், பிரியமானவர்களே! நாமும் இன்று ஏன் பாவத்தை மறைத்து வைக்க வேண்டும்? அவரிடம் நம் பாவங்களை, குற்றங்களை, குறைவுகளை சிறு குழந்தையைப்போல், ஒன்றையும் மறைக்காமல் அறிக்கையிடுவோமானால், அவர் மன்னித்து, மறந்து நமக்கு சந்தோஷம் கொடுப்பார் அல்லவா? (நீதி.28:13).

ஜெபம்: "அன்பு தெய்வமே, உமக்கு முன்பாக ஒன்றையும் மறைக்க முடியாது. என் உள்ளத்தை நீர் அறிந்திருக்கிறீர். உமக்கு முன்பாக என்னை முற்றிலுமாய் அர்ப்பணிக்கிறேன். என் பாவங்களை மன்னித்து, தூய்மையாக்கி, இன்றுமுதல் உம் விருப்பப்படி வழிநடத்தும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் பிதாவே, ஆமென்!"

பெரிதான இரட்சிப்பைக் குறித்து கவலையற்றிருக்கிறோமா?

"அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்தஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படி தப்பித்துக்கொள்ளுவோம்" **(எபிரெயர் 2:4).**

ஆம், பிரியமானவர்களே, ஆண்டவர் சிலுவையிலே தம்மையே அர்ப்பணித்து நமக்காக சம்பாதித்து வைத்திருக்கும் ஆன்மீக இரட்சிப்பு எவ்வளவு விலையேறப்பெற்றது பாருங்கள்! அநேகர் அதன் மேன்மையை அறியாமல் போகிறார்கள். நான் "கிறிஸ்தவன்" என்று சொல்லி பெருமைப்படுகிறார்கள், ஆனால், உண்மையான கிறிஸ்தவன் யார்? இயேசு அருளிய இரட்சிப்பை தன் வாழ்க்கையிலே பெற்றிருக்கிறவனே உண்மையான கிறிஸ்தவன் (கலா.5:24). எல்லாப் பாவங்களினின்றும் அவரே நம்மை விடுதலையாக்குகிறார், பரிசுத்தமான வாழ்வையும் முடிவிலே நித்திய ஜீவனையும் அவர் நமக்கு கொடுக்கிறார் (ரோமர் 6:23). இதுதான் உண்மையான இரட்சிப்பின் பேராசீர்வாதங்கள். இதை அறியாமல், இதன் மேன்மையை அறியாமல், இன்று எத்தனையோ பேர் "பெயரளவில் கிறிஸ்தவர்களாய்" வாழ்கிறார்கள். என் அன்பு சகோதரனே, சகோதரியே, உன் வாழ்க்கையை சற்று ஆராய்ந்து பார். இந்த இரட்சிப்பு உன் வாழ்க்கையை அலங்கரித்திருக்கிறதா? அல்லது பாவம் வாழ்வில் ஒரு பக்கம், ஆண்டவரைத் தேடுவது மற்றொரு பக்கம் என்று அரைகுறையான பக்தி வாழ்வில் திருப்தியடைந்திருக்கிறீர்களா?

ஒரு குடும்பத்தில் ஒரே ஒரு பெண் மாத்திரம் இந்த இரட்சிப்பின் மேன்மையை தன் வாழ்வில் அனுபவித்து வந்தாள். அந்த குடும்பத்தில் எல்லாரும் அரைகுறையான பக்தி வாழ்வு கொண்ட கிறிஸ்தவர்கள். இவர்களுக்கு மத்தியில் அவள் உண்மையான ஆண்டவருடைய அடியாளாய் வாழ்வது, யாவருக்கும் வேடிக்கையாக இருந்தது. ஆனால், அவளோ, எல்லாவற்றின் மத்தியிலேயும், "ஆண்டவரே, என்னை இரட்சித்த உம்முடைய அன்பு எவ்வளவு பெரியது, என் குடும்பத்தினரும் கண்கள் திறக்கப்பட்டவர்களாய் இந்த அனுபவத்தை பெற்றுக் கொள்ளும்படி அருள்தாரும்" என்று அனுதினமும் கருத்தாய் ஜெபித்து வந்தாள். உபவாசமிருந்தும் ஒவ்வொருவருக்காகவும், பெயரை சொல்லி சொல்லி, ஜெபம் செய்து வந்தாள். கர்த்தர் அவளுடைய ஜெபத்தையெல்லாம் கேட்டு, ஒவ்வொருவராக அற்புதவிதமாக மாறவும், ஆண்டவருடைய அன்பை, அதாவது அவருடைய விலையேறப்பெற்ற இரட்சிப்பின் மேன்மையை அறியும்படியும் அருள்புரிந்தார். அபிஷேகத்தினாலும் அவளை நிரப்பினதுபோல அவர்கள் ஒவ்வொருவரையும் நிரப்பினார்.

அன்பானவர்களே, இந்த அனுபவம் உங்களுக்கும், உங்களை சார்ந்தவர்களுக்கும் அவர் கொடுக்க வாஞ்சையுள்ளவராயிருக்கிறார். காலம் கடைசியாய் இருக்கிறது. கர்த்தருடைய நாள் வரும் முன்னதாக எழுந்து செயல்படுவோம் (1 கொரி.7:29–31).

<u>ஜெபம்:</u> "அன்புள்ள ஆண்டவரே. சிலுவையிலே நீர் உம்மையே அர்ப்பணித்து எத்தனை அருமையாக "இரட்சிப்பை" ஆயத்தம் செய்து வைத்திருக்கிறீர். அதை நானும், என் குடும்பத்தினரும், மற்றவர்களும் அறியும்படியாக, ஆசீர்வாதம் பெறும்படியாக <u>இன்று</u> நீர் உதவி செய்யும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் பிதாவே. ஆமென்!"

கிறிஸ்து தரும் ஜீவனுள்ள வாழ்வு!

"கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்" (கலாத்தியர் 5:24).

உலக வாழ்க்கையிலே பலவிதமான மக்களை பார்க்கிறோம். உண்மையான தேவ பக்தி கொண்டவர்களைக் காண்பது மிகவும் அரிதாய் இருக்கிறது. இன்றைய நாட்களிலே பாவம் மலிந்து கிடக்கிறது. மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை (1 யோவான் 2:16) இவைகள் மனிதருடைய வாழ்க்கயில் நிறைந்து கிடக்கிறதை காண்கிறோம். அதற்கேற்றாற்போல் சினிமா போன்ற ஏராளமான தீய காரியங்கள், மக்களை பாவ வழியிலே எளிதில் திருப்புகிறதையும் காண்கிறோம். ஆனால், ஆண்டவர் அவரைத் தேடி வருகிற மக்களையோ "கிறிஸ்துவினுடையவர்களாக" புது ஜீவன் பெற்றவர்களாக மாற்றிவிடுகிறார் (1 பேதுரு 2:9).

ஒரு அலுவலகத்தில் எல்லோருடைய கண்களும் ஒரு மனிதன் மேல் இருந்தது. காரணம், அவர் அலுவலகத்தில் தானுண்டு, தன் வேலை உண்டு என்று எல்லாவற்றிலும் மிகவும் கவனமாய் இருப்பார். பேசும் வார்த்தையிலும்கூட ஞானமாய் அளவோடு பேசுவார். இது எல்லோருக்கும் அவர்மீது ஒரு கனத்தை கொடுத்தது. ஒருநாள் அவர்களுள் ஒருவர் அவரண்டை சென்று, "எப்படி உங்களால் இவ்வாறு இருக்க முடிகிறது?" என்று கேட்டார். அவர் என்ன பதில் சொன்னார் தெரியுமா? "ஐயோ என் பழைய வாழ்வை நினைத்துப் பார்க்கவே அருவருப்பாய் இருக்கிறது. அவ்வளவு பயங்கரமான ஒரு மனிதனாய் நான் வாழ்ந்தேன். என் மனைவி, பிள்ளைகளை கோபம் வரும்போதெல்லாம் அடித்து நொறுக்குவேன். ஒருநாள் ஆண்டவர் இயேசுவைப்பற்றி கேள்விப்பட்டேன். சிலுவையண்டையில் ஓடி வந்தேன். என் குறைவுகளையெல்லாம் அறிக்கையிட்டேன். என் குணங்களையெல்லாம் அவர் மாற்றினார். அவருடைய இரத்தம் என்னை பரிபூரணமாய் சுத்திகரித்தது. என் வாழ்வு அவரால் முற்றிலுமாய் மாற்றப்பட்டது. அதினிமித்தம் தான் இன்று புது ஜீவன் பெற்ற ஒரு மனிதனாக, 'கிறிஸ்துவை உடையவனாக' வாழ்கிறேன்" என்றார்.

எனக்கன்பானவர்களே, இந்தவித சாட்சியை நாமும் பெற்றுக்கொள்ள, அவருடைய ஜீவன் நமக்குள் பாய்ந்து சென்று மெய்யான கிறிஸ்துவை உடையவர்களாக நம்மையும் மாற்றும் (நீதி.8:35). உலகத்தின் மக்களுக்கேற்றபடி நடந்து, கிறிஸ்துவைக் காலின் கீழ் மிதித்து நடக்கிற பயங்கரமானதும், பெயரளவில் கிறிஸ்தவர்களான, கொடிய வஞ்சகம் நிறைந்த வாழ்வை முற்றிலுமாய் உதறித்தள்ளி, "ஆண்டவரே! நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்?" என்று ஆண்டவரிடம் கேட்டு (அப்.9:6), அவர் காட்டும் தெய்வீக வழியில் நடந்து, "மெய்யான ஒளிவீசும் கிறிஸ்தவர்களாக" வாழ்ந்து காட்டுவோம் (ஏசாயா 60:1).

ஜெபம்: **"அன்பு தெய்வமே, நீர் சிலுவையிலே சம்பாதித்துக் கொடுத்த "இரட்சிப்பு" எத்தனையாய் வாழ்வை மாற்றுகிறது என்று அறிந்துகொண்டேன். இன்று என் வாழ்விலும் இந்த ஜீவன் பிரவாகித்து ஓட, நானும் உண்மையான கிறிஸ்துவை உடையவனாக வாழ்ந்து காண்பிக்க எனக்கும் அருள்தாரும். நீர் அப்படியே செய்கிறதற்காக உமக்கு கோடானகோடி ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் பிதாவே. ஆமென்!"**

மன்னித்து மறக்கிற தெய்வீக அன்பு!

“நான் அவர்கள் அநியாயங்களை கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்”
(எபிரெயர் 8:12).

இந்த உலகத்தில் மனிதர்கள் தவறு செய்யும்பொழுது, அதை அப்படியே மனதில் வைத்துக் கொள்கிறார்கள். அதை எப்படி வஞ்சம் தீர்ப்பது, பழி வாங்குவது என்று துடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், ஆண்டவரோ, அதற்கு நேர்மாறாக, அன்பே உருவானவராக, ஒரு மனிதன் தன் தவறுகளை உணர்ந்து அவரண்டை வரும்போது, அவன் செய்த குற்றங்கள் எப்பேர்ப்பட்டதாயிருந்தாலும் அவைகளை மன்னித்து மறந்து (ஏசாயா 1:18), தம்முடைய இரத்தத்தால் கழுவி, சுத்திகரித்து புதுவாழ்வை அவனுக்கு கொடுக்கிறார் (ஏசாயா 38:17; மீகா 7:19).

கீழ்ப்படியாத கெட்ட குமாரன் ஒருவன் தன் தகப்பனுடைய அன்பை அலட்சியமாய் எண்ணி, தகப்பனை வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டிவிட்டு, எங்கோ போய் மறைந்தான். அவனிடமிருந்த பணமெல்லாம் தீய நண்பர்களின் கூட்டுறவால் சில நாட்களுக்குள்ளாக கரைந்து போனது. நண்பர்கள் மெல்ல மெல்ல மறைந்து போனார்கள். தனிமையிலானான். “ஐயோ, சாப்பிட ஒன்றுமில்லையே” என்று கலங்கினான். தகப்பனுடைய அன்பை நினைத்தான். உடனே அவருக்கு ஒரு கடிதம் எழுதினான். “உம்மை ‘அப்பா’ என்று அழைக்க நான் குறைவு உள்ளவன். ஆனால், என் தவறை நான் உணர்ந்து உமக்கு கடிதம் எழுதுகிறேன். நீர் என்னை திரும்பவும் ஏற்றுக்கொள்வீரா?” என்று எனக்குத் தெரியவில்லை. நம் வீட்டிற்கு அருகே செல்லும் ரயிலில் வருவேன். நீர் என்னை திரும்பவும் ஏற்றுக்கொள்வீரானால், நம் வீட்டுக்கு முன்பு நிற்கிற பெரிய மரத்தில் ஒரே ஒரு வெள்ளைக் கொடியை உயரத்தில் கட்டி வைப்பீரானால், அதைப் பார்த்து நீர் என்னை மன்னித்து ஏற்றுக்கொள்வீர் என்று நம்பி, உடனடியாக ரயிலிலிருந்து இறங்கி வீட்டிற்கு வருவேன், இல்லாவிட்டால் அப்படியே என் வாழ்வை எப்படியோ முடித்துக்கொள்வேன்” என்று எழுதியிருந்தான். கடிதத்தை வாசித்த தகப்பனின் உள்ளம் உருகியது. “ஐயோ, என் மகன் வருகிறேன் என்று எழுதியிருக்கிறானே, எனக்கு அது போதும்” என்று எண்ணியவராய், அந்த மரத்தில் ஒரு வெள்ளைக் கொடி மட்டுமல்லாமல், மரம் முழுவதும் பல வெள்ளைக் கொடிகளை கட்டி வைத்தார். ஒருவேளை ஒரு கொடியைக் கட்டினால் என் மகன் கண்ணில் அது படவில்லையென்றால் அவன் வாழ்வு என்ன ஆகும் என்ற பயத்தினால் அப்படி செய்தார். மரம் முழுவதும் வெள்ளை கொடி கட்டப்பட்டிருப்பதை கண்ட மகனின் உள்ளம் சுக்குநூறாக உடைந்தது. தகப்பனுடைய அன்பு எவ்வளவு பெரியது என்பதைக் கண்டு, தகப்பனை நோக்கி ஓடோடி வந்து அவரை கட்டிப் பிடித்துக் கொண்டான்.

அன்பானவர்களே, சாதாரண மனிதரான ஒரு தகப்பனுக்கு இவ்வளவு அன்பு இருக்குமானால், நம்முடைய தெய்வீகத் தகப்பன் நம்மீது எவ்வளவு அன்புள்ளவராய் இருக்கிறார் என்பதை எண்ணிப் பார்த்திருக்கிறோமா? (யோவான் 3:16; எபே.5:2).

<u>ஜெபம்</u>: “அன்பு இரட்சகரே, <u>இன்று</u> அந்த மகனைப்போல நானும் ஓடோடி உம்முடைய செட்டைகளுக்குள் மறைந்துகொள்ள வருகிறேன். என்னை மன்னித்து, என் குறைவுகளை மறந்து, உம்முடைய மகனாக, மகளாக என்றென்றும் வாழ கிருபை புரிவீர் என்று நம்பி உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன், பிதாவே, ஆமென்!”

எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படுவதே தேவ சித்தம்!

''எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்'' (1 தீமோத்தேயு 2:4).

மனிதன் இவ்வுலகில் அவதரிக்கும்பொழுதே பாவத்தில் ஊறினவனாகப் பிறக்கிறான். விசேஷமாக, ஒரு சிறு குழந்தை பிறந்து சில மாதங்களேயாகி, கொஞ்சம் அறிவு தெரிந்தவுடனே, தன் தாய் வேறு ஏதாவது ஒரு குழந்தையைத் தூக்கினால் அதற்கு பொறாமை வருகிறது. பேச முடியாத நிலைமையிலும் ஓ! என்று அழுகிறது. இன்னும் கொஞ்சம் வளர்ந்தவுடன், தன் பொருட்களை மற்ற குழந்தைகளுக்குக் கொடுக்க மறுக்கிறது. இதைத் தான் சங்கீதம் 51:5–ல், ''என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்'' என்று குறிப்பிட்டிருப்பதை பார்க்கிறோம். ஒவ்வொரு மனிதனும் பாவத்தில் பிறந்திருக்கிறபடியினால், அதிலிருந்து இரட்சிப்பு அதாவது பாவத்தினின்று முற்றிலுமான விடுதலை நிச்சயமாக தேவை. அதற்காகவே சிலர் ஆடு, மாடு போன்றவைகளின் இரத்தத்தை பலியாக செலுத்துகிறார்கள். இதனால் ஒரு நிரந்தர நிவிர்த்தியும் பெறவே முடியாது. அதற்காகத்தான் தேவாதி தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை எல்லோருக்கும் இரட்சிப்பை அருளும் பாவ பிராயச்சித்த பலியாக இவ்வுலகில் அனுப்பி வைத்தார் (யோவான் 3:16; 1 யோவான் 3:1).

நானும்கூட கிறிஸ்தவக் குடும்பத்திலே பிறந்த ஒரு பெண்ணாக இருந்தபோதிலும் கிறிஸ்து இலவசமாக அருளும் இரட்சிப்பைப் பெறாமல், பெயரளவில் கிறிஸ்தவளாக அவரைப் பின்பற்றினேன். ஆனால் ஒரு நாள் என் பெற்றோரின் அன்புக்காக ஏங்கி, தனிமையில் தவித்து நின்ற வேளையிலே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னை அவரே தேடி வந்தார். தன்னுடைய அன்பினால் என்னுடைய உள்ளத்தை நிறைத்தார். அன்றே அவர் எனக்கு உற்ற நண்பராகவும் மாறினார். அவர் தந்த விலையேறப்பெற்ற இந்த இலவசமான இரட்சிப்பை என் வாழ்வில் கொடுத்ததோடு, இன்று அநேகரை இரட்சிப்பதற்கு ஒரு கருவியாகவும் உபயோகித்து வருகிறார். ஆண்டவருடைய அன்பு எத்தனை பெரியது! இவ்வளவு பெரிதான இரட்சிப்பை நானும், என் வீட்டார் அனைவரும் அறிந்து, அவருக்கேற்ற வாழ்க்கை வாழும் பாக்கியத்தை அருளிய ஆண்டவர் உங்களுக்கும் அதே ஆசீர்வாதம் அருளுவார்.

அன்பானவர்களே, இந்த அன்பு <u>இன்று</u> உங்கள் வாழ்வையும் பாவத்தின் அடிமைத்தனம், பாவ மோகங்கள், இச்சைகள் யாவற்றினின்றும் விடுதலையாக்கும். ஆம்! ஆண்டவர் பட்சபாதமற்றவர் (அப்.10:34; கலா.2:6; ரோமர் 2:11). எந்தவித வேறுபாடுமின்றி, எவரையும் பாவம், சாபம், கோபம் பொல்லாங்கு நிறைந்த வாழ்க்கை, அடிமைத்தனங்கள் யாவற்றினின்றும் விடுதலையாக்கி, தாம் சிலுவையில் சிந்திய இரத்தத்தினாலே கழுவி சுத்திகரித்து, பூரண இரட்சிப்பினால் அலங்கரிக்கவே சித்தமுள்ளவராயிருக்கிறார்.

<u>ஜெபம்:</u> ''அன்பின் ஆண்டவரே, இதுவரை இரட்சிப்பின் மேன்மையை அறியாதிருந்த என்னையும் இரட்சித்து, <u>இன்றுமுதல்</u> உம்முடைய பிள்ளையாக மாற்றும். உம்முடைய தெய்வீக சித்தத்தை என் வாழ்விலும் நிறைவேற்றும். அதோடுகூட அநேகர் இரட்சிக்கப்படுவதற்கு நான் ஒரு பாத்திரமாக மாற எனக்கும் அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!''

கர்த்தர் என் வெளிச்சமும் இரட்சிப்புமானவர்!

"கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்கு பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்?" (சங்கீதம் 27:1).

இன்றைய உலகத்தை கண்ணோக்கிப் பார்க்கும்பொழுது, எங்கும் இருள் நிறைந்திருப்பதையே நம்மால் பார்க்க முடிகிறது. தினசரி செய்தித்தாளில் பார்ப்போமானால் கொலை, கொள்ளை, விபத்து, விபச்சாரம் என்று பல்வேறான இருளின் மூலம் மக்கள் படுகிற வேதனை! குடும்பங்களிலே சந்தேகங்கள், சண்டைகள், பிரிவினைகள், அவதூறான பேச்சுகள், பொறாமை, எரிச்சல் போன்ற தீய குணங்கள்! மக்கள் இருளுக்குள் தடுமாறி வாழ்வதையே பார்க்கிறோம். இந்த கொடூர இருளை மாற்றியமைக்க யாரால் தான் கூடும்? இவர்களை ஒளிக்குள் கொண்டு வருவதற்கான வழி எது?

ஆம்! அதை செயலில் ஆற்றவே இயேசுகிறிஸ்து இருளை நீக்கும் ஒளியாக, மாபெரும் அருள் ஜோதியாக இவ்வுலகிற்கு இறங்கி வந்தார் (யோவான் 1:9). எந்த மனுஷனையும் பிரகாசிக்க செய்வதே அவருடைய சித்தம் (ஏசாயா 58:10). "மூடனோ இருளிலே நடக்கிறான்" (பிர.2:14). ஆனால், கர்த்தரை நோக்கிப் பார்க்கிறவர்களுக்கு அல்லது அவரை உண்மையாய்த் தேடுகிறவர்களுக்கு அவர் ஒளி தரும் விளக்காய், இருளை வெளிச்சமாக்குகிறவராயிருக்கிறார் (2 சாமு.22:29; சங்.18:28).

ஒரு குடும்பத் தலைவன் எல்லாவித அடிமைத்தனத்திற்கும் உட்பட்டிருந்தான். குடி வெறி, கொலை, கொள்ளை இவைகளெல்லாம் அவன் வாழ்வில் சாதாரணமான காரியம். ஆனால், மனைவியோ சன்மார்க்க கொள்கை உள்ளவள். அதிகம் பக்தி நெறியில் நடக்காவிட்டாலும், ஒரு தெய்வீக பயம் உள்ளத்தின் ஆழத்தில் கொண்டிருந்தபடியால் இவைகளையெல்லாம் செய்ய வேண்டாம் என்று அடிக்கடி அவனிடம் கூறியும் பிரயோஜனமில்லை. இந்த கவலையினால் அவனுடைய அன்பு மனைவி வியாதிப்பட்டாள். மரணமும் அவளை சமீபித்தது. இந்த நிலைமையில் அவனுக்கு ஒரே கவலை. எப்படியாவது என் மனைவி பிழைக்க வேண்டுமே என்று அழுதான். மனைவி சொன்னாள்: "வைத்தியர்கள் வேண்டாம், ஒரு நல்ல தேவனுடைய மனுஷனை அழைத்து வாருங்கள். அவர் ஜெபம் பண்ணினால் நான் உயிர் பெற்று எழுவேன்" என்றாள். இவனுக்கு யாரிடம் போவதென்று தெரியவில்லை. எப்படியோ ஒரு ஊழியரிடம் போய் காரியங்களைக் கூறினான். அவர் ஆண்டவருடைய அன்பினால் நிறைந்தவராய் உடனடியாக எழுந்து சென்று அந்த பெண்ணுக்காக பாரத்தோடு ஜெபித்தார். கர்த்தர் ஏழை ஊழியரின் கண்ணீர் நிறைந்த ஜெபத்தைக் கேட்டார் (சங்.34:6). அந்த பெண் சுகமாகி கொஞ்சம் கொஞ்சமாக எழுந்து நடமாட ஆரம்பித்தாள். அந்த அற்புதத்தைக் கண்ட அந்த குடும்பத் தலைவன் அந்த ஊழியரிடம் தன் பயங்கரமான பாவ வாழ்க்கையை அறிக்கையிட்டு, தனக்கு மன்னிப்பு கிடைக்குமா? என்று வேண்டினான். கர்த்தர் அவனையும் இரட்சித்தார். அவன் வாழ்விலிருந்த இருள் முற்றிலுமாய் நீங்கியது. கணவனும் மனைவியுமாக இருளிலிருக்கிற அநேகரை ஒளிக்குள் கொண்டு வருகிற தெய்வீக மக்களாய் விளங்கினர்.

ஜெபம்: "அன்பு தெய்வமே, என் வாழ்வின் எல்லா இருளையும் முற்றிலுமாய் மாற்றி, இன்றுமுதல் வெளிச்சத்தின் பிள்ளையாக என்னையும் கரம் பிடித்து நடத்தும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் பிதாவே. ஆமென்!"

பாவத்தில் மரித்த நம்மை உயிர்ப்பிக்கிற தேவன்!

இவ்வுலக அக்கிரமங்களாலும், பாவங்களினாலும் மரித்தவர்களாயிருக்கிற நம்மை இரட்சிக்கவே தேவாதி தேவன் தமது சொந்த குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை இவ்வுலகத்திற்கு மனிதனாக அவதரிக்கும்படி செய்தார் (கொலோசெயர் 2:13-15).

"நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது" (கொலோ.3:3) என்று வேதத்தில் வாசிக்கிறோம். இந்த மாறுதல் ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் நடப்பதற்கு ஏதுவாக ஆண்டவர் துரைத்தனங்களையும், அதிகாரங்களையும், அதாவது இந்த உலகத்தின் அந்தகாரலோகாதிபதியான பிசாசின் சகல கிரியைகளையும் அவர் உரிந்துகொண்டு, சிலுவையிலே அவைகளின்மேல் வெற்றி சிறந்தார் என்பதைத்தான் மேற்கண்ட வேத பகுதியில் வாசிக்கிறோம். அவர் வெற்றி சிறந்தபடியினால் அவருடைய ஜீவன் நமக்குள் பிரவாகித்து ஓடுகிறது. இதைத்தான் "இரட்சிப்பின் ஊற்றுகளிலிருந்து மகிழ்ச்சியோடே தண்ணீர் மொண்டுகொள்வீர்கள்" (ஏசாயா 12:3) என்று வேதத்தில் வாசிக்கிறோம்.

வெளிநாடு ஒன்றில் ஒரு மனிதன் குடிகாரனாக, எப்பொழுதும் குடிபோதையில் தெருவில் இங்கும் அங்குமாக அலைந்து கொண்டிருப்பான். அவனைத் திருத்த யாராலும் முடியவில்லை. ஆனால், தேவ கிருபை அவன்மேல் இறங்கினதினால் அவன் வாழ்வு முற்றிலுமாய் மாறுதல் அடைந்தது. பழைய பாவ வாழ்க்கை அவனை விட்டு அறவே நீங்கிப் போயிற்று. அதன்பிறகு அவன் என்ன செய்தான் தெரியுமா? அவன் குடிகாரனாக அலைந்து கொண்டிருந்த அதே தெருக்களில், "ஆண்டவரே உமக்கு ஸ்தோத்திரம்" (Glory) என்று எப்பொழுதும் ஆண்டவரை துதித்துக் கொண்டே, சந்தோஷத்தின் மிகுதியால் தெரு என்றும் பார்க்காமல், அங்கும் இங்குமாக உற்சாகமாய் ஆடிக்கொண்டே நடந்து கொண்டிருப்பான். அவனுக்கு பெயரே "மகிழ்ச்சி நிறைந்த மனிதன்" என்பது தான் (Glory man). ஆம்! எப்படிப்பட்ட பொல்லாத மனிதனையும் ஆண்டவர் தம்முடைய தெய்வீக வல்லமையால் உயிர்ப்பிக்கிறார். கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பின தேவன் சாவுக்கேதுவான நம்முடைய சரீரங்களையும் உயிர்ப்பிக்க வல்லமையுள்ளவராக இருக்கிறார் (ரோமர் 8:11).

அன்பானவர்களே, இந்த இரட்சிப்பின் மேன்மையை அறிந்தவர்களாய், அதன்மூலம் நீங்கள் பெறும் பேரின்பத்தை எண்ணி எண்ணி, இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள் (சங்.116:13). இந்த உலகில் உபத்திரவங்கள், துன்பங்கள், நிந்தைகள் எது நேரிட்டாலும், இயேசு இரட்சகராக, இம்மானுவேலாக, நம்மோடுகூட இருக்கும்பொழுது, அவர் சகல காரியங்களிலும் ஜெயம் தந்து (யோவான் 16:33) நம்மை மகிழ்விப்பார். அதோடுகூட, விசுவாசத்தினால் நாம் நீதிமான்களாக்கப்பட்டு, தேவனுடைய கிருபையினால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தியாகத்தினால் நாம் தெய்வீக சமாதானத்தையும் பெறுகிறோம் (ரோமர் 5:1).

ஜெபம்: "அன்புள்ள இரட்சகரே! சாவுக்கேதுவான என் வாழ்வையும் உயிர்ப்பிக்கும்படியாய் நீர் உம்மையே அர்ப்பணித்தீரே! உமக்கு ஸ்தோத்திரம். இதை என்றும் மறவாமல் ஜீவனோடு நடந்துகொள்ளவும், நானும் ஜீவபலியாக இன்றுமுதல் என்னை அர்ப்பணிக்கவும் அருள்தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

தேவ சித்தத்தை ஜாக்கிரதையாய் நிறைவேற்றுவோம்!

"தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது...என்றார்"

(எபிரெயர் 10:7; சங்கீதம் 40:7,8).

தேவாதி தேவன் மனுக்குலத்தின் மேல் கிருபை, இரக்கம் மிகுந்தவராக, அன்பே உருவானவராக ஒவ்வொருவரையும் இரட்சிக்கும் பாவ நிவாரண பலியாக தம் குமாரனையே அனுப்பி வைத்தார் (2 கொரி.5:19)! இந்தவிதமாக தம்முடைய சித்தத்தை தம் குமாரனைக் கொண்டு நிறைவேற்ற அவரை இவ்வுலகிற்கு அனுப்பினார். தேவகுமாரனும் மேற்கண்ட வசனத்தின்படி, தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றி முடிக்க தன்னையே தியாக பலியாக அர்ப்பணித்தார்.

தன்னை அவ்விதமான அர்ப்பணிக்கும் வேளை வந்தபோது, தனித்து ஓரிடத்திலே சென்று, "பிதாவே, உமக்கு சித்தமானால் இந்த பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக் கடவது" (லூக்கா 22:42) என்று கண்ணீரோடு, வியாகுலத்தோடு பலத்த சத்தத்தோடு பிரார்த்தனை செய்தார். ஆனால், தேவன் தம் தூதனை அனுப்பி அவரை பெலப் படுத்தினார். அதினிமித்தம் சிலுவையில் பாடுகளையெல்லாம் நமக்காக பொறுமையாக சகித்து, 'முடிந்தது' என்று சொல்லி, தம் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றி முடித்தார் (யோவான் 19:30).

வெளிநாடு ஒன்றில் ஒரு பெண்ணை ஆண்டவர் தம் சேவைக்கென்று அழைத்தார். ஆனால் அந்த அம்மையாரோ ஏராளமான குழந்தைகளுக்கு தாயாக இருந்தபடியால் "ஐயோ, நான் குழந்தைகளை வைத்துக்கொண்டு எப்படி ஊழியம் செய்வது?" என்று தேவ சித்தத்தை நிறைவேற்றுவதில் சற்று தயங்கினார்கள். நடந்தது என்ன தெரியுமா? ஒவ்வொரு குழந்தையாக மரித்தது. கடைசியில், ஒரு குழந்தை மட்டுமே உயிரோடு இருந்தது. இந்த தருணத்தில் தேவன் மறுபடியுமாக, "மகளே! இப்பொழுதாவது என்னுடைய ஊழியத்தை செய்ய வருவாயா?" என்று அழைத்தார். அந்த அம்மையார் மிகுந்த கண்ணீரோடு, "ஆண்டவரே, உம் சித்தத்தை நிறைவேற்ற எனக்கு பெலன் தாரும். இனிமேலும் நான் தயங்குவதில் பிரயோஜனமில்லை, உம் சித்தம் போல் என்னை வழிநடத்தும்" என்று தன்னை ஒப்புக்கொடுத்தார்கள். அவர்கள் தேவனுடைய செய்தியை பிரசங்கிக்கிற இடங்களிலெல்லாம் தேவனுடைய வல்லமை அளவில்லாமல் இறங்கியது. ஏக்கர் நில பரப்பளவிலே மக்கள் ஏராளமாய் கூடினார்கள். வருகிற மக்கள் பாவ உணர்வடைந்து அப்படியே தரையில் விழுந்து புரண்டு அழுவார்களாம்.

எனக்கு அன்பானவர்களே, தேவ சித்தம் இன்னது என்று வேதத்தை வாசிக்கும்போது நீங்கள் அறிந்துகொள்ளலாம். மற்ற தேவனுடைய மக்கள் மூலமாய் கர்த்தர் உங்களோடு பேசுவார். சில சமயங்களில் உங்களோடு நேரடியாகவும் பேசுவார். இன்றே தேவ சித்தத்தை நிறைவேற்றி முடிக்க ஜாக்கிரதைப்படுங்கள் (எபே.5:17).

ஜெபம்: "அன்பு தெய்வமே, என் சித்தம் எதிலும் வேண்டாம். என் வாழ்வில் உம் சித்தத்தையே நிறைவேற்றி முடிக்க, உம் குமாரனுக்கு அருளி செய்த தெய்வீக கிருபையை இன்று எனக்கும் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

இயேசுவல்லால் வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை!

''அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும் படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமே யல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை'' (அப்போஸ்தலர் 4:12).

ஆண்டவர் இயேசு இந்த உலகத்தில் நாம் சந்திக்கும் போராட்டங்கள் எதுவாயினும், அவைகளையெல்லாம் தாம் சிலுவையிலே ஜெயித்து வெற்றி சிறந்துவிட்டபடியால், நீங்கள் வீணாகக் கவலைப்படாமல், பயத்திற்கு இடங்கொடாமல் மனதிலே திடன்கொண்டு தைரியமாயிருங்கள் என்கிறார் (யோவான் 16:33). வேண்டாத பயங்களை நம் மனதில் கற்பனை செய்து கொண்டு, அது கவலையாக மாறி சஞ்சலப்பட்டு தவிக்கிறோம். இன்று, அவைகளையெல்லாம் மாற்றும் வல்லமை பெற்ற நம் ஆண்டவரை நோக்கிப்பார்த்து, நமக்கு ஜெயம் தரும்படி வேண்டுதல் செய்வோம் (1 கொரி.15:57).

ஒரு தம்பதியர் கணவனும் மனைவியுமாக கர்த்தரை அதிகமாகத் தேடினார்கள். தெய்வீகக் காரியங்களில் மிகுந்த வாஞ்சையுள்ளவர்களாக இருந்தார்கள். எனினும் திடீரென்று அந்த மனைவிக்கு சரியாக சாப்பிட முடியவில்லை, உறக்கம் வரவில்லை. ஏதோ ஒரு பொல்லாங்கான சக்தி அவர்களுக்குள் தொல்லை கொடுத்து மன நிம்மதியைக் குலைப்பதை அவர்கள் உணர்ந்தார்கள். ஏறக்குறைய ஆறு மாதங்களாக இன்னது செய்வதென்று அறியாமல் அந்த அம்மாள் மிகுந்த வேதனையடைந்தார்கள். கணவனோ அந்த நிலைமையிலும் ''கர்த்தர் நம்மைக் கைவிடமாட்டார். என் மனைவியை இரட்சித்த இரட்சகராகிய இயேசு இந்த நிலைமையிலிருந்தும் அவளுக்கு பூரணமாய் விடுதலை கொடுப்பார்'' என்று விசுவாசத்தோடு தொடர்ந்து ஜெபித்துக் கொண்டே வந்தார். ''இந்த வீட்டில் ஏதோ ஒரு சாபம் இருக்கிறது. பிசாசின் செய்கை இருக்கிறது. நீங்கள் இந்த வீட்டைக் காலி செய்துவிட்டு, வேறு வீட்டுக்கு மாறிப் போங்கள், அப்பொழுது சுகம் பெறுவீர்கள்'' என்று சிலர் ஆலோசனை கூறினார்கள். ஆனால், அவரோ, ''பிசாசும், பொல்லாங்கும் இந்த வீட்டை விட்டுப் போகவேண்டுமே தவிர, நாங்கள் இந்த வீட்டை விட்டுப் போக வேண்டிய அவசியமேயில்லை. ஏனென்றால் நாங்கள் நம்புகிற தேவன் இந்த நிலைமையிலிருந்து எங்களை இரட்சிக்க வல்லவரா யிருக்கிறார் என்று ஆணித்தரமாகக் கூறினார். கர்த்தர் அவர்கள் விசுவாசத்தைப் பார்த்தும், உறுதியான ஜெபத்தைக் கேட்டும், சுகவீனமாக இருந்த அந்த அம்மையாருக்கு பரிபூரண விடுதலையைக் கொடுத்தார். மந்திர சக்தியின் வேரை முறித்துப்போட்டார்.

ஆம்! ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இன்று உங்களையும் பலதரப்பட்ட சாபங்கள், மக்களுடைய விரோதமான செய்கைகள், பிசாசின் கிரியைகள் யாவற்றினின்றும் இயேசு கிறிஸ்து இரட்சித்து விடுவிக்க வல்லமையுள்ளவராக இருக்கிறார். வீணான பயங்களை யெல்லாம் ஒழித்துவிட்டு, இதே விசுவாசத்துடன் நீங்களும் ஆசீர்வாதம் பெறுங்கள் (2 கொரி.13:4).

ஜெபம்: ''அன்பு இரட்சகரே, நீர் சிலுவையிலே உம்மையே எனக்காக அர்ப்பணித்த படியால், எத்தனை அருமையான தெய்வீக ஆசீர்வாதங்களை எனக்கு சம்பாதித்துக் கொடுத்திருக்கிறீர். நீரே மெய்யான இரட்சகர்! உம்மாலேயல்லாமல் வேறு ஒருவராலும் மீட்பு இல்லை! என்பதை அறிந்துகொள்ள எனக்கு கிருபை தந்தபடியால் உமக்கு கோடான கோடி ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!''

நம் அற்ப சரீரத்தை தம் மகிமையான சரீரம்போல மகிமைப்படுத்துவார்!

"அவர் எல்லாவற்றையும் தமக்கு கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தை தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" (பிலிப்பியர் 3:21).

உலகத்தில் அவதரித்த ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் பல்வேறு அசுத்தங்கள் எண்ணங்களிலும், செயல்களிலும் காணப்படுகிறது (கலா. 5:19,21) மற்றும் சிலர் வேண்டாத சில தீய பழக்கங்களுக்கு அடிமைகளாகி, அதிலிருந்து விடுதலை பெற முடியாமல் தவிக்கிறார்கள். மற்றும் சிலரோ செய்யும் கிரியைகளிலெல்லாம் அநீதி நிறைந்தவர்களாக வாழ்கின்றனர். இவைகளை அறியாமையினாலே சிலர் செய்கிறார்கள். சிலர் அவை பாவமென்று அறிந்தும் துணிகரமாக ஈடுபடுகிறார்கள் (2 தீமோ.3:4).

எந்த ஒரு மனிதன் சிலுவையில் இயேசு கிறிஸ்து தம்மையே தியாக பலியாக அர்ப்பணித்து, செய்த ஒப்பற்ற தியாகத்தை உணர்ந்து, "ஆண்டவரே, என் வாழ்வில் இருக்கிற தீய குணங்களை, செயல்களை, அடிமைத்தனங்களை, அக்கிரமங்களையெல்லாம் முற்றிலுமாய் மாற்றி என்னையும் உம்மைப்போல மறுரூபப்படுத்தும்" என்று கெஞ்சிக் கேட்கிறானோ, அப்படிப்பட்டவனுடைய வாழ்விலுள்ள அநீதி, அக்கிரமம் யாவையும் மாற்றி, புது வாழ்வு, நீதி, சமாதானம் நிறைந்த வாழ்வாய் மாறும்படி கர்த்தர் செய்கிறார். எத்தனை ஆச்சரியமானதும், வல்லமை நிறைந்ததுமானது தெய்வீக இரட்சிப்பு (2 கொரி.5:17; எபே.4:22–24)!

இராணுவ வீரர் ஒருவர் வேலையிலிருந்து ஓய்வு பெற்று வீடு திரும்பினார். அவர் பெரிய மீசையுடன் பார்ப்பதற்கே பயங்கரமாக தோற்றமளித்தார். ஆண்டவர் அவரை தமது அன்பினால் அணைத்து இரட்சித்தார். அவர் ஒரு குழந்தையைப்போல மாறினார். ஒரு சமயம் அவர் பேருந்து ஒன்றிலே சென்றபோது, பேருந்து நடத்துனர் (கண்டக்டர்) சிறு காரணத்தை பெரிதுபடுத்தி அவரிடம் சண்டைபோடவும், அவருடைய சட்டையைப் பிடித்து இழுக்கவுமாக இழிவான செயல்களை செய்தபொழுதும், அவர் அந்த நடத்துனரிடம் அமைதியாய், தாழ்மையுடன் பேசினார். அதை கவனித்த மற்ற பிரயாணிகள் அந்த மனிதருக்காக அந்த நடத்துனரிடம் சண்டை போட்டு, அவருக்கு எந்த அசம்பாவிதமும் நடக்காதபடி காப்பாற்றினர். எப்படி அவ்வளவு பொறுமையாக இருந்தீர்கள் என்று ஒருவர் கேட்டபோது, முன்பெல்லாம் இப்படி நடந்திருந்தால் அந்த மனிதனை அப்படியே கொன்று போட்டிருப்பேன். இப்பொழுதோ இயேசுவின் அன்பு என் உள்ளத்தில் வந்துவிட்டபடியால், என்னால் அந்தவிதமாக முரட்டுத்தனமாக செயல்பட முடியவில்லை என்று பதிலுரைத்தார்.

ஆம்! இன்று நம்மையும்கூட எப்படிப்பட்ட பொல்லாங்கினின்றும் மாற்றி, தம்மைப் போல் பரிசுத்த சாயலை நமக்கு அருளி செய்ய ஆண்டவர் ஆவலுள்ளவராயிருக்கிறார் (2 கொரி.3:18).

ஜெபம்: "அன்பு இரட்சகரே, என்னுடைய கடின உள்ளத்தையும், என்னிலுள்ள கொடிய செயல்களையும் முற்றிலுமாக நீர் மாற்றி, இன்றுமுதல் நீர் எனக்கு உமது தெய்வீக சாயலைத் தருகிறபடியால் உமக்கு கோடான கோடி ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

தாழ்மையுள்ளவர்களை உயர்த்துகிற தேவன்!

''அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்கு தந்தருளினார்'' (பிலிப்பியர் 2:8-11).

இயேசு கிறிஸ்து தேவனுக்கு சமமாக இருப்பவர். அவர் தேவாதி தேவனுடைய தற்சொரூபம்! இப்படிப்பட்ட தெய்வீகமான அவர், உங்களுக்காகவும், எனக்காகவும் இந்த உலகில் தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷ சாயலானார். ஆகவே, தேவன் அவரை எல்லாவற்றுக்கும் மேலாக உயர்த்தி, எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்கு தந்தருளினார். இன்று நம்மையும் அவ்விதமாக உயர்த்த தேவன் விரும்புகிறார். இதைத்தான் கர்த்தருக்கு முன்பாக தாழ்மைப்படுங்கள் (யாக்.4:10). அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார் என்று வாசிக்கிறோம் (யாக்.4:6; 1 பேதுரு 5:5; நீதி.3:34).

ஒரு அலுவலகத்தில் ஒரு இளைஞன் புதிதாக வேலைக்கு சேர்ந்தார். அவர் அலுவலக தேர்வுகளிலெல்லாம் தேர்ச்சி பெற்று சீக்கிரம் உயர வேண்டும், தன்னை கஷ்டப்பட்டு ஆளாக்கிய தன் பெற்றோரை அதின் மூலம் சந்தோஷப்படுத்த வேண்டும் என்று இரவும் பகலும் வேலையிலே கவனமாயிருந்து அரும்பாடுபட்டார். அதோடுகூட, ஆண்டவரையும் உறுதியாய் அன்போடு தேடிவந்தார். இதினிமித்தமாக அவருக்கு சில உயர்வுகளும் வந்தன. இதைக் கண்ட அவருடைய மேலதிகாரி ஒருவர் அவர் மீது பொறாமை கொண்டார். அவரை அழைத்து, ''நீ வாழ்வில் உயர்ந்து விடலாம் என்று எண்ணுகிறாயோ? ஒருநாளும் அது நடக்காது. அது நடப்பதற்கு நான் விடவும் மாட்டேன்'' என்று சொல்லிக்கொண்டே இருப்பார். இது இந்த இளைஞனின் மனதிற்கு அதிக வேதனையாக இருந்தபொழுதிலும், அவர் தன் இளம் மனைவியோடு சேர்ந்து ஆண்டவரிடம் இதற்காக கருத்தாய் ஜெபித்து வந்தார். நடந்தது என்ன தெரியுமா? அவருக்கு விரோதமாய் பேசிக் கொண்டிருந்த அந்த அதிகாரியின் மீது அந்த அலுவலகத்தின் மேலதிகாரிகள் அவருடைய வேலையில் குற்றம் கண்டுபிடித்து, நிரந்தரமாக வேலையிலிருந்து அவரை பணிநீக்கம் செய்தனர். ஆனால், அந்த இளைஞரோ, அவர் விரும்பியதுபோல ஆண்டவருடைய தெய்வீக ஆசீர்வாதத்தினால் மென்மேலும் உயர்த்தப்பட்டு, தன் குடும்பத்தாரை மிகுந்த மகிழ்ச்சிக்குள்ளாக்குவதற்கு தேவையான தெய்வீகக் கிருபையை பெற்று அகமகிழ்ந்தார். கர்த்தருக்கும் மகிமையாக வாழ்ந்தார்.

அன்பானவர்களே, இயேசுவின் சிந்தையாகிய தாழ்மையை நீங்களும் அணிகலனாக்கிக் கொண்டு, அந்த வாலிபன் வாழ்வில் உயர்ந்ததுபோல, நீங்களும் மென்மேலும் உயர ஆண்டவர் நிச்சயம் அருள்புரிவார் (பிலி.2:5).

<u>ஜெபம்</u>: ''அன்பு இரட்சகரே, உம்மைப்போன்று தாழ்மையின் சிந்தையை எனக்கும் நிறைவாய் தாரும். அதினிமித்தம் பொறுமையையும், பக்திவைராக்கியத்தையும்கூட இன்று எனக்கும் தந்து, என்னையும் கரம் பிடித்து நடத்தும். நீர் அப்படி செய்கிற படியால் உமக்கு கோடான கோடி ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!''

நாம் தேவனுக்கு சுவிகாரபுத்திரராயிருக்கிறோமா?

“தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்து மூலமாய் தமக்கு சுவிகாரபுத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார்” (எபேசியர் 1:6).

இந்த உலக வாழ்வில், தகப்பனும், தாயும், நம் ஒவ்வொருவருக்கும் கிடைக்கிற ஒரு பெரிய பொக்கிஷம். ஏனெனில் பிள்ளைகளுடைய காரியங்களை பெற்றோர் கண்ணுங் கருத்துமாக கவனித்து அவர்களை சந்தோஷப்படுத்துவதையே இலட்சியமாகக் கொள்கிறார்கள். இந்த உலகில் அநேகர், எனக்கு தகப்பன் இல்லையே என்று கவலைப் படுகிறார்கள். ஆனால் தேவன் “அப்பா, பிதாவே” என்று நாம் தம்மை அழைக்கும்படியாக தமது குமாரனுடைய ஆவியை நம் இருதயங்களில் அனுப்புகிறார். ஆகவே, நாம் அவருக்கு சுவிகாரபுத்திரராகவும் இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனுடைய சுதந்தரராயும் இருக்கும் மேலான பாக்கியத்தை பெறுகிறோம் (கலா.6:7).

ஒரு சமயம் தேனீர் விருந்து ஒன்றில் கலந்து கொண்ட ஒரு கணவனும் மனைவியும் தங்களுடைய மேசையில் அவர்களோடு உணவருந்திக் கொண்டிருந்த வேறொரு அம்மையாரை சந்தித்தனர். இந்த தம்பதியர் தேவாதி தேவனை சொந்த தகப்பனாக இயேசுகிறிஸ்து மூலம் கொண்டிருந்தபடியால், அந்த அம்மையாரிடம் தேவனுடைய அன்பைக் குறித்து பேசிக் கொண்டிருந்தனர். ஆனால் அந்த அம்மையாரோ அதிகமாக ஆண்டவரை அறியாதிருந்தார்கள். முடிவிலே “பிரார்த்தனை செய்யலாமா?” என்று கேட்டபொழுது, அந்த அம்மையார் சரி என்றார்கள். அந்த பிரார்த்தனையிலே “அப்பா, பிதாவே” என்று ஆண்டவரை அழைத்து சொந்தம்பாராட்டி அவர்கள் செய்த பிரார்த்தனை அந்த அம்மையாருக்கு ஆச்சரியமாக இருந்தது. “என்ன, தேவாதி தேவனை இப்படி அழைப்பதா? அவர் தெய்வம் அல்லவா?” என்றார்கள். அப்பொழுது தேவனுடைய அன்பைக் குறித்து சற்று நேரம் விவரித்துக் காண்பித்தார்கள். இந்த அம்மையார் வீட்டுக்கு சென்றபோது, தனிமையில் வாழ்ந்துகொண்டிருந்தபடியால் முதல் முறையாக “அப்பா, பிதாவே” என்று ஆண்டவரை அழைத்து பிரார்த்தனை செய்தார்கள். உடனடியாக என்றும் இல்லாத ஒரு தெய்வீக பேரின்பம், சமாதானம் தன் உள்ளத்தில் பனிபோல் இறங்குவதை அவர்கள் முதன்முறையாக உணர்ந்தார்கள். அன்றிலிருந்து அவர்களுக்குள்ளும் பிதாவாகிய தேவன் அளித்த தெய்வீக உறவு நிலைபெற்றது. தேவனுடைய மகளாக அவர்கள் மாறினார்கள்.

ஆம் பிரியமானவர்களே! இதை வாசிக்கிற நீங்களும்கூட இன்றுமுதல் தேவனுக்கு “சுவிகார புத்திரர்” ஆகும் தெய்வீக அனுபவத்தை என்றென்றும் பெற்று மகிழுங்கள். நமது உலகப்பிரகாரமான தகப்பன்மார் கூட அநேக சமயங்களில் நம்மை கைவிடும் நிலை ஏற்படுகிறது. ஆனால், தேவனை நாம் உண்மையாய் தேடி, அவருக்கு உகந்த பிள்ளைகளாய் வாழ்வதில் ஜாக்கிரதையாயிருக்கும்பொழுதோ, இவ்வுலகிலும், பரலோகத்திலும் நமக்கு அவரே ஆசீர்வாதமான வாழ்வைத் தருவது நிச்சயம் (ரோமர் 8:15,16).

ஜெபம்: “அன்பு தெய்வமே, உம்மை “அப்பா, பிதாவே” என்று சொந்தம் கொண்டாடும் தெய்வீகக் கிருபையை எனக்கும் இன்று அருளிச் செய்கிறதற்காக உமக்கு கோடான கோடி ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!”

நம்மை பரிசுத்த அழைப்பினாலே அழைத்த தேவன்!

"அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிகாலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும், நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்"

(2 தீமோத்தேயு 1:9).

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஒவ்வொரு மனிதனையும் பாவம், மரணம், அடிமைத்தனம் யாவற்றினின்றும் மீட்டெடுத்து, தமது தெய்வீகக் கிருபையை அருளி செய்கிறார். பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டு கொண்டதுபோல, கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்திய ஜீவனுக்கு ஏதுவாக அதே மனிதனை ஆண்டுகொள்ளுகிறது (ரோமர் 5:20,21). இந்தவிதமான பரிசுத்த அழைப்பைத்தான் நம் ஒவ்வொருவருக்கும் இயேசுகிறிஸ்து மூலமாய் தேவன் அருளி செய்கிறார். இதைத்தான் மேற்கண்ட வசனம் விளக்குகிறது. நம்முடைய சன்மார்க்கமான கிரியைகள் மூலமாக அல்ல; தேவனுடைய கிருபையினாலே நம்மை இரட்சித்து, புது மனிதனாக மாற்றி, நம்மிடத்தில் தம்முடைய கிருபையை சகலவிதத்திலும் பெருகச் செய்யவும் வல்லவராயிருக்கிறார் (1 தீமோ. 1:14).

ஒரு குடும்பத்தினர் ஒவ்வொரு ஞாயிறு ஆராதனையிலும் கலந்துகொள்வார்கள். ஜெபக்கூட்டங்களிலும் பங்கெடுப்பார்கள். ஆனால் அப்படிப்பட்ட நிலைமையிலும் ஆழமான விதங்களில் பக்தியில்லாத நிலையில் இருந்தார்கள். இந்த நிலைமையில் ஒரு நாள் ஒரு தேவனுடைய ஊழியர் ஆலயத்தில் வந்து, ஆண்டவரின் தெய்வீக அன்பு நம்மை அழைத்ததின் மேன்மையை ஆழமானவிதத்தில் பிரசங்கித்தார். இதைக் கேட்ட இந்த தம்பதியர், "ஐயோ! நாம் எவ்வளவு குறைவுள்ளவர்களாய் இருக்கிறோமே! தேவன் நம்மை மேலான காரியங்களுக்கு அழைத்திருக்க, அரைகுறை பரிசுத்தத்தோடும், பக்தியோடும் இவ்வளவு நாள் அதில் திருப்தியாய் இருந்திருக்கிறோமே" என்று இருவருமே ஒருமனப்பட்டு அன்று முதல் அதிகமாக கர்த்தரைத் தேடுவதற்கான வழிகளை பின்பற்றினார்கள். அதினிமித்தம் அளவில்லாத தெய்வீக அனுபவங்களை, ஆசீர் வாதங்களைப் பெற்று, ஆண்டவருடைய ஊழியத்தையும் செய்யும் தெய்வீகக் குடும்பமாக மாறினார்கள். மாத்திரமல்ல! மற்றும் அநேக மக்களுக்கு இந்த தேவ கிருபையைப் பற்றி எடுத்துக்கூறி, பரிசுத்த தெய்வீக அழைப்பின் மேன்மையை அவர்களும் ருசிக்க குடும்பமாக அரும்பாடுபட்டு ஆண்டவரை கனப்படுத்தவும் செய்தனர்.

அன்பானவர்களே! ஆண்டவர் இன்று இவ்விதமான தெய்வீக வழிகளில் நடத்தவும், பரிசுத்த அழைப்பினாலே அழைக்கவும் பிரியமாயிருக்கிறார் என்று உணர்ந்து இந்த குடும்பத்தாரைப்போல ஆண்டவரின் தீர்மானத்தை நிறைவேற்ற உங்களை நீங்களும் அர்ப்பணியுங்கள் (2 தீமோ.1:9).

ஜெபம்: "அன்பு இரட்சகரே, உம்மைப்பற்றிய அறிவு அதிகமில்லாததினால், இவ்வளவு குறைவுள்ளவனாய்/குறைவுள்ளவளாய் நான் வாழ்ந்து வந்திருக்கிறேன். இன்று என் வாழ்வையும், நீர் விரும்புகிறவண்ணமாக பரிசுத்த வழியிலே நடத்தும். நானும் உம் அழைப்புக்கிணங்கி, உம் தெய்வீகத் தீர்மானத்தை என் வாழ்வில் நிறைவேற்ற அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக மாற்ற வல்ல தேவன்!

"நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாக பாவத்திற்கு ஒப்புக் கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக...நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்" (ரோமர் 6:13).

தேவனுடைய வல்லமை ஈடு இணையற்றது! தம்முடைய ஜனங்களை ஆச்சரியமான விதத்தில் அவர் வழி நடத்தியதையும் நாம் வாசிக்கிறோம். வனாந்திரத்திலே தம்முடைய ஜனங்களை திருப்தியாக போஷித்து, பெரிய சமுத்திரத்தை இரண்டாகப் பிளந்து தரையில் நடக்கச் செய்து, மரித்தோரை உயிர்ப்பித்து, வியாதியஸ்தரை சொஸ்தமாக்கி, குறைவுகள் நிறைந்த வேளையிலே அவைகளை நிறைவாக்கி இப்படியாக பல்வேறான விதத்திலே ஆசீர்வதித்து, அதிசயம் செய்த தேவன் (மீகா 7:15), மரித்த நிலையில் இருக்கிற நம் வாழ்வையும் பிழைக்கச் செய்து, உயிர்ப்பிக்க வல்லமையுள்ளவராக இருக்கிறார் (கொலோ.2:13).

ஒரு வேடிக்கையான சம்பவத்தை நான் கேள்விப்பட்டேன். ஒரு தாய் ஒரு குழந்தையை பெற்றெடுத்தாள். இவள் பக்தியும், தேவன் மேல் முழு விசுவாசமும் கொண்ட ஒரு பெண். பிறந்த குழந்தை ஏதோ ஒரு காரணத்தினால் கொஞ்ச நேரத்தில் மரித்துவிட்டது என்று தாதிமார் சொல்லக்கேட்டு அவள் ஒரு கணம் வேதனைப்பட்டாள். ஆனால், அடுத்த கணம் அந்த தாய் தாதிமாரின் உதவியோடு அந்த குழந்தை வைத்திருக்கும் இடத்திற்கு சென்றாள். அந்த குழந்தையின் மீது தன் இரு கைகளையும் வைத்து, மிகுந்த விசுவாசத்துடன் "ஆண்டவரே, இந்த குழந்தையின் ஜீவனை மறுபடியும் நீர் அனுப்பும்படியாய் உம்முடைய வல்லமையுள்ள நாமத்தினாலே கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். நான் பிழைத்திருக்கும்படியாக, நீர் உம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து மூலமாய் எனக்கு புது ஜீவன் கொடுத்தீர் அல்லவா? அதே ஜீவன் இந்த குழந்தையின் மீதும் இப்பொழுது இறங்கட்டும்" என்று ஒரு சிறு பிரார்த்தனை செய்தாள். ஆனால், குழந்தையைப் பார்த்தால் மரித்த நிலைமையிலேயே இன்னும் இருந்தது. அந்த தாயோ ஒரு சிறு குச்சியை எடுத்து அந்த குழந்தையின் கால் மீது லேசாக தேய்த்தாள். அந்த குழந்தை அப்படியே விருட்டென்று காலை இழுத்தது. உடனே யாவரும் மகிழ்ந்தனர். மருத்துவர்கள் குழந்தைக்கு வேண்டிய சிகிச்சையைக் கொடுத்து, தேவனுடைய கிருபையினால் அந்த குழந்தை உயிர் பெற்று வெகு விரைவில் எழுந்தது. அந்த தாய் ஒரு ஜீவனுள்ள சாட்சியாக அந்த மருத்துவமனையிலே தன் பிள்ளையோடு வீட்டுக்கு வந்தாள். அந்த குழந்தை வளர்ந்து, பெரியவனாகி, ஒரு விசுவாச வீரனாக ஆண்டவரை மகிமைப்படுத்தும் பணியை மேற்கொண்டான்.

என் அன்பு சகோதர, சகோதரிகளே! ஆண்டவர் இன்று இந்த புது ஜீவனை மரித்துப் போன நிலைமையிலே வாழ்ந்து கொண்டிருக்கிற உங்கள் வாழ்விலும் அருளிச்செய்து, உங்கள் வாழ்வையும் புதுப்பிக்க வல்லவர். ஆகவே, பாவத்திற்கு மரித்து, நீதியின் வழிகளில் தேவனுக்கென்று பிழைக்க உங்களை ஒப்புக்கொடுங்கள் (ரோமர் 6:11).



ஜெபம்: "அன்பு இரட்சகரே. ஆவியிலும். ஆத்துமாவிலும். சரீரத்திலும் மரித்த நிலைமையில் இருக்கிற என்னையும் இன்று புத்துயிர். புது ஜீவன் பெற்று வாழ நீர் சித்தம் கொண்டதற்காக உமக்கு ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"

என்றும் நம்மைக் கைவிடாமல் காக்க வல்ல தேவன்!

"ஒன்பதாம்மணி நேரத்தில், இயேசு: ஏலி! ஏலி! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்" (மத்தேயு 27:46).

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகில் அவதரித்து, தமது வாழ்க்கையில் அனுபவித்த தியாகங்கள், நிந்தைகள், அவமானங்கள் எல்லாவற்றையும் பொறுமையாக சகித்தார் (ஏசாயா 53:7). பாடுகள் நிறைந்த வாழ்வின் மத்தியிலேயும் தேவனோடு ஜெபத்தின் மூலமாய் உறவாடுவதில் ஜாக்கிரதையாயிருந்தார். சிலுவையில் ஆணிகளால் அடிக்கப்பட்ட, வேதனை நிறைந்த அந்த சூழ்நிலையில் தனிமையில் தேவனை நோக்கி, "ஏன் என்னை கைவிட்டீர்?" என்று முறையிட்டார். ஆம்! அவர் வாழ்விலும்கூட கைவிடப்பட்டது போன்ற நிலமை வந்தது. ஆனால் தேவன் அவரை கைவிட்டுவிட்டாரா? இல்லை. அவர் மரணமடைந்த பிறகு மரித்தோரிலிருந்து மூன்றாம் நாள் அவரை உயிரோடு எழுப்பினார். தமது பிதாவின் வலது பாரிசத்தில் இன்று மகிழ்ச்சியுடன் வீற்றிருக்கிறார் (எபி. 12:2). நீங்களும்கூட கைவிடப்பட்ட நிலைமையில் இன்று இருக்கலாம். புருஷனால் கைவிடப்பட்ட நிலை! மனிதரால் தள்ளிவிடப்பட்ட நிலை! பணம் இல்லாத வறுமை நிலை! வியாதியினிமித்தம், வயதானதினிமித்தம் கேட்பாரற்று தள்ளிவைக்கப்பட்ட பரிதாப நிலை! ஆனால், பிதாவாகிய தேவனையே நோக்கிப்பார்த்து அதின் மூலம் பொறுமையாய் யாவற்றையும் சகித்து இயேசு உயர்த்தப்பட்டதுபோல தேவ ஆசீர்வாதத்தை நீங்களும் இன்று பெற்றுக்கொள்ளுங்கள் (எபி. 12:3).

ஜப்பானியர், பிலிப்பைன்ஸ் நாட்டை தங்கள் ஆளுகைக்குள்ளாக்கினபொழுது சில இராணுவ வீரர்களை அவர்கள் சிறையிலடைத்தனர். கொடூர நெஞ்சமுடைய அந்த ஜப்பானியர் கொஞ்சமும் ஈவு இரக்கமில்லாமல் அப்படிப்பட்ட சிறைக் கைதிகளின் கை, கால்களைக் கட்டி அவர்கள் உயிரோடு இருக்கும்போதே கூர்மையான கத்தியைக் கொண்டு அவர்கள் சதையை அறுத்து எடுத்து, அதை சமைத்து சாப்பிட்டனர். எத்தனை பயங்கரமான கடின இருதயம் பாருங்கள்! எவ்வளவாய் இந்த மக்கள் துடித்து வேதனைப்பட்டிருப்பார்கள்! ஆம்! ஆண்டவர் இயேசுவும் சிலுவையில் அவ்வாறே முதுகில் வாரால் அடிக்கப்பட்டார். நமது மீறுதல்களினிமித்தம் அவர் தமது சரீரத்தில் காயப்பட்டார். நமது அக்கிரமத்தினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார் (ஏசாயா 53:5). ஆகவேதான், அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் மரித்த நம்மை (எபே. 2:1), கோபாக்கினையின் பிள்ளைகளாகிய நம்மை (எபே. 2:3) அப்படியே கைவிட்டுவிடாமல், தமது மிகுந்த அன்பினாலே இரட்சிக்கிறார்.

ஆகவே, ஆண்டவர் இயேசுவைப்போல, பொறுமையாயிருந்து, அவர் தரும் ஆசீர்வாதத்தின் மூலம் பாக்கியம் நிறைந்த வாழ்வைப் பெறுங்கள். உங்களுக்கு எதிரே காணப்படுகிற போராட்டங்கள், சோதனைகள் யாவற்றிலும் உங்களையும் கைவிடாமல் காத்து வழிநடத்துவார் (2 தீமோ. 4:7,8).

ஜெபம்: "அன்பு தெய்வமே, எனக்காக, நீர் கைவிடப்பட்டது போன்ற நிலைமையிலும் பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை செய்து முடித்தீரே! அதேபோன்று நானும் எந்த நிலைமையிலும் உம்மைப் பின்பற்றி, தேவ சித்தத்தை நிறைவேற்ற, கைவிடாமல் காக்கப்பட இன்றே எனக்கு உம் அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் தரும் ஆண்டவர்!

(ஏசாயா 61:2).

இந்த உலகில் பாடுகளும், துன்பங்களும், எதிர்பாராத சோதனைகளும் மாறி மாறி வரும்போது எத்தனையாய் நாம் துயரில் வாடுகிறோம்! இது, மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருடைய வாழ்விலும் அனுபவிக்கிற கசப்பான ஓர் அனுபவம் (ஏசாயா 38:17). பணக்கஷ்டத்தின் கொடூரம்! வியாதியின் உச்ச நிலை! பல்வேறு இல்லாமைகள்! ஆனால், அந்த சமயத்தில் யாராவது வந்து நம் துயர் நீங்க உதவி செய்யும்போது எத்தனையாய் மகிழ்ச்சியடைகிறோம். ஆம்! இவ்விதமாகத்தான் நம்மைத் தேடி வந்து, நம் துயரையெல்லாம் நீக்கி, அன்பு காண்பித்தார் நம் ஆண்டவர் இயேசு (ஏசாயா 61:3).

ரோம ராஜ்யத்தில் அடிமை ஒருவன் தன்னைக் கொடூரமாய் நடத்தினபடியால் அந்த இடத்தைவிட்டு எப்படியோ தப்பித்து, காட்டுக்குள் ஓடினான். அங்கே தன்னை யாராவது கண்டுபிடித்துவிடுவார்களோ என்று பயந்து ஒளிந்திருந்தபோது, ஒரு முனகல் சத்தம் கேட்டது. அருகில் சென்று பார்த்தபொழுது, சிங்கம் ஒன்று காலில் பெரிய முள் தைத்திருந்தபடியால் அந்த வேதனை தாங்க முடியாமல் துயரத்தோடு அப்படி முனகிக் கொண்டிருந்தது. அருகில் செல்ல பயமாய் இருந்தாலும் எப்படியோ மெதுவாகப் போய் அந்த முள்ளை அதன் காலிலிருந்து எடுத்துவிட்டதுதான் தாமதம், அந்த சிங்கம் அவனுக்கு நன்றி சொல்வதுபோல் ஒரு பார்வை பார்த்துவிட்டு, எங்கோ மறைந்து போனது. அவனும் தப்பித்தோம், பிழைத்தோம் என்று ஒளிந்துகொண்டான். ஆனால் அவனைத் தேடி வந்த பகைஞர்கள் அவனைக் கண்டுபிடித்து, திரும்பவும் சிறையில் அடைத்து அவனைக் கொல்லவும் தீர்மானித்தனர். அப்படிப்பட்ட கைதிகளை பசி நிறைந்த சிங்கங்களின் வாய்க்கு உணவாக அருளுவது அந்த நாட்டு வழக்கம்! அந்த வழக்கத்தின்படி இவனையும் அப்படிப்பட்ட கொடூரமான பசி நிறைந்த சிங்கத்திற்கு உணவாக போட்டார்கள். அது அவனை கடித்துக் குதறுவதற்காக கர்ஜித்து பாய்ந்து வந்தது. ஆனால் இவனைக் கண்டவுடனே, தன் வேகத்தை குறைத்து, அப்படியே சாதுவாக அவன் காலடியில் உட்கார்ந்தது. இதைக் கண்ட மக்கள் ஆர்ப்பரித்தனர். "இதற்கு காரணம் என்ன?" என்று ராஜா அந்த இளைஞனை வினவினான். அந்த சிங்கம் காட்டில் தன்னால் உதவி பெற்றபடியினால், தன் மீது அவ்வாறு அன்புகூர்ந்தது என்று விவரித்துக் கூறினான். ஜனங்கள் ஆச்சரியப்பட்டு இந்த மனிதன் சாகக்கூடாது. இனி அடிமையாகவும் இருக்கக்கூடாது. சிங்கமே அவனை கடிக்காமல் விட்டுவிட்டபோது நாம் ஏன் அவனை துயரப்படுத்த வேண்டும் என்று சுதந்தரமாக அவனை விட்டுவிட்டனர்.

ஆம்! மனிதர் இவ்வளவு இரக்க குணமுள்ளவர்களாக இருக்கும்போது, அன்பே உருவான நம் ஆண்டவர், நாம் துயர்கொள்ளும்போது, நம்மை கவனிக்காததுபோல பேசாமல் இருப்பாரா? அந்த சமயத்தில் தம் தெய்வீக ஆறுதலை நமக்கு அருளமாட்டாரா? (சங். 86:7).

ஜெபம்: **"என் அன்பு தெய்வமே! ஆறுதலின் தேவனாகிய நீர் இன்றுமுதல் என்னோடு இரும். துயரம் நிறைந்த என் வாழ்நாளில் அது ஒன்றே எனக்கு போதும்! உம் அன்பிற்காக நன்றி செலுத்தி, உமக்குள் களிகூருகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"**

மெய்ஞ்ஞானத்தை தரும் தேவன்!

``கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும். அவர் நீதிமான்களுக்கென்று மெய்ஞ்ஞானத்தை வைத்துவைத்திருக்கிறார்; உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு அவர் கேடகமாயிருக்கிறார்'' (நீதிமொழிகள் 2:6,7).

சாதாரணமாக ஏப்ரல் முதலாம் தேதியை 'முட்டாள்கள் தினம்' என்று வேடிக்கையாக அழைப்பார்கள்; மற்றவர்களை முட்டாளாக்குவதற்காக முயற்சி செய்வார்கள். ஆனால், மேற்கண்ட வசனமோ, ``கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு மெய்ஞ்ஞானத்தை வைத்துவைத்திருக்கிறார்'' என்று நேர்மாறாகக் கூறுகிறது. கர்த்தரை நம்புகிற, அவருக்கு பயப்படுகிற உண்மையான தேவபக்தியுள்ள ஜனங்கள் ஒருநாளும் ஞானத்தில் குறைவுபடாதபடி ஆண்டவர் அந்தந்த சமயத்திற்கு வேண்டிய தெய்வீக ஞானத்தைக் தருவார் (யோபு 28:28; சங்.119:100). நாம் எந்தவிதத்திலும் அறிவு இல்லாதவர்களாய் போகாதபடி, அவரே ஞானம், அறிவாக நமக்குள் விளங்குவார் (கொலோ.2:3) என்றும், அவருடைய ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது என்பதையும் வேதம் தெளிவாக விளக்குகிறது (ரோமர் 11:33).

1961 ஆம் ஆண்டு ஏப்ரல் 1–ம் தேதியன்று நிறை மாத கர்ப்பிணியாக இருந்த எனக்கு பிரசவ வலி ஏற்பட்டது. ஆனால், அது முடிவில் பிரச்சினையாய் முடிந்தது. கடைசி நேரத்தில் சுகமாகப் பிறக்க வேண்டிய அந்த குழந்தை மரித்தே பிறந்தது. பிசாசு எங்களை குடும்பமாக முட்டாள்களாக்கி கைகொட்டி சிரிக்க எண்ணம் கொண்டான். ஏனென்றால், நாங்கள் குடும்பமாக ஆண்டவரை உறுதியாய் பற்றிக் கொண்டிருந்தோம். அதுதான் அவனுக்கு எங்கள் மேல் இருந்த கோபம்! வெறுப்பு! ஆனால் ஞானத்தின் ஊற்றாகிய ஆண்டவர் அதை எப்படி மாற்றினார் தெரியுமா? அதற்கு பிறகு மறுபடியும் என் கர்ப்பத்தை ஆசீர்வதித்து ஒன்றல்ல, இரண்டு கண்மணிகளை கிருபையாக, சுகமாக எந்தவித பிரச்சினையுமின்றி பெற்றெடுக்கும்படி அருள்செய்தார். ஆம்! இது தான் தேவ ஞானம்.

என் அன்பு சகோதர, சகோதரிகளே, ஒரு நாளும் எனக்கு அறிவு இல்லையே, நான் இதை எப்படி செய்து முடிப்பேன்? என்று கவலைப்படாதீர்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து எல்லாவற்றிலும் நமக்கு ஜெயத்தை சம்பாதித்துக் கொடுத்திருக்கிறார். ``நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்'' (1 கொரி.15:57). ஆகவே, இந்த நாளிலும்கூட, கர்த்தர் உங்களுக்கு ஞானமாய் இருக்கிறபடியால், அவரை ஸ்தோத்திரிப்பதில் கவனமாய் இருங்கள். எந்தெந்த காரியங்களிலெல்லாம் பிசாசும், பிசாசின் மக்களும் உங்களை அறிவற்றவன், ஞானமற்றவன் என்று சொல்லி உங்களை புறக்கணிக்க எண்ணுகிறார்களோ, அந்தந்த நேரங்களில், சூழ்நிலைகளின் மத்தியில், தேவன் நமக்கு ஞானமாக (1 கொரி.1:31) அருளிச் செய்திருக்கிற நம் அன்பு இரட்சகர் இயேசுவையே கண்ணோக்கிப் பார்த்து, தெய்வீக ஞானத்தினால் நிறைந்துகொள்ளுங்கள்.



ஜெபம்: ``என் அன்பு தகப்பனே, ஞானத்தின் சிகரமாகிய நீர் என்னோடுகூட இன்று இருக்கிறபடியால், என்னுடைய எல்லாக் குறைவுகளையும் மாற்ற வல்லவராயிருக்கிறபடியால் நான் சந்தோஷமாய் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். உமக்கு நன்றி செலுத்துகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!''

உபத்திரவத்தில் திடன்கொள்ளுங்கள்!

"உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்"
(யோவான் 16:33).

உலக வாழ்க்கையிலே உபத்திரவம், துன்பம், எதிர்பாராத மனவேதனைகள் போன்றவை அவ்வப்போது வந்து நம்மை கலக்குகின்றன. அநேகர் இதினிமித்தம் சோர்ந்துபோய், ஏன் சிலர் தற்கொலை செய்யவும் கூட உடனடியாக முடிவு செய்கின்றனர். ஆனால் ஆண்டவரோ அப்படிப்பட்ட நெருக்கமான சமயங்களிலே நம்மை திடன்கொள்ளும்படி உற்சாகப்படுத்துகிறார்.

ஒரு குடும்பத்திலே ஒரு பக்தியுள்ள மனைவி எல்லா நேரங்களிலும் ஆண்டவரோடு ஜெபத்தில் பேசிக்கொண்டே இருக்கிற அனுபவம் பெற்றிருந்தாள். அவள் குடும்ப வாழ்க்கையிலே பல்வேறு தேவைகள் இருந்தன. விசேஷமாக பணம் பற்றாக்குறை மிகுதியாக இருந்தது. எனினும், அவள் "போதும் என்கிற மனதுடனே கூடிய தேவபக்தியால்" நிறைந்து அப்படிப்பட்ட சமயங்களிலும் கர்த்தரை ஸ்தோத்திரிப்பதில் ஜாக்கிரதையாய் இருந்தாள் (1 தீமோ. 6:6). அதனால், தனக்கு குறைவுகள் வரும்போது, அவைகளையெல்லாம் அப்படியே ஆண்டவரிடம் கூறிவிடுவாள் (பிலி. 4:6). இப்படிப்பட்ட பாடுகளெல்லாம் நிரந்தரமானவை அல்ல. மிகவும் கொஞ்ச நாட்கள் தான் அவை இருக்கும் என்று வேதத்தில் வாசிக்கிறோம் (1 பேதுரு 1:6,7; 5:10). அதன்படியே அவளுடைய கணவருக்கு எதிர்பாராத உத்தியோக உயர்வுகள் அடுத்தடுத்து வந்தபடியினால், அவளுடைய பணக் கஷ்டம், கடன் பிரச்சினை யாவும் தேவ தயவால் அதிசயமாய் மாறியது. அதன்பிறகு அந்த கடினமான பாதை நிரந்தரமாக நீங்கியது.

எனக்கு அன்பானவர்களே! நீங்களும் கூட உலகத்தின் பாரங்களை, பாடுகளையெல்லாம் சிலுவையில் சுமந்து, வெற்றி சிறந்த நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்துவையே எல்லா சமயங்களிலும் நோக்கிப்பாருங்கள் (சங்.121:1,2). உங்களுக்கும் அவசியமான நேரத்தில் அவர் ஒத்தாசை செய்து முடிவில் வெற்றியைத் தருவது நிச்சயமான காரியம். விசேஷமாக என் அன்பு சகோதரிகளே, சிறிய காரியத்திற்கும் சோர்ந்து போகாமல் இருக்கும்படி கர்த்தருக்குள் திடன்கொண்டு வாழ கற்றுக்கொள்ளுங்கள். ஆண்டவர் இயேசு பிசாசினால் சோதிக்கப்பட்டபொழுது, தேவ வசனங்கள் மூலம் அவனை ஜெயித்தார் (மத்தேயு 4:1–11). அதுபோல, தம் பிதாவாகிய தேவனோடு ஜெபத்தில் ஐக்கியமாயிருந்து (யோவான் 10:30) அவர் தரும் தெய்வீக பெலனால் தம் வாழ்வை நிரப்பி, முடிவுபரியந்தம் தேவ சித்தத்தை நிறைவேற்றி முடித்தார் (மத்.14:23, மாற்கு 1:35, லூக்கா 6:12; 22:42; எபி.5:7). அதைபோல நீங்களும் ஆண்டவரிடம் நெருங்கி பிரார்த்தனை செய்வதில் கவனமாய் இருங்கள். கர்த்தர் உங்கள் வாழ்விலும் சோர்வை மாற்றி, திடபெலன் தந்து வழிநடத்துவார்.

ஜெபம்: "அன்புள்ள தெய்வமே! இந்த உலகின் பாடுகள் என்ன வந்தாலும், நீர் போதுமானவராய் இருக்கிறீர் என்று விசுவாசிக்கிறேன். இன்றும் என் பாடுகளை உம்முடைய பாதத்தில் நான் சமர்ப்பிக்கிறேன். நீர் பொறுப்பெடுத்து உம்முடைய வாக்குத்தத்தத்தின்படியே எனக்கு வெற்றி தருவீர் என்று முழு இருதயத்துடன் விசுவாசித்து உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே. ஆமென்!"

கிறிஸ்துவே நமக்கு உயிர்த்தெழுதலும் ஜீவனுமானவர்!

"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" (யோவான் 11:25).

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மரணத்தை ஜெயித்து உயிரோடு எழுந்தபடியினால் இன்று அவரை எழுப்பின தேவன், நம்மில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான நம்முடைய சரீரங்களை உயிர்ப்பிக்க வல்லமையுள்ளவராயிருக்கிறார் (ரோமர் 8:11). இந்த கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வல்லமை இன்று நமக்கு புது ஜீவனை அளிக்க ஏதுவானதாயிருக்கிறது. ஆகவே, சரீரத்திலே வியாதி வந்துவிட்டதே, ஆத்துமாவிலே கவலையும், பாரங்களும் சோர்வை உண்டாக்குகின்றனவே, ஆவியிலே மிகவும் சோர்ந்து போய் இருக்கிறேனே என்றெல்லாம் வீணாகக் கவலைப்படாதிருங்கள். கர்த்தர் உங்களுக்கு புது ஜீவனை தந்து, உங்களை பெலப்படுத்தி நிச்சயம் உயிர்ப்பிப்பார் (சங். 27:1).

ஒரு மனிதன் ஏழ்மை நிலைமையிலே யாதொரு வேலையும் இல்லாதவனாய், உதவி செய்வார் யாருமற்றவனாய், இருந்த வேளையிலே, கர்த்தரை மட்டும் உறுதியாய் பற்றிக் கொண்டு, அவரை ஜெபத்தின் மூலமாய் தேடுவதில் ஜாக்கிரதையாய் இருந்தான். அவனுடைய உண்மையான அன்பைக் கண்டு, ஆண்டவர் அவனுக்கு ஒரு வேலையை கொடுத்தார். வேலையில் அற்புதத்தை செய்து, நல்ல நிலைமைக்கு அவனை உயர்த்தி னார். ஆனால், உயர்வான நிலைமைக்கு வந்த பின்பு அவன் கொஞ்சம் கொஞ்சமாக ஆண்டவரைத் தேடுவதை நிறுத்திக்கொண்டான். ஒரு தேவனுடைய ஊழியர் அவனை சந்திக்க வந்தபோது, பரிசுத்த ஆவியானவர் மூலமாய் அவனுக்கு அவனது குறைவை உணர்த்தினார். அப்பொழுதுதான் அந்த மனிதன் தன்னுடைய பரிதாபமான ஆவிக்குரிய நிலைமையை உணர்ந்து, மிகுந்த மனஸ்தாபப்பட்டு கதறி அழுதான். "ஐயோ, தங்க இடமில்லாமல், பிளாட்பாரத்தில் படுத்துக்கொண்டிருந்த என்னை ஆண்டவர் எவ்வளவாய் இன்று உயர்த்தியிருக்கிறார். அவரைத் தேடாமல், அவரைவிட்டு இவ்வளவு தூரமாய் வந்துவிட்டேனே!" என்று கதறினான். தேவன் மன்னிக்கிறதற்கு தயை பெருத்திருக்கிறார். ஆகவே, அவனுடைய கதறுதலைக் கேட்டு, தம்முடைய உயிர்த்தெழுதலின் வல்லமையால் அவனுடைய வாழ்க்கையை மறுபடியும் புதுப்பித்தார். ஆண்டவர் அருளிய தெய்வீக சந்தோஷம், சமாதானம் அவன் வாழ்வை நிரப்பியது.

ஆம்! அன்பானவர்களே, உங்களுடைய வாழ்க்கையையும் இன்று நீங்கள் சற்று யோசித்துப் பாருங்கள். ஆண்டவரோடு நெருங்கி வாழ்கிறீர்களா? அல்லது அவர் செய்த நன்மைகளையெல்லாம் மறந்து, அவரை விட்டு விலகி தூரமாய் இருக்கிறீர்களா? இன்று அவரை நோக்கி நீங்களும் கதறுங்கள். உங்களுக்கும் தம்முடைய உயிர்த்தெழுதலின் வல்லமையால் புது ஜீவன் தந்து உயிர்ப்பிப்பார் (கொலோ. 2:13).



ஜெபம்: "என் அன்பு தெய்வமே! ஜீவனற்ற என் வாழ்வில் நீர் ஒருவர் தான் புது ஜீவனைக் கொடுக்க முடியும். இன்றே என் தவறுகளை, உம்மை விட்டு விலகின பாவத்தை எனக்கு மன்னித்து, உம்முடைய உயிர்த்தெழுதலின் ஜீவன் எனக்குள் பாயும்படி செய்யும். என் ஜெபத்தைக் கேட்கிறதற்காக உமக்கு நன்றி! இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்!

"உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது, ஆகையால் பயப்படாதிருங்கள், அநேகம் அடைக்கலான் குருவிகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்"
(லூக்கா 12:7).

ஆண்டவருடைய அன்பு எவ்வளவு பெரியது என்று பாருங்கள்! நம்முடைய தலையிலுள்ள மயிர் எவ்வளவு இருக்கிறது என்பதைக்கூட அவர் எண்ணி வைத்திருக்கிறார். இத்தனை அன்புள்ள தேவன் வேறே யார் உண்டு? ஆனால் நாமோ மனிதர்மேல் நமது முழு நம்பிக்கையையும் வைத்து எத்தனை முறை ஏமாந்துங் கொள்கிறோம் (எரே. 17:5). ஆனால், இந்த அன்பே உருவான ஆண்டவரை நாம் முழுவதுமாய் பற்றிக்கொள்ளும்போதும், அவர்மேல் சார்ந்துகொள்ளும்போதும், நம்மை பாக்கியவான்களாக, பாக்கியவதிகளாக அவர் நிச்சயம் மாற்றுவார் (சங்.34:8; 84:12;146:5).

ஒரு பெண் மிகுந்த மன வேதனையினிமித்தம், வாழ்ப்பிரியமில்லாமல் தற்கொலை செய்ய திட்டமிட்டாள். அத்தனையாய் உலகத்தின் பாடுகளினால் அவள் மனம் சோர்ந்துபோயிருந்தது. "இனி எனக்கு யார் உதவி செய்ய இருக்கிறார்கள்? இந்த உலகில் நான் ஏன் வாழ வேண்டும்?" என்று அவ்விதம் தீர்மானித்தாள். அப்படிப்பட்ட சமயத்தில் வேத புத்தகத்தை எடுத்து, "சரி, கடைசியாக ஒரு முறை வாசித்து நம் வாழ்வை முடிப்போம்" என்று திறந்தாள். அவள் கண்களிலே மேற்கண்ட வசனம் புலப்பட்டது. குறிப்பாக, அதிலே சொல்லப்பட்டபடி, "நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்" என்ற பாகத்தை வாசித்தவுடனே அவளுடைய மனதிற்குள் அது ஓர் பெரும் அதிர்ச்சியை உண்டாக்கிற்று. "ஆண்டவருடைய பார்வையிலே நான் விசேஷித்தவளா? இத்தனை அன்புள்ள ஆண்டவர் இருக்கும்போது நான் ஏன் உயிரை மாய்த்துக்கொள்ள வேண்டும்" என்று எண்ணி உடனே அவள் இருந்த இடத்திலேயே முழங்காற்படியிட்டாள். ஆண்டவரை நோக்கிக் கதறினாள். "இயேசுவே, உம்முடைய உண்மையான தெய்வீக அன்பின் மேன்மையை உணராமல், ஒரு கணம் தவறாக முடிவு எடுக்க நினைத்தேனே, என்னை மன்னியும்" என்று தன் கஷ்டங்களையெல்லாம் அவரிடம் கூறினாள். ஜெபித்து முடித்த உடனே, அவள் உள்ளம் தெய்வீக சமாதானத்தால் நிறைந்தது (யோவான் 14:27). அவள் மனதில் இருந்த பாரங்கள் எல்லாம் ஓடி மறைந்தன.

ஆம்! என் அன்புக்குரியவர்களே, நீங்களும் சோர்ந்துபோய் தற்கொலை ஒன்று தான் எனக்கு வழி என்று தவறாக நினைக்காதீர்கள்! ஆண்டவருக்கு முன்பாக நீங்கள் விசேஷித்தவர்கள் என்பதை மறந்து போகாதிருங்கள். இந்தப் பெண்ணை ஆசீர்வதித்து, அவளுக்கு புது உயிர், புது ஜீவன் அருளிய ஆண்டவர் (பிலி. 1:20,21) கரத்திலே உங்கள் காரியங்களையும் இப்பொழுதே ஒப்படையுங்கள். அவர் உங்களுக்காக சகலத்தையும் ஆசீர்வாதமாக மாற்ற வல்லமையுள்ளவராக, இதோ இப்பொழுதே காத்திருக்கிறார் (யோவான் 10:10).

ஜெபம்: "அன்பு தெய்வமே! உம்முடைய அன்பு எவ்வளவு பெரியது. உமக்கு முன்பாக என்னை எவ்வளவு விசேஷித்த நிலைமையிலே வைத்திருக்கிறீரே! எனவே, என் காரியங்களையெல்லாம் உம்மிடத்திலே இன்றே, இப்பொழுதே ஒப்புவித்து விடுகிறேன். பொறுப்பெடுத்து வழி நடத்தும், இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

நிச்சயமான கிருபைகளை நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன்!

''உங்கள் செவியை சாய்த்து, என்னிடத்தில் வாருங்கள்; கேளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும்; தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன்'' (ஏசாயா 55:3).

தாவீது இளம் வயதில் வாலிபனாக இருந்த காலத்திலிருந்தே ஆண்டவரோடு நெருங்கி வாழ்ந்தவனாய் இருந்தான். ஆகவேதான், ஆண்டவர் ''என் இருதயத்திற்கு ஏற்றவன்'' (அப். 13:22) என்று அவனைக் குறித்து நற்சாட்சி பகர்ந்தார். நம்முடைய வாழ்வு எப்படிப்பட்ட கேடுகள் நிறைந்ததாய் இருந்தாலும், ஆண்டவர் அவைகளையெல்லாம் மன்னித்து, தலைகீழாய் மாற்றும் வல்லமையுடையவர். தாவீதின் வாழ்க்கையிலே ஏற்பட்ட குறைவுகளைக் கூட, அவன் அவரை நோக்கி கண்ணீரோடு கெஞ்சியபோது மன்னித்து, அவனுக்கு மேன்மையான முடியைத் தந்து, ஆசீர்வதித்தார் (சங். 51:9,12).

அயல்நாடு ஒன்றில் ஒரு வீட்டில் Ann என்ற ஒரு பெண் பணிபுரிந்து வந்தாள். அவள் எல்லாக் காரியங்களையும் மிகவும் நன்றாக செய்வாள். ஆனால், கோபம் வந்துவிட்டாலோ பாத்திரங்களையெல்லாம் தூக்கியெறிவாள். அவள் இருக்கும் இடம் ஒரே சத்தமாக இருக்கும். ஆகவே, அந்த வீட்டார் அவளுக்கு கோபம் வராமல் கவனமாய் பார்த்துக் கொள்வார்கள். ஒருநாள் அவ்விதமாக கோபம் வந்தபோது, அவளுக்கே தன்னைக் குறித்து வெறுப்பு உண்டாயிற்று. உடனே முழங்காற்படியிட்டாள். ''ஆண்டவரே, என் கோப குணத்தை மாற்ற உம்மால் மட்டுமே முடியும். உமக்கு பிரியமான மகளாக என்னை மாற்றும்'' என்று கதறி ஜெபித்தாள். ஆண்டவரும் அவளை உடனடியாக மன்னித்து, தம்முடைய இரட்சிப்பினால் அலங்கரித்தார். வெகு சில நாட்களில் பரிசுத்த ஆவியினாலே அவளை அபிஷேகம் பண்ணினார். அதோடுகூட அநேக ஆவிக்குரிய வரங்களையும் அவளுடைய வாழ்விலே கிருபையாய் அருளி செய்தார். இதைத்தான் ''பாவம் பெருகின இடத்திலே கிருபை அதிகமாய் பெருகிற்று'' (ரோமர் 5:20) என்று வாசிக்கிறோம். இவ்விதமான கிருபைகளை அவள் பெற்றிருப்பதை மக்கள் அறிந்து, அவள் ஜெபத்தை நாடி அவளைத் தேடி வர ஆரம்பித்தனர். அநேகருக்கு அவள் ஒரு ''ஆறுதலின் மகளாக'' விளங்கினாள். அந்த வீட்டாருக்கு அவளைக் குறித்து மிகுந்த பெருமை உண்டாயிற்று. அவள் மரித்தபோது, அவளை ''பரிசுத்த ஆன்'' (Holy Ann) என்று யாவரும் அழைத்து, அந்த நகராட்சியின் தலைவர் (மேயர்) கூட அவளைக் கனப்படுத்தினார். ஆண்டவர் தம்முடைய தெய்வீகக் கிருபையை அவ்வளவாய் அந்த பெண்ணுக்கு பொழிந்தருளினார்.

இன்றைக்கு இதே தெய்வீகக் கிருபையைப் பெற நம்முடைய குறைவுகளையெல்லாம் அறிக்கையிட்டு, ''ஆண்டவரே, குறைவுகள் நிறைந்த என்னையும் உம்முடைய நிறைவான கிருபையினால் நிரப்பும்'' என்று பயபக்தியுடன் மன்றாடுவோம் (ரோமர் 5:17).



ஜெபம்: ''அன்பு தெய்வமே! குறைவுள்ள நிலைமையில் நான் இருந்தாலும், நீர் சிலுவையில் சிந்தின தூய இரத்தத்தால் என்னை முற்றிலும் கழுவி, இன்றுமுதல் என் வாழ்விலும் உம்முடைய நிச்சயமான கிருபைகளை நித்திய உடன்படிக்கையாக பெற்றுக் கொள்ள உம்மை நோக்கி மன்றாடுகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!''

பயமும் திகிலும் உங்களை அணுகுவதில்லை!

"நீதியினால் ஸ்திரப்பட்டிருப்பாய்; கொடுமைக்கு தூரமாவாய்; பயமில்லாதிருப்பாய்; திகிலுக்கு தூரமாவாய், அது உன்னை அணுகுவதில்லை" (ஏசாயா 54:14).

இது ஒரு அருமையான தேவனுடைய வாக்குத்தத்தம்! நீதியின் வழிகளில் கர்த்தர் இந்த வசனத்தின்படி நம்மை ஸ்திரப்படுத்தி, நம்மை காத்துக்கொள்வார் (எரே. 20:11). இன்றைக்கு ஒருவேளை பல்வேறுவிதமான பயங்கள், திகில்கள் உங்களையும் வாட்டிக்கொண்டிருக்கலாம். கவலைப்படாதிருங்கள். கர்த்தர் உங்களோடிருந்தால் எல்லாத் தீங்கினின்றும் உங்களை பாதுகாப்பார் (சங். 121:7)!

ஒரு அலுவலகத்திலே பணிபுரிந்துகொண்டிருந்த அதிகாரி ஒருவருக்கு, ஒரு விசேஷித்த பணி ஒன்றைக் கொடுத்து, வேறு ஒரு ஊருக்கு போய் அதை செயல்படுத்தி வரவேண்டுமென்று அவருடைய மேலதிகாரிகள் கட்டளையிட்டனர். அவர் ஒரு தேவனுடைய மகன். ஆகவே, அங்கு சென்றபோது தன் அலுவலகத்தின் அதிகாரிகள் குறிப்பிட்டிருந்த பணியையெல்லாம் முடித்த பிறகு மாலை வேளையிலே, "எங்களுக்காக ஜெபிக்க மாட்டாரா? வேதத்திலிருந்து ஆலோசனை கொடுக்க மாட்டாரா?" என்று ஆவலோடு காத்து கொண்டிருந்த சில மக்களுக்கு சிறுசிறு கூட்டம் வைத்து, அவர்களோடு பேசி அவர்களை ஆறுதல்படுத்தினார். இதை கேள்விப்பட்ட அந்த ஊரைச் சேர்ந்த மற்றொரு தெய்வ பயமில்லாத மனிதன், அவருடைய மேலதிகாரிக்கு தவறான விதத்தில், "இந்த மனிதன் இங்கு வந்து தன்னுடைய கடவுள் சேவையை செய்கிறானே தவிர உங்கள் அலுவலக வேலையை செய்வதாக இல்லை" என்று கடிதம் எழுதி போட்டுவிட்டான். அந்த ஊரிலும் அப்படிப்பட்ட கூட்டங்கள் நடக்காதபடி, பல்வேறு விதத்தில் தொல்லை கொடுத்தான். ஆனால், அந்த மனிதரோ கர்த்தருக்குள் தன்னை திடப்படுத்திக்கொண்டு, பல்வேறு முக்கிய மனிதர்களின் துணையோடு கூட்டங்களை நடத்தி, மக்களை சந்தோஷப்படுத்தி, தன் வேலையையும் தன் அதிகாரிகள் விருப்பத்தின்படி எல்லாவற்றையும் சிறப்பாக முடித்து தன் ஊர் திரும்பினார். தன்னுடைய உயர் அதிகாரியைப் பார்க்க அடுத்த நாள் அலுவலகம் சென்றபோது, அவர் கேட்ட முதல் கேள்வி, "உங்களைப் பற்றி இவ்வாறு தவறான கடிதம் வந்திருக்கிறதே, நீங்கள் அங்கு போய் உங்களுடைய கடவுளைப் பற்றிய பிரச்சாரம் மட்டும் செய்தீர்களா?" என்று கேட்டார். அவரோ, தான் முடித்து வந்த எல்லா வேலைகளையும் விளக்கிக் காட்டினபோது, அந்த அதிகாரி அசந்துபோனார். ஏனென்றால், அவர் செய்து முடித்திருந்த பணி யாவும் மிகவும் நேர்த்தியாக இருந்தது. அந்த குற்றச்சாட்டுகள் நிறைந்த கடிதத்தை உடனடியாக அந்த மேலதிகாரி கிழித்து குப்பையிலே போட்டார். அதற்குபதிலாக அவருக்கு உத்தியோக உயர்வையும் கொடுத்து அவரை கனப்படுத்தினார்.

ஆம்! ஆண்டவர் உங்களையும் நிச்சயம் கனப்படுத்துவார். நீங்கள் அவருக்கு பிரிய மானவர்களாய் அவருக்கு மட்டும் பயந்து அவருடைய வழிகளில் நடவுங்கள். அப்பொழுது அவர் உங்களுக்கும் இந்த வாக்குத்தத்தத்தை நிச்சயம் நிறைவேற்றுவார் (எரே. 15:11).

<u>ஜெபம்:</u> "அன்பு தெய்வமே! நீர் எவ்வளவு சமீபமாய் என்னோடு இருக்கிறீர். <u>இன்றுமுதல்</u> உமக்கு மட்டும் பயப்படும் பயத்தோடு, பொல்லாங்குக்கு விலகி, உமக்கு பிரியமாய் வாழ எனக்கும் அருள் தாரும். அதன்மூலம் என்னையும் நீர் காக்கிறவராயிருக்கிறீர் என்று விசுவாசித்து, உம்மைத் துதித்து ஜெபத்தை ஏறெடுக்கிறேன் நல்ல பிதாவே, ஆமென்!"

தேவனுடைய கிருபை மிகவும் அருமையானது!

"தேவனே, உம்முடைய கிருபை எவ்வளவு அருமையானது! அதினால் மனுபுத்திரர் உமது செட்டைகளின் நிழலிலே வந்தடைகிறார்கள்" (சங்கீதம் 36:7).

இந்த உலகத்தில் மனுஷருடைய அன்பு நிலையற்றது. இன்று ஒன்று சொல்லுவார்கள்; கேட்பதற்கு இனிமையாக இருக்கும். ஆனால், நாளை அதே மனிதர் வேறுவிதமாய் தலைகீழாய் பேசுவார்கள். அது நம்ப முடியாததாய், முற்றிலும் மாறுபட்டதாய் இருக்கும். ஆம்! இது தான் மனிதருடைய அன்பு. ஆனால் ஆண்டவரோ, தம்மை நாடி வருகிற, தமக்கு பயப்படுகிற, தம்முடைய பிள்ளைகள் மீது தம்முடைய அளவற்ற கிருபையை அருளிச்செய்கிறார் (சங். 103:11). இந்த கிருபையைப் பெற்று, ஒவ்வொருவரும் அவருடைய செட்டைகளின் நிழலுக்குள் வந்தடைந்து கொள்ளவும், ரூத்தைப்போல் நிறைவான பலனைப் பெறவும் அவரே அருமையாக வழிநடத்துகிறார் (ரூத் 2:12).

ஒரு பள்ளியிலே ஒரு ஏழை மாணவி படித்துக்கொண்டிருந்தாள். ஏழை என்றால் மற்ற பணக்கார பெண்கள் முன்னதாக சற்று குறைவுபட்டிருந்தாள். அவ்வளவுதான்! இதினிமித்தம் அந்த பணக்காரப் பெண்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து அவளை ஒவ்வொருநாளும் ஏதாவது குறை சொல்லி, அவள் உடையைப் பார்! அவள் தலைபின்னலை பார்! என்றெல்லாம் கூறி அவளை பரிகசிப்பார்கள். படிப்பிலும் அவள் சற்று குறைவுள்ளவள்தான். இந்த நிலைமையில் அவள் மனம் உடைந்துபோன சமயத்தில் ஆண்டவரை பயபக்தியுடன் தேட ஆரம்பித்தாள். "நீரே எனக்கு ஞானமாய், நான் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று எனக்கு வழிகாட்டியாய் இரும். என்னைக் கைவிடாதிரும்" என்று பள்ளி செல்லும்பொழுதெல்லாம் ஜெபம் பண்ணிக்கொண்டே செல்வாள். பரீட்சை வந்தது. எல்லோரும் பரீட்சை எழுதினார்கள். அந்த பெண்கள் அவளைப் பார்த்து, "நாங்கள் எல்லோரும் பரீட்சையில் தேர்ச்சி பெற்று மேல் படிப்பு படிக்கப்போகிறோம்; ஆனால் நீயோ குறைவான மதிப்பெண்கள் பெற்று தோல்வியடையப் போகிறாய்" என்றெல்லாம் பரிகசித்தனர். பரீட்சை முடிவுகள் வந்து, மதிப்பெண்கள் வெளியிடப்பட்டன. எல்லோரும் போய் ஆசையோடு பார்த்தார்கள். அந்த பெண் மிகவும் ஆச்சரியப்படும் வகையிலே எல்லாவற்றிலும் எதிர்பாராத அளவுக்கு சிறந்த மதிப்பெண்கள் பெற்றிருந்தாள். ஆனால், அவளை எள்ளி நகையாடின பெண்களோ மிக மிகக் குறைவான மதிப்பெண்கள் பெற்றிருந்தனர். அப்பொழுதுதான் அவர்கள் தங்கள் குறைகளை எண்ணி அவளிடம் மன்னிப்புக் கேட்டனர். கர்த்தர் அவர்கள் முன்னதாக அவளைக் கனப்படுத்தினார்.

ஆம்! கர்த்தரை உண்மையாய் தேடுகிறவர்களுக்கு அவர் அருளும் கிருபை மிகவும் அருமையானது. நீங்களும் பற்பல விதங்களிலே குறைவுகளை அனுபவித்துக் கொண்டிருக்கலாம். ஆனால், இந்த பெண்ணைப்போல ஆண்டவரை உறுதியாய் பற்றிக்கொள்வீர்களானால் அவருடைய தெய்வீகக் கிருபையை அளவில்லாமல் உங்கள் வாழ்க்கையில் சூழ்ந்திருக்கப்பண்ணி, அவைகளையெல்லாம் தலைகீழாய் மாற்றுவார் (சங். 32:10). நிறைவானவர் உங்களுக்குள்ளே வரும்போது குறைவானவைகளையெல்லாம் மாற்றிப்போடுவார் (1 கொரி. 13:10).

<u>ஜெபம்:</u> "அன்பின் இரட்சகரே, <u>இன்றுமுதல்</u> என் வாழ்வில் உள்ள சகலவித குறைவுகளையும் மாற்றி, என்மேல் மிகுந்த கிருபை வைத்து, வழிநடத்தப் போகிறதற்காக உமக்கு கோடான கோடி ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தர் தமது ஜனத்திற்கு அடைக்கலமானவர்!

"...கர்த்தர் தமது ஜனத்துக்கு அடைக்கலமும் இஸ்ரவேல் புத்திரருக்கு அரணான கோட்டையுமாயிருப்பார்"

(யோவேல் 3:16).

இந்த உலகத்தில் அநேகர் உதவியற்றவர்களாக, தனிமைப்பட்டவர்களாக, தள்ளப்பட்டவர்களாக சஞ்சலத்தில் வாழ்கின்றனர். "அடுத்து என்ன செய்வது? எனக்கு உதவி செய்வார் யாரும் இல்லையே" என்று பல சமயம் தத்தளிக்கும் நிலைமை ஏற்படுகிறது (சங். 60:3). ஆனால், இந்த வசனமோ ஆண்டவர் தம்மை அண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு அடைக்கலமானவர் என்று அருமையாய் விவரிக்கிறது. இன்று உங்களுடைய நிலைமை என்ன? எனக்கு வீடு இல்லையே, வேலை இல்லையே, குழந்தை இல்லையே என்று பல்வேறு இல்லாமையினால் தவிக்கிறீர்களோ? அந்த தவிப்பின் மத்தியில் ஆண்டவரை மட்டும் நோக்கிப் பாருங்கள். அவரோடு ஜெபத்தின் மூலமாய் பேசுங்கள். அவருடைய வார்த்தையை வாசித்து தியானியுங்கள். அவ்வாறு நீங்கள் அவரை அண்டிக்கொள்ளும்போது, அவருடைய செட்டைகளின் கீழே உங்களை மறைத்து, உங்களுக்கு ஒரு சேதமும் வராமல் காப்பாற்றி, உங்களை தாமே வழிநடத்துவார் (சங். 2:12ன் கடைசி பாகம்).

ஒரு தம்பதியருக்கு வேலை மாற்றம் ஏற்பட்டபோது, வேறு ஊருக்கு செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆனால், அங்கே கிறிஸ்துவைப் பின்பற்றுகிற மக்களுக்கு வீடு கொடுக்க யாரும் முன்வரவில்லை. எப்படியோ ஒரு இடத்தில், சில வருடங்களாக வாழ்ந்து கொண்டிருந்த நண்பர் ஒருவர், ஒரு வீட்டை ஒழுங்குபடுத்திக் கொடுத்தார். அந்த பகுதியில் வாழ்ந்த ஒருவரும் அந்த தம்பதியரோடு பேசவோ, பழகவோ மாட்டார்கள். அவர்கள் தீண்டத்தகாதவர்கள் என்று தள்ளிவைப்பார்கள். ஆனால், இவர்களோ அதையெல்லாம் பொருட்படுத்தாமல் ஆண்டவர் மீது அன்பு கொண்டவர்களாக, தினமும் அதிகாலையில் இருவருமாக ஒன்று சேர்ந்து, சத்தமாக ஆண்டவரை துதித்துப்பாடி பிரார்த்தனை செய்தார்கள். நாளடைவில் இவர்கள் வாழ்க்கையில் காணப்பட்ட பரிசுத்த நடக்கை, தெய்வ பக்தி இவைகளையெல்லாம் கண்கூடாகக் கண்டு அந்த மக்கள் சற்று உள்ளத்தில் மாற்றமடைந்தார்கள். சில மாதங்களுக்குள்ளாக அந்த தம்பதியருக்கு மறுபடியும் மாற்றல் ஏற்பட்டது. அந்த ஊரைவிட்டு வெளியே போக வேண்டிய நாட்கள் நெருங்கின. சுற்றி வசித்த ஒவ்வொருவரும் விசேஷமாக யார் யார் அவர்களை தள்ளிவைத்தார்களோ அவர்கள் எல்லோரும், அவர்களுக்கு வீட்டை ஒழுங்குபடுத்திக் கொடுத்த அந்த நண்பரிடம் போய் எப்படியாவது அவர்களை எங்கள் வீட்டுக்கு வந்து ஒரு சிறு பிரார்த்தனை செய்துபோகும்படி கேட்பீர்களா? என்று கேட்கும் அளவுக்கு கர்த்தர் அவர்களை கனப்படுத்தினார். அவர்களும் மிகுந்த அன்போடு ஒவ்வொரு வீடாக சென்று ஜெபம் பண்ணி அவர்களை சந்தோஷப்படுத்தி மிகுந்த மகிழ்ச்சியோடு, கனத்தோடு, புகழ்ச்சியோடு, அந்த ஊரிலிருந்து புறப்பட்டு சென்றார்கள். ஆண்டவருடைய அன்பு எவ்வளவு பெரியது! தம்மை அண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் எத்தனையாய் அடைக்கலம் தந்து அவர்களை கனப்படுத்துகிறார் (சங். 62:6).

ஜெபம்: "அன்பு தெய்வமே! இன்று என் உள்ளத்திலும் என் கவலைகளை, பாரங்களையே எண்ணி தவிக்காமல், இந்த வசனத்தின்படி நீர் எனக்கும் அடைக்கலமாயிருக்கிறீர் என்பதை உணர்ந்து, உம்மை நானும் அண்டிக்கொள்கிறேன். எனக்கும் நீர் உதவிசெய்ய வல்லமையுள்ளவராயிருக்கிறபடியால் சந்தோஷமாய் உமக்கு நன்றி செலுத்துகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் தொடரும்!

"என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்"
(சங்கீதம் 23:6).

கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது (சங். 34:10). "ஆண்டவரே! நீரே எனக்கு அரணான கோட்டை, உம்மையே நான் இறுகப் பற்றிக் கொள்கிறேன்" என்று உங்கள் வாழ்வை ஆண்டவரோடு இணைத்து (யோவேல் 3:16) அவரை உறுதியாய் பற்றிக்கொள்ளுகிறபொழுது தான், இந்த ஆசீர்வாதம் நம் வாழ்வில் வரும். கர்த்தருடைய வார்த்தை சொன்னால் சொன்னதுதான்! ஆகவே, கர்த்தருக்குள் சந்தோஷமாயிருங்கள். நீங்கள் விரும்புகிற நன்மையையும் அதோடுகூட அவருடைய கிருபையையும் அளவில்லாமல் உங்கள் வாழ்வில் பொழிவார்.

ஒரு அலுவலகத்தில் ஒரு மனிதர் உண்மையாய், கடினமாய் உழைத்து வந்தார். அன்றாட வேலையை முடிக்காமல் அலுவலகத்திலிருந்து போகவே மாட்டார். ஆனால், அவரோடு பணிபுரிந்தவர்களோ அதைக் கண்டு அவர்மீது பொறாமைகொள்வார்கள். அவருடைய திறமை, உண்மையினிமித்தும் அவருக்கு உத்தியோக உயர்வு நியாயமான முறையிலே வர இருந்த நாட்களில் அது கிடைக்கக்கூடாதபடி எத்தனையோ தடைகளை குறுக்கே போட்டு அவரை ஒன்றுமில்லாமலாக்கிவிட எவ்வளவோ முயற்சி செய்தார்கள். ஆனால் அவரோ அவர்களுக்கு ஒரு தீங்கும் செய்யாமல், அவர்கள் செய்கிற தீங்கையெல்லாம் கண்டும் காணாதவர்போல நடந்துகொண்டு கர்த்தரிடம் மட்டும் தன் பாரங்களையெல்லாம் மத்தேயு 11:28-ன்படி, தினமும் கூறிக்கொண்டே வந்தார். அவருடைய பெயரை பதவி உயர்வு பட்டியலில் இருந்து எடுத்துவிடும்படியும் சிலர் முயற்சி செய்தனர். ஆனால், தேவ கிருபை அவர் மீது இறங்கினபடியால், எங்கிருந்தோ திடீரென்று வந்த உயர் அதிகாரி ஒருவர் அந்த பட்டியலைக் காண நேர்ந்தது. அவருக்கு இந்த மனிதருடைய உண்மை உழைப்பு, தேவ பக்தி யாவும் தெரியும். ஆகவே, வேண்டுமென்று யாரோ இந்த சூழ்ச்சியை செய்திருக்கிறார்கள் என்று அறிந்தவராய், திரும்பவுமாய் தனக்குக் கொடுக்கப்பட்டிருந்த அதிகாரத்தின்படி, அவைகளை மாற்றி அவருடைய பெயரை பட்டியலில் முதலில் வரும்படி எழுதிக் கொடுத்து, அதை அமுலாக்கும்படி கூறிவிட்டு சென்றார். பொறாமைக்காரர்களுக்கெல்லாம் இது எப்படி நடந்தது என்று ஒரே ஆச்சரியம்!

ஆம், கர்த்தரை மேய்ப்பராக கொண்டவர்களுக்கு கர்த்தர் நல்லவராக, நன்மையையும், கிருபையையும் ஒவ்வொரு நாளிலும் அருளிச்செய்வார் (சங். 119:68). உங்கள் வாழ்விலும்கூட அப்படியே இன்று இதே ஆண்டவர் நன்மையையும் கிருபையையும் பொழிந்து, பொறாமை, எரிச்சல் கொண்ட மக்கள் முன் உங்கள் தீமைகளை யெல்லாம் நன்மையாக மாற்றிப் போடுவார். எனவே, வீணான பயம், கவலைகளை விட்டு, கர்த்தருக்குள் தைரியமாய் சந்தோஷமாய் இருங்கள்.



ஜெபம்: "அன்பு இரட்சகரே! இந்த உலகத்திலே பொல்லாங்கு நிறைந்த மக்கள் மத்தியிலே நீரே அரணாக, மேய்ப்பராக இருந்து கரம்பிடித்து வழி நடத்தும். உம்முடைய நன்மையினாலும், கிருபையினாலும் என்னை நீரே நிரப்பி ஆசீர்வதிக்கிறதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

தீங்குநாளில் கூடார மறைவில் மறைத்து காப்பார்!

''தீங்குநாளில் அவர் என்னை தம்முடைய கூடாரத்தில் மறைத்து, என்னை தமது கூடார மறைவிலே ஒளித்துவைத்து, என்னை கன்மலையின்மேல் உயர்த்துவார்''
(சங்கீதம் 27:5).

பிசாசு பக்தியாயிருக்கிறவர்களை விழுங்குவதற்காக பலவிதங்களிலும் முயற்சி செய்கிறான் (1 பேதுரு 5:8). அதற்கான வழிகளை இன்றும் தேடுகிறான். நாம் எந்தவிதத்திலும் கர்த்தரை அண்டி சேரக்கூடாது. ஆண்டவருடைய ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ளக்கூடாது என்பதுதான் அவனுடைய எண்ணம். இதைத்தான் ''திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான்'' (யோவான் 10:10) என்று வாசிக்கிறோம். ஆனால், கர்த்தரை உறுதியாய்ப் பற்றிக் கொண்டு அவருடைய செட்டைகளின் மறைவிலே தன் வாழ்வை ஒளித்துக்கொள்கிற ஒவ்வொரு தேவ பக்தியுள்ள மனிதனுக்கும், மனுஷிக்கும் பரிபூரண ஜீவனைக் கொடுப்பதே தேவனுடைய சித்தம். இதைத்தான் மேற்கண்ட வசனம் அழகாய் கூறுகிறது. ஆபத்துக் காலத்தில் ஆண்டவர் அனுகூலமான துணையாய் மாறுகிறார் (சங். 46:1). தீங்கு வரும்போது, தம்முடைய கரத்தின் நிழலினால் நம்மை மறைத்து கன்மலையாகிய தம்மேல் உயரத் தூக்கி, காக்கிறார். ஆண்டவருடைய அன்பு எத்தனை விலையேறப் பெற்றது!

ஒரு தேவபக்தியுள்ள குடும்பம் தினமும் தவறாமல் ஆண்டவரைத் தேடுவதிலும் அவருக்கு பிரியமாய் வாழ்வதிலும் ஜாக்கிரதையாய் வாழ்ந்து வந்தனர். அதிகாலை நான்கு மணிக்கெல்லாம் குடும்பமாக உட்கார்ந்து சத்தமாய் பாடி ஆண்டவரை துதிப்பது சுற்றுவட்டாரத்தில் இருந்த எல்லோருக்கும் கேட்கும். ஒரு நாள் பகல் பனிரெண்டு மணி இருக்கும், அவர்கள் வீட்டின்மேலே போடப்பட்டிருந்த ஓடு அத்தனையும் மடமடவென்று சரிந்ததுபோல ஒரே சத்தம். எல்லோரும் ஓடிப்போய், ''ஐயோ, இந்த வீட்டாருக்கு என்ன நடந்ததோ?'' என்று தேடிப் பார்த்தார்கள். ஆனால், தேவ கிருபையினால் அவர்கள் அத்தனை பேரும் அந்த சமயத்தில் அந்த வீட்டிற்குள் இராமல் தேவன் அருள்புரிந்ததினாலே, ஒருவருக்கும் ஒரு சேதமும் வரவில்லை. ஆம்! பிசாசு குடும்பமாக அவர்களை அழிக்கத் தீர்மானித்தான். ஆனால், தேவனோ அவர்களது ஜீவனைக் காப்பாற்றி தம்முடைய கரத்தினால் எந்தவித சேதமுமின்றி பாதுகாத்துக்கொண்டார்.

என் அன்பு சகோதர, சகோதரிகளே, உங்களையும் இன்று அதேவண்ணமாக பிசாசு கொண்டு வரும் சகல தீங்குகளுக்கும் மறைத்து காப்பார்! நீங்கள் கர்த்தரையே நம்பி சார்ந்திருக்கும்பொழுது, அவரை அண்டிக்கொள்ளும்போது, நிச்சயமாகவே அவ்வாறு கர்த்தர் அரணாயிருந்து உங்களைக் காப்பார் (நாகூம் 1:7).

ஜெபம்: **''என் அன்பு தெய்வமே! எவ்வளவு தீங்குகள் திடீர் திடீரென்று இந்த உலகிலே என் கண்முன்னால் நடந்தாலும், ஆண்டவரே இன்று நீரே எனக்கு பாதுகாவலராய் இரும். உம்முடைய செட்டைகளின் மறைவிலே என்னை மறைத்து, காக்கிற அன்புள்ள தெய்வமாக நீர் இருக்கிறபடியால், தீமைகளைக் கண்டு நான் பயப்படாமல், சோர்ந்து போகாமல், உமக்குள் தைரியமாக இருக்கிறேன். என்னைக் காத்து வழிநடத்துகிற தெய்வமாக நீர் இருக்கிறபடியால் உமக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்! இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!''**

கர்த்தரால் ஆசீர்வாதம் பெற்ற சந்ததி!

"அவர்கள் சந்ததியானது ஜாதிகளின் நடுவிலும், அவர்கள் சந்தானமானது ஜனங்களின் நடுவிலும் அறியப்பட்டிருக்கும்; அவர்களைப் பார்க்கிற யாவரும் அவர்கள் கர்த்தரால் ஆசீர்வாதம் பெற்ற சந்ததியென்று அறிந்துகொள்வார்கள்" (ஏசாயா 61:9).

ஆபிரகாம் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டான். ஆண்டவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, அவரை அவன் குடும்பமாக பின்பற்றினபோது, மேற்கண்ட ஆசீர்வாதத்தை அவன் வாழ்க்கையிலே நிறைவாக அனுபவித்தான். அப்படியே இன்று நம் ஒவ்வொருவருக்கும் கூட இந்த ஆசீர்வாதத்தை ஆண்டவரால் கொடுக்க முடியும். இதை விசுவாசித்து அவரை உண்மையுடன் தேடினால், நம்மீது பிரியம் வைத்து நமக்கும் நிறைவாய் உதவி செய்வார் (நீதி. 12:22). ரூத் என்ற மோவாபிய பெண்ணின் குடும்பம் ஒரு உடைந்த குடும்பம். எனினும், ஆண்டவர் அவளைத் தெரிந்து கொண்டு அழைத்தபோது, அந்த அழைப்பிற்கு உடனடியாக அவள் கீழ்ப்படிந்தபடியால், அவளும் சந்ததி சந்ததியாக தேவபக்தியுள்ள சந்ததியாக ஆசீர்வாதம் பெறும்படியான சிலாக்கியம் பெற்றாள் (மத். 1:5). இன்றைக்கும் உங்கள் குடும்பத்தில் அல்லது உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் இப்படிப்பட்ட தெய்வீக ஆசீர்வாதத்தைப் பெற ஆண்டவர் உங்களையும் அன்புடன் அழைக்கிறார். உலக ஆசீர்வாதங்கள் இவைகளை கொடுக்காது. தேவனை உண்மையாய் தேடுகிறவர்களுக்கு மட்டும் தான் இந்த ஒப்பற்ற ஆசீர்வாதம் கிடைக்கும்.

யோனத்தான் எட்வர்டு என்று ஒரு தேவ மனிதர் இருந்தார். அவருடைய குடும்பம் மிகப் பெரியது. எத்தனையோ பிள்ளைகள் அந்த குடும்பத்தில் இருந்தார்கள். அவர்கள் அத்தனைபேரும் தேவ பக்தியுள்ளவர்களாய் இருந்தார்கள். ஒருவராவது தவறான பாவ வழியிலே போனதில்லை. அதற்கு நேர்மாறாக அநேகர் தேவனுடைய ஊழியத்தை செய்கிறவர்களாய், உலகப்பிரகாரமாக பெரிய பெரிய பதவிகளில் இருந்தவர்களாக வாழ்ந்தனர். இந்த குடும்பம் முழுவதும் கர்த்தரால் ஆசீர்வாதம் பெற்ற சந்ததியாக விளங்கினது. காரணம், பெற்றோர் தேவனுடைய அழைப்புக்கு தங்களை ஒப்புக்கொடுத்து பயபக்தியுடன் பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கினதால்தான் கர்த்தர் தேவபக்தியுள்ள, ஆசீர்வாதம் பெற்ற சந்ததியை அவர்களுக்கு கொடுத்தார்.

உலக ஆசை, மாம்ச இச்சைகள், வேண்டாத சிநேகிதங்கள் இவைகளையெல்லாம் இன்று நாமும் உதறித்தள்ளி, இவ்விதமான மேலான தெய்வீக அனுபவங்களை நாடித் தேடுவோமா? நம்முடைய வாழ்வில் ஆண்டவரை பின்பற்றுவதில் எவ்வளவு குறைவுகள் இருக்கின்றன? அவைகளையெல்லாம் ஒவ்வொன்றாக நம்மைவிட்டு அப்புறப்படுத்துவோம். அதற்கு பதிலாக ஆண்டவரை உறுதியாய் அண்டிக்கொள்வோம் (எசே. 18:9). ஆபிரகாமை ஆசீர்வதித்த ஆண்டவர் நம்மையும் சந்தித்து சந்ததி சந்ததியாக தேவ பக்தியுள்ள சந்ததியாக நிச்சயம் மாற்றுவார் (மல். 2:15).



<u>ஜெபம்</u>: "அன்புள்ள தெய்வமே! உமக்கு பிரியமான தெய்வீக சந்ததியாக இவ்வுலகில் வாழ்வது எத்தனை பெரிய சிலாக்கியம்! என் குடும்பத்தில் ஒவ்வொருவரையும் உம்மண்டையில் இழுத்துக்கொண்டு, உமக்கு பிரியமாக, பயபக்தியுடன் வாழ அருள்தாரும். இந்த சிலாக்கியத்தை <u>இன்றுமுதல்</u> எனக்கும், என் குடும்பத்திற்கும்கூட நீர் தர வாஞ்சையுள்ளவராய் இருக்கிறபடியால் உமக்கு நன்றி. கோடான கோடி ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

புது நாமத்தால் நீ அழைக்கப்படுவாய்!

"ஜாதிகள் உன் நீதியையும், சகல ராஜாக்களும் உன் மகிமையையும் காண்பார்கள்; கர்த்தருடைய வாய் சொல்லும் புது நாமத்தால் நீ அழைக்கப்படுவாய்"

(ஏசாயா 62:2).

வேதபுத்தகத்திலே யாக்கோபு என்ற மனிதனைக் குறித்து வாசிக்கிறோம். அவனுடைய வாலிப நாட்களில் தன் சகோதரனை இரண்டு முறை ஏமாற்றின ஒரு எத்தனாக, ஏமாற்றுக்காரனாக அவன் இருந்தான் (ஆதி. 27:36) தன் வாழ்வு செழிக்க வேண்டும் என்பதற்காக அப்படி ஒரு சுயநல வாழ்வு வாழ்ந்தான். ஆனால், ஆண்டவர் அவனைக் குறித்து, வேறு விதமாய் தீர்மானித்தார். அவனுக்கு ஒருநாளில் தன்னை வெளிப்படுத்திக் காண்பித்தார். தேவன் உயிரோடு இந்த ஸ்தலத்தில் வாசமாக இருக்கிறார். இதை நான் அறியாமல் போனேனே! என்று அன்று முதல் அவரை உறுதியாகப் பற்றிக்கொண்டான் (ஆதி. 28:16). 'எத்தன்' என்று அர்த்தம் கொண்ட "யாக்கோபு" என்ற பெயரை ஆண்டவரே மாற்றி, அதற்கு பதிலாக மிகவும் ஆசீர்வாதமான 'இஸ்ரவேல்' என்ற புது பெயரை அவனுக்கு கொடுத்தார். அதன் பிறகு அவனுடைய வாழ்வு ஆண்டவரோடு இணைந்ததாக கடைசி வரை பக்தி நிறைந்ததாக மாறினது. அவனும் அவனுடைய சந்ததியும் ஆசீர்வாதம் நிறைந்தவர்களாக இருக்கும்படி ஆண்டவர் அருள்புரிந்தார். உங்களுக்கும் ஆண்டவர் புது வாழ்வைத் தந்து, தம்மை அறிகிற அறிவினால் நிரப்பி, புது நாமத்தையும் கூட்டித் தருவார் (ஏசாயா 45:4).

என்னுடைய சகோதரியின் கணவர் பெயர் திரு. ஜார்ஜ் என்பதாகும். அவர்கள் மரித்தபோது, என் கணவர் ஒரு தரிசனம் கண்டார். அதில், அவர்கள் பரலோகம் சென்றபோது, ஒரு தேவ தூதன் அவர்களை சந்தித்து, "உலகில் அநேக ராஜாக்கள் உன் பெயராகிய ஜார்ஜ் என்பதையே கொண்டிருந்தார்கள். முதலாம் ஜார்ஜ், இரண்டாம் ஜார்ஜ் என்றெல்லாம் அழைக்கப்பட்டிருந்தார்கள். ஆனால், உன்னையோ, ஆண்டவர் 'நித்திய ஜார்ஜ்' என்று அழைக்கும்படியாக தெரிந்துகொண்டிருக்கிறார், வா! உன் எஜமானனுடைய நித்திய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்று இயேசுவண்டை அழைத்து சென்றதாக தரிசனம் கண்டு, எங்களிடம் பகிர்ந்து கொண்டார்.

அன்பானவர்களே, தேவனோடு உண்மையாய் உறவாடுவதினால் நம்முடைய வாழ்க்கையில் எத்தனை பெரிய சந்தோஷம் பாருங்கள். மரித்த பின்பு கூட மன்னன் இயேசு தரும் புது நாமம் எத்தனை மகிமையாய் இருக்கிறது. பாவத்தில் இன்னும் கொஞ்சம் வாழட்டும், இன்னும் கொஞ்சம் உலக இன்பத்தை அனுபவிக்கட்டும் என்று சீர்கேடான நிலைமைக்கு உங்களை ஒப்புவித்திருக்கிறீர்களா? விசேஷமாக, வாலிபரே! இந்த உலக அன்பு உங்களை வஞ்சிக்காதபடி, ஆண்டவரண்டை ஓடி வந்து சரணடையுங்கள். குடும்பத்தின் மக்களே! உங்கள் குடும்பத்தில் யாக்கோபைப் போல், தெய்வ பயம் நிறைந்த வாழ்விற்கு முக்கியத்துவம் கொடுங்கள். அப்பொழுது உங்களுக்கும் புது நாமம் தந்து, தேவன் உங்கள் வாழ்வை செழிக்க செய்வார் (ஏசாயா 52:6).

<u>ஜெபம்:</u> "அன்பு தெய்வமே! இந்த உலகின் ஆசை, இச்சைகள் எனக்கு <u>இன்றுமுதல்</u> வேண்டாம். என் பழைய வேண்டாத பெயரை மாற்றி உம்மை அறிந்த மகனாக, மகளாக புது நாமத்தை நீர் தருகிறபடியால் உமக்கு நன்றி செலுத்துகிறேன். துதி, கனம், மகிமை எல்லாம் உமக்கே செலுத்துகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

உங்கள் மீது நோக்கமாயிருக்கும் கர்த்தருடைய கண்கள்!

"பஞ்சத்தில் அவர்களை உயிரோடே காக்கவும், கர்த்தருடைய கண் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கிறது" (சங்கீதம் 33:19).

கர்த்தருடைய கண்கள் அவருடைய சிருஷ்டிகளாகிய நம் ஒவ்வொருவர் மீதும் எப்பொழுதும் இருக்கிறது. விசேஷமாக, தம்மைப் பற்றி உத்தம இருதயத்தோடு இருக்கிறவர்களை அவர் பார்த்து (சங். 11:4), அவர்களுக்கு தமது தெய்வீக வல்லமையினால் ஏற்ற உதவியையும், ஒத்தாசையையும் ஏற்ற சமயம் ஆண்டவர் அனுப்புகிறார் (2 நாளா. 16:9). வேதபுத்தகத்தில் ஆகார் என்ற ஒரு பெண் எல்லோராலும் கைவிடப்பட்ட நிலைமையிலே கண்ணீரில், தனிமையில் தவித்த நிலையில் வாழ்ந்தபோது, கர்த்தர் அவளைத் தேடி வந்தார். அவருடைய கண்கள் அவள்மீது பட்டன. ஆகவே, "நீர் என்னைக் காண்கிற தேவன்" என்று அவள் அவருக்கு நன்றி செலுத்தினாள் (ஆதி. 16:13). ஆம்! உங்களையும்கூட அவர் பார்த்து கொண்டேயிருக்கிறார்.

ஒரு வாலிபன், கிறிஸ்தவனாயிருந்தும், இயேசு கிறிஸ்து விரும்பாத சகல காரியங்களிலும் ஈடுபடலானான். நண்பர்களோடு சந்தோஷமாயிருப்பதும், மது அருந்துவதும் அவனுக்கு விருப்பமான பொழுது போக்காயிருந்தது. எனவே, கல்வி கற்பதில் யாதொரு நாட்டமுமில்லாதவனாக, பரீட்சையில் தோல்வியடைந்தான். ஆனால், அவனுடைய நண்பர்களெல்லாம், பரீட்சை முடிந்து, வெற்றிபெற்று நல்ல வேலைகளிலும் அமர்ந்துவிட்டதையும், தான் மட்டும் தோல்வியின் உச்சக்கட்டத்தில் தவிப்பதையும் கண்ணுற்றபொழுதுதான், தன் வாழ்வைக் குறித்து பாரமும், பயமும் ஏற்பட்டது. ஒருவித கவலை மனதை கவ்விக் கொண்டது. அதை மறக்க நன்றாக குடித்துவிட்டு வருவோம் என்று கிளம்பியவன், சற்றுநேரம் TV பார்க்கலாம்" என்று அமர்ந்தான். மேற்கண்ட வாக்கின்படி, அன்பு நிறைந்த கண்களோடு அவனை நோக்கிய ஆண்டவர், அப்பொழுது TVயில் வந்த "இயேசு அழைக்கிறார்" நிகழ்ச்சி மூலம் அவனோடு பேசினார். "ஐயோ, நான் தவறான வழியில் போவதை ஆண்டவர் அறிந்து, என்னோடு பேசுகிறாரே" என்று தெய்வபயம் கொண்டு, அவரைத் தேடினான். ஆண்டவர் அவன்மீது இரங்கினார். அவன் படிப்பிலே வெற்றியையும், அதன்பின்பு நல்ல வேலையையும் கொடுத்து "கிறிஸ்துவின் மகிமையை அறிந்த நற்சாட்சியுள்ள கிறிஸ்தவனாக" அவனை மாற்றினார்.

ஆம்! நம் ஆண்டவர் நமக்காகவே இன்றும் உயிரோடு ஜீவிக்கிறவர். அவருடைய கண்கள் நம் எல்லோர் மேலும் இருக்கிறது. விசேஷமாக தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடு, பக்தியோடு தம்மைத் தேடுகிற தம் பக்தர்கள் மீது அவர்களுக்கு எப்பொழுதும் உதவி செய்ய, கவனமாக அவர் பார்த்துக்கொண்டே இருக்கிறார் (சங். 34:15). அவருடைய வல்லமை நிறைந்த கரங்கள் அத்தகையோருக்கு சமயத்திற்கேற்ற நன்மைகளைத் தந்து வழிநடத்தும்.

ஜெபம்: "அன்பு தெய்வமே! நீர் இவ்வளவு சமீபத்தில் இருப்பது எனக்கு எவ்வளவு சந்தோஷத்தை கொடுக்கிறது. நீர் ஒருவரே என்னைக் காண்கிறவர், என்னை வழி நடத்துகிறவர் என்று நம்பி நான் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். இன்றுமுதல் நீரே எனக்கு நம்பிக்கை! உம்மையே பற்றிக்கொள்வேன்! இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

பக்தியுள்ளவன் விண்ணப்பம் கேட்கப்படும்!

"இதற்காக சகாயங்கிடைக்குங் காலத்தில் பக்தியுள்ளவனெவனும் உம்மை நோக்கி விண்ணப்பஞ்செய்வான்; அப்பொழுது மிகுந்த ஜலப்பிரவாகம் வந்தாலும் அது அவனை அணுகாது" (சங்கீதம் 32:6).

கர்த்தர் உங்களது விண்ணப்பங்கள் யாவற்றையும் கேட்கிறவர். விசேஷமாக, அவர் மீது அன்புகூர்ந்து, முழு இருதயத்தோடும் விசுவாசித்து, தன் இருதயத்தை அவர் சந்நிதியில் ஊற்றுகிற ஒவ்வொருவருடைய விண்ணப்பத்தையும் அவர் கேட்டு பலன் தருவதில் உண்மையும் உத்தமமுமானவராயிருக்கிறார் (1 சாமு. 1:10,27). எனவே, நாம் உலக மனிதர்மேல் அல்லது நம்முடைய உறவினர்கள்மேல் நம் முழு நம்பிக்கையையும் வைக்காமல், முழு இருதயத்தோடும் கர்த்தரை சார்ந்துகொள்ளும்போது, நம்முடைய வாழ்க்கையில் ஜலப்பிரவாகம்போல எத்தனை பிரச்சினைகள் வந்தாலும் ஆண்டவர் அது நம்மை அணுகாதபடி ஆச்சரியமாய் காப்பாற்றி வழிநடத்துவார் (ஏசாயா 40:31;சங்.37:34).

ஒரு வீட்டில் கணவன் ஆண்டவர்மேல் அன்பற்றவனாய் வாழ்ந்து வந்தார். ஆனால் மனைவியோ அவரை நேசித்து பக்தியோடு வாழ்ந்து வந்தாள். திடீரென்று அவர்கள் குழந்தை ஒன்று வியாதிப்பட்டு, மரிக்கும் தருவாயிலானது. வைத்தியர்கள் எவ்வளவோ முயற்சித்தும், கடைசியில் மரித்துப்போனது. மனைவியோ விசுவாசத்துடன் குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஆலயம் செல்ல புறப்பட்டாள். ஆனால் அவள் கணவன், "இவ்வளவு நாள் இந்த குழந்தையை ஆலயத்திற்கு எடுத்து சென்று நீ பிரார்த்தனை செய்து வந்தாய். அதில் ஒரு அர்த்தம் இருந்தது. ஆனால், இப்பொழுது மரித்த குழந்தையை எடுத்துக்கொண்டு ஆலயம் போகிறேன் என்று சொல்லுகிறாயே, அதில் அர்த்தம் இருக்கிறதா? வா, நாம் அதை அடக்கம் செய்வோம்" என்று கூறினான். ஆனால் மனைவியோ, "இல்லை, என் ஆண்டவர் சமுகத்தில் போய் நான் அழுது அவரிடம் மன்றாடுவேன். அவர் நிச்சயம் குழந்தைக்கு உயிர் கொடுப்பார்" என்று மிகுந்த விசுவாசத்தோடு, மரித்த குழந்தையை எடுத்துக் கொண்டு ஆலயம் சென்றாள். கணவனோ கல்லறைக்கு சென்று அதை புதைப்பதற்கான ஏற்பாடுகளை செய்யப்போனான். ஆலயம் செல்ல அந்த குழந்தையை ஒரு துணியில் யாருக்கும் தெரியாதவாறு சுற்றி, பேருந்தில் ஏறி சென்றாள். ஆலயத்தில் ஆராதனை நடந்து கொண்டிருந்தது. போதகர் ஜெபிக்க, ஜெபிக்க பிள்ளையுடைய உயிர் அந்த தாயினுடைய விசுவாசத்தின்படி, நம்பிக்கையின்படி திரும்ப வந்தது! குழந்தை எழுந்து உட்கார்ந்தது! தாய்க்கு ஒரே சந்தோஷம். ஆண்டவர் மகிமைக்காக உடனடியாக ஆலயத்தில் அந்த தாய் சாட்சி கூறி கர்த்தரை மகிமைப்படுத்தினாள். அவிசுவாசியாய் இருந்த அந்த கணவன் இந்த சம்பவத்தின் மூலம், ஆண்டவர் மெய்யாகவே ஜீவிக்கிறார். அவரிடம் விண்ணப்பம் செய்கிறவர்களுடைய ஜெபத்தை கேட்கிறார் என்று அறிந்து கொண்டான்.

எனக்கு அன்பானவர்களே, இன்று நீங்களும்கூட கர்த்தர்மேல் முழு மனதோடு விசுவாசம் வைத்து ஜெபம் செய்யுங்கள். கர்த்தர் நிச்சயம் பதில் தருவார். உங்கள் விண்ணப்பங்களுக்கும், வேண்டுதல்களுக்கும் பரத்திலிருந்து நிறைவான ஆசீர்வாதம் வரும் (1 பேதுரு 3:12).



ஜெபம்: "என் அன்பு தகப்பனே, நீர் ஜீவனுள்ளவராக, உண்மையானவராக, ஜெபத்தைக் கேட்கிறவராக இருக்கிறீர் என்பதை உணர்ந்துகொள்ளும்படி கிருபை செய்ததற்காக ஸ்தோத்திரம். உமக்கு பயந்து, உம்மை விசுவாசித்து, உமக்கு பிரியமாய் நடக்க இன்று முதல் எனக்கும் அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

உலர்ந்த வாழ்வை உயிரடைய செய்யும் தேவன்!

"கர்த்தராகிய ஆண்டவர் இந்த எலும்புகளை நோக்கி: இதோ, நான் உங்களுக்குள் ஆவியை பிரவேசிக்கப்பண்ணுவேன். அப்பொழுது உயிரடைவீர்கள்"

(எசேக்கியேல் 37:5).

ஆண்டவர் இயேசு இந்த உலகத்திலே மனிதனாக வாழ்ந்தபோது, மரித்துப்போன அநேகரை உயிப்பித்தார். அதேபோல் இன்றைக்கும் ஆவியில்·அனலற்றும், மாம்சத்தில் ஜீவனற்றும் இருக்கிற ஒவ்வொருவருக்கும்கூட புத்துயிர் தந்து, தமக்கு பிரியமான வாழ்வை அவர்களுக்கு தர கர்த்தர் வல்லமையுள்ளவராய் இருக்கிறார் (ரோமர் 5:10). மரித்துப்போன சரீரங்களை, சரீரத்தின் பாகங்களை ஆண்டவர் இன்றைக்கும் புதுப்பிக்கிறார். மக்களுடைய கேடான இருதயத்தை ஆண்டவர் தொடும்போது, அவர்கள் ஆச்சரியப்படும்விதத்தில் தலைகீழாய் பரிசுத்தவான்களாக மாறுகிறார்கள் (எபி. 10:10). இவைகள் எல்லாவற்றுக்கும் காரணம், ஆண்டவர் நமக்குள் தம்முடைய ஆவியை பிரவேசிக்கப்பண்ணி நம்மை உயிரடைய செய்வது தான் (ரோமர் 8:11).

சில வருடங்களுக்கு முன்பு பெண்களுக்கென்று நாங்கள் நடத்திய கூட்டத்தில் தமிழிலே நான் செய்தியைக்கொடுத்து முடித்த பிறகு, வந்திருந்த மக்களுடைய தேவைகளுக்காக கண்ணீரோடு ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தேன். கூடி இருந்தவர்கள் எல்லோரும் பெண்கள் மட்டுமே! சாட்சியின் நேரம் வந்தபோது, எல்லோரும் ஆச்சரியப்படும் விதத்தில் வட இந்தியாவைச் சேர்ந்த, ஹிந்தி பாஷை மட்டுமே அறிந்த ஒரு மனிதன் மேடைக்கு வந்து, இங்கும் அங்குமாக நடந்து ஆண்டவரை துதித்துக் கொண்டிருந்ததைக் கண்டு யாவரும் ஆச்சரியமடைந்தோம். காரணம், கூட்டத்திற்கு வரும்முன்னர் அவன் முதுகு வளைந்துபோய், அவனால் நேரே நிற்கமுடியாத பரிதாப நிலை. குனிந்து இரண்டு கைகளாலும், கால்களாலும் தவழ்ந்து நடந்துதான் காலம் கழித்து வந்தான். அவன் எப்படி அந்த கூட்டத்திற்கு வந்தானோ, அவனுக்கு என்ன விளங்கினதோ, எதுவும் புரியாத புதிராக இருந்தது. ஆண்டவர் அவனுடைய பரிதாபமான நிலைமையிலிருந்து ஒரு புத்துயிரைக் கொடுப்பதற்காக அவனை அங்கு கொண்டு வந்து, அவரே அவனைத் தொட்டு அவனுடைய சரீரத்திலே ஒரு அற்புதத்தை செய்திருக்கிறார்! புத்துயிரைக் கொடுத்திருக்கிறார்! குனிந்து நடந்துகொண்டிருந்த அவன் இன்று நிமிர்ந்து நடக்கிறான். எந்த கூட்டத்திற்கு போனாலும் என்னிடம் வந்து "அம்மா" என்று சொல்லி ஒரு நன்றி கலந்த சிரிப்பைக் காண்பிப்பான். அவனைப் பார்க்கும்போது, மேற்கண்ட வசனம்தான் எனக்கு ஞாபகம் வரும்.

ஆம் பிரியமானவர்களே! ஆவியிலும், ஆத்துமாவிலும், சரீரத்திலும் மரித்துப்போய் இருக்கிற உங்கள் அவயவங்களையும், உங்கள் இருதயத்தையும், வாழ்வையும், ஆண்டவர் தம்முடைய ஆவியை அனுப்பி உயிரடைய செய்யவும், தேவனுடைய வாசஸ்தலமாக மாற்றியமைக்கவும் வல்லமையுள்ளவராக இருக்கிறார் (எபே. 2:19,22).

ஜெபம்: **"அன்பு தெய்வமே! சீர்கெட்டுப்போன என் வாழ்வை இன்று நீர் மாற்ற வல்லவராயிருக்கிறீர் என்று அறிந்து, என்னை உம்முடைய பாதத்தில் ஒப்படைக்கிறேன். அந்த மனிதனுக்கு செய்த அற்புதத்தை எனக்கும் செய்யும். உம்முடைய ஆவியானவரை அனுப்பி என்னையும் இன்று உயிரடைய செய்வதற்காக உமக்கு கோடான கோடி ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"**

ஒருவராய் பெரிய அதிசயங்களை செய்கிறவர்!

"ஒருவராய் பெரிய அதிசயங்களை செய்கிறவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது" (சங்கீதம் 136:4).

வேதபுத்தகத்தில் யோபு 5:9; 9:10 என்ற வசனங்களிலெல்லாம் "கர்த்தர் ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களை செய்கிறவர்" என்று வாசிக்கிறோம். அவர் பெயர் "அதிசயமானவர்" என்றும் வாசிக்கிறோம் (ஏசாயா 9:6). உங்களிலும்கூட, "இன்றைக்கு இவ்வளவு கஷ்டமான சூழ்நிலையிலே நான் அமர்ந்திருக்கிறேனே! எந்த மனிதராலும் ஒன்றுமே செய்ய முடியாத நிலையில், இந்த காரியங்களை எல்லாம் யாரால் மாற்ற முடியும்?" என்று நீங்கள் கவலையோடு, நம்பிக்கையற்ற நிலைமையில் இருக்கலாம். ஆனால், இந்த "அதிசயமான தேவன்" மீது உங்கள் முழு நம்பிக்கையையும் வைத்து சிறிய காரியமானாலும், பெரிய காரியமானாலும், "ஆண்டவரே, இது என்னால் நினைத்துக்கூட பார்க்க முடியாத ஒரு காரியம். நீர் அதிசயம் செய்தாலொழிய இதில் நான் வெற்றி பெறுவது மிக மிக அரிதான காரியம். ஆனால், நான் உம்மை முழுமனதோடு நம்பி, விசுவாசத்தோடு இதில் எனக்கு ஓர் அதிசயம் செய்யும்படி உம்மிடத்தில் மன்றாடுகிறேன்" என்று அவரிடம் ஒப்படையுங்கள். அப்பொழுது உங்கள் நம்பிக்கை வீண் போகாமல் (நீதி. 23:18), நீங்கள் விரும்புகிறதற்கும், வேண்டிக் கொள்ளுகிறதற்கும் அதிகமாய் ஆண்டவர் அதிசயங்களை செய்து, மேற்கண்ட வாக்குத்தத்தம் உண்மையானது என்பதை நிரூபித்துக் காண்பிப்பார் (எபே. 3:20).

ஒரு தேவனுடைய மனிதர் தன் மகளுக்கு திருமணம் செய்வதற்காக எல்லா ஒழுங்குகளையும் செய்தார். திருமண நாளும் வந்தது. ஏறக்குறைய ஆயிரம் பேர் தான் மகளுடைய திருமண வைபவத்திற்கு வரக்கூடும் என்று எண்ணி, அதற்கு ஏற்றார்போல் சமையல் காரியங்களை ஒழுங்குபடுத்தியிருந்தார். ஆயிரம் இலைகள் தான் வாங்கி வைக்கும்படியும் கூறியிருந்தார். ஆனால், அவர் எதிர்பார்த்ததற்கு மேலாக 1500 பேர் வந்து விட்டார்கள். எனினும், அவர் ஒன்றுக்கும் கவலைப்படவில்லை. நான் தான் ஆண்டவரிடம் எல்லாவற்றையும் ஒப்படைத்திருக்கிறேனே, அவர் எனக்கு நிச்சயமாய் அதிசயம் செய்து யாவரையும் திருப்தியாக அனுப்புவார் என்று கர்த்தரை ஸ்தோத்திரித்துக் கொண்டேயிருந்தார். அவருடைய விசுவாசம் வீண்போகவில்லை. யாவரும் போன பிறகு அந்த சாப்பாட்டு காரியங்களை கவனித்தவர் அவரிடம் வந்து, "ஐயா, ஆயிரத்துக்கும் மேலாக எத்தனையோ பேர் வந்திருக்கிறார்கள். நாமோ 1000 இலைகள் தான் வாங்கியிருந்தோம். இப்பொழுது பார்த்தால் ஆயிரத்துக்கும் மேலாக எத்தனையோ நூற்றுக்கணக்கில் இலைகள் பலுகி பெருகியிருக்கும் அதிசயத்தை என்னால் காண முடிந்தது. நீங்கள் நம்பியிருக்கும் ஆண்டவர் தான் உங்களுக்கு குறைவில்லாமல் ஆசீர்வாதத்தை விளங்கப்பண்ணியிருக்கிறார்" என்று சந்தோஷமாக கூறினார்.

அன்பானவர்களே, நீங்களும்கூட ஆண்டவரிடம் உங்களையும், உங்கள் அனைத்து காரியங்களையும் சமர்ப்பித்து, ஒருவராய் பெரிய அதிசயங்களை செய்கிற அவர் மூலம் பெறும் சகல அதிசயங்களையும் அனுபவித்து மகிழுங்கள் (சங். 136:4).



ஜெபம்: "அன்பு தெய்வமே! வீணான பயங்களையெல்லாம் நீர் என் உள்ளத்திலிருந்து எடுத்துப்போட்டு இன்று எனக்கு அதிசயங்களை ஒவ்வொரு காரியத்திலும் நடத்தித் தரப் போகிறபடியால் உமக்கு கோடான கோடி ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"

கர்த்தர் உங்களை திருப்தியாக போஷிப்பார்!

''உச்சிதமான கோதுமையினால் அவர்களை போஷிப்பார்; கன்மலையின் தேனினால் உன்னை திருப்தியாக்குவேன்'' (சங்கீதம் 81:16).

ஆண்டவர் இயேசு தன்னை நம்பி வந்த மக்களை எப்படியெல்லாம் திருப்தியாக போஷித்தார் என்று வேதபுத்தகத்தில் வாசிக்கிறோம். விசேஷமாக, ஒரு முறை வனாந்தரமான இடத்திலே அவருடைய செய்தியைக் கேட்டு, அவரிடம் ஆசீர்வாதம் பெற்ற மக்கள் மாலையில் திரும்பி வீட்டுக்கு செல்லவேண்டிய நிலைமையிலே ஆண்டவர் மனதுருகி, ஐந்து அப்பம் இரண்டு மீனைக்கொண்டு ஐயாயிரத்திற்கும் மேலான ஆண்களையும் மற்றும் பெண்களையும் குழந்தைகளையும் திருப்தியாக போஷித்து வீட்டுக்கு அனுப்பினார் (மத். 14:14–21). அன்று அந்த மக்கள் மீது கரிசனையாய் இருந்து அவர்களை திருப்தியாக போஷித்த ஆண்டவர் இன்றும் உயிரோடு இருக்கிறார். அன்பானவர்களே, ஆண்டவர் கொடுக்கிற ஆகாரத்தை ஆசீர்வதித்து, ஸ்தோத்திரம் பண்ணி நாம் அருந்தும்பொழுது அது மிகுந்த ஆசீர்வாதத்தை நமக்கு கொடுக்கும் (1 தீமோ. 4:4,5). கையில் இருக்கும் கொஞ்சம் பணம், கொஞ்சம் ஆகாரம் இவற்றை அன்றுபோல் இன்றும் திருப்தியாகும் அளவுக்கு ஆசீர்வதித்து பலுகிப் பெருகச் செய்ய வல்லமையுள்ள ஆண்டவர் உங்களோடு இருக்கும்போது, ஏன் வீணான பயமும் கவலையும் கொள்ளுகிறீர்கள்? (ஆதி. 9:1,7).

ஒரு ஏழை குடும்பத்தில் இரண்டு பிள்ளைகளோடு ஒரு விதவைத்தாய் அந்தந்த நாளின் ஆகாரத்திற்காக, கர்த்தரை மட்டும் நம்பியிருந்தாள். சிறு பிள்ளைகள் பசியினால் சில சமயம் அம்மாவிடம் போய், ''அம்மா, பசிக்குதே'' என்பார்கள். உடனடியாக அவள் அவர்களோடு சேர்ந்து பிரார்த்தனை செய்வாள். அன்றும் அப்படித்தான், சிறிய மகன், ''அம்மா ஜெபம் பண்ணினால் சாப்பாடு கிடைக்குமா?'' என்று கேட்டான். ஆம் மகனே! கர்த்தர் உங்களை போஷித்து காக்கிறவர் என்று சொல்லி ஜெபம் செய்தாள். ஜெபம் முடிந்தது. வீட்டுக்கு வெளியே ஒரே சத்தம்! என்ன சத்தம் அது? என்று சிறுவன் ஓடிச்சென்று பார்த்தபொழுது, அந்த ஊரில் உள்ள கால்வாய் ஒன்று உடைந்து போனபடியால் அதிலுள்ள தண்ணீரெல்லாம் ஊருக்குள் ஓடி வர ஆரம்பித்தது. சாக்கடைகள் நிரம்பி வழிய ஆரம்பித்தன. அந்த சாக்கடைக்குள்ளே ஏராளம் பெரிய பெரிய மீன்களும் உயிரோடு வந்தன. சிறுவர்கள், ஏன் பெரியவர்கள்கூட அந்த மீன்களைப் பிடித்தனர். இந்த பையன்களும் ஓடிச்சென்று மீன்களை பிடித்து வந்து தாயிடம் கொடுக்க, தாய் அருமையாக சமைத்து, சிறிய மகனிடம், ''மகனே, ஆண்டவரிடம் ஜெபித்ததால் அவர் எப்படி திருப்தியாய் நம்மை போஷிக்கிறார் என்பதை இப்பொழுது அறிந்து கொண்டாயா?'' என்றாள்.

ஆம்! பிரியமானவர்களே, அதே தேவன் இன்று உங்கள் முன்பாக உங்களோடு இருக்கிறார். ''பசியாயிருக்கிறேன்'' என்று சொல்லும்போது, முழங்காற்படியிட்டு அவரை நோக்கிப் பாருங்கள். பரத்திலிருந்து எந்தவிதத்திலாவது உங்களை திருப்தியாக போஷிக்க அவர் உடனடியாக வழி திறப்பார் (நீதி. 30:9).

ஜெபம்: ''என் அன்பு தகப்பனே, நீர் மெய்யாகவே ஜெபத்தை கேட்கிற தேவன்! இன்று என்னுடைய தேவைகளை, விசேஷமாக எனக்கு வேண்டிய ஆகாரத்தை அதிசயமாய் கொடுக்கிற அன்பின் தேவன் என்பதை நான் உணர்ந்து உமக்கு நன்றி செலுத்துகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!''

புது எண்ணெயால் அபிஷேகம்பண்ணுவார்!

"என் கொம்பை காண்டாமிருகத்தின் கொம்பைப்போல உயர்த்துவீர்; புது எண்ணெயால் அபிஷேகம் பண்ணப்படுகிறேன்" (சங்கீதம் 92:10).

இது ஒரு தெய்வீக அனுபவம்! கர்த்தரை உண்மையாய் நேசிக்கிற, நாடித்தேடுகிற ஒவ்வொருவருக்கும் ஆண்டவர் இதை கொடுக்கிறார். இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் மனிதனாக அவதரித்தபொழுது அவர் தேவகுமாரனாக இருந்தபொழுதிலும், இந்த அனுபவத்தை பெற்றார் என்று அப்போஸ்தலர் 10:38–ல் வாசிக்கிறோம். தேவன் அவரையும் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் நிரப்பினார். இன்று தேவனுடைய வாக்குத்தத்தத்தின்படி அதை விரும்பி, நாடித் தேடுகிற ஒவ்வொருவருக்கும் அளவில்லாமல் அருளிச்செய்கிறார். எனவே, லூக்கா 11:13–ல் வாசிக்கிறபடியே, நாமும் வாஞ்சையுடனும், தாகத்துடனும் (ஏசாயா 44:3) ஆண்டவரை நோக்கி மன்றாடி இந்த தெய்வீக அனுபவத்தை சீஷர்கள் பெற்றதுபோல் பெற்று மகிழ்வோம்.

ஒரு வாலிபன் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தான். அவனுக்கு ஆவிக்குரிய அனுபவங்களைக் குறித்து ஒன்றும் தெரியாது. ஏனெனில், அவன் ஒரு பெயர் கிறிஸ்தவன். ஆனால், அவனுடைய நண்பன் ஒருவன் ஆண்டவரை அதிகமாக தேடுவதையும், ஜெபிக்கிற வேளையில் அவன் சந்தோஷமாய் யாரோ ஒருவரோடு பேசுவதையும் கண்டபொழுது அவனுக்கு முதலில் அது வேடிக்கையாக இருந்தது. ஆனால், ஒரு நாள் அவனிடம் அதைக் குறித்து கேட்டபோது, அவன் பெற்ற இணையற்ற தெய்வீக சந்தோஷத்தைக்குறித்து விளக்கி கூறினபொழுது, இவனுக்கும் ஒரே வாஞ்சை. ஏசாயா 44:3–ன்படி, கருத்தோடும், தாகத்தோடும் இவனும் ஜெபிக்க ஆரம்பித்தான். என்ன ஆச்சரியம்! ஒரு தெய்வீக வல்லமை இவன் உள்ளத்தையும் நிரப்பியது. சொல்லி முடியாததும், மகிமையால் நிறைந்ததுமான சந்தோஷம் அவனுக்குள்ளும் பொங்கி எழுந்தது. மேற்கண்ட வாக்குத்தத்தத்தின்படி இவன் அந்த அனுபவத்தை பெற்று அகமகிழ்ந்தான். அதன்பிறகு அந்த நண்பனோடு சேர்ந்து ஆண்டவருக்காக முற்றிலும் பரிசுத்தமாய் வாழவும், வாலிப வயதில் சிருஷ்டிகரை நினைக்கவும், ஒவ்வொரு செயலிலும் கர்த்தரை மகிமைப்படுத்துவதிலும் சிறந்து விளங்கினபடியால் உலகப்பிரகாரமாக கல்வியிலும் மற்றும் சகல காரியங்களிலும் ஆசீர்வாதம் நிறைந்தவனாக வாழ்ந்தான்.

என் அன்பு வாலிப சகோதர, சகோதரிகளே, இன்று உங்களுக்கும் இதே ஆசீர்வாதத்தை ஆண்டவர் கொடுக்க காத்திருக்கிறார். வீண் விவாதங்களையும், தர்க்கங்களையும், உலகப்பிரகாரமான ஆசாபாசங்களையும் உதறித் தள்ளிவிட்டு ஆண்டவரை நோக்கி, இதே தெய்வீக அனுபவத்தை இன்று எனக்கும் தாரும் என்று தாழ்மையோடு, உண்மையான வாஞ்சையோடு கேளுங்கள். உங்கள் வாழ்வு காண்டாமிருகத்தின் கொம்பைப்போல எல்லாக் காரியங்களிலும் உயர்த்தப்படும் (சங். 75:10).

ஜெபம்: "அன்பின் இரட்சகரே, நீர் பெற்ற இந்த தெய்வீக அனுபவத்தை இன்று எனக்கும் தந்தாலொழிய நான் உம்மை விடுவதில்லை. யாக்கோபு அப்படி கேட்டபொழுது அவனை நிறைவாய் ஆசீர்வதித்தீரே. என்னிலும் தெய்வீக அபிஷேகம் நிரம்பி வழியும்படி என்னையும் ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

தமக்கு பயந்தவர்களின் விருப்பத்தின்படி செய்கிற கர்த்தர்!

"அவர் தமக்கு பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார்" (சங்கீதம் 145:19).

யோசுவா என்ற தேவ மனிதன் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றி வந்த வேளையிலே, ஒரு முறை பகைவர்களோடு போர் புரியும்பொழுது, சூரியனையும், சந்திரனையும் தரித்து நிற்கும்படி ஆண்டவரிடம் விண்ணப்பம் செய்தான். அதை ஆண்டவர் அப்படியே நிறைவேற்றிக் கொடுத்தார் (யோசுவா 10:1–12). எந்த மனிதனாலும் நிறைவேற்ற முடியாத இப்படிப்பட்ட ஒரு பெரிய சாதனையை கர்த்தர் தமக்கு பயந்து தம்மையே பின்பற்றின தம்முடைய அடியானின் வாழ்வில் ஆச்சரியமாக நிறைவேற்றி னார். இன்றும்கூட இதே அனுபவங்களை கர்த்தர் தமக்கு பயந்தவர்களுக்கு கொடுத்து ஆசீர்வதிக்க அவர் என்றென்றும் ஜீவனுள்ளவராயிருக்கிறார் (மல். 4:2; நீதி. 14:26).

ஒரு முறை "இயேசு அழைக்கிறார்" நற்செய்தி கூட்டம் ஒரு ஊரில் நடந்து கொண்டிருந்தது. ஜனங்கள் ஏராளமாக திரண்டிருந்தனர். கூட்டம் நடந்து கொண்டிருந்த பாதி வேளையில் எங்கிருந்தோ திடீரென்று காற்றும் மழையும் வந்தது. கூட்டத்திற்கு ஆவலோடு வந்திருந்த ஜனங்கள் ஏமாந்து போய்விடுவார்களே என்று எண்ணி தேவனுடைய ஊழியராகிய சகோதரன் பால் தினகரன் எழும்பி ஆண்டவரை நோக்கி, பாரத்துடன் ஒரு பிரார்த்தனை செய்தார். "ஆண்டவரே, உம்முடைய மக்கள் எவ்வளவு ஆவலோடுகூட திரண்டிருக்கிறார்கள். தயவு செய்து இந்த மழையை நிறுத்தும். அவர்கள் விரும்பி வந்த ஆவிக்குரிய ஆசீர்வாதத்தை மட்டும் அவர்கள் நிறைவாய் பெற்று செல்லட்டும்" என்று ஆண்டவரிடம் விண்ணப்பித்த பின், தேவன் தனக்குக் கொடுத்த அதிகாரத்தின்படி, மழையை கட்டி இயேசுவின் நாமத்தில் ஜெபித்தார். என்ன ஆச்சரியம்! கொட்டிக்கொண்டிருந்த மழை அப்படியே நின்றது. அன்று மேடையிலே அமர்ந்திருந்த, ஆண்டவரை அறியாத சில அரசியல் அதிகாரிகள் இதைக் கண்டு மிகுந்த ஆச்சரியமடைந்தனர். இயேசு மெய்யாகவே ஜீவிக்கிற தேவன்! தமக்கு பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி, வேண்டுதலின்படி, காரியங்களை நிறைவேற்றுகிற தேவன் என்பதை சாட்சியாக சொல்லி அகமகிழ்ந்து சென்றனர். ஆம்! "நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகுந்த பெலனுள்ளதாயிருக்கிறது" (யாக். 5:16).

ஆம்! பிரியமானவர்களே, இன்று இதே ஆண்டவர் தமக்கு பயந்தவர்களாகிய உங்கள் விருப்பத்தையும் நிறைவேற்ற வல்லவராகவும், ஜாக்கிரதையுள்ளவராகவும் இருக்கிறார் என்பதை மறந்து போகாமல், உங்கள் தேவைகள் யாவையும் அவர் பாதத்தில் ஊற்றிவிடுங்கள் (சங். 142:2; 62:8).



ஜெபம்: "என் அன்பு தகப்பனே, நான் உமக்கு பயந்து நடப்பதில் கவன மாயிருக்கவும், எந்த தேவைக்கும் உம்மை நோக்கி மன்றாடுவதில் ஜாக்கிரதையாயிருக்கவும் எனக்கு அருள் தாரும். இன்று விசேஷமாக என்னை நினைத்தருளும். எனக்காக பரிந்து பேசுபவர் எவருமின்றி தவிக்கிற எனக்கு என் இதயத்தின் வேண்டுதல்களை யெல்லாம் நிறைவேற்ற உம்மால் மட்டுமே கூடும் என்று விசுவாசிக்கிறேன். நீர் என் விருப்பத்தை நிறைவேற்றித் தரப்போகிறீர் என்று நம்பி, உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

உங்களோடு தங்கியிருக்க விரும்புகிற கர்த்தர்!

"யாக்கோபு நித்திரை தெளிந்து விழித்தபோது: மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார்; இதை நான் அறியாதிருந்தேன் என்றான்"

(ஆதியாகமம் 28:16).

யாக்கோபு தேவனை அதிகமாக அறியாத ஒரு வாலிபன்! ஆனால், ஆண்டவரோ அவனை அறிந்திருந்தார்; அவனோடு தங்கியிருந்தார். இதைப்பற்றிய அறிவு யாக்கோபுக்கு கொஞ்சமும் இல்லாமல் இருந்தது (ஆதி. 28:16). ஆண்டவர் அவனை சந்திக்க, அவன் அவரை கண்டுகொள்ள ஒரு தருணத்தை எதிர்பார்த்து கொண்டிருந்தார். எல்லோராலும் கைவிடப்பட்டதுபோன்ற ஒரு தருணம் அவன் வாழ்வில் வந்தபோது, தேவாதி தேவனே சொப்பனத்தின் மூலம் அவனை சந்தித்தார் (ஆதி. 28:13,14). அப்பொழுது தான் இந்த வசனத்தின்படி, "கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறாரே, இதை நான் அறியாமல் போனேனே" என்று யாக்கோபு கதறினான். அதன் பிறகு அவன் அவரை விட்டு விலகவேயில்லை. அவரை உறுதியாய் பற்றிக் கொண்டான். அதற்கு பிறகு அவனுடைய வாழ்க்கையை வாசித்து பார்ப்பீர்களானால், கடைசி பரியந்தம் தேவனோடு நெருங்கி வாழ்ந்ததாக வாசிக்கிறோம்.

என் கணவருடைய தகப்பனார் இராணுவத்தில் வெளிநாடு ஒன்றில் சில காலம் பணிபுரிந்து வந்தார். ஒரு முறை போர் நடந்து கொண்டிருந்த வேளையிலே, அவர்கள் பனி படர்ந்த ஒரு இடத்திலே இரவு தங்க வேண்டிய நிலைமை வந்தது. கூடாரங்களை போட்டுக் கொண்டு தங்கியிருந்தார்கள். காலையில் எழுந்து பார்த்தால் அவருடைய கூடாரம் பனியினால் மூடப்பட்டு, மூச்சுவிடக் கூட முடியாத நிலைமையில் பனி படர்ந்திருந்தது. ஒரே ஒரு சிறு துவாரம் இருந்ததை வைத்து, அதின் மூலமாகத்தான் மூச்சு விட்டுக் கொண்டிருந்தார். "ஐயோ, என் குடும்பத்தையெல்லாம் விட்டு வந்திருக்கிறேனே, எனக்கு என்ன நேரிடுமோ" என்று ஒருபுறம் கவலை. மறுபுறம் ஆண்டவரை நோக்கிப் பார்த்தார். என்ன ஆச்சரியம்! அவரோடு வந்த அதிகாரிகள், எல்லோரும் இருக்கிறார்களா? என்று கணக்கு பார்த்தபொழுது, இவரைக் காணவில்லை என்பதை அறிந்து என்னமோ நடந்திருக்கிறது என்று கண்டு கொண்டார்கள். அந்த நேரத்தில் என் மாமனார் தன் கையிலிருந்த துப்பாக்கியின் மறுமுனையை லேசாக உள்ளேயிருந்து தட்டினார். அதன்மூலம் அவர் இருக்கும் இடத்தை கண்டு கொண்ட இராணுவ அதிகாரிகள் அவரை மீட்டு, காப்பாற்றி வெளியில் கொண்டு வந்தனர்.

ஆம்! எனக்கு அன்பானவர்களே, எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் ஆண்டவர் உங்களோடு கூடவே தங்கியிருக்க விரும்புகிறார். மனிதர் கைவிடலாம். பொய்யான குற்றச்சாட்டினிமித்தம் நீங்கள் சிறையில் அடைக்கப்பட்டிருக்கலாம். காரணமில்லாமல் பகைஞர்கள் உங்களுக்கு தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கலாம். ஆனால், யாக்கோபை தேடிவந்து அவன் எதிர்காலத்தை ஆசீர்வதிக்க சித்தம் கொண்ட ஆண்டவர் இன்று உங்கள் வாழ்வையும் ஆசீர்வாதமாக மாற்றித் தருவார். அவர் உங்களுக்கு சமீபமாக இருக்கிறார் என்பதை மறந்துபோகாதிருங்கள் (நீதி. 10:6; சங். 115:13).

ஜெபம்: "அன்பு இரட்சகரே! இன்று நீர் எவ்வளவாய் எனக்கு சமீபமாய் இருக்கிறீர் என்பதை அறிந்து கொண்டேன். இந்த உலகில் யார் கைவிட்டாலும் நீர் என்னை கைவிடமாட்டீர் என்றும் நான் உறுதியாக விசுவாசித்து, எப்பொழுதும் என்னோடு நீர் இருக்க வேண்டுமென்று மன்றாடி ஸ்தோத்திரிக்கிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

பலவீனனை பலவானாக மாற்றும் தேவன்!

"பலவீனனும் தன்னை பலவான் என்று சொல்வானாக" (யோவேல் 3:10).

உலக வாழ்வில் சரீரத்திலே, ஆத்துமாவிலே பலவீனம் வரும்பொழுது, எப்படிப் பட்டவர்களாக இருந்தாலும் எளிதில் சோர்ந்து போகிறோம். "எனக்கு நிவாரணம் கிடைக்குமா?" என்று ஐயம் கொள்கிறோம். ஆனால், வேதபுத்தகத்தை கருத்தாய் வாசித்து பார்ப்போமானால் ஆண்டவர் நமது பலவீனத்தில் பூரண பெலன் கொடுக்கிறவர் என்பதை திட்டமும் தெளிவுமாய் அறிந்து கொள்ளலாம் (2 கொரி. 12:9). "என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலி. 4:13). எனவே, நாம் சோர்ந்து போக வேண்டிய அவசியமே இல்லை (சங்.29:11; 68:35).

ஒரு சமயம் என்னுடைய வலது கையிலே ஒரு பயங்கரமான உளைச்சல் வந்தது. வலி தாங்க முடியாமல் அடிக்கடி கஷ்டப்படுவேன். என் கணவர் வைத்தியரிடம் அழைத்து சென்றார். அவர் சில ஊசிகளை எனக்கு போட்டு வந்தார். எனினும், வலி முழுவதுமாக மறையவே இல்லை. ஒரு நாள் காலையில் வீட்டிலே வேலை செய்யும் பணிப்பெண் வேலைக்கு வரவில்லை. அப்படியே பாத்திரங்கள் எல்லாம் கழுவாமல் கிடந்தன. எனக்கோ வலி தாங்க முடியாமல் இருந்தது. அப்பொழுது என் கணவரை போய் பார்த்தேன். அவர் முழங்காற்படியிட்டு, வழக்கம்போல் நன்றாய் ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார். அவரை தொந்தரவு செய்ய எனக்கு மனமில்லை. உடனடியாக ஆண்டவரை நோக்கி பிரார்த்தனை செய்தேன். "ஆண்டவரே, பலவீன சமயத்தில் பெலன் கொடுக்கிற நீர் இப்பொழுது என்னுடைய வலியையெல்லாம் மாற்றிப்போடும். நான் உம்மை விசுவாசிக்கிறேன். நீர் என்னோடு இருக்கிறபடியினால் எனக்கு உதவி செய்வீர் என்று நான் நம்பி உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்" என்று பிரார்த்தனை செய்தேன். பிறகு, சத்தமாக கர்த்தரை ஸ்தோத்திரித்து பாடிக்கொண்டே, பாத்திரங்கள் எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் சுத்தம் செய்து முடித்தேன். என்ன ஆச்சரியம்! நான் முடிப்பதற்குள் கர்த்தர் என் கையிலே ஓர் அற்புதம் செய்தார். அந்த பயங்கர வலி அன்று போனதுதான். அது திரும்ப வரவே இல்லை. காரணம், நம்முடைய ஆண்டவர் வாக்கு மாறாதவர். அவர் சொன்னால் சொன்னதுதான்.

பலவீன சமயத்திலே பூரணபலன் தருவேன் என்றவர் இன்று உங்கள் வாழ்க்கையிலும் சரீரத்தில் பலவீனமா? ஆவியிலே பலவீனமா? ஆத்துமாவிலே பலவீனமா? எதையும், எப்படிப்பட்டதாயிருந்தாலும், முற்றிலுமாக மாற்றிப்போட வல்லமையுள்ளவராயிருக்கிறார். ஆகவே, உங்கள் சோர்வையெல்லாம் அகற்றி, நான் செய்ததுபோல முழங்காற்படியிட்டு கர்த்தரை மட்டும் விசுவாசத்தோடு நோக்கிப் பாருங்கள். அவரை துதித்துப் பாடி ஸ்தோத்திரியுங்கள். நிச்சயம் அற்புதங்களைக் காண்பீர்கள் (ஏசாயா 40:31)!

ஜெபம்: **"அன்பு இரட்சகரே! சிலுவையிலே என்னுடைய பலவீனங்களையெல்லாம் நீர் சுமந்து தீர்த்தபடியால் நான் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். நீர் சம்பாதித்த அந்த தெய்வீக பெலனை இன்று நான் என் சரீரத்திலே, ஆவியிலே, ஆத்துமாவிலே எனக்கென்று எடுத்துக்கொள்கிறேன். உமக்கு கோடான கோடி ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"**

நீங்கள் பிழைக்கும்படிக்கு நன்மையைத் தேடுங்கள்!

“நீங்கள் பிழைக்கும்படிக்கு தீமையை அல்ல, நன்மையைத் தேடுங்கள்; அப்பொழுது நீங்கள் சொல்லுகிறபடியே சேனைகளின் தேவனாகிய கர்த்தர் உங்களோடே இருப்பார்”
(ஆமோஸ் 5:14).

தேவாதி தேவனை நம் வாழ்வின் மேய்ப்பராக, நம்மை வழிநடத்துகிறவராக நாம் ஏற்றுக்கொள்ளும்பொழுது, நம் வாழ்வில் நன்மையும் கிருபையும் தொடரும் (சங். 23:1,6). கடைசி நிமிடம் மட்டும் அவ்விதமாக அவர் நன்மையால் நிரப்புவார். இந்த விசுவாசத்தோடு தேவனுக்கு பயந்து அவருடைய வழிகளில் நடக்க நாம் கருத்தாய் இருப்போமானால், மேற்கண்ட வாக்குத்தத்தம் நம் வாழ்வில் நிச்சயம் நிறைவேறும் (ஏசாயா 49:2; 51:16). இந்த உலகத்தில் எத்தனையோ தீமைகள் நிறைந்த காரியங்களை பார்க்கிறோம். ஆனால், தேவபயத்தோடு அவைகளையெல்லாம் நம் வாழ்வைவிட்டு விலக்கி, ஆண்டவருக்கு பிரியமாய் என்னென்ன விதங்களில் நம் வாழ்வைத் திருப்பலாம் என்பதை வேத வசனத்தை கருத்தாய் வாசித்து, ஆண்டவரை நோக்கி அனுதினமும் ஜெபம் செய்வதன் மூலம் அறிந்துகொள்வோமானால் அவ்விதமாகவே நம் வாழ்வு ஆசீர்வதிக்கப்படும். யோசேப்பு, தானியேல் போன்றவர்கள் வாலிப வயதில் இவ்விதமான ஆசீர்வாதங்களை பெற்றார்கள் என்பதை வேதத்தில் வாசிக்கிறோம் (பிர. 12:1).

இரண்டு சகோதரர்கள் ஒரு குடும்பத்தில் இருந்தார்கள். ஒருவர் எல்லாவற்றிலும் சிறந்து இருந்தார். அழகு, அறிவு, கல்வி, ஞானம் இவைகளெல்லாம் நிறைவாய் அவர் வாழ்க்கையிலே இருந்தன. ஆனால், அவரது சகோதரனோ அதற்கு நேர்மாறாக இருந்தார். நிறைவாய் யாவற்றையும் பெற்ற சகோதரனோ ஆண்டவரைத் தேடுவதை முற்றிலுமாய் தள்ளி வைத்துவிட்டு, தன் பெலன், தன் ஞானம், தன் அறிவு இவைகளுக்கே முக்கியத்துவம் கொடுத்தார். ஆனால், எல்லாவற்றிலும் குறைவான அவரது சகோதரனோ ஆண்டவர் இயேசுவை அறிந்து கொண்டவராக, அவரையே தனக்கு எல்லாமுமாக, தன் மேய்ப்பராக, தன் நண்பராக, வழிகாட்டியாக வைத்து, ஒவ்வொரு நாளும் அவர் வழிநடத்தும் பாதையில் நடந்து வந்தார். சில வருடங்கள் உருண்டோடின! தேவனை அறியாத சகோதரனுக்கு தன் சொத்து எல்லாவற்றையும் இழந்து தவிக்கிற ஒரு நிலைமை ஏற்பட்டது. ஆனால், அவருடைய சகோதரனோ கொஞ்சம் கொஞ்சமாக தேவ கிருபையினால் வனாந்தரம் போன்ற வாழ்வு செழிக்கும்படியான ஆசீர்வாதத்தை பெற்றார். அப்பொழுதுதான் அவருடைய சகோதரன் கர்த்தரைத் தேடுவதின் மேன்மையை அறிந்து கொண்டார். தனது சகோதரனுடைய உதவியால் தேவனைத் தேடி வாழ்வில் நிறைவான ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார்.

ஆம்! பிரியமானவர்களே, உங்களுடைய வாழ்க்கையையும் சற்று யோசித்துப் பாருங்கள். நீங்கள் நிலையான ஆசீர்வாதத்தைப் பெற வேண்டுமானால், நித்திய தேவனாம் இயேசுவையே முற்றிலுமாக சார்ந்துகொள்ளுங்கள். அவர் உங்கள் வாழ்வை செழிக்க செய்வார். குறைவையெல்லாம் மாற்றுவார் (நீதி. 3:5,6).

ஜெபம்: “அன்பு தேவனே, என் நம்பிக்கையை இன்றுமுதல் சர்வவல்ல தேவனாகிய உம்மிலே வைக்கிறேன். என் குறைவுகளையெல்லாம் நீர் மாற்ற வல்லமையுள்ளவராயிருக்கிறீர் என்று விசுவாசிக்கிறேன். உமக்கு நன்றி செலுத்துகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!”

உங்களை எப்பொழுதும் சூழ்ந்திருக்கிற தேவன்!

"நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னை சூழ்ந்திருக்கிறீர்..."

(சங்கீதம் 139:3).

வேதபுத்தகத்திலே யோனா என்ற தேவ ஊழியனைக் குறித்து வாசிக்கிறோம். அவன் தேவனுடைய தாசனாக இருந்தபோதிலும், ஒரு சமயம் ஆண்டவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் போனதினிமித்தம், கடலுக்குள் எறிந்துவிடப்பட்டு, மீனின் வயிற்றுக்குள் இருக்கும் பரிதாப சூழ்நிலையில் இருந்தான். அவனுடைய ஆத்துமா தொய்ந்து போன அந்த சூழ்நிலையில் கர்த்தரை நோக்கி அவன் விண்ணப்பம் பண்ணினான். அவன் ஜெபம் ஆண்டவரண்டை கிட்டி சேர்ந்தது. கர்த்தர் மீனுக்கு கட்டளையிட்டார். அது யோனாவை கரையிலே கக்கிவிட்டது (யோனா 2:7–10). ஆம்! பிரியமானவர்களே, எப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் இருந்தாலும் கர்த்தர் நம்மை கவனிக்கிறவராகவே இருக்கிறார். மனிதர்கள் உங்களை அழிக்க பல சமயங்களில் முயற்சிக்கலாம். ஆனால், நீங்கள் அவர்களுக்கு பயப்பட வேண்டாம். கர்த்தருடைய கண்கள் நல்லோரையும் தீயோரையும் பார்க்கிற கண்கள் (நீதி. 15:3)! விசேஷமாக, தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்கு தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணி, அவர்களை கவனிக்கிற கண்கள் (2 நாளா. 16:9). ஆகார் என்ற ஒரு பெண் அதினிமித்தமாக "நீர் என்னைக் காண்கிற தேவன்" (ஆதி. 16:13) என்று தன்னை அன்புடன் தேடி வந்த கர்த்தரிடம் சந்தோஷமாகக் கூறினாள்.

ஒரு பெண் எல்லோராலும் கைவிடப்பட்டபொழுது வறுமை நிலைமையில், தனிமையில் வேதனைப்பட்டாள். கடன்காரர்கள் அவளை சூழ்ந்து கொண்டனர். கணவனோ எங்கோ ஓடி மறைந்து கொண்டான். அடுத்த கணம் என்ன நடக்குமோ என்ற நிலைமை. அந்த நிலைமையில் யோனாவின் சரித்திரம் அவளுக்கு ஞாபகம் வந்தது. "மீனின் வயிற்றிலிருந்த தம் ஊழியரை காப்பாற்றின தேவனே, என்னுடைய பரிதாப நிலைமையையும் இப்பொழுது நீர் பாரும். எனக்கு உதவி செய்பவர், என்னை இன்று இந்த இக்கட்டினின்று இரட்சிப்பவர் ஒருவருமில்லை. ஆனால், தெய்வமாகிய நீரோ, என்னைக் கைவிடாமல் இரட்சிக்கிறவர் என்று நான் அறிந்திருக்கிறேன்" என்று தன்னை சமர்ப்பித்தாள். கர்த்தர் ஆச்சரியமான விதத்திலே, எதிர்பாராதவிதங்களில் அவளுக்கு யார் யார் மூலமோ நன்மை வரும்படி செய்தார். அந்த பொல்லாங்கான நிலைமையிலிருந்து அவள் மீட்கப்படும்படி வழி திறந்தார்.

ஆம்! அன்பானவர்களே, இன்று நீங்களும்கூட நெருக்கத்திலே, கைவிடப்பட்ட நிலைமையிலே அடுத்த கணம் என்ன நடக்குமோ என்ற பயங்கரமான சூழ்நிலையில் இருக்கலாம். "கர்த்தர் உங்களை கவனிக்கிறவர்" என்பதை மறந்துபோகாமல், அவர் உங்களை சூழ்ந்திருக்கிறார் என்பதை நினைவுபடுத்தி, அவரை உறுதியாய் பற்றிக்கொள்ளுங்கள் (சங். 120:1). அவரிடத்தில் இரக்கங்களும், மன்னிப்புகளும் உண்டு (தானி. 9:10).

ஜெபம்: "என் அன்பு தெய்வமே! எந்த நிலைமையிலும் மனிதர் கைவிட்டாலும், நீர் என்னை சூழ்ந்திருக்கிறீர், என்மீது உம்முடைய கைகளை வைத்திருக்கிறீர் என்பதை நினைக்கும்பொழுது எனக்கு எத்தனை சந்தோஷமாய் இருக்கிறது. நானும் உம்மை உறுதியாய் பற்றிக்கொள்கிறேன். உம் தெய்வீக அணைப்பால் என்னை அணைத்து ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

தம்முடைய உபதேசத்தினாலே நம்மை சுத்திகரிக்கிற தேவன்!

"நான் உங்களுக்கு சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்"

(யோவான் 15:3).

ஆண்டவர் இயேசு உலகத்தில் மனிதனாக வாழ்ந்தபொழுது, அவருடைய உபதேசத்தைக் கேட்க மக்கள் ஆயிரக்கணக்கில் திரள் திரளாகக் கூடி வந்தனர் (லூக்கா 21:38). இன்றைக்கு அதே ஆண்டவர், ஊழியத்திற்கு தங்களை ஒப்புக் கொடுத்திருக்கிற ஒவ்வொருவர் வாழ்வின் மூலமாக பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு தமது உபதேசத்தினாலே மக்களை நிறைவாய் போஷித்து காப்பாற்றுகிறார். யார், எப்படிப்பட்ட நிலைமையில் கூட்டத்திற்கு வருகிறார்கள், அவர்களுக்கு என்ன தேவை இருக்கிறது என்றெல்லாம் அவர் அறிந்திருக்கிறார். அதை தம்முடைய மக்களுக்கு உபதேசத்தின் மூலமாய் அருளிச்செய்து அவர்களை நிறைவாய் ஆசீர்வதித்து அனுப்புவதுதான் அவருடைய விருப்பம். மேலும், தேவனுடைய வார்த்தை ஒவ்வொரு மனிதருடைய கால்களுக்கு தீபமாகவும், பாதைக்கு வெளிச்சம் தருவதாகவும் இருக்கிறது (சங். 119:105,130). இன்றும் வாலிபர்கள் அநேகர் தேவனுடைய வார்த்தையின் மூலமாய் சுத்திகரிக்கப்படுகிறார்கள் (சங். 119:9). குடும்பங்களிலே வேத வசனத்தைத் தேடுகிற மக்கள் மத்தியிலும் ஆண்டவர் வாஞ்சையோடு வந்து வாசம் பண்ணுகிறவராக இருக்கிறார் (யோவான் 14:23).

ஒரு வாலிபன் கடவுள் இல்லை என்று வைராக்கியமாய் சொல்லிக்கொண்டிருந்தான். அப்பொழுது வேதாகமத்தைக் குறித்தும், ஆண்டவரைக் குறித்தும் அதிகம் கேள்விப்பட்டிருந்தான். எனவே, அதை வாசித்து அதில் குற்றங்கள், குறைகளை கண்டுபிடித்து "இயேசுகிறிஸ்து கடவுள் அல்ல" என்று நிரூபிக்க வேண்டுமென்று கருத்தாய் வேத புத்தகத்தை எடுத்து வாசிக்க ஆரம்பித்தான். அவன் நினைத்ததற்கு எதிர்மாறாக தேவன் தம்முடைய உபதேசத்தின் மூலமாக அவனுடைய உள்ளத்தில் பேசினார். அவனுடைய உள்ளம் தேவனுடைய வல்லமையால் தலைகீழாக மாறியது. தன்னையுமறியாமல் தேவபயத்தோடு முழங்காற்படியிட்டான். வேதாகமத்தை தொடர்ந்து வாசித்து முடித்தான். தன்னை ஆண்டவருக்கென்றும், அவருடைய சேவைக்கென்றும் முற்றிலும் அர்ப்பணித்தான். தன் வாழ்நாளையெல்லாம் ஆண்டவருடைய சேவையை செய்வதையும், வாலிபர்கள், மூப்பர்கள் யாவரையும் தேவனுடைய உபதேசத்தின் மூலமாய் கர்த்தரண்டை கொண்டு வருவதையுமே தன் வாழ்வின் நோக்கமாக கொண்டவனாய், அதன்மூலம் பக்தி வைராக்கியமுள்ளவனாக மாறும்படி ஆண்டவர் அவனை சுத்திகரித்தார்.

ஆம்! பிரியமானவர்களே, நீங்கள் அனலுமின்றி, குளிருமின்றி அல்லது இந்த வாலிபனைப்போல குற்றம் கண்டு பிடிக்கிறவர்களாக இருக்கிறீர்களா? அல்லது தேவனுடைய வார்த்தைக்கு பயந்து அவருடைய உபதேசங்களிலே சுத்திகரிக்கப்பட ஆண்டவர் கரத்தில் உங்களை ஒப்படைத்திருக்கிறீர்களா? சற்று யோசித்து பாருங்கள் (நீதி. 4:1,2).

<u>ஜெபம்:</u> "அன்பு தெய்வமே! உம்முடைய உபதேசம் எத்தனையாய் இன்றும் பேசுகிறதாய் இருக்கிறது என்பதை அறிந்து கொண்டேன். உமக்கு பயப்படும் பயத்தோடு இந்த வாலிபன் தன் வாழ்வை உமக்கென்று அர்ப்பணித்ததுபோல <u>இன்றுமுதல்</u> நானும் என் வாழ்வை அர்ப்பணிக்கிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"

கர்த்தர் நியாயத்தை விசாரிக்கிறவர்!

``சிறுமையானவனின் வழக்கையும், எளியவர்களின் நியாயத்தையும் கர்த்தர் விசாரிப்பாரென்று அறிவேன்'' (சங்கீதம் 140:12).

இந்த காரியத்தை குறித்து சங்கீதம் 40:17–ல், சிறுமையும் எளிமையுமான ஒவ்வொருவர் மேலும் கர்த்தர் நினைவாயிருக்கிறார் என்று வாசிக்கிறோம். அவரே அவர்களுக்கு துணையும், சகல பொல்லாங்குகளினின்றும் விடுவித்து காக்கிற வருமாயிருக்கிறார். இன்று குடும்பங்களிலே, அலுவலகங்களிலே எத்தனை அநியாயங்கள் நடக்கின்றன என்று நம் கண்களால் நாம் பார்க்கிறோம். ஏழை எளியவர்கள், பணமில்லாதவர்கள், தனிமையில் இருப்பவர்கள், விதவைகள் இப்படிப்பட்ட அநியாயங்களால் இன்று வேதனைப்படுவதை நாம் பார்க்கிறோம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் மனிதர் என்னை கைவிட்டாலும் கர்த்தர் என்னை சேர்த்துக்கொள்வார் (ஏசாயா 40:14) என்று உறுதியான விசுவாசத்தோடு அவரை பற்றிக்கொள்கிற ஒவ்வொருவருக்கும் ``நியாயத்தை விசாரிக்கிற நமது தேவன்'' (சங். 135:14) நிச்சயமாக உதவி செய்வார். எனவே, அநியாயங்களின் நிமித்தம் வேதனையில் வாழ்கிற அன்பானவர்களே, சோர்ந்து போகாமல் உறுதியாய் ஆண்டவரை நம்பியிருங்கள்!

ஒரு கிராமத்தில் ஒரு ஏழை மனிதன் இருந்தான். அவனுக்கு ஒரு சிறிய நிலம் இருந்தது. அவனுக்கு உதவி செய்வார் யாருமேயில்லை. அந்த நிலத்தை அவன் கஷ்டப்பட்டு பயிர் செய்து அதில் வரும் வருமானத்தைக் கொண்டு தான் காலம் கழித்து வந்தான். அந்த ஆண்டும் அவன் விதைத்த விதை செழிப்பான பலனைத் தந்தது. இதனைக் கண்ட ஒரு பணக்காரன் இந்த நிலம் தனக்கு வேண்டுமென்று அநியாயமாய் அவனிடமிருந்து அதை பறித்துக்கொள்ள முயற்சி செய்தான். பாவம் ஏழை மனிதன் என்ன செய்வான்? பண ஆசை அநியாயங்களை செய்ய முன் வருகிறது அல்லவா? ஆனால், அந்த மனிதனோ கொஞ்சம்கூட சோர்ந்து போகாமல் முழங்காற்படியிட்டு, ``ஆண்டவரே, இந்த உலகில் நீர் ஒருவர் தான் எனக்கு துணை. இந்த பொல்லாத மனிதனின் அநியாய செயல்களிலிருந்து என்னை நீரே காப்பாற்றும்'' என்று கருத்தாய் வேண்டுதல் செய்து வந்தான். ஆண்டவர் அந்த பொல்லாத மனிதனுடைய கவனத்தை வேறுபுறம் திருப்பினார். அவன் அதை அப்படியே விட்டுவிட்டு வேறு ஊருக்கு சென்று விட்டான். ஏழை மனிதனும் கர்த்தருக்கு நன்றி செலுத்தி சந்தோஷமாக தன் வாழ்நாளைக் கழித்தான்.

ஆம்! பிரியமானவர்களே, இதே ஆண்டவர் இன்று உங்களுக்கும் உதவி செய்ய வல்லமையுள்ளவராக, வாஞ்சையுள்ளவராக காத்திருக்கிறார். உங்கள் கவலைகளை யெல்லாம், உங்கள் வாழ்வில் மக்கள் செய்யும் அநியாயங்களையெல்லாம் ஆண்டவர் கரத்திலே ஜெபத்தின் மூலம் ஒப்படைத்துவிடுங்கள். உங்கள் இரட்சகரும் மீட்பருமாகிய கர்த்தர் உங்களுடனே இருந்து உங்களுக்காக வழக்காடி நீதி செய்வார். எந்த தீமையும் உங்களை அணுகாமல் பாதுகாப்பார் (லூக்கா 18:7).

ஜெபம்: ``அன்பின் இரட்சகரே. நீர் எவ்வளவு வல்லமையுள்ளவர்! உம்மை நம்பின வர்களை காப்பாற்றுகிற தேவன்! இன்று எனக்கும் இவ்விதமாக நீர் நன்மை செய்ய வல்லவராக இருக்கிறபடியால் உமக்கு ஸ்தோத்திரம். இந்த உலகத்தில் இருக்கிறவர் களைப் பார்க்கிலும் நீர் பெரியவராக இருந்து என்னுடைய நியாயத்தை விசாரிக்கிற தற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!''

கிருபையினாலும் உண்மையினாலும் காக்கிற தேவன்!

"கர்த்தாவே நீர் உம்முடைய இரக்கங்களை எனக்கு கிடையாமற் போகப்பண்ணாதேயும்; உமது கிருபையும் உமது உண்மையும் எப்பொழுதும் என்னைக் காக்கக்கடவது" (சங்கீதம் 40:11).

நாம் நிர்மூலமாகாதபடிக்கு அவருடைய கிருபை நமக்கு போதுமானதாக இருக்கிறது (புலம்பல் 3:22). பிசாசானவன் நம்மை விழுங்குவதற்காக, அழிப்பதற்காக, வகைதேடி சுற்றித் திரிகிறான். அதற்கென்று அவன் சில மனிதர்களையும் தனக்காக உபயோகிக்கிறான் (1 பேதுரு 5:8; யோவான் 10:10). சில பொல்லாத மனுஷர்கள் பிசாசின் கையில் ஆயுதங்களாக உபயோகிக்கப்படுகிறதினால், நல்ல மனிதர்களை விசேஷமாக கர்த்தருக்கு பிரியமாய் வாழ்கிறவர்களை பலவித தொல்லைக்குள்ளாக்குகிறார்கள். ஆனால், எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் தம்மை உறுதியாய் பற்றிக்கொள்ளுகிற மக்களுக்கு தமது தெய்வீக சமாதானத்தை தந்து (ஏசாயா 26:3), உண்மையுள்ளவராக இருந்து (எபி. 10:23), சகல பொல்லாங்கினின்றும் அற்புதமான விதங்களில் காப்பாற்றுகிற அருமையான தெய்வமாக ஆண்டவர் இருக்கிறார். ஆகவே, எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் கவலைப்படவேண்டிய அவசியமேயில்லை. நம்முடைய ஆண்டவர் எல்லாவற்றிலும் சிலுவையிலே வெற்றி சிறந்தவர்! ஒன்றும் நம்மை சேதப்படுத்தாமல் காக்கிறவர்! (லூக்கா 10:19).

ஒரு அலுவலகத்தில் ஒருவர் தேவபக்தியோடு தன் காரியங்களை கண்ணும் கருத்துமாய் செய்து வந்தார். உடன் ஊழியர்களோ உல்லாசமாய் இருந்து வேலை செய்யாமல் காலம் கழிக்க விரும்பினார்கள். இவர் அதற்கு தடையாக இருந்ததினால், இவரை பொய்யான விதங்களில் பிரச்சினைகளுக்குள்ளாக்கி வந்தனர். ஆனால், அவரோ தெய்வீக அன்போடு, அவர்களுக்காக பிரார்த்தனை செய்து, தன் உண்மையை தொடர்ந்து கடைபிடித்து வந்தார். ஆனால் அவர்களோ அவரை எப்படி காட்டிக் கொடுக்கலாம், கீழே விழத்தள்ளலாம் என்று பல்வேறான சூழ்ச்சியில் ஈடுபட்டார்கள். வேலையிலிருந்தே நீக்கிவிடும்படியான சூழ்நிலையும் வந்தது. ஆனாலும், அவர் தன் உறுதியிலிருந்து விலகவேயில்லை. கடைசியில், அவருக்கு விரோதமாக அவர்கள் செய்த முயற்சிகள் ஒன்றும் பலனளிக்காதபடி கர்த்தருடைய வல்லமை இறங்கினது. மாத்திரமல்ல, அவர்களில் ஒரு சிலர், அவருடைய வாழ்க்கை, இத்தனை கேடான சூழ்ச்சிகளின் மத்தியிலும் மென்மேலும் உயருவதை, ஆசீர்வதிக்கப்படுவதைக் கண்டு, அதன் இரகசியத்தை அறிந்து ஆண்டவரை பின்பற்றுகிறவர்களாக மாறினார்கள்.

ஆம்! பொல்லாதவர்கள் நமக்கு விரோதமாக எழும்பலாம். ஆனால் தேவனோ தமது கிருபையினாலே நம்மைப் பாதுகாத்து, கைவிடாமல் காப்பாற்ற வல்லமையுள்ளவராயிருக்கிறார் என்பதை இன்று நினைத்து, உங்களை தைரியப்படுத்திக் கொள்ளுங்கள் (சங். 59:10).

ஜெபம்: "என் இரட்சகரே! எனக்கு விரோதமாக எத்தனைபேர் தீங்கு நினைத்தாலும், உம் கிருபையும் உண்மையும் இன்று எனக்கு போதுமானதாக இருக்கிறபடியால் நான் எத்தனை பாக்கியசாலி என்று எண்ணி, இதை செய்ய வல்லமையுள்ளவரும், கிருபையினாலும், உண்மையினாலும் காக்கிறவருமாகிய என் தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

நம்மை அடையாளங்களாகவும், அற்புதங்களாகவும் மாற்றுகிற கர்த்தர்!

“இதோ, நானும் கர்த்தர் எனக்கு கொடுத்த பிள்ளைகளும்.....இஸ்ரவேலில் அடையாளங்களாகவும் அற்புதங்களாகவும் இருக்கிறோம்” (ஏசாயா 8:18).

இந்த தெய்வீக ஆசீர்வாதம் ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்குமானால், அது எத்தனை இன்பமாய் இருக்கும் என்று யோசித்து பாருங்கள். ஆனால், இன்று குடும்பங்களிலே நாம் காண்பது சண்டைகளும், பிரிவினைகளும், கோபதாபங்களும், பொறாமைகளும், எரிச்சல்களும் தான் (2 தீமோ. 3:1–5). தினசரி செய்தித் தாளிலே வாசித்துப் பார்ப்போமேயானால் எத்தனை கொலைகள், கொள்ளைகள், அசம்பா விதங்கள்! இவைகள் யாவுக்கும் காரணம், குடும்ப வாழ்க்கையில் சமாதானமின்மையே ஆகும். ஆனால், மேற்கண்ட வாக்குத்தத்தமோ கர்த்தர் ஒரு வீட்டில் வந்து வாசம்பண்ணி, எப்படிப்பட்ட தெய்வீக ஆசீர்வாதத்தை கொடுக்கிறார் என்பதை நமக்கு விளக்குகிறது. இதை வாசிக்கிற அன்பானவர்களே, இந்த வாக்குத்தத்தத்தை, தெய்வீக ஆசீர்வாதத்தை நீங்கள் ஒவ்வொருவரும் ஆண்டவரிடத்திலே கேளுங்கள். “சுவாமி, இன்று என் குடும்பம், என் வாழ்க்கை இப்படிப்பட்டதாய் இருக்க வேண்டும். என்னிலுள்ள வேண்டாத தீய குணங்களை, நீர் விரும்பாத தீமைகளை என் வாழ்விலிருந்து அகற்றும். நானும் என் பிள்ளைகளும் உமக்கு பிரியமானவர்களாகவும், ஆசீர்வதிக்கப்பட்டவர்களாகவும், உம் நாம மகிமைக்கென்று அடையாளங்களாகவும், அற்புதங்களாகவும் வாழ அருள் தாரும்” என்று பயபக்தியுடன் வேண்டுதல் செய்யுங்கள் (கொலோ. 1:10). கர்த்தர் அப்படியே தம்மை நோக்கிப் பார்க்கிற உங்களுக்கு இந்த கிருபையை நிச்சயம் அருளிச்செய்வார்.

ஒரு குடும்பத்திலே கணவன் தேவபயம் கொண்டவராக வாழ்ந்து வந்தார். தேவனுக்கு பிரியமில்லாத எல்லாவற்றையும் விலக்கித்தள்ளி, அவரோடு அனுதினமும் உறவாடி, பக்தியுள்ளவராய் வாழ்ந்து வந்தார். அவருக்கு வந்த மனைவியும் அவர் வாழ்வைக் கண்டு, தானும் அப்படியே தெய்வபயத்தோடு ஆண்டவரை பின்பற்றினாள். பிள்ளைகள் பிறந்தன. பக்தியாய் வளர்த்ததோடுகூட, பரமன் இயேசுவை பற்றிக்கொள்ளும் வாழ்வையும் பெற்றோர் அவர்களுக்கு காண்பித்தனர். தேவன் அவர்கள் வாழ்விலும் தம் கிருபையை வைத்தார். குடும்பமாக பரிசுத்த ஆவியால் நிறைந்து, தேவ வல்லமையைப் பெற்று, ஆண்டவருடைய நாமத்தை மகிமைப்படுத்தினர். ஆண்டவர் அவர்களை தம்முடைய கரங்களில் எடுத்து, கூர்மையான பட்டயங்களாகவும், அற்புத அடையாளங்களாகவும் உபயோகித்து, தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்திக் கொண்டார்.

இன்று இதை வாசிக்கிற உங்கள் குடும்ப வாழ்விலும், தனிப்பட்ட வாழ்விலும்கூட இதே ஆசீர்வாதத்தைக் கொடுக்க கர்த்தர் வல்லமையுள்ளவராகவும், வாஞ்சை யுள்ளவராகவும் இருக்கிறார் என்பதை அனுபவத்தில் ருசித்துப் பாருங்கள் (சங். 34:8).

<u>ஜெபம்:</u> “அன்புள்ள தெய்வமே, உம்மோடு இணைந்து வாழும் ஒரு குடும்பம் எத்தனை தெய்வீக இன்பம் நிறைந்தது என்பதை உணர்ந்து, நானும் என் வீட்டாரும் யோசுவா சொன்னது போல, உம்மை சேவிக்க, உம்முடைய நாமத்தை மகிமைப் படுத்த “அடையாளங்களாகவும் அற்புதங்களாகவும்” விளங்க, உமது தெய்வீகக் கிருபையை <u>இன்று</u> அருளிச்செய்யும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!”

தேவன் பக்தியுள்ள சந்ததியை தருவார்!

''தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறும்படி மனிதனை (ஆண்டவர்) படைத்தார்''
(மல்கியா 2:15).

ஆபிரகாம், தாவீது போன்ற பக்தர்கள் தேவனால் அழைத்து தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். அவருடைய வார்த்தைக்கு அவர்கள் கனம் கொடுத்து, அவரைப் பின்பற்றினதால் சந்ததி சந்ததியாக அவர்கள் தேவபக்தியுள்ளவர்களாய் இருந்தார்கள் (மத். 1:17). இந்த சந்ததியில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் பிறந்தார் என்றும் காண்கிறோம்.

இன்றும் அவர்களைப் போலவே, எந்தெந்த குடும்பத்தில் தேவபக்தியோடு ஆண்டவரை பின்பற்றுகிறார்களோ அவர்களும் ஜாதிகளின் நடுவிலும், ஜனங்களின் நடுவிலும் ஆசீர்வாதம் பெற்ற சந்ததியாக இருப்பார்கள் (ஏசாயா 61:9). ஆனால், இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் இப்படிப்பட்ட தேவபக்தியுள்ள சந்ததிகளைப் பார்ப்பது மிகவும் அரிதாயிருக்கிறது. குடும்ப வாழ்க்கையிலே தெய்வபக்திக்கு முக்கியத்துவம் கொடுப்பது இந்நாட்களில் காண முடியாத ஒன்றாய் இருக்கிறது. இன்று இதை வாசிக்கிற நீங்கள், இப்படிப்பட்ட வாக்குத்தத்தம் உங்கள் குடும்பத்திலே நிறைவேறவேண்டுமென்று தேவபயத்தோடு ஆண்டவரிடம் வாஞ்சையோடு கேளுங்கள் (தீத்து 2:14).

பல ஆண்டுகளுக்கு முன்பு ஆண்டவரை அறியாத ஒரு வாலிபன் ஒரு கிறிஸ்தவப் பள்ளியிலே கல்வி பயின்று வந்தான். அங்குள்ள மற்ற மாணவர்கள், ஆசிரியர்கள் மூலம் இயேசுகிறிஸ்துவைப் பற்றியும், அவரது அன்பைக் குறித்தும் அறிந்து கொண்டான். அவரை தானும் பின்பற்ற வேண்டும், அவருக்கு பிரியமானவனாய் நடக்க வேண்டுமென்று அவனுக்குள்ளே ஒரு வாஞ்சை ஏற்பட்டது. தனக்குத் தெரிந்த அளவிலே அவரைப் பின்பற்றி வாழ ஆரம்பித்தான். ஒரு கிறிஸ்தவ பெண்ணை திருமணமும் செய்து கொண்டான். அவன் உள்ளத்திலே ஒரு தெய்வீக தாகம் மென்மேலும் அதிகரித்தது. தான் கர்த்தரைத் தேடுவதில் இன்னும் குறைவு இருப்பதாக உணர்ந்து, மென்மேலும் அவரைப் பற்றி அறிந்துகொள்ள பலவகையிலும் முயற்சித்தான். ஒரு நாள் தேவனுடைய ஊழியர் ஒருவர் மூலம் ஆத்தும இரட்சிப்பைக் குறித்து அறிந்து தன்னை ஆண்டவருக்கென்று அர்ப்பணித்தான். ஆண்டவர் அவனை பாவங்களிலிருந்து இரட்சித்தார். புதுமனுஷனாக, கிறிஸ்துவின் அடியானாக மாறினான். குடும்ப வாழ்க்கையிலும் அவனுடைய ஜெபத்தின் மூலமாய் அவன் மட்டுமல்லாமல், அவன் சந்ததி சந்ததியாக பக்தியுள்ளவர்களாய் வாழவும், அதை அவன் கண்களால் காணவும் தேவனே அவனுக்கு உதவி செய்தார். காரணம், அவன் தேவனை உறுதியாய் பின்பற்றினதால் அப்படிப்பட்ட ஆசீர்வாதம் அவனுக்கு கிடைத்தது. ஆண்டவர் அவன் மீதும் அவன் சந்ததியின் மீதும் பிரியம் கொண்டவராக அவர்களை ஆசீர்வதித்து வழிநடத்தினார்.

ஆம், என் அன்புக்குரியவர்களே! இன்று நீங்களும் இதே விதத்தில் ஆசீர்வாதம் பெறும்படியாகத் தான் இந்த வார்த்தைகளை பரிசுத்த ஆவியானவரே உங்களோடு பேசுகிறார். இதைக் குறித்து தேவ பயத்தோடு, ''நானும் என் சந்ததியும் ஆண்டவருக்கு அடியார்களாக வாழ வேண்டும்'' என்று ஜெபம் பண்ணுவீர்களா? (பிலி. 2:15).



ஜெபம்: **''அன்பு தெய்வமே! சந்ததி சந்ததியாக தேவபக்தியுள்ள சந்ததியாக என் வாழ்வு மாறும்படி, நீரே உம்முடைய தெய்வீகக் கிருபையை எனக்கும் தாரும். இன்று என் குடும்பத்தினர் ஒவ்வொருவரோடும் நீர் பேசி ஒருவராவது கெட்டுப்போகாமல் பரிசுத்த பாதையிலே நடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!''**

நீங்கள் தேவ பெலத்தினால் காக்கப்பட்டிருக்கிறீர்கள்!

"...தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்த சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது" (1 பேதுரு 1:5).

நாம் வணங்கும் தேவனாகிய இயேசு கிறிஸ்து பயங்கரமான பராக்கிரமசாலியாக இருக்கிறார் (எரே. 20:11, ஏசாயா 40:10). ஒருவேளை உருவத்தில் நீங்கள் குறைவுள்ளவராக, பலவீனராக இருக்கலாம். ஐயோ, நான் குட்டையாக இருக்கிறேனே, ஒல்லியாக இருக்கிறேனே என்று பலவிதமாக உங்களைக் குறித்து கவலைகொள்ளலாம். ஆனால், நீங்கள் அதைப்பற்றியெல்லாம் சிந்திக்க வேண்டிய அவசியமேயில்லை. அதற்கு பதிலாக நம்முடைய கண்கள் நமக்கு ஒத்தாசை தரவல்ல, பெலன் தரவல்ல ஆண்டவரையே நோக்கிப் பார்க்கட்டும். "அவர் இருக்கிறபிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்" (1 யோவான் 4:17) என்று வாசிக்கிறபடி, அவரைப்போன்று பராக்கிரமசாலிகளாக கர்த்தருக்குள் பெலன் கொண்டவர்களாக இருக்கிற அனுபவத்தை ஆண்டவர் இன்று உங்கள் ஒவ்வொருவருக்கும் கொடுக்க விரும்புகிறார். இதற்காக நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், அவர் நடந்தபடியே நீங்களும் நடந்து அந்த தெய்வீக ஆசீர்வாதத்தை விசுவாசத்துடன், நம்பிக்கையுடன் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஒரு வாலிபப் பெண்ணுக்கு அடிக்கடி வலிப்பு நோய் வரும். எல்லோரும் இவள் இப்படியே வாழ்நாள் முழுவதும் வலிப்பு நோயால் வாடித்தவிக்க வேண்டியதுதான் என்று நினைத்தார்கள். ஆனால், இந்த பெண்ணுக்கு ஒரு அருமையான சிநேகிதி இருந்தாள். அவள் மிகுந்த அன்போடு ஆண்டவரை அதிகமாய் நேசிப்பவள். இரண்டுபேரும் இந்த வியாதி நீங்கும்படியாக ஆண்டவரை நோக்கிக் கருத்தாய் ஒருமனதுடன் இணைந்து அடிக்கடி பிரார்த்தனை செய்து வந்தனர். அந்த பிரார்த்தனையைக் கேட்டு, ஆண்டவர் கொஞ்சம் கொஞ்சமாக அந்த பொல்லாத வியாதியின் கட்டுகளிலிருந்து இந்த பெண்ணை விடுதலையாக்கினார். காரணம், அவள் பரிசுத்த ஆவியினாலும் அபிஷேகம் பண்ணப்பட்டாள். "கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு" (2 கொரி. 3:17) என்ற வசனத்தின்படி, நாளடைவில் பரிபூரண விடுதலையை பெற்றுக்கொண்டதோடு, கர்த்தருக்குள் ஆவி, ஆத்துமா, சரீரத்தில் மிகுந்த பெலன் கொண்டவளாய் மாறினாள். தெய்வீக வல்லமை, வரங்களினால், கர்த்தர் அவளையும் அவளுடைய சிநேகிதியையும் நிரப்பினார். வாலிப வயதிலே இரண்டு பேரும் கர்த்தருக்கென்று எழும்பிப் பிரகாசிக்கவும், கர்த்தரை மகிமைப்படுத்தவும் செய்தனர்.

இன்று உங்களையும் பெலவீனங்கள் எத்தனை இருந்தாலும், வியாதி எத்தனை இருந்தாலும் அதிலிருந்து பரிசுத்த ஆவியானவர் விடுதலை அருளிச்செய்து, தம்முடைய பராக்கிரமத்தால் நிரப்பி, நீங்கள் விரும்புகிற வண்ணமாக சகலவிதத்திலும் பெலன் பெற்றவர்களாய் உங்களை மாற்ற வல்லமையுள்ளவராயிருக்கிறார். எத்தனை பேர் இதை நம்பி, கர்த்தர்மேல் விசுவாசம் வைத்து, மேற்கண்ட வாக்குத்தத்தத்தின்படியே ஆசீர்வாதம் பெறப்போகிறீர்கள்? (சகரியா 4:6; 2 தீமோ. 1:7).

ஜெபம்: "என் அன்பு இரட்சகரே. பெலவீனம் நிறைந்த என் வாழ்வையும் இன்று முற்றிலுமாக மாற்றி, உம்முடைய பலத்தால் இடைக்கட்டும். நீர் ஜெபத்தை கேட்கிறபடியால் உமக்கு ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

நீதிமான் பனையைப்போல செழிப்பான்!

"நீதிமான் பனையைப்போல செழித்து, லீபனோனிலுள்ள கேதுருவைப்போல் வளருவான்"
(சங்கீதம் 92:12).

பனை மரத்தில் ஒவ்வொரு பாகமும் மக்கள் வாழ்வுக்கு மிகவும் பிரயோஜனமாய் இருக்கிறது. அதில் ஒரு பாகமாவது வீணானது என்று சொல்ல முடியாது. இதைத்தான் இந்த வசனம் விளக்குகிறது. நீதிமான்களுடைய வாழ்க்கையும் அப்படித்தான்! ஆண்டவருக்கும் மனுஷர்களுக்கும் இது மிகுந்த பயனுள்ளதாக இருக்கும். அவனுடைய வார்த்தைகள், செயல்கள் யாவும் மக்களை ஆறுதல்படுத்துவதாக, ஆசீர்வாதத்தின் வழியில் நடத்துவதாக இருக்கும் (நீதி. 29:2). என் அன்பு சகோதர, சகோதரிகளே, இப்படிப்பட்ட மேலான வாழ்வு நம்முடைய சொந்த வாழ்வில் இருக்கிறதா? என்று சற்று சிந்தித்து பார்ப்போம். வார்த்தைகளினால் எத்தனையாய் எளியோரை வேதனைப் படுத்துகிறோம். நம்முடைய செயல்கள், முன்னே ஒன்றும், பின்னே ஒன்றுமாய் நிலைமாறினதாய், திருக்குள்ளதாய் இருக்கிறது அல்லவா? (எரே. 17:9). ஆனால், இன்று இந்த வாக்குத்தத்தத்தை நமக்கு கொடுத்திருக்கிற ஆண்டவர், இந்த தெய்வீக ஆசீர்வாதத்தை நம்முடைய வாழ்வில் அருளிச்செய்யும்படி, இந்த வாக்குத்தத்தத்தை பிடித்து கொண்டு, "ஆண்டவரே, பனையைப்போல என் வாழ்வு செழிப்பானதாக இருக்கும்படி நீதியின் வழிகளில் என்னை வழிநடத்தும்" என்று கேட்போமானால், தேவனுக்கு பயந்து நடப்போமானால், அப்படியே இந்த ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள ஆண்டவர் உதவி செய்வார்.

ஒரு குடும்பத்தில் தாயும் தகப்பனும் தங்கள் பிள்ளைகள் கேடான வழிகளில் போய்விடக் கூடாது என்று பயந்து மிகவும் கண்டிப்பாக வளர்த்தனர். இதினிமித்தம் அவர்களுடைய பெண் பிள்ளைகளுக்கு ஒரு பயம், தாழ்வு மனப்பான்மை, இவைகள் யாவும் வந்துவிட்டபடியால், எதிலும் மேலோங்கி வாழ அவர்களால் முடியாமல் போனது. ஒரு கூட்டத்தில் நின்று பேச பயம். எந்த காரியத்தையும் முன்னின்று செயல்படுத்த ஒரு தாழ்வு மனப்பான்மை! இவைகளால் மேலோங்க அவர்களால் முடியாமல் போனது. இந்த நிலைமையில் ஒரு பெண் ஆண்டவருடைய அன்பை ஆழமாய் அறிந்து கொண்டபடியினால், ஆண்டவரோடு நெருங்கி வாழ்ந்து அவர் அருளிய தைரியம், திடமனம், பரிசுத்த ஆவியின் பெலனால் நிரப்பப்பெற்றாள். கர்த்தருடைய கையில் எடுத்து உபயோகப்படுத்தப்படும் ஒரு பாத்திரமாக தன்னை ஒப்புக்கொடுத்தாள். எப்பொழுதும் பயந்து மூலையில் தன்னை ஒளித்துக்கொள்ளும் நிலையில் இருந்த அவள் கர்த்தருக்கென்று எழும்பி நின்று அவர் நாமத்தை மகிமைப்படுத்தினதைக் கண்டு அவளுடைய உற்றார் உறவினர் ஆச்சரியமடைந்தனர்.

ஆம்! எனக்கு அன்பானவர்களே, இன்று உங்கள் வாழ்விலும் நீதியின் வழிகளில் நடப்பீர்களானால், கர்த்தர் உங்களையும் அவ்வாறே ஆசீர்வதிப்பார். தம்முடைய பரிசுத்த ஆவியானவர் மூலமாய் நீங்கள் அநேகருக்கு ஆசீர்வாதமாக மாறுவீர்கள். பயம், அதைரியம் யாவும் நீங்கி அநேகருக்கு பிரயோஜனமான, ஆண்டவருக்கு மகிமையான, செழிப்பான வாழ்வை பெறுவீர்கள் (நீதி. 13:9).



<u>ஜெபம்:</u> "அன்பு இரட்சகரே! என் வாழ்விலும் எல்லாவித பயங்களையும், தாழ்வு மனப்பான்மையையும், குறைவுகளையும் நீர் எடுத்துப்போட்டு நீதியின் வழியில் நடத்தி பரிசுத்த ஆவியினால் பலப்படுத்தி, உமது நாமத்திற்கு மகிமையாக <u>இன்று முதல்</u> என் வாழ்வை செழிக்கச் செய்யும் இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

தமது செய்கைகளால் நம்மை மகிழ்ச்சியாக்குவார்!

"கர்த்தாவே, உமது செய்கைகளால் என்னை மகிழ்ச்சியாக்கினீர், உமது கரத்தின் கிரியைகளினிமித்தம் ஆனந்த சத்தமிடுவேன்" (சங்கீதம் 92:4).

ஆண்டவர் பரலோகத்தில் இருந்தாலும் நம்மோடும் வாசம் பண்ணுகிற தேவன்! இந்த புதிய மாதத்தில் மேற்கண்ட வாக்குத்தத்தத்தின்படி, தமது தெய்வீக செயல்களால் உங்களை மகிழ்ச்சியாக்க வாஞ்சையுள்ளவராய், அவருடைய கரத்தின் கிரியைகளால் உங்களை ஆனந்த சத்தமிடும்படி அருள்புரிவார். அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட சிம்சோன் என்ற மனிதன் அவரை விட்டு விலகினதினிமித்தம் பயங்கரமான உபத்திரவத்திற்குள்ளானபோது, தன் வாழ்வின் முடிவு சமயத்தில், "கர்த்தாவே, இந்த ஒருவிசை மாத்திரம் என்னை நினைத்தருளும்" (நியா. 16:28) என்று கதறினான். அந்த சமயத்திலும் அவன் கதறுதலைக் கேட்டு, கர்த்தர் அவனுக்கு இரங்கி, உதவி செய்தார். ஆண்டவருடைய அன்பு எத்தனை இணையற்றது என்று பாருங்கள்! இதே ஆண்டவர் இதே சிறிய ஜெபத்தை நீங்கள் செய்யும்பொழுது, உங்களுக்கும் உதவி செய்வார். இந்த புதிய மாதத்தில் உங்களோடு கூட இருந்து மாதம் முழுவதும் ஒவ்வொரு நாளும் உங்களை தீமைகள் அணுகாதபடியும், பரிசுத்தமான வாழ்வு வாழவும் அனுக்கிரகம் பண்ணுவார். தம்மை நம்புகிறவர்களை அவர் அறிந்திருக்கிற தேவன் (நாகூம் 1:7).

ஒரு ஏழை ஊழியர் எப்பொழுதும் ஆண்டவர் மீது நன்றி நிறைந்தவராக, "அல்லேலூயா" என்று சொல்லிக்கொண்டேயிருப்பாராம். அவருக்கு பெயரே "அல்லேலூயா போதகர்" என்பதாகும். அவர் மீது பொறாமையும், எரிச்சலும் கொண்ட ஒரு சிலர், ஒரு சாக்கு மூட்டையில் அவரைப் போட்டு, கடலில் எறிந்துவிட்டால் அவர் மரித்துபோவார், அதன் பிறகு அவருடைய தொல்லை நீங்கும் என்று அதற்கான செயலில் ஈடுபட்டார்கள். அவர் சாக்கு மூட்டையினுள்ளே இருந்தபொழுதும் கூட "அல்லேலூயா" என்று ஆண்டவரை ஸ்தோத்திரித்துக் கொண்டேயிருந்தார். இவர் மூட்டைக்குள் இருந்து போட்ட கூச்சலை பொறுக்க முடியாமல், அவர்கள் கடற்கரையிலேயே மூட்டையை கீழே தூக்கியெறிந்துவிட்டு சென்று விட்டனர். கீழே கிடந்த அந்த மூட்டைக்குள் இருந்து வந்த சத்தத்தைக் கேட்டு அந்த பக்கம் வந்த மக்கள் அவரை மீட்டனர். வெளியே வந்த அவர் சொன்ன முதல் வார்த்தை "அல்லேலூயா! ஆண்டவருக்கு ஸ்தோத்திரம்" என்பதாகும். கர்த்தர் அவரது வாழ்வில் செய்த நற்கிரியைகளையெல்லாம் எண்ணி தான் அவர் அப்படியாக ஆனந்த சத்தமிட்டார்!

இன்று உங்களுக்கு இந்த நன்றி உள்ளம் உண்டா? கர்த்தரை முழுமனதுடன் துதிக்கும் "அல்லேலூயா" என்ற வார்த்தை உங்கள் உதடுகளின் கனியாக நிறைந்திருக்கிறதா? (எபி. 13:15). சற்று யோசித்துப் பார்த்து மேற்கண்ட வாக்குத்தத்தம் உங்கள் வாழ்வில் நிறைவேற உள்ளத்தைத் திறந்து மனதார அவரை ஸ்தோத்திரித்து மகிழுங்கள்.

<u>ஜெபம்:</u> "அன்புள்ள ஆண்டவரே! இந்த முதலாம் தேதி அன்று என்னை முழுவதுமாக உம்மிடத்தில் ஒப்படைக்கிறேன். தயவு செய்து <u>இன்று</u> நீர் என்னை நினைத்தருளி மேற்கண்ட வாக்குத்தத்தம் என்னில் நிறைவேற, உம்முடைய மகிழ்ச்சி, ஆனந்தம் என் வாழ்வில் பொங்கியெழ உம்முடைய அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

ஆசீர்வாதங்களை அருளும் தேவன்!

"சமாதானத்தின் கர்த்தர்தாமே எப்பொழுதும் சகலவிதத்திலும் உங்களுக்கு சமாதானத்தை தந்தருளுவாராக..." (2 தெசலோனிக்கேயர் 3:16).

மேற்கண்ட வாக்குத்தத்தத்தின்படி சமாதானத்தின் கர்த்தர்தாமே எப்பொழுதும் உங்கள் வாழ்வில் தமது தெய்வீக சமாதானத்தை நிறைவாய் அருளிச்செய்வார். அனுதின வாழ்க்கையிலே நம்மை பல்வேறு கவலைகள், பாரங்கள் சூழ்ந்துகொள்ளும் பொழுது, அவைகளையெல்லாம் ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும், ஸ்தோத்திரத்தோடு தேவனுக்கு தெரியப்படுத்தும்போது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தால் அவர் நம்மை நிரப்புவார் (பிலி. 4:6,7). குடும்ப வாழ்விலும், தனிப்பட்ட வாழ்விலும் தெய்வீக சமாதானம் இருந்தால் நிறைவான சந்தோஷம் நாம் பெறலாம். உலகம் கொடுக்கிறபிரகாரம் அல்ல; என்னுடைய தெய்வீக சமாதானத்தையே அருளிச்செய்வேன் (யோவான் 14:27) என்று ஆண்டவர் வாக்கு கொடுத்திருக்கிறார். அன்பானவர்களே, இந்த தெய்வீக சமாதானம் உங்கள் வாழ்வில் நதிபோல ஓடுகிறதா? சமாதானத்தின் தேவனாகிய ஆண்டவரை நீங்கள் ஜெபத்தின் மூலம் நோக்கிப் பார்ப்பீர்களானால், உங்களுக்கு விரோதமாக எழும்புகிற சகல தீங்குகளினின்றும் அவர் அற்புதமாய் காப்பதோடு, எல்லா நிலைமைகளிலும் அவர் தரும் தெய்வீக சமாதானம் நதிபோல் புரண்டு வந்து உங்களை நிரப்புவதை அனுபவித்து பாருங்கள் (2 தீமோ. 4:18).

என்னுடைய வாழ்க்கையிலே சமாதானத்தை இழந்து போகும்படியான பல சந்தர்ப்பங்கள் வந்தபொழுதெல்லாம் என் கஷ்டங்களையும், துன்பங்களையும் ஸ்தோத்திரத்தோடு கூடிய ஜெபத்தினாலும், விண்ணபத்தினாலும் தேவனுக்கு தெரியப்படுத்தும் பழக்கத்தை ஆண்டவர் எனக்கு கற்பித்து கொடுத்தார். அவ்விதமாக அதை செயலாக்கும்பொழுது ஒரு தெய்வீகப் பிரசன்னம் முதலாவதாக என் உள்ளத்தை நிரப்புவதை நான் உணர்ந்தது உண்டு. என்னையுமறியாமல் ஒரு தெய்வீக சந்தோஷம் என் உள்ளத்தை அடுத்ததாக நிரப்பும். என்னையும் அறியாமல் என் வாய் ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செய்ய ஆரம்பிக்கும். குறுகிய காலத்தில் கர்த்தருடைய ஆவியானவர் எனக்காக யுத்தம் செய்கிறவராக இருந்து யாவற்றையும் நன்மையாக முடித்து கொடுப்பார். இதுதான் ஆண்டவரோடு வாழ்கிற வாழ்க்கையில் எனக்கு ஆண்டவர் கற்பித்து கொடுத்த ஆசீர்வாதத்தின் இரகசியம் (சங். 32:8, ஏசாயா 48:17).

அன்பானவர்களே, விசேஷமாக என் அருமையான சகோதரிகளே, இன்று மிகச் சிறிய கவலைகளையும், பாரங்களையும்கூட பெரிதுபடுத்தி, கண்ணீர் சிந்தி, கர்த்தருடைய பெலனை நாடித்தேடாமல் உங்களையே துன்பப்படுத்திக் கொள்கிறீர்களா? குடும்பத்தின் சமாதானத்தை குலைத்துப்போடுகிறீர்களா? வேண்டாம். ஆண்டவரை நோக்கிப் பாருங்கள். உள்ளத்தின் ஆழத்திலிருந்து அவருக்கு நன்றி செலுத்துங்கள் (1 தெச. 5:18)! அவர் அதினிமித்தம் தரும் ஆசீர்வாதங்களை, சமாதான வாழ்வை நிறைவாய் பெற்று வாழுங்கள்.

ஜெபம்: "என் அன்பு இரட்சகரே. நீர் இன்று உம்மை நோக்கிப் பார்க்கிற எனக்கும் இந்த மேலான நன்மைகளை. தெய்வீக சமாதானத்தை. உமது ஆசீர்வாதத்தை நிறைவாய் தாரும். இந்த ஜெபத்தை நீர் கேட்கிறதற்காக உமக்கு ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"

நீங்களோ... திடன்கொள்ளுங்கள்!

"நீங்களோ உங்கள் கைகளை நெகிழவிடாமல் திடன்கொள்ளுங்கள். உங்கள் கிரியைகளுக்கு பலன் உண்டு" (2 நாளாகமம் 15:7).

அநேக சமயங்களிலே நாம் எதிர்பாராத காரியங்கள் நடக்கும்போது, எளிதில் மன சஞ்சலம் அடைகிறோம். இது நடக்குமா? ஒருவேளை நடக்காமல் போனால் என்ன செய்வது? என்று சஞ்சலம் கொள்கிறோம். நம்முடைய கைகளை அப்படிப்பட்ட சமயங்களில் தளர்ந்து நெகிழவிடாமல், கர்த்தருக்குள் நாம் திடன்கொள்ளும்போது, கர்த்தர் நம்முடைய கிரியைகளுக்கு நிச்சயம் பலன் தருவார் (ஏசாயா 35:3). தாவீது ராஜா மிகவும் நெருக்கப்பட்ட நேரங்களிலும், தனிமையின் நிலைமையிலும், எல்லோராலும் கைவிடப்பட்ட வேளையிலும், கர்த்தருக்குள் தன்னை திடப்படுத்திக் கொண்டான். அதனால் அவன் வாழ்வில் நன்மை பெற்றவனாய், அவன் இழந்த எல்லாவற்றையும் திரும்பப் பெற்றுக்கொண்டான் (1 சாமு. 30:6,19).

கத்தோலிக்க கிறிஸ்தவ மதத் தலைவரான போப் ஜான் பால்–XXIII அவர்கள் ஒரு முக்கியமான காரியத்தை சபைத் தலைவர்கள் மத்தியிலே அடுத்த நாள் கொண்டுவர தீர்மானம் செய்தார். ஆனால், அதை அவர்கள் எப்படி எடுத்துக்கொள்வார்கள் என்று ஒரு ஐயம் மனதிற்குள் ஏற்பட, அவருக்கு இரவெல்லாம் உறக்கமே வரவில்லை. இரவு வெகு நேரம் வரை தன் அறையில் தனியே அங்கும் இங்குமாக உலாவிக் கொண்டிருந்தார். அந்த சமயத்தில் அவருக்கு ஒரு சப்தம் கேட்டது. "Little John, go to sleep" (என் அருமை சிறுவன் ஜான் பால்! உறங்கப்போ என்பது தான் அந்த சப்தம்). அதை கேட்டபொழுது, அவருக்கு இது எங்கிருந்து வருகிறது? மட்டுமல்லாமல், இந்த நிலைமையில் யார் என்னை அப்படி அழைப்பார்கள்? என் தாய் தான் நான் சிறுவனாய் இருக்கும்பொழுது என்னை அன்போடு அப்படி அழைப்பார்கள் என்று எண்ணினார். அடுத்த கணம் ஆண்டவர் இயேசு தான் தன்னோடு பேசியிருக்கிறார் என்று உணர்ந்து கொண்டார். அந்த வார்த்தையின்படியே தேவ சமாதானத்தோடு உறங்கப்போனார். அடுத்த நாள் சபைத்தலைவர்கள் கூடினார்கள். இந்த காரியம் அவரால் கூறப்பட்டபொழுது, யாவரும் ஒருமனதோடு எந்தவித வெறுப்புமின்றி அதனை ஏற்றுக்கொண்டார்கள். கர்த்தர் யாவையும் நன்றாக செய்து முடித்துக் கொடுத்தார்.

அன்பானவர்களே, நீங்களும் இன்று பற்பல குழப்பத்திலும், கவலையிலும் இருப்பீர்களானால், இதே ஆண்டவர் உங்களுக்கும் உதவி செய்வார். ஆகவே, அவருக்குள் திடன்கொள்ளுங்கள் (சங். 31:24). இந்தவிதமான திடபெலன், தேவன் நம்மோடு தம் வார்த்தைகள் மூலம் பேசுவதால் வரும். அதுபோன்றே தேவ பிரசன்னத்தில் நம் இருதய பாரங்களையெல்லாம் ஊற்றிவிடும்பொழுதும் தேவன் தருவார். எனவே, சோர்வு வரும்பொழுதெல்லாம் நம்மை திடப்படுத்த வல்ல தேவனையே நோக்கிப் பார்ப்போம்.



ஜெபம்: "அன்பு இரட்சகரே, இன்று என் மனசோர்வையெல்லாம், மனதின் குழப்பங்களையெல்லாம் நீர்தாமே மாற்றி, எனக்காக யாவும் செய்து முடிப்பீர் என்று விசுவாசிக்கிறேன். தாவீதுக்கு அற்புதமாய் உதவி செய்து, திடனற்ற சூழ்நிலையில் தைரியம் தந்து பெலப்படுத்தி, வெற்றி பெற செய்ததுபோல் எனக்கும் உமது தெய்வீகக் கிருபையைத் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

உங்களுக்கு நற்சீர் உண்டாகச்செய்வேன்!

"...உங்கள் முந்தின சீரைப்பார்க்கிலும் உங்களுக்கு நற்சீர் உண்டாகச்செய்வேன்; அதனால் நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்" (எசேக்கியேல் 36:11).

சில நேரங்களில் குடும்ப வாழ்க்கையிலும் சரி, வேலை ஸ்தலங்களிலும் சரி, வியாபாரத்திலும் சரி, ஆரம்பம் மிகவும் நன்றாய் இருக்கிற வேளையிலே நாம் மிகுந்த சந்தோஷமடைகிறோம். ஆனால், திடீரென்று அதில் ஒரு சிறு திருப்பம் அல்லது குறைவு வரும்பொழுது மிகவும் சோர்ந்து போகிறோம். இப்படியே கீழாகப் போய்விடுவேனோ? எனக்கு வேலையில் உயர்வே கிடைக்காதோ? என் வியாபாரம் செழிப்பே அடையாதோ? குடும்ப வாழ்க்கையில் குறைவுகள் மேலே மேலே பெருகிவிடுமோ? என்றெல்லாம் கலங்கி துயரமடைகிறோம் (சங். 69:29). ஆனால், ஆண்டவருடைய இந்த வாக்குத்தத்தத்தை இந்த வசனத்தின்படி, நாம் பற்றிப்பிடித்துக்கொள்ளும்போது, கர்த்தர் மேல் நம் பாரத்தை முழுவதுமாய் வைத்து அவரில் சார்ந்துகொள்ளும்போது, அவர் நிச்சயம் நம்மை நழுவவிடமாட்டார். இந்த வசனத்தை முழுவதுமாய் வேதத்திலிருந்து வாசித்து பார்த்து அந்த ஆசீர்வாதத்தை ஆண்டவரிடம் உறுதியான ஜெபத்தின் மூலம் கேட்டு பெற்றுக்கொண்டு நன்மை பெறுங்கள் (சங். 86:7).

ஒரு குடும்பத்தின் தலைவன் அலுவலகத்தில் எந்த வேலை கொடுத்தாலும் பொறுமையாக செய்து முடிப்பார். உண்மையும் உத்தமமுமே அவருடைய வாழ்க்கையின் நோக்கமாக இருந்தது. இதனால் அவரோடு பணிபுரிந்தவர்கள் அவரை சுலபமாக ஏமாற்றிவிடுவார்கள். அவருக்கு வரவேண்டிய உயர்வையெல்லாம் யாராவது அவருக்குக் கீழாக இருக்கிறவர்கள் அடித்துக்கொண்டு போய்விடுவார்கள். இதனால் அவருடைய மனைவிக்கு மிகுந்த வருத்தம். உங்களுடைய உண்மையும், பக்தியும் நம்முடைய வாழ்வை மற்றவர்களுக்கு முன்னதாக சிரிக்கும்படி செய்து விட்டதே! உங்களுக்கு இதைப்பற்றி கவலையில்லையா? என்று வசைமாரி பொழிந்தார்கள். அலுவலகத்திலும் இவரை ஏமாற்றிவிட்டோம் என்று வஞ்சகர்கள் ஏளனம் செய்வார்கள். ஆனால், அவரோ கர்த்தருக்கு பயப்படுகிற பயத்தோடு தன்னுடைய உறுதியான வாழ்வில் கொஞ்சம்கூட இறங்காமல் பயபக்தியோடு நடந்து வந்தார். புதியதாக ஒரு மேலாளர் அவருடைய அலுவலகத்திற்கு மாற்றுதலாகி வந்து சேர்ந்தார். இவருடைய தஸ்தாவேஜ்களை யெல்லாம் படித்து அறிந்துகொண்ட அவர், இவருக்கு எவ்வளவு அநீதி செய்யப் பட்டிருக்கிறது என்பதை அறிந்தவராய் அவருடைய உண்மையையும் உத்தமத்தையும் கவனித்தவராய் ஒரு புதிய பதவியை அவருக்கென்று உருவாக்கி, அவரது சம்பளத்தை ஏராளமாக உயர்த்தி, அவரைக் கனப்படுத்தினார். ஆம்! முந்தின சீரைப்பார்க்கிலும் இப்பொழுது தேவன் நற்சீர் உண்டாகும்படி அருள்புரிந்தார்.

அன்பானவர்களே, மக்கள் உங்களை ஏமாற்றலாம், வஞ்சிக்கலாம். ஆனால், நீங்கள் உண்மையிலும் உத்தமத்திலும் ஆண்டவரை பின்பற்றுவதிலும் தாவீதைப்போல் இருதயத்தில் ஆண்டவருக்கு முன்பாக கவனமாய் வழிநடப்பீர்களானால், அவர் உங்களுக்கும் மேற்கண்ட வாக்குத்தத்தத்தின்படி நிறைவான ஆசீர்வாதத்தை அருளிச்செய்வார் (அப். 13:22).

<u>ஜெபம்:</u> "அன்பு தகப்பனே, நீர் என்றென்றும் உயிரோடு இருக்கிறபடியால் <u>இன்று</u> இந்த வாக்குத்தத்தத்தின்படி என் வாழ்வை நற்சீர் உண்டாக ஆசீர்வதிப்பீர் என்று விசுவாசிக்கிறேன். உம்முடைய வழிநடத்துதலுக்காக நன்றியோடு உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"

பொருத்தனையை அங்கீகரிக்கிற தேவன்!

"நானோவெனில் துதியின் சத்தத்தோடே உமக்குப் பலியிடுவேன்; நான் பண்ணின பொருத்தனையை செலுத்துவேன்; இரட்சிப்பு கர்த்தருடையது" (யோனா 2:9).

அன்னாள் என்ற பெண்ணின் மனக்கிலேசத்தை ஆண்டவர் கவனித்தார். அதுமட்டுமல்லாமல், அவள் செய்த பொருத்தனையையும் கூர்ந்து நோக்கினார். பொருத்தனை செய்த அவளுக்கு அவள் விரும்பி வேண்டிக்கொண்ட ஆசீர்வாதமாகிய குழந்தையையும் அருளிச்செய்தார். குழந்தையை மகிழ்ச்சியோடு பெற்றுக்கொண்ட அவள் தன் பொருத்தனையின்படியே அந்த குழந்தையை ஆண்டவருக்கென்று அர்ப்பணித்து, அதை நிறைவேற்றினாள் (1 சாமு. 1:28). அப்படி பொருத்தனையின் மூலமாய் அர்ப்பணிக்கப்பட்ட மகன் தான் "சாமுவேல்" தீர்க்கதரிசி. அந்த தாயின் பொருத்தனையின் மூலமாய் எவ்வளவு அருமையான ஒரு பாலகனை ஆண்டவர் அவளுக்கு கொடுத்தார். ஒரு குழந்தையை மட்டுமின்றி, அவளுக்கு ஏராளமான குழந்தைகளையும் கொடுத்தார் (1 சாமு. 2:21). இன்றைக்கும் அன்னாளைப் போலவே ஆண்டவருக்கு பொருத்தனை செய்து, அதை நிறைவேற்றும்பொழுது, கர்த்தர் அந்த பொருத்தனையின் மூலமாய் உங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பார் (சங். 116:18,19).

ஒரு விதவைத் தாய் தன் இரண்டு பிள்ளைகளையும் கஷ்டப்பட்டு படிக்கவைத்தாள். தானும் ஒரு வேலை செய்து அதின் மூலமாய் கிடைத்த பணத்தில் பத்தில் ஒரு பாகத்தை தனது கஷ்டமான வாழ்வின் மத்தியிலும் கர்த்தருக்கென்று கொடுப்பதில் ஜாக்கிரதையாய் இருந்தாள். எதிர்பாராதவிதத்தில் அவள் மகனுக்கு தகப்பனுடைய வேலையை அவர் பணி செய்த அலுவலகத்திலிருந்து கூப்பிட்டு கொடுத்தார்கள். இதன் மூலமாய் அவர்களுடைய வருவாய் மேலும் அதிகரித்தது. அதிலும் அந்த தாய் கர்த்தருக்கென்று தசமபாகம் ஒழுங்காய் செலுத்தி வந்தார்கள். ஆண்டவரே, என் பிள்ளைகளுடைய எதிர்காலத்தை நீரே பொறுப்பெடுத்துக்கொள்ளும், அவர்கள் இரண்டு பேரையும் எல்லாக் காரியங்களிலும் சிறந்து விளங்கும்படி நீரே வழிநடத்த வேண்டுமென்றும், உம்முடைய சமுகத்தில் எப்படியாவது ஒரு குறிப்பிட்ட அளவு பணத்தை உம்முடைய ஊழியத்திற்கென்று அளிப்பேன் என்றும் பொருத்தனை செய்து கொண்டார்கள். அந்த குறிப்பிட்ட அளவு என்பது அவர்களுக்கு மிகப் பெரிய தொகை தான். எனினும், அதையெல்லாம் அவர்கள் யோசிக்கவேயில்லை. என்ன ஆச்சரியம்! அவர்களுடைய மகளும் நிறைய படித்து முடிக்கவும், அவளுக்கும் ஒரு அருமையான வேலையை ஆண்டவர் எதிர்பாராத அளவில் கொடுத்தார். இரண்டு பிள்ளைகளும் சம்பாதிக்க ஆரம்பித்தபடியால், இந்த தாய் தான் பொருத்தனை செய்தபடியே அந்த பெரிய தொகையை உடனடியாக ஆண்டவருடைய ஊழியத்திற்கென்று அர்ப்பணித்தார்கள்.

ஆம்! அன்பு சகோதர, சகோதரிகளே, இன்று நீங்களும் ஆண்டவருடைய காரியத்தில் ஜாக்கிரதையாய் இருந்து பொருத்தனை செய்வீர்களானால், கர்த்தர் உங்கள் பொருத்தனையையும் நிறைவேற்றி பலன் கொடுப்பார். அதன்மூலம் நீங்கள் எதிர்பார்த்ததற்கு மேலான ஆசீர்வாதத்தை அருளிச்செய்வார் (ஆதி. 28:22; 32:10,12).

ஜெபம்: "அன்பு இரட்சகரே. நான் உமக்கு பயப்படும் பயத்தோடு. எந்த காரியத்திலும் சோர்ந்து போகாமல் அன்னாளைப் போல பொருத்தனை செய்வதிலும், அதை நிறைவேற்றுவதிலும் கவனமாய் இருந்து அதன்மூலம் உம்முடைய ஆசீர்வாதங்களை நிறைவாய் பெற்றுக்கொள்ள இன்றுமுதல் எனக்கும் அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

உங்கள் வம்சத்தார் அக்கினி ஜுவாலையாயிருப்பார்கள்!

"யாக்கோபு வம்சத்தார் அக்கினியும், யோசேப்பு வம்சத்தார் அக்கினி ஜுவாலையுமாயிருப்பார்கள்" (ஒபதியா 18 ஆம் வசனம்).

இந்த விதமான ஆசீர்வாதம் மிக மிக அருமையானது! ஆவிக்குரிய வாழ்வில் அனுதினமும் ஆண்டவரை நோக்கி இறைஞ்சி, "ஆண்டவரே, எனக்கு மேலான தெய்வீக அனுபவங்களைத் தந்து, உம்மோடு என்னை நெருக்கி சேர்த்துக்கொள்ளும்" என்று போராடி விண்ணப்பம் செய்யும்பொழுது, கர்த்தர் இந்த தெய்வீக அனுபவத்தை கொடுப்பார். ஆண்டவரை நம்பியிருந்த பக்தர்கள் பலருடைய அனுபவத்தில் இந்த தெய்வீக வாழ்வைக் குறித்து வாசிக்கிறோம். இது எனக்கு கிடைக்குமா? நான் இதற்கு தகுதியா? என்று நினைப்போமானால், நம்மைப் பற்றி குறைவான எண்ணங்களே நமக்கு ஏற்படும். நம்முடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது (2 கொரி. 3:5) என்று வேதம் சொல்லுகிறது. "கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்" (யோவான் 16:24). இந்த அனுபவத்தை பெறுவதற்காக பரிசுத்த ஆவியின் அபிஷேகமும், நிரம்பி வழியும் அனுபவமும் (சங். 23:5) ஆண்டவரிடத்தில் இடைவிடாமல் ஜெபத்தில் கேட்டு பெற்றுக்கொள்வோம். அதன்மூலம் இந்த தெய்வீக அனுபவத்தை யாவரும் பெறலாம்.

சகோதரர் தினகரன் அவர்கள் ஒருநாள் வேதம் வாசிக்கும்பொழுது, அப்போஸ்தலர் 10:38 வசனத்தை வாசித்தார். இயேசு கிறிஸ்துவை தேவன் பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் நிரப்பினார் என்று அவர் வாசித்தபொழுது, "ஆண்டவர் பெற்ற தெய்வீக அனுபவம் எனக்கும் வேண்டுமே" என்று கருத்தாய் ஜெபிக்க ஆரம்பித்தார். ஏழு வருடங்கள் அதற்காக கருத்தாய் வேண்டுதல் செய்தார். கர்த்தர் அந்த ஜெபங்களையெல்லாம் கேட்டு, மூன்று மணி நேரம் அவருக்கு நேரடியாக தரிசனம் கொடுத்து, பரிசுத்த ஆவியினால் இடங்கொள்ளாமற்போகுமட்டும் நிறைத்து, மேற்குறிப்பிட்ட வசனத்தின்படி அக்கினி ஜுவாலையாக, வரங்களையும், வல்லமைகளையும் கொடுத்து ஆசீர்வதித்து, வாழ்வை மாற்றினார். அதன் மூலமாக இன்று எத்தனையோ பேர் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பற்றி அறிந்து, அந்த அனுபவத்தை பெற்று மகிழ தேவன் கிருபை செய்திருக்கிறார். குடும்பமாகவும் அக்கினி ஜுவாலையாக எரிந்து பிரகாசிக்க இன்று ஆண்டவர் அருள்புரிந்திருக்கிறார்.

எனவே, இன்று இதே பாரத்தோடு நீங்களும் கர்த்தரிடத்திலே இந்த அனுபவம் எனக்கும், என் வம்சத்தாருக்கும் வேண்டுமென்று கருத்தாய் வேண்டுதல் செய்யுங்கள். உங்கள் வேண்டுதலை கர்த்தர் நிச்சயம் நிறைவேற்றுவார். "கேட்கிற எவனும் பெற்றுக்கொள்கிறான்" (மத். 7:8).

ஜெபம்: "அன்பு இரட்சகரே, எத்தனை மேலான தெய்வீக அனுபவங்களை எனக்கு அருளிச்செய்ய நீர் காத்திருக்கிறீர். இன்றுமுதல் என்னையும் பரிசுத்த ஆவியினால் அளவில்லாமல் நிரப்பி இந்த தெய்வீக ஆசீர்வாதங்களை அருளிச்செய்து, என்னையும் என் வம்சத்தாரையும் அக்கினி ஜுவாலையாக நீர் மாற்றுவீர் என்று நான் விசுவாசித்து, உமக்கு நன்றி செலுத்துகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

உங்கள் சத்துருக்களை தேவன் மிதித்துப் போடுவார்!

"தேவனாலே பராக்கிரமம் செய்வோம்; அவரே எங்கள் சத்துருக்களை மிதித்துப்போடுவார்" (சங்கீதம் 60:12).

சத்துருவாகிய பிசாசும், அவனுடைய அடியார்களாகிய சில மனிதர்களும் உலக வாழ்வில் நம்மை நாள்தோறும் விழுங்கப் பார்க்கிறார்கள் (சங். 56:2). ஆனால், கர்த்தர் சத்துருவாகிய பிசாசுக்கும், நம்முடைய பகைவர்களுக்கும் எதிர்த்து நின்று, நம்மை விடுவித்துக் காக்க வல்லவராயிருக்கிறார் (சங். 18:17). தாவீது, "என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது" (சங். 23:5) என்று எழுதி வைத்திருக்கிறார். ஆம்! உங்கள் சத்துருக்களின் இஷ்டத்திற்கு ஆண்டவர் உங்களை ஒப்புக்கொடுக்கமாட்டார் (சங். 41:2). எனவே, எப்படிப்பட்ட போராட்டங்கள் உங்களை சூழ்ந்திருந்தாலும், எதற்கும் நீங்கள் அஞ்ச வேண்டாம். வெள்ளம்போல சத்துரு வந்தாலும் கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய் கொடியேற்றுவார் (ஏசாயா 59:19). ஆகவே, தேவ ஜனங்களே, கர்த்தருக்குள் தைரியப்படுங்கள். உங்கள் பயங்களையெல்லாம் ஆண்டவருடைய சமுகத்திலே வைத்து விடுங்கள். அவர் உங்களை பலப்படுத்துவார். சத்துருவை வெல்ல தெய்வீகக் கிருபையை தருவார்.

"இயேசு அழைக்கிறார்" ஊழியத்தின் ஆரம்ப நாட்களில் ஆண்டவர் ஒவ்வொரு திட்டமாக செயல்படுத்த சகோதரர் தினகரன் அவர்களோடு பேசினபொழுது ஒவ்வொன்றையும் அமுல்படுத்த ஆரம்பித்த வேளையில் பொறாமை நிறைந்த சில மக்கள் சத்துருவாகிய சாத்தானின் ஏவுதலினால் தாறுமாறாக, விரோதமான காரியங்களை பேசினார்கள். தங்கள் பத்திரிகைகளில் எழுதினார்கள். இதை வாசித்த அநேகர், எங்களுக்கு அதை நகல் எடுத்து அனுப்பி, "இது என்ன? ஏன் இப்படி எழுதி யிருக்கிறார்கள்?" என்று கேள்வி கேட்டார்கள். எங்கள் மனம் சுக்குநூறாக உடைந்து போனது. ஆனாலும், சகோதரர் தினகரன் அவர்கள் செய்த ஒரு காரியம், எல்லா வேதனை களையும், சத்துருவின் சதி ஆலோசனைகளையும் கர்த்தருடைய சமுகத்தில் ஜெபத்தின் மூலமாய் ஊற்றிவிட்டார்கள். அதன் பலனாக சத்துரு வெட்கப்பட்டு போகும்படியும், அவர் நினைத்த காரியம் தடைபடாமல் யாவும் ஆசீர்வாதமாய் மட்டுமே முடியும்படியும் அருள் புரிந்து, இன்று இந்த ஊழியத்தை இத்தனையாய் பலுகிப் பெருக வைத்திருக்கிறார்.

என் அன்பு சகோதர, சகோதரிகளே, இன்று நீங்களும் சோர்ந்து போகாதிருந்து, மனிதர்களும், சத்துருவாகிய பிசாசும் கொண்டு வருகிற இடறல்கள் அத்தனையையும் கர்த்தர் பாதத்தில் வைக்க கற்றுக்கொள்ளுங்கள் (லூக்கா 10:39,42). இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் நீங்கள் ஆண்டவரை எவ்வளவு சார்ந்திருக்கிறீர்களோ அவ்வளவாய் உங்களுக்கு வெற்றி கிடைக்கும். ஜெபம் இல்லாத வாழ்க்கை வெறுமையான வாழ்க்கை. அது ஆசீர்வாதத்தை கொண்டு வரவே வராது. பயம், வேதனையை மட்டுமே பிறப்பிக்கும்.

ஜெபம்: "அன்பு தெய்வமே! உம்முடைய வசனத்தின்படி, சத்துருக்களை நீர் மிதித்துப் போட்டு, இன்றுமுதல் எனக்கு வெற்றியுள்ள வாழ்க்கையை தரப்போகிறீர் என்று நான் உம்மையே நம்பி, உம்முடைய பாதத்தை பற்றிக் கொண்டு, உமக்கு நன்றி செலுத்துகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

நீங்கள் சந்தேகப்படாமல் விசுவாசித்து, நன்மை பெறுங்கள்!

"நீங்கள் சந்தேகப்படாமல் விசுவாசமுள்ளவர்களாயிருந்தால், (இயேசுவாகிய நான்) இந்த அத்திமரத்திற்கு செய்ததை நீங்கள் செய்வதுமல்லாமல், இந்த மலையைப்பார்த்து: நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொன்னாலும் அப்படியாகும் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்தேயு 21:21).

ஆண்டவர் இயேசு இந்த உலகில் மனிதனாய் உலாவியபொழுது மக்களுடைய விசுவாசத்தைப் பார்த்து அவர்களை ஆசீர்வதித்தார். பாவியாக இருந்தாலும் விசுவாசத்தோடு ஆண்டவருடைய பாதத்தை பற்றிக்கொண்ட ஒரு பெண்ணைப் பார்த்து, "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ" (லூக்கா 7:50) என்றார். அதேபோன்று பெரும்பாடுள்ள ஸ்திரீ அவருடைய வல்லமையினால் தெய்வீக சுகத்தை பெற்றுக்கொண்டபொழுது, அவளையும் அதேபோன்று "மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" (லூக்கா 8:48) என்று கூறி, அவளைக் குறித்து மகிழ்ச்சியடைந்தார். மார்த்தாள் தன் சகோதரன் உயிர்த்தெழுதலைக் குறித்து பல காரியங்களை அவிசுவாசத்துடன் கூறினபொழுது, ஆண்டவர் அவளைப் பார்த்து, "நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்" (யோவான் 11:40) என்று கூறினார். "நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" (1 யோவான் 5:4).

ஒரு ஊழியர், பலருடைய பெயர்களை கூட்டங்களில் ஜெப நேரங்களில் அழைத்து, அவர்களுடைய காரியங்களை வெளிப்படுத்தினதைப் பார்த்து, ஒரு அம்மையார் இவையெல்லாம் உண்மைதானா? என்று சந்தேகப்பட்டார்கள். ஒருநாள் தன்னுடைய போதகரை சந்தித்து, தன் பிரச்சினை தீரவேண்டுமென்று ஜெபம்பண்ணுவதற்காக அவரை தேடி சென்றார்கள். ஆனால் போதகரோ அதே ஊழியர் நடத்திய ஆவிக்குரிய கூட்டத்தில் அமர்ந்திருந்தார். அவரை பார்க்க சென்ற சமயம் அந்த ஊழியத்தை செய்து கொண்டிருந்த ஊழியர் ஜெப வேளையில் திடீரென்று இந்த அம்மையாருடைய பெயரைக் கூறி, நீங்கள் இந்த பிரச்சினையின் நிமித்தமாக இன்று இங்கு வந்திருக்கிறீர்கள் என்று அவர்களுடைய பிரச்சினையை தெளிவாகக் கூறி, அதற்கு ஆண்டவர் என்ன செய்ப் போகிறார் என்பதையும் தெளிவாகக் குறிப்பிட்டபொழுது, அவர்கள் உடலெல்லாம் சிலிர்த்தது. ஐயோ, இப்படிப்பட்ட தெய்வீக வல்லமையை நான் எவ்வளவு ஏளனமாய் எண்ணினேன்! கர்த்தருடைய ஆவியை இப்படி குறைத்து எண்ணிவிட்டேனே என்று மனங்கசந்து அழுது ஆண்டவரிடத்திலே மன்னிப்பு கேட்டார்கள்.

ஆம்! பிரியமானவர்களே, கர்த்தருடைய பரிசுத்த ஆவியானவர் செய்யும் காரியங்கள் ஆச்சரியமானவை. இதை விசுவாசித்து, சந்தேகப்படாமல் நம்பி, நாம் ஆசீர்வாதம் பெற்றுக்கொள்வோம். ஒரு குழந்தையைப்போல தேவனுடைய ராஜ்யத்தின் காரியங்களை நமக்கென்று எடுத்துக்கொள்வோம் (மாற்கு 10:15).

<u>ஜெபம்:</u> "அன்பு தெய்வமே, உம்முடைய காரியங்களை சந்தேகித்து, அவிசுவாசத்துடன் அலட்சியம் பண்ணாமல், முழு விசுவாசத்துடன் உம்முடைய வார்த்தையை ஏற்று செயல்பட <u>இன்று</u> எனக்கும் உம்முடைய தெய்வீகக் கிருபையை தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

உங்கள் வீட்டில் ஆசீர்வாதம் தங்கும்!

"...உங்கள் வீட்டில் ஆசீர்வாதம் தங்கும்படிக்கு நீங்கள் பிசைந்தமாவில் முதற்பாகத்தையும் ஆசாரியனுக்குக் கொடுக்கக்கடவீர்கள்" (எசேக்கியேல் 44:30).

இந்த வசனத்தின்படி, ஆண்டவருக்கு அதாவது ஊழியத்திற்கு கொடுப்பதில், விசேஷமாக "முதல் கனிகளில்" தசம பாகம் செலுத்தும்பொழுது, இந்த ஆசீர்வாதத்தை நாம் நிச்சயம் பெற்றுக்கொள்ளலாம். "கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும்" (லூக்கா 6:38), "உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்" (2 கொரி. 9:7) என்று வேதமே கூறுகிறது. இன்றைக்கு அநேகர், விசேஷமாக வாலிப பிள்ளைகள்கூட, தங்களுடைய முதல் மாத சம்பளத்தை கர்த்தருக்கென்று கொடுக்கும்பொழுது அது எத்தனை ஆச்சரியமாய் இருக்கிறது! அப்படி கொடுக்கிற பிள்ளைகள் வாழ்க்கையிலே கர்த்தர் அதிசயமான விதத்தில் அவர்கள் எதிர்பார்த்திராத உயர்வையும் கட்டளையிடுகிறார் என்பதையும் கண்கூடாகப் பார்க்கிறோம். அவ்வாறு கர்த்தருக்கென்று முழுமனதோடு கொடுக்கிறவர்களுக்கு, கர்த்தரும் எதிர்பாராத ஆசீர்வாதங்களை பரலோகத்திலிருந்து, இடங்கொள்ளாமற் போகுமட்டும் பொழிந்தருளுவார்.

என்னுடைய தாயார், என் தகப்பனார் தனது சம்பளத்தை கொண்டு வந்து கொடுத்தவுடன் அதில் முதல் பாகத்தை கர்த்தருக்கென்று தனியே பிரித்து வைத்து விடுவார்கள். ஒரு பெரிய நோட்டு புத்தகம் வைத்திருப்பார்கள். அதினுள் முதலாவது கர்த்தருக்குரிய தசமபாகத்தை வைத்துவிடுவார்கள். அதன் பிறகு பாலுக்கு இவ்வளவு, அரிசிக்கு இவ்வளவு என்று பிரித்து பிரித்து வைப்பார்கள். இதை நான் சிறுவயதிலே பார்த்திருக்கிறேன். மாதக்கடைசியிலே கர்த்தர் அவர்களை நிறைவாய் ஆசீர்வதிப்பதையும் நான் கண்டிருக்கிறேன். பலரும் வியக்கும் வண்ணமாக, ஏன் பொறாமைப்படும் அளவுக்கும் கூட ஆண்டவர், என் தாயாரை ஆசீர்வதிப்பதை நான் கண்டிருக்கிறேன். மட்டுமல்லாமல், எங்களுக்கு எந்த புதிய பொருள் வாங்கி கொடுத்தாலும், ஒரு பேனா வாங்கி கொடுத்தாலும்கூட அதை ஆலயத்திற்கு எடுத்துக் கொண்டு, அல்லது அணிந்துகொண்டு, ஆண்டவருடைய ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள் என்று கற்றுக்கொடுத்தார்கள். இந்த தெய்வீகத்தாயினிமித்தம் தான் இன்றைக்கு ஆண்டவர் என்னையும், என் உடன்பிறந்தவர்களையும் அளவில்லாமல் ஆசீர்வதித்திருக்கிறார்.

ஆம்! என் அன்புக்குரியவர்களே, கர்த்தருக்கு கொடுப்பதில், விசேஷமாக கர்த்தர் உங்களுக்கு கொடுக்கும் ஒவ்வொன்றிலும் தசமபாகம் கொடுப்பதில் கவனமாய் இருந்து, நீங்களும் உங்கள் வீட்டில் நிறைவான ஆசீர்வாதத்தை பெற்று மகிழுங்கள். அதோடுகூட தேவனுடைய ஊழியர்களையும் தாங்குவதை கர்த்தர் விரும்புகிறார் (கலா. 6:10). மத்தேயு 25:40–ன்படி அவர்களுக்கு செய்வதை தனக்கே செய்வதாக கர்த்தர் எண்ணுகிறார் (சங். 16:2,3). ஏழை எளியோருக்கு, திக்கற்றவர்களுக்கு தயவு காண்பிப்பதிலும் கவனமாயிருங்கள். கர்த்தர் உங்கள் வீட்டில் நிறைவான ஆசீர்வாதம் தருவார்.

<u>ஜெபம்:</u> "அன்பு தெய்வமே, நானும் <u>இன்றுமுதல்</u> எனக்கு நீர் கொடுக்கிற ஒவ்வொரு ஆசீர்வாதத்திலும் தசமபாகம் கொடுப்பதில் ஜாக்கிரதையாக இருக்க என்னை வழிநடத்தும். என் வாழ்விலும் இதினிமித்தமாக நீரே உம்முடைய தெய்வீக ஆசீர்வாதங்களை நிறைவாய் அருளிச்செய்வீர் என்று உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தர் சதாகாலங்களுக்கும் ராஜாவாயிருக்கிறார்!

(சங்கீதம் 10:16).

இது எவ்வளவு அருமையான ஒரு காரியம். நம்முடைய குடும்ப வாழ்க்கையிலும், நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும்கூட அவரையே ராஜாதி ராஜாவாக நாம் ஏற்றுக்கொள்ளும்போது, அவர் நடிக்கும் பெரிய காரியங்களை செய்வார். பொதுவாக நான் கூட்டங்களுக்கு போகும் முன்னதாக இவ்வண்ணமாக ஜெபித்திருக்கிறேன். "ஆண்டவரே, நான் அல்ல; நீரே என்னோடு வந்து ராஜாதி ராஜாவாய் இந்த கூட்டங்களை பொறுப்பெடுத்து வழிநடத்தும். ஒன்றிலும் குறைவில்லாதபடி உம்முடைய ஆசீர்வாதம் விளங்கட்டும்" என்று கருத்துள்ள ஒரு பிரார்த்தனையை ஏறெடுப்பேன். கர்த்தர் அந்த ஜெபத்தைக்கேட்டு அப்படியே ராஜாதி ராஜாவாக ஆளுகை செய்து, அருமையாய் நடத்துவதை நான் கண்டு கர்த்தரை ஸ்தோத்திரித்திருக்கிறேன் (சங். 18:6). இப்படித்தான் குடும்ப வாழ்க்கையிலும் கூட, நமக்கு பல பிரச்சினைகள் வரும்போது, நாம் ஜெபிக்க வேண்டும். "ஆண்டவரே, என்னால் என் பிள்ளைகளின் காரியங்களை பொறுப்பெடுக்க முடியாது. என் கணவரைப்பற்றிய, மனைவியைப்பற்றிய காரியங்களை பொறுப்பெடுக்க முடியாது. நீரே ராஜாதி ராஜாவாக பொறுப்பெடுத்து வழிநடத்தும்" என்று ஜெபித்துப் பாருங்கள். அவர் உங்களையும் அவ்வாறே அழகாய் கரம் பிடித்து நடத்துவார். தடைகளையெல்லாம் நீக்கிப்போடுகிற பராக்கிரமசாலியாக உங்களுக்கு முன்னே நடந்து போவார் (மீகா 2:13). கோணலான சகல காரியங்களையும் நேராக்கி செவ்வைப்படுத்துவார் (ஏசாயா 45:2). ஏனெனில், அவர் சதாகாலங்களுக்கும் ராஜாவாயிருக்கிறார்.

ஒரு குடும்பத்திலே நன்றாயிருந்த கணவர் மிகவும் சிறிய வயதில் மரித்துவிட்டார். மனைவியோ என்ன செய்வதென்று தெரியாமல் ஒரு கணம் திகைத்துப்போனாள். யாவரும் "ஐயோ, இந்த பெண் இளம் வயதுள்ளவளாய் இருக்கிறாளே, எப்படி குடும்பத்தை நடத்தப் போகிறாள்?" என்று பரிதாபப்பட்டார்கள். ஆனால் அவளோ, எல்லோரும் தன்னை விட்டு போனவுடனே முழங்காற்படியிட்டு கீழ்க்கண்ட ஜெபத்தையே ஏறெடுத்தாள். "ஆண்டவரே, இன்று முதல் என் குடும்பத்தை உம்முடைய பொறுப்பில் நான் கொடுக்கிறேன்" என்று முற்றிலுமாய் அர்ப்பணித்தாள். என்ன ஆச்சரியம்! பிள்ளைகளின் படிப்பு, அவர்களுடைய வேலை, திருமண காரியம் எல்லாவற்றையும் கர்த்தர் பொறுப்பெடுத்து அற்புதம் செய்தார். அதைக்கண்ட மக்கள் உண்மையாகவே கர்த்தர் ராஜாதி ராஜாவாக அவளோடு இருக்கிறார், அவரே அவளை வழிநடத்துகிறார் என்று கூறி மகிழ்ச்சியடைந்தார்கள்.

ஆம், உங்களுக்கும் இன்று முதல் அதே காரியத்தை கர்த்தர் செய்ய காத்திருக்கிறார். நீங்களும் விசுவாசத்துடன், இராஜாதி இராஜாவாகிய அவரையே நோக்கி, அவருடைய கரத்தில் உங்கள் காரியங்களையெல்லாம் வைத்து விடுங்கள் (சங். 25:15).

<u>ஜெபம்:</u> "அன்பு தெய்வமே, வீணான கவலைகளையும், பாரங்களையும், பயங்களையும் என்னைவிட்டு எடுத்துப்போடும். <u>இன்றுமுதல்</u> நீரே என் வாழ்வில் ராஜாதி ராஜாவாக சகலத்தையும் பொறுப்பெடுத்துக்கொள்ளும். உம்முடைய வழிநடத்துதல் என்னோடு இருக்கப்போகிறது என்று நம்பி, நான் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்!

"நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப் படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது" (மத்தேயு 5:13).

"உப்பில்லாப் பண்டம் குப்பையிலே" என்பது பழமொழி! எனவே, நாம் உண்ணும் ஆகாரத்தில் எல்லாம் உப்பை கவனமாக சேர்த்துக்கொள்கிறோம். அதேபோல தான் நம்முடைய வாழ்க்கையிலும் உப்பைப்போல பிரயோஜனமுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்பது இந்த வசனத்தின் மூலம் அறிந்துகொள்ளுகிற சத்தியம் (மாற்கு 9:50). நம்முடைய அனுதின வாழ்வும், விசேஷமாக நம்முடைய வாயிலிருந்து புறப்படுகிற வார்த்தைகளும்கூட உப்பால் சாரம் ஏறினதாய் இருக்க வேண்டுமென்று வேதம் சொல்லுகிறது (கொலோ. 4:6). அப்படிப்பட்ட பயனுள்ள வார்த்தைகள், செயல்கள், ஜீவியம் நம்மில் காணப்படும்போது, ஆண்டவர் தம் வார்த்தையின்படியே நாம் பூமிக்கு உப்பாயிருக்கும்படி அருள்புரிவார். எனவே, நம்முடைய வாழ்க்கையை சற்று ஆராய்ந்து பார்த்து, என் பேச்சு, என் செயல், என் வாழ்க்கை ஆண்டவருக்கு முன்பாக, மனுஷருக்கு முன்பாக பிரயோஜனமானதாக இருக்கிறதா? என்பதை சோதித்துப் பார்த்து, குறைகளை கர்த்தருடைய சந்நிதியில் அறிக்கை செய்து, நலமானதைப் பிடித்துக்கொண்டு, ஆசீர்வாதமாக வாழ்வோம் (1 தெச. 5:21).

ஒரு வாலிபப் பெண் தன்னுடைய சிநேகிதிகளோடு தன் மனவிருப்பம்போல் பேசுவாள். அநேகருடைய மனம் அவள் வார்த்தைகள் மூலமாய் வேதனைப்படும். ஆனால், அவளோ அதை கொஞ்சமும் பொருட்படுத்தமாட்டாள். என்ன! விளையாட்டிற்காகத்தானே சொன்னேன், இதை ஏன் பெரிதுபடுத்துகிறீர்கள் என்று அவர்களை மென்மேலும் வேதனைப்படுத்துவாள். வீட்டிலும் தன்னுடன் பிறந்த யாவரிடமும் அப்படியே வேண்டாத வார்த்தைகளைப் பேசி வேதனைப் படுத்துவாள். அவளைக் கண்டாலே ஒருவருக்கும் பிடிக்காது. ஆனால், அவளைப் பெற்ற தாயோ, ஆண்டவருடைய சமுகத்தில் அவளுடைய இருதயம் மாறவேண்டும் என்று கண்ணீரோடு, உபவாசத்தோடு பிரார்த்தனை செய்தார்கள். கர்த்தர் அந்த ஜெபத்தைக் கேட்டு, அவளுடைய இருதயத்தை மாற்றினார். தன்னுடைய செயல்களினால், பேச்சினால் எத்தனையோ பேரை துன்பப்படுத்தி இருப்பதை உணரும்படி ஆண்டவர் கிருபை செய்தார். தன்னை அப்படியே ஆண்டவருடைய சமுகத்தில் அறிக்கையிட்டு அர்ப்பணித்தாள். அவளுடைய வாழ்வு தலைகீழாய் மாறியது. மிகவும் அமைதலுள்ள பெண்ணாக, பேசுவதையெல்லாம் யோசித்து, மற்றவர்களுக்கும், ஆண்டவருக்கும் பிரயோஜனமாக இருக்கும்படி, தேவ கிருபையோடு அவள் நடந்ததைப் பார்த்து யாவரும் ஆச்சரியமடைந்தனர்.

ஆம், பிரியமானவர்களே, இந்த தெய்வீக அனுபவத்தை நீங்களும் விரும்பி கேட்பீர்களானால், ஆண்டவர் உங்களுக்கும் கொடுப்பார். உங்களுடைய வார்த்தைகள் மூலமாய் யாரையும் துக்கப்படுத்தியிருந்தால், அந்த நிலையைமாற்றி, ஆறுதல் தரும் வார்த்தைகளையே பேசுபவர்களாக ஆண்டவர் தமது ஆசீர்வாதங்களை அதன்மூலம் உங்களுக்கு அருளிச்செய்வார் (ஏசாயா 40:1).

ஜெபம்: "அன்பு தெய்வமே! பூமிக்கு உப்பாயிருக்கும்படியான தெய்வீக அனுபவத்தை எனக்கும் தாரும். இந்த பெண்ணுக்கு அருளிச்செய்த அதே கிருபையை எனக்கும் இன்று தாரும். நீர் அப்படி செய்கிறபடியால் உமக்கு கோடான கோடி ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

சோதனை, தீமையினின்று உங்களை இரட்சிக்கிறார்!

"எங்களை சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்..."
(மத்தேயு 6:13).

ஆண்டவர் இயேசு இவ்வுலகில் வாழ்ந்தபொழுது, தன் சீஷர்களுக்கு கற்றுக்கொடுத்த ஜெபத்தின் ஒரு பகுதி இது. ஆம், இந்த உலக வாழ்வில் எத்தனையோ சோதனைகளையும், தீமைகளையும் நாம் அனுபவிக்கிறோம். ஆனால், அவைகளெல்லாவற்றிலிருந்தும் நம்மைக் காக்க வல்லவர் ஆண்டவர். அவரும் சோதனைகள், வேதனைகள் வழியாக கடந்து சென்றிருக்கிறார். இதைத்தான் "... அவர்தாமே சோதிக்கப்பட்டு பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்" (எபி. 2:18) என்று வாசிக்கிறோம். ஆகவே, சோதனைகள் வரும்போது, குடும்பமாகவோ, தனியாகவோ கர்த்தருடைய சமுகத்தில் மண்டியிட்டு, நம் கவலைகளை, பாரங்களை கர்த்தரிடம் சமர்ப்பித்து விடுவோமானால், கர்த்தர் அதைக் கேட்டு நிச்சயமாகவே அவைகளினின்று நம்மை விடுவித்துக் காப்பார். "உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு கர்த்தர் இடங்கொடாமல்... அதற்கு தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்" (1 கொரி. 10:13).

ஒரு மனிதனுக்கு விரோதமாக அநேகர் எழும்பி, எப்படியாவது அவனைக் கொலை செய்துவிட்டு, அவனுடைய பணத்தை சூறையாடிவிட வேண்டுமென்று சமயம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒருநாள் அவன் அலுவலகத்தில் இருந்து திரும்பி வருகிற வேளையில் அதை நிறைவேற்றிவிட தீர்மானம் செய்தனர். அந்த நாளின் காலையில் அந்த மனிதன் அலுவலகத்திற்கு புறப்படும் முன்னதாக கர்த்தருடைய சமுகத்தில், "ஆண்டவரே! எனக்கு வருகிற சோதனைகள், தீமைகள், பொல்லாங்குகள் யாவற்றிலிருந்தும் நீரே என்னை பாதுகாத்து காப்பாற்றும்" என்று கருத்தாய் பிரார்த்தனை செய்தான். அன்று மாலை அவன் வழக்கமாய் வருகிற வழியாய் வராமல் கர்த்தருடைய செயலால் வேறு மார்க்கமாய் வீடு போய் சேர்ந்தான். அவனை தீர்த்துக்கட்ட காத்திருந்த எதிரிகள் ஏமாற்றம் அடைந்தனர். அதன் பிறகு அவர்களால் அவனை ஒன்றும் செய்ய முடியாதபடி கர்த்தருடைய கரம் அந்த மனிதன்மேல் தொடர்ந்து இருந்து, அவனை எல்லாத் தீங்குக்கும் விலக்கி பாதுகாத்தது.

ஆம் பிரியமானவர்களே, இன்று உங்களுக்கும் இப்படி சோதனைகள், தீய காரியங்கள் பொல்லாத மனிதர்களால் திட்டமிடப்படலாம். ஆனால், கருத்தாய் ஜெபிப்பதின் மூலமாய் ஆண்டவரை உறுதியாய் பற்றிக்கொள்வீர்களானால், எல்லா சோதனைகளிலிருந்தும் அவர் நிச்சயம் விலக்கிக் காப்பார். ஏனெனில், "அவர்தாமே சோதிக்கப்பட்டு பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்" (எபி. 2:18).

ஜெபம்: "அன்பு இரட்சகரே, எத்தனையோ தீயவர்கள் எனக்கு எதிராக யாதொரு காரணமுமின்றி எழும்புகிறார்கள். ஆனால், எனக்கு நீரே அரணும் கேடகமுமாக இருக்கிறீர். இந்த மனிதனை நீர் பாதுகாத்து காப்பாற்றினதுபோல இன்றுமுதல் என்னையும், என்னை சார்ந்தவர்களையும் காப்பாற்ற நீர் போதுமானவராக இருக்கிறபடியால் உமக்கு ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"

தேவ சித்தம் செய்து தேவ ராஜ்யம் செல்வோம்!

"பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" (மத்தேயு 7:21).

அநேகர் தேவனுடைய சித்தத்தை எப்படி அறிந்துகொள்வது? என்று நினைக்கிறார்கள். பல்வேறு கேள்விகளையும் கேட்கிறார்கள். ஆண்டவராகிய இயேசு தேவாதி தேவனுடைய திருக்குமாரனாக இருந்தபொழுதிலும் சிலுவையில் தன்னை பலியாக அர்ப்பணிக்க வேண்டிய சந்தர்ப்பம் வந்தபோது, "பிதாவே, என் சித்தமல்ல, உம் சித்தமாகக்கடவது" என்று தன்னை அர்ப்பணித்தார் (லூக்கா 22:42). இப்படித்தான் தேவ சித்தத்தை அறிய வேண்டிய சந்தர்ப்பங்களில், ஆண்டவரிடம் நாமும் நம்மை சமர்ப்பிப்போம். ஆண்டவர் தம்முடைய சித்தப்படி அருமையாக நம்முடைய கரங்களை பற்றிக் கொண்டு வழி நடத்துவார். அதற்கு மாறாக, ஆண்டவர் "என் விருப்பப்படி யாவற்றையும் செய்யட்டும்" என்று உங்கள் சொந்த வழிகளுக்கு ஒருநாளும் முக்கியத்துவம் கொடாதிருங்கள். அதன்மூலமாய் விளைவது பல்வேறு பிரச்சினைகளும், போராட்டங்களும் தான்! தேவகுமாரனாகிய இயேசுவும் நமக்கு முன்மாதிரியாக வாழ்வின் முடிவுபரியந்தம் பிதாவின் சித்தத்தையே செய்து, இன்று அவர் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் (1 யோவான் 2:17).

ஒரு வாலிபன் கர்த்தருக்கென்று தன் வாழ்வை அர்ப்பணித்து வாழ்ந்தான். இந்த நிலைமையில் திருமணம் செய்துகொள்ள வேண்டிய கட்டம் வந்தபொழுது, தான் நேசிக்கும் பெண்ணை திருமணம் செய்யலாமா என்று ஒரு ஊழியருக்கு கடிதம் மூலம் தெரிவித்திருந்தான். அந்த ஊழியரோ நன்றாக ஜெபித்துவிட்டு, "இந்தப் பெண் உனக்கு உகந்தவளாக இருக்கமாட்டாள், இது கர்த்தருடைய சித்தம் அல்ல" என்று பதில் எழுதியிருந்தார். ஆனால், அவனோ தன் விருப்பம்போல், தான் தெரிந்தெடுத்த பெண்ணையே, அது தான் கர்த்தருடைய சித்தம் என்றும், தனக்கு அவளைத்தான் கர்த்தர் வெளிப்படுத்தினதாகவும் பதில் கடிதம் எழுதிவிட்டு, அந்த பெண்ணையே திருமணமும் செய்து கொண்டான். திருமணம் முடிந்ததும் அந்த பெண் முதல் வேலையாக செய்தது, இந்த வாலிபனை கர்த்தருடைய வழியிலிருந்து உலகப்பிரகாரமாக மாற்றியதுதான்! அவன் உலக மனிதனாக மாறினான். கர்த்தரை விட்டு தூரமாய் போனான். எத்தனை பரிதாபம்!

அன்பானவர்களே, தேவ சித்தத்தை அலட்சியம் செய்து கர்த்தரைவிட்டு தூரமாய் சென்றுவிடாதபடிக்கு, அப்போஸ்தலனாகிய பவுலைப்போல "ஆண்டவரே, நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்?" (அப். 9:6) என்று கவனமாய் ஜெபத்துடன் அவர் சித்தத்தை தெரிந்துகொள்வோம். அப்பொழுது அவர் தமது வழியின்படியே அழகாய் நடத்தி, ஆசீர்வாதமான வாழ்வைத் தருவார்.

ஜெபம்: "அன்பு இரட்சகரே, இன்று எனக்கு நீர் உம் சித்தத்தையே செயல்படுத்த கிருபை செய்கிறபடியால் உமக்கு ஸ்தோத்திரம். உம் சித்தத்தையே வாழ்நாள் முழுவதும் செயல்படுத்தி, உம் வழிகளில் நடக்க எனக்கு அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

விசுவாசத்தையும் பொறுமையையும் தருகிற தேவன்!

"...விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்"

(எபிரெயர் 12:1).

இந்த வேத வசனம் மிக அழகானது! ஏனென்றால் நம்முடைய வாழ்க்கையில் பல்வேறு பாரங்கள் நம்மை சூழ்ந்துகொள்ளும்பொழுது, அதை ஜீரணிக்க முடியாமல் தவிக்கிறோம். அதேபோன்று பாவத்தின் மிகுதியால் படுகுழியில் விழுந்த நிலையிலும், அதினிமித்தமாக சஞ்சலமடைகிறோம். ஆனால், இந்த வசனத்தின்படி அவைகளை யெல்லாம் தள்ளிவைத்துவிட்டு, நம்முடைய ஆண்டவரையே நோக்கிப் பார்க்கும்பொழுது, நமக்கு அவர் ஏற்ற விசுவாசத்தையும், பொறுமையையும் கொடுத்து, அவைகளினின்று விடுதலை தந்து வழிநடத்துகிறார் (ரோமர் 5:2). ஆண்டவரைப் பற்றும் விசுவாசத்தால், அவருக்குள் நமக்கு தைரியமும், ஒரு புது நம்பிக்கையும் பெறுகிறோம். ஒரு திடமனமும் உண்டாகிறது. அதைத்தான் இந்த வசனம் நமக்கு வெளிப்படுத்துகிறது (2 பேதுரு 1:5).

கல்லூரிக்கு சென்ற வாலிபன் ஒருவன் விடுதி வாழ்வை முதன்முதலாக அனுபவிக்கப் போகிறபடியால் தாய் சற்று கவலையோடு அவனை அனுப்பி வைத்தாள். "மகனே! நீ தினமும் ஜெபம் பண்ணி, கர்த்தரோடு பேசு, அவர் உனக்கு உதவி செய்வார்" என்று கூறி அனுப்பினாள். முதலில் அதை கடைபிடித்த அந்த மகன், நாளடைவில், சில கேவலமான காரியங்களில் ஈடுபட்ட ஒருசில மாணவர்களைக் கண்டபோது, நாமும் இப்படி சுதந்திரமாக இருக்கலாமே! ஏன் இந்த கட்டுபாடு என்று தன் பக்தியையும், ஆண்டவரைத் தேடுகிறதையும் சற்று குறைத்துவிட்டு, அவர்கள் காண்பித்த வழிகளிலே ஆவலோடு திரும்பினான். முதலில் அது அவனுக்கு மிகுந்த சந்தோஷத்தை கொடுத்தது. ஆனால், நாட்கள் செல்ல செல்ல, அவன் மனதில் சமாதானம் குறைய ஆரம்பித்தது. படிப்பில் குறைவுபட்டான், சரீரத்தில் வியாதிகள் வர ஆரம்பித்தன. அப்பொழுதுதான் அவன் தாயின் முகம் அவன் கண்களுக்கு முன்பாக பளிச்சிட்டது. "மகனே! அனுதினமும் ஆண்டவரை நோக்கிப் பார்க்க மறவாதே!" என்றார்களே, என்ற பயத்துடன் இனி என் வாழ்வு மாறுமா? என்று கவலையோடு ஆண்டவரிடம் தன்னை அர்ப்பணித்தான். "ஆண்டவரே, என் பாவ வாழ்க்கையை மன்னியும், புது வாழ்வைத் தாரும்" என்று ஜெபித்தான். கர்த்தர் மனமிரங்கினார். அவரிடத்தில் இரக்கங்களும், மன்னிப்புகளும் உண்டு அல்லவா? அதன்படி அவனை புது மனிதனாக மாற்றினார். எல்லாப் பக்கங்களிலும் ஆசீர்வாதங்கள் திரும்பி வந்தன. தாயும் மிகுந்த மனமகிழ்ச்சியடைந்தாள்.

அன்பானவர்களே, நாமும் நம்முடைய கண்களை நமக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக தெய்வ பயத்தோடு ஏறெடுப்பதில் ஜாக்கிரதையாயிருந்தால் ஏற்ற விசுவாசம், பொறுமையைத் தந்து, நம்மையும் ஆண்டவர் ஆசீர்வதித்து, வழி நடத்துவது நிச்சயமான காரியம் (சங். 121:1,2).

<u>ஜெபம்:</u> "என் அன்பு தெய்வமே! உம்மையே நானும் <u>இன்றுமுதல்</u> எல்லாக் காரியங்களுக்கும் நோக்கிப் பார்க்க, அதன் மூலமாய் என் ஜீவிய ஓட்டத்திலே விசுவாசத்தையும் பொறுமையையும் கற்றுக்கொள்ள எனக்கும் அருள் தந்து, என்னை ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்!

"எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்; அப்படி செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது"
(1 தெசலோனிக்கேயர் 5:18).

கர்த்தர் நம்மிடத்திலிருந்து எழும்பும் ஸ்தோத்திரபலிகளை விரும்புகிறார். பத்து குஷ்டரோகிகள் ஆண்டவரால் சுகம் பெற்றபொழுது, ஒருவன் மாத்திரமே அவருக்கு நன்றி செலுத்த வந்தான். அப்பொழுது மற்ற ஒன்பதுபேர் எங்கே? என்றார். அதைப்போலதான் "ஸ்தோத்திரபலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான்" (சங். 50:23) என்றும் வேதம் கூறுகிறதாக வாசிக்கிறோம். ஆகவே, எல்லாக் காரியங்களுக்கும், நன்மையோ, தீமையோ ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செலுத்த கற்றுக்கொள்வோம். உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்கு செலுத்தவும் (எபி. 13:15) மட்டுமல்லாமல், எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செலுத்தவும் கற்றுக்கொள்வோம். இதுதான் தேவனுக்கு பிரியமானதும், அவருக்கு சித்தமானதுமாய் இருக்கிறது என்பதையே மேற்கண்ட வசனம் விளக்குகிறது.

ஒரு அனாதை விடுதியில் காலை உணவு அருந்த வேண்டிய வேளை வந்தது. அனாதைக் குழந்தைகள் யாவரும் பந்தியில் அமர்ந்திருந்தனர். ஆனால், அந்த விடுதியை நடத்துகிறவரோ அவர்களுக்கு காலை ஆகாரம் கொடுக்க கையில் ஒன்றும் இல்லாதிருந்தபோதும், "என்ன செய்வது? என் பிள்ளைகளை எப்படி போஷிப்பது?" என்று கவலைப்படாமல், அவர்களைப் பார்த்து, "பிள்ளைகளே, கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள், நன்றாய் பாடல்களை உற்சாகமாய் பாடுங்கள்" என்று விசுவாசத்தோடு அந்த பிள்ளைகளை ஸ்தோத்திரிக்க செய்தார். ஆகாரமோ ஒன்றுமில்லை. அந்த வேளையில் ஒரு மனிதன் வந்து, "ஐயா, லாரி நிறைய பால் இருக்கிறது. லாரி ஓடமுடியாமல் எஞ்சின் பழுதடைந்து போயிருக்கிறபடியால், இந்த பாலையெல்லாம் காலிபண்ணினால்தான் அதை சரி செய்ய முடியும். ஆகவே, உங்கள் பிள்ளைகளுக்கு இதை எடுத்துக்கொள்ளுங்கள்" என்று அத்தனை பால் புட்டிகளையும் இறக்கி வைத்துவிட்டான். அதேசமயம், ஒரு பெரிய ரொட்டிக்கடை சொந்தக்காரருக்கு சொப்பனத்தில், இந்த அனாதை விடுதி பிள்ளைகளுக்கு காலை உணவுக்கு வேண்டிய ரொட்டியைக் கொடுக்கும்படி, ஆண்டவர் மூலம் கட்டளை விடுத்தபடியே, லாரி நிறைய ரொட்டி வகைகளை கொண்டு வந்ததாகக்கூறி, அவைகளையெல்லாம் கொடுத்துப் போனான் மற்றொருவன். என்ன ஆச்சரியம்! கர்த்தரை ஸ்தோத்திரித்தபொழுது, சங்கீதம் 22:3—ன்படி, தேவ பிரசன்னம் அந்த இடத்தில் இறங்கியது. பிள்ளைகள் அனைவரும் உண்பதற்கு ஆண்டவர் போதுமான அளவில் ஆகாரம் அருளிச் செய்தார்.

ஆம்! கர்த்தரையே முழுவதுமாக நம்பி, நீங்களும் அவரையே ஸ்தோத்திரத்தோடே சார்ந்திருப்பீர்களானால், நீங்கள் விரும்பி கேட்கும் சகல நன்மைகளையும் ஏற்ற சமயம் தந்து நிச்சயம் அற்புதமாக ஆசீர்வதிப்பார் (எரே. 20:13).



ஜெபம்: "அருமையான தகப்பனே! உம்மையே நம்பி, முழுமனதுடன் எல்லாக் காரியங்களுக்கும் ஸ்தோத்திர ஜெபத்தோடே உம்மை சார்ந்து ஜீவிக்க, எனக்கும் இன்றுமுதல் உம் தெய்வீகக் கிருபையை நிறைவாய் தந்தருளும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்!

"எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்"
(1 தெசலோனிக்கேயர் 5:21).

நம்முடைய அனுதின வாழ்வில் பொல்லாங்கான காரியங்களையும், நலமான காரியங்களையும் நாம் சந்திக்கிறோம். இந்த வேத வசனத்தின்படி பொல்லாங்கான காரியங்களை தெய்வ பயத்தோடுகூட நம்மைவிட்டு தைரியமாய் தள்ளிவிட்டு, ஜாக்கிரதையாய் நாம் நடந்துகொள்ளும்போது, ஆண்டவர் நம் வாழ்வில் பிரியமாய் இருப்பார் (2 கொரி. 13:7ன் முதல் பாகம்). விளையாட்டுக்குக் கூட தீமையான காரியங்களை அது தீமையென்று அறிந்தபொழுதிலும் செயல்படுத்தாதபடி, நலமானது என்று தெரிந்தவைகளை மாத்திரம் பின்பற்றி ஆசீர்வாதம் பெறுவோம் (ரோமர் 16:19ன் பின் பகுதி).

ஒரு குடும்பத்திலே ஒரு பெண் உயர்நிலை படிப்பை முடித்தாள். அடுத்து கல்லூரிக்கு போவதா? வேறு எந்த படிப்பை மேற்கொள்வது? என்ற பிரச்சினை வீட்டில் எழும்பியது! அவள் தாயும், உடன்பிறந்தவர்களும் ஒரு நல்ல கல்லூரிக்கு அனுப்பி படிக்க வைக்க எண்ணினார்கள். ஆனால் தகப்பனோ, ஏதோ ஒரு பயிற்சி பெற்று சான்றிதழ் வாங்கினால் போதும். என்னால் அதிகம் செலவளிக்க முடியாது என்று சொல்லிவிட்டு, எனினும் தீர்மானம் எடுக்க வேண்டியது உன்னுடைய கையில்தான் இருக்கிறது என்றும் சொல்லிவிட்டார். இந்த பெண் சாதாரணமாக, ஆடம்பரமான காரியங்களை விரும்புபவள். ஆனால், அன்று ஆண்டவருடைய கரத்தில் இதை ஒப்படைத்தாள். "ஆண்டவரே! எனக்கு ஆழமான ஆவிக்குரிய அனுபவம் கிடையாது. ஆனால், இந்த சூழ்நிலையில் எனக்கு தீர்மானம் எடுக்க தெரியவில்லை. நீரே என்னோடு பேசும்" என்று வாழ்வில் முதல் முறையாக ஆண்டவரைத் தேடி பிரார்த்தனை செய்தாள். அவளுடைய உள்ளத்தில் "உன் தகப்பனார் தான் ஒவ்வொரு முறையும் உனக்கு பணம் அனுப்ப வேண்டும். கல்லூரிக்கு போனால் செலவு அதிகமாகும். ஆனால், உன் தகப்பன் விரும்பியதுபோல் ஆசிரியை பயிற்சிக்கு போவாயானால் எந்த பிரச்சினையும் கிடையாது" என்று யாரோ சொல்லுவதுபோல உணர்ந்தாள். அதை செயல்படுத்தவும் தீர்மானித்து அப்படியே நடந்துகொண்டாள். நாட்கள் கடந்தன. ஆசிரியை பயிற்சியை முடித்து திரும்பிய வேளையில் ஒரு நாள் ஆண்டவர் தம் பிரசன்னத்தினால் அவளை நிறைத்தார். அவருடைய அன்பு அவளை ஆட்கொண்டது. அவள் வாழ்வு இயேசுவுக்கு பிரியமானதாய் மாறியது. ஒருவேளை கல்லூரிக்கு போயிருந்தால் இந்த இன்பமான அனுபவத்தை தான் பெற்றிருக்க வாய்ப்பு இருந்திருக்காது என்று கர்த்தரை மனதார ஸ்தோத்திரித்தாள்.

ஆம்! நம் விருப்பம்போல் அல்ல, கர்த்தருடைய சமுகத்திலே காத்திருந்து, சோதித்துப் பார்த்து, நலமானதையே தெரிந்துகொள்ள ஆண்டவர் நமக்கும் உதவி செய்ய, அவரையே சார்ந்து ஆசீர்வாதம் பெறுவோம் (நீதி. 14:22ன் பின் பகுதி).

ஜெபம்: "அன்பு தெய்வமே! இந்த உலக வாழ்வில் பொல்லாங்குக்கு என் மனம் இடங்கொடாமல், தீமையான காரியங்களை செய்யாமல் உம்மையே பின்பற்றி, நலமானதையே பற்றிப் பிடித்துக்கொள்ள இன்றுமுதல் எனக்கு உம் அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தர் உன் கைக் கிரியைகளிலெல்லாம் ஆசீர்வதிப்பார்!

“உன் தேவனாகிய கர்த்தர் உன் கைக் கிரியைகளிலெல்லாம் உன்னை ஆசீர்வதித்து வருகிறார்” (உபாகமம் 2:7).

நம்முடைய ஆண்டவர் ஐசுவரிய சம்பன்னர்! (ரோமர் 10:12). “கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்” (நீதி. 10:22.) இஸ்ரவேல் ஜனங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், அவருக்கு பிரியமானவர்கள். அவர்களை வழி நடத்தி வந்த ஆச்சரியமான தேவனைக் குறித்து வேதத்தில் வாசிக்கிறோம். அதே வண்ணமாக இன்று உங்களையும் உங்கள் கைக் கிரியைகளிலெல்லாம் நிறைவாய் ஆசீர்வதிப்பது ஆண்டவர் விரும்புகிற ஒரு காரியம். இந்த ஆசீர்வாதம் எனக்கும் கிடைக்குமா என்ற வீணான சந்தேகத்திற்கு உங்கள் மனதில் இடங்கொடாமல், ஆண்டவரை நம்புங்கள், விசுவாசியுங்கள். “என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாங் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்” (பிலி. 4:19) என்ற இந்த வாக்குத்தத்த வசனத்தின்படி கர்த்தர் உங்கள் குறைவையெல்லாம்கூட நிச்சயம் நிறைவாக்குவார்.

ஒரு குடும்பத் தலைவர் ஆண்டவர் மேல் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார். என்ன காரியம் செய்தாலும் “கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்” என்ற ஒரு விசுவாசத்தோடு மகிழ்ச்சியாய் நடந்து வந்தார். ஒரு வாலிப மகன் அவருக்கு இருந்தான். அந்த மகனுக்கு வேலையே கிடைக்கவில்லை. எல்லோரும் அவரை கேலி செய்தார்கள். “உன் நம்பிக்கை என்னவாயிற்று? ஏன் உன் கர்த்தர் உனக்கு உதவி செய்யவில்லை? எங்கள் பிள்ளைகளெல்லாம் அவனோடு படித்து, நல்ல வேலையில் இருக்கிறார்களே” என்று குதர்க்கமாக பேசினார்கள். ஆனால் அவரோ, “என் மகனுக்கு எந்த நேரம், எந்த வேலை கொடுக்க வேண்டுமென்று ஆண்டவர் பரலோகத்தில் தீர்மானம் செய்து வைத்திருக்கிறார். அந்த வேளை வரும் வரை நானும் சரி, என் மகனும் சரி பொறுமையோடு காத்திருப்போம்” என்று கூறினார். யாவரும் அவரைப் பார்த்து எள்ளி நகையாடினார்கள். ஆனால், அவர் விசுவாசித்தபடியே, ஏற்ற சமயத்தில் மற்ற வாலிபப் பையன்கள் பெற்ற வேலையைக்காட்டிலும் மிகவும் அருமையான ஒரு வேலையை கர்த்தர் அந்த மகனுக்குக் கொடுத்து ஆசீர்வதித்தார். அதை கேள்விப்பட்ட மற்ற மக்கள் வெட்கமடைந்தனர். “நீ நம்பின, விசுவாசித்த, உன் ஆண்டவர் உண்மையாகவே உயிரோடிருக்கிறார், அவர் ஜெபத்தைக் கேட்கிறவர், தம்மை நம்பின மக்களை கைவிடாதவர்” என்று சாட்சி கூறினார்கள்.

ஆம்! பிரியமானவர்களே! கர்த்தர் மேல் நீங்களும் உங்கள் முழு நம்பிக்கையையும் வைப்பீர்களானால், இந்த தகப்பனுக்கும் மகனுக்கும் செய்ததுபோல, கர்த்தர் உங்கள் கைகளின் கிரியைகளிலெல்லாம் ஏற்ற நேரம் ஆசீர்வதித்து, உங்களை உயர்த்தி கனப்படுத்துவார் (ஏசாயா 3:10).



ஜெபம்: “அன்பு இரட்சகரே, இன்று என்னுடைய கையின் கிரியைகளை நீர் பொறுப்பெடுத்து, எந்த வழியில் நடக்க வேண்டும் என்று வழிநடத்தும். என் அறிவையோ, ஞானத்தையோ அல்லது மற்ற எந்த காரியங்களையோ முக்கியப் படுத்தாமல் உம்மையே நம்பியிருக்க, என் கண்களை உம் பக்கம் இழுத்துக் கொள்ளும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!”

நிந்தனையை மாற்றி நன்மை செய்கிற தேவன்!

"ஒருவேளை கர்த்தர் என் சிறுமையைப் பார்த்து, இந்த நாளில் அவன் நிந்தித்த நிந்தனைக்குப் பதிலாக எனக்கு நன்மையை சரிக்கட்டுவார்" (2 சாமுவேல் 16:12).

தாவீது கர்த்தர்மேல் தன் முழு அன்பையும், நம்பிக்கையையும் வைத்திருந்த ஒரு மனிதன். அவனுக்கு வாழ்க்கையிலே சிறுமைப்பட்ட நேரத்திலே சீமேயி என்ற மனிதன் சவுலின் குடும்பத்தை சார்ந்தவனாயிருந்தபடியினால், தாவீதின் வாழ்வில் தள்ளப்பட்ட நிலை வந்த வேளையிலே அவனை மென்மேலும் துக்கப்படுத்தினான். வார்த்தைகளால் வேதனைப்படுத்தினான். ஆனால், தாவீதோ "கர்த்தர் என் சிறுமையை பார்க்கட்டும். இந்த மனிதன் என்னை நிந்தித்த நிந்தனைக்கு பதிலாக எனக்கு நன்மையை சரிக்கட்டட்டும்" என்று பொறுமையாக இருந்தான். கர்த்தர் அதை கவனித்துப்பார்த்தார். அவனுடைய சிறுமை நிலைமை மாறி, ஜனங்களால் அவன் உயர்த்தப்பட்ட வேளையிலே, அதே சீமேயி என்ற மனிதன் அவனைத் தேடி வரும்படியும், தான் செய்த குற்றத்திற்காக, பேசிய வீண் வார்த்தைகளுக்காக மன்னிப்பு கேட்கும்படியும் கர்த்தர் மாற்றி, அதன்மூலம் தாவீதை கனப்படுத்தினார் (2 சாமு. 19:18,20). ஆம், இன்று நீங்களும்கூட கீழ்த்தரமான சில மனிதர்களால் துன்பப்படுத்தப்படலாம், தாழ்த்தப்படலாம். ஆனால், தாவீதைப்போல், யோபுவைப்போல் பொறுமையாக இருங்கள். கர்த்தர் உங்களை ஏற்ற சமயம் அவர்களுக்கு முன்பாக உயர்த்துவார் (யாக். 5:11).

வாலிபன் ஒருவன் ஒருநாள் வேதத்தை கவனமாய் வாசித்துக் கொண்டிருந்தான். மேற்கண்ட வாக்குத்தத்த வசனத்தை வாசித்தபொழுது, "என் வாழ்வில்கூட அலுவலகத்தில் சிறுமை, குடும்பத்தில் சிறுமை, எல்லோரும் எவ்வளவு என்னை குறைத்துப் பேசி நிந்திக்கிறார்கள்" என்று அவன் மனதில் நினைத்துக்கொண்டான். கர்த்தர் எனக்கும் தாவீதை உயர்த்தினதுபோல அருள்புரிவாரா? என்ற எண்ணத்துடன் கர்த்தரை நோக்கி "ஆண்டவரே, தாவீதுக்கு உதவி செய்ததுபோல, எனக்கும் உம்முடைய தெய்வீகக் கிருபையைத் தாரும். எனக்கு விரோதமாக எழும்பி நிற்கிற நிந்தனைகளையெல்லாம் மாற்றி, சம்பூரண நன்மையால் நீர் நிரப்பும்" என்று கருத்தாய் பிரார்த்தனை செய்து வந்தான். ஆண்டவர் அவனுடைய ஜெபத்தைக் கேட்டு, அவன் வாழ்க்கையிலே எதிர்பாராத பல வழிகளின் மூலமாய் அவன் நினைத்துக்கூட பார்க்காத அளவுக்கு அவனை உயர்த்தி கனப்படுத்தினார். அவனுடைய வாழ்வைக் கண்ட மக்கள் இது எங்கிருந்து இவனுக்கு வந்தது? இவன் ஞானமற்றவன், அறிவற்றவன், அந்தஸ்து ஏதும் அற்றவனாயிற்றே என்று ஆச்சரியமடைந்தார்கள்.

ஆம்! பிரியமானவர்களே, இந்த உலகம் உங்களை நிந்தித்து பல்வேறு குறைகளை உங்களைக் குறித்துப் பேசி ஏளனப்படுத்தலாம். அவைகளையெல்லாம் கேட்டு சோர்ந்து போகாதிருங்கள். அதே இடத்திலே கர்த்தர் உங்களை நிச்சயம் உயர்த்துவார். நீங்கள் அவரையே நம்பி, அவருக்கு முன்பாக உங்களைத் தாழ்த்தும்போது, அவர் உங்கள் நிந்தனைகள் யாவையும் மாற்றி, உங்களைக் கனப்படுத்துவார் (யாக். 4:10).

<u>ஜெபம்</u>: "அன்பின் இரட்சகரே, எனக்கு விரோதமாக எழும்புகிற வீணான பாடுகள், சிறுமைப்படுத்தப்படுகிற நிலைமை, நிந்தனை எல்லாவற்றையும் நீர் அறிந்திருக்கிறீர். தாவீதுக்கு உதவி செய்ததுபோல, இந்த வாலிபனை உயர்த்தியதுபோல, இன்று என்னையும் உம்முடைய ஞானத்தினால், அறிவினால், பொறுமையினால் நிரப்பி ஏற்ற சமயம் நானும் உயர்த்தப்படவும் அருள்தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

உன் துக்கநாட்கள் முடிந்துபோகும்!

"உன் சூரியன் இனி அஸ்தமிப்பதுமில்லை; உன் சந்திரன் மறைவதுமில்லை; கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமாயிருப்பார்; உன் துக்கநாட்கள் முடிந்துபோம்"

(ஏசாயா 60:20).

துக்க நாட்கள் என்பது இருளைக் குறிக்கிறது. எப்படி ஒளியில்லாமல் இருளிலே இருந்தால் ஒருவிதமான கலக்கம், பயம் யாவும் ஏற்படுமோ, அப்படியே துக்கம் நிறைந்த வாழ்விலே இருள் நம்மை சூழ்ந்துகொள்வதினால் துன்பப்படுகிறோம், தடுமாறுகிறோம். அந்த நிலைமையிலே கர்த்தர் தம்மைத் தேடுகிறவர்களுக்கு வெளிச்சமாயிருப்பார். ஏனென்றால் உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளியாகிய இயேசு கிறிஸ்து (யோவான் 1:9). இந்தவிதமான இருளின் அதிகாரத்தினின்று அதாவது துக்கத்தின் காரியங்களினின்று நம்மை விடுதலையாக்கி, நம்மை மகிழ்ச்சிக்குள்ளாக்குகிற வல்லமை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு மட்டுமே உரியதாகும் (கொலோ. 1:13). ஏனெனில் அவரே அவைகளையெல்லாம் தமது சரீரத்தில், சிலுவையிலே தம்மீது ஏற்றுக்கொண்டு நமக்கு ஜெயத்தைக் கொடுத்திருக்கிறார் (யோவான் 16:33; ரோமர் 8:36,37).

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை என் இரட்சகராக, அன்பின் நேசராக நான் பெற்றபொழுது, என் வாழ்விலே ஒரு பெரிய மகிழ்ச்சி, சமாதானம் பிறந்தது! இந்த ஆண்டவருக்காக வாழ்நாள் முழுவதும் சேவை செய்வதே என் பாக்கியம் என்று கருதினேன். ஆனால், அதைத் தொடர்ந்து வந்தது இருள் நிறைந்த வாழ்வு, துக்கத்தின்மேல் துக்கம். பல்வேறு வகையான காரியங்கள் என் மனதை இருளில் இருப்பது போன்ற ஒரு நிலைமைக்குள்ளாக்கியது. முதலில் சற்று சோர்வடைந்தேன். ஆனால், அந்தந்த நேரத்திற்கேற்ற தேவ பெலன், தேவ ஞானம், தேவ கிருபையை என் வாழ்வில் பரிசுத்த ஆவியானவர் தந்து, அந்த இருளின் மத்தியிலும் எனக்கு வெளிச்சமாக இருந்து என் துக்கத்தையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக மாற்றியமைத்தார். துக்கத்தினால் எவ்வளவாக வேதனைப்பட்டேனோ, அத்தனையாய் அவைகளினின்று வெளியே கொண்டு வந்து எல்லையில்லாத பேரின்பத்தை அவரே எனக்கு அருளிச்செய்தார். கடந்த பல வருடங்களாக இந்த இன்பத்தை தொடர்ச்சியாக துன்பத்தின் மத்தியிலும் நான் அனுபவித்து வருகிறேன்.

எனக்கு அன்பானவர்களே, என் வாழ்வில் துக்கத்தையெல்லாம் மாற்றி ஒளி வீசச்செய்த எம்பெருமான் இயேசு, "ஐயோ! இந்த துக்கம் எத்தனை நாள் என்னை சூழ்ந்துகொள்ளுமோ" என்று கலங்குகிற உங்கள் வாழ்விலுமிருந்து அதேபோன்று ஒன்றுமில்லாமல் மாற்றிப் போடுவார். கவலைப்படாதிருங்கள். கர்த்தரை மட்டும் இடைவிடாமல் தேடி, அவருக்கு பிரியமாய் வாழ்வதில் ஜாக்கிரதையாயிருங்கள் (சங். 90:15).

ஜெபம்: "அன்பு தெய்வமே! உம்முடைய வல்லமை தான் எத்தனை பெரியது! என் துக்கம் சொல்லி முடியாத கொடிய துக்கம். எனினும் நான் என் நம்பிக்கையையும், என் எதிர்காலத்தையும் இன்று உம் கரத்தில் கொடுக்கிறேன். இந்த துக்கத்தின் மத்தியில் என்னை ஒளி வீச செய்கிறவர் நீர் ஒருவரே என்று விசுவாசித்து உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தர் நம்மை ஒருபோதும் தாழ்ச்சியடைய விடமாட்டார்!

"கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்" (சங்கீதம் 23:1).

தாவீதுடைய விசுவாசம், நம்பிக்கை எவ்வளவு பெரியதாயிருந்தது பாருங்கள்! ஆண்டவரைப் பார்த்து, "அவர் என் மேய்ப்பர்; அவரே என்னை தினமும் கரம்பிடித்து நடத்தி நான் தாழ்ச்சியடையாதபடி காப்பார்" என்று இந்த சங்கீதத்தை ஆரம்பித்திருக்கிறார். இன்று நாமும் கூட இதே விசுவாசத்தோடு என் ஆண்டவர் என் மேய்ப்பராய் இருக்க, நான் என் சிறிய காரியங்களுக்கும், பெரிய காரியங்களுக்கும் கலங்கிடவேண்டுமோ? (1 பேதுரு 5:7). கர்த்தருக்குள் தைரியமாயிருந்து, "ஆண்டவரே ஒவ்வொரு நிமிடமும் நீர் என்னை தாழ்ச்சி அடையாமல் காத்து நடத்தும்" என்று அவருக்குள் நம்மை ஒப்புக்கொடுத்து ஆசீர்வாதமான வாழ்வை பெற்றுக்கொள்வோம். ஏனெனில், நம்மை நம்பின அனைவருக்கும் தன் கேடகமும், உயர்ந்த அடைக்கலமுமாயிருப்பார் (சங். 18:2; 2 சாமு. 22:3).

ஒரு தம்பதியருக்கு பல வருடங்களாக குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்தது. அந்த வேளையிலோ கர்த்தரை அந்த நிலைமையிலும் இந்த வசனத்தை பிடித்துக்கொண்டு "கர்த்தர் என்னை தாழ்ச்சியடைய விடமாட்டார்" என்ற நம்பிக்கையில் விசுவாசத்தோடு பொறுமையாய் காத்திருந்தார்கள். எத்தனையோ ஏளனமான, நிந்தனையான வார்த்தைகளை அவர்கள் கேட்க வேண்டியிருந்தபோதிலும் கொஞ்சமும் விசுவாசத்தில் குறைந்துவிடாதபடி கர்த்தருக்குள் உறுதியாயிருந்தார்கள். மற்றவரோடு சேர்ந்து அடிக்கடி "இயேசு அழைக்கிறார்" ஜெப கோபுரத்திற்கு சென்று ஜெபம் செய்து வருவார்கள். கர்த்தர் அவர்களுடைய விசுவாசத்தின் உறுதியைப் பார்த்தார். அவர்களுக்கு அற்புதமான விதத்தில் குழந்தை பாக்கியத்தை அருளிச்செய்து ஆசீர்வதித்தார். பலவிதமான வேண்டாத வார்த்தைகளை மனம்போல் பேசி அவளை வேதனைப்படுத்தின மக்கள் வெட்கப்படும்படி ஆண்டவர் செய்து, அவர்களெல்லாருக்கும் முன்பாக இவர்களை கனப்படுத்தினார். "உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக இரண்டத்தனையாய்ப் பலன் வரும்... நித்திய மகிழ்ச்சி அவர்களுக்கு உண்டாகும்" (ஏசாயா 61:7) என்பது அப்படியே நிறைவேறியது.

அன்பு பிரியமானவர்களே, கர்த்தரால் ஆகாதது என்ன இருக்கிறது? "என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?" (எரே. 32:27) என்று அவரே நம்மை பார்த்து கேட்கும்பொழுது, நமக்கு குறைவுள்ள வாழ்க்கை, தாழ்ச்சி இவைகள் வர இடம் கொடுப்பாரா? கொடுக்கவேமாட்டார். உங்கள் தேவைகளையெல்லாம் நிச்சயம் அருளிச்செய்வார். ஆகவே, இந்த சகோதரியைப்போல நீங்களும் சோர்வுக்கு இடங்கொடாமல், கர்த்தருடைய ஒத்தாசையையே நாடித் தேடுங்கள்.

ஜெபம்: "அன்பு தெய்வமே! இன்று எனக்கு நீர் போதுமானவர் என்று அறிந்து கொண்டேன். என் வாழ்வின் நிறைவேறாத தேவைகள் ஒவ்வொன்றையும் நிறைவேற்ற நீர் வல்லமையுள்ளவர் என்று தாவீதைப்போல, இந்த தம்பதியரைப் போல நானும் உம்மையே இறுகப் பற்றி பிடித்துக்கொள்கிறேன். நீர் என் ஜெபத்தைக் கேட்கிறபடியினால், உத்தரவு தரப்போகிறபடியினால் உமக்கு கோடான கோடி ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார்!

"அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார்; கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைப்பார்..." (ஏசாயா 25:8).

உலக வாழ்வில் நமக்கு எதிரிடையாகவும் விரோதமாகவும் எழும்புகிற காரியங்களையெல்லாம் கர்த்தர் சிலுவைமேல் ஆணியடித்து அவைகளின்மேல் வெற்றி சிறந்தார் (கொலோ. 2:14,15) என்று வேதம் சொல்லுகிறது. மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? என்ற வேதவசனத்தின்படி கர்த்தர் மரணத்தை ஜெயமாக விழுங்கினார். ஆகவே, நமக்கு எதிரிடையாக வருகிற சகல காரியங்களையும் அவர் ஜெயமாக விழுங்கப் பண்ணுவார். இவ்விதமாக நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனை நாம் ஸ்தோத்திரிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் (1 கொரி. 15:54–57). சிலுவை மரணத்தின் மூலம் ஆண்டவர் இயேசு நம்முடைய பாவங்களை, அக்கிரமங்களை, சாபத்தையெல்லாம் சுமந்து வெற்றி சிறந்தபடியினால் இன்று பாவத்தின்மேல் நமக்கு வெற்றியைத் தருகிறார். எனவே, "நான் பாவி, பாவி" என்று எப்பொழுதுமே சொல்லிக் கொண்டிராமல் என் பாவத்தை, எனக்கு வர வேண்டிய சாபத்தையெல்லாம் ஆண்டவர் சிலுவையிலே சுமந்து ஜெயித்துவிட்டபடியினால் அதிலிருந்து எனக்கு பரிபூரண விடுதலையைக் கொடுத்திருக்கிறார். நான் இயேசுவுக்கு முழுவதுமாக சொந்தம்" என்று தைரியமாய் இருப்போம். "கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்" (கலா. 5:24) என்ற வசனத்தின்படி பாவம், கோபம், சாபம், இச்சை இவைகளையெல்லாம் ஆண்டவர் நம் வாழ்விலிருந்து எடுத்துப்போடுவதினால், அவைகளினின்று வெற்றியை கொடுப்பதினால், நாம் கிறிஸ்துவுக்கு சொந்தமாக, அவருடைய பிள்ளைகளாக மாறுகிறோம் (யோவான் 1:12).

என் மகள் மரணமடைந்தபின் அவளை அடக்கம் செய்ய ஆராதனை நடத்திக் கொண்டிருந்த வேளையில் போதகர் நம் மகள் இங்கேயில்லை, அவள் ஆண்டவருடைய மடியில் இருக்கிறாள். ஆகவே, நாம் கலங்காமல் கர்த்தரை நோக்கி, கரங்களை உயர்த்தி "அல்லேலூயா" என்று சொல்வோம் என்று விசுவாச வார்த்தைகளைப் பேசியவுடன், என் உள்ளத்தில் விசுவாசம் கொழுந்துவிட்டு எரிய, என்னையும் அறியாமல் அந்த துயரத்தின் மத்தியிலும் கைகளை உயர்த்தி "அல்லேலூயா!" என்று கூறினேன். ஆம்! அது தான் மரணத்தை சிலுவையில் ஜெயித்த இயேசுகிறிஸ்துவின் வல்லமை. இதே வல்லமையினால் தான் நம் பழைய பாவ வாழ்வையெல்லாம் மாற்றி, புதிய பரிசுத்த, நீதி நிறைந்த வாழ்வை அவரே நமக்கு கொடுக்கிறார் (எபே. 4:22–24).

எனக்கு அன்பானவர்களே, நீங்களும் கூட எதைக் கண்டும் பயப்பட வேண்டாம். இன்று பாவம், சாபம், பெலவீனம், வியாதி போன்ற எல்லா இருளின் காரியங்களிலிருந்தும் கர்த்தர் உங்களுக்கு ஜெயம் கொடுக்கிறவராக இருக்கிறபடியால் கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாக இருங்கள் (ரோமர் 8:36,37).

ஜெபம்: "அன்பு தெய்வமே! எவ்வளவு பெரிய காரியத்தை நீர் சிலுவையிலே எனக்காக செய்திருக்கிறீர். இனி பாவம், சாபம், கோபம் எதுவும் என்னை தொடமுடியாதபடி வெற்றி சிறந்தபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். முடிவுபரியந்தம் உம்மை மகிமைப்படுத்தி, வெற்றியுள்ள வாழ்க்கை வாழ எனக்கு அருள்தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது!

(ஆதியாகமம் 24:50).

அநேக திருமண அழைப்புகளிலே இந்த வசனத்தை பார்க்கிறோம். ஆம்! கர்த்தர் காரியத்தை நிறைவேற்றிக் கொடுக்கும்பொழுது அது எத்தனை இன்பமும் ஏற்றதுமாய் இருக்கிறது. முதலாவது விசுவாசத்தோடு அவர்மேல் நம்பிக்கை வைக்கும்பொழுது, அவர் அப்படி செய்வார் (மத். 21:22). அடுத்து அதை பெற்றுக்கொண்டோம் என்று விசுவாசத்தோடு நன்றி செலுத்தும்பொழுது, அவர் அதில் பிரியமாயிருந்து அதை வாய்க்கச்செய்வார் (மாற்கு 11:24). ஆகவே, கர்த்தரால் காரியம் ஆக வேண்டுமென்று விரும்புகிற நீங்கள் அதைப் பெறுவதற்கு முன்பாக இவைகளை செய்து பாருங்கள். கர்த்தர் இந்த வசனத்தின்படி உங்களையும் தமது சந்தோஷத்தால் ஆசீர்வாதத்தால் நிரப்புவார்.

ஒரு குடும்பத்தில் பெற்றோர் இறந்துபோனபடியினால் மூத்த சகோதரி தனக்குக்கீழ் இருந்த தம்பி, தங்கைகளையெல்லாம் படிக்க வைத்து, அவர்களுடைய வாழ்க்கைக்கான சகல காரியங்களையும் செய்து கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அத்தனையையும் பொறுமையாய் மிகுந்த அன்போடு செய்து முடித்தார். யாவருக்கும் திருமணம் வரைக்கும் எல்லாக் காரியங்களும் முடிந்தன. ஆனால், ஒருவராவது இந்த சகோதரியின் காரியத்தை யோசித்துப் பார்க்கவில்லை. அதே சமயத்தில் அவர்கள் அதுவரை செய்து வந்த நல்ல வேலையும் காரணமில்லாமல் போய்விட்டது. பணத்திற்கும் கஷ்டம். யாரிடம் போய் தன் வேதனையை சொல்லுவது என்று வேதனையோடு தேவனுடைய ஊழியர் ஒருவரிடம் ஆலோசனைக்காக, ஜெபத்திற்காக நாடி சென்றார் அந்த சகோதரி! கர்த்தர் தனக்கு நிச்சயம் உதவி செய்வார் என்ற விசுவாசத்தோடு வீடு திரும்பினார். வீட்டிலே அந்த சகோதரியைத் தேடி அவர்களது சபை போதகர் காத்திருந்தார். அவரோடு வந்த மற்றொரு சகோதரரை அறிமுகம் செய்து, இவர் வெளியூரிலே வேலை பார்க்கிறார். உங்களைப் போன்ற பக்தியுள்ள, பொறுப்புள்ள ஒரு பெண் தனக்கு மனைவியாக வர வேண்டுமென்று என்னைக் கேட்டார். நான் உங்களைப் பற்றி கூறியிருக்கிறேன். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் என்று கேட்டபொழுது இவர்களுக்கு அதை நம்பவே முடியவில்லை. என் கர்த்தர் காரியங்களை வாய்க்கப்பண்ணுகிறவர் என்பது எத்தனை உண்மையாயிருக்கிறது என்று மனதிற்குள் எண்ணியவர்களாக, அதற்கு 'சரி' என்று போதகரிடம் சொன்னார்கள். கர்த்தர் அந்த சகோதரியுடைய வாழ்க்கையை நிறைவாய் ஆசீர்வதித்தார். ஆம்! இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது என்பது எத்தனை உண்மையானது பார்த்தீர்களா?

எனக்கு அன்பானவர்களே, இன்று நீங்களும் கர்த்தர் மேல் உங்கள் முழு விசுவாசத்தையும் வைத்து, அது நிறைவேறுவதற்கு முன்பே கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள். நீங்களும் அற்புதங்களையும், ஆசீர்வாதங்களையும் கர்த்தரின் கரத்திலிருந்து பெற்றுக் கொள்வீர்கள். கஷ்டமான சூழ்நிலையில், யாரும் உதவுவாரற்ற வேளையில், ஆண்டவரே தமது தெய்வீக வல்லமையை அனுப்பி, காரியங்களை வாய்க்க செய்வார் (பிலி. 4:6,7).

ஜெபம்: ''அன்பு தெய்வமே! உம்மாலேயன்றி என்னால் எதையும் செய்ய முடியாது. உம்மிடத்திலே என் வேண்டுதல்களையெல்லாம் சாட்டிவிடுகிறேன். நீர் எனக்கு போதுமானவர். இன்றுமுதல் என் வாழ்வில் நீரே என் காரியங்களை வாய்க்கப் பண்ணும். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!''

நான் கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருவேன்!

"நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்" (ஆபகூக் 3:18).

நம்முடைய வாழ்வில் எல்லாம் நலமாக இருக்கும்போது சந்தோஷமடைகிறோம். மகிழ்ந்து களிகூருகிறோம். ஆனால், காரியங்கள் யாவும் தலைகீழாய் மாறும்பொழுது, கசப்பை மனதில் கொண்டவர்களாக வெறுப்படைகிறோம், வேதனையடைகிறோம். பலவித வேண்டாத வார்த்தைகளைக்கூட அப்படிப்பட்ட சமயங்களில் நம்மையும் அறியாமல் பேசிவிடுகிறோம். ஆனால், உண்மையான ஆவிக்குரிய அல்லது விசுவாசம் நிறைந்த கிறிஸ்தவ வாழ்க்கை என்பது எல்லா நிலைமைகளிலும் இயேசுவின்மேல் நம்பிக்கை வைத்து மகிழ்ச்சியாய் இருப்பதுதான். இதைத்தான் ஆபகூக் 3:17,18 வசனங்கள் விளக்குகின்றன. ஆனால், அவ்வாறு விசுவாசம், தைரியம், சாந்தம், திடமனம், நம்பிக்கை போன்ற தெய்வீகத் தன்மைகளால் நிறைந்திருந்தால் மட்டுமே, எந்த கடினமான வேளையிலும் மகிழ்ச்சி கொண்டு வாழ முடியும். ஆகவே, ஆண்டவரை நோக்கி நம் குறைவுகளையெல்லாம் அறிக்கையிட்டு, "உம்மால் என்னை நிரப்பி, உம்முடைய திவ்விய சுபாவங்களை எனக்கும் அருளிச்செய்யும்" (2 பேதுரு 1:4) என்று மன்றாடுவோம்.

பல வருடங்களுக்கு முன்பு முதல் முறையாக என் வாழ்க்கையிலே ஒரு பேரிடி விழுந்தது. மருத்துவர்கள், உங்கள் கணவர் வெகு சீக்கிரம் மரித்துப்போவார் என்று சொன்னபோது, என் மனம் சுக்குநூறாக உடைந்து போனது. ஆனால், உடனடியாக என்ன செய்தேன் தெரியுமா? என் அறைக்கு சென்று முழங்காற்படியிட்டேன். கர்த்தரை நோக்கி கதறினேன். பரிசுத்த ஆவியானவர் என்னை பலப்படுத்தினார். நான் பயப்படுகிறதுபோல அல்லாமல் என்னென்ன நல்ல காரியங்கள் நடக்கப் போகிறது என்பதையெல்லாம் ஆவியானவர் எனக்கு விளக்கிக் கூறினார். அவைகளைக் கேட்டபொழுது நான் மிகுந்த தைரியமடைந்தேன். ஆனால் உடனடியாக அந்த காரியங்கள் நிறைவேறவில்லை. பல மாதங்கள் அதற்காக நான் காத்திருக்க வேண்டியதாயிற்று. எனினும் முடிவிலே பரிசுத்த ஆவியானவர் கூறிய ஒவ்வொன்றும் அப்படியே நடந்தது. பரிசுத்த ஆவியானவர் என்னை பலப்படுத்தினபோதே நான் அந்த ஆசீர்வாதங்களையெல்லாம் பெற்றுக்கொண்டதுபோல, மகிழ்ச்சியாயிருந்தேன். களிகூருதல் பெற்றேன். இந்த களிகூருதலையும், மனமகிழ்ச்சியையும் கொடுத்தது யார் தெரியுமா? தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவர் தான்! (யோவான் 14:16).

எனவே, நீங்களும் துக்கத்தின் மத்தியில், இழப்பின் மத்தியில், என்ன நடக்குமோ என்ற கவலையின் மத்தியில் இருக்கும்போது, பரிசுத்த ஆவியில் நிறைந்து, விசுவாசத்தோடு ஜெபம்பண்ணுங்கள். அப்பொழுது அற்புதங்களைக் காண்பீர்கள்! மகிழ்ந்து களிகூருவீர்கள் (கலா. 3:5).

<u>ஜெபம்:</u> "அன்பு இரட்சகரே, உம்மை நினைக்கும்போது, என் உள்ளமெல்லாம் எத்தனையாய் மகிழ்கிறது! பரிசுத்த ஆவியானவர் மூலமாய் உலகத்தின் பாரங்கள் மத்தியிலே, எல்லையில்லாத துன்பங்கள் நடுவிலே என்னை மகிழ்ச்சியாக்கி களிகூரச்செய்கிற உம்முடைய அன்புக்காக கோடான கோடி ஸ்தோத்திரம். <u>இன்றுமுதல்</u> என் வாழ்வையும் அப்படியே நீர் வழிநடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

உங்களை பேர்சொல்லி அழைத்து அறிந்திருக்கிற தேவன்!

''அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ சொன்ன இந்த வார்த்தையின்படியே செய்வேன்; என் கண்களில் உனக்கு கிருபை கிடைத்தது; உன்னை பேர்சொல்லி அழைத்து அறிந்திருக்கிறேன் என்றார்!'' (யாத்திராகமம் 33:17).

மோசே கர்த்தரை அறியாமல் இருந்தான். ஆனால், ஆண்டவரோ அவனைப் பற்றி அறிந்து, அவனுடைய வாழ்வை குழந்தைப் பருவத்திலிருந்தே காப்பாற்றி, அவனுடைய எதிர்காலத்தை குறித்து பல காரியங்களை திட்டமிட்டு வைத்திருந்தார். அவனோ அவைகளையெல்லாம் அறியாமல் இருந்தான். ஏற்ற சமயத்தில் அற்புதமான விதத்தில் கர்த்தர் அவனை அழைத்தார் (யாத். 3:4). அவன் கர்த்தருடைய சிநேகிதனாக, முகமுகமாய் பேசுகிற அளவுக்கு நெருக்கமான ஒரு ஐக்கியத்தை அவனுக்கு தேவன் கொடுத்தார் (யாத். 33:11). ஆம்! கர்த்தர் நம்மையும்கூட இன்று பெயர் சொல்லி அழைத்து, நெருங்கிய வாழ்வை பெற்றுக்கொள்ளும்படி எத்தனை அழகாய் நடத்துகிறார். பதினாறு வயது வரை பெயரளவில் கிறிஸ்தவப் பெண்ணாக இருந்த என்னையும் ஆண்டவர் ஒருநாள் தேடி வந்து, பெயர் சொல்லி அழைத்து, தம்முடைய மகளாக்கினார். இன்று வரை தமது தெய்வீக திருவுளச்சித்தத்தின்படி என்னை நடத்தி வந்திருக்கிறார். இன்று நீங்களும் ஆண்டவருடைய இந்த அழைப்பின் அரவணைப்பிற்குள்ளே உங்களை ஒப்புக்கொடுத்திருக்கிறீர்களா?

ஒரு பெண் கடன் பாரத்தினால் வாழ்க்கையில் துன்பத்தின் எல்லைக்கே வந்துவிட்டது போன்று மனமுடைந்த நிலைமையில் ஒரு கூட்டத்திற்கு வந்திருந்தாள். ஜெப வேளையிலே தேவனுடைய ஊழியர் மூலம் பரிசுத்த ஆவியானவர் அந்த அம்மையாரின் பெயரைக் குறிப்பிட்டு ஆண்டவர் உங்களை அறிந்திருக்கிறார். நீங்கள் பாரத்தோடு வந்திருக்கிறீர்கள், கடன் பிரச்சினை மற்றும் உங்கள் எல்லாப் பிரச்சினைகளையும் ஆண்டவர் ஒன்றுமில்லாமல் மாற்றிப்போடுவார். தைரியமாய் அவரை சேவிப்பதில் மட்டும் கவனமாய் இருங்கள் என்று பேசினார். தன் பெயரையும் தன்னுடைய நிலைமையையும் குறித்து ஆவியானவர் கூறியபொழுது, இந்த அம்மையார் உள்ளத்தை ஒரு சொல்லி முடியாத சந்தோஷம் நிரப்பியது. ஓடோடி மேடைக்கு வந்து தான் பெற்ற சந்தோஷத்தின் காரணத்தை சாட்சியாக பகிர்ந்துகொண்டார்கள். இரண்டு வருடங்கள் கழிந்தன. அவர்களைப் பற்றிய காரியத்தை திட்டமாக அறிந்துகொள்வதற்காக தொலைபேசியின் மூலமாக அவர்களோடு தொடர்பு கொண்டபொழுது, ஆண்டவர், தம்முடைய வார்த்தையின்படியே தன் கடன்பாரங்கள் மற்றும் தன்னை வாட்டி வதைத்த சகல பிரச்சினைகளையும் முற்றிலும் மாற்றினார் என்றும், தன்னை இப்பொழுது மகிழ்ச்சியுடன் வைத்திருக்கிறார் என்றும் அவர்கள் சாட்சி பகர்ந்தபொழுது, எத்தனை சந்தோஷம்!

ஆம்! நம்முடைய ஆண்டவர் உயிரோடிருக்கிறார். அவர் உண்மையுள்ளவர். நம் ஒவ்வொருவர் பெயரையும் அறிந்திருக்கிறார். அப்படியானால் நம்முடைய கஷ்டங்களை மாற்றியமைக்க அவரால் முடியாதா? நிச்சயம் முடியும் (1 தெச. 5:24)!

<u>ஜெபம்:</u> ''என் அன்பு தகப்பனே! <u>இன்றுமுதல்</u> உம்மை உறுதியாய் பற்றிக் கொள்கிறேன். என் கவலைகள், பாரங்கள் யாவற்றையும் நிச்சயமாக மாற்றிப் போடுவீர் என்று விசுவாசிக்கிறேன். உமக்கு நன்றி செலுத்துகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!''

கறையற்றவர்களும் பிழையற்றவர்களுமாய் காணப்படுவதில் கவனமாயிருங்கள்!

"ஆகையால், பிரியமானவர்களே, இவைகள் வரக் காத்திருக்கிற நீங்களும் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள்" (2 பேதுரு 3:14).

கர்த்தர் பரிசுத்தமே உருவானவர். நான் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் பரிசுத்தராயிருங்கள் (1 பேதுரு 1:15,16) என்றே அவர் கூறுகிறார். இந்த பொல்லாங்கு நிறைந்த உலகில் கறையற்ற பரிசுத்தமான வாழ்க்கை வாழ்வது கடினமான காரியம். ஆனால், வேதம் சொல்லுகிறபடி நம்முடைய மாம்சத்தையும், அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்துவிடும்பொழுது, நாம் இயேசுவுக்கு சொந்தமாகிறோம். இது தேவனுடைய ஈவு. இதுதான் இரட்சிப்பு (எபே. 2:7) என்று கூறப்பட்டிருக்கிறது. இவ்விதமாய் இயேசுவோடு ஒன்றாய் இணையும்பொழுது, பரிசுத்தமாய் வாழ அவரே பெலன் கொடுக்கிறார். பழைய கேடான இச்சைகளுக்கு உங்களை தூரமாக்கி விலக்கி விடுகிறார். இதைத்தான் யோபு "என் கண்களோடு உடன்படிக்கைபண்ணின நான் ஒரு கன்னிகையின்மேல் நினைப்பாயிருப்பதெப்படி?" (யோபு 31:1) என்று கூறுகிறார். "இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி" (ஆதி. 39:9) என்று யோசேப்பு வாலிபனாக இருந்தும் சவால் விடுகிறான். இவர்களால் முடியுமானால், ஏன் நம்மால் கறையற்றவர்களாய், பிழையில்லாதவர்களாய் வாழ முடியாது?

வாலிபன் ஒருவன் தன் வாழ்வில் அநேக பிரச்சினைகள் ஒன்று மாற்றி ஒன்று வந்தபடியினால் சோர்வடைந்து நன்றாகக் குடித்து தனது சோகத்தை, துக்கத்தை மறக்கலாம் என்று வெளியில் கிளம்பினான். போகிற வழியில் அவனுடைய பழைய பாலிய நண்பன் ஒருவனை சந்திக்க நேரிட்டபொழுது மிகுந்த மகிழ்ச்சியடைந்தான். அந்த நண்பன் பிரகாஷுக்கும் அவனைப் பார்த்தது ஒரே சந்தோஷம். தான் போய் கொண்டிருந்த ஒரு வாலிபர் கூட்டத்திற்கு எப்படியோ அன்பாகப் பேசி, தன் நண்பனாகிய அந்த வாலிபனையும் அழைத்து சென்றான் பிரகாஷ். அந்த கூட்டத்தில் வாலிபர்கள் கூடி பக்தியோடு பாடிய பாடல்கள், அருளிய சாட்சிகள் மற்றும் செய்தி இவைகளை கேட்கக் கேட்க அந்த வாலிபனின் இருதயத்திலிருந்த சோர்வெல்லாம் ஓடி மறைந்தது. ஒரு தெய்வீக இன்பம் அவன் உள்ளத்தை நிரப்பியது. தெய்வ லோகத்தில் இருப்பதுபோல பேரானந்தமாய் இருக்கிறதே என்று அகமகிழ்ந்த அவன், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை அன்றே தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டான். இனி, கறையற்றதும், பிழையற்றதுமான வாழ்வு வாழ்வதில் கவனமாயிருக்கவும், கர்த்தரை பிரியப்படுத்தி வாழவும் ஒரு நல்ல தீர்மானம் அன்றே எடுத்தான்.

அன்பானவர்களே! இந்த தெய்வீக பரிசுத்தத்தை நீங்களும் விரும்பி ஆண்டவரிடத்திலே கேளுங்கள். அதை கொடுக்கவே அவரும் பிரியமுள்ளவராக இருக்கிறார் (ரோமர் 12:1).

ஜெபம்: "அன்பு தெய்வமே! இவ்வுலகில் எத்தனை இச்சைகள், பாவத்திற்கேதுவான காரியங்கள் என் முன் வந்தாலும் நீர் என்னைக் காப்பாற்றி உமக்கு பிரியமான பரிசுத்தமான வாழ்வை எனக்கு அருளும்படி உம்மிடத்தில் இன்று என்னை ஒப்படைக்கிறேன். இவ்வுலகின் அசுத்தங்கள் ஒன்றும் தொடாமல் நீரே என்னை காத்துக்கொள்ளும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கிறிஸ்துவின் பாடுகளுக்கு பங்காளிகளானதால் நீங்கள் சந்தோஷப்படுங்கள்!

"கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்"

(1 பேதுரு 4:13).

தேவ பக்தியாய் நடக்க நாம் மனதாயிருக்கும்பொழுது, பாடுகள் ஒன்றன்பின் ஒன்றாக நம்மைத் தேடி வந்து, துன்பப்படுத்துகிறது (2 தீமோ. 3:12). ஆனால், அந்த பாடுகளின் மத்தியிலே கர்த்தர் நம்மோடு கூட இருந்து அவைகளினின்று வெளியே கொண்டு வருவார். அதன்பிறகு மகிமையும் கனமும் நமக்கு அவரே கொடுக்கிறார். அவர் சமுகம் உங்களுக்கு முன்னதாக செல்லும். பாடுகள் அத்தனையையும் மிகவும் ஆச்சரியமான முறையிலே மாற்றி நிறைவான ஆசீர்வாதத்தை கொடுப்பார். யோசேப்பு தன் வாழ்க்கையிலே எத்தனை பாடுகளை, துன்பத்தைக் கண்டான். ஆனால், முடிவிலே எத்தனையாய் தேவ ஆசீர்வாதம் பெற்றான் (ஆதி. 41:41–43)! யோபுவும் துக்கம், போராட்டம் யாவும் மாறி, இரண்டு மடங்கு ஆசீர்வாதம் பெற்றானல்லவா? (யோபு 42:10).

இயேசுகிறிஸ்துவின்மேல் தன் முழு நம்பிக்கையையும் வைத்து, அவருக்கு பிரியமானபடி பக்தியான வாழ்வு வாழ்ந்த ஒரு ஏழை குமாஸ்தா தன்னுடைய அலுவலகத்தில், மேல் அதிகாரியினால் அதிகமாக துன்பப்படுத்தப்பட்டார். எல்லோருக்கும் சம்பளம் ஒழுங்காகக் கொடுப்பார். இவருக்கோ ஏதோ ஒரு காரியத்தை சொல்லி, அதை சரியானபடி கொடுக்காமல் குறைத்து கொடுப்பார். ஆனால், இந்த குமாஸ்தாவோ பொறுமையாய் கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்தார். அவ்வாறு இவர் ஆண்டவரைத் தேடித் தேட, அந்த பொல்லாத அதிகாரியின் ஒரே மகன் வியாதிப் படுக்கையிலானான். மருத்துவர்கள் கைவிட்ட நிலைமை வந்தது. அப்பொழுது எல்லோரும் சொன்னார்கள்: "இந்த மனிதன் பக்திமான், அவர் பிரார்த்தனை செய்தால் உங்கள் மகன் குணமாவான், அவரிடம் கேளுங்கள்" என்றார்கள். அதிகாரிக்கோ மனதிலே ஒரு கலக்கம்! அவருக்கு நான் எவ்வளவு துரோகம் செய்திருக்கிறேனே, எப்படி கேட்பது என்று! ஆனால், அந்த குமாஸ்தாவோ, அந்த அதிகாரியின் மகனை அந்த நிலைமையிலும் தானே நேரில் பார்ப்பதற்காக பழங்களையெல்லாம் வாங்கிக் கொண்டு பாசத்தோடு சென்றான். அவருடைய அன்பு அந்த அதிகாரியின் மனதை உடைத்தது. அந்த ஏழை குமாஸ்தா அந்த மகனுக்காக கண்ணீரோடு, பிரார்த்தனை செய்தார். கர்த்தர் அவர் ஜெபத்தைக் கேட்டு, அந்த மகனை குணமாக்கினார். அந்த அதிகாரி, அன்று முதல் எத்தனை தூரம் அவருக்கு உதவி செய்ய முடியுமோ அவ்வளவாய் அவரை சந்தோஷப்படுத்தினார்.

ஆம்! பிரியமானவர்களே, பாடுகள் வரும்பொழுது பின்னால் ஆண்டவர் கனத்தையும் மகிமையும் கொடுப்பார். அதுவரை பொறுமையாக இருங்கள், சோர்ந்து போகாதிருங்கள் (1 பேதுரு 2:20)!

<u>ஜெபம்</u>: "அன்பு இரட்சகரே! இந்த உலகில் பாடுகளை கண்டு நான் சோர்வுக்கு இடங்கொடாமல், உம்மையே நம்பி, உறுதியாய் பற்றிக்கொள்ள <u>இன்றுமுதல்</u> எனக்கும் அருள்தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

எல்லாவற்றையும் தேவ மகிமைக்கென்றே செய்யுங்கள்!

"...எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்துமூலமாய் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக" (1 பேதுரு 4:11).

"எதை செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய் செய்யுங்கள்" (கொலோ. 3:24) என்று வேதம் சொல்லுகிறது. மனுஷர்களை கவனித்து பார்ப்போமானால், நமக்கு முன்பாக ஒன்றும், பின்பாக வேறொன்றும் பேசுவது சாதாரணமாக இருக்கிறது. ஏமாற்று, நயவஞ்சகம், அன்பற்ற செயல்கள் இவைகள்தான் மனுஷர்களிடையே காணப்படுகின்றன. ஆனால், கர்த்தருடைய பிள்ளைகளாக தெரிந்துகொள்ளப்பட்ட நாமோ இந்த வசனத்தின்படி எல்லா நிலைமையிலும் கர்த்தருக்கு மகிமை தரும் காரியங்களையே செய்யும்போது, கர்த்தர் நம் மீது மிகவும் பிரியமுள்ளவராக இருப்பார். எனவே, புசித்தாலும் குடித்தாலும் தேவனுக்கு நன்றி செலுத்துவதில், அவரை துதித்து ஸ்தோத்திரிப்பதில் கவனமாய் இருப்போம். ஆண்டவர் "என்னைக் கனம்பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்" (1 சாமு. 2:30) என்று தான் கூறுகிறார். "என் மகிமையை வேறொருவருக்குங்கொடேன்" என்றும் திட்டவட்டமாய் கூறுகிறார் (ஏசாயா 48:11; 42:8). எனவே, கர்த்தரை ஸ்தோத்திரிப்பது எவ்வளவு முக்கியம் பாருங்கள்! நமக்கு பாடும் திறனை கொடுத்திருப்பாரானால் அதன்மூலம் கர்த்தரை மகிமைப்படுத்துவோம். இப்படி அவர் நமக்கு கொடுத்திருக்கிற தாலந்துகளை வேண்டாத வீணான பயத்துடனும், அலட்சியத்துடனும் தூர தள்ளிவைத்து விடாமல், கர்த்தருடைய மகிமைக்கென்று உபயோகித்து அவரை கனப்படுத்துவதில் ஜாக்கிரதையாயிருப்போம்.

ஒரு இளம்பெண் அவளையுமறியாமல் ஆண்டவர் மீது மிகவும் அன்பு கூர்ந்தாள். எனவே, அவள் தன் வாழ்க்கையில் பெறும் ஒவ்வொரு ஆசீர்வாதங்களுக்காகவும் ஆண்டவருக்கு வாயைத் திறந்து மனதார துதி ஸ்தோத்திரம் செலுத்துவாள். அவளோடு உடன் பிறந்த சகோதரிகளுக்கும், உடன் படித்த மற்ற மாணவிகளுக்கும், அதினிமித்தம் அவள் "பைத்தியம்" போல காணப்பட்டாள். ஆனால் அவளோ, ஒருவரைப்பற்றியும் கவலைப்படவில்லை. கர்த்தர் இதைக்கண்டு, அவளுடைய ஞானம், அறிவு இவைகளை விருத்தியடைய செய்தார். சுமாராக படித்து வந்த அவள், இப்பொழுது வகுப்பில் முதல் இடம் பெற்றாள். அப்பொழுதுதான் சக மாணவிகளும் ஆண்டவரை ஸ்தோத்திரிப்பதின், மகிமைப்படுத்துவதின் மேன்மையை அறிந்து கொண்டு, தாங்களும் அவள் வழியை பின்பற்ற ஆரம்பித்தனர்.

ஆம்! பிரியமானவர்களே, இந்த பெண்ணைப்போல, <u>இன்றுமுதல்</u> ஒரு தீர்மானம் செய்யுங்கள். கர்த்தர் கொடுக்கிற ஒவ்வொரு நன்மைக்காகவும் முழுமனதோடு அவரை ஸ்தோத்திரிக்க, நன்றியறிதல் உள்ளவர்களாக இருக்க, கர்த்தருடைய சந்நிதியில் நீங்களும் பொருத்தனை செய்யுங்கள் (எபே. 5:20).

<u>ஜெபம்:</u> "அருமை தகப்பனே! நீர் என் வாழ்வில் இதுவரை செய்த சகல நன்மைகளுக்காகவும், நீர் அருளிச்செய்த ஆசீர்வாதங்கள் அனைத்திற்காகவும் நன்றி செலுத்துகிற நல்ல இருதயத்தை எனக்குத்தந்து, நான் செலுத்துகிற ஸ்தோத்திர பலிகளையெல்லாம் ஏற்று, என்னை ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

விசுவாசத்தின் பரீட்சை பொறுமையை உண்டாக்கும்!

"உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்" (யாக்கோபு 1:3).

பலவிதமான சோதனைகளின் மூலமாக நம்முடைய விசுவாசம் சோதிக்கப்படும்பொழுது, எத்தனையாய் கலங்கிப்போகிறோம். உண்மையாகவே அவரை உறுதியாய்ப் பற்றிக்கொண்டு, அவர்மேல் விசுவாசம் வைத்து வாழ்கிற ஒவ்வொருவருக்கும் இவ்வித சோதனையின் பரீட்சையில் கர்த்தர் தாமே ஜெயம் கொடுக்க காத்துக்கொண்டிருக்கிறார் (1 யோவான் 5:4). விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாம் சோதிக்கப்பட்டபொழுது, கொஞ்சமும் கவலைப்படாமல், கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றி முடிக்க ஒரு தெய்வீக தைரியம் பெற்றான். மகனையே பலியாக செலுத்துவதற்கு, கிரியையினால் தன்னை ஒப்புக்கொடுத்தான். கர்த்தர் அவன் விசுவாசத்தை சோதிக்க நினைத்தாலும் முடிவிலே அந்த சோதனையில் வெற்றியைக் கொடுத்தார். மகனை பலியிடுவதற்கு பதிலாக ஒரு ஆட்டை அவரே அனுப்பி அதை பலியிடும்படி செய்தார் (ஆதி. 22:13) உங்களுக்கும் சோதனை வரும்பொழுது, கர்த்தர் சோதனையை ஜெயிக்க பெலன் தருவார். அந்த சோதனையின் வழியிலே கடந்து செல்வதற்கு ஏற்ற பொறுமையையும், தைரியத்தையும், திட மனதையும் கூட கொடுப்பார் (1 கொரி. 10:13).

ஒரு அலுவலகத்திலே நல்ல பதவியில் இருந்த ஒரு தேவ மனிதன், அந்த வேலையை விட்டுவிட்டு, தேவனுடைய ஊழியத்தை செய்யும்படி தேவ கட்டளை பெற்றார். ஒரு நிமிடம் அவர் கலக்கமடைந்தபொழுதிலும் கர்த்தர் தன்னை அழைக்கிறார், அவரே வழிநடத்துவார் என்று விசுவாசத்தோடு கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்ற விரும்பி, வேலையை துணிந்து ராஜினாமா செய்தார். எல்லோரும் அவரைப் பார்த்து: "நீ பைத்தியக்காரன், இனி உன் வாழ்க்கைக்கு என்ன செய்யப் போகிறாய்?" என்று குடும்பத்தாரும் மற்றவர்களும் கேட்டார்கள். ஆனால், அவரோ தன் விசுவாசத்தைத் தளரவிடாமல், என்னை அழைத்த ஆண்டவர் ஒருநாளும் என்னைக் கைவிடமாட்டார் என்று பொறுமையாக இருந்தார். வேலை செய்த நாட்களில்கூட சில சமயங்களில் குறைவுகள் வந்திருக்கிறது. ஆனால், முற்றிலுமாய் கர்த்தரையே சார்ந்து ஊழியம் செய்ய ஆரம்பித்த இந்த நாட்களில் அன்றன்றுள்ள ஆகாரத்தை கர்த்தர் ஆச்சரியமாய் அருளிச்செய்து வழி நடத்தினார். பின்பு கர்த்தர் கொடுத்த ஊழியம் மிகவும் ஆச்சரியமான விதத்தில் பலுகிப் பெருகியது. மக்கள் திரள் திரளாக அவருடைய ஊழியத்தின் மூலமாய் ஆசீர்வதிக்கப்பட்டனர்.

ஆம்! அன்புக்குரியவர்களே, உங்களுடைய விசுவாசத்தையும்கூட கர்த்தர் சோதிக்கும் நாட்கள் வரலாம். கர்த்தரை இந்த ஊழியர் உறுதியாய் சார்ந்து கொண்டதைப்போல நீங்களும் சார்ந்துகொண்டு ஜெயம் பெறுங்கள். பரீட்சையில் பொறுமையைப் பெற்று ஆசீர்வாதத்தைப் பெறுங்கள் (ரோமர் 5:3). விசுவாசத்தின் பரீட்சை ஏற்படும் வேளையில், ஜெயம் கொடுக்க வல்ல தெய்வத்தின் மீதே உங்கள் நம்பிக்கையை உறுதியாய் வைக்கும் பொழுது, கர்த்தர் அதற்கு வேண்டிய பொறுமையைத் தந்து அதன்மூலம் பாக்கியமும் அருளுவார்.

<u>ஜெபம்</u>: "அன்பு இரட்சகரே! என் விசுவாசம் பரீட்சிக்கப்படும்பொழுது, நீரே திடபெலன், பொறுமை, நம்பிக்கை யாவையும் தந்து, என்னை ஆசீர்வதியும். <u>இன்று</u> விசேஷமாக என்னை நினைத்தருளும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கிறிஸ்து உங்களிடத்தில் வல்லவராயிருக்கிறார்!

"...கிறிஸ்து உங்களிடமாய் பலவீனரல்ல, உங்களிடத்தில் வல்லவராயிருக்கிறார்"
(2 கொரிந்தியர் 13:3).

நம்முடைய தேவனாகிய கர்த்தர் நம்மோடுகூட நம் குடும்ப வாழ்வில், நம்முடைய தனிப்பட்ட வாழ்வில் நம் நடுவில் வாசம்பண்ணும்போது, அவர் வல்லமையுள்ளவராய் நம்மை வழிநடத்துகிறார் (செப். 3:17). வியாதியிலே அவருடைய வல்லமை விளங்கும். பிரச்சினைகள் என்ன வந்தாலும் தேவ வல்லமை அதை மாற்றியமைக்கும். மார்த்தாளுடைய சகோதரனாகிய லாசரு மரித்தபொழுது, இயேசு அவனை எங்கே வைத்தீர்கள் என்று கேட்டபொழுது, மார்த்தாள், நான்கு நாட்களாயிற்றே, இப்பொழுது திறந்தால் நாறுமே என்று அவிசுவாசத்தோடு கூறினாள். ஆனால், இயேசு அவளைப் பார்த்து: "நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்" (யோவான் 11:40) என்று அவள் கண் காண தம்முடைய வல்லமையை வெளிப்படப்பண்ணி, லாசருவை உயிரோடு எழுப்பினார். உங்கள் குடும்பத்திலே, தனிப்பட்ட வாழ்க்கையிலே அவர் பிரசன்னமாயிருந்து இதே வல்லமையை வெளிப்படுத்த போதுமானவராக இருக்கிறார். அவரால் ஆகாதது என்ன இருக்கிறது? (சங். 33:9).

ஒரு தாய் ஓர் ஆண் மகனை பெற்றெடுத்தாள். ஆனால் அந்த குழந்தை சரீரத்தில் குறைவுகளோடு பிறந்திருப்பதைக் கண்டவுடன் அந்த தாய் மிகவும் சோர்வடைந்தாள். ஏனெனில், குழந்தையின் இரண்டு கால்களும் வளைந்து உருமாறிய நிலையிலிருந்தது. என் பிள்ளைக்கு மற்ற பிள்ளைகளைப்போல நடக்க முடியாமலேயே போய்விடுமோ என்ற கவலை ஒருபுறம் இருந்தாலும், மறுபுறம், தான் நம்பியிருக்கும் தன் ஆண்டவர் வல்லமையுள்ளவராயிருக்கிறபடியால், தன் குழந்தையின் காலைத் தொட்டு குணமாக்குவார் என்ற விசுவாசம் உள்ளத்தை நிறைத்தது. எனவே, தினமும் குழந்தையை மடியில் வைத்து ஜெப எண்ணெயை பூசி மிகுந்த நம்பிக்கையுடன், கர்த்தரை நோக்கி ஜெபித்து வந்தாள். அவள் நம்பிக்கை வீண்போகவில்லை. குழந்தையின் காலில் மாறுதல் தெரிய ஆரம்பித்தது. சுருண்டு, பின்னிக் கொண்டிருந்த கால்கள் மெதுமெதுவாக விலகி, தனித்தனியே பிரிந்து, தேவ வல்லமையால் நாளடைவில் மற்ற குழந்தைகளின் கால்களைப்போல மாறின. அதுமட்டுமின்றி, வளர்ந்து வாலிபனான அக்குழந்தையை தேவனுடைய சேவையை செய்கிற தெய்வீகம் நிறைந்த வாலிபனாகவும் எழும்பிப் பிரகாசிக்க, கிறிஸ்து அவனிடத்தில் வல்லவராயிருந்தார்.

இன்று நீங்களும்கூட இதே வண்ணமாக கர்த்தருடைய வல்லமை விளங்கினாலொழிய என் வாழ்வில் மறுமலர்ச்சியை நான் காணவே முடியாது. "ஆண்டவரே, எனக்கும் இரங்கும்" என்று அந்த தாயைப்போல ஆண்டவரை பற்றிக்கொள்வீர்களானால், உங்கள் வாழ்வும் கர்த்தருடைய வல்லமையால் செழிக்கும். சமாதானம் பெருகும் (ஏசாயா 26:3).

ஜெபம்: **"அன்பின் நேச தகப்பனே! தீராத எந்த பிரச்சினையையும் உம்முடைய வல்லமையால் தீர்க்க முடியும் என்று நான் விசுவாசிக்கிறேன். என்னுடைய தீர்க்க முடியாத பிரச்சினைகள் ஒவ்வொன்றையும்கூட இன்று உம்முடைய வல்லமையுள்ள கரத்தினால் முற்றிலுமாக மாற்றிப்போடும். நிச்சயமாக நீர் என்னை அவ்வாறு ஆசீர்வதிப்பீர் என்று நான் விசுவாசிக்கிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"**

திவ்விய உண்மையுடன் சாட்சியாக இருந்து புகழ்ச்சி பெறுங்கள்!

"...கபடமில்லாமல் திவ்விய உண்மையோடே நடந்தோமென்று, எங்கள் மனது எங்களுக்கு சொல்லுஞ் சாட்சியே எங்கள் புகழ்ச்சியாயிருக்கிறது"

(2 கொரிந்தியர் 1:12).

கர்த்தர் நம்மிடம் எதிர்பார்க்கும் நற்குணங்களில் மிக முக்கியமானது உண்மை. கொஞ்சத்திலே உண்மையாயிருந்தால் அநேகத்தின்மேல் ஆசீர்வாதம் பெறுவோம் (மத். 25:21,23). "உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்" (நீதி. 28:20). மோசே உண்மையுள்ளவனாக இருந்தான் (எபி. 3:2,5). ஆகவே, கர்த்தர் அவனை அவ்வளவாய் உயர்த்தி கனப்படுத்தினார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும்கூட நமக்கு முன்மாதிரியாய், தேவ சித்தத்தை நிறைவேற்றுவதில் முடிவு பரியந்தம் உண்மையாயிருந்தார். ஆகவே, இன்று பரலோகத்தில் பிதாவின் வலது பாரிசத்தில் மகிழ்ச்சியுடன் வீற்றிருக்கிறார். எனவே, உண்மையாய் நடப்பதினிமித்தம் எத்தனை பிரச்சினைகள் வந்தாலும் அதைக் குறித்து சற்றும் கவலைப்படாமல், நம் ஆண்டவர் நமக்கு காண்பித்த வழியை கவனமாய் பின்பற்றி உண்மையுள்ளவர்களாய் எல்லாக் காரியங்களிலும் நாம் விளங்கும்பொழுது, கர்த்தர் நமக்கும் நிறைவான ஆசீர்வாதத்தை தருவார். கணவன், மனைவி, பிள்ளைகள், பெற்றோர் என்று இந்த உறவிலே உண்மையாயிருக்கும்பொழுது, குடும்பத்தில் ஆசீர்வாதம் மற்றும் சமாதானம் பெற்று மகிழலாம். வேலையில் உண்மை, பேச்சில் உண்மை, இவைகள் மூலம் மற்றவர்களுடைய நம்பிக்கைக்கு நாம் பாத்திரமாக்கப்பட்டவர்களாயிருக்க கர்த்தர் அருள்புரிவார் (1 சாமு. 12:24).

ஒரு வாலிபன் சிறு வயதிலேயே பெற்றோரை இழந்தான். தாயோ, அவள் உயிரோடிருந்தபொழுது, இந்த மகனுக்கு கற்றுக்கொடுத்த ஒரு முக்கிய பாடம், "மகனே, எந்த நிலைமையிலும் பொய் சொல்லாதே, உண்மையை மட்டும் கடைபிடி" என்பதுதான்! தன் தாயை நினைக்கும்போதெல்லாம் அவள் சொன்ன அந்த காரியம் அவனது நினைவுக்கு வரும். பொய் சொல்ல நினைத்தாலும்கூட தாயின் நினைவு வரும்பொழுது, தன்னையுமறியாமல் உண்மையையே பேசிவிடுவான். ஆகவே, அவனைக்குறித்து யாவரும் மகிழ்ச்சியடைந்தனர். ஆண்டவரும் அவனைக் குறித்து பெருமையடைந்து, வேலையில் உயர்வின்மேல் உயர்வைக் கொடுத்து, புகழ்ச்சியையும், கனத்தையும், மகிமையையும் அவன் வாழ்விலே காணும்படி அருள்புரிந்தார்.

எனக்கு அன்பானவர்களே! <u>இன்று</u> நீங்களும் கர்த்தருக்கு முன்பாகவும், மனுஷருக்கு முன்பாகவும் எதை செய்தாலும் எல்லாவற்றிலும் உண்மையாய் நடப்பதற்கு தேவபெலனை நாடித் தேடி தினமும் யாவருக்கும் முன்பாக சாட்சிகளாக இருக்க கவனமாக இருங்கள் (ரோமர் 2:7).

<u>ஜெபம்</u>: "அன்பின் தேவனே, உம்முடைய ஒத்தாசை, தேவ வல்லமை இவைகளினால் என்னை நிரப்பி எனக்கு நீர் விரும்பும் உண்மை நிறைந்த மனதை நிறைவாய் தந்து அதன்மூலமாய் எனக்கு நீர் அருளும் தெய்வீக ஆசீர்வாதத்தை நிறைவாய் தர வேண்டுமென்று மன்றாடி கெஞ்சுகிறேன். இந்த என்னுடைய எளிய ஜெபத்தைக் கேட்டு, நிறைவான ஆசீர்வாதங்களை நீர் என் வாழ்வில் அருளிச்செய்ய போகிறபடியால் உம்மை நன்றியுடன் ஸ்தோத்திரிக்கிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

நீங்கள்... அக்கினியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்!

"...அவர் (கிறிஸ்து) பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்" (மத்தேயு 3:11).

இந்த அனுபவம் நமக்கு ஆவிக்குரிய வாழ்வில் கர்த்தர் கொடுக்கிற ஒரு இணையற்ற ஆசீர்வாதமான அனுபவம். சீஷர்கள், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மரணமடைந்த பின்பு, ஓர் அறைக்குள் தங்களை பூட்டிக்கொண்டு பயத்தினால், அடுத்து என்ன நடக்குமோ? என்ற திகைப்பினால் மறைந்திருந்தார்கள். ஆண்டவரோ அவர்கள் இருதயத்திலே தம்முடைய தெய்வீக சமாதானத்தை முதலாவது அருளிச்செய்தார் (யோவான் 20:19). அதோடு நிறுத்திவிடாமல் நாற்பது நாளளவும் அவர்களுக்கு தரிசனமாகி, தம்மை உயிரோடிருக்கிறவராக காண்பித்தார். பிதாவின் வாக்குத்தத்தமாகிய பரிசுத்த ஆவியானவரைப் பெற்று, தேறுதல் பெற்று மற்றவர்களையும் தேற்றும்படி கற்றுக்கொடுத்தார். அப்படியே அவர்கள் கூடி ஜெபித்தபொழுது, பரிசுத்த ஆவியானவர் அக்கினிமயமாய் அவர்கள் மீது இறங்கினார். அவர்களுடைய பயம், கலக்கம், சந்தேகம் யாவும் மறைந்தன. அக்கினி தீபங்களாய் ஆண்டவருடைய நாமத்திற்கு மகிமையாய் அவர்கள் எரிந்து பிரகாசித்தனர் (அப். 4:13; 5:15,16). நீங்களும் வாஞ்சையோடு, விருப்பத்தோடு ஆண்டவரிடம் கேட்பீர்களானால், கர்த்தர் உங்களையும் அக்கினி அபிஷேகத்தினால் நிரப்புவார். மட்டுமல்லாமல், அநேகருக்கு ஆசீர்வாதமாக இருக்கக்கூடிய அக்கினி ஜுவாலையாகிய ஜீவியத்தையும், ஆவிக்குரிய வாழ்வையும் நிச்சயமாக கொடுப்பார்.

1986 ஆம் ஆண்டு என் மகளை இழக்கக் கொடுத்தேன். வேதனையோடிருந்த என்னைப் பார்த்து ஆண்டவர், பெண்கள் அநேகர் வேதனையிலும், துன்பத்திலும் அவதிப்படுகிறார்களே, என்னை அறியாமல் அநேகர் இருக்கிறார்களே! அவர்களுக்காக ஜெபிப்பது யார் என்று ஒரு பாரத்தைக் கொடுத்தார். அதன் மூலமாக எஸ்தர் ஜெபக்குழுவை ஆரம்பிக்க கர்த்தரே வழி திறந்தார். 18 வருடங்களாக இன்றும் இந்த ஜெபக்குழுவை நடத்தி வருகிறோம். இன்று ஆயிரத்துக்கும் மேற்பட்ட சகோதரிகள் தாங்கள் காணாத பெண்களின் துயர் நீங்க, இருளடைந்த அவர்கள் வாழ்வில் வெளிச்சம் வீச, ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றி வருகிறார்கள் (கலா. 6:2). இவர்கள் வாழ்வை ஆண்டவர் எப்படி ஆசீர்வதிக்கிறார் தெரியுமா? ஒவ்வொருவரையும் பரிசுத்த ஆவியால், அக்கினியினால் அபிஷேகித்து, எழும்பிப் பிரகாசிக்கும் அக்கினி தீபங்களாக ஒவ்வொரு ஜெபக்குழு சகோதரியையும் மாற்றி, ஆச்சரியமான விதத்திலே உபயோகித்து வருகிறார்.

நீங்களும் கூட காலத்தை வீணாக்காமல், இன்றே தேவசமுகத்தில் அக்கினி ஜுவாலையாக மாறி, ஆண்டவருடைய சேவையைச்செய்ய உங்களை ஒப்புக்கொடுங்கள். காலம் கடைசியாயிருக்கிறது (எபே. 5:15–17)!



ஜெபம்: "அன்பு இரட்சகரே. உம்முடைய சேவையை செய்வது எத்தனை மேலான பாக்கியம். நீர் தாமே இன்று என் வாழ்விலும் இந்த பரலோக அக்கினியையும். அக்கினி ஜுவாலையாக ஒளி வீசுகிற அனுபவத்தையும் தாரும். இன்று என்னை நான் உம்முடைய ஊழியத்திற்கென்று முற்றிலுமாய் அர்ப்பணிக்கிறேன். உமக்கென்று ஒளிவீச என் வாழ்வையும் நீர் எடுத்து உபயோகிக்க வேண்டுமென்று ஜெபிக்கிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"

கர்த்தராகிய தேவன் உங்களோடுகூட இருப்பார்!

"தாவீது நாளுக்குநாள் விருத்தியடைந்தான்; சேனைகளின் தேவனாகிய கர்த்தர் அவனோடேகூட இருந்தார்"
(2 சாமுவேல் 5:10).

புதிய மாத துவக்கத்திலே நாம் வந்திருக்கிறோம். இந்த மாதம் எப்படி இருக்குமோ? பணமுமில்லையே, பொருளுமில்லையே, சமாதானமுமில்லையே என்று நீங்கள் கவலைப்பட்டு கலங்கிக் கொண்டிருக்கலாம். ஆனால், இந்த வசனத்தில் சேனைகளின் தேவனாகிய கர்த்தர் தாவீதோடு இருந்தபடியினால் அவன் நாளுக்குநாள் விருத்தியடைந்தான் என்று வாசிக்கிறோம். தாவீதுக்கு அவ்வாறு செய்த ஆண்டவர் பட்சபாதமற்றவர் (அப். 10:34, ரோமர் 2:11, கலா. 2:6). நீங்கள் யாராயிருந்தாலும் "ஆண்டவரே, நீர் என்னோடுகூட இந்த மாதம் முழுவதும் தங்கியிரும். என் பாரங்கள், கவலைகள் அதிகமாக இருப்பினும் நான் அவைகளை பார்க்காமல் உம்மையே பார்க்கிறேன். எனக்கு ஒத்தாசை வரும் பர்வதமே (சங். 121:1), என்னைக் காத்து வழிநடத்தும்" என்று பிரார்த்தனை செய்யுங்கள். அப்பொழுது தாவீதைப்போலவே நீங்களும் விருத்தியடைவீர்கள்.

வியாபாரம் செய்து கொண்டிருந்த ஒரு மனிதன் கர்த்தரை தேடாமல் தனக்கு வரும் லாபத்தைக் குறித்தே எப்பொழுதும் எண்ணி எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்தான். தன் சொந்த அறிவை உபயோகித்து அதை எப்படி இன்னும் விருத்தியடைய செய்யலாம் என்று பலவிதத்தில் முயற்சி செய்தான். ஆனால், அவன் எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக, வியாபாரம் விருத்தியடைவதற்கு பதிலாக நாளுக்குநாள் குறைவுபட்டது. என்ன செய்வதென்று அவனுக்கு தெரியவில்லை. கிறிஸ்தவனாக இருந்தபொழுதிலும் அவனுடைய கண்கள் மூடப்பட்ட நிலைமையில் பெயரளவில் கிறிஸ்தவனாக இருந்தபடியால் கிறிஸ்துவின் உதவியை அவன் நாடித்தேடவேயில்லை. ஆனால், ஒருநாள் ஆலயத்திற்கு அவன் சென்ற பொழுது, மேலே குறிப்பிட்ட வசனத்தை வைத்து போதகர் பிரசங்கித்தார். "ஐயோ, என்னோடு ஆண்டவர் இல்லையே! அவர் பிரசன்னத்தை, அவருடைய உதவியை நான் இதுவரை நாடித்தேடவே இல்லையே" என்று தன் குறையை உணர்ந்தவனாய் ஆண்டவரிடம் அறிக்கையிட்டான். "இயேசுவே, இன்று முதல் நீரே எனக்கு எல்லாம். என்னோடு தங்கியிரும், எனக்கு உம்முடைய ஞானம், ஒத்தாசை யாவையும் அருளிச்செய்து வழிநடத்தும்" என்று தன் வாழ்வை அர்ப்பணித்தான். ஆண்டவர் இயேசு அவனுடைய பிரார்த்தனையை கேட்டு அப்படியே அவனோடு இணைந்துகொண்டார். ஒவ்வொருநாளும் ஜெபம்பண்ணி ஜெபம்பண்ணி, வியாபாரத்தை ஆரம்பித்தான். கர்த்தருடைய தயவால் வெகு சீக்கிரம் விருத்தியடைந்து பல கடைகளை திறக்கவும் ஆண்டவர் அருள்புரிந்தார்.

ஆம்! இந்த மாதத்தின் முதல் நாளிலே உங்களையும் கர்த்தரிடத்தில் அப்படியே அர்ப்பணியுங்கள். "ஆண்டவரே! நீர் என்னோடுகூட இராவிட்டால் எனக்கு ஆசீர்வாதமே இல்லை" என்று அவரை அழையுங்கள். ஆண்டவர் உங்களையும் செழிக்கவும், விருத்தியடையவும் செய்வார் (சங். 40:17).

<u>ஜெபம்:</u> "அன்பின் இரட்சகரே, என் முழு நம்பிக்கையையும் உம்மீதிலே வைக்கிறேன். விசேஷமாக இந்த மாதத்தின் முதல் நாளாகிய <u>இன்று</u> என் வாழ்வை நீரே பொறுப்பெடுத்துக்கொள்ளும். இந்த மாதமும் வரப்போகிற நாட்களிலும் நீரே எனக்கு எல்லாவற்றையும் செய்து, என்னை ஆசீர்வதித்து வழிநடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கிருபை செய்கிறவர் என்றென்றும் கோபம் வையார்!

"...அவர் கிருபைசெய்ய விரும்புகிறபடியால் அவர் என்றென்றைக்கும் கோபம் வையார்" (மீகா 7:18).

கர்த்தர் இரக்கமும் மனதுருக்கமும் நிறைந்தவர். அதினிமித்தம் நம்முடைய குறைவுகளையெல்லாம் பெரிதாக எண்ணிப்பாராமல், நாம் நிர்மூலமாகாதபடிக்கு தம்முடைய கிருபையினால் நமக்கு இரங்குகிறவராக இருக்கிறார் (புல. 3:22). தேவனாகிய ஆண்டவரிடத்தில் இரக்கங்களும் மன்னிப்புகளும் உண்டு (தானி. 9:10). எனவே, நம் வாழ்க்கையில் காணப்படுகிற வேண்டாத தீய குணங்களையும், பாவத்திற்கேதுவான காரியங்களையும் விட்டொழித்து, "ஆண்டவரே, என் மீது கிருபையாய், தயவாயிருந்து எல்லாக் கட்டுகளினின்றும் என்னை விடுதலையாக்கும். என்னை மன்னித்து உம்முடைய பிள்ளையாக மாற்றும்" என்று கருத்தாய் வேண்டுதல் செய்வோமானால், அவருடைய அளவற்ற கிருபையை நமக்கு அருளிச்செய்து நம்மை ஆசீர்வாதமாய் வழிநடத்துவார்.

தெய்வ பக்தியுள்ள ஒரு தம்பதியருக்கு ஒரு மகனும், ஒரு மகளும் இருந்தனர். மகள் பயபக்தியுடன் கர்த்தருக்கு பிரியமாய் நடந்து வந்தாள். ஆனால் மகனோ, எவ்வளவோ பக்திக்குரிய வழியிலே பெற்றோர் வழிநடத்தியபோதிலும், வாலிபனானபொழுது தீய நண்பர்களின் சேர்க்கையால், கீழ்த்தரமான வழிகளில் நடந்து வந்தான். ஆனால் பெற்றோரோ, தங்கள் விசுவாசத்தில் கொஞ்சமும் தளர்ந்துபோகாமல், இடைவிடாமல் ஜெபித்து வந்தனர். ஒருநாள் மாலை அவன் தன் நண்பர்களோடு வழக்கமாய் பொழுதை போக்கிக் கொண்டிருந்தபொழுது, அவர்களில் ஒருவன் அவனைக் குறித்து பேசின கீழ்த்தரமான வார்த்தை அவன் உள்ளத்தை வெகுவாய் வேதனைப்படுத்தியது. விருட்டென்று எழுந்த அவன், நேரே வீடு திரும்பினான். தன் அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டான். சமாதானமில்லாமல் அவன் மனம் மென்மேலும் சஞ்சலத்திற்குள்ளாகியது. அப்பொழுதுதான் கர்த்தர் அவன் உள்ளத்தில் கிரியை செய்ய ஆரம்பித்தார். அவருடைய அன்பின் கயிறுகளால் அவனை தம்மண்டை இழுத்தார். தன்னமையுமறியாமல் முழங்காற்படியிட்டு கர்த்தரை நோக்கி கதறினான். "ஆண்டவரே இவ்வளவு நாட்களும் இந்த கேடான, கீழ்த்தரமான நட்பிற்காக உம்மை உதறித்தள்ளி ஓடினேனே! என்மீது கிருபையாயிரும்; இன்றுமுதல் உம்முடைய பிள்ளையாய் என்னை மாற்றும்; என் பாவங்களை மன்னித்து புதுசிருஷ்டியாக மாற்றும்" என்று கண்ணீரோடே ஜெபித்தான். அவனுக்குள் தேவ சமாதானம் உடனடியாக புரண்டோடி வந்தது. ஆம்! பாவம் பெருகிய அவன் வாழ்வில் தேவகிருபை பெருகியது.

ஆம்! பிரியமானவர்களே, கோபாக்கினைக்கான காரியங்களை உங்கள் வாழ்க்கையில் நீங்களும் கொண்டிருப்பீர்களானால் இன்றே, இப்பொழுதே தேவ கிருபையால் விடுதலை பெற்று, இரட்சிப்பின் சந்தோஷத்தினால் நிறைந்து தேவாசீர்வாதம் பெறுங்கள் (1 தெச. 5:9,10).

ஜெபம்: "அன்பின் இரட்சகரே! என் மீதும் நீர் கிருபையாயிரங்கி, என் மீது கோபம் வைக்காமல் இன்றுமுதல் என்னை புது சிருஷ்டியாக்கும். இயேசுவின் நாமத்தில் ஜெபத்தை ஏறெடுக்கிறேன் நல்ல பிதாவே. ஆமென்!"

உங்கள் சத்துருவை வெட்கம் மூடும்படி செய்வார்!

"உன் தேவனாகிய கர்த்தர் எங்கே என்று என்னோடே சொல்லுகிற என் சத்துருவானவள் அதைப் பார்க்கும்போது வெட்கம் அவளை மூடும்; என் கண்கள் அவளை காணும்: இனி வீதிகளின் சேற்றைப்போல மிதிக்கப்படுவாள்" (மீகா 7:10).

இந்த உலக வாழ்க்கையில் நாம் குறைவுபட்டு காணப்படும்பொழுது, சத்துருக்கள் நம்மை ஏளனம் செய்கிறார்கள். "அவ்வளவுதான், உன் வாழ்க்கை முடிந்துவிட்டது! நீ ஒருநாளும் இனி எழுந்திருக்க முடியாது" என்றெல்லாம் மனதை வாட்டும்படியான கடின சொற்களைப்பேசி நம்மை மனமடிவாக்குவார்கள். வேதபுத்தகத்திலே அன்னாள் என்ற பெண் குழந்தையில்லாதவளாக இருந்தபோது, அவளுடைய கணவனின் மற்றொரு மனைவியாகிய பெனின்னாள் அவளை இப்படித்தான் வேதனைப்படும்படியாக பேசி மனமடிவாக்கினாள். ஆனால், அதை அப்படியே அவள் தொடர்ந்து செய்யும்படி ஆண்டவர் விட்டுவிட்டாரா? இல்லவே இல்லை. காரணம், அன்னாள் தன் மனக் கிலேசத்தையெல்லாம் ஆண்டவரிடம் ஊற்றிவிட்ட பிறகு (1 சாமு. 1:15) அவள் விரும்பினதற்கும், நினைத்ததற்கும் அதிகமாய் தேவ வல்லமை வெளிப்பட்டது. ஒரு குழந்தையை கேட்டாள். ஏராளம் குழந்தைகளை ஆண்டவர் கொடுத்தார் (1 சாமு. 2:21). அவளை ஏளனம் பண்ணின பெனின்னாளோ வெட்கத்தினால் வாயை திறவாதிருந்திருப்பாள்.

ஆண்டவர்மீது அன்பாயிருந்த ஒரு மனிதன், தேவனுடைய ஊழியத்தையும் தன் உலக வேலையோடுகூட உண்மையும் உத்தமுமாய் செய்து வந்தார். முழுநேர ஊழியம் செய்த சிலர் அவரை பலவிதங்களிலும் வேதனைப்படுத்தும் வண்ணம் குறை சொல்லி, ஏளனமாய் பேசி, அவரை மனமடிவாக்கினர். ஆனால், அவரோ அவர்களுடைய வார்த்தைகளுக்கு ஒரு மறுஉத்தரவும் சொல்லாமல் கர்த்தரை மட்டும் நோக்கிப் பார்த்தார். ஆண்டவரோ, அந்த மனிதனை அலுவலக வேலையிலும் உயர்த்தினார். அவருடைய தெய்வ சேவையிலும் மென்மேலும் வரங்களினால் வல்லமையினால் நிரப்பினார். மேலும் "பழிவாங்குதல் எனக்குரியது, நீ அவர்களைக் குறித்து ஒன்றும் சொல்லாதே" என்றும் அந்த ஊழியருக்கு ஆண்டவர் கட்டளையிட்டார். அப்படியே அந்த ஊழியர் அமைதலாய் ஆண்டவருடைய ஊழியத்தையும், அலுவலக வேலையையும் தொடர்ந்து செய்து வந்தார். நாட்கள் கடந்தன. கர்த்தர் இந்த மனிதனை பல விதங்களிலும் உயர்த்தினபொழுது, அவரை ஏளனம் செய்த மக்கள் அவரிடத்தில் உதவி நாடி ஓடி வரும்படி ஆண்டவர் யாவற்றையும் தலைகீழாக மாற்றிப்போட்டார்.

ஆம்! கர்த்தர் தம்மை நம்புகிறவர்களை, விசேஷமாக தமக்கு முன்பாக ஊழியம் செய்கிறவர்களை ஒருநாளும் கைவிடமாட்டார். சத்துருவாகிய பிசாசும், அவனுடைய மனிதர்களும் எத்தனையாய் ஏளனம் செய்தாலும், சமாதானத்தின் தேவன் சாத்தானை கால்களின் கீழ் நசுக்கிப்போடுவார் (ரோமர் 16:20). நீங்கள் வெட்கப்படுவதற்கு பதிலாக, அவனையும் அவனுடைய ஆட்களையும் வெட்கத்திற்கு உட்படப்பண்ணுவார். ஆகவே, எதற்கும் பயப்படாமல் கர்த்தரையே நோக்கிப் பாருங்கள் (ஏசாயா 61:7).

<u>ஜெபம்:</u> "அன்பு தெய்வமே! இந்த உலகத்தின் மனிதர்களுடைய ஏளனங்களுக்கு பயப்படாமல் <u>இன்றுமுதல்</u> உம்மையே நோக்கிப் பார்த்து, நான் வெட்கப்படாமல் அவர்கள் வெட்கப்பட்டுப்போகும்படியாய் எனக்கு உதவி செய்யும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தர் உங்கள் கட்டுகளை அறுப்பார்!

"இப்போதும் நான் உன்மேல் இருக்கிற அவன் நுகத்தை முறித்து, உன் கட்டுகளை அறுப்பேன்" (நாகூம் 1:13).

இந்த உலக வாழ்வில் பலவிதமான கட்டுகள் நம் மனதை, வாழ்க்கையை உடைத்து போடுகின்றன. மரண இருளின் கட்டுகள், பிசாசின் கட்டுகள், பாவக்கட்டுகள் போன்றவை நம்மை சோர்வடைய செய்கின்றன (சங். 18:4, அப். 8:23). ஆனால், நாம் கர்த்தருடைய அடியார்களாகவும், அவருடைய புத்திரர்களாகவும் மாறும்பொழுதோ, நம்முடைய அனைத்து கட்டுகளையும் அவர் அவிழ்த்துவிட வல்லமையுள்ளவராக இருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளே வரும்போது, சகலவித கட்டுகளினின்றும் விடுதலை செய்கிறார். யாரோ எனக்கு என்னமோ செய்துவிட்டார்களே என்றெல்லாம் வீணாக நாம் கலங்குகிறோம். அப்படியிராமல், நீங்கள் பரிசுத்த ஆவியினால் நிறையும்பொழுது, 2 கொரிந்தியர் 3:17ன்படி அவர் உங்களுக்கு சகல கட்டுகளினின்றும் பரிபூரண விடுதலை தருவார்.

மும்பை பட்டணத்தில் பல வருடங்களுக்கு முன்பு "இயேசு அழைக்கிறார்" கூட்டம் நடந்துகொண்டிருந்தபொழுது, சகோதரர் தினகரன் ஜெப நேரத்தில் "சங்கர்" என்ற ஒரு வாலிபனை அழைத்து, அவனுடைய காரியங்களை வெளிப்படுத்தினார். அவனுக்கு பெற்றோர் இருந்தும், சித்தப்பா தான் அவனை கவனித்து வந்தார். ஒருநாளில் அவனுக்கு பலமுறை வலிப்பு வியாதி வரும். வேலையும் கிடையாது, சாப்பாட்டுக்கும் வழியில்லை. அவன் தன் வாழ்வை நினைத்து தற்கொலை செய்துகொள்ளலாமா? என்ற எண்ணத்தோடு மனம்போல், கால்போன வழியே நடந்து சென்றான். அந்த சமயத்தில் ஆண்டவர் அவனை அங்கு நடந்த "இயேசு அழைக்கிறார்" கூட்டத்திற்கு வரும்படி இழுத்து வந்தார். கர்த்தர் அவன் வியாதியை குறிப்பிட்டு கூறி விடுதலையும் கொடுத்தார். தனது சரீரத்திலே உடனே ஒரு தெய்வீக தொடுதலை உணர்ந்தான். ஆனால், ஆடை சரியாக இல்லாததால் வீடு திரும்பினான். அடுத்த நாள் மாலை வரை ஒரு முறை கூட வலிப்பு வரவில்லை. ஒரே ஆச்சரியம்! எனவே, சித்தப்பாவின் சட்டையை போட்டுக் கொண்டு, கர்த்தர் தனக்கு செய்த நன்மையை எல்லோருக்கும் முன்பாக மேடையில் சாட்சியாக அவன் எடுத்துக்கூறினபொழுது யாவரும் ஆச்சரியமடைந்தனர். ஒரு அருமையான குடும்பத்தார் அவனுக்கு வேலை கொடுக்க முன் வந்ததால், அவன் வாழ்வு அழகாய் கட்டப்பட்டது. பல வருடங்களுக்கு பிறகு அவனை திரும்பவும் சந்தித்தோம். நன்றாக உடையணிந்து எங்களுக்கு முன்னதாக வந்து, நான் யார் தெரியுமா? என்று கேட்டபொழுது அடையாளமே கண்டுகொள்ள முடியாத அளவுக்கு கர்த்தர் அவனை ஆசீர்வதித்திருந்தார்.

ஆம்! பிரியமானவர்களே, உங்களுடைய கட்டுகள் எதுவாயினும் அவைகளையெல்லாம் அறுத்து உங்களையும் மீட்க ஆண்டவர் வல்லமையுள்ளவராயிருக்கிறார். அதை அறியாமல் வீணாக கவலைப்பட்டு கலங்காமல், கர்த்தரையே உறுதியாய் பற்றிக்கொண்டு, அவர் சமுகத்தில் பிரார்த்தனை செய்யுங்கள். கர்த்தர் உங்கள் கட்டுகள் எப்படிப்பட்டதாயினும், அதை அறுத்துப்போடுவார் (சங். 116:16).

<u>ஜெபம்:</u> அன்பு இரட்சகரே! இந்த உலகில் பல்வேறு கட்டுகள் என் வாழ்வை ஒன்றுமில்லாமல் போகச்செய்யும் நிலைமையிலிருந்தாலும் நான் உம்மையே நோக்கிப் பார்க்கிறேன். ஆண்டவரே, <u>இன்று</u> என் வாழ்வையும் ஆசீர்வாதமானதாக மாற்றிப்போடும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தர் உங்களை பலப்படுத்துவார்!

"நான் அவர்களை கர்த்தருக்குள் பலப்படுத்துவேன்; அவர்கள் அவருடைய நாமத்திலே நடந்துகொள்ளுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்"

(சகரியா 10:12).

ஆம்! எப்படிப்பட்ட பெலவீன நேரத்திலும் நாம் இயேசுவை நோக்கிப் பார்க்கும்பொழுது, சரீரத்திலும், ஆவியிலும், ஆத்துமாவிலும் அவர் நமக்கு பெலன் தந்து வழிநடத்துவார் (பிலி. 4:13). பெலவீன நிலையிலும், ஆசா என்ற அரசன் கொண்டிருந்த விசுவாசத்தின்படி, "பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் உதவிசெய்கிறது உமக்கு லேசான காரியம்" (2 நாளா. 14:11) என்ற விசுவாசத்தை நாமும் கொள்வோமானால், நம்முடைய பெலவீனம் இடம் தெரியாமல் மறைந்து போகும். நம் ஆத்துமாவில் பெலன் தந்து, சோதனையில் திடமனம் தந்து, நம்மை தைரியப்படுத்துவார் (சங். 138:3). அதுமட்டுமின்றி, ஆவியிலும் நம்மை பெலப்படுத்தி பராக்கிரமத்தினால் நிரப்புவார் (மீகா 3:8, சக. 4:6).

சமீபத்தில் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் சாட்சி ஒன்றை நான் பார்த்துக் கொண்டிருந்தேன். ஒரு வாலிப பெண்ணுக்கு முதுகிலே பயங்கரமான தாங்கமுடியாத வலியும், வேதனையும் வந்தது. பெற்றோர் கலங்கிப்போய்விட்டார்கள். ஏனென்றால் அந்த பெண்ணுக்கு பதினைந்து வயதுதான் ஆகியிருந்தது. ஐயோ, அன்பு மகள் இப்படி வேதனையால் துடிக்கிறாளே என்று கலங்கிக் கொண்டிருந்தார்கள். எத்தனையோ அறுவைசிகிச்சை செய்த பின்பும் அவளுக்கு சுகமே கிடைக்கவில்லை. அப்பொழுது "இயேசு அழைக்கிறார்" ஜெப கோபுரம் பற்றி கேள்விப்பட்டு, உடனடியாக தகப்பனார் தொலைபேசி மூலம் பேசியும், நேரில் சென்றும், ஜெபவீரர்களிடம் தன் மகளின் வேதனையைக் குறித்து கூறினார். ஒவ்வொரு முறையும் அவர்கள் செய்த கண்ணீர் நிறைந்த ஜெபத்தை கர்த்தர் கேட்டு மிகவும் ஆச்சரியமான முறையில் அந்த மகளை பெலப்படுத்தினார். நாளடைவில் வலி இருந்த இடம் தெரியாமல் முற்றிலும் மறைந்தது. அதன்பிறகு முன்பைக்காட்டிலும் அதிக பெலத்தோடு மாடிப்படி ஏறுவதிலும், மற்ற பெண்களைப்போல ஓடி ஆடி வேலை செய்வதிலும் மகள் மகிழ்ச்சியோடு இருப்பதைக் கண்ட பெற்றோர் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் சாட்சி சொல்வதின்மூலம் கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள்.

ஆம்! பிரியமானவர்களே, உங்களிலும் என்னென்ன பெலவீனங்கள் காணப்படுகிறதோ, அது எப்படிப்பட்டதாயினும், அவைகளை மாற்றி, உங்களை பெலப்படுத்த இயேசு உங்களுக்கும் போதுமானவர். அவரண்டை உங்கள் இருதயத்தை ஊற்றிவிடுங்கள். சிலுவையிலே இதற்காக அவர் பட்ட பாடுகள் நிமித்தம் உங்கள் எல்லா பெலவீனங்களையும் மாற்றியமைக்க இன்றும் என்றும் எந்த நிலைமையிலும் வல்லமையுள்ளவராய் இருக்கிறார் (2 கொரி. 12:9).

ஜெபம்: அன்பின் தெய்வமே! நீர் எனக்காக இயேசுகிறிஸ்துவை இந்த உலகிற்கு மனிதனாக அனுப்பி, அவர் சிலுவையிலே அடைந்த பாடுகள், காயங்களால் உண்டான தழும்புகளினிமித்தம் என் வேதனைகளை, பெலவீனங்களை மாற்றியமைக்க சித்தங்கொண்டபடியால் உமக்கு ஸ்தோத்திரம். இன்று மேற்கண்ட வாக்குத்தத்தத்தின்படியே என்னில் காணப்படுகிற சகல பெலவீனங்களையும் முற்றிலுமாக மாற்றிப்போடும். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"

நமது அலைச்சல்களை எண்ணியிருக்கிற தேவன்!

"என் அலைச்சல்களை தேவரீர் எண்ணியிருக்கிறீர்; என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும்; அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது?"
(சங்கீதம் 56:8).

இந்த உலக வாழ்விலே எத்தனை எத்தனை அலைச்சல்களினிமித்தம் நாம் பாடுபடுகிறோம். "என் குடும்பத்தாரோடு ஒரே இடத்தில் இருக்கும்படி வேலையிலே மாற்றம் கிடைக்கவில்லையே! தொடர்ந்து மருத்துவரிடம் போய்க்கொண்டே இருக்கிறேனே, குணமாகும் வழியே இல்லையே! பணம்பற்றாக்குறையினால் யார் யாரிடமோ போய் கெஞ்சுகிறேனே! என் வாழ்வு எப்பொழுது தான் வளம் பெறும்?" இப்படியாக பல்வேறு சந்தர்ப்பங்களிலே அலைசடிப்படுகிறீர்கள். ஆனால், நாம் ஆண்டவரை நோக்கிப் பார்த்து: "ஆண்டவரே, நீர் என் அலைச்சல்களை எண்ணியிருக்கிற தெய்வமாக இருக்கிறபடியால், நான் உம்மையே நம்பியிருக்கிறேன்" என்று அவரை உறுதியாய் பற்றிக்கொள்வோம். சமுத்திரத்தின் அலைகளின் இரைச்சலை, அமளியை அமர்த்துகிற ஆண்டவர் உங்கள் காரியங்களையும் பொறுப்பெடுத்து நிச்சயம் உதவி செய்வார் (சங். 65:7).

ஒரு ஏழை குடும்பத்தில் வீட்டு வாடகைக்கூட கொடுக்க முடியாத அளவிற்கு மிகவும் வறுமை. பணமில்லாதபடியினால் ஒவ்வொரு வீட்டு உரிமையாளர்களும் அவர்களை, பந்தைப்போல உருட்டியடித்தார்கள். பல வீடுகளுக்கு மாறி மாறி செல்லும் பரிதாப நிலைமை ஏற்பட்டது. இந்த நிலைமையிலே ஒரு நாள் குடும்பமாக உணவருந்தாமல் காலையிலிருந்து இரவு வரை கணவன், மனைவி, பிள்ளைகளுமாக சேர்ந்து கர்த்தரை நோக்கி மன்றாடினார்கள். இந்த வசனத்தின்படி, "ஆண்டவரே, நாங்கள் உம்மையே சார்ந்திருக்கிறோம். எங்கள் அலைச்சல்களை நீர் மாற்றி, எங்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்று மன்றாடுகிறோம்" என்று ஒவ்வொருவராக தங்கள் உள்ளத்தின் பாரங்களையெல்லாம் கர்த்தரிடம் ஊற்றி அவர் சமுகத்திலே காத்திருந்தார்கள். பிறகு யாவரும் ஒரே மனதோடு நன்றி செலுத்தி ஆண்டவரை ஸ்தோத்திரித்தார்கள். ஒருநாள் ஒரு நபரை அந்த குடும்பத் தலைவர் சந்தித்தார். அவர், "எனக்கு இந்த ஊரில் ஒரு பெரிய வீடு இருக்கிறது. நான் அவ்வப்போது வெளியூரிலிருந்து வந்து, அந்த வீட்டில் தங்கி செல்வேன். இந்த வீட்டை கவனிக்கவும், பொருட்களையெல்லாம் பத்திரமாக பாதுகாத்துக்கொள்ளவும் உங்களைப் போன்ற உண்மையுள்ள ஆள் தேவை. நீங்கள் தங்கிக்கொள்வதற்கு அதன் பின்புறத்தில் ஒரு சிறிய வீடு இருக்கிறது. நீங்கள் அங்கே தங்கி, என் வீட்டையும் பாதுகாத்துக்கொள்ள உங்களுக்கு பிரியமா?" என்று கேட்டார். இது ஆண்டவர் கொடுத்த ஆசீர்வாதம், ஜெபத்திற்கு பதில் என்று உணர்ந்தவர்களாய் உடனே யாதொரு யோசனையுமின்றி அதை ஒத்துக்கொண்டார்கள். குடும்பமாக அதன் பிறகு அலைச்சல்கள் ஏதுமின்றி அமைதலாக மிகுந்த சந்தோஷமாய் அங்கு வாழ்ந்து வந்தார்கள் (சங். 123:2).

பாருங்கள்! கர்த்தர் தம்மை நோக்கிப் பார்க்கிறவர்களுக்கு இந்த வசனத்தின்படி எத்தனையாய் ஆசீர்வாதத்தை கொடுக்கிறார். நீங்களும் அதையே செய்து ஆசீர்வாதத்தை நிறைவாய் பெறுங்கள்.



ஜெபம்: "அன்பின் இரட்சகரே. உம்மால் எல்லாம் கூடும். நீர் செய்ய நினைத்தது தடைபடாது. இன்று எனக்கும் எத்தனை அலைச்சல்கள் வந்தாலும் நீர் போதுமானவராக இருந்து என் வாழ்வை நிறைவாய் ஆசீர்வதித்து வழி நடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"

பாவங்களை அறிக்கை செய்து, விட்டுவிட்டால், இரக்கம் அருளுவார்!

"தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்" (நீதிமொழிகள் 28:13).

நமக்கு பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். ஆனால், அதை ஆண்டவருடைய சமுகத்தில் அறிக்கையிட்டு விட்டுவிடுவோமானால் பாவமற்ற பரிசுத்தராகிய இயேசுகிறிஸ்து நம்முடைய பாவங்களை சுமக்க சிலுவையில் தன்னையே பலியாக அர்ப்பணித்ததினிமித்தம் நம்முடைய பாவங்களையெல்லாம் மன்னித்து நம்மை சுத்திகரிப்பார் (1 யோவான் 1:8,9). அன்பானவர்களே! பல்வேறு இச்சைகள், பிசாசின் குணங்கள் (யாக். 3:14,15) நம் வாழ்வில் நிறைந்திருக்கும்பொழுது, வேண்டாத பாவக் கிரியைகளே நம் வாழ்வில் காணப்படுகிறது. ஆனால், ஆண்டவருடைய சமுகத்தில் நாம் அறிக்கை செய்யும்பொழுது, பாவத்திலிருந்து நிரந்தரமான விடுதலையை, இரட்சிப்பின் சந்தோஷத்தை ஆண்டவரே தருகிறாரே! இதை நீங்களும் பெற்று ஆசீர்வாதம் பெறுவதை விட்டுவிட்டு, ஏன் பாவத்திற்கு அடிமைப்பட்டு வாழ்கிறீர்கள்?

ஒரு கணவன் பக்தியுள்ளவனாக ஆண்டவரைத் தேடி வந்தான். ஆனால், மனைவியோ ஒரு மருத்துவமனையில் தாதியாக பணி செய்து வந்த வேளையில் ஒரு மருத்துவருடன் தவறான நட்பு கொண்டு துணிகரமாக பாவத்தில் ஈடுபட்டாள். கணவனோ, குடும்பத்தையும் கவனித்து, பொறுமையே உருவாக மனைவியின் மனமாற்றத்திற்காக பாரத்துடன் ஜெபித்து வந்தார். திடீரென்று அந்த மருத்துவருக்கு வேறொரு பெண்ணின் சிநேகம் கிடைத்தபடியால் இந்த பெண்ணின் உறவை முற்றிலும் விட்டுவிட்டார். அதினிமித்தமாக இந்த மனிதருடைய மனைவி, உடைந்த மனதோடு அன்பே உருவான தன் கணவரிடம் திரும்பி வந்தாள். தன் குறைவையெல்லாம் மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டாள். மட்டுமல்லாமல், கணவரோடு சேர்ந்து ஆலயத்திற்கு சென்று, அங்கே ஆண்டவருடைய சந்நிதியில் தன் பாவங்களையெல்லாம் அறிக்கையிட்டு, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும் பெற்று, நாளடைவில் கணவனைக்காட்டிலும் அதிக வல்லமையோடு ஆண்டவருடைய ஊழியத்தை செய்து வந்தாள்.

ஆம்! பிரியமானவர்களே, பாவம் கொடியதுதான்! ஆனால், ஆண்டவரோ, அதிலிருந்து பரிபூரண விடுதலையை கொடுக்க வல்லமையுள்ளவராக இருக்கிறார். உங்கள் குடும்பத்தாருக்காக, உற்றார் உறவினர்களுக்காக கண்ணீரோடு பிரார்த்தனை செய்யுங்கள். கர்த்தர் அவர்கள் வாழ்வையும் உங்கள் வாழ்வையும் முற்றிலும் மாற்றுவார். நீங்களும் பாவத்தின் சம்பளம் மரணம் மற்றும் சாபம் யாவற்றினின்றும் விடுதலை பெற்று, நித்திய ஜீவனைப் பெறும் வாழ்வினை பெற்று ஆசீர்வாதமாய் இருங்கள் (ரோமர் 6:22).

ஜெபம்: "அன்புள்ள ஆண்டவரே! என்னுடைய பாவங்களையெல்லாம் சிலுவையிலே நீர் சுமந்து தீர்க்க உம்மையே அர்ப்பணித்தபடியால் இன்று முழு மனதோடு உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். என்னில் ஒரு பாவமும் இல்லாதபடி, எல்லாவற்றையும் அறிக்கை செய்து விட்டுவிட்டு, என்னை ஒப்புக் கொடுக்கிறேன். உம்முடைய இரட்சிப்பின் சந்தோஷத்தால் என்னை நிரப்பி ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

நீங்கள் கர்த்தருக்கு பிரியமான ஜனம்!

"கர்த்தர் உங்களை தமக்கு ஜனமாக்கிக்கொள்ள பிரியமானபடியினால், கர்த்தர் தம்முடைய மகத்துவமான நாமத்தினிமித்தம் தமது ஜனத்தை கைவிடமாட்டார்" (1 சாமுவேல் 12:22).

ஆபிரகாமை அழைத்து ஆசீர்வதித்த ஆண்டவர், அவருடைய சந்ததியான இஸ்ரவேல் ஜனங்களையும் தமக்கென்று தெரிந்துகொண்டு ஆசீர்வதித்தார். அவர்கள் கர்த்தருக்கு பிரியமான ஜனமாயிருந்தார்கள். அதுபோலவே, இன்றைக்கு யார் யார் இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்கிறார்களோ, அவரை விசுவாசிக்கிறார்களோ அவர்களை தமக்கு பிரியமானவர்களும், சொந்தமான வர்களுமான ஜனமாக மாற்றிக்கொள்கிறார். நம் ஒவ்வொருவருக்காகவும் சிலுவையிலே தம்மையே அர்ப்பணித்ததினிமித்தம் எத்தனை ஆசீர்வாதமான வாழ்வை நமக்கு ஆண்டவராகிய இயேசு கொடுத்திருக்கிறார் (சங். 44:3)! இன்றைக்கு கோடானகோடி மக்கள் இதினிமித்தம் இயேசுவோடு இணைந்து இன்பமான வாழ்க்கை வாழ்கிறார்கள்.

நெப்போலியன் என்ற பிரான்ஸ் தேசத்து அரசன், பல தேசங்களை போரில் கைப்பற்ற பல்வேறு யுத்தங்களை செய்து வெற்றிபெற்று வந்தான். எனினும் ஒரு முறை தோல்வியடைந்தவனாய் சிறை செய்யப்பட்டு, ஒரு தீவில் இருந்தபொழுது இயேசு கிறிஸ்துவை நோக்கி இவ்விதமாய் "இயேசுவே, நான் தேசங்களையெல்லாம் கைப்பற்ற எத்தனையோ போராயுதங்களைக் கொண்டு எவ்வளவோ காரியங்களை செய்திருக்கிறேன். ஆனால், நீரோ ஒருவிதமான ஆயுதமும் இன்றி உம்முடைய தெய்வீக அன்பினால் இன்று எத்தனையோ கோடிக்கணக்கான மக்கள் உள்ளங்களிலே ராஜாதி ராஜாவாய் என்றென்றும் வீற்றிருக்கிறீர்" என்று அவனையும் அறியாமல் கூறினான். இது எத்தனை உண்மையான கூற்று! ஆண்டவர் அன்பே உருவானவராக என்னையும்கூட ஒருநாள் இப்படி தேடிவந்து, தம்முடைய அன்பை அளவில்லாமல் ஊற்றினார். இப்பொழுது எத்தனையோ ஆண்டுகள் கடந்து சென்றபொழுதிலும் அவருடைய அன்பினால் ஒவ்வொருநாளும் நிரப்பி இம்மட்டும் ஆசீர்வதித்து வருகிறார். இந்த ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள இன்று யார் யார் அவரை நோக்கிப் பார்க்கிறீர்களோ அவர்கள் எல்லோருக்கும், அளவற்ற தம்முடைய தெய்வீக அன்பினை இதேவண்ணமாக அருளிச்செய்வார். உலக மனுஷரை பிரியப்படுத்தி வாழ்வதால் எந்த பயனும் இல்லை. அவர்களது அன்பு திடீரென்று மாறிப்போம். நாமும் ஏமாந்து போக நேரிடும். ஆனால், ஆண்டவரின் அன்போ முற்றுமுடிய நிலைத்திருக்கும்.

எனக்கு அருமையானவர்களே, இன்று உங்கள் நிலைமையை சற்று யோசித்துப் பாருங்கள். இயேசு கிறிஸ்துவின் அன்பு உங்கள் வாழ்வையும் மாற்றியிருக்கிறதா? அவர் உங்களுக்குள் இரட்சகராக இருக்கிறாரா? என்பதை சிந்தித்துப் பார்த்து, அவருக்கு பிரியமான ஜனங்களாக வாழ உங்களை ஒப்புக்கொடுங்கள் (எபே. 5:2).

ஜெபம்: "அன்பு தெய்வமே! இன்று என் வாழ்வையும் இந்த தெய்வீக ஆசீர்வாதத்தினால் நிரப்பும். இந்த உலகத்தில் எத்தனையோபேர் அன்பு பாராட்டினாலும் உம்முடைய தெய்வீக அன்பே ஒப்பில்லாதது. ஆகவே, உம்முடைய பிரியமான பிள்ளையாக நான் என்றென்றும் இருக்க எனக்கும் அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கண்கள் திறக்கப்பட்டு ஆண்டவரை அறிந்திருக்கிறோமா?

"அப்பொழுது அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு, அவரை அறிந்தார்கள்"
(லூக்கா 24:31).

என் பேரன் சாமுவேல் பால் தினகரன் ஒரு அருமையான பாடலைப் பாடுவான். "என் கண்களைத் திறந்தருளும் ராஜா" என்பதுதான் அதனுடைய முதலடி. இந்த அனுபவம் எத்தனை அருமையானது. இந்த உலகத்தில் எதையெதையோ கண்களால் பார்க்கிறோம். வேண்டாத காரியங்களை காண்பதின் மூலம் நம்முடைய கண்கள் அசுத்தமடைகின்றன. ஆனால், ராஜாதி ராஜாவாகிய இயேசுவை மட்டும் ஆவலோடு காண்கிற கண்களோ அவரை ஆழமாய் அறிந்துகொள்ளும் பாக்கியத்தை பெறும் (லூக்கா 24:31).

ஒரு பெற்றோர் தங்கள் பிள்ளைகளையெல்லாம் பக்தியில், ஆண்டவரையே நோக்கிப் பார்த்து நடக்கும் வழியில் நடத்தி வந்தனர். எனினும் அவர்கள் மகன்களுள் ஒருவன் எப்பொழுதும் அவர்களுக்கு எதிராக பேசுவான். தன் மனவிருப்பம்போல் தன் வாழ்வை நடத்தி சென்றான். பெற்றோரோ பொறுமையாய் அவனுக்காக பிரார்த்தனை செய்து வந்தார்கள். இயேசு என்ற பெயரை கேட்டாலே அவனுக்கு கோபமாக வரும். அப்படிப்பட்ட சூழ்நிலையிலே ஒருநாள் அவன் விரும்பி நாடின ஒரு ஆசீர்வாதம் அவனுக்கு கிடைக்காமல், அது வேறொருவர் கைவசமாயிற்று. அப்பொழுது மனமுடைந்து, தற்கொலை செய்துகொள்ளும் வழியைத் தேடினான். அப்படி தனிமையில் அவன் சென்று கொண்டிருந்தபொழுது, பகல் வேளையில் சவுலுக்கு கொடுத்த தரிசனம்போல், ஆண்டவராகிய இயேசுவின் தரிசனத்தைக் கண்டான். அப்படியே பதறிப்போனான். "மகனே! நீ வெறுத்துத் தள்ளுகிற இயேசு நானே! உனக்காகவே என் ஜீவனை கொடுத்தேன். இன்று நீ கவலையோடு இருக்கும் காரியத்திலும் நான் உனக்கு வெற்றி தருவேன். நீ என்னையே பார்த்து என் வழிகளில் நடப்பாயா?" என்று கேட்டார். உடைந்த உள்ளத்தோடு அந்த இடத்திலேயே தன்னை ஆண்டவருக்கு அர்ப்பணித்தான். கடினமான உள்ளம் கொண்ட அவனை கர்த்தர் அன்போடு தேடிவந்து, தன்னைக் காணும்படி செய்தார். ஆம்! ஆண்டவரை தரிசித்ததினால் சவுல் பவுலாக மாறினதுபோல அவனும் ஆண்டவருக்கு உகந்த மகனாக, விரும்பிய ஆசீர்வாதத்தை நிறைவாய் பெற்று அனுபவித்தான்.

அன்பானவர்களே! உங்கள் கண்கள் இவ்வாறு திறக்கப்பட்டிருக்கிறதா? இயேசுவை தரிசிக்கும் பாக்கியத்தை பெற்றிருக்கிறீர்களா? ஒருவேளை தரிசனம் பெறாவிட்டால், ஆண்டவரை நோக்கி மன்றாடுங்கள். அப்பொழுது இந்த வாலிபனுக்கு தரிசனம் அருளிய ஆண்டவர் உங்கள் கண்களையும் திறப்பார். நீங்களும் அவரை அறிந்துகொள்வீர்கள். அவர் உங்களுக்கு மிகவும் சமீபமாய் இருக்கிறார் (லூக்கா 10:23).

ஜெபம்: "அன்பு இரட்சகரே! இந்த உலகத்தில் யாரும் கொடுக்கக் கூடாத ஒரு பெரிய ஆசீர்வாதம் நீர் சிலுவையில் உம்மையே தியாக பலியாக அர்ப்பணித்து, அருளிச் செய்த இரட்சிப்பு! உம்முடைய பிரசன்னத்தை கண்களால் காணவும், உம்மை தரிசிக்கவும், உமக்கு பிரியமான வாழ்க்கை வாழவும் இன்றுமுதல் உம் தெய்வீக கிருபையை நிறைவாய் என் வாழ்வில் அருளிச்செய்யும். உம்மை அறிகிற தெய்வீக அறிவினால் என்னை நிரப்பும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

நீங்கள் மகிழ்ச்சியும் சமாதானமும் பெறுவீர்கள்!

"நீங்கள் மகிழ்ச்சியாய் புறப்பட்டு, சமாதானமாய் கொண்டுபோகப்படுவீர்கள்..."
(ஏசாயா 55:12).

இந்த உலக வாழ்வில் மெய்யான சமாதானத்தை நாடி, நாம் அனுதினமும் அலசடிப்படுகிறோம். பெண்கள் கூட்டங்களிலே அநேகம் பெண்கள் என்னிடத்தில் பகிர்ந்துகொள்கிற ஒரு காரியம், "அம்மா, என் குடும்ப வாழ்க்கையில் சமாதானமேயில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் காணப்படுகிறார்கள். பிள்ளைகள் வாழ்க்கையில், புருஷன் வாழ்க்கையில் இயேசு தரும் சமாதானம் இல்லை. எனக்காக ஜெபியுங்கள்" என்பதுதான். ஆனால், இந்த வசனத்தை பாருங்கள், நாம் நம் அனுதின வாழ்வில் தேவன் தரும் தெய்வீக சமாதானத்தை பெற்று, மகிழ்ச்சியாய் வாழலாம் என்ற ஒரு நிச்சயத்தை கொடுக்கிறது. எத்தகைய துன்பம் நம்மை வேதனைப்படுத்தினாலும் எல்லாவற்றின் மத்தியிலும், சமாதானத்தின் தேவனை நோக்கிப் பார்க்கும்பொழுது, அவர் தெய்வீகமானதும், உலகம் தரக்கூடாததுமான தமது சமாதானத்தினால், அவரையே நாடித்தேடுகிற ஒவ்வொருவரையும் நிச்சயம் நிரப்புவார் (யோவான் 14:27, பிலி. 4:7).

ஒரு தம்பதியருக்கு அழகான குழந்தையொன்று பிறந்தது. குடும்பத்தில் ஒரே சந்தோஷம். ஆனால், சில மாதங்கள் கழித்து திடீரென்று அந்த குழந்தை மரித்துப்போனது. உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும் இந்த தம்பதியரை எப்படி ஆற்றித் தேற்றுவது? என்ன வார்த்தை சொன்னால் அவர்கள் மனம் ஆறுதலும், சமாதானமும் பெறும் என்று ஒரே கவலை! ஒவ்வொருவராக மெதுவாக அந்த வீட்டிற்குள் சென்றனர். ஆனால், அங்கு அவர்கள் கண்ட காட்சி அவர்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தை உண்டுபண்ணியது. காரணம், அந்த இழப்பின் மத்தியிலும் அவர்கள் இருவருடைய நாவிலும் "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்ற வார்த்தைகள் மட்டும் வெளியே வந்தன. கண்ணீரையெல்லாம் கர்த்தர் மாற்றி, தெய்வீக சமாதானத்தினால் அவர்கள் உள்ளத்தை நிரப்பியிருப்பதைக் கண்டு அவர்களை பார்க்க சென்ற ஒவ்வொருவரும் அதே சமாதானத்தை தங்கள் உள்ளத்திலும் பெற்றுக்கொண்டனர். இது எவ்வளவு ஆச்சரியமாக இருக்கிறது பாருங்கள்! ஆண்டவர் சமாதானத்தை தரும்பொழுது, தெய்வீக மகிழ்ச்சியையும் கூடவே சேர்த்து கொடுப்பார். பாடுகள், பிரச்சினைகள், போராட்டங்கள், நிந்தைகள், அவமானங்கள் யாவற்றின் மத்தியிலும் கர்த்தருக்குள் சந்தோஷமாக, சமாதானமாக இருக்க அவர் தமது தெய்வீக பெலனால் நம்மை நிரப்புவார் (சங். 138:3).

ஆகவே, எனக்கு அன்பானவர்களே! எந்த நிலைமையிலும் தளர்ந்துபோகாமல் இந்த வசனத்தின்படி, தேவ சமாதானம், தேவன் தரும் சந்தோஷம் இவைகளினால் உங்கள் உள்ளம் நிரப்பப்படுவதற்காக கர்த்தரை உறுதியாய் நம்பி, விசுவாசித்து பெற்றுக்கொள்ளுங்கள். பரிசுத்த ஆவியானவரால் நிறைந்து தேவாசீர்வாதம் பெறுங்கள் (ரோமர் 14:17).

ஜெபம்: "என் அன்பு இரட்சகரே! இன்று எனக்கும் உமது தெய்வீக சமாதானத்தை நீர் அருளிச்செய்கிறவராயிருக்கிறபடியால், உம் பாதத்திலே விழுந்து உமக்கு நன்றி செலுத்துகிறேன். ஒவ்வொரு நாளும் இந்த தம்பதியரைப்போல, கண்கலங்காமல் உமக்குள் பெலனடைந்து திடமாய், தைரியமாய் இருக்க அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

பயப்படா(தே)தீர்கள்! நம்மோடிருக்கிறவர்கள் அதிகம்!

"பயப்படாதே: அவர்களோடிருக்கிறவர்களைப்பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம்"

(2 இராஜாக்கள் 6:16).

நமக்கு எதிராக பிசாசும் அவனுடைய மக்களும் எதிர்த்துவரும்போது, பயப்பட வேண்டிய அவசியமில்லை. தேவ மனிதனாகிய எலிசாவுக்கு விரோதமாக ஒரு பெரிய சேனை எழும்பி வந்தபொழுது, ஆண்டவருடைய காக்கும் கரம் அவனோடிருந்தது (சங். 118:6, எபி. 13:6). அவன் பயந்து கொண்டிருந்த தன்னுடைய வேலைக்காரனிடத்தில் சொன்ன விசுவாச வார்த்தைகளைத் தான் நாம் மேலே காண்கிறோம். எலிசாவுக்கு இருந்த இதே விசுவாசத்தை நாமும் நம் வாழ்வில் கொள்வோம். எத்தனைபேர் எதிர்த்து வந்தாலும் நான் பயப்படமாட்டேன். ஆண்டவர் என்னோடு இருக்கிறபடியினால் அவரே என்னைக் காப்பாற்றுவார் என்று தைரியமாய் கர்த்தரை உறுதியாய் பிடித்துக்கொள்வோம் (உபா. 31:8).

ஒரு அலுவலகத்தில் பணிபுரிந்த ஒருவர் மிகவும் அமைதலாக, பொறுமையாக தன்னுடைய பணிகளை திறம்பட செய்து முடிப்பார். காரணம், அவர் இயேசுவின் அடியாராக வாழ்ந்து வந்தார். இதை அறிந்த அவருடைய அலுவலக அதிகாரி, இயேசுவை வெறுத்தபடியினால் இவர் மீது இன்னும் அதிகமான வெறுப்பு கொண்டிருந்தார். கடினமாய் வேலை செய்தாலும் குறை சொல்லிக் கொண்டேயிருப்பார். இவரோ தன் வாயை இறுக மூடிக்கொண்டு "இயேசுவே, எனக்கு உதவி செய்யும்" என்று மட்டும் மனதிற்குள் ஜெபித்துக் கொண்டேயிருப்பார். ஒருநாள் ஒரு கடினமான வேலையை மிகக் குறுகிய காலத்தில் முடித்து கொடுக்கும்படி அந்த அதிகாரி உத்தரவிட்டார். அந்த குறுகிய நாட்களுக்குள் அதை முடிக்கவே முடியாது என்று இவருக்கும் தெரியும். எனினும் அதை வாங்கிக்கொண்டு மறு வார்த்தை பேசாமல் மனதிற்குள்ளே ஆண்டவரை நோக்கி பிரார்த்தனை செய்தார். "ஆண்டவரே, எலிசா சொன்னதுபோல, என்னோடிருக்கிற நீர், ஏராளம் உதவியை அனுப்பி, என்னை காப்பீர் என்று விசுவாசித்து, உமக்கு நன்றி மாத்திரம் சொல்லுகிறேன்" என்றார். அவருடைய விசுவாசத்தின்படியே அவரோடு பணிபுரிந்த பலரும் அவர்மேல் பரிதாபப்பட்டு ஆளுக்கொரு வேலையை செய்து கொடுத்தார்கள். அதிகாரி கொடுத்த நாளுக்கு முன்னதாகவே அந்த வேலையை முடித்து அவரிடம் எடுத்து சென்றபொழுது, அதிகாரி மிகவும் ஆச்சரியப்பட்டு, "உண்மையாகவே நீ ஒரு தேவனுடைய மனுஷன், நீ தொடர்ந்து அவர் சேவையை செய். உன் ஆண்டவர் உன்னை மென்மேலும் ஆசீர்வதிப்பார்" என்று மனம் மாறி ஆசீர்வதித்தார். அதன்பிறகு அவருக்கு மிகுந்த கனம் கொடுத்து, அன்புகூர்ந்தார்.

ஆம்! பிரியமானவர்களே, கர்த்தரை உண்மையாய் தேடும்பொழுது நம்முடைய உதவிக்காக, பாதுகாவலுக்காக பலரையும் கர்த்தரே அனுப்பி நம்மைக் காப்பாற்றுவார். ஆகவே, நீங்களும் சோர்ந்து போகாமல் ஜெபம்பண்ணுவதில் மாத்திரம் ஜாக்கிரதையாய் இருந்து, ஆசீர்வாதத்தை பெறுங்கள் (2 தீமோ. 4:17).

ஜெபம்: "என் அன்பு இரட்சகரே! எந்தவித கடினமான சூழ்நிலையிலும் உம்மை நோக்கிப் பார்க்க அதன்மூலம் எலிசா விசுவாசத்தோடு அந்த சூழ்நிலையில் உம்முடைய ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டதுபோல எனக்கும் இன்றும் என்றும் தெய்வீக ஆசீர்வாதத்தை தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"

கர்த்தர் உங்களை வர்த்திக்கப்பண்ணுவார்!

"கர்த்தர் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் வர்த்திக்கப்பண்ணுவார்"
(சங்கீதம் 115:14).

இது ஒரு அருமையான வாக்குத்தத்தம். குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிற ஒவ்வொருவரும் இதை தினமும் ஆண்டவருடைய சமுகத்திலே வாசித்து, இதன்படி என்னை ஆசீர்வதித்து வழிநடத்தும் என்று கொர்நேலியுவைப்போல் கருத்தாய் வேண்டுதல் செய்வோம் (அப். 10:2). அதன்மூலம் தொல்லை கொடுக்கிற மக்கள் நமக்கு முன்பாக எவ்வளவாய் சீறி எழும்பினாலும் வாக்குத்தத்தம் செய்த ஆண்டவர் உண்மையுள்ளவராக, மாறாதவராக இந்த ஆசீர்வாதத்தை அப்படியே நமக்கு அருளிச்செய்வார். குழந்தை இல்லாதவர்களும், குழந்தை பெறுவதில், கர்ப்பம் தரிப்பதில் பிரச்சினை இருப்பதால் நம்பிக்கையற்ற நிலையில் உள்ள தம்பதிகளும்கூட, விசுவாசம், நம்பிக்கையுடன் ஆபிரகாமைப்போல் கர்த்தரை நோக்கி இந்த வாக்குத்தத்தத்தை பற்றிப்பிடித்து வேண்டுதல் செய்தால், கர்த்தர் "உன் விசுவாசம் பெரிது" என்று சொல்லி உங்களையும் ஆசீர்வதித்து, நினைத்தருளுவார் (ரோமர் 4:21,22).

ஒரு தம்பதியருக்கு திருமணமாகி பல வருடங்களாகியும் குழந்தை பாக்கியம் கிடைக்கவில்லை. வழக்கம்போல புருஷனுடைய வீட்டில் "இவள் மலடி! என் மகனுக்கு வேறு திருமணம் செய்ய வேண்டியதுதான்" என்று பேசிக்கொண்டார்கள். அந்த பெண் தன் புருஷனிடம், எப்படியாவது ஒரே ஒருமுறை என் மீது இரக்கம் காண்பியுங்கள் என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள். வேதத்தை கருத்தாய் அவள் வாசித்துக்கொண்டிருந்த பொழுது, இந்த வாக்குத்தத்தத்தை வாசித்தாள். "உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் வர்த்திக்கப்பண்ணுவார்" என்றால், எனக்கும் பிள்ளைகளை ஆண்டவர் கொடுப்பது நிச்சயமான காரியம் தானே! என்ற ஒரு அசைக்க முடியாத விசுவாசம் அவளுக்குள் ஆண்டவர்மீது பிறந்தது. நேரம் கிடைக்கும்பொழுதெல்லாம் கருத்தாய் உபவாசித்து ஜெபித்து வந்தாள். கர்த்தர் யாவரும் வியக்கும்வண்ணம் அவளுடைய கர்ப்பத்திலே ஒரு குழந்தையை கொடுத்தார். அவள் வாழ்வு மலர்ச்சியடைந்தது. வாக்கு மாறாத கர்த்தர் அப்படியே தம் வார்த்தையை நிறைவேற்றினார்.

என் அன்புக்குரியவர்களே! இதுபோன்று எத்தனையோ இயலாமைகள், குறைவுகள் உங்கள் குடும்ப வாழ்விலும் வரலாம். எதுவாயினும் கவலைப்பட்டு, நம்பிக்கையற்று பாரப்படாதிருங்கள் (சங். 55:22). இந்த பெண்ணுக்கு மனமிரங்கி உதவி செய்ததுபோல இன்று உங்களையும் சகல காரியங்களிலும் குடும்பமாக வர்த்திக்கப்பண்ணுவார். உங்கள் விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்! (1 யோவான் 5:4) என்ற வசனத்தின்படி, கர்த்தர் மேல் முழுநம்பிக்கை, விசுவாசம் கொண்டவர்களாக, அவரிடம் உங்கள் வாழ்வின், குடும்ப வாழ்வின் சகல தேவைகளையும் சொல்லி கேளுங்கள். சங்கீதம் 55:22ன்படி அவர் நிச்சயம் உங்களை ஆதரிப்பார். வர்த்திக்கப்பண்ணுவார்.

ஜெபம்: "அன்பு இரட்சகரே. இந்த உலகில் பல்வேறு இயலாமைகளினால் எத்தனையோ வேதனை. நீர் குறைவின்றி நிறைவாய் ஆசீர்வதிக்கிறவர் என்பதை மேற்கண்ட வசனத்தில் நான் அறிந்துகொண்டேன். அதேபோன்று இன்று என் வாழ்வையும் நீர் வர்த்திக்கப்பண்ணி சகல காரியங்களையும் நிறைவாக்குகிற படியால் உமக்கு நன்றி செலுத்துகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"

நீங்கள் உயிரடைந்து, நான் கர்த்தர் என்பதை அறிந்துகொள்ளுங்கள்!

"நான் உங்கள் மேல் நரம்புகளை சேர்த்து, உங்கள்மேல் மாம்சத்தை உண்டாக்கி, உங்களைத் தோலினால் மூடி, உங்களில் ஆவியைக் கட்டளையிடுவேன்; அப்பொழுது நீங்கள் உயிரடைந்து, நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்..."
(எசேக்கியேல் 37:6).

நம்முடைய வாழ்க்கையில் மரித்ததுபோன்ற அல்லது எல்லாவற்றையும் இழந்தது போன்ற நிலைமையை நாம் சந்திக்க நேரிடுகிறபொழுதெல்லாம் சோர்வு நம்முடைய உள்ளத்தை நெருக்குகிறது (நீதி.24:10). இன்று தினசரி பத்திரிகையில் பார்ப்போமானால் பலர் தற்கொலை செய்துகொள்வதைப் பற்றி வாசிக்கிறோம். காரணம், அவர்களுடைய வாழ்விலே எதையோ இழந்துபோன நிலைமை. அல்லது வேதனையினிமித்தம் உயிரிழந்த நிலையில் இருப்பதுபோன்று இருக்கலாம். ஆனால், ஆண்டவரை அறிந்திருக்கிற நீங்கள் சோர்வுக்கு இடங்கொடாமல் புது உயிர், புது கிருபை பெற்று கர்த்தருக்குள் நம்பிக்கையோடு காத்திருங்கள் (ரோமர் 8:11).

ஒரு ஊரிலே நடந்த ஒரு பெரிய எழுப்புதல் கூட்டத்தின்மூலம் அநேக வாலிபர்கள் ஆண்டவரை இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள். அதில் இரண்டு வாலிபர்கள் மாத்திரம், இவைகளெல்லாம் மாய்மாலமான காரியங்கள் என்று அலட்சியம் செய்தனர். சில மாதங்கள் கழித்து, இவர்கள் இருவரும் இராணுவத்திற்கு பணிபுரிய சென்றனர். அந்த சமயத்தில் ஒரு யுத்தம் வந்தபடியினால், அவர்கள் இருவரும் அந்த யுத்தத்தில் பங்கெடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதுவரை தங்கள் வாழ்விலே, "இந்த உலகிலே வாழ்ந்திருக்கும் காலம் வரை சந்தோஷமாய் இருப்போம், எதைக் குறித்தும் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை" என்றெல்லாம் எண்ணி இருவரும் மகிழ்ச்சியாக இருந்தார்கள். ஆனால், அவர்கள் எதிர்பாராதவிதமாக யுத்தம் கடுமையாக வந்த நிலையில், மரண பயம் அவர்களைப் பிடித்தது. "ஐயோ! இதில் மரித்தால் ஒருவேளை நாம் நம் ஊரிலே எழுப்புதல் பிரசங்கத்தில் கேட்டதுபோல் நரகத்திற்கு போய் விடுவோமோ?" என்ற எண்ணம் ஏற்பட, இருவரும் ஆண்டவரிடத்திலே தங்கள் இருதயத்தை அன்றே ஒப்புக்கொடுத்தார்கள். அப்பொழுது அவர்கள் மரண பயம் அவர்களைவிட்டு நீங்கி, ஒரு தெய்வீக சந்தோஷம், புதிய நம்பிக்கை பெற்று புத்துயிர் அடைந்தார்கள். கர்த்தரே தெய்வம் என்று அறிந்துகொண்டார்கள். இந்த நிலையில் அவர்களுள் ஒருவன் இந்த நம்பிக்கையை உறுதியாக பெற்றவனாக யுத்தத்தில் மரித்துப் போனான். ஆனால், அடுத்தவனோ, கடைசிவரை யுத்தத்தில் உயிரோடிருந்து, யுத்தம் முடிந்தபின், தன் ஊரில் தான் அறிந்த எல்லோருக்கும் முன்பு நற்சாட்சி கூறி ஆண்டவரை மகிமைப்படுத்தினான்.

எனக்கு அன்பானவர்களே! இன்று நீங்களும்கூட மரித்த நிலைமையில் இருக்கிறீர்களா? ஆவியானவர் சொல்கிறபடி புதிய ஆவியைப்பெற்று, உயிரடைந்து இந்த இன்பமான வாழ்க்கையைப் பெற்று கர்த்தருக்கென்று வாழுங்கள் (எபே. 4:23,24).

<u>ஜெபம்:</u> "என் அன்பு தெய்வமே! மரித்துப்போன என் வாழ்வை இன்று நீர் உயிர்ப்பித்து, எல்லாக் குறைவுகளையும் மாற்றி உயிர்பெற செய்து உமது சந்தோஷத்தால் இன்றும் என்றும் நிரப்புவீராக. இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

தேவன் சமாதானத்திற்கு தேவனாக இருக்கிறார்!

"தேவன் கலகத்திற்கு தேவனாயிராமல், சமாதானத்திற்கு தேவனாயிருக்கிறார்; பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லாவற்றிலேயும் அப்படியே இருக்கிறது"

(1 கொரிந்தியர் 14:33).

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் கசப்பான வைராக்கியம், விரோதம், பொறாமை, அகம்பாவம் போன்ற பிசாசின் குணங்கள் காணப்படுவதினால் அங்கு தெய்வீக சமாதானம் இருப்பதில்லை. 2 தீமோத்தேயு 3:1–5 வரை உள்ள வசனங்கள் இப்படிப்பட்ட வாழ்க்கையைப் பற்றியே விளக்குகிறது. அங்கே கலகமும் சகல துர்ச்செய்கைகளுமுண்டு என்றும் வாசிக்கிறோம் (யாக். 3:14–16). ஆனால், இப்படிப்பட்ட கசப்பான வாழ்க்கை வாழ்கிற ஒவ்வொரு மனுஷனையும், மனுஷியையும், கர்த்தர் தம்முடைய கிருபையினால் தம்மண்டைக்கு திருப்பும்பொழுது, அவர் தரும் ஆசீர்வாதம் எத்தனை தெய்வீகமானது! நீதியின் கனியாகிய சமாதானத்தை ஒவ்வொரு உள்ளத்திலும் நிறைவாய் அவர் கொடுக்கிறார் (யாக். 3:18). கடின இருதயம், சதையான இருதயமாக தேவ சமாதானத்தினால் மாறுகிறது. மேலும், ஆண்டவரை உறுதியாய் பற்றிக்கொண்டு அவரையே நம்பும்பொழுது, தேவன் பூரண சமாதானத்தையும் அருளிச்செய்கிறார்.

ஒரு குடும்பத்தில் கணவனுக்கும் மனைவிக்குமிடையே எப்பொழுதும் சண்டைதான். அக்கம்பக்கத்தில் உள்ளவர்களெல்லாம் இதை கேட்டுக் கேட்டு அவர்களை கண்டாலே ஒருவருக்கும் பிடிக்காது. அவர்கள் ஒரு வழியாய் வந்தால் மற்றவர்களெல்லோரும் வேறு வழியாய் திரும்புவார்கள். இரண்டு பேரும் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு வாய்க்கு வந்தபடி பேசி, சண்டை போடுவார்கள். ஆனால், தேவன் தம்முடைய தெய்வீகக் கிருபையினால் ஒரு சந்தர்ப்பத்தில் அந்த அம்மையாருடைய உள்ளத்தை உலகம் தரக்கூடாத தமது தெய்வீக சமாதானத்தினால் நிரப்பினார். அதன்பின்னர், மீண்டும் சண்டைக்கான சூழ்நிலை வந்தபொழுது, கணவன் வழக்கம்போல் வாய்க்கு வந்தபடி திட்டினார். ஆனால், கர்த்தருடைய சமாதானத்தை பெற்ற அந்த மனைவியோ, வாய் திறவாது தன் அறைக்கு எழுந்து சென்று விட்டாள். இதனை, தொடர்ந்து பலமுறையும் கண்ட கணவருக்கு ஒரே ஆச்சரியம்! அப்பொழுதுதான் மனைவி, ஆண்டவருடைய அன்பைப் பற்றி மெதுவாக அவருக்கு கூறினாள். குடும்பத்திலே தேவ சமாதானம் நதிபோல இருவர் உள்ளத்திலும் புறப்பட்டு வந்தது. கணவன் மனைவிக்குள் மாத்திரமின்றி, பிள்ளைகளின் சமாதானமும் பெரிதாயிருந்தது (ஏசாயா 54:13).

அன்பானவர்களே! இன்று உங்கள் குடும்பத்திலேயும், உங்கள் உள்ளத்திலேயும் இந்த தெய்வீக சமாதானத்தை ஆண்டவர் நிறைவாய் கொடுக்க வாஞ்சிக்கிறார். உங்கள் பாரங்கள், மனவேதனைகளையெல்லாம் ஆண்டவரிடத்தில் அப்படியே குழந்தையைப் போல ஊற்றிவிடுங்கள். உங்கள் கவலைகளையெல்லாம் மாற்றி தமது தெய்வீக சமாதானத்தை தனியாகவும், குடும்பமாகவும் நீங்கள் அனுபவிக்க ஆண்டவர் உங்களுக்கும் அருள்புரிவார் (2 பேதுரு 3:14). இதை நிறைவேற்றுவதில் ஜாக்கிரதையாயிருந்து எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் பெறுங்கள் (பிலி. 4:7).

ஜெபம்: **"ஆண்டவரே! சமாதானப் பிரபுவே! நீர் சமாதானத்தின் தேவனாக என் உள்ளத்திலும், என் இல்லத்திலும் இன்றுமுதல் நிறைவாய் வந்து தங்கி என்னை ஆசீர்வதித்து, உலகம் தரக்கூடாத சமாதானத்தை நானும் என் குடும்பமும் அனுபவிக்கும்படி அருள்தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"**

நாம் வேத எழுத்துக்களை எப்படி அறிந்திருக்கிறோம்?

"அப்பொழுது யூதர்கள்: இவர் கல்லாதவராயிருந்தும் வேத எழுத்துக்களை எப்படி அறிந்திருக்கிறார் என்று ஆச்சரியப்பட்டார்கள்" (யோவான் 7:15).

இந்த கேள்விக்கு நாம் என்ன, மறுஉத்தரவு சொல்லும் நிலையில் இருக்கிறோம்? இன்றைய நாட்களில் வேதபுத்தகத்தை கருத்தாய் வாசித்து சங்கீதம் 1:2–ல் காண்கிறபடி, அதை தியானித்து பாக்கியம் பெறுகிறவர்கள் மிக மிக சிலரே. ஆனால், ஆண்டவரைப்பற்றிய மேற்கண்ட சாட்சியைப் பாருங்கள். அவர் கல்லாதவராக இருந்தும், வேத எழுத்துக்களை எப்படி அறிந்திருந்தார் என்று அவரைக்குறித்து சாட்சி கொடுத்தார்கள். அவர் வேத வசனங்களைக் கொண்டே நமக்கு முன்மாதிரியாக இருக்கும்படி பிசாசை ஜெயித்தார். இன்று உங்களுடைய நிலைமை என்ன? வேத வசனங்களை வாசிப்பதிலும், தியானிப்பதிலும் அவரிடம் இருந்த தெய்வ பயம் உங்கள் வாழ்வில் உண்டா? வேதவசனத்தை வாஞ்சையுடன் கருத்தாய் வாசிக்கும்பொழுது, அதன்மூலம் நீங்கள் நித்திய ஜீவன் பெறலாம் (யோவான் 5:39). அதோடுகூட, வேதவசனத்திலே அன்புகூர்ந்து, அதை நேசிக்கிற, வாசிக்கிற குடும்பங்களிலே, தனிப்பட்ட மக்கள் உள்ளத்திலே அவர் பிரசன்னமாயிருப்பார். அவர்களோடு அவரும் தங்குவதில் பிரியமாயிருப்பார் (யோவான் 14:23).

ஒரு மனிதன் மரணத்திற்கேதுவான வியாதியினிமித்தம் மருத்துவமனையில் இருந்தான். மரித்துப்போய்விடுவேனோ என்ற பயம் அவனை ஆட்கொண்டது. கிறிஸ்தவனாக இருந்தும் அதுவரைக்கும் வேதத்தை கொஞ்சமும் வாசித்தது கிடையாது. ஆனால், அவன் தலையணையின் அருகில் மட்டும் வேதபுத்தகம் இருந்தது. அவ்வளவு தான்! அதை வாசிக்க அவனுக்கு விருப்பம் இல்லை. ஆனால், அன்று வியாதியினிமித்தம் கவலையினால் நிறைந்தவனாய் எடுத்து திறந்தான். அப்பொழுது நீதிமொழிகள் 4:22 என்ற வசனம் அவன் கண்களில் பட்டது. "வேதவசனங்களை கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம்" என்று வாசித்தபொழுது, ஒரு கணம் திகைத்துப்போனான். அதற்கு பிறகு அவனுக்கு நேரம் கிடைக்கும்பொழுதெல்லாம் வேதபுத்தகத்தை வாசித்துக்கொண்டே வந்தான். சில நாட்கள் கழித்து மருத்துவர் வந்து பரிசோதனை செய்தபொழுது, "உன் சரீரத்திலே மிகப் பெரிய மாறுதல் தெரிகிறதே. நீ வேறு மருந்து ஏதாவது சாப்பிடுகிறாயா?" என்று கேட்டபொழுது, வேதபுத்தகத்தை எடுத்துக் காண்பித்து, நடந்ததைக் கூறினான்.

ஆம்! பிரியமானவர்களே, இன்றும் தேவனுடைய வார்த்தை உங்களோடு பேசுகிறது என்பதை மறந்துபோகாதீர்கள் (நீதி. 6:22). விசுவாசத்தோடு, வாஞ்சையோடு கருத்தாய் வாசியுங்கள். கர்த்தர் உங்களோடு சமயத்திற்கேற்ற வார்த்தைகள் மூலமாய் நேரிடையாகப் பேசி உங்களை ஆற்றித்தேற்றி, ஞானத்தினால் நிரப்பி, அழகாய் ஆச்சரியமான முறையில் நடத்தி, பாக்கியத்தை அருளுவார் (ரோமர் 10:17).



ஜெபம்: "அன்பு இரட்சகரே, உம்முடைய வேத வார்த்தைகளை வாசிக்கவும், தியானிக்கவும் இன்றுமுதல் எனக்கு கிருபை தாரும். இந்த சகோதரன் வசனம் மூலம் ஆரோக்கியம் பெற்றதைப்போல, என் வாழ்விலும், சரீரத்திலும், ஆன்மாவிலும் ஆரோக்கியம் தந்து, என்னையும் சோர்ந்து போகாதபடி அரவணைத்து காத்துக்கொள்ளும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

மனந்திரும்புதல் தருகிற அன்பின் தேவன்!

"...நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்" (மாற்கு 2:17).

உலகில் தாம் சிருஷ்டித்த அனைத்து மக்களும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார் (1 தீமோ. 2:4). அதன்படி, ஒவ்வொரு மனிதனும் கர்த்தராகிய தம்மை தடவியாகிலும் கண்டுபிடிக்கும்படி அவர் வழிகளை திறக்கிறார் (அப். 17:27). ஒவ்வொருவரையும் ஒவ்வொருவிதங்களில் தம்முடைய மந்தைக்குள் சேர்த்துக்கொள்ள விரும்புகிறார். கல்லான இருதயங்களையும்கூட சதையான இருதயங்களாக மாற்றும் அதிசயமான வல்லமை அவருக்கு உண்டு (எசே. 36:26). பாவியான ஸ்திரீயாயிருந்த ஒரு பெண்ணும் (லூக்கா 7:37,39), "இவன் பாவி" (லூக்கா 19:7) என்று ஊராரில் பலராலும் குறை கூறப்பட்ட சகேயுவின் மீதும் தெய்வீக அன்பு கொண்டு, "ஸ்திரீயே! உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ" (லூக்கா 7:50) என்றும், "இன்றைக்கு இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது" என்றும் (லூக்கா 19:9) ஆண்டவர் இயேசு எவ்வளவு அழகாய் கிரியை செய்திருக்கிறார். ஆம்! அவர்கள் ஆண்டவர் பிரசன்னத்தை நாடித்தேடி வந்தபொழுது, அவ்விதமான தெய்வீக அன்பை பெற்று அனுபவித்தார்கள்.

கிறிஸ்தவ குடும்பத்திலே பிறந்து வளர்ந்த ஒரு வாலிபனிடம், 'நீ கிறிஸ்தவனா?' என்று யாராவது கேட்டால், அவனுக்கு அதிகமான கோபம் வரும். 'கிறிஸ்தவன்' என்றால் 'அல்லேலூயா கூட்டத்தை சேர்ந்தவன்' என்பது அவனுடைய தவறான எண்ணம். ஆனால், இந்த எண்ணங்களையும் தலைகீழாக மாற்றியமைக்கும் வல்லமை ஆண்டவருக்கு உண்டு என்பதை அவன் மறந்து போனான். கர்த்தர் அவனுடைய குறைவுகளையெல்லாம் பார்த்து, அவன் சோர்ந்துபோன வேளையிலே அவனை சந்தித்து அவனை ஆசீர்வதித்து, முடிவில் 'நான் கிறிஸ்தவன்' என்று அவன் ஆணித்தரமாக சாட்சி சொல்லும் வரை அவனை விடாமல் தொடர்ந்து பிடித்து அவன் வாழ்வை தலைகீழாய் மாற்றினார். ஆண்டவருடைய அன்பு எத்தனை பெரியது என்று பாருங்கள்!

ஆம், இன்று மனந்திரும்பாமல், கடின இருதயத்தோடு இருக்கிற ஒவ்வொருவரையும் அவ்விதமாகவே அவர் தமது அன்பின் கயிறுகளால் அணைத்து இழுத்து, அவர்கள் வாழ்வை செழிக்க செய்ய விரும்புகிறார் (ஓசியா 11:4). கிறிஸ்துவை உடைய கிறிஸ்தவ வாழ்க்கை உங்களில் இல்லாமல் இருந்தால், இப்பொழுதே முழங்காற்படியிட்டு, உங்கள் இருதயத்தை திறந்து "ஆண்டவரே, என் வாழ்வை உமக்கு பிரியமானதாய் மாற்றும். என் குறைவையெல்லாம் நீரே மாற்றி, உம் அன்பை உணர்ந்து, நல்வழியில் வாழ அருள்தாரும்" என்று அவரை நோக்கி வேண்டுதல் செய்யுங்கள். அப்பொழுது உங்களை கிறிஸ்துவினுடையவர்களாக, ஆண்டவரே தமது தெய்வீக வல்லமையினால் மாற்றுவார் (கலா. 5:24). பாவம், சாபம் யாவும் மாறி பரிசுத்த வாழ்வை ஆண்டவர் தருவார்.

<u>ஜெபம்:</u> "அன்பு தெய்வமே, உம்முடைய அன்பு எத்தனை விலையேறப்பெற்றது என்பதை அறிந்து, என் வாழ்வை <u>இன்றுமுதல்</u> உமக்கு சொந்தமாக அர்ப்பணிக்கிறேன். நீர் என்னிலும் நான் உம்மிலும் நிலைத்திருக்கும் பாக்கியமான வாழ்வை எனக்கு தந்தருளும்படி கெஞ்சி வேண்டிக்கொள்ளுகிறேன். இயேசுவின் நாமத்தில் நல்ல பிதாவே, ஆமென்!"

ஒருவனும் தீங்கு செய்ய உன்மேல் கைபோடுவதில்லை!

"நான் உன்னுடனேகூட இருக்கிறேன். உனக்கு தீங்குசெய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை"
(அப்போஸ்தலர் 18:10).

தேவனுடைய ஊழியனாகிய பவுல் அப்போஸ்தலன் ஊழியத்தில் எத்தனையோ போராட்டங்களை சந்திக்க வேண்டியிருந்தது. அப்பொழுதெல்லாம் கர்த்தர் அவனுக்கு தரிசனமாகி பல முறையும் உற்சாகப்படுத்தினார். இன்று நமக்கும் இந்த வார்த்தை எத்தனை ஆறுதலை கொடுக்கிறது (சங். 94:19)! ஊழியத்திலும் சரி, உலக வாழ்விலும் சரி, வேலை ஸ்தலங்களிலும் சரி, எத்தனையாய் மக்கள் இன்னல்களை கொடுக்கின்றனர். நன்றாய் ஆசீர்வாதம் நிறைந்து வாழ்ந்தால், இவனை அழித்துவிட வேண்டும் என்று கங்கணம் கட்டுகின்றனர். இத்தகைய பயங்கரமான வாழ்வில் கர்த்தர் நம்மோடிராமல் போனால் நம்முடைய வாழ்க்கை என்ன ஆகும்? ஆகவே, தேவன் நம்மோடு கூட எப்பொழுதும் இருக்கும்படியாக, பக்தியுடனும், தெய்வ பயத்துடனும், அவர் விரும்பும்படியாக நடந்து, மேற்கண்ட வேத வசனம் நம் வாழ்வில் நிறைவேறும்படியான தெய்வீக ஆசீர்வாதத்தை, அவர்தம் பிரசன்னத்தை நாமும் பெற்றுக்கொள்வோம் (யோவான் 14:23).

ஒரு வாலிபப் பெண் தேவனுடைய பெரிதான கிருபையினால், ஆண்டவர் இயேசு சிலுவையிலே தனக்காக செய்த தியாகத்தை அறிந்துகொண்டு, அவரை இரட்சகராக ஏற்றுக்கொண்டாள். ஆனால், அவளோடு சேர்ந்த சில வாலிபப் பெண்கள், எப்படியாவது அவளை ஆண்டவரை மறுதலிக்க செய்ய வேண்டுமென்று பலவிதங்களிலும், தங்களால் இயன்ற அளவிலே முயற்சித்தார்கள். ஆனால் அவளோ, தான் பெற்ற இரட்சிப்பில் முழு நிச்சயம் கொண்டவளாக இருந்தபடியினாலும், ஜெப ஜீவியத்தில் ஆண்டவரோடு உறுதியாய் நின்றபடியினாலும், அவர்கள் தனக்கு முன்பாக வைத்த எல்லாவிதமான சோதனைகளினின்றும், தேவ பெலத்தால், ஒவ்வொருமுறையும் வெற்றிகண்டாள். இது அந்த வாலிபப் பெண்களுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. எப்படியாவது இவளை நம் பக்கம் திருப்பிவிடலாம், இந்த வேண்டாத நம்பிக்கையையெல்லாம் அவள் வாழ்விலிருந்து மாற்றிவிடலாம் என்றெல்லாம் நாம் எடுக்கும் முயற்சி அத்தனையும் வீணாய் போய் விட்டதோ! அப்படியானால் இவள் பெற்ற அனுபவம் உண்மையானதாக இருக்குமோ?" என்று அவர்கள் நினைக்கும்படி காரியங்கள் தலைகீழாய் மாறியது.

ஆம், நாம் ஆண்டவரை பற்றிக் கொள்ளும்பொழுது, நமக்கு விரோதமாக எத்தனையோபேர் தீங்கு செய்தாலும், அவர்கள் நம்மேல் கைபோடாதபடி, கர்த்தர் நம்மோடு கூடஇருந்து காப்பாற்ற வல்லவராய் இருக்கிறார் அல்லவா? அவ்விதமாக ஆண்டவருடைய இரட்சிப்பினால் அலங்கரிக்கப்பட்டிருந்த இந்த பெண்ணின் வாழ்க்கை, மற்ற பொல்லாத வாலிப பெண்களின் வாழ்க்கையையும்கூட நாளடைவில் தலைகீழாய் மாற்றியது.

ஜெபம்: **"அன்பின் தெய்வமே! இந்த பொல்லாங்கான உலகில் எனக்கு நீரே கேடகமும், அரணுமாயிருக்கிறீர். உம்முடைய கரங்கள் எப்பொழுதும் என்மீதும், என் குடும்பத்தின்மீதும் இருக்கும்படி உமது தெய்வீக பாதுகாவலை என்றென்றும் தந்தருளும். இன்றுமுதல் உம்முடைய கண்கள் என்மீது எப்பொழுதும் இருக்கும்படி உம்முடைய செட்டைகளின் கீழ் மறைத்துக்கொள்ளும். எனக்கு விரோதமாய் பொல்லாத மக்களால் உருவாக்கப்படும் எந்த தீய ஆயுதமும் வாய்க்காதே போகும்படி நீரே செய்யும் (ஏசாயா 54:17). இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"**

கர்த்தருக்குள் நாம் பிழைக்கிறோம்-அசைகிறோம்-இருக்கிறோம்!

"ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்; அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர், நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறார்கள்" (அப்போஸ்தலர் 17:28).

இந்த அனுபவம் தெய்வீகமானது! யோசேப்பு என்ற வாலிபன் சிறையிலடைக்கப்பட்ட வேளையிலும்கூட கர்த்தர் அவனோடுகூட இருந்தார் என்று வேதபுத்தகத்தில் நாம் வாசிக்கிறோம் (ஆதி. 39:2,21,23). அதினிமித்தமாக அவனுக்கு ஒரு சேதமும் வராதபடி கர்த்தர் அவனை பாதுகாத்துக்கொண்டார். எதிர்பாராதவிதத்தில் அந்த சிறைவாச அனுபவத்திலிருந்து நிறைவான உயர்வை ஆச்சரியமான முறையிலே ஆண்டவர் கட்டளையிட்டார். ராஜாவுக்கு அடுத்தபடியாக அவனை உயர்த்தினார். இன்றும்கூட யோசேப்பைப்போல உண்மையும் உத்தமமுமாய், பரிசுத்தமாய் கர்த்தரை பின்பற்றுகிற ஒவ்வொருவருக்கும் அவ்வாறே அவருக்குள் பிழைக்கும்படி, அசையும்படி, இருக்கும்படி அருள்புரிவார். விசேஷமாக என் வாலிப பிள்ளைகளே, யோசேப்பு உங்களைப்போன்ற வாலிப வயதிலும்கூட எவ்வளவு பக்தியாய் இருந்தான் என்பதை வாசித்துப் பார்த்து, அவனைப்போல நீங்களும் கர்த்தருக்கு உண்மையாயும், வைராக்கியமாயும் வாழுங்கள். அவன் பெற்ற அத்தனை ஆசீர்வாதங்களும் உங்கள் வாழ்விலும் நிச்சயம் அனுபவிக்க ஆண்டவர் அருள் புரிவார் (நீதி. 28:20).

தேவனை உறுதியாய் பற்றிக்கொண்ட ஒரு தம்பதியர் வாழ்வில் ஒன்றன்பின் ஒன்றாக துன்பங்களும் சோதனைகளும் அடுத்தடுத்து வந்தபொழுது, அவர்களுடைய உறவினர்கள், இவர்கள் வாழ்வு ஒருநாள் இல்லாவிட்டால் ஒரு நாள் அப்படியே மங்கி மறைந்துபோகும் என்று நினைத்தார்கள். ஆனால், அவர்களோ அந்த கடினமான நிலைமையிலும் கர்த்தரை உறுதியாய் பற்றிக் கொண்டிருந்தார்கள். "ஆண்டவரே, நீரில்லாமல் எங்களால் ஒருநாளும் இவ்வுலகில் ஒரு நிமிடம்கூட சமாதானமாக, சந்தோஷமாக வாழ முடியாது" என்று ஆண்டவரோடு பின்னிப்பிணைந்த வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார்கள். அதன் விளைவாக சில வருடங்களுக்கு பிறகு அவர்கள் அனுபவித்த சகல துக்கங்கள், துன்பங்கள், குறைவுகள் எல்லாவற்றையும் ஆண்டவர் ஆச்சரியமானவிதமாய் தலைகீழாய் மாற்றினார். படிப்படியாக பல்வேறு ஆசீர்வாதங்கள் உலகப்பிரகாரமாகவும், ஆவிக்குரியபிரகாரமாகவும் அவர்களைத்தேடி வந்தன. வேலையில் உயர் பதவி, கார், பங்களா, வேலையாட்கள் இப்படி உலகப்பிரகாரமாகவும், ஆண்டவருடைய ஊழியத்தில் அதிகமான உயர்வையும் அவர்கள் அனுபவிக்கும்படியும், கர்த்தருக்குள் பிழைத்து, அசைந்து, வாழும்படியும் அருள்புரிந்தார்.

அன்பானவர்களே! இதேவிதமான உன்னதமான தெய்வீக அனுபவத்தை நீங்களும் கேட்பீர்களானால் உங்களுக்கும் கொடுக்க ஆண்டவர் அன்பில் மாறாதவராயிருக்கிறார் (யோவான் 16:24).



ஜெபம்: அன்பு தகப்பனே! என் வாழ்வையும்கூட இன்றுமுதல் நீரே பொறுப்பெடுத்துக் கொள்ளும். உம்முடைய கரத்தின் நிழலினால் என்னை மறைத்து, உமக்குள் நானும் பிழைக்கவும், அசையவும், இருக்கவும் எனக்கு அருள்தாரும். நீர் அப்படி செய்கிறபடியினால் உமக்கு கோடான கோடி ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

காலத்துக்கு முன்னே தீர்ப்பு சொல்லாதிருங்கள்!

"ஆனதால், கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்குமுன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்பு சொல்லாதிருங்கள்..."

(1 கொரிந்தியர் 4:5).

மனிதராகிய நம்மிடம் காணப்படும் ஒரு பெரிய குறைவு, எவரையும் எளிதில் குறை சொல்லி பேசிவிடுவதுதான். நாமே நியாயந்தீர்த்து தீர்ப்பு சொல்லிவிடுகிறோம். அதுவும், மனுஷருடைய முதுகுக்குப் பின்னாக, அவர்கள் குறைகளையெல்லாம் பெரிதாக்கி எதை எதையோ பேசிவிடுகிறோம் (நீதி. 10:18,19). இது கர்த்தருடைய பார்வையில் அவருக்கு பிரியமானதா? என்பதை நாம் நினைத்துப் பார்த்து பேசுவதில்லை. ஆவிக்குரிய வாழ்வில் உயர்ந்த நிலைமையில் இருப்பவர்களும்கூட இந்த தவறை சில சமயங்களில் செய்து விடுகிறோம் (நீதி. 4:23). இது ஆண்டவருடைய இருதயத்துக்கு ஏற்றதில்லை என்பதை கீழ்க்காணும் உதாரணத்தைக் கொண்டு விளக்க விரும்புகிறேன்.

ஆண்டவர்மேல் உண்மையான அன்பு கொண்டு, அவருடைய சேவையை பயபக்தியுடன் செய்து வந்த ஒரு தம்பதியர், ஒரு நாள் இருவருமாக இணைந்து ஆகாரம் புசிப்பதற்கு முன்னதாக பொதுவான பல காரியங்களை குறித்து பேசிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒரு ஊழியர் செய்த தவறினைக் குறித்து இருவரும் உரையாடிக் கொண்டிருந்தார்கள். அதன்பிறகு ஆகாரத்தை ஆண்டவர் ஆசீர்வதிக்க, அதற்காக ஜெபித்தார்கள். அந்த ஜெபவேளையில் பரிசுத்த ஆவியானவர் அவர்களை நிரப்பி, தம்முடைய தீர்க்கதரிசன வரம் மூலம் பேசினார். "என் அன்பு பிள்ளைகளே, காலத்துக்கு முன்னே தீர்ப்பு சொல்லாதிருங்கள் என்ற வசனத்தை நீங்கள் அறியவில்லையா? பழிவாங்குதல் எனக்குரியது. நான் அந்த ஊழியரின் காரியங்களை பார்த்துக்கொள்வேன். அவருடைய தவறான செயலை அவருக்கு வெளிப்படுத்துவேன். நீங்கள் அவரைக்குறித்து தீர்ப்பு சொல்லுவது எனக்கு பிரியமானதல்ல" என்று கூறியபொழுது, அந்த இருவரும் ஒரு கணம் பயந்துபோனார்கள். கர்த்தர் நமக்கு எவ்வளவு சமீபமாயிருக்கிறார்! ஆனால், நாமோ மிகவும் சாதாரணமாக காரியங்களில் தீர்ப்பு சொல்லி, ஆண்டவர் மனதை துன்பப்படுத்தி விடுகிறோமே என்று நினைத்து, அதற்கு பிறகு அப்படி எவரையும் குறித்து தீர்ப்பு சொல்வதைக்குறித்து ஜாக்கிரதையாய் நடந்துகொண்டார்கள்.

ஆம்! பிரியமானவர்களே, பரிசுத்தமான வாழ்வு என்பது எத்தனை உயரியது! நாம் எவ்வளவு ஜாக்கிரதையாய் பேச்சிலும், செய்கையிலும் இருக்க வேண்டும் என்பதை இந்த நிகழ்ச்சி நமக்கு விளக்குகிறது அல்லவா? ஆகவே, யாரைக்குறித்தும் எளிதில் தீர்ப்பு சொல்லாமல் கர்த்தருக்கு பயந்து நடக்க நாம் ஜாக்கிரதையாயிருப்போம் (1 கொரி. 4:5). யார் யார் நமக்கு விரோதமாக செயல்படுகிறார்களோ அவர்களுடைய காரியங்களை கர்த்தரே பார்த்துக்கொள்வார். ஆகவே, நாம் ஆண்டவரின் கையில் அத்தகையோரை ஒப்படைத்து விடுவோமானால், அவர் அவர்களை எப்படி நடத்த வேண்டுமோ அவ்விதமாக பொறுப்பை எடுத்துக்கொள்வார் (எபி. 10:30).

ஜெபம்: **"அன்பு இரட்சகரே. நீர் விரும்புகிறபடி காலத்துக்கு முன்னே யாரையும் குறித்து தீர்ப்பு சொல்லாமல் இருக்கும்படியான, நல்ல இருதயத்தையும் நீர் விரும்புகிற பரிசுத்த வாழ்வையும் எனக்கு இன்றுமுதல் தாரும். உமக்கு பிரியமாய் வாழ்வதே என் இலட்சியமாக இருக்கும்படி என்னை கரம்பிடித்து, வழிநடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"**

வேதத்தில் பிரியமாய், அதில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் ஆவான்!

"கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்" (சங்கீதம் 1:2).

கேரள நாட்டில் தண்ணீர் நிறைந்து ஓடும் ஆற்றோரங்களில், அழகான பச்சை மரங்களை நாம் பார்க்கும்பொழுது, அது அதிகமாய் மன மகிழ்ச்சியைத் தரும். பார்ப்பதற்கே அழகாய் இருக்கும். தண்ணீர் ஓரங்களில் அவைகள் நாட்டப்பட்டிருப்பதால் அத்தனை செழிப்பு (எரே. 17:8)! அதேபோன்று எந்த மனிதன் தேவனுடைய வார்த்தைக்கு கனம் கொடுத்து, அதை இரவும் பகலும் வாசித்து பயபக்தியுடன் தியானிக்கிறானோ, அந்த மனுஷனுடைய வாழ்க்கையும் அதே போன்று என்றென்றும் செழிப்பாய், பாக்கியமாய் இருக்கும் என்றுதான் இந்த வசனத்தில் நாம் வாசிக்கிறோம். உண்மையான தெய்வ பக்தி கொண்டவர்கள் தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய வேதபுத்தகத்தை வாசிக்கவும், அதை தியானிக்கவும், ஆழமான அறிவை அதன்மூலம் ஆவிக்குரிய வாழ்விலும், உலகப் பிரகாரமான வாழ்க்கையிலும் பெற்று சிறப்படையவும் கர்த்தர் நிச்சயம் உதவுவார். நம்மில் எத்தனைபேருக்கு இந்த விதமான பாக்கியத்தைப்பெற்று வாழ்வில் சிறப்படைய விருப்பம் உண்டு? (நீதி. 28:25; எரே. 17:7).

பக்தன் ஒருவன் என்றைக்கு ஆண்டவரை ஏற்றுக்கொண்டானோ அன்று முதல் இவ்விதமாக இரவும் பகலும் வேதத்தை கருத்தாய் வாசித்து தியானித்தான். வாசித்த வசனங்களில் உள்ள வாக்குத்தத்தங்களையெல்லாம் குறித்து வைத்து பாராமல் படித்து அதை வைத்து ஆண்டவரை நோக்கி ஜெபிப்பான். அதன் பிறகு ஆண்டவரிடம், அதை அருளிச்செய்ததற்காக நன்றி செலுத்துவான். அவன் வாழ்ந்த பக்திக்குரிய வாழ்க்கை ஆண்டவருக்கு மிகவும் பிரியமானதாய் இருந்தது. எனவே, அவனை தம்முடைய ஊழியனாக தெரிந்துகொண்டார். மட்டுமல்லாமல், அவன் செய்து வந்த உலக வேலையிலும் அவனை மென்மேலும் உயர்த்தி ஆசீர்வதித்தார். அதிலும் செழிப்பு! ஊழியத்திலும் மடமடவென்று பல்வேறு சோதனைகளின் மத்தியிலும்கூட உயர்வையும் செழிப்பையும் கட்டளையிட்டார்.

அன்பானவர்களே, இந்தவிதமான பாக்கியம் நிறைந்த செழிப்பான வாழ்வை இன்றைக்கு நீங்களும் பெற்றுக்கொள்ள, கர்த்தர் உங்களையும் அன்போடு அழைக்கிறார். எவ்வளவு நேரம் வேதத்தை வாசிப்பதில், தியானிப்பதில் கருத்தாய் நேரத்தை செலவிடுகிறீர்கள் என்பதை யோசித்துப் பார்த்து, தேவ தயவினால் நல்வாழ்வு பெறுங்கள் (எரே. 15:16). கர்த்தர் தமது வார்த்தையின் மூலம் உங்களோடு பேசுவார். ஏனெனில் அது ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிறது (யோவான் 6:63).

ஜெபம்: "அன்புள்ள ஆண்டவரே! எவ்வளவு மேலான, ஆழ்ந்த பக்திக்குரிய அனுபவங்களை நீர் எனக்கென்று ஆயத்தமாக்கி வைத்திருக்கிறீர். இந்த இரகசியங்களை இன்றுமுதல் எனக்கு கற்றுத்தந்து, உம்முடைய வேதத்தை கவனமாய் வாசிக்கவும், அதன்மூலம் என் வாழ்வில் பாக்கியத்தை பெற்றுக்கொள்ளவும் எனக்கு உதவி செய்வீர் என்று நம்பி, உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

நான் தியானிக்கையில் அக்கினி மூண்டது!

"என் இருதயம் எனக்குள்ளே அனல்கொண்டது: நான் தியானிக்கையில் அக்கினி மூண்டது: அப்பொழுது என் நாவினால் விண்ணப்பம் செய்தேன்" (சங்கீதம் 39:3).

வேதம் வாசிக்கிற அனுபவம் கர்த்தருடைய பார்வையில் எவ்வளவு முக்கியமானதாய் இருக்கிறதோ, அதேபோன்று, அவருடைய சமுகத்தில் அமர்ந்து அவரைக்குறித்து தியானிப்பது அதைவிட மிக மிக முக்கியமான ஒரு காரியம் ஆகும் (சங். 105:2,3)! சாதாரணமாய் பெயரளவில் கிறிஸ்தவர்களாக வாழ்கிறவர்கள் இதற்கெல்லாம் நேரம் கொடுக்க முயற்சி செய்யவோ அல்லது யோசிக்கவோமாட்டார்கள். ஆனால், எந்த ஒரு மனுஷனோ, மனுஷியோ தேவனுக்கு பயந்து, அவருடைய சமுகத்தை நாடித்தேடி இவ்விதமாய் அவரைக்குறித்து தியானிக்க தங்களை ஒப்புக்கொடுக்கிறார்களோ, அப்படிப்பட்டவர்களுடைய வாழ்வில் கர்த்தருடைய வல்லமை, அவருடைய அக்கினி, பரிசுத்த ஆவியின் அபிஷேகம் யாவும் நிரம்பி வழியும் என்பதைத்தான் இந்த வசனம் விளக்குகிறது. இதைத்தான் "மேலானவைகளையே நாடுங்கள்" என்றும் (கொலோ. 3:2), "ஆவியிலே அனலாயிருங்கள்" (ரோமர் 12:11) என்றும் வேதம் சொல்லுகிறது. நமக்கு முன்மாதிரியாக வாழ்ந்து காண்பித்து சென்ற இயேசு கிறிஸ்துவும் பரிசுத்த ஆவியினால் அளவில்லாமல் நிறைந்திருந்தார் (யோவான் 3:34) என்றே வாசிக்கிறோம்.

ஒரு சில இளம் வாலிப பெண்கள் ஒன்று சேர்ந்து, கர்த்தரைத்தேட, அவர் வழிகளில் நடக்க தங்களை ஒப்புக்கொடுத்தனர். ஆனால், அவ்விதமாக தீர்மானம் எடுத்த அந்த நாளிலிருந்து அவர்கள் குடும்பத்தார் அதன் மேன்மையை அறியாமல், அதற்கு பல்வேறு விதங்களில் தடையை உண்டுபண்ணினார்கள். ஆனால், இந்த இளம் பெண்களோ, தடை அதிகமாக அதிகமாக கர்த்தரை முழுமனதுடன், மிகுந்த உற்சாகத்துடன் தேட ஆரம்பித்தார்கள். இதனால் தேவ பிரசன்னம், தேவ கிருபை மற்றும் பரிசுத்த ஆவியானவரின் அளவில்லாத அபிஷேகம், அக்கினிமயமாய் அவர்கள் வாழ்வில் இறங்கியது. யோசேப்பின் வாழ்வில் தேவ பிரசன்னம் இதேபோன்று நிறைந்திருந்தமையால், அவன் வாழ்வில் ஆண்டவரால் உயர்வு பெற்றதுபோல், இவர்கள் வாழ்வையும் கர்த்தர் வெகுவாய் ஆசீர்வாதங்களால் எல்லாப்பக்கமும் நிரப்பினார். இதை கண்டபின் அவர்கள் குடும்பத்தார் அவர்களுக்கு தடை செய்வதை நிறுத்தி, அவர்களைக் குறித்து பெருமைப்படும்படி கர்த்தர் உதவி செய்தார்.

ஆம்! பிரியமானவர்களே, எத்தனைபேர் எதிர்த்து வந்தாலும் உங்களை ஒன்றும் செய்ய முடியாது. இந்த அக்கினி அபிஷேகத்தினால் பெறும் அனல் நிறைந்த வாழ்வை நீங்களும் பெற வாஞ்சிக்கிறீர்களா? அப்படியானால், இன்று அந்த வாலிபப் பெண்களைப்போல, "ஆண்டவரே, வெறுமையும், விருதாவுமான என் வாழ்வையும்கூட அவ்வண்ணமே வல்லமை நிறைந்ததாக தலைகீழாய் மாற்றும்" என்று நீங்களும் கருத்தாய் வேண்டுதல் செய்யுங்கள் (2 நாளா. 16:9).



ஜெபம்: "அன்பு தெய்வமே! எத்தனை மேலான வாழ்வை நீர் எனக்கென்று வைத்திருக்கிறீர். இந்த அனுபவத்தை இன்று எனக்கும் தாரும். நானும் பரிசுத்த ஆவியின் அக்கினியினால் நிறைந்து அநேகரை உம்மண்டை கொண்டு வருகிற உண்மை ஊழியம் செய்கிற நிலையில் வாழ எனக்கும் அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

உங்கள் களஞ்சியங்கள் நிரம்ப கர்த்தரை கனம்பண்ணுங்கள்!

"உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரை கனம்பண்ணு. அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும்; உன் ஆலைகளில் திராட்சரசம் புரண்டோடும்" . (நீதிமொழிகள் 3:9.10).

ஆண்டவர் தம்முடைய வார்த்தையில் ஒருநாளும் தவறமாட்டார். மேற்கண்ட வசனத்தின்படி நாம் எவ்வளவாய் காணிக்கைகளினாலும், தசமபாகங்களினாலும், பொருளாலும் அவரை கனப்படுத்துகிறோமோ அத்தனையாய் நம்முடைய களஞ்சியங்கள் நிரம்பும்படி அருள்புரிவார். ஏனென்றால் அவர் ஐசுவரியசம்பன்னர் (ரோமர் 10:12). ஐசுவரியமும் கனமும் அவராலே வருகிறது (1 நாளா. 29:12). ஆகவே, ஐயோ, நான் ஏழையாய் இருக்கிறேனே, எப்பொழுதும் இப்படித்தான் கஷ்டத்திலேயே இருக்க வேண்டுமோ! என் வாழ்நாளெல்லாம் வறுமைதானோ? என்று நினைக்காதிருங்கள். உங்களுக்கு கிடைக்கிற கொஞ்சத்தில் உண்மையாய் கர்த்தருக்கென்று கொடுத்து பாருங்கள். அவர் எப்படி உங்களை உயர்த்துகிறார் என்பதை நீங்களே அறிவீர்கள்.

ஒரு ஏழை உபாத்தியாயர் இருந்தார். அவருக்கு வந்த சம்பளத்தில் தன் வீட்டை கவனிப்பதே அவருக்கு கடினமான காரியம். எனினும் தன் ஊருக்கு வருகிற உண்மையான ஊழியர் ஒவ்வொருவரையும் தன் வீட்டில் தங்கவைப்பார். தான் உண்ணுகிற ஆகாரத்தில் அவர்களுக்கும் ஒரு பங்கை கொடுப்பார். அவர்கள் போகும்போது, ஏதாவது தன்னால் இயன்ற அளவில் காணிக்கையை கொடுத்து அனுப்புவார். அவர்கள் அவரை வாழ்த்தி விடைபெறுவார்கள். கர்த்தர் இவைகளை யெல்லாம் கண்டார். அவருடைய மகனுக்கு ஒரு நல்ல உத்தியோகத்தை கொடுத்தார். தன் தகப்பன் தன்னை எவ்வளவு கஷ்டப்பட்டு படிக்க வைத்தார் என்பதை அறிந்த அந்த மகன் தன்னால் இயன்ற அளவு கஷ்டப்பட்டு உழைத்து பேரும் புகழும் பெற்று மென்மேலும் உயர்வை தன் வேலையில் பெற்றான். அதினிமித்தம் கர்த்தர் அவனை நிறைவாய் ஆசீர்வதித்தார். தன் தகப்பன் வேலையிலிருந்து ஓய்வு பெற்றபொழுது, அவரை எவ்வளவு கனப்படுத்த முடியுமோ அவ்வளவாய் அந்த மகன் கனப்படுத்தினான். அவருக்கு ஒரு குறைவும் இல்லாதபடி அவன் பார்த்துக்கொண்டான். அதுமட்டுமின்றி ஆவிக்குரிய வாழ்க்கையிலும் அந்த தகப்பனாரை அளவில்லாமல் கர்த்தர் உயர்த்தினார். தகப்பனும் மகனும் குடும்பமாக கர்த்தருடைய சேவையில் மிக மிக மகிழ்ச்சியோடு, சமாதானத்தோடு வாழ்ந்து வந்தனர். நீதிமானாகிய அவருடைய மரண சமயம் அநேகர் வந்து அவரை வாயார வாழ்த்தினார்கள்.

அன்பானவர்களே, கர்த்தரை கனம்பண்ணின அந்த ஏழை மனிதர் எத்தனையாய் ஆண்டவரால், மனிதரால் உயர்த்தப்பட்டார். ஆகவே, இதையே பின்பற்றி, உங்கள் வாழ்விலும் ஆண்டவரை கனம்பண்ணி மேலான ஆசீர்வாதத்தையும், கனத்தையும் நீங்களும் பெறுங்கள் (1 சாமு. 2:30).

<u>ஜெபம்:</u> "அன்பின் தெய்வமே! நீர் உம்மை தேடுகிறவர்களுக்கும் தேடாதவர்களுக்கும் வித்தியாசத்தை காண்பிக்கிறவர். எனக்கும் இந்த உபாத்தியாயரைப் போல உம்முடைய ஊழியர்களை கனம்பண்ணவும், உண்மையாய் உம் சேவைக்கு காணிக்கை கொடுக்கவும் நல்ல மனதைத் தாரும். இன்று முதல் நீரே என்னை வழிநடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

உன்னை பெயர் சொல்லி அழைக்கிற அன்பின் தேவன்!

"உன்னைப் பெயர்சொல்லி அழைக்கிற இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் நானே..."
(ஏசாயா 45:3).

கர்த்தர் நம் ஒவ்வொருவருடைய பெயரையும் அறிந்திருக்கிறார். ஆகவேதான், சகேயு என்ற மனிதன் இயேசுவை பார்க்க ஒரு மரத்தில் ஏறியிருந்தபொழுதும் சரியாக அந்த மரத்தினடியில் வந்து அவனை பெயர் சொல்லி அழைத்தார். இன்று உங்கள் பெயரையும் அவர் அறிந்திருக்கிறார் (பிர. 6:10). மனிதர் உங்களை மறந்துவிடலாம். கர்த்தரோ மறக்கமாட்டார். ஏனென்றால் நீங்கள் அவருக்கு பிரியமானவர்கள்! இந்த நாட்களில் பெற்றோர்கூட தங்கள் பிள்ளைகளை மறந்துவிடுகிற அன்பற்ற காலமாய் இருக்கிறது. ஆனால், ஆண்டவரின் அன்போ நேற்றும் இன்றும் என்றும் மாறாதது (எபி. 13:8). மோசேயோடு முகமுகமாய் பேசியதுபோல உங்களையும் பெயர் சொல்லி அழைத்து தைரியப்படுத்தி வழிநடத்துவார் (யாத். 33:12).

சில வருடங்களுக்கு முன்னர் ஒரு பெண் மிகுந்த கஷ்டத்தின் பாதையிலே போய்கொண்டிருந்தாள். உதிரத்தின் ஊறல் ஒருபக்கம். சரீரமெல்லாம் துர்நாற்றம் வீசும் அளவுக்கு அந்த வியாதி அவளை மிகவும் பாதித்திருந்தது. மட்டுமல்லாமல், தலையிலே ஒரு கோளாறு ஏற்பட்டு என்ன செய்கிறோம் ஏது செய்கிறோம் என்று ஒருசில வேளையில் தெரியாமல் போவதினால் வீட்டைவிட்டுகூட வெளியே ஓடிவிடுவாள். கணவனும், பிள்ளைகளும் இதைக்கண்டு கண்ணீர் வடித்தார்கள். அந்த வாரம் கழிந்ததும் திங்கட்கிழமை அன்று பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் அனுமதிக்க கணவர் திட்டமிட்டிருந்தார். அந்த நிலைமையில் எப்படியோ முந்தின சனிக்கிழமை அன்று நடந்த பெண்கள் கூட்டம் ஒன்றிற்கு மிகவும் கஷ்டத்தின் மத்தியில் வந்து சேர்ந்தாள். எப்படியாவது ஆண்டவர் என்னை சுகமாக்கிவிட மாட்டாரா? என்ற விசுவாசம் ஒருபுறம் அவளை நிரப்பியிருந்தது. இதை ஆண்டவர் அறிந்திருந்தார். நான் அன்று செய்தியை கொடுத்து கொண்டிருந்தேன். செய்தி முடித்து ஜெப வேளையில் "பிரிசில்லா, விசுவாசித்தவளே, நீ பாக்கியவதி, நீ விசுவாசித்து வந்ததினால் தேவனுடைய மகிமையை காண்பாய்" என்று ஆவியானவரால் ஏவப்பட்டு கூறியபொழுது, அவள் கதிகலங்கி போனாள். ஏனென்றால் அவளுடைய பெயரை உதாரணத்திற்காக சொல்லி அழைத்தபொழுது, அவளுடைய சரீரத்தில் தேவ வல்லமை இறங்கும்படி தேவன் அருள்புரிந்தார். தலையிலிருந்த பிரச்சினை முற்றிலுமாக வெளியேறியது. உதிரத்தின் ஊறல் அப்படியே நின்று அதிலும் கர்த்தர் விடுதலை கொடுத்தார். அவளுக்கு மனதில் ஒரே சந்தோஷம்! சாட்சியின் நேரம் வந்தபொழுது ஓடி வந்து, கர்த்தருக்கு மகிமையாக சாட்சி கூறி எங்களையெல்லாம் ஆச்சரியத்தில் ஆழ்த்தும்படி ஆண்டவர் அருள்புரிந்தார்.

ஆம்! பிரியமானவர்களே, இன்று இதே ஆண்டவர் உங்கள் பெயரையும் அறிந்திருக்கிறார். உங்களுக்கு இன்னது தேவையென்று அறிந்தவராய் உதவி செய்து அனைத்து கட்டுகளிலிருந்தும் விடுவித்து உங்களை காப்பார் (மத். 6:8).

<u>ஜெபம்:</u> அன்பு தெய்வமே! நீர் எத்தனை அருமையான ஆண்டவர்! இன்று என் பெயரையும் அறிந்தவராய் என்னோடுகூட இருக்கிறபடியால், உம்முடைய பாதத்தில் விழுந்து நானும் நன்றி செலுத்துகிறேன். நீர் எனக்கு எவ்வளவு சமீபமாய் இருக்கிறீர் என்று அறிந்து உம்மை கனப்படுத்துகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

முப்புரி நூல் சீக்கிரமாய் அறாது!

(பிரசங்கி 4:12).

குடும்ப வாழ்க்கையிலே இணைந்திருக்கிற ஒவ்வொருவருக்கும் இந்த வசனம் மிகவும் இனிமையானது. திருமணமான அநேகர் இதை உணர்ந்து கொள்வதேயில்லை. ஆனால், எந்த தம்பதியர் தேவாதி தேவனை தங்களோடு இணைத்து முப்புரி நூலாக குடும்பமாய் வாழ்கிறார்களோ, அந்த குடும்பத்திலே பிசாசு கொண்டு வருகிற பிரிவினை இராது, குழப்பங்கள் இராது. அப்படியே மனவேறுபாடுகள் வந்தாலும்கூட தேவ பிரசன்னம் அதை மாற்றி, சமாதானத்தால் அவர்களை நிரப்பும் என்பதை நாம் ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள வேண்டும் (தீத்து 3:4,5). இன்று நாம் பார்ப்பதெல்லாம் குடும்பங்களிலே பிரிவினைதான்! காரணம், ஆண்டவருக்கு குடும்ப வாழ்வில் முதலிடம் கொடுப்பது கிடையாது. அவரைத்தேட வேண்டிய விதமாய் தேடுவதும் கிடையாது. அவருடைய பிரசன்னம் இல்லாமல் போகுமானால் இப்படித்தான் பற்பல பிரச்சினைகளும், போராட்டங்களும் என்றென்றும் நிறைந்திருக்கும்படி பிசாசு வழி வகுப்பான். ஆகவே, இன்று கண்ணீரிலும், துன்பத்திலும், தவிப்பிலும், பிரிவினையிலும் வாழ்வீர்களானால், "ஆண்டவரே, இன்று முதல் என் வீட்டில் நீரே தலைவராய் இருந்து முப்புரி நூலாக எங்களோடு இணைந்து, ஆசீர்வதித்து வழிநடத்தும்" என்று கேட்பீர்களானால், கர்த்தர் அப்படியே நிச்சயம் உதவி செய்வார் (யோவான் 16:24).

எங்களது திருமணம் முடிந்தவுடன்தானே என் கணவர் என்னிடத்தில் சொன்ன முதல் காரியம் "இரண்டு பேரும் முழங்காற்படியிட்டு கர்த்தரை நோக்கி ஜெபிப்போம்" என்பதுதான்! நானும் பயபக்தியுடன் முழங்காற்படியிட்டேன். அன்று முதல் தேவாதி தேவனும், கர்த்தாதி கர்த்தனுமாகிய இயேசு எங்கள் இல்லற வாழ்வில் இணைந்து கொண்டார். ஆகவே, தேவனுடைய கிருபையினால் ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலமாக எங்களுடைய இல்லற வாழ்வில் அவரே பிரதான தலைவராக இருந்து ஆச்சரியமான விதத்தில் கண்ணீர், துன்பம், இழப்பு, வியாதி யாவற்றின் மத்தியிலும் வழிநடத்தி வருகிறார். ஆபிரகாமை அழைத்து ஆசீர்வதித்து வழி நடத்திய ஆண்டவர் இன்று சந்ததி சந்ததியாக தேவபக்தியுள்ள சந்ததியாக தேவனுக்கென்று எழும்பிப் பிரகாசிக்கும்படியும், அநேக குடும்பங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும்படியும் அவரே எங்கள் வாழ்க்கையை பொறுப்பெடுத்து நடத்தி வருகிறார்.

எனக்கு அன்பானவர்களே! இந்த உலகில் இந்த தெய்வீக அனுபவத்தை ஒவ்வொரு குடும்பமும் பெற்று வாழ்வோமானால், நிச்சயமாகவே நாம் காண்கிற போராட்டங்களும், பிரிவினைகளும் இருக்கவே இருக்காது என்பதை உணர்ந்து இன்றே நீங்கள் உங்கள் குடும்ப வாழ்வில் முப்புரிநூலாக, இயேசுவோடு இணைந்து வாழ உங்களை ஒப்புக்கொடுப்பீர்களா? (யோவான் 16:33).



<u>ஜெபம்:</u> "சுவாமி, உம்மோடு இணைந்து வாழும் வாழ்க்கை எத்தனை இன்பமானது என்பதை உணர்ந்து <u>இன்று முதல்</u> எனக்கும் இந்த தெய்வீக அனுபவத்தைத் தாரும். நீரே எங்கள் வாழ்வின் தலைவராகவும் எங்கள் குடும்பத்தின் நாயகராகவும் இருந்து முப்புரி நூலாக அனைத்து தேவ ஆசீர்வாதங்களினாலும் நிரப்பும்படி பயபக்தியுடன் ஜெபிக்கிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

வழி இதுவே, இதிலே நடவுங்கள்!

"நீங்கள் வலதுபுறமாய் சாயும்போதும், இடதுபுறமாய் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்"

(ஏசாயா 30:21).

ஒவ்வொருநாளும் திடீர் திடீரென்று பல்வேறு எதிர்பாராத காரியங்கள் சம்பவிக்கின்றன! காலையில் அலுவலகம் நன்றாக செல்கிறார்கள். ஆனால், கொஞ்ச நேரத்திலே அவர்களது மரித்த உடலை அலுவலக மக்கள் கொண்டு வருகிறார்கள். இவ்வாறு விதம்விதமான பிரச்சினைகள். இப்படிப்பட்ட பிரச்சினைகளின் மத்தியில் நாம் செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்று தான். "ஆண்டவரே, பயங்கரமான உலகத்திலே எனக்கு ஒரே நம்பிக்கை நீர் மாத்திரம் தான். என்னையும் என் குடும்பத்தையும் நீரே உம் சித்தப்படி வழி நடத்தும் (நீதி. 3:5,6). நீர் காட்டும் வழியிலே கவனமாய் நடக்க எனக்கு உம்முடைய தெய்வீக கிருபையை தாரும். நீர் எனக்கு முன்மாதிரியாக, உமது வாழ்வில் தேவனுடைய சித்தத்தை எவ்வளவு கவனமாக செய்து முடித்தீரோ, அதேபோன்று நானும் உம் சித்தத்தை நிறைவேற்றி நடக்க எனக்கும் வழி காட்டும் என்று ஆண்டவரை நோக்கிப் பார்ப்போம். அப்பொழுது நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு காலடியிலும் ஆண்டவருடைய ஆசீர்வாதம் நிறைவாய் இருக்கும் (எபி. 13:21).

ஒரு வாலிப பெண் ஒரு இளைஞனை திருமணம் செய்து கொள்ள வாஞ்சித்தாள். ஆனால், அவளுடைய ஒரே விருப்பம், திருட்டுத்தனமாக இதை செய்யக்கூடாது. என் பெற்றோர் உத்தரவுக்காக நான் காத்திருப்பேன் என்று பொறுமையாயிருந்தாள். இதற்காக கருத்தாய் ஜெபம் பண்ணியும் வந்தாள். முதலில் பெற்றோருக்கு இதைவிட நல்ல நிலையிலிருக்கும் ஒரு பையனைத்தான் தங்கள் மகளுக்கு திருமணம் செய்து வைக்க வேண்டுமென்று வாஞ்சை இருந்தது. ஆனால், அந்த மகளுடைய பொறுமையை பார்த்து, அவர்கள் தேவனுடைய சித்தத்தை இந்த விஷயத்தில் நாடித் தேடினார்கள். அவளும் முழு மனதுடன் பெற்றோர் தனக்கு சரி என்று சொல்லும் வரை பொறுமையாக காத்திருப்பேன் என்று இந்த வசனத்தை வாசித்து, "சுவாமி, உம் வழி என் வழி, உம் சித்தம் என் சித்தம். நீர் இதை விரும்பினால் என் பெற்றோரோடு பேசும். இல்லையானால் இது வாய்க்காதே போகும்படி விட்டுவிடும்" என்று ஜெபித்து வந்தாள். பெற்றோர் அந்த பையனை குறித்து விசாரித்தபொழுது, அவனும், அவனுடைய குடும்பமும் நல்லவர்கள் என்று அறிந்து, மகளுடைய விருப்பப்படியே சிறப்பான முறையில் திருமணத்தை நடத்தும்படி ஆண்டவர் அருள்புரிந்தார்.

அன்பானவர்களே, திருமண காரியத்தில் இன்று எத்தனையோ வாலிபர்கள் தங்கள் இஷ்டம்போல் ஆண்டவருடைய வழியையும் விட்டுவிட்டு, பெற்றோருடைய வழியையும் பின்பற்றாமல் கடைசியில் சஞ்சலத்திற்குள்ளாகிறார்கள். ஆனால், இந்த பெண் செய்தது போல, கர்த்தருடைய வழியை கவனமாய் பார்த்து அதன்படியே நடந்தால், அவர் எவ்வளவு அழகாய் நடத்துகிறார் பாருங்கள் (நீதி. 8:32–34).

ஜெபம்: **"அன்பின் தேவனே! இன்றுமுதல் ஒவ்வொரு காரியத்திலும் உம்முடைய வழி எது என்று அறிந்து நீர் செய்ததுபோல, உம்முடைய சித்தத்தை செய்து முடிக்குமளவும் என்னோடு இருந்து என்னை கரம்பிடித்து வழிநடத்தும். நீர் அப்படி செய்கிறபடியால் உமக்கு நன்றியோடு ஸ்தோத்திரம் சொல்லுகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"**

விதை விதைக்கிற நீங்கள் பாக்கியவான்கள்!

"மாடுகளையும் கழுதைகளையும் நடத்திக்கொண்டுபோய், நீர்வளம் பொருந்திய இடங்களிலெல்லாம் விதை விதைக்கிற நீங்கள் பாக்கியவான்கள்"

(ஏசாயா 32:20).

நாம் தேவனுடைய ஊழியத்தை செய்யும்பொழுதும், உலகப்பிரகாரமான காரியங்களில் நடந்துகொள்ளும்பொழுதும், அதில் பாக்கியமான நிலைமையை பெற தேவனுடைய ஞானம் நமக்கு அதிகம் தேவை. எந்த வேலையை செய்வதற்கு முன்பும் ஆண்டவரை நோக்கி முழங்காற்படியிட்டு, "தேவனே, உம்முடைய ஞானம், உம்முடைய அறிவு யாவற்றையும் எனக்கு தந்து, நான் செய்வதெல்லாவற்றிலும் உம்முடைய ஆசீர்வாதம் விளங்கும்படி அருள்தாரும்" என்று சாலொமோன் ராஜாவைப்போல் ஜெபிக்கும்பொழுது, இந்த வசனத்தின்படி நாம் நடந்துகொள்ள ஆண்டவரே நமக்கு அருள்புரிவார் (1 இராஜா. 3:9). எந்த இடத்திற்கு போக வேண்டும், எங்கே போகக்கூடாது, அதில் எவ்வளவு பிரச்சினை இருக்கிறது? என்பதையெல்லாம் அழகாய் தெளிவாய் காண்பிப்பார். அதையே பின்பற்றி நாம் ஊழியத்தையோ அல்லது அனுதின வாழ்வையோ நடத்தி செல்லும்போது, கர்த்தருடைய பாக்கியம் நிச்சயம் நமக்கு கிடைக்கும். நாம் விதைக்கிற விதை நிறைவான பலனைத்தரும் (நீதி. 3:13).

ஆண்டவரை அறியாத குடும்பத்தில் இருந்த ஒரு கணவனும் மனைவியும் தேவ கிருபையால் அவருடைய அன்பை அறிந்து, அவருடைய அடியார்களாக அவருக்கென்று சேவை செய்ய தங்கள் வாழ்வை அர்ப்பணித்தார்கள். வீட்டிலிருந்து வேதபுத்தகம் தவிர வேறொன்றும் கொடுக்காமல் துரத்தப்பட்டனர். ஆனால், அந்த தம்பதியரோ அப்படிப்பட்ட நெருக்கமான நிலைமையிலும் தங்களை பாக்கியமான வழியில் நடத்தும்படி கர்த்தரை நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். முதலில் வறுமை, தங்க இடமில்லாமை, சாப்பிட ஆகாரமில்லாமை போன்ற பல்வேறு துன்பங்களால் சூழப்பட்டிருந்தாலும் கருத்தாய் கர்த்தரை நோக்கி ஜெபம் பண்ணி, எந்த இடத்தில் விதைக்க வேண்டும்? எப்படி நடக்க வேண்டும்? என்பதையெல்லாம் தேவ தயவினால் அறிந்துகொண்டார்கள். கர்த்தர் அவர்களுக்கு நிறைவான ஆத்துமாக்களைக் கொடுத்தார். ஒரு பெரிய ஆலயத்தையும் காண்பித்து, அதில் ஊழியம் செய்யும்படி வழிகளைத் திறந்தார். இரண்டு பேரும் பல வருடங்கள் உண்மையும் உத்தமமுமாய் அந்த ஆலயத்திலிருந்து தேவனுடைய வசனத்தை விதைத்தார்கள். பாக்கியமான பெரிய அறுவடையையும் கண்டார்கள், பாக்கியமான வாழ்வையும் அனுபவித்தார்கள். அவர்களைத் துரத்திவிட்ட குடும்பத்தின் மக்களும்கூட ஒவ்வொருவரும் அவர்களைத்தேடி வரும்படியும், அவர்களும் இந்த பாக்கியத்தை பெறும்படியும் ஆண்டவர் அவர்களுக்கு அருள்புரிந்தார்.

இதே ஆண்டவர், நீங்களும் தேவனுக்கு பயப்படுகிற பயத்தோடு அவருடைய சேவையை செய்யும்பொழுதும், அனுதின வாழ்வை நடத்தும்பொழுதும் பாக்கியமான வாழ்வைக் கொடுப்பது நிச்சயமான காரியம் (ஏசாயா 30:18).



ஜெபம்: "அன்பின் தகப்பனே! எனக்கும் இந்தவிதமான ஞானத்தை இன்று தாரும். எப்படி, எந்த இடத்தில் விதை விதைப்பது? என்றெல்லாம் கற்றுத்தாரும். இந்த தம்பதியருக்கு அருளிய பாக்கியத்தை எங்கள் வாழ்விலும் நீர் தாரும். உமக்கு கோடான கோடி ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

உங்களை தப்புவிக்க வல்ல ஆண்டவர்!

"நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார்" (தானியேல் 3:17).

இன்று பல்வேறு பயங்கள் உலக வாழ்வில் நம்மை சூழ்ந்திருக்கின்றன. "நான் தனிமையில் இருக்கிறேனே, எனக்கு உதவி செய்வார் யாருமில்லையே, பொல்லாத மக்கள் எனக்கு விரோதமாக பலவிதமான பயங்கரமான காரியங்களை செய்வதற்கு முயற்சிக்கிறார்களே, யார் எனக்கு இந்த நிலைமையிலே உதவி செய்வார்?" இப்படிப்பட்ட பல்வேறு சிந்தனைகளினால் நாம் பயந்து பயந்து வாழ்கிறோம். ஆனால், தேவனை அறிந்து, அவரை விசுவாசித்த மூன்று வாலிபர்கள் "எங்கள் தேவன் எங்களை சகல தீமைகளினின்றும் தப்புவிக்க வல்லவர்" என்று உண்மையாய் விசுவாசித்தார்கள். ஆகவே, அவர்கள் எப்படி காப்பாற்றப்பட்டார்கள் என்பதை இந்த அத்தியாயத்தில் வாசிக்கிறோம். அவர்களுக்கு உதவி செய்த ஆண்டவர் உங்களுக்கும் உதவி செய்ய என்றென்றும் மாறாதவராக இருக்கிறார் (சங். 118:6). ஆனால், அவர்கள் ஆண்டவர்மேல் வைத்திருந்த பக்தி, நம்பிக்கை, விசுவாசம் நம்மில் இருக்கிறதா? என்று நம்மை நாமே சோதித்து பார்ப்போம். அப்பொழுது இந்த வாக்குத்தத்தத்தின்படி உங்களையும் எல்லாத் தீமைக்கும் ஆண்டவர் விலக்கிக் காத்து கனப்படுத்துவார். கர்த்தரை நம்பியிருக்கிறவனையோ தேவ கிருபை சூழ்ந்து காக்கும் (சங். 32:10).

ஒரு குடிசைப் பகுதியிலே ஒரு குடும்பம் வாழ்ந்து வந்தது. சுற்றியிருந்த அனைத்து மக்களும் வெகு விரைவில் இரவிலே படுத்துவிடுவார்கள். ஆனால், இந்த குடும்பத்தாரோ வேலை முடித்து வந்த பின்னர், பதினொரு மணி, பன்னிரெண்டு மணியானாலும், குடும்பமாக ஆண்டவரை ஸ்தோத்திரித்து, பாடி, ஜெபம்பண்ணிவிட்டுதான் படுக்கைக்கு செல்வார்கள். ஒரு சிலர் இதைக்குறித்து அவர்களிடம் சண்டையும்கூட போட்டிருக்கிறார்கள். ஒருநாள் இப்படி அவர்கள் ஸ்தோத்திரித்து பாடிக்கொண்டிருந்தபொழுது சுற்றிலும் நிசப்தம் நிலவியது. திடீரென்று லேசாக புகை வாசனையை அவர்கள் முகர்ந்தார்கள். எந்த இடத்திலிருந்து வருகிறது என்று போய் பார்த்தபோது, ஒரு குடிசையிலிருந்து லேசாக தீ எரிவதை கண்டார்கள். அந்த குடிசையிலிருந்தவர்களோ அதை அறியாமல் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தனர். இவர்கள் உடனடியாக அத்தனைபேரையும் எழுப்பி, ஆரம்பத்திலேயே அந்தத் தீயை அணைத்து, அந்த குடிசைப்பகுதி முழுவதும் காப்பாற்றப்படும்படி ஆண்டவர் அவர்களுக்கு உதவி செய்தார். தேவனை உண்மையாய் தேடின இந்த மக்கள் மூலமாகத்தான் ஆண்டவர் தங்களைத் தப்புவித்தார் என்று அப்பொழுதுதான் யாவரும் அறிந்து, இந்த மக்களை கனப்படுத்தினார்கள். அதன்பிறகு ஒருவரும் அவர்களை குறைசொல்லவில்லை. மாறாக அநேகர் இந்த விசுவாசத்தை பின்பற்றி தேவனுடைய அடியார்களாக துதி ஸ்தோத்திரம் சொல்லும் மக்களாக மாறினார்கள்.

ஜெபம்: "அன்பு இரட்சகரே, எத்தனை ஆபத்துகள் என்னை சூழ்ந்திருக்கின்றன! ஆனாலும், இன்றுமுதல் என் வாழ்வில் உம்மேல் ஒரு பக்தி வைராக்கியத்தைத் தந்து, அதன்மூலம் என் வாழ்வையும் பொல்லாங்குகள் அனைத்திலிருந்தும் காத்து தப்புவிக்க நீர் வல்லவராயிருக்கிறபடியால் உமக்கு ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

தேவன் திடப்படுத்தி, பலப்படுத்தி, துணை நிற்பார்!

"மேதியனாகிய தரியு அரசாண்ட முதலாம் வருஷத்திலே நான் அவனை திடப்படுத்தவும் பலப்படுத்தவும் அவனுக்கு துணை நின்றேன்" (தானியேல் 11:1).

"தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?" (ரோமர் 8:31) என்று வேதம் சொல்லுகிறது. தானியேல் தேவனை உண்மையாய் தேடின ஒரு வாலிபன். ஜெபத்தின் மூலமாய் கர்த்தரை இடைவிடாமல் தேடினவன். அவனுக்கு விரோதமாக எத்தனையோ எதிர்ப்புகள் வந்தபொழுதிலும், கர்த்தர் அவனுக்கு துணை நின்று ஆச்சரியமாய் வழிநடத்தினார் (சங். 34:19). அன்பானவர்களே, உங்கள் வாழ்வில் ஏராளம்பேர் துணையாயிருக்கலாம். பெற்றோரும், உற்றாரும் மற்றும் நண்பர்களும் உங்களை சூழ்ந்திருப்பதினால், நீங்கள் திருப்தியடைந்து, எனக்கு எல்லோரும் உதவியாய் இருக்க, நான் ஏன் கவலைப்படவேண்டுமென்று எண்ணலாம். ஆனால், மனிதர்கள் மனிதர்கள்தான். இன்று அவர்கள் காண்பிக்கிற அன்பு நாளைக்கு வேறுவிதமாய் மாறக்கூடும். ஆகவே, தானியேலைப்போல, நீங்களும், "கர்த்தாவே, நீரே என்னோடிருந்து, என்னை வழிநடத்தும்" என்று கேளுங்கள். அப்பொழுது அவர் உங்கள் ஒவ்வொருவருக்கும் துணையாக இருப்பார் (சங். 86:17).

ஒரு வாலிபன் தன் நண்பர்கள் அத்தனைபேரோடும் மிகுந்த மகிழ்ச்சியாய் இருந்தான். "உன் நண்பர்களை மட்டும் சார்ந்து அதில் திருப்தியாய் இராதே, கர்த்தரை மட்டும் உனக்கு துணையாகத் தேடு" என்று தினமும் அவனுடைய தாய் எவ்வளவோ புத்தி சொல்வார்கள். ஆனால், அவனோ "அம்மா ஒரு பைத்தியம்" என்று மனதிற்குள் நினைத்துக் கொள்வான். ஒரு சமயம் தன் நண்பர்களோடு கடலில் குளித்து, விளையாடுவதற்காக சென்றான். பெற்றோரின் உத்தரவைக் கேட்காமலேயே அப்படி சென்றான். போன இடத்தில் அவன் விளையாடிக்கொண்டிருந்தபொழுது திடீரென்று நண்பர்கள் யாவரும் மறைந்துபோனார்கள். ஆழமான கடலுக்குள் சென்ற இவனுக்கோ நீந்தித் திரும்பி வர அவ்வளவாய் நீச்சல் தெரியாது. நண்பர்கள் உதவியை நாடினான். அவர்களோ வேடிக்கைக்காக அவனை தனியே விட்டுவிட்டு மறைந்து விட்டனர். மிகவும் கஷ்டப்பட்டு போராடிய வேளையில் அவன் தாய் சொன்ன வார்த்தைகள் ஞாபகம் வந்தது. "மகனே, தேவனை துணையாக தேடு" என்பது திரும்பத் திரும்ப அவன் காதுகளில் ஒலித்தது. ஆண்டவரை நோக்கிக் கதறினான். கர்த்தர் மனமிரங்கினார். இரக்கமும், மனதுருக்கமும் நிறைந்த ஆண்டவர் அவன் பத்திரமாக தப்பி வரும்படி, காப்பாற்றி வழி நடத்தினார். அன்று அவன் நல்ல பாடம் கற்றுக்கொண்டான்.

வாலிபர்களே, உங்கள் சிநேகிதர்கள் அல்லது வேறு யாராவது உங்களுக்கு துணையிருந்தால் போதும் என்று எண்ணி, முடிவில் ஏமார்ந்துபோகாதபடி தேவனையே பயபக்தியுடன் தேடி, அவருடைய துணையோடு திடனடைந்து நிறைவான ஆசீர்வாதம் பெறுங்கள் (சங். 63:7,8).



ஜெபம்: **"அன்பின் இரட்சகரே! இன்று என் வாழ்விலும்கூட, எத்தனைபேர் எதிரிட்டு வந்தாலும், அன்பானவர்களால் கைவிடப்பட்டாலும், உதவி செய்வார் இல்லாத நிலை ஏற்பட்டாலும் நீரே துணையாய் இருந்து, இன்றும் என்றும் கரம் பிடித்து திடப்படுத்தி வழிநடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"**

முடிவுபரியந்தம் கர்த்தர் உங்களை ஸ்திரப்படுத்துவார்!

"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாளிலே நீங்கள் குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்கும்படி முடிவுபரியந்தம் அவர் உங்களை ஸ்திரப்படுத்துவார்"
(1 கொரிந்தியர் 1:8).

"உம்மை உறுதியாய் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனை பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்" (ஏசாயா 26:3) என்ற வசனத்தின்படி, ஆண்டவரை உறுதியாய் பற்றிக்கொண்டிருக்கிறோமா? மனிதர்மேல் நாம் நம் முழுநம்பிக்கையை வைக்கும்பொழுது, அநேக சமயங்களில் அதினிமித்தம் சஞ்சலம், சோர்வு இவைகளுக்குள்ளாகும் நிலைமை தான் வருகிறது. ஆனால், ஆண்டவரை உறுதியாய் பற்றிக்கொள்கிறவர்களையோ, சோதனை, வேதனை, மகிழ்ச்சி, களிப்பு போன்ற எல்லா சூழ்நிலையிலும் அவர் கூடவே இருந்து, அத்தகையோர் அழிந்து ஒழிந்து போகாமல் தமக்குள் ஸ்திரப்படுத்தி பெலப்படுத்தி வழிநடத்துவார் (சங். 138:3).

ஒரு குடும்பத்தில் ஒரு மகனுக்கு அதிக பலவீனம், மெலிந்த சரீரம். ஆனால், அவனுக்கு விளையாட்டில் அதிக ஆர்வம். சரீரமோ அதற்கு இடங்கொடுக்கவில்லை. பெற்றோர் அவனை "இயேசு அழைக்கிறார்" இளம் பங்காளர் திட்டத்தில் சேர்த்தார்கள். அனேகர் அவனுக்காக ஜெபித்ததினிமித்தம் அவனுடைய பெலவீனங்கள் மத்தியிலும் அவன் விரும்பியபடி விளையாட்டுகளில் பங்குபெற அவன் கொஞ்சம் கொஞ்சமாக பெலன் பெற்றான். பள்ளியிலும், கல்லூரியிலும் ஏராளமான பதக்கங்களையும் பெறும்படி ஆண்டவர் அருள்புரிந்தார். இவைகளை அனுபவிக்க அனுபவிக்க ஆண்டவருடைய வழிநடத்துதலைப் பெற்று, அவருக்குள் அவன் மென்மேலும் ஸ்திரப்பட்டான். விளையாட்டு பந்தயங்களுக்கு போவதற்கு முன்பாக ஏதாவது பயங்கரமான வியாதி வந்து விடும். ஆனால், அவனோ கர்த்தருக்குள் தைரியமாய் அவருடைய துணையைக் கொண்டு செயல்படுவான். அந்த நேரத்திலே அவனுக்கு கர்த்தர் அற்புதமாய் சுகத்தைக் கொடுப்பார். அதில் வெற்றி பெறுவதற்கு வேண்டிய திறமையையும், திடபெலனையும் கொடுப்பார். ஆகவே, அந்த மகன் வாழ்வில் உயர்வடைந்து, பெற்றோருக்கு பெருமையாய், கர்த்தருக்கு மகிமையாய் அவருக்குள் ஸ்திரப்பட்டான்.

இந்த உலக வாழ்க்கையிலும்கூட பல்வேறு சோதனைகள் வரும்பொழுது நம்மை அழைத்தவர் இந்த பாடுகளையெல்லாம் மாற்றி நம்மை சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவார் (1 பேதுரு 5:10) என்ற விசுவாசத்துடன் ஆண்டவருடைய துணையால் எல்லாவற்றிலும் வெற்றி வாழ்வு வாழ்வதற்கு, தேவன் முடிவுபரியந்தம் கூடவே இருந்து ஸ்திரப்படுத்துவார்.

ஜெபம்: "அன்பு இரட்சகரே, பெலவீனமாய், சோர்ந்து போயிருக்கிற என்னையும் இந்த சகோதரனை திடப்படுத்தி ஸ்திரப்படுத்தினதுபோல, நீர் இன்று உம்முடைய ஆணிபாய்ந்த கரத்தினுள் மறைத்து வைத்து, உம்முடைய பலத்தினால், சுகத்தினால், சந்தோஷத்தினால் நிரப்பும். ஆசீர்வதித்து வழிநடத்தும். நீரே என்னோடு கூடவேயிருந்து, என் ஆத்துமாவிலே பெலன் தந்து, என்னை தைரியப்படுத்தி ஒவ்வொருநாளும் உமக்குள் உறுதியாயும், உற்சாகமாகவும் எல்லாவற்றிலும் சிறந்து விளங்க உம் தெய்வீக அருளைத் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள்!

"ஆகையால், மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டு விடாதிருங்கள்"
(எபிரெயர் 10:35).

நம்மை வாழ்க்கையில் மேலோங்க விடாமல், பின்னால் இழுப்பது பயமும், சந்தேகமும் தான். "இதை செய்ய என்னால் முடியுமா? அதற்கு எனக்கு தகுதி உண்டா? நான் எப்படி இதை நிறைவேற்ற முடியும்?" என்ற எண்ணங்கள், தைரியத்தை இழக்கசெய்து பயமுண்டாகப்பண்ணுகின்றன. ஆனால், ஆண்டவரை அறிந்து, அவர்மேல் முழு நம்பிக்கையும் வைத்து, அவரையே சார்ந்திருக்கும்பொழுது, இந்த தைரியம் அவரால் நமக்கு கொடுக்கப்படுகிறது. எந்த நிலைமையிலும் சோர்வுக்கு இடங்கொடாமல் ஏற்ற பெலனையும், சத்துவத்தையும் பெருகப்பண்ணுகிற (ஏசாயா 40:29) தேவன் பாதத்திலேயே காத்திருந்து ஜெபிப்பதன்மூலம், அவரைப்பற்றும் பலத்த விசுவாசம், தைரியம், திடநம்பிக்கை யாவும் நமக்குள் பெருக்கெடுத்தோட தேவன் அருள்புரிவார் (எபே. 3:12).

நான் வாலிப பெண்ணாக இருந்தபொழுது என்னுடைய பெற்றோர் மிகவும் கண்டிப்பான, ஒழுக்கமான வழியிலே வளர்த்தபடியினாலே தைரியமற்றவளாக, எதற்கும் பயந்தவளாகவே எந்த காரியத்தையும் செய்வேன். பள்ளி மாணவிகளின் தலைவியாக உயர்த்தப்பட்டபோதிலும்கூட அதற்குரிய தகுதியில்லாமல், எதற்கும் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தேன். ஆனால், தேவன் கிருபையாக பரிசுத்த ஆவியானவரால் என்னை நிரப்பியபொழுதோ, ஒரு தெய்வீக பெலன், தேவன் மேல் உறுதியான நம்பிக்கை, இவைகள் என் உள்ளத்தை ஆட்கொண்டன. ஆண்டவருக்காக ஏதாவது ஒரு சேவை செய்ய வேண்டுமென்ற ஒரு பாரம் என் உள்ளத்தில் எழுந்தது. அப்பொழுது, பரிசுத்த ஆவியின் நிறைவினால் நிறைந்து, தெய்வீக தைரியத்தையும், வைராக்கியத்தையும் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொண்டேன். ஆவியானவரின் அபிஷேகத்தினால் அளவில்லாமல் நிரம்ப நிரம்ப ஆண்டவருடைய சேவையில் பல்வேறு வகைகளில் தைரியத்துடன் செயல்பட கர்த்தரே என்னோடிருந்து ஆச்சரியமாக வழி நடத்தி வருகிறார். நிறைவான தேவ பிரசன்னம் உங்களை நிரப்ப நிரப்ப, உங்களிலுள்ள குறைவுகள் மறையும் (1 கொரி. 13:10). தேவ வல்லமை, வரங்கள், கர்த்தருக்காக எதையாவது செய்ய வேண்டுமென்ற ஆர்வம் உங்களை நிரப்பும் (பிலி. 2:13). அப்பொழுது கர்த்தர் கூடவேயிருந்து, வல்லமையாக உங்களை உபயோகிப்பார்.

அன்பானவர்களே, நீங்களும்கூட என்னைப்போல பல்வேறு பயங்களினிமித்தம் உங்களையே குறைவாய் எண்ணி, காரியங்களை சாதிக்க திறமையற்றவர்கள்போல காணப்படுகிறீர்களா? நீங்களும் என்னைப்போல பரிசுத்த ஆவியினால் இடங் கொள்ளாமற்போகுமட்டும் நிரம்பப்பெற்றவர்களாக நான் எதையாகிலும் ஆண்ட வருக்காக செய்யட்டும் என்று கருத்தாய் பாரத்துடன் ஜெபியுங்கள். கர்த்தர் உங்களையும் தைரியப்படுத்தி சிங்கம்போல எழும்பி நிற்க செய்வார் (நீதி. 28:1). அவரைப் பற்றும் விசுவாசத்தால் தைரியம், திடநம்பிக்கை இவைகளை பெற்று கர்த்தருக்கென்று கனி கொடுக்கிறவர்களாக மாற்றுவார்.

<u>ஜெபம்:</u> "அன்பு இரட்சகரே, இந்த தெய்வீக தைரியத்தை, திடமனதை <u>இன்று</u> என் வாழ்விலும் கட்டளையிட்டு உமக்கென்று சேவை செய்ய அருள்தாரும். என் வீணான பயங்கள், பாரங்கள் அனைத்தையும் என்னைவிட்டு எடுத்துப்போடும். நீர் அப்படி செய்கிறபடியால் உமக்கு ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

தேவ சமாதானம் நதிபோல புரண்டு ஓடச்செய்வார்!

"கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் சமாதானத்தை ஒரு நதியைப்போலவும், ஜாதிகளின் மகிமையைப் புரண்டு ஓடுகிற ஆற்றைப்போலவும் அவளிடமாகப் பாயும்படி செய்கிறேன்..." (ஏசாயா 66:12).

இன்று ஓர் புதிய மாதத்தை ஆரம்பிக்க ஆண்டவர் நமக்கு அருள்புரிந்திருக்கிறார். மேற்கண்ட வாக்கின்படி மாதத்துவக்கத்திலேயே பற்பல கவலைகள், பாரங்களுடன் மன சமாதானத்தையும், குடும்ப சமாதானத்தையும் இழந்த நிலையில் நீங்கள் இருக்கிறீர்களா? அப்படியானால், மேற்கண்ட வாக்குத்தத்த வசனத்தின்படி கர்த்தர் சமாதானத்தின் தேவனாக இருக்கிறபடியால், அவரை உண்மையான மனதுடன் நாடித் தேடுங்கள். அப்பொழுது அவர், தமது தெய்வீக சமாதானம் நதிபோல் புரண்டோடும்படி செய்து, காரியங்களையெல்லாம் தலைகீழாய், நன்மையும் (சங். 34:10), செம்மையுமாக, அழகான முறையில் மாற்றிப்போடுவார் என்பதை நீங்கள் இந்த மாதம் முழுவதும் அனுபவித்து ஆசீர்வாதம் பெறலாம். இந்த மாதம் முழுவதும் ஒவ்வொரு நாளும் சமாதான பிரபுவாகிய அவர் உங்களுக்கு முன்னதாக செல்லும்படி அவரை சார்ந்துகொள்ளுங்கள். அப்பொழுது பிசாசு, தீயமக்கள் கொண்டு வரும் எல்லாத் தீமையான காரியங்களையும் அவர் காலின்கீழ் மிதித்து நசுக்கிப்போடுவார் (ஏசாயா 45:2).

ஒரு சமயம் ஊரெல்லாம் இடியும் மின்னலும் மழையுமாக பயங்கரமாயிருந்தது. மரங்கள் ஆங்காங்கே பெயர்ந்து விழுந்தன. மக்கள் அதைக் கண்டு, ஒளிப்பிடத்தை நாடிச்சென்று அவரவர் தங்களை காப்பாற்றிக்கொள்ள முயன்றார்கள். அந்த சமயம் ஒரு குருவி இவைகளையெல்லாம் கண்டும் கொஞ்சமும் தன் சமாதானத்தை இழக்காமல், ஒரு குன்றிலிருந்த குகை போன்ற ஒரு பொந்திலே நிம்மதியாக உறங்கிக்கொண்டிருந்தது. இந்த குருவியைப்போல எந்த நிலைமையிலும் நாமும், "ஆண்டவரே, நீர் என்னோடிருக்க நான் ஏன் கவலைப்பட வேண்டும்?" என்று தெய்வீக சமாதானத்தினால் நிரம்பி, எந்தவிதமான பொல்லாங்கு நேரிட்டாலும், "சமாதானத்தின் தேவன் என்னோடு இருக்கிறார். அவர் எனக்கு வருகிற பொல்லாங்கு ஒவ்வொன்றையும் தமது காலின் கீழ் மிதித்துப்போடுவார் (ரோமர் 16:20). சத்துரு சமாதானத்தை கெடுக்காதபடி தம்முடைய தெய்வீக கரத்தினால் நம்மை மறைத்து காத்துக்கொள்வார்" என்று விசுவாசிப்போமானால், ஒன்றும் நம்மை அசைக்க முடியாது.

அதோடுகூட இந்த உலகம் தரக்கூடாத தெய்வீக சமாதானத்தை பெற்றுக்கொள்ள நம்முடைய கவலைகளையும், பாரங்களையும் அவருடைய பாதத்தில் வைத்து, "ஆண்டவரே, நீர் இந்த நிலைமையிலும் உமது சமாதானத்தால் என்னை நிரப்பி என் வாழ்வின் அலைகளை அமரச்செய்யும்" என்று ஸ்தோத்திரத்தோடே ஜெபிப்போமானால், அவருடைய வாக்குத்தத்தத்தின்படி எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானத்தால் நம்மையும் நிரப்பி ஆண்டவர் வழிநடத்துவார் (பிலி. 4:6,7).

ஜெபம்: "சமாதானத்தின் தேவனே! இன்று என் வாழ்வில் எதிர்கொண்டு வருகிற சாத்தானின் செயல்கள், திட்டங்கள், பொல்லாத மக்களின் எண்ணங்கள் யாவற்றிலிருந்தும் என்னை விடுவித்துக் காத்து, உம்முடைய தெய்வீக சமாதானத்தின் வழிகளிலே என்னை வழி நடத்தும். நீர் அப்படி செய்கிறீர் என்று விசுவாசித்து, உமக்கு நன்றி செலுத்துகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

தேவன் கற்பிக்கிறபடியே எல்லாக் காரியங்களையும் செய்வோம்!

"என் சத்தத்தைக் கேட்டு, நான் உங்களுக்கு கற்பிக்கிறபடியே எல்லாக் காரியங்களையும் செய்யுங்கள்; அப்பொழுது நீங்கள் என் ஜனங்களாயிருப்பீர்கள், நான் உங்கள் தேவனாயிருப்பேன்" (எரேமியா 11:3).

நாம் நம்முடைய அனுதின காரியங்களிலெல்லாம் கர்த்தரையே நம்பி, அவரை சார்ந்து கொள்ளும் வேளைகளில் அவர் நமக்கு வழிகாட்டியாய், நமக்கு போதித்து, சகலத்திலும் அவர் சித்தப்படி கரம்பிடித்து நடத்துகிற அன்பின் தேவனாக இருக்கிறார் (1 யோவான் 2:17). நாம் நம்முடைய சொந்த மனவிருப்பங்களின்படி நடக்கும் பொழுதுதான், பொல்லாங்கான வழிகளில் நம்மையும் அறியாமல் சென்று, தவறான காரியங்களில் ஈடுபடுகிறோம். இதில் எந்த வகுப்பை நாம் சார்ந்தவர்கள் என்று சற்று நம்மையே ஆராய்ந்து பார்ப்போம். கர்த்தரை சார்ந்து இருக்கும்பொழுதோ, சங்கீதம் 32:8–ன்படி, அவர் நம்மீது தம்முடைய கண்களை வைத்து, ஆலோசனை சொல்லி, பிரயோஜன மானவைகளை போதித்து வழிநடத்துவார் (ஏசாயா 48:17). எனவே, நாம் இன்றுமுதல் அதிகாலையில் எழுந்திருந்து ஆண்டவர் சமுகத்தில் முழங்காற்படியிட்டு, "இன்று நீரே உம் சித்தம்போல் என்னை வழிநடத்தும்" என்று பிரார்த்தனை செய்வோம்.

என் வாழ்க்கையிலே, திருமணம் ஆகும் வரை, கஷ்டம், துன்பம், இடர்கள் இவைகள் இன்னதென்று அறியாமல் நான் வாழ்ந்து வந்தேன். திருமணம் ஆனபின்பு, என் கணவரோடு இணைந்து, ஆண்டவருடைய சேவையை செய்ய என்னை முற்றிலும் ஒப்புவித்தேன். அது என் மனதிற்கு மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கியது. ஆனால், உடனடியாக என்ன நடந்தது தெரியுமா? ஒன்றன்பின்ஒன்றாக பல்வேறு துன்பங்கள், நெருக்கங்கள், நிந்தனைகள், இல்லாமைகள் போன்று பலவிதமான இடறல்கள் என் வாழ்வில் அடுத்தடுத்து வந்து, என் உள்ளத்தை வாட்டி வதைக்க ஆரம்பித்தன. முதலில் சற்று தடுமாறியபொழுதிலும், நான் ஒன்றை அந்த நாட்களிலே திட்டமும் தெளிவுமாகக் கண்டுகொண்டேன். ஆண்டவருடைய சந்நிதியில் அத்தனை பாரங்களையும் ஒப்புவித்துவிட்டு, விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய அவரையே நோக்கிப் பார்க்கிற, ஆழமான அனுபவத்தை கற்றுக்கொண்டேன். அவர் அழகாக ஒவ்வொன்றையும் எனக்கு கற்பித்து, எல்லாக் காரியங்களையும் திடமனதோடு திறம்பட செய்ய வழி நடத்தினார். ஆகவே, அத்தனை துயர்கள் மத்தியிலேயும், சிங்கத்தைப்போல தைரியமாய் இருக்க, தெய்வீக பெலன் பெற்றேன். என் கவலைகள் எல்லாம் ஓடி மறையும் அற்புதத்தையும் கண்டேன்.

எனக்கு அன்பானவர்களே! நீங்களும்கூட இந்த நாளில் பல காரியங்களைக் குறித்து மார்த்தாளைப்போல கவலைப்பட்டு கலங்கிக்கொண்டிருக்கலாம் (லூக்கா 10:41). நான் செய்ததுபோல நீங்களும் தேவனுடைய பாதத்தில் ஆண்டவருடைய சித்தத்துக்கு ஒப்புக்கொடுத்து, ஜெபியுங்கள். கர்த்தர் எவ்வளவு அழகாய் உங்களையும் நடத்துகிறார் என்பதை நீங்களும் இன்று கண்கூடாகக் காண்பீர்கள் (1 யோவான் 5:14).

ஜெபம்: "அன்பின் இரட்சகரே! நீர் மெய்யாய் ஜீவிக்கிறபடியால், என் காரியங்களை யெல்லாம் உம்முடைய பாதத்திலே ஊற்றிவிடுகிறேன். இன்றுமுதல் எனக்காக யாவற்றையும் அழகாய் நடத்தித் தரப்போகிறீர் என்று நானும் விசுவாசிக்கிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

இளம்பிராயத்தில் நுகத்தை சுமக்கிறது நல்லது!

"தன் இளம்பிராயத்தில் நுகத்தை சுமக்கிறது மனுஷனுக்கு நல்லது. அவரே அதை தன்மேல் வைத்தாரென்று அவன் தனித்திருந்து மௌனமாயிருக்கக்கடவன்"

(புலம்பல் 3:27,28).

வாலிப வயதினர் எப்பொழுதும் சந்தோஷமாக இருக்கவும், சஞ்சலமின்றி வாழவுமே விரும்புகின்றனர். இளம் வயதில் கவலைகள் அவர்களைத் தாக்கும்போது, எளிதில் சோர்ந்து போகின்றனர். ஆனால், இந்த 21 ஆம் நூற்றாண்டில், குடும்ப பாரத்தை சுமக்கிற வேதனை, பணமில்லாததினால், சரீரத்திலே நல்ல சுகமில்லாததினால், குடும்ப சூழ்நிலை சமாதானமற்று இருப்பதினால், சந்தோஷத்தை அனுபவிக்க வேண்டிய இளம் வயதில், நுகத்தை சுமக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு தவிக்கிறார்கள். செய்வதறியாது திகைக்கிறார்கள். ஆனால், இந்த வசனத்தின்படி கர்த்தரை துணையாகக் கொண்டு இந்தவிதமான பாரங்களையெல்லாம் அவர்மீது சாற்றும் பொழுது, கர்த்தர் மத்தேயு 11:28-ன்படி அதை இலகுவாக்குவதோடு, வேண்டிய இளைப்பாறுதலையும் அற்புதமான விதத்தில் அவர்களுக்கு தர வல்லவராயிருக்கிறார் (மத்தேயு 11:30). மட்டுமின்றி, அதை இளம் வயதில் சுமப்பதினால் அதன் பிறகு அவர்கள் எதிர்கால வாழ்க்கையில் எப்படிப்பட்ட பாரமான இன்னல்கள் வந்தாலும், பொறுமையோடு அதை கடந்து செல்வதற்கான திறமையையும், திடமனதையும் ஆண்டவர் கொடுக்கிறார் (புலம்பல் 3:27).

ஒரு வாலிபன் குடும்பத்திற்கு மூத்தவனாக இருந்தான். தகப்பனார் கடுமையான வியாதியினிமித்தம் திடீரென்று மரித்துப்போனார். அவர், சொத்து சுதந்திரம் ஏதும் சேர்த்து வைக்கவில்லை. இந்த மகன் படிப்பை நிறுத்தி வேலைக்கு சென்று குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய பரிதாப நிலைமை ஏற்பட்டது. அவனோ தன் அறைக்கு சென்று, முதல்முறையாக முழங்காற்படியிட்டான். "ஆண்டவரே, என்னால் இந்த காரியத்தை நிறைவேற்றவே முடியாது. ஆனால், உம்முடைய வல்லமை, ஞானம், வழிநடத்துதல் எனக்கு இருக்குமானால், என்னால் எதையும் சாதிக்க முடியும் என்று விசுவாசிக்கிறேன். உம்முடைய கரத்தில் என் பாரங்களையெல்லாம் ஒப்படைக்கிறேன்" என்று பிரார்த்தித்தான். அவ்வளவுதான்! எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் அவன் உள்ளத்தை நிறைத்தது. கஷ்டப்பட்டு வேலை தேடி கடினமாக உழைத்து ஏதோ ஓரளவில் குடும்பத்தை காப்பாற்றினான். கர்த்தர் அவன் உழைப்பையும், உண்மையையும் பார்த்து, ஊதியத்தை அதிகரிக்க செய்தார். அவனும் வேலை செய்துகொண்டே படிப்பையெல்லாம் முடித்தான். மேலும் நல்ல வேலை உயர்வும் பெற்று குடும்பத்தை நல்ல நிலைக்கு கொண்டுவர ஆண்டவர் வழி திறந்தார். யாவரும் அவனுடைய பக்தியையும், வீட்டார் மேல் கொண்டிருந்த பாசத்தையும், கடின உழைப்பையும் பார்த்து ஆச்சரியமடைந்தனர்.

அன்பானவர்களே! நீங்களும் நுகத்தை சுமக்க முடியாமல் வீணாக கவலைப்படுவதை விட்டு, கர்த்தர் நன்மையானவைகளை உங்களுக்கும் செய்வார் என்று கர்த்தருக்குள் சந்தோஷமாய் செயல்படுங்கள். அவர் உங்களையும் கைவிடமாட்டார். உங்கள் எதிர்காலமும் அதினிமித்தம் ஆசீர்வாதம் நிறைந்ததாயிருக்கும் (எசே. 34:27).

ஜெபம்: "என் அன்பு இரட்சகரே! என்னுடைய வாழ்க்கையிலும் இன்று நான் சுமக்க வேண்டிய நுகத்தை உம் துணையோடு வெற்றியாய் நிறைவேற்றி முடிக்க அருள்தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

துதியோடு கூடி பாடி ஆர்ப்பரிப்போம்!

"துதித்தலுடனே அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து, சங்கீதங்களால் அவரை ஆர்ப்பரித்துப் பாடக்கடவோம்" (சங்கீதம் 95:2).

"துதிசெய்வது செம்மையானவர்களுக்குத் தகும்" (சங். 33:1) என்று வேதம் சொல்லுகிறது. எந்த நிலைமையிலும் துதி செலுத்தும்போது, மனதிற்கு மிகவும் சந்தோஷமாக, நிறைவாக இருக்கிறதை நாம் உணர முடியும். அதைத்தான் தாவீதும் கூட, "கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்; அவர் துதி எப்பொழுதும் என் வாயிலிருக்கும்" (சங். 34:1) என்று கூறுகிறான். இவ்விதமாய் நன்றி உள்ளத்தோடு ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தும்போது, கர்த்தர் அதை சுகந்த வாசனையாக முகர்ந்து, உங்களுக்கு சமீபமாய் வந்து, உங்களை நிறைவாய் ஆசீர்வதிப்பார். ஆகவே, உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை இயேசுகிறிஸ்துவின் மூலமாய் எப்போதும் தேவனுக்கு செலுத்தக்கடவோம் (எபி. 13:15).

அயல்நாடு ஒன்றில் ஒரு மனிதன் இருந்தான். அவன் நன்றாக குடிப்பான். குடிவெறியில் தெருவெல்லாம் பிதற்றிக்கொண்டு அங்கும் இங்குமாக அலைந்து திரிவான். ஜனங்கள் யாவரும் அவனை கேலியாக பேசுவார்கள். ஆனால், அதே மனிதன் ஒருநாள் ஆண்டவரை இரட்சகராக ஏற்றுக் கொண்டான். அவனுடைய உள்ளம், வாழ்க்கை யாவும் தலைகீழாய் மாறியது. அவன் உள்ளத்திலே இரட்சிப்பின் சந்தோஷம் பொங்கி வழிந்தது. அதினிமித்தம் அவன் பைத்தியம்போல் அலைந்து திரிந்த அதே தெருக்களிலே கர்த்தரை ஸ்தோத்திரித்துக் கொண்டும், சத்தமாக அவரை துதித்து பாடிக்கொண்டும் போகிறதைக் கண்ட ஜனங்களுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

ஆம்! எனக்கு அன்பானவர்களே, உங்கள் உள்ளத்திலும் ஆண்டவர்மேல் நன்றியுள்ளம் இருக்கிறதா? அல்லது எப்பொழுதும் அது இல்லை, இது இல்லை என்று முறுமுறுத்துக் கொண்டே இருக்கிறீர்களா? இன்றும்கூட உங்கள் உள்ளத்தைத் திறந்து, "ஆண்டவரே, நீர் எனக்கு எவ்வளவு நன்மைகளை செய்திருக்கிறீர், என் கஷ்டங்களில் இதுவரை ஆச்சரியமான விதங்களில் போதுமானவராக இருந்திருக்கிறீரே, இன்ன இன்ன நன்மைகளையெல்லாம் கொடுத்து ஆசீர்வதித்து வந்திருக்கிறீரே" என்றெல்லாம் எண்ணி எண்ணி ஸ்தோத்திரம் செலுத்திப் பாருங்கள் (1 தெச. 5:18). அப்பொழுது நீங்களும் தேவனுடைய பிரசன்னத்தை அளவில்லாமல் உணர்ந்துகொள்ளும்படியும், அதுமட்டுமின்றி, உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கப் பொங்க பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தினாலும் நிரம்பி, சொல்லிமுடியாததும், மகிமையினால் நிறைந்ததுமான தெய்வீக அனுபவங்களைப் பெறவும் ஆண்டவர் கிருபை புரிவார் (1 பேதுரு 1:8). என் வாழ்வில், அதுவரை வாய்திறவாது அமைதலாக ஜெபித்த நிலை மாறி, ஆண்டவரை நன்றி நிறைந்த உள்ளத்துடன் துதித்து, ஸ்தோத்திரம் செய்தபொழுது, என் உள்ளம் தேவ அன்பால் பொங்கிப் பொங்கி தெய்வீக ஆனந்தத்தால் நிறைந்து அக மகிழ்ந்தேன். நீங்களும் இந்த தெய்வீக இன்பத்தை அனுபவித்து ஆசீர்வாதம் பெறுங்கள்.

<u>ஜெபம்</u>: "அன்பின் தெய்வமே! நீர் எவ்வளவு சமீபமாய் இருக்கிறீர் என்பதை உணராமல், கசப்புக்கு இடங்கொடுத்து, வாழ்வை வேதனையால் கெடுத்துக் கொள்ளாமல் <u>இன்றுமுதல்</u> உம்மை ஸ்தோத்திரிக்கவும், உம் தெய்வீக சமுகத்தை அனுபவிக்கவும் எனக்கும் அருள்தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தர் உங்களுக்கு துணை நிற்பார்!

"உமது அடியேனுக்கு நன்மையாகத் துணை நில்லும்..." **(சங்கீதம் 119:122)**

யாக்கோபின் தேவனை நாம் நம் வாழ்வில் நம்பிக்கையாகக் கொள்ளும்போது, அவர் துணையாகவும், நன்மை செய்கிறவராயும் இருப்பார். யாக்கோபு தேவனை அறியாதவனாக இருந்தான். ஆனால், ஆண்டவர் தாமே இறங்கிவந்து, ஒரு நாள் அவனை சொப்பனத்தின் மூலம் சந்தித்தார் (ஆதி. 28:16). அன்று தேவனை உறுதியாகப் பற்றிக்கொண்ட யாக்கோபு, தனது வாழ்நாளின் கடைசி மூச்சு வரை தேவனை உறுதியாய், துணையாய் பற்றிக்கொண்டான். அதினிமித்தம், ஆண்டவர் அவனுக்கு, எவ்வளவு நன்மை செய்தார் என்பதை, வேதத்தில் தெளிவாக வாசிக்கிறோம். யாக்கோபு தன் மகன் யோசேப்பைக் குறித்து எவ்வளவாய் கவலைப்பட்டான். ஆனால், தேவ தயவால் அதே யோசேப்பு கர்த்தரால் மிகுந்த ஆசீர்வாதம் பெற்றவனாய் இருப்பதை பார்க்கவும், அவனே தன்னை அடக்கம் செய்யும்படியான ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொண்டான். இது தேவனையே துணையாக நம்பி வாழ்ந்த யாக்கோபுக்கு ஆண்டவர் அருளிச்செய்த பெரிய பாக்கியம் (சங். 146:5).

ஒரு குடும்பத்தில் தகப்பன் எப்பொழுதும் ஆண்டவரை அதிகமாய் தேடுவார், பிள்ளைகளுக்கும் அதை கற்றுக்கொடுப்பார். தன்னுடைய சொற்ப வருமானத்தில் மற்றவர்களுக்கும் தாராளமாக உதவி செய்வார். அவருடைய மூத்த மகளுக்கு திருமணம் ஒழுங்கு செய்யப்பட்டது. ஆனால், கையிலே அதற்கு வேண்டிய பணமில்லை. நாட்கள் நெருங்க நெருங்க அவர் அதிகமாய் உபவாசத்திலும், ஜெபத்திலும் ஆண்டவருடைய பாதத்தில் காத்திருந்தார். ஒருநாள் மிகவும் கவலையோடு இன்று எப்படியாவது ஆண்டவர் உதவியை அனுப்பினாலொழிய அவருடைய பாதத்தை விட்டு நான் எழுந்திருக்கப் போவதில்லை என்று கருத்தாய் ஜெபித்தார். ஏனென்றால், அடுத்த நாள் பல காரியங்களை செய்வதற்கு அவருக்கு பணம் தேவையாய் இருந்தது. காலை 7 மணி யாரோ கதவை தட்டும் சத்தம் கேட்டது. அவர் போய் திறந்து பார்த்தபொழுது, அவருடைய பழைய நண்பர் ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவர் கஷ்டப்பட்ட காலத்தில் இவர் கொஞ்சம் கொஞ்சமாக கொடுத்துதவிய பணத்தையெல்லாம் அன்புடன் மொத்தமாகத் திருப்பிக் கொடுக்க வந்திருந்தார். அதைக் கண்ட இந்த மனிதரின் உள்ளம் ஆண்டவரை இன்னும் அதிகமாக துதித்து ஸ்தோத்திரித்தது. கர்த்தர் தம்முடைய அடியார்களுக்கு துணையாக நின்று, ஏற்ற சமயத்தில் சகல நன்மைகளையும் எவ்வளவு அழகாய் அருளிச்செய்கிறார் என்பதை அறிந்து கொண்டார்.

அன்பானவர்களே! உங்களுக்கும் இதே ஆண்டவர் துணையாய் நிற்க, நன்மைகளால் உங்களை நிரப்ப காத்துக்கொண்டிருக்கிறார். நீங்களும் இவரைப்போல, யாக்கோபைப் போல கர்த்தரையே உறுதியாய் பற்றிக்கொண்டு, மார்த்தாளின் சகோதரியாகிய மரியாள் நல்ல பங்கை பெற்றுக்கொண்டதுபோல, ஆண்டவரோடு நெருங்கிவாழ உங்கள் வாழ்வையும் ஒப்புக்கொடுப்பீர்களா? (சங். 115:11).



ஜெபம்: "அன்பு இரட்சகரே! இந்த உலகத்தில் எவ்வளவு கண்ணீர்? எவ்வளவு வேதனைகள்? ஆனால், நீரோ உம்மைத் தேடுகிறவர்களுக்கு துணையாய் இருந்து நன்மை செய்கிறவராகவே இருக்கிறீர். இன்று என் வாழ்விலும் எனக்கு துணையாக இருக்கிறபடியால் உமக்கு ஸ்தோத்திரம். நான் விரும்புகிறதற்கும், வேண்டுகிறதற்கும் அதிகமான நன்மைகளைத் தந்து என்னை ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"

கர்த்தர் எல்லார்மேலும் தயவுள்ளவர்!

“கர்த்தர் எல்லார்மேலும் தயவுள்ளவர்; அவர் இரக்கங்கள் அவருடைய எல்லாக் கிரியைகளின்மேலுமுள்ளது” (சங்கீதம் 145:9).

“ஆண்டவருடைய கோபம் ஒரு நிமிஷம், அவருடைய தயவோ நீடிய வாழ்வு” என்று வேதம் சொல்லுகிறது (சங். 30:5). நாம் தவறு செய்யும்பொழுது, சில நேரங்களிலே சிட்சைகள் கொடுக்கிறார். ஆனால், அதே நேரத்திலே நாம் நமது தவறை உணர்ந்து, “ஆண்டவரே, என்னை மன்னியும்” என்று கேட்கும்பொழுது, தயவு பெருத்தவராக, இரக்கம் நிறைந்தவராக நம்மை மன்னிக்கிறார்! அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட இஸ்ரவேல் ஜனங்கள், எத்தனையோ தவறுகளை செய்தார்கள், அவருடைய அன்பை உணராமல் போனார்கள். ஆனாலும், அவரை நோக்கி வேண்டிக் கொண்டபொழுது (1 சாமு. 7:8), அவர்களுக்கு ஆச்சரியமான முறையிலே உதவி செய்தார் என்று வேதத்திலே வாசிக்கிறோம் (1 சாமு. 7:13). எனவே, நம் வாழ்க்கையிலும்கூட ஆண்டவருக்கு விரோதமான தவறுகள் செய்திருப்போமானால், உடனடியாக முழங்காற் படியிட்டு, “தகப்பனே, என்னை மன்னியும்” என்று அறிக்கையிட்டு, அவருடைய இரத்தத்தாலே கழுவி சுத்திகரிக்கும்படிகேட்கும்பொழுது, அதை செய்வதற்கு அவர் உண்மையும் நீதியுமுள்ளவராக இருக்கிறார் என்பதை வேதத்தில் வாசிக்கிறோம் (1 யோவான் 1:7,9).

ஒரு வாலிபன், குடும்பத்தில் பெற்றோர் எவ்வளவோ புத்தி சொல்லி, பக்திக்குரிய வழியில் வளர்த்தபோதிலும், தன் நண்பர்களோடு சேர்ந்து கல்லூரிக்கு போகாமல், காலாகாலத்தில் படித்து முடிக்க வேண்டிய படிப்பை படித்து முடிக்க முடியாமல், வேலைக்கும் செல்ல வழியில்லாமல், பெற்றோருக்கு பாரமாய் அலைந்து திரிந்து கொண்டிருந்தான். அவனுடைய பெற்றோர், “அவ்வளவுதான், இனி இவனை திருத்தவே முடியாது” என்று சோர்ந்துபோனார்கள். அந்த சமயத்தில் அவனுடைய பள்ளி நண்பன் ஒருவன் கர்த்தரை தேடுகிறவனாக இருந்தபடியால் இவனைக் குறித்து கேள்விப்பட்டு, அவன் மீது இரக்கம் கொண்டு, மெதுமெதுவாக அவனை ஆண்டவர் பக்கமாக ஜெபத்தோடு கொண்டு வர முயற்சித்தான். அவன் முயற்சி வீணாகவில்லை. ஒருநாள் அந்த வாலிபன் ஆண்டவரின் அன்பை உணர்ந்து, தன் பாவங்களை மன்னிக்கும்படி கண்ணீர்விட்டு அழுதான். கர்த்தர் அவனுக்கு மனமிரங்கினார். அவன் இழந்த எல்லாவற்றையும் ஆசீர்வாதமாக மாற்றிக் கொடுத்தார். உடன் படித்த அந்த மாணவனுக்கும், பெற்றோருக்கும் அதினிமித்தம் பெரிய சந்தோஷம் ஏற்பட்டது.

ஆம், பிரியமானவர்களே! கர்த்தர் தயவு பெருத்தவர்! உங்களுடைய வாழ்வில் எவ்வளவோ தவறுகளை அறிந்தோ, அறியாமலோ செய்திருக்கலாம். அதினிமித்தமாக உங்கள் வாழ்வு வறட்சியாய் இருக்கலாம். நன்றாக யோசித்து பாருங்கள். கர்த்தர் பாதத்தில் இன்று உங்கள் குறைவுகளையெல்லாம் நீங்களும் அறிக்கையிடுங்கள். உங்கள் மீதும் அவர் தயவு காண்பித்து, இன்றுமுதல் வறண்ட வாழ்வை செழிக்க செய்வார் (சங். 89:17).

ஜெபம்: “அன்பின் இரட்சகரே! உம்முடைய இரட்சிப்பு, உம்முடைய இரக்கம் எவ்வளவு பெரியது! எந்த பொல்லாங்கு நிறைந்த நிலைமையிலும் நீர் தயை உள்ளவராக, விடுவிக்கிறவராக இருக்கிறீர். இன்று என் மீதும் இரக்கமாய், தயவாய் என் பாவங்கள் அனைத்தையும் நீக்கி, பரிசுத்தமாய் வாழ, என்னை யாவருக்கும் ஆசீர்வாதமாய் மாற்றும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!”

நான் கேட்கும்படி என் செவியை கவனிக்க செய்கிறார்!

(ஏசாயா 50:4).

கர்த்தர் நம் செவியைத் திறக்கிறார் என்று வேதம் சொல்லுகிறது (ஏசாயா 50:5). ஆனால், நாம் அவருடைய சத்தத்தை கேட்கத்தக்கதாக நம் செவியை திறந்து வைத்திருக்கிறோமா? அல்லது கேளாதவர்கள்போல் அசட்டையாக இருக்கிறோமா? (சங். 38:13). நம்மை நாமே சற்று ஆராய்ந்து பார்த்து, நம்மை தாழ்த்தி, ஆண்டவருடைய சத்தத்தை கேட்கத்தக்கதாக அவருடைய பாதத்தில் பணிவோடும், ஜெபத்தில் பயபக்தியுடனும் காத்திருப்போமானால், தாம் பேசுவதை கேட்கும்படியாக நம்முடைய செவிகளை அவர் திறப்பார். அவ்வாறு அவருடைய பாதத்தில் காத்திருந்து, விழிப்போடு கூட அவருடைய வார்த்தைகளுக்கு செவிகொடுக்கிற மனுஷனே பாக்கியவான் என்றும் வேதம் கூறுகிறது (நீதி. 8:34). உங்களுடைய வாழ்வு இப்படி ஆசீர்வாதமாக, செழிப்பாக இருக்க ஆண்டவருடைய மெல்லிய சத்தத்தைக் கேட்டு, அதின்படியே நடப்பதில் ஜாக்கிரதையாயிருங்கள்.

ஒரு குடும்பத்தில் பெற்றோர் பக்தியுள்ளவர்கள். பிள்ளைகள் அனைவரையும் கர்த்தரை தெய்வமாகக் கொண்டு, அவருடைய சித்தத்தை நிறைவேற்றுகிறவர்களாக இருக்கும்படி பக்தியுள்ள வழியில் வழிநடத்தினார்கள். அவர்கள் விரும்பியபடியே எல்லாப் பிள்ளைகளும் தேவ பக்தியோடு நடந்துகொண்டார்கள். ஆனால், ஒருவன் மாத்திரம் அவர்களுடைய வார்த்தைக்கு செவி கொடுக்கவில்லை. இதனால் தகப்பனுடைய உள்ளம் மிகவும் சஞ்சலப்பட்டது. இதினிமித்தம் அவர் சுகவீனமடைந்து மரணத்தருவாயிலானார். மரிக்குமுன்னதாக தன் பிள்ளைகள் அத்தனைபேரையும் தம்மண்டை அழைத்தார். ஒவ்வொருவரையும் பார்த்து, 'நாம் மீண்டும் பரலோகத்தில் சந்திப்போம்' என்று புன்சிரிப்போடுகூட கூறினார். ஆனால், அந்த ஒரு பையனை மட்டும் அழைத்து, 'நான் போய் வருகிறேன்' (Good Bye) என்று கூறினார். அதன் அர்த்தம் என்னவென்றால், "அவ்வளவுதான், இனி நாம் ஒருவரையொருவர் சந்திக்கவே முடியாது" என்பதுதான்! அதைக் கேட்ட மகன் தன்னுடைய பரிதாப நிலைமையை அப்பொழுதுதான் உணர்ந்தான். ஓ! என்று அழுது அந்த இடத்திலேயே ஆண்டவருக்கு தன் வாழ்வை அர்ப்பணித்தான். அந்த தகப்பனுடைய உள்ளம் எவ்வளவாய் மகிழ்ந்திருக்கும்! ஆண்டவர் அதேபோன்று தமக்கு செவி கொடுக்கிற யாவரையும் ஆசீர்வதிப்பார்.

அன்பானவர்களே! ஆண்டவர் அவன் மீது மட்டுமல்ல, நம் மீதும்கூட அதேபோல அன்பும், இரக்கமும், தயவும் உள்ளவராக இருக்கிறார். அவருடைய பாதத்தில் அமர்ந்து, அவருடைய வார்த்தைகளை வாசித்து, அவருக்கு செவிகொடுத்து, அவருடைய சித்தத்தை ஜெபத்தின் மூலமாய் கேட்டு, ஆசீர்வாதம் பெறுவோம். கடின உள்ளத்தோடு கர்த்தர் விரும்பாத காரியங்களுக்கு செவி கொடுப்போமானால், இன்றுமுதல் ஆண்டவர் பாதத்தில், பாவியான ஸ்திரீ அழுததுபோல் அழுது, நம் பாவங்களை, குறைவுகளை அறிக்கையிட்டு, நம் வாழ்வை மாற்றும்படி கெஞ்சுவோம் (சங். 34:4,5).



<u>ஜெபம்</u>: "அன்பின் இரட்சகரே! உம்மோடு உறவாடுகிற வாழ்க்கை எவ்வளவு இன்பமானது! எனக்கும் உம்மோடு பேசுகிற, உம்முடைய சத்தத்தைக் கேட்கிற தெய்வீக அனுபவத்தை <u>இன்றுமுதல்</u> இதுவரையில்லாத விதமாக நிறைவாய் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"

நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தர் – பிரியர்!

(கொலோசெயர் 3:12).

நம்முடைய ஆண்டவர் பரிசுத்தராயிருக்கிறார். ஆகவே, அவருடைய அடியார்களாகிய நாமும்கூட நம்முடைய பேச்சு, நடக்கை, சிந்தனை யாவற்றிலும் அவரைப்போல பரிசுத்தராயிருக்கவேண்டுமென்று அவர் விரும்புகிறார் (1 பேதுரு 1:15,16). இந்த உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது என்று வேதம் சொல்லுகிறது (1 யோவான் 5:19). எங்கு திரும்பிப் பார்த்தாலும் அசுத்தம்! இதன் மத்தியில் எப்படி பரிசுத்தமாய் வாழ்வது என்று அநேகர் சிந்திக்கலாம். ஆனால், எத்தனை அதிகமாக இந்த பரிசுத்த தேவனின் பாதத்தில் காத்திருந்து அவரோடு பேசுகிறோமோ, அவருடைய வார்த்தையை கவனமாய் வாசிக்கிறோமோ அதன்மூலம் அவரைப்போன்ற சாயலை அவர் நமக்கு அருளிச் செய்கிறார். இதைத்தான் "...அவர் இருக்கிறபிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்" (1 யோவான் 4:17) என்று வாசிக்கிறோம். எனவே, பரிசுத்தமாய் நடப்பது அல்லது ஜீவிப்பது நம்மால் உண்டாகிற ஒரு அனுபவம் அல்ல. பரிசுத்த தேவன் நமக்குள்ளே எவ்வளவாய் வந்து வசிக்கிறாரோ, நம்மை ஆட்கொள்ளுகிறாரோ அத்தனை அதிகமாய் நம்முடைய வாழ்வு பரிசுத்தமாக்கப்படும். மேலும், பரிசுத்த ஆவியால் நாம் நிரம்பும்பொழுது, அவருடைய குணலட்சணங்களையே நாம் பெறுகிறோம் (2 கொரி. 3:18) என்றும் வேதத்தில் வாசிக்கிறோம்.

ஒரு மனிதன் கொலையும் செய்யக்கூடிய அன்பற்ற செயல்களை செய்து, பயங்கரமான பாவம் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்து வந்தான். இவனைக் குறித்து அறிந்த அக்கம் பக்கத்திலுள்ள மக்கள், அவனண்டை போகவோ, பேசவோ பயப்பட்டு, அவனை தள்ளி வைத்திருந்தார்கள். இவைகளையெல்லாம் அவன் அறிந்திருந்தும், கடின மனதுள்ளவனாக அப்படியே தொடர்ந்து வாழ்ந்து வந்தான். ஒருநாள் அவனுடைய சரீரத்திலே ஒரு பயங்கரமான வியாதி வந்திருப்பதை அவன் கண்டு, "ஐயோ, என் சரீரம் கெட்டு அழுகிப் போகும்படியான வியாதி வந்துவிட்டதே. எனக்கு யார் உதவி செய்வார்கள்? எல்லோரும் என்னை வெறுக்கிறார்களே" என்று தன் மனைவியிடத் திலும்கூட சொல்ல முடியாமல், தவித்து கலங்கிக் கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு தேவ ஊழியரிடம் இரகசியமாக சென்று தன் காரியங்களையெல்லாம் மனந்திறந்து பேசினான். அவரோ தெய்வ அன்பினால் நிறைந்து அவனை அணைத்து, அவனுக்காக கருத்தாய் பிரார்த்தனை செய்து வந்தார். நாளடைவில் அவன் உள்ளமும் பரிசுத்த இரத்தத்தால் கழுவப்பட்டு, இயேசுவுக்கு அடிமையாக மாறினான். அவன் சரீரமும் குணமடைய ஆரம்பித்தது. ஆண்டவருக் கென்று ஒரு நற்சாட்சியாக மாறும்படி, பரிசுத்த ஆவியானவர் அவனை பலப்படுத்தினார்.

எனக்கு அன்பானவர்களே! கர்த்தர் ஒவ்வொருவரையும் ஒவ்வொருவிதமாக தமக்கு பிரியமானவர்களாக, பரிசுத்தமானவர்களாக மாற்றுகிறார். இன்று நீங்களும் உங்கள் வாழ்க்கையை இவ்விதமாகவே தேவனுக்கு பிரியமான வகையில் மாற்றும்படி ஒப்புக்கொடுங்கள். உங்களுக்கும் இந்த பாக்கியத்தை அவர் நிச்சயம் அருளிச்செய்து, உங்கள் மீது பிரியமாயிருப்பார் (லூக்கா 11:28, சங். 112:1).



<u>ஜெபம்</u>: "அன்பு இரட்சகரே! உம்முடைய இரட்சிப்பு, நீர் சிலுவையிலே செய்த தியாகம், இன்று எனக்கு பரிசுத்த வாழ்வையும், உமக்கு பிரியமாய் வாழும் கிருபையையும் தருகிறபடியால், உமக்கு ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

நீங்கள் பூரண அறிவடைந்தீர்கள்!

"தன்னை சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொண்டிருக்கிறீர்கள்"

(கொலோசெயர் 3:10).

கர்த்தரை அறியாத நிலைமையிலே நாம் இருக்கும்பொழுது, அவரைப் பற்றிய அறிவு இல்லாமல் நம் வாழ்வு அர்த்தமற்ற நிலைமையிலே இருக்கிறது. ஆனால், அவரை அறிந்துகொள்ளும்பொழுதோ, நம் வாழ்வு தலைகீழாய் மாறுகிறது. இதைத்தான் புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொள்கிற அனுபவம் என்று வேதம் சொல்லுகிறது. கர்த்தரை அவ்வாறு அறிந்துகொள்ளும்போது, நம்முடைய கண்களின் இருளெல்லாம் மாறி நாம் பூரண வெளிச்சத்திற்குள் வாழும் பாக்கியத்தை பெறுகிறோம். அவ்வாறு கண்கள் திறக்கப்படுவதற்கு காரணம், தேவனுடைய அறிவு நமக்குள் இறங்குகிறபடியினால்தான் (ரோமர் 11:33, கொலோ. 2:3). "ஒன்றான மெய்த்தேவனையும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்" (யோவான் 17:3). அன்பானவர்களே, "கேளுங்கள், அப்பொழுது கொடுக்கப்படும்" என்று சொன்னவர், உண்மையாய், பக்தியுடன், பாரத்துடன் கேட்கும்பொழுது, கேட்கிற ஒவ்வொருவருக்கும் இந்த மேலான ஆசீர்வாதத்தை கொடுப்பார்.

ஒரு சிறுவன் எவ்வளவுதான் படித்தாலும் எளிதில் மறந்துவிடுவான். அவன் தாய் இவனைக் குறித்து மிகுந்த கவலையோடு இருந்தார்கள். எப்படியோ தட்டுத்தடுமாறி ஒவ்வொரு முறையும் தாயின் கண்ணீர் நிறைந்த ஜெபத்தினால் தேர்ச்சியடைந்து ஒவ்வொரு வகுப்பையும் தாண்டிவந்தான். ஒருநாள் தாய் அவனை "இயேசு அழைக்கிறார்" ஜெப கோபுரத்திற்கு அழைத்து வந்து, ஜெபவீரர்களிடம், "இவனுக்காக ஜெபம்பண்ணுங்கள். எவ்வளவு கஷ்டப்பட்டு படித்தாலும் பாடங்கள் அவன் மனதில் நிற்பதே இல்லை" என்று கவலையுடன் கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் ஜெப கோபுரத்திற்கு வரும் நேரங்களிலெல்லாம் ஜெப வீரர்கள் இந்த மகனுக்காக கருத்தாய் ஜெபித்தார்கள். அதோடுகூட அந்த தாய் தன் மகனை "இயேசு அழைக்கிறார் – இளம் பங்காளர்" திட்டத்திலும் மிகுந்த விசுவாசத்தோடு சேர்த்தார்கள். தானும் அவனுக்காக உபவாசத்தோடு பிரார்த்தனை செய்து வந்தார்கள். ஜெபத்தைக் கேட்கிற ஆண்டவர், இந்த தாயினுடைய கண்ணீரைப்பார்த்து, அதன்பிறகு, அவன் உட்கார்ந்து படிக்கும் பொழுதெல்லாம் அவனோடு அவரும் அமர்ந்து அத்தனையும் அவன் மனதிலே பதியும்படியாய் அருள்புரிந்தார்.

ஆம், பிரியமானவர்களே! கர்த்தர் தம்மை உண்மையாய் நோக்கிக் கூப்பிடுகிறவர்களுக்கு, தமது தெய்வீக ஞானம், அறிவு இவற்றை விரும்புகிறதற்கும், வேண்டிக் கொள்ளுகிறதற்கும் அதிகமாக தர வாஞ்சையுள்ளவராயிருக்கிறார். அவரைப்பற்றிய அறிவையும்கூட அதேவண்ணமாக தந்து, அதன்மூலம் மேன்மையான பாக்கிய வாழ்வையும் தருவார் (எபே. 3:20).

ஜெபம்: "அன்பின் தெய்வமே! என் வாழ்விலும் இன்றுமுதல் நீரே ஞானமாக, புத்தியாக, அறிவாக விளங்கும். என்னுடைய சுய ஞானம், அறிவு ஒன்றுக்குமே உதவாது. எனவே, நான் உம்மிலேயே சார்ந்து, நீர் கொடுக்கும் தெய்வீக ஞானத்தினால் நிறைந்து குடும்ப வாழ்விலும், என் தனிப்பட்ட வாழ்விலும், மற்றும் பணிபுரியும் இடத்திலும் சிறந்து விளங்கி, உம்மை மகிமைப்படுத்த நீரே எனக்கு அருள் செய்யும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

போரை நீக்கி சமாதானத்துடன் நடத்தும் ஆண்டவர்!

"...அவரோ எனக்கு நேரிட்ட போரை நீக்கி, என் ஆத்துமாவை சமாதானத்துடன் மீட்டுவிட்டார்"
(சங்கீதம் 55:18).

பிசாசானவன் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடி சுற்றித்திரிகிறான் (1 பேதுரு 5:8). இவ்வுலக வாழ்வில் பகைவர்கள் நமக்கு விரோதமாக எழும்பி தீமை செய்ய நினைக்கிறார்கள் (சங். 41:7). ஆனால், இப்படிப்பட்ட நிலைமையில் சமாதானத்தின் தேவனாகிய ஆண்டவர் இவற்றையெல்லாம் முற்றிலுமாக மாற்றிப்போட வல்லவராக இருக்கிறார் (ரோமர் 16:20). ஆனால், அவ்வாறு சமாதானத்தின் தேவன் கிரியை செய்வதற்கு நாம் நம்முடைய போராட்டங்களை அவரிடம் சொல்லி, ஜெபத்தில் அவருடைய உதவியை நாடும்பொழுது மட்டுமே, அவர் அவ்வாறு நமக்கு உதவி செய்வார். போராடினவர்களை தேடிப்பார்ப்பீர்களானால், கர்த்தர் அவர்களை இல்பொருளாக மாற்றிப்போடுவார் என்றும் வேதம் சொல்லுகிறது (ஏசாயா 41:12).

ஒரு ஏழை மனிதன் குடும்ப வாழ்க்கையில் பல்வேறு தேவைகளினிமித்தமாக ஒரு மனிதனிடத்தில் கடன் வாங்கினான். அவன் கடன் கொடுத்தபொழுது மிகவும் இனிமையாகப் பேசி கடன் கொடுத்தான். ஆனால், நாளுக்குநாள் கடன் ஏற ஏற, வட்டியும் ஏறிற்று. அதோடுகூட அந்த கடன் கொடுத்தவன் பொல்லாதவனாக, பிசாசின் மகனாக இருந்தபடியால், பொய்யான கணக்குகளையெல்லாம் தயாரித்து, அவன் வாங்கின கடனுக்கு மேலாக எத்தனையோ மடங்கு அதிகமான கணக்குகளை தயாரித்து வைத்திருந்தான். அதைக் கேட்ட அந்த ஏழை மனிதனுக்கு ஒன்றும் விளங்காமல், "இது என்ன? பொய்யான கணக்காக இருக்கிறதே" என்று கேட்டபொழுது, அவன் பல காரியங்களைக் கூறி பயமுறுத்தினான். ஏழை மனிதனோ கர்த்தரை நோக்கி கதறினான். அவனுக்கு தெரிந்த அருமையான கிறிஸ்தவ வழக்கறிஞர் ஒருவர் "தம்பி, இது அநியாயம் என்று நான் அறிவேன். உனக்கு கர்த்தர் உதவி செய்யும்படியாக நீ ஜெபம் மாத்திரம் பண்ணு. நான் உனக்காக தேவ ஒத்தாசையோடு என்னால் இயன்றதை செய்கிறேன்" என்று தைரியமூட்டி அவனுக்காக வாதாடினார். கர்த்தர் ஜெபத்தை கேட்டு, அந்த பொல்லாத மனிதனையும், அவனுடைய தவறான கணக்குகளையும் சரிசெய்து, அந்த ஏழை மனிதன் திருப்பிக் கொடுக்க வேண்டிய பணத்தை மட்டும் கொடுக்கும்படியாக, நீதியான தீர்ப்பு கிடைக்க உதவிபுரிந்தார். கஷ்டப்பட்டு பலருடைய உதவியோடு, இந்த மனிதன் அதை கட்டித் தீர்க்கவும் ஆண்டவர் கிருபை புரிந்தார்.

அன்பானவர்களே! நீங்களும் இப்படிப்பட்ட போராட்டங்கள் மத்தியில் உதவி செய்ய வல்ல ஆண்டவரையே நோக்கிப் பாருங்கள். நிச்சயம் ஆண்டவரிடமிருந்து ஒத்தாசை வரும் (சங். 121:1,2).

<u>ஜெபம்</u>: "அன்பு இரட்சகரே! என் வாழ்விலும் எத்தனை போராட்டங்கள் என்னை சூழ்ந்து நிற்கின்றன. என் சுயபெலனால், சுய முயற்சியால் ஒன்றுமே செய்ய முடியாது. எனவே, <u>இன்று</u> நானும் உம்மையே இறுக பற்றிக்கொள்கிறேன். உம்முடைய பூரண சமாதானத்தை நீரே எனக்கு தந்து, பொல்லாத மக்களுக்கும், பிசாசின் சோதனைக்கும் என்னை விலக்கி மீட்டு, ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

தாம் சொன்ன தீங்குக்கு மனஸ்தாபப்படுகிற தேவன்!

"...அவன் கர்த்தருக்கு பயந்து, கர்த்தரின் முகத்தை நோக்கிக் கெஞ்சினானல்லவா? அப்பொழுது கர்த்தர் அவர்களுக்கு விரோதமாக சொல்லியிருந்த தீங்குக்கு மனஸ்தாபப்பட்டார்..."

(எரேமியா 26:19).

யோனா என்ற தீர்க்கதரிசி கர்த்தர் தன்னிடம் சொன்ன இடத்திற்கு போகிறதற்கு பதிலாக வேறு திசையில் போனான். ஆனால், கர்த்தரோ அவனை விடாமல் தொடர்ந்து பிடித்தார். அவன் சென்ற கப்பல் கடும் புயலை சந்திக்கும்படி செய்தார். அதினிமித்தமாக அவன் கடலுக்குள் தூக்கியெறியப்பட்டான். அங்கு ஒரு மீன் அவனை விழுங்கும்படி ஆண்டவர் செய்தார். அந்த மீனின் வயிற்றுக்குள் இருந்து, கர்த்தரை நோக்கி அவன் பிரார்த்தனை செய்தபொழுது, கர்த்தர் அவனுடைய ஜெபத்தைக் கேட்டு, யோனாவை அந்த மீன் கரையிலே கக்கும்படி செய்தார் (யோனா 2:9,10). இவ்விதமாக கர்த்தருடைய வார்த்தைக்கு விரோதமாக நடக்க அவன் நினைத்தாலும், அவரை நோக்கி விண்ணப்பம் செய்து கதறி அழுதபோது, அவர் தயவுள்ளவராக, மன்னிக்கிறவராக இருந்து உதவி செய்தார் (தானி. 9:10, புல. 3:22).

ஒரு குடும்பம் ஆண்டவருக்கென்று தங்களால் இயன்ற அளவில் ஊழியத்தை செய்து வந்தது. ஆனால், திடீரென்று, இந்த குடும்ப தலைவனின் கண்கள் தன் மனைவியை விட்டு வேறுபக்கமாக திரும்பியது. அதை அறிந்த மனைவி கண்ணீரோடு, புலம்பி அழுதாள். ஆனால், அந்த கணவனோ தன் பாவத்தை மறைத்து நல்லவன்போல வெளியிலே நடித்து வந்தான். கர்த்தர் பயங்கரமான வியாதி ஒன்றை அவன் சரீரத்திலே வரும்படி அனுமதித்தார். அப்பொழுதுதான் அவன் தன் பொல்லாங்கை உணர்ந்தான். "ஐயோ, என்னுடைய பெயர் கெட்டுவிட்டதே, இனியும் எனக்கு வாழ்வு உண்டா?" என்று மிகவும் கலங்கினான். ஆனால், அவனுடைய பக்தியுள்ள, அன்புள்ள மனைவியோ அவனை உற்சாகப்படுத்தி, "பரவாயில்லை, நீங்கள் உங்கள் பாவங்களை உணர்ந்துவிட்டீர்கள் அல்லவா? இனி கர்த்தரிடத்தில் இரக்கத்திற்காக கெஞ்சுங்கள். அவர் உங்களை நிச்சயம் மன்னித்து, மறுபடியும் புதுவாழ்வை தருவார்" என்று ஆலோசனை சொல்லி, அவனுக்காக உபவாசமிருந்து ஜெபித்தாள். அப்பொழுதுதான் அவன் உள்ளம் சற்று பெலனடைந்தது. இருவரும் ஜெபிக்க ஜெபிக்க ஆண்டவர் அவன் மீது இரக்கமாய், தயவாய் பரிசுத்த ஆவியின் நிறைவை திரும்ப கொடுத்தார். பரிசுத்த ஆவியால் நிறைய நிறைய அந்த பயங்கரமான வியாதியும் அவனை விட்டு விலகியது.

எனக்கு அன்பானவர்களே! உங்கள் வாழ்விலும்கூட, ஆண்டவருக்கு விரோதமாய் ஊழியர்களை குறை சொல்லுவதிலும், அல்லது மாம்சத்திற்குரிய காரியங்களை வாழ்க்கையில் இரகசியமாய் மேற்கொள்வதிலும், அவருக்கு விரோதமாக தீங்கு செய்கிறவர்களாக இருப்பீர்களானால், கர்த்தருடைய கோபத்திற்கு ஆளாகாதபடி அவருடைய இரக்கத்திற்காக கெஞ்சுங்கள். கர்த்தர் உங்களையும் புது கிருபையினால், இரக்கத்தினால் நிரப்புவார் (எபி. 4:16).

ஜெபம்: "அன்பின் தெய்வமே! என் குறைவுகளின் நிமித்தமாக என் வாழ்வில் தீங்கு வராதபடி எனக்கு இரங்கும். இன்றுமுதல் உமக்கு பிரியமாய், பரிசுத்த வாழ்வு வாழ உம் தெய்வீக அருளைத் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

செயலில் மகத்துவமான கர்த்தர்!

"சேனைகளின் கர்த்தர் ... செயலில் மகத்துவமானவர்! (ஏசாயா 28:29).

ஒருமுறை சவுலும், அவன் குமாரன் யோனத்தானும், இஸ்ரவேல் ஜனங்களும் பெலிஸ்தருக்கு விரோதமாக போர்புரிய கூடியிருந்தார்கள். பெலிஸ்தர் மிகுந்த வலிமையோடிருந்தார்கள். இந்த நிலைமையில் சவுலின் மகனாகிய யோனத்தான் தன் ஆயுததாரியை நோக்கி: "கர்த்தர் நமக்காக ஒரு காரியம் செய்வார். நம் மூலமாய் இரட்சிக்க அவருக்கு தடையில்லை. கர்த்தர் செயலில் மகத்துவமானவர்" என்று விசுவாசத்தோடு தன் தகப்பனுக்கு தெரியாமல், எதிராளிகள் இருந்த தாணையத்திற்குப் போக முயற்சி செய்தான். அவனுடைய விசுவாசம் கர்த்தருடைய வல்லமையில் இருந்தது. ஆண்டவர் யோனத்தானோடு துணை நின்று பூமி அதிர்ச்சியும், தேவனால் உண்டான பயங்கரமும் வந்தபடியினால் எதிராளிகள் ஒருவர்மேல் ஒருவர் விழுந்து அழிந்து போனார்கள் (1 சாமுவேல் 14ம் அதிகாரம்). ஆம், பிரியமானவர்களே! இந்த உலகத்தில் கர்த்தர் செயலில் மகத்துவமானவர் என்று நாமும் முழுமனதுடன் நம்பியிருப்போமானால், நமக்கு விரோதிகள் எழும்பி வந்தாலும் (ரோமர் 8:31) கர்த்தர் நமக்காக, யோனத்தானுக்கு அவரே துணை நின்று காரியத்தை நிறைவேற்றியதுபோல் செயலில் மகத்துவமானவராக துணை நிற்பார் (எரே. 32:19).

ஒரு அலுவலக அதிகாரி உண்மையும், உத்தமமும், நேர்மையுமாக நடந்து கொண்டார். அவருடைய தாயும் ஒரு பக்தியுள்ள பெண். இந்த நிலைமையில் சில பொறாமையுள்ள மக்கள் அவருக்கு கீழாக பணிபுரிந்து கொண்டிருந்தார்கள். இவருக்கு எதிராக ஏதாவது ஒரு குற்றத்தைக் கண்டுபிடித்து, இவரை சிறைக்குள் தள்ளிவிட வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டிருந்தார்கள். அதற்கான பொய் காரணங்களை அவர்மீது சூட்ட அவர்கள் தீவிரமாய் முயற்சித்தார்கள். இவர்கள் நிச்சயம் இதை செயலில் முடிப்பார்கள் என்று அந்த அதிகாரி மிகவும் கவலைப்பட்டுக்கொண்டிருந்தார். ஆனாலும், வீட்டிலே அவருடைய மனைவியும், தாயும் கருத்தாய் ஜெபம்பண்ணிக் கொண்டு வந்தார்கள். அவருடைய ஊரிலிருந்து "இயேசு அழைக்கிறார்" ஜெப கோபுர ஜெப வீரர்களிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, ஜெபிக்கும்படி வேண்டுதல் செய்தார். கர்த்தர் இவர்கள் வேண்டுதல்களையெல்லாம் கேட்டார். மகத்துவமான முறையிலே, இந்த பொல்லாத மக்களின் சீற்றம் எப்படி எழும்பியதோ, அதே வேகத்தில் இருந்த இடம் தெரியாமல் அது அப்படியே மறையும்படி செய்தார். இவர் அந்த பயங்கரமான நாளுக்காக காத்திருந்தார். ஆனால், கர்த்தரோ அதை அப்படியே மாற்றிப்போட்டார். கர்த்தர் செயலில் மகத்துவமானவராக, பயங்கரமான பராக்கிரமசாலியாக நம்மோடு கூடவே இருப்பாரானால் ஒருவரும் நமக்கு முன் எதிர்த்து நிற்க முடியாது. ஏனெனில் கர்த்தர் நமக்காக யாவையும் செய்து முடிப்பார் (சங். 138:8).

ஆம்! பிரியமானவர்களே, ஆண்டவரை முற்றிலுமாய் நம்பும்பொழுதும், அவர் கரத்திலே நம் பயங்களையும், சஞ்சலங்களையும் ஊற்றும்பொழுதும், அவர் செயலில் மகத்துவமானவராக இருந்து நம்மை அற்புதமாக இரட்சிப்பார் (சங். 111:3,4).

ஜெபம்: "அன்பின் தெய்வமே, இந்த உலகம் பொல்லாத மக்களால் நிறைந்திருக்கிறது. ஆனாலும், நீர் எனக்கு போதுமானவர், உம்மை உறுதியாய் பற்றிக்கொள்கிறேன். செயலில் மகத்துவமானவராக என்னோடு கூடவேயிருந்து, இன்றுமுதல் எனக்காக யாவற்றையும் செய்து முடிப்பீர் என்று நம்புகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

ஆலோசனையில் ஆச்சரியமான கர்த்தர்!

"அவர் (கர்த்தர்) ஆலோசனையில் ஆச்சரியமானவர்" **(ஏசாயா 28:29).**

கர்த்தருடைய ஆலோசனைகள் நித்திய ஆசீர்வாதம் தரும். முடிவுபரியந்தம் அவர் நம்மை நடத்துவார் என்று வேதம் சொல்லுகிறது (சங். 33:11; 73:24). அவருடைய ஆலோசனைக்கு நம் வாழ்வை மட்டுமல்ல, எந்த ஒரு குறிப்பிட்ட காரியத்தையும் ஒப்படைக்கும்பொழுது, அவர் ஆச்சரியமான முறையிலே வழிநடத்தி, முடிவிலே கனத்தையும் மகிமையையும் நமக்கு அருளுவார். மோசே, இரவும் பகலும் அவருடைய பாதத்தில் உபவாசத்தோடு காத்திருந்தான். எகிப்து தேச அரசனிடம் அடிமைகளாயிருந்த இஸ்ரவேல் ஜனங்களை மீட்டு, கானான் தேசத்திற்கு கொண்டு வரவேண்டிய உயரிய பணியை அவன் கரத்திலே ஆண்டவர் கொடுத்தபொழுது, அவன் தேவ சமுகத்தில் காத்திருந்து, தேவனுடைய ஆலோசனையைப்பெற்று, காரியத்தை அழகாய் முடித்தான் (யாத். 24:18; சங். 103:7). நாமும்கூட அப்படியே நம் அனுதின வாழ்க்கையில் கர்த்தரையே முற்றிலுமாக சார்ந்து, அவருடைய ஆலோசனைப்படியே நடக்கும்பொழுது, நம் வாழ்விலும் இதேவிதமாக முடிவுபரியந்தம் ஒவ்வொரு நாளும் ஆச்சரியமான விதத்தில் ஆண்டவரே நடத்துவார்.

"இயேசு அழைக்கிறார்" ஊழியத்தையும் மற்றும் "காருண்யா கல்வி நிறுவன"த்தின் காரியங்களையும் கர்த்தர் சகோதரர் தினகரன் கரத்திலே ஒப்புவித்தபொழுது, ஆரம்பத்திலே அவருக்கு அது மிகவும் மலைப்பாய் இருந்தது. ஒவ்வொரு காரியத்தையும் சுலபமாய் செய்து முடிக்க முடியாமல் தவித்த வேளையிலெல்லாம், பல மணி நேரம், ஏன் சில நேரம் இரவு முழுவதும்கூட முழங்காற்படியிட்டு ஜெபத்திலே தேவ ஆலோசனைக் காக காத்திருப்பார். கர்த்தர் அவரோடு பேசுமளவும் முழங்காலிலிருந்து எழுந்திருக்கவே மாட்டார். இப்படியாக தேவனின் ஆலோசனைகளை கேட்டு கேட்டு, 20-ம் வயதில் அவர் ஆரம்பித்த அவரது ஊழியம், இன்று 50 வருடங்களை கடந்து சென்றபொழுதிலும், ஆண்டவரே ஆலோசனை கர்த்தராக இருந்து செயல்பட்டு அழகாய் வழிநடத்தி வருகிறார். இன்று "இயேசு அழைக்கிறார்" ஊழியம் பரந்து விரிந்து வளர்ந்திருப்பதின் காரணம், கர்த்தர் ஆலோசனையில் ஆச்சரியமானவராய் அவரோடு இருப்பதினால் மாத்திரமே! காருண்யா கல்வி ஸ்தாபனங்களின் காரியங்களும் அப்படியே! அதுமட்டுமின்றி, இன்று அநேக மக்கள் தங்கள் வாழ்வில் தேவ ஆலோசனையை அறிந்துகொள்ள கடிதம் எழுதும் பொழுது, அவர்களுக்காக கருத்தாய் ஜெபித்து, பரிசுத்த ஆவியானவர் மூலம் ஆண்டவர் தரும் ஆலோசனைகளை எழுதும்பொழுது, மக்கள் அதில் மிகவும் சந்தோஷமடைகிறார்கள்.

அன்பானவர்களே, நீங்களும்கூட எந்த காரியத்திலேயும், இதை இப்படி செய்யலாம், அப்படி செய்யலாம் என்று சுயமாய் எண்ணி, முடிவில் ஏமாற்றம் அடைவதைக்காட்டிலும், தோல்வியடைந்து வேதனைப்படுவதைக்காட்டிலும், கர்த்தருடைய பாதத்தில் காத்திருந்து, அவருடைய ஆலோசனையை மட்டும் கேட்டு செயல்படுவீர்களானால், நிறைவான ஆசீர்வாதத்தை நீங்களும் நிச்சயம் பெறலாம் (சங். 73:24).



ஜெபம்: "அன்பின் தெய்வமே! நீர் ஆலோசனையில் ஆச்சரியமானவராய் என் வாழ்விலும் இருக்கப்போகிறீர் என்று விசுவாசிக்கிறேன். இனி நானும் அவ்வாறு இன்றுமுதல் உமது சமுகத்திலே காத்திருந்து, உம் வழியை, ஆலோசனையை அறிந்துகொள்ள எனக்கும் கிருபை தரப்போகிறபடியால் உமக்கு நன்றி செலுத்துகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

நம் இருதயத்தின் நினைவுகளை அறிகிற தேவன்!

"...அவன் (எசேக்கியா) இருதயத்தில் உண்டான எல்லாவற்றையும் அறியும்படி அவனை சோதிக்கிறதற்காக தேவன் அவனைக் கைவிட்டார்"

(2 நாளாகமம் 32:31).

தேவன் தம்மைப்பற்றும் விசுவாசிகளைக்கூட சில நேரங்களில் சோதிக்கிறார். யார் யார் அவரில் எவ்விதம் அன்புகூருகிறோம் என்பதை சோதிக்கிறார் (2 கொரி. 8:8). ஆபிரகாமுக்கு, முதிர்ந்த வயதிலே ஈசாக்கை கொடுத்தார். ஆனால், அந்த மகனை பெற்ற பின்பு, ஆபிரகாம் தன்மீது உண்மையாய் அன்புகூருகிறானா? என்பதை அறியும்படி, அவன் தன் ஒரே மகனை தனக்காக பலியிடும்படி சோதித்து, முடிவிலே அவனுடைய உண்மை அன்பை அறிந்து கொண்டார் (ஆதி. 22:16,17). யோபு என்ற பக்தனும் அவ்வாறே சோதிக்கப்பட்டான். அவனும் தன் நம்பிக்கை முழுவதும் ஆண்டவர் மேலேயே இருக்கிறது என்பதை ஆண்டவர் அறியும்படி அவர்மேல் அன்புகூர்ந்தான். "அவர் என்னை கொன்றுபோட்டாலும், அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன்" (யோபு 13:15) என்று கூறி உத்தமமாய் நடந்து அவரை சந்தோஷப்படுத்தினான். அப்படித்தான் மேற்கண்ட வேதபகுதியின்படி, எசேக்கியா என்ற அரசனின் உள்ளத்தினை அறிகிறதற்காக அவனையும் கர்த்தர் சோதித்தார். ஆம்! கர்த்தர் நம் உள்ளத்தின் நினைவுகளையெல்லாம் அறிந்திருக்கிறார். ஒன்றையும் அவருக்கு முன்பாக மறைத்து வைக்க முடியாது என்பதை அறிந்து நம் வாழ்க்கையில் கவனமாய் நடந்துகொள்வது எவ்வளவு அவசியம் பாருங்கள்!

சாதாரண நிலைமையிலிருந்த குடும்பத் தலைவன் ஒருவன் மிகுந்த பயபக்தியோடு கர்த்தரை தேடினான். ஆகவே, அவன் செய்வதெல்லாவற்றிலும் கர்த்தருடைய ஆசீர்வாதமும், பதவியில் உயர்வு, பணத்தினால் உண்டான செழிப்பு ஆகிய சகலமும் நிறைவாய் இருந்தது. இந்த நிலைமையில் கர்த்தர் அவனை சோதித்தார். ஏராளமான நண்பர்கள் அவனை சூழ்ந்து வந்தனர். பணம் இருக்கும்போது, நண்பர்களும் நிறைவாய் இருப்பார்கள் அல்லவா! கொஞ்சம் கொஞ்சமாக நண்பர்கள் தீய வழியிலே அவனை இழுத்தனர். அந்த நிலைமையில் அவன் தனக்கு முன்பாக உண்மையுள்ளவனாக இருக்கிறானா என்பதை கர்த்தர் கூர்ந்து கவனித்தார். நண்பர்களை சந்தோஷப்படுத்த முயன்ற அவனுடைய ஜெப வாழ்க்கை, கொஞ்சம் கொஞ்சமாக குறைய ஆரம்பித்தது. கர்த்தரும் பேசாமல் இருந்தார். நாளடைவில் நண்பர்களின் முழு ஆதிக்கமும் அவன்மேல் வந்தது. பணமெல்லாம் செலவழிந்து, கடன் வாங்கவேண்டிய நிலைமைக்கு அவன் வாழ்க்கை குறைவுபட்டது. அப்பொழுதுதான் தன்னுடைய குறைவை உணர்ந்தான். "ஐயோ, கர்த்தரை தேடினபொழுது எனக்கு எவ்வளவு ஆசீர்வாதம் இருந்தது! ஆனால், வீணான சோதனைக்குட்பட்டு பொல்லாதவர்களின் வழிகளுக்கு என்னை அடிமையாக்கி எல்லாவற்றையும் இழந்து போனேனே" என்று கதறினான்.

அன்பானவர்களே! இந்த உலகத்திலே எத்தனையோபேர் நம்மை தவறான வழிகளில் இழுக்கலாம். ஆனால், என்ன வந்தாலும் இயேசுவை விடாமல் பற்றிக்கொண்டு அவருக்கு உகந்தவர்களாக ஜீவிக்கும்பொழுதோ ஒன்றும் நம்மை சேதப்படுத்தாது. கர்த்தரும் நம்மீது பிரியமாய் இருப்பார் (1 கொரி. 15:58).

ஜெபம்: "அன்பு இரட்சகரே! பொல்லாத உலகத்திலே எந்தவிதமான சோதனைக்கும் நான் இடமளிக்காமல் உம்மையே உறுதியாய் பற்றிக்கொள்ள, உமக்கு பிரியமாய் என் வாழ்வை நடத்த, இன்று எனக்கு நீரே அருள்தாரும். உம்முடைய அன்பின் சோதனையிலே எனக்கு வெற்றியை தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

சத்துரு பீறாதபடிக்கு தப்புவிக்கிற தேவன்!

"சத்துரு சிங்கம்போல் என் ஆத்துமாவை பிடித்துக்கொண்டுபோய், விடுவிக்கிறவன் இல்லாமையால், அதை பீறாதபடிக்கு என்னைத் தப்புவியும்"

(சங்கீதம் 7:2).

கர்த்தரை நாம் நம்பியிருக்கும்பொழுது, நாம் வெட்கப்படாதபடி தம் கண்களை நம்மீது வைத்து, சத்துருவானவன் மேற்கொண்டு மகிழாதபடி நம்மைக் காக்கிறார் (சங். 25:2). நாள்தோறும் நம்முடைய வாழ்க்கையிலே சத்துருக்கள் நம்மை சுற்றிலும் நெருங்கி நின்று, எப்படி வீழ்த்தலாம் என்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், கர்த்தரை உறுதியாய் பற்றிக்கொண்டவர்களோ, சத்துருவின் நிமித்தம் இடறாதபடி கர்த்தருடைய கரம் அவர்களோடு என்றென்றும் நிற்கும். இந்த நம்பிக்கையோடு ஒவ்வொரு நாளும் தைரியமாயிருங்கள். உங்களுக்கு விரோதமாக எழும்புகிற சகல சத்துருவின் சூழ்ச்சிகளையும் கர்த்தர் மடங்கடித்துப் போடுவார். ஆனால், நான் அப்படி செய்து, யாவற்றையும் சாதித்து விடுவேன் என்று உங்கள் சுயபெலன் மீது நம்பிக்கை வைக்காதிருங்கள். கர்த்தரோ பராக்கிரமசாலியாக (எரே. 20:11; ஏசாயா 40:10) உங்களோடு இருந்து, நீங்கள் பீறப்படாதபடி இந்த பொல்லாத சத்துருவின் சூழ்ச்சியிலிருந்து உங்களைத் தப்புவிக்க வல்லமையுள்ளவராக இருக்கிறார் (சங். 31:14,15).

எங்கள் குடும்பத்திலே பிள்ளைகளோடு சேர்ந்து மிக மகிழ்ச்சியாக தேவனுடைய ஊழியத்தை குடும்பமாக செய்து வந்தோம். ஆனால், எவனை விழுங்கலாமோ என்று வகைதேடுகிற சத்துருவான சாத்தான் ஒரு மிகப் பெரிய விபத்தின் மூலமாக எங்களது சமாதானம் நிறைந்த குடும்ப வாழ்வை உடைக்கவும், வேதனைக்குள்ளாக்கவும் திட்டமிட்டான். அழிக்கவும், கொல்லவும், திருடவும் பேர் பெற்றவனாக சாத்தான் முயற்சித்த பொழுதிலும், நாங்கள் ஆண்டவரையே நோக்கி பார்த்தபடியினாலே, எங்களுக்கு புது ஜீவனை, ஆவி, ஆத்துமா, சரீரத்தில் நிறைவாய் தந்தபடியால், சத்துருவின் திட்டம் ஒன்றும் பலிக்காமற்போனது. கர்த்தரோ தம்முடைய அன்பினால் எங்களை அரவணைத்துக் கொண்டார். அவருடைய பரிசுத்த ஆவியானவர் மூலம் தெய்வீக தைரியத்தையும், யாவரும் ஆச்சரியப்படும் வகையில் புது வாழ்வையும் கொடுத்தார். ஊழியம் முன்னைக்காட்டிலும் அதிகமாக பெருகி, சிறப்படையவும் அருள்புரிந்தார்.

அன்பானவர்களே! உங்கள் வாழ்விலும் சத்துருவாகிய பிசாசும், பிசாசின் மக்களும் உங்களை பற்பல காரியங்களிலும் தோல்வியடைய செய்து, உங்களை அழித்துப்போட பல முயற்சிகளையும் எடுக்கலாம். அதைக்கண்டு கொஞ்சமும் பயப்பட வேண்டாம். கர்த்தர் மேல் மாத்திரம் முழு நம்பிக்கையையும் வைத்து அவரையே உறுதியாக பற்றிக்கொள்ளுங்கள். வீணான பயங்களுக்கு இடமளிக்காமல், பரிசுத்த ஆவியினால் நிறைந்து, கர்த்தரை நோக்கிப் பார்த்து, அவருடைய ஒத்தாசையை பெற்று ஆசீர்வாதம் பெறுங்கள் (ஏசாயா 59:19).

ஜெபம்: "அன்பே உருவான ஆண்டவரே! எனக்கு நீர் போதும். உம்மை நான் நம்புகிறேன். இன்றுமுதல் சத்துரு என்னைப் பீறாதபடிக்கு நீர் தப்புவிக்கிற தேவனாக என்னோடு கூட எப்பொழுதும் இரும். சத்துரு காணாதபடி உமது செட்டைகளின் மறைவிலே என்னை மறைத்து, எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பாற்றும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே. ஆமென்!"



தேவரீரின் வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்!

"..சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே! ...தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்" (வெளிப்படுத்தல் 15:3).

தேவாதி தேவனுக்கு நீதி அரைக்கட்டும், சத்தியம் இடைக்கச்சையுமாயிருக்கிறது. அவர் நீதியின்படி நம்மை நடத்துகிறார் (சங். 23:3). பூமியிலுள்ள சிறுமையானவர்கள் தம்மை நோக்கிப் பார்க்கும்பொழுது, தம்மை நம்பும்பொழுது, நியாயமான தீர்ப்பளிக்க அவர் போதுமானவராக இருக்கிறார். அவர் நீதியுள்ள நியாயாதிபதி (சங். 7:11)! எந்த அநீதியான மனிதனுடைய துர்ச்செயல்களும் நமக்கு விரோதமாய் எழும்பாதபடி நீதியின் வழியிலே கரம் பிடித்து நம்மை நடத்த அவர் வல்லவராயிருக்கிறார். ஆகவே, இந்த மனிதன் பயங்கரமானவன், அவனுக்கு பணம் இருக்கிறது, அந்தஸ்து இருக்கிறது. ஆகவே தான், இப்படியெல்லாம் அட்டூழியம் பண்ணுகிறான் என்று நாம் எந்த மனுஷனுக்கும் பயப்பட வேண்டியதில்லை. நம்முடைய ஆண்டவர் எல்லோருக்கும் மேற்பட்ட சர்வ வல்லவர்! அவர் நமக்காக சத்தியமும் நீதியுமான காரியங்களை செய்வார் என்று நாம் விசுவாசிப்போம். அவரை நோக்கி கூப்பிடுவோம். அவரிடம் நம் பாரங்களையெல்லாம் ஒப்படைப்போம் (சங். 35:24).

ஒரு ஏழை விதவை இருந்தாள். அவளுக்கு ஒரு சிறு நிலம் இருந்தது. அதுதான் அவளுடைய வாழ்க்கைக்கு வேண்டிய போஷிப்பை கொடுத்தது. ஆனால், அந்த ஊரிலிருந்த பணம் படைத்த ஒரு மனிதன் அவளை ஏமாற்றி, அந்த சிறு வயலை தனக்கு சொந்தமாக அபகரித்துக்கொள்ளலாம், அவளுக்காக பரிந்துபேச, உதவி செய்ய யார் இருக்கிறார்கள் என்று அதற்கான முயற்சியில் ஈடுபட்டான். பாவம் அந்த ஏழைப் பெண்! செய்வதறியாது திகைத்தாள். எல்லோரும் அவளுக்காக பரிந்து பேசவும் பயந்தார்கள். ஏனென்றால் அந்த மனிதன் தங்களுக்கு அதினிமித்தம் தொல்லை கொடுப்பானோ என்று எண்ணினார்கள். யாரும் உதவியற்ற நிலைமையில் இந்த அம்மையார் தன்னுடைய கண்ணீரை கர்த்தர் பாதத்திலே மட்டும் ஊற்றினபடியால், வேறொரு ஏழை மனிதன் முன்வந்து, பலருடைய உதவிகளைப் பெற்று, முடிவிலே தேவ தயவினால் அநேக மக்களுடைய இரக்கத்தினிமித்தமாக அந்த ஏழை விதவைக்கு எந்த பிரச்சினையுமின்றி அந்த நிலம் கிடைக்கும்படி உதவி செய்தான். ஆம்! தேவன் யாரைக் கொண்டாவது நம் வாழ்வில் தமது தெய்வீக வழிகளில் சத்தியமும், நீதியுமாய் நடத்துவார்.

அன்பானவர்களே! நீங்களும் இப்படிப்பட்ட சூழ்நிலையில் பயந்து, தவிக்கும் சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். இந்த ஏழை விதவையை அற்புதமாக காப்பாற்றின தேவன், உங்களையும் எல்லாத் தீங்குக்கும், பொல்லாங்குகளுக்கும் விலக்கி, சத்தியமும், நீதியுமான வழிகளிலே நடத்துவார். அதற்கு மாறாக வீணாகக் கவலைப்பட்டு, "இது எப்படி ஆகுமோ? யார் எனக்கு உதவி செய்ய இருக்கிறார்கள், நான் எல்லாவற்றையும் இழந்து நிற்க வேண்டியதுதானா?" என்று கவலைப்படாமல் கர்த்தரையே சார்ந்து கொள்ளுங்கள் (ஏசாயா 41:10).

ஜெபம்: "அன்பின் தேவனே, நீர் எனக்கு போதுமானவர். மனிதருடைய தீய காரியங்கள், எண்ணங்களைக் குறித்து நான் கொஞ்சமும் பயப்படுவதில்லை. நானும், நீர் விரும்புகிற நீதியும், சத்தியமும் நிறைந்த வழிகளையே பின்பற்றி, உம்மை மாத்திரம் உறுதியாய் எல்லாவற்றிலும் சார்ந்துகொள்கிறேன். நீர் என்னையும் இன்றுமுதல் சத்தியமான, நீதியான வழியிலே காப்பாற்றி, வழிநடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்றிருக்கிறாய்?

''நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்றிருக்கிறாய் என்று கேட்டார். அதற்கு அவன்: ஆண்டவரே, நான் பார்வையடைய வேண்டும் என்றான்'' (லூக்கா 18:41).

கர்த்தர் உங்கள் ஒவ்வொருவரையும்கூட பார்த்து, இதே கேள்வியைத்தான் இன்று கேட்கிறார். எவ்வளவு அருமையான அன்புள்ள தேவன் நமக்கு இருக்கிறார் (1 யோவான் 4:8,16). இதை அறிந்துகொள்ளாமல், சிறு சிறு காரியங்களையும் நாம் தான் எல்லாம் செய்து முடிப்பதுபோல, கலங்கி, பயந்து, நம்மை வீணான சஞ்சலத்திற்குள்ளாக்கிக் கொள்கிறோம். இல்லை பிரியமானவர்களே! குருடன் ஒருவன் ஆண்டவரை நோக்கிக் கதறி கூச்சலிட்டான். அவரோடு இருந்தவர்கள் ''சத்தம் போடாதே'' என்று அவனை அதட்டினார்கள். இருப்பினும் அவன் மென்மேலும் அதிகமாய் சத்தமிட்டான். ஆகவேதான், கர்த்தர் அவனை கூப்பிட்டு, அவனுக்கு விரும்பிய நன்மையை கொடுத்தார். இன்று உங்களுக்கும் அப்படியே செய்வார். அந்த குருடனைப் போல சத்தத்தை உயர்த்தி, ஜெப நேரத்தை அதிகமாக்கி, கர்த்தருடைய சமுகத்திலே கதறி கூச்சலிடுங்கள். உம்மையல்லாமல் இந்த சமயத்தில், இந்த தீவினையிலிருந்து என்னை மீட்கத்தக்கவர் ஒருவரும் இல்லை, என்னை காப்பாற்றும் என்று கதறுங்கள். கர்த்தர் நிச்சயம் உங்கள் கதறுதலைக் கேட்டு, பதில் தருவார் (சங். 77:1).

கர்த்தரையே நம்பியிருந்த ஒரு அம்மையாருக்கு திடீரென்று வயிற்றிலே பயங்கரமான வலி வந்தது. ஸ்கேன் எடுத்து பார்த்தபொழுது, வயிற்றிலே கட்டி இருப்பதாகவும், அதை அறுவை சிகிச்சை செய்து அகற்ற வேண்டுமென்றும் மருத்துவர் கூறினார். ஆனால், அந்த அம்மையார் என்ன செய்தார்கள் தெரியுமா? தன்னால் இயன்ற நேரங்களி லெல்லாம் உபவாசம் இருந்து தன்னை தாழ்த்தி, ''ஆண்டவரே, நான் உம்முடைய அடியாள், என்னால் இயன்ற நேரத்தில் உம்முடைய ஊழியத்தையும் செய்து வருகிறேன். மருத்துவமனைக்கு போகவும், அங்கே படுத்திருக்கவும் எனக்கு நேரம் கிடையாது. நீர் தான் எனக்கு உதவி செய்ய வேண்டும். என் மீது உம் கரத்தை வைத்து, இந்த கட்டி இருக்கிற இடம் தெரியாமல் மறையச்செய்ய உம்மால் முடியும் என்று நான் உறுதியாய் விசுவாசிக்கிறேன். என்னிடத்தில் அறுவை சிகிச்சைக்கான பணமும் கிடையாது. அன்று குருடனுடைய கதறுதலின் சத்தத்தைக் கேட்டு, அவனுக்கு பார்வை கொடுத்ததுபோல, இன்று என் சத்தத்தையும் கேட்டு, என் வியாதியையும் இப்பொழுதே பூரணமாய் குணமாக்கும்'' என்று விசுவாசத்துடன் ஜெபித்தார்கள். கர்த்தர் அந்த ஜெபத்தை கேட்டார். அந்த வலி அப்படியே மறைந்தது! அநேகருக்கு ஆறுதல் சொல்லும் மகளாக, முன்னைக்காட்டிலும் அதிகமாக ஆண்டவருக்கு சேவை செய்தார்கள்.

ஆம்! பிரியமானவர்களே, ஆண்டவர் உங்களையும் பார்த்து, நான் என்ன செய்ய வேண்டுமென்று கேட்கிறார். உங்கள் தேவைகளை அவரிடம் மறைக்காமல் சொல்லுங்கள். அது அவருக்கு உகந்ததாக இருக்குமென்றால் நிச்சயம் உங்களுக்கு பதில் தருவார் (யோவான் 16:24).

<u>ஜெபம்</u>: ''அன்பின் இரட்சகரே! என் வேண்டுதலையும், என் விண்ணப்பங்களையும் கேட்கிற என் தகப்பனே, உம்மிடத்திலே என் மன்றாட்டை சமர்ப்பணமாக வைக்கிறேன். நிச்சயமாக என் வழிகளையும் <u>இன்றுமுதல்</u> நீர் ஆசீர்வதிப்பீர் என்று நான் நம்புகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!''

நீங்கள்...என் சிநேகிதராயிருப்பீர்கள்!

"நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்" (யோவான் 15:14).

சிநேகிதம் என்பது இருவர் நெருங்கி வாழ்கிற ஓர் வாழ்க்கை! ஒருவரையொருவர் புரிந்துகொண்டு, ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பதுதான் உண்மையான சிநேகிதம். ஆபிரகாம் ஆண்டவரால் அழைக்கப்பட்டபோது, அவரை உறுதியாய் பிடித்துக்கொண்டார். அவருடைய கட்டளைகளின்படி தானும் நடந்து, தன் வீட்டாரையும் நடத்துவதில் மிகவும் கவனமாக இருந்தார் (ஆதி. 18:19). இதனால் தான் ஆண்டவருக்கு உண்மையான சிநேகிதனாய் விளங்கினார் (யாக். 2:23; ஏசாயா 41:8; 2 நாளா. 20:7). இதே போன்று நாமும் ஆண்டவருக்கு சிநேகிதராக நெருங்கி வாழ்வோமானால், ஆண்டவர் நம்மோடும்கூட என்றென்றும் தங்கியிருப்பார். நாமும் அவரோடு இணைந்து இன்பமாய் இம்மையிலும் மறுமையிலும் வாழ அருள்புரிவார்.

நான் கிறிஸ்தவ குடும்பத்திலே பிறந்து வளர்ந்தபொழுதிலும், இயேசுவை அறிந்திருந்தேனே தவிர, அந்த அறிவு ஆழமானதாக இருக்கவில்லை. என் உள்ளத்திலே அவரை இரட்சகராக ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே, அவருடைய சிநேகிதியாகும் அளவுக்கு என் வாழ்வு வளர்ச்சியடையவில்லை. அப்படிப்பட்ட நிலைமையிலே ஆண்டவர் தம்முடைய அன்பின் மிகுதியினால் அவரே என்னை ஒருநாள் தேடி வந்தார். அன்று அவருடைய தெய்வீக அன்பு எனக்குள் ஊற்றப்பட்டதை நானும் உணர்ந்தேன். இத்தனை அன்புள்ள ஆண்டவர் என்னோடு இருக்கும்பொழுது, எனக்கு என்ன குறை என்று அன்றுதான் உணர்ந்தேன். இவ்வாறாக என்னுடைய பதினாறாவது வயதிலே இயேசு என் சிநேகிதரானார். அதன்பிறகு ஐம்பது ஆண்டு காலமும் ஒருநாளும் என்னை கைவிடாமல், இன்பத்திலும், துன்பத்திலும், சோதனையிலும், தவிப்பிலும், சஞ்சலத்திலும் எனக்கு அவர் போதுமானவராக இருந்து என்னை அதிசயமாய் வழிநடத்தி வருகிறார். இந்த அன்பு, ரோமர் 5:5-ல் நாம் வாசிக்கிறபடி, பரிசுத்த ஆவியானவர் மூலம் நமக்குள் ஊற்றப்படும்பொழுது, நாம் ஆண்டவரை சிநேகிப்பதோடு, அந்த அன்பை மற்றவர்களிடையேயும் செலுத்தத்தக்கதாக நம்மை வழிநடத்துகிறது (1 பேதுரு 4:8).

ஆம், பிரியமானவர்களே! கிறிஸ்துவை அறிந்த வாழ்க்கை என்பது பெயரளவில் மட்டும் இருப்பது அல்ல; ஆனால், எபேசியர் 4:11-ல் நாம் வாசிக்கிறபடி, கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்கதாக, ஒரு குழந்தை வளர்ந்து மனிதனாக மாறுவதுபோல் ஒவ்வொரு கிறிஸ்தவனும் வளரவேண்டும். இவ்வாறு வளர வளர நாம் இயேசுவுக்குள் நெருங்கிய சிநேகிதர்களாக அவரோடு பேசவும், பழகவும், அவருடைய வழிகளில் நடக்கவும் ஆரம்பிக்கும்போது, ஆண்டவரே நம்மீது பிரியமாய் நம்மை அணைத்து ஆசீர்வதிப்பார். ஆகவே, ஆண்டவர் எவ்வளவு அன்பானவர், நல்லவர் என்பதை நீங்களும் அனுபவித்து பாருங்கள் (சங். 34:8).

<u>ஜெபம்</u>: "அன்பு இரட்சகரே! உலக சிநேகிதர் என்னை எளிதில் கைவிடுவார்கள். ஆனால், நீரோ எனது உண்மையான சிநேகிதர்! அன்பே உருவானவர்! ஆகவே, நான் உம்மை எல்லா நேரங்களிலும் இறுகப் பற்றிக்கொள்கிறேன். என் நம்பிக்கையின் படியே என்னை ஒருநாளும் கைவிடாமல் <u>இன்றுமுதல்</u> என் கூடவே இருந்து வழிநடத்தி ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

பரத்திலிருந்து ஒத்தாசை அனுப்பி இரட்சிக்கிற தேவன்!

"என்னை விழுங்கப்பார்க்கிறவன் என்னை நிந்திக்கையில், அவர் பரலோகத்திலிருந்து ஒத்தாசை அனுப்பி, என்னை இரட்சிப்பார்..." (சங்கீதம் 57:3).

யோசபாத் என்ற அரசன் கர்த்தரை உண்மையாய் தேடின ஒரு பக்தியுள்ள ராஜா என்று வேதத்திலே வாசிக்கிறோம். ஒரு சமயம் அவனுக்கு விரோதமாக பல ராஜாக்கள் கூடி எதிர்த்து வந்தபொழுது, அவன் செய்தது என்ன தெரியுமா? தன் ஜனங்களை உபவாசத்தோடு கர்த்தரை ஒருமனதோடு தேடும்படியாக கூட்டி (2 நாளா. 20:3,4) கர்த்தரை நோக்கி பிரார்த்தித்தான். "கர்த்தாவே உம்முடைய கரத்திலே வல்லமையும் பராக்கிரமமும் இருக்கிறது. உமக்கு முன்பாக ஒருவரும் எதிர்த்து நிற்க முடியாது. இப்பொழுதும் எங்களுக்கு உதவி செய்ய நீர் வல்லவராயிருக்கிறீர். எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக்கொண்டிருக்கிறது" என்றான். மட்டுமல்லாமல், தனது சேனைக்கு முன்பாக ஆண்டவரை துதித்து பாடுகிறவர்களையும் நிறுத்தினான். ஆகவே, கர்த்தர் அவனுக்காக யாவையும் செய்தார். எதிராளிகள் ஒருவருக்கு விரோதமாக ஒருவர் எழும்பி வெட்டுண்டு விழும்படி செய்தார். ஆம்! கர்த்தர் அவர்களுக்காக யுத்தம் செய்தார். நமக்கும் அப்படியே ஒத்தாசை அனுப்பி நம்மையும் இரட்சிப்பார்.

"இயேசு அழைக்கிறார்" ஊழியம் வளர வளர, வாடகை வீடுகளில் இடம் போதாமல் போனபடியினால் பெரிய இடம் வாங்க வேண்டிய சமயத்தில் பணம் இல்லாதபடியால் வெகுவாய் பாடுபட்டோம். இடம் கிடைத்தது, ஆனால், பணம் கிடைக்கவில்லை. அந்த சமயத்தில் ஆண்டவரை நோக்கி, குடும்பமாக மிகவும் அழுதோம். கர்த்தர் அந்த அழுகையின் சத்தத்தை கேட்டார். பரலோகத்திலிருந்து ஒத்தாசை அனுப்பினார். ஜெபத்திற்காக எங்களை தேடி வந்த ஒரு அன்பான ஐயா தனக்கு தெரிந்த ஒரு வங்கியில் தன் பெயரிலேயே கடன் கிடைக்கும்படி செய்தார். ஆச்சரியமான முறையிலே இடத்தின் சொந்தக்காரரிடம் குறித்த நேரத்திலே பணம் செலுத்த ஆண்டவர் அருள்புரிந்தார். அந்த இடத்தில்தான் இன்றும் "இயேசு அழைக்கிறார்" ஜெப கோபுரம் சென்னையில் இயங்கி வருகிறது. இப்படித்தான் ஊழியத்தின் ஒவ்வொரு தேவைகளுக்காகவும் கர்த்தரை நோக்கி மன்றாடும்பொழுது, அதைக்கேட்டு ஆச்சரியமாக அவ்வப்பொழுது தேவையான ஒத்தாசை அனுப்பி வழிநடத்தி வருகிறார்.

அன்பானவர்களே! உங்களுக்கும் வாழ்க்கையிலே பல்வேறு கவலைகள், பிரச்சினைகள், பாரங்கள், தேவைகள் எழும்பலாம். நீங்களும் கர்த்தரையே சார்ந்து கொள்ளுங்கள். அவரால் ஆகாதது ஒன்றுமில்லை (சங். 33:9). உங்களுக்கு பரலோகத்திலிருந்து ஒத்தாசை அனுப்பி உங்களை இரட்சிக்க அவர் போதுமானவர். ஆகவே, உங்களுக்கு ஒத்தாசை வரும் பர்வதமாகிய ஆண்டவரை நோக்கி உங்கள் கண்களை ஏறெடுங்கள். அப்பொழுது வானத்தையும், பூமியையும் உண்டாக்கின கர்த்தர் நிச்சயம் ஒத்தாசை அனுப்புவார் (சங். 121:1,2).

<u>ஜெபம்</u>: "அன்பின் தேவனே! பயங்கரமான உலகத்திலே யாரை விழுங்கலாமோ என்று வகை தேடி மக்கள் சுற்றித் திரிகிறார்கள். ஆனால், என் கண்களோ ஒத்தாசை வரும் பர்வதமாகிய உம்மையே நோக்கி சார்ந்திருக்கிறது. <u>இன்று</u> பரலோகத்தில் இருந்து எனக்கும் ஒத்தாசை அனுப்பி என்னை வழிநடத்தும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே, ஆமென்!"

நம் கால்களை இடறலுக்கு தப்புவிக்கிறவர்!

"நான் தேவனுக்கு முன்பாக ஜீவனுள்ளோருடைய வெளிச்சத்திலே நடக்கும்படி, நீர் என் ஆத்துமாவை மரணத்துக்கும் என் கால்களை இடறலுக்கும் தப்புவியாதிருப்பீரோ?" (சங்கீதம் 56:13).

உலக வாழ்க்கையிலே பரிசுத்தமாய் நடக்கவும், நல்ல வழிகளை பின்பற்றவும் நாம் எவ்வளவோ முயற்சிக்கிறோம். ஆனால், பல்வேறு சூழ்நிலைகள் நம்மை நெருக்கும்போது, அவைகளை பின்பற்ற முடியாமல் தவிக்கிறோம். தவறவும் செய்து விடுகிறோம் (ரோமர் 7:18). அநேகர், ஜெபம்பண்ணவேண்டும், அதிகாலையில் எழுந்திருக்கவேண்டும் என்று விரும்புவதாக எனக்கு எழுதுவார்கள். ஆனால், அடுத்தபடியாக, ஜெபம் பண்ண உட்கார்ந்தால் பல வீணான சிந்தனைகள், குடும்பத்தின் பாரங்கள் என்னை அழுத்துகிறதே. நான் என்ன செய்வேன் என்று கேட்டு எழுதுவார்கள். ஆண்டவர் விரும்பும் வழியில் நடப்பது என்பது அரிதான காரியம்தான். எனினும், வைராக்கியத்தோடு அதை செய்யும்பொழுது, கர்த்தர் கிருபையையும், இரக்கத்தையும் தயவாய் தந்து, அவைகளின்படி நடக்க எல்லாத் தடைகளையும், இடறல்களையும் அகற்றி, தமது தெய்வீக பெலனால் நம்மை நிரப்புவார் (சங். 86:5).

ஒரு பெற்றோருக்கு இரண்டு பெண் பிள்ளைகள், கண்மணிபோல இருந்தனர். பெற்றோர் இருவரையும் பக்தியாய், பாசத்துடன் வளர்த்தனர். இருவருக்கும் ஏற்ற சமயம் திருமணம் நடந்தது. மூத்தவளுடைய கணவர் வியாபாரம் செய்து மிகுந்த பணம் சம்பாதித்தார். இளையவளுடைய கணவருக்கோ சிறிய வேலை. ஆனால், தேவனுடைய ஊழியத்தை கூடவே வைராக்கியமாய் செய்து வந்தனர். மூத்தவள் பண மிகுதியால் கர்த்தரை விட்டு உலகப்பிரகாரமான காரியங்களில் திரும்பி, பெற்றோர் கற்றுக்கொடுத்த பக்தியான வழிகளை விட்டு சற்று விலகினாள். ஆனால், இளையவளோ, தன் கணவனோடு சேர்ந்து மென்மேலும் பக்திக்குரிய வாழ்க்கையில் ஈடுபட்டு பரவசமடைந்தாள். அதோடுகூட தன் சகோதரி எப்படியாவது பழைய நிலைக்கு வர வேண்டும், குடும்பமாக பக்தியோடு கர்த்தரைத் தேட வேண்டுமென்று கருத்தாய் ஜெபித்து வந்தாள். கர்த்தர் அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையையும், சமயத்தையும் கொடுத்தபடியினால், அவள் விரும்பி வேண்டிக்கொண்டபடியே, அந்த மகளுடைய இருதயம் பழைய பக்திக்குரிய வாழ்க்கையிலே, அவர் பக்கமாகத் திரும்பும்படி, தடைகளையெல்லாம் அகற்றிப் போட்டார். இரண்டு சகோதரிகளும் ஒருமித்து பெற்றோர் காட்டின நல்வழியை குடும்பமாக பின்பற்றவும் அருள்புரிந்தார்.

அன்பானவர்களே! இந்த உலகத்தில் நாம் உயிரோடு வாழப்போவது கொஞ்ச நாட்கள் தான்! அந்த கொஞ்ச நாட்களில் ஆண்டவருக்கு பிரியமாய், அவர் காண்பிக்கும் பரிசுத்த வழியில் நடப்பதுதான் அவருக்கு சித்தம். ஆகவே, நீங்களும் அந்த தெய்வீக வழிகளையே பின்பற்றி, என்ன தடை வந்தாலும் கர்த்தரைத் தேடி வெற்றி பெறுங்கள். கர்த்தர் எல்லா இடறல்களுக்கும் உங்களை தப்புவித்து, ஒவ்வொரு நாளும் நடத்துவார் (நீதி. 8:32).

ஜெபம்: "என் அன்பு தெய்வமே! உம்மை பின்பற்றும் வழியிலிருந்து சற்றும் விலகாதபடி, எல்லாத் தடைகளையும், அப்படிப்பட்ட சூழ்நிலைகளையும் நீரே மாற்றி, எனக்கு நல்ல வாழ்வை தாரும். இன்றுமுதல் என் கால்களை இடறலுக்கு தப்புவித்து வழிநடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

தள்ளாடுகிற முழங்கால்களை பலப்படுத்துகிறவர்!

“தளர்ந்த கைகளைத் திடப்படுத்தி, தள்ளாடுகிற முழங்கால்களை பலப்படுத்துங்கள்”
(ஏசாயா 35:3).

தாவீது தேவனுக்கு பிரியமான வழியில் வாழ்ந்தவர்! அதிகாலையிலும், அந்தி சந்தி மதிய வேளையிலும், இரவிலும் கர்த்தரை தேடினவர் (சங். 55:17)! ஆனால், ஒருநாள் சாயங்காலத்தில், தேவ சமூகத்தில் வழக்கம்போல முழங்கால்களை முடக்குகிறதற்கு பதிலாக (ஜெபம் செய்வதற்கு பதிலாக), உப்பரிகையின்மேல் உலாவினபடியால் பாவத்தில் ஈடுபட்டு பயங்கரமான விளைவினை சந்தித்தார். அதன்பிறகு ஆண்டவரை நோக்கி: பாவத்தை மன்னிக்கும்படி கதறி அழுதார் (சங். 51:1,2). கர்த்தர் மனமிரங்கினார். ஆம்! பிரியமானவர்களே, இந்த உலக வாழ்க்கையில் கர்த்தரைத் தேடுவதில் கருத்தாய், ஜாக்கிரதையாய் நடந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியமாய் இருக்கிறது. ஜெபம் பண்ண வேண்டிய நேரங்களில் வீண் பேச்சு, வீணான செயல்கள், தவறான இடங்களுக்கு போவது போன்ற பக்தியற்ற காரியங்களை செய்வதினால் அல்லது மாம்சத்திற்கு இடம் கொடுப்பதினால், இப்படித்தான் பாவத்திற்குள்ளாகிற நிலைமை ஏற்படுகிறது. இதிலிருந்து மீண்டு மேலே திரும்பவும் எழுந்திருப்பது கடினமான காரியம் என்பதை பயத்துடன் உணர்ந்து நம்முடைய வாழ்க்கையை கர்த்தருடைய பாதத்தில் சோதித்து பார்த்து, நம்முடைய தவறுகளையெல்லாம் அவரிடத்தில் அறிக்கையிட்டு, ஜெபத்தின் மூலமாய் கர்த்தரைத் தேடி நம்முடைய முழங்கால்களை பலப்படுத்துவோம் (ஆகாய் 1:5,7).

ஒரு கணவன் மிகவும் குடித்து வெறித்து, தவறான வாழ்க்கை வாழ்ந்து வந்தான். மனைவியோ மிகுந்த ஜெபத்தின் மூலமாக, கர்த்தர் அவனுக்கு இரங்கும்படி மன்றாடினாள். அவளுடைய கண்ணீரைக் கண்ட ஆண்டவர் அவன் இருதயத்தை தொட்டு, அவனை இரட்சித்தார்! அவர்கள் சந்தோஷமாய் வாழ்ந்து வந்த வேளையில் ஒரு நாள் தன் நண்பர்களுடைய கட்டாயத்தின்பேரில் மறுபடியும் கொஞ்சம் குடிக்க ஆரம்பித்தான். பழையபடி அவன் வாழ்க்கையில் இருள் புகுந்தது. மனைவியோ அதை நினைத்து நினைத்து, சரீரத்தில் பெலவீனமடைந்தாள். அந்த வியாதி அதிகமாகி மரணத்தருவாயிலானாள். அப்பொழுதுதான் கணவன் தன் தவறை உணர்ந்து, மனைவியின் அருகில் முழங்காற்படியிட்டு கர்த்தரை நோக்கி கதறினான். “ஆண்டவரே, என்னை மன்னியும், என்னிமித்தம் என் மனைவியை நீர் எடுத்துக்கொள்ளாதிரும். நான் இனி உம் வழிகளையேயன்றி வேறே பக்கம் திரும்பமாட்டேன். என் தள்ளாடுகிற முழங்கால்களை நீர் பெலப்படுத்தும்” என்று கதறினான். கர்த்தர் மனமிரங்கினார்!

ஆம், பிரியமானவர்களே! இந்த உலகத்தில் கர்த்தருடைய சமுகத்தில் முழங்காற்படியிட்டு, அவரைத்தேடி, அவர் கொடுக்கும் ஆசீர்வாதங்களின் மூலமாய் மேன்மையடைவதுதான் சாலச்சிறந்தது. இதனை விட்டு வழி விலகும்பொழுது எத்தனை வேதனை! ஆகவே, தெய்வ பயத்தோடு நீங்களும் உங்கள் தள்ளாடுகிற முழங்கால்களை தேவ கிருபையோடு பலப்படுத்துங்கள் (எபி. 12:12,13).

ஜெபம்: “அன்பு தெய்வமே! உம்மோடு உறவாடுவது எத்தனை இன்பமானது! இந்த தெய்வீக வழிகளை எந்த காரணத்தை முன்னிட்டும் விட்டு விலகாதபடி இன்று விசேஷமாக, என் மீது உம் கரங்களை வைத்து ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!”

இனி விருட்சத்தின் கனிகளை பெருகப்பண்ணுவேன்!

"நீங்கள் இனிமேல் ஜாதிகளுக்குள்ளே பஞ்சத்தினாலுண்டாகும் நிந்தையை அடையாதபடிக்கு, விருட்சத்தின் கனிகளையும் வயலின் பலன்களையும் பெருகப் பண்ணுவேன்" (எசேக்கியேல் 36:30).

இது மிகுந்த நம்பிக்கையூட்டுகிற அருமையான வாக்குத்தத்தம். நாம் கர்த்தரோடு இசைந்துகொள்ளும்போது, அத்தகைய வாழ்வை கனி நிறைந்த வாழ்வாக கர்த்தர் மாற்றுவார் (யோவான் 15:4,5). இது எத்தனை இன்பமானதும், தெய்வீகமானதுமான வாழ்க்கை என்பதை அனுபவிக்கும்போதுதான் நாம் அறிந்துகொள்ள முடியும். அவரை உண்மையாய் தேடுகிற ஒவ்வொருவருக்கும் இந்த வாழ்வை தருவதற்கு ஆண்டவர் ஆயத்தமாயிருக்கிறார். இஸ்ரவேல் ஜனங்களுக்கு பாலும் தேனும் ஓடுகிற இடத்திற்கு கொண்டுபோவேன் என்று வாக்குத்தத்தம் செய்தார் (யாத். 3:8). அதை அப்படியே நிறைவேற்றினார்! (உபா. 8:7-9). இதே ஆண்டவர் உங்கள் வாழ்விலும் இந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றி, உங்கள் வாழ்வையும் செழிக்கச் செய்வார்.

ஒரு ஏழை விவசாயி இருந்தார். அவருக்கு இருந்தது கொஞ்சம் நிலம் மாத்திரமே! அவர் கர்த்தரை கருத்தாய் தேடின, பக்தியுள்ள மனிதராயிருந்தார். ஒவ்வொருநாளும் வேதத்தை வாசித்து, ஜெபித்துவிட்டுதான் விவசாய வேலைகளை கவனிப்பார். மழையில்லாதபடியினால் நிலம் தண்ணீரில்லாமல் விளைச்சல் குறைய ஆரம்பித்தது. மற்ற விவசாயிகள் எல்லோரும் பலவித குறுக்கு வழிகளை பின்பற்றி எப்படி வயலின் விளைச்சலை பெருகச்செய்யலாம் என்று யோசித்தார்கள். ஆனால், அவரோ ஒவ்வொரு நாளும் காலையில் உணவு அருந்தாமல் உபவாசத்தோடு ஜெபம்பண்ணிக் கொண்டே தன்னை தாழ்த்தி ஆண்டவரை நோக்கிக் கதறினார். "கர்த்தர் நிச்சயம் தனக்கு உதவுவார், அவர் வாக்கு மாறாதவர்" என்று விசுவாசத்துடன் தினமும் ஆண்டவருக்கு மனதார ஸ்தோத்திரம் செலுத்தினார். இதை எல்லோரும் வேடிக்கையாக பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால், அந்த ஏழை மனிதனுடைய விசுவாசத்தின்படி, கர்த்தர் மழையை கட்டளையிட்டார். மற்ற வருஷங்களைக் காட்டிலும் இந்த வருடம் நூறு மடங்கு அதிகமாக விளையச் செய்தார்.

எனக்கு அன்பானவர்களே! உங்கள் வாழ்விலும் பலவிதங்களில் கனியற்ற, தேவைகள் நிறைந்த, குறைவுள்ள வாழ்க்கையை நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கலாம். இந்த ஏழை விவசாயி செய்ததுபோல விளையச் செய்கிற தேவனை (1 கொரி. 3:7) நீங்களும் பிடித்துக் கொள்ளுங்கள். அவர் உங்கள் வாழ்விலும் கனியை பெருகப்பண்ணுவார். கர்த்தரை தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது (சங். 34:10). "உமக்கு பயந்தவர் களுக்கும், மனுபுத்திரருக்கு முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும், நீர் உண்டுபண்ணி வைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது!" (சங். 31:19) என்பதை அனுபவித்து பாருங்கள்.

ஜெபம்: "அன்பின் இரட்சகரே! என் வாழ்வின் குறைகளையெல்லாம் மாற்றி, கனி நிறைந்த வாழ்வாக ஆசீர்வதிக்க உம்மால் மட்டுமே முடியும் என்று விசுவாசிக்கிறேன். இன்றுமுதல் என்னையும் சகலத்திலும் ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

இரக்கமும் நியாயமும் கொடுக்கும் பாக்கியம்!

"இரங்கிக் கடன்கொடுத்து, தன் காரியங்களை நியாயமானபடி நடப்பிக்கிற மனுஷன் பாக்கியவான்"

(சங்கீதம் 112:5).

இந்த உலக வாழ்வில் தெய்வ பயம் ஒவ்வொருவருக்கும் மிக மிக அவசியம். நம் மனம்போல் வாழ்வது ஒருவேளை சந்தோஷமாக இருக்கலாம். ஆனால், அதன்மூலம் நிறைவான ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ளவே முடியாது. ஆகவே, கர்த்தருக்கு பயப்படுவதும், அவருடைய வார்த்தைகள் அடங்கிய வேதவசனங்களை, ஆண்டவருடைய கட்டளையை பிரியத்துடன் பின்பற்றுவதும், யாவருக்கும் அவசியமானது (சங். 112:1). அந்தவிதமான வாழ்க்கை, கர்த்தர் விரும்புகிறபடி தன் காரியங்களை நியாயமாய் நடப்பிக்க, அதன்மூலம் பாக்கியம் பெற ஏதுவுண்டாக்கும். ஏழைக்கு இரங்குவதிலும், மற்றவர்கள் பாரத்தை தன் பாரமாக தன் காரியங்களை நியாயமாய் நடப்பிக்க, அதன்மூலம் பாக்கியம் பெற வழியுண்டாக்கும் (நீதி. 19:17). ஏழைக்கு இரங்குவதிலும், மற்றவர்கள் பாரத்தை தன் பாரமாக சுமப்பதிலும், இந்தவிதமான வாழ்க்கை நம்மை வழிநடத்தும் (ஏசாயா 33:5,6).

ஒரு குடும்பத்தில் பல சகோதர, சகோதரிகள் இருந்தார்கள். ஆனால், அதில் ஒரே ஒரு பெண் மாத்திரம் மேற்கண்டவிதமான வாழ்க்கையை மேற்கொள்வதில் ஜாக்கிரதையாய் இருந்தாள். மற்றவர்கள் எல்லோரும் அவளைப் பார்த்து கேலியும் பரியாசமும் செய்வார்கள். ஆனால், அவளோ அவர்களுக்கு பயந்து, அவைகளை விட்டுவிடாமல், தெய்வ பயத்தோடு நற்கிரியைகளையும், நற்சாட்சியுள்ள ஜீவியத்தையும் தொடர்ந்து செய்து வந்தாள். அதன் விளைவாக அவர்களுடைய ஆலயத்திலே உள்ள போதகர் ஒருநாள் அவர்கள் பெற்றோரை தேடி வந்தார். அவர் சொன்ன காரியம் ஆச்சரியமாய் இருந்தது. "நம் ஆலயத்திற்கு இன்று அயல்நாடு ஒன்றில் பணிபுரியும் ஒருவர் வந்திருந்தார். அவர் என்னிடம், "உங்கள் சபையில் பக்தியுள்ள, பண்புள்ள, பாசம் நிறைந்த ஒரு பெண்ணை எனக்கு காண்பியுங்கள். அவளை நான் என்னுடைய விடுமுறை நாட்கள் முடிவதற்குள் திருமணம் செய்து என்னோடு அழைத்து செல்ல வேண்டும் என்றார். நான் நன்றாக யோசித்து பார்த்தேன். இதற்கு தகுதியுள்ள பெண் உங்கள் மகள் தான் (பக்தியாய் நடந்த அந்த பெண்) என்று உணர்ந்து உங்களிடம் அதைக் குறித்து பேச வந்தேன்" என்றார். சுருங்கச் சொல்லின், அவர்கள் திருமணம் வெகு விரைவில் இனிதே முடிந்து, மிகுந்த கனத்துடன் அந்த பெண் தன் அன்பு கணவனுடன் அயல்நாடு சென்றாள். அப்பொழுதுதான் அவளது சகோதர, சகோதரிகள் தங்கள் சகோதரியின் வாழ்வைப்போல நாங்கள் நடக்கவில்லையே, இந்த பாக்கியத்திற்கு உரியவர்களாகாமல் போய்விட்டோமே என்று யோசிக்க ஆரம்பித்தார்கள்.

அன்பானவர்களே, உங்கள் வாழ்க்கை உலகத்திற்குரியதாக இருக்கிறதா? அல்லது அந்த பக்தியுள்ள பெண்ணைப்போல பரமனோடு இணைந்து அவர் காட்டும் நல்வழியை வேதத்திலிருந்து பின்பற்றி, நீதி, நியாயம், இரக்கம், தெய்வீக அன்பினால் நிறைந்து வாழ்கிறீர்களா? (சங். 106:3).



ஜெபம்: "அன்பின் பிதாவே! உம்மோடு உறவாடுகிற வாழ்க்கை எத்தனை இன்பமும் பாக்கியமுமானது என்பதை உணர்ந்து கொண்டேன். இன்றுமுதல் எனக்கும் அந்த கிருபையைத் தாரும். உம்மோடு நெருங்கி வாழவும், உம்முடைய பரிசுத்தத்தால் நிரப்பப்படவும் அதன்மூலம் நீர் தரும் தெய்வீக பாக்கியத்தை பெறவும் அருள்தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"

உதடுகளை அடக்குகிறவன் புத்திமான்!

"சொற்களின் மிகுதியில் பாவமில்லாமற்போகாது: தன் உதடுகளை அடக்குகிறவனோ புத்திமான்" (நீதிமொழிகள் 10:19).

நம்முடைய வாயிலிருந்து புறப்படுகிற வார்த்தைகள் கிருபை பொருந்தினதாயும், உப்பால் சாரமேறினதாயுமிருக்க வேண்டும் என்று வேதம் சொல்லுகிறது (கொலோ. 4:6). ஆகவே, வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் ஆண்டவருக்கு பிரியமில்லா தவைகள், அவைகள் நமக்கு தகாது (எபே. 5:4). அதோடுகூட, "பேசாதிருந்தால் மூடனும் ஞானவான் என்று எண்ணப்படுவான்; தன் உதடுகளை மூடுகிறவன் புத்திமான் என்று எண்ணப்படுவான்" (நீதி. 17:28). விசேஷமாக என் சகோதரிகளே, நாவானது எவ்வளவு பயங்கரமானது பாருங்கள்! நம் நாவினால் ஆண்டவரை நன்றியோடு ஸ்தோத்திரிக் கிறோம். அதே நாவினால் வீணான வார்த்தைகளை பேசுவதற்கும் இடங் கொடுக்கிறோம். அப்படி இல்லாதபடி, ஒவ்வொரு வார்த்தையை பேசும்பொழுதும், தேவபெலன் பெற்றவர்களாக நாவை அடக்குகிற தெய்வீக குணத்தை ஆண்டவர் தரும்படி அனுதினமும் அவரிடம் நாம் மன்றாடுவது மிகவும் நல்லது!

ஒரு குடும்பத் தலைவி, வேலைகளையெல்லாம் மிகவும் துரிதமாக முடித்துவிட்டு, அக்கம் பக்கத்தில் சென்று, வீணான கதைகளைப் பேசி ஒவ்வொருவரைப் பற்றியும் தெரிந்ததையும், தெரியாததையும் உளறிவிட்டு வருவாள். ஆரம்பத்தில் எல்லோரும் அதை விரும்பி கேட்க ஆரம்பித்தார்கள். ஆனால், அதன் பிறகு குழப்பங்களும், சண்டைகளும் வரவே, பெண்கள் அவளைக் கண்டாலே கதவை பூட்டிக்கொள்வார்கள். இது அவளுக்கு அதிர்ச்சியாய் இருந்தது. அப்பொழுதுதான் தன்னுடைய செய்கை ஒருவருக்கும் பிடிக்கவில்லை என்பதை அறிந்துகொண்டாள். உடனடியாக அவள் என்ன செய்தாள் தெரியுமா? தன் வீட்டின் உள் அறைக்கதவை மூடிக்கொண்டு, ஆண்டவரை நோக்கி பேச ஆரம்பித்தாள். "ஆண்டவரே, இத்தனை நாட்கள் என் மனம்போல திரிந்தேன். ஆனால், இன்று நீர் என்னை உம் விருப்பப்படி சரியான வழியில் வழிநடத்தும்" என்று ஜெபித்தாள். என்ன ஆச்சரியம்! கர்த்தர் இரக்கமும் கிருபையுமுள்ளவர். அவளைத் தொட்டு இரட்சித்து, புது இருதயம் தந்து, பரிசுத்த ஆவியினாலும் நிரப்பினார். அதன்பின்பு அநேகர் அதே பெண்ணைத் தேடி வரவும், அவள்மூலம் தேவனுடைய காரியங்களைப்பற்றி அறிந்துகொள்ளவும், ஆறுதல் பெறவும், ஆசீர்வாதம் பெறவும் ஆண்டவர் அருள்செய்தார்.

அன்பானவர்களே! இதுதான் மெய்யான கிறிஸ்தவ வாழ்க்கை. இதை வாசிக்கிற நீங்கள் உங்கள் வாழ்வை அப்படியே ஆண்டவரிடம் அர்ப்பணியுங்கள். வீணான வார்த்தைகள் வேண்டாம். கர்த்தருக்கு பிரியமான வார்த்தைகள் மட்டும் உங்கள் வாயிலிருந்து பிறக்கும்படி ஆண்டவர் அருள்புரிவார். உங்களை புத்திமான்களாக்கி ஆசீர்வதிப்பார்.

ஜெபம்: "அன்பு தெய்வமே! எத்தனை மேலான நீதியுள்ள வாழ்வைக் குறித்து நான் அறிந்து கொண்டேன். இன்றுமுதல் அந்த பெண்ணின் வாழ்வில் மறுமலர்ச்சியை பெற்றதுபோல் என் வாழ்வும் மறுமலர்ச்சியடைய, உமக்கு பிரியமான வார்த்தைகளை மட்டுமே என் உதடுகள் பிறப்பிக்க எனக்கும் அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

உங்கள் சீர்கேடுகளை குணமாக்குவேன்!

"சீர்கெட்ட பிள்ளைகளே, திரும்புங்கள்; உங்கள் சீர்கேடுகளைக் குணமாக்குவேன் என்றார்..." (எரேமியா 3:22).

நம்முடைய வாழ்க்கையிலே பல்வேறு சீர்கேடுகள், குறைவுகள் காணப்படலாம். ஆனால், கர்த்தர் இந்த வசனத்தில் குறிப்பிடுவது, நம்முடைய சீர்கேடுகளையெல்லாம் குணமாக்குவேன் என்ற அன்பின் வாக்குத்தத்தம்! எப்பொழுது இதை அவர் செய்வார்? நாம் அவரிடத்தில், நீரே என் தெய்வம் என்று நம்மை சமர்ப்பிக்கும்பொழுது மட்டுமே அப்படி செய்வார். ஏனென்றால், "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" (1 தீமோ.2:4). எனக்கு அன்பானவர்களே, உங்கள் வாழ்க்கையில் பாவங்கள், மீறுதல்கள் எதுவாக இருந்தாலும் கர்த்தரண்டை வந்து, அப்படியே உள்ளபடி குழந்தையைப்போல அறிக்கையிடும்பொழுது, கர்த்தர் உங்கள் வாழ்வை வெண்பஞ்சைப்போல சுத்தமாக்குவார் (ஏசாயா 1:18). எப்பேர்ப்பட்ட பாவம், அக்கிரமம், சாபம் நிறைந்த பயங்கரமான சாவுக்கேதுவான சரீரங்களையும், வாழ்வையும்கூட கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பின தேவன் தமது ஆவியினாலே உயிர்ப்பிக்க வல்லமையுள்ளவராயிருக்கிறார். ஆகவே, பவுல் அப்போஸ்தலனைப்போல், "பாவிகளில் பிரதான பாவி"யாகிய எனக்கு மீட்பு உண்டா? என்று கலங்குகிற ஒவ்வொருவரையும்கூட உயிர்ப்பிப்பது தேவாதி தேவனுக்கு இலேசான காரியம். எனவே, இதை வாசிக்கிற உங்கள் வாழ்வையும் சகல சீர்கேடுகளினின்றும் சிறியதோ, பெரியதோ அவர் தம் தெய்வீக வல்லமையினால் முற்றிலும் மாற்றவும், அவர் விரும்பும் தெய்வீக வாழ்வைக் கொடுக்கவும் அவர் பிரியமுள்ளவராகவும், வல்லமையுள்ளவராகவும் இருக்கிறார் (ரோமர் 8:11).

ஒரு வங்கியிலே பணிபுரிந்த ஒருவர் பெயரளவில் மட்டுமே கிறிஸ்தவராயிருந்தார். அதே வங்கியில் அவரோடு பணிபுரிந்த வேறு ஒருவர் மிகவும் பக்தியாய் யாவருக்கு முன்பாகவும் நற்சாட்சியாக நடந்துகொள்வார். எனவே, இவரை மற்றவர் பரியாசமும், கிண்டலுமாக மற்றவர்களிடம் குறைத்துப் பேசுவார். ஒருநாள் பெயரளவில் கிறிஸ்தவராக இருந்தவருக்கு இருதயத்தில் பெலவீனம் ஏற்பட்டது. அறுவைசிகிச்சை செய்ய வேண்டுமென்று, தீவிர சிகிச்சை அறைக்கு அழைத்து செல்லப்பட்டார். போகிற வழியில் "நான் உனக்கு நவமான இருதயத்தை கொடுப்பேன்" என்று எழுதப்பட்டிருந்த வாசகத்தை சற்று மனம் சோர்ந்திருந்த அவர் வாசித்து பார்த்தபொழுது, உள்ளத்தில் மரணபயம் கொண்டிருந்த அவருக்கு ஒரு புது நம்பிக்கை பிறந்தது. தன் பாவங்களையெல்லாம் மனதிலேயே அறிக்கையிட்டு, ஆண்டவரின் மன்னிப்பைப் பெற்று புது மனிதனாக அறுவை சிகிச்சை அறைக்கு சென்றார். கர்த்தர் அவரது உள்ளத்தின் சீர்கேடுகளை மட்டுமல்லாமல், இருதயத்தின் சீர்கேடுகளையும் மாற்றி, குணமாக்கி ஆசீர்வதித்தார்.

அன்பானவர்களே! நீங்களும் இதே ஆசீர்வாதத்தை பெற்று அனுபவியுங்கள். ஆண்டவரை நோக்கி பாருங்கள். உங்கள் சீர்கேடுகளையும் குணமாக்கி, உங்களையும் வாழ்விப்பார் (ஓசியா 14:4).

ஜெபம்: "அன்பு இரட்சகரே! அந்த சகோதரனுக்கு நவமான இருதயத்தை சரீரத்திலும், ஆவியிலும், அருளிச்செய்ததுபோல, இன்றுமுதல் என்னையும் ஆசீர்வதித்து, என் சீர்கேடுகளையெல்லாம் குணமாக்கும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

முந்தினவைகளை நினைக்கவோ, சிந்திக்கவோ வேண்டாம்!

"முந்தினவைகளை நினைக்கவேண்டாம்; பூர்வமானவைகளை சிந்திக்க வேண்டாம்"
(ஏசாயா 43:18).

நாம் எப்பொழுதும் கஷ்டங்கள் வழியாய் கடந்து செல்லும்பொழுது, "ஐயோ, முன்பு எவ்வளவு நன்றாக இருந்தேனே! இப்பொழுது இவ்வாறு கஷ்டப்படுகிறேனே" என்று பழையவைகளையே சிந்தித்து சோர்வடைகிறோம். அதுபோன்றே, திருமணமாகி புருஷன் வீட்டுக்கு வருகிற பெண்கள் தகப்பன் வீட்டில் அனுபவித்த நன்மைகளையே சொல்லி சொல்லி, புருஷன் வீட்டின் குறைவுகளை பெரிதுபடுத்துகிறார்கள். இதனால் என்ன பயன்? அதற்கு பதிலாக இந்த வசனத்தின்படி பின்னானவைகளை மறந்துவிடவும், இப்பொழுது இருக்கிற நிலமையிலேயே நான் எப்படி ஆண்டவரை பிரியப்படுத்தட்டும், எப்படி குடும்பத்தாரை சந்தோஷப்படுத்தட்டும் என்று முன்னானவைகளையே நாடி செல்வோமானால் மட்டுமே நிறைவான ஆசீர்வாதத்தை, சந்தோஷத்தை, சமாதானத்தை பெற்றுக்கொள்ள முடியும் (பிலி. 3:13). கிறிஸ்தவ வாழ்க்கையும் அப்படித்தான்! பழையவைகளை நினைத்துப் பாராமல், ஆண்டவர் அழைத்த அழைப்பின் பந்தயப் பொருளை பெறும்படி, பரிசுத்த பாதையில் நடந்து இலக்கை நோக்கி முன்னேறி செல்ல வேண்டும் (பிலி. 3:14).

ஒரு பெண் இப்படித்தான் எப்பொழுதும் தன் கணவன் வீட்டின் காரியங்களை குறைசொல்லிக் கொண்டேயிருப்பாள். ஆனால், அவள் பெற்றோரையும், அவள் வீட்டில் நடந்த காரியங்களையும் மட்டுமே மேன்மைப்படுத்திக் கொண்டேயிருப்பாள். அதுவரை அமைதியாயிருந்த அவள் கணவன் பொறுமையின் எல்லையை ஒருநாள் கடந்து சென்றார். கோபத்தினால் பல வீணான வார்த்தைகளையெல்லாம் அவரும் பேசினதினால் அடிக்கடி இருவருக்குள்ளும் மனஸ்தாபம் எழ ஆரம்பித்தது. இந்த நிலைமையில் அவளுடைய பழைய சிநேகிதி ஒரு நாள் அவளைத் தேடி வந்தாள். அவளிடம் தன் மனக்கிலேசத்தையெல்லாம் இவள் கூறினாள். அப்பொழுது அவள் பக்தியுள்ளவளாக இருந்ததினால் எப்படி பின்னானவைகளை மறந்து, முன்னான தேவ வழியை மட்டுமே கர்த்தருக்கு பிரியமாக பின்பற்ற வேண்டும், திருமணத்தின் மூலமாய் இணைக்கப்பட்ட குடும்பத்தை எப்படி திறம்பட நடத்தவேண்டும் என்பதையெல்லாம் கற்றுக்கொடுத்தாள். அப்பொழுதுதான் இந்த பெண் தன் குறைவை எண்ணி, ஆண்டவருடைய ஒத்தாசையை நாடி தன்னை மாற்றிக்கொண்டாள். அதன்பிறகு அவள் குடும்ப வாழ்க்கையில் சஞ்சலம், வீண் பேச்சு, குழப்பம், சமாதானமின்மை யாவும் மறைந்தது! யாவரோடும் சமாதானமாக வாழ தேவன் கிருபை புரிந்தார்!

எனக்கு அன்பானவர்களே! இன்றைக்கும் உங்கள் வாழ்விலும்கூட சிறு காரியத் தினிமித்தம் மன சமாதானத்தை இழந்து நீங்களும் தவிக்கலாம். பழையவைகளை மறக்கவும், புதியவைகளை நாடித்தேடவும், கர்த்தருடைய தயவினால் சரியான பாதையில் நடத்தப் படவும் உங்களை ஒப்புக்கொடுங்கள் (ரோமர் 12:2).

<u>ஜெபம்</u>: "அன்பின் தெய்வமே! உம்மோடு இணைந்து மேற்கண்டவாறு உமக்கு பிரியமாய், பழையவைகளை மறந்து, புதிய காரியத்திலே உம் சித்தம்போல் நடக்க, உம்மை பிரியப்படுத்த, யாவரையும் சந்தோஷப்படுத்த, எனக்கும் <u>இன்றுமுதல்</u> அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

உபத்திரவத்திலே பரிசுத்த ஆவியின் சந்தோஷம்!

"நீங்கள் மிகுந்த உபத்திரவத்திலே, பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே, திருவசனத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்..." (1 தெசலோனிக்கேயர் 1:6).

உலக வாழ்க்கை உபத்திரவம், துன்பம், சோர்வு, கவலை யாவும் நிறைந்த ஒன்றாகும். "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்" (யோவான் 16:33). இந்தவிதமான திட்டமான ஒரு காரியத்தை ஆண்டவரே நமக்கு அறிவிக்கிறபடியால் நாம் நிச்சயமாகவே இவைகளிலெல்லாம் முற்றிலும் வெற்றியடைய முடியும் (ரோமர் 8:36, 37). ஆண்டவரை நாம் சார்ந்து கொள்ளும்போதும், அவரை உறுதியாய் பற்றிபிடித்துக்கொள்ளும்பொழுது மட்டுமே அவர் அவ்வாறு ஜெயம் தருவார். இந்த ஜெயம் எப்பொழுது பூரணப்படும்? பரிசுத்த ஆவியினால் நாம் நிறைந்து ஆண்டவருடைய வழிகளுக்கு, சித்தத்திற்கு நம்மை முற்றிலுமாய் அர்ப்பணிக்கும்பொழுது பரிசுத்த ஆவியின் நிறைவு ஆண்டவராலேயே நமக்கு அருளப்படுகிறது. அதன்மூலமாய் உபத்திரவத்திலும் சந்தோஷத்தையும், உலகம் தரக்கூடாத சமாதானத்தையும், ஆண்டவர் கொடுக்கிற அருமையான கிறிஸ்தவ வாழ்க்கையையும் பெற்றுக்கொள்ளலாம் (பிலி. 4:6,7).

ஒரு ஊழியர் கர்த்தருக்கென்று இரவும் பகலும் கடுமையாக உழைப்பார். ஆண்டவரால் யார் மூலமாகவாவது ஆகாரம் கிடைத்தாலோ அல்லது பணம் கிடைத்தாலோ அதை வைத்து குடும்பமாக ஏதாவது வாங்கி சாப்பிட்டு சந்தோஷமாக இருப்பார்கள். ஒருமுறை இரண்டு நாட்கள் சாப்பிடுவதற்கு ஒன்றுமில்லை. ஊழியத்திற்காக பல இடங்களில் இருந்து அழைப்பு வந்திருக்கிறது. ஆனால் குடும்பத்தில் யாவரும் பட்டினி. இதை யாரிடம் சொல்லுவது? கர்த்தரிடம் மட்டும் சொல்லிவிட்டு, அவர் காண்பித்த ஊழியத்தின் பாதையை உண்மையும் உத்தமமுமாய் தொடர்ந்து செய்தார். கர்த்தர் அதை கவனித்தார். அதன் பலனாக, ஒரு பெரிய ஊழியத்தை பொறுப்பாக அவருடைய கையிலே கொடுத்தார். அவருடைய குடும்பத்தின் காரியங்கள் யாவையும் கர்த்தரே பொறுப்பெடுத்துக் கொண்டார். எவ்வளவு குறைவுகளை அனுபவித்தார்களோ அவ்வளவுக்கு அதிகமாக ஆண்டவர் அவர்களை கனப்படுத்தி, ஒவ்வொருநாளும் குறைவு என்பதற்கு வழியே இல்லாதபடி அவருக்காக யாவற்றையும் செய்து கொடுத்தார். அதுமட்டுமின்றி, பரிசுத்த ஆவியின் நிறைவையும் அளவில்லாமல் தந்து, தம் ஆன்மீக வரங்களாலும், வல்லமையாலும் நிறைத்து, சொல்லி முடியாத சந்தோஷத்தினால் நிரப்பினார்.

என் அன்புக்குரியவர்களே! நம்முடைய ஆண்டவர் உங்களுடைய உபத்திரவங்களை எல்லாம் கவனித்து பார்க்கிறார். கர்த்தருக்கென்றே வாழ்ந்து உபத்திரவப்படும்பொழுது பொறுமையாய் இருப்பீர்களானால் அவர் உங்களை அப்படியே விட்டுவிட மாட்டார். இந்த ஊழியருக்கு உதவி செய்து கனப்படுத்தியதுபோல உங்களையும் கனப்படுத்துவார் (யோவான் 16:33)!

ஜெபம்: "அன்பு தெய்வமே! உபத்திரவத்தைக் கண்டு கொஞ்சமும் சோர்ந்து போகாமல், உம்மை விட்டு தூரமாய் விலகாமல் இன்னும் அதிகமாக உம்முடைய தயவையும் இரக்கத்தையும் பெற்று பொறுமையோடு நீர் காண்பிக்கிற வழியில் இன்றுமுதல் நடக்க, ஆசீர்வதிக்கப்பட, பரிசுத்த ஆவியானவர் மூலமாய் என்னையும் பலப்படுத்தி ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

முதிர்வயதிலும் கனி தந்து, பசுமையாய் மாற்றுவார்!

''அவர்கள் முதிர்வயதிலும் கனி தந்து, புஷ்டியும் பசுமையுமாயிருப்பார்கள்''

(சங்கீதம் 92:15).

இன்றைக்கு முதிர்வயது வந்தவுடனே அநேகர் சரீரத்தில் பெலவீனப்படுகிறார்கள். இது எல்லோருக்கும் உரியதுதான். இதனால் மன சோர்வும் கூடவே வருகிறது. அநேகர் மனம் தளர்ந்து போய் ஏன் உலகில் வாழ வேண்டுமென்று சலித்துக்கொள்வதையும் நாம் பார்க்கிறோம். ஆனால், தேவனால் நிறைந்தவர்களுக்கோ, பசுமையான வாழ்வை தருவார், பெலவீனத்தில் பெலன் தந்து காப்பார் (பிலி. 4:13). ஆகவே, எனக்கு அன்பான முதிர்வயதான சகோதர, சகோதரிகளே, கொஞ்சமும் சோர்ந்துபோகாமல், கர்த்தருடைய பெலனுக்காக காத்திருங்கள். அவர் உங்கள் வியாதிகள் மற்றும் பலவித சோர்வுகளையெல்லாம் இன்று விலக்கி, தம் தூய ஆவியின் நிறைவினால் பலப்படுத்தி, கடைசிவரை கனி தந்து சாட்சியாக வாழும்படி மாற்றுவார் (அப். 1:8) என்பது என் அனுபவத்தில் நான் கண்டு வருகிற ஓர் உண்மை!

ஒரு ஊழியரின் மனைவி அவர் உண்மையாய் உழைத்து வரும்பொழுது, அவரை அசட்டை செய்தார்கள். சரியான சாப்பாடுகூட கொடுக்கமாட்டார்கள். ஆனால், அந்த ஊழியர் தன் ஊழியத்தை இவ்வுலகில் முடித்து, பரலோகம் சென்ற பின்பு, தன்னை யாரும் சட்டைபண்ணவில்லை, பொருட்படுத்தவில்லை என்பதை உணர்ந்து, முதல் முறையாக கர்த்தரை நோக்கி கதறினார்கள். கர்த்தர் மிகுந்த இரக்கமுள்ளவர் அல்லவா! அவர்கள் குறைவையெல்லாம் மன்னித்து, இரட்சித்தார். அபிஷேகத்தினாலும், வரங்களாலும், வல்லமையினாலும் நிரப்பினார். கணவர் விட்டு சென்ற ஊழியத்தை வயதான காலத்தில் தேவ சித்தத்தின்படியே நிறைவேற்றவும், கனி தந்து பசுமையாய் வாழவும் அருள்புரிந்தார். அநேக மக்கள் வயது வரம்பரையின்றி ஆண்களும், பெண்களும் அவர்கள் மூலம் பெற்ற தெய்வீக ஆலோசனைகளால், கண்ணீர் நிறைந்த பிரார்த்தனையின் பலனாக வாழ்விலே தேற்றப்பட்டு, மிகுந்த ஆசீர்வாதம் பெற்றார்கள்.

ஆம்! பிரியமானவர்களே, எந்த வயதானாலும் சரி, இளம்வயதோ, நடுத்தரவயதோ, முதிர்வயதோ, கர்த்தரைத் தேடுவதில், அவரை கனப்படுத்துவதில், அவருக்காக வாழ்வதில் கவனமாய் இருப்பீர்களானால், முடிவுபரியந்தம் அவர் உங்களையும் ஸ்திரப்படுத்துவார் (சங். 27:14). எந்தவிதமான பெலவீனமும், தேவ கிருபையால் மாறி, தெய்வீக பெலனால் நிரம்பப்பெறுவது ஆண்டவர் வாக்கின்படியே நடக்கும். "என் கிருபை உனக்கு போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்'' (2 கொரி. 12:9) என்ற ஆண்டவரின் வாக்குத்தத்தத்தை விசுவாசித்து, ஏற்றுக்கொள்ளுங்கள். பெலவீனங்களையே எண்ணி, அவைகளை பெரிதுபடுத்தாமல், கர்த்தரையே எப்பொழுதும் நோக்கிப் பாருங்கள். அப்பொழுது மட்டுமே முதிர்வயதிலும் கனிதரவும் பசுமையாய் வாழவும் முடியும்.

ஜெபம்: ''அன்பு தெய்வமே! உமக்காக வாழ்வது எந்த வயதிலும் எவ்வளவு மேன்மையானதாய் இருக்கிறது! எனக்கும் இந்த தெய்வீக அருளை, பரிசுத்த ஆவியின் நிறைவை, கனி நிறைந்த வாழ்வை கடைசி பரியந்தம் தந்து இன்றுமுதல் என்னை ஆசீர்வதியும். உமக்கு ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!''

என் கட்டளைகளை காத்துக்கொண்டால் பிழைப்பீர்கள்!

"என் கட்டளைகளையும் என் போதகத்தையும் உன் கண்மணியைப்போல் காத்துக்கொள், அப்பொழுது பிழைப்பாய்" (நீதிமொழிகள் 7:2).

கர்த்தர் நம்மோடு பேசுகிற மேற்கண்ட வாக்கின்படியே, கர்த்தருடைய கட்டளைகளை நாம் ஜாக்கிரதையாக வாசித்து அதை காத்து நடப்போமானால், நடக்கும்போது அது நமக்கு வழி காட்டும். படுக்கும்போது நம்மை காப்பாற்றும்; விழிக்கும்போது நம்மோடே பேசும் (நீதி. 6:22). இதன்படி ஒரு குடும்பத் தலைவன் அல்லது தலைவி அல்லது பிள்ளைகள் கருத்தாய் கவனித்து, தினசரி வாழ்வில் நடக்கும்பொழுது, கர்த்தருடைய கரம் அவர்கள் மேல் இருக்கும். அவர்கள் பாக்கியம் நிறைந்தவர்களாகவும் (சங். 128:1; 112:1,2) தெய்வ வழிகளில் நடப்பதால் புகழ்ச்சி, கனம் பெற்றவர்களாகவும் (நீதி. 31:30), ஆசீர்வதிக்கப்பட்டவர்களாகவும் வாழ ஆண்டவர் அருள்புரிவார் (சங். 115:13). ஆபிரகாம் சந்ததி சந்ததியாக ஆசீர்வதிக்கப்பட்டதற்கு ஒரு முக்கிய காரணம், தேவனுடைய கட்டளைக்கு தானும் தனது வாழ்வில் மிகுந்த கனம் கொடுத்ததோடு, அவன் தன் பிள்ளைகளுக்கும், தன் வீட்டாருக்கும்கூட கர்த்தருடைய கட்டளைகளை, வழிகளை காத்து நடவுங்கள் (ஆதி. 18:19) என்று கட்டளையிட்டதுதான்.

சகோதரர் தினகரன் அவர்களின் வாழ்க்கையை, எங்களுக்கு திருமணமான நாளில் இருந்து நான் கருத்தாய் கவனித்து வருகிறேன். அதற்கு முன்பதாகவே ஆண்டவர் என்னையும் தம்முடைய அன்பினால் நிறைத்திருந்தபடியினால், அவர் பின்பற்றின தெய்வீக வழிகள் எனக்கும் பிரியமாய் இருந்தது. அவ்வாறு நாங்கள் இருவரும் ஆண்டவர் விரும்பினபடியே அவரது கட்டளைகளை காத்துக்கொண்டு, அதன்படி வழிநடக்க எங்களை ஒப்புக்கொடுத்தபடியினால், சந்ததி சந்ததியாக தேவ பக்தியுள்ள சந்ததி உண்டாகும்படி (மல். 2:15), ஆண்டவர் அருள்புரிந்திருக்கிறார்! இன்றும் எந்தெந்த மக்கள் தனியாகவோ, அல்லது குடும்பமாகவோ தேவனுடைய வார்த்தையை வாசிப்பதிலும், தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிவதிலும் கவனமாயிருக்கிறார்களோ அங்கே அவர்களோடு தேவன் வாசம்பண்ணுவார் (யோவான் 14:23).

எனக்கு அன்பானவர்களே! நீங்கள் உங்கள் வாழ்க்கையின் குறைவுகளையெல்லாம் தூர தள்ளிவிட்டு, கர்த்தர் விரும்புகிறபடி, அவருடைய கட்டளைகளையும், கற்பனைகளையும், போதனைகளையும், ஆலோசனைகளையும், உங்கள் வாழ்வில் கவனமாக நிறைவேற்றி, நீங்களும் ஆசீர்வாதத்தினை நிறைவாய் பெற்றுக் கொள்ளுங்கள் (எசே. 18:9)!

<u>ஜெபம்</u>: "அன்பு தெய்வமே! உம்மோடு உறவாடுவது, உம்முடைய வழிகளில் நடப்பது எத்தனையாய் மெய்யான இன்பத்தை கொடுக்கிறது. <u>இன்றுமுதல்</u> என் வாழ்வும் செழிக்க, உமக்கு பிரியமாய் நானும் நடக்க, உம்முடைய தெய்வீக அருளைத்தாரும். என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும், குடும்ப வாழ்க்கையிலும் உம்முடைய கட்டளைகளை, கற்பனைகளை கைக்கொள்வதின் மூலம் எனக்கு இந்த ஆசீர்வாதத்தை நிறைவாய் தந்து, என்னோடு பேசி, பரலோக நன்மைகளால் என்னை நிரப்பும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

தீமையை விட்டு விலகுவதே கர்த்தர் விரும்பும் பாதை!

"தீமையை விட்டு விலகுவதே செம்மையானவர்களுக்கு சமனான பாதை; தன் நடையைக் கவனித்திருக்கிறவன் தன் ஆத்துமாவைக் காக்கிறான்"

(நீதிமொழிகள் 16:17).

ஆண்டவர் ஒருவரையும் கட்டாயப்படுத்துகிறவர் அல்ல! நல்ல வழி, தீய வழி என்று இரண்டும் நமக்கு முன்பாக இருக்கிறது. நெருக்கமான பாதை, விசாலமான பாதை என்றும் காணப்படுகிறது (மத். 7:13,14). "தீமையை வெறுப்பதே கர்த்தருக்கு பயப்படும் பயம்" (நீதி. 8:13). "ஆண்டவரே, தீய வழிகளை நான் பின்பற்றாமல், உம்முடைய தெய்வீக வழிகளை மாத்திரம் பின்பற்ற எனக்கு அருள் தாரும்" என்று ஆண்டவரையே சார்ந்துகொள்ளும்பொழுது, கர்த்தர் நம்மேல் பிரியமாய் இருப்பார், நமக்கு பெலன் தந்து உதவி செய்வார். "நான் உனக்கு முன்னே போய், கோணலானவைகளை செவ்வை யாக்குவேன்" (ஏசாயா 45:2) என்று அவர் உரைத்தபடியே உங்களுக்கும் நிச்சயம் தீமையை விட்டு விலகி வாழும் தெய்வீக வழியை காண்பித்து, வழிநடத்துவார்.

சகோதரன் பால் தினகரன் ஆறு வயது சிறுவனாக இருக்கும்பொழுது, ஒரு நாள் ஆண்டவர் அவனோடு அவன் தகப்பனார் மூலம் பரிசுத்த ஆவியின் வரமாகிய தீர்க்கதரிசன வரத்தின் மூலம் பேசினார். "என் மகனே, உனக்கு முன்பாக இரண்டு வழிகளை வைக்கிறேன். ஒன்று மீனின் வழி, அது நேராக செல்லும். அடுத்தது, நண்டின் வழி, அது குறுக்கும் நெடுக்குமாக செல்லும். இதில் எதை நீ தெரிந்துகொள்ளப் போகிறாய்?" என்றார். எல்லாவற்றையும் கேட்ட பின்பும் நண்டின் பாதையை அவன் சிலகாலம் தெரிந்து, கர்த்தருடைய வழியை விட்டு விலகினான். ஆனால், கர்த்தரோ, பெற்றோர்களாகிய எங்களுடைய கண்ணீரின் ஜெபத்தைக் கேட்டு, தம்முடைய தெய்வீகக் கிருபையினால் அவனை மீண்டும் தெய்வீக வழியிலே திருப்பிக்கொண்டு வந்தார். இன்று பாருங்கள், அவருடைய வாழ்க்கையின் மூலமாக, ஊழியத்தின் மூலமாக, எத்தனையோ வாலிபர்கள், ஏன் குடும்ப வாழ்வில் இருப்பவர்களும்கூட மீனின் வழியையே தெரிந்திருக்கிறார்கள். எத்தனை இன்பமான ஆண்டவர் நமக்கு இருக்கிறார்!

எனக்கு அன்பானவர்களே! நீங்களும் தீமையான வழிகளை விட்டு விலகி, நன்மை யானவைகளை நாடி, உங்களுடைய ஆத்துமாவை பரிசுத்தமாய் காத்துக்கொள்ளுங்கள். இப்பொழுதே நீங்களும் நண்டின் வழியை விட்டு மீனின் வழிக்கு திரும்பி வருவீர்களா? கர்த்தர் உங்களை பரிசுத்த பாதையிலே நடத்தும்படி, உங்களை முற்றிலுமாக தெய்வ பயத்துடன் அர்ப்பணியுங்கள் (2 கொரி. 7:1)! "வழி இதுவே! இதிலே நடவுங்கள்" என்று கூறும் ஆண்டவர் (ஏசா. 30:21) உங்களுக்கு முன்னதாக செல்லும்படி தினமும் அவரை நாடித் தேடுங்கள். அவருக்கு பயப்படுவதே, தீமையை வெறுத்து தெய்வீக வழியில் நடக்க நம்மை உற்சாகப்படுத்தும்.

<u>ஜெபம்</u>: "அன்பு இரட்சகரே! நானும் நண்டின் வழியை பின்பற்றாமல், நேர்மையான வழியில் நடக்க, சிலுவையிலே உம்மையே அர்ப்பணித்தீரே! அதை உணர்ந்து நானும் இன்று என்னை உமக்கு ஒப்படைக்கிறேன். என் வாழ்வில் ஒருநாளும் தீமைக்கு இடங்கொடுக்காமல், நீர் விரும்புகிற வழியிலே நடக்க, எனக்கும் அருள்தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

என் செல்வம் பரிசுத்தவான்களுக்கு வேண்டியதாயிருக்கிறது!

"...என் செல்வம் உமக்கு வேண்டியதாயிராமல்; பூமியிலுள்ள பரிசுத்தவான்களுக்கும், நான் என் முழுப் பிரியத்தையும் வைத்திருக்கிற மகாத்துமாக்களுக்கும், அது வேண்டியதாயிருக்கிறது" **(சங்கீதம் 16:2,3).**

ஆண்டவர் நம்முடைய செல்வத்தைத் தனக்கென்று விரும்பி கேட்பது கிடையாது. பூமியிலுள்ள பரிசுத்தவான்களுக்கும், மகாத்துமாக்களுக்கும் அதை நாம் கொடுக்கும்படியும், ஏழைகளுக்கு இரங்கும்படியும் அவர் விரும்புகிறார். இதைத்தான் "மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதை செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்" (மத்தேயு 25:40) என்று வேதம் கூறுகிறது. மேலும், தீர்க்கதரிசி அல்லது சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்த சிறியரில் ஒருவனுக்கு எதை செய்கிறீர்களோ, எப்படி அவர்களை ஏற்றுக்கொள்கிறீர்களோ, அப்படியே உங்களையும் பலனடையும்படி செய்வேன் என்றும் வாக்கருளியிருக்கிறார் (மத்தேயு 10:41,42). எனக்கு அன்பானவர்களே! கர்த்தருக்கென்று நாம் என்ன செய்கிறோம்? நாம் சம்பாதிப்பதையெல்லாம் நமக்கென்றும், நம் குடும்பத்திற்கென்றும் முற்றிலும் செலவழிக்கிறோமா? இதை கர்த்தர் விரும்புவதில்லை. கர்த்தர் விரும்பும் தெய்வீக வழியை பின்பற்ற இன்று கற்றுக்கொள்ளுங்கள். கர்த்தர் நிறைவான ஆசீர்வாதத்தை இதன் மூலம் உங்களுக்கு கொடுப்பார்.

ஒரு ஏழை உத்தியோகஸ்தர் இருந்தார். அவர் சம்பாதித்ததோ மிகவும் குறைவான ஊதியம் தான். ஆனால், அந்த ஊதியத்தில் கர்த்தருக்கென்று கொடுப்பதில் அவர் மிகமிக கவனமாய் இருப்பார். எனக்கு குறைவு ஏற்பட்டாலும் பரவாயில்லை, ஆண்டவருடைய ஊழியத்திற்கு, அவர் விரும்பும் ஊழியர்களுக்கு, ஏழை எளியவர்களுக்கு என்னால் இயன்றதை கண்டிப்பாக செய்யவேண்டுமென்று உறுதியாய் வாழ்ந்து வந்தார். கர்த்தர் அதை கவனித்து பார்த்தார். இரண்டு காசு போட்ட ஒரு ஏழை விதவையைக் கண்ட ஆண்டவருடைய கண்கள் இவரையும் பார்த்தன! இந்தவிதமாய் அவர் அனுபவித்த கடினமான நாட்கள் கொஞ்சநாட்களாய் இருக்கும்படியும், அவருக்குள் தேவனுடைய ஆசீர்வாதம் இறங்கும்படியும், ஆண்டவர் நினைத்தருளினார். அதை அப்படியே செயல்படுத்தினார். ஊழியத்திலும் உயர்வு! அவர் செய்த உத்தியோகத்திலும் எதிர்பாராத உயர்வு என்று யாரும் எதிர்பார்க்காத அளவிலே ஆச்சரியமாக கொடுத்தார். பொறாமைப்பட்டவர்களும்கூட அவருடைய நற்கிரியைகளைப் பார்த்து, "அவருக்கு இது வேண்டும். இந்த ஆசீர்வாதம் அவருக்கு உரியதுதான்" என்று அவரை பாராட்டினார்கள். பணம் பெருகினாலும் கொஞ்சமும் பெருமையடையாதபடி கர்த்தரோடு வாழ்ந்து, மென்மேலும் கர்த்தருடைய ஊழியர்களுக்கும், ஏழை எளியவர்களுக்கும் உதவி செய்வதில் பேரானந்தம் கண்டார். அநேகருக்கு முன்மாதிரியாய் விளங்கினார்.

அன்பானவர்களே! உங்களைப் பற்றி என்ன? நீங்களும் இதே வழியை பின்பற்றி ஆண்டவரிடத்திலிருந்து அளவில்லாத ஆசீர்வாதம் பெற்று மகிழுங்கள் (2 கொரி. 9:7).

ஜெபம்: "கொஞ்சத்தில் உண்மையுள்ளவன் அநேகத்தில் ஆசீர்வதிக்கப்படுவான் என்ற உம் வார்த்தையின்படி, நான் நீர் காண்பித்த அந்த மேலான வழியிலே நடந்து ஆசீர்வாதம் பெற, உமக்கு பிரியமாய் வாழ, என்னையும் இன்றுமுதல் வழிநடத்தும், ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

விழித்திருங்கள்! விசுவாசத்திலே நிலைத்திருங்கள்!

(1 கொரிந்தியர் 16:13).

இதுவரை தேவனுடைய கிருபையினால் ஏழு மாதங்களை முடித்து எட்டாவது மாதத்தினுள் நாம் புகுந்திருக்கிறோம். ஆண்டவர் இதுவரையில்லாத விதமாக இந்த மாதத்திலும், வரப்போகிற நாட்களிலும் உங்களுக்கென்று நிறைவான ஆசீர்வாதங்களை விசேஷித்த முறையில் வைத்திருக்கிறார் என்று விசுவசிப்பீர்களானால் தேவனுடைய மகிமையை நிச்சயம் காண்பீர்கள் (யோவான் 11:40). இந்த முதலாம் தேதியன்று "கர்த்தருடைய சமுகத்திலே முன்பைக்காட்டிலும் அதிகமாய் விழித்திருந்து, கர்த்தர் விரும்புகிறபடி ஜெபம் செய்வேன், அவரை விசுவாசத்தோடு பற்றிக்கொள்வேன்" என்று ஒரு புதிய தீர்மானம் செய்வோமா? (1 கொரி. 16:13). கர்த்தர் அந்த தீர்மானத்தை நிறைவேற்ற புது பெலன் தருவார். அதன்மூலம் நீங்கள் எதிர்பாராத, நிறைவான, மேன்மையான ஆசீர்வாதத்தை பரலோகத்திலிருந்து அவர் நன்மையாக மாதம் முழுவதும் பொழிவார் (யாக். 1:17).

ஒரு குடும்பத் தலைவர் ஒவ்வொரு மாத துவக்கத்திலும் தன் குடும்பத்தாரோடு முழங்காற்படியிட்டு, பல மணி நேரம், விசேஷித்த விதத்தில் கர்த்தரை தேடும் பழக்கம் கொண்டிருந்தார். குடும்பத்தில் அத்தனைபேரும் இதில் கலந்துகொள்ள வேண்டுமென்று அவர் கண்டிப்பாக இருந்தார். அந்த நேரங்களில் அவர் என்ன செய்வார் தெரியுமா? எல்லோரும் தங்கள் குறைவுகளையெல்லாம் அறிக்கையிட்டு, கர்த்தருக்குள் ஒப்புரவாகி, புது வாழ்வு, புது அபிஷேகம், புதிய நீதியின் வழிகள், புதிய கிருபை, ஆண்டவருடைய அளவில்லாத ஞானம் இவற்றையெல்லாம் தகப்பன் முதல் கடைசி பிள்ளை வரை பெற்றுக்கொள்ளும்வரை, ஸ்தோத்திரத்தோடு கர்த்தரிடத்தில் ஜெபம் பண்ணும்படி வழிநடத்துவார். இதினிமித்தமாக இந்த குடும்பத்திலே சண்டைகள் கிடையாது. என்றென்றும் சமாதானம், பிள்ளைகளின் வழிகள் யாவரும் விரும்பும்வண்ணமாக நற்சாட்சியுள்ள வழிகள், வேலை ஸ்தலத்திலே மற்றும் எங்கும் சமாதானம்! எல்லாவற்றிலும் சந்தோஷம்! கர்த்தர் அந்த வீட்டிலே உலாவி அவர்களை ஆச்சரியமாய் வழிநடத்தினார் (2 கொரி. 6:16).

அன்பானவர்களே! இந்த இன்பமான தெய்வீக வாழ்வை நீங்களும் பெறலாமே? ஏன் இன்றைக்கு குடும்பங்களிலே பிரிவினைகள், சண்டைகள், குழப்பங்கள்? இவ்வாறு குடும்ப மக்கள் ஒருமனதோடு ஆண்டவரைத் தேடாததுதான்! அந்த நல்ல குடும்ப தலைவரைப்போல, வேதத்தில் காணும் கொர்நேலியு என்ற நூற்றுக்கதிபதியைப்போல, குடும்பமாக, நண்பர்களாக, குழுவாக தேவ சந்நிதியில் விழித்திருந்து, விசுவாசத்தோடு ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து பிரார்த்தனை செய்யுங்கள். அப்பொழுது கர்த்தருக்குள் நிலைத்திருப்பீர்கள். கர்த்தரும் பெரிய காரியங்களை உங்கள் வாழ்வில் நிறைவேற்றுவார் (1 யோவான் 2:6).



ஜெபம்: "அன்பு இரட்சகரே! உம்மோடு உறவாட, விழித்திருந்து உம் பாதத்தில் விசுவாசத்தோடு காத்திருப்பது எத்தனை இன்பமும், மேன்மையுள்ளதுமாய் இருக்கிறது என்பதை அறிந்து கொண்டேன். நானும் இன்றுமுதல் இந்த தெய்வீக வழியை ஒவ்வொரு நாளும் பெற்றுக்கொள்ள எனக்கும் தெய்வீக அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

தேவன் உங்கள் நடுவில் வாசமாயிருப்பார்!

"உங்கள் நடுவில் என் வாசஸ்தலத்தை ஸ்தாபிப்பேன்; என் ஆத்துமா உங்களை அரோசிப்பதில்லை" (லேவியராகமம் 26:11).

ஆண்டவர் நம் ஒவ்வொருவரோடும், ஒவ்வொருவர் வீட்டிலும் தங்கி வாசம்பண்ணவும், உலாவவும், நம் குடும்பத்தில் தலைவராக இருக்கவும் விரும்புகிறார். இதைத்தான் இந்த வசனம் விளக்குகிறது. எப்பொழுது இந்த சிலாக்கியத்தை நாம் பெற்றுக்கொள்ள முடியும்? நாம் நம்முடைய வாழ்க்கையை அவருக்கு ஒப்புக்கொடுத்து, அவருக்கு சொந்தமாகும்பொழுது (1 பேதுரு 2:9) இந்த ஆசீர்வாதத்தை ஆண்டவர் கொடுக்கிறார். அதற்காகவே, சிலுவையிலே தன்னையே ஜீவபலியாக அர்ப்பணித்தார். பாவங்கள், அக்கிரமங்கள், மோகங்கள், வைராக்கியங்கள், இவைகள் யாவற்றிலிருந்தும் மன்னிப்பை பெறும்படியாக அவரை நோக்கி யார் யார் அவைகளையெல்லாம் அறிக்கையிட்டு வேண்டிக்கொள்கிறார்களோ, அவர்களுக்கு இந்த பாவ மன்னிப்பின் நிச்சயத்தை கொடுத்து, இரட்சிப்பின் சந்தோஷத்தால் நிரப்பி, அப்படிப்பட்டவர்கள் உள்ளத்திலும், இல்லத்திலும் அவர் வாசம்பண்ணி அவர்களை ஆசீர்வதிப்பார். அவர்களை தமக்கென்று சொந்தமாக்கிக்கொள்வார் (யோவான் 1:12).

ஒரு இளம் வாலிபன் "கடவுளே இல்லை" என்று சொல்லிக்கொண்டிருந்தான். ஆனால், அவனுக்கோ வாழ்க்கையில் எல்லாப் பக்கங்களிலும் தோல்வி. கல்வியில் தோல்வி, குடும்பத்தில் சமாதானம் இல்லை. எந்தப் பக்கம் திரும்பினாலும் பிரச்சினைகள். இதற்கு வழியே இல்லையா? எப்படித்தான் இவைகளில் இருந்து மீட்பை பெறுவது? என்று கலங்கினான். அப்பொழுதுதான் இயேசுவின் அன்பைக் குறித்து கேள்விப்பட்டான். சரி, அதையும்தான் சோதித்து பார்ப்போமே என்று ஒரு அறையில் பல மணி நேரம், "ஆண்டவரே, நீர் உண்மையாகவே தெய்வமாக இருப்பீரானால், என்னோடு பேசும்! இல்லாவிட்டால், இப்படியே நான் மடிந்துபோகப் போகிறேன்" என்று காத்திருந்தான். பல மணி நேரத்திற்குப் பிறகு ஒரு சினிமாபடம்போல, அவனுடைய பழைய பாவ வாழ்க்கை ஒவ்வொன்றாக அவனுடைய கண்களுக்கு முன்பாகத் தெரிந்தது. அவ்வளவுதான்! "ஐயோ, நான் எவ்வளவு பெரிய பாவி, இதை அறியாதிருந்தேனே" என்று ஆண்டவர் முன்பாக கதறி அவன் அழுதபொழுது, ஆண்டவர் அவனுக்கு தம் தெய்வீக இரட்சிப்பை, சந்தோஷத்தை, சமாதானத்தை அருளிசெய்தார். அதன்பிறகு அவனோடு ஆண்டவர் தங்கி சகலத்திலும் ஆசீர்வாதமாக வழிநடத்தினார்.

அன்பானவர்களே! உங்களைப் பற்றி என்ன? இந்த தெய்வீக அனுபவம், அதாவது ஆண்டவரோடு இணைந்து வாழ்கிற அனுபவம் உங்களுக்கு உண்டா? இல்லையானால், நீங்களும் இந்த வாலிபனைப்போல அவருடைய சமுகத்திலே காத்திருங்கள். உங்கள் குறைவுகளையெல்லாம் அவர் காண்பிப்பார் (1 கொரி. 13:10). அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடும்பொழுது, பரலோக ஆசீர்வாதங்களை நீங்களும் அளவில்லாமல் பெறுவீர்கள் (1 யோவான் 1:9).

ஜெபம்: "அன்பின் இரட்சகரே! நீர் எவ்வளவு அன்போடு இந்த உலகத்தில் வந்து, பாடுகளின் மத்தியில் வாழ்ந்து, சிலுவையிலே உம்மையே அர்ப்பணித்தீரே! இதை நான் உணர்ந்து, என் பாவங்களையெல்லாம் அறிக்கையிடுகிறேன். இன்று என்னையும் உம் தூய இரத்தத்தால் கழுவி, பரிசுத்தமாக்கும். உம்மைப்போல பாவமற்ற வாழ்வு வாழ பெலன் தந்து, என்னோடு என்றென்றும் தங்கியிரும்." இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!

உங்கள்மேல் கண்ணோக்கமாயிருந்து பெருகப்பண்ணுவேன்!

"நான் உங்கள்மேல் கண்ணோக்கமாயிருந்து, உங்களை பலுகவும் பெருகவும் பண்ணி, உங்களோடே என் உடன்படிக்கையைத் திடப்படுத்துவேன்"

(லேவியராகமம் 26:9).

வேதபுத்தகத்திலே ஆகார் என்ற அடிமைப்பெண்ணைக் குறித்து வாசிக்கிறோம். அவள் ஆபிரகாம், சாராள் என்ற தேவ மனிதர்களுடைய வீட்டிலே அடிமைப்பெண்ணாக இருந்தாள். ஆனால், சாராள் அவள் மேல் அன்புகூர்ந்து, தனக்கு குழந்தையில்லாத படியினால், அவள்மூலம் சந்ததி உண்டாகட்டும் என்ற நல்லெண்ணத்துடன், அடிமையாயிருந்தும் அவளை அந்த ஸ்தானத்திற்கு உயர்த்தினாள். ஆனால், அவளோ அந்த அன்பின் மேன்மையை உணராமல், அவளையே குறைவாக தாழ்த்தி எண்ணி, வார்த்தைகளால் சாராளின் மனதை வேதனைப்படுத்தினாள். இதினிமித்தம் வீட்டைவிட்டு கர்ப்பிணியான நிலைமையிலே துரத்தப்பட்டாள். ஆனால், கர்த்தரோ அவள்மேல் கண்ணோக்கமாயிருந்து, அவளை வனாந்தரத்தில் தேடிவந்து, சாராளிடம் திரும்பிப்போகவும், தன்னைத் தாழ்த்தும்படியாகவும் செய்து, அதன்பின்பு அவள் வாழ்வை ஆசீர்வதித்து பெருகப்பண்ணினார் (ஆதி. 16:7,13; 21:18–20).

ஒரு பெண்ணுக்கு திருமணம் ஆனது. ஆனால் அடுத்து, குழந்தை பேற்றிற்காக ஆவலோடு காத்திருந்த அவளுக்கும், அவளுடைய குடும்பத்தாருக்கும் பெருத்த ஏமாற்றமே தொடர்ந்து வந்தது. காரணம், அவள் கர்ப்பந்தரித்து சில மாதங்களுக்குள், அது குறை பிரசவம் ஆகிவிடும். இப்படியே ஆறு ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெற்றதால் கண்ணீரில் வாழ்ந்தாள் அந்த மகள்! தன் வேதனையை எனக்கு கடிதம் மூலம் எழுதி தெரிவித்தாள். நானும் மிகுந்த பாரத்துடன் ஆண்டவரை நோக்கி மன்றாடினேன். கர்த்தர் இரண்டு பேருடைய ஒருமனப்பட்ட ஜெபத்தைக் கேட்டார். அடுத்த முறை அவள் கருவுற்றபொழுது கர்த்தர் அதை ஆசீர்வதித்து, சுகமான பிரசவத்தில் குழந்தையை நல்லமுறையில் பெற்றெடுக்க அருள்புரிந்தார். தன்னால் அந்த குடும்பத்திற்கு சந்தான பாக்கியம் இல்லாமலே போய்விடுமோ என்று பயந்த அவளுக்கு, மேற்கண்ட வாக்குத்தத்தத்தின்படியே கர்த்தர் அவள்மேல் கண்ணோக்கமாயிருந்தார். அவளை பலுகவும், பெருகவும் செய்து, ஜீவனுள்ள சாட்சியாக, தேவ நாமத்திற்கு மகிமையாக வாழ கிருபைபுரிந்தார்.

எனக்கு அன்பானவர்களே! உங்கள் வாழ்க்கையிலும் அது இல்லையே, இது குறைவு படுகிறதே என்றெல்லாம் பல காரணங்களினிமித்தம் நீங்களும் கண்ணீரோடு இருக்கலாம். அந்த பெண் செய்ததுபோல, நீங்களும் கர்த்தரை நோக்கி கதறுங்கள். அவர் மனமிரங்கும்படி உங்களை தாழ்த்தி, அவரிடம் மன்றாடுங்கள். "ஜெபத்தைக் கேட்கிற தேவன்" (சங். 65:2) நாம் வேண்டிக்கொள்வதற்கும், நினைக்கிறதற்கும் மிக அதிகமாக கிரியை செய்ய வல்லவராயிருந்து, உங்களுக்கும் பதில் தருவார். ஆசீர்வாதத்தை நிறைவாய் அருளிசெய்வார்! அவர் பட்சபாதமற்றவர்!



ஜெபம்: "அன்பு இரட்சகரே! என் வாழ்விலும் எத்தனை எத்தனையோ குறைவுகள்! இதினிமித்தமாக எத்தனை வேதனையான பேச்சுகள்! இன்று நீரே அவைகளை யெல்லாம் மாற்ற வல்லவர் என்று விசுவாசிக்கிற எனக்கு, அப்படியே ஆகும்படியான ஆசீர்வாதத்தைத் தாரும். நீர் ஜெபத்தை கேட்கிறவர் என்று நானும் உறுதியாய் உம்மை நம்பி ஸ்தோத்திரிக்கிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தர் தமது பரிசுத்தவான்களின் பாதங்களைக் காப்பார்!

(1 சாமுவேல் 2:9).

கர்த்தனை நம்புகிறவர்களை அவர் பாக்கியவான்களாக மாற்றுவார் (எரே. 17:7). ஆனால், இன்றைக்கு நம்மில் எத்தனைபேர் நூற்றுக்கு நூறு சதவீதம் அவர்மேல் நம்பிக்கை வைக்கிறோம்? மனுஷர்களைத்தான் நம்முடைய கண்கள் எப்பொழுதும் நோக்கிக் கொண்டிருக்கிறது. ஆனால், ஆண்டவரை உறுதியாய் பற்றிக் கொள்ளுகிறவர்களுடைய வாழ்வில் ஒருநாளும் அவருடைய அனுமதியின்றி ஒரு பிரச்சினையும் வருவதில்லை. அப்படியே வந்தாலும் அவர் பொறுப்பெடுத்து, அவைகளினின்று விடுவித்து தம்முடைய அடியார்களை அற்புதமாகக் காப்பாற்றி, வழிநடத்துவார் (எபி. 12:12,13).

டேவிட் பிரெய்னார்டு (David Brainard) என்ற ஒரு தேவ ஊழியர் உள்ளத்திலே செவ்விந்தியர்கள் மத்தியில் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து அறிவிக்க வேண்டும் என்ற ஒரு பாரம் எழும்பியது. அவர்கள் மிகவும் கொடூரமானவர்கள்! அவர்கள் இருக்கும் இடங்களில் யாராவது உள்ளே போனால், கொஞ்சமும் இரக்கமின்றி அம்பு எய்து அவர்களை கொன்று விடுவார்கள். எனவே, அவர்கள் இருந்த இடத்திற்கு வெளியில் ஒரு கூடாரத்தை போட்டுக்கொண்டார். அதற்குள் முழங்காற்படியிட்டு கர்த்தரை நோக்கி வழி திறக்கும்படி மன்றாடினார். இதை அந்த செவ்விந்தியர்கள் வேடிக்கையாக பார்த்துக்கொண்டிருந்தனர். அந்த சமயத்தில் ஒரு பயங்கரமான விஷப்பாம்பு அவர் இருந்த கூடாரத்திற்குள் சென்றது. நாம் இவரைக் கொல்லவே வேண்டாம்; இந்த பாம்பே இவரை தீர்த்துக் கட்டிவிடும் என்று எண்ணினார்கள். அவரோ ஒன்றும் அறியாதவராய் கண்களை மூடி கருத்தாய் தேவனோடு உறவாடினவராய் ஜெபித்துக் கொண்டிருந்தார். அந்த பாம்பு அவரண்டை மிகவும் நெருக்கமாய் போனது. ஆனால், அவருக்கு ஒரு சேதமும் செய்யாமல் திடீரென்று அது வேறு திசைக்கு திரும்பி, பின்பு காணப்படாமல் போயிற்று. இது அவர்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தை விளைவித்தது. இந்த விஷப்பாம்பு இந்த மனிதனை கடிக்காமல் போனது எப்படி? ஆச்சரியமாய் இருக்கிறதே! என்று மெதுவாக அவரிடம் சென்று கேட்டனர். அவர் இதுதான் தக்க சமயம் என்று அந்த மக்கள் அத்தனைபேரையும் ஒன்றாய் கூடிவரச்செய்து, ஆண்டவருடைய அன்பையும், அவருடைய மகத்துவங்களையும் அவர்களுக்கு ஏற்றபடி மிகுந்த அன்போடு விவரித்துக் காண்பித்தார். தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி தைரியமாக அவர்கள் மத்தியில் பேச, கர்த்தர் அழகாக வாசலை திறந்தருளினார். இரட்சிப்பின் சுவிசேஷம் அவர்களுக்குள்ளே பிரவேசித்ததால், இருள் நீங்கி ஒளி வீச தேவன் வழி திறந்தார்.

என் அன்பு ஜனங்களே! இதே ஆண்டவர் இன்றும் உயிரோடிருக்கிறார். பரிசுத்தவான்களாக, தெய்வபயத்தோடு அவருக்கென்று வாழும்போது, உங்கள் பாதங்களையும் அவர் கண்மணிபோல காப்பது நிச்சயமான ஒரு காரியம் (சங். 17:8; உபா. 32:10).

ஜெபம்: "என் அன்பு இரட்சகரே! நீர் உம்மை நம்பி, உமக்கென்றே வாழ்கிற உம்முடைய பரிசுத்தவான்களின் பாதங்களை எவ்வளவு அருமையாய் காப்பாற்றுகிறீர். என் வாழ்விலும் இன்றுமுதல் இந்த தெய்வீக அனுபவங்களை அனுபவிக்க அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

செம்மையானவர்களின் கூடாரம் செழிக்கும்!

"துன்மார்க்கனுடைய வீடு அழியும்; செம்மையானவனுடைய கூடாரமோ செழிக்கும்"
(நீதிமொழிகள் 14:11).

வறண்டதும், வனாந்தரம் போன்றதுமான நம்முடைய உலக வாழ்வை செழிக்க செய்ய கர்த்தரால் மட்டுமே ஆகும். இந்த ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள நாம் ஆண்டவருக்கு பயந்து, அவர் வழிகளில் தவறாமல் நடக்கும்பொழுது, அவர் கண்களில் தயவை பெற்றுக்கொள்ளலாம். அவர் நம்மோடுகூட வந்து தங்கியிருப்பார். நமக்காக யாவற்றையும் அழகாய் செய்து முடிப்பார் (சங். 138:8). அதே நேரம் துன்மார்க்கர் அழகான வீடுகளையும், அலங்காரமான, செழிப்புள்ள வாழ்க்கையையும் அனுபவிப்பதுபோல, வெளியில் காட்சியளிப்பர். ஆனால், உள்ளேயோ சமாதானமின்மை, குழப்பங்கள், ஒருமனமின்மை, ஏன் தேவ பிரசன்னமே இல்லாத நிலைமையில், அவர்களுடைய வீடுகள் இருப்பதை நாம் காணலாம். நீங்கள் எத்தகைய வாழ்வை தெரிந்துகொள்ளப் போகிறீர்கள்? ஒரு சிறிய குடிசையானாலும், செம்மையான வழியில் நடந்து, தேவனை பிரியப்படுத்தி, ஜெபத்திலும், வேத வாசிப்பிலும் குடும்பமாக ஆண்டவரை தேடி வழிபடும் போது அவர் பிரசன்னமாயிருப்பார். செழிப்பைக் கட்டளையிடுவார் (நீதி.21:29; சங்.125:4).

ஒரு சமயம் கர்த்தருடைய ஊழியர் ஒருவரை பெரிய செல்வந்தர் ஒருவர் தன் வீட்டிற்கு அழைத்து சென்றார். ஒவ்வொரு அறையாக அவருக்கு காண்பித்தார். "இந்த அறையில் என்னவெல்லாம் வசதிகள் பாருங்கள்! நானும் என் பிள்ளைகளும் மகிழ்ச்சியாய் வாழ வேண்டுமென்றுதான் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தையெல்லாம் தண்ணீர்போல செலவழித்து இப்படி அலங்காரம் பண்ணியிருக்கிறேன்" என்று கூறினார். "சரி! நல்லதுதானே ஐயா" என்று ஊழியர் சொன்னபோது, "வெளியில் பார்ப்பதற்கெல்லாம் நன்றாய் தான் இருக்கிறது. ஆனால், எங்கள் குடும்பத்திலே கொஞ்சமும் சமாதானம் கிடையாது. என் பிள்ளைகள் என்னையோ, என் மனைவியையோ கூட இருந்து அன்பு காண்பித்து கவனிக்க மனமின்றி, ஆளுக்கொரு திசையில் அயல் நாட்டினரை திருமணம் செய்துகொண்டு சென்று விட்டனர். என் மனைவி இந்த கவலையிலேயே படுத்த படுக்கையாகிவிட்டார்கள். இத்தனை செழிப்பு இருந்தும், சமாதானம், சந்தோஷமில்லையே! எங்களுக்காக ஜெபிக்கமாட்டீர்களா?" என்று கண்ணீரோடு கேட்டார். இது எத்தனை பரிதாபமாய் இருக்கிறது பாருங்கள். அதே சமயம் வேறொரு குடும்பத்தினர் ஒரு சிறு குடிலில் தங்கியிருந்தாலும், அவர்கள் ஒருவர் மீது ஒருவர் பாரம் கொண்டவர்களாக, அன்பு செலுத்தி கர்த்தரோடு இணைந்து ஒருமனதோடு வாழ்ந்து வந்தனர். இது எத்தனை இன்பமானது!

அன்பானவர்களே! நம்முடைய குடும்ப வாழ்வு எப்படி இருக்கிறது? மேற்குறிப்பிட்ட இரண்டாம் பகுதியினரைப்போல இனிமையான வாழ்வா? அல்லது பணக்கார வீட்டில் அந்த மனிதன் கண்ணீர்விட்டதுபோல கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறோமா? கர்த்தர் செம்மை யானவர்களின் வீட்டை மட்டுமே செழிக்க செய்வார். இன்று உங்களை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுப்பீர்களா? செம்மையான வழியை தெரிந்து கொள்வீர்களா? (நீதி. 11:5).

<u>ஜெபம்</u>: "அன்பு தெய்வமே! உமக்கு பிரியமானதும், செம்மையானதுமான வழிகளைத் தெரிந்துகொண்டு, நானும் என் வீட்டாரும் <u>இன்றுமுதல்</u> உம்முடைய செழிப்பை சகல காரியங்களிலும் பெற்று அனுபவிக்க அருள்தாரும். நீர் கூடவே இருந்து நீர் விரும்பும் தெய்வீக வழியில் வழிநடத்தி ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

நீ போகும் இடமெல்லாம் கர்த்தர் உன்னோடே இருக்கிறார்!

"...நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்"
(யோசுவா 1:9).

மோசே ஒரு தேவனுடைய மனிதன்! தேவனுடைய வார்த்தையை, அவர் சித்தத்தை ஜெபத்தின்மூலம் கேட்டு கேட்டு இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்தி வந்தார். யோசுவா அவருக்கு உதவியாக இருந்தார். இந்த நிலைமையில் மோசே மரித்த பின்பு, யோசுவா தேவனால் அந்த ஊழியத்தை நிறைவேற்ற அழைக்கப்பட்டபொழுது, பயந்து கலங்கினான். அப்பொழுதுதான் கர்த்தர் இந்த வார்த்தைகளினால் அவனைத் தேற்றினார். "திகையாதே, கலங்காதே, நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை. பலங்கொண்டு திடமனதாயிரு" என்று தைரியம் ஊட்டும் வார்த்தைகளை சொல்லி, அவனோடிருந்து அந்த ஊழியத்தை நிறைவேற்ற பலப்படுத்தினார், வழிநடத்தினார் (ஏசாயா 41:10).

ஒரு வாலிபன் இயேசுவை அறியாதவனாக பெற்றோரோடு சேர்ந்து, அவர்கள் வழியிலே நடந்து வந்தான். ஒருநாள் ஆண்டவர் அவனுக்கு தரிசனமானார். அவனுக்காக தன் ஜீவனையே சிலுவையில் ஒப்புக்கொடுத்ததைக் காண்பித்தார். அப்பொழுது அவன் தன் முழு வாழ்க்கையையும் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தான். பெற்றோர் அவனுடைய வாழ்க்கையில் காணப்பட்ட வித்தியாசத்தை கண்டு அவனை வெறுத்தனர். பயமுறுத்தவும் செய்தனர். அவனோ கர்த்தரை பின்பற்றுவதில் முன்வைத்த காலை பின் வைக்கமாட்டேன் என்று உறுதியாய் இருந்தான். வேறு வழியின்றி அவனை வீட்டைவிட்டே துரத்தினர். முதலில் மிகுந்த வேதனையாய் இருந்தபொழுதிலும், கர்த்தர் என்னோடுகூட வருவார், என்னை கைவிடமாட்டார் என்று இந்த வாக்குத்தத்த வசனத்தின் மூலம் அறிந்து, தன்னை தைரியப்படுத்திக் கொண்டான். ஆரம்பத்தில் அதிகமான கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியதாயிருந்தாலும், கர்த்தர் அவனை ஆச்சரியமாய் வழிநடத்தினார். அவனுடைய ஊழியத்தின் மூலம் ஏராளமான ஆத்துமாக்கள் ஆண்டவரை அறியும்படி செய்தார். அவனை போஷித்து காப்பாற்றும் பொறுப்பை ஒரு ஊழியர் ஏற்று, அவனை மகனைப்போல சந்தோஷமாக நடத்தி வந்தார். இந்த நிலைமையில் பெற்றோர் வயது சென்றவர்களாக, உதவி செய்வார் யாருமற்றவர்களாக, தனிமையில் வாடினபோது, அவர்களை அழைத்து வந்து தன்னோடு வைத்துக்கொண்டான். அவர்களும் இயேசுவை தெய்வமாக ஏற்றுக்கொண்டு, மகிழ்ச்சியாய் தங்கள் முடிவு காலத்தை கர்த்தரோடுகூட வாழ்ந்து முடித்தனர்.

ஆம்! பிரியமானவர்களே, கர்த்தரை தேடும்பொழுது பல இன்னல்கள் வரலாம் ஆனால், அவைகள் மத்தியிலும் அவரை உறுதியாய் பற்றிக்கொள்கையில், அவர் உங்களோடு ஒவ்வொருநாளும் கூடவே இருந்து, அழகாய் வழிநடத்தி, ஆசீர்வாதமான வாழ்வை கட்டளையிடுவார் (யாத். 33:14).

ஜெபம்: "என் அன்பு இரட்சகரே! இன்றுமுதல் என்னோடு கூடவே இருந்து என் வாழ்வை உமக்கு பிரியமாய் மாற்றித் தாரும். யோசுவாவை வழிநடத்தினதுபோல என் வாழ்வையும் நீரே கரம்பிடித்து நடத்தி ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

உத்தம குணத்தில் பிரியப்படுகிற தேவன்!

"என் தேவனே, நீர் இருதயத்தை சோதித்து, உத்தம குணத்தில் பிரியமாயிருக்கிறீர் என்பதை அறிவேன்..."
(1 நாளாகமம் 29:17).

காலேப் என்ற மனிதன் கர்த்தரை உத்தமமாய் பின்பற்றினபடியினால் அவன் கால் மிதித்த தேசத்தையெல்லாம் அவனுக்கும் அவன் பிள்ளைகளுக்கும் ஆண்டவர் கொடுத்தார் (உபா. 1:36). எசேக்கியா என்ற ராஜா ஆண்டவரை உத்தமமாய் பின்பற்றின படியினால், அவன் மரணத்திற்கு ஏதுவாய் சுகவீனப்பட்டபொழுது, கிருபையாய் அவனை குணப்படுத்தி பதினைந்து வருட வாழ்வை கூட்டிக் கொடுத்தார் (ஏசாயா 38:5). அதேபோன்று யோசபாத் என்ற அரசன் கர்த்தரை உத்தமமாய் தேடினான். "உத்தமனுக்கு கர்த்தர் துணை" என்று அவனே சொல்லியிருக்கிறான் (2 நாளா. 19:11). யோபு என்ற பக்தன் உத்தமத்திலே நடந்தார் (யோபு 1:1,8). அவர் எத்தனையோ பிரச்சினைகளின் வழியாய் கடந்துசென்றபொழுதிலும் முடிவில் இணையற்ற விதமாய் ஆசீர்வதிக்கப்பட்டார் (யோபு 42:10,12). ஆம்! ஆண்டவர் உத்தம குணத்தில் பிரியப்படுகிற தேவன்! உங்கள் வாழ்வையும் சற்று சீர்தூக்கிப்பாருங்கள்!

ஒரு கிராமத்தில் ஒருவர் ஊழியம் செய்து கொண்டிருந்தார். அவர் அயல்நாட்டை சேர்ந்தவராய் இருந்தாலும், அந்த கிராம மக்கள் மீது இணையற்ற பாசம் வைத்திருந்தார். அவர்கள் பாஷையையும் கற்றுக்கொண்டு அவர்களோடு மிகவும் அன்பாய் பழகி வந்தார். வியாதி வந்துவிட்டால் அந்த வீடுகளுக்கு சென்று, முழங்காற்படியிட்டு ஆண்டவரிடம் மன்றாடுவார். எப்படிப்பட்ட வியாதியாக இருந்தாலும், ஆண்டவர் அவர் ஜெபத்தைக் கேட்டு மக்களை சுகமாக்குவார். மட்டுமல்லாமல், பிரசவ நிலைமையில் இருக்கிற சகோதரிகள் வலி தாங்காமல் கூச்சலிடும்பொழுது, மக்கள் அவரை அழைத்து செல்வார்கள். தலைமாட்டில் போய் முழங்காற்படியிடுவார். அந்த ஸ்திரீயின் தலை மீது தன் கரங்களை வைத்து, கர்த்தரை நோக்கி விண்ணப்பம் செய்வார். கர்த்தர் கிருபையாய் அவருடைய ஜெபத்திற்கு செவிகொடுக்கும் வண்ணம், எப்படிப்பட்ட பிரச்சினையாக இருந்தாலும் அவர்களுக்கு சுகமான பிரசவத்தை வெகு சீக்கிரத்தில் கட்டளையிடுவார். இதனால் அந்த கிராம மக்கள் அவர் மீது உயிரையே வைத்திருந்தார்கள். உத்தமமாய் வாழ்ந்த அவர் மூலம் அந்த கிராமமே ஆண்டவருடைய அன்பை உணர்ந்து, அவருக்கு பயந்து நடுங்கி வாழ்ந்தது. "நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது" (யாக். 5:16) என்பது எவ்வளவு உண்மை பாருங்கள்!

எனக்கு அன்பானவர்களே, ஒரு மனிதன், அதுவும் அயல்நாட்டை சேர்ந்தவர், கர்த்தருக்கென்று உத்தமமாய் வாழ்ந்தபோது, ஆண்டவர் அவரை எப்படி அநேகருக்கு ஆசீர்வாதமாக உபயோகப்படுத்தி மகிழ செய்திருக்கிறார் பாருங்கள்! நாமும்கூட அவருடைய வழியையே பின்பற்றி, கர்த்தருக்கென்று உத்தமமாய் வாழ, ஊழியம் செய்ய நம்மை ஒப்புக்கொடுப்போமா? (உபா. 18:13).



ஜெபம்: "அன்பு தெய்வமே! எத்தனை மேன்மையானவைகளை இந்த ஊழியருக்கு செய்து, உம்மை மகிமைப்படுத்தியிருக்கிறீர். ஒன்றுமில்லாத குப்பையாகிய என்னையும் கூட இன்று இதே உத்தம குணத்தினால், உம்முடைய தெய்வீக வல்லமையினால், பரிசுத்த ஆவியின் நிறைவினால் நிரப்பி, மக்களுக்கு ஆசீர்வாதமாக, உமக்கு மகிமையாக விளங்க, உம் தெய்வீக ஆசீர்வாதத்தை நிறைவாய் எனக்கும் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

நம்மை நம்புகிறவர்களை துன்மார்க்கரின் கைக்கு தப்புவித்து இரட்சிப்பார்!

"...அவர்கள் அவரை நம்பியிருக்கிறபடியால், அவர்களை துன்மார்க்கருடைய கைக்கு தப்புவித்து இரட்சிப்பார்" (சங்கீதம் 37:40).

உலக வாழ்வில் நல்ல மனிதர் துன்மார்க்கர் கையில் சிக்கி வேதனைப்படுவதை நாம் பார்க்கிறோம். அலுவலகங்களில் உயர் அதிகாரிகள் துன்மார்க்கராய் இருக்கும்பொழுது, கீழே பணிபுரிகிறவர்கள் அநியாயமாய் பல சமயங்களிலும் வேதனைப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. குடும்பத்திலும் அப்படியே துன்மார்க்கரான மக்கள் மூலம் அலட்சியப்படுத்தப்படுதல், அநியாயமாய் பேசப்படுதல், அன்பில்லாமல் நடத்தப்படுதல் நிலைகளெல்லாம் நடக்கிறதை நாம் கண்கூடாகக் காண்கிறோம் (2 தீமோ. 3:1-5). ஆனால், அந்த நிலைமையிலும், கர்த்தரை உறுதியாய் நம்புகிறவர்களுக்கு இந்த வசனத்தின்படி, கர்த்தர் நிச்சயமாக அவர்கள் கைக்கு விடுதலையாக்கி இரட்சிப்பார். கர்த்தர் உங்களை எல்லாப் பொல்லாங்கினின்றும் காப்பார்; மகிழ்ச்சியான வாழ்வை கட்டளையிடுவார் (சங். 91:10).

ஒரு குடும்பத்திலே அனைவரும் ஒன்று சேர்ந்து, பக்தியாய் ஆண்டவரைத் தேடினர். அதினிமித்தம், இவர்கள் குடும்பத்திலே சமாதானம், சந்தோஷம், ஒருமனம், ஒற்றுமை இருப்பதை ஒரு மனிதன் கண்டு பொறாமை கொண்டான். இந்த மக்களுக்கு எப்படியாவது பிரச்சினை உண்டாக்கி வேதனைப்படுத்த வேண்டுமென்ற ஒரே எண்ணத்தோடு பல காரியங்களை யோசிக்கவும், செயல்படுத்தவும் ஆரம்பித்தான். அவர்களைப் பற்றிய பொய்யான சில காரியங்களை வதந்தியாக பரவச் செய்தான். அது உண்மையா? என்று மற்ற மக்கள் வந்து கேட்கும்பொழுது, இவர்கள் உள்ளம் வேதனையால் நிரம்பியது. அடுத்தடுத்து பல தீமைகளை இப்படித்தான் அவர்களுக்கு எதிராக செய்தான். ஆனால், அவர்களோ எத்தனை அதிகமாய் அவன் அவ்வாறு செய்தானோ, அத்தனை அதிகமாய் ஆண்டவரை குடும்பமாக இரவும், பகலும் தேடி அவர்மேல் நம்பிக்கை வைத்தனர். எல்லாத் தீங்கையும் விளைவித்த பின்பும், இன்னும் இவர்கள் வாழ்விலே மாற்றமில்லையே என்று எண்ணினவனாய் ஒருநாள் அந்த குடும்பத் தலைவனை நோக்கி, இதற்குக் காரணம் என்ன என்று வினவினபோது, இயேசு ஒருவரே இதற்கு காரணம் என்று அவருடைய அன்பின் மகத்துவத்தை பொறுமையோடு அவனுக்கு அவர் வெளிப்படுத்தினார். துன்மார்க்கனாகிய அவன் கைக்கு அவர்களை தப்புவித்ததோடுகூட அவனையும் நல்ல குணமுள்ளவனாக, ஆண்டவருக்கு பிரியமான மகனாக கர்த்தர் மாற்றும்படி அவனுக்காக பிரார்த்தனை செய்து, ஆலோசனை கூறி வழிநடத்தவும் அருள்புரிந்தார்.

எனக்கு அன்பானவர்களே, உங்களுக்கு எதிராக உலக வாழ்வில் எத்தனையோ துன் மார்க்கர் எழும்பக்கூடும். நீங்களும் நம்பிக்கையோடு மன்றாடுங்கள். கர்த்தரை நம்புகிற உங்களை மேற்கண்ட வாக்குத்தத்தத்தின்படியே விடுவித்து பாதுகாப்பார் (சங். 17:9).

ஜெபம்: "அன்பு இரட்சகரே! பொல்லாங்கு நிறைந்த உலகத்திலே துன்மார்க்கமான மக்கள் தீங்கு செய்யாதபடி, இன்றுமுதல் நீரே என்னோடிருந்து, துன்மார்க்கரின் வழிக்கு என்னை விலக்கி மீட்கப் போகிறதற்காக உமக்கு ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

நன்மை செய், என்றென்றும் நிலைத்திருப்பாய்!

''தீமையை விட்டு விலகி, நன்மை செய்; என்றென்றைக்கும் நிலைத்திருப்பாய்''
(சங்கீதம் 37:27).

கர்த்தர் நமக்கு நன்மையானதைத் தருகிறார் (சங். 85:12). அதேபோல நம்மையும் பார்த்து, ''நன்மை செய்ய படியுங்கள்'' என்று கூறுகிறார் (ஏசாயா 1:17). வேத புத்தகத்திலே தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் என்ற பெயருடைய ஒரு சீஷி இருந்தாள். அவள் ஆண்டவரை அதிகம் நேசித்தபடியால் ஏழை மக்களுக்கும், விதவைகளுக்கும் பல நற்காரியங்களை செய்து அவர்களை சந்தோஷப்படுத்தி வந்தாள் (அப். 9:36). திடீரென்று அவள் மரித்துப்போனபோது, அருகாமையில் தேவஊழியம் செய்து கொண்டிருந்த பேதுருவை அழைத்து, அவளுக்காக பிரார்த்தனை செய்யும்படி அந்த மக்கள் கூறினர். அவர் முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி அவளை தேவ வல்லமையினால் உயிரோடு எழுப்பினார். பரிசுத்தவான்களும், விதவைகளும் அவள் உயிரோடு எழுந்த காட்சியைக் கண்டு மிகுந்த சந்தோஷமடைந்தார்கள். இந்தவிதமாக நன்மை செய்கிறவர்களாய் நாம் இந்த உலகில் வாழ ஆண்டவர் நமக்கும் கிருபை தரும்படி ஆண்டவரை நோக்கி மன்றாடுவோம். கர்த்தருக்கு பயப்படும் பயத்தோடு, தீமையான காரியங்களையெல்லாம் நம் வாழ்வை விட்டு அகற்றுவோம். ஆண்டவர் வாழ்வைப்போல் நாமும் நன்மையே செய்கிறவர்களாய் வாழ்வோம் (அப். 10:38).

சமீபத்தில் 103 வயதுடைய ஒரு தாயார் ஆந்திரப் பிரதேசத்திலிருந்து மிகுந்த ஆசையோடு எங்கள் குடும்பத்தினரை பார்க்க வந்தார்கள். அவர்களுக்கென்று உதவி செய்யவோ, அன்பு பாராட்டவோ ஒருவருமில்லை. ஆனால், தேவன் அவர்களோடு இருந்தார். கடைக்கு போனால் அவர்களுடைய நிலமையைக் கண்டு, காய்கறி வாங்கும்போது, யாரும் காசு கேட்கமாட்டார்கள். அவர்கள் எப்பொழுதும் வேதம் வாசித்து, ஜெபம் பண்ணுகிற ஸ்திரீயாக இருந்தபடியினால், யாராவது தங்களால் இயன்ற பணத்தை அவர்களுக்கு கொண்டு வந்து கொடுப்பார்கள். இவ்விதமாக சேரும் பணத்தையெல்லாம், தனக்கென்று உபயோகிக்காமல், தேவனுடைய ஊழியத்திற்கென்று, உண்மையாய் யார் ஊழியம் செய்கிறார்களோ, அவர்களுக்கு கொடுத்து விடுவார்கள். இது எத்தனை ஆச்சரியமாய் இருக்கிறது பாருங்கள்! அறுபது வயதை கடந்தவுடன் தான் எத்தனை சரீர பலவீனம்! ஆனால், அதையெல்லாம் கடந்து நூறு வயதையும் தாண்டியபின்பு இவ்விதமாய் நன்மை செய்கிற ஒரு பெண் இருப்பார்களானால், நீங்களும் நானும் ஏன் அவ்வாறு செய்யக்கூடாது? ''ஐயோ, எனக்கு பெலவீனம், என் பிள்ளைகள் எனக்கு உதவி செய்யவில்லையே'' என்றெல்லாம் முறுமுறுக்கிறோம். ஆனால், இந்த ஏழைத் தாயாருடைய காரியத்தை பாருங்கள். அவர்கள் கர்த்தருக்கு பிரியமாக, நன்மை செய்கிறவர்களாக இருந்தபடியினால், கர்த்தர் அவர்களுக்கு பெலவீனத்தில் நன்மை செய்தார். நாமும் இந்த வழியை பின்பற்றி நன்மை செய்வதில் ஜாக்கிரதையாய் இருப்போமா? (1 தீமோ. 6:18).

<u>ஜெபம்:</u> ''ஆண்டவரே, இதுவரை என் காரியம், என் குடும்பம் என்றெல்லாம் கவனமாய் இருந்தேனே தவிர, நன்மை செய்கிற குணம், மற்றவர்களை எண்ணிப் பார்க்கிற சிந்தை என்னிடம் இல்லவே இல்லை. <u>இன்றுமுதல்</u> இந்த தெய்வீக நற்குணத்தைத் தந்து, உம்மை சந்தோஷப்படுத்த, அநேகரை மகிழ்ச்சியாக்க எனக்கும் அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!''

உண்மையுள்ளவர்கள் கர்த்தருக்கு பிரியம்!

"அவர் முன்பாக நான் மனவுண்மையாயிருந்து, என் துர்க்குணத்துக்கு என்னை விலக்கிக்காத்துக் கொண்டேன்"

(சங்கீதம் 18:23).

மோசே தேவனால் ஒரு முக்கியமான ஊழியத்திற்கென்று தெரிந்து கொள்ளப்பட்டார். முதலில், "நான் திக்கு வாயன், என்னால் ஒன்றும் செய்ய முடியாது" என்று தன்னை தேவன் அழைத்த அழைப்பிற்கு ஒப்புக்கொடுக்க மறுத்தார். ஆனால், அதன்பிறகு ஆண்டவர் சித்தத்துக்கு உடன்பட்டு, ஒவ்வொன்றையும் நிறைவேற்றுவதில் உண்மையுள்ளவராயிருந்தார் (எபி. 3:5). கடைசிபரியந்தம் கர்த்தரோடு இணைந்து, காரியங்களை நிறைவேற்றி முடிக்க ஆண்டவர் அவருக்கு கிருபை தந்தார். மோசேயின் வாழ்வில் மிகவும் ஆச்சரியமான ஒரு காரியம், அவர் மரித்தபின் கர்த்தரே அவரை அடக்கம் செய்தார் (உபா. 34:6). யாருக்கு இந்த சிலாக்கியம் கிடைக்கும்? கர்த்தருக்கு முன்பாக உண்மையாக இருந்தபடியால் மோசே அந்த சிலாக்கியத்தை பெற்றுக்கொண்டார். ஆம் ஆண்டவருக்கு முன்பாக உண்மையாய் ஜீவிக்கிற மக்கள், தம்முடைய ஊழியத்தை அவர் விரும்புகிற வண்ணமாக உத்தமமாய் செய்கிற மக்கள் அவருக்கு மிகவும் பிரியமானவர்கள்.

ஒரு சமயம் கொடைக்கானல் என்ற ஊருக்கு, அதை சுற்றிப்பார்க்க, சந்தோஷமாயிருக்க நாங்கள் குடும்பமாக சென்றிருந்தோம். ஆனால், சகோதரர் தினகரனின் மனம் கர்த்தருடைய சமுகத்தில் தனிமையில் காத்திருக்க வேண்டும் என்பதில் உண்மையாயிருந்தது. "நீங்கள் எல்லோரும் போய் ஊரை சுற்றிப் பார்த்து வாருங்கள், நான் தனிமையில் இருந்து ஜெபிக்கட்டும்" என்று எங்கள் எல்லோரையும் அனுப்பிவிட்டார். அந்த சமயத்தில்தான் "காருண்யா" கல்வி ஸ்தாபனத்தைப் பற்றிய காரியங்களையெல்லாம் கர்த்தர் அவரோடு பேசி, "நீ இதில் உண்மையாக இருந்து நிறைவேற்றுவாய், ஆகவே தான், உனக்கு இந்த வேலையை கொடுக்கிறேன்" என்று ஆண்டவர் அவரோடு தெளிவாக பேசினார். முதலில் மோசேயைப் போல, "நான் ஒரு வங்கி ஊழியன், என்னால் இதை எப்படி செய்ய முடியும்?" என்று பலவேறாக அதைக்குறித்து ஆண்டவரிடம் பேசினார். ஆனால், அவரோ "நீயே அதை நிறைவேற்ற என்னால் தெரிந்துகொள்ளப்பட்டவன்" என்றபொழுது, "சரி ஆண்டவரே" என்று ஜெபம்பண்ணி ஜெபம்பண்ணி, மோசேயைப்போல கர்த்தர் சொல்ல சொல்ல செயல்பட்டு, இன்று "காருண்யா" கல்வி ஸ்தாபனம் எத்தனை அழகாய் தேவ ஒத்தாசையோடு நடைபெற்று வருகிறது. இதற்கு காரணம் ஆண்டவர் தெரிந்துகொண்ட ஊழியருடைய உண்மையும், உத்தமுமான கீழ்ப்படிதல் நிறைந்த செய்கையேயாகும்.

எனக்கு அன்பானவர்களே, நமக்கு ஆண்டவர் காட்டுகிற வழிகளிலே உண்மையும், உத்தமமுமாய் நாம் நடந்து, அவரை பின்பற்றும்பொழுது அவரும் உண்மையுள்ளவராய் நம்முடைய துர்க்குணங்களையெல்லாம் விலக்கி, அவருக்கு பிரியமானதும், கீழ்ப்படிதல் நிறைந்ததுமான வாழ்வை அருளிசெய்து, அரிய பெரிய காரியங்களை நம் மூலமாகவே நிகழ்த்துவார் (2 தீமோ. 2:13).

ஜெபம்: **"அன்பு தெய்வமே! உம் சித்தம் என் பாக்கியம்! உமக்கு பிரியமான வழியிலே, நீர் விரும்புகிறபடி உண்மையாய் நடக்க எனக்கும் அருள்தாரும். மோசேயைப்போல, நீர் என்னையும் வழிநடத்தும். எனக்கு ஏற்ற ஆலோசனையை அருளிச்செய்து உம் சித்தம் யாவற்றையும் உண்மையாய் நிறைவேற்றி முடிக்க இன்றுமுதல் அருள்தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"**

உன்மேல் அவர் நேசக்கொடி பறக்கும்!

"...என்மேல் பறந்த அவருடைய கொடி நேசமே" (உன்னதப்பாட்டு 2:4).

ஒவ்வொரு மனுஷனுடைய இருதயமும் அன்பை எதிர்பார்க்கிறது. யார் எனக்கு உண்மையாய் அன்பு காண்பிப்பார்கள் என்று நாடித் தேடுகிறோம். மனுஷருடைய அன்பு மாறிப்போகும்போது, ஏமாற்றமடைகிறோம். ஆனால், தெய்வத்தின் அன்போ ஒப்பு நிகரற்றது! (1 யோவான் 3:1, யோவான் 3:16, எபே. 5:2). இந்த வசனத்தின்படி, அவர் நம் ஒவ்வொருவரையும் ஏழை, பணக்காரர் என்றோ, அல்லது வேறு எந்தவித வித்தியாசமோ பாராமல், பட்சபாதமற்றவராய் (அப். 10:34, கலா. 2:6, ரோமர் 2:11) எல்லோரையும் ஒன்றுபோல் நேசிக்கிறார்

ஒரு சமயம் தகப்பனை இழந்த ஒரு பெண் மிகவும் அழுது கொண்டிருந்தாள். ஏனென்றால், அந்த தகப்பன் அந்த பெண்ணின் மீது மிகுந்த அன்பு வைத்திருந்தார். ஒருநாளும் அவளை கடிந்துகொள்ளவேமாட்டார். அந்த நிலைமையில் ஆண்டவருடைய அன்பை அவள் அறியும்படியான ஒரு சம்பவம் நடந்தது. அந்த சம்பவத்தின் வாயிலாக இயேசு தன்னை எவ்வளவாய் நேசிக்கிறார் என்பதை அவள் அறிந்துகொண்டபொழுது. மிகுந்த மகிழ்ச்சியடைந்தாள். இனி என்றென்றும் எனக்கு குறைவே கிடையாது. ஏனென்றால், என் தகப்பன் என்னை நேசித்து, என்னை விட்டு கடந்து சென்றுவிட்டார். ஆனால், பரம தகப்பனாகிய இயேசுவோ என்னைவிட்டு என்றென்றும் பிரியாமல் என்னோடேயிருப்பார். அவருடைய அன்பு நிலைவரமானது. ஆகவே, எப்பொழுதெல்லாம் நேரம் கிடைக்குமோ அப்பொழுதெல்லாம் தன் உள்ளத்தைத் திறந்து சத்தமாக ஆண்டவரோடு பேசிக்கொண்டேயிருப்பாள். ஒருநாள் அவ்வாறு அவள் ஜெபிக்கும் பொழுது பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டாள். நாளடைவில் பரிசுத்த ஆவியின் வரங்கள் வல்லமையாய் கிரியை செய்தன. அவளைப்போன்று, "ஐயோ, எனக்கு அன்பு செலுத்துவார் யாருமில்லையே" என்று கலங்கின மக்களுக்கு தேவ அன்பைப்பற்றி கூறும் ஒரு ஊழியக்காரியாக மாறினாள். அநேகர் அவளுடைய ஊழியத்தின் மூலமாய் தேவனுடைய அன்பை ருசிக்க, மகிழ்ச்சியடைய ஆண்டவர் அவளை உபயோகித்தார்.

எனக்கு அன்பானவர்களே! இந்த உலகத்தின் அன்புக்காக நீங்களும் ஏங்கித் தவிக்கிறீர்களோ? நிச்சயமாகவே ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் அதை இழந்து போக நேரிடும். ஆனால், தேவகுமாரன் உங்களுக்காக தம் ஜீவனையே சிலுவையில் அர்ப்பணித்து, உங்களை பரலோகத்திற்கு சொந்தமாக்கிக்கொள்ள தன்னையே ஒப்புவித்தாரே! இந்த தெய்வீக அன்பு உங்களுக்கு வேண்டாமா? யோசித்து பாருங்கள். இன்றே இந்த அன்பு உங்களை நிரப்பும்படி ஆண்டவரை நோக்கி பிரார்த்தனை செய்யுங்கள் (ரோமர் 5:5).



ஜெபம்: "பரலோக பிதாவே! அன்புக்காக ஏங்கி நிற்கிற என் உள்ளத்திலேயும், வாழ்விலேயும்கூட உம் அன்பின் நேசக்கொடி பறக்கட்டும். இன்றுமுதல் நானும் இந்த சகோதரியைப்போல, கண்ணீரோடு வாழ்கிற ஒவ்வொருவருக்கும் உம் தெய்வீக அன்பை காண்பிக்கிற வாழ்வை எனக்கும் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தர் சத்துருக்களை மேற்கொள்ளுவார்!

“கர்த்தர் பராக்கிரமசாலியைப்போல் புறப்பட்டு, யுத்தவீரனைப்போல் வைராக்கிய மூண்டு, முழங்கிக் கெர்ச்சித்து, தம்முடைய சத்துருக்களை மேற்கொள்ளுவார்”

(ஏசாயா 42:13).

இந்த உலகத்தில் எவ்வளவு போராட்டங்கள் வந்தாலும், எதிரிகள் வந்தாலும், துன்பப்படுத்துகிறவர்கள் எழும்பினாலும், நாம் கவலைப்படவேண்டிய அவசியமேயில்லை. ஒன்றே ஒன்றில் மட்டும் நாம் கவனமாக இருக்க வேண்டும். பராக்கிரமசாலியான கர்த்தர் நம்மோடுகூட இருக்கிறாரா? அவருக்கு பிரியமாய், செம்மையான பாதையில் நான் நடக்கிறேனா? இதில் மட்டும் நாம் கவனமாய் இருக்கும்போது, ஆண்டவர் நம் சத்துருக்களை மேற்கொள்ள அருள்புரிவார். தாவீது கர்த்தரை நேசித்தான். அவரோடு நெருங்கி வாழ்ந்தான். ஆகவே, இளம் வாலிபனாய் இருந்தபொழுதிலும், பராக்கிரமசாலியும், இராட்சதனுமான எதிரி கோலியாத்தை, தேவ ஒத்தாசையோடு எளிதில் வென்றான். அவனை மேற்கொள்ளும் கிருபையை ஆண்டவரே அவனுக்கு கொடுத்தார். உங்களுக்கும் ஒன்றும் சேதம்வராதபடி அவர் உங்களையும் அதுபோன்றே காக்க வல்லவராயிருப்பார் (ஏசாயா 40:10; 42:12,13).

ஒரு ஊழியர் அநேக மக்களுக்கு துன்பம், துயரம் வரும்போது, அவர்களுக்காக பிரார்த்தனை செய்து பொல்லாங்கன் கைகளில் இருந்து அவர்களை விடுவித்து காப்பாற்றுகிற ஒரு தெய்வீக ஊழியத்தை மிகுந்த பாரத்துடன் செய்து வந்தார். ஒரு சமயம் அவருடைய சரீரத்தில் மரணத்திற்கேதுவான ஒரு நோய் வந்தது. அப்பொழுது அவருக்கு முன்பாக பிசாசு தோற்றமளித்து, “எல்லோருக்கும் நீ பிரார்த்தனை செய்து விடுதலை வாங்கி கொடுத்தாய், இன்று நீ மரிக்கப்போகிறாயே!” என்று பரிகாசமாகக் கேட்டான். ஆனால், அவரோ, “நான் மரித்தாலும், உயிரோடிருந்தாலும் என் ஆண்டவர் எனக்கு போதுமானவர்! சத்துருவாகிய உன் கரங்களையும் ஆண்டவர் ஒடித்துப் போடுவார். என் மீது நீ போட்டிருக்கும் இந்த நோயை கர்த்தர் அதமாக்கிப்போடுவார். அவருடைய வல்லமை இப்பொழுது என் மீது இறங்கும் என்று நான் விசுவாசிக்கிறேன். நீ சொன்ன இந்த வார்த்தையினிமித்தம் கர்த்தர் என்னை இப்பொழுதே விடுதலையாக்குவார். என் கட்டிலிருந்து என்னை மீட்டெடுப்பார்” என்று விசுவாசத்தோடு பேசப் பேச அவருடைய கட்டுகள் யாவும் அகன்றன. அவரை கீழ்ப்படுத்த வேண்டுமென்ற பிசாசின் எண்ணம் தவிடுபொடியானது. அந்த சத்துருவை மேற்கொள்ள பரிசுத்த ஆவியானவர் மூலம் தேவன் அந்த ஊழியருக்கு கிருபை கொடுத்தார்.

அன்புக்குரியவர்களே, இந்த உலகத்தில் என்னென்ன விதங்களில் பயங்கரம் வந்தாலும் கவலைப்படாதிருங்கள். கர்த்தர் பராக்கிரமசாலியாக உங்களோடு இருக்கிறாரா (எரே. 20:11), அதற்கு ஏற்றபடி உங்கள் வாழ்வு இருக்கிறதா, என்பதை மட்டும் கவனமாய் பார்த்துக்கொள்ளுங்கள். சத்துருக்கள் உங்களுக்கு விரோதமாக என்னென்ன விதத்தில் சதி செய்கிறார்களோ, அத்தனையையும் ஜெயிக்க பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு பெலன் கொடுப்பார் (2 கொரி. 3:17).

ஜெபம்: **“அன்பின் இரட்சகரே! ஜெயம் கொடுக்கிற தேவனே! பிசாசின் கட்டுகள், அவனுடைய விரோதமான செயல்கள் யாவற்றினின்றும் உம்முடைய வல்லமையால் என்னைக் காப்பாற்ற நீர் வல்லவராயிருக்கிறீர் என்று விசுவாசிக்கிறேன். இன்றுமுதல் அந்த ஊழியரைப்போல ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள, ஜெய ஜீவியம் செய்ய எனக்கும் அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!”**

துதி செய்ய ஏற்படுத்துவேன்!

"இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்; இவர்கள் என் துதியை சொல்லிவருவார்கள்" (ஏசாயா 43:21).

அநேக பக்தர்களுடைய வாழ்க்கை சரிதையில் அவர்கள் ஒவ்வொருவரும் ஸ்தோத்திரபலி செலுத்தினதைக் குறித்து வாசிக்கிறோம். நோவா மகா பெரிய வெள்ளத்தின் ஆபத்திலிருந்து தேவனால் மீட்கப்பட்டபின்பு, நன்றியுடன் ஸ்தோத்திர பலியை தேவனுக்கு செலுத்தினான் (ஆதி. 8:20,21). கர்த்தர் சுகந்த வாசனையாக அதை முகர்ந்தார். நம்முடைய வாழ்க்கையிலே நாம் பெறும் நன்மை ஒவ்வொன்றுக்கும் அவ்வாறே ஆண்டவரை நோக்கி வாய் திறந்து நன்றியோடு ஸ்தோத்திரம் செலுத்தும் பழக்கம் கொண்டிருக்கிறோமா? "உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்கு செலுத்தக்கடவோம்" (எபி. 13:15). அதோடுகூட "என் மகிமையை வேறொருவருக்கும் கொடேன்" என்றும் அவர் சொல்வதை வேதம் விளக்குகிறது (ஏசாயா 42:8; 48:11). ஆண்டவர் செய்கிற நன்மைகளுக்கு நான் எவ்வளவு தூரம் நன்றி செலுத்தியிருக்கிறேன் என்று யோசித்துப்பார்த்து, நலமான வழியிலே நடக்க கற்றுக்கொள்வோம்.

1962 ஆம் வருடம் அக்டோபர் 10–ம் நாள் என் கணவர் பரிசுத்த ஆவியினால் அளவில்லாமல் நிரப்பப்பட்டார். அதை கேள்விப்பட்டவுடன்தானே எனக்கும் அந்த தெய்வீக அனுபவத்தை தரவேண்டுமென்று அதுவரை இல்லாத அளவிலே இரவும் பகலும் கர்த்தரை நோக்கி நானும் ஜெபிக்க ஆரம்பித்தேன். ஒரு நாள் பகல் முழுவதும் அவ்வாறு ஜெபிக்க, ஆண்டவருக்கு நன்றி செலுத்த நேரமே இல்லாமல் இருந்தது. ஆனால், எப்படியோ ஒரு நேரத்தை கஷ்டப்பட்டு கண்டுபிடித்து, கர்த்தருடைய சமுகத்தில் முழங்காற்படியிட்டேன். ஆண்டவர் செய்த நன்மைகளை ஒவ்வொன்றாக எண்ணிப் பார்த்து, உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி செலுத்தினேன். அவ்வாறு செலுத்த செலுத்த என் உள்ளத்தை, ஆத்துமாவை ஒரு தெய்வீக சந்தோஷம் ஆட்கொண்டதை உணர்ந்தேன். அதுவரை வாயைத் திறந்து ஜெபிக்க மாட்டேன், பக்கத்தில் இருப்பவர்களுக்கும் நான் ஜெபிப்பது கேட்காது. அப்படியிருந்த என் வாழ்வு அன்று பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தால் அளவில்லாமல் நிறைந்தது. கர்த்தர் நான் விரும்பின பரிசுத்த ஆவியை அளவில்லாமல் எனக்கு அருளிசெய்தார் என்பதை உணர்ந்து பேரானந்தம் கொண்டேன்.

எனக்கு அருமையானவர்களே, இந்த தெய்வீக அனுபவம் எனக்கு எப்படி வந்தது? கர்த்தரை மனமார, உள்ளத்தைத் திறந்து ஸ்தோத்திரித்ததின் மூலம் தான் நான் பெற்றேன். நீங்களும் இதேபோல, வாயைத் திறந்து, ஆண்டவரை ஸ்தோத்திரித்து மகிமைப்படுத்துங்கள் (சங். 50:23). இதைக்காட்டிலும் மேலான ஆவிக்குரிய நன்மைகளை தெய்வீகப் பிரசன்னத்தை கர்த்தர் நிச்சயம் உங்களுக்கும் அருளிசெய்வார். இந்த உலகில் இதைவிட பெரிய பாக்கியம் வேறொன்றும் இல்லையே!

ஜெபம்: "அன்பின் நேச தகப்பனே! மேலானவைகளை நாடுங்கள் என்று நீர் சொன்னபடி, உம்மை ஸ்தோத்திரிப்பதினால், உமக்கு நன்றி செலுத்துவதினால் எத்தனை மேலான பாக்கியம் நீர் அருளுவீர் என்பதை நன்றாக அறிந்து கொண்டேன். இன்றுமுதல் உமக்கு முன்பாக நன்றியோடு நடக்க இந்த தெய்வீக ஆசீர்வாதங்களை அளவில்லாமல் பெற்றுக்கொள்ள எனக்கும் கிருபை தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

சிறுமைப்பட்ட ஆத்துமாவை திருப்தியாக்கினால் உன் வெளிச்சம் உதிக்கும்!

"பசியுள்ளவனிடத்தில் உன் ஆத்துமாவை சாய்த்து, சிறுமைப்பட்ட ஆத்துமாவை திருப்தியாக்கினால், அப்பொழுது இருளில் உன் வெளிச்சம் உதித்து, உன் அந்தகாரம் மத்தியானத்தைப் போலாகும்"

(ஏசாயா 58:10).

கர்த்தர் சிறுமையும், எளிமையுமானவர்களின் மேல் நினைவாயிருக்கிற ஆண்டவர்! அவர்கள் மேல் மனதுருகுகிற கர்த்தர்! ஆகவே, நாமும் அதே சிந்தையுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார். அவரைப் போல் சிறுமைப்பட்டவர்கள்மேல் நாமும் சிந்தை வைக்கும்போது, நம்மை பாக்கியவான்களாக, பாக்கியவதிகளாக மாற்றுகிறார் (சங். 41:1). ஆகவே, 'நான், எனது' என்று அத்தகைய வாழ்விலே திருப்தியடையாமல், நாம் ஒவ்வொருநாளும் சந்திக்கிற சிறுமைப்பட்ட உறவினர்கள், நண்பர்கள், மற்ற மக்கள் இவர்களை ஏனோதானோ என்று அலட்சியம் செய்துவிடாதபடி, அவர்களுக்கு நம்மால் இயன்ற உதவியை அன்பாய் செய்யும்பொழுது, கர்த்தர் நம் வாழ்வில் உள்ள இருளையெல்லாம் மாற்றி வெளிச்சம் வீசும்படி கிருபை செய்வார் (மீகா 7:7,8).

ஒரு ஊரில் ஒரு உபாத்தியாயர் இருந்தார். அவர் ஆண்டவரை அதிகம் நேசித்தவர். எனவே, தன் சொற்ப வருவாயில், ஏழை மாணவர்களுக்கு தன்னால் இயன்ற உதவியை செய்வார். அதேபோன்று, அந்த ஊருக்கு பிரசங்கம் செய்ய வரும் ஏழை ஊழியர்களை போஷித்து, ஏதாவது பணம் கொடுத்து அனுப்புவார். அந்த ஊரில் ஒருசிலர், அவரைக் குறித்து அதினிமித்தம் ஏளனமாகவும் பேசுவார்கள். அப்பேச்சுகள் அவர் காதில் விழுந்தாலும், அதைக் குறித்து கவலைப்பட மாட்டார். அவர் தன் வேலையிலிருந்து ஓய்வு பெறுவதற்கு முன்பாக, அவர் மகனுக்கு ஆண்டவர் நல்ல உயர் பதவி கொடுத்ததோடு, அவனும் தகப்பனைப்போல பக்தியாயிருந்தபடியால், ஆவிக்குரிய வாழ்க்கையிலும் அவனை ஆவியின் வரங்கள், வல்லமை தந்து, அநேக மக்களுக்கு பிரயோஜனமாக உபயோகிக்க சித்தம் கொண்டார். உயர் பதவியிலிருந்த அவருடைய மகனுக்கு கார், பங்களா என்ற செல்வாக்கையும் படிப்படியாக தேவன் அற்புதமாக அருளிச் செய்தபடியால், ஓய்வு பெற்றபின் மகனோடு தங்கியிருக்க வந்த அந்த ஏழை உபாத்தியாயரின் வாழ்வில் மேற்கண்ட வேத வாக்கின்படியே, எல்லா விதங்களிலும் வெளிச்சம் வீசியது. அவரோடு பணிபுரிந்த அநேக உபாத்தியாயர்கள் தாங்கள் ஓய்வு பெற்ற பின்பு பல கஷ்டங்களை அனுபவிக்க நேர்ந்த வேளையில் அவரை ஆண்டவர் உயர்த்தி வைத்திருப்பதைக் குறித்து பொறாமைப்படும் அளவிற்கு, தேவன் அவரை ஆசீர்வதித்து, முடிவுபரியந்தம் தேவசமாதானம், தெய்வீக சந்தோஷம் நிரம்பிய வாழ்வைத் தந்து ஆசீர்வதித்தார்.

அன்பானவர்களே, ஆவிக்குரிய வாழ்க்கையில் நாம் ஆண்டவரோடு இணைந்து வெளிச்சம் நிறைந்த வாழ்வை வாழ்வதற்கு எவ்வளவு கருத்தான காரியங்களை கவனித்து செயல்பட வேண்டியதாயிருக்கிறது பாருங்கள் (1 தெச. 5:5,6)!

<u>ஜெபம்</u>: "என் அன்பு தெய்வமே! நீர் விரும்புகிறவண்ணமாக, சிறுமைப்பட்டவர்களுக்கு என்னால் இயன்றதை செய்யவும், அவர்களை திருப்திப்படுத்தவும், அதன்மூலம் என் வாழ்விலும் உம் தெய்வீக வெளிச்சம் உதிக்கவும், அநேகருடைய வாழ்வு இருளிலிருந்து வெளிச்சத்திற்கு வரவும், உம் அடிமையாகிய என்னையும் <u>இன்றுமுதல்</u> ஆசீர்வதித்து வழிநடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

நம் கெஞ்சுதலுக்கு செவி சாய்க்கிற தேவன்!

"நான் தேவனை நோக்கி என் சத்தத்தை உயர்த்திக் கெஞ்சினேன், என் சத்தத்தை தேவனிடத்தில் உயர்த்தினேன், அவர் எனக்கு செவிகொடுத்தார்" (சங்கீதம் 77:1).

பலவிதமான துன்பம் நிறைந்த சமயங்களை நம் வாழ்வில் எதிர்நோக்கும்பொழுது, செய்வதறியாது திகைக்கிறோம். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் இந்த வசனத்தின்படி கர்த்தரை நோக்கி கெஞ்சும்பொழுது, கர்த்தர் நம் சத்தத்தை கேட்பார். உண்மையாகவே நமக்கு செவி கொடுத்து, எப்படிப்பட்ட நிலைமையையும் தலைகீழாய் மாற்றி போடுவார். தேவ ஊழியனாகிய யோனாவின் வாழ்விலும் இது அப்படியே நிறைவேறியது (யோனா 2:7).

நம்முடைய இந்திய தேசம் பல பிரச்சினைகளை சந்திக்க நேர்ந்தபொழுது, சில தேசத் தலைவர்கள் எழும்பினார்கள். மகாத்மா காந்தியடிகள், ஜவஹர்லால் நேரு போன்ற பல தலைவர்கள் எழும்பி, தேசம் விடுதலை பெறவேண்டுமென்று எவ்வளவோ பாடுபட்டார்கள். பலர் உயிர் தியாகங்களையும் செய்தார்கள். இதினிமித்தமாக இதே நாளில் 1947 ஆம் ஆண்டு பிரச்சினைகள் யாவற்றினின்றும் விடுதலையாகி, இந்திய நாடு சுதந்திரம் பெற்றது. இதேபோன்று தான் ஒவ்வொருநாளும் நாமும்கூட சர்வ வல்ல தேவனாகிய ஆண்டவரிடம் நம் பாடுகள், சஞ்சலங்கள் யாவற்றையும் கருத்தாய் ஏறெடுக்கும்பொழுது, அவர் நமக்கும் பூரண விடுதலை கொடுப்பார். முற்றிலுமாக சுதந்திரத்தை அருளி அவருக்கு சொந்தமானவர்களாக நம் வாழ்வை மாற்றியமைப்பார்.

ஒரு ஊழியர் ஒரு ஞாயிறன்று கர்த்தரை ஸ்தோத்திரித்து பாடி, சபையாக ஆராதனை நடத்திக் கொண்டிருந்தார். அப்பொழுது திடீரென்று அவருடைய சபையின் அங்கத்தினர் குடும்பத்திலே ஒருவர் மரணத்திற்கு சமீபமாயிருக்கிறார் என்ற செய்தி வந்தது. "இயேசுவே, நீர் ஜெபத்தை கேட்கிறவர் அல்லவா! இந்த குடும்பம் உமக்கென்று இத்தனை நாளும் உண்மையும், உத்தமமுமாயிருந்ததே, அவர்களுக்காக நான் இப்பொழுது கெஞ்சுகிறேன். இந்த குடும்பத்தில் அந்த வியாதியினிமித்தம், மரணமோ, பிரிவினையோ வேண்டாம்" என்று கருத்தாய் ஆண்டவரோடு இடைபட்டு பிரார்த்தித்தார். ஆலய ஆராதனை முடிந்தபின்பு, அந்த வீட்டிற்கு ஓடோடி சென்றார். அங்கு போனபொழுது அவர் கண்ட காட்சி மனதிற்கு மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கியது. காரணம், மரணத்திற்கு சமீபமாய் இருக்கிறார்கள் என்று யாரைக் குறித்து சொல்லப்பட்டதோ, அந்த குடும்பத்தின் தலைவி எழுந்து உட்கார்ந்து எல்லோரோடும் பேசிக் கொண்டிருந்தார். அப்பொழுது, இவரைக் கண்ட குடும்பத் தலைவர் ஓடோடி வந்து, "ஐயா, நீங்கள் ஜெபித்தபடியினால், பரிசுத்த ஆவியானவர் என் மனைவி மீது இறங்கி, இதோ, இப்பொழுது உங்கள் கண்களுக்கு முன்பாக உட்கார்ந்திருக்கிறாள். நம் ஆண்டவர் எவ்வளவு உண்மையுள்ளவர், உயிரோடிருக்கிறவர் என்பதை நாங்கள் அறிந்து கொண்டோம்" என்றார்.

ஆம்! நம் கெஞ்சுதலுக்கு செவி கொடுக்கிற தேவன் நம்மோடுகூட இருக்கிறபடியால் எந்த நிலைமையையும் மாற்றியமைக்க அவரால் முடியும் (சங். 30:10,11).

<u>ஜெபம்</u>: "அன்பு தெய்வமே! நீர் மெய்யாகவே உயிரோடு இருக்கிறவராகையால் <u>இன்று</u> ஏழை அடிமையாகிய எனக்கும் எந்த காரியம் வந்தாலும் சோர்ந்து போகாமல், உம்மை நோக்கிக் கெஞ்சி மன்றாடவும் விடுதலையை பெற்றுக் கொள்ளவும் உதவி செய்யும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

சேனைகளின் தேவனே, உமது முகத்தை பிரகாசிக்கப்பண்ணும்!

"சேனைகளின் தேவனே, எங்களை திருப்பிக்கொண்டு வாரும், உமது முகத்தை பிரகாசிக்கப்பண்ணும், அப்பொழுது இரட்சிக்கப்படுவோம்" (சங்கீதம் 80:7).

இன்று அநேக மக்களுடைய குடும்ப வாழ்வில் இருள் நிறைந்து காணப்படுவதை பார்க்கிறோம். அதினிமித்தமாக சண்டைகள், பிரிவினைகள், பொறாமைகள், மேட்டிமைகள், வைராக்கியங்கள் போன்ற பிசாசின் குணங்கள் மனிதரில் காணப்படுவதையும் பார்க்கிறோம். இந்த இருளையெல்லாம் மாற்ற வல்லமையுள்ளவர் நம்முடைய ஆண்டவர் இயேசு மட்டுமே. ஆம்! ஒரு மனிதனுடைய வாழ்க்கையிலே அவர் பிரவேசிக்கும்பொழுது, அங்குள்ள இருளையெல்லாம் அற்புதமாய் மாற்றி ஒளி வீசப்பண்ணுகிறார் (யோவான் 1:9). வேதத்திலே சவுல் என்ற கொடிய மனிதனைக் குறித்து வாசிக்கிறோம். அதே மனிதன் ஆண்டவரது அன்பின் கயிறுகளால் இழுக்கப்பட்டு (ஓசியா 11:4) அவரை தரிசித்தபொழுது, ஆண்டவர், அவனை பவுல் என்ற தெய்வ மனிதனாக மாற்றினார். "இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" (கலா. 2:20) என்று அவனே சொல்வது எத்தனை ஆச்சரியப் பாருங்கள்!

இதுபோன்ற ஒரு குடும்பம் பெயரளவில் கிறிஸ்தவர்களாக இருந்தாலும் கிறிஸ்துவுக்கு விரோதமான காரியங்களை செய்து அதிலேயே திருப்தியாக வாழ்ந்து வந்தார்கள். எத்தனையோ ஊழியர்கள் அவர்களுக்கு புத்தி சொன்னபொழுதிலும் அவர்களை பிசாசின் குணங்கள் நிரப்பியிருந்தபடியினால், அநேகருக்கு பிரச்சினையை கொடுக்கிறவர்களாகவே ஜீவித்தார்கள். ஒருநாள் அவர்களுடைய உறவினர் ஒருவர் வெளியூரில் இருந்து அவர்களை பார்க்க வந்தார். அவரோ சமீபத்தில் ஆண்டவரின் அன்பை ருசித்திருந்தார். ஆகவே, இவர்கள் வாழ்க்கையின் குறைவுகளையெல்லாம் பார்த்து, பரிதாபப்பட்டு, மெதுவாக தான் ஆண்டவர் இயேசுவிடமிருந்து பெற்றுக் கொண்ட இரட்சிப்பைக் குறித்து அவர்களுக்கு எடுத்துரைத்தார். ஆண்டவர் அவருடைய ஜெபத்தை கேட்டு, அந்த குடும்பத்தாரை ஒவ்வொருவராக இருள் நிறைந்த வாழ்விலிருந்து மீட்டெடுத்தார். இந்த குடும்பத்திற்குள் இயேசுவின் ஒளி பிரகாசிக்க, ஆண்டவர் என்னையும் ஒரு கருவியாக உபயோகித்தாரே என்று சந்தோஷமாக அந்த உறவினர் தன் ஊர் திரும்பினார்.

ஆம்! பிரியமானவர்களே, நம் குடும்பங்களிலே, நமக்கு அருமையானவர்கள் வாழ்விலே இருள் இருக்குமானால், நாம் அதை பார்த்துக்கொண்டு ஏனோதானோ என்று இருக்கிறோமா? இந்த மனுஷரைப்போல பாரத்தோடு "என் வாழ்வில் நீர் அருளிச்செய்த தெய்வீக ஒளி, மற்ற மக்கள் வாழ்விலேயும் வீசும்படி, நீரே அருள் தாரும்" என்று ஆண்டவரை நோக்கி கருத்தாய் பிரார்த்தனை செய்வீர்களானால், உங்கள் குடும்பமும் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் யாவரும் இந்த தெய்வீக ஒளியைக் கண்டடைய ஆண்டவர் அருள்புரிவார் (1 யோவான் 2:9,10).

ஜெபம்: "ஒளிமயமான ஆண்டவரே! நீர் தெய்வீக ஒளியாக என்னிலும், என் உறவினர்கள் வீட்டிலும், என் நண்பர்கள் வீட்டிலும், உள்ளங்களிலும் பிரகாசித்து, வாழ்வின் இருளையெல்லாம் மாற்ற நான் கண்ணீரோடு ஜெபிக்கிறேன். இன்றுமுதல் உம் தெய்வீக ஒளி வீசட்டும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தரின் மகத்துவத்தை மறைக்காமல் விவரிப்போம்!

"பின்வரும் சந்ததியான பிள்ளைகளுக்கு நாங்கள் அவைகளை மறைக்காமல், கர்த்தரின் துதிகளையும் அவருடைய பலத்தையும், அவர் செய்த அவருடைய அதிசயங்களையும் விவரிப்போம்" (சங்கீதம் 78:4).

ஆண்டவர் நமக்கு செய்கிற மேன்மையானதும் அற்புதமானதுமான காரியங்களையும், வேதபுத்தகத்திலே அவரைப் பற்றி நாம் அறிந்துகொள்ளுகிற மேலான காரியங்களையும், நாம் மட்டும் அறிந்தும், அனுபவித்தும் அதோடு நின்று விடாமல், மற்றவர்களுக்கும், விசேஷமாக, நம்முடைய சந்ததியினருக்கும் அதை வெளிப்படுத்துவது ஆண்டவர் விரும்புகிற ஒரு காரியம். அப்பொழுதுதான் நம் சந்ததி தேவ பக்தியுள்ள சந்ததியாக, மாற முடியும். ஆபிரகாம், தாவீது போன்ற பக்தர்கள் அவ்விதமாக இருந்தபடியினால்தான் அந்த பாக்கியத்தை பெற்றார்கள் (ஆதி. 18:19, 1 நாளா. 28:9). அவ்வாறு அவரை கனப்படுத்தி, மகிமைப்படுத்துகிறவர்களை "என்னை கனம் பண்ணுகிறவர்களை நான் கனம்பண்ணுவேன்" (1 சாமு. 2:30) என்ற அவர் வாக்குப்படி, நாம் எண்ணக்கூடாத அளவிற்கு பல்வேறுவிதங்களில் அவரும் கனப்படுத்துவார்.

தேவனுடைய ஆசீர்வாதத்தை பெற்ற ஒரு மனிதன், தான் பெற்ற நன்மைகளை தன்னோடு நிறுத்திவிடாமல், அவ்வப்பொழுது தன் குடும்பம் முழுவதையும் கூட்டி பகிர்ந்து கொள்ளுவார். ஆனால், அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சாக்கு சொல்லி, அதில் கலந்து கொள்ள மறுப்பார்கள். எனினும், அதற்காக முதலாவது கருத்தாய் ஆண்டவரை நோக்கி, "ஆண்டவரே, உம்முடைய மகத்துவத்தை அறிவிக்க எல்லோரும் ஒருமனதோடு இணைந்து இந்த நாளில் கூடிவர நீர் அருள்தாரும்" என்று பிரார்த்தனை செய்வார். கர்த்தர் அந்த பிரார்த்தனையின்படி, மக்களைக் கொண்டு வருவார். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற முதுமொழி தான் அவர் கண்களுக்கு முன்பாக எப்பொழுதும் இருக்கும். அதன்மூலமாக அவருடைய சந்ததி தேவ பக்தியுள்ள சந்ததியாக மாறவும், அநேகர் அவருடைய குடும்பத்திலே தேவனுக்கென்று வைராக்கியமாய் ஊழியம் செய்கிறவர்களாக எழும்பவும், கர்த்தர் கிருபை புரிந்தார். அவர் மரணமடைந்தபொழுது, அநேகர் வந்து அவருடைய அயராத தேவ ஊழியத்தின் மூலம் தாங்கள் எப்படி ஆண்டவருடைய மகத்துவங்களை அறிந்து, ஆண்டவருக்கு தங்களை ஒப்புக்கொடுத்தார்கள் என்பதை சாட்சியாக கூறினபொழுது, யாவரும் ஆச்சரியமடைந்தார்கள்.

அன்பானவர்களே! இது தான் ஆண்டவர் விரும்புகிற இன்பமான ஜீவியம். கர்த்தருடைய மகத்துவங்களை நாம் அறிந்துகொள்வதோடு, அனுபவிப்பதோடு, குடும்பத்திலும், நாம் அறிந்த மற்றவர்களிடத்திலும் அதை அறிவிப்பது, மேன்மைப்படுத்துவது மிகமிக அவசியம். இந்த நற்சாட்சி நிறைந்த ஜீவியத்தை, பரிசுத்த ஆவியானவருடைய பெலத்தோடு செய்ய நம்மை ஒப்புக்கொடுப்போமா? (அப். 1:8).

ஜெபம்: "அன்பின் தெய்வமே! இந்த உலகத்தில் உமக்கென்று வாழவும், உமது நாமத்தை மகிமைப்படுத்தவும் எனக்கும் நீரே கிருபை தாரும். அதன்மூலமாய் உம்மை மகிமைப்படுத்துவதோடுகூட, அநேகரை நல்வழியில் நடத்தவும், இன்று எனக்கும் கிருபை தாரும். உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தருடைய செயல்களை, அதிசயங்களை நினைவுகூருவேன்!

''கர்த்தருடைய செயல்களை நினைவுகூருவேன், உம்முடைய பூர்வகாலத்து அதிசயங்களையே நினைவுகூருவேன்'' (சங்கீதம் 77:11).

யோபு என்ற பக்தன் தேவனிடத்தில் நற்சாட்சி பெற்றவனாய் இருந்தான். வாழ்க்கையில் பல்வேறு போராட்டங்கள், துன்பங்கள் வழியாய் கடந்து சென்றான். எனினும் அவன் எப்படிப்பட்ட ஒரு அருமையான வாக்கைக் கூறுகிறான் பாருங்கள்! ''ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணிமுடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார்'' (யோபு 9:10). நல்ல நிலைமையில் இருக்கும்பொழுது இதை சொல்வது எளிது. ஆனால், துன்பத்தின் மத்தியில் கடந்து செல்லும்பொழுது, இந்தவிதமாக அறிக்கை செய்வது எவ்வளவு கடினமான காரியம். ஆனால், அது தான் உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கை. ஆண்டவரை முழு மனதோடு, உறுதியாய் பற்றிக் கொள்வோமானால், நாள் ஒன்று வரும், அன்று துன்பங்கள் யாவும் ஒழிந்துபோம். ஆண்டவர் பெரிய அதிசயங்களை நிகழ்த்தி, தமது மக்களை ஆற்றித் தேற்றுவார் என்பது தான் தெய்வீக நம்பிக்கையாகும் (சங். 34:10)!

ஒரு மனிதன் பெயரளவில் கிறிஸ்தவனாக தன் மனம்போல் வாழ்ந்து வந்தான். ஆனால், தேவனுடைய அன்பினால் உந்தப்பட்டு ஒருநாள் தன் இருதயத்தைத் திறந்து ஆண்டவர் இயேசுவுக்கு இடங்கொடுத்து, தன் முழு இருதயத்தோடும் அவரை நேசித்தான். அப்பொழுதுதான், ''ஐயோ, இவ்வளவு நாட்களையும் வீணாக கழித்தேனே! ஆண்டவரை மகிமைப்படுத்த, அவருடைய அற்புத செயல்களை சாட்சியாகக் கூற இத்தனை நாளும் மனமற்று இருந்தேனே! இனி அதற்கெல்லாம் சேர்த்து அவரை எஞ்சிய வாழ்நாளெல்லாம் மகிமைப்படுத்தப்போகிறேன்'' என்று ஒரு தீர்மானம் செய்து, வேலை நேரம்போக மற்ற நேரமெல்லாம் யாவருக்கும் ஆண்டவருடைய அன்பைப்பற்றி அழகாய் எடுத்துக்கூறுவான். துன்பப்படுகிறவர்களை சந்தித்து, அவர்களை ஆண்டவருடைய அன்பின் வார்த்தைகளால் ஆறுதல்படுத்துவான். ஒருபுறம் அவனை பைத்தியக்காரன் என்று சிலர் பரிகாசம் செய்தபொழுதிலும், மறுபுறம் ஆண்டவர் அவனைக் குறித்து மகிழ்ச்சியடைந்தார். அநேக மக்களை அவனுடைய வார்த்தைகள், அன்பின் செயல்கள் மூலம் ஆறுதல்படுத்தினார்.

அன்பானவர்களே, நீங்களும்கூட இந்த உலக மக்களை பார்க்காமல், ''கர்த்தருக்காக நான் என்ன செய்யட்டும்? அவருடைய அன்பை எப்படியெல்லாம் மக்களுக்கு தெரிவிக்கட்டும்?'' என்று யோசித்து, உங்களால் இயன்றதை செய்யுங்கள். அதிசயமான தேவன் உங்கள் வாழ்வில் ஒவ்வொருநாளும் அதிசயங்களையும் அற்புதங்களையும் செய்வதை காண்பீர்கள். தேவ வல்லமையும், பரிசுத்த ஆவியின் வல்லமையும் உங்களை நிறைவாய் ஆட்கொள்ளும்போது, ஆண்டவரை போலவே நீங்களும் ஜனங்களுக்கு நன்மைசெய்கிறவர்களாய் சுற்றித்திரிவீர்கள் (எபி. 13:16).

<u>ஜெபம்</u>: ''அன்பின் இரட்சகரே! மனுஷரை நேசிப்பதும், மனிதர் மேல் நம்பிக்கை வைப்பதும் விருதா! ஆனால், உம்முடைய நாமத்தில் சார்ந்திருக்கவும், உமக்காக வாழவும், உம்முடைய அதிசயங்களை எடுத்துரைக்கவும், <u>இன்றுமுதல்</u> எனக்கும் அருள்தாரும். என்னையும் ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!''

சிறு பிள்ளைகளை அணைத்து, ஆசீர்வதிக்கிற ஆண்டவர்!

"...சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களை தடைபண்ணாதிருங்கள்; தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது ...அவர்களை அணைத்துக்கொண்டு, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை ஆசீர்வதித்தார்"

(மாற்கு 10:14,16).

சிறு பிள்ளைகளைப்போல் தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று ஆண்டவரே சொல்லியிருக்கிறார். காரணம், சிறு பிள்ளைகள் இருதயத்தில் களங்கமற்றவர்கள்! ஆனால், மனுஷர்களாகிய நம் உள்ளம் தான் கறைகள் நிறைந்தது. அப்படிப்பட்ட குழந்தை உள்ளத்தைக் கொண்ட மக்களை அவர் அணைத்துக்கொண்டு ஆசீர்வதிப்பார். உங்கள் சிறு பிள்ளைகளையும்கூட ஆண்டவருடைய சந்நிதியில் அனுதினமும் வைத்து, "ஆண்டவரே, நீர் கொடுத்த செல்வம்! இந்தக் குழந்தையை உம் கரம் நீட்டி அணைத்து ஆசீர்வதியும்" என்று ஜெபம் செய்யுங்கள். கர்த்தர் அவர்கள் வாழ்க்கையிலே காணப்படும் எல்லாக் கட்டுகளையும் அறுத்து, அவர்களை நிறைவாய் ஆசீர்வதிப்பார்! அவர்களுக்கு வேண்டிய சுகம், பெலன், ஞானம் யாவையும் நிறைவாய் அருளுவார். அவர்களை ஆசீர்வதித்து கரம்பிடித்து வழிநடத்துவார் (சங். 115:13).

பல வருடங்களுக்கு முன்பு ஒரு சிறுவனை நான் சந்தித்தேன். அவனுக்கு பன்னிரண்டு வயதிருக்கும், அவ்வளவுதான். பக்தர்கள் சிலர் பரிசுத்த ஆவியினால் நிறைவதைக் கண்ட அவன், "ஆண்டவரே, மேலானவைகளைத் தேடுங்கள் என்று சொன்னீரே, எனக்கும் இந்த அனுபவத்தை தர வேண்டுமே" என்று ஜெபிக்க ஆரம்பித்தான். இது எங்களுக்கு ஆச்சரியமாய் இருந்தது. "இந்த சிறு வயதில் இத்தனை பக்தியா?" என்று நாங்கள் வியந்தோம். ஆனால், ஒருநாள் அவன் என்னிடம் வந்து, "ஆண்டவர் என் பிரார்த்தனையை நிறைவேற்றிவிட்டார். ஆம்! பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தால் நிறைந்து நான் சந்தோஷமாயிருக்கிறேன்" என்று சொன்னபொழுது, எத்தனை சந்தோஷமாய் இருந்தது! அவன் பெற்றோருக்கு "கிறிஸ்து" என்ற பெயர் மட்டும்தான் தெரியும். ஆனால், அவர்கள் வயிற்றில் பிறந்த இந்த மகனோ எவ்வளவு தூரம் ஆவிக்குரிய வாழ்க்கையில் ஆசீர்வாதம் பெற்றுவிட்டான் பாருங்கள்! காரணம், அவனுக்கு ஆண்டவர்மேல் இருந்த மெய்யான அன்பு! இன்று எந்தெந்த சிறு பிள்ளைகள் இதே வண்ணமாக ஆண்டவரை தேடுகிறார்களோ, அவர்களை இந்த மகனைப்போல பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தால் நிரப்புவார். அவர்களைக் கொண்டு, பெரியவர்களால்கூட செய்ய முடியாத அரிய பெரிய காரியங்களை ஆண்டவருடைய நாமத்தில் செய்யும்படியாக அவர்களை கனப்படுத்துவார்.

அன்பானவர்களே, நீங்களும் சிறுபிள்ளைகளைப்போல, களங்கமற்றவர்களாய் கர்த்தருடைய காரியங்களிலே அவரை நாடித்தேடுங்கள். உங்களையும் அவர் அணைத்துக் கொண்டு, நீங்கள் எதிர்பார்க்கிறதற்கும் மேலான பரலோகத்தின் ஆசீர்வாதங்களினாலும், இம்மைக்குரிய நன்மைகளினாலும் நிரப்புவார் (யாக். 1:17).



ஜெபம்: "அன்பு தெய்வமே! என்னையும் உம்முடைய பரிசுத்த சந்நிதியில் தாழ்த்துகிறேன். சிறுபிள்ளையைப் போன்று, களங்கமற்ற குணத்தை எனக்கும் தாரும். இன்றுமுதல் உமக்கு பிரியமாய் வாழ, உம்முடைய அரவணைப்பிற்குள் சந்தோஷமாய் இருக்க எனக்கும் கிருபை தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

தம் கிரியைகளில் வல்லமையுள்ள தேவனைத் துதியுங்கள்!

''அவருடைய வல்லமையுள்ள கிரியைகளுக்காக அவரைத் துதியுங்கள்; மாட்சிமை பொருந்திய அவருடைய மகத்துவத்திற்காக அவரைத் துதியுங்கள்''

(சங்கீதம் 150:2).

தேவன் தாம் செய்யும் கிரியைகளிலெல்லாம் வல்லமையுள்ளவர். இஸ்ரவேல் ஜனங்களை அவர் தமக்கென்று சொந்தமாக தெரிந்துகொண்டார். அவர்கள் எகிப்து தேசத்திலே அடிமைகளாக்கப்பட்டபொழுது, ஆண்டவரை நோக்கிக் கூக்குரலிட்டார்கள். கர்த்தர் அந்த கூக்குரலைக் கேட்டு, தமது வல்லமையுள்ள கரத்தை நீட்டினார். பற்பல அற்புதங்களை செய்து பார்வோனும் அந்த ஜனங்களும் தம்முடைய வல்லமையை அறியும்படி செய்தார் (1 நாளா. 29:12ன் பின் பகுதி). தாம் வாக்குத்தத்தம் பண்ணினபடியே தம்முடைய ஜனங்களை, பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்திற்கு அழைத்துக் கொண்டு வந்து, அவர்களை ஆசீர்வதித்தார். இன்றும் தம்மை நம்புகிற ஒவ்வொருவரையும், அதேவண்ணமாக ஆசீர்வதிக்க அவர் தமது கிரியைகளில் வல்லமையுள்ளவராகவே இருக்கிறார் (2 நாளா. 16:9).

தேவ ஊழியர் ஒருவர் ஒரு பெரிய கொட்டகை போட்டு அதில் கூட்டம் நடத்தி, மக்களுக்கு ஆசீர்வாதமாக ஊழியம் செய்ய பலத்த ஏற்பாடுகள் செய்தார். அடுத்த நாள் கூட்டம் ஆரம்பிக்க வேண்டும். முந்தின நாள் மாலை ஒரே காற்றும் மழையும் அடித்ததினால் கஷ்டப்பட்டு செலவழித்து உருவாக்கிய கொட்டகை அப்படியே கீழே சாய்ந்துவிட்டது. தேவ ஊழியர் சோர்வடைந்தார். ''பணமில்லையே, நாளைக்கு கூட்டம் நடத்த என்ன செய்வது?'' என்று மனைவியிடம் கூறி கவலைப்பட்டார். மனைவியும் தேவ ஆவியினால் நிறைந்திருந்தபடியினால், கர்த்தருக்குள் தைரியமாக, ''ஒன்றும் கவலைப்படாதிருங்கள். கர்த்தர் தம்முடைய வல்லமையினால் அவர் நாமத்தை மகிமைப்படுத்த, நினைத்த காரியத்தை நிச்சயமாக செய்து முடிப்பார்'' என்றார்கள். அவருக்கு ஆச்சரியமாய் இருந்தது! அதேபோன்று அடுத்த நாள் மாலை வந்தது. மழை, காற்று யாவும் நின்றது. மக்கள் திரளாக வந்தனர். கூடாரம் ஏதுமின்றி, கொஞ்சம் விளக்குகளை மட்டும் போட்டு கூட்டத்தை நடத்தினார்கள். திரளான மக்கள் வந்து தேவ வல்லமையைப் பெற்று மகிழ்ந்தனர். அதோடுகூட அவர்கள் ஊழியத்திற்கென்று மக்கள் கொடுத்த உதாரத்துவமான காணிக்கையின் மூலம், அடுத்த நாள் அருமையான ஒரு கொட்டகையை விஸ்தாரமாய் போட்டு, அழகான ஒலி, ஒளி வசதிகளுடன், எதிர்பார்த்ததைவிட அருமையாய் யாவற்றையும் நடத்தி முடிக்க கர்த்தரே உதவி செய்தார்.

அன்பானவர்களே, நீங்களும்கூட, சோர்ந்துபோய் இருக்கிறீர்களா? எல்லாவற்றையும் கர்த்தர் நன்மையாக மாற்றி, சகல காரியங்களையும் தம்முடைய வல்லமையினால் அழகாய் செய்து முடிப்பார் என்பதை விசுவாசித்து அனுபவித்துப்பாருங்கள் (எபே. 3:17)!



ஜெபம்: ''வல்லமையுள்ள தகப்பனே! இந்த உலகத்தில் பல காரியங்களிலே தோல்வியைத் தான் நான் காண்கிறேன். ஆனால், உம்மை பற்றிக்கொள்ளும் பொழுதோ எவ்வளவு அழகாக, உம்முடைய வல்லமையினால் முடித்துத் தருகிறீர் என்பதை அறிந்துகொள்ளும்படி கிருபை செய்ததற்காக ஸ்தோத்திரம். இன்று முதல் நீரே உம்முடைய வல்லமையுள்ள கரத்தை நீட்டி என்னையும் வழிநடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!''

நீங்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்கள்!

"மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்"

(ரோமர் 8:14).

தேவன் தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய் தமக்கு சுவிகாரபுத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார். ஆண்டவர் இயேசு சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே, அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர் களாயிருந்த நம்மைக் கழுவி சுத்திகரித்து உயிர்ப்பித்தார் என்று வேதம் சொல்லுகிறது (எபே. 1:6,7; 2:1). அதன்படி, அப்பா பிதாவே என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியையும் நமக்கு அருளிச்செய்திருக்கிறார் (ரோமர் 8:15). அவருடைய நாமத்தின்மேல் விசுவாசத்தோடு அவரை ஏற்றுக்கொள்ளும்பொழுது, நாம் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அதிகாரம் கொடுத்திருக்கிறார் என்றும் நாம் வாசிக்கிறோம் (யோவான் 1:12). இந்த அனுபவத்தை நாம் பெறும்பொழுது, அதாவது அவருடைய புத்திரராகும்பொழுது, அவர் எல்லையில்லா மகிழ்ச்சியடைகிறார். நம் வாழ்விலும் நிறைவான சந்தோஷம் உண்டாகும்.

ஒரு வாலிபன் ஆண்டவருக்கு தன்னை முழுவதுமாய் அர்ப்பணித்தான். பரிசுத்த ஆவியை தாகத்தோடு கேட்டு பெற்றுக் கொண்டான். தீர்க்கதரிசன வரத்தையும் ஆண்டவர் அவனுக்கு கொடுத்தார். அதன்மூலமாக ஏராளம்பேர் தேவனுடைய புத்திரராகும்படி வல்லமையுள்ள கருவியாக அவனை உபயோகித்தார். ஒரு சமயம் அருகாமையிலிருந்த வேறொரு ஊரிலே, போதகர் திடீரென்று மிகவும் வியாதிப்பட்டார். அன்று காலை ஆராதனையில் யாரை தேவனுடைய வார்த்தையை பகிர்ந்துகொள்ள அழைப்பது என்று கவலையோடிருந்தார். கர்த்தர் இந்த வாலிபனை நோக்கி "இந்த இரயிலைப் பிடிக்க, இன்னும் கொஞ்ச நேரம் தான் இருக்கிறது. எனினும் நீ போய் இரயிலுக்குள் ஏறின பின்புதான் அது கிளம்பும். அந்த ஊரில் இறங்கியதும் ஒரு பாலம் வரும், அதில் உன் பழைய நண்பர் ஒருவரை சந்திப்பாய், இதுதான் நான் உன்னை அந்த ஊருக்கு அனுப்புகிறதற்கு அடையாளம்" என்று பேசினார். அவனுக்கு இது மிகவும் ஆச்சரியமாய் இருந்தது. அப்படியே ஆண்டவருடைய வார்த்தையின்படி செய்தான். அவர் சொன்னபடியே யாவும் நடந்தன. ஆவியானவரால் வழிநடத்தப்பட்டு, அந்த ஆலயம் சென்றான். அங்கு வேதனையோடு செய்வதறியாது படுத்துக்கொண்டிருந்த போதகர், இந்த வாலிபனைக் கண்டதும் துள்ளிக் குதித்தார். நடந்ததையெல்லாம் விவரித்தான் வாலிபன்! அவன் போதகர் விருப்பப்படி செய்தி அளித்தபொழுது, ஆவியானவர் வல்லமையாய் உபயோகித்தார். ஏராளமான வாலிபர்கள் ஆண்டவரை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவர் புத்திரராக மாறும்படி அருள்புரிந்தார்.

ஆம்! பிரியமானவர்களே, ஆண்டவரின் புத்திரராகும் இந்த தெய்வீக அனுபவத்தை நீங்களும் பெற்றுக்கொள்ள உங்களையும் ஆண்டவர் அன்போடு அழைக்கிறார். இந்த உலக வாழ்வில் இதுதான் மெய்யான பேரின்பம்! ஆகவே, இந்த வாழ்வை இன்றே நாடித் தேடி தேவனுக்கு புத்திரராகும் பாக்கியம் பெறுவோம் (கலா. 4:6,7).



ஜெபம்: "அன்பு தெய்வமே! எனக்கும் இந்த அழிவில்லாத பேரின்பத்தைத் தந்து, என்னையும் உமக்கு சொந்தமாக மாற்றும். இன்றுமுதல் நானும் அநேகரை உம்மண்டையில் கொண்டு வரும் பாக்கியத்தை எனக்கு தாரும். உமக்கு ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

பலவீனரின் பலவீனங்களை தாங்குங்கள்!

"அன்றியும், பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல், பலவீனருடைய பலவீனங்களை தாங்க வேண்டும்" **(ரோமர் 15:1).**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் மனிதனாக வாழ்ந்தபொழுது, தேவன் அவரை பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் நிரப்பினார். அதன்பிறகு அவர் நன்மை செய்கிறவராய், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராய் சுற்றித் திரிந்தார் (அப். 10:38). முப்பத்தெட்டு வருடம் பெலவீனத்தால், சுகவீனமாயிருந்த ஒரு மனிதனைக் கண்டு அன்போடு அவனண்டை சென்று, உடனடியாக அவன் பலவீனத்தை மாற்றி பரிபூரண சுகம் கொடுத்தார் (யோவான் 5:5–9). இதுபோன்றே எத்தனையோபேர் அவரால் தொடப்பட்டு பலவீனத்திலிருந்து விடுதலை பெற்றதை நாம் வேதத்திலே வாசிக்கிறோம். அவர் தெய்வம்! மனிதராகிய நாம் அப்படி அவரைப்போல வாழ முடியுமா? சீஷர்களுடைய அனுபவத்தை பாருங்கள் ஆண்டவர் அவர்களை, "காத்திருந்து ஜெபித்து பரிசுத்த ஆவியின் நிறைவை பெற்றுக்கொள்ளுங்கள், உன்னதத்தின் பெலனால் நிரம்புங்கள்" என்றபொழுது, அப்படியே பெற்றுக்கொண்டார்கள் (அப். 1:14; 2–ம் அதிகாரம்). அதன்மூலமாக அவர்கள்மேலும் பரிசுத்த ஆவியானவர் அக்கினியாய் இறங்கி வந்தார். ஆண்டவர் எப்படி உபயோகிக்கப்பட்டாரோ, அதேபோல பலவீனர்களை பலப்படுத்தி தாங்கும் தேவபெலனை அவர்களும் பெற்றார்கள் (அப். 4:13;5:1–15). இன்று உங்களையும் இதே வண்ணமாக உபயோகிக்க ஆண்டவர் வல்லமையுள்ளவராகவும், வாஞ்சை யுள்ளவராகவும் இருக்கிறார்.

சகோதரர் தினகரன் அவர்கள் தனது இருபதாம் வயது வரை இயேசுவை அறிந்தும் அறியாமல் உலகத்தாரைப்போல பெயரளவில் கிறிஸ்தவராக வாழ்ந்து வந்தார். ஆனால், ஆண்டவரை இரட்சகராக அறிந்த அந்த நாளிலிருந்து பக்தி வைராக்கியத்தோடு அவருக்கென்று சேவை செய்ய ஆரம்பித்தார். வேதத்தை கருத்தாய் வாசித்தபொழுது, இயேசு கிறிஸ்து பெற்ற பரிசுத்த ஆவியின் நிறைவைப்பற்றி அறிந்து (அப். 10:38), தானும் பெறவேண்டுமென்று விடாமல் காத்திருந்து, மூன்று மணி நேரம் இயேசுவை தரிசிக்கும் சிலாக்கியம் பெற்றார். வரங்களும், வல்லமையும் அவரை நிரப்பியது. இதற்கு குடும்பத்தாராகிய நாங்கள் சாட்சிகளாய் இருக்கிறோம். இன்று குடும்பமாகவும் மற்றும் பல மக்களும் தேவ பலத்தால் அவரைப் போன்றே நிரப்பப்படவும், பலவீனரைத் தாங்கும் பணியை செய்யவும் ஆண்டவர் வழிநடத்தி வருகிறார்.

அன்பானவர்களே, நீங்களும்கூட, "நான் வியாதியுள்ளவன், பெலவீனமானவன், ஞானமற்றவன்" என்றெல்லாம் உங்களைக் குறித்து குறைத்து எண்ணாமல் ஆண்டவருடைய சேவையை செய்வதற்கு பயப்படாமல், பரிசுத்த ஆவியானவரால் இயேசு கிறிஸ்துவைப்போல் அளவில்லாமல் நிரம்பி, ஆவி, ஆத்துமா, சரீரத்தில் பெலனடைந்து, உங்களை நாடி வரும் மக்களுடைய சகல பெலவீனங்களையும் மாற்றியமைக்கும் தெய்வீக பெலனடைந்து, வைராக்கிய வாஞ்சையோடு ஆண்டவரின் சேவையை செய்யுங்கள் (எபே. 6:10).

ஜெபம்: "அன்பின் இரட்சகரே, உம்முடைய வல்லமை, பெலன் என்னிலும் பூரணமாய் விளங்கும்படி, அதன்மூலமாய் நானும் பெலவீனரைத் தாங்கும்படி, உம்முடைய தெய்வீகக் கிருபை, வல்லமையால் இன்று என்னை நிரப்பும்படி கெஞ்சுகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

பிறனுடைய பக்திக்கேதுவாக நடக்கக்கடவோம்!

"நம்மில் ஒவ்வொருவனும் பிறனுடைய பக்திவிருத்திக்கேதுவான நன்மையுண்டாகும்படி அவனுக்கு பிரியமாய் நடக்கக்கடவன்" (ரோமர் 15:2).

இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை நமக்கு முன் மாதிரியாக இருக்கிறது (1 பேதுரு 2:21). தனக்காக அவர் இந்த உலகத்திலே வாழாமல் பிறருக்காகவே, அவர்கள் ஆசீர்வாதம் பெறவேண்டும் என்பதற்காகவே தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தார். இதே வண்ணமாக நாமும் அவர் முன்மாதிரியை பின்பற்றி நடக்க, நம் வாழ்வையும் அர்ப்பணிப்போமானால் நமக்கும் தெய்வீகக் கிருபையை நிறைவாய் தருவார். இன்றைய உலகத்திலே நாம் காண்பது என்ன? 'நான், என் குடும்பம், என் வேலை, என் சபை' என்று நமக்கு சொந்தமானவைகளையே எப்பொழுதும் மேன்மையாக நினைக்கிறோம். அதில் மட்டுமே பிரியம் கொள்கிறோம். அதற்காகவே மிகவும் பாடுபடுகிறோம். ஆனால், ஆண்டவராகிய இயேசு நமக்கு காட்டிய முன்மாதிரி, பிறருக்காக நாம் நம் வாழ்வை அர்ப்பணித்து, அதன்மூலம், அவர்கள் பக்தியாய் வாழ்வதற்கு நாம் ஒரு எடுத்துக் காட்டாகவும், மாதிரியாகவும் இருக்க வேண்டும் என்பதுதான் (தீத்து 2:7, 1 பேதுரு 5:3).

ஒரு கல்லூரி விடுதியிலே ஒரு இளம் வாலிபன் இருந்தான். அவனுக்கு தவறான வழியில் துணிகரமாய் நடக்கிற வாலிபர்களைக் குறித்து ஒரு பாரம்! அப்படிப்பட்டவர்கள் நல்ல வழிக்கு திருந்தும்படி கண்ணீரோடு ஜெபிப்பான். அப்படியே, கல்லூரியில் சேரும்பொழுது மிகவும் நல்லவனாகவே இருந்து, பின் நண்பர்களுடைய கீழ்த்தரமான சில செய்கைகளால் தவறான பாதையில் திரும்பிய ஒரு வாலிபனுக்காக ஜெபித்தான். அவனோடு பேசி, அன்புகூர்ந்து தேவ தயவினால் அவனுக்கு இரட்சிப்பின் மார்க்கத்தை விளக்கிக் காண்பித்து, நல்ல வழியில் திருப்பினான். இதற்கெல்லாம் காரணம் என்ன? அந்த மாணவன் மீது அவன் கொண்டிருந்த தெய்வீக அன்பு! இதைத்தான் ஆண்டவர் இயேசு நம் ஒவ்வொருவருக்கும் கொடுக்க விரும்புகிறார்.

எனக்கு அன்பானவர்களே, உங்களைப்பற்றி என்ன? உங்கள் சொந்த காரியங்களுக்காகவே எப்பொழுதும் கவனமாய் இருக்கிறீர்களா? அல்லது உங்கள் குடும்பங்களிலே, உடன்பணிபுரிபவர்களிலே, மற்றும் நண்பர்களின் வாழ்விலே குறைபாடுகள், ஆண்டவரைப் பற்றிய அறிவு இல்லாமை போன்றவைகள் காணப்படும்பொழுது, அந்த வாலிபனைப்போல அத்தகையோர் மனமாற்றத்திற்காக மன்றாடி ஜெபிக்கிறீர்களா? (கலா. 6:2). இன்றைக்கு ஆண்டவர் சந்நிதானத்தில் ஒரு தீர்மானம் செய்யுங்கள். "சுவாமி, உம்மைப்போல எனக்கும் பிறருக்காக பாரப்பட, பிரியமாய் நடக்க, உம் தெய்வீக ஞானம், கிருபை, வழிநடத்துதலைத் தாரும்" என்று ஒப்புக்கொடுங்கள். இந்த மாணவனுக்கு கொடுத்த அந்த பெரிய ஆசீர்வாதத்தை உங்களுக்கும் கர்த்தர் கொடுப்பார். அநேகருக்கு ஆசீர்வாதமான பாத்திரமாக நீங்கள் மாறுவீர்கள். பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும். இப்பூவுலகிலும் ஆண்டவர் உங்களை பாக்கியவான்களாய், பாக்கியவதிகளாய் மாற்றுவார் (கொலோ. 1:10).

<u>ஜெபம்</u>: "அன்பின் இரட்சகரே, இந்த உலகத்தில் உமக்கு பிரியமான வாழ்க்கை வாழ்ந்து, தவறான வழியில் நடக்கிறவர்களுக்கு முன்பாக நற்சாட்சியாய், நற்கிரியை செய்து, அவர்களை பக்தியான பாதையில் வழிநடத்தவும், மற்றவர்களுக்கு முன்பாக பிரயோஜனமான வழியில் நடக்கவும் <u>இன்றுமுதல்</u> என்னை நீரே வழிநடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

நீங்கள் புதிதாய் பிசைந்த மாவாயிருங்கள்!

"ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு..." (1 கொரிந்தியர் 5:7).

வீட்டிலே நாம் மாவு அரைத்து வைக்கிறோம். அது முதலில் புளிக்காது. ஆனால், நாள்பட நாள்பட, மிகவும் புளிக்க ஆரம்பிக்கிறது. அதேபோல தான் நம்முடைய வாழ்விலும் புதிதாய் பிசைந்த மாவாய் நாம் இருக்க வேண்டுமென்று ஆண்டவர் விரும்புகிறார். எப்பொழுதுமே, பழைமை, புளிப்பான நிலைமை யாரும் விரும்பாத ஒன்று. எல்லோரும் விரும்புவது புதிதான காரியங்களையே! எனவே, "என் வாழ்விலுள்ள புளிப்பான காரியங்களையெல்லாம் என்னை விட்டு எடுத்துப்போடும்" என்று ஆண்டவருடைய சமுகத்திலே ஜெபம் செய்வோம். பழைய இச்சை, அநீதி, கோப தாபங்கள், வைராக்கியங்கள் இவைகளெல்லாம் நம்முடைய சொந்த வாழ்விலே வேதனையைத்தான் உண்டாக்கும் (கலா. 5:9). ஆனால், கர்த்தருக்குள் இவைகளெல்லாம் மன்னிக்கப்பட்டு, நாம் புதிய சிருஷ்டியாக, பரிசுத்தமாக கர்த்தரால் மாற்றப்படும்பொழுது, நமக்கும் சந்தோஷம், நம் வாழ்க்கையின் மூலமாய் மற்றவர்களுக்கும் சந்தோஷம். இது தான் புதிதாய் பிசைந்த மாவின் மகிமை (ரோமர் 11:16)!

ஒரு குடும்பத்திலே ஒரு மகன் மட்டும் தாறுமாறான ஜீவியம் செய்து கொண்டிருந்தான். குடும்பத்தார் யாவரும் ஒன்று சேர்ந்து ஆலயத்திற்கு ஒழுங்காக செல்வார்கள். ஆனால், அவனோ, நண்பர்களோடு சேர்ந்து உல்லாசமாக எங்கேயாவது திரிவான். எனவே, குடும்பத்தார் அவனுக்காக விசேஷ ஜெபத்தை ஏறெடுக்க, குடும்ப ஜெபத்தில் அதிகமான நேரத்தை செலவழித்தனர். அவனோ, அவ்வாறு அவர்கள் ஜெபம் பண்ணப் பண்ண மென்மேலும் பலவிதமான புளித்தமா போன்ற தீய செயல்களை புரிந்து கொண்டே இருந்தான். ஒரு நாள் அவனோடு சேர்ந்த நண்பர்களே அவனைக் குறித்து கேலியும், பரியாசமும், நிந்தையுமான காரியங்களை பேசினபொழுது, அவனுடைய உள்ளம் உடைந்தது. இவர்களை அல்லவா நான் நம்பியிருந்தேன். இன்று எல்லோரும் சேர்ந்துகொண்டு என்னை அலட்சியப்படுத்திவிட்டார்களே, என்று கவலையோடு வீடு திரும்பினான். வீட்டிலே அவனுக்காக யாவரும் கருத்தாய் ஜெபிப்பதைக் கண்டான். அமைதியாக அவனும் முழங்காற்படியிட்டான். ஆண்டவரை நோக்கி கதறி அழுதான். கர்த்தர் அவனுக்கு இரங்கினார். குடும்பத்திலே, மற்ற எல்லாரைக்காட்டிலும் அவனை புதிதாய் பிசைந்த மாவாக தம்முடைய கையில் எடுத்து வல்லமையாய் உபயோகித்தார்.

அன்பானவர்களே, கர்த்தரால் ஆகாதது ஒன்றுமில்லை. நீங்கள் பழைய புளித்த மாவாக ஒருவருக்கும் பயனற்றவர்களாய், கர்த்தருக்கும் பிரியமில்லாத வாழ்க்கை வாழ்வீர்களானால், இன்று "ஆண்டவரே! என்னை புதிதாய் பிசைந்த மாவாக தயவு செய்து மாற்றும்" என்று தாழ்மையுடன் கேட்டு, இந்த வாலிபனை போல ஆசீர்வாதமான வாழ்வைப் பெற்று மகிழுங்கள் (எபே. 4:22-24).

<u>ஜெபம்</u>: "என் அன்பு தெய்வமே! எவ்வளவு ஆழமான பாவக்குழியில் இருக்கிறவர்களையும் உம்முடைய தெய்வீக அன்பினால், அரவணைப்பினால் தூக்கி நிறுத்தி உயிர்ப்பிக்கிறீரே! புதிதாய் பிசைந்த மாவைப்போல மாற்றுகிறீரே. <u>இன்றுமுதல்</u> என்னையும் ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"

நீங்கள் ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதிருங்கள்!

"...ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதிருங்கள்..." **(1 கொரிந்தியர் 7:5).**

இன்று மனிதர்களுடைய இருதயம் கடினமானதாய் இருக்கிறபடியால் "பிரிவினை" என்பது மிகவும் சாதாரணமாக இருப்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். குடும்பத்தில் பிரிவினை, தம்பதியரிடையே பிரிவினை, சிநேகத்தில் பிரிவினை என்றெல்லாம் நாம் பார்க்கிறோம். ஆனால், ஆண்டவரோ "ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்" (1 பேதுரு 4:8) என்றே கூறுகிறார். விசேஷமாக, தம்பதியர் பணத்திற்காகவோ, பல்வேறு லௌகீக காரணங்களுக்காகவோ எளிதில் ஆளுக்கொரு பக்கம் பிரிந்திருப்பது ஆண்டவர் விரும்பாத ஒரு காரியம். உபவாசத்திற்கும், ஜெபத்திற்கும் தடையிராதபடிக்கு மட்டுமே, கணவனும், மனைவியும் பிரிந்திருக்கலாம் என்று ஆண்டவர் கூறுகிறார் (1 கொரி. 7:5). அதுவும் சிலகாலம்தான்; அதற்குமேல் இந்த பிரிவினையின் மூலமாக சாத்தான் எளிதில் உங்களை பாவம் செய்யும்படி தூண்டிவிடுவான். ஆகவே, கூடி வாழுங்கள், என்பதுதான் ஆண்டவர் நமக்கு கொடுக்கிற தெய்வீக அறிவுரை, அதையே நாம் பின்பற்றி ஆனந்தமாய் வாழ்வோம். பிசாசு கொண்டு வரும் பிரிவினைகளை உதறித் தள்ளுவோம்.

ஒரு நல்ல மனைவி பக்தியோடு குடும்ப ஜீவியத்தை ஆரம்பித்தாள். ஆனால், குழந்தை இல்லாத பிரச்சினை வந்துவிட்டபடியினால், மெல்ல மெல்ல புருஷனின் கசப்பு வெளியில் தோன்ற ஆரம்பித்தது. அவன் பெற்றோர் அவனுக்கு உடந்தையாக இருந்தார்கள். அவனை தவறான பாதையிலே இழுத்தார்கள். இதினிமித்தமாக அவன் அடிக்கடி இந்த பெண்ணை தாய் வீட்டிலே கொண்டு போய் விட்டு விடுவான். ஒரு முறை அவன் அப்படி அழைத்து செல்லும்பொழுது, அவள் அவனிடம் "என் தாய் வீட்டிலே இருப்பதற்காக நான் உங்களை திருமணம் செய்யவில்லை, உங்களுக்கு சேவை செய்ய, உங்கள் மீது என் அன்பைப் பொழிய, உங்கள் பெற்றோரை அன்புடன் பராமரிக்கத்தான் நான் திருமணம் செய்து உங்கள் வீட்டுக்கு வந்தேன். தயவு செய்து என்னை இனிமேல் இப்படி என் தாய் வீட்டுக்கு அனுப்பாதிருங்கள்" என்று பதிலுரைத்தாள். அவளுடைய மன உறுதியையும், மெய்யான அன்பையும் கண்ட புருஷன் அதற்கு மேல் அப்படி செய்யாமல் பேசாமல் விட்டுவிட்டான். ஆனால், அவன் பெற்றோரோ வேறு திருமணம் செய்துகொள் என்று அதிகமாக தொல்லை கொடுத்தார்கள். இந்த நிலைமையில் அவள் ஆண்டவரை உறுதியாய் பிடித்துக்கொண்டு, "ஆண்டவரே, எனக்கென்று ஓர் குழந்தையை நீர் தருவீரானால் நாங்கள் பிரிய வேண்டிய அவசியமில்லையே! நாங்கள் நிரந்தரமாகக் கூடி வாழ வழியைத் திறந்தருளும்" என்று தினமும் கருத்தாய் பிரார்த்தனை செய்தாள். கர்த்தர் கண்ணீரைக் கண்டு, அவளுடைய கர்ப்பத்தை ஆசீர்வதித்தார். பிரச்சினையெல்லாம் தீர்ந்தது. என்றென்றும் ஒன்றாய் வாழும் தெய்வீக அருளை அவள் பெற்று மகிழ்ந்தாள்.

அன்பானவர்களே, சிறு காரியங்களுக்கும் பிரிய வேண்டும் என்று விரும்பாதிருங்கள். விசேஷமாக என் சகோதரிகளே, இந்த பெண்ணைப்போல நீங்களும் உறுதியாய் இருப்பீர்களானால் நிறைவான ஆசீர்வாதம் பெறுவீர்கள் (1 கொரி. 1:10).

ஜெபம்: "அன்பு தெய்வமே! எனக்கும் இப்படிப்பட்ட உறுதியை என் வாழ்வில் தந்து, பிரிவினையை மாற்றிப்போடும். இன்றுமுதல் ஒற்றுமை, ஒருமனம் நிறைந்த வாழ்வை எனக்கும் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்!

"மோசம்போகாதிருங்கள்; ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்"
(1 கொரிந்தியர் 15:33).

தங்கள் வாயிலிருந்து புறப்படுகிற வார்த்தைகளில் கவனமாய் இருப்பவர்கள் மிகவும் சிலரே! எதையெல்லாமோ படபடவென்று பேசி விடுகிறோம். அதன்பிறகு விளைவு கேடானதாக இருக்கும்பொழுது ஏன் அவ்வாறு பேசினேன்? என்று யோசிக்கிறோம். அதில் பயன் ஏதும் இல்லையே! அதைத்தான் இந்த வசனம் விளக்குகிறது. வேண்டாத பேச்சுகளை பேசுவதால் நம்முடைய இருதயம், மனம், வாழ்க்கை யாவும் அசுத்த மடைகிறது (1 தீமோ. 1:6). அருமையானவர்களே, நம்முடைய வாயிலிருந்து வருகிற வார்த்தையில் எவ்வளவு கவனமாய் இருக்க வேண்டியதிருக்கிறது பாருங்கள்! விசேஷ மாக, ஆண்டவருடைய அடியார்கள் என்று சொல்லுகிறவர்கள் அவருக்கு பிரியமில்லாத, மற்றவர்களுக்கு உபயோகமில்லாத வார்த்தைகளை பேசுவதில் மிகவும் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டியது எவ்வளவு அவசியமாயிருக்கிறது. நம்முடைய சம்பாஷணைகள், குடும்பத்திலே ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளும் காரியங்கள் ஒழுக்கத்தை கெடுக்கும் அளவில் இருக்கிறதா? வம்பும், புத்தியீனமுமான பேச்சுகள் அதில் காணப்படுகிறதா என்று நிதானித்துப் பார்த்தால் எவ்வளவு நலமாயிருக்கும்! (எபே. 5:4).

ஒரு கல்லூரி விடுதி ஒன்றிற்கு மாணவி ஒருவள் புதிதாக வந்து சேர்ந்தாள். அவளை, அவளுடைய அறையிலிருந்த ஏனைய தோழிகள் அன்போடு வரவேற்றனர். அதுவரை அவளுடைய வீட்டிலே வேறு யாரும் துணையில்லாத நிலையில் இருந்ததால், அவளுக்கு அவர்களுடைய அன்பும், உபசரிப்பும் மிகவும் பிரியமாயிருந்தது. வீட்டில் தாயார் பக்தி நெறியிலும், ஒழுக்கத்திலும் வளர்த்தது அவளுக்கு கசப்பாக இருந்தது. புதிய தோழிகளின் பக்திநெறியற்ற, ஒழுக்கமற்ற வழிகளிலே வெகுவிரைவில் நடக்கலானாள். வேண்டாத சம்பாஷணைகள் முளைக்க ஆரம்பித்தன. அப்பொழுதுதான் ஒருநாள், "ஐயோ! என் தாயார் வழிநடத்தின ஒழுக்கங்களையெல்லாம் இவ்வளவு சீக்கிரம் உதறித் தள்ளிவிட்டேனே! பேசக் கூடாத வார்த்தைகளையெல்லாம் என் நாவில் சாதாரணமாக வருகின்றனவே" என்று பயந்து நடுங்கினவளாய், அந்த கேட்டின் மார்க்கத்தைவிட்டு மனம்திரும்பி தெய்வ பயத்துடன் ஜெபம், வேதவாசிப்பு இவைகளை கைக் கொள்ளலானாள். அப்பொழுதுதான், எவ்வளவு பயங்கரமான பாவ படுகுழியிலிருந்து ஆண்டவர் தன்னை காப்பாற்றினார் என்று உணர்ந்து அவருக்கு துதி செலுத்தினாள்.

அன்பானவர்களே, உங்கள் வாழ்க்கையிலும் இந்த தெய்வீக அன்பு உங்களை நிரப்பவும், வேண்டாத வார்த்தைகள் உங்கள் வாயிலிருந்து புறப்படாமல் இருக்கவும், நீங்களும் இன்றைக்கு ஆண்டவரை உண்மையாய் தேடுவீர்களா? இந்த தெய்வீக நல்லொழுக்கத்தை எனக்கும், என் குடும்பத்திற்கும் தாரும் என்று ஆண்டவரிடத்திலே கேளுங்கள் (தீத்து 2:8).

ஜெபம்: "அன்பின் இரட்சகரே! வீணான பேச்சுகளினிமித்தம் பரிசுத்தத்தில் குறைவு ஏற்படாமல், உம் தெய்வீக சமாதானம் நிறைந்த வாழ்வை என் வாழ்விலும், என் குடும்பத்திலும் இன்றுமுதல் நிறைவாய் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தர் உங்களை கன்மலையின்மேல் உயர்த்துவார்!

"...என்னை கன்மலையின்மேல் உயர்த்துவார்" **(சங்கீதம் 27:5).**

இந்த உலக வாழ்விலே எத்தனையோ பாடுகள், சஞ்சலங்கள், பயங்கள் நம்மை எதிர்நோக்குகின்றன. ஆனால், கர்த்தரை கன்மலையாகக் கொண்ட ஒவ்வொருவருடைய தனிப்பட்ட வாழ்விலும், குடும்ப வாழ்விலும் கர்த்தர் வந்து வாசம் செய்யும்பொழுது, எல்லாப் பொறுப்பையும் அவரே எடுத்துக்கொள்வார். வல்லமையுள்ளவராக, இரட்சித்து வழிநடத்துவார் (செப். 3:17). எந்த தீங்கு நம்மை தாக்க முயன்றாலும், அவர் நமக்கு முன்னதாக சென்று சகல தீங்கிற்கும் நம்மை தப்பும்படி காப்பார். அவருடைய வல்லமை நம்மை சுற்றிலும் அக்கினிமதில் போல பொல்லாங்கினின்று விலக்கிக் காத்து வழிநடத்தும். இதைத்தான் "உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்ல வருடைய நிழலில் தங்குவான்" (சங். 91:1) என்று வாசிக்கிறோம். ஆம்! அவரே நமக்கு அடைக்கலமும், கோட்டையுமாக இருக்கிறபடியால் நமக்கு என்ன குறைவு உண்டு?

ஒரு குடும்பம் வாடகைக்கு ஒரு வீட்டை எடுத்து அதில் குடிபுகுந்தனர். அந்த வீட்டின் சுற்றுப்புறம் பயங்கரமானதாய் இருந்தது. குடிகாரர்களால், விபச்சாரக்காரர்களால் நிறைந்த சூழ்நிலை. எப்பொழுதும் யாராவது தெருவில் சண்டை போட்டுக்கொண்டே இருப்பார்கள். இந்த சூழ்நிலையில் இந்த வீட்டிலேயே இருக்கலாமா? அல்லது வேறு எங்கேயாவது மாறிப்போகலாமா? என்று தடுமாறினாலும், கர்த்தர் நம்மை காத்து வழிநடத்துவார் என்ற விசுவாசத்தோடு குடும்பமாக ஆரம்பத்திலிருந்தே அமைதலாக ஜெபம் செய்து வந்தனர். இவர்களிடத்திலும் வம்புக்கும், சண்டைக்கும் ஒருசிலர் வந்து தொல்லைகொடுக்க முயன்றனர். ஆனால், இவர்களோ 'ஸ்தோத்திரம்' என்ற வார்த்தையை மட்டுமே உச்சரித்து வேறு ஒன்றையும் பேசாமல், கர்த்தரை உறுதியாய் பற்றிக்கொண்டனர். தங்கள் பிள்ளைகளுக்கும் அப்படியே பயிற்றுவித்தபடியினால் இது மற்றவர்களுக்கு ஆச்சரியத்தை கொடுத்தது. இப்படியும் வாழ முடியுமா? என்பது அவர்கள் கேள்வியாயிருந்தது. இந்த நிலைமையில் பல மாதங்களுக்குப் பின்பு அவர்கள் வீட்டில் ஒரு ஜெபக்கூட்டத்தை வாரம் ஒரு முறை ஆரம்பித்தார்கள். இதையெல்லாம் கண்ட அக்கம்பக்கத்தினர் மெதுமெதுவாக அதில் பங்கெடுக்க விரும்பி வந்தனர். நாட்கள் கடந்தன! கர்த்தர் அப்படிப்பட்ட பயங்கரமான வாழ்வு வாழ்ந்த அவர்களை, ஒவ்வொருவராக தம்முடைய தெய்வீக அன்பினால் இழுத்துக் கொண்டார். இதற்கெல்லாம் காரணம், அந்த குடும்பம் கன்மலையின்மேல் உயர்த்தப்பட்ட குடும்பமாய் இருந்தது தான்! இந்த விதமான சாட்சி உங்களுக்கும் உண்டா?

அன்பானவர்களே, நீங்களும் எந்தவித கடினமான சூழ்நிலையில் வாழ்ந்தாலும், இந்த குடும்பத்தைப் போல கன்மலையாகிய ஆண்டவர் மேல் நிலைத்திருப்பவர்களாக நற்சாட்சிகளாக இருப்பீர்களானால் உங்களையும் எல்லாத் தீங்குக்கும் விலக்கி மற்றவர்களுக்கும் முன்மாதிரியாக வாழும்படியான தெய்வீகக் கிருபையை தேவன் உங்களுக்கும் தந்தருளுவார் (ஏசாயா 26:4).

ஜெபம்: "அன்பு தெய்வமே! இன்று என்னையும் இந்த குடும்பத்தைப்போல கன்மலையாகிய உம்மிலே உறுதியாக நிலைத்திருக்க, சாட்சியாய் விளங்க, உம் தெய்வீக அன்பினால் வழிநடத்தும், ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தருக்கு பயப்பட கற்றுக்கொள்ளுங்கள்!

"உயிரோடிருக்கும் நாளெல்லாம், உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு பயப்பட கற்றுக்கொள்ளுங்கள்..." (உபாகமம் 31:13).

கர்த்தரை இரட்சகராக ஒருவர் எற்றுக்கொள்ளும்பொழுது, ஆண்டவர் தமது தெய்வீக ஞானத்தை, பயத்தை அவர்களுக்கு கொடுக்கிறார். அப்படி வாழ்கிறவர்களுக்கு தன்னைவிட்டு பின்வாங்காத நல்ல இருதயத்தையும் கொடுத்து, அவர்களோடு உடன்படிக்கை செய்கிறார் (எரே. 32:40). இதைத்தான் "கர்த்தருக்கு பயப்படுகிறவனுக்கு திடநம்பிக்கை உண்டு; அவன் பிள்ளைகளுக்கும் அடைக்கலம் கிடைக்கும்" (நீதி. 14:26) என்று வேதம் கூறுகிறது. இவ்விதமாக தெய்வபயம், தேவனுக்கு கீழ்ப்படிதல் இருக்கும்போது, தீமைக்கு விலகி வாழ அவர் பெலன் கொடுக்கிறார் (நீதி. 8:13). நன்மை செய்யவும், நற்கிரியைகளை வாழ்விலே கொள்ளவும், அனுதின வாழ்க்கையிலே வழிநடத்துகிறார். ஆண்டவரோடு இணைந்து அவருக்கு பயப்படும் பயத்தோடு வாழ்வது எத்தனை இன்பமானது! நான் அடிக்கடி கூறுகிறதுபோல, யோசேப்பு வாலிபனாக இருந்தபொழுதும் கர்த்தருக்கு பயந்து, ஒரு பெண்ணினால் ஏற்பட இருந்த தீமையை விட்டு விலகி ஓடினான். அதினிமித்தம் அவனை ஆண்டவர் எல்லாத் தீமைக்கும் விலக்கி மிகவும் ஆசீர்வதித்து உயர்த்தினார்! ஆகவே, கர்த்தருக்கு பயப்படுதலை நாமும் கற்றுக்கொண்டு, அதை செயல்படுத்தி, வாழ்வில் நிறைவான ஆசீர்வாதம் பெறுவோம்.

ஒரு பள்ளிக்கூடத்தில் ஒரு மாணவன் பெற்றோருடைய வழிநடத்துதலினால் எப்பொழுதும் உண்மையையே பேசி ஒழுக்கமாக நடந்து கொள்வான். இதை, கேடு நிறைந்த சில மாணவர்கள் கண்டு, எப்படியாவது அவனை பொய் சொல்ல வைக்க வேண்டுமென்று எவ்வளவோ முயற்சித்தனர். ஆனால், அவனோ தன் தாயிடம் இதைக் குறித்து சொல்லி, அழுதான். தாய் பக்தியுள்ளவர்களாக இருந்தபடியால், அவன் பள்ளிக்கு புறப்படுமுன்பு மகனுக்காக ஜெபித்து, ஆண்டவர் கரத்திலே ஒப்படைத்து அனுப்புவாள். கர்த்தருடைய கரம் அந்த மகன் மேல் இருந்தபடியினாலே, அவனை தீமை செய்ய வைக்கும்படி எத்தனை அதிகமாய் முயற்சித்தார்களோ, அத்தனை அதிகமாய் அந்த பையன்களுடைய வாழ்க்கையிலே பலவித பிரச்சினைகளை அனுபவிக்கும்படி ஆண்டவர் செய்தார். அப்பொழுதுதான் இந்த மாணவனை தவறு செய்ய தூண்டியது ஆண்டவருக்கு பிரியமில்லாதது என்பதை அந்த பொல்லாத மாணவர்கள் உணர்ந்து, அதன்பிறகு அவர்கள் பேசாமல் தங்கள் வழிகளிலே போனார்கள். இந்த மாணவனோ அதற்குபிறகு தொல்லைகள் எதுவுமின்றி, கர்த்தருக்கு சாட்சியாக பள்ளி வாழ்க்கையை முடித்தான்.

அன்பானவர்களே, உங்கள் வாழ்க்கையிலும் தீயவர்கள் பல இடறல்களை கொண்டு வந்துபோட நினைக்கலாம். ஆனால், இந்த மாணவனைப்போல பக்தி வைராக்கியத்தோடு நீங்கள் முடிவுபரியந்தம் கர்த்தரை உறுதியாய் பற்றிக்கொள்ளுங்கள், சகல தீமைகளையும் உங்களைவிட்டு விலக்கி, உங்களை யாவர் முன்பாகவும் கனப்படுத்துவார் (2 தெச. 3:3).

ஜெபம்: "அன்பின் இரட்சகரே! உமக்கு பயந்து நடப்பது எனக்கு எத்தனை ஆசீர்வாதத்தை வாழ்க்கையிலே கொண்டு வருகிறது! இன்றுமுதல் உமக்கு பயப்படும் இந்த தெய்வீக பயத்தை என் உள்ளத்திலேயும் நிறைவாய் தாரும். என்னோடுகூட இருந்து, நீர் விரும்பும் வழியிலே நடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

தீங்கின் காலத்தில் கர்த்தர் உனக்கு சகாயம் பண்ணுவார்!

"உன்னில் மீதியாயிருப்பவர்கள் நன்மையடைவார்கள்; தீங்கின் காலத்திலும் நெருக்கத்தின் காலத்திலும் உனக்காக நான் சத்துருவுக்கு எதிர்ப்பட்டு, உனக்கு சகாயஞ்செய்வேன் என்று மெய்யாகவே சொல்லுகிறேன்" (எரேமியா 15:11).

இந்த உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது. பொல்லாதவர்கள் நம்மை சுற்றி நெருங்கி நிற்கிறார்கள். பொல்லாங்கனாகிய பிசாசும் நம்மை எப்படி வீழ்த்தலாம் என்று வகை தேடி சுற்றித்திரிகிறான் (1 பேதுரு 5:8). இதன் மத்தியில் நாம் சமாதானத்தோடு வெற்றி வாழ்க்கை வாழ முடியுமா? என்பது அநேகருடைய உள்ளத்தில் எழும் கேள்வி. கர்த்தருடைய துணையோடு நிச்சயமாக வெற்றி பெற முடியும். தாவீது, சவுல் ராஜாவின் பொறாமையினிமித்தமாக எவ்வளவோ அலசடிப்பட்டான். தீங்கின்மேல் தீங்கு வந்தது. மன சமாதானத்தை இழந்தான், தங்க இடமில்லை. எப்பொழுது என்ன விதத்தில் தீங்கு வருமோ என்ற பயம்! அவைகளின் மத்தியிலும், "கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்" (சங். 34:1) என்று அவன் சொல்லுகிறது எத்தனை ஆச்சரியமாய் இருக்கிறது! ஆம், தாவீதுடைய வாழ்க்கை அனுபவத்தை வேதத்திலே வாசித்துப் பாருங்கள். சவுலால் அவனை ஒன்றும் செய்ய முடியவில்லை. கர்த்தர் அவனுக்கு எப்பொழுதும் சகாயராய் இருந்தார்! அவனை யாதொன்றும் அசைக்க முடியவில்லை (எபி. 13:6).

காருண்யா கல்வி ஸ்தாபனத்தை ஆரம்பித்து எத்தனையோ பாடுகளை நாங்கள் கடந்து செல்லவேண்டிய நிலைமைகள் ஏற்பட்டன. பொறாமைக்காரர்கள், நயவஞ்சகர்கள், எரிச்சலடைந்தோர், அதை எப்படியாவது இழுத்து மூடிவிட வேண்டுமென்று எவ்வளவோ முயன்றனர். தாவீதைப்போல, நாங்களும் அலசடிப்பட்டோம். ஆனால், கர்த்தரை மட்டுமே உறுதியாக பற்றிக்கொண்டோம். அவர் எங்களோடிராமல் போயிருந்தால் எங்களை பகைவர்கள் அப்படியே விழுங்கியிருப்பார்கள். ஆனால், கர்த்தர் எங்களை ஒருநாளும் கைவிடவில்லை. இன்று பார்க்கும்போது, அப்படி தீங்கு செய்தவர்களையும், பொறாமைக்காரர்களையும் ஆண்டவர் இருக்கிற இடம் தெரியாமல் மாற்றிப்போட்டார். கர்த்தருடைய தயவினால் கல்லூரி வளர்ந்து பெருகும்படி அவரே அருள் செய்து வழிநடத்தி வருகிறார். ஒன்றும் உங்களை சேதப்படுத்தமாட்டாது என்பது எத்தனை உண்மையான ஒரு வாக்கு (லூக்கா 10:19).

அன்பானவர்களே, நீங்களும்கூட வாழ்க்கையில் இப்படி சோதனைகளின் மத்தியில் மனம் சோர்ந்து போயிருக்கலாம். "என் வாழ்வு போதும் ஆண்டவரே" என்று ஊழியம் செய்வோரும் சலித்துக்கொண்டிருக்கலாம். ஆனால், ஊழியக்காரனாகிய எலியாவை அப்படியே ஆண்டவர் விட்டுவிட்டாரா? எவ்வளவு அழகாய் அவருக்கு ஒரு நேர்த்தியான முடிவை கொடுத்தார். அப்படியே உங்கள் ஒவ்வொருவரையும் தீங்கின் காலத்தில் சகாயம் செய்து முடிவுபரியந்தம் காத்து நடத்துவார் (எபி. 7:25).

ஜெபம்: "அன்பு தெய்வமே! நீர் எனக்கு பாதுகாவலராக, இரட்சகராக இருக்கிறபடியால் நான் என்றைக்கும் கவலைப்படபோவதில்லை. தாவீதை அழகாய் காப்பாற்றி உயர்த்தினவர், காருண்யா ஸ்தாபனத்தை இதுவரை நிலைப்படுத்தினவர், இன்றுமுதல் என் வாழ்வையும் காப்பாற்றி, உமக்கு பிரியமாக வாழ வழிநடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

உங்கள் விண்ணப்பத்திற்கு செவிகொடுப்பேன்!

"நீங்கள் கூடிவந்து, என்னைத் தொழுதுகொண்டு, என்னை நோக்கி விண்ணப்பம்பண்ணுவீர்கள்; நான் உங்களுக்கு செவிகொடுப்பேன்"

(எரேமியா 29:12).

ஆண்டவர் ஜெபத்தையெல்லாம் கேட்கிறவர் (சங். 65:2). நம்முடைய கெஞ்சுதலுக்கு செவிசாய்க்கிறவர்! அவரை நாம் தொழுதுகொள்ளும்பொழுதெல்லாம் அவர் நமக்கு சமீபமாயிருக்கிறார் (உபா. 4:7). நம் வேண்டுதல்களையெல்லாம் கவனமாக கேட்கிறார். நம்முடைய வாழ்க்கை அவருக்கு பிரியமாய் இருக்கும்பொழுது, உடனடியாக உத்தரவு தருகிறார். எவ்வளவு அருமையான தெய்வத்தை நமக்கு துணையாக கொண்டிருக்கிறோம் என்று பாருங்கள்! ஆகவே, என் கவலையை யார் தீர்ப்பார்? நான் யாரிடத்தில் போய் என் மனதைத் திறந்து ஊற்ற முடியும்? என்றெல்லாம் சிந்திக்காதிருங்கள். கர்த்தர் உங்களுக்கு போதுமானவர்! அவர் தேவாதி தேவன், சர்வவல்லமையுள்ள ஆண்டவர்! உங்கள் கண்ணீர் நிறைந்த விண்ணப்பத்திற்கு நிச்சயம் பலன் கொடுப்பார் (ஏசாயா 25:8).

ஒரு குடும்பத்திலே பக்தியோடு காலையும் மாலையும் குடும்பமாய் பிரார்த்தனை செய்வார்கள். சந்தோஷமாய் வாழ்ந்து வந்தார்கள். திடீரென்று ஒரு பிள்ளைக்கு சரீரத்தில் சுகவீனம் ஏற்பட்டது. இதனால் குடும்பத்திலே யாவருக்கும் மனவேதனை. அதே சமயத்திலே தகப்பனாருக்கு வேறு ஊருக்கு மாறுதலானது. இப்படி மாறி, மாறி ஒரே நேரத்திலே பல்வேறு திசைகளிலிருந்து வேதனையான சம்பவங்கள் வந்தன. இதனால் ஒரு கணம் அவர்கள் திகைத்து தடுமாறினார்கள். எனினும் அவர்கள் ஒன்றாக இணைந்து ஒருமனதோடு கர்த்தரை தேடுவதை மட்டும் விட்டுவிடவே இல்லை. தங்களுக்கு ஒரே ஒருவர் தான் துணை. அது ஆண்டவருடைய தெய்வீகத் துணை என்பதை உணர்ந்தவர்களாய் கர்த்தரை நோக்கி, தங்கள் விண்ணப்பங்களை ஏறெடுத்தனர். அவர்களுடைய குடும்பத்திலே இப்படிப்பட்ட பாடுகள் வந்தபோது, உறவினர்களும் மற்றும் தெரிந்தவர்களும் கேலியாக பேசினர். ஆனால், கர்த்தர் அவைகளையெல்லாம் கண்டு, தன்னை நம்பிய அவர்களை கைவிடாமல், எல்லாவற்றையும் மாற்றி, அடுத்தடுத்து அற்புதங்களை செய்து, யாவரும் வியக்கும்படி அவர்கள் விண்ணப்பங்களுக்கு செவிகொடுத்து கனப்படுத்தினார்.

ஆம்! அன்பானவர்களே, நீங்களும் உங்கள் விண்ணப்பங்களை குழந்தையைப் போல, ஆண்டவரிடத்தில் அப்படியே சொல்லிவிடுங்கள். "அவரால் ஆகாதது ஒன்றுமில்லை" என்ற விசுவாசத்தோடு, அவருடைய ஒத்தாசைக்காக அவரையே நோக்கிப் பார்த்துக் கொண்டேயிருங்கள் (சங். 121:1,2). ஏற்ற சமயத்திலே எல்லா நன்மைகளையும் பரத்திலிருந்து அனுப்புவார். உங்கள் விண்ணப்பங்கள் ஒவ்வொன்றுக்கும் செவி கொடுப்பார். சோர்வுக்கு இடங்கொடாமல், கர்த்தர் மேல் முழுநம்பிக்கையுடன் என் ஆண்டவரால் ஆகாதது ஒன்றுமில்லை என்ற விசுவாசத்துடன் காத்திருங்கள். பெரிதான நன்மையை பெறுவீர்கள் (1 யோவான் 5:4).

ஜெபம்: "அன்பின் இரட்சகரே! நீர் எனக்கு எவ்வளவு சமீபமாயிருக்கிறீர் என்பதை உணர்ந்து கொண்டேன். இன்றுமுதல் உம்மை உறுதியாய் பற்றிக்கொண்டு, என் காரியங்களையெல்லாம் உம்முடைய பாதத்தில் வைத்துவிட எனக்கும் அருள்தாரும். என்னை ஆசீர்வதித்து வழிநடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

திக்கற்ற உங்கள் பிள்ளைகளை கர்த்தர் காப்பார்!

"திக்கற்றவர்களாய்ப்போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன்" **(எரேமியா 49:11).**

"நான் உங்களை திக்கற்றவர்களாக விடேன்" (யோவான் 14:18) என்று ஆண்டவர் அருள்வாக்கு மொழிந்திருக்கிறார். திக்கற்றவர்கள் அவரிடத்தில் இரக்கம் பெற்றுக்கொள்ளும்படி கிருபை தருவார். ஆகவே, இந்த உலகத்திலே நானும் என் பிள்ளைகளும் திக்கற்றவர்களாய் இருக்கிறோமே, எங்களுக்கு ஆறுதல் இல்லையே, அடைக்கலம் இல்லையே என்று கலங்குகிற உங்களைப் பார்த்து அவரும் கலங்குகிறார். உங்களை கண்மணிபோல காக்க வல்லவராயிருக்கிறார். ஆனால், நீங்கள் அவரை உறுதியாய் பற்றிக்கொண்டிருக்கிறீர்களா? நீங்கள் கருத்தாய் அவரை தேடும்பொழுது உங்களுக்கு காணப்படுவார் (1 நாளா. 28:9). நீங்கள் மனுஷருடைய உதவியை மட்டும் நாடுவீர்களானால் உங்களை அவர் கைவிடுவார். ஆசீர்வாதம் பெறுவதும், பெறாமலிருப்பதும் உங்கள் கையில்தான் இருக்கிறது.

நன்றாக வேலை பார்த்து, நல்ல ஊதியம் பெற்று, செழிப்பாக வாழ்ந்த ஒருவர் கர்த்தரை உண்மையும், உத்தமமுமாய் தேடினபடியால், ஆண்டவர் அவரை தம்முடைய ஊழியத்தை செய்யும்படி அழைத்தார். செழிப்பாய் இருந்த அவருடைய வாழ்க்கையில் குறைவுகள் அவ்வப்போது ஏற்பட ஆரம்பித்தன. விசேஷமாக, பிள்ளைகளுக்கு கல்வி சம்பந்தமாக பணம் கட்ட வேண்டிய சூழ்நிலைகள் வரும்பொழுது, என்ன செய்வதென்று திகைக்கும் நிலைமை வந்தது. ஆனால், அந்த ஊரிலே அவர்களுடைய வாழ்க்கையை கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்த ஒரு வியாபாரி இருந்தார். அவரும் அதிகமாய் பணத்தில் புரளுபவர் அல்ல. எனினும், கர்த்தரை நேசித்த ஒரு மனிதர். திடீரென்று இப்படி ஊழியத்திற்கு வந்துவிட்டாரே, இவரையும், இவர் பிள்ளைகளையும் யார் காப்பாற்றுவது, நம்மால் இயன்றதை அவர்களுக்கு செய்ய வேண்டுமென்று ஒரு பாரத்தை ஆண்டவர் அவர் மனதில் கொடுத்தார். ஒரு நாள் அந்த ஊழியரிடம் வந்து, "ஐயா, உங்கள் பிள்ளைகளுக்கு கல்லூரி படிப்பிற்கான செலவெல்லாம் ஏராளமாக இருக்குமே; என்னால் இயன்றதை ஒரு காணிக்கையாக உங்களுக்கு தருகிறேன். அதை உபயோகித்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி ஒரு கவரைக் கொடுத்தார். பாருங்கள், கர்த்தர் தம்முடைய ஊழியர்களை, அவர்கள் பிள்ளைகளை திக்கற்றுபோகாதபடி யார் மூலமாவது, எப்படியாவது வழிநடத்துகிறார்.

எனக்கு அன்பானவர்களே, இதேபோன்று உங்களையும் ஆண்டவரே வழிநடத்துவார். ஏன் வீணாக பயந்து கவலைப்படுகிறீர்கள்? இன்று உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் அவரால் பராமரிக்க முடியும். உங்கள் வாழ்வின் தேவைகள் அனைத்தையும் அவரால் கொடுக்க முடியும். உங்கள் பிள்ளைகள் திக்கற்றவர்களாய் போகும்போது, நீங்கள் சஞ்சலப்படவேண்டாம். கர்த்தர் கரத்திலே அவர்களை ஒப்படைத்து விடுங்கள் (உபா. 10:18).

ஜெபம்: "அன்பின் தெய்வமே! திக்கற்றவர்களாய் போகும் பிள்ளைகளை நீர் காப்பாற்றுகிறீர் என்பதை நான் அறிந்துகொண்டேன். இன்று என்னையும், என் குடும்பத்தையும், என் பிள்ளைகளையும்கூட அப்படியே ஒவ்வொருநாளும் காத்து வழிநடத்துவீர், கைவிடமாட்டீர் என்று விசுவாசத்துடன் உமக்கு நன்றி செலுத்துகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தாவே உம்முடைய வழிகளை எனக்கு தெரிவியும்!

"கர்த்தாவே, உம்முடைய வழிகளை எனக்கு தெரிவியும்; உம்முடைய பாதைகளை எனக்கு போதித்தருளும்".
(சங்கீதம் 25:4).

இந்த வருடத்தின் ஒன்பதாவது மாதத்தில் நாம் நுழைந்திருக்கிறோம். நம்முடைய மனதில் ஒருவேளை பல்வேறு பயங்களும், கவலைகளும் தோன்றலாம். ஆனால், மேற்கண்ட வசனத்தின்படி, நாம் ஜெபிக்கும்பொழுது, அவருடைய வழிகளை, பாதைகளை அவர் போதித்து, இந்த மாதம் முழுவதும் அவருடைய அரவணைப்பிற்குள் அழகாய் வழி நடத்துவார். நம்முடைய பாதையில் அவர் வெளிச்சமாக முன்னின்று எல்லாவித இருளையும், துன்பத்தையும் தம்முடைய தெய்வீக வல்லமையால் ஒன்றுமில்லாமல் மாற்ற அவர் வல்லமையுள்ளவராயிருப்பார் (2 சாமு. 22:29, சங். 18:28). கர்த்தரை நீங்கள் நோக்கி பார்க்கும்போது, ஒத்தாசை வரும் பர்வதமாக ஆச்சரியமாய் அவர் வழிநடத்துவார் (சங். 121:1,2).

ஒரு குடும்பத்திலே மாதத்தின் முதல் நாளிலே வந்த சம்பளம் பல காரியங்களினிமித்தம் விரைவில் சில நாட்களிலேயே செலவாகிப்போகும். இந்த மாதம் முழுவதையும் எப்படி சமாளிப்பது? யார் நமக்கு உதவி செய்வார்கள்? ஏராளமான கடன் வேறு இருக்கிறது; வட்டியும் கட்ட வேண்டுமே! இந்த நிலைமையில் கடன் தந்தவர்கள் தொல்லை ஒருபுறம்! என்று கலங்கிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது, அப்படியே அதை ஆண்டவரிடம் சொல்லி, குடும்பமாக மன்றாடினார்கள். "ஆண்டவரே, உம்மை நோக்கி காத்திருக்கிறோம். நீரே எங்கள் நம்பிக்கை! எங்களுக்கு எந்த பக்கம் திரும்புவது என்றே தெரியவில்லை. ஆனால், நாங்கள் வெட்கப்பட்டு போகாதபடி எங்களுக்கு உதவி செய்யும். உம்முடைய வழிகளை எங்களுக்கு தெரிவியும். நீரே முன்னின்று கோணலான எல்லாக் காரியங்களையும் மாற்றி, செவ்வையான வழியிலே எங்களை நடத்தும்" என்று கருத்தாய் பிரார்த்தனை செய்தார்கள். எப்படி கர்த்தர் மீதி நாட்களில் வழி நடத்தினாரோ, அது அவர்களுக்கே புரியவில்லை. ஆம், ஆண்டவர் அதிசயமானவர்! அந்தந்த நேரம் தந்து தேவைகளை அழகாய் சந்திப்பார். அவர்கள் பயந்ததுபோல, ஒன்றும் நேராதபடி மாதம் முழுவதும் அருமையாக வழி நடத்தினார். அந்த குடும்பத்தாருக்கு மாதம் முழுவதும் போதுமானவராகவும், வழிகளை காண்பிக்கிறவராகவும் இருந்த கர்த்தர் உங்களை எப்படி கைவிடுவார்?

ஆம்! அன்பானவர்களே, இந்த மாதம் எப்படி நடக்குமோ என்று நீங்களும் கலங்கி கவலைப்படுகிறீர்களோ? கவலைப்படுவதினால் என்ன பயன்? அதற்கு பதிலாக உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள் (பிலி. 4:6). ஏனென்றால், அவர் உங்களை விசாரித்து, உங்கள் குறைவுகளையெல்லாம் மாற்றி, நிறைவாய் வழிநடத்தி, இரட்சிக்கிறவர் என்பதை மறந்து போகாதிருங்கள் (1 பேதுரு 5:7).

ஜெபம்: "அன்பின் தெய்வமே! இன்றுமுதல். இந்த மாதம் முழுவதும் நீரே என் கரத்தைப் பிடித்து வழிநடத்தும். நீர் அதிசயமானவர்! ஆகவே, நான் கவலைப்படுவதே இல்லை. என் காரியங்களையெல்லாம் உம்மிடத்தில் சாட்டிவிடுகிறேன். நீரே என்னோடுகூட இருந்து என் தேவைகளைத் தந்து, பாரங்களையெல்லாம் மாற்றி, சகலத்தையும் பொறுப்பெடுத்துக் கொள்ளும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தரோடிசைந்திருங்கள்!

"கர்த்தரோடிசைந்திருக்கிறவன், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்"

(1 கொரிந்தியர் 6:17).

கர்த்தரோடிசைந்திருக்கிறது என்பது ஒரு தெய்வீக அனுபவம். நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தில் முழுவதுமாக ஆண்டவரோடு இணைந்து செயல்படுவதுதான் அந்த தெய்வீக அனுபவம்! இப்படி அவரோடிசைந்திருக்கிற அனுபவத்தை பெற்றவன் தாவீது! ஏனென்றால் அவரை எப்பொழுதும் அவன் தனக்கு முன்பாக வைத்திருந்தான் (சங். 16:8). அவனுடைய வலதுபாரிசத்திலும் அவர் தங்கியிருந்தார். இந்தவித தெய்வீக அனுபவத்தை அவன் வாழ்வில் கொண்டிருந்ததினால் தான் அவன் துன்பத்தின் எல்லையினை எய்தியபொழுதெல்லாம் அசைக்கப்படாமல், திடமனதோடு, கர்த்தர்மேல் முழு நம்பிக்கை வைத்து ஆசீர்வாதம் பெற்றான். உங்கள் வாழ்க்கையிலும், மனுஷருடைய துணை, சிநேகம் இவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, கர்த்தரை தேடுவதையும், அவரோடு இணைந்து வாழ்வதையும் அலட்சியப்படுத்தும்பொழுது அவரும் உங்களை விட்டு தூரமாய் விலகியிருப்பார். மனுஷராலும் கைவிடப்படும் நிலை வரும்பொழுது, நீங்கள் என்ன செய்வீர்கள்? வேண்டாம் பிரியமானவர்களே! இன்றே கர்த்தரோடு பேசி, உங்கள் வாழ்வை அவருக்கு பிரியமானதாக்கி, அவரோடு இசைந்த வாழ்வை வாழ்ந்து, அவருடைய நிறைவான ஆசீர்வாதத்தைப் பெறுங்கள்.

சாது சுந்தர் சிங் என்ற பக்திமான் முதலில் ஆண்டவரை அறியாதவராக இருந்தார். ஆனால், ஒருநாளில் அவர் ஆண்டவரை அறிந்து அவரை தனது தெய்வமாக ஏற்றுக்கொண்டபோது, தாவீது வாழ்ந்ததுபோல, கர்த்தரோடிசைந்து வாழ்ந்தார். ஒரு சமயம் ஒரு காட்டில் தனிமை நாடி, ஜெப தியானத்தில் ஈடுபட்டிருந்தார். அவ்வமயம் ஒரு புலி அந்த வழியாய் வந்தது. அது அவரண்டை வந்தபொழுது, அதுவும் அவர் பக்கத்தில் அமைதியாகப் படுத்துக்கொண்டிருந்தது. என்ன ஆச்சரியம் பாருங்கள்! கர்த்தர் அவரோடு இருந்தபடியினால் புலியும் தன் குணத்தை மாற்றி அமைதியானது. இப்படித்தான் பிசாசும் அவனுடைய தோழர்களும் கூடி, நமக்கு தொல்லை கொடுக்க பல்வேறு திட்டங்களை தீட்டலாம். ஆனால், நாம் அவ்வமயங்களில் எல்லாம் கர்த்தரை நோக்கி ஜெப தியானத்தில் ஈடுபட்டு அவரோடிசைந்திருக்கும்போது, எந்தவிதத் தீங்கும் நம்மை ஒன்றும் செய்ய முடியாது. ஏனென்றால், நம்மோடுகூட இருக்கிற ஆண்டவர் சர்வ வல்லவர், நம்மை தமது செட்டைகளின்கீழ் மறைத்து பாதுகாப்பவர் (சங். 91:1).

ஆகவே, உங்களுடைய வழியை யோசித்துப் பார்த்து, குறைகளையெல்லாம் கர்த்தரிடத்தில் அறிக்கையிட்டு, அவரோடிசைந்துகொள்ளுகிற இன்பமான வாழ்க்கையை பெற்றுக்கொண்டு, தேவன் தரும் ஆசீர்வாதங்களால் நிறைந்து வாழுங்கள் (எரே. 17:10).

ஜெபம்: "அன்பின் தெய்வமே! உம்மோடிசைந்து வாழ்கிற தெய்வீக அனுபவத்தை எனக்கும் இன்றுமுதல் தாரும். உலகம், மாமிசம், பிசாசு இவைகளுக்கு அடிமைப் படாமல், பரிசுத்த வாழ்க்கையை வாழ நீரே என்னை உம்முடைய தெய்வீக வழிகளில் கரம்பிடித்து நடத்தும். எனக்கு எதிராக பிசாசும், மற்ற மக்களும் பலவிதங்களிலும் எதிர்த்து வந்தாலும், சற்றும் சோர்வடையாமல், அச்சமயங்களில் எல்லாம் உம்மையே நோக்கிப் பார்த்து, உம்முடைய ஒத்தாசையினால் ஜெயம் பெற்று வாழ உமது தெய்வீகக் கிருபையை அருளிச் செய்யும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்!"

உன் நம்பிக்கை வீண்போகாது!

"நிச்சயமாகவே முடிவு உண்டு; உன் நம்பிக்கை வீண்போகாது"

(நீதிமொழிகள் 23:18).

நம் குடும்பத்திலுள்ள மக்களும், பணிபுரிகிற இடத்திலுள்ள நண்பர்களும் பல்வேறு காரியங்களை நமக்கு செய்து தருவதாக வாக்களிக்கின்றனர். நாமும் அவர்களுடைய வார்த்தையில் முழு நம்பிக்கை வைத்துவிடுகிறோம். ஆனால், அவர்கள் உதவி தேவைப்படும் சமயம் வரும்பொழுது அவர்கள் வார்த்தையில் அவர்கள் நிலைத்திருப்பதில்லை. அப்பொழுது நாம் சோர்ந்து போகிறோம். "எவ்வளவாய் நம்பிக்கை வைத்திருந்தேனே, இப்படி ஏமாற்றிவிட்டார்களே" என்று கலங்குகிறோம். ஆனால், அதே சமயத்தில் கர்த்தர்மேல் நம் முழு நம்பிக்கையை வைக்கும்பொழுதோ அது ஒருநாளும் வீணாகாது. நமக்கு பாக்கியத்தை மட்டுமே முடிவில் உண்டுபண்ணும். ஆகவே, மனிதர்மேல் வைக்கும் நம்பிக்கையை விட்டுவிட்டு, கர்த்தர்மேல் முழு நம்பிக்கை வைக்க கற்றுக்கொள்வோம் (எரே. 17:7,8). யோபு என்ற பக்தன் "அவர் என்னைக் கொன்றுபோட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்" (யோபு 13:15) என்று நம்பி, இரட்டத்தனையான நன்மை பெற்றான் (யோபு 42:10).

தாமஸ் ஆல்வா எடிசன் என்னும் விஞ்ஞானி தான் கண்டுபிடித்திருந்த எல்லா கண்டுபிடிப்புகளையும் தன்னுடைய ஆராய்ச்சி கூடத்தில் வைத்திருந்தார். ஒருநாள் எப்படியோ அங்கு தீ பிடித்து, மடமடவென்று பரவி, அவரது ஆராய்ச்சிக் கூடத்திலிருந்த ஆராய்ச்சிக் குறிப்பு கட்டுகளெல்லாம் எரிந்து போனதைக் கண்டு அவர் வேதனையுற்றார். தண்ணீர் ஊற்றி அந்த தீயை அணைக்க முயன்றார். ஒரு கட்டு மாத்திரம் அவர் கையில் முழுவதும் எரியாமல் கிடைத்தது. அதைத் திறந்து பார்த்தபொழுது, அதன் நடுவில் அவருடைய படம் எரியாமல் முழுவதுமாக இருந்ததைக் கண்டார். உடனே அவருக்குள் ஒரு எண்ணம் வந்தது. இவைகள் போய்விட்டால் என்ன? என் நம்பிக்கை முற்றிலும் போய்விடுமோ! மறுபடியும் அவைகளை கண்டுபிடிக்க எவ்வளவு நேரமாகப்போகிறது" என்று ஒரு புது நம்பிக்கை அவருக்குள் பிறந்தது. அந்த நம்பிக்கையை வைத்துக் கொண்டு முன்பைக்காட்டிலும் அதிகமாய் அருமையான காரியங்களை கண்டுபிடிக்க அவருக்கு ஏதுவாயிற்று.

ஆம், அன்பானவர்களே! இப்படித்தான் நம்முடைய நம்பிக்கையில் அல்லது மற்ற மனிதர் மேல் நாம் வைக்கும் நம்பிக்கையில், அநேக சமயங்களில் ஏமாற்றமடைகிறோம். கர்த்தர் ஒருநாளும் மாறாதவர். அவர்மேல் நீங்கள் வைக்கும் நம்பிக்கையோ நிச்சயமாகவே ஒருநாளும் வீண்போகாது. அதற்கு பதிலாக உங்களை பாக்கியவான்களாக, பாக்கியவதிகளாக ஆண்டவர் மாற்றுவார். ஏனெனில், "கர்த்தர் தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார்" (நாகூம் 1:7), அதினிமித்தம் நம்மை கனம்பண்ணி, தம்மை நம்புகிறவர்கள் ஒருநாளும் வெட்கப்பட்டு போவதில்லை என்ற உண்மையை நாம் அறியும்படி செய்கிறார்.

ஜெபம்: "அன்பின் இரட்சகரே! இந்த உலகில் மனிதர்மேல் என் நம்பிக்கையை வைத்து, எத்தனை சமயங்களில் ஏமாற்றமடைந்துள்ளேன். இன்றுமுதல் சர்வவல்ல தேவனாகிய உம்மீதே என் முழு நம்பிக்கையையும் வைத்து, உம்மிலே முழுவதுமாக சார்ந்து வாழவும், அதன்மூலம் நீர் தரும் நிறைவான ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளவும் உம் தெய்வீக வழியிலே நீரே என்னை நடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

ஆண்டவரிடம் என் சஞ்சலத்தை ஊற்றுவேன்!

"அவருக்கு முன்பாக என் சஞ்சலத்தை ஊற்றுகிறேன்; அவருக்கு முன்பாக என் நெருக்கத்தை அறிக்கையிடுகிறேன்" **(சங்கீதம் 142:2).**

இந்த உலகம் துன்பங்களும், கண்ணீரும், போராட்டங்களும் நிறைந்த ஒன்றாகும்! நாம் அனைவருமே அப்படிப்பட்ட நாட்களில் கலங்குகிறோம், கண்ணீர் விடுகிறோம், செய்வதறியாது திகைக்கிறோம். அப்படிப்பட்ட சமயங்களில் திக்கற்றநிலை, தனிமை, இந்த உலகில் யாருமே இல்லையே என்ற கவலை நம்மை தவிக்க வைக்கிறது. கர்த்தரோ அச்சமயங்களில் நம்மை திடன்கொள்ளவும், அவைகளினின்று ஜெயம் பெறவும் கிருபை புரிவார் (யோவான் 16:33).

சமீபத்தில் புருஷனை இழந்த ஒரு அன்பு சகோதரி என்னிடம் வந்து கண்ணீர்விட்டு கதறினார்கள். "ஏன் எனக்கு இந்த நிலை? என் புருஷன்தானே எனக்கு எல்லாமுமாய் இருந்தார்" என்று கூறி அழுதார்கள். இந்த சஞ்சலங்கள் நிறைந்த வாழ்க்கையிலே நமக்கு நம்பிக்கை, ஆறுதல், அடைக்கலம் யாவும் தரும் ஆண்டவர் ஒருவர் உண்டு. அவர் மாறாதவர்! அவருக்கு முன்பாக நம் சஞ்சலத்தை ஊற்றலாம், நெருக்கத்தை அறிக்கையிடலாம். அவர் நமக்கு சமாதானம் தந்து, நம்மை கரம்பிடித்து வழிநடத்துவார்.

ஒரு அன்பான மனைவி இறந்தபிறகு, அவளது கணவன் தினமும் கல்லறைக்கு செல்வான். அவள் உயிரோடிருப்பதுபோல நினைத்துக்கொண்டு நல்ல காரியங்களையும் சரி, தீய காரியங்களையும் சரி அப்படியே நேரில் பேசுவதுபோல் நினைத்து பேசுவான். அப்படி பேசி முடித்தபிறகு, அவனுக்குள் ஒரு மனநிறைவு, சந்தோஷம் வரும். பிறகு வீடு திரும்பி விடுவான். இப்படி எத்தனை நாளைக்கு செய்ய முடியும்? ஆனால், இதே காரியத்தை இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் பாதபடியில் அமர்ந்து, அவரிடம் பேசுகிற வழக்கம் கொள்வோமானால், அவர் எவ்வளவாய் நம்மைக் குறித்து சந்தோஷப்படுவார். ஏனென்றால், மரித்துப்போனவர்கள் உயிரோடு வந்து, நாம் பேசும் வார்த்தையை கேட்கப்போவது கிடையாது. ஆனால், ஆண்டவரோ நாம் கூறும் ஒவ்வொரு வார்த்தைக்கும் பதில் தருகிறவர்! "உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்" (நீதி. 3:6; சங். 37:5).

ஆகவே, அன்னாள் ஆசீர்வதிக்கப்பட்டதுபோல நீங்களும் உங்கள் மனக்கிலேசத்தையெல்லாம் அவரிடம் ஒப்படைத்து, நீங்கள் நினைக்கிறதற்கும், வேண்டிக்கொள்ளுகிறதற்கும் அதிகமான ஆசீர்வாதங்களை ஆண்டவரிடத்தில் பெற்று வாழுங்கள். அப்பொழுது அன்னாள் பெற்றுக்கொண்ட எல்லாப் புத்திக்கும் மேலானதும், ஆண்டவரே கொடுப்பதுமான தெய்வீக சமாதானம் (பிலி. 4:7; 1 சாமு. 1:18) உங்கள் உள்ளத்தை நிரப்பி, சஞ்சலங்களை எல்லாம் மாற்றிப்போடும்.

ஜெபம்: **"அன்பின் தெய்வமே! நீர் எனக்கு போதுமானவராக இருக்கிறீர். என் சஞ்சலம், நெருக்கத்தையெல்லாம் என் விசுவாசத்தை துவக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற உம்மிடமே ஊற்றுகிறேன். இனி நீரே எனக்காக யாவற்றையும் செய்து முடிக்கப்போகிறீர் என்று இன்றுமுதல் விசுவாசத்தோடு உமக்கு நன்றி செலுத்துகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"**

நீதியின்மேல் பிரியப்படுகிற கர்த்தர்!

"கர்த்தர் நீதியுள்ளவர், நீதியின்மேல் பிரியப்படுவார்..." **(சங்கீதம் 11:7).**

நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் ஆண்டவருக்கு முன்பாக ஒரு திறந்த புத்தகம்போல் இருக்கிறது. நாம் எப்படிப்பட்டவர்களாய் வாழ்கிறோம்? நீதியின் வழிகளில் நடக்கிறோமா? அல்லது அநீதியில் பிரியப்படுகிறோமா? என்பதையெல்லாம் அவர் காண்கிறவராயிருக்கிறார். "ஆண்டவரே, நீர் நீதியுள்ளவர், நீதிமான்மேல் பிரியப்படுபவர்! என்னையும் உம்முடைய சமுகத்திலே ஒப்படைக்கிறேன். நீர் எப்படி என் வாழ்வு நீதி நிறைந்ததாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறீரோ அல்லது பிரியப்படுகிறீரோ அவ்வாறு நான் நடக்க எனக்கு அருள்தாரும். கொஞ்சமும் என் வாழ்வில் அநீதி இல்லாதபடி காப்பாற்றும்" என்று தினமும் பிரார்த்தனை செய்வோமானால், அவர் நம்மை நடத்தும் வழி ஆச்சரியமாக இருக்கும். பக்தர்கள் யாவரும் அவ்வாறுதான் ஜெபம்பண்ணி ஜெபம்பண்ணி, தங்கள் வாழ்வில் ஆண்டவருடைய ஆசீர்வாதத்தை பெற்றிருக்கிறார்கள். நீதிமான்களாக சந்ததி சந்ததியாக நடந்து வந்திருக்கிறார்கள் (ரோமர் 6:13).

ஒரு குடும்பத்தில் இரண்டு சகோதரர்கள் இருந்தார்கள். மூத்தவன் வியாபாரம் செய்து வந்தான். அதில் நிறைய பணம் அவனுக்கு கிடைத்தது. இளையவனோ ஒரு கம்பெனியில் சாதாரண குமாஸ்தாவாக இருந்தான். அவனும், அவனுடைய மனைவியும் ஆண்டவரை உண்மையாய் தேடுகிறவர்களாக, கிடைக்கும் கொஞ்சம் வருவாயில் சந்தோஷமாக வாழ்நாளை கடத்தி வந்தனர். அண்ணனோ பக்தியற்றவன். தன் தம்பியின் எளிய நிலைமையைப் பார்த்து பரியாசம் செய்வான். நீ தேடும் கடவுள் உனக்கு தேவையான பணத்தை கொடுக்க வேண்டியதுதானே! ஏன் அவர் கொடுக்கவில்லை? என்று பரிகசிப்பான். நாட்கள் கடந்தன! திடீரென்று அண்ணனுக்கு வியாபாரத்தில் போட்டி வர ஆரம்பித்தது. மடமடவென்று வியாபாரம் குறைவுபடத் தொடங்கியது. ஆனால், தம்பியோ, உண்மையும் நீதியுமாய் உழைத்தபடியினால், வேலையில் உயர்வு பெற்றான். செழிப்பையும் ஆண்டவர் அருளிச்செய்தார். அப்பொழுதுதான் அண்ணன், தன் தம்பியைப்போல் ஆண்டவரை தேடாமல்போன குறைவை உணர்ந்து, தம்பியோடு சேர்ந்து அவரைத்தேட ஆரம்பித்தான். "கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்" (நீதி. 10:22) என்ற வசனத்தின்படி, அவன் இழந்த எல்லா பாக்கியங்களையும் கர்த்தரால் அவன் திரும்பப் பெற்றான்.

எனக்கு அன்பானவர்களே! நீங்களும்கூட இந்த அண்ணனைப்போல உலக காரியங்களை மட்டும் தேடி திரிகிறீர்களா? நீதியின் வழியில் நடந்தால், பணம், பொருள், பதவி ஒன்றும் கிடைக்காது, உலகில் நல்ல நிலமையில் வாழ முடியாது என்று நினைக்கிறீர்களா? நீதியின் மேல் பிரியப்படுகிற தேவாதி தேவன் மீது முழு நம்பிக்கையையும் வைத்து, அவர் காண்பிக்கும் நீதியின் வழிகளில் நீங்கள் நடக்கும்பொழுது, கர்த்தர் உங்கள் மீது பிரியம் வைத்து, நிறைவாய் ஆசீர்வதிப்பார் (அப். 10:35).

<u>ஜெபம்:</u> "அன்பின் தெய்வமே! உம்மை தேடுகிறதில் என்னில் உள்ள குறைவுகள் அனைத்தையும் தயவுசெய்து நீர் எனக்கு மன்னியும். நீர் விரும்புகிற நீதியின் வழியில் நடக்க <u>இன்றுமுதல்</u> எனக்கும் அருள் தாரும். நீர் அப்படி செய்கிறபடியால் உமக்கு ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

தேவ பக்தி எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது!

"சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது; தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது" (1 தீமோத்தேயு 4:8).

"முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குகூடக் கொடுக்கப்படும்" (மத்தேயு 6:33) என்ற வசனத்தின்படியே தேவனுடைய ராஜ்யத்தின் காரியங்களில் கவனம் வைத்து, கர்த்தருக்கு பயந்து, எல்லாவற்றிலும் அவருக்கு முதலிடம் கொடுக்கும்பொழுது, கர்த்தர் யாவற்றிலும் நிறைவான ஆசீர்வாதத்தை நம் வாழ்வில் கொடுப்பார். துன்பங்கள் அனுபவிக்கவேண்டிய சமயம் வந்தாலும், அந்நேரங்களிலெல்லாம்கூட அவரையே பற்றிப்பிடித்துக்கொண்டு ஜீவிக்கிறவர்களுக்கு, அதை எளிதில் மாற்றிப்போட்டு, எல்லாவற்றிலும் தமது தெய்வீக ஆசீர்வாதத்தை அளவில்லாமல் அருளிச்செய்வார்.

மேற்கு ஜெர்மனியில் ஹிட்லருடைய ராஜ்யத்திற்கு பிறகு முழு தேசத்திற்கும் அடினார் சான்சிலர் (Adenauer Chancellor) காலத்தில் எல்லாவற்றிலும் செழிப்பு உண்டாயிற்று. யாவரும் ஆச்சரியமடைந்தனர். காரணம், அவர் ஒவ்வொரு நாளிலும் தன்னுடைய வேலைகளையெல்லாம் காலை 2 மணி வரை முழு கவனத்துடன் செய்து முடிப்பார். திரும்பவும் விடியற்காலை 5 மணிக்கு எழுந்து முதலில் ஆலயம் செல்வார். அதன்பிறகு தன் வேலைகளை ஆரம்பிப்பார். பத்திரிகையாளர்கள் அவருடைய இந்த வாழ்வை கண்ணுற்றவர்களாய், இது எப்படி உங்களால் இயலுகிறது? ஒரு நாளில் 3 மணி நேரம் மட்டும் உறங்குகிறீர்கள். ஒரு மனிதன் எப்படி களைப்பு இல்லாமல் இவ்வாறு உழைக்க முடியும் என்று ஆச்சரியத்தோடு வினவினர். அவர் கூறின பதில் என்ன தெரியுமா? நான் ஆண்டவரை முதலாவதாக தேடுவதிலும், அவர் வழிகளை பின்பற்றுவதிலும் ஜாக்கிரதையாக இருக்கிறேன். ஆகவே, அவர் என்னோடுகூட இருந்து என்னை பலப்படுத்தி, ஏற்ற ஞானத்தைக் கொடுத்து, நீங்கள் காண்கிறபடி என்னை அவரே வழிநடத்தி வருகிறார் என்று சாட்சியாக சொன்னபொழுது, யாவருக்கும் மிகவும் ஆச்சரியமாய் இருந்தது.

ஆம், பிரியமானவர்களே! "கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது" (சங். 34:10). நீங்களும் இவரைப்போல கர்த்தருக்கு பிரியமாய் உங்கள் வாழ்வை மாற்றிக்கொள்வீர்களானால், இதே ஆசீர்வாதத்தை பெற்று மகிழலாம்! இவ்வளவு பெரிய பதவியிலிருந்தும், "நான் பெரியவன்" என்று பெருமிதம் கொள்ளாமல், தேவாதி தேவன்தான் தன்னை இவ்வளவாய் உயர்த்தி ஆசீர்வதித்திருக்கிறார் என்று தேவபக்தி நிறைந்து அவர் வாழ்ந்ததுபோல், நீங்களும் தேவபக்தி நிறைந்த வாழ்வை விரும்பி, அனுபவித்து, ஆசீர்வாதம் பெறுங்கள்.

ஜெபம்: "அன்பின் தெய்வமே! இன்றுமுதல் எனக்கும் இந்த தெய்வீக வாழ்வை தாரும். நீரே எனக்கும் எல்லாவற்றிற்கும் எல்லாமுமாக இருந்து, எதை செய்தாலும் முதலாவது உம்மை மகிமைப்படுத்த, உம்மை பற்றிக்கொண்டு செயல்பட, எனக்கும் கிருபை தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

உம்முடைய வழிகளில் உம்மை நினைக்கிறவர்களை சந்திக்கிறீர்!

''மகிழ்ச்சியாய் நீதியை செய்கிறவர்களையும், உம்முடைய வழிகளில் உம்மை நினைக்கிறவர்களையும் சந்திக்கிறீர்...''
(ஏசாயா 64:5).

இது எவ்வளவு அருமையான உண்மையை விளக்குகிறது பாருங்கள். கர்த்தர் தம்முடைய வழிகளை பின்பற்றுகிற மக்கள்மேல் மிகவும் பிரியமாய் இருக்கிறார். நாம் அவரை சார்ந்து, ''நீரே என்னை வழிநடத்தும்'' என்று சொல்லும்பொழுது, அவர் அப்படியே ''வழி இதுவே, இதிலே நடவுங்கள்''(ஏசாயா 30:21) என்று கூறி வழிநடத்துவார். ஆகவே, நாம் அவருடைய வழிகளில் நடந்து, அவரையே நினைத்துக் கொண்டிருக்கும்போது, அவர் நம்மை சந்தித்து, அனுதினமும் நமக்கு தேவையானவைகளை கொடுப்பது அதிக நிச்சயம் என்பதை அனுபவத்திலாக்கிக் கொள்வோம் (நீதி. 8:32).

ஒரு தேவ மனிதர் சகோதரர் தினகரனிடம் வந்து, தன் குடும்பம் சென்னையில் இருப்பதாகவும், தான் மட்டும் வெகுநாட்களாக புதுடெல்லியில் பணிபுரிவதால் சென்னைக்கு மாற்றம் வேண்டும், எனக்காக ஜெபியுங்கள் என்று கூறினார். சகோதரர் கருத்தாய் ஜெபித்தார். அதோடுகூட அவர் டெல்லிக்கு போகவேண்டிய ஒரு சந்தர்ப்பம் வந்தபொழுது, அங்கு ஒரு குறிப்பிட்ட மந்திரி அவரை பார்க்க விரும்புவதாக செய்தி காத்திருந்தது. அந்த மந்திரி எந்த துறையினை பொறுப்பெடுத்துக் கொண்டிருக்கிறார் என்று பார்த்தபொழுது, இந்த இடமாற்றம் கேட்ட அந்த சகோதரர் பணிபுரிந்த அதே துறையினையே அவரும் சார்ந்தவர் என்பதை கண்டு கொண்டார். மிகவும் ஆச்சரியத்தோடு அந்த மந்திரியை நேரில் சந்தித்தார். அவரிடம் இந்த சகோதரன் விண்ணப்பத்தை கொடுத்த மாத்திரத்தில், உடனடியாக காரியம் நிறைவேற கர்த்தர் வழியைத் திறந்தார். ஆம்! நம்முடைய வழிகளை, நினைவுகளை கர்த்தருடைய பாதத்தில் வைக்கும்போது, அவர் நம்மை எவ்வளவு அழகாக வழி நடத்துகிறார். சகோதரர் டெல்லிக்கு போவது மிகவும் அபூர்வமான ஒரு காரியம். அதுவும் அந்த குறிப்பிட்ட மந்திரியை பார்க்க சந்தர்ப்பம் கிடைத்தது அதிலும் ஆச்சரியமானது. இப்படித்தான் உங்களுக்கும், ஆண்டவர்மேல் எப்பொழுது சார்ந்துகொள்கிறீர்களோ அப்பொழுது, நினைக்கிறதற்கும், விரும்புகிறதற்கும் அதிகமாக கர்த்தர் வல்லமையாய் கிரியை செய்வார் (எபே. 3:20).

ஆகவே, எனக்கு அன்பானவர்களே! உங்கள் சுய எண்ணங்கள், சிந்தனைகளின்படியே நடந்து, வீணான பல பிரச்சினைகளுக்கு ஆளாகாமல், கர்த்தருடைய சமுகத்தில் தாவீதைப்போல, தானியேலைப்போல காத்திருந்து, அவருடைய வழிகளின்மேல் கண்ணோக்கமாயிருந்து, அவரையே நினைத்து, அவரையே சார்ந்து, நிறைவான ஆசீர்வாதங்களை அவர் கரத்திலிருந்தே பெற்றுக்கொள்ளுங்கள். ''நானே வழி'' என்று கூறுகிற ஆண்டவர் பாதத்தில் அமர்ந்து, அனுதினமும், மற்றும் வழி தெரியாமல் தடுமாறுகிற வேளைகளிலெல்லாம் அவர் பாதத்தையே உறுதியாய் பற்றிக்கொள்வோம் (சங். 37:5).

<u>ஜெபம்</u>: ''அன்பின் தெய்வமே! நானும் உமது வழிகளையே பின்பற்றி, உம்மையே நினைத்து, நீர் தரும் மேன்மையான ஆசீர்வாதங்களை <u>இன்றும் என்றும்</u> நிரந்தரமாக பெற்றுக்கொள்ள எனக்கும் தெய்வீக அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!''

கர்த்தர் உங்கள் வீட்டைக் கட்டுவார்!

"உன் சத்துருக்களையெல்லாம் கீழ்ப்படுத்தினேன். இப்போதும் கர்த்தர் உனக்கு ஒரு வீட்டைக் கட்டுவார் என்பதை உனக்கு அறிவிக்கிறேன்" (1 நாளாகமம் 17:10).

இந்த உலகில் வாழ்கிற நமக்கு சொந்த வீடு என்பது மிகவும் தேவையான ஒன்றாக இருக்கிறது. வாடகை வீட்டிலும் நமக்கு ஏற்ற வசதிகள் இருப்பதில்லை. பலவித தொல்லைகளை அனுபவிக்கிறோம். எனவே, ஒவ்வொருவரும், "ஐயோ, நமக்கென்று ஒரு வீடு இருந்தால் எவ்வளவு நலமாய் இருக்கும்" என்று எண்ணுவதில் தவறு இல்லை. கர்த்தரிடத்திலே எல்லா விண்ணப்பங்களையும், வேண்டுதல்களையும், ஜெபத்தோடும் ஸ்தோத்திரத்தோடும்கூட தெரிவிக்கும்பொழுது (பிலி. 4:6,7), அவர் நமக்காக சம்பூரணமாய் யாவற்றையும் அருளிச்செய்வார் (1 தீமோ. 6:17). அவ்வாறு கர்த்தரை உண்மை மனதுடன் தேடுகிறவர்களுக்கு அவர் ஒரு நன்மையும் கொடுக்காமல், கேளாதவர்போல மௌனமாயிருக்க மாட்டார். அதோடுகூட அவர் கரத்திலிருந்து பெறுகிற ஆசீர்வாதங்கள் என்றென்றும் நிலைபெற்றிருக்கும்.

1970ஆம் ஆண்டு சென்னைக்கு நாங்கள் மாறுதலாகி வந்த சமயத்தில் சிறுசிறு வீடுகளைப் பார்த்து, நானும் என் கணவரும், நமக்கும் இப்படி ஒரு சிறு வீடு கிடைத்தால் எவ்வளவு நலமாயிருக்கும் என்று பேசிக்கொள்வோம். கர்த்தர் எங்களுடைய வாஞ்சையை அறிந்தவராக மிகவும் ஆச்சரியமான முறையிலே 1973ஆம் ஆண்டு நாங்கள் நினைத்ததற்கும் அதிகமாக ஒரு பெரிய வீட்டை சென்னையிலே அரும்பாக்கம் என்ற இடத்தில் சொந்தமாக கொடுத்தார். முதலில் வீட்டின் கீழ்தளத்தை கட்டி முடிக்க வழி திறந்தார். அதன்பிறகு அடுத்த தளத்தையும் கட்டி முடிக்க தேவையான பண உதவியையும் வங்கியின் மூலமாகவே கொடுத்தார். எங்களுக்கு இது விளங்காத அதிசயமான காரியமாய் இருந்தது. ஏனென்றால், எங்கள் கையிலும் அவ்வளவு பணம் கிடையாது. கர்த்தர் தான் படிப்படியாக அதை செயலாக்கி முடித்தார். ஆம்! அது நம் கண்களுக்கு ஆச்சரியமானதாகவே இருக்கிறது. அதேவண்ணமாக "இயேசு அழைக்கிறார்" ஊழியத்தையும், நாங்கள் குடியிருந்த வீட்டின் ஒரு பகுதியிலேயே பல ஆண்டுகள் நடத்தி வந்தோம். ஆனால், அந்த இடமும் போதாமல் போய்விட்ட காரணத்தினால் ஊழியத்திற்கென்றே சொந்தமாக ஒரு தனி இடம் வேண்டுமென்று ஜெபித்தோம். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டார். ஊழியத்திற்கென ஒரு தனி இடத்தை வாங்கிக் கொடுத்தார். அதுதான் சென்னையில் கிரீன்வேஸ் சாலையிலுள்ள ஜெபகோபுர வளாகம்.

அன்பானவர்களே! உங்கள் உள்ளத்திலும்கூட இப்படிப்பட்ட வாஞ்சை இருக்கலாம். இன்று எத்தனையோபேர் சாட்சி கொடுக்கிறார்கள். "எங்களுக்கென்று ஒரு வீடு வேண்டுமென்று கர்த்தரை நோக்கி பிரார்த்தித்தோம், ஆச்சரியமாய் ஆண்டவர் அந்த பிரார்த்தனையைக் கேட்டார், எங்களை ஆசீர்வதித்தார்" என்று சொல்லுகிறார்கள். தாவீதின் வீட்டை அவர் கட்டினார். அதேபோன்று எங்கள் தேவைகளையும் நிறைவேற்றினவர் உங்கள் வீட்டை கட்டியெழுப்பமாட்டாரா? நிச்சயம் கட்டுவார் (1 நாளா. 17:27).

ஜெபம்: "அன்பின் தெய்வமே! இந்த உலகில் நீர் தரும் ஆசீர்வாதங்கள் என்றென்றும் நிலைத்திருக்கும். எனவே, எனக்கும் இன்றுமுதல் வீட்டை மாத்திரமல்ல, மற்றும் சகல ஆசீர்வாதங்களையும் கொடுத்து, கரம் பிடித்து வழிநடத்துவதற்காக உமக்கு ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

தேவன் உங்கள் சத்துருக்களை உடைந்தோடப்பண்ணுவார்!

(1 நாளாகமம் 14:11).

தாவீதுடைய சத்துருக்களையெல்லாம், கர்த்தர் அவனோடு துணை நின்று, தண்ணீர்கள் உடைந்தோடுகிறதுபோல், உடைந்தோடப்பண்ணினார் என்று அவன் கூறியதாக வாசிக்கிறோம். ஏனென்றால், அவனுடைய முழு நம்பிக்கையும் அவர்மேல் தான் இருந்தது. "உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனை பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்" (ஏசாயா 26:3) என்ற வசனத்தின்படி, அவரை உறுதியாய் பற்றிக் கொண்டிருந்தபடியால், சத்துருக்கள் உடைந்தோடும்படி ஆண்டவர் வழி நடத்தினார். அவருடைய உன்னதமான நாமத்தின்மேலேயே அவனுடைய முழு நம்பிக்கையும் இருந்தது. எந்தவிதமான பிரச்சினைகள் அவனை சுற்றி, நெருங்கி வந்தபொழுதிலும், தெய்வீக பெலமும், சமாதானமும் பெற்று வெற்றி சிறந்தான் (பிலி. 4:6,7).

ஒரு தேவ மனிதர் கர்த்தருடைய அழைப்பின் நிமித்தம் தன்னுடைய அருமையான வேலையை விட்டுவிட்டு கர்த்தருக்கென்று உழைக்க முன்வந்தார். ஆனால், ஊழியம் செய்வதோ மிகவும் கஷ்டமானதாய் இருந்தது. காரணம், பொறாமைக்காரர்கள், ஆண்டவர் அவருடைய ஊழியத்தை ஆசீர்வதிப்பதைக் கண்டு, மிகுந்த வேதனையான காரியங்களையெல்லாம் அவருக்கு விரோதமாக நடப்பித்தனர். முன்னேற விடாதபடி, பலவித தடைகளை துணிகரமாக அவருக்கு முன்பாக கொண்டு வந்து வேதனைப் படுத்தினர். எப்படியாவது ஊழியம் செய்வதை விட்டுவிட்டு அவர் ஓடிவிடவேண்டும் என்பதுதான் அவர்களுடைய விருப்பமாய் இருந்தது. ஆனால், அவர் செய்த காரியம் என்ன தெரியுமா? ஊழியத்தை நிறுத்திவிட்டு, பல நாட்கள் ஆண்டவருடைய பாதத்திலே தண்ணீர்கூட அருந்தாமல், உபவாசத்திலும், ஜெபத்திலும் காத்திருந்து, தன்னை தரையோடு தாழ்த்தினார். கர்த்தர் அவருக்கு மனமிரங்கினார். அதினிமித்தம் அவருடைய மனதிலே சிங்கம் போன்ற ஒரு தைரியத்தை கொடுத்தார் (நீதி. 28:1). அவர் மறுபடியுமாக எழுந்து கர்த்தருடைய நடத்துதலின்படி புதிய புதிய விதங்களில் ஊழியம் செய்ய ஆரம்பித்தார். பொறாமைக்காரர்கள் கொண்டுவந்த தடைகளையெல்லாம் கர்த்தர் உடைந்தோடப் பண்ணினார். அவர்களுடைய முயற்சிகள் ஒன்றும் பலன் அளிக்காதபடி அவருக்கு எல்லாவற்றிலும் வெற்றியை அருளிச்செய்தார் (ரோமர் 8:36,37).

அன்பானவர்களே! எந்த காரியத்தை செய்தாலும், பிசாசும் அவனுடைய கூட்டாளிகளும், மனுஷ ரூபத்தில் நமக்கு எதிரிடையாக தடைகளை கொண்டு வரலாம். ஆனால், ஒன்றுக்கும் அஞ்சாமல் எதிர்த்து நிற்க தேவன் உங்களோடு இருக்க வேண்டும். இல்லையென்றால் சோர்ந்து போவீர்கள்! ஆகவே, தாவீதைப்போல அவரை உறுதியாக பற்றிக்கொள்ளுங்கள். அப்பொழுது சத்துருக்களை காலின்கீழ் மிதித்துப்போடும்படியான கிருபையை தேவன் உங்களுக்கு தருவார் (ரோமர் 16:20).

ஜெபம்: "அன்பு தெய்வமே! உம்மோடு நெருங்கி வாழ்கிற வாழ்க்கையை மறந்துபோகாமல் அதில் என்றென்றும் நிலைத்துநிற்க, எனக்கு எதிராக வரும் சத்துருக்களையெல்லாம் நீர் உடைந்தோடப்பண்ண வல்லமையுள்ளவராய் இருக்கிறீர். இன்றுமுதல் நீரே எனக்கு துணை நின்று என்னை ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தின் பிதாவே, ஆமென்!"

ஏற்ற துணையை உண்டாக்குவேன்!

"தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்"
(ஆதியாகமம் 2:18).

ஆண்டவர் ஆதாமை சிருஷ்டித்ததோடு நின்றுவிடாமல், அவனுக்கு ஒரு துணை வேண்டுமென்று அவனுடைய விலா எலும்பிலிருந்தே ஏவாளை சிருஷ்டித்து துணையாக கொடுத்தார். ஆம், இதேபோல்தான் மனிதர்களாகிய நம் ஒவ்வொருவரையும் அவருடைய சித்தத்தின்படி வழி நடத்துவார். இந்த விஷயத்தில், யார் யார் அவரை சார்ந்து கொள்கிறார்களோ, நம்பிக்கை வைக்கிறார்களோ அவர்களுக்கு இன்றும்கூட அவரே பொறுப்பெடுத்து ஏற்ற துணையைக் கொடுப்பார். ஆனால், இன்றைய நாட்களில், விசேஷமாக வாலிபப் பிள்ளைகள் தங்கள் மனம்போல, தங்கள் துணையை தெரிந்தெடுத்துக்கொண்டு, வெகு சில காலத்திற்குள்ளாக கண்ணீரில் வாழ்கிற பரிதாப நிலைமையில் இருக்கிறதை நாம் பார்க்கிறோம். இவ்விதமான நிலைமை ஏற்படாமல் இருக்க, கர்த்தரை நோக்கிப் பார்த்து, அவர் காண்பிக்கும் பாதையில் நடக்கும்போது மிகுந்த ஆசீர்வாதமான வாழ்வை கொடுப்பார் (நீதி. 3:5,6).

ஒரு வாலிபன் இளம் வயதில் கடவுள் இல்லையென்று சாதித்தவனாக இருந்தான். அதைப்பற்றிய புத்தகங்களை அதிகம் படிப்பான். ஆனால், ஒருநாள் ஆண்டவர் அவன் இருதயத்தை தன் பக்கமாக இழுத்துக்கொண்டார். அவருக்கு அவன் சொந்தமாக மாறினான் (ஓசியா 11:4). அப்பொழுது அவனோடு பணிபுரிந்தவர்கள், "நீ ஒரு சாமியாரைப்போல இருக்கிறாயே உனக்கு வருகிற பெண்ணும் உன்னைப்போல் சாமியாராக இருந்தால்தான் சரியாக இருக்கும். இல்லாவிட்டால் உன்பாடு அதோகதிதான்" என்று பரிகாசம் செய்தார்கள். ஒருவேளை அவர்கள் சொல்வதுபோல் உண்மையாகவே நடந்துவிடுமோ? என்று அவன் பயந்து தினமும் ஆண்டவரை நோக்கி மிகவும் கருத்தாய் ஜெபித்தான். "ஆண்டவரே, என் பெற்றோர் பார்க்கிற என் வாழ்க்கைத் துணைவி உம்மை தேடுகிறவளாக, உமக்கு பிரியமானவளாக இருக்கும்படி அருள் தாரும். என் சிநேகிதர்கள் சொல்வதுபோல் நடக்காமல் காப்பாற்றும்" என்று ஜெபித்தான். கர்த்தர் அவன் ஜெபத்தை கேட்டார். அவனுக்கென்றே ஓர் துணையை தாமே தெரிந்தெடுத்து, பெற்றோரின் ஆசீர்வாதத்தோடு அவன் இல்லற வாழ்வில் ஈடுபட உதவி செய்தார். ஆரம்ப நாளில் இருந்தே ஆண்டவரை மையமாக கொண்டு ஜெபத்துடன் ஆரம்பித்த அவர்கள் குடும்ப வாழ்க்கை மிகவும் இனிமையானதாக மாறியது. ஆண்டவர் இயேசு அவர்களோடு கூடவே இருந்து தினமும் கரம்பிடித்து நடத்தினார்.

ஆம், பிரியமானவர்களே! இன்று நீங்களும் உங்களுக்கு வாழ்க்கைத் துணையை தேடிக் கொண்டிருக்கிறீர்களா? இந்த வாலிபனைப்போல் கர்த்தரையே சார்ந்து கொள்ளுங்கள். அப்பொழுது அவர் உங்களுக்கு மிகவும் பொருத்தமான, அருமையான, தம்மை நேசிக்கிற துணையைக் கொடுத்து உங்கள் வாழ்வையும் கட்டுவார். அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார் (சங். 37:5).

ஜெபம்: **"அன்பின் தெய்வமே! உம்மை பற்றிக்கொண்டால் உலக வாழ்விலெல்லாம் ஆசீர்வாதம். நீரே உம்முடைய பிள்ளைகளுக்கு ஏற்ற ஆசீர்வாதங்களை கொடுக்கிறவர் என்று அறிந்து. இன்றுமுதல் உம்மையே சார்ந்து கொள்ளுகிறேன். உமக்கு நன்றி செலுத்துகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"**

உத்தம இருதயத்தோடு தேவ வல்லமையைக் காணுங்கள்!

"தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிக்கிறவர்களுக்கு தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது..."
(2 நாளாகமம் 16:9).

கர்த்தர் நல்லோரையும், தீயோரையும் காண்கிறவராக இருக்கிறார். தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடு இருக்கிறவர்களுக்கு, அவருடைய கண்கள், இந்த வசனத்தின்படி நிறைவான ஆசீர்வாதத்தையே கொண்டு வருகிறது. வியாதியின் நேரத்தில் தெய்வீக சுகம் அவரிடமிருந்து பிரவாகித்து வருகிறது. சரீரத்தை குணமாக்குகிறது (சங். 103:3). மரண இருளை அவருடைய வல்லமை மாற்றி அமைக்கிறது. வாழ்க்கையில் தேவை ஏற்படும்போது, தேவைகளையெல்லாம் நிறைவாய் அருளிச்செய்து (பிலி. 4:19), ஒன்றிலும் குறைவுபடாதபடி ஆசீர்வதிக்கிறார். இவ்வளவு அருமையான விதத்தில் நம்மீது பாசம் கொண்ட ஆண்டவர் நம்மோடு கூடவே இருப்பது எத்தனை சந்தோஷம்.

ஒரு குடும்பத்திலே கணவன் ஆண்டவரை அறிந்தும் அறியாதவனாய், ஆவிக்குரிய வாழ்விலே குருடனாய் வாழ்ந்துகொண்டிருந்தான். மனைவியோ ஆண்டவர்மேல் பற்றுதல் கொண்டவளாக, பயபக்தியோடு வாழ்ந்து வந்தாள். தன் மனைவியின் பக்தியைக் கண்டு எப்பொழுதும் பரிகசிப்பான். ஆனால், அவளோ ஒன்றுக்கும் கவலைப் படாமல், உத்தம இருதயத்தோடு அவரை பின்பற்றி வந்தாள். தன் கணவனுக்காக கருத்தாய் இரவும் பகலும், அதிகாலையிலும் ஜெபம் செய்தும், உபவாசித்தும் வந்தாள். ஆண்டவர், கல்லான இருதயத்தை சதையான இருதயமாக மாற்ற வல்லமையுள்ளவர் அல்லவா! (எசே. 36:26). அதன்படி, இந்த மனுஷனை அவளுடைய வாழ்க்கையில் காணப்பட்ட அன்பு, தாழ்மை, பொறுமை இவைகள் மூலம் கொஞ்சம் கொஞ்சமாக மாறுதலடையச் செய்தார்! அவளோடு சேர்ந்து அவனும் ஆண்டவரை தேட ஆரம்பித்தான். நாளடைவில் பரிசுத்த ஆவியில் நிறைந்தவனாய் அவளைக் காட்டிலும் அதிக அன்போடு ஆண்டவரை நேசித்தான். உத்தம இருதயத்தோடு தேவனுக்கென்று வாழ்ந்தான்.

அன்பானவர்களே! உங்கள் குடும்ப வாழ்க்கையில் ஒருவருக்காக ஒருவர் உண்மை அன்புடன் பிரார்த்தனை செய்யுங்கள் (1 பேதுரு 4:8). உத்தம இருதயத்தோடு ஆண்டவரை தேடுவதில் ஒருமனப்படுங்கள். வீணான பேச்சுகளுக்கும், செயல்களுக்கும் ஆண்டவரை அறியாத மற்ற மனிதர்களைப்போல நாட்களைக் கழிக்காமல், கர்த்தருக்கே முதலிடம் கொடுங்கள். உங்கள் குடும்ப வாழ்க்கையும் செழிக்கும். ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து இவ்விதமாய் கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுங்கள் (கலா. 6:2). தேவன் அப்பொழுது தமது வல்லமையினால் எல்லாக் காரியங்களிலும் நமக்கு உதவி செய்வார்.

ஜெபம்: "அன்பு தெய்வமே! என் வாழ்வில், என் குடும்பத்தில் இவ்விதமான ஆசீர்வாதம் வேண்டுமென்று கண்ணீரோடு உம்மை பற்றிக் கொள்கிறேன். என் குடும்பம், என் தனிப்பட்ட வாழ்வில்கூட, உம்முடைய வல்லமையால் நிரம்பி ஆசீர்வாதம் பெற, உத்தம இருதயத்தோடு உம்மைத் தேடுகிறேன். இன்றுமுதல் என்னையும், என் குடும்பத்தையும் ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தர் உங்கள் தலையை உயர்த்துவார்!

"கர்த்தாவே, நீர் என் கேடகமும், என் மகிமையும், என் தலையை உயர்த்துகிறவருமாயிருக்கிறீர்" **(சங்கீதம் 3:3).**

இந்த உலகத்தில் அன்பற்ற மக்களும், பொறாமை நிறைந்தவர்களும் நம்முடன் வாழ்கிறார்கள், வேலை செய்கிறார்கள். இதினிமித்தமாக நம்முடைய வாழ்க்கையில் எவ்வளவோ தாழ்வை அனுபவிக்கவேண்டிய நிலைமை நமக்கு ஏற்படுகிறது. பணி செய்யும் இடங்களில் பாடுகள், குடும்பத்தினரோடு பாடுகள், இப்படியெல்லாம் நாம் அனுபவிக்கிறோம் அல்லவா? ஆனால், இந்த வசனமோ கர்த்தர் நம் தலையை உயர்த்துகிறவர் என்ற வாக்குத்தத்தத்தை நமக்கு அருளிச்செய்கிறது. ஆண்டவருடைய வார்த்தை மாறாதது அல்லவா! அதை விசுவாசியுங்கள். "ஆண்டவரே, எனக்கு எதிராக வரும் இந்த உலக மனிதரையோ, உலகத்தின் காரியங்களையோ நான் நம்புவதில்லை. அதற்கு முதலிடம் கொடுப்பதுமில்லை. மாறாக, வல்லமையும் பராக்கிரமமும் நிறைந்த (செப். 3:17; எரே. 20:11) ஆண்டவராகிய நீர் என்னோடு எப்பொழுதுங்கூடவே இருக்க விரும்புகிறீர் என்று விசுவாசிக்கிறேன்" என்று தைரியமாய் இருங்கள். கர்த்தருக்குள் சந்தோஷமாயிருங்கள் (பிலி. 4:4). அப்பொழுது அவர் நிச்சயம் உங்கள் தலையை உயர்த்துவார். வீணான பயங்களை, சந்தேகங்களையெல்லாம் உதறித் தள்ளி விடுங்கள்.

ஒரு குடும்பத் தலைவி திருமணத்திற்கு முன்பாக தகப்பன் வீட்டில் எல்லாவித சௌகரியங்களோடு வாழ்ந்து வந்தாள். ஆனால், திருமணத்திற்கு பிறகு, கணவனுடைய வருவாய் குறைவாய் இருந்தபடியினால் பணத்தை எண்ணி எண்ணி செலவழிக்க வேண்டிய நிலைமை! எனினும், "போதும் என்கிற மனதுடனேகூடிய தேவ பக்தியோடு" ஆண்டவரிடம் ஒவ்வொரு பொறுப்பையும் ஒப்புக்கொடுத்து, ஜெபம்பண்ணி ஜெபம்பண்ணி, சந்தோஷமாக வாழ்ந்து வந்தாள். கொஞ்சத்திலே அவள் உண்மையாய் இருப்பதை கர்த்தர் கண்டு, அவளுடைய புருஷனுடைய வருவாயை கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்க செய்தார். சில வருடங்கள் சென்ற பின்பு, அவளது தகப்பனுடைய வீட்டிலே இருந்த ஐசுவரிய நிலைமையைக் காட்டிலும் கர்த்தர் கொடுத்த ஐசுவரியம் எண்ணிலடங்காததாய், உயர்ந்ததாய் இருந்தது. அவள் குடும்பத்ினரும், அவளது பொறுமையின்மூலம் கர்த்தரிடத்திலிருந்து எவ்வளவாய் உயர்வை பெற்றுக் கொண்டாள் என்று அறிந்து கர்த்தரை துதித்தனர்.

எனக்கு அன்பானவர்களே! கர்த்தருடைய கரத்திலே உங்களை சமர்ப்பிக்கும்பொழுது அவர் உங்கள் குறைவுகளையெல்லாம்கூட அவ்வாறே நிறைவாக்க எவ்வளவு வல்லமையுள்ளவராய் இன்றும் இருக்கிறார். நீங்கள் அதை அனுபவித்து பார்க்க வேண்டும். கர்த்தர் தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார் (நாகூம் 1:7). ஒருநாளும் அவர்களை கைவிடமாட்டார். "அவர் சிறியவனை புழுதியிலிருந்து தூக்கிவிடுகிறார்; எளியவனை குப்பையிலிருந்து உயர்த்துகிறார்" (சங். 113:7; 1 சாமு. 2:7,8).

ஜெபம்: "அன்பு தெய்வமே! நீர் எவ்வளவு ஆச்சரியமானவர்! ஒன்றுமில்லாமையிலிருந்து சர்வத்தையும் சிருஷ்டித்தீரே. அதுபோன்றே இன்று என் வாழ்விலும் என் குறைவையெல்லாம் மாற்றி, என் தலையை உயர்த்தி, அதன்மூலம் நான் உம் நாமத்தை மகிமைப்படுத்த, எனக்கு பெலன் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

ஆபத்தில் சோர்வது குறுகின பெலன் தரும்!

"ஆபத்துக்காலத்தில் நீ சோர்ந்துபோவாயானால், உன் பெலன் குறுகினது" (நீதிமொழிகள் 24:10).

வாழ்க்கையில் எல்லாம் நலமாய் இருக்கும்பொழுது நாம் சந்தோஷமாய் இருக்கிறோம். மகிழ்ச்சி நம் உள்ளத்தையும் இல்லத்தையும் நிறைக்கிறது. ஆனால், திடீரென்று ஆபத்துகள் வரும்போது, அது தலைகீழாய் மாறுகிறது. எங்கள் குடும்பத்தில் அன்பு மகள் ஏஞ்சல் இருந்த நாளெல்லாம் அவளைக் குறித்து எத்தனையாய் மகிழ்ச்சியடைந்தோம்! அவளுடைய எதிர்காலத்தைக் குறித்து கற்பனை செய்து மகிழ்ந்தோம்! ஆனால், ஒரே நிமிடத்தில் விபத்தில் அவளை இழந்தபொழுதோ, வாழ்க்கையே முற்றிலும் இருளாகிவிட்டது. ஆம்! உலக வாழ்க்கையில் இப்படித்தான் நாம் ஒவ்வொருவருமே ஆபத்து வரும்போது, சோர்ந்துபோய் பெலனற்றவர்களாய் இருக்கிறோம். ஆனால், அந்த சமயத்திலும் கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஆவியின் வல்லமையினால் நம்மை ஆற்றித் தேற்றி பெலப்படுத்துகிறவராய் இருக்கிறார் (ஏசாயா 40:29). இந்த அனுபவத்தைத்தான் ஆண்டவர் எங்களுக்கும் கொடுத்து, இம்மட்டும் ஊழியத்திலும், இல்லற வாழ்விலும் சந்தோஷப்படுத்தி வருகிறார் (அப். 1:8).

ஒரு நல்ல உத்தியோகஸ்தர் தன் வேலையிலே கவனமாய் இருந்தபொழுதிலும் பொறாமைக்காரர்களால் வீணான குற்றம் சாட்டப்பட்டு, வேலையிலிருந்து தற்காலிகமாக பதவி நீக்கம் செய்யப்பட்டார். இது அவருடைய உள்ளத்தை அதிகமாக உடைத்தது. தற்கொலை செய்துகொள்ளலாம் என்ற ஒரு எண்ணத்தையும் உண்டாக்கியது. ஆனால், அடுத்த கணம் ஆண்டவருடைய சிலுவைக் காட்சி அவர் கண்களுக்கு முன்பாக புலப்பட்டது. "ஐயோ, என் அன்பு தெய்வம் எனக்காக, என் குற்றங்களுக்காக, எனக்கு வரவேண்டிய சாபங்களுக்காக, பொறுமையாய் சிலுவையை சகித்தாரே! முடிவிலே அவர் மரணத்தையே ஜெயித்து, பிதாவின் வலதுபாரிசத்தில் இன்றும் மகிழ்ச்சியாய் வீற்றிருக்கிறதுபோல, நானும் ஆண்டவரால் அதே இடத்திலே உயர்வை அனுபவிக்க வேண்டும்" என்ற ஒரு தீர்மானத்துடன் ஜெபத்துடன் காத்திருந்தார். அவர் நினைத்தது வீண்போகவில்லை. உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடித்த அவருடைய அலுவலகத்தார் அவரைத்தேடி வந்து மன்னிப்பு கேட்டு, திரும்பவும் அவரை வேலையில் அமர்த்தினர். பதவி உயர்வும், இழந்த எல்லாப் பணத்தையும் இரட்டிப்பாய் பெறவும், கனத்தையும் புகழ்ச்சியையும் பெற்றுக்கொள்ளவும் ஆண்டவர் அருள்புரிந்தார்.

ஆம், பிரியமானவர்களே! ஆபத்து வரும்போது, கர்த்தரை மட்டுமே நோக்கிப் பார்க்க கற்றுக்கொள்ளுங்கள் (சங். 46:1). ஆண்டவரை அறியாத மக்கள் செய்வதைப்போல, விபரீதமான தீர்மானங்களையோ, கேடான எண்ணங்களையோ மேற்கொள்ளாமல் கர்த்தர்மேல் நம்பிக்கை வைக்கும்போது, அவர் உங்களை நிச்சயம் தமது தெய்வீக வல்லமையால் உயர்த்துவார்! கனப்படுத்துவார்! (ஏசாயா 61:7-ன் கடைசிவரி).

ஜெபம்: **"அன்பு இரட்சகரே! உம்மை நம்புகிறவர்களுக்கு நீர் உண்டுபண்ணி வைத்திருக்கிற நன்மை எவ்வளவு பெரிதாய் இருக்கிறது என்பதை உணர்ந்து, என் வாழ்வையும் உம்முடைய கரத்திலே ஒப்படைத்து விடுகிறேன். இன்றுமுதல் என்ன வந்தாலும், எத்தனை ஆபத்துகள் நேரிட்டாலும் உம்மை மாத்திரம் நான் விடுவதில்லை. உமக்கு நன்றி செலுத்துகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"**

பிணியாளியை இரட்சிக்கும் விசுவாச ஜெபம்!

''விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்''

(யாக்கோபு 5:15).

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகிலே வாழ்ந்தபொழுது, பரிசுத்த ஆவியினால் அளவில்லாமல் நிறைந்து அதன்மூலம் நன்மை செய்கிறவராயும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார் (அப். 10:38). அதேபோன்று அவருடைய சீஷர்களும் தேவ வல்லமையால் நிறைந்து அநேக மக்களுக்கு இதே நன்மைகளை செய்யும் நற்கிரியைகளுடன் வாழ்ந்து வந்தனர் (அப். 5:15,16). இன்றும்கூட, விசுவாசத்தோடு பரிசுத்த ஆவியால் நிறைந்து ஜெபிக்கிற தேவ மக்களுக்கு இதே அநுக்கிரகத்தை நம் ஆண்டவர் அருளிச்செய்கிறார். அதோடுகூட ஒவ்வொரு குடும்பத்திலும் ஆண்டவர்மேல் முழு நம்பிக்கை வைத்து, விசுவாசத்தோடு, பரிசுத்த ஆவியில் நிறைந்து, ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கும்போதும், கர்த்தர் அற்புதங்களை செய்கிறார் (யாக். 5:16). ஆம்! ஆண்டவர் நம்மோடுகூட உலாவுகிறவராக இருக்கிறார். கர்த்தருடைய ஆவியானவர் எங்கே உண்டோ அங்கே விடுதலையுமுண்டு (2 கொரி. 3:17). பரிசுத்த ஆவியானவர்மூலமாக விசுவாசத்தோடு கர்த்தரை நோக்கிப் பார்க்கும்போது, எப்படிப்பட்ட பிணிகளிலிருந்தும் ஜனங்களுக்கு விடுதலை கொடுக்க இன்றும் ஆண்டவர் உயிரோடிருக்கிறார் (ரோமர் 8:11).

அயல்நாடு ஒன்றில் விசுவாசம் நிறைந்த ஒரு மனைவி தன் இறந்த கணவனின் சரீரத்தை அடக்கம் செய்வதற்கு பதிலாக, தன் ஆலயத்திலுள்ள போதகரிடம் அதை கொண்டு சென்றாள். மேல் மாடியில் ஆலய ஆராதனை நடந்து கொண்டிருந்தது. இவளோ கீழ் அறையிலே வைத்து ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தாள். போதகர் வந்து விசுவாசத்தோடு தன் கணவருக்காக ஜெபித்தவுடன், எப்படியாவது கர்த்தர் அவரை உயிரோடு எழுப்புவார் என்ற அசைக்க முடியாத விசுவாசம் அவளுக்குள் இருந்தது. ஆராதனை முடிந்தது. போதகர் கேள்விப்பட்டு ஓடோடி வந்தார். அவள் சொன்ன காரியத்தை கேட்டு முதலில் அதிர்ந்து போனார். ஆனால், அடுத்த கணம் அவளுடைய தெய்வீக விசுவாசத்தைக் கண்டு, அவளோடு இணைந்து அவரும் ஜெபித்தார். இடைவிடாமல் அவர்கள் செய்த ஒருமனப்பட்ட ஜெபம் பரலோகத்தை எட்டியது. கர்த்தர் அந்த பெண்ணின் விசுவாசத்தையும், ஊழியரின் விசுவாசத்தையும் கண்டு, அந்த மனிதருக்கு உயிர் கொடுத்தார். யாவரும் ஆச்சரியப்படும்படி, அவர் உயிரோடெழுந்தார். ஆம்! இயேசு கிறிஸ்து அன்று உயிரோடிருந்த நாட்களில் எப்படி மரித்தோரை எழுப்பினாரோ அதேபோன்று இன்றும் விசுவாச வீரர்கள், வீராங்கனைகள் செய்யும் வேண்டுதலைக் கேட்டு, அற்புதமாய் சுகமளிக்கிறவராகவே நம் ஆண்டவர் இருக்கிறார்.

அன்பானவர்களே! நீங்களும் கர்த்தர்மேல் முழு நம்பிக்கையும், விசுவாசமும் வைத்து பிரார்த்தனை செய்யுங்கள். பரிசுத்த ஆவியானவர் மூலமாக உங்களையும் அதே வண்ணமாக நிரப்பி தம்முடைய வரங்கள் கிரியை செய்யும்படி ஆண்டவர் அருள்புரிந்து ஆசீர்வதிப்பார் (1 கொரி. 14:1).

ஜெபம்: ''அன்பு இரட்சகரே! நீர் சிலுவையிலே சம்பாதித்து கொடுத்த தெய்வீக வல்லமை, வரங்கள் மூலமாக, இன்றும் மக்களை உபயோகித்து விசுவாசத்தின் மூலமாய் அநேகருடைய பிணிகளை குணமாக்கி வருகிறீர். எனக்கும் இன்று அதே தெய்வீக வல்லமை, விசுவாசம், அபிஷேகம், நிறைவாய் தாரும். என் ஜெபத்தை கேட்கிறபடியால் உமக்கு ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!''

உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுப்பேன்!

"உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து. உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு....." (எசேக்கியேல் 36:26).

மனுஷனுடைய இருதயம் திருக்கானதும், கேடு நிறைந்ததுமாய் இருக்கிறது (எரே. 17.9). அதிலே பல்வேறு வேண்டாத தீயகுணங்களும், காரியங்களும் நிறைந்திருக்கின்றன. ஆனால், அத்தகைய கேடான இருதயமுள்ள ஒரு மனிதன், தனக்காக சிலுவையில் அடிக்கப்பட்ட ஆட்டைப்போல தம்மையே அர்ப்பணித்த ஆண்டவரை நோக்கி பார்க்கும்பொழுது, அவனுடைய இருதயத்தின் கேடுபாடுகள் யாவும் முற்றிலும் மாற அவருடைய இரத்தம் வல்லமையுள்ளதாய் இருக்கிறது. பவுல் அப்போஸ்தலன் தன்னைக் குறித்து, "பாவிகளில் பிரதான பாவி நான்" (1 தீமோ. 1:15) என்று அறிக்கையிடுகிறார். அந்த அளவுக்கு அவருடைய வாழ்க்கை முதலிலே தாறுமாறானதாய் இருந்தது. ஆனால், ஆண்டவர் அவருக்கு தரிசனம் தந்து, அவரை சந்தித்த நாளிலிருந்து அவருடைய ஊழியத்தில் அவர் எவ்வளவாய் பாடுபடும்படி தலைகீழாய் அவர் வாழ்வை மாற்றினார் பாருங்கள்!

ஒரு குடும்பத்திலே பெற்றோர் மிகவும் பக்தியாய் வாழ்ந்து வந்தனர். தங்கள் மூன்று பிள்ளைகளும் அப்படியே கர்த்தருக்கு ஏற்றவர்களாய் வாழ வேண்டுமென்று தங்களால் இயன்ற அளவில் முயற்சி செய்தனர். ஆனால், அவர்களுடைய மூத்த மகனோ, ஆண்டவரோடு இணைந்து வாழ்வதின் மேன்மையை அறியாமல் தன் இருதயத்தை பிசாசுக்கு ஒப்புக்கொடுத்தான். பெற்றோர் கண்ணீர்விட்டு அழுது இடைவிடாமல் ஜெபித்தனர். உபவாசத்தோடு ஆண்டவரை பற்றிக்கொண்டனர். இந்த மகனோ, "நாம் நிறைய படித்திருக்கிறோம். நல்ல வேலை கிடைக்கும், பெற்றோருடைய தொல்லை நீங்கி தனியாக எங்கேயாவது போய்விடலாம்" என்று எண்ணிதான் அப்படி பெருமிதமாய் நடந்து கொண்டான். ஆனால், அவன் நினைத்ததற்கு நேர்மாறாக, வேலை ஒன்றுமே அவனுக்கு கிடைக்கவில்லை. அத்தனை பட்டங்கள் பெற்றிருந்தும் வேலை கிடைக்க வில்லையே என்ற பாரத்தில் அவன் சோர்ந்துபோய் இருக்கும்போது, கர்த்தர் அவனோடு பேசினார். "என் மகனே, உன் இருதயத்தை எனக்கு தா. நான் உன் வாழ்வை செழிக்க செய்வேன்" என்ற ஆண்டவருடைய வார்த்தை அவன் இருதயத்தை தலைகீழாய் மாற்றியது. "ஐயோ, என் சுய பெருமையினாலே இவ்வளவு நாளும் குருடனாய் நான் இருந்தேனே, ஆண்டவரே என்னை மன்னியும்" என்று அழுதான். ஆம்! ஆண்டவரை உண்மை மனதுடன் தேடின உடன்தானே ஆண்டவர் அவனுக்கு நிறைவான ஆசீர் வாதத்தை கொடுத்து, அவன் வாழ்வை பொறுப்பெடுத்துக் கொண்டார்.

எனக்கு அன்பானவர்களே! உங்கள் வாழ்விலும்கூட அறியாமையினால் உங்கள் இருதயத்தை கேடான நிலைமைக்கு கொண்டு போயிருக்கலாம் (எபே. 2:3). அன்பின் தேவன் உங்கள் இருதயத்தை சதையான இருதயமாக மாற்ற வல்லவராக இருக்கிறார். இந்த வாலிபனைப்போல நீங்களும் உங்களை தாழ்த்தி, அவரிடம் உங்கள் இருதயத்தை ஒப்படையுங்கள் (எபே. 4:22–24).

ஜெபம்: "அன்பின் தெய்வமே! இந்த உலகில் உம்மை தேடுவதேயல்லாமல் வேறு எந்த வழியிலும் பாக்கியமும், ஆசீர்வாதமுமில்லை. இன்று என் கேடான இருதயத் தையும்கூட நவமான, சதையான இருதயமாக மாற்றி, உமக்கு பிரியமான வாழ்வை வாழ என்னையும் நினைத்தருளும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தருக்கு மகிமையை செலுத்துங்கள்!

"...நீங்கள் வெளிச்சத்துக்குக் காத்திருக்கும்போது, அவர் அதை அந்தகாரமும் காரிருளுமாக மாறப்பண்ணுவதற்கு முன்னும், உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு மகிமையை செலுத்துங்கள்" (எரேமியா 13:16).

நம்முடைய அனுதின வாழ்வில் நமக்கு தேவையானவைகளையெல்லாம் ஆண்டவரிடத்திலே கேட்கிறோம். அவரும் "கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்" என்றே கூறியிருக்கிறார் (யோவான் 16:24). ஆனால், பெற்றுக்கொண்ட பின்பு எத்தனைபேர் நம்மை தாழ்த்தி முழுமனதோடு, அவரிடம் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக நன்றி செலுத்து கிறோம்? "ஸ்தோத்திர பலியிடுகிறவன் கர்த்தரை மகிமைப்படுத்துகிறான்" (சங். 50:23). எனவே, ஒவ்வொரு நன்மையை அவரிடத்திலிருந்து பெறும்பொழுதும் அவருக்கு நன்றி செலுத்த மறவாமல் கவனமாயிருப்போம். அதேபோன்று விண்ணப்பங்களை, வேண்டுதல்களை தெரிவிக்கும்பொழுதும் ஸ்தோத்திரத்தோடுகூடிய ஜெபத்தினால் தெரியப்படுத்தும்போது எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தினால் அவர் நிரப்பி, ஏற்ற சமயத்தில் நம்மை ஆசீர்வதித்து வழி நடத்துவார் (பிலி. 4:6,7).

ஒரு சாதாரண ஏழை மனிதன் மிகவும் கஷ்டப்பட்ட நிலைமையில் வாழ்ந்து வந்தான். ஆனால், அந்த நிலைமையிலும் அவன் ஆண்டவரை உண்மையுடன் தேடினபடியால் அவர் அவனுக்கு உதவி செய்து, அவனுடைய கஷ்டத்திலிருந்து மேன்மையான நிலைமைக்கு கொண்டு வந்தார். அப்படி தேவன் அவனை உயர்த்தியபொழுது, அவருக்கு நன்றி செலுத்துவதற்கு பதிலாக, அவன் தன் நண்பர்களையும், குடும்பத்தினரையும் சந்தோஷப்படுத்துவதற்காக ஆண்டவருக்கு பிரியமில்லாத காரியங்களில் ஈடுபடலானான். ஆண்டவருடைய மனம் அதிகமாக துக்கமடைந்தது. அவனை கைவிட்டதுபோன்று, அவன் காரியங்களை கவனியாமல் இருந்தார். அவர் அவ்வாறு இருந்ததின் நிமித்தமாக அவன் பெற்றுக்கொண்ட சகல உயர்வும் அப்படியே மாறி, அவன் தாழ்வு நிலைக்குள்ளாக மறுபடியும் இறங்கினான். அப்பொழுதுதான், அவன் தான் செய்த தவறை உணர்ந்தான். "ஐயோ, எவ்வளவு அதிகமாக தேவன் என்னை உயர்த்தினார். நானோ என் மதிகேட்டினால் அவரை மகிமைப்படுத்தாமல், மனுஷரை பிரியப்படுத்தி, அவரை அலட்சியம் பண்ணிவிட்டேனே! யாவற்றையும் இப்பொழுது இழந்துபோனேனே!" என்று கண்ணீர் வடித்தான்.

எனக்கு அன்பானவர்களே! கர்த்தருக்கு மகிமையை செலுத்த வேண்டியது எவ்வளவு அவசியமாக இருக்கிறது பாருங்கள். அவர் தெய்வம்! அவரை அலட்சியப்படுத்துவீர் களானால், பாதிப்பு உங்களுக்குத்தான்! எனவே, தெய்வபயத்தோடு அவர் தரும் நன்மைகள் சிறியதோ, பெரியதோ, பெற்றுக்கொண்டவுடன், முழுமனதோடு அவருக்கு நன்றி செலுத்துங்கள். அப்பொழுது அவர் உங்களை மென்மேலும் உயர்த்துவார் (சங். 50:23; எபி. 13:15).

ஜெபம்: "அன்பின் தெய்வமே! நீர் என்னோடுகூட இருந்து, என் வாழ்க்கையை எத்தனை அதிசயமாய் நடத்தி வருகிறீர். ஆகவே, முழுமனதோடு உம்மை ஸ்தோத் திரிப்பதில் நானும் கவனமாய் இருக்கும்படி எனக்கும் கற்றுத்தாரும். இன்றுமுதல், விசேஷமாக என்னை ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தருடைய வார்த்தை தரும் மகிழ்ச்சி, சந்தோஷம்!

"உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்கு சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது..." (எரேமியா 15:16).

இன்றைக்கு வேதவசனத்தின் மேன்மையையும் மகத்துவத்தையும் மக்கள் அறியாதபடியினால்தான் அதை வாசிக்கவோ, தியானிக்கவோ விருப்பமில்லாமல் மனம்போல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், "கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும், பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்" என்று வேதம் கூறுகிறது (சங். 1:2,3). இந்த வசனத்தின்படியே, தெய்வ பயத்தோடு கர்த்தருடைய சந்நிதியில் அமர்ந்து அவருடைய வார்த்தையை வாசிக்கும்போது, கர்த்தர் அதன் மேன்மையையும், நாம் அதில் அறிந்துகொள்ள வேண்டிய சத்தியத்தையும் அழகாய் போதித்து வெளிப்படுத்துவார். அந்த அறிவு நமக்கு உண்டாவதன் மூலமாக, மேற்கண்ட வசனத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிற தேவ சமாதானமும், மகிழ்ச்சியும் நிச்சயமாய் நமக்குள் வரும். தயவு செய்து இதை வாசிக்கிற ஒவ்வொருவரும் இதை அனுபவித்து பாருங்கள். "எனக்கு அது விளங்கவில்லை, இது புரியவில்லை" என்றெல்லாம் சாக்குப்போக்கு சொல்லி வேதபுத்தகத்தை வாசிக்காமல் தூக்கியெறிந்து விடாதீர்கள். வேதவசனத்தின் மூலமாக கர்த்தர் நம் ஒவ்வொருவரிடமும் பேசி, நம்மை சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்துவார் (சங். 119:103,104).

நான் ஒரு கிறிஸ்தவ குடும்பத்திலே பிறந்து வளர்ந்தபொழுதிலும், வேதபுத்தகத்தின் இரகசியங்களையோ, அதன்மூலம் உண்டாகிற அறிவையோ அறியாதிருந்தேன். ஒரு நாள் ஆண்டவர் இயேசு என்னோடு பேசவும், தம்முடைய மகளாக மாற்றவும், என்னை தேடி வந்தார். ஆண்டவருடைய அன்பு எவ்வளவு பெரியது பாருங்கள்! அன்று அவர் எனக்கு கூறிய கட்டளை என்னவென்றால், "மகளே, உன் வேதபுத்தகத்தை எடுத்து வாசி" என்றார். உடனே நானும் அதற்கு கீழ்ப்படிந்து வேதபுத்தகத்தை கையிலே எடுத்தேன்! "எதை வாசிப்பது? ஒன்றுமே புரியவில்லையே, சாமுவேல் புத்தகத்திலுள்ள கதை நன்றாய் இருக்குமே" என்று அந்த புத்தகத்தைத் திறந்தேன். ஆனால், என்றும்போல் அல்லாமல் அன்று ஆண்டவருடைய வார்த்தை என்னோடு நேரிடையாக பேசியதை உணர்ந்தேன். அன்று அவ்வாறு பக்தியுடன் வேதத்தை வாசிக்க ஆரம்பித்தவள் இன்றுவரை வாசித்துக் கொண்டே இருக்கிறேன். இடைவிடாமல் வேதம் தரும் இன்பத்தையும், மகிழ்ச்சியையும், பாக்கியத்தையும் பெற்று வருகிறேன்.

அன்பானவர்களே! இந்த மேன்மையை உங்களுக்கும் ஆண்டவர் நிச்சயம் கொடுப்பார். அதில் நித்திய ஜீவன் அடங்கியிருக்கிறது. அது உங்கள் வாழ்வில் ஒளியாக வழிநடத்தும் (யோவான் 5:39). இன்னும் கர்த்தருடைய வார்த்தையின்மூலம் பற்பல மேன்மைகளை பெற்றுக்கொள்ள இன்றைக்கு ஆண்டவர் உங்களையும் அன்போடு அழைக்கிறார். வேதவசனங்களுக்கு கனம் கொடுத்து, இன்றுமுதல் வாசிப்பீர்களா?

ஜெபம்: "அன்பு தெய்வமே! இதுவரை உம்முடைய வேதத்தின் மகத்துவத்தை அறியாமல் ஏனோதானோ என்று இருந்த நாட்களை மாற்றும். இன்றுமுதல் நானும் அதை வாசித்து, தியானித்து, மகிழ்ச்சியும் சந்தோஷமும் பெற்று வாழ அருள் தாரும், ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தரின் மகிமையின்மூலம் வரும் உண்மை!

"...தன்னை அனுப்பினவரின் மகிமையைத் தேடுகிறவனோ உண்மையுள்ளவனாயிருக்கிறான்" **(யோவான் 7:18).**

இது மிக ஆழமான ஆன்மீக அனுபவத்தை வெளிப்படுத்தும் ஒரு வாக்குத்தத்த வசனம். நாம் ஆண்டவரை இரட்சகராக, பரமதகப்பனாக ஏற்று, உரிமை கொண்டவர்களாக மாறும்போது, அவரில் உண்மையாய் அன்புகூருகிறோம். முதலாவது தம் குமாரனையே பூமியில் மானிடனாக தந்து, நமக்காக பாடுபடும்படி, இரட்சிப்பை பெற்றுத்தரும்படி அனுப்பிய தேவாதி தேவனுக்கு நன்றியும் மகிமையும் கனமும் செலுத்துகிறோம் (கலா. 2:20). அவ்வாறு மகிமையை அவருக்கு கொடுக்கும்போது, அது குமாரனுக்கும் உண்டாகிறது. இவ்வித வாழ்க்கையை ஆண்டவர் இன்றுமுதல் நம் ஒவ்வொருவருக்கும் கொடுக்க விரும்புகிறார். நம்முடைய ஆத்தும இரட்சிப்புக்காக தம் குமாரனையே இவ்வுலகுக்கு அனுப்பின தேவன், "நான் கர்த்தர், என் மகிமையை வேறொருவனுக்கும் கொடேன்" என்று கூறியிருக்கிறார் (ஏசாயா 42:8; 48:11). எனவே, அவர் விரும்புகிறபடி, நாம் என்னென்ன விதங்களில் அவருக்கு மகிமையை உண்மையான நன்றியுள்ளத்தோடு செலுத்தலாம் என்பதை எண்ணிப்பார்த்து, ஒவ்வொரு நாளும் அதில் கவனமாய் இருக்க ஜாக்கிரதையாயிருப்போம் (யோவான் 4:23,24).

வில்லியம் கேரி என்ற மனிதர் வெளிநாட்டை சேர்ந்தவராயிருந்தாலும், இந்தியாவிற்கு வந்து மிகவும் கஷ்டப்பட்டு தேவனுடைய ஊழியத்தை செய்து வந்தார். பல இந்திய மொழிகளைக் கற்று, வேதாகமத்தை பல மொழிகளில் மொழிபெயர்க்கவும் செய்தார். அரசாங்கத்திலும் இவருக்கு நல்ல மதிப்பும், மரியாதையும் கிடைத்தது. இதைக் கண்ணுற்ற ஒரு பணக்கார மனிதன், இவருக்கு ஏன் இந்த புகழ்ச்சியும், கனமும் என்று பொறாமை கொண்டு, அவரிடம் "என்ன இருந்தாலும் நீர் ஒரு சாதாரண செருப்பு உண்டாக்குகிற மனுஷன் தானே" என்று கேவலமாக பேசினார். ஆனால், வில்லியம் கேரியோ, சற்றும் கோபப்படாமல், தன்னை தாழ்த்தி, "ஐயா! நான் செருப்பு உண்டாக்குபவன் அல்ல; கிழிந்த செருப்பை தைப்பவன் மட்டுமே" என்றபொழுது, அந்த மனிதன் வெட்கப்பட்டு தலை குனிந்தான். தன்னை ஆண்டவர் அவ்வளவாய் மேன்மைப்படுத்தியிருந்தும் அதை பெரிதுபடுத்தாமல், தன்னைத் தாழ்த்தி, கர்த்தரை மகிமைப்படுத்தி வாழ்வதில் மாத்திரம் கவனமாயிருந்தார்.

நமக்கு முன்மாதிரியாக வாழ்ந்த ஆண்டவர் இயேசுவும்கூட இவ்வுலகில் ஏழைக் கோலமாக அவதரித்தது முதல் சிலுவையின் மரணபரியந்தம் தம்மை தாழ்த்தினார் (பிலி. 2:7–9). ஆகவே, தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, மகிமைப்படுத்தி, தம்து வலது பாரிசத்தில் அவர் உட்காரும்படியாக கனப்படுத்தினார். ஆகவே, நாமும் வில்லியம் கேரி அவர்களைப்போல, தாழ்மையுள்ளத்தோடு கர்த்தரை மகிமைப்படுத்தவும் உண்மையுள்ளவர்களாய் ஊழியம் செய்யவும் நம்மை ஒப்புக் கொடுப்போம் (லூக்கா 14:11; 18:14).

ஜெபம்: "அன்பு தெய்வமே! என் வாழ்க்கையிலும் உம்முடைய வல்லமையையும், உம்முடைய மகத்துவத்தையும் கனப்படுத்த வேண்டியவிதமாக கனப்படுத்தாமல், உண்மையில்லாமல் நான் வாழ்வேனானால், இன்றே என்னை மன்னித்து, வில்லியம் கேரியைப் போல தாழ்மையாயிருக்கவும், உம்மை மகிமைப்படுத்துவதில் கவனமாய் இருக்கவும் எனக்கு அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

ஊழியம் செய்கிறவர்களுக்கு பிதாவினால் கனம்!

"...ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்"
(யோவான் 12:26).

ஆண்டவர் தம்முடைய அடிச்சுவடுகளை பின்பற்றி, அவர் நடப்பித்த தேவ ராஜ்யத்தின் மகிமைக்கான பணியை யார் யார் உண்மையும் உத்தமுமாய் தொடருகிறார்களோ, அவர்களைக் குறித்து பெருமைப்படுவார்; அவர்களை கனம் பண்ணுவார். "நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்" என்று எவ்வளவு பெரிய கனத்தை தம் ஊழியர்களுக்கு ஆண்டவர் கொடுக்க விரும்புகிறார் பாருங்கள்! இப்படிப்பட்ட கனமான ஊழியத்தை செய்வது தேவன் நமக்கு கொடுக்கிற சிலாக்கியம். எல்லோராலும் ஊழியம் செய்துவிட முடியாது. ஆண்டவரே விருப்பத்தையும் செய்கையையும் உண்டுபண்ணுகிறவர் (பிலி. 2:13). எனவே, அவருக்கென்று உங்கள் வாழ்வை நீங்களும் அர்ப்பணிக்கும்போது, பண ஆசையோடும், பொருளாசையோடும் வேறு எந்தவிதமான உள்நோக்கத்தோடும் ஒருநாளும் செய்யாமல், "என்னை இரட்சித்த எம்பெருமான் இயேசுவே, என் அருமை தகப்பனே! உம் நாம மகிமைக்கென்றே உழைக்க, உம்மைப்போல பக்தி வைராக்கியத்துடன் செயல்பட என்னையும் கரம்பிடித்து வழிநடத்தும்" என்று ஒப்படைப்பது மிகமிக அவசியம் (1 கொரி. 8:1–ன் கடைசி பாகம்).

ஒரு சமயம் "இயேசு அழைக்கிறார்" கூட்டம் ஒன்றில் ஒரு ஏழை வாலிபப் பெண் கலந்துகொண்டாள். செய்தியை ஆவலுடன் கேட்டதோடு, ஜெப வேளையில் "ஆண்டவரே, என் வாழ்வில் உமக்கு பிரியமானதையே செய்யவும், என்னால் இயன்ற அளவில் உம் ஊழியத்தை செய்யவும் என்னை நீர் ஆசீர்வதியும்" என்று கர்த்தரை நோக்கி, கருத்தாய் ஜெபித்தாள். அருகில் இருப்பவர்களைக் குறித்து சற்றும் நினைக்காமல், ஜெபவேளையில் கதறி கதறி சத்தமாக ஜெபிக்கலானாள். கர்த்தர் அந்த மகளின் கதறுதலைக்கேட்டு, இரட்சிப்பினாலும், அபிஷேகத்தினாலும் அன்றே அளவில்லாமல் நிரப்பினார். அதோடுகூட அவள் ஆண்டவரை நேசித்து, அவரோடு நெருங்கி, பரிசுத்தமாய் ஜீவிப்பதிலும் பக்தியாய் நடப்பதிலும் ஜாக்கிரதையாய் இருந்தாள். ஆண்டவர் அவளுடைய உண்மையை பார்த்து, ஆவியின் வரங்களையும், வல்லமையையும் அளவில்லாமல் கொடுத்தார். அவள், தான் வசித்து வந்த குடிசைப்பகுதி மக்களிடையே அநேகருக்கு ஆறுதலின் மகளாக, ஆறுதலின் பாத்திரமாக இளம் வயதிலேயே எழும்பிப் பிரகாசித்தாள். அம்மக்கள் மத்தியிலே ஆண்டவர் அவளை அளவில்லாமல் கனப்படுத்தினார்.

அன்பானவர்களே! இவ்வித கனத்தை, எந்த நிலைமையிலும், எங்கிருந்தாலும், எப்படிப்பட்டவர்களுக்கும் ஆண்டவர் கொடுக்க ஆவலுள்ளவராயிருக்கிறார். சாக்குபோக்குகள் சொல்லி நாட்களை வீணாகக் கடத்தாமல், நீங்களும் பயபக்தியுடன் இந்த வாலிபப் பெண்ணைப்போல ஆண்டவரை நோக்கிக் கெஞ்சி, வரங்களையும், வல்லமையையும் பெற்று, கர்த்தருடைய கனத்தை பெற்று வாழுங்கள் (1 சாமு. 2:30).

ஜெபம்: "அன்பு தெய்வமே! நானும் இந்த பெண்ணைப்போல கருத்தாய், பாரத்தோடு ஜெபிக்கவும், உம்மை உறுதியாய் பற்றிக்கொள்ளவும், உம்முடைய ஊழியத்திலே எழும்பிப் பிரகாசிக்கவும், உம்மால் உண்டாகிற கனத்தை பெற்றுக்கொள்ளவும், எனக்கு நீரே இன்றுமுதல் அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தரில் அன்புகூர்ந்து அவர் வழிகளிலே நடவுங்கள்!

"நீ (நீங்கள்) உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து, எந்நாளும் அவர் வழிகளில் நடவுங்கள்..." (உபாகமம் 19:8).

கர்த்தருக்கு பயந்து, அவர் வழிகளில் நடந்து, அவரிடத்தில் அன்புகூர்ந்து, அவரை சேவிக்கிற எந்த மனுஷனும், மனுஷியும் கர்த்தருக்கு பிரியமானவர்களாயும், அவருக்கு சொந்தமானவர்களாயும் நிச்சயம் இருப்பார்கள். ஆபிரகாம், தாவீது, யோசேப்பு, தானியேல் போன்ற பக்தர்களும் நமக்கு முன்னதாக ஒரு முன்மாதிரியாக வாழ்ந்து காண்பித்தார்கள். நாமும் நம் அனுதின வாழ்வில் இந்த காரியங்களையெல்லாம் ஜாக்கிரதையாய் பின்பற்றுவோமானால், அவர்கள் பெற்ற அதே மேலான நன்மைகளை, தெய்வீக ஆசீர்வாதங்களை நம் வாழ்விலும் பெறுவது நிச்சயமான காரியம். இந்த அறிவு எல்லோரிடத்திலும் இருப்பது கிடையாது. ஏதோ பெயரளவில் கிறிஸ்தவர்களாக ஜீவியம் செய்கிறவர்கள்தான் இன்றைக்கு ஏராளம் பேர். ஆனால், வேதத்தை வாசித்து, கர்த்தரோடு ஜெபத்தின் மூலமாய் ஐக்கியம் கொண்டு, அவருக்கு பிரியமானவைகளையே செய்வதில் கவனமாயிருக்கிற ஒவ்வொருவரையுமோ கர்த்தர் அரவணைத்து, ஆசீர்வதித்து அருமையாக வழிநடத்துகிறார் (நீதி. 8:34,35).

ஒரு தேவனுடைய மனிதர் தன் உலக வேலையோடுகூட, உண்மையும் உத்தமுமாய் தன்னால் இயன்ற அளவிலே கர்த்தரில் அன்புகூர்ந்து, அவர் வழிகளில் ஜாக்கிரதையாய் நடந்து, தனக்கு கிடைத்த எஞ்சிய நேரமெல்லாம் "எம்பெருமான் இயேசுவுக்காகவே வாழ்வேன்" என்று அவர் சேவையையும் கருத்தாய் செய்து வந்தார். அவர் அவ்விதமாய் உழைக்க உழைக்க, அவர் வேலையிலும் பற்பல பாடுகள் ஏற்பட்ட பொழுதிலும்கூட கர்த்தர் உயர்வையும், மகிமையையும் மற்றொருபுறம் கட்டளையிட்டார். கனமும் மகிமையும் அவரைத் தேடி வந்தது. அதோடு ஊழியத்திலும் அவருடைய உண்மை அன்பைக்கண்ட ஆண்டவர் அவரை கனப்படுத்தி, உயர்த்தினார். ஒருபுறம் எதிர்ப்புகள், சோதனைகள், சஞ்சலங்கள் நேரிட்டபொழுதிலும், முடிவில் கர்த்தர் கைவிடாமல் தெய்வீக ஞானம், தைரியம், வல்லமை யாவும் கொடுத்து, திரளான மக்களுக்கு தேவனுடைய நாமத்தின் மகத்துவத்தை அறிவிக்கும் ஒரு பெரிய ஊழியனாக ஆசீர்வதித்தார்.

அன்பானவர்களே! இவ்விதமான தெய்வீக ஆசீர்வாதம் நிறைந்த வாழ்வு உங்களுக்கும் கிடைக்க வேண்டுமானால், நீங்களும் ஆண்டவரில் அன்புகூர்ந்து, அவர் விரும்பும் வழிகளிலே தெய்வபயத்துடன் நடந்து, ஆண்டவரை பிரியப்படுத்துகிறவர்களாக ஒவ்வொரு காரியத்திலும் அவர் காண்பிக்கும் வழிகளின்படியே நடப்பதில் ஜாக்கிரதையாயிருப்பீர்களானால், கர்த்தரும் உங்கள்மேல் பிரியமாயிருப்பார். நீங்கள் விரும்புகிறதற்கும், வேண்டிக்கொள்கிறதற்கும் அதிகமாக எல்லாக் காரியங்களிலும் தமது வல்லமையினால் உங்களை கரம் பிடித்து வழி நடத்துவார் (எபே. 3:20).



ஜெபம்: "அன்பின் தெய்வமே! இந்த தெய்வீக அன்பையும், ஞானத்தையும் நிறைவாய் எனக்கு தந்து, நானும் உம்முடைய வழியையே இன்றுமுதல் ஒவ்வொரு நாளும் கவனமாய் பின்பற்ற, எனக்கும் உம்முடைய தெய்வீக ஆசீர்வாதத்தை நீர் அளவில்லாமல் தருவதற்காக உமக்கு நன்றி, ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

ஒத்தாசையாக எழுந்து நிற்கும் ஆண்டவர்!

"நீர் கேடகத்தையும் பரிசையையும் பிடித்து, எனக்கு ஒத்தாசையாக எழுந்து நில்லும்"
(சங்கீதம் 35:2).

ஆண்டவர் ஒவ்வொரு உண்மையான தேவனுடைய பிள்ளைக்கும் இவ்விதமாக கேடகத்தையும், பரிசையையும் பிடித்து ஒத்தாசையாக அருகில் எழுந்து நிற்கிறார். தாவீது சங்கீதம் 16:8–ல், "கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை" என்று கூறுகிறான். உங்களுடைய உள்ளத்தின் ஆழத்தில் ஆண்டவருக்கு மட்டும் இடம் கொடுத்திருக்கிறீர்களா? அல்லது உலக மக்கள்மீது கீழ்த்தரமான அன்பு வைத்து, மனம்போல வாழ்கிறீர்களா? விசேஷமாக வாலிபர்களே! யோசேப்பு, தானியேல் போன்ற இளைஞர்கள் அப்படித்தான் தங்கள் வாழ்வை இந்த உலகத்தின் அசுத்தங்களுக்கு விலக்கி வாழ்ந்தார்கள். நீங்களும் இவ்வித தெய்வீக வழியில் நடக்க, ஆண்டவருடைய ஒத்தாசையை நாடித்தேடுங்கள். ஆண்டவர், உங்களையும் அப்படியே வழிநடத்துவார். குடும்ப வாழ்விலேயும்கூட ஆபிரகாம் போன்ற பக்தர்களைப்போல, நீங்களும் வாழ்ந்து, தேவ ஒத்தாசையோடு எழும்பிப் பிரகாசியுங்கள் (ஏசாயா 60:1).

ஒரு ஊரில் சில வாலிபர்கள், தாவீதைப்போல் தேவனை எப்பொழுதும் தங்களுக்கு முன்பாக வைத்துக்கொள்ள, ஆண்டவரின் ஒத்தாசையுடன் கவனமாய் இருந்து வந்தார்கள். ஒரு சமயம் அவர்கள் யாவரும் சேர்ந்து தங்களைப்போன்ற வாலிபர்கள் ஆண்டவரைப்பற்றி அறிந்துகொள்ளும்படியாக ஒரு நற்செய்திக் கூட்டம் நடத்த தீர்மானித்தார்கள். ஆனால், அதிலே பல பிரச்சினைகள் எழும்பி வந்தன. அதற்கு தேவையான பணமும் கிடைக்கவில்லை, இடம் தேடினால் அதுவும் கிடைக்கவில்லை. இப்படி ஒவ்வொரு பிரச்சினையாக வந்தபோது, அவர்கள் யாவரும் ஒன்று கூடினர். தண்ணீர் குடியாமலும், புசிக்காமலும், கர்த்தருடைய சமுகத்திலே ஒருமனப்பட்டு தங்களுக்கு ஒத்தாசையாக கர்த்தர் எழுந்து நின்று, இந்த தெய்வீகப் பணியை திறம்பட நடத்தி முடிக்க அருள்புரியுமாறு வேண்டுதல் செய்தனர். அவ்வாறு வேண்டுதல் செய்தவுடன் தானே, அநேக நற்சிந்தையுள்ள மக்கள் தாங்களாகவே இதைக் கேள்விப்பட்டு முன் வந்து, தேவைக்கேற்றபடி அந்தந்த காரியங்களை செய்து முடித்தனர். அவர்கள் விரும்பினதற்கும், நினைத்ததற்கும் அதிகமாக மக்கள் திரண்டு வந்து, கூட்டங்கள் மிகுந்த ஆசீர்வாதமாக முடிவடைய ஆண்டவர் அவர்களுக்கு ஒத்தாசையாக எழுந்து நின்றார்.

அன்பானவர்களே! கர்த்தர் தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார் (நாகூம் 1:7). ஆகவே, நீங்களும் அவரது ஒத்தாசையை அனுதினமும் நாடித்தேடுவதில் கவனமாய் இருங்கள். அப்பொழுது, உங்களது விண்ணப்பங்கள் யாவையும் கேட்டு, எசேக்கியா ராஜாவுக்கு அநுகூலம் செய்ததுபோல் செய்வார் (2 நாளா. 30:20).

ஜெபம்: "அன்பு இரட்சகரே! இந்த வாலிபர்களைப்போல நானும் உம்மையே ஒத்தாசையாகக் கொண்டு, உம்முடைய ஊழியத்தையும், உமக்கு பிரியமான காரியங்களையும், என் சொந்த காரியங்களையும்கூட செய்து முடிக்க, உம்முடைய தெய்வீக கிருபையை இன்றுமுதல் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

செய்கைகளிலெல்லாம் புத்திமானாய் நடத்துவார்!

''தாவீது தன் செய்கைகளிலெல்லாம் புத்திமானாய் நடந்தான்; கர்த்தர் அவனோடேகூட இருந்தார்'' (1 சாமுவேல் 18:14).

தாவீது ஒரு சாதாரண ஆடு மேய்க்கிறவன். ஆனால், ஏற்ற சமயம் வந்தபோது, ஆண்டவர் அவனை உயர்த்த சித்தம் கொண்டார். காரணம் என்னவென்றால், அவன் ஆண்டவரை அளவில்லாமல் நேசித்தான். அவரை தன் சொந்த தகப்பனாக ஏற்றுக்கொண்டான். அதாவது, அவரோடு ஒன்றாய் இணைந்துகொண்டான் என்று சொன்னால் அது மிகையாகாது. இதினிமித்தமாக சவுல் ராஜா அவனை எங்கெல்லாம் அனுப்பினானோ, அங்கெல்லாம் அவன் செய்கைகளில் புத்திமானாய் நடந்து, காரியத்தை திறம்பட முடித்துவர ஆண்டவர் அவனுக்கு அருள்புரிந்தார். இந்த ஞானமும் புத்தியும் எங்கிருந்து வருகிறது? ''கர்த்தர் ஞானத்தை தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்'' (நீதி. 2:6). உத்தமர்களுக்கு, நீதிமான்களுக்கு இந்தவிதமான அறிவின் பொக்கிஷத்தை அவர் ஏராளமாக அருளிச் செய்கிறார். சாலொமோன் தனக்கு ஞானம் வேண்டுமென்று கேட்டபொழுது, யாவரும் அதிசயிக்கும் வண்ணம் ஞானத்தினால் அவனை நிறைத்தார் (1 இராஜா. 3:12; 4:29). அதேபோன்று இன்றைக்கும் அவரை நோக்கிப் பார்க்கிற மாணவ, மாணவியர்க்கு அல்லது வாழ்க்கையில் ஞானம் தேவையாயிருக்கிற யாவருக்கும், அறிவையும், அளவில்லாத ஞானத்தையும் புத்தியையும் ஆண்டவரே கொடுப்பார்.

ஒரு மாணவன் தன் சுய முயற்சியில் எவ்வளவோ கஷ்டப்பட்டு இரவும் பகலும் பாடங்களைப் படித்து, நிறைய மதிப்பெண்கள் வாங்க பிரயத்தனம் பண்ணினான். ஆனால், ஞாபக சக்திக் குறைவினால் அவன் படிப்பதெல்லாம் அப்படியே மறந்து விடுவான். என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்த அவனுக்கு, அவன் நண்பன், தன் பெற்றோர் எவ்வாறு அவனுக்கு புத்தி சொன்னார்கள், கர்த்தரை தேடும்படி வழிநடத்தினார்கள் என்பதைக் குறித்து ஆலோசனையாக கூறியபொழுது, உடனடியாக அவனோடு சேர்ந்து இந்த மாணவனும் கருத்தாக ஆண்டவரைத் தேடி, அவரை பற்றிக் கொண்டான். என்ன ஆச்சரியம்! கர்த்தர் தம்முடைய வார்த்தையின்படியே (நீதி. 2:6,7) அவன் வாழ்வில் ஞானத்தையும், ஞாபக சக்தியையும், அறிவையும் ஆச்சரியமான முறையிலே அதிகரிக்க செய்தார். படிப்பில் அவனுடைய ரேங்க் (Rank) நிலைமை மிகவும் முன்னேறியது. அவனை எப்பொழுதும் கடிந்துகொண்ட உபாத்தியாயர்கள் அவனைக் குறித்து பெருமையாய் பேசும்படி நிறைய மதிப்பெண்கள் வாங்க ஆண்டவரே அவனை வழிநடத்தினார்.

ஆம், பிரியமானவர்களே! உங்கள் வாழ்க்கையிலும் என்னென்ன விதங்களிலே புத்தி, ஞானம், அறிவு இவைகளை விரும்பி நாடித் தேடுகிறீர்களோ அதையெல்லாம் கர்த்தர் உங்களுக்கு கொடுத்து, உங்களை நீதிமான்களாக வழிநடத்துவார் (ஏசாயா 53:11). குடும்ப வாழ்விலும், பணிபுரியும் இடங்களிலும், தாவீதைப்போல் புத்திமான்களாய் நடக்க தெய்வீகக் கிருபையை, ஞானத்தை நிறைவாய் அருளுவார் (யாக். 1:4).

ஜெபம்: ''அன்பு தெய்வமே! உம்மிடத்திலிருக்கும் இந்த பொக்கிஷங்களையெல்லாம் எனக்கும் இன்றுமுதல் நிறைவாய் தாரும். என்னுடைய சுய ஞானம், அறிவு, புத்தி யாவும் வெறுமையானது என்பதை உணர்ந்து, உம்முடைய பாதத்தில் என்னை பணிவாய் சமர்ப்பிக்கிறேன். என்னையும் ஆசீர்வதித்து வழிநடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!''

தேவன் உங்கள் அன்பை அறிந்திருக்கிறார்!

"தேவனில் அன்புகூருகிறவனெவனோ, அவன் தேவனால் அறியப்பட்டிருக்கிறான்"
(1 கொரிந்தியர் 8:3).

இது ஒரு இன்பமான வாழ்க்கை! தேவன் நம்மில் அன்பாயிருக்கிறார் (1 யோவான் 4:8,16). இதேவண்ணமாக நாமும் அவருடைய அன்பை உணர்ந்தவர்களாய், முழு மனதோடு, முழு இருதயத்தோடு, முழுபலத்தோடு அவரில் அன்புகூரும்பொழுது, அவர் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறார். நம்முடைய உள்ளத்தின் ஆழத்தை அறிந்தவராய், அதிசயமானவராய், ஆலோசனைக்கர்த்தராக, வல்லமையுள்ள தேவனாக, நித்திய நித்தியமாய் நம்முடைய தகப்பனாக இன்பமாய் நம்மை நடத்துகிறார் (ஏசாயா 9:6)! பதினாறாவது வயதில் ஆண்டவருடைய அன்பை உணர்ந்த நான், இன்று வருடங்கள் பல கடந்துவிட்டபொழுதிலும், இந்த அன்பின் வல்லமையினால் நிறைந்து, எந்த நிலைமையிலும் மகிழ்ச்சியும், பேரானந்தமும், சந்தோஷமும், சமாதானமும் பெற்று வாழ்ந்து வருகிறேன். என் கவலைகளையெல்லாம் சுமக்க என் இயேசு போதுமே என்று பாடுகிறேன். இந்த வாழ்க்கை உண்மையாகவே இன்பமானது அல்லவா! நீங்களும் உங்கள் வாழ்க்கையிலே இவ்விதமான ஐக்கியத்தால் ஆண்டவரோடு இணைந்து வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா? (1 கொரி. 1:9). இல்லையானால், இப்பொழுதே முழங்காற்படியிட்டு, அந்த இன்ப வாழ்வை ஆண்டவரிடத்திலிருந்து பெறும்வரை அவரை விட்டுவிடாதிருங்கள் (யோவான் 15:4,5).

ஒரு தாய் ஒருநாள் தன் பிள்ளை தன்னை எவ்வளவாய் நேசிக்கிறது என்பதை அறிய, தன் பிள்ளை தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்தபொழுது, ஒரு மரத்தின் பின்னால் ஒளிந்து கொண்டாள். அந்த குழந்தை கொஞ்ச நேரம் விளையாடியது. அதன்பின் அம்மாவைக் காணோமே என்று தேடித்தேடி சுற்றுமுற்றும் பார்த்து, பின்பு ஒவென்று அழ ஆரம்பித்தது. அந்த தாய் அந்த குழந்தை தன்னை எவ்வளவாய் நேசிக்கிறது என்பதை உணர்ந்து, மிகுந்த பெருமிதத்துடன் ஓடோடி வந்து, தன் பிள்ளையை அள்ளி அணைத்து முத்தமிட்டாள்.

இதேவண்ணமாகத்தான் நம்முடைய ஆண்டவரும், நாம் அவரில் அன்புகூருகிறோமா என்று கவனிக்கிறார். நம்மை நாமே ஆராய்ந்து நம் குறைகளை ஆண்டவரிடத்தில் ஒப்படைப்போம். உலக மக்களால் கைவிடப்படும்பொழுதும், நம்முடைய தேவைகளில் நமக்கு உதவி செய்வார் இல்லாத வேளைகளிலும், ஆண்டவரில் நாம் முழு அன்பு வைக்கும்பொழுது, அவர் நம்மை கைவிடவே மாட்டார் (சங். 91:14). யோபுவை சோதிக்க இடங்கொடுத்தாலும், முடிவில் அவருடைய அன்பு, அவருக்கு பூரண சுகத்தை கொடுத்ததோடு, உலக ஆசீர்வாதங்களையெல்லாம் இழந்ததற்கு நிகராக இரண்டு மடங்கு அளவில்லாமல் கொடுத்தார். அவர் வாழ்வு நான்கு தலைமுறைகளைக் கண்டு, எத்தனை இன்பம் நிறைந்ததாய் இருந்தது என்று நாம் வாசிக்கிறபடியே (யோபு 42:10,16), உங்கள் வாழ்வையும் நிறைவாய் ஆசீர்வதிப்பார். கவலைப்படாதிருங்கள்.

ஜெபம்: "அன்பு தெய்வமே! உம்முடைய அன்பு ஈடு இணையற்றது. இந்த அன்பை அறிந்துகொள்ள, முழுமனதோடு உம்மை நேசிக்க இன்றுமுதல் எனக்கும் பெலன் தாரும். மனிதரால் கைவிடப்படும்போது, நீர் ஓடி வந்து அணைத்து ஆசீர்வதிப்பீர். உமக்கு ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!

மரணத்திற்கு ஏதுவான கனிகளைக் கொடுக்கிறோமா?

"...பாவ இச்சைகள் மரணத்திற்கு ஏதுவான கனிகளைக் கொடுக்கத்தக்கதாக நம்முடைய அவயவங்களிலே பெலன் செய்தது". (ரோமர் 7:5).

இத்தகைய வாழ்க்கை பயங்கரமான ஆசீர்வாதமற்ற ஒரு வாழ்க்கை! இந்த மரணத்திற்கு ஏதுவான கனிகள் எப்பொழுது நம் வாழ்வில் காணப்படுமென்றால், பாவ இச்சைகள், உலக ஆசைகள், ஜீவனத்தின் பெருமை, இவைகளுக்கு நம் உள்ளத்தை நாம் முழுவதுமாகவும், துணிகரமாகவும் இடம் கொடுக்கும்பொழுதுதான். "இந்த உலகத்தை அனுபவிக்கிற வரை அனுபவிப்போம், அதன்பிறகு இரட்சிப்பு மற்ற காரியங்களை பார்த்துக்கொள்ளலாம்" என்று அநேக வாலிபர்கள், துணிகரமான பாவ வழிகளில் சென்று, தங்கள் வாழ்வை கெடுத்துக்கொண்டு, மரணத்திற்கு ஏதுவான கனிகளை கொடுக்கிறவர்களாக வாழ்கிறார்கள் (ரோமர் 7:5). ஆனால், ஆண்டவர் இந்த உலகத்திற்கு வந்து, இப்படிப்பட்ட எந்த மனுஷனையும் தம்முடைய அன்பினாலும், தாம் சிலுவையிலே அவர்களுக்காக சிந்தின இரத்தத்தாலும் மீட்டெடுக்க, தம்மையே அர்ப்பணித்தார்.

ஒரு தாய்க்கு ஒரு அழகிய மகன் இருந்தான். வளர வளர தாயினுடைய அன்பு அவனுக்கு பெரிதாக தெரியவில்லை. தாயை அலட்சியப்படுத்தி, நண்பர்களோடு சேர்ந்து உலக ஆசாபாசங்களில் ஈடுபட ஆரம்பித்தான். தாய் மிகுந்த துக்கம் நிறைந்தவளாய் ஆண்டவரின் பாதத்தை பற்றிக்கொண்டு, "என் தகப்பனே, என் பிள்ளையை காப்பாற்றும், சரியான வழியிலே அவனை நீரே திருப்பும்" என்று கருத்தாய் பிரார்த்தனை செய்து வந்தாள். மகனோ, தான் விரும்பிய, உலகப்பிரகாரமாக கேடான நிலைமையிலே வாழ்ந்த ஒரு பெண்ணை திருமணம் செய்துகொண்டு எங்கேயோ தாய்க்கு தெரியாமல் வாழ்ந்து வந்தான். திருமணமானதும் அந்த பெண்ணின் சுயரூபம் அவனுக்கு தெரிய ஆரம்பித்தது. அவனை விட்டுவிட்டு, வேறு ஆண்களோடு உல்லாசமாய் சுற்ற ஆரம்பித்தாள். அந்த பெண்ணை உண்மையாய் நேசித்த அந்த மகன் மிகுந்த ஏமாற்றம் கொண்டவனாக, இந்த உலகம் எத்தனை பொல்லாங்கு நிறைந்தது, என் தாய் சொன்ன வார்த்தைகளை அலட்சியம் செய்துவிட்டேனே என்ற வேதனையோடு தாயிடம் திரும்பி வந்தான். மன்னிப்பு கேட்டான், மறுவாழ்வு பெற்றான். ஆண்டவர் அவன் வாழ்க்கையை முற்றிலும் மாற்றினார். மரணத்திற்கு ஏதுவான கனி நிறைந்த வாழ்வு மாறி, ஜீவனுக்கு ஏதுவான கனி தரும் தெய்வீக மனிதனாக வாழ தொடங்கினான்.

எனக்கு அன்பானவர்களே! விசேஷமாக வாலிபர்களே! ஆண்டவர், ஜீவனுள்ள வாழ்வை உங்களுக்கு இலவசமாகத் தர அன்போடு காத்திருக்கிறார். பாவத்திற்கான காரியங்களா? அல்லது ஜீவனுள்ள கனிகளைக் கொடுக்கும் நீதியின் வாழ்வா? (ரோமர் 6:13). எதற்கு உங்களை ஒப்புக்கொடுக்கப் போகிறீர்கள்?

<u>ஜெபம்</u>: "அன்பு இரட்சகரே! இந்த உலகம் எவ்வளவு பயங்கரமான மரணத்திற்கு ஏதுவான கனிகளை கொடுக்க வைக்கிறது என்பதை உணர்ந்து கொண்டேன். <u>இன்றே</u> என் வாழ்வை உம்முடைய தூய இரத்தத்தால் கழுவி ஜீவனுக்கு ஏதுவான கனி கொடுக்கிற தெய்வீக வாழ்வை எனக்கும் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"

தேவனுடைய வார்த்தை நம்மை பிழைக்க வைக்கும்!

"அவர் எனக்குப் போதித்து சொன்னது: உன் இருதயம் என் வார்த்தைகளைக் காத்துக்கொள்ளக்கடவது; என் கட்டளைகளைக் கைக்கொள், அப்பொழுது பிழைப்பாய்" (நீதிமொழிகள் 4:4).

ஆண்டவர் நம் ஒவ்வொருவருடைய வாழ்வையும் கவனித்து வருகிறார். நம்முடைய உள்ளத்தை அவருக்கு முன்பாக அடைத்து வைத்து, உலகம், மாமிசம், ஆசை, இச்சை, இவைகளுக்கு இடம் கொடுத்திருக்கிறோமா? அல்லது நமது இருதய வாசற்படியில் நின்று தட்டுகிற அவருக்கு, அதை திறந்து, உள்ளே வாரும் என்று அழைத்து இடம் கொடுக்கிறோமா? (வெளி. 3:20). அப்படி அவருக்கு ஒப்புக்கொடுக்கும்போது, நாம் செய்ய வேண்டிய அடுத்த காரியம், அவருடைய வார்த்தையை கனப்படுத்தி, அதிலுள்ள சத்தியங்களை அறிந்து, அவருக்கு பிரியமாய் நடப்பது. அவ்வாறு ஜெபத்தின் மூலமாய் அவரோடு பேசுகிற, அவருக்கு பிரியமாய் நடக்கிற ஒவ்வொருவரையும், அவர் கரம் பிடித்து, "இதுவே வழி, நீ தொடர்ந்து இதிலே நட" என்று அழகாய் வழி நடத்துவார் (ஏசாயா 30:21).

ஒரு பெரிய அதிகாரி கை நிறைய பணம், பொருள், பதவி, பட்டம், புகழ் யாவும் இருந்தபடியினால், தான் நினைத்தால் எதுவும் நடக்கும் என்று எப்பொழுதும் பெருமிதம் கொள்வார். என் வீட்டைப் பாருங்கள், என் உடையைப் பாருங்கள் என்றெல்லாம் கூறிக்கொண்டே இருப்பார். ஒருநாளும் தனக்கு இந்த ஆசீர்வாதங்களையெல்லாம் கிருபையாக அருளிச்செய்த ஆண்டவரை பற்றியோ அவரது அன்பை பற்றியோ எண்ணிப் பார்க்கவே மாட்டார். இப்படி பெருமையுடன் வாழ்ந்த அவருடைய வாழ்க்கையில் ஒரு பேரிடி காத்திருந்தது. திடீரென அவருடைய சிறுநீரகம் வேலை செய்ய மறுத்தது. மருந்துகளோ, மருத்துவர்களின் முயற்சியோ அவருக்கு பலனளிக்கவில்லை. அவருடைய நண்பர்களாயிருந்த சில பக்தர்கள் வந்து, ஆண்டவர் இயேசுவின் அன்பையும், அவரைப்பற்றிய தெய்வீக காரியங்களையும் விவரித்து கூறினபொழுது தான் அவர் தன் வாழ்வின் குறைவை உணர்ந்து கொண்டார். அவர்கள் அன்போடு கொடுத்த வேதபுத்தகத்தை கருத்தாய் வாசித்து வாசித்து, தன்னுடைய குறைகளையெல்லாம் ஆண்டவரிடத்தில் ஒப்படைத்தார். "இனி உமக்காகவே வாழ்வேன்" என்று தீர்மானித்தார். தன்னை தாழ்த்தின அவருக்கு தெய்வீக சுகத்தை முற்றிலுமாய் அருளி, மருத்துவமனையில் இருந்து விரைவில் வீடு திரும்பும்படி தேவன் கிருபை புரிந்தார்.

எனக்கு அன்பானவர்களே! உங்கள் வாழ்க்கையிலும் இன்று ஆண்டவருக்கு முன்பாக பயந்து அவருடைய வார்த்தைகளை வாசிப்பதில், அவரை தேடுவதில் கவனமாய் இருங்கள் (எசே. 20:11). தேனிலும் இனிமையானதான தேவனுடைய வார்த்தைகள் உங்கள் வாழ்வையும் செழிக்கச் செய்யட்டும் (சங். 1:3).

ஜெபம்: "அன்பு இரட்சகரே! உம்முடைய வேதத்தை வாசிப்பதில் கவனமாய் இருக்கவும். உம்மோடு ஜெபத்தின் மூலமாய் உறவாடவும் இன்றுமுதல் தெய்வீக பெலனைத் தந்து, என்னையும் ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

நீதிமான்களுக்கு நன்மை பலனாக வரும்!

(நீதிமொழிகள் 13:21).

கர்த்தரையே நம்பி, அவர் காண்பிக்கும் தெய்வீக வழியிலேயே நடக்கும்போது, கர்த்தருக்கு பிரியமான நீதியின் விருட்சங்களாக நம் வாழ்வு மாறுகிறது (ஏசாயா 61:3). இப்படிப்பட்ட மக்கள் மீது ஆண்டவர் பிரியமாயிருக்கிறார். நோவா, தானியேல், யோபு போன்றவர்களெல்லாம் நீதிமான்களாக, தேவனுக்கு பயந்து வாழ்ந்து வந்தார்கள் (எசே. 14:14) நோவா காலத்தில் மற்ற மக்கள் யாவரும் பாவத்தினால் நிறைந்திருந்த சமயத்தில், நோவா மாத்திரம் குடும்பமாக தேவபயத்தோடு, நீதிமானாக வாழ்ந்த தினிமித்தம் ஒரு பெரிய அழிவிலிருந்து அவர் ஆச்சரியமாய் தேவ காத்தினால் காக்கப்பட்டார். அதுபோன்றே நாமும் அவருக்கு பயப்படும் பயத்தோடு, அவர் விரும்பும் வழிகளிலே வேத வசனங்கள் நமக்கு கற்பிக்கிற பிரகாரம் நீதிமான்களாய் வாழும்போது, அவர் நம்மில் பிரியப்படுவதோடு நம்முடைய வாழ்வின் தேவைகள் அனைத்தையும் அந்தந்த சமயங்களிலே கொடுப்பதில் அவர் கவனமாயிருப்பார். ஆகவே, தேவன் விரும்புகிற நீதியின் வழிகளிலே அனுதினமும் நடப்பதில் கவனமாக இருந்து நன்மையை நிறைவாய் பெறுங்கள் (நீதி. 8:20,21):

ஒரு சமயம் ஒரு தாயும் மகனும் ஒரு மளிகைக் கடைக்கு சென்றனர். அந்த கடையில் கண்ணாடி பாட்டில்களில் விதம்விதமான மிட்டாய் வைக்கப்பட்டிருந்தது. அந்த பையன் அதையே பார்த்துக் கொண்டிருந்தான். தாய், தேவையான பொருட்களையெல்லாம் வாங்கி கொண்டிருந்தாள். அந்த சிறுவனை கவனித்த அந்த கடைக்காரர், அந்த அம்மையார் பொருட்கள் எல்லாம் வாங்கி முடித்தவுடன், ''தம்பி, உனக்கு வேண்டிய அளவு மிட்டாயை பாட்டிலிலிருந்து எடுத்துக்கொள்'' என்று அன்போடு கூறினார். ஆனால், அந்த பையனோ ''வேண்டாம், வேண்டாம்'' என்றான். அவர் திரும்பத் திரும்ப சொல்லியும், எடுக்காமல் இருப்பதைக் கண்ட கடைக்காரர் தன் கையை பாட்டிலுக்குள் விட்டு கை நிறைய மிட்டாயை எடுத்து பையனிடம் கொடுத்தார். திரும்பி வரும் வழியில் மகனிடம் தாய், ''ஏனப்பா, முதலில் நீ மிட்டாய் எடுக்க மறுத்தாய்'' என்று கேட்டபொழுது, ''அம்மா, என் கை சிறியது அல்லவா! அவராக கொடுத்ததால் எவ்வளவு கிடைத்திருக்கிறது பாருங்கள்'' என்றுகூறி சிரித்தான். ஆம், ஆண்டவர் விரும்பி நன்மைகளை கொடுக்கும்போது, அது நாம் நினைப்பதற்கும் வேண்டிக்கொள்ளுகிற தற்கும் அதிகமானதாக இருக்கிறது (எபே. 3:20). ஏனெனில், அவர் சம்பூரணர். அவர் நமக்கு அருளிச் செய்யும் நன்மைகளும், சம்பூரண பலனுள்ளதாகவே இருக்கும். அதுவும் நீதியின் வழியில் நடக்கிறவர்களை அவர் ஒருநாளும் கைவிடமாட்டார்.

எனக்கு அன்பானவர்களே! கர்த்தருக்கு பிரியமானதை நீங்களும் செய்யுங்கள். அவருக்கு விருப்பமில்லாத எந்த செய்கையும் உங்களில் காணப்பட வேண்டாம். அப்பொழுது நீங்கள் பெற வேண்டிய ஆசீர்வாதங்களையெல்லாம் அளவில்லாமல் உங்கள் வாழ்வில் பொழிந்தருளி உங்களை மகிழ்விப்பார் (சங். 18:20).

ஜெபம்: ''அன்பின் தெய்வமே! நான் என் வாழ்வை உம்மிடத்தில் ஒப்படைக்கிறேன். இன்றுமுதல் நீர் விரும்புகிறபடி நீதியின் வழியில் நடக்கவும், நன்மையினாலும், கிருபையினாலும் நான் முடிசூட்டப்படவும் நீரே எனக்கு அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!''

நீதிமான்களின் வேண்டுதலைக் கேட்கிற ஆண்டவர்!

"கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது..."

(1 பேதுரு 3:12).

தம்மை நம்பி, தங்கள் வாழ்வை தம்மிடத்தில் அர்ப்பணித்து, எல்லாக் காரியங்களிலும் தம்மை உறுதியாய் பற்றிக்கொள்ளுகிற தம்முடைய தாசர்களை ஆண்டவர் மிகமிக நேசிக்கிறார். ஆபிரகாம் அப்படிப்பட்ட மனிதனாய் இருந்தான். ஆகவே, அவன் அவருக்கு சிநேகிதனாய் இருந்தான் (யாக். 2:23, ஏசாயா 41:8, 2 நாளா. 20:7). அன்பானவர்களே, இந்த உலக மனுஷருடைய சிநேகத்தை நாம் எவ்வளவாய் விரும்பி நாடித் தேடுகிறோம். ஆனால், இந்தவிதமாக உலக சிநேகத்திற்குள்ளாக இருக்கிற மக்கள் என்றாவது ஒருநாள் ஒரு சிறிய காரியத்தினிமித்தம் நம்மை தூக்கியெறிந்துவிட நேரிடலாம். ஆனால், ஆண்டவரோ, அவருடைய அன்பில் என்றும் மாறாதவர். என்றென்றும் அவருடைய அன்பு நிலைவரப்படும். அப்படித்தான் ஆபிரகாம் குழந்தையற்றவனாய் இருந்தபொழுதிலும், அவன் வேண்டுதலை அற்புதவிதமாக கர்த்தர் நிறைவேற்றி, அவனை ஆசீர்வதித்து அன்பு கூர்ந்தார் (எபே. 3:18,19).

ஒரு தேசத்திற்காக பாடுபட்ட மாவீரன் ஒருவன் தன் தேசத்தை காப்பாற்ற எதிரிகளுடன் கடுமையாய் போரிட்டான். ஒரு நாள் மூன்று பக்கமும் எதிரிகளின் படை அவனை சூழ்ந்துகொண்டன. மற்றொரு பக்கம் பனி உறைந்த ஆறு! இதை எப்படி கடந்து செல்வது? எந்த பக்கம் போனாலும் மரணம் வருவது உறுதி. அந்த சமயத்தில் ஒரு கணம் கலங்கினபொழுதிலும், மறுகணம் அந்த நெருக்கத்தின் மத்தியிலே முழங்காற்படியிட்டு, கர்த்தரை நோக்கிக் கதறினான். "ஆண்டவரே, என் வாழ்வில் நீர் கண்ட அநீதியையெல்லாம் மன்னித்து, இன்று என்னுடைய வேண்டுதலைக் கேட்டு எனக்கு உதவி செய்யும். பகைவர்களின் கையிலிருந்து என்னை காப்பாற்றும்" என்று ஜெபித்துவிட்டு, அந்த பனி உறைந்த ஆற்றை வேகமாக கடந்து சென்றான். தேவன் அவனோடு முன்னதாக சென்று, அவனை கரம்பிடித்து நடத்தி, அற்புதவிதமாக அந்த பனியின் குளிர் அவனுக்கு சேதம் விளைவிக்காதபடி காத்து, பத்திரமாக அக்கரை கொண்டு சேர்த்து, பகைவர்கள் கையிலிருந்து காப்பாற்றினார். ஆம்! நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது (யாக். 5:16).

ஆம், பிரியமானவர்களே! இதேபோல் தான் அந்தந்த நாளிலே பகைவர்கள், விரோதிகள், பொறாமைக்காரர்கள் எப்பக்கத்திலும் உங்களை சூழ்ந்துகொண்டாலும், கர்த்தரை நோக்கி நீங்கள் கருத்தாய் வேண்டுதல் செய்யும்பொழுது, நீதிமான்களாக வாழ்வதில் ஜாக்கிரதையாயிருக்கும்பொழுது, பொல்லாத மக்கள் கையிலிருந்து உங்களை விடுவித்து காத்து அழகாகத் தாங்கி, அநுதினமும் வழிநடத்துவார் (சங். 37:17). ஒன்றும் உங்களை சேதப்படுத்த மாட்டாது (லூக்கா 10:19).

ஜெபம்: "அன்பு தெய்வமே! இந்த உலகம் பொல்லாங்கான மக்களால் நிறைந்திருந்தாலும் என்னுடைய நம்பிக்கை நீர் ஒருவரே! இன்றுமுதல் என்னை கைவிட்டுவிடாமல் உம்முடைய கிருபையினால் சூழ்ந்து, என் வேண்டுதலைக் கேட்டு, என்னையும் காத்து ஆசீர்வதித்து வழிநடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

உன் விசுவாசம் உன்னை இரட்சிக்கும்!

"அவர் (இயேசு) அவளைப் பார்த்து: மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ என்றார்" (லூக்கா 8:48).

இந்த உலகத்தின் பயங்கரங்கள் நம்மை சூழ்ந்துகொள்ளும்போது, நாம் திகைத்து தடுமாறுகிறோம். "நான் என்ன செய்வேன்? எப்படி இதிலிருந்து வெளியே வருவேன்?" என்று சஞ்சலம் கொள்கிறோம். இன்றைய நாட்களில் அநேகர் இதினிமித்தமாக தற்கொலை செய்து மடிந்து போகிறார்கள். இல்லை பிரியமானவர்களே! தற்கொலை செய்வது கோழைத்தனம். இதற்கு ஒரு வழி உண்டு. இதைத்தான் மேற்கண்ட வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆண்டவர் சர்வவல்லவர்! அவரால் ஆகாதது ஒன்றுமில்லை. எந்த நிலைமையிலிருந்தும், எத்தீமையிலிருந்தும் அவருடைய வல்லமை நம்மை விலக்கி இரட்சிக்கும் என்பதை விசுவாசித்து ஆசீர்வாதம் பெறுங்கள் (2 தெச. 3:3). அதேவண்ணமாகத்தான் பயங்கரமான வியாதியினால் பல வருடங்கள் பாடுபட்ட ஒரு பெண்மணி கர்த்தரில் முழு நம்பிக்கையையும் வைத்து, அதிசயமான விடுதலை பெற்றாள் என்பதை இந்த குறிப்பிட்ட வேதபகுதி விளக்குகிறது. நீங்களும் உங்கள் பிரச்சினைகள் எதுவாக இருந்தாலும், மலைபோன்றதாக இருந்தாலும், கர்த்தர்மேல் நம்பிக்கையும், விசுவாசமும் வைத்து அவளைப்போன்றே விடுதலை பெறுங்கள் (ஏசாயா 54:10).

ஒரு குடும்பத்திலே வயது சென்ற தாய் திடீரென்று பேச முடியாமல், நடக்க முடியாமல் படுக்கையிலானார்கள். அவர்கள் அன்புள்ளம் கொண்ட தாயாக இருந்தபடியினால் பிள்ளைகள் யாவரும் கவலைக்குள்ளானார்கள். அப்பொழுது நடந்து கொண்டிருந்த "இயேசு அழைக்கிறார்" நற்செய்தி கூட்டத்திற்கு, தங்கள் தாயை மாலை வேளையில் அழைத்து வந்தார்கள். ஒரு நாற்காலியில் கஷ்டப்பட்டு தூக்கி உட்கார வைத்தார்கள். ஊழியம் செய்த ஊழியரை அழைத்து, ஜெபிக்கும்படி சொன்னார்கள். அவர் ஜெபிக்கும் போது, குடும்பத்தார் அனைவரும், மற்ற ஊழியர்களும் ஒன்று சேர்ந்து விசுவாசத்தோடு கர்த்தரை நோக்கி ஒருமனதோடு ஜெபித்தார்கள். என்ன ஆச்சரியம்! கூட்டம் முடிந்து வீட்டுக்கு கொண்டு செல்லப்பட்ட தாய் அன்றே கொஞ்சம் கொஞ்சமாக பேச ஆரம்பித்தார்கள். எழுந்து நடக்க ஆரம்பித்தார்கள். அடுத்த நாள் மாலை கூட்டத்தில், அதே குடும்பத்தின் மக்கள் அவர்களை கூட்டிக்கொண்டு வந்து அருமையாக சாட்சி கொடுத்தார்கள். அதுவரை நடக்க முடியாமலிருந்த அந்த அம்மா மேடையில் அங்கும் இங்குமாக நடந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

ஆம், பிரியமானவர்களே! விசுவாசத்தோடு ஏறெடுக்கிற ஜெபம் ஒருநாளும் வீண்போகாது. என் ஆண்டவர் எனக்காக சிலுவையில் தம்மையே அர்ப்பணித்தவர். அதன்மூலம் அவர் என் அக்கிரமம் யாவையும் மன்னித்து, புது வாழ்வை இப்பொழுதே எனக்கு தருவார் என்று விசுவாசித்து, எல்லாக் காரியங்களிலும் இரட்சிப்பை பெற்று ஆசீர்வாதம் பெறுங்கள் (கொலோ. 2:6,7).



ஜெபம்: "அன்பு தெய்வமே! நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னாரென்று அறிந்திருக்கிறேன் (2 தீமோ. 1:12) என்ற வசனத்தின்படி, இந்த அறிவை எனக்கு கொடுத்து உம்மையே உறுதியாய் நம்பவும், இன்றுமுதல் எல்லாக் காரியங்களிலும் உம்முடைய ஒத்தாசையை நிறைவாய் பெறவும், எனக்கு தெய்வீகக் கிருபையை நிறைவாய் தந்து, வழி நடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

என் வழிகளை அறிந்த எம்பெருமான் இயேசு!

"...என் வழிகளெல்லாம் உமக்கு முன்பாக இருக்கிறது" (சங்கீதம் 119:168).

நாம் ஒவ்வொரு நாளும் நம்முடைய காரியங்களை இப்படி செய்யலாம் அல்லது இதை தெரிந்துகொள்ளலாம் என்று நம் மனம்போன வழியே செல்கிறோம். இதினிமித்தமாக எத்தனையோ தவறுகளில் மாட்டிக்கொண்டு, முடிவில் கலங்குகிறோம். அதற்கு பதிலாக, அனுதினமும் அதிகாலையில் ஆண்டவருடைய முகத்தை நாடித்தேடி, "ஆண்டவரே, என் சித்தமல்ல; உம் சித்தம் ஆகக் கடவது. உம்முடைய வழியையே எனக்கு காண்பியும்" என்று ஒரு சிறு ஜெபம் செய்து ஆரம்பிப்போமானால், அவர் காண்பிக்கும், வழிநடத்தும் விதம் எவ்வளவு அருமையாக இருக்கும் தெரியுமா? (சங். 25:4,5). ஆண்டவர் அவ்வாறு தம்மை நாடி வருகிறவர்களை தம்முடைய வழிகளிலே நடத்தி செல்ல ஆவலோடு காத்திருக்கிறார். நாம் என்ன செய்யப்போகிறோம்? உடனடியாக நாமே சுயமாக தீர்மானம் எடுக்கப் போகிறோமா? அல்லது ஜெபத்தினால், உபவாசத்தினால் தேவனுடைய சித்தம், அவருடைய வழிநடத்துதல் இவற்றிற்கு யோபு போன்ற பக்தர்களைப்போல் நம்மை ஒப்புக்கொடுக்கப் போகிறோமா? (யோபு 23:10).

ஒரு வாலிபப் பெண் சுமாராக படிப்பவள்தான். ஆனால், ஏராளம் படிக்க வேண்டுமென்று விருப்பம் கொண்டிருந்தாள். பணமில்லாத நிலைமையிலும்கூட, கஷ்டப்பட்டு முயற்சியெடுத்து படித்து, மேலே வந்தாள். பெற்றோர் மற்றும் பெரியோர் ஒரு வாழ்க்கைத் துணையைத் தெரிந்தெடுத்து, திருமணம் செய்வதுதான் உன் வாழ்க்கைக்கு நல்லதொரு வழி என்று கூறினார்கள். ஆனால், அவளோ, தன் மனம்போல இன்னும் படிக்க வேண்டும், இந்த வேலைதான் செய்யவேண்டும் என்றெல்லாம் தீர்மானம் செய்து கொண்டு, திருமணவயதையும் தாண்டிவிட்டாள். பின்னர் வயது வரம்பை மீறிய அவளை திருமணம் செய்ய யாரும் முன்வரவில்லை. அப்பொழுதுதான், "பெற்றோர் புத்தி சொல்லியும் ஆண்டவருடைய வழியை அறியாமல் போனேனே! இனி என் எதிர்காலம் இருள் நிறைந்ததாகத்தான் இருக்குமோ" என்று கவலைப்பட்டு கலங்கினாள். ஆனால், இப்பொழுது கவலைப்பட்டு என்ன பயன்? திரும்பவுமாய் தன் வாழ்வின் குறைவுகளை உணர்ந்து ஆண்டவரையே தேடி வந்தாள். "ஆண்டவரே, நான் மனம்போல் எதையோ செய்து, இன்று வெறுமையானவளாக நிற்கிறேனே! என் வாழ்வின் குறைவை நீர் அறிந்திருக்கிறீர். தயவுசெய்து இந்த நிலைமையிலும் எனக்கு ஒரு நல்ல வேலையையும், வாழ்க்கைத் துணையையும் நீரே தந்து ஆசீர்வதியும்" என்று கருத்தாய் ஜெபித்தாள். கர்த்தர் ஜெபத்தை கேட்டார். அவள் விரும்பியபடியே, ஒரு அருமையான அரசாங்க வேலையும், அன்பு உள்ளம் கொண்ட ஒரு துணையையும் கொடுத்து அவளை ஆற்றித் தேற்றினார்.

ஆம், பிரியமானவர்களே! கர்த்தர் தம்மை நம்புகிறவர்களை அறிந்தவராய் தமது வழிகளின்படி அவரை தேடுகிறவர்களுக்கு நன்மை செய்கிறவராக இருக்கிறார் என்பதை உணர்ந்து நாமும் ஜாக்கிரதையாக இருப்போம் (எரே. 17:10).

ஜெபம்: "அன்பு இரட்சகரே! என் வழி வேண்டவே வேண்டாம்! ஒவ்வொரு நாளும் விசேஷமாக இன்றுமுதல் உம்மையே சார்ந்துகொள்ளவும், உம் தெய்வீக வழியிலேயே தொடர்ந்து செல்லவும், எனக்கு அருள் தாரும். என் குறைவுகளையெல்லாம் மன்னித்தருளும். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்"

கர்த்தர் அன்புகூருகிறவர்களை சிட்சிக்கிறார்!

``கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்...'' (எபிரெயர் 12:6).

ஆண்டவர் நம் ஒவ்வொருவர் மீதும் பரிபூரண அன்பு செலுத்துகிறவர் என்பது நாம் யாவரும் அறிந்த உண்மை! அதே சமயம் நம்மை நேசிக்கிற ஆண்டவர், சில நேரம் நம்மை சிட்சைகள் மூலமாக தம்மண்டை இழுத்துக்கொள்கிறார். அந்த சிட்சைகளினூடே கடந்து செல்லும்போது, நமக்கு சற்று கடினமாக இருக்கும். ஆனால், அதிலிருந்து வெளியே வந்தபிறகு, ஆண்டவருடைய நடத்துதல் எவ்வளவு நல்லது, சிட்சை வழியாய் வந்தது நம்முடைய அறிவை எவ்வளவாய் உயர்த்தி இருக்கிறது என்பதையும் அறிய முடிகிறது. யோசேப்பின் வாழ்வைப் பாருங்கள்! வாலிப வயதில் தகப்பனோடும், தன் உடன் பிறந்தாரோடும் சந்தோஷமாய் இருக்கவேண்டிய அவன் வாழ்வில் எத்தனை பாடுகள்! கண்ணீர்! சஞ்சலம்! ஆனால், ஆண்டவர் அப்படியே விட்டுவிட்டாரா? அதற்கு நிகராக அவன் துன்பப்பட்ட வருஷங்களுக்கு சரியாக, அவனை கனப்படுத்தினார், உயர்த்தினார் (சங். 90:15). ஆகவே, சிட்சைகள் வரும்போது, இன்பமாய், மகிழ்ச்சியோடு, கர்த்தருக்கு நன்றி செலுத்த கற்றுக்கொள்வோம். அதன்மூலமாய் நன்மைகளை நிச்சயமாக முடிவில் பெறுவோம் (எபி. 12:10,11).

ஒரு சமயம் மருத்துவமனையில் ஒருவருக்கு ஜெபிக்க சென்ற சமயம், பக்கத்து படுக்கையில் விபத்தில் அடிபட்டதினிமித்தமாக கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த ஒருவரை காண்பித்து, அவருக்காக ஜெபிக்க சொன்னார்கள். அவர் இராணுவத்தில் பணிபுரிந்த பொழுது, கடவுளே இல்லையென்று கூறி வாழ்ந்து வந்தவர். விபத்து நடந்தபொழுது, கை, கால்களிலெல்லாம் பலத்த காயம், எலும்பு முறிவு. இந்த நிலைமையிலே நடக்க முடியுமா? என்ற கேள்விக்குறியோடு, வேதனையோடு இருந்தார். அந்த சமயத்தில்தான் அருகில் இருந்த மக்கள், என்னை அவருக்காக ஜெபிக்கும்படி கூறினார்கள். அவரோடு கொஞ்சநேரம் ஆண்டவருடைய அன்பைப் பற்றி பேசிக்கொண்டிருந்தேன். அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக விழுந்தது. ``நன்றாயிருந்த நாட்களில் ஆண்டவரை அறியாமல் போனேனே! அவரை தேடாமல் காலம் கழித்தேனே!'' என்று கவலைப்பட்டார். கடைசியில் ஆண்டவரை நோக்கி தன் குறைவை அறிக்கையிடும்படி ஜெபிக்க வைத்தோம். ஜெபித்தபின்பு அவருக்காக யாவரும் ஒன்று சேர்ந்து ஜெபித்தோம். கர்த்தர் மனமிரங்கினார். அந்த சிட்சையின் மூலமாக ஆண்டவர் தமதன்பை அளவில்லாமல் பொழிந்தருளி, கொஞ்சம் கொஞ்சமாக சுகம்பெறசெய்து, முற்றிலுமாக தேவ பலத்தால் அவரை நிரப்பி, அவரை நடக்கவும் வைத்தார். தெய்வீக ஆசீர்வாதத்தை அவர் பெற்றுக்கொண்டார்.

அன்பானவர்களே! நன்மை பெறும்போது நாம் சந்தோஷமாக அதை ஏற்றுக் கொள்கிறோம். அதேபோல் சிட்சிக்கப்படும்போது, அதுவும் நல்லதே என்று யோபுவைப் போல கர்த்தரை ஸ்தோத்திரிக்க கற்றுக்கொள்வோம் (யோபு 1:21). அதன்மூலமாக இனி தவறு செய்யாமல் இருக்க, ஆண்டவர் அருள்புரிவார்; நம்மையும் ஆசீர்வதிப்பார்.

ஜெபம்: ``அன்பு தெய்வமே! நான் நன்மை பெறும்போது மட்டுமல்ல, சிட்சைகளை உம்மிடத்திலிருந்து பெறும்போதும் ஜாக்கிரதையாக வாழ்ந்து, உமக்கு பிரியமில்லாத காரியங்களை என்னிடத்திலிருந்து உதறித் தள்ளிவிட்டு, உம்மைப் போல வாழ இன்றுமுதல் எனக்கும் அருள் தாரும். நீர் அப்படி செய்கிறபடியால் உமக்கு ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!''

செட்டைகளின் நிழலில் களிகூருவேன்!

''நீர் எனக்கு துணையாயிருந்ததினால், உமது செட்டைகளின் நிழலிலே களிகூருகிறேன்''
(சங்கீதம் 63:7).

உலக வாழ்வில் எத்தனையோ பயங்கள்! என்ன நடக்குமோ? என்று அஞ்சும் நிலை! இப்படியாக பல்வேறு கலக்கங்கள் நம்மை வாட்டுகின்றன. பிதாவாகிய தேவனைப்பற்றிய அறிவில்லாதிருந்த மோவாபிய பெண்ணாயிருந்த ரூத், இதுபோன்ற கலக்கத்தில், வேதனையின் மத்தியிலே வாழ்ந்துவந்தாள். அவள் அன்பான பலரை தன் குடும்ப வாழ்க்கையிலே இழந்திருந்தாள். எனினும், தன் மாமியாரின் மூலமாக பிதாவாகிய தேவனை அறிந்து, அவர் செட்டைகளின்கீழ் வந்தபோது, அவராலே கலக்கங்கள், வேதனைகள், தவிப்புகள், சஞ்சலங்கள் யாவும் மாறி, கர்த்தருக்குள் களிகூரும் பாக்கியத்தைப் பெற்றாள் (சங். 5:11). இதேவண்ணமாக, இந்த புதிய மாதத்திற்குள் பிரவேசிக்கிற உங்கள் ஒவ்வொருவரையும் கூட ஆண்டவர் தம் கண்ணின் கருவிழிபோல, தமது செட்டைகளின்கீழ் பாதுகாத்து, காப்பாற்றி வழிநடத்துவார்.

இரண்டாவது உலக மகாயுத்தத்திலே ஒரு போர்வீரன் இரவு வேளைகளில் காவல்காரனாய் பணிபுரிந்து வந்தான். எந்த நேரமும் எதிரிகளின் குண்டு பாய்வதற்கான வாய்ப்புகள் இருந்தது. எனினும் அவனுடைய பக்தியுள்ள தாய் ஆண்டவரைப் பற்றியும், அவர் கொடுக்கும் பாதுகாவலைப் பற்றியும் அர்த்தமுள்ள ஒரு பாடலை கற்றுக் கொடுத்திருந்தார்கள். அந்த பாடலைப் பாடி கர்த்தரை தியானித்துக்கொண்டே தன் பணியையும் நிறைவேற்றி வந்தான். அந்த பாட்டின் கருத்து, ''தேவரீர் நீரே என் தஞ்சம், நம்பிக்கை, என் ஆபத்தில் சகாயம், உம் செட்டையினால் என்னை மூடும்'' என்பதுதான். பல வருடங்கள் கடந்தன. ஒருநாள் கப்பலில் அதே பாடலை பாடிக்கொண்டே பிரயாணம் செய்துகொண்டிருந்தபோது, அங்கு வந்த ஜெர்மன் தேசத்தை சேர்ந்த ஒருவர், அந்த பாடலைக் கேட்டு, ''நீங்கள் இரண்டாவது உலக மகாயுத்தத்தில் பணிபுரிந்தீர்களா?'' என்று கேட்டார். ஆம், என்று சொன்னார். அவர் சொன்னது என்ன தெரியுமா? ''நான் எதிராளியாகிய உங்களைப் பார்த்து சுடுவதற்காக துப்பாக்கியை குறிவைத்து, ஆயத்தமாயிருந்தபோது, இதே பாடலைக் கேட்டதும், ஏனோ தெரியவில்லை, என்னால் உங்களை சுடுவதற்கு முடியவில்லை. இன்றைக்கு அதே பாடலை நீங்கள் பாடக்கேட்டதும் எனக்கு பழைய நினைவு வந்தது'' என்று சொல்லி, இரண்டு பேரும் அன்போடு பேசிக்கொண்டார்கள். ஆண்டவருடைய பாதுகாவலைக் குறித்து அந்த இராணுவ வீரன் அவருக்கு அழகாக எடுத்துரைத்தான்.

எனக்கு அன்பானவர்களே! ஆண்டவருடைய செட்டைகளின்கீழ் வரும்போது, அவர் தமக்கு அருமையானவர்களை எவ்வளவு அழகாய் பாதுகாக்கிறார் பார்த்தீர்களா? ஆம், அவருடைய கிருபை எப்பொழுதும் தம்மை நம்புகிறவர்களை சூழ்ந்துகொள்ளும் (சங். 32:10). கோழி தன் குஞ்சுகளை தீமை செய்கிறவைகளின் கண்களிலிருந்து, தனது செட்டைகளின் மறைவிலே மறைத்து பாதுகாப்பதுபோல், நாமும் தேவனுடைய செட்டைகளின் நிழலிலே மறைந்து, அதினிமித்தம் களிகூருவோம் (ஏசாயா 31:5).

ஜெபம்: ''அன்பு தெய்வமே! உமது செட்டைகளின்கீழ் வருவது எத்தனை சிலாக்கியம்! எத்தனை பாக்கியம்! இந்த தெய்வீக அனுபவத்தை இன்றுமுதல் என்றென்றும் என் வாழ்வில் தந்து, நீர் காப்பாற்றியருள வேண்டுமென்று தாழ்மையோடு பிரார்த்தனை செய்கிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!''

கர்த்தர் தம் கிரியைகளில் நீதியுள்ளவர்!

"... எங்கள் தேவனாகிய கர்த்தர் தாம் செய்துவருகிற தம்முடைய கிரியைகளில் எல்லாம் நீதியுள்ளவர் ..." (தானியேல் 9:14).

தேவனுக்கு பயப்படாதவனும், மனுஷரை மதியாதவனுமாயிருந்த ஒரு நியாயாதிபதி, ஒரு விதவை தனக்கு நியாயம் செய்து தரும்படி, ஓயாமல் தொந்தரவு செய்து கொண்டேயிருந்தபடியினால், அந்த தொந்தரவுக்கு நீங்க, அவளுக்கு அவள் விரும்பியபடியே நியாயம் செய்ய எண்ணம் கொண்டான். ஒரு சாதாரண மனிதன், அதுவும் தேவனை தேடாதவன்! அவ்வளவு ஜாக்கிரதையாக இருக்கும்போது, தேவாதி தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்கள் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கமாட்டாரா? (லூக்கா 18:7). மேற்கண்ட வசனத்தின்படி அவர் தம் கிரியைகளில் எல்லாம் நீதியுள்ளவர்! அப்படிப்பட்ட ஆண்டவர், எத்தனை பிரச்சினைகள் வந்தாலும், அவரை நோக்கிக் கூப்பிடும்போது, நீதியுள்ளவராக, உண்மையாய் உங்களுக்கு உதவிசெய்வார் என்பதை மறந்துபோகாதிருங்கள் (சங். 145:18). ஆனால், நாமோ அவரை கூப்பிடுவதற்கு பதிலாக முறுமுறுக்கிறோம், சோர்ந்துபோகிறோம், செய்வதறியாது கலங்குகிறோம். இல்லை பிரியமானவர்களே! கர்த்தருடைய பாதம் எப்பொழுதும் உங்களுக்கு உதவிசெய்ய, இரவும் பகலும் அடைக்கலமாக இருக்கிறது.

ஒரு பள்ளியில் ஒரு ஆசிரியை பக்தியோடும், உண்மையோடும் பணிபுரிந்து வந்தாள். அவளிடம் படித்த மாணவர்களுக்கும் சரி, பெற்றோருக்கும் சரி, அவளைக் குறித்து எப்பொழுதுமே நல்ல அபிப்பிராயம் உண்டு. ஆனால், தங்கள் வேலையை சரிவர செய்யாமல் ஏமாற்றுகிற சில உடன் ஊழியர்கள், தலைமை ஆசிரியையிடம் சென்று, வீணான பொய் குற்றசாட்டுகளை அந்த ஆசிரியையைக் குறித்து சொல்லிக் கொண்டேயிருந்ததால் அவர்களும் அதை நம்பி, இந்த ஆசிரியையிடம் கண்டிப்பான சில வார்த்தைகளை பேசினார்கள். இதைப் பார்த்துக்கொண்டிருந்த ஏனைய ஆசிரியைகள் இவளுக்கு நன்றாக வேண்டும், இப்பொழுது இவள் பக்தி என்ன ஆகிறது பார்க்கலாம் என்று மறைமுகமாக பேசிக்கொண்டார்கள். ஆனால், அந்த ஆசிரியையோ வாய் திறவாமல் ஆண்டவரிடம் மட்டும் தன் வேதனைகளை, சஞ்சலங்களை ஊற்றி வந்தார் (சங். 62:8; 142:2). ஜெபத்தைக் கேட்கிற கர்த்தர், பொய் குற்றச்சாட்டுகளை சமர்ப்பித்த அந்த ஆசிரியைகள் தாங்கள் செய்த பயங்கரமான தவறு ஒன்றினிமித்தம், தலைமை ஆசிரியையிடமே நன்றாக மாட்டிக்கொண்டார்கள். அப்பொழுதுதான் சில நல்ல ஆசிரியைகள், "ஆம், அந்த ஆசிரியை மிகவும் நல்லவர், இவர்கள்தான் அவர்களைக் குறித்து உங்களிடம் தவறாகக் கூறியதை நீங்கள் நம்பிவிட்டீர்கள்" என்றபோது, தலைமை ஆசிரியை மிகுந்த வருத்தப்பட்டு, அவர்களிடம் மிகவும் அன்பாக அதன்பிறகு நடந்துகொண்டார்கள்.

ஆம், பிரியமானவர்களே! கர்த்தரை நோக்கிக் கூப்பிடும்போது, தம்முடைய கிரியைகளில் எல்லாம் நீதியுள்ளவராக, அநீதி செய்கிறவர்களுடைய காரியங்களையும் தலைகீழாக மாற்ற வல்லமையுள்ளவராக இருக்கிறார். ஆகவே, ஒன்றுக்கும் கவலைப்படாதிருங்கள் (லூக்கா 18:7).



ஜெபம்: "அன்பின் இரட்சகரே! பொறாமையும், வஞ்சகமும் நிறைந்த இந்த உலகில் நீரே என் காரியங்களில் எல்லாம் உதவிசெய்கிறவர் என்று அறிந்துகொண்டேன். இன்றுமுதல் நானும் அந்த நல்ல ஆசிரியையைபோல உம்மையே எந்த நேரமும் நோக்கிப் பார்த்து ஆசீர்வாதம் பெற, எனக்கும் கற்றுத்தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

வேதத்தில் பிரியமாயிருந்து பாக்கியம் பெறுங்கள்!

"கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்" **(சங்கீதம் 1:2).**

வேதபுத்தகத்தில் காணப்படும் வார்த்தைகள் எல்லாம் பரிசுத்த ஆவியானவர் மூலம் வெளிப்படுத்தப்படுகிறவைகள் (2 தீமோ. 3:16). ஆகவேதான், ஆண்டவர் அதன்மூலமாக நமக்கு நித்திய ஜீவனை கொடுப்பதாக வாக்கருளியிருக்கிறார் (யோவான் 5:39). தேவனுடைய ஊழியர்களும் அதையே வலியுறுத்துகின்றனர். ஆனால், இன்றைக்கு எத்தனைபேர் அதனுடைய மேன்மையை அறிந்து, இந்த வசனத்திலே சொல்லப்பட்டபடி, இரவும் பகலும் வேதத்தை தியானிக்கிறோம்? உண்மையாக கர்த்தருடைய வசனத்தை கனப்படுத்தி, அதில் சொல்லப்பட்ட ஆண்டவருடைய வாக்குத்தத்தங்களை தனக்கென்று எடுத்துக் கொண்டு அதை தியானிப்பவர்களுக்கு, அந்த வசனத்தின்படியே பாக்கியத்தையும், நிறைவான ஆசீர்வாதத்தையும் ஆண்டவர் கட்டளையிடுவார். ஆண்டவர் தமது வாக்குத்தத்தங்களை அருளிச்செய்ததோடல்லாமல், அவைகளை பற்றிக்கொண்டு நாம் ஜெபிக்கும்பொழுது, அவைகளை நிறைவேற்றுவதிலும் கவனமாயிருப்பார். எனவே, வேதம் வாசிக்கையில் தேவனுடைய வாக்குத்தத்தங்களை கவனமாக வாசித்து, நமக்கென்று எடுத்துக்கொள்வோம் (2 கொரி. 1:20).

ஒரு மனிதன் வியாபாரத்தில் குறைவு ஏற்பட்டபடியினால், மனமுடைந்து, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தோடு தவித்துக்கொண்டிருந்தான். மென்மேலும் குறைவுகள் ஏற்பட்டபோது, இனி தற்கொலை தான் முடிவு என்று தீர்மானமும் பண்ணினான். அப்பொழுது காலின்கீழே கிடந்த ஒரு சிறு காகிதத்துண்டை எடுத்து பிரித்து வாசித்தான். அதிலே மேற்கண்ட வசனம் காணப்பட்டது. அப்பொழுது தான், "கிறிஸ்தவனாக இருந்தும், கர்த்தருடைய வேதத்தை கனப்படுத்தாமல், அவரை தேடாமல், இத்தனை நாட்களும் இருந்துவிட்டேனே! அதனால்தான் இத்தனை குறைவும் ஏற்பட்டிருக்கிறது. இனியாவது ஆண்டவரை தேடுவதில், நான் ஜாக்கிரதையாய் இருப்பேன்" என்று ஒரு தீர்மானம் செய்து, அன்றிலிருந்து வேதபுத்தகத்தை கவனமாய், கருத்தோடு வாசிக்க ஆரம்பித்தான். என்ன ஆச்சரியம்! ஆண்டவர்மேல் அவன் அன்பு வைக்க வைக்க, குறைவுபட்டுப்போயிருந்த அவனுடைய வியாபாரம் கொஞ்சம் கொஞ்சமாய் செழித்து, பழையபடி நல்ல நிலைமைக்கு திரும்ப ஆரம்பித்தது. ஆண்டவரும் அவனோடு உற்ற நண்பனாய் மாறி, அவன் கூடவே இருந்து பாக்கியவானாக அவனை மாற்றினார்!

எனக்கு அன்பானவர்களே! ஆண்டவரோடு இணைந்து வாழும் வாழ்க்கை, அதோடு கூட அவருடைய வேதத்தை கவனமாய் வாசித்து, அதை வாழ்க்கையில் அப்படியே நமக்கென்று எற்றுக்கொள்ளும்போது, இன்பமான வழிகளை பின்பற்றும்போது, கர்த்தர் பாக்கியத்தையும், நன்மையையும் நிச்சயமாய் கொடுப்பார் (யாக். 2:5).

ஜெபம்: "அன்பு இரட்சகரே! என் வாழ்விலே வேதத்தை கவனமாய் வாசிக்காத நாட்களுக்காக, செயலுக்காக மிகுந்த வேதனையோடு உம்மிடத்தில் மன்னிப்பு கேட்கிறேன். இன்றுமுதல் மேற்கண்ட வசனத்தின்படி, இரவும் பகலும் கருத்தாய் வேதத்தை வாசித்து தியானிக்க, அதன் மூலம் பாக்கியம்பெற, உம் தெய்வீக அருளை நிறைவாய் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

என் கண்கள் உம்மையே நோக்கிக்கொண்டிருக்கிறது!

(2 நாளாகமம் 20:12).

யோசபாத் என்ற அரசன் ஆண்டவரை அதிகமாய் நேசித்த ஒரு மனிதன். ஆகவே, அவனுடைய நம்பிக்கை தேவனின் மீதே இருந்தது. ஒரு முறை எதிரிகள் யுத்தம் செய்ய எதிர்த்து வந்தபொழுதிலும், அவனுடைய நம்பிக்கை அவர் மீதே இருந்தது. அப்பொழுது தான் அவன், "ஆண்டவரே, என் கண்கள் உம்மையே நோக்கிக் கொண்டிருக்கிறது. இந்த ஏராளமான கூட்டத்திற்கு முன்பாக நிற்க எனக்கு பெலனில்லை. நான் செய்ய வேண்டியது இன்னதென்று எனக்கு தெரியவில்லை. எங்களுக்கு நியாயம் செய்ய மாட்டீரோ?" என்று தன்னுடைய ஜனங்களோடு சேர்ந்து பிரார்த்தனை செய்தான். அதோடுகூட கர்த்தரை கனப்படுத்தும்வண்ணமாக, யுத்தம் ஆரம்பிக்கும் முன்னதாக கர்த்தரை பாடித்துதிக்க மக்களை ஏற்பாடுசெய்தான். இதினிமித்தமாக கர்த்தரே எதிராளிகளோடு போர் செய்து ஒருவருக்கொருவர் விரோதமாக எழும்பி, வெட்டுண்டு விழும்படி செய்தார். ஆம்! கர்த்தரே அவனுக்காக யுத்தம் செய்தார். அதேபோன்று தான் நாமும், எந்த பிரச்சினைகள் நம்மை எதிர்நோக்கி வந்தாலும், நம்முடைய கண்களை கர்த்தர் மேலேயே வைக்கும்போது (சங். 121:1,2), யோசபாத்துக்கு ஒத்தாசை செய்த ஆண்டவர் இன்றும் மாறாதவராகவே உயிரோடிருக்கிறபடியால் நிச்சயம் நமக்காகவும் யுத்தம் செய்வார் (யாத். 14:14).

ஒரு வாலிபப் பெண் பிசாசு பிடித்த நிலைமையில் மிகவும் அலைக்கழிக்கப்பட்டாள். சாப்பிட முடியாமல், தூங்க முடியாமல் தவிப்பாள், யாரிடத்திலும் சரியாக பேசமாட்டாள். எல்லோரிடமும் அதிகமாக கோபப்படுவாள். பொருட்களையெல்லாம் தூக்கியெறிவாள். திடீரென்று இப்படிப்பட்ட பரிதாப நிலைமை தன் மகளுக்கு வந்ததால், "ஐயோ, வாலிபப் பெண் இப்படி இருக்கிறாளே!" என்று பெற்றோர் கண்கலங்கினார்கள். "இயேசு அழைக்கிறார்" ஜெப கோபுரத்திற்கு அவளை கூட்டிக்கொண்டு வந்தனர். அங்கு ஜெப வீரர்கள் அந்த பிசாசின் வல்லமையிலிருந்து அவள் விடுபடும்படி, கர்த்தருடைய வல்லமை அவள்மேல் இறங்கும்படி கருத்தாய் ஜெபம்பண்ணினார்கள். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டார். பெற்றோருடைய கண்கள் கர்த்தரையே நோக்கியிருந்தபடியினால், அந்த மகளை கொஞ்சம் கொஞ்சமாக அந்த பொல்லாங்கினின்று கர்த்தர் விடுதலையாக்கி, பரிபூரண சுகம் கொடுத்தார்.

ஆம், எனக்கு அன்பானவர்களே! பிசாசினாலும், பொல்லாத சத்துருக்களினாலும் நாம் அலைக்கழிக்கப்படும்பொழுது, கர்த்தரையே நோக்கிப்பார்க்க கற்றுக்கொள்வோம். எந்த மந்திர சக்திகளும் உங்களை மேற்கொள்ள முடியாது; கர்த்தருடைய வல்லமை அவைகளை அழித்து உங்களை விடுதலையாக்கும். "பரிசுத்த ஆவியானவர் எங்கே உண்டோ அங்கே விடுதலையுமுண்டு" என்பதை வாழ்வில் அறிந்து ஆசீர்வாதம் பெறுங்கள் (2 கொரி. 3:17).

<u>ஜெபம்</u>: "அன்பு தெய்வமே, இவ்வுலகில் சத்துருவினாலும், மற்ற பொறாமைக்காரர் களினாலும், வஞ்சக நெஞ்சம் உள்ளவர்களாலும் எத்தனையாய் துன்பங்களை சந்திக்க வேண்டியதாக இருக்கிறது. ஆனாலும், <u>இன்றுமுதல்</u> உம்மை நோக்கிப் பார்க்கும் கண்களையும், மனதையும் எனக்கு கொடுத்து, எந்தத் தீங்கும் என்னை தொடாதபடி என்னைக் காப்பாற்றும். நீர் அப்படி செய்கிறதற்காய் உமக்கு நன்றி. இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

சிறுமைப்பட்டவர்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துகிற கர்த்தர்!

"கர்த்தாவே, சிறுமைப்பட்டவர்களுடைய வேண்டுதலைக் கேட்டிருக்கிறீர்; அவர்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவீர்"

(சங்கீதம் 10:17).

சிறுமைப்படுகிற நிலைமையிலே யாராக இருந்தாலும் சரி, எளிதில் சோர்ந்துவிடுகிறோம். நாம் ஒவ்வொருவரும் நம் வாழ்வில் சிறுமைப்படும்போது நம்முடைய இருதயம் அலைமோதுகிறதல்லவா? தாவீது, அரசனாக இருந்தும், வாழ்வில் சிறுமைப்பட்ட வேளையிலே கர்த்தரையே உறுதியாய் பற்றிக்கொண்டான். "கர்த்தர் என் சிறுமையைப் பார்த்து எனக்கு நன்மையை சரிக்கட்டுவார்" என்று கூறுகிறதை நாம் வேதத்திலே வாசிக்கிறோம் (2 சாமு. 16:12). அதுபோல, "சிறுமை" என்பது ஒவ்வொருவர் வாழ்விலும் வரத்தான் செய்கிறது. எனினும், ஆண்டவரை நோக்கி நம் வேண்டுதலை அத்தகைய நேரத்தில் சமர்ப்பிக்கையில், அவர் ஒருவரே அந்த நேரத்திலே நமக்கு எதிர்பட்டு வந்து, "உனக்கு என்ன வேண்டும்? நான் என்ன செய்யவேண்டுமென்று நீ விரும்புகிறாய்?" என்று அன்போடு கேட்பார். நம்முடைய இருதயத்தையும் ஸ்திரப்படுத்தி நம் வேண்டுதலையும் நிறைவேற்றுவார். ஆகவே, "ஏன் எனக்கு இந்த சிறுமை வந்தது?" என்று அதையே நினைத்து அழுதுகொண்டிராமல், அதிலிருந்து ஆசீர்வதிக்க வல்லவராகிய ஆண்டவரை உறுதியாய் பற்றிக்கொள்வது எவ்வளவு அருமையான காரியம்!

ஒரு சமயம் பொறாமை நிறைந்த சிலர், நன்றாயிருந்த ஒரு குடும்பத் தலைவனுக்கு மந்திரம் செய்து, அவரது கால் விளங்காமல் கட்டில் கிடையாக்கிவிட்டார்கள். குடும்பத் தலைவன் வேலைக்கு போகவில்லையென்றால் அந்த வீடு எப்படியிருக்கும்? யாவரும் கலங்கினர். அப்பொழுது சில போதகர்கள் ஆவியிலே நிறைந்து அவருக்காக கருத்தாய் ஜெபித்தார்கள். அதோடுகூட, குடும்பமாக இந்த சிறுமையின் மத்தியிலும் ஆண்டவரை எப்படி உண்மையாய் தேடுவது? அவரை எப்படி பற்றிக்கொள்வது? என்பதை குறித்து கற்றுக்கொடுத்தார்கள். அப்படியே அந்த குடும்பத்தினர் ஆண்டவர்மீது குறை சொல்லித்திரியாமல், "அப்பா, நாங்கள் உம்மையே பற்றிக்கொள்ள நீர் கற்றுக்கொடுத்தீர். அதன்படியே நீர் எங்கள் குடும்பத்தில் ஏற்பட்டுள்ள இந்த சிறுமையிலிருந்து எங்களை விடுதலையாக்கி, உம்முடைய அடியானை சுகப்படுத்தப்போகிறதற்காக, எங்கள் இருதயத்தில் திடமனதைக் கொடுத்து, எங்களை உற்சாகப்படுத்தி விசுவாசத்தில் பலப்படுத்தப்போகிறபடியால் உமக்கு ஸ்தோத்திரம்" என்று அவர்களும் தினமும் ஜெபித்து வந்தார்கள். கர்த்தர் அந்த ஜெபத்தைக் கேட்டு, அவர்கள் சிறுமையை முற்றிலும் மாற்றி அவரை எழுந்து நடமாட செய்து, தாம் இன்றும் ஜீவிக்கிற தேவன் என்பதை அந்த பொறாமைக்காரர்களுக்கு நிரூபித்து காண்பித்தார்.

ஆம், பிரியமானவர்களே! நம்முடைய ஆண்டவர் என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவர் (உபா. 32:40). உங்களுக்கு எதிராக வரும் இப்படிப்பட்ட சிறுமைகளையுங்கூட அவர் மாற்றியமைக்க சர்வவல்லமை பொருந்தினவராக இருக்கிறார் என்பதை நீங்களும் அனுபவித்து பாருங்கள்.

ஜெபம்: "அன்பு தெய்வமே! எத்தனை சிறுமை என் வாழ்வில் வந்தாலும், நீரே எனக்கு தஞ்சமும் திடபெலனுமாய் இருக்கிறபடியால், நான் இன்றுமுதல் உமக்குள் சந்தோஷமாய் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். உமக்கு நன்றி செலுத்துகிறேன். தொடர்ந்து நீரே என்னை வழிநடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

என் காலடிகள் வழுவாதபடி என்னை ஸ்திரப்படுத்தும்!

''என் காலடிகள் வழுவாதபடிக்கு, என் நடைகளை உமது வழிகளில் ஸ்திரப்படுத்தும்'' (சங்கீதம் 17:5).

இந்த உலக வாழ்வில் எப்பொழுதுமே சந்தோஷமாக இருக்க முடியும் என்று சொல்வதற்கில்லை. வாழ்வில் பிரச்சினைகள் எழும்பும்போது, ''ஐயோ, என் கால் சறுக்குகிறதே, நான் என்ன செய்வேன்?'' என்று நாம் கலங்குகிற வேளைகளும் நம் வாழ்வில் வரத்தான் செய்கிறது. சில நேரங்களில் சில மனிதர்மேல் நாம் நம்பிக்கை வைக்கிறோம். ஆனால், அவர்கள் உதவிசெய்யாமல், கண்டும் காணாமல் அலட்சியம் பண்ணும்போது, நாம் மிகவும் வேதனைப்படுகிறோம். இந்த காரியத்தை எப்படி நாம் முடிப்பது என்று தவிக்கிறோம். ஆனால், பாவத்தினால் நம் கால்கள் சறுக்கும்போது, விடுவிக்கும் தேவ கிருபை (ரோமர் 5:20), வாழ்க்கையிலே நம்மையுமறியாமல் தவறுகள் செய்யும்போது, மன்னிக்கும் தேவ கிருபை, மற்றும் பல பல சஞ்சலங்கள், நோய்கள் எதிர்பாராத தவிப்புகள் வந்து நம்முடைய கால்கள் சறுக்குகிறது போன்று தோன்றும் வேளைகளில் நாம் அவரை நோக்கிக்கூப்பிடும்போது விளங்கும் பரிபூரண கிருபை, நம்முடைய கால்கள் வழுவாதபடி நம்மைத் தாங்கி ஸ்திரப்படுத்தும்படி, எப்பொழுதும் தேவன் உதவி செய்கிறார் (யோவான் 1:16).

ஒரு குடும்பத் தலைவன் கர்த்தரை தேடாதவனாக, தன் இஷ்டம்போல் தீமையான காரியங்களில் ஈடுபட்டு, தன் வாழ்வை நாசமாக்கிக்கொண்டிருந்தான். எத்தனையோபேர் அவனிடம் ஆண்டவருக்கு பயந்து நடப்பதின் முக்கியத்துவத்தை பற்றி எடுத்துரைத்தும், ஒருவர் வார்த்தைக்கும் அவன் மதிப்பு கொடாமல், தன் மனம்போல வாழ்ந்து வந்தான். அப்படிப்பட்ட சமயத்தில் ஒரு நாள் ஒரு ரசீதைத் தேடி தன் வேதபுத்தகத்தை திறந்து பார்த்தான். அதுவரை தொடாதிருந்த அந்த வேதபுத்தகம் தூசி நிறைந்ததாய் இருந்தது. எப்படியோ அதை தட்டி திறந்தபொழுது, அந்த ரசீது வைக்கப்பட்டிருந்த பக்கத்தில் மேற்கண்ட வசனத்தையே கண்டான். ''ஐயோ, இந்த நிலைமையில் தானே நானும் இருக்கிறேன். கால் சறுக்கிய பரிதாப நிலைமையில் தானே நான் வாழ்கிறேன்'' என்று ஆண்டவரால் உணர்த்தப்பட்டு, அவருடைய கிருபைக்காக முழங்காற்படியிட்டு கெஞ்ச, கர்த்தர் அப்படியே அந்த நிமிடத்திலேயே அவன் உள்ளத்தை தலைகீழாய் மாற்றினார். அவருடைய இரட்சிப்பின் இன்பத்தினால் நிறைந்தான். அவன் வாழ்வு கொஞ்சம் கொஞ்சமாக கர்த்தருக்குள் ஸ்திரப்பட்டது.

ஆம், பிரியமானவர்களே! நமது கால்கள் சறுக்குகிறது போன்ற நேரங்களிலே கர்த்தரையே நோக்கிப் பார்த்து, அவரே நம்மைத் தாங்கி, ஸ்திரப்படுத்த கருத்தாய் ஜெபிப்போம். கர்த்தரை நோக்கிப் பார்க்கிற நம்மீது அவர் தமது கிருபையை அருளிச்செய்து காப்பார். தேவகிருபை எப்படிப்பட்ட நிலைமையையும் முற்றிலுமாய் மாற்றவும், தாங்கி வழிநடத்தவும் நம் ஒவ்வொருவருக்கும் போதுமானதாக இருக்கிறது. ஆகவே, கிருபாசனப்பதியாம் இயேசுவை நோக்கிப் பார்த்து ஸ்திரமான வாழ்வை வாழ்வோம் (சங். 23:1,2).



ஜெபம்: ''அன்பு தெய்வமே, உம்முடைய தெய்வீகக் கிருபை எவ்வளவு மேன்மையானது! இன்றுமுதல் என் வாழ்வில் எப்பொழுதெல்லாம் கால் சறுக்குகிற நிலைமையில் நான் இருக்கிறேனோ, அப்பொழுதெல்லாம் நீரே கிருபாசனப்பதியாக வந்து என்னைத் தாங்கி, அரவணைத்து ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!''

பரிசுத்தவான்களுக்கு ஏற்ற பரிசுத்த வாழ்வு தருவார்!

"பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர் முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங்கூடாது"

(எபேசியர் 5:3).

நாம் ஒவ்வொருவரும் ஆண்டவரைப்போல் பரிசுத்தமுள்ளவர்களாய் வாழவேண்டும் என்பதுதான் ஆண்டவருடைய விருப்பம் (1 பேதுரு 1:15,16). ஆனால், பொல்லாங்கும் தீமையும் நிறைந்த இந்த உலகில், ஆண்டவரைப்போல் பரிசுத்தமாக வாழ்வது இயலாத காரியம் என்று நாம் நினைக்கிறோம். ஆனால், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் நாம் நிச்சயம் பரிசுத்தத்தை பெற்றுக்கொள்ள முடியும். ஆகவே, ஆண்டவரை நோக்கி, "சுவாமி, உம்மைப்போல நானும் வாழ, உம்முடைய பரிசுத்த ஆவியானவரால் என்னை நிரப்பும்" என்று கருத்தாய் கேட்கிற ஒவ்வொருவருக்கும் ஆண்டவர், நிச்சயமாக அருள்மாரியை பொழிந்து பெலப்படுத்துவார் (அப். 1:8).

இரண்டுபேர் ஒன்று சேர்ந்து வியாபாரம் செய்து வந்தனர். ஆனால், வியாபாரத்தில் ஆசீர்வாதமே இல்லை. ஏராளம் பணம் தேவையாயிருந்தது. எனவே, ஒரு தேவ ஊழியரிடம் பிரார்த்தனை செய்யப்போனார்கள். ஊழியர் அவர்களிடம், "உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார். அவர்களுள் ஒருவர் "எங்களுக்கு பணம் வேண்டும்" என்றார். ஊழியரோ, "ஐயா, இயேசு வேண்டும் என்று சொல்லுங்கள்" என்று கூறி அவர்களுக்காக பிரார்த்தனை செய்து அனுப்பினார். பணம் வேண்டுமென்று கேட்ட அந்த வியாபாரி வீட்டுக்கு வந்தார். அந்த ஊழியர் கூறிய வார்த்தை அவர் உள்ளத்திலே அதன்பின்பு எப்பொழுதும் ரீங்காரமிட்டுக்கொண்டேயிருந்தது. கிறிஸ்தவ குடும்பத்திலே பிறந்திருந்தும் இயேசுவை அறியாமல் இருந்த அவருக்கு, இந்த ஊழியரின் வார்த்தையால், 'ஐயோ, நான் குறைவுள்ளவனாயிற்றே, இயேசு என் உள்ளத்தில் இல்லையே" என்ற ஒரு பாரம் ஏற்பட்டது. அதோடுகூட, ஒருநாள் முதல்முறையாக குடும்பத்தாரோடு பிரார்த்தனை செய்த வேளையில், ஆண்டவர் அவரை இரட்சித்து, தம்முடைய தூய ஆவியால் அபிஷேகித்தார். இரண்டு ஆசீர்வாதங்களை ஒரே நேரத்தில் பெற்றவராக மிகுந்த சந்தோஷமடைந்தார். அவருடைய வாழ்வு முற்றிலும் மாறினது. அதன்பின்பு வியாபாரத்தில் செழிப்பு ஏற்பட்டு, "இனி நான் ஆண்டவருக்காக வாழ்வேன்" என்று ஒரு பொருத்தனையோடு, பரிசுத்தமாக வாழ்ந்து, ஆண்டவருடைய சேவையிலும் ஈடுபட்டார்.

எனக்கு அருமையானவர்களே! நீங்களும் பரிசுத்தமாய் வாழ விரும்புகிறீர்களா? ஆண்டவரிடத்திலே, "நீர் எனக்கு வேண்டும்" என்று கேளுங்கள். அவரால் உங்களை நிரப்புவார். பரிசுத்த ஆவியின் வல்லமையினால், வரங்களினால் நிரப்பி, தம் நாம மகிமைக்கென்று பயன்படுத்துவார். ஆண்டவரும், "யாரை நான் அனுப்புவேன்? யார் என் காரியமாய் போவான்?" (ஏசாயா 6:8) என்று நம்மைப் பார்த்து கேட்கிற கேள்விக்கு, "நானும் பரிசுத்த வாழ்வை பின்பற்றி, மற்றவர்களையும் வழிநடத்த உதவிசெய்யும்" என்று ஜெபிப்போமா?

ஜெபம்: "அன்புள்ள தகப்பனே, பரிசுத்தமாக வாழ்வதற்கு உம்முடைய தூய ஆவியானவர் மூலமாக எனக்கும் உம்முடைய தெய்வீக அருளைத்தாரும். இந்த உலகின் அசுத்தங்கள் என்னை தொடாதபடி உம்மை மட்டும் சந்தோஷப்படுத்த, இன்றுமுதல் ஒவ்வொரு நாளிலும் நீரே என்னோடிருந்து கரம்பிடித்து வழிநடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தருடைய கூடாரம் பரிசுத்த பர்வதம்!

"...யார் உம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம்பண்ணுவான்?" (சங்கீதம் 15:1).

கர்த்தருடைய வசனத்தின்படி, கர்த்தருடைய கூடாரத்தில் தங்கவும், அவருடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம்பண்ணவும் நம்மால் முடியுமா? என்று நாம் நினைக்கலாம். இந்த தெய்வீக அனுபவத்தை நமக்கு அருளிச்செய்யவே, ஆண்டவர் தம்முடைய பிரசன்னத்தால் என்றென்றும் நம்மை நிரப்ப ஆவலோடிருக்கிறார். நாம் உத்தமமாய் நடந்து, நீதியை நடப்பித்து, சத்தியத்தை பேசும்போதும், அவருக்கு பயப்படும் பயத்தோடு வாழும்போதும், ஆண்டவர் அந்த தெய்வீக அனுபவத்தால் நம்மை நிரப்புவார். நாம் ஒன்றே ஒன்றை தான் அவரிடத்தில் கேட்கவேண்டும். "ஆண்டவரே, உம்மைப்போல என்னை மாற்றும். உமக்கு பிரியமாய் வாழ என் ஜீவியத்தை உம்மிடத்தில் ஒப்படைத்து விடுகிறேன்" என்று ஒவ்வொரு நாளும் நாம் தீர்மானம் செய்யும்போது, ஜெபம் செய்யும்போது கர்த்தர் பொறுப்பெடுத்துக்கொள்வார். எனவே, யாக்கோபு போராடி ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டதுபோல (ஆதி. 32:26–29), நீங்களும் இந்த ஆசீர்வாதத்தை நீர் எனக்கு தந்தாலொழிய நான் உம்மை விடுவதில்லை என்று உறுதியாய் வேண்டுதல் செய்து நிறைவான ஆசீர்வாதம் பெறுங்கள்.

ஒரு குடும்பத் தலைவர் ஆண்டவரை உண்மையும் உத்தமமுமாய் தேடி வந்தார். வேத வாசிப்பு, ஜெபம், தேவபக்தி, தேவபயம், குடும்பமாக ஆண்டவரைத் தேடுவது போன்ற யாவற்றிலும் அவர் உண்மையும் உத்தமமுமாக இருந்தார். ஆனால், அவருடைய நல்வாழ்வைக் கண்ட உற்றார் உறவினர் சிலர் ஆண்டவரை அறியாதவர்களாய் இருந்தபடியினால், அவரை பரியாசம் செய்தனர். "பெரிய பக்திமான், நீதிமான்" என்று எள்ளி நகையாடினர். அவரோ ஒன்றையும் கவனியாததுபோல, கர்த்தர் மேலேயே தன் முழு கவனத்தையும் வைத்து வாழ்ந்துவந்தார். ஆகவே, கர்த்தர் அவருடைய மகனையும், அவருடைய சந்ததியையும் நிறைவாய் ஆசீர்வதித்து, பக்தியிலும் உலக வாழ்விலும் உன்னதமான உயர்வை கட்டளையிட்டார். அவருடைய வாழ்வு உயர உயர, அவரை பரிகசித்த ஒவ்வொருவரும் தங்கள் தவறுகளை உணர ஆரம்பித்தனர். "ஐயோ, கர்த்தரை அறியாமல்போன என்னுடைய வாழ்வு குறைவில் இருக்கிறதே. ஆனால், தேவனை உண்மையாய் தேடின இந்த மனிதன் எவ்வளவாய் ஆண்டவரால் ஆசீர்வாதம் பெற்றிருக்கிறார்" என்று உணர்ந்து, அவர்களும் தங்கள் வாழ்வை கர்த்தருடைய வழியிலே திருப்பி, கர்த்தரை தேட ஆரம்பித்தனர்.

ஆம், அன்பானவர்களே! மற்றவர்கள் பரிகசிக்கிறார்கள் என்பதற்காக கர்த்தரைத் தேடுவதிலே அலட்சியம் பண்ணாதிருங்கள். சத்தியவழியிலே நடப்பதிலும், உத்தமம், நீதி, நேர்மை இவைகளை கடைப்பிடிப்பதிலும் ஜாக்கிரதையாயிருப்பீர்களானால் ஆண்டவர் உங்களை எல்லாவிதங்களிலும் கனப்படுத்துவார். உங்கள் கூடாரம் தேவ பர்வதமாக மாறும் (யோசுவா 1:8).

<u>ஜெபம்</u>: "அன்பு ஆண்டவரே, உம்முடைய பரிசுத்த பர்வதத்திலே தினமும் வாசம்பண்ணுகிற உன்னதமான வாழ்வை எனக்கும் தாரும். <u>இன்று முதல்</u> என் குறைவுகளையெல்லாம் நீரே மாற்றி, உம்மோடுகூட சேர்ந்து வாழ்கிற இன்பமான வாழ்வை அருளிச்செய்து ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தர் தம்மை நம்புகிறவர்களை தப்புவித்து இரட்சிப்பார்!

"உம்மை நம்புகிறவர்களை அவர்களுக்கு விரோதமாய் எழும்புகிறவர்களினின்று உமது வலதுகரத்தினால் தப்புவித்து இரட்சிக்கிறவரே!..." (சங்கீதம் 17:7).

கர்த்தரை தேடுகிறவர்களுக்கும், அவரை நம்புகிறவர்களுக்கும் அவர் மிகவும் சமீபமாய் இருக்கிறார். அவரை நோக்கி விண்ணப்பம்பண்ணும்பொழுதெல்லாம், நம் வார்த்தைகளுக்கு அவர் செவிகொடுக்கிறார். இதுதான் பக்தர்களுடைய வாழ்க்கை. நாமும்கூட அவரை உறுதியாய் பற்றிக்கொள்ளவும், அவரை நம்பவும், இன்றுமுதல் நம்மை அர்ப்பணிப்போம். அவ்வாறு நாம் சமர்ப்பிக்கும்பொழுது, கர்த்தர் நம் இருதயத்தை அறிந்தவராய் (நாகூம் 1:7), நமக்கு உதவிசெய்து நாம் மென்மேலும் அவரோடு கிட்டிச் சேரவும், அதன்மூலம் எல்லாவித ஆசீர்வாதங்களையும் பெறுவதற்கும் அவர் தம் பிரசன்னத்தால் நம்மை நிரப்பி, கோணலானவைகளையெல்லாம் மாற்றி (ஏசாயா 45:2), நேர் வழியில் நம்மை நடத்துகிற நீதியின் தேவனாய் விளங்குவார்.

என் வாழ்க்கையிலே இந்தவிதமான தெய்வீக நம்பிக்கை இல்லாதவளாக, இயேசுவைப் பற்றிய அறிவு இருந்தும், அதைப்பற்றி ஆழமாய் அறிய மனமில்லாதவளாக வாழ்ந்து வந்த காலத்தில், ஆண்டவர் இந்த அறிவை நான் அறிந்துகொள்ளும்படியாக வழிதிறந்தார். அன்றுமுதல் என் வாழ்வை அவருக்கென்று அர்ப்பணித்தேன். ஆனால், அதிகமாக அவரை தேடத் தேட எதிர்பாராத பயங்கரமான பிரச்சினைகள் என்னை சூழ்ந்து வந்தபோது செய்வதறியாது கலங்கினேன். அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் என்னைத் தேற்றி, உற்சாகப்படுத்தினார். தம்மை நம்புகிறவர்களை ஒருநாளும் ஆண்டவர் கைவிடமாட்டார் என்ற விசுவாசத்தை நான் உறுதியாய் பெற்றுக்கொள்ளும்படி கற்பித்தார். அன்றுமுதல் என் விசுவாசமும் பலப்பட்டது. என்ன வந்தாலும் இயேசுபோதுமே என்ற பாடலை பாடுவதோடு மட்டுமல்லாமல், அந்தவிதமான நம்பிக்கையை ஆண்டவர்மேல் வைக்கவும் அவர் என்னை வழிநடத்தினார். எத்தனையோ பாடுகள், கண்ணீர், வேதனை, சஞ்சலம், தவிப்பு என் வாழ்வில் மாற்றி மாற்றி வந்து எல்லாப் பக்கமும் அலசடிப்பட்டும், இயேசு கைவிடமாட்டார் என்ற ஒரு நம்பிக்கை என்னை மேலோங்கி எழச்செய்தது. அந்த நம்பிக்கையோடுதான் இத்தனை ஆண்டுகளும் கர்த்தர் அருளிச்செய்த வெற்றி நிறைந்த வாழ்க்கை வாழவும், அவரை மகிமைப் படுத்தவும், அவரே என்னை தப்புவித்து, இரட்சித்து காத்து வழிநடத்தி வருகிறார்.

எனக்கு அன்பானவர்களே! உங்கள் வாழ்விலும்கூட, நீங்களும் இதே ஆண்டவர் மீது உங்கள் நம்பிக்கையையும் வையுங்கள். நீங்கள் அவர்மீது வைத்திருக்கிற நம்பிக்கையை அவர் கவனிப்பார். யோபு, பாடுகள், போராட்டங்கள் மத்தியில், "அவர் என்னை கொன்று போட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்" (யோபு 13:15) என்று உறுதியாயிருந்தபடியால், முடிவில் இரண்டுமடங்கு ஆசீர்வாதம் பெற்றான். அதேபோல், நீங்களும் நம்பும்பொழுது, உங்களையும் சகல பாடுகளினின்றும் தப்புவித்து இரட்சிப்பார்.

ஜெபம்: "அன்பின் தெய்வமே! நீர் எவ்வளவு சமீபமாய் இருக்கிறீர்! இதை நான் உணர்ந்து, இன்றுமுதல் உம்மையே முழுமையாய் நம்பி, உமக்கு பிரியமாக வாழ்ந்து உம்முடைய ஆசீர்வாதத்தால் எல்லாத் தீங்கினின்றும் தப்புவிக்கப்பட்டு, ஆசீர்வாதமாக வாழ அருள்தாரும், இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

எனக்கு ஆலோசனை தந்த கர்த்தரை துதிப்பேன்!

(சங்கீதம் 16:7).

தேவாதி தேவனுக்கு "ஆலோசனைக் கர்த்தர்" என்று ஒரு அருமையான பெயருண்டு (ஏசாயா 9:6). ஆம், அவரை நம்புகிறவர்களுக்கு, அவருடைய உதவியை நாடுகிறவர்களுக்கு அவர் போதித்து வழிநடத்துகிற அன்புள்ள தகப்பன். இதை நீங்கள் அனுபவித்து பார்த்திருக்கிறீர்களா? அவர் பட்சபாதமற்றவராக தம்மை நோக்கிப் பார்க்கிறவர்களுக்கு, வேண்டுதல் செய்பவர்களுக்கு, ஆலோசனைக் கர்த்தராக இருந்து போதித்து, அவர் விரும்பும் வழியிலே நடத்துவார் (ஏசாயா 48:17, சங். 32:8).

ஆண்டவரை நேசித்து அவருக்கு பிரியமாய் வாழ்ந்த ஒரு வாலிபப் பெண் திருமண வயது வந்ததும், பெற்றோர் அவளுக்கென்று ஓர் துணையை தேடுவது பற்றி அறிந்தாள். தாய் அவளை நோக்கி: "மகளே, இரண்டு வரன்கள் இப்பொழுது வந்திருக்கின்றன. ஒன்று உலகப்பிரகாரமான நல்ல வேலையில் இருப்பவர். ஆனால், ஆன்மீக ஆசீர்வாதங்களை பெறாதவர். மற்றொருவரோ சாதாரண வேலையில் நடுத்தர ஊதியம் பெற்று வாழ்கிறவர். ஆனால், கர்த்தரை அறிந்து, அவருடைய வழிகளில் நடக்கிறவர். இதில் நீ யாரை தெரிந்துகொள்ள விரும்புகிறாய்? நீ ஜெபம்பண்ணி எனக்கு சொல், அதன்படி நாங்கள் செய்கிறோம்" என்றார்கள். அவள் கர்த்தரை நோக்கி: "ஆண்டவரே, உம்முடைய ஆலோசனையின்படி என்னை சரியான பாதையில் நடத்தும்" என்று உபவாசத்தோடு ஜெபித்தாள். ஆவியானவர் அவளோடு பேசினார். "குறைந்த வருமானம் இருந்தாலும் என்னை உண்மையாய் தேடுகிற பக்தனையே நீ தெரிந்துகொள். நான் அவனை ஆசீர்வதிப்பேன். உன்னிமித்தம் சகல பாக்கியங்களையும் கட்டளையிடுவேன்" என்றார். அப்படியே அதை அவள் தன் தாயிடம் சொல்ல, இனிதே திருமணம் நடந்து முடிந்தது. கர்த்தருடைய ஆசீர்வாதத்தோடு வாழ்க்கையில் நிறைவான ஆசீர்வாதத்தை அந்த மகள் பெற்று கணவனும் மனைவியுமாக கர்த்தருடைய சேவையை சந்தோஷமாக செய்து வந்தனர்.

எனக்கு அன்பானவர்களே! இந்த உலகத்தில் இவ்விதமாக ஆலோசனை சொல்லுகிற ஆண்டவர், நமக்கு மிகவும் சமீபமாக இருக்கும்போது, நாம் ஏன் வீணாக கவலைப்பட வேண்டும்? ஆனால், ஜெபம் செய்து, அவரைத் தேடி அவருடைய பிரசன்னத்தினால் நிறைந்து, பரிசுத்த ஆவியானவரின் ஆலோசனையை பெறாமல், உலகத்தாரைப்போல, "இதை செய்யலாமா? அல்லது செய்யக்கூடாதா?" என்று குறி கேட்பதுபோல் எதிர்பார்ப்பது சரியான வழி அல்ல. கர்த்தர் ஒவ்வொருவரிடமும் பேசுவார். "தேவனை இவ்வளவு சமீபமாய் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது?" (உபா. 4:7). எனவே, எந்த தேவைக்கும் நீங்களே முழங்காற்படியிட்டு, உபவாசத்தோடு அவரை நோக்கிப் பாருங்கள். அவர் உங்களுக்கு ஏற்ற ஆலோசனையைக் கூறி, எல்லாக் காரியங்களிலேயும் சீரும் செம்மையுமாக உங்களை நடத்துவார் (சங். 73:24).

ஜெபம்: "அன்பு தெய்வமே! நானும் என்னுடைய காரியங்களில் முடிவெடுக்க வேண்டிய சகல நேரங்களிலும் ஜெபத்தோடு, உபவாசத்தோடு உம்முடைய ஆலோசனையைத் தேடி, வாழ்க்கையிலே ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள எனக்கும் உம்முடைய தெய்வீக வழிநடத்துதலை, நிறைவான ஆலோசனையை இன்றுமுதல் தந்து ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

துன்பப்படுத்துகிறவர்களின் கைக்கு தப்புவிக்கிற ஆண்டவர்!

"... என்னைத் துன்பப்படுத்துகிறவர்களின் கைக்கும் என்னைத் தப்புவியும்"
(சங்கீதம் 31:15).

உலகில் பல்வேறு பிரச்சினைகளின் நடுவில் வாழ்கிற மக்கள் நம்பிக்கையற்றவர்களாக, யார் எனக்கு உதவிசெய்வார்? என்று கலங்குகிறார்கள். ஆனால், நமக்கோ, எல்லா நேரங்களிலும் நம்மீது கண்களை வைத்து, கண்மணியைப்போல் காக்கிற ஒரு ஆண்டவர் சமீபமாய் இருக்கிறார் என்பதை எண்ணிப்பார்க்கும்போது, நமக்கு எவ்வளவு சந்தோஷமாயிருக்கிறது! சத்துருக்கள் நம்மை துன்பப்படுத்துகிற வேளையிலும், நாம் சிறுமைப்படும்போதும், பல்வேறு தோல்விகளை சந்திக்கும்போதும், மனிதர் நம்மை எள்ளி நகையாடுகிறார்கள். நாம் எதையோ இழந்தவராக இருந்துவிட்டதுபோல எண்ணுகிறார்கள். ஆனால், கர்த்தரை உறுதியாய் நம்புகிற ஒருவராவது எளிதில் கைவிடப்படுவதில்லை. அதற்கு பதிலாக இரண்டத்தனையான பலனை அவர் தருகிறவராக இருக்கிறார் (சக. 9:12).

ஒரு கம்பெனியில் பல வருடங்களாக ஒருவர் பணிபுரிந்தார். அவருடைய அதிகாரிகளுக்கெல்லாம் அவரைப் பற்றிய ஒரு நல்ல அபிப்பிராயம் இருந்தது. ஆகவே, அவரைப் பற்றி குறைவாய் பேச யாரும் முன்வரமாட்டார்கள். அத்தனை மரியாதை அந்த மனிதருக்கு இருந்தது. இப்படி நற்பெயருடன் வாழ்ந்த அவருக்கும் பிசாசின் சோதனை வந்தது. திடீரென்று மாற்றுதலாகி வந்த ஒரு மேலதிகாரி இவருடைய தெய்வீக வழியையும், பொறுமையையும் கண்டு, வேண்டுமென்றே ஒவ்வொருநாளும் அவரை குறைத்துப்பேசி, அவருக்கு மனமடிவுண்டாக்கினார். உடன் வேலை செய்தவர்களெல்லாம் அவர் நல்லவர் என்று தெரிந்தும், அந்த அதிகாரிக்கு பயந்து வாய் திறவாமல் இருந்தனர். இவரோ அந்த நிலைமையிலும் கர்த்தருக்கு பயந்து, இந்த அதிகாரியின் கண்களிலே தயவு கிடைக்கும்படி உபவாசத்தோடு கருத்தாய் ஜெபம்பண்ணி வந்தார். ஒருநாள் இந்த அதிகாரியின் குடும்பத்தில் ஒரு பெரிய பிரச்சினை ஏற்பட்டது. அப்பொழுது உடன் ஊழியர் ஒவ்வொருவரும் இந்த குறிப்பிட்ட நல்ல மனிதரைப் பற்றி கூறி, அவர் பிரார்த்தனை செய்தால் உங்கள் வீட்டில் இருக்கும் இந்த பிரச்சினை மாறும் என்று அந்த அதிகாரியின் சம்மதத்தின் பேரில் அவரை அவருடைய வீட்டிற்கு அழைத்து சென்றார்கள். அவரும் மிகுந்த அன்போடும் தாழ்மையோடும் அவருடைய பிரச்சினைக்காக தேவனிடம் விண்ணப்பம் செய்து அந்த பயங்கரமான பிரச்சினையிலிருந்து, கர்த்தரால் விடுதலை வாங்கிக்கொடுத்தார். அப்பொழுதுதான் அதிகாரி அவரைப்பற்றிய மேன்மையை தெரிந்து கொண்டார்.

ஆம், பிரியமானவர்களே! இந்த உலகில் நம்மை துன்பப்படுத்த விரும்புகிறவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். இவர்கள் கரங்களிலிருந்து காக்கப்பட ஒரே ஒரு வழி தேவபிரசன்னமும், தேவசமுகமும் தான். இந்த மனிதரைப்போல, என்ன வந்தாலும் இயேசு போதுமே என்று உறுதியாய் பற்றிக்கொள்வீர்களானால், துன்பப்படுத்துகிறவர்கள் அனைவரின் கைக்கும் உங்களையும் தப்புவித்து, கனப்படுத்துவார் (1 சாமு. 2:8).

ஜெபம்: ''அன்புள்ள ஆண்டவரே! இந்த உலகில் எத்தனை தீங்குகள், பிரச்சினைகள் வந்தாலும், நீர் அத்தனைய துன்பங்களிலிருந்து மீட்டு இரட்சிக்க போதுமானவர் என்பதை அறிந்து இன்றுமுதல் உம்மையே நம்பி, ஸ்தோத்திரிக்கிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!''

உம்முடைய வெளிச்சத்திலே வெளிச்சம் காண்கிறோம்!

(சங்கீதம் 36:9).

இஸ்ரவேலின் ஒளியாகிய ஆண்டவர் அக்கினியும் அக்கினி ஜுவாலையுமாயிருக் கிறார். "அவர் ஒளியை வஸ்திரமாக தரித்திருக்கிறார்" (சங். 104:2). ஆம்! உலகத்திலே வாழ்கிற நம் ஒவ்வொருவரையும் பிரகாசிக்க செய்கிற வல்லமையுடையவராக நம்முடைய ஆண்டவர் இருக்கிறார் (யோவான் 1:9). இந்த தெய்வீக ஒளி நிறைந்த ஆண்டவரால் நாம் நிரப்பப்படும்போது, நம்முடைய வாழ்விலும் இருக்கிற இருள் எல்லாம் மாறி தேவ ஒளி பிரகாசிக்கிறது. மேலும், அநேகரை இந்த பிரகாசமான வாழ்க்கைக்குள் கொண்டு வரும்படி நம்மை ஒரு சாட்சியாக, மாதிரியாக மாற்றுகிறது. இந்த அனுபவத்தை பெற்ற எத்தனையோ பேர் இன்றைக்கு கர்த்தருக்கென்று பிரகாசிக்கிறார்கள். யோவான் ஸ்நானன் தேவனால் அனுப்பப்பட்டவன். "அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான்" (யோவான் 5:35) என்று வாசிக்கிறோம். நீங்களும் நானும்கூட அவ்வாறு வெளிச்சம் வீசுகிறவர்களாக வாழ தேவன் நமக்கு தமது தெய்வீகக் கிருபையை நிச்சயம் தருவார்.

ஒரு மனைவி தன் கணவருடைய நல்லெண்ணங்களையும், நற்குணங்களையும், அவருடைய அமைதியான சுபாவத்தையும் தனக்கு சாதகமாக்கிக்கொண்டு, தீய எண்ணங்களோடு தன்னோடு பணிபுரிந்த ஒருவருடன் தொடர்புகொண்டாள். இது தவறு என்று தெரிந்தபொழுதிலும், துணிகரமாக தன் கணவருக்கு துரோகம் செய்தாள். கணவனோ கர்த்தரையே தன் துணையாகக் கொண்டு, "என் ஆண்டவர் நிச்சயம் அவள் வாழ்வை மாற்றுவார்" என்று நம்பிக்கையோடு விசுவாசத்தோடு காத்திருந்தான். அந்த பெண் விரும்பிய அந்த மனிதன் கொஞ்ச காலத்திற்குப் பின்பு அவளை விட்டுவிட்டு தன் மனைவியோடு வேறு ஊருக்கு மாற்றலாகிப்போய்விட்டான். அதன்பின் இந்த பெண்ணை கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை. அப்பொழுதுதான் தன் அன்பு கணவர் எவ்வளவு மேன்மை பொருந்தினவர் என்பதை உணர்ந்து, அவனண்டை திரும்பி வந்தாள். அவனும் அவளுக்கு தெய்வீக வழியை காண்பித்து, கர்த்தருடைய அன்பைப் பற்றிக் கூறி, ஆண்டவரிடத்திலே திரும்பும்படி வழிநடத்தினான். எந்த பெண் ஆண்டவரை தேடாமல் துணிகரமாக பாவத்தில் வாழ்ந்தாளோ, அதே பெண் மீது ஆண்டவர் இரக்கம் நிறைந்தவராய், பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், வல்லமையினாலும் நிரப்பி, அவளைப் போன்று பாவத்தில் வாழ்ந்த அநேகரை வெளிச்சம் வீசும் வழிக்கு திருப்பும் ஒரு கருவியாக அவளை மாற்றினார்.

ஆண்டவருடைய வல்லமை எவ்வளவு பெரியது! எத்தனை இருள் நம் வாழ்வில் வந்தாலும் அவருடைய கிருபை நம்மை பிரகாசிக்கிறவர்களாகவும், மற்றவர்களையும் பிரகாசிக்கப் பண்ணுகிறவர்களாகவும் மாற்றும். ஆம்! பாவ இருள் நிறைந்திருந்தும் நம் வாழ்வை தமது தெய்வீகக் கிருபையினால் வெளிச்சம் வீசும் வாழ்வாக மாற்றுவார். அவர் மன்னிக்கிறதற்கு தயை பெருத்தவர் (ஏசாயா 55:7). இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவர். ஆகவே உங்கள் குறைவுகளோடு அவரண்டை வந்து ஒளிபெற்று வாழுங்கள்.

ஜெபம்: "அன்பு தெய்வமே! இந்த இருள் நிறைந்த உலகத்திலே, வெளிச்சம் வீசும் வாழ்க்கை வாழவும், அநேகரை வெளிச்சத்திற்கு கொண்டு வருகிற கருவியாகப் பிரகாசிக்கவும், இன்றுமுதல் எனக்கும் உம்முடைய தெய்வீக அருளைத் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

சத்துருக்களை மேற்கொள்ளும் கர்த்தர்!

"... என் சத்துருக்கள் என்னை மேற்கொண்டு மகிழவிடாதேயும்" *(சங்கீதம் 25:2).*

தாவீது தன் வாழ்க்கையிலே சத்துருக்களோடு, அதாவது பகைவர்களோடு போர் புரியும்போது, "என் சத்துருக்களை எனக்கு முன்பாக உடைத்து ஓடப்பண்ணினார்" என்று சொல்லுகிறான் (2 சாமு. 5:20). இதற்கு காரணம், அவன் கர்த்தரோடு பேசி, அவருடைய ஆலோசனையையும், வழிநடத்துதலையும் பெற்றுக்கொண்டவனாக வாழ்ந்தபடியால், கர்த்தர் அவனுக்காக யுத்தம் செய்தார். மற்றொரு இடத்தில், "தண்ணீர்கள் உடைந்தோடுகிறதுபோல, தேவன் என் கையினால் என் சத்துருக்களை உடைந்தோடப் பண்ணினார்" என்றும் தாவீது சொல்லுகிறதை வாசிக்கிறோம் (1 நாளா. 14:11). "நீதிமான்கள் சிங்கத்தைப்போல தைரியமாயிருக்கிறார்கள்" (நீதி. 28:1) என்ற வசனத்தின்படி, தாவீது கர்த்தருக்குள் திடமனதாய் இருந்தபடியினால், எந்த நிலையிலும் தைரியம் பெற்றவனாக இருந்திருக்கிறான். அதேவண்ணமாக, அதே ஆண்டவரை, நாமும் என்ன வந்தாலும் விடாமல் பற்றிக்கொள்வோம். அப்பொழுது எப்படிப்பட்ட சத்துரு நம்மை மேற்கொள்ளவந்தாலும், ஒன்றும் நம்மை சேதப்படுத்தாதபடி ஆண்டவர் நம்மையும் காக்க வல்லவராயிருப்பார் (லூக்கா 10:19).

சத்துருவாகிய பிசாசு எங்கள் இல்லறத்தை உடைத்துப்போட எத்தனையோ முறை முயன்றான். மேலும் மரண இருள், இல்லாமை, இழப்பு போன்ற பல்வேறு வேதனைகள் மூலமாக நெஞ்சத்தை உடைத்து, வாழ்வையே கசப்பாக்கவும் திட்டமிட்டான். ஆனால், எல்லா நேரங்களிலும் எங்கள் கண்கள் கர்த்தரையே நோக்கிக் கொண்டிருந்தபடியாலும், அவரையே உறுதியாய் பற்றிக்கொண்டமையாலும், நீதி. 28:1–ல் கூறப்பட்டபடி தைரியமாயிருக்கவும், சோர்ந்துபோகாமலிருக்கவும் தேவன் துணை நின்று, தமது செட்டைகளினின் மறைவிலே மறைத்து, ஆத்துமாவிலே பெலன் தந்தார் (சங். 138:3; 91:1) கர்த்தர் மேலேயே முழுவதுமாக சார்ந்துகொண்ட தமது அடியார்களாகிய எங்களுக்கு ஏற்பட்ட சகல குறைகளையும் அற்புதமான விதங்களில் ஆசீர்வாதமாக யாவரும் வியக்கும்வண்ணம் மாற்றியமைத்தார். மேலும், பல சமயங்களிலும் மரண இருளின் பள்ளத்தாக்கு, இல்லாமை போன்ற பல சோதனைகளின் வழியாய் கடந்து செல்லவும், அதன்மூலம் எங்கள் வாழ்வு சுக்குநூறாக உடையவும் யோவான் 10:10–ன்படி, பல முறை பிசாசு முயன்றான். ஆனால் அந்த நேரங்களிலெல்லாம், தேவாதி தேவன், சாத்தானை கால்களின் கீழ் நசுக்கிப்போட்டு (ரோமர் 16:20) எங்களை வெற்றி சிறக்கப்பண்ணினார்.

ஆம்! ஆண்டவர், எந்த இக்கட்டிலும், தம்மையே பற்றிக்கொள்ளுகிற எவரையும், அவர் வெட்கத்திற்குட்படப்பண்ணாமல், சத்துரு தோற்றுப்போகவும், வெட்கத்திற்கு பதிலாக இரட்டிப்பான பலனையுமே அருளுவார் (ஏசாயா 61:7).

<u>ஜெபம்</u>: "என் அன்பு தெய்வமே! நீர் எத்தனை வல்லமையுள்ளவராக சத்துருவின் சகல அதிகாரங்களையும் உடைத்துப்போடுகிறவராக இருக்கிறீர்! என் வாழ்வையும் உம்முடைய கரத்திலே கொடுக்கிறேன். எனக்கும் இதே இன்பமான அனுபவத்தைத் தந்து. <u>இன்றுமுதல்</u> ஒவ்வொருநாளும் வழிநடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"

தம்மைக் கூப்பிடுகிறவர்களை குணமாக்குகிற தேவன்!

"என் தேவனாகிய கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிட்டேன், என்னை நீர் குணமாக்கினீர்" **(சங்கீதம் 30:2).**

ஆண்டவர் இந்த உலகத்திலே உயிரோடு வாழ்ந்தபோது, ஒரு சமயம் ஒரு மனிதன் ஆண்டவரை நோக்கி: "தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும்" என்று சத்தமிட்டுக் கூப்பிட்டான். அவன் கண் தெரியாத குருடன். அவன் பெயர் பர்திமேயு. ஆண்டவருடைய சீஷர்களோ, "சத்தம்போடாதே" என்று அதட்டினார்கள். அவனோ, "இந்த ஒரே சமயம் தான் எனக்கு கிடைக்கிற சந்தர்ப்பம். ஒரு வேளை ஆண்டவர் இந்த பக்கம் மறுபடியும் வராமல் போய்விட்டால் எனக்கு கண் பார்வையே கிடைக்காதே" என்று நினைத்து மிகுந்த சத்தமிட்டுக் கதறினான். ஆண்டவர் அவன் கூக்குரலைக் கேட்டு, அவனை அன்போடு அழைத்து, அவன் வேண்டுதலை நிறைவேற்றினார் (லூக்கா 18:35–43). நாமும்கூட இந்த குருடனைப்போல எத்தனை சமயங்களில் சோர்ந்துபோய், இதைவிட்டால் வேறு வழியில்லையே என்று தவித்திருக்கிறோம். அவன் சத்தமிட்டு அன்று ஆண்டவரை நோக்கிக் கூப்பிட்டதுபோல, இன்றைக்கு நாமும் அவர் பாதத்தை இறுகப்பற்றிக்கொண்டு, விசுவாசத்துடன், "இயேசுவே, நீர்தான் என் வழி, எனக்கு உதவிசெய்யும்" என்று கதறுவோம். ஆசீர்வாதத்தை நிறைவாய் பெறுவோம்.

ஒரு மனிதன் எத்தனையோ பேர் புத்தி சொன்னபோதும் கேட்க மனமின்றி தாறுமாறான வாழ்வை மேற்கொண்டிருந்தான். அவன் மனைவியோ பொறுமையே உருவாக இருந்தாள். அவள் நன்றாய் ஜெபிப்பாள். இவனோ, அவளை ஜெபிக்கவும் விடமாட்டான். ஆண்டவருக்கும், தன்னோடு வாழ்ந்த மனுஷருக்கும் எவ்வளவாய் வேதனை கொடுக்க முடியுமோ அவ்வளவாக செய்து வந்தான். ஒருநாள் அலுவலக காரியமாக வெளியூருக்கு சென்றபோது, அவன் கார் விபத்துக்குள்ளாகியது. கால் ஒடிந்தவனாக மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டான். மருத்துவர்கள் உங்கள் காலை எடுக்கவேண்டியதிருக்கும். அதற்கு நீங்கள் ஆயத்தமாகுங்கள் என்று கூறினபோது தான், அவனுடைய பாவ வாழ்க்கை ஒன்றன்பின் ஒன்றாக அவன் கண்களுக்கு முன்பாக வந்தது. "ஐயோ, எத்தனையோ பேர் எனக்கு புத்தி சொல்லியும், என் மனைவி எவ்வளவாக அன்பு காண்பித்தும், அவை அனைத்தையும் ஏற்றுக்கொள்ளாமல் அலட்சியமாய் ஆண்டவரை துக்கப்படுத்தினேன்! இன்று பாவியாகிய எனக்கு உதவிசெய்வாரா?" என்று கலங்கினான். அப்பொழுது அவன் மீது அன்புகொண்ட சில உண்மையான கிறிஸ்தவ சகோதரர்கள் அவன் படுத்திருந்த அறையிலே அடிக்கடி அவனுக்காக பிரார்த்தனை செய்தனர். அவன் வாழ்விலும் இரட்சிப்பைப் பெறும்படி கர்த்தர் அந்த மனிதருடைய கூக்குரலைக் கேட்டு மனமிரங்கினார். சில நாட்களுக்கு பின்பு மருத்துவர்கள் வந்து, அவரை பரிசோதித்துவிட்டு, உங்கள் காலை எடுக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறினார்கள். காலும் கிடைத்தது, கர்த்தருடைய ஆசீர்வாதமும் கிடைத்தது.

ஜெபம்: "அன்பு இரட்சகரே! எனக்கும் என் வாழ்க்கையிலே என்ன வந்தாலும் உம்மை நோக்கிக் கூப்பிடவும், என் ஜெபங்களையெல்லாம் நீர் கேட்டு, இன்றுமுதல் உமது தெய்வீக வழிநடத்துதலின்படி என்னை ஆசீர்வாதமாக வழிநடத்தவும் பாரத்துடன் ஜெபிக்கிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

குழியில் இறங்காதபடி ஆத்துமாவைக் காக்கிற தேவன்!

"கர்த்தாவே, நீர் என் ஆத்துமாவை பாதாளத்திலிருந்து ஏறப்பண்ணி, நான் குழியில் இறங்காதபடி என்னை உயிரோடே காத்தீர்" **(சங்கீதம் 30:3).**

இவ்வுலகில் பாவம் செய்வதற்கேற்ற பல சூழ்நிலைகள் நம்மை சுற்றி இருக்கிறதை நாம் காண்கிறோம். இதினிமித்தமாக மனிதர்கள் எளிதில் பாவத்திற்கு அடிமையாகின்றனர். கெட்ட நண்பர்களின் சேர்க்கை அநேக சமயங்களில் வாலிபர்களை பாவத்திற்குள்ளாக்குகின்றது. அவ்வழியில் இருந்து மீள முடியாமல் தவிக்கின்றனர். இதேபோன்று தான் பெரியவர்களும், குடும்பஸ்தர்களும்கூட, அவர்களையுமறியாமல் பாவத்தின் படுகுழியில் விழுந்து, தங்களது வாழ்வை நாசப்பண்ணுகிறார்கள். இந்தவிதமான பயங்கரமான குழியிலும், உளையான சேற்றிலும் இருந்து நம்மை தூக்கியெடுக்க வல்லமையுள்ளவர் ஆண்டவர் மாத்திரமே! (சங். 40:2; எபே. 2:1). இந்த தெய்வீக அனுபவத்தை தருவதற்காகத்தான் இயேசு கிறிஸ்து சிலுவையிலே தன்னையே அர்ப்பணித்தார். எப்பேர்ப்பட்ட பயங்கரமான பாவக்குழியில் விழுந்து தவிப்பவர்களையும், அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமை, அவருடைய ஜீவனுள்ள இரத்தம் தூக்கி நிலைநிறுத்த இன்றும் வல்லமையுள்ளதாயிருக்கிறது. பவுல் அப்போஸ்தலன், பாவிகளில் பிரதான பாவியாக இருந்தேன் என்று கூறுகிறார் (1 தீமோ. 1:15). ஆனால், அப்படிப்பட்ட நிலைமையில் இருந்த அவரை ஆண்டவர் ஒரு நாள் சந்தித்து, தம்முடைய ஊழியத்தை செய்யும்படியும், அதினிமித்தம் வரும் பாடுகளை பொறுமையாய் அனுபவிக்கும்படியும், அவருடைய வாழ்வை சீர்தூக்கி நிறுத்தினார். இன்றைக்கும் இப்படிப்பட்ட மக்களை சீர்தூக்கி நிறுத்த அதே வல்லமை போதுமானதாக இருக்கிறது.

சமீபத்தில் நாங்கள் ஒரு நற்செய்தி கூட்டத்திற்கு சென்றிருந்தோம். அங்கு எங்களோடு ஊழியம் செய்ய வந்த சகோதரியிடம் ஒரு அம்மையார், "நான் சிறு வயதில் விளையாட்டாக ஒரு சிகரெட் எடுத்து பற்றவைத்து குடிக்க ஆரம்பித்தேன். விளையாட்டு வினையாகும் என்பதுபோல, இன்றும் என்னால் அதை நிறுத்த முடியவில்லை. இப்படிப்பட்ட பாவ உளையில் இருந்து ஆண்டவர் என்னை மீட்டெடுக்கும்படி எனக்காக ஜெபிக்கமாட்டீர்களா?" என்று பரிதாபமாக கேட்டார்களாம்.

எனக்கு அன்பானவர்களே, ஆண்டவர் சிலுவையிலே செய்த தியாகத்தை மறந்தவர்களாய், அதனுடைய மேன்மையை உணராமல் உங்கள் இருதயத்தை கடினமாக்கிக் கொள்ளாதிருங்கள். மேற்கண்ட சகோதரியைப்போல், "எனக்கும் இந்த அடிமைத்தனத்தினின்று விடுதலையைத்தாரும் ஆண்டவரே! குழியில் என் வாழ்வு இறங்கி நான் நாசமடையாதபடி என் ஆத்துமாவை நீரே இரட்சித்துக் காத்தருளும்" என்று கர்த்தரை நோக்கி கெஞ்சி மன்றாடுவீர்களானால், கர்த்தர் உங்களுக்கும் நிச்சயம் இரங்கி உதவிசெய்வார் (சங். 51:12).

ஜெபம்: "அன்பு தெய்வமே! இருளின் வாழ்வு, குழியில் இறங்கினதுபோன்ற பயங்கரமான பாவ வாழ்வு எனக்கு வேண்டாம். இன்றுமுதல் உம்முடைய இரத்தம் என்னை சுத்திகரிக்கவும், நற்சாட்சி உள்ள ஜீவியம் நான் பெற்று வாழவும், தயவுசெய்து எனக்கு இரங்கி உதவிசெய்யும். என் ஆத்துமாவை உயிர்ப்பியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

அபிஷேகம்பண்ணினவனுக்கு கர்த்தர் அடைக்கலமானவர்!

"கர்த்தர் அவர்களுடைய பெலன்; அவரே தாம் அபிஷேகம்பண்ணினவனுக்கு அரணான அடைக்கலமானவர்" **(சங்கீதம் 28:8).**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை தேவன் பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார் (அப். 10:38). அதுமட்டுமல்லாமல், அளவில்லாமல் நிரப்பினார் (யோவான் 3:34). அதினிமித்தமாக அவர் நன்மை செய்கிறவராயும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார். ஆம்! பிரியமானவர்களே, தேவ குமாரனாகிய அவருக்கு இப்படிப்பட்ட வாழ்வை தேவன் கொடுத்திருப்பாரானால், உங்களுக்கும் எனக்கும் இது எத்தனை அவசியமாயிருக்கிறது! சீஷர்களும் அதைப் பற்றிய அறிவு இல்லாமல் இருந்தபொழுது, இயேசு இந்த வாக்குத்தத்தம் உங்களிலும் நிறைவேற காத்திருங்கள் என்று திரும்பவும் திரும்பவுமாக அவர்களுக்கு போதித்து உணர்த்தினபடியே, அவர்கள் பரிசுத்த ஆவியின் வரத்திற்காக ஜெபத்துடன் காத்திருந்தார்கள் (அப். 1:14). பெந்தெகொஸ்தே நாளில் அவர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டனர். அவர்கள் வாழ்வின் பேதமை, அறிவின்மை, பயங்கள், சந்தேகங்கள் யாவும் மறைந்து, சமாதானம், சந்தோஷம் பெருக்கெடுத்து ஓடியது.

ஸ்மித் விகிள்ஸ்வொர்த் என்ற தேவனுடைய மனிதர் ஒரு திருச்சபையை நடத்தி வந்தார். ஆனால், அவருக்கு பிரசங்கம்பண்ண தெரியாது. மற்ற எல்லா வேலைகளையும் செய்வார். மனைவிதான் செய்தி கொடுப்பார்கள். ஆனால், அவர் உள்ளத்திலே ஒரு வாஞ்சை, எப்படியாவது பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப் பெறவேண்டுமென்று இருந்தது. அருகிலிருந்த ஒரு ஊரில் சில பக்தர்கள் ஜெபிக்கிறார்கள், மக்கள் அபிஷேகம் பெறுகிறார்கள் என்று கேள்விப்பட்டார். உடனே அங்கு சென்ற அவர், அங்கே அவர்களோடு ஜெபத்தில் காத்திருந்தார். ஒரு தேவ மனுஷியின் வல்லமை நிறைந்த ஜெபத்தினால் அந்த அனுபவத்தை பெற்று மகிழ்ந்தார். வீடு திரும்பினார். அந்த ஞாயிறு மனைவியின் வேண்டுதலின்படி அவர் பிரசங்கம் செய்ய மேடையில் ஏறினார். யாவரும் அவர் எப்படி பிரசங்கிக்கப்போகிறார் என்று ஆவலோடு காத்திருந்தனர். தேவனுடைய வார்த்தை அவர் மூலம் வல்லமையாய் வெளிப்பட்டது. சபையார் பாவ உணர்வினால் அழுதுபுரண்டு, ஆண்டவரை நோக்கிக் கதறினர். ஒரு சிலர் தேவ வல்லமையினால் கர்த்தரை ஸ்தோத்திரித்தனர். அந்த எழுப்புதல் அன்றோடு நின்றுவிடவில்லை. அது தொடர்ந்து பற்றியெரிந்தது.

இன்றைய நாட்களில் கர்த்தர் யோவேல் 2:28-ல் உரைத்தபடியே தம்முடைய அபிஷேகத்தை கேட்போர் யாவர் வாழ்விலும் ஊற்றிக்கொண்டிருக்கிறார். நீங்களும் ஏசாயா 44:3-ன்படி தாகத்தோடு, என்னை நிரப்பினாலொழிய உம்மை விடுவதில்லை என்று கர்த்தரை நோக்கி ஜெபியுங்கள். அப்பொழுது இந்த தெய்வீக அனுபவத்தை பெற்று, அதோடுகூட பரிசுத்த ஆவியின் வல்லமை, வரங்களாலும் நிரப்பி கர்த்தரையே அடைக்கலமாகக்கொண்டு, எழும்பிப் பிரகாசியுங்கள்.

__ஜெபம்__: "அன்பு தெய்வமே, இந்த அபிஷேகத்தினால் என்னையும் நிரப்பி அநேகருக்கு ஆசீர்வாதமாக எழும்பிப் பிரகாசிக்க எனக்கும் இந்த தெய்வீக நிறைவைத்தாரும். நானும் ஒரு உபயோகமான கருவியாக வாழ இன்றுமுதல் என்னை கரம்பிடித்து வழிநடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

நீதிமான்களின் சந்ததி ஆசீர்வதிக்கப்படும்!

"நான் இளைஞனாயிருந்தேன், முதிர்வயதுள்ளவனுமானேன்; ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை"

(சங்கீதம் 37:25).

பிதாவாகிய தேவனைப் பற்றிய அறிவு இல்லாதிருந்த ஆபிரகாம் தன் தகப்பனோடு அந்நிய தெய்வங்களை வணங்கிக்கொண்டிருந்தான். ஆண்டவர் அவன்மீது இரக்கம் கொண்டு அவனை தேடிச் சென்று, அழைத்து வந்து, தம் சித்தத்தின்படி, தாம் தீர்மானித்தபடி, தம்மைத் தேடுகிற பக்திக்குரிய வழியிலே அவன் வாழ்வை திருப்பினார். அதினிமித்தமாக அவன் மட்டுமல்லாமல், அவன் சந்ததியும் தேவபக்தியுள்ள சந்ததியாக மாறும்படி (மல். 2:15) தேவாதி தேவன் அருள்புரிந்தார். நிச்சயம் உங்கள்மீதும் தம்முடைய கண்களை வைத்து, நீங்களும் மேற்கண்ட வசனத்தின்படி சந்ததி சந்ததியாக ஆசீர்வதிக்கப்படும்படி அவர் அருள்புரிவார் (சங். 112:1,2).

ஒரு வாலிபன் இளம் வயதிலே மற்ற வாலிபர்களைப் போல தன் மனம்போல் வாழ்ந்து வந்தான். ஆனால், ஒருநாளில் ஆண்டவர் ஆபிரகாம் மேல் தயை வைத்ததுபோல, இவன்மீதும் தமது தயை நிறைந்த கண்களை வைத்து, தமது தெய்வீக வழியிலே அவனை திருப்பினதினிமித்தமாக தன் மனைவி, ஒரே மகன், குடும்பத்தினர் இப்படியாக ஒவ்வொருவரும் அதிசயிக்கும்வண்ணமாக தேவபக்தியுள்ள சந்ததியாக மாறும்படி, ஆண்டவர் அருள்புரிந்தார். ஆனால், இத்தனையையும் பார்த்த அவனுடைய உற்றார் மற்றும் அவனோடு பணிபுரிந்தவர்கள் அவனை எவ்வளவாய் பரிகசிக்க முடியுமோ அவ்வளவாய் பரிகசிக்கவும், நிந்தையான பேச்சுகளை பேசி மனமடிவுண்டாக்கவும் செய்து, அவனையும், அவனை அழைத்த ஆண்டவரையும் துன்பப்படுத்தினார்கள். ஆனால், அவனும், அவன் குடும்பத்தாருமோ ஆவிக்குரிய வாழ்க்கையிலே பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெற்று மென்மேலும் கர்த்தருக்குள் வளர்ச்சியடைந்தார்கள். ஆண்டவர், பரத்தின் நன்மைகளோடு நிறுத்திவிடாமல், உலகப்பிரகாரமான வாழ்க்கையிலும் யாவர் கண்களும் அதிசயிக்கும்வண்ணமாக அவர்களை உயர்த்தினார். அப்பொழுதுதான் அவ்வாறு கேலி செய்த மக்களுடைய கண்களும் இருதயமும் திறக்கப்பட்டன. ஒவ்வொருவராக இந்த தெய்வீக வழியை தேடிவந்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டனர்.

எனக்கு அன்பானவர்களே! நீங்களும் கர்த்தரை தேடும்போது, பலவிதமான எதிர்ப்புகள், சஞ்சலங்கள், தடைகள் வரும்போது, சோர்ந்துபோகாமல், உங்களை ஆசீர்வதிக்க விரும்பும் ஆண்டவரையே நெருங்கி சேர்ந்து, அவருக்கு பிரியமாய் வாழுங்கள். ஆபிரகாம் தான் கர்த்தரை விசுவாசித்து, அவர் வழிகளிலே கருத்தாய், உத்தமமாய் நடந்து சந்ததி சந்ததியாக ஆசீர்வாதம் பெற்றதுபோல் நீங்களும் தெய்வ பயத்துடன் உங்கள் பிள்ளைகளும், பிள்ளைகளின் பிள்ளைகளும்கூட அந்த தெய்வீக வழிகளை பின்பற்றி ஆசீர்வதிக்கப்படும்படி ஜெபத்துடன் காத்திருங்கள் (ஏசாயா 61:9).

ஜெபம்: "அன்பு தெய்வமே! உம்மை அண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நீர் எவ்வளவு பாக்கியத்தை கொடுக்கிறீர் என்பதை அறிந்துகொண்டேன். இன்றுமுதல் நானும் சந்ததி சந்ததியாக உம்முடைய தெய்வீக ஆசீர்வாதத்தை பெற்று வாழ அருள்தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

தேவனை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன்!

''தேவன் அதின் நடுவில் இருக்கிறார், அது அசையாது; அதிகாலையிலே தேவன் அதற்கு சகாயம்பண்ணுவார்'' (சங்கீதம் 46:5).

உலக வாழ்வில் ஒவ்வொருநாளும் எதிர்பாராத பல தீங்குகளையும், ஆபத்துகளையும் நாம் சந்திக்கிறோம். நாங்கள் சந்தோஷமாக இருந்தவேளையில் கார் விபத்து நேரிட்டு எங்கள் குடும்பத்தில் தீராத வேதனை! சுனாமி அலைகள் எழும்பி வந்தபோது எத்தனையெத்தனை குடும்பங்கள் உடைந்துபோயின. நன்றாக நடக்கிற வியாபாரம் திடீரென்று உடைந்துபோகிறது. இப்படிப்பட்ட சமயங்களில் மனிதராகிய நாம் எளிதில் சோர்ந்து போகிறோம். என் வாழ்வு அவ்வளவுதான் என்று நினைக்கிறோம். அப்படியிராமல், ''தேவன் என்னோடு இருக்கிறார், நான் அவரைத் தேடும்போது, அவர் எனக்கு சகாயம் (எபி. 13:6) அருளிச்செய்வார். நான் அசைக்கப்படுவதில்லை. ஆகவே, நான் எதற்கும் பயப்படேன் என்ற ஒரு தைரியத்தை அவரே நமக்கு கொடுப்பார். அப்படித்தான் என் வாழ்வில் கொடுத்து ஆண்டவருடைய ஊழியத்தை முன்னைக் காட்டிலும் அதிக வல்லமையோடு செய்ய அருள்புரிந்து வழிநடத்தி வருகிறார்.

ஒரு தெருவில் பயங்கரமான குடிகாரனும், சண்டை போடுகிறவனுமாகிய ஒரு மனிதன் வாழ்ந்துவந்தான். எவ்வளவு பெரிய உத்தியோகஸ்தராக இருந்தாலும் அவர்களை மதிக்கமாட்டான். வாய்க்கு வந்தபடி திட்டி, வேதனைப்படுத்துவான். அவனுடைய தெருவில் வசித்த ஒவ்வொருவரும், இவனோடு எப்படி வாழ்வது? இவனை எப்படி இந்த தெருவிலிருந்து வேறு இடத்திற்கு அனுப்புவது? என்று யோசித்தார்கள். அதே தெருவில் கர்த்தர்மேல் முழு நம்பிக்கையையும் வைத்து ஜெபம், வேத வாசிப்பு, இவைகளினால் ஆண்டவரோடு நெருங்கி வாழ்ந்த வேறொரு மனிதர் அந்த பொல்லாத மனிதனுடைய ஆத்துமாவுக்காக உபவாசத்தோடு கருத்தாய் ஜெபம்பண்ணி வந்தார். அந்த பொல்லாத மனிதனுடைய வீட்டிலே ஒரு பெரிய வேதனை ஏற்பட்டது. அவன் அதிகமாய் நேசித்த அவனுடைய அன்பு மகள் திடீரென்று மரித்துப்போனாள். உட்கார்ந்து ஓவென்று அழுதான். இதுதான் சமயம் என்று இந்த தேவ மனிதன் அவனை ஆற்றித் தேற்றி அன்பு வார்த்தைகளைப் பேசி, அவனுக்காக கருத்தாய் பிரார்த்தனை செய்தார். இதன்மூலம் அந்த மனிதன் மிகுந்த சமாதானம் பெற்று ஆண்டவரைத் தேடும்படியாக கர்த்தர் வழியை திறந்து கொடுத்தார். அதன்பின் அவன் வாழ்க்கை தலைகீழாய் மாறியது. அந்த தெருவில் வசித்தவர்கள் இந்த தீயமனிதனின் வாழ்வில் காணப்பட்ட மாறுதலைக் கண்டு ஆச்சரியமடைந்தனர். தங்கள் வாழ்வையும் கர்த்தருக்கு பிரியமானதாக மாற்ற, ஒவ்வொருவராக அந்த தேவ பக்தியுள்ள மனிதனை தேடி வந்தார்கள்.

அன்பானவர்களே! தேவனை தேடுகிறவர்களுக்கு எவ்வளவு பெரிய சிலாக்கியத்தை, பாக்கியத்தை ஆண்டவர் கொடுக்கிறார் பாருங்கள். உங்கள் நம்பிக்கை தேவன் மேலேயே இருக்கும்போது, நீங்கள் அசைக்கப்படுவதில்லை, பயப்படவும் தேவையில்லை. மற்றவர்களுக்கும் உதவிசெய்யக்கூடிய, நம்பிக்கை கொடுக்கக்கூடியவர்களாய் மாறுவீர்கள் (சங். 125:1,2).

ஜெபம்: ''அன்பு தெய்வமே! இதுபோன்ற விசுவாச வாழ்க்கையை எனக்கும் தந்து, உம்மை நம்புகிற நம்பிக்கையில் ஒன்றும் குறைவுபடாமல் உமக்குள் நான் அசைக்கப்படாமல் தைரியமாய், நற்சாட்சியாய் விளங்க, இன்றுமுதல் எனக்கு அருள்தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!''

நான் உம்மை துதித்து, உமது நாமத்தை உயர்த்துவேன்!

"என் ஜீவனுள்ளமட்டும் நான் உம்மைத் துதித்து, உமது நாமத்தை சொல்லிக்கையெடுப்பேன்" **(சங்கீதம் 63:4).**

தாவீது இந்தவிதமான வாழ்க்கையை மேற்கொண்டிருந்தபடியினால், ஆண்டவர் அவனோடுகூட இருந்தார். "கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்" (சங். 34:1). இந்தவிதமான துதி நிறைந்த வாழ்வை நாம் ஒவ்வொருவரும் தாவீதைப்போல மேற்கொள்ளும்போது, நாமும் ஆண்டவருடைய நாமத்தை "ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான்" (சங். 50:23) என்று அவரை மகிமைப்படுத்த ஏதுவாகும். அவ்விதமாய் அவரை ஸ்தோத்திரிக்க ஸ்தோத்திரிக்க, ஆண்டவருடைய மனம் நம்மைக் குறித்து மகிழும். அவர் நம் மத்தியிலே உலாவுவார்; நமக்காக யாவையும் செய்துமுடிப்பார் (சங். 138:8).

தாறுமாறான வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருந்த ஒரு மனிதன், குடும்பத்திலே எல்லோரிடத்திலும் கெட்ட பெயர் வாங்கும்படியாக நடந்துகொள்வான். துர்மனச்சாட்சி, துர்க்கிரியை இவைகளினால் நிறைந்தவனாயிருந்தான். ஆனால், அவனுடைய சபை போதகர் மிகுந்த பக்தியும், ஆத்தும பாரமும் உள்ளவர். அவனுடைய குணத்தின் பயங்கரத்தை கண்டபொழுதிலும், அடிக்கடி அவன் வீட்டுக்கு வந்து அவனோடு ஒன்றுமே நடவாததுபோல, தெய்வீக அன்பினால் நிறைந்து பேசுவார். அவனோ, அவரை எவ்வளவு கடினமான வார்த்தைகளால் வேதனைப்படுத்த முடியுமோ அப்படி பரிகசித்து அனுப்புவான். ஆனால், அந்த தேவபக்தி நிறைந்த போதகர் தினமும் கருத்தாய் ஜெபித்து வந்தார். அதன் பலனாக, ஒருநாள் அவன் வேலை ஸ்தலத்தில், ஒரு பெரிய ஆபத்திலிருந்து காக்கப்பட்டபொழுது, அவன் மனதில் இந்த எண்ணம் வந்தது. எவ்வளவு பயங்கரமான நிலைமையில் எனக்கு இவ்விதமான பாதுகாவல் கிடைத்திருக்குமானால், அது என் போதகரின் இடைவிடாத ஜெபமும், ஆண்டவருடைய பாதுகாக்கும் கரங்களும் தான் என்பதை உணர்ந்துகொண்டான். போதகரிடம் ஓடோடி சென்று, தன்னைக் காத்த ஆண்டவரை எப்படி சந்தோஷப்படுத்துவது? என்று கேட்டான். ஆண்டவர் செய்த நன்மைகளுக்காக போதகருடைய ஆலோசனைப்படி அனுதினமும் வாயைத் திறந்து ஸ்தோத்திரித்து நன்றி சொல்ல ஆரம்பித்தான். கர்த்தர் அதை கேட்டார். அவன் மூலமாய் தான் பெற்ற மகிமையை, சுகந்த வாசனையாக முகர்ந்து, அன்றுமுதல் அவன் அவருக்கு பிரியமானவனாக மாறும்படி, நல்ல குணங்களையும், பரிசுத்த வாழ்வையும் அருளிச்செய்தார்.

ஆம், பிரியமானவர்களே! உங்கள் வாழ்க்கையிலும் தாறுமாறான காரியங்கள் இருக்குமானால், ஆண்டவரிடம் உங்களைத் தாழ்த்தி ஒப்படையுங்கள். மனதின் ஆழத்திலிருந்து அவரை நன்றாய் ஸ்தோத்திரியுங்கள். தேவ பிரசன்னம் உங்களோடிருக்கும். சகல ஆபத்துகள், குறைவுகள், துர்மனச்சாட்சி போன்ற வேண்டாத காரியங்களிலிருந்து விடுதலையாக்கி உங்களை தெய்வீக பாதையில் வழிநடத்தும் (ஏசாயா 45:2).

ஜெபம்: "அன்பு தெய்வமே, உம்மை அறியாமல், தேடாமல் கடினமாய் இருக்கிற என் உள்ளத்தையும் நீர் மாற்றும். உம்முடைய பரிசுத்த ஆவியால் என்னையும் நிரப்பும். என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து எப்பொழுதும் தாவீதைப்போல உம்மை ஸ்தோத்திரிக்கிற அனுபவத்தையும், அதன்மூலமாய் உம்முடைய பிரசன்னத்தையும் உணர இன்றுமுதல் எனக்கும் அருள்தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

எனக்கோ தேவனை அண்டிக்கொண்டிருப்பதே நலம்!

(சங்கீதம் 73:28).

உலகில் வாழ்கிற அநேக மக்களுக்கு, தேவனோடு இசைந்து அவரை அண்டிக்கொள்ளுகிறதின் மேன்மை விளங்குகிறதில்லை. அதைத்தான் "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்" (யோவான் 17:3) என்று ஆண்டவர் கூறுகிறார். ஒரு குடும்பம் வேதம் காண்பிக்கும் வழியிலே நடப்பார்களானால், அதுதான் தேவனை அண்டிக்கொள்ளுகிற வாழ்க்கை! கர்த்தர் அவர்கள்மீது அன்பாயிருப்பார். வேதத்தில் நாம் வாசிக்கிற பல பக்தர்களின் வாழ்வைப்போல, நம் வாழ்வையும் தம்மோடு இணைத்து ஆசீர்வதித்து வழிநடத்துவார். ஆனால், நாமோ மிகுந்த பரிதாபத்திற்குரியவர்களாக, மனிதர்மேல் முழு நம்பிக்கையையும் வைத்து முடிவில் ஏமாற்றம் அடைகிறோம். கர்த்தரை நம்புகிறவன் பாக்கியவான் (நீதி. 16:20) செழிப்பான் (நீதி. 28:25) என்ற வசனங்களின்படி, நீங்களும் ஆசீர்வாதம் பெற அவரையே அனுதினமும் அண்டிக்கொள்ளுங்கள்.

ஒரு குடும்பத்தினர் ஆண்டவரை அறியாமல், அவர் வழிகளில் நடக்காமல், தங்கள் சொந்த வழிகளைப் பின்பற்றி நடந்து வந்தார்கள். ஆலயம் போவார்கள், ஆனால் ஆண்டவரை ஆராதிப்பதற்கு பதிலாக தங்கள் நண்பர்களைப் பார்க்கவும், ஏதோ ஒரு சடங்காச்சாரமாக ஆலயத்திற்கு போவதுமாக, வாழ்க்கையை வீணாக்கிக் கொண்டிருந்தார்கள். ஆனால், அந்த குடும்பத்தில் ஒரே ஒரு வாலிபன் மட்டும் எப்படியோ ஆண்டவருடைய அன்பை ருசிக்கும் கிருபையை ஆண்டவரிடத்திலிருந்து பெற்றான். வேதத்தை கருத்தாய் வாசிக்க ஆரம்பித்தான். கர்த்தரோடு ஜெபத்தில் பேச ஆரம்பித்தான். அவன் உள்ளத்திலே நிறைவான சந்தோஷம், சமாதானம் இருப்பதைக் கண்டு யாவரும் ஆச்சரியமடைந்தார்கள்! அவன் மூலம் ஒவ்வொருவராக இந்த சந்தோஷத்தைக் குறித்து அவனிடம் வினவியபொழுது, அவன் மிகுந்த பொறுமையோடும், அன்போடும் ஒவ்வொருவருக்கும் வேண்டிய ஆலோசனையை தன் அனுபவத்தோடு விளக்கிக் கூறினான். அதோடுகூட அவர்களுக்காக கருத்தாய் ஜெபித்தும் வந்தான். கர்த்தர் அவன் ஜெபத்தைக் கேட்டு, குடும்பம் முழுவதும் கர்த்தரை அண்டிக்கொண்டு நற்சாட்சிகளாக விளங்க அருள் புரிந்தார்.

வாலிபர்களே, பெரியவர்களே, குடும்பத்தின் மக்களே, உங்கள் வாழ்க்கையையும் கர்த்தர் இன்றைக்கு தம்முடைய தெய்வீக சந்தோஷம், சமாதானத்தினால் நிரப்பி, நற்சாட்சியாக மாற்ற ஆவலோடு இருக்கிறார். பெயரளவில் மட்டும் ஆண்டவரை தேடாமல், கருத்தாய் பயபக்தியுடன் தேடி நீங்களும் இந்த தெய்வீக அனுபவங்களை பெறும்படி, ஆண்டவரை அண்டிக்கொள்ளுங்கள் (கொலோ. 1:10).

ஜெபம்: "அன்பு தெய்வமே! இவ்விதமான தெய்வீக ஆசீர்வாதங்களை எனக்கும் என் குடும்பத்தாருக்கும் இன்றுமுதல் நீர் நிறைவாய் தந்தருளவேண்டுமென்று என் வாழ்வை உம்முடைய கரத்தில் அர்ப்பணிக்கிறேன். எல்லாவிதமான போராட்டங்களுக்கும், சோதனைகளுக்கும் என்னை விலக்கி, உம் தெய்வீகப் பிரசன்னத்தால் நிரப்பி, நற்சாட்சி நிறைந்த வாழ்வை எனக்கும் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

பரிசுத்த ஆவியின் பலத்தினாலே நம்பிக்கை பெருகும்!

"பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்..."

(ரோமர் 15:13).

வேதபுத்தகத்திலே பழைய ஏற்பாட்டில், "உன்னதத்திலிருந்து வரும் பெலன்" என்று ஏசாயா 32:15–ல் வாசிக்கிறோம். அதே அனுபவத்தை யோவான் 14:16–ல், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம் சீஷர்களிடத்திலே கூறுகிறார். இந்த உன்னதத்தின் பெலன் என்பது சத்திய ஆவியும் தேற்றரவாளனுமாகிய பரிசுத்த ஆவியினால் நிறைந்த வாழ்வாகும். "கடைசி நாட்களில் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்" (யோவேல் 2:28) என்று வாக்கருளியபடியே, தேவன் இன்றைக்கு அவரை நோக்கி வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நிச்சயமான முறையிலே இந்த தெய்வீக அனுபவத்தை கொடுக்கிறார் (லூக்கா 11:13). நாம் கர்த்தருடைய வருகை சமீபமாயிருக்கும் கடைசி நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கர்த்தர் இன்று தம் மக்கள் மீது தமது பரிசுத்த ஆவியானவரை அளவில்லாமல் பொழிந்து வருகிறார். சீஷர்கள் அதை பெற்ற பின்பு தைரியம், திடமனம், வல்லமை மற்றும் தேவ அன்பினால் நிரம்பி தேவ ஊழியத்தை வைராக்கியமாய் செய்ததுபோல், நீங்களும் அவர்கள் வழிகளை பின்பற்றி பலங்கொண்டு வாழுங்கள்.

ஏறக்குறைய ஏழு ஆண்டுகள் கொஞ்சமும் தளராமல் மிகுந்த வாஞ்சையோடும், தாகத்தோடும் இந்த தெய்வீக அனுபவம் தனக்கு வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்த என் கணவர் சகோதரர் தினகரன், 1962–ம் ஆண்டு அக்டோபர் 10–ம் நாள் அன்று, மூன்று மணி நேரம் ஆண்டவர் இயேசுவை தரிசித்தவராக, அந்த தெய்வீக அனுபவத்தைப் பெற்றுக்கொண்டார். இதைக் குறித்து நான் கேள்விப்பட்டபொழுது, என் உள்ளத்திலும் கர்த்தர் ஒரு தாகத்தையும், வாஞ்சையையும் கொடுத்தார் (பிலி. 2:13). அன்று முதல் இரவும் பகலும் வேதத்தை கருத்தாய் வாசிக்கவும், கர்த்தரை நோக்கி, "எனக்கும் இந்த தெய்வீக அனுபவம் வேண்டும்" என்று வேண்டுதல் செய்யவும் ஆரம்பித்தேன். என்ன ஆச்சரியம்! என் அருகில் இருக்கிறவர்களுக்கும் கேட்காத நிலமையிலே, அதுவரை அமைதியாக ஜெபித்துவந்த என் வாழ்வு, அந்த தெய்வீக அனுபவமாகிய பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெற்று தேவ வல்லமையினால் நிறைந்தபோது தலைகீழாய் மாறியது. படிப்படியாக இன்று வரை தேவன் தம் சித்தம்போல் என்னை அவருடைய ஊழியத்திலே வல்லமையினாலும் வரங்களினாலும் நிரப்பி உபயோகித்து வருகிறார். இந்த தெய்வீக அனுபவத்தை உங்களுக்கும் தருவார்.

அன்பானவர்களே! இதை வாசிக்கிற நீங்கள் "எனக்கும், என் குடும்பத்திற்கும் பரிசுத்த ஆவியின் பெலனும், தெய்வீக நம்பிக்கையும் தாரும் ஆண்டவரே" என்று தாகத்தோடு வேண்டிக்கொள்ளுங்கள். கர்த்தர் நிச்சயமாக இந்த மேலான, இன்பமான வாழ்வை உங்களுக்கும் கொடுப்பார். குறைவுகள் அனைத்தும் உங்களைவிட்டு நீங்கும்படி அருள்புரிவார் (லூக்கா 11:13, ஏசாயா 44:3).

ஜெபம்: "அன்பு தெய்வமே! இந்தவிதமான தெய்வீக வாழ்வு எனக்கும் வேண்டும். இன்றுமுதல் நானும் உம்மிடத்தில் கருத்தாய் வேண்டுதல் செய்து பரிசுத்த ஆவியின் பெலத்தினாலும், உம்மேல் வைக்கிற நம்பிக்கையினாலும் நிரம்பி யிருக்கவும், உமக்கென்று கனி கொடுக்கிற வாழ்வை வாழவும் கிருபை தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

ஒருவருக்கு ஒருவர் ஒத்தாசை செய்து திடன்கொள்ளுங்கள்!

"ஒருவருக்கு ஒருவர் ஒத்தாசை செய்து திடன்கொள் என்று சகோதரனுக்கு சகோதரன் சொல்லுகிறான்" (ஏசாயா 41:6).

மேற்கண்ட வசனத்தின்படி, கர்த்தர், ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து வாழும் வாழ்வை விரும்புகிறார். இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்தபோது, அவ்விதமாய் வாழ்ந்து நமக்கு முன்மாதிரியாய் விளங்கினார். அவருடைய சீஷர்களும் பரிசுத்த ஆவியினால் நிறைந்தபோது, அவரைப்போலவே வாழ்ந்து காண்பித்தார்கள். இந்த உலகத்திலே மக்கள் கண்ணீரில் வாழ்கிறார்கள். "யார் என் கண்ணீரைப் போக்குவார்? யாரிடத்தில் என் உள்ளத்தை நான் திறந்து ஊற்ற முடியும்?" என்று கவலைப் படுகிறார்கள். இப்படிப்பட்ட மக்களுக்காக நீங்கள் என்ன செய்கிறீர்கள்? கர்த்தருடைய சித்தத்தை இந்தவிதமாக நிறைவேற்ற உங்களை முற்றிலும் ஒப்புக்கொடுப்பீர்களா? யோபு கர்த்தருடைய கட்டளையின்படியே, தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபொழுது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார் (யோபு 42:10). அதுபோல் நீங்களும் மற்றவர்கள் பாரத்தை, கண்ணீரை கர்த்தர் துடைக்க, மாற்றியமைக்க அவர்களுக்காக மன்றாடுங்கள் (யாக். 5:16).

ஒரு ஊரிலே ஒரு தம்பதியர், எந்த குடும்பத்தில் பிரச்சினை வந்தாலும் அல்லது நல்ல காரியம் நடந்தாலும் உதவி செய்வதற்கு முன்னால் நிற்பார்கள். அழுகிறவர்களுடனே அழுவார்கள், சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுவார்கள். அவர்கள் என்னுடைய ஜாதியா? குலமா? கோத்திரமா? என்றெல்லாம் பார்க்கமாட்டார்கள். ஏனென்றால், அவர்கள் பார்வையிலே, கர்த்தருடைய வழியிலே நடக்கவேண்டும். மற்றவர்களையும் நடத்தவேண்டும் என்பது மட்டும்தான் இருந்தது. இதனால், அந்த ஊரார் அனைவரும் அவர்கள்மீது மிகுந்த பாசம் கொண்டார்கள். அந்த குடும்பத் தலைவர் திடீரென்று சரீர பெலவீனத்தின் நிமித்தம் மரித்துப்போனார். அந்த மனைவியோ, "என் கணவன் இறந்துவிட்டாரே, இனி யார் எனக்கு உதவிசெய்வார்?" என்று கவலைப்படவில்லை. ஆண்டவருடைய மகளாக தன் கணவன் இருந்தபோது செய்ததுபோல, கர்த்தருடைய பணியை, அதாவது கண்ணீரில் வாழ்கிறவர்களுக்கு ஆறுதல் தரும் பணியை, தொடர்ந்து செய்துவந்தார். தன் ஜீவனுள்ள வரையில் அதனால் உண்டாகிற சந்தோஷத்தினால் நிறைந்து, அநேகருக்கு ஆசீர்வாதமாக விளங்கினார்கள். அதினிமித்தம் கர்த்தர் அவர்களுக்கு துணையாக நின்று வழிநடத்தியதோடு, அந்த ஊராரும் ஆளுக்கொரு விதத்தில் அவர்களுக்கு உதவிசெய்யும்படியும், தனிமையை உணராதிருக்கும்படியும் அருள்புரிந்தார்.

அன்பானவர்களே! இன்று இப்படிப்பட்ட சந்தோஷம் உங்களுக்கு உண்டா? கர்த்தர் விரும்புகிறதுபோல, மற்றவர்கள் பாரத்தை உங்கள் பாரமாக சுமந்து, அவர்கள் கண்ணீரை துடைக்கும் ஊழியத்தை செய்ய உங்களுக்கும் மனதுண்டா? கர்த்தர் உங்கள் மேல் பிரியமாயிருப்பார். உங்கள் வாழ்வின் குறைகளை அறிக்கையிட்டு அவர் சித்தத்தை நிறைவேற்றுங்கள் (கலா. 6:2).

ஜெபம்: "அன்பு தெய்வமே! எனக்கும் இந்த தெய்வீக சிந்தையை தந்து, உம்மைப்போல் மற்றவர்களுக்கு ஒத்தாசை செய்து, திடன்கொள்ள அருள்செய்யும். தெய்வீக வாழ்வை நீர் தரவேண்டுமென்று உம்முடைய பாதத்திலே விழுந்து மன்றாடுகிறேன். இன்றுமுதல் என் கரங்களை பிடித்து, நீர் விரும்பும் இந்த நல்ல வாழ்வை பின்பற்ற எனக்கும் அருள்தாரும். ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

நித்திய இரட்சிப்பினால் இரட்சிக்கிற தேவன்!

"இஸ்ரவேலோ, கர்த்தராலே நித்திய இரட்சிப்பினால் இரட்சிக்கப்படுவான்"

(ஏசாயா 45:17).

ஆண்டவர் நம் இருதயத்தை பாவமறக்கழுவி பரிசுத்தமடைய செய்வது ஒரு சில நாட்களுக்காக மாத்திரம் அல்ல! அவர் தரும் இரட்சிப்பு நித்திய நித்தியமானது. நாம் இந்த உலகத்தில் கடைசி மூச்சு விடும் வரை அவர் நம் வாழ்வை பொறுப்பெடுத்துக் கொள்வார். இவ்விதமாக நிரந்தரமாக தெய்வீக இரட்சிப்பினால் நிரம்பி வாழ, நாம் அனுதினமும் அவர் பாதத்தை இறுக பற்றிக்கொள்வோம். அவருடைய வேத வசனங்களை வாசிப்பதும், அதன்படி நடப்பதும் மிக மிக அவசியமாயிருக்கிறது. நீங்கள் பெற்ற இரட்சிப்பிலே நிலைத்திருக்கிறீர்களா? அல்லது யாரையாவது சந்தோஷப்படுத்த கர்த்தரைவிட்டு விலகி இருக்கிறீர்களா? இன்றே இந்த நித்தியமான இன்ப வாழ்வைப் பெற ஆண்டவரை நோக்கிப் பார்த்து, அவர் வழியிலே திரும்புங்கள் (எபி. 2:4).

ஒரு வாலிபப் பெண் கர்த்தரை அதிகமாக நேசித்தாள். அவருக்கென்று தெய்வீக வழியில் பரிசுத்தமாக வாழ்ந்தாள். யாவரும் அவளுடைய வாழ்வைக்கண்டு ஆச்சரியமடைந்தனர். எத்தனையோ வாலிபர்களை ஆண்டவருடைய பிள்ளைகளாக மாற்றவும் அரும்பாடுபட்டு உழைத்து வந்தாள். அவளுக்கு திருமணம் நடந்தது. அவளுடைய கணவன்மேல் அவளுக்கு மிகவும் பிரியம். அவனோ, "முழுமனதோடு தெய்வீக வழியில் நடக்கவேண்டும் என்பது அவசியமில்லை. ஆண்டவரைத் தேடவேண்டும்; அதே நேரம் அவர் நமக்கு கொடுத்திருக்கிற உலக இன்பங்களையும் அனுபவிக்கவேண்டும்" என்று மெல்ல அவள் மனதை திருப்ப ஆரம்பித்தான். அவளும் அவனை சந்தோஷப்படுத்துவதற்காக சினிமா போன்ற கேளிக்கை ஸ்தலங்களுக்கு சென்று கொஞ்சம் கொஞ்சமாக ஆண்டவரை விட்டு விலகினாள். திடீரென்று ஒரு நாள் ஆண்டவர் அவளோடு பேசினார். "மகளே, நீ ஆரம்பத்தில் என் மீது கொண்டிருந்த உன்னுடைய அன்பு எங்கே?" என்றார். அந்த இரவு அவளுக்கு தூக்கமே வரவில்லை. அதிகாலையில் எழுந்தாள். பழையபடி ஆண்டவரை பயபக்தியோடு தேட முற்பட்டாள். எந்த கணவனுக்காக அவன் வழியிலே சென்று அவனை சந்தோஷப்படுத்த முற்பட்டாளோ, அதே கணவனிடம் தன் விசுவாசத்தின் உறுதியைப் பற்றி அன்புடன் கூறி, "என்னை மன்னித்துக்கொள்ளுங்கள் ஆண்டவரை விட்டு என்னால் இனியும் விலகி வாழவே முடியாது. ஆனால், அதே சமயப் உங்கள் மீதும் அன்பு கொண்டவளாய் நான் செய்ய வேண்டியதையெல்லாம் கருத்தாய் செய்வேன்" என்று கூறி, ஆண்டவர் பக்கமாக தனது வாழ்வை திருப்பினாள்.

ஆம், பிரியமானவர்களே! இன்றைக்கு எத்தனையோ பெண்கள் யாரையோ சந்தோஷப்படுத்துவதற்காக தங்கள் பக்தி மார்க்கத்தைவிட்டு எளிதில் விலகிட போகிறார்கள். இதினிமித்தமாக நித்திய இரட்சிப்பை பெறாமல், பக்தி வழியிலே குறைவ படுகிறார்கள். இந்த நிலைமையில் நீங்களும் இருக்கிறீர்களா? என்று யோசித்துப் பார்த்து, ஆண்டவரண்டை நித்திய இரட்சிப்பை பெற மனம்திரும்புங்கள் (சங். 116:12,13)

<u>ஜெபம்</u>: "அன்பு தெய்வமே! நீர் எனக்கு நித்திய இரட்சகராக எப்பொழுதும் என்னோடு கூடவே இருந்து, உமக்கு பிரியமான வழியிலே நடக்க என்னைத் தரைமட்டுப் தாழ்த்தி உம்மிடத்தில் ஒப்படைக்கிறேன். <u>இன்றுமுதல்</u> மனுஷரை பிரியப்படுத்தாமல், நீதியின் தேவனாகிய உம்மையே பிரியப்படுத்தும் தெய்வீ வாழ்வை எனக்கு தந்து, ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

ஆலயத்தின் நடுவில் ஆண்டவரின் கிருபை!

"தேவனே, உமது ஆலயத்தின் நடுவிலே, உமது கிருபையை சிந்தித்துக் கொண்டிருக்கிறோம்" (சங்கீதம் 48:9).

கர்த்தருடைய ஆலயத்திற்கு போவது எத்தனை மகிழ்ச்சி என்று தாவீது கூறுகிறான். (சங். 122:1). இந்த அனுபவம் எத்தனை பேருக்கு இன்று உண்டு? தொலைக்காட்சியில் கிறிஸ்தவ நிகழ்ச்சியைப் பார்த்து அதோடு நின்றுவிடலாம், ஆலயம் போவது அவசியமில்லை என்று சிலர் எண்ணுகிறார்கள். வேறு சிலர் ஒழுங்காக ஒவ்வொரு ஞாயிறும் ஆலயம் சென்றாலும், ஆண்டவரை தரிசிப்பதற்காக அங்கு செல்வதில்லை. வழக்கமான முறையிலே சடங்காச்சாரமாக சென்று வருகிறார்கள். ஆனால், உண்மையாய் ஆண்டவரை தேடும்போது, என்னென்ன ஆசீர்வாதங்கள் கிடைக்கின்றன? கர்த்தர் தம்முடைய ஆலயத்திலே இருக்கிறார் (சங். 11:4; ஆபகூக் 2:20). தம்மை நோக்கிப் பார்க்க வருகிற ஒவ்வொருவருடைய உள்ளங்களையும் அவர் அறிந்திருக்கிறார். நாம் துதிப் பாடல்களை பாடும்போது, அதை கவனமாகக் கேட்டு மகிழுகிறார். நம் துன்பங்களை அவருடைய பாதத்திலே ஊற்றும்போது, அதற்கு பதில் தருகிறார். அதோடுகூட அவருடைய பிரசன்னத்தால் நம்மை நிரப்புகிறார் (உபா. 4:7). இதனால், தேவ கிருபை மேற்கண்ட வசனத்தின்படி நமக்குள் இறங்குகிறது (சங். 48:9).

ஒரு குடும்பத்தினர் ஒவ்வொரு வாரமும் சரியாக ஆலய ஆராதனை ஆரம்பிக்கும் முன்னதாகவே சென்று முழுமனதோடு அவரை ஆராதிப்பார்கள். ஜெப வேளையில் தங்கள் பிரச்சினைகளுக்காக மட்டுமின்றி, தாங்கள் அறிந்த மற்றவர்களுடைய கண்ணீரையும் ஆண்டவருடைய பாதத்திலே ஒப்படைத்து கருத்தாய் வேண்டுதல் செய்வார்கள். ஆண்டவருக்கு இது மிகவும் பிரியமாயிருந்தது. ஒரு சமயம் அந்த குடும்பத்தின் தலைவனுக்கு வரவேண்டிய உத்தியோக உயர்வு வராமல் தடைபட்டிருந்தது. அதற்காக அந்த ஆலய ஆராதனையில் தங்கள் இருதயத்தை ஆண்டவரிடம் சமர்ப்பித்தனர். அவரோடு பணிபுரிந்த எல்லோரும், "இந்த உயர்வு உங்களுக்கு கிடைக்கவே கிடைக்காது" என்று சொல்லி அவரை சோர்ந்துபோக வைத்தனர். ஆனால், அவரோ, ஆண்டவருடைய பாதபடி நமக்கு போதுமானது, அவருடைய கிருபை இந்த தடைகளை அகற்றும் என்று விசுவாசத்தோடு காத்திருந்தார். அவர் விசுவாசித்தபடியே தேவ கிருபை அந்த தடைகளையெல்லாம் அகற்றி, ஆண்டவருடைய ஆசீர்வாதம் அவர் வாழ்விலே விரும்பினதற்கு அதிகமாக கிடைக்கும்படி செய்தது.

என் அன்பு சகோதர, சகோதரிகளே! நீங்களும் இந்த தம்பதியரைப்போல, ஆலயம் சென்று ஆராதனையிலே அல்லது ஆண்டவர் சமுகத்திலே கூடி வரும்போது, தேவ கிருபையை நாடி அவர் சமுகத்தில் உங்கள் உள்ளத்தை ஊற்றுங்கள். நிறைவான ஆசீர்வாதம் பெறுவீர்கள் (சங். 65:4).

<u>ஜெபம்</u>: "அன்பு தெய்வமே! நீர் உயிரோடு இருக்கிறவராக இருக்கிறபடியால் இத்தகைய மேலான நன்மைகளை, ஆசீர்வாதங்களை ஆலயத்தின் நடுவில் எனக்கும் அருளிச்செய்யும். <u>இன்றுமுதல்</u> நானும் உம்மை கருத்தாய் தேட, உம் தெய்வீகக் கிருபையை எனக்கும் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

தேவபயம் உள்ளவர்களை விடுவிக்கும் தேவன்!

"கர்த்தருடைய தூதன் அவருக்கு பயந்தவர்களை சூழப்பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்"
(சங்கீதம் 34:7).

இந்த உலகில் பயப்படும்படியாக எத்தனையோ சூழ்நிலைகளை நாம் சந்திக்கிறோம். இது எப்படியாகுமோ? என்ற கேள்வி அந்த சமயங்களிலே நம் மனதை கலங்கடிக்கிறது. தாவீது தன் சொந்த குமாரன் அப்சலோமினால் துரத்தப்பட்டான். எல்லாவற்றையும் இழந்துபோன நிலைமையிலே, தாவீது தன்னைக் காப்பாற்ற வல்லவராகிய தேவாதி தேவனையே அச்சமயம் உறுதியாய் பற்றிக்கொண்டிருந்தபடியினால், தேவன் ஆச்சரியமான விதத்திலே திரும்பவுமாய் அவன் தான் இழந்த ராஜ்யத்தைப் பெற்று மகிழ்ச்சியாய் வாழ, தேவன் அருள்புரிந்தார். இன்றும் அதைப்போலவே உங்கள் நம்பிக்கையும் தேவன்மேல் இருக்கிறதா? அப்பொழுது உங்கள் பயமும் ஏமாற்றங்களும் உங்கள் வாழ்வைவிட்டு அகலும். யாவர் முன்னிலையிலும் கர்த்தர் உங்களை கனப்படுத்தி உயர்த்துவார் (எரே. 17:7).

1985–ஆம் ஆண்டு என் கணவர் சகோதரர் தினகரன் அவர்களுக்கு சிறுநீரக மாற்று அறுவைசிகிச்சை முடிந்து சில நாட்களுக்குப் பிறகு, அவர் படுக்கையிலிருந்தபோது, ஒருநாள் இரவு அவருக்கு தூக்கம் வரவில்லை. பிசாசு அருகில் தோன்றினான். "தினகரன், நீ நம்பிக்கொண்டிருக்கிற ஆண்டவர் உன்னை கைவிட்டுவிடுவார். நீ மரித்துப்போவாய்" என்று பயமுறுத்தினான். என் கணவரோ, ஆண்டவரையே நோக்கிப் பார்த்து வேண்டுதல் செய்தார். மறுபுறம் ஆண்டவர் பரலோகத்தில் இருந்து மிகாவேல் தேவதூதனை அனுப்பி, "தினகரன், நீ கர்த்தர் மேல் நம்பிக்கையாயிரு; பயப்படாதிரு! நீ மரிப்பதில்லை!" என்று சொல்லிக்கொண்டேயிருந்தார். அந்த நேரத்தில் தேவ பிரசன்னம் அந்த இடத்தை அளவில்லாமல் நிரப்பியது. பிசாசு பயந்து ஓடிப்போனான். மறுநாள் காலை 7 மணிக்கு தலைமை மருத்துவர் வந்தார். எல்லா மருத்துவ அறிக்கைகளையும் (Medical Reports) பார்த்து, மிகவும் ஆச்சரியமடைந்தார். "பிரதர் தினகரன், நீங்கள் வீட்டுக்குப் போகலாம். தினசரி என்னை வந்து பார்த்துவிட்டு போனால் போதும். மருத்துவமனையில் இருக்கவேண்டாம்" என்று சொன்னபொழுது, தான் கொண்டிருந்த பயம் எல்லாம் நீங்கி, மகிழ்ச்சியினால் நிறைந்தார். ஆம்! தேவனே தம் தாசனை விடுவித்துக் காப்பாற்றினார்.

ஆம், பிரியமானவர்களே! பிசாசும், மக்களும் இப்படித்தான் நம்மை பயப்படுத்தி பலவிதங்களிலும் கலங்கடிப்பார்கள். ஆனால், நம்முடைய கண்கள் அப்படிப்பட்ட சமயத்திலும் தேவன்மேலே உறுதியாய் இருக்கும்போது அவர் ஆச்சரியமான காரியங்களை செய்து நம்மை விடுவித்துக் காப்பார். ஏனென்றால், அவர் நம்மோடிருக்கிறார். மனுஷர் கைவிட்டாலும் அவர் நம்மைக் கைவிடவேமாட்டார். இந்த உண்மையை நினைத்து உங்களைத் தேற்றிக்கொள்ளுங்கள், பயப்படாதிருங்கள். நம் ஆண்டவர் ஜீவனுள்ளவர்! (சங். 94:17–19).

ஜெபம்: **"அன்பு தெய்வமே! இந்த உலகத்தில் எந்த மனுஷர் கைவிட்டாலும் நீர் எனக்கு போதுமானவர். உமது தெய்வீகப் பிரசன்னம் என்னோடிருந்து என்னைக் கைவிடாமல் காக்கும் என்று இன்று நிச்சயமாக நம்புகிறேன். இனி என் வாழ்வில் பயமில்லை. என்னை ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"**

கர்த்தருக்கு காத்திருங்கள்! உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்!

"கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களே, நீங்களெல்லாரும் திடமனதாயிருங்கள், அவர் உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்" (சங்கீதம் 31:24; 27:14)

தாவீது, வாலிபனாக இருந்த நாட்களில் பராக்கிரமசாலியாகிய கோலியாத்தை எதிர்த்துநின்று போரிட ஆயத்தமானபோது, என் ஜீவனுள்ள தேவனுடைய நாமத்தை தூஷணமாய் பேசுகிற இந்த மனுஷனை கர்த்தரே பொறுப்பெடுத்துக்கொள்வார் என்று முழு நம்பிக்கையோடு, கர்த்தருக்குள் ஸ்திரப்பட்டவனாக, வெறும் கூழாங்கற்களாலும் கவணினாலும், மிகுந்த வல்லமை நிறைந்தவனும், தன்னை ஈட்டியாலும், பட்டயத்தாலும், கேடகத்தினாலும் மறைத்துக்கொண்டிருந்தவனுமான அந்த மனுஷனை கர்த்தருடைய நாமத்தினாலே (நீதி. 18:10) தரையிலே முகங்குப்புற விழப்பண்ணினான். அவனுடைய பட்டயத்தைக் கொண்டே அவன் தலையை வெட்டிப்போட்டான் (1 சாமு. 17:45–51). கர்த்தரை நம்புகிற ஒவ்வொருவரும்கூட தேவ ஒத்தாசையைப் பெற்று இதேபோன்று கர்த்தருக்குள் ஸ்திரப்பட்டவர்களாக வெற்றி சிறந்து வாழமுடியும் (1 பேதுரு 5:10).

ஒரு அலுவலகத்திலே பணிபுரிந்த அநேக உத்தியோகஸ்தர்கள் தெய்வபயம் இல்லாதவர்களாக சண்டைபோடுவதிலும், குழப்பம் விளைவிப்பதிலும் சிறந்திருந்தார்கள். அந்த அலுவலக உயர் அதிகாரியோ கர்த்தருக்கு தன்னை ஒப்புக்கொடுத்த தேவ மனிதனாக இருந்தார். அவரை அந்த கிளை அலுவலகத்திற்கு மாற்றுதல் செய்தபோது, இதையெல்லாம் கேள்விப்பட்டு செய்வதறியாது, கர்த்தரை மட்டும் உறுதியாய் பற்றிக்கொண்டார். தினமும் அலுவலகம் செல்லும் முன்பதாக முழங்காற்படியிட்டு ஜெபிப்பார். வேலை செய்யாமல் தொல்லை கொடுக்கும் ஒவ்வொரு மனிதனைக் குறித்தும் ஆண்டவரிடம் சொல்லுவார். "ஆண்டவரே, எனக்கு உதவிசெய்யும்" என்று ஒப்படைத்து விட்டு அலுவலகம் போவார். திடீரென்று அந்த அலுவலகத்தில் பணிபுரிபவர்களின் அருகில் நேரடியாக சென்று, அவர்கள் செய்யும் வேலையிலே உதவிபுரிவார். அன்பு வார்த்தைகளைப் பேசுவார். அவர்கள் வீட்டில் எந்த நிகழ்ச்சி என்றாலும் தவறாமல் கலந்துகொள்வார். இவருடைய செய்கைகள் இந்த பொல்லாத அலுவலக பணியாளர்களுக்கு ஆச்சரியத்தை கொடுத்தது. இதுவரை எந்த அதிகாரியும் இப்படி இருந்ததில்லையே என்று அவர் சொல்லுக்குக் கீழ்ப்படிய ஆரம்பித்தனர். சில மாதங்களுக்கு பிறகு ஒவ்வொருவரும் உயர் அதிகாரிக்கு அடங்கி, அவருடைய வார்த்தைக்கு கட்டுப்பட்டு, அவர் சொல்லுகிற வேலையை சரியாக செய்து முடித்தனர். எப்பொழுதும் கூச்சலும் குழப்பமுமாக இருக்கும் அந்த அலுவலகம், இப்பொழுது அமைதியின் சிகரமாக மாறியது.

அன்பானவர்களே! உங்கள் வாழ்க்கையிலும் இப்படிப்பட்ட பிரச்சினைகள் வரும்போது, இந்த அதிகாரி செய்ததுபோல கர்த்தருடைய சமுகத்தில் காத்திருந்து பிரச்சினைகளை அவரிடம் ஒப்படையுங்கள். அவர் உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார். உங்களுக்கு முன்னின்று சகலத்தையும் சம்பூரணமாக நடத்துவார் (சங். 55:22).

ஜெபம்: "அன்பின் தெய்வமே! இன்றுமுதல் நானும் உம்முடைய சமுகத்திலே காத்திருப்பதிலும், நீர் தரும் திடமனதை பெற்றுக்கொள்வதிலும் ஜாக்கிரதையாய் இருக்க எனக்கும் அருள்தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

தம் கிருபையை அதிசயமாய் விளங்கப்பண்ணுகிற தேவன்!

"கர்த்தர் அரணான நகரத்தில் எனக்கு தமது கிருபையை அதிசயமாய் விளங்கப்பண்ணினபடியால், அவருக்கு ஸ்தோத்திரம்" (சங்கீதம் 31:21)

உலக வாழ்க்கையில் தேவனுடைய கிருபை மிக மிக அவசியமாக இருக்கிறது. ரோமர் 5:20–ன்படி பாவம் நிறைந்த வாழ்க்கையில் தேவன் தம்முடைய அளவில்லாத கிருபையை அனுப்பி, வாழ்வையே மறுமலர்ச்சியடைய செய்கிறார். "பாவிகளில் பிரதான பாவி நான்" (1 தீமோ. 1:15) என்று அறிக்கையிட்ட சவுல் என்ற மனிதனின் வாழ்க்கையை தம்முடைய கல்வாரி அன்பினால், அதன்மூலம் உண்டான கிருபையினால் தலைகீழாக மாற்றினார். அவன் அதே தேவனுக்கு ஊழியம் செய்கிறவனாக, பாடுபடுகிறவனாக மாறும்படி எல்லாவற்றையும் தம்முடைய கிருபையினால் மாற்றியமைத்தார். நாம் கிருபையினாலே நீதிமான்களாக்கப்படுகிறோம், நித்திய ஜீவனை பெற்றுக்கொள்வோம் என்ற நம்பிக்கையும் பெற்றுக்கொள்கிறோம் (ரோமர் 3:24, தீத்து 3:6). இத்தகைய தேவ கிருபை, நம்மை நிர்மூலமாகாமல் பாதுகாக்கவும் வல்லமையுள்ளதாய் இருக்கிறது (புல. 3:22). அதோடுகூட நாம் பெலவீனமடையும்போது, தேவ கிருபை பூரண பெலன் தருகிறது (2 கொரி. 12:9).

ஒரு பெண் திருமணமாகி பல முறை கர்ப்பம் தரித்தும் முடிவில் குறைப்பிரசவமாகி விடும். அப்பொழுது ஒரு தேவ மனிதன் அவர்கள் இருந்த ஊருக்கு மாற்றலாகி வந்தார். அவரிடம் இந்த பெண் தன் கண்ணீர் சரிதையை கூறினாள். அவர் அவளுக்காக உபவாசித்து ஜெபித்து, செய்ய வேண்டியது இன்னது என்று கற்பித்துக் கொடுத்தார். "நீங்கள் ஆண்டவரைத் தேடுகிறீர்கள், உண்மைதான். ஆனால், அவருடைய கிருபை உங்கள் வாழ்வை நிரப்பும்படி, கர்ப்பம் தரித்தவுடனே, அவருடைய சமுகத்தில் இரண்டுபேரும் ஒருமனப்பட்டு அதிகமாய் பிரார்த்தனை செய்யுங்கள். உபவாச ஜெபத்தோடும் அவருடைய சமுகத்தில் காத்திருங்கள். "கர்த்தரை நம்பியிருக்கிறவனையோ கிருபை சூழ்ந்துகொள்ளும்" (சங். 32:10) என்ற வசனத்தின்படி, கர்த்தர் உங்களுக்கு நிச்சயம் உதவி செய்வார்" என்று ஆலோசனையும் கூறினார். அதுவரை தங்கள் வாழ்வில் இவ்விதமாக தேவ கிருபையை நாடித்தேடாமல் இருந்த இந்த தம்பதியர், விசேஷமாக அந்த மனைவி அவருடைய ஆலோசனையைக் கேட்டு, அதன்படியே நடந்தாள். என்ன ஆச்சரியம்! இந்த முறை கர்ப்பம் தரித்தபோது, ஆண்டவருடைய கரம், தேவ கிருபை, குழந்தையின்மேல் இருந்தது. சுகமான பிரசவத்தில் அருமையான குழந்தையை ஆண்டவருக்கு மகிமையாக அந்த பெண் பெற்றெடுத்து, கர்த்தரை ஸ்தோத்திரித்தாள்.

எனக்கு அன்பானவர்களே! ஆண்டவரால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை. நாம் தான் "இது எப்படி ஆகும்? இது இல்லையே! வைத்தியர் இப்படி சொல்லிவிட்டாரே!" என்றெல்லாம் நினைத்து சோர்ந்துபோகிறோம். நீங்களும் இதேவண்ணமாக தேவ கிருபைக்காக காத்திருங்கள். உங்கள் வாழ்வும் நிறைவாய் ஆசீர்வதிக்கப்படும் (எபி. 12:3).

ஜெபம்: "அன்பு இரட்சகரே! நீர் உம் தெய்வீகக் கிருபையை என் வாழ்விலும் பரிபூரணமாகத் தந்து, என் பாவக் கறைகள், வாழ்வின் குறைவுகள் அனைத்தையும் மாற்றி இன்றுமுதல் உம் தெய்வீக ஆசீர்வாதம் என்னையும் நிரப்பும்படி அருள்தாரும், ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

வேதத்தின் அதிசயங்களை பார்க்க என் கண்களை திறந்தருளும்!

“உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும்” (சங்கீதம் 119:18).

வேத வாக்கியங்களை நாம் ஒவ்வொருவரும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது, அதன்மூலம் நித்திய ஜீவனை நாம் பெற்றுக்கொள்ளலாம் என்று வாசிக்கிறோம் (யோவான் 5:39). அவ்விதமாக வேத வாக்கியங்களை இரவும் பகலும் தியானம் செய்து பயபக்தியோடு ஆண்டவருடைய வழிகளைப் பின்பற்றும்போது, நம் வாழ்வு செழிக்கும். பாக்கியமான நிலைமையை நாம் நிச்சயம் பெறுவோம் (சங். 1:2,3). அதோடுகூட ஒரு வாலிபன் தேவனுடைய வசனத்தை கருத்தாய் வாசிப்பதினால், அவன் வாழ்க்கையையும் ஆண்டவருடைய வார்த்தை சுத்தம்பண்ணும் என்றும் பார்க்கிறோம் (சங். 119:9). ஆண்டவரும் தம் சீஷர்களைப் பார்த்து, “நான் உங்களுக்கு சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்” (யோவான் 15:3) என்று கூறினார். எனவே, கருத்தாய் ஆண்டவருடைய வார்த்தையை, அதாவது வேதபுத்தகத்தை வாசிக்கிறவர்களுக்கு, இவ்விதமான தெய்வீக அனுபவங்களை ஆண்டவர் கொடுப்பது நிச்சயமான காரியம்.

ஒரு வாலிபப் பெண் தன் வாலிப நாட்களில் தன் தாயுடைய கட்டளையின் நிமித்தம் தினமும் வேதபுத்தகத்தை எடுத்துக்கொள்வாள். என்ன வாசிக்கிறோம் என்றே தெரியாமல் கடனே என்று வாசித்து மூடி வைத்துவிடுவாள். ஆனால், ஆண்டவருடைய அன்பைப் பாருங்கள். அவளை ஒருநாள் தேடிவந்து, தம் அன்பினால் நிறைத்தார். அதே வேதபுத்தகத்தை கரங்களில் எடுத்துக்கொண்டு பயபக்தியுடன் வாசிக்க ஆரம்பித்தாள். அவள் வாழ்க்கை தலைகீழாய் மாறியது. ஆண்டவரோடு இசைந்து வாழும் பாக்கியத்தைப் பெற்றாள். அவள் குடும்பத்தினரோ அவளைப் பார்த்து இதினிமித்தம் பரிகசித்தார்கள். “அதிகம் வேதம் வாசிக்காதே, நிறைய பாடுகள் தான் உனக்கு வரும்” என்றெல்லாம் கூறி அவளை அதைரியப்படுத்தினார்கள். ஆனால், அவளோ ஒருவருடைய வார்த்தைகளுக்கும் இடங்கொடாமல் கர்த்தருக்கு பயந்து தொடர்ந்து அவர் வழிகளில் நடக்கலானாள். நடந்தது என்ன தெரியுமா? கர்த்தர் அவளுக்கு ஒரு நல்ல உயர் பதவி வகித்த மனிதனை வாழ்க்கைத் துணையாகக் கொடுத்தார். சாதாரண பெண்ணாக இருந்த அவளுக்கு கார், பங்களா, வேலையாட்கள் இப்படி பல்வேறு ஆசீர்வாதங்கள் நிறைவாய் ஆண்டவரால் அருளப்பட்டன. அப்பொழுதுதான் அவளை கேலி செய்த மக்கள், அவள் ஆண்டவரை உண்மையாய் தேடி, அவருடைய வார்த்தையை கனப்படுத்தினதால் தான் இந்த ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டாள் என்பதை உணர்ந்துகொண்டார்கள்.

ஆம், பிரியமானவர்களே! யார் என்ன கூறினாலும், நீங்கள் பயப்படாமல், தேவனுடைய வசனங்களை கருத்தாய் வாசிப்பதில் ஆண்டவருடைய சமுகத்திலே ஜாக்கிரதையாயிருங்கள். மேற்கண்ட வசனத்தின்படி, “உம் அதிசயங்களை பார்க்க என் கண்களை திறந்தருளும்” என்று ஜெபத்துடன் வாசியுங்கள். பாக்கியம் பெறுவீர்கள் (சங். 105:2, 1 நாளா. 16:9).



<u>ஜெபம்:</u> “அன்பு தெய்வமே! உம்முடைய வேத வசனங்களை வாசிப்பதினால் எத்தனை ஆசீர்வாதம், தேவ ஞானம், தேவ சமாதானம், தேவனுடைய வெளிச்சம் இவைகளெல்லாம் வருகிறது என்று நான் அறிந்துகொண்டேன். இன்றுமுதல் என் வாழ்வையும் சிறக்கச்செய்யும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!”

அனுதினமும் உமக்கு நேராக என் கைகளை விரிக்கிறேன்!

"துக்கத்தினால் என் கண் தொய்ந்துபோயிற்று; கர்த்தாவே, அனுதினமும் நான் உம்மை நோக்கிக் கூப்பிட்டு, உமக்கு நேராக என் கைகளை விரிக்கிறேன்"

(சங்கீதம் 88:9).

இந்த உலகில் நாம் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் எப்பொழுதும் துக்கமின்றி, துன்பமின்றி வாழும் நிலைமை இருக்காது. இதைத்தான், "இந்த உலகத்தில் உபத்திரவம் உண்டு" என்று ஆண்டவரே சொல்லியிருக்கிறார் (யோவான் 16:33). ஆனால், அவர் நமக்காக இந்த உலகத்தை ஜெயித்திருக்கிறார், பிசாசை வென்றிருக்கிறார். ஆகவே, நமக்கு உதவி செய்ய போதுமானவராக இருக்கிறார். மோசே என்ற பக்தனும் துன்பப்பட்ட நாட்களுக்கு சரியாக எங்களை மகிழ்ச்சியாக்கும் என்று ஆண்டவரை நோக்கி பிரார்த்தனை செய்கிறான் (சங். 90:15). நாமுங்கூட, துன்பம் வந்தாலும், தீர்க்க முடியாத பிரச்சினை வருகிற வேளையிலும் நம்முடைய கரங்களை ஆண்டவருக்கு நேராக விரித்து, "தகப்பனே, இந்த நேரத்திலே உம்மையன்றி எனக்கு உதவி செய்வார் இந்த உலகில் யாருமில்லை. உம்மை நம்புகிற எனக்கு நீரே விடுதலை தாரும்" என்று பிரார்த்தனை செய்யும்போது, அதிசயமாய் அவர் உங்களைக் காப்பாற்றுவார்.

ஒரு வாலிபன் ஆண்டவரை இரட்சகராக அறிந்துகொண்டான். அவனுடைய ஜெப வாழ்வு, வேதவாசிப்பு, ஆண்டவருக்கு தன்னால் இயன்ற அளவு ஊழியம் செய்வது இவைகளையெல்லாம் ஒவ்வொன்றாய் கடைபிடித்து, தெய்வீக வழியில் நடந்தான். ஆண்டவர் அவனுடைய உண்மையைப் பார்த்து, ஊழியங்கள் பலவற்றை ஒவ்வொன்றாக கூட்டிக்கொடுத்து அவன் உண்மையும் உத்தமமுமாய் அவைகளையெல்லாம் நிறைவேற்றி முடிக்க தமது தெய்வீகக் கிருபையை தந்தார். ஒவ்வொரு முறையும் ஆண்டவர் கொடுக்கிற ஊழியத்தை பெற்றுக்கொண்டவுடன் அவர் சமுகத்திலே, "இயேசுவே, இது என்னால் முடியாது. ஆனால், நீர் கொடுத்த ஊழியத்தை செய்து முடிக்க நீரே எனக்கு அருள்தாரும்" என்று கரங்களை விரித்து அவரிடம் ஜெபம் செய்வான். தடைகள் வரும், பிரச்சினைகள் வரும், பொறாமைக்காரர்களுடைய தொல்லைகள் வரும். ஆனாலும், கர்த்தரோ அவனுடைய ஜெபத்தைக் கேட்டு, அவனைக் கைவிடாமல் அவர் கொடுத்த ஊழியத்தை நிறைவேற்றி முடிக்க அழகாய் நடத்தினார்.

எனக்கு அன்பானவர்களே! நம்மைப்போன்று ஒரு சாதாரண மனிதன், அதுவும் வாலிபன், இவ்வாறு தேவனை சந்தோஷப்படுத்த முடியுமானால், நீங்களும் நானும்கூட நம் அனுதின வாழ்வில் அடையும் சகல துன்பங்களையும் தேவபிரசன்னத்தால் ஆசீர்வாதமாக மாற்றிக்கொள்ள முடியுமே! இதை நீங்களும் செய்து, இந்த வாலிபனைப்போல நிறைவான ஆசீர்வாதங்களைப் பெறுங்கள். கர்த்தருக்கென்று கனி கொடுக்கிறவர்களாக மாறும்படியாக, இந்த வாலிபனைப்போல், ஒவ்வொரு ஊழியத்தில் ஈடுபடும்பொழுது, "நான் ஒன்றுமில்லை – நீரே எனக்கு எல்லாம்" என்று, அவர் சமுகத்தில் யாவற்றையும் அர்ப்பணித்து ஜெபியுங்கள் (சங். 121:1,2).

ஜெபம்: **"அன்பின் இரட்சகரே! உம்மோடு நெருங்கி வாழ்ந்து, சகல பிரச்சினைகளையும் உம்முடைய பாதத்தில் ஒப்படைத்து, உம்மை நோக்கி விண்ணப்பம் செய்வது, இவைகளெல்லாம் எத்தனை இன்பமான அனுபவம். இன்றுமுதல் எனக்கும் இந்த வாழ்வை தாரும். இத்தகைய தெய்வீக ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள எனக்கும் கிருபை தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"**

தேவனை ஸ்தோத்திரித்து அவரை பிரியப்படுத்துங்கள்!

"தேவனுடைய நாமத்தை பாட்டினால் துதித்து, அவரை ஸ்தோத்திரத்தினால் மகிமைப்படுத்துவேன். கொம்பும் விரிகுளம்புமுள்ள காளையெருதைப் பார்க்கிலும், இதுவே கர்த்தருக்கு பிரியமாயிருக்கும்"
(சங்கீதம் 69:30,31).

ஒரு சமயம் பத்து குஷ்டரோகிகள் ஆண்டவரை நோக்கி தாங்கள் சுகம் பெறுவதற்காக உதவிசெய்யும்படி தேடி வந்தார்கள். அவர் அன்பே உருவானவராய் அவர்களை சுகமாக்கினார். திரும்பிப் போகிற வழியிலே சுகம் பெற்ற அவர்கள் ஆச்சரியமடைந்தனர். ஆனால், அவர்களுள் ஒரே ஒரு மனிதன் மட்டும் ஆண்டவர் இயேசுவைத் தேடிவந்தான். அவன் ஒரு சமாரியன் (லூக்கா 17:12–19). அவனுடைய நன்றியுள்ள இருதயத்தைக் கண்டு ஆண்டவர், "தேவனை மகிமைப்படுத்த இந்த மனிதன் மட்டும்தான் வந்திருக்கிறானா? மற்ற ஒன்பது பேர் எங்கே?" என்று வேதனைப்பட்டார். இன்றைக்கு நம்முடைய வாழ்க்கையிலும் எத்தனையோ ஆசீர்வாதங்களை ஆண்டவர் கரத்திலிருந்து பெற்றுக்கொள்கிறோம். ஒவ்வொன்றுக்கும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து முழங்காற் படியிட்டு ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறோமோ? கர்த்தர் இதை விரும்புகிறார் என்பதை அறிந்தவர்களாக, இன்றுமுதல் ஒவ்வொரு நன்மையை பெற்றவுடனும் அவரை வாழ்த்தி ஸ்தோத்திரிப்போம். "ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப் படுத்துகிறான்" (சங். 50:23) என்று ஆண்டவரே கூறியிருக்கிறார்.

நான் சிறுவயதாயிருக்கும்போதே என்னுடைய தாயார் எந்த ஒரு சிறு ஆசீர்வாதத்தை பெற்றாலும், உடனே ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் சொல்ல, பிள்ளைகளாகிய எங்கள் ஒவ்வொருவருக்கும் கற்றுக்கொடுத்திருந்தார்கள். எனக்கு அன்பான தாய்மார்களே, உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் இப்படி கற்றுக்கொடுத்திருக்கிறீர்களா? இதை என் மனதிலே நான் ஆழமாகக் கொண்டபடியினால், ஆண்டவரை அறிந்தபிறகு அனுதின வாழ்க்கையிலே அவ்வாறு அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்த நானும் கற்றுக் கொண்டேன். அவ்விதமாக ஒரு நாள் ஆண்டவரை இருதயத்தின் ஆழத்திலிருந்து அவர் செய்த நன்மைகளை எண்ணி, எண்ணி ஸ்தோத்திரித்தபொழுதுதான், ஆண்டவருடைய பிரசன்னம் என்னை அளவில்லாமல் நிரப்பியது. பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தாலும், வல்லமையினாலும் ஆண்டவர் என்னை நிரப்பினார். பல்வேறு பாடுகளை வாழ்வில் அனுபவித்த நாட்களில், பரிசுத்த ஆவியானவருடைய பெலன் என்னை ஒன்றுக்கும் கலங்காமல் திடமனதோடு எழும்பி நிற்க வைத்தது. இன்றைக்கு அநேக பெண்களுக்கு ஆறுதலின் தாயாக, ஆலோசனை கொடுக்கும் ஒரு திருப்பணியில் ஆண்டவர் என்னை மாற்றியிருப்பதற்கு காரணம், நன்றி நிறைந்த அந்த நல்வாழ்வுதான்!

எனக்கு அன்பானவர்களே! நாமும் நம் பிள்ளைகளை, நம்முடைய குடும்பத்தை என் நம் சொந்த வாழ்விலும் கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறவர்களாக வாழ்வதில் ஜாக்கிரதையாக இருப்போம். அது கர்த்தருக்கு பிரியமானது! (கொலோ. 3:15).

ஜெபம்: "அன்பின் தேவனே! உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை உமக்கு செலுத்தும் வாழ்வை எனக்கும் நீரே கிருபையாய் தந்து, இந்த மேலான பாக்கியங்களை பெற்றுக்கொள்ள இன்றுமுதல் நீரே அருள்தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

எளியவனின் ஆத்துமாவை இரட்சிக்கிற தேவன்!

"ஆக்கினைக்குள்ளாக தீர்க்கிறவர்களினின்று எளியவனுடைய ஆத்துமாவை இரட்சிக்கும்படி அவர் அவன் வலது பாரிசத்தில் நிற்பார்" (சங்கீதம் 109:31).

இந்த உலக வாழ்க்கையில் பிசாசு எவனை விழுங்கலாம்! அழிக்கலாம்! என்று வகைதேடி சுற்றித்திரிகிறான் (1 பேதுரு 5:8; யோவான் 10:10). ஆனால், நாம் ஆண்டவரை உறுதியாய் பற்றிக்கொள்ளும்போதும், அவரோடு இணைந்து வாழும்போதும் அவர் நம்முடைய வலதுபாரிசத்தில் பராக்கிரமசாலியாக நிற்கிறார். ஆகவேதான், "பயப்படாதிருங்கள்; ஒன்றும் உங்களை சேதப்படுத்தமாட்டாது (லூக்கா 10:19), உங்களுக்கு விரோதமாக உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்" (ஏசாயா 54:17) என்றெல்லாம் கூறி, நம்மை தைரியப்படுத்துகிறார். ஆனால், நாமோ, எனக்கு விரோதமாய் யாரோ ஏதோ செய்துவிட்டார்கள்" என்றெல்லாம் வீணாகக் கவலைக்கும் பயத்துக்கும் இடம் கொடுத்து வியாதிப்படுகிறோம், வாழ்வில் ஆசீர்வாதத்தை இழந்துபோகிறோம்.

ஒரு குடும்பத்திலே ஒரு பெண் கர்த்தரைத் தேடுவதில் ஜாக்கிரதையாயிருந்து அவருடைய ஒத்தாசையைக் கொண்டே யாவற்றிலும் வெற்றி சிறந்தாள். ஆனால், அவளுக்கு ஏற்ற சமயத்திலே மற்ற பெண்களைப்போல திருமணமாகவில்லை. எல்லோரும் அவளை பரியாசம்செய்தனர். "இவ்வளவு தூரம் ஆண்டவர் ஆண்டவர் என்று சொல்லுகிற உனக்கு, உன் ஆண்டவர் ஏன் இன்னும் உதவிசெய்யவில்லை?" என்று எள்ளி நகையாடினர். "உனக்கு இனி திருமணமே ஆகாது" என்று அவநம்பிக்கையூட்டும் வார்த்தைகளால் மனமடிவடையவும் செய்தார்கள். ஆனால், அவர்கள் வார்த்தைகள் ஒன்றுக்கும் அவள் இடம்கொடுக்கவில்லை. "நீங்கள் யாவரும் பார்க்கும்படி கர்த்தர் எனக்கு ஒரு பெரிய அதிசயத்தை வைத்திருக்கிறார். எனக்கென்று அவர் விரும்பும் ஒரு தாசனைக் கொடுத்து, என் வாழ்வை உங்கள் கண்களுக்கு முன்பாக சிறக்கச் செய்வார்" என்றாள். ஒருநாள் அவளுடைய வீட்டுக்கு முன்னதாக ஒரு பெரிய கார் வந்துநின்றது. அதிலிருந்து இறங்கின ஒரு பெரியவர் உள்ளே வந்து சொன்ன காரியம் அவர்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது. கர்த்தருடைய வழியில் நடக்கிற ஒரு பக்தியுள்ள பெண் தான் தங்கள் மகனுக்கு வேண்டுமென்று விரும்பிக்கேட்டதால், போதகர் கூறிய வார்த்தையின்படி, இந்த பெண்ணின் நற்சாட்சியைக் குறித்துக் கேள்விப்பட்டு தேடி வந்ததாகவும் அவர் கூறியபொழுது, வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த யாவருடைய வாய்களும் அடைபட்டன. ஆம்! கர்த்தரை தேடுகிறவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது (சங். 34:10).

பிரியமானவர்களே! இன்றும் எளியவர்களாக, சிறுமைப்பட்டவர்களாக அல்லது திருமணமாகவில்லையே, குழந்தை இல்லையே என்று கவலைப்படுகிற நிலைமையில் இருக்கிற நீங்களும் இந்த பெண் தேடினதுபோல, உண்மையும் உத்தமமுமாய் கர்த்தரை தேடினால், எளியவர்களாகிய உங்கள் ஆத்துமாவையும் இரட்சிக்க பெலன் தந்து, தேவன் உங்கள் அருகாமையில் இருந்து ஆசீர்வதிப்பார்.

<u>ஜெபம்:</u> "அன்பின் தெய்வமே! இல்லாமையை மாற்றியமைக்க வல்லமையுள்ளவர் நீர் ஒருவரே! எனவே, எனக்கும் <u>இன்றுமுதல்</u> இல்லாமை எல்லாவற்றையும் மாற்றி, உம் தெய்வீக ஆசீர்வாதத்தால் என் வாழ்வை நிரம்பி வழியச் செய்யும். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"

உத்தமர்களோ நன்மையை சுதந்தரிப்பார்கள்!

(நீதிமொழிகள் 28:10).

வேதபுத்தகத்திலே அநேகர் உத்தமமாய் வாழ்ந்ததைக் குறித்து வாசிக்கிறோம். யோபு என்ற மனிதனைக் குறித்து தேவனே சாட்சி கொடுக்கிறார் (யோபு 1:1,8). அதுபோன்றே யோசபாத் என்ற அரசன் "உத்தமனுக்கு கர்த்தர் துணை" (2 நாளா. 19:11) என்று கூறுவதாகவும், அப்படியே தானும் நடந்ததாகவும் வாசிக்கிறோம். இதைப்போன்றே நாமும் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும், உத்தமத்தை பின்பற்றவும், அவர் வழிகளில் நடக்கவும் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டியது மிக மிக அவசியமாய் இருக்கிறது. ஏனென்றால், நம்முடைய ஆண்டவர் அப்படிப்பட்டவர். அவர் தம்மைப்போல் தம்மை நேசிக்கிற அடியார்களும் வாழ வேண்டுமென்றே விரும்புகிறார். விசேஷமாக, இந்த மாதத்தின் முதல் நாளிலே பிரவேசித்திருக்கிற நாம், இன்றுமுதல் நானும் வேதாகம பக்தர்களைப் போன்று உத்தமமாய் நடந்து, கர்த்தரை மகிழ்வித்து, அவர் தரும் சகல நன்மைகளையும், பாக்கியங்களையும் சுதந்தரிப்பேன் என்று தீர்மானம் செய்து அவர்களைப்போல் நாமும் நன்மைகளைப் பெறுவோம் (சங். 84:11).

ஒரு மனிதன் மேற்கண்டவிதமாக ஒவ்வொரு நாளிலும் கர்த்தரை உண்மையாய் ஜெபத்தின்மூலமாகத் தேடி, வேதத்தை கருத்தாய் வாசித்து, அதன்படியே உத்தமமாய் நடப்பதில் ஜாக்கிரதையாய் இருந்தான். ஏனென்றால், ஆண்டவர் சிலுவையிலே தனக்காக செய்த தியாகத்தை உணர்ந்து, தன் பாவங்களை அறிக்கையிட்டு, பரிசுத்தமாய் வாழும் வாழ்க்கையை அவன் கடைபிடித்திருந்தான். அவரும் அவனுக்கு மகிமையின் நம்பிக்கையாக இருந்தார் (கொலோ. 1:27). அவன் கர்த்தரோடிசைந் திருந்தவனாக இருந்தபடியால் அவருடனே ஒரே ஆவியாயிருந்தான் (1 கொரி. 6:17).

எனக்கு அன்பானவர்களே! நம்மைப்போன்று பாடுள்ள ஒரு மனிதன் இவ்விதமாக தெய்வபயத்தோடு உண்மையும், உத்தமமுமாய் ஆண்டவரை பின்பற்றுவது சாத்தியமாக இருக்கும்போது, நீங்களும்கூட இன்றுமுதல் அவ்விதமாக வாழ தீர்மானம் பண்ணுவதோடு, அதை செயலிலும் கொண்டு வாருங்கள். நான் முன்பே குறிப்பிட்டதுபோல, வேத வாசிப்பு, ஜெபம், இவைகளில் கருத்தாய் இருப்பது மிக மிக அவசியம். கர்த்தரிடம் கேளுங்கள்; அவர் உங்கள் ஒவ்வொருவருக்கும் இந்த தெய்வீக சிலாக்கியத்தை அருளிச் செய்வார். நீங்களும்கூட பொல்லாத வழிகள், அசுத்தமான சிந்தனைகள், அக்கிரமக்காரருடைய கூட்டுறவு, இவைகளையெல்லாம் உதறித் தள்ளி உண்மையாயும், உத்தமமாயும் நடக்கிற தேவ மனுஷர்களோடு ஐக்கியம் கொள்ளுங்கள். கர்த்தர் உங்களோடுகூட இருந்து, அவர் விரும்பும் மெய்யான நீதியின் வழியிலே உங்களை நிச்சயம் நடத்துவார். அதோடுகூட உங்களுக்கு வாழ்க்கையில் தேவையான சகல கிருபையையும் நிறைவாய் தருவார். இது எத்தனை இன்பமான வாழ்க்கை என்பதை நீங்களே அனுபவித்துப்பாருங்கள் (மத். 25:21,23)!

ஜெபம்: "அன்பு தகப்பனே! எனக்கும் இந்த மேலான, உண்மையும் உத்தமமுமான தெய்வீக வாழ்வை, நிறைவாய் தாரும். என்னில் உள்ள சகல குறைவுகளையும், நீரே உம்முடைய தெய்வீக வல்லமையால் என்னைவிட்டு முற்றிலுமாய் அகற்றிப் போடும். என் வாழ்விற்குத் தேவையான சகல நன்மைகளையும் நான் சுதந்தரிக்கும் படி இன்றுமுதல் எனக்கு அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

இயேசுவின் நாமத்தினால் நீதிமான்களாக்கப்பட்டீர்கள்!

"...ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப் பட்டீர்கள்"

(1 கொரிந்தியர் 6:11).

இயேசு கிறிஸ்துவின் நாமம் இனிமையானது! இன்பமானது! வல்லமையுள்ளது! அவருடைய நாமத்தினாலே நாம் அவரைத் தொழுதுகொள்ளும்பொழுது, அவர் நம்மை இரட்சித்து, பரிசுத்தப்படுத்துகிறார் (அப். 2:21; 4:12). அதுமட்டுமின்றி, நம் சரீரத்திற்கு வேண்டிய தெய்வீக சுகத்தையும் நமக்கு அருளிசெய்கிறார் (அப். 3:16). அதோடுகூட, அவருடைய நாமத்தினாலே நாம் எதைக்கேட்டாலும் உடனடியாக அவர் நமக்கு அருளுகிறவராக இருக்கிறார் (யோவான் 14:14). மேலும், மத்தேயு 18:20ன்படி, இரண்டு பேராவது மூன்று பேராவது அவருடைய நாமத்தினாலே எங்கே கூடி இருக்கிறோமோ அங்கு அவர் வருகிறார். இவ்விதமாக அவருடைய விலையேறப்பெற்ற நாமம், மேற்கண்ட வசனத்தின்படி, நம்மை பாவங்களிலிருந்து கழுவி சுத்திகரிக்கிறது, பரிசுத்தமாக்குகிறது. நீதிமான்களாக்குகிறது. இன்றைக்கு இதை வாசிக்கிற உங்கள் ஒவ்வொருவருக்கும் இந்த அனுபவத்தை ஆண்டவர் கிருபையாய் கொடுக்கவே வாஞ்சிக்கிறார்.

ஒரு சமயம் ஊழியர் ஒருவரிடம் பிசாசு பிடித்த ஒரு சகோதரியை அழைத்து வந்தார்கள். ஒருவராலும் அந்த சகோதரியை அடக்க முடியவில்லை. ஆனால், அந்த ஊழியரோ, பரிசுத்த ஆவியினால் நிறைந்து, "இயேசுவே இரங்கும்! இயேசு, இயேசு" என்று சொல்லிக் கொண்டே இருந்தார். அவ்வளவுதான்! இந்த பிசாசுக்கு அந்த இடத்தில் இருக்க முடியவில்லை. "இயேசு" என்ற பெயரின் மகத்துவத்தினால், வல்லமையினால் அப்படியே ஆடி கீழே பொத்தென்று விழுந்தது. அதோடு அந்த சகோதரியைப் பிடித்திருந்த அந்த பொல்லாத பிசாசு அவளை விட்டு நிரந்தரமாக நீங்கியது.

ஆம்! "இயேசு"என்ற நாமத்திற்கு எத்தனை வல்லமை பாருங்கள். இன்று இந்த வல்லமை உங்களுக்கும் வேண்டுமா? முதலாவது இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நீங்கள் உங்கள் பாவங்களை ஆண்டவரிடத்திலே மறைக்காமல் அறிக்கையிட்டு, ஆண்டவர் மன்னிக்கும்படி கேளுங்கள். அப்படியே அவரது நாமத்தினாலே அவர் உங்களை கழுவி சுத்திகரிப்பார். நீங்கள் புதுமனுஷராக மாறுவீர்கள் (2 கொரி. 5:17). இந்த அனுபவம் உங்களுக்கு உண்டா? நீங்கள் யாராக இருந்தாலும், தற்பரிசோதனை செய்து, இந்த தெய்வீக சிலாக்கியத்திற்கு உரியவராக உங்களை ஒப்புக்கொடுங்கள். கர்த்தர் ஜீவனுள்ளவர்! நீங்கள் வாசிக்கிற இதே சமயத்தில் உங்களோடு பேசுவார். உங்கள் வாழ்க்கையை முற்றிலும் மாற்றிப்போட தம்முடைய வல்லமையை உங்களுக்குள் அனுப்புவார். பழைய பாவ வாழ்க்கையெல்லாம் உங்களில் இருந்து மாறிப்போகும். உள்ளத்திலோ புதிதான ஆவியும், மெய்யான நீதியும், பரிசுத்தமும் நிறைந்த வாழ்வை உங்களுக்கு கட்டளையிடுவார் (எபே. 4:23,24). நீங்கள் இதை அனுபவித்து ஆசீர்வாதம் பெறுங்கள்! இதற்காகவே ஆண்டவராகிய இயேசு தம் ஜீவனை சிலுவையிலே அர்ப்பணித்தார்.

<u>ஜெபம்</u>: "அன்பு தெய்வமே! எனக்காக நீர் உம்மையே சிலுவையில் ஒப்புக் கொடுத்ததற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன். உம்முடைய இரத்தத்தால் பாவங்களற இன்றே என்னைக் கழுவி முற்றிலும் சுத்திகரியும். உம்முடைய மகனாக, மகளாக மாற்றும். நீர் என் ஜெபத்தைக் கேட்கிறீர், என்னை நீதிமானாக்குகிறீர் என்று விசுவாசித்து, உம் பாதம் பணிந்து, உமக்கு நன்றி செலுத்துகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

நாம் அழிவில்லாத கிரீடத்தை பெறுகிறவர்களாக ஓடுவோம்!

"பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படி செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தை பெறும்படிக்கு அப்படி செய்கிறோம்"

(1 கொரிந்தியர் 9:25).

இந்த உலக வாழ்க்கையில் எல்லோரும் பரிசுத்தவான்களாக, குறைவற்றவர்களாக வாழவே விரும்புகிறோம். ஆனால், நம்மை சுற்றி நெருங்கி நிற்கிற பாவம், இச்சைகள், கவர்ச்சிகள், இவைகள் நம்மை ஆண்டவரைவிட்டு தூரமாய் நம்மையுமறியாமல் கொண்டுபோய் விடுகின்றன. இதைத்தான், "பிசாசு திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறான்" என்று வேதம் சொல்லுகிறது (யோவான் 10:10). பொல்லாத தந்திரமுள்ள பிசாசு, நாம் ஆண்டவரை தேடிவிடுவோமோ, பின்பற்றி விடுவோமோ என்று பயந்து அவ்விதமான இச்சைகளையும், பொல்லாத சிநேகிதர்களையும் நம் கண்முன் கொண்டு வந்து போடுகிறான். ஆனால், அதே சமயத்தில் கர்த்தர் நமக்கு பரிபூரண ஜீவனைக் கொடுக்க, இந்த உலக வாழ்வில் அவைகளையெல்லாம் எதிர்த்துப் போராடி, ஜெயித்து கர்த்தருக்கென்று வாழ, முடிவில் அழிவில்லாத ஜீவகிரீடத்தை பெற்றுக்கொள்ள, தம்முடைய தெய்வீகக் கிருபையையும், இரக்கத்தையும், தயவையும் கட்டளையிட ஆவலோடு காத்துக்கொண்டிருக்கிறார் (1 கொரி. 9:25).

ஒரு பக்திமான் தன் வாழ்க்கையில் களங்கம் ஏதும் ஏற்படாமல், கர்த்தரைத் தேடித்தேடி நீதியின் பாதையில் நடந்து வந்தார். கர்த்தர் அவருக்கு இரட்சிப்பின் அனுபவங்களையும், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும், தம்முடைய கிருபையினால் கொடுத்து, ஊழியத்திலும் அவருக்கு ஒரு பங்கை நியமித்தார். ஆண்டவர் அவர் கையில் கொடுத்த அந்த ஊழியத்தை தெய்வீக பக்தியுடன், பயத்துடன் மிகவும் கவனமாக செய்து வந்தார். ஆனால், திடீரென்று அவருக்கு இருதய வலி வந்து, அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். வெகு விரைவில் அவர் மரித்துப்போனார். அப்பொழுது அவர்மீது மிகுந்த அன்பு கொண்டிருந்த வேறொரு ஊழியர், "ஐயோ, இவ்வளவு சீக்கிரம் இந்த நல்ல மனிதர் மரித்துவிட்டாரே" என்று ஆண்டவர் சமூகத்தில் கலங்கியவாறே ஜெபித்துக் கொண்டிருந்தபோது, கர்த்தர் அவருக்கு ஒரு தரிசனத்தைக் கொடுத்தார். மரித்துப்போன இந்த மனிதன் பரலோகம் சென்றபோது, அவரை ஒரு தேவதூதர் பெயர் சொல்லி அழைத்து, "நீ பூவுலகில் பல்வேறு பாடுகளையும், சஞ்சலங்களையும் அனுபவித்தாய். இங்கு ஆண்டவர் உனக்காக வாடாத ஜீவகிரீடத்தை வைத்து காத்துக்கொண்டிருக்கிறார். சந்தோஷமாய் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசி" என்று அழைத்துக் கொண்டு ஆண்டவரிடம் சென்றார். இயேசு கிறிஸ்து அவரை அன்போடு தழுவி அணைத்துக் கொண்டார். இந்த தரிசனத்தைக் கண்ட ஊழியரின் உள்ளமும் பரவசமடைந்தது!

அன்பானவர்களே! நீங்களும் கர்த்தருக்கென்று உண்மையாய் பயபக்தியுடன் நீதியின் மார்க்கத்தில் நடப்பீர்களானால், இதே அழிவில்லாத கிரீடத்தை உங்களுக்கும் தருவார் (நீதி. 16:31).

ஜெபம்: "அன்பு தெய்வமே! உமக்காக வாழ்வது, உம்முடைய வழியில் நடப்பது எத்தனை இன்பமானது என்பதை நான் அறிந்துகொள்ள நீர் கிருபை செய்வதற்காக ஸ்தோத்திரம். எந்த நிலைமையிலும் உம்மைவிட்டு பின் வாங்காமல், இன்றுமுதல் இந்த ஊழியரைப்போல், உம்மைப் பின்பற்ற எனக்கும் அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

நீர் பாராட்டும் கிருபையின்படி என்னை நினைத்தருளும்!

“உம்முடைய ஜனங்களுக்கு நீர் பாராட்டும் கிருபையின்படி என்னை நினைத்து, உம்முடைய இரட்சிப்பினால் என்னை சந்தித்தருளும்” **(சங்கீதம் 106:4).**

இந்த வசனம் ஆண்டவரோடு பேசுகிற ஒரு சிறிய ஜெபம் ஆகும். ஒரு பக்தன் ஆண்டவரைப் பார்த்து, “நீர் உம்முடைய ஜனங்களுக்கு கிருபை புரிகிறவர் என்றும், என்னையும் நீர் அப்படியே நினைத்து உம்முடைய இரட்சிப்பினால் சந்தியும்” என்றும் வேண்டுதல் செய்கிறான். கர்த்தரை நம்புகிறபோது, அவருடைய கிருபை நம்மை சூழ்ந்துகொள்ளுகிறது (சங். 32:10). மேலும், அவருக்கு பயப்படும்படியான வாழ்க்கை வாழ்வதற்கு, அவர் அளிக்கும் கிருபை பெரியதாய் இருக்கிறது (சங். 103:11) என்றும் வாசிக்கிறோம். இந்த கிருபையை ஆண்டவர் அவரை நோக்கி மேற்கண்டவாறு ஜெபிக்கிறவர்களுக்கு பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார் (2 கொரி. 9:8). இந்த கிருபையை நாம் பெறுவதற்கு காரணம், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பரிபூரணராய் இவ்வுலகில் வெளிப்பட்டு வாழ்ந்ததுதான்! “அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின்மேல் கிருபையை பெற்றோம்” (யோவான் 1:16).

ஒரு வாலிபப் பெண், வாலிப வயதில் தனக்கு இஷ்டமான வழிகளின்படி, தன் மனம்போல் உலக இச்சைகளுக்கும், ஆசாபாசங்களுக்கும் உட்பட்டவளாய் வாழ்ந்து வந்தாள். எத்தனையோ போதகர்கள், அவளுடைய சொந்த குடும்பத்தினர் எடுத்துரைத்தும், அவள் அவைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக பாவத்தின் உச்சியில் ஏறிக்கொண்டேயிருந்தாள். இப்படிப்பட்ட பயங்கரமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த அந்த பெண்ணுக்கு, ஒரு நாள் ஒரு சுவிசேஷக் கூட்டத்தில் பங்குபெறும் வாய்ப்பு எதிர்பாராமல் கிடைத்தது. முதலில் அலட்சியமாய் விருப்பமின்றி அமர்ந்திருந்தாள். ஆனால், தேவனுடைய வார்த்தையைக் கேட்கக் கேட்க அவளோடு அந்த வார்த்தை நேரடியாக பேசியது. ஏனென்றால், அவருடைய வார்த்தை ஜீவனும் வல்லமையுமுள்ளது (எபி. 4:12). கேட்கக் கேட்க கண்களிலிருந்து கண்ணீர் புறப்பட்டது. அழுதாள், அழுதாள் அழுதுகொண்டேயிருந்தாள்! இதுதான் தேவ கிருபை! “பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாக பெருகிற்று” (ரோமர் 5:20) என்ற வேத வார்த்தை இவள் வாழ்க்கையில் உண்மையாயிற்று. முன்பு வாழ்ந்த வாழ்க்கைக்கு நேர் எதிரிடையாக ஆண்டவருடைய சாயலில், அவரைப்போல் வாழ்கிற வாழ்க்கையை ஆண்டவர் கரத்திலிருந்து பெற்றுக்கொண்டாள்.

எனக்கு அன்பானவர்களே! கிறிஸ்தவ வாழ்க்கை என்பது இதுதான். எப்படிப்பட்ட கீழ்த்தரமான மனுஷனையும் தேவ கிருபை தலைகீழாய் மாற்ற வல்லமையுள்ளது. ஒருவேளை உங்கள் வாழ்க்கையில் இப்படிப்பட்ட தாறுமாறுகள், ஆண்டவருக்கு பிரியமில்லாத காரியங்கள் காணப்படுமானால், நீங்களும் உங்களை ஆண்டவர் சமுகத்தில் ஒப்படையுங்கள். கர்த்தர் கிருபையுள்ளவராக, இரக்கமுள்ளவராக உங்களையும் புது மனுஷனாக, மனுஷியாக மாற்றி, தம்முடைய தெய்வீக பரிசுத்தத்தால் அலங்கரிப்பார் (ரோமர் 6:22).

ஜெபம்: “அன்பு தெய்வமே! நீர் எவ்வளவு கிருபை பொருந்தினவர் என்பதை அறிந்து, என் உள்ளமெல்லாம் சிலிர்க்கிறது. எனக்கும் உம்முடைய தெய்வீகக் கிருபையை அளவில்லாமல் தந்து, இன்றுமுதல் உம்மைப்போல் சகலவிதங்களிலும் பக்தியுடன் தெய்வீக அலங்காரத்துடன் வாழ அருள்தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!”

கர்த்தர் ஒத்தாசை அனுப்பி உங்களை ஆதரிப்பார்!

"அவர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து உமக்கு ஒத்தாசையனுப்பி, சீயோனிலிருந்து உம்மை ஆதரிப்பாராக"

(சங்கீதம் 20:2).

ஆண்டவர் தம்மைத் தேடுகிற ஒவ்வொருவருக்கும் மிகவும் சமீபமாய் இருக்கிறார். முழு இருதயத்தோடும் அவரைத் தேடும்பொழுதும் (எரே. 29:13), அவரை உண்மையுடன் தொழுதுகொள்ளுகிறபொழுதும் (உபா. 4:7), நமக்கு மிகவும் சமீபமாயிருக்கிறார். இந்த உலக வாழ்க்கையில் அவரைத் தேடுகிற பக்தர்களுக்கு அதுதான் பெரிய சிலாக்கியம். ஆபத்தோ, பிரச்சினையோ, சஞ்சலமோ, தவிப்போ, தனிமையோ என்ன வந்தாலும் அந்த நேரங்களிலெல்லாம் ஓடோடி வந்து நமக்கு உதவி செய்கிறார். இது எவ்வளவு பெரிய இன்பமான வாழ்க்கை! இதை அனுபவித்து பார்க்கும்போதுதான் இதனுடைய மேன்மையை நம்மால் உணர்ந்துகொள்ள முடியும். இதைத்தான், "தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்" (சங். 46:1) என்று வேதத்தில் வாசிக்கிறோம். இந்தவிதமான சம்பவங்கள் என் வாழ்க்கையில் எத்தனையோ நடந்திருக்கின்றன.

1990ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 2–ம் தேதியன்று, திடீரென்று நன்றாக முழங்காற் படியிட்டு ஜெபித்துக் கொண்டிருந்த என் கணவர், "எனக்கு சற்று களைப்பாக இருக்கிறது, ஏதாவது குடிக்கக் கொடு" என்று கேட்டதால், நான் அதைத் தயாரித்து வருவதற்குள், மயக்க நிலைமையில் கீழே படுத்திருந்ததை கண்டபோது, நான் துடித்துப் போனேன். ஏறக்குறைய மரணமடைந்ததுபோன்ற மயக்க நிலைமையில்தான் அவர் இருந்தார். அப்படியே தூக்கிக் கொண்டு மருத்துவமனைக்கு சென்றோம். மருத்துவர்கள் மிகுந்த கரிசனையோடு உடனடியாக சிகிச்சை செய்து, அவர் உயிர் திரும்பும்படி ஆண்டவர் அருள்புரிந்தார். அதன்பிறகும் அறுவை சிகிச்சை பல மணி நேரம் நடந்தது. மருத்துவர்கள், "பிழைப்பது கடினம்" என்று தயக்கத்துடன் அறிவித்தனர். நாங்களோ அந்த அறைக்கு வெளியே இருதயத்தின் ஆழத்தில் வேதனையோடு கர்த்தரை இறுகப் பிடித்தவாறே வேண்டுதல் செய்து கொண்டிருந்தோம். கடந்த பல வருடங்களாக ஆண்டவர் தான் எங்களுக்கு அடைக்கலமாக இருந்து, அவருடைய இருதயத்தைக் காத்து வழிநடத்தி வருகிறார். ஆம்! அவர் உங்களுக்கும் இதேவிதமாக ஒத்தாசை செய்து ஒவ்வொரு நிமிடமும் வழிநடத்த காத்திருக்கிறார் என்பதை மறந்து போகாதிருங்கள்.

அன்பானவர்களே! எத்தனை சஞ்சலம், எதிர்பாராத கண்ணீரின் சூழ்நிலைகள் வந்தாலும், கர்த்தருடைய பிள்ளைகள் சோர்ந்துபோக வேண்டிய அவசியமே இல்லை. ஏனென்றால், மேலே எழுதப்பட்டிருக்கிறபடி, அவரை உண்மையாய், உறுதியாய், உத்தமமாய் பிடித்துக் கொள்ளுகிறவர்களுக்கு அவர் மிகவும் சமீபத்தில் இருக்கிறார் (சங். 145:18). அவர் உங்களை கைவிடமாட்டார். உங்கள் கண்ணீரையெல்லாம் துடைத்துக்கொள்ளுங்கள். உங்கள் துன்பத்தையெல்லாம் இன்பமாக மாற்றுவார். (சங். 90:15).

<u>ஜெபம்</u>: **"அன்பு தெய்வமே! இந்த பொல்லாத உலகத்திலே எத்தனை கண்ணீர்! எவ்வளவு சஞ்சலம்! இருப்பினும் உம்மைத் தேடுகிறவர்களுக்கு நீர் எவ்வளவு சமீபமாய் இருக்கிறீர் என்பதை அறியும் கிருபை தந்தீர். <u>இன்றுமுதல்</u> என் வாழ்விலும் இந்த பாக்கியத்தை பெறும் ஞானத்தையும், உம்மைத் தேடுவதற்கான பயத்தையும், பக்தியையும் எனக்கும் தாரும்: இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"**

உம் வழிகள் – பாதைகளை எனக்குத் தெரிவியும்!

“கர்த்தாவே, உம்முடைய வழிகளை எனக்குத் தெரிவியும்; உம்முடைய பாதைகளை எனக்குப் போதித்தருளும்”

(சங்கீதம் 25:4).

ஒரு தேவபக்தியுள்ள மனுஷனோ, மனுஷியோ ஏறெடுக்கும் ஜெபம்தான் இந்த வசனம் இது மிகவும் அருமையான ஜெபம். ஒவ்வொரு நாளின் அதிகாலையிலும் ஆண்டவரை தொழுதுகொண்டு, நாம் அவரிடத்திலே ஏறெடுக்க வேண்டிய ஒரு ஜெபம். அதிகாலையில் அமைதியான சூழ்நிலையில் இவ்விதமாக ஜெபிக்கும்பொழுது, ஆண்டவர் அந்த ஜெபத்தைக் கேட்பார் (சங். 65:2). அந்த நாள் முழுவதும் நம்முடைய வழிகளை, பாதைகளை அவருக்கு பிரியமானபடி நடக்க தமது தெய்வீக அருளைத் தருவார். இதை நீங்கள் உங்கள் அனுபவத்தில் செயல்படுத்தி பாருங்கள். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, உங்களை நடத்தும் விதத்தையும் சீர்தூக்கி பார்த்து, அன்று அந்த நாளின் முடிவிலே கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள். இதுதான் ஒரு மெய்யான பக்தன் நடக்க வேண்டிய ஒரு வழி. அநேக சமயங்களிலே இப்படி செய்யாமல் நம் விருப்பம்போல் வழிகளையும், பாதைகளையும் நாமே உண்டாக்கிக்கொள்ளும்பொழுதுதான், பிரச்சினைகளும், போராட்டங்களும் வருகின்றன (எபி. 3:10,11).

ஒரு வாலிபன் பள்ளி வாழ்க்கையை முடித்தான். அவனுடைய குடும்பமோ நடுத்தர குடும்பம். அதன்பிறகு என்ன செய்வது என்று அவனுடன் படித்த மாணவர்கள் எல்லாம் ஒவ்வொருவராக கூறியபோது, அவனுக்கு தன்னை குறித்து தீர்மானிக்க வழி ஏதும் தெரியவில்லை. அதிகம் படிக்க பணமும் கிடையாது. மிகவும் கவலையோடு ஒருநாள் பூங்கா ஒன்றில் தனியே அமர்ந்து எதையோ சிந்தித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது அந்த பக்கமாக வந்த ஒரு தேவனுடைய ஊழியர் அவனைக் கண்டு, “தம்பி, ஏன் இங்கே தனியே அமர்ந்திருக்கிறாய்?” என்று அன்போடு கேட்டார். அவன் அவரிடம் மனம் திறந்து பேசியபொழுது, அவர் மேற்கண்ட வழியை, அதாவது ஜெபத்தைக் கற்றுக் கொடுத்தார். அன்றுமுதல் அவன் தினமும் வேதபுத்தகத்தை வாசித்து, ஜெபித்து வந்தான். பல வருடங்கள் ஓடி சென்றுவிட்டன. திரும்பிப் பார்க்கும்பொழுது, கர்த்தரிடத்தில் சமர்ப்பித்த அவனுடைய வாழ்க்கையை ஆண்டவர் எவ்வளவு அழகாய் வழிநடத்தி, பட்டங்களையும், பதவிகளையும், ஆசீர்வாதங்களையும் தந்து, எதிர்பாராத அளவிலே ஆசீர்வாதத்தை அருளிச் செய்திருக்கிறார் என்று கர்த்தரை நன்றியுடன் ஸ்தோத்திரித்தான்.

ஆம்! அன்பானவர்களே, விசேஷமாக என் வாலிபக் கண்மணிகளே, உங்கள் வாழ்வில் நீங்களும் அடுத்து என்ன செய்வது? என்று கலங்கிக் கொண்டிருக்கிறீர்களா? கர்த்தர் இதே ஆசீர்வாதங்களை உங்களுக்கும் வைத்திருக்கிறார். இந்த ஜெபத்தை நீங்களும் ஒவ்வொரு நாளும் செய்து பாருங்கள்! உங்கள் வாழ்விலும் கர்த்தர் ஆச்சரியமான விதத்தில் வழிகளைத் திறந்து, ஏற்ற ஆலோசனைகளை உங்களுக்கு போதித்து, அந்த மாணவனைப்போல் சிறந்து விளங்க அருள்புரிவார் (சங். 25:12; 86:11).

ஜெபம்: “அன்பு இரட்சகரே! எனக்கும் ஒவ்வொரு நாளும் நடக்க வேண்டிய வழியையும் பாதையையும் திறந்து தந்து, இன்றுமுதல் இந்த வாலிபன் எதிர்பாராத நன்மைகளை உம்மிடத்திலிருந்து பெற்றுக்கொண்டதுபோல், உம்முடைய தெய்வீக அருளைத் தாரும். நீர் அவ்வாறு தருகிறதற்காக உமக்கு ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்!”

என் கண்கள் எப்போதும் கர்த்தரையே நோக்கிக்கொண்டிருக்கிறது

(சங்கீதம் 25:15).

உண்மையான கர்த்தருடைய பக்தர்களுக்கு இது ஒரு இன்பமான வாழ்க்கை! நம்முடைய கண்களை பற்பல காரியங்களிலே, கவர்ச்சியளிக்கும் படங்களிலே செலுத்தாமல், மேற்கண்ட வசனத்தின்படி எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன் (சங். 121:1) என்று சங்கீதக்காரனைப்போல், நாமும் கவனமாக நடந்துகொள்வோமானால், நம் வாழ்வு பரிசுத்தமாயிருக்கும். அவரிடத்திலிருந்து நாம் விரும்புகிறதற்கு மேலான ஒத்தாசை அந்தந்த நேரம் வரும். ஆனால், இன்றைய மக்களிடத்திலே ஒரு பெரிய குறை, இத்தகைய வாழ்க்கை இல்லாதது தான். ஜெபம் என்றால் எல்லோருக்கும் கசப்பாக இருக்கிறது. அதனுடைய மேன்மை, இன்பம் இவைகளை அறியாமல் போவதினால் உண்டாவதுதான் இந்த கசப்பு. ஆனால், வேதாகமத்தில் பக்தர்கள் யாவருடைய வாழ்க்கையிலும் இந்த அனுபவம் இருந்தமையால் தான் அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டு, மேன்மை பெற்றார்கள். ஆகவே, நீங்களும் கர்த்தரை நோக்கிப் பார்த்து, ஜெபத்தில் விழித்திருங்கள் (லூக்கா 21:36).

என் வாழ்க்கையிலும்கூட என் பெற்றோர் பக்தியுள்ளவர்களாக, பக்தி நெறியில் என்னை வளர்த்திருந்தபொழுதிலும், இவ்விதமாய் பக்தியுடன் கர்த்தரை, கண்களினால் நோக்கிப் பார்க்கிற பழக்கம் என்னில் இல்லாமல் இருந்தது. ஆனால், ஒருநாள் ஆண்டவர் தம்முடைய அன்பினால் என் வாழ்வை நிரப்பினார். இன்பமான அந்த அனுபவத்தை பெற்ற பின் இந்த தெய்வீக வழி, அதாவது கர்த்தரை கண்களினால் நோக்கிப் பார்க்கிற அனுபவம் எனக்கு சாதாரணமாகிவிட்டது. "அது தான் வாழ்க்கை" என்பதுபோல், இன்று அவர் எனக்கு சமீபத்தில் இருக்கிறார். எந்த காரியத்திற்கும் நான் கர்த்தரையே நோக்கிப் பார்த்து, உதவியையும், ஒத்தாசையையும், ஆசீர்வாதத்தையும் பெற்று வருகிறேன். மட்டுமின்றி, கர்த்தருடைய கிருபையால் நான் தயாரித்து வெளியிடும் "விலையுயர்ந்த முத்து" என்ற பத்திரிகையில் கர்த்தரை கண்களால் நோக்கிப் பார்க்கிற ஜெப ஜீவியத்தைக் குறித்து எழுதுகிறபடியினால், இன்று அநேகம் பெண்கள், ஏன், ஆண்களும்கூட இந்த தெய்வீக அனுபவத்தை பெற்று ஆசீர்வாதம் பெறுகின்றனர்.

எனக்கு அன்பானவர்களே! உங்கள் வாழ்க்கையையும் சற்று சீர்தூக்கிப் பாருங்கள். இது கர்த்தர் விரும்பும் வழி! மனுஷனை நோக்கிப் பார்ப்பதில் யாதொரு பயனும் இல்லை. அவர் சகல சம்பூரணத்தின் எல்லையையும் தமது கரத்தில் அடக்கி வைத்திருக்கிறார். அவரை நோக்கிப் பார்க்கிறவர்களுக்கு சம்பூரண நன்மைகளால் நிரப்புகிற அன்பே உருவான ஆண்டவர் (1 தீமோ. 6:17). ஒவ்வொரு நாளும் உங்கள் வாழ்விலும் அதிகாலை வேளையிலும் மற்றும் சில குறிப்பிட்ட வேளைகளிலும், இயேசுவைப்போல (மத். 14:23, மாற்கு 1:35, லூக்கா 6:12) உங்கள் கண்களால் ஆண்டவரையே நோக்கிப் பார்க்கையில், கர்த்தர் உங்கள் மீது பிரியமாயிருந்து, உங்கள் வாழ்வில் நிறைவான ஆசீர்வாதங்களால் நிரப்புவார்.

ஜெபம்: "அன்பு இரட்சகரே! உம்மை நோக்கிப் பார்ப்பதின் மேன்மையை நான் அறிந்து கொண்டேன். என் வாழ்வில் எத்தனையோ குறைவுகள்! இன்றுமுதல் நானும் ஒவ்வொரு நாளும் எந்த காரியத்திற்கும் என் கண்களால் உம்மை நோக்கிப் பார்த்து, உம்முடைய ஒத்தாசையை பெற்றுக்கொள்ள கிருபை தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

தீங்கு நாளில் கன்மலையின்மேல் என்னை உயர்த்துவார்!

"தீங்குநாளில் அவர் என்னை தம்முடைய கூடாரத்தில் மறைத்து, என்னை தமது கூடார மறைவிலே ஒளித்துவைத்து, என்னைக் கன்மலையின்மேல் உயர்த்துவார்" (சங்கீதம் 27:5).

இந்த வசனம் மிக மிக அருமையான ஒன்றாகும். இதைத்தான் "உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான்" (சங். 91:1) என்றும் வாசிக்கிறோம். தம்மைத் தேடுகிற, தமக்கு முன்பாக பயபக்தியுடன் நடக்கிற ஒவ்வொருவருக்கும் கர்த்தர் இந்த கிருபையைத் தருவார். எவனை விழுங்கலாமோ என்று பிசாசு வகை தேடி சுற்றித்திரிகிறான் (1 பேதுரு 5:8). அவன் மூலமாயும், வேண்டாத மனிதர்கள் மூலமாயும் எத்தனையோ தீங்குகள் நம் வாழ்வில் திடீர் திடீரென்று வருகின்றன. எனினும், கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கு அவரே பாதுகாவலாயிருக்கிறார். நாம் நம் வாழ்க்கையில் இப்படிப்பட்ட தீங்குகள் வரும்போது கன்மலையாகிய கர்த்தரில் சார்ந்துகொள்ளும்போது, தம்முடைய மறைவிலே அவர் ஒளித்து காப்பார்.

ஒரு ஊரிலே திடீரென்று இரண்டு கோஷ்டிகள் தோன்றி, ஒருவரையொருவர் அழித்து நாசம் செய்தனர். வீடுகளுக்குள்ளே புகுந்து ஜனங்களை வெளியே இழுத்து வந்து பல்வேறு விதங்களில் சித்திரவதை செய்தனர். அவர்களுக்குள் தெய்வ பக்தியுள்ள, கர்த்தர் மேல் முழு நம்பிக்கையையும் வைத்திருந்த குடும்பம் ஒன்று இருந்தது. அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் வீடுகளுக்குள் புகுந்து நாசம் செய்த அதே ஆட்கள் இந்த குடும்பத்தினரின் வீட்டுக்குள் சென்றபோது, கர்த்தர் அந்த பொல்லாத மக்களின் கண்களுக்கு இவர்களை மறைத்தார். ஒளிந்து கொண்டிருந்த இடத்தை கண்டுபிடிக்க முடியாமல் விட்டுவிட்டு, வேறு வீட்டுக்கு செல்லும்படி புறப்பட்டனர். கர்த்தர் அற்புதவிதமாய் அந்த குடும்பத்தை காப்பாற்றினார். இதைத்தான், "தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்கு, தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது" (2 நாளா. 16:9) என்ற வசனம் விளக்குகிறது. கர்த்தர் தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார் (நாகூம் 1:7). ஒருநாளும் எதிரிகளின் கைகளில் சிக்கித் தவிக்க விட்டுவிட்டு அவர் பேசாமல் இருக்கவே மாட்டார்.

ஆம்! நீங்களும் இந்த கன்மலையாகிய கிறிஸ்துவுக்குள் அடைக்கலம் புகுந்து அவருக்கு பிரியமானபடி வாழும்போது, கர்த்தர் உங்கள் மீதும் கவனமாக இருப்பார். தமது செட்டைக்குள் கோழி தன் குஞ்சுகளை பாதுகாப்பதுபோல் பாதுகாப்பார். ஒன்றும் உங்களை சேதப்படுத்தமாட்டாது (லூக்கா 10:19). மனிதர் எந்தவித தீங்கு செய்து உங்களை அழிக்கப் பார்த்தாலும் உங்களுக்கு விரோதமாக நேரிடும் எல்லாத் தீங்கையும் ஆசீர்வாதமாக மட்டுமே மாற்றிப்போடுவார் (ஏசாயா 54:17). ஆகவே, ஒன்றுக்கும் வீணாகக் கவலைப்படாமல், மார்த்தாளுடைய சகோதரியாகிய மரியாள் செய்தது போன்று ஆண்டவருடைய பாதத்தை மட்டும் உறுதியாய் பற்றிக்கொள்ளுங்கள் (லூக்கா 10:42).

ஜெபம்: "அன்பின் இரட்சகரே! இந்த உலக வாழ்க்கை எவ்வளவு பயங்கரமானது! எரிச்சல், பொல்லாங்கு நிறைந்த மக்கள் மத்தியிலே வாழ்கிற என்னையும், என் குடும்பத்தையும் கன்மலையாகிய நீர் உம்மில் பொதிந்து பாதுகாத்துக்கொள்ளும். நீரே என் நம்பிக்கை! இன்றுமுதல் நான் ஒன்றுக்கும் கவலைப்பட போவதில்லை. கர்த்தரே என் கன்மலை! உமக்கு ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தர் கட்டுண்டவர்களின் பெருமூச்சை கேட்கிறார்!

(சங்கீதம் 102:19).

இந்த உலக வாழ்க்கையில் எத்தனையோ விதமான கட்டுகளின் வழியாய் நாம் கடந்து செல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். பாவக்கட்டுகள், கர்த்தரை விட்டு நம்மை தூரமாக விலக்கி விடுவதினால், ஆண்டவர் கொடுக்கும் பரிசுத்தம், சந்தோஷம், சமாதானம் இவைகளைப் பெற முடியாமல் தவிக்கிறோம். இந்த அடிமைத்தனம் என்னைவிட்டு எப்பொழுது நீங்கும்? என்று கலங்குகிறோம். அதேபோன்று விதம்விதமான வியாதியின் கட்டுகள் இந்த நாட்களில் எத்தனையோ மக்களை வாட்டி வதைக்கின்றன. இதேபோன்று சோர்வு, கஷ்டங்கள், இல்லாமை ஆகிய கட்டுகள் அனுதின வாழ்க்கையில் நம்மை எத்தனையாய் சஞ்சலப்படுத்துகின்றன! ஆனால், ஆண்டவருடைய வார்த்தை மாறாதது. மேற்கண்ட வசனத்தின்படி, பல்வேறுவிதங்களில் கட்டப்பட்டிருக்கிற வேளையில், அது எப்படிப்பட்ட கட்டாயிருந்தாலும், நாம் பெருமூச்சுவிட்டு கர்த்தரை நோக்கிப் பார்த்து கதறும்பொழுது, கர்த்தர் அந்த கதறுதலைக் கேட்பார். தம்முடைய வல்லமையால் அவைகளை அறுத்துப் போடுவார் (சங். 116:16).

எல்லாப் பக்கங்களிலும் சந்தோஷம், சமாதானம், தெய்வ ஆசீர்வாதம் நிறைந்தவர்களாய், அநேகர் பொறாமைப்படுமளவிற்கு நன்றாக வாழ்ந்து கொண்டிருந்தது ஒரு குடும்பம். ஒருமனம், ஒற்றுமையோடு ஆலயம் செல்லுவதைப் பார்த்து அந்த தெருவே அதிசயப்படும். இந்த நிலையில், ஒருநாள் காலையில் நன்றாக அலுவலகம் சென்ற குடும்பத் தலைவன், திடீரென்று மயங்கி விழுந்ததால், அவரை மருத்துவமனையில் சேர்த்திருப்பதாக தொலைபேசியின்மூலம் செய்தி வரவே, துடித்துப் போயினர் குடும்பத்தின் மக்கள். அதுவரை அவர்கள் பெற்றுவந்த சம்பாத்தியத்தைக் கொண்டு, பூரண திருப்தி, சந்தோஷம் கொண்டு வாழ்ந்த அக்குடும்பத்தில், மருத்துவ செலவு ஏறஏற கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை வேறு அவர்கள் மனதை வெகுவாய் பாதித்தது. இதினிமித்தம் ஒவ்வொரு பக்கமும் கட்டுகள்போல பலவித பாடுகளும், சோதனைகளும் நெருக்கியது. எனினும், அவர்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து, கர்த்தரை நோக்கி, கட்டுண்ட தங்கள் பெருமூச்சைக் கேட்கும்படி உபவாசத்தோடும், ஜெபத்தோடும் இரவும் பகலும் ஸ்தோத்திரத்தோடுகூடிய ஜெபத்தோடு தேடினர். கர்த்தர் அவர்கள் பெருமூச்சைக் கேட்டார். அற்புதமாக அந்த குடும்பத் தலைவனுக்கு பரிபூரண சுகத்தையும், மற்றும் ஒவ்வொரு கட்டுகளினின்றும் பரிசுத்த ஆவியானவரின் உதவியால் விடுதலையையும் கொடுத்தார்.

அன்பானவர்களே! உங்கள் வாழ்வில் ஏற்படும் இப்படிப்பட்ட பல்வேறு விதமான கட்டுகளைக் குறித்து சோர்ந்து போகாதிருங்கள். நீங்கள் வணங்கும் கர்த்தர் சர்வவல்லவர்! அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும் (சங். 33:9) என்பதை விசுவாசித்து ஜெயத்தைப் பெறுங்கள்.

<u>ஜெபம்</u>: "அன்பு தெய்வமே! வாழ்வில் எத்தகைய கட்டுகள் வந்தாலும் அவைகளைக் குறித்து கவலைப்படாமல் இன்றுமுதல் அவைகளை மாற்றியமைக்க வல்லவராகிய உம்மையே நோக்கிப் பார்க்கவும், உபவாசத்தோடு கூடிய ஜெபத்தோடு அதை உமக்கு தெரியப்படுத்தி, நிறைவான ஆசீர்வாதத்தைப் பெறவும், <u>இன்றுமுதல்</u> எனக்கும் அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தர் சமாதானத்தை கட்டளையிடுவார்!

"கர்த்தாவே, எங்களுக்கு சமாதானத்தைக் கட்டளையிடுவீர்; எங்கள் கிரியைகளையெல்லாம் எங்களுக்காக நடத்திவருகிறவர் நீரே" (ஏசாயா 26:12).

ஆண்டவருக்கு ஒரு அருமையான பெயர் உண்டு. அது 'சமாதானப் பிரபு', 'சமாதானத்தின் தேவன்' என்பதாகும் (ஏசாயா 9:6, 1 தெச. 5:23, ரோமர் 16:20). ஆண்டவர் தரும் சமாதானம் தெய்வீகமானது! உலகம் தரக்கூடாதது (யோவான் 14:27). அன்னாள் என்ற பெண், குழந்தையில்லாததினால் மனக்கிலேசம் அடைந்து கர்த்தருடைய சமுகத்திற்கு சென்று தன் மனக்கிலேசத்தையெல்லாம் அப்படியே கண்ணீரோடு ஊற்றினாள் (1 சாமு. 1:15). தேவன் முதலாவது அவள் உள்ளத்திலே இருந்த மனக்கிலேசம், சஞ்சலம் யாவற்றையும் எடுத்துப்போட்டு, தம்முடைய தெய்வீக சமாதானத்தினால் அவள் உள்ளத்தை நிறைத்தார் (1 சாமு. 1:18). மட்டுமல்ல, அவள் எந்த காரணத்தின் நிமித்தம் கசப்பு அடைந்தாளோ, அந்த காரியத்தில் அவள் விரும்பினதற்கும் அதிகமான நன்மையை அருளிசெய்தார். இதே ஆண்டவர் உங்களுக்கும் உதவி செய்ய காத்திருக்கிறார் என்பதை மறந்து போகாதிருங்கள்.

கர்த்தரை தேட வேண்டிய விதமாக தேடாமல், பெயரளவில் தேடி, அதுபோதும் என்று திருப்தியாய் ஒரு குடும்பத்தினர் வாழ்ந்து வந்தார்கள். எல்லாப் பக்கமும் நலமாக இருந்தபோது, அவர்கள் கர்த்தரை தேட வேண்டிய அவசியம் இல்லாமல் இப்படி இருந்தார்கள். ஆனால், திடீரென்று காரியங்கள் குடும்ப வாழ்க்கையிலே தாறுமாறான போது, தாங்கள் என்ன செய்வது என்ற திகைப்பும், சஞ்சலமும் ஏற்பட, கர்த்தரைத் தேட வேண்டிய ஒரு சூழ்நிலைக்கு வந்தார்கள். ஒரு தெய்வ பயம் அவர்களைப் பிடித்தது. சமாதானமற்றிருந்த அவர்கள் உள்ளம், அவர் தரும் சமாதானத்திற்காக ஏங்கித் தவித்தது. ஊழியர்கள் எவரையும் வீட்டுக்கு வர இடங்கொடுக்காமல் வெறுத்துத் தள்ளின அவர்கள், ஊழியர்களை வரும்படி அன்போடு நாடித் தேடினர். ஆலயத்திற்கும், ஜெபக்கூட்டங்களுக்கும் சென்று, கண்ணீரோடு தங்கள் மன்றாட்டை ஆண்டவர் பாதத்தில் சமர்ப்பித்தனர். இப்படி அவர்கள் வாழ்வு தம் பக்கமாக திரும்பியதைக் கண்ணுற்ற ஆண்டவர் அவர்கள் விரும்பினதற்கு அதிகமாக சகல காரியங்களிலும் ஆசீர்வாதத்தை அருளிச்செய்தார். தமது தெய்வீக சமாதானத்தினால் நிரப்பினார். கர்த்தரை தேடுவதினால் உண்டான மேன்மையை அப்பொழுதுதான் அறிந்து கொண்டனர்.

அன்பானவர்களே! உங்கள் வாழ்க்கையை சற்று யோசித்துப் பாருங்கள்! இந்த கடினமான சூழ்நிலை வருகிறதற்கு முன்பாகவே, தெய்வ பயத்தோடும், பக்தியோடும் அவர் பாதத்தை நாடித்தேடுங்கள். அப்பொழுது உங்கள் குடும்பம், சமாதானம் நிறைந்ததாய் இருக்க, ஆண்டவர் உதவி புரிவார் (பிலி. 4:6,7).

ஜெபம்: "அன்பின் தெய்வமே! என் உள்ளத்தில், வாழ்க்கையில் இருக்கிற குறைவுகளையெல்லாம் மாற்றி, உம்முடைய தெய்வீக சமாதானம் என்னை ஆட்கொள்ளும்படி இன்றுமுதல் என்னையும் வழிநடத்தும். நான் உம்மைத் தேட வேண்டிய விதமாய் தேடாத குற்றத்தையெல்லாம்கூட நீர் எனக்கு மன்னித்து, எவ்விதம் உம்மோடு நெருங்கி வாழ்வது என்பதை கற்பித்து வழிநடத்த வேண்டுமென்று தாழ்மையுடன் கெஞ்சுகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தருடைய துதி எப்போதும் என் வாயிலிருக்கும்!

"கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்" **(சங்கீதம் 34:1).**

கர்த்தரை எப்போதும், எல்லா நேரங்களிலும் துதிக்கிற அனுபவத்தை கொண்டவனாய் தாவீது இருந்தான். இளம் வயதிலிருந்தே ஆண்டவரைத் தேடின, அவரை நேசித்த ஒரு மனிதன் அவன். அவனுடைய வாழ்க்கையில் கூடவே பாடுகளும், எதிர்பாராத பயங்கரமான சம்பவங்களும் வரத்தான் செய்தன! எனினும், அவன் அவைகள் ஒன்றுக்கும் பயப்படாமல், அப்படிப்பட்ட சூழ்நிலைகளிலும்கூட கர்த்தரை ஸ்தோத்திரித்துக் கொண்டேயிருந்தான். இதினிமித்தமாக கர்த்தர் அவன் வாழ்வை பொறுப்பெடுத்துக் கொண்டார். ஒருவரும் அவனை எளிதில் கீழே தள்ளிவிட முடியாதபடி, அவரே அவனைத் தூக்கி நிறுத்தினார். உயர்வையும், உன்னத ஸ்தானத்தையும் வாழ்க்கையில் அருளிச்செய்து, தம் அடியானாகிய தாவீதை அவர் ஆச்சரியமான விதங்களில் காப்பாற்றினார், கனப்படுத்தினார் (சங். 124:6).

சாதாரண கூலி வேலை செய்த ஒரு மனிதன் ஆண்டவரோடு நெருங்கி வாழ்ந்தவனாய், எப்பொழுதும் அவரை துதித்துப் பாடிக்கொண்டேயிருப்பான். ஒரு சிலருக்கு இது பிடிக்கவில்லை. வீணான எரிச்சல், ஏன் ஒரு பக்கம் அவனைக் குறித்து பொறாமையும் கூட ஏற்பட்டது. எனவே, அவனுக்கு என்னென்ன விதங்களில் தொல்லை கொடுக்க முடியுமோ அவைகளையெல்லாம் கொஞ்சமும் மனச்சாட்சி இல்லாமல் துணிகரமாய் செய்து, அதன்மூலம் அவன் அப்படி துதிப்பதை நிறுத்த வேண்டுமென்று முயற்சித்தனர். அவனோ, எந்த நிலைமையிலும் தன் ஆண்டவரை ஸ்தோத்திரிப்பதை விட்டுவிடாமல், இன்னும் அதிகமாக வாய் விட்டு அவருக்கு நன்றி செலுத்திக் கொண்டேயிருந்தான். ஒரு நாள் இந்த மக்கள் காரணமின்றி அவனை அடித்து காயப்படுத்தினர். சில நல்ல மக்கள் அவனை மருத்துமனையிலே சேர்த்தார்கள். அங்கும் "ஐயோ, வலிக்கிறதே" என்று புலம்புவதற்கு பதிலாக "ஆண்டவரே, உமக்கு நன்றி! என் உயிரை நீர் காப்பாற்றினீரே" என்று மாத்திரம் சொல்லிக் கொண்டேயிருந்தான். எத்தனை வலி, வேதனை சரீரத்தில் இருந்தபொழுதிலும் அவன் வாயோ ஆண்டவருடைய பிரசன்னத்தினால், அவரைத் துதிக்கும் துதியினால் நிறைந்திருந்ததை கண்டு யாவரும் ஆச்சரியமடைந்தனர். துதிகளின் மத்தியில் வாசம்பண்ணுகிற தேவன் (சங். 22:3) தமது பிரசன்னத்தால் அவன் இருந்த இடத்தை நிரப்பினார். அவனுக்கு பரிகாரம் செய்கிறவராக (யாத். 15:26) எல்லாக் காயங்களையும் முற்றிலுமாக குணமாக்கி, வெகு விரைவில் கர்த்தருடைய நாமத்திற்கு மகிமையாக முன்னைவிட அதிகமாக கர்த்தரை துதிப்பவனாக விளங்கும்படி அருள்புரிந்தார்.

ஆம், அன்பானவர்களே! எத்தனைபேர் உங்களுக்கு இந்த உலகில் தொல்லை கொடுத்தாலும், அழிக்க முனைந்தாலும், கர்த்தரை துதிக்கும் துதி உங்களுடைய வாயில் இருக்கும்போது, ஒருவரும் உங்களை சேதப்படுத்த முடியாது. கர்த்தருக்கு ஏறெடுக்கும் ஸ்தோத்திரபலி தேவ பிரசன்னத்தை உங்கள் மத்தியிலே கொண்டு வரும். அவர் உங்களை அதினிமித்தம் காப்பாற்றி, விடுதலையாக்குவார், ஜெயம் கொடுப்பார் (1 கொரி. 15:57).

ஜெபம்: **"அன்பு இரட்சகரே! துதித்தல் எத்தனை இன்பமானது என்பதை நானும் உணர்ந்து எந்நிலைமையிலும் அதில் ஜாக்கிரதையாயிருக்க எனக்கும் கிருபை தாரும். இந்த காரியத்தில் என் வாழ்வில் உள்ள குறைவுகளையெல்லாம் மாற்றி, உமக்கு பிரியமானபடி, சங்கீதக்காரன் தாவீதைப்போல் துதி செலுத்துவதில் ஜாக்கிரதையாகவும், கவனமாகவும் இருக்க இன்றுமுதல் அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"**

தம்மை அறிந்தவர்கள்மேல் கிருபை பாராட்டுகிற தேவன்!

"உம்மை அறிந்தவர்கள்மேல் உமது கிருபையையும், செம்மையான இருதயமுள்ளவர்கள் மேல் உமது நீதியையும் பாராட்டியருளும்" (சங்கீதம் 36:10).

தேவனுடைய ஊழியனாக தெரிந்தெடுக்கப்பட்ட பரிசுத்த பவுல் ஆண்டவரை நோக்கி தன் தேவையினிமித்தம் மன்றாடியபோது, மகனே, "என் கிருபை உனக்கு போதும்" (2 கொரி. 12:9) என்று கர்த்தர் சொல்லுவதாக நாம் வாசிக்கிறோம். ஆம்! ஆண்டவர் தம்முடைய பக்தர்களுக்கு, தம்மை அறிந்தவர்களுக்கு, தேடுபவர்களுக்கு, இந்த தெய்வீகக் கிருபையை இலவசமாக, பூரணமாய் அருளிசெய்கிறார். சீஷர்கள்மேல் பூரண கிருபை உண்டாயிருந்தது (அப். 4:33) என்று வாசிக்கிறோம். எப்பொழுது அவர்கள் அந்த கிருபையை பெற்றுக்கொண்டார்கள்? ஆண்டவரைத் தேடி, அவருடைய பரிசுத்த ஆவியினால் நிறைந்து, அவருக்காக உழைக்க தங்களை ஒப்புக்கொடுத்தபோது, இந்த அனுபவத்தை பெற்றார்கள். அப்படியே நாமும்கூட இந்த வசனத்தின்படி, கர்த்தரை அறிகிற அறிவினால் நிரம்பி, அவர் சமுகத்தை நாடித் தேடி அவருக்கென்று நம் வாழ்வை அர்ப்பணிக்கும்பொழுது நாமும் இதேவிதமாக அவருடைய பெரிதான கிருபையை பெற்றுக் கொள்ள நமக்கும் அருள் செய்வார் (சங். 103:11).

ஒரு தேவ ஊழியர் தெய்வ அன்பினால் நிறைந்து, எல்லா மக்களுக்கும் ஆண்டவருடைய வழியை காண்பித்து, அவர்களுக்காக பிரார்த்தனை செய்து வழிநடத்தி வந்தார். இவரை எல்லோரும் நேசித்து பின்தொடர்வதைக் கண்டு, ஒரு மனிதன் கோபமடைந்து, இவரை கொன்றுவிட எண்ணினான். இவர் மீது அம்பு எய்து கொல்ல முயன்றான். அந்த அம்பு அவர் மீது பட்டதே தவிர, சரீரத்திற்குள் பாய்ந்து செல்லாமல் அப்படியே கீழே விழுந்துவிட்டது. "குறி தவறாமல் அம்பு எய்யும் எனக்கு ஒரு தோல்வியா?" என்று அந்த மனிதன் எண்ணினான். அந்த தேவ மனிதரோ, கீழே விழுந்த அந்த அம்பை எடுத்துக் கொண்டு வந்து, மறுபடியும் அந்த கோபக்கார மனிதனிடம் கொடுத்து, "நீர் மறுபடியும் எய்யும், அப்பொழுது நான் அதன்மூலம் மரிக்க நேரிடலாம்" என்று சொன்னபொழுது, அந்த கொடூர மனிதனின் உள்ளமும் கரையும்படி ஆண்டவர் கிரியை செய்தார். உண்மையாகவே, இந்த மனிதர் தேவ மனிதர் என்பதை அறிந்து கொண்டவனாய், அதன்பின் அவரிடமிருந்து தெய்வீக அன்பினை தானும் கற்றுக்கொண்டான்.

ஆம்! எனக்கு அன்பானவர்களே, நீங்களும் ஆண்டவரை அறிய வேண்டிய விதமாக வேதம் வாசித்து, ஜெபம் செய்து, அறிந்துகொள்ளும்போது, உங்களுக்கும் தேவ கிருபை அளவில்லாமல் பெருகும்படி ஆண்டவர் அருள்புரிவார் (சங். 32:10). இந்த தேவ ஊழியருக்கு வந்தது போன்று உங்களுக்கும் தேவையற்ற எதிர்ப்புகள், பொறாமைகள், நயவஞ்சகக் கிரியைகள் யாவும் வரலாம். "நீதிமான்களோ, சிங்கத்தைப் போல் தைரியமாயிருக்கிறார்கள்" (நீதி. 28:1) என்றபடியே, நீங்களும் ஆண்டவரை அறியும் அறிவினாலும், தேவ கிருபையினாலும் நிறைந்து வெற்றி பெறுங்கள்.

ஜெபம்: "அன்பு இரட்சகரே! இன்றுமுதல் எனக்கும் உம்முடைய தெய்வீகக் கிருபையை அளவில்லாமல் அருளிசெய்யும். உம்மைக் குறித்து அறிய வேண்டிய காரியங்களை அறியாமல் இருக்கிற குறைவை மாற்றி, உம்முடைய தெய்வீக அறிவினால், அன்பினால் என்னையும் நிரப்பும். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"

உங்களை பரிசுத்த ஜனமாக நிலைப்படுத்துவார்!

"நீ உன் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொண்டு, அவர் வழிகளில் நடக்கும்போது, கர்த்தர் உனக்கு ஆணையிட்டபடியே, உன்னைத் தமக்கு பரிசுத்த ஜனமாக நிலைப்படுத்துவார்" (உபாகமம் 28:9).

கிறிஸ்துவை பின்பற்ற விரும்புகிற ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் கடைபிடிக்க வேண்டிய ஒரு முக்கியமான சத்தியத்தை இந்த வசனத்தில் அறிந்துகொள்கிறோம். ஆபிரகாம் ஆண்டவரால் அழைக்கப்பட்டார். ஆரம்பத்தில் ஆண்டவரை அறிய வேண்டிய விதமாக அறியாதிருந்தார். ஆனால், கர்த்தர் அவருக்கு கட்டளையிட்டபடியெல்லாம் அவர் கைக்கொண்டு நடந்தபடியினால், அவரையும், அவர் சந்ததியையும், இந்த வசனத்தின் படியே பரிசுத்த ஜனமாக கர்த்தர் நிலைப்படுத்தினார் என்பதாக வேதத்திலிருந்து அறிந்து கொள்கிறோம். நம்முடைய வாழ்க்கையிலும்கூட இந்த வசனத்தின்படி கவனமாக நடந்து, கர்த்தருடைய கட்டளைகளை தவறாமல் கடைபிடிக்கும்போது, கர்த்தர் நமக்கும் இந்த மேலான பாக்கியத்தை நிச்சயம் அருளிச்செய்வார் (உபா. 26:19).

ஆண்டவர் இயேசுவின் அன்பை அறியாத ஒரு குடும்பத்தினர் ஏனைய மக்களைப்போல, தங்கள் மனம்போல் பாவ வழிகளில் வாழ்ந்து வந்தனர். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒருநாள் நன்றாய் பள்ளி சென்று கொண்டிருந்த அவர்களுடைய ஒரே மகன் பள்ளியிலிருந்து பயங்கரமான தலைவலியோடு திரும்பி வந்தான். என்ன மருந்துபோட்டாலும், சுகம் பெறாத நிலைமை! நாளுக்கு நாள் பல்வேறு விதங்களில் பலவித பிரச்சினைகளை உண்டுபண்ணியது. அச்சமயத்தில் அவர்களுடைய ஊரில் "இயேசு அழைக்கிறார்" நற்செய்திக் கூட்டங்கள் நடைபெற்றன. கர்த்தரை அறிந்த ஒரு குடும்பத்தினர் இவர்களை அந்த கூட்டத்திற்கு அழைத்து சென்றனர். மனமுடைந்த இந்த மக்களுக்கு அங்கு பேசப்பட்ட வார்த்தைகள் ஆறுதலையும், ஒரு நம்பிக்கையையும் உண்டுபண்ணினபடியால், தங்கள் உள்ளத்தை, வாழ்க்கையை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்து, கர்த்தரை நம்புகிற குடும்பமாக அன்றுமுதல் மாறினார்கள். மட்டுமல்லாமல், கர்த்தர் அந்த மகனை அந்த நாளில் தொட்டபடியினால், அந்த வியாதி கொஞ்சம் கொஞ்சமாக அவனை விட்டு விலக, அவன் திரும்பவும் பள்ளிக்கு செல்ல ஆரம்பித்தான். இந்த அனுபவத்தின் மூலமாக இந்த மக்கள் கர்த்தருடைய வழிகளில் நடக்கவும், அவருக்கு ஏற்ற பரிசுத்த ஜனமாக மாறவும், ஆண்டவர் கிருபை புரிந்தார்.

அன்பானவர்களே! இந்த விதமான ஆசீர்வாதத்தை ஆண்டவர் கிருபையாக ஒவ்வொருவருக்கும் கொடுக்க விரும்புகிறார். அவரை அறியாத, தேடாத மக்களுக்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்து, இந்த குடும்பத்தாரைப்போல அவரை தேடும்பொழுது நம்மையும் பரிசுத்த ஜனமாக, அவர் விரும்பும் பாத்திரமாக நிலைப்படுத்துவார் (2 தீமோ. 2:21).

<u>ஜெபம்</u>: "அன்பின் தேவனே! என்னையும் இந்த தெய்வீக அனுபவத்தால் நிரப்பி, ஆசீர்வதியும். என் வாழ்க்கையையும், என் குடும்பத்தார் வாழ்க்கையையும்கூட பரிசுத்தமானதாக, உமக்குள் என்றென்றும் நிலைத்திருக்க, நீரே உம்முடைய தெய்வீகக் கிருபையை தாரும். <u>இன்றுமுதல்</u> உம்முடைய அருள்மாரியை அளவில்லாமல் என் வாழ்வில் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தரில் நிலைத்திருந்து மிகுந்த கனி கொடுங்கள்!

"நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" (யோவான் 15:5).

அநேக மக்கள் இந்த வசனத்தின் அர்த்தத்தை அல்லது மேன்மையை அறியாமல் இருக்கிறார்கள். அவரை அறியும் அறிவு, அவரோடு நெருங்கி வாழ்வதற்கான கனி கொடுக்கும் வாழ்க்கையை அப்படிப்பட்டவர்களுக்கு நிச்சயமாய் அருளிச்செய்யும். இன்று உங்களுடைய நிலைமையை சற்று யோசித்துப் பாருங்கள். எவ்வளவு தூரம் நீங்கள் கர்த்தரை அறிந்து, அவருக்கு பிரியமாக வாழ்ந்து, அவருக்குள் நிலைத்திருக்கிறீர்கள்? அல்லது அதற்கு நேர் விரோதமாக அறிந்தும் அறியாதவர்கள் போல தூரமாய் இருக்கிறீர்களா? என்பதை சிந்தித்து, உங்கள் வாழ்வை இந்த ஆசீர்வாதமான, கனி கொடுக்கும் பாத்திரமான நிலைமைக்கு, கர்த்தருடைய தயவால் மாற்றிக்கொள்ளுங்கள் (2 பேதுரு 1:4-8).

சர் ஐசக் நியூட்டன் என்ற விஞ்ஞானி இளம் வயதிலேயே தாயாரால் கைவிடப்பட்டு, அவரது பாட்டியால் வளர்க்கப்பட்டார். இந்த பாட்டி ஏழ்மை நிலையில்தான் இருந்தார்கள். ஆனால், அவர்கள் அவருக்கு கற்றுக் கொடுத்ததெல்லாம் ஒன்றே ஒன்று தான். "நான் மிகவும் ஏழை. நான் அறிந்த ஒரு காரியம் "ஜெபம்" தான்! இதை நீயும் கற்றுக்கொள். அப்பொழுது உன் வாழ்க்கையில் மிகுந்த ஆசீர்வாதத்தை ஆண்டவர் கொடுப்பார்" என்று தினமும் இந்த எளிய ஜெபத்தை செய்ய வைத்தார்கள். அந்த ஜெபம் என்ன என்று கேட்கிறீர்களா? "ஆண்டவரே! நீரே என் நம்பிக்கை. என் வாழ்வின் சகல காரியங்களையும் நிர்ணயம் பண்ணி, என்னை ஆசீர்வாதமாய் வழிநடத்த வல்லமையுள்ளவராகிய உம் தெய்வீக கரத்தில் என் வாழ்வை ஒப்படைக்கிறேன். நீரே என்னோடுகூட என்றும் நிலைத்திருந்து என் வாழ்வு வளம்பெறவும், கனிதரும் வாழ்வாக மாறவும் கிருபை புரியும்" என்பது தான் அந்த ஜெபம்! பாட்டியின் வழிநடத்துதலின்படி தினமும் இந்த ஜெபத்தை செய்து வந்தார். அப்படியே ஆண்டவர் அவரோடு இணைந்து கொண்டு, இந்த சிறுவனை வழி நடத்தி, தம்முடைய தெய்வீக ஞானம், அறிவு இவைகளையெல்லாம் கொடுத்து, எதிர்காலத்தில் ஒரு பெரிய விஞ்ஞானியாக அவர் மாறும்படி அருள்புரிந்தார்.

அப்படியே கர்த்தரை உறுதியாய் பற்றிக் கொண்டு அவர் வழிகளில் தெய்வ பயத்துடன் நடந்து, அவருடைய ஊழியத்தையும் செய்பவர்களுக்கு, அந்த ஊழியத்தின் நிமித்தமாக சர் ஐசக் நியூட்டனின் வாழ்வைப்போல கனி நிறைந்த தெய்வீக வாழ்வை கர்த்தர் கட்டளையிடுவார். இதை வாசிக்கிற நீங்களும் அந்த ஜெபத்தை தினமும் சொல்லி, தெய்வீக ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளுங்கள். கர்த்தரோடிணைந்து வாழவும், கனிதரும் இன்பம் நிறைந்த வாழ்வு வாழவும், உங்களையும் கர்த்தர் நிச்சயம் வழிநடத்துவார் (பிலி. 1:10,11).

ஜெபம்: "அன்பான இரட்சகரே! உம்மையே உறுதியாய் பின்பற்றி, செடியாகிய உம்மில் கொடியாகிய நான் உறுதியாய் நிலைத்திருக்கவும், அதினிமித்தம் என் வாழ்வு கனி நிறைந்ததாக ஆசீர்வதிக்கப்படவும் இன்றுமுதல் நீரே அருள்தருகிறபடியினால் உமக்கு நன்றி செலுத்துகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

சகல ஜனங்களைப் பார்க்கிலும் நீ ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்!

(உபாகமம் 7:14).

ஆண்டவர் இந்த நாளுக்கென உங்களுக்கு அருளிச்செய்கின்ற நிறைவான ஆசீர்வாதம் இது! கர்த்தர் ஒரு மனிதனை இவ்வாறு ஆசீர்வதித்தால் அவனுடைய வாழ்க்கையிலே சகல சம்பூரண நன்மைகளையும் அவன் பெற்றுக்கொள்வான். ஆம்! "கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்" (நீதி. 10:22) என்ற வசனத்தின்படி, பணத் தேவைகள், பொருள் தேவைகள் இவைகளையெல்லாம் அவர் தம்மை நம்புகிறவர்களுக்கு அந்தந்த சமயங்களிலே அழகாய் அருளிச்செய்வார். ஒன்றும் குறைவுபடாதபடி சம்பூரணமாய் நிரப்புகிறவர் தான் நம்முடைய ஆண்டவர்! சரீரத்திலே வியாதிகள் வரும்போது, சம்பூரண பெலனையும், சுகத்தையும் அவர் அருளிச்செய்ய போதுமானவராயிருக்கிறார் (யாத். 15:26). சமாதானமில்லாமல் தவிக்கின்ற குடும்ப வாழ்க்கையில், தனிப்பட்ட வாழ்க்கையில் பூரண சமாதானத்தைத் தருகிற தேவன் (ஏசாயா 26:3), சகல ஜனங்களைப் பார்க்கிலும் தம்மை உண்மையாய் தேடுகிறவர்களை உண்மையாய் சம்பூரணமாய் ஆசீர்வதிப்பார்.

ஒரு வாலிபன் வேடிக்கையாக "கடவுளே இல்லை" என்று ஒரு மனிதன் எழுதிய நாத்திக புத்தகத்தை வாசித்தான். அதை படித்து, மற்றவர்களுக்கு அதை கற்பிக்க மிகவும் கருத்தாய் அனுதினமும் வாசித்து வந்தான். அதினிமித்தமாக அவனுடைய வாழ்க்கையிலே ஒரு இருள் புகுந்ததுபோன்ற, சமாதானமில்லாத சூழ்நிலையில், எதையோ இழந்ததுபோல தவித்துக்கொண்டிருந்தான். ஒரு நாள் ஒரு தேவ ஊழியரிடம் இதைக் குறித்து வினவச் சென்றான். அவரிடம் தன் சந்தேகத்தை விவரித்தபோது, மிகுந்த அன்போடும், தோழமையோடும், தேவன் உயிரோடிருக்கிறார், அவரை அறிந்தவர்களுக்கு சமாதானம், சந்தோஷம், வெளிச்சம் எல்லாம் நிறைவாய் இருக்கும் என்பதை தெளிவுபடுத்தினார். அப்பொழுதுதான், தான் சென்ற பாதை எத்தனை பரிதாபமானது, பயங்கரமானது என்பதை அறிந்து, உடனடியாக முழங்காற்படியிட்டு, ஆண்டவரிடம் அழுது புரண்டான். "ஆண்டவரே, தவறான வழியில் சென்ற எனக்கு உம்முடைய தெய்வீக வழியை இன்று காண்பித்தீரே, உமக்கு நன்றி" என்று சொல்லி, அவரை உறுதியாய் பற்றிக்கொண்டான். சாதாரணமான நிலையில் இருந்த அவனுடைய வாழ்வு அன்றுமுதல் சீரும் சிறப்புமாக செழிக்க ஆரம்பித்தது. இதைக் கண்ணுற்ற யாவரும் இதைக் குறித்து அவனிடம் வினவியபோது, தைரியமாய் "நான் தேவனைத் தேடினேன், அவரை கண்டு கொண்டேன். அவர் என்னை தமது தெய்வீக ஆசீர்வாதங்களினால் நிரப்பினார்" என்று நற்சாட்சி கொடுத்தான்.

அன்பானவர்களே! உங்களைக் குறித்து என்ன? ஆண்டவரை அறியாமல் இருளில் இருக்கிறீர்களா? அல்லது அறிந்தும் அலட்சியமாய் இருக்கிறீர்களா? இப்படிப்பட்ட நிலைமை உங்களுக்கு வேண்டாம். இது உங்கள் வாழ்வில் ஆசீர்வாதத்தை அல்ல, சாபத்தையே கொண்டு வரும். ஆனால், இந்த வாலிபனைப்போல முழங்காற்படியிட்டு, உங்கள் வாழ்வை ஆண்டவரின் கரத்தில் ஒப்படைப்பீர்களானால், எதிர்பார்த்திராத பரலோக நன்மைகளை ஆண்டவர் உங்களுக்கும் கட்டளையிடுவார் (நீதி. 13:21).

ஜெபம்: "அன்பின் தெய்வமே! இன்றுமுதல் எனக்கும் தெய்வீக ஆசீர்வாதம் நிறைந்த நல்ல வாழ்வைத் தாரும். உம்மை அறிகிற அறிவு இன்றுமுதல் என் வாழ்வில் பெருகட்டும். மற்றவர்களுக்கும் அதினிமித்தம் நான் வெளிச்சமாகத் திகழ, நீரே வழிகாட்டியாய் இருந்து ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"

கர்த்தர் சகல நோய்களையும் உன்னை விட்டு விலக்குவார்!

(உபாகமம் 7:15).

இன்றைய நாட்களில் விதவிதமான நோய்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக பெருகி வருகின்றன. அந்த நிலையில் மேற்கண்ட வசனம் மிகவும் ஆசீர்வாதமான ஒரு வாக்குத்தத்தம் அல்லவா? ஆண்டவர் வாக்கு மாறாதவர்! அவருடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே (2 கொரி. 1:20). மனிதன் மாறுவான். ஆனால் கர்த்தரோ வாக்கு மாறாதவர்! இந்த வசனத்தின்படி சகல நாட்களிலும் நோயின்றி, தேவ ஆசீர்வாதத்துடன் வாழ நீங்களும் இந்த வாக்குத்தத்தத்தை பாராமல் படித்து, உங்களுக்கென்று எடுத்துக்கொண்டு, "ஆண்டவரே, நீர் இப்படி சொல்லியிருக்கிறீரே! எனக்கு சுகம் தாரும். நீரே எனக்கு பரிகாரி (யாத். 15:26). உம்மைவிட்டால் நான் எங்கு போவேன்? இந்த வியாதியின் கூரை நீரே முறித்துப்போடும்" என்று, எந்த வியாதி வந்தாலும் அவரை நோக்கிப் பாருங்கள். இந்த வசனத்தின்படி உங்கள் நோயையெல்லாம் முறித்துப்போடுவார். அவர் சிலுவையிலே உங்கள் நோய்களையெல்லாம் சுமந்து தீர்த்து விட்டபடியால், அவருடைய தழும்புகளால் நீங்கள் குணமாவீர்கள் (ஏசாயா 53:5).

ஒரு மனைவிக்கு வலிப்பு நோய் அடிக்கடி வரும். அது வரும்போது நாக்கை அந்த அம்மாள் கடித்துக்கொள்வார்கள். இரத்தம் புறப்பட்டு வரும். அதன்பிறகு பல நாட்கள் அவர்களால் ஒன்றும் சாப்பிட முடியாது. நன்றாக சுகமாகும். திரும்பவும் வலிப்பு நோய் வந்தால், இதே நிலைமை தான். மிகவும் வேதனைப்பட்டு கலங்குவார்கள். ஒருநாள் அப்படி வலிப்பு நோய் வந்து நாக்கை கடித்துக்கொண்டபோது, இரத்தம் சொட்டுகையில், அவர்களது கணவர் வேதனையுடன் ஆண்டவரை நோக்கிப் பார்த்து, ஜெபிப்பதற்காக தன் தலையைத் தூக்கிப் பார்த்தார். அப்பொழுது ஆண்டவர் சிலுவையிலே அறையப்பட்ட காட்சி படமாக சுவரில் மாட்டப்பட்டிருந்ததை கண்டபோது, ஆண்டவரைப் பார்த்து, அவர் இப்படியாகப் பிரார்த்தித்தார்: "ஆண்டவரே! உம்முடைய தழும்புகளால் குணமாகிறோம் என்று வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறதே! நீர் உம்முடைய இரத்தத்தை இந்த மகளுக்காக சிந்தியது போதாதா? இன்னும் இவள்வேறு சிந்த வேண்டுமா? உம்முடைய வாக்குத்தத்தத்தின்படி இந்த நோயை இவளைவிட்டு விலக்கக்கூடாதா?" என்று கதறிக் கதறி ஜெபித்தார். என்ன ஆச்சரியம்! அந்த இரத்தம் அப்படியே நின்றது. அன்றோடு அந்த வியாதியும் மறைந்தது!

ஆம்! பிரியமானவர்களே, நம்முடைய ஆண்டவர் உயிரோடிருக்கிறார். அவர் தம் வார்த்தையில் மாறாதவர். ஒருவருடைய சிறிய வியாதியோ, பெரிய வியாதியோ எதுவானாலும் அவர் சிலுவையிலே சுமந்து தீர்த்தார் (1 பேதுரு 2:24, மத்தேயு 8:17). இனி நீங்கள் பாடுபட வேண்டிய அவசியம் இல்லை என்பதை விசுவாசித்து, இந்த தம்பதியர் பெற்ற ஆசீர்வாதத்தை இன்றே நீங்களும் பெற்று மகிழுங்கள்!

ஜெபம்: "அன்பு தெய்வமே! உம்முடைய அன்பு எவ்வளவு பெரியது. நான் வியாதியில் வேதனைப்படக்கூடாது என்பதற்காக நீர் உமது சரீரத்தில் அடிக்கப்பட்டீரே. நொறுக்கப்பட்டீரே! இன்று உம்முடைய தழும்புகளால் குணமாகும் பாக்கியத்தை அருளிச்செய்திருக்கிறீரே. உமக்கு கோடான கோடி ஸ்தோத்திரம். இன்றுமுதல் எனக்கும் இந்த தெய்வீக ஆசீர்வாதத்தை நிறைவாய் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"

கர்த்தர் உங்களை ஆசீர்வதித்ததை நினைத்து சந்தோஷப்படுங்கள்!

"...உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களை ஆசீர்வதித்ததுமான யாவுக்காகவும் நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் சந்தோஷப்படுவீர்களாக" (உபாகமம் 12:7).

பொதுவாக நாம் யாவருமே செய்கிற ஒரு தவறான காரியம் ஆண்டவரிடத்திலிருந்து பெற்ற நன்மைகளை நினைத்து பார்ப்பது கிடையாது. அதற்கு பதிலாக, அது இல்லை, இது இல்லை என்று நம்முடைய இல்லாமைகளையே எண்ணி சோர்ந்து போகிறோம். இந்த சந்தர்ப்பங்களில் அநேகர் கடவுளையே குறை சொல்லுவதும் உண்டு. ஆனால், இந்த வசனத்தின்படி, ஒவ்வொரு நாளும் ஆண்டவர் செய்த நன்மைகளை எண்ணிப் பார்க்கும்போது தான் அவருடைய அன்பு, வல்லமை, மகிமை நம் கண்களுக்கு புலப்படும். ஆகவே, கடந்துபோன நாட்கள் போகட்டும்; இனிமேலாவது ஆண்டவர் செய்த சிறிய நன்மைகளையும், பெரிய நன்மைகளையும் எண்ணிப்பார்க்க, அவருக்கு இருதயத்தின் ஆழத்திலிருந்து ஸ்தோத்திரம் செலுத்த கற்றுக்கொள்வோம். "ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான்" (சங். 50:23) என்று வேதத்திலே வாசிக்கிறோம். இதன்படி நாமும் நடந்து, கர்த்தரை மகிமைப்படுத்துவோம்.

ஒரு சாதாரண மனிதன் எத்தனையோ கஷ்டங்களுக்கு மத்தியிலும், மேற்கண்டபடி தன் வாழ்வில் ஆண்டவர் செய்கிற ஒவ்வொரு நன்மைகளுக்காகவும் எப்பொழுதும் அவரை ஸ்தோத்திரிப்பான். "உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலி" (எபி. 13:15) என்றபடி, அவனுடைய உதடுகளில் ஸ்தோத்திரபலியை ஏறெடுத்துக்கொண்டே இருப்பான். இதை அநேகர் கவனிப்பார்கள். ஆண்டவரை அறிந்தும் அறியாத, அரைகுறை பக்தியுள்ள மக்கள் பரிகசிப்பார்கள். அவன் அதற்கெல்லாம் கவலைப்படவே மாட்டான். ஏனென்றால், அவன் ஸ்தோத்திரிக்கும்போது, தேவனுடைய பிரசன்னம் அவனை அளவில்லாமல் நிரப்புவதும், அதன்மூலம் அவனுடைய உள்ளத்திலே ஆண்டவருடைய அளவில்லாத சமாதானம், சந்தோஷம் நிரம்பப் பெறுவதுமே அதற்குக் காரணம்! இப்படி உண்மையாய் கர்த்தரை நாடித்தேடின அந்த மனிதனுடைய வாழ்க்கையிலேயும்கூட பாடுகள் வரும், சஞ்சலம் புயல் போல எதிரிடும். எனினும், அவன் ஏறெடுக்கிற ஸ்தோத்திரபலி அவைகளையெல்லாம் முறியடித்து, எல்லாவற்றிலும் வெற்றி பெற்று முன்னேறுவதை யாவரும் கண்டு ஆச்சரியப்படுவர்.

ஆகவே, எனக்கு அன்பானவர்களே! ஆண்டவருக்கு ஸ்தோத்திரங்களை ஏறெடுப்பது எவ்வளவு விசேஷமானது என்பதை நீங்களும் அனுபவித்துப் பாருங்கள். எப்பொழுதும் முறுமுறுப்பதற்கு பதிலாக, குறைசொல்லி நேரத்தை கழிப்பதற்கு மாறாக, உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்! மென்மேலும் ஆசீர்வாதம் பெறுங்கள் (கொலோ. 3:15)!

ஜெபம்: "அன்பின் தேவனே! உம்மை ஸ்தோத்திரிப்பதின் மகிமை எவ்வளவு பெரிதாய் இருக்கிறது! நானும் இன்றுமுதல் என் வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிடமும் இதைக் கடைபிடித்து மேற்கண்ட சகோதரன் பெற்றதுபோல் நிறைவான ஆசீர்வாதத்தை என் வாழ்விலும் பெற, எனக்கும் அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

உங்கள் முன் ஒருவரும் எதிர்த்து நிற்பதில்லை!

(உபாகமம் 11:25)

நம்முடைய அன்றாட வாழ்க்கையில் நாம் நல்லவிதமாய் நீதியின் பாதையில் நடந்தாலும் கூட நமக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள் எத்தனையோ பேர். அநியாயமாய் நம் மீது குற்றம் சுமத்துகிறவர்கள், பொறாமையினிமித்தம் சஞ்சலப்படுத்த விரும்புகிறவர்கள் இப்படி பற்பல விதங்களிலே நாம் எதிரிகளை சந்திக்க நேரிடுகிறது. அதோடுகூட நல்ல சுகத்தோடு இருக்கிற வேளையில் எத்தனை வியாதிகள், பெலவீனங்கள் நம்மை எதிர்த்து வருவதினிமித்தம் எத்தனை பிரச்சனைகள், கவலைகள், பாரங்களை நாம் அனுபவிக்கிறோம். இவைகள் மத்தியில் நாம் இந்த வாக்குத்தத்தத்தின்படி எப்படி ஆண்டவருடைய தயவையும், இரக்கத்தையும் பெற முடியும்? "தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?" (ரோமர் 8:31) என்று வேதம் சொல்லுகிறபடி, கர்த்தர் நம்மோடுகூட எப்பொழுதும் இருக்கும்படியாக, நாம் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டியது மிக மிக அவசியம். நாம் இதிலே கவனக்குறைவாக இருந்து, என்னுடைய ஞானம், விவேகம், புகழ்ச்சி, அறிவு, புத்திக்கூர்மை இவைகள் மூலம் எதையும் சாதிக்கக்கூடும் என்று எண்ணுவது தவறு. கர்த்தர் ஒருவரே நம்மை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காக்க வல்லவர் (சங். 121:7). ஆகவே, அவரை எவ்வளவு தூரம் தேட முடியுமோ, அவருடைய அறிவை, வேத வசனங்களை படிப்பதின் மூலமாய் அறிந்து கொள்ள முடியுமோ, அப்படி செய்து, இந்த வாக்குத்தத்தத்தின்படி ஆசீர்வாதம் பெறுங்கள்.

ஒரு நிறுவனத்தில் பங்குதாரர் ஒருவரை பலரும் வீணாக குற்றஞ்சாட்டி, அவருடைய மனதை புண்படுத்த திட்டமிட்டனர். ஒரு நாளைக் குறிப்பிட்டு, அவரை அழைத்து, அலுவலகத்தின் முக்கிய அதிகாரிகளைக் கொண்டு விசாரிக்க தீர்மானித்தனர். அந்த நாளும் வந்தது. அந்த மனிதர் முந்தின இரவு முழுவதும், மறுநாள் காலையிலும் கர்த்தரைத் தேடி அவருடைய வசனங்களை தன் பெலனாக பெற்றுக்கொண்டு, அவர்களை சந்திக்க புறப்பட்டு வந்தார். பரிசுத்த ஆவியானவர் அவரை வழி நடத்தினபடியால், அவர்கள் ஒன்றும் அவருக்கு முன்பாக எதிர்த்து பேச முடியாமல், குற்றம் கண்டு பிடிக்க இயலாமல் திண்டாடிப் போகும்படி செய்தார். ஒரு முடிவும் எடுக்க முடியாமல் அப்படியே வெட்கத்தோடு அந்த இடத்தை விட்டு குற்றம் சுமத்தினவர்கள் அகன்று போகும்படியும் ஆண்டவர் அருள் புரிந்தார். ஆம்! "வெள்ளம்போல் சத்துரு வரும்போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய் கொடியேற்றுவார்" (ஏசாயா 59:19).

ஆம், பிரியமானவர்களே! பரிசுத்த ஆவியானவரின் துணை உங்களோடு இருக்கும்பொழுது அவர் உங்களுக்கு ஞானத்தையும், புத்தியையும் அருளுவார். உங்களை எதிர்த்து நிற்பவர்களை அதமாக்கிப்போடுவார், வெட்கப்பட்டுப்போகும்படி செய்வார். ஆகவே, தேவ துணை எவ்வளவு அவசியம் என்பதை உணர்ந்து செயல்படுங்கள் (சங். 70:5).

ஜெபம்: "என் அன்பின் பரம பிதாவே! உம்முடைய துணையில்லாமல், எத்தனை முறை தோல்வி கண்டிருக்கிறேன். இனி ஒருநாளும் அப்படியிராதபடி உம்முடைய பிரசன்னம், பரிசுத்த ஆவியின் நிறைவு என்னை நிரப்ப இன்றுமுதல் எனக்கு உதவி செய்யும். ஒருவரும் எதிர்த்து நிற்க முடியாதபடி என் வாழ்வில் நீரே எனக்கு முன்னும் பின்னுமாக இருந்து காத்தருளும். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!

நீங்கள் கர்த்தருக்கு பரிசுத்தமான ஜனம்!

"நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு பரிசுத்தமான ஜனங்கள்; பூமியின் மீதெங்குமுள்ள எல்லா ஜனங்களிலும் உங்களையே கர்த்தர் தமக்கு சொந்த ஜனங்களாயிருக்கத் தெரிந்துகொண்டார்" (உபாகமம் 14:2).

இந்த உலகில் ஆண்டவரை அறியாத அநேகர் தங்களுக்கு சஞ்சலங்கள் நேரிடும் போது, எனக்கு உதவி செய்வார் யாரும் இல்லையே, அன்பு செலுத்துவார் ஒருவரும் இல்லையே என்று கலங்குகிறார்கள். ஆனால், நீங்கள் என்றைக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை உள்ளத்தில் ஏற்றுக்கொள்கிறீர்களோ அன்று முதல் அவர் உங்களுக்கு சொந்தமாக மாறுகிறார் (1 பேதுரு 2:9). அதோடு கூட உங்கள் வாழ்வைக் குறித்து, அவர் கவனமாக தன் கண்களை எப்பொழுதும் உங்கள் மேல் வைத்து, அநீதி, அக்கிரமம், அசுத்தம் இவைகள் உங்களை தொடாதபடி தம்முடைய செட்டைகளுக்குள் மறைத்து, பொல்லாங்கினின்று விலக்கி காப்பாற்றுகிறார். அவர் தம்மைப்போல் தம்முடைய பிள்ளைகள் பரிசுத்தமாக இருக்க விரும்புகிறார் (1 பேதுரு 1:15,16). ஆகவே, தேவ துணையோடு நாமும் ஒவ்வொரு நாளும் ஆண்டவர் விரும்புகிற பரிசுத்தத்தை, தெய்வ பயத்தோடு பூரணப்படுத்துவது மிகவும் அவசியமான ஒரு காரியம். கர்த்தர் பரிசுத்தமாக்குகிறவர் (லேவி. 21:15). இயேசு கிறிஸ்துவின் சரீரம் சிலுவையிலே பலியிடப்பட்டதினாலே இந்த பரிசுத்தத்தை நாம் பெற்றுக்கொள்கிறோம் (எபி. 10:10).

பக்தியுள்ள ஒரு தாய் தன் ஒரே மகனுக்கு இரட்சிப்பின் பாதையையும், ஆண்டவர் விரும்பும் பரிசுத்தத்தின் பாதையையும் அனுதினமும் விளக்கி கற்றுக்கொடுத்தாள். தன் மகன் வளர்ந்து பெரியவனான பின் பட்டங்கள் பெற வேண்டும், உயர் பதவிக்கு வரவேண்டும், பெயரோடும் புகழோடும் வாழ வேண்டும் என்றெல்லாம் அவள் எண்ணவில்லை. ஆனால், ஆண்டவரை அவனும் ஆழமாய் அறிந்து, அவர் விரும்பும் பரிசுத்தத்தை பெற்றுக்கொண்டு, அவருக்காகவே வரங்களோடு, வல்லமையோடு, சிறந்த ஊழியனாக எழும்பி ஊழியம் செய்ய வேண்டும் என்று மட்டும் விரும்பினாள். ஆனால், அந்த மகனோ இளம் வாலிபனான போது, இந்த பரிசுத்தத்திற்கு நேர்மாறான பல காரியங்களை தாய்க்கு தெரியாமல் செய்ததை கேள்விப்பட்டபோது, அவள் மனம் உடைந்தது. கர்த்தருக்குள் விசுவாசத்தோடு அவனுக்காக உபவாசத்தோடு இரவும் பகலும் மன்றாடினாள். கண்ணீரை காண்கின்ற ஆண்டவர், தாய் விரும்பினதுபோல் அவனை இரட்சித்து, அபிஷேகித்து, வல்லமையால் நிரப்பி, வரம் பெற்ற ஊழியனாக ஆசீர்வதித்தார். அதோடுகூட அவள் கேட்காத ஆசீர்வாதமாகிய உயர் பட்டங்களையும் அவன் பெற்று, பேரும் புகழும் பெற்று வாழவும், தேவன் அருள் புரிந்தார்.

அன்பானவர்களே! நீங்களும் இவ்விதமாக கர்த்தருக்கு பரிசுத்தமான ஜனமாக வாழ்கிறீர்களா? இன்றுமுதல் உங்கள் வாழ்வை ஆண்டவருடைய பரிசுத்த ஆவியானவரின் துணையோடு மாற்றிக்கொள்ள ஜெபம் செய்யுங்கள். பரிசுத்தராகிய ஆண்டவரால் உங்கள் வாழ்வு நிரப்பப்படும்பொழுது, நாளுக்கு நாள் நீங்கள் பரிசுத்தமடைந்து, அவருக்கு பிரியமானவர்களாக மாறுவீர்கள் (ரோமர் 12:1).

ஜெபம்: "அன்பின் தேவனே! இந்த தெய்வீக அனுபவத்தை, நீர் விரும்பும் பரிசுத்தத்தை என் வாழ்விலும் தாரும். என்னில் காணப்படும் குறைகளையெல்லாம் அகற்றி, இன்றுமுதல் உம்மைப்போல் பரிசுத்தமாய் நடக்க அருள் தாரும், ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

பெறப்பண்ணுகிறவர் பெறச் செய்வார்!

"பெறப்பண்ணுகிறவராகிய நான் பெறச்செய்யாமல் இருப்பேனோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; பிரசவிக்கப்பண்ணுகிறவராகிய நான் பிரசவத்தைத் தடுப்பேனோ என்று உன் தேவன் சொல்லுகிறார்" (ஏசாயா 66:9).

வாக்கு மாறாத நம் கர்த்தர் சொல்லியும் செய்யாதிருப்பாரோ? (எண். 23:19). இந்த வசனத்தின்படி தம்மை நோக்கி பார்க்கிற, நம்புகிற, விசுவாசிக்கிற ஒருவரையும் வெட்கப்பட விடமாட்டார். ஆனால், நாமோ நம் உறவினர்களையும், நம் சுயபெலனையும் நம்பி ஏமாற்றங்கொள்கிறோம். லாசரு மரித்து நான்கு நாட்களாகிய பின்னும் இயேசு மார்த்தாளிடம், "நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்" (யோவான் 11:40) என்றார். அப்படியானால் விசுவாசம் என்பது எவ்வளவு விலையேறப் பெற்ற பொக்கிஷம் பாருங்கள்! ஆகவே, எந்த காரியத்திலும் கர்த்தர் எனக்கு உதவி செய்தாலொழிய ஆசீர்வாதம் பெறுவதற்கு வேறு வழி கிடையாது என்பதை உணர்ந்து அவரை உறுதியாய் பற்றிக்கொள்வது மிக மிக அவசியம்.

கர்ப்பவதியான ஒரு தாய் சற்று பலவீனமாக இருந்தார்கள். அவர்களுடைய பிரசவ சமயம் உதவி செய்வதற்கும் சரியான துணை கிடையாது. ஒருபுறம் கவலையாயிருந்த பொழுதிலும், இந்த வசனத்தை உறுதியாய் பற்றிக் கொண்டார்கள். கர்த்தர் எனக்காக யாவற்றையும் செய்து முடிப்பார் (சங். 138:8) என்ற வசனத்தையும் விசுவாசித்து, குழந்தை பெறுவதற்கு முன்பாகவே ஸ்தோத்திரம் பண்ணிக் கொண்டேயிருந்தார்கள். ஸ்தோத்திரம் செய்ய செய்ய, அவர்களுடைய விசுவாசம் மென்மேலும் உறுதிப்பட்டது. பிரசவ வலி வந்தது. உதவி செய்ய வந்த ஒரு மருத்துவ தாதி அதிக அனுபவம் இல்லாதவள். இன்னும் சற்று நேரம் ஆகும் என்று படுத்து உறங்கிவிட்டாள். ஆனால், இந்த தாயோ "ஆண்டவரே, பரிசுத்த ஆவியானவர் மூலமாக என்னை பெலப்படுத்தி, யார் கையிலும் என் குழந்தை அகப்படாமல் நீரே எனக்கு பிரசவம் நடத்தித் தாரும்" என்று பரிசுத்த ஆவியில் நிரம்பி ஜெபம் செய்தார்கள். என்ன ஆச்சரியம்! ஜெபம் செய்த இருபது நிமிடங்களுக்குள் குழந்தை வெளியே வர ஆரம்பித்தது. உடன் தானே அந்த மருத்துவத் தாதி ஓடோடி வந்தாள். குழந்தை வெளியே வந்த பிறகு அதற்கு வேண்டிய உதவிகளையெல்லாம் செய்தாள். அவர்கள் விரும்பியபடியே பரிசுத்த ஆவியானவர்தாமே குழந்தையை அழகாய் வெளியே எடுத்து கொடுத்தார். "ஆண்டவர் எவ்வளவு நல்லவர்!" என்று அந்த தாய் கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள்.

அன்பானவர்களே! பிரசவம் மட்டுமல்ல, மற்ற எந்த காரியத்திலேயும்கூட கர்த்தர் இலகுவாகவே ஆசீர்வாதம் பெறச் செய்வார், படிப்பில் நிறைய மதிப்பெண்கள் தருவார், வேலை வாங்கித் தருவார் மற்றும் சகல தேவைகளையும் அவர் வார்த்தையின்படி அருளிச்செய்வார் (பிலி. 4:19). ஆகவே, இதை என்னால் செய்யமுடியவில்லையே என்ற கவலைக்கு இடங்கொடுக்காமல், "இயேசு அதைப் பெற வழி செய்வார்" என்ற நம்பிக்கையோடு காத்திருந்து, நீங்களும் ஆசீர்வாதம் பெறுங்கள்.

ஜெபம்: "அன்பின் தேவனே! இந்த உலகத்தின் தேவைகளை நினைக்கையில் எவ்வளவாய் விசாரப்படுகிறேன். அப்படியில்லாதபடி, கர்த்தர் எனக்கு உதவி செய்வார் என்று விசுவாசித்து எல்லா நேரமும் ஜெயம் பெற, இன்றுமுதல் எனக்கும் அருள்தாரும். ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

உனக்கு பிதாவாக இருப்பேன்!

"...ஆனாலும் நீ என்னை நோக்கி, என் பிதாவே என்று அழைப்பாய்; நீ என்னைவிட்டு விலகுவதில்லை..." **(எரேமியா 3:19).**

ஆம்! ஆண்டவரை இரட்சகராக ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் அவரை சொந்த பிதாவாக, "அப்பா! பிதாவே!" என்று அழைக்க சுதந்திரம் அல்லது உரிமை பெறுகிறார்கள். இன்று தகப்பனற்றவர்களாய் அல்லது தகப்பன் இருந்தும் பிரயோஜனமற்றவர்களாயிருக்கும் நிலைமையில் நாம் இருக்கலாம். ஏன், தகப்பன் அன்புள்ளவராயிருந்தாலும், நிலையான அன்பு காண்பிப்பவர் தேவன் தான்! ஆகவே, அவரோடு இசைந்து ஐக்கியப்படுவது ஒவ்வொருவருக்கும் மிகவும் அவசியம். இயேசு கிறிஸ்து, "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" என்று தன் வாழ்வைக் குறித்து கூறினார் (யோவான் 10:30). அப்படியிருக்க, நாம் அவருடைய துணையை நாடித்தேடுவது எத்தனை அவசியம். அதைத் தான், "நீங்கள் என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்" (எரே. 29:13) என்று கர்த்தர் கூறினார்! தாவீது தன் மகன் சாலொமோனுக்கு, "மகனே, நீ அவரைத் தேடினால் உனக்கு தென்படுவார். தேடாவிட்டால் உன்னைக் கைவிட்டுவிடுவார்" (1 நாளா. 28:9) என்று புத்தி கூறினார். இந்த அறிவுரையை, ஞானத்தை நாமும் பின்பற்றி, ஆண்டவரோடு இணைந்து வாழ்ந்து, பரலோக ஆசீர்வாதங்கள், மகிழ்ச்சி இவைகளை பெற்றுக்கொள்வோம்.

ஒரு பெண் தன் வேலையினிமித்தம் கணவன், பிள்ளைகளை ஊரிலே விட்டுவிட்டு தனிமையில் அயல்நாடு ஒன்றிலே பணி புரிந்தாள். குடும்பத் தேவைகளுக்கு பணம் தேவை. ஆனால், தனிமையாய் வந்தபொழுதோ அவள் மனம் மிகவும் சஞ்சலம் கொண்டது. அந்த வேளையில் வேத புத்தகத்தை எடுத்து வாசிக்க ஆரம்பித்தாள். ஆண்டவர் அதுவே தருணம் என்று அவளோடு பேசினார். வேத வார்த்தைகள் ஜீவனுள்ளவைகள் அல்லவா! அவைகள் நேரடியாக பேசுவதுபோல் உணர்ந்த அவள் முழங்காற்படியிட்டு, "ஆண்டவரே, நீர் என்னோடிருப்பதை அறியாமல் போனேனே! இன்றுமுதல் நீரே என் துணை, என் சிநேகிதர், என் பிதா" என்று அவரோடு இணைந்து கொண்டாள். அவ்வளவுதான்! அன்றுமுதல் அவளின் தனிமை பறந்தோடியது. ஆண்டருடைய வார்த்தைகளை வாசிப்பதிலும், அவரோடு ஜெபத்தின் மூலம் உரையாடுவதிலும் பேரின்பம் கண்டாள். இந்த வாழ்க்கை அவளுக்கு மட்டுமல்ல, அவள் குடும்பத்தினருக்கும் நிறைவான ஆசீர்வாதத்தை பலவிதங்களிலும் கொண்டு வந்தது.

ஆம்! பிரியமானவர்களே, இன்று நாம் எந்த நிலையில் இருந்தாலும், குடும்பத்தோடோ அல்லது தனியாகவோ வாழ்ந்தாலும் கூட, நம் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டியது ஒரு தெய்வீக ஐக்கியம்! அவரை கவனமாக தேடுவதைவிட்டு தூரமாய் தள்ளி விடாதிருங்கள். நீங்கள் தேடினால் அவர் உங்களண்டைக்கு வருவார். ஆகவே, எவ்வளவு தூரம் அவரோடு நெருங்கி வாழ முடியுமோ, அவ்வளவு தூரம் ஜெபம், வேத வாசிப்பு இவைகள் மூலமாய் அவரை தேடுங்கள் (எரே. 29:13, யோவான் 14:23).

ஜெபம்: "உம்மோடு உறவாடி இணைந்து வாழும் வாழ்க்கை எத்தனை அவசியமானது என்பதை அறிந்து கொண்டேன். இன்றுமுதல் என் வாழ்விலும் ஒரு நிமிடம்கூட உம்மைவிட்டுப் பிரியாமல், உம்மை "பிதாவே" என்று உரிமையோடு அழைத்து, உம்மோடு ஐக்கியம்கொள்ள எனக்கும் உம்முடைய தெய்வீக அருளைத் தாரும். என்னை நீரே கரம் பிடித்து வழிநடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

நீங்கள் என் ஜனங்கள்! கீர்த்தி, துதி, மகிமை பெறுவீர்கள்!

"...நான் இஸ்ரவேல் குடும்பத்தார் அனைவரையும் யூதாவின் குடும்பத்தார் அனைவரையும், எனக்கு ஜனங்களாகவும், கீர்த்தியாகவும், துதியாகவும், மகிமையாகவும் சேர்க்கையாக்கிக் கொண்டேன்..." (எரேமியா 13:11).

ஆண்டவர், ஆபிரகாம், தாவீது, தானியேல் போன்ற பக்தர்களைத் தெரிந்து கொண்டார். அவர்களோடு தங்கியிருந்து, அவர்களை ஆசீர்வதித்து, கனப்படுத்தி, உயர்த்தி, மகிமையான ஆசீர்வாதங்களை பெறும்படி அருள்புரிந்தார். காரணம், அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட இந்த மக்கள் அவரை உறுதியாய் பற்றிக்கொண்டனர். எத்தனை பாடுகள், சோதனைகள் வந்த சமயத்திலும், அவருக்கு பிரியமாக வாழ்ந்து, அவரைத் தேடினபடியால், இத்தகைய தெய்வீக ஆசீர்வாதத்தை, கீர்த்தியை பெற்றுக்கொண்டனர் (சங். 37:22). உதாரணமாக, ஆபிரகாம் குழந்தையில்லாமல் இருந்த நிலைமையிலே ஆண்டவர் கிருபையாக இரங்கி, ஒரு குழந்தையை கொடுத்தார். ஆனால், அதன்பிறகு அவன் தன்மேல் அன்பாய் இருக்கிறானா? என்று அறிந்துகொள்ள, அவனை சோதித்தார். ஆனால், அந்த சோதனையிலும் அவன் அவர்மேல் உண்மையான அன்பு வைத்திருப்பதைக் கண்டு, அவனை சீமானாக உயர்த்தி, மற்றும் பல வகையிலும் ஆசீர்வதித்தார் (ஆதி. 24:1,35).

ஒரு குடும்பத் தலைவி கணவனோடு, பிள்ளைகளோடு கர்த்தரை தேடுவதில் உறுதியாய் வாழ்ந்து வந்தாள். ஆனால், திடீரென்று கணவன் மரித்துப்போனபொழுது, அவளுடைய மனம் உடைந்து போனது. இனி என் வாழ்வு எப்படியிருக்குமோ என்று ஒரு கணம் கலங்கினாள். அடுத்த நிமிடம் ஆண்டவருடைய சந்நிதியில் சென்று அவரிடத்தில் தன் மனக் குமுறல்களையெல்லாம் கொட்டினாள். தேவன் தம்முடைய தெய்வீக சமாதானத்தினால் பூரணமாய் அவள் உள்ளத்தை நிரப்பினார். கவலைகள் யாவும் மாறி, கர்த்தருக்குள் ஒரு சிங்கம்போல் எழுந்தாள். இனி செய்வது என்ன என்பதை பரிசுத்த ஆவியானவர் வழிநடத்த, அப்படியே அன்றாடகம் செய்து, அவர் கொடுத்த தெய்வீக ஆசீர்வாதங்களை அளவில்லாமல் பெற்றுக்கொண்டாள். திடீரென்று அவளுடைய மகன் ஒருவன், "இனி எனக்கு தகப்பன் இல்லையே, நான் என் விருப்பம் போல் வாழட்டும்" என்று நண்பர்களோடு தாய் கஷ்டப்பட்டு சம்பாதித்து கொண்டு வந்த பணத்தை விரயம் பண்ண ஆரம்பித்தான். இது இந்த தாய்க்கு வேதனையைக் கொடுத்தது. எனினும், கர்த்தரை இந்த நிலையிலும் விசுவாசித்து, கர்த்தரை ஸ்தோத்திரிக்க மட்டும் செய்தாள். இந்த மகனால் எவ்வளவு வெட்கத்திற்குள்ளாக வேண்டி வந்ததோ, அத்தனையாய் அதே மகன் மனம் திரும்பவும், எல்லாவற்றிலும் கர்த்தருடைய ஆசீர்வாதம் பெறவும், கர்த்தர் கிருபை புரிந்தபொழுது, நிறைவான பலனை அதிலும் அவள் பெற்றாள்.

அன்பானவர்களே! வாழ்க்கையில் எந்த நிலைமை வந்தாலும் சோர்ந்து போகாமல், நீங்களும் இதே ஆண்டவரை உறுதியாய் தேடுங்கள். "ஜெபமே ஜெயம்" என்பதை உணர்ந்து, விசுவாசத்துடன் கர்த்தரோடு நெருங்கி வாழ்ந்து ஆசீர்வாதம் பெறுங்கள் (1 யோவான் 5:4).

ஜெபம்: "அன்பு தெய்வமே! நீர் சிறுமைப்பட்டவர்களோடும், எளியவர்களோடும் கூடவேயிருந்து கீர்த்தியை, புகழை அருளுகிறவர் என்பதை அறிந்து கொண்டேன். என்னையும் அவ்வாறே இன்றுமுதல் உம்முடைய தெய்வீக வழியில் நடத்தும். உமக்கு நன்றி செலுத்துகிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

இடுக்கமென்னும் சமுத்திரத்தின் அலைகளை அடிப்பார்!

(சகரியா 10:11).

உலக வாழ்வு பொல்லாங்கு நிறைந்தது. போராட்டங்கள், பிரச்சினைகள், வேதனைகள் நிறைந்தது. இருப்பினும், கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது (சங். 34:10). அவர் பொங்கியெழுகிற அலைகளை "இம்மட்டும் வா, மிஞ்சி வராதே" என்று அடக்குகிறவர் (யோபு 38:11). "அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்" (சங். 33:9). யோபு, "தேவனுடைய மனுஷன்" என்று தேவனிடத்திலிருந்து நற்சாட்சி பெற்றிருந்தான். எனினும், அவன் வாழ்க்கையில் எத்தனை போராட்டங்கள்! துன்பங்கள்! இருப்பினும், "அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்" (யோபு 13:15) என்று அவன் விசுவாசத்தில் உறுதியாய் நின்ற படியால், கர்த்தர் அவனுக்கு வந்த எல்லாவித சிறையிருப்புகளிலிருந்தும் அவனை விடுவித்து, இரண்டு மடங்கான ஆசீர்வாதத்தைக் கொடுத்தார் (யோபு 42:10). அவன் நம்பிக்கை வீண் போகவில்லை.

என் வாழ்க்கையில் வாலிப வயதில், பெற்றோரின் அன்பினிமித்தம் கவலையில்லாமல் நான் வாழ்ந்தேன். ஆனால், திருமணம் என்று சொன்னவுடன் என் மனம் கலங்கியது. ஏனென்றால், வாலிப வயதில் கவலை என்பதே இல்லாமல் இருந்த நிலை இனிமேல் மாறிவிடுமோ என்றுதான் பயம். ஆனால், கர்த்தர் அதற்கு ஆயத்தப்படும் வேளையில் என்னை முதலாவதாக அவருடைய மகளாக சொந்தமாக்கிக் கொண்டார். திருமணமானது; உடனடியாக மாறி மாறி, பிரச்சினைகள் மலைபோன்று வந்தது. ஆனால், என்னை தம்முடைய மகளாக்கிக் கொண்ட ஆண்டவர் என்னோடுகூட இருந்ததை நான் உணர்ந்து, அவருக்குள் தைரியமடையவும், அவர் கரத்தினால் ஒவ்வொரு பிரச்சினையிலிருந்தும் விடுதலை பெறவும் ஆண்டவர் அருள்புரிந்தார். இன்று என் வாழ்வை திரும்பி பார்க்கும்பொழுது, எப்படி அவைகளினின்று வெளியே வர முடிந்தது என்று நினைக்கும்போது, கர்த்தருடைய வல்லமை எத்தனை அதிசயமாய் வழிநடத்தியது என்று எண்ணுகையில் யாவும் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. பிசாசு ஆரம்பத்திலிருந்தே எங்கள் குடும்ப வாழ்வை நசித்துவிட எவ்வளவோ முயற்சி செய்தான் (யோவான் 10:10). ஆனால், இயேசுவோ ஜீவனைக் கொடுக்கவும், அது பரிபூரணப்படவும் வந்ததால், அவனுடைய எல்லாத் திட்டங்களையும் முறித்துப்போட்டு, முற்றிலும் வெற்றியையே தந்து, இம்மட்டும் நடத்தியிருக்கிறார் (ரோமர் 8:36,37).

அன்பானவர்களே! உங்கள் வாழ்க்கையிலும் "இடுக்கமான சமுத்திரம்" போன்று பொங்கி எழுகின்ற அலைகள், சீறி எழும்புகிற புயல் காற்று, திடீர் திடீரென்று வரலாம். ஆனால், ஒன்றுக்கும் கவலைப்படாதிருங்கள். கர்த்தர் உங்களோடு இருந்தால், அவர் அந்த அலைகளை, காற்றை அடிப்பார் (சங். 89:9). சமாதானத்தினால் நிரப்பி, அற்புதமாய் வழிநடத்துவார் (ரோமர் 16:20).

ஜெபம்: "அன்பின் இரட்சகரே! உம்மையல்லாமல் என்னால் ஒன்றும் செய்யக்கூடாது. இன்றுமுதல் நீரே எனக்கு பெலனாக, ஞானமாக, எதிர்த்து நின்று போரிடுவதில் உதவி செய்பவராக, என் வாழ்வில் எழும்பும் காற்றையும் கடலையும் அடக்குபவராக, எனக்கு உதவி செய்யும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

தேவன் மன்னிக்கிறதற்கு தயை பெருத்திருக்கிறார்!

(ஏசாயா 55:7).

பாவியான பெண் ஆண்டவருடைய அன்பை நாடித்தேடி வந்தபொழுது, கூடியிருந்த எல்லோரும் அவள் "பாவி" என்று கூறியபொழுதிலும், தம் இணையற்ற அன்புடன் அவளை அவர் மன்னித்து, தம்மை விசுவாசத்துடன் அவள் தேடி வந்தபடியினால், "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது; சமாதானத்தோடே போ" என்று அவளை சந்தோஷமாக அனுப்பி வைத்தார் (லூக்கா 7:50). பாவங்களை மன்னிக்க அவர் ஒருவரால் தான் கூடும்! ஏனென்றால், அவர் ஒருவர்தான் சிலுவையிலே நம்முடைய பாவங்களுக்காக, அக்கிரமங்களுக்காக தம்மையே அர்ப்பணித்தார். இதே அன்புடன் இன்றும் என்றும் மாறாத நிலையில் தம்மை நோக்கி, "என்னை மன்னியும் ஆண்டவரே" என்று கதறும் எந்த பாவிக்கும், தயவையும், இரக்கத்தையும் காண்பிக்கிறவராய், அவைகளை மன்னித்து மறக்கிறவராய் இருக்கிறார் (எரே. 31:34-ன் கடைசி பாகம்).

ஒரு மனிதன் குடும்பத்திலுள்ள தன் மனைவி, பிள்ளைகளிடத்தில், உறவினர்களிடத்தில் கொஞ்சமும் அன்பு காண்பிக்கமாட்டான். அதேபோல் தான் பணிபுரியும் இடத்திலும் யாருக்கும் பணிந்துபோகமாட்டான். முரட்டுத்தனமாய் நடந்துகொள்வான். இதனால் ஒருவருக்கும் அவன்மீது பிரியமிராது. பிள்ளைகள்கூட தகப்பன் என்று பார்க்காமல் அவன் ஏன் வீட்டுக்கு வருகிறான் என்ற எண்ணுவதுண்டு. இந்த நிலைமையில், நன்றாக குடித்துவிட்டு, வீட்டிற்கு வந்து, மனைவி, பிள்ளைகளையெல்லாம் துன்பப்படுத்தி, பின்பு படுத்து உறங்கிவிடுவான். ஒரு நாள் அவனுடைய உறக்கத்திலே திடீரென்று ஒரு சொப்பனம் கண்டான். அந்த சொப்பனத்தில் ஆண்டவர் இயேசு சிலுவையிலே அறையப்பட்டவராய், தன் இரு கரங்களும், கால்களும் ஆணிகளால் அடிக்கப்பட்ட நிலைமையில், அவனைப் பார்த்து பேசுவதுபோல், "மகனே, உனக்காக அடிக்கப்பட்டேனே! இனியும் ஏன் என்னை அடிக்கிறாய், துன்பப்படுத்துகிறாய்! என்னை நீ நேசிக்கமாட்டாயா?" என்று கேட்பதுபோல் அவனுக்கு தென்பட்டது. அவனுடைய கடின உள்ளம் சுக்குநூறாக உடைந்தது. கண்விழித்து பார்த்தால் அங்கு எல்லோரும் உறங்கிக்கொண்டிருந்தார்கள். பாவம், அவனுடைய சிறுபிள்ளை அவன் அடித்த அடி தாங்காமல் முனகிக்கொண்டிருந்தது. அதை கண்டபொழுது அவன் மனமுடைந்து, அப்படியே போய் அவளை அணைத்து முத்தமிட்டு, தன் மனைவியை எழுப்பி, நடந்ததை கூறினான். அன்றே அவன் உண்மையான கிறிஸ்தவனானான். அவனுடைய வாழ்வு தலைகீழாய் மாறியது.

அன்புக்குரியவர்களே! எப்பேர்ப்பட்ட மனிதனையும்கூட தேவ அன்பு தலைகீழாய் மாற்றிப்போட வல்லமையுள்ளது (ஓசியா 11:4). இன்று உங்கள் வாழ்வை சீர்தூக்கிப் பார்த்து, இப்படிப்பட்ட அசுத்தங்கள், கேடான எண்ணங்கள், முரட்டு குணங்கள் இருக்குமானால், இதே ஆண்டவர் உங்களையும் தம்மண்டை அழைக்கிறார். "மகனே, மகளே, என்னிடத்தில் வா, உன் இருதயத்தை எனக்குத் தா" (நீதி. 23:26) என்று அன்பே உருவாக அழைக்கிறார்.

ஜெபம்: "அன்பின் தெய்வமே! உம்முடைய கல்வாரி அன்பு இந்த உலகத்திலே எந்த அன்புக்கும் ஈடில்லாதது. இந்த அன்பு என்னையும், என் வாழ்வில் உள்ள குறைகளையெல்லாம் மாற்றி, உமக்கு பிரிமாய் நடக்க வழிநடத்தும்படி கிருபை செய்யும். இன்றுமுதல் உமக்கு பிரியமில்லாத ஒரு காரியமும் என் வாழ்வில் காணப்படாதபடி என்னை மன்னித்து, நீர் விரும்பும் பரிசுத்த பாதையில் நடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

நுனிக்கிளையை கனிதரும் கேதுரு மரமாக்குவார்!

"கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: நான் உயர்ந்த கேதுருவின் நுனிக்கிளைகளில் ஒன்றை எடுத்து, அதை நடுவேன்; அதின் இளங்கிளையிலுள்ள கொழுந்துகளில், இளசாயிருக்கிற ஒன்றைக் கொய்து, அதை உயரமும் உன்னதமுமான ஒரு பர்வதத்தின்மேல் நாட்டுவேன்.

இஸ்ரவேலின் உயரமான பர்வதத்திலே அதை நாட்டுவேன்; அது கொப்புகளை விட்டு, கனிதந்து, மகிமையான கேதுருவாகும்; அதின் கீழே சகலவித பட்சிஜாதிகளும் தங்கி, அதின் கிளைகளின் நிழலிலே தாபரிக்கும்" (எசேக்கியேல் 17:22,23).

ஆவிக்குரிய வாழ்க்கையில் பல நிலைகள் உண்டு. சாதாரண நிலையில் உள்ள எவரையும் கூட கர்த்தர் இந்த வசனத்தின்படி, கனி தரும் அதாவது பலன் தரும் கேதுரு மரமாக மாற்ற வல்லமையுள்ளவர். ஆனால், நாம் அதை விரும்பி, அவரிடத்திலே கேட்க வேண்டும். "கேட்கிற எவனும் பெற்றுக்கொள்கிறான்" என்று தான் வாசிக்கிறோம் (மத். 7:8). அவருடைய அழைப்பு ஆச்சரியமானது! ஒன்றுமறியாத பேதையான, உலக ஞானமற்ற, தெய்வீக பரிசுத்தத்தில் குறைவுள்ள மக்களையெல்லாம்கூட அவர் உன்னத ஸ்தானத்திற்கு "கனி தரும் கேதுருவாக" மாற்றுவதற்கு வல்லமையுள்ளவராக இருக்கிறார். ஆண்டவரால் அழைக்கப்பட்ட சீஷர்கள் வாழ்விலும்கூட மனுஷ பயம், சமாதானத்தை இழந்த நிலை யாவும் வந்து, அவர்கள் அழைக்கப்பட்ட அழைப்பிலிருந்து விலகி, திரும்பவும் மீன் பிடிக்க புறப்பட்டபொழுது, இயேசு அவர்களை தேடிவந்து (யோவான் 21:3–5), பரிசுத்த ஆவியை காத்திருந்து பெறும்படி வழிநடத்தியதால் (அப். 1:5,8), அவர்கள் பெலனடைந்து, கேதுரு மரமாக கனிதரும் வாழ்வை வாழ தேவன் கிருபை புரிந்தார்.

ஆண்டவர், 1988 ஆம் ஆண்டு என்னையும் ஒரு தெய்வீகப் பணியை ஆரம்பித்து நடத்தும்படி என்னோடு பேசினார். பெண்களுக்கென்று ஜெபிக்க ஒரு குழுவை ஏற்படுத்து என்றார். இதில் என்னோடு ஒருசிலர் மட்டுமே கலந்து கொண்டனர். ஆனால், அதன்பிறகு தேவ தயவினால் ஜெபிக்கத் தெரியாத, ஆண்டவரைப் பற்றிய அறிவு அதிகமில்லாத நிலையில் இருந்தவர்களும்கூட, இந்த குழுவில், அதாவது "எஸ்தர் ஜெபக்குழு" என்ற ஜெபக்குழுவோடு சேர்ந்துகொள்ள புறப்பட்டு வந்தனர். இப்படி சேர்ந்த மக்களை தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியினால் நிரப்பினார். இன்று அப்படிப்பட்ட மக்கள் தெய்வீக பெலன், ஞானம், அறிவு, பரிசுத்தம், வல்லமை, இவைகளால் நிறைந்து, கிறிஸ்துவுக்கென்று எழும்பிப் பிரகாசிக்க, கனி தரும் கேதுருவாக மாற்றியிருக்கிறார். இது எத்தனை ஆச்சரியமாக இருக்கிறது.

அன்பானவர்களே! இதே ஆசீர்வாதத்தை நீங்களும் பெற விரும்புகிறீர்களா? "ஐயோ, நான் ஒரு நுனிக்கிளை, எந்தநேரமும் ஒடிந்துபோவேன். சோர்வு வந்துவிட்டால் அவ்வளவுதான்" என்றெல்லாம் நினைக்காதிருங்கள். கர்த்தரிடம் கேளுங்கள். "என்னையும் மேற்கண்ட வசனத்தின்படி ஆசீர்வதியும்" என்று கேட்டால், அவர் நிச்சயம் உங்களையும் பெலப்படுத்தி, தமது கிருபையை உங்களுக்கும் அருளிச்செய்வார். உலகத்திலே வெளிச்சமாக, உப்பாக, பிரகாசிக்கும் சூரியனாக உங்களையும் மாற்றுவார் (பிலி. 2:14).

ஜெபம்: "அன்பின் தெய்வமே! உம்முடைய ஊழியத்தில் நீர் எனக்கும் பங்கு கொடுத்து, உபயோகமற்ற என் வாழ்வை உம் பொறுப்பிலே எடுத்து, எழும்பிப் பிரகாசிக்க இன்றுமுதல் தெய்வீக ஞானம், வல்லமை, ஆசீர்வாதத்தை நிறைவாய் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

நீ அவரைத் தேடினால் உனக்கு தென்படுவார்!

"என் குமாரனாகிய சாலொமோனே, நீ உன் பிதாவின் தேவனை அறிந்து, அவரை உத்தம இருதயத்தோடும் உற்சாக மனதோடும் சேவி; கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார்; நீ அவரைத் தேடினால் உனக்கு தென்படுவார்; நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார்" (1 நாளாகமம் 28:9).

இந்த வசனத்தை வாசிக்கும்பொழுது, ஒரு தகப்பனாகிய தாவீதின் உள்ளம் கர்த்தரோடு எப்படி இசைந்திருக்கிறது என்று பார்க்கிறோம். ஆண்டவர் நம் ஒவ்வொருவரைக் குறித்தும் விரும்புகிற வாழ்க்கை இதுதான்! தயவுசெய்து ஒவ்வொருவரும் இதை வாசித்து, சாலொமோனுக்கு கொடுத்த அறிவுரையாக நினைக்காமல், கர்த்தர் உங்களோடு பேசுகிற வார்த்தையாகவே எண்ணி, அதை செயலிலாக்கிக் கொள்வீர்களானால், நீங்கள் பெறும் ஆசீர்வாதம் இணையற்றதாய் இருக்கும். ஆண்டவரை அறிவது, அவரைத் தேடுவது என்பது ஒவ்வொரு தேவபக்தியுள்ள மனுஷனுக்கும், மனுஷிக்கும் அவசியமான, இரு கண்களைப் போன்ற காரியம். இதை தாவீது கடைபிடித்ததினிமித்தம் தான் அவன் ஒரு பராக்கிரமமுள்ள ராஜாவாக வெற்றி சிறந்தான். கர்த்தர் அவனோடுகூட இருந்தார். அவரை கருத்தாய் தேடி கைவிடப்படாதவனாக கனப்படுத்தப்பட்டான் (சங். 31:19).

ஒரு குடும்பத் தலைவன் மிகுந்த பக்தியோடு தாவீதைப்போல, ஆண்டவரை நேசித்து வாழ்ந்து வந்தான். ஆனால், அவனுடைய மனைவியோ, பிள்ளைகளோ, உறவினர்களோ அவனுடைய வழியை பின்பற்றவில்லை. அவனோ அவர்களுக்காக கருத்தாய் பிரார்த்தனை செய்து வந்தான். ஒரு சமயம் அவன் இருந்த ஊரிலே கனத்த மழை பெய்தது. மழை வெள்ளமாக புரண்டு வந்தது. அநேக வீடுகள் வெள்ளத்திற்குள்ளே மூழ்கிப் போகும் நிலைமை ஏற்பட்டது. அவனுடைய வீட்டில் ஒரு சேதமும் வராதபடி கர்த்தர் அவனிமித்தம் அவன் குடும்பத்தை காப்பாற்றினார். அக்கம் பக்கத்திலுள்ளவர்களுக்கெல்லாம் ஒரே ஆச்சரியம்! அவன் சொந்த குடும்பத்தினரோ இந்த கடின சூழ்நிலை வந்தபொழுதுதான் தகப்பன், கணவன் பக்தி எவ்வளவு உன்னதமானது என்பதை உணரும்படி ஆண்டவர் அருள்புரிந்தார். அதன் பிறகு அவன் எப்பொழுது பிரார்த்தனை செய்ய அழைத்தாலும் குடும்பத்தினர் ஓடோடி வரும்படி, ஒருமனதையும், ஒற்றுமையையும் குடும்பத்திலே ஆண்டவர் அருளிசெய்தார். அந்த ஊராரும் அவனுடைய பக்தியை பாராட்டி, அவனைப்போலவே அநேகர் ஆண்டவரை தேடுகிறவர்களாக மாறினார்கள்.

ஆம்! பிரியமானவர்களே, நீங்களும் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக, ஏன் குடும்பத்தில் ஒருவரும் உங்களை ஆதரிக்காத நிலைமையிலும்கூட கர்த்தரை உறுதியாய் பிடித்துக் கொண்டு, அவரைத் தேடுவதில் கவனமாயிருங்கள். தாவீதை உயர்த்தின ஆண்டவர் உங்களையும் ஏற்ற சமயம் எல்லோருக்கும் முன்பாக உயர்த்தி, கனப்படுத்துவார் (சங். 75:10).

ஜெபம்: "அன்பின் தேவனே! உம்மை உறுதியாக தேடுவதின் மேன்மையை நான் அருமையாக புரிந்துகொண்டேன். இனி யார் எவ்வளவு எதிர்த்து பேசினாலும், நடந்தாலும் நான் உம்மை விடுவதில்லை. உம்மைத் தேடுவதில் கவனமாயிருப்பேன். இன்றுமுதல் நானும் அப்படியே நடக்க நீரே வழிநடத்தும், ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

உபவாச ஜெபம் – நிறைவான பலனைத் தரும்!

"அப்படியே நாங்கள் உபவாசம் பண்ணி, எங்கள் தேவனிடத்திலே அதைத் தேடினோம்; எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளினார்" (எஸ்றா 8:23).

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையில், தேவாதி தேவனுடைய திருக்குமாரனாய் அவர் இருந்தபொழுதிலும், ஜெப வாழ்க்கை மற்றும் உபவாச ஜெப வாழ்க்கையை அவரும் கடைபிடித்தார். எனவே, அவரைப் பின்பற்றுகிற நாமும் அதே போன்று பல நேரங்களிலும் உபவாசம் செய்து ஜெபிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. எஸ்றா என்ற தேவ மனிதன் தேவனுடைய ஜனங்களை வழிநடத்தினபொழுது, எஸ்றா 8:21–ன்படி, தேவனுக்கு முன்பாக தாழ்த்தவும், பிள்ளைகளுக்காக, பொருள்களுக்காக செம்மையான வழியைத் தேடவும், உபவாசத்தைக் கூறி, அதினிமித்தமாக ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டான் என்று வாசிக்கிறோம். பிசாசையும், அவனுடைய கிரியைகளையும் முறியடிக்க உபவாச ஜெபம் அவசியம் என்பதை ஆண்டவரே வலியுறுத்தியிருக்கிறார் (மத்தேயு 17:21). எனவே, இந்த பொல்லாத உலகத்தில் வாழ்கிற நமக்கு, சாதாரண ஜெப வாழ்க்கை மட்டும் போதாது. அவ்வப்பொழுது நம்மை தாழ்த்தி, கர்த்தருடைய சமுகத்தில் தனித்திருந்து, உபவாசித்து ஜெபிக்க வேண்டியது அவசியம்.

ஒரு வங்கி அதிகாரி கர்த்தரைத் தேடுவதில் கருத்தாய், பயபக்தியுடன் இருந்தார். அதோடுகூட தன் வேலையிலும் உண்மையும் உத்தமமுமாய் இருந்தார். ஒரு சில மேலதிகாரிகள் கர்த்தரை அறியாதவர்களாய் இருந்தபடியால் அவருக்கு எவ்வளவோ தொல்லை கொடுக்க முயன்றார்கள். ஆனால், அவர் எப்படிப்பட்ட பிரச்சினை வந்தாலும், உபவாசித்து, ஆண்டவருடைய துணையை நாடித்தேடி ஆச்சரியமாய் அவைகளில் இருந்து விடுதலை பெறுவார். இந்த வங்கியின் மேலதிகாரிக்கு குடும்ப வாழ்க்கையிலே ஒரு பயங்கரப் புயல் வந்தது. அப்பொழுது அநேகருடைய வேண்டுகோளின்படி அவருக்கு அடியில் வேலை பார்த்த இந்த பக்தியுள்ள அதிகாரியை தன் வீட்டிற்கு வரும்படி அழைத்தார். அவர் தன்னைத் தாழ்த்தி, அந்த பிரச்சினைக்காக உபவாசித்து, கருத்தாய் வேண்டுதல் செய்தார். என்ன ஆச்சரியம்! கர்த்தர் அவரோடு இருந்து அவரை வெட்கப்படுத்தாமல் கனப்படுத்தினார். அந்த மேலதிகாரியின் பிரச்சினை அப்படியே மறைந்தது. அப்பொழுதுதான் அவருடைய உண்மையான பக்தியை, மதிப்பை உணர்ந்த மேலதிகாரி அவருக்கு உபத்திரவம் செய்வதை நிறுத்தி, உதவி செய்கிறவராக மாறினார்.

ஆம்! பிரியமானவர்களே, உங்கள் வாழ்க்கையிலும் பல்வேறு பிரச்சினைகளை அலுவலகத்தில், வீட்டில் மற்றும் பலவிதங்களில் நீங்கள் சந்திக்கலாம். உடனடியாக ஆகாரத்தையும், தண்ணீரையும் வெறுத்து ஒதுக்கி, எஸ்தரைப்போல் ஆண்டவர் சமுகத்தில் ஜெபியுங்கள் (எஸ்தர் 4:16). கர்த்தர் உங்களுக்கு எதிராக புறப்பட்டு வரும் சகல திட்டங்களையும் முறியடித்துப் போடுவார். எந்தவிதமான பிசாசின் கட்டுகளையும், தாங்க முடியாத பிரச்சினைகளையும் உபவாசத்தோடுகூடிய ஜெபம் முறித்துப்போடும் என்பதை அனுபவித்து பாருங்கள்.

ஜெபம்: "அன்பின் தேவனே! எனக்கும் இந்த உண்மையை அறிந்துகொள்ள உதவி செய்த்ர். இன்றுமுதல் நானும் என்ன வந்தாலும் உபவாசித்து உம்மைத் தேட, தெய்வீக வழிநடத்துதலை பெற்றுக்கொள்ள அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

நீங்களே எனக்கு சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்!

"இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்கு சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது" (யாத்திராகமம் 19:5).

ஆண்டவருக்கு விருப்பமாய் வாழ்வது எப்படி? என்று அநேகர் கேட்கிறார்கள். இந்த வசனத்தில் இதைக் குறித்து அழகாய் கூறப்பட்டிருக்கிறது. அவருடைய வார்த்தையை வேத புத்தகத்தில் வாசிக்கிறோம், பக்தர்கள் மூலமாய் கேட்கிறோம். இந்த வார்த்தைகளை விசுவாசித்து, நமக்கென்று எடுத்துக்கொள்ளும்போது, அதன்படி கருத்தாய், கவனமாய் நடந்துகொள்ளும்பொழுது, ஆண்டவருக்கு பிரியமானவர்களாய் அவருக்கு சொந்த சம்பத்தாய் நாம் மாறி விடுகிறோம் (ஏசாயா 62:4). இன்னும் நம்மை அவரோடு இணைத்துக்கொள்ள, சிலுவையிலே தன்னையே அர்ப்பணித்த ஆண்டவருடைய இரத்தம் நம்முடைய பாவங்கள், அக்கிரமங்கள், அநியாயங்கள், அடிமைத்தனங்கள் யாவற்றினின்றும் நம்மை கழுவி சுத்திகரிக்கும்படி அவரை நோக்கிப் பார்க்கும்பொழுது, அவைகளினின்று விடுதலை பெற்று அவரோடு இணைந்து கொள்கிறோம். இந்த இன்பமான வாழ்க்கையை இன்று எத்தனை பேர் மேற்கொண்டிருக்கிறோம்? இதை அனுபவித்துப் பார்த்தால் தான் இந்த வசனத்தின் மேன்மை நமக்கு புரியும். உலகப் பிரகாரமாக நல்ல நிலைமையில் இருப்பவர்களை எனக்கு சொந்தம் என்று சொல்லு கிறோம். ஆனால், இயேசு எனக்கு சொந்தம், நான் அவருக்கு சொந்தமானவன் (ள்) என்று சொல்லும்பொழுது, அதிலே ஏராளமான ஆசீர்வாதங்கள், மகிழ்ச்சியை பெறுகிறோம் என்பதை மறந்துவிடாதிருங்கள் (தீத்து 2:14).

என்னுடைய கணவரின் தகப்பனார் ஆண்டவரை இரட்சகராக ஏற்றுக்கொண்ட பிறகு உறுதியாக அவரை பற்றிப் பிடித்துக்கொண்டார். மிகுந்த விசுவாசத்தோடு ஜெபம் செய்வார். ஆண்டவர் விரும்பும் காரியங்களை தவறாமல் நிறைவேற்றுவதில் கவனமாயிருப்பார். அதிகாலையில் எழுந்து, அருகில் இருப்பவர்கள் எழுந்துவிடக் கூடாது என்று டார்ச் லைட் ஒளிமூலம் வேத வசனங்களை வாசித்து, வாக்குத் தத்தங்களைப் பிடித்து ஜெபிப்பார். குடும்பத்தினர் ஒவ்வொருவருக்காக மன்றாடுவார். அவருடைய ஜெபம் தான் இன்று சந்ததி சந்ததியாக தேவ பக்தியுள்ள சந்ததியாக எங்கள் குடும்பம் மாறும்படியாக ஆண்டவர் கிருபை செய்திருக்கிறார்.

அன்பானவர்களே! இந்தவிதமாக நாம் ஒவ்வொருவரும் நடந்துகொள்ளும்போது, நம் குடும்பத்திற்கு, நம் சொந்த வாழ்க்கைக்கு, நாம் ஆராதனை செய்யும் ஆலயத்திற்கு நம் மூலமாக எத்தனை ஆசீர்வாதம் உண்டாகும். இன்று நம் வாழ்க்கையை யோசித்துப் பார்த்து, அதில் உள்ள குறைவுகள் எல்லாவற்றையும் தேவ சமுகத்தில் அறிக்கையிட்டு, இந்த தெய்வீக வழியை நாமும் பின்பற்றுவோமா? (தீத்து 3:14).

<u>ஜெபம்</u>: "அன்புள்ள தெய்வமே! நான் உம் சொந்தப் பிள்ளையாக மாறுவதற்காக உம்மையே சிலுவையில் பலியாக அர்ப்பணித்தீரே! இந்த தெய்வீக அன்பின் மேன்மையை உணர்ந்து, உமது கிருபையினால், பாவத்திற்கு செத்து, நீதிக்குள் வாழும் தெய்வீக அனுபவத்தைப் பெற்று, உம்மோடு இணைந்து வாழ்கிற வாழ்க்கையை எனக்கும் தந்து, அநேகரை நித்திய ஜீவனுக்கென்று ஆயத்தப்படுத்த <u>இன்றுமுதல்</u> எனக்கும் கிருபை தாரும், ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"



கர்த்தர் சகல ஜாதிகளிலும் மேன்மையாக வைப்பார்!

"...உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார்"
(உபாகமம் 28:1).

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, யார் யார் வேதத்தை வாசித்து, அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, எல்லாக் காரியங்களிலும் பயபக்தியுடன் நடக்கிறார்களோ, அவர்கள் மீது பிரியமாயிருக்கிறார் (சங். 1:2,3). அவர்களுடைய வாழ்வை தாமே பொறுப்பெடுத்துக் கொண்டு, மற்றவர்கள் கண்களுக்கு முன்பாக அவர்களை மேன்மைப்படுத்துகிறார். வேதபுத்தகத்தில் இப்படிப்பட்ட பக்தர்கள் அநேகருடைய வாழ்க்கையைக் குறித்து நாம் வாசிக்கிறோம் அல்லவா? அதேபோன்று இன்று நாமும் ஒரு தீர்மானம் செய்வோம். இந்த வசனத்தை கருத்தாய் வாசித்து, அதன்படி என் வாழ்வு இருக்கிறதா? என்று யோசித்துப் பார்த்து, ஜெபத்தில் ஆண்டவருடைய துணையை நாடித் தேடுவோம். கர்த்தர் நம் பலவீனங்களையெல்லாம் மாற்றுவார். எந்தெந்த சமயத்திலே, எப்படியெப்படி நடந்து கொள்ள வேண்டுமோ, அவரே நமக்கு போதித்து, ஆலோசனை கொடுத்து ஆச்சரியமாக நடத்துவார் (ஏசாயா 48:17).

ஒரு வாலிபப் பெண் இளம் வயதிலே ஆண்டவரை நாடித்தேடாமல் தன் மனம்போல் வாழ்ந்து வந்தாள். கொஞ்சமும் பக்தியில்லாத பரிதாப நிலைமையில் இருந்தாள். ஆனால், அவளோ அதைப்பற்றி கவலைப்படவேயில்லை. யார் புத்தி சொன்னாலும், "ஆண்டவர், உலகத்தில் எல்லாக் காரியங்களையும் அனுபவிக்கத்தானே படைத்திருக்கிறார், நீங்கள் பேசாமல் இருங்கள்" என்பாள். ஒருவரும் அவளிடம் பேச முடியாத நிலைமையில் ஒருநாள் எப்படியோ ஆண்டவருடைய அன்பை அவள் ருசிக்கும்படியாய் ஆண்டவர் அருள் புரிந்தார். என்ன ஆச்சரியம்! அவளுடைய வாழ்வு தலைகீழாய் மாறியது. சாதாரண கஷ்ட நிலைமையில் வாழ்ந்த குடும்பம் தான் அவளுடைய குடும்பம். பன்னிரண்டாம் வகுப்பை முடித்தாள். அதன்பிறகு கல்லூரிக்கு அனுப்ப முடியாத கஷ்ட நிலைமை. எனினும், ஆண்டவரை நோக்கி பிரார்த்தனை செய்தாள். "சுவாமி, முன்பு நான் மனம்போல் வாழ்ந்தேன். ஆனால், இன்று உம்முடைய தெய்வீகக் கிருபையினால் என்னை உம் மகளாக்கிக் கொண்டீர். இப்பொழுது என் எதிர்காலம் உம் கரத்தில் இருக்கிறது. உமக்கு சித்தமானால் நிறைய படித்து, பட்டங்கள், பதவிகள் பெறவும் அருள் தாரும்" என்று தன் வாழ்வை அர்ப்பணித்தாள். என்ன ஆச்சரியம்! கர்த்தர் அவள் ஜெபத்தை கேட்டார். அநேகருடைய உதவியைக் கொண்டு, அவள் ஜெபித்ததைப்போல், பட்டங்களையும், பதவியையும் பெற கர்த்தர் அருள் புரிந்தார். கர்த்தரை தேடினதினால் இது அவளுக்கு கிடைத்த ஆசீர்வாதம் என்று மற்றவர்கள் பேசும்படி கர்த்தர் அருள்புரிந்தார்.

என் அன்பு சகோதர, சகோதரிகளே, வாலிபப் பிள்ளைகளே, உங்கள் எதிர்காலத்தை குறித்து கவலைப்பட வேண்டாம். கர்த்தரை தேடுங்கள். அவரை உங்கள் சிருஷ்டிகராக, இரட்சகராக, நண்பராக பற்றிக்கொள்ளுங்கள். கர்த்தர் உங்களை மேன்மைப்படுத்துவார். குறைகளையெல்லாம் ஒன்றுமில்லாமல் மாற்றிப்போடுவார் (பிலி. 4:19).

ஜெபம்: "என் அன்பு தெய்வமே! நீர் இல்லாமல் என்னால் ஒன்றும் செய்யக்கூடாது என்பதை அறிந்து கொண்டேன். உம்மையே நான் முழுவதுமாக தேட இன்றுமுதல் எனக்கு கற்பித்து, கரம்பிடித்து நடத்தும். அதன்மூலம் என் குறைவுள்ள வாழ்க்கை மாறி நிறைவான வாழ்வைப் பெற, என்னை நீரே மேன்மைப்படுத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தருக்குள்ளே உங்களை திடப்படுத்திக்கொள்ளுங்கள்!

—தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக்கொண்டான் (1 சாமுவேல் 30:6).

இது ஒரு மேன்மையான தெய்வீக அனுபவம்! இந்த அனுபவம் கர்த்தரை தேடுகிறவர்களுக்கும், அவர்மீது நம்பிக்கை வைக்கிறவர்களுக்கும் தான் கிடைக்கிற அனுபவம். தாவீதுடைய வாழ்க்கையில் அவன் இளம் வாலிபனாய் இருந்த பொழுதிலிருந்தே கர்த்தரை உறுதியாய் பிடித்ததினிமித்தும் பட்டாத பாடுகள், எதிர்பாராத அவசியமற்ற சஞ்சலங்களுக்குள்ளானான். ஆனால், அவன் ஆண்டவரோடு பேசுகிறவனாய், தன் காரியங்களை அவரிடம் சமர்ப்பிக்கிறவனாய் இருந்தான். ஒரு சமயம் சவுல் ராஜாவினால் துரத்தப்பட்டு பல வேதனைகளை அனுபவிக்க நேர்ந்தது. தங்க இடம் கிடையாது. அவனைச் சார்ந்த ஒரு சிலரும் கூட அவனோடு எதிர்த்துப் போராடுகிற ஒரு நெருக்கமான சூழ்நிலை ஏற்பட்டபொழுது, செய்வதறியாது தாவீது தயங்கினான். ஆனால், அந்த சமயத்திலேயும், கர்த்தரையே நோக்கிப் பார்த்து, கர்த்தருக்குள் தன்னை திடப்படுத்திக்கொண்டான் (1 சாமு. 30:6). நீரே எனக்கு அடைக்கலம், பெலன், துணை என்று உறுதியாய் பற்றிக்கொண்டான். அவ்வாறு தம்மை பற்றிக்கொண்ட அவனுக்கு நேரிட்ட எல்லாத் தோல்விகளையும், இழப்புகளையும் மாற்றி ஆசீர்வாதத்தை கர்த்தர் நிறைவாய் தந்தருளினார். ஆம், பிரியமானவர்களே! நீங்களும் பல்வேறு இழப்புகள், சஞ்சலங்கள், சொந்த மக்களால் உண்டான எதிர்ப்புகள், கைவிடப்பட்ட சூழ்நிலையில் இருக்கலாம். கவலைப்படாதிருங்கள் (யோபு 5:15; சங். 136:12).

காருண்யா பொறியியல் கல்லூரி கர்த்தரால் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், ஆரம்பித்த சில நாட்களில் அதில் ஒரு பிரச்சினை புயல்போல் ஏற்பட்டது. ஒரு சில மாணவர்கள் எதிர்த்து நின்று போராட தொடங்கினார்கள். இது பலுகிப் பெருகி பலவிதங்களில் பிரச்சினைகள், தொந்தரவுகள் ஏற்பட்டது. ஆனால், இரவும் பகலும் கர்த்தரை நோக்கி, எங்களுடைய குடும்பமும், எங்களோடு சேர்ந்து அவ்வாறு பிரார்த்தனை செய்த அருமையான சில நண்பர்களும், பங்காளர்களும், கர்த்தரை உறுதியாய் பற்றிக்கொண்டோம். ஆண்டவர் இதையெல்லாம் கண்டார். தம்முடைய வல்லமையுள்ள கரத்தை நீட்டினார். அவர் பராக்கிரமமுள்ளவர் அல்லவா! எதிர்த்து நின்று போராடிய ஒவ்வொருவரையும் தம்முடைய கரத்தின் வல்லமையினால் மாற்றியமைத்தார். இன்று தேவ வல்லமையால் அத்தகைய சூழ்நிலைகள் யாவும் மாறி, சமாதானம், சந்தோஷம் நிறைந்த சூழ்நிலை நிலவுகிறது.

ஆம்! ஆண்டவர் மனதின் கவலைகளை மாற்றவும், நம்மை திடப்படுத்தவும், நம்மோடு கூட இருக்கிறார் என்று மறந்துபோகாதிருங்கள். உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். உங்களோடு கூட இருப்பார். சகல பாடுகளினின்று உங்களை விடுதலையாக்கி, எல்லா விதத்திலும் ஆசீர்வாதங்களை அருளிச்செய்வார் (1 தெச. 5:24). தாவீதைப்போல் உங்கள் கண்கள் எப்பொழுதும் ஒத்தாசை வரும் பர்வதமாகிய ஆண்டவர்மேலேயே இருப்பதாக (சங். 121:1,2)!

ஜெபம்: "அன்பின் தெய்வமே! இந்த உலகம் எத்தனை பயங்கரமானது என்பதை அறிந்து, நீரே எனக்கு போதுமானவர் என்று உம்மை பற்றிக்கொள்ள, உமக்குள் திடப்பட எனக்கும் அருள்தாரும். இன்றுமுதல் உம்மை உறுதியாய் பற்றிக்கொள்ள, உம்முடைய சமாதானத்தினால் அளவில்லாமல் நிரம்ப, என்னையும் கரம்பிடித்து நடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தர் இன்றுமுதல் உங்களை ஆசீர்வதிப்பார்!

"...நான் இன்றுமுதல் உங்களை ஆசீர்வதிப்பேன்" (ஆகாய் 2:19).

இன்று வருடத்தின் கடைசி மாதத்தின் முதல் தேதியை நாம் ஆரம்பிக்கிறோம். கர்த்தர் இந்த மாதத்தை ஒரு ஆசீர்வாதம் நிறைந்த மாதமாக நமக்கு அருளிச்செய்வார். நம் வாழ்விலும் கர்த்தர் அநேக விசேஷித்த ஆசீர்வாதங்களை நிறைவாய் இந்த மாதம் முழுவதும் தருவார். அதைத்தான் மேற்கண்ட வேத வசனம் நமக்கு வலியுறுத்துகிறது. இந்த மாதம் எப்படி இருக்குமோ? என்றெல்லாம் கவலைப்படும் உங்களைப் பார்த்துதான் ஆண்டவர் தம்முடைய வாயிலிருந்து புறப்படுகிற இனிய வார்த்தையாக மேற்கண்ட ஆசீர்வாதத்தை வாக்குத்தத்தமாக அருளிச்செய்திருக்கிறார். விசுவாசத்தோடு அதை உங்களுக்கென்று எடுத்து ஜெயம் பெறுங்கள்.

ஒரு போதகர் ஆண்டவருடைய ஆவியானவரால் ஏவப்பட்டு, தேவையுள்ள ஒரு இடத்தில் தன் ஊழியத்தை ஆரம்பித்தார். ஆனால், அவர் கையில் பணமில்லை, பொருளில்லை. கர்த்தருடைய வல்லமையும், வரங்களும் மட்டும் இருந்தன. ஆகவே, அவர் முழங்காற்படியிட்டு, ஒரு மாதம் கர்த்தருடைய சமுகத்திலே கண்ணீரோடு பிரார்த்தனை செய்தார். மேற்கண்ட வசனத்தை தனக்கென்று சொந்தமாக எடுத்துக்கொண்டார். "ஆண்டவரே, உமக்காகவே இந்த ஊருக்கு வந்திருக்கிறேன். நீர் என்னோடிருந்து நான் ஆரம்பிக்கிற இந்த ஊழியத்தில் உம் ஆசீர்வாதங்களை சகல திசைகளிலிருந்தும் வரப்பண்ணி, நிறைவாய் பலுகிப் பெருகச் செய்யும்" என்று கருத்தாய், கண்ணீரோடு, உபவாசத்தோடு பிரார்த்தனை செய்தார். ஆரம்ப நாளிலிருந்தே சுற்றுவட்டாரத்தில் இருந்த அநேக மக்களை ஆண்டவர் அவருக்கு ஊழியத்திலே பலனாகக் கொடுத்தார். அவர்கள் மூலமாகவே ஆசீர்வாதங்கள் அவரைத் தேடி வந்தன. அவர்களையும் அவ்வாறே விசுவாசத்தோடு ஜெபிக்கும் ஜெப வீரர்களாக, வீராங்கனைகளாக மாற்றினார். கர்த்தர் அந்த ஊழியத்தில் தமது தெய்வீகப் பிரசன்னத்தை அருளி, தேவைப்பட்ட சகலத்தையும் கொடுத்தார். நாளடைவில் ஆத்துமாக்கள் பலுகிப் பெருகின. கர்த்தருடைய வார்த்தை அப்படியே நிறைவேறிற்று!

இன்று ஊழியத்தை ஆரம்பித்துவிட்டேன், பணமில்லை, பொருளில்லை என்றெல்லாம் சொல்லுகிற நிலையில் நீங்கள் இருக்கிறீர்களா? கர்த்தருக்காக செய்கிற ஊழியம், கர்த்தரோடுகூட ஆரம்பிக்கிற குடும்ப வாழ்க்கை, இவைகளில் மேற்கண்ட வசனம் மூலம் கர்த்தர் உங்களையும் நிறைவாய் ஆசீர்வதிக்க காத்திருக்கிறாரே! இந்த போதகரைப்போல் நீங்களும் ஜெபத்திலே பல மணி நேரம், பல நாட்கள் உறுதியாய் ஆண்டவரை பற்றிக்கொள்வீர்களானால், நிச்சயம் அவர் உங்களுக்கும் நிறைவான ஆசீர்வாதம் கொடுப்பார் (சங். 31:19).

<u>ஜெபம்</u>: "அன்பு இரட்சகரே! இந்த மாதம் முழுவதும் நான் உமக்காக செய்யும் எந்த காரியத்திலேயும் உம்முடைய நிறைவான வழிநடத்துதல் என்னோடு இருப்பதாக. <u>இன்றுமுதல்</u> உம் வாக்குத்தத்தத்தின்படியே நிறைவான ஆசீர்வாதங்களை நீர் அருளிச் செய்து உம் பிரசன்னத்தால் என் வாழ்வையும் நிரப்பும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

உங்கள் வழிகளையெல்லாம் சீர்தூக்கிப்பார்க்கிறார்!

"மனுஷனுடைய வழிகள் கர்த்தரின் கண்களுக்கு முன்பாக இருக்கிறது; அவனுடைய வழிகளெல்லாவற்றையும் அவர் சீர்தூக்கிப்பார்க்கிறார்"

(நீதிமொழிகள் 5:21).

தேவனை தமக்கு சொந்தமாக ஏற்றுக்கொள்ளுகிற ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் கவனிக்க வேண்டிய காரியம், வேதத்தை வாசித்து, அவருடைய வழிகள் என்னவென்று அறிந்து, அதன்படி தவறாமல் நடப்பதுதான். இதைத்தான் சங். 128:1–ல் "கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான்" என்று அழகாய் கூறப்பட்டிருக்கிறதாக வாசிக்கிறோம். அப்படி நடக்கிற ஒவ்வொரு மனுஷனையும், அவன் குடும்பத்தையும், சந்ததியையும்கூட ஆண்டவர் அப்படியே ஆசீர்வதிக்கிறார் (சங். 112:1,2). ஆகவே, நம்முடைய வழிகளை சீர்தூக்கிப் பார்த்து, இன்று நம்மை நாமே கர்த்தருடைய தயவைக் கொண்டு மாற்றி, அவருக்கு பிரியமானபடி வாழ முயற்சிப்போம். அப்பொழுது நம்முடைய பாவங்கள், அக்கிரமங்கள், குறைவுகளெல்லாம் நம்மைவிட்டு அகன்றுபோகும்படி அருள்நாதர் வழிநடத்துவார்.

ஒரு தம்பதியர் திருமணம் முடிந்தவுடன், இருவருமே அதுவரை வீட்டில் செல்லமாக வளர்ந்தபடியால், எப்படி தங்கள் குடும்ப வாழ்வை ஆரம்பிப்பது என்று தெரியாமல் சற்று திகைத்தனர். ஆனால், அடுத்த கணம் அந்த கணவன் "முதலாவது வேத வசனத்தின்படி (மத்தேயு 6:33) நாம் ஆண்டவரைத் தேடுவோம். அவர் நம் கரம்பிடித்து, தமக்குப் பிரியமான வழியிலே நம்மை நடத்தட்டும்" என்று கூறினபொழுது, இருவரும் அப்படியே செய்தார்கள். அன்று மட்டுமல்ல, அதன்பிறகு ஒவ்வொரு நாளையும் ஆரம்பிக்கும்போதும், அவ்வாறே தேவ பயத்தோடு, ஒருமனதோடு அதிகாலையில் ஆண்டவரை தேடினர். "கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது" (சங். 34:10) என்ற வசனத்தின்படி, அவர்கள் வாழ்க்கையில் பல வருடங்கள் உருண்டோடியபொழுதிலும், துன்பங்கள், போராட்டங்கள், வியாதிகள், சஞ்சலங்கள், இழப்புகள், கண்ணீர் யாவற்றின் வழியாக கடந்து செல்ல நேரிட்டபொழுதும், கர்த்தருடைய வழிகளைக் காத்து நடக்க, தேவன் அவர்களோடிருந்து கரம்பற்றி நடத்தினார். முடிவில் நிறைவான பாக்கியத்தையும் அருளிச்செய்தார்.

ஆம், பிரியமானவர்களே! இன்று குடும்பங்கள் பிரிந்துபோவதின் காரணம் கர்த்தருடைய வழியின்படி கணவனும், மனைவியும் நடவாததுதான். என் விருப்பம், என் தாய் தகப்பன் கூறும் வழி என்று தாறுமாறாக நம் வாழ்க்கை அமைகிறது. அதினிமித்தம் தான் பிரச்சினைகள், பிரிவினைகள், சமாதான குறைவு! இதை வாசிக்கிற நீங்கள் ஆண்டவருடைய சமுகத்திலே முழங்காற்படியிட்டு, "ஆண்டவரே, இனி என் வழி வேண்டாம். உம் சித்தப்படியும், உம் வழியின்படியும் என்னை கரம்பிடித்து நடத்தும்" என்று ஜெபியுங்கள். அப்பொழுது கர்த்தர் எவ்வளவு அழகாய் நடத்துகிறார் என்று நீங்கள் பாருங்கள்.

ஜெபம்: "என் அன்பு தெய்வமே! உம்முடைய தெய்வீக வழிகளை எனக்கும் நீர் கற்பித்தருளும். இன்றுமுதல் உம் பிரியத்தின்படியே நான் நடக்க, வேத வசனங்கள் மூலமாய் என்னோடு பேசும். ஜெபம்பண்ண கற்றுத்தாரும். உம்மோடு உறவாடுகிற வழியை எனக்கு கூடவே இருந்து காண்பித்து நீர் விரும்புகிற சரியான பாதையில் என்னை வழிநடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தர் தம் நீதியின் வலது கரத்தினால் தாங்குவார்!

"நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்கு சகாயம்பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்" (ஏசாயா 41:10).

ஆண்டவர் நம்முடைய வாழ்வில் கூடவே இருக்கும்போது நாம் எவ்வளவு பாக்கியம் நிறைந்தவர்களாக மாற முடியும் என்பதை அனுபவித்துப் பார்த்திருக்கிறீர்களா? இதைத் தான் மேற்கண்ட வசனம் விளக்குகிறது. இந்த வசனத்தின்படியே, நாம் அஞ்சா நெஞ்சுடன் ஆண்டவர் துணையைப் பெற்றவர்களாய் வாழ்வோம். அண்டசராசரத்தையும் படைத்த ஆண்டவரே நம்மை தமது கரத்தினால் தாங்கும் பேரின்ப வாழ்வு யாருக்கு கிடைக்கும்? ஆம், இன்றே இந்த தெய்வீக சிலாக்கியத்தை அனுபவியுங்கள். எனக்கு இது கிடைக்குமா? என்று உங்களையே குறைவாக நினைக்காதிருங்கள். நம் ஒவ்வொருவருக்காகவும் ஆண்டவர் இந்த மேலான பாக்கியத்தை சம்பாதித்து கொடுத்திருக்கிறார். அவரும் நாமும் ஒன்றாய் இணைந்து இருப்பதுதான் அவருக்கு பிரியம். தாவீதைப்போல நாமும் இன்றே அவரை வலதுபாரிசத்தில் இருக்கும்படி அழைப்போம் (சங். 16:8). அப்பொழுது ஒன்றும் நம்மை சேதப்படுத்தாதபடி, தமது கரத்தினால் அவர் தாங்குவார்.

ஒரு பெண்ணின் வாழ்க்கையில் எதற்கெடுத்தாலும் பயம்! இருளில் போவது என்றால் பயம், ஒரு கூட்டத்தில் முன்னே நின்று பேசுவது என்றால் பயம். இவ்வாறு பயத்தினால் முழுவதுமாக நிறைந்திருந்த அவளை ஆண்டவர் தம்முடைய ஊழியத்திற்கென்று தெரிந்து கொண்டார். பாருங்கள், ஆண்டவருடைய அழைப்பு எப்படி விநோதமானதாய் இருக்கிறது! அவள் ஆண்டவரிடத்திலே கூறினது, "சுவாமி, நான் ஒன்றும் அறியாதவள், ஞானமற்றவள், பயத்தினால் நிறைந்தவள், சாட்சி கொடுக்ககூட தைரியமற்றவள். நான் எவ்வாறு இந்த குறைபாடுகளின் மத்தியில் உமக்கு ஊழியம் செய்யப்போகிறேன்? நீரே எனக்கு உதவி செய்யும்" என்று ஜெபித்தாள். ஆண்டவர் அவளை பரிசுத்த ஆவியினால் அளவில்லாமல் நிரப்பினார். பரிசுத்த ஆவியானவர் அவளுக்குள் இருந்து பெருகப் பெருக, தேவ வல்லமை அவளை அளவில்லாமல் நிரப்பியது. அவளுடைய பயமெல்லாம் ஓடிப்போனது. கர்த்தர் அவளுக்கு துணைநின்று சகாயம்பண்ணினார். அவருடைய நீதியின் வலது கரம் அவள்மேல் இருந்தபடியினால், வல்லமையாய் ஆண்டவருடைய அன்பை மக்களுக்கு எடுத்துக் கூறவும், அநேகரை நீதியின் பாதையில் வழிநடத்தவும், யாதொரு பயமுமின்றி கர்த்தருக்காக எழும்பிப் பிரகாசிக்கவும் கர்த்தரே அவளுக்கு கிருபை புரிந்தார்.

ஆம், பிரியமானவர்களே! இன்று நீங்களும் பயத்தினால் நிறைந்திருப்பீர்களானால், கர்த்தர் உங்களுடைய வாழ்க்கையையும் இவ்விதமாய் மாற்ற விரும்புகிறார். அவரால் ஆகாதது ஒன்றுமில்லை. ஆகவே, ஆண்டவரை பற்றிக்கொண்டு, உங்களுக்கு இன்னது தேவை என்று கேளுங்கள். கர்த்தர் சகல தேவைகளையும் நிறைவாய் தந்து, தம் நீதியின் வலது கரத்தினால் உங்களை வழிநடத்துவார்.

ஜெபம்: **"அன்பு தெய்வமே! என் உள்ளத்திலிருக்கிற வீணான பயங்களையெல்லாம் எடுத்துப்போட்டு, பரிசுத்த ஆவியானவரால் என்னை நிரப்பும். எனக்கு வேண்டிய ஞானம், அறிவு, கிருபை யாவற்றாலும் நிரப்பும். இன்றுமுதல் நானும் எழும்பிப் பிரகாசிக்க, உமக்கு மகிமையாய் வாழ உம்முடைய வலது கரத்தினால் தாங்கும். இயேசுவின் நாமத்தினால் பிதாவே, ஆமென்!"**

கர்த்தர் உங்கள் நடுவில் இருக்கிறார்!

"...கர்த்தாவே, நீர் எங்கள் நடுவிலிருக்கிறவராமே; உம்முடைய நாமம் எங்களுக்குத் தரிக்கப்பட்டுமிருக்கிறதே; எங்களை விட்டுப் போகாதிரும்"

(எரேமியா 14:9).

கர்த்தர் நம் நடுவில், அதாவது நம் வீட்டில், நாம் பணிபுரியும் இடங்களில், செல்லுகிற இடங்களிலெல்லாம் கூடவே இருப்பாரானால், எவ்வளவாய் நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாய் இருப்போம்! இந்த கர்த்தர் எப்படிப்பட்டவர்? காற்றையும் கடலையும் அமைதலாக்கினவர். கடலின் சீற்றத்தை எதிர்த்து, "இம்மட்டும் வா, மிஞ்சி வராதே" (யோபு 38:11) என்று அடக்கி வைத்தவர். தண்ணீரை திராட்சரசமாக்கினவர் (யோவான் 2:9–11). கடலைப் பிளந்து தம்முடைய ஜனங்களை தரையிலே வழிநடத்தினவர் (யாத். 14:22). இப்படி அவருடைய வல்லமையைக் குறித்து வேதத்திலிருந்து எவ்வளவோ காரியங்களை தியானிக்கலாம். இத்தகைய வல்லமையுள்ள கர்த்தர் நம் மத்தியிலே இருப்பாரானால், நாம் எவ்வளவு பாக்கியம் பெற்றவர்களாய் இருப்போம். ஆகவே, இந்த பாக்கியம் பெற அவரை நோக்கி கூப்பிடுவோம். அவருக்கு பிரியமான வாழ்க்கை மட்டுமே வாழ்வதில் கவனமாய் இருப்போமானால், மேற்கண்ட வாக்குத்தத்தம் அப்படியே நமக்கு நிறைவேறும். துன்பங்கள் நிறைந்த உலகத்திலே, அவர் இன்பமாக நம் நடுவில் வந்து வசிப்பது எத்தனை பெரிய சிலாக்கியம்.

சுனாமி அலைகள் தாக்கப்பட்ட காலம் அது! மக்கள் ஆங்காங்கு அலைமோதிக் கொண்டிருந்தார்கள். கடற்கரை அருகில் குடியிருந்த ஒரு வயதான தாயார் வீட்டுக்கு, அவருடைய மகனும் குடும்பத்தாரும் கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு வந்திருந்தனர். சுனாமி அலைகள் வந்தபோது, அந்த தாயார், "மகனே, நீ உன் மனைவி, பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு தப்பியோடிவிடு, கர்த்தர் என்னோடிருந்து என்னைக் காப்பாற்றுவார். என்னைப்பற்றி கவலைப்படாதே" என்று சொன்னார்கள். அப்படியே மனம் நொறுங்கினவனாக மகன் பிள்ளைகளையும், மனைவியையும் கூட்டிக்கொண்டு போய்விட்டார். தண்ணீர் மடமடவென்று வீட்டுக்குள் வர ஆரம்பித்தது. அந்த தண்ணீரைப் பார்த்த அந்த தாயார் கர்த்தருடைய வல்லமையால் நிறைந்தவர்களாய், "கடல் தண்ணீரே, இது தேவனுடைய பிள்ளைகளுடைய வீடு. இங்கு கர்த்தர் வாசம்பண்ணுகிறார். இதற்குமேல் வராதே! உன்னுடைய வல்லமையை இயேசுவின் நாமத்தினால் முறியடிக்கிறேன்" என்று கருத்தாய் ஜெபம் பண்ணினார்கள். அவ்வளவு தான்! அதற்குமேல் அவர்கள் விசுவாசத்தின்படியே தண்ணீர் எழும்பி வராமல், அப்படியே நின்றுபோனது. என்ன ஆச்சரியம்! இது நடந்த ஒரு சம்பவம். ஆம், கர்த்தருடைய பிள்ளைகள் ஆண்டவருக்கு பிரியமானவர்கள்! அவர்கள் எங்கு இருந்தாலும், அங்கு அவருடைய பிரசன்னம் அவர்களைக் காப்பாற்றும்.

ஆகவே, எனக்கு அன்பானவர்களே! எந்த சூழ்நிலையிலும் வீணான பயங்களுக்கு இடங்கொடாமல், ஆண்டவரை உங்களோடு வைத்துக்கொள்ளும்படியான பரிசுத்த வாழ்க்கையை மேற்கொள்வதில் ஜாக்கிரதையாயிருங்கள். அப்பொழுது நீங்களும் இந்த தாயாரைப்போல நிறைவாய் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். ஒன்றும் உங்களை சேதப்படுத்தாது.

ஜெபம்: "அன்பு இரட்சகரே! உம்மைத் தேடுகிறவர்களுக்கு நீர் கூடவே இருந்து, எல்லா காரியங்களிலும் ஞானத்தையும், அறிவையும், வெற்றியையும் கொடுத்து ஆசீர்வதிக்கிறீர் என்று அறிந்து கொண்டேன். என்னிலும், எனக்குள்ளேயும் அப்படியே நீர் தங்கியிரும். இன்றுமுதல் என்னையும் உம்முடைய பிரசன்னத்தால் நிரப்பி, வழிநடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

உங்களுக்கு தடை உண்டாகாதபடி தமது கண்களை வைப்பார்!

"ஆனாலும் இந்த செய்தி தரியுவினிடத்திற்குப் போய் எட்டுகிறவரைக்கும் இவர்கள் யூதருடைய மூப்பரின் வேலையைத் தடுக்காதபடிக்கு, அவர்களுடைய தேவனின் கண் அவர்கள்மேல் வைக்கப்பட்டிருந்தது" (எஸ்றா 5:5).

"கர்த்தரின் கண்கள் எவ்விடத்திலுமிருந்து, நல்லோரையும் தீயோரையும் நோக்கிப் பார்க்கிறது" (நீதி. 15:3). விசேஷமாக தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிற வர்களுக்கு தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது" (2 நாளா. 16:9). ஆகார் என்ற சாராளின் அடிமைப்பெண் அவள் செய்த ஒரு தவறினிமித்தம் தள்ளப்பட்டபோது, அவள் வனாந்தரத்தில், தனிமையில் கண்ணீரோடு சுற்றித்திரிந்தாள். கர்த்தர் அவள்மேல் கிருபைகூர்ந்து அவளோடு பேசி, அவளுடைய எதிர்காலத்தை, ஆசீர்வதித்து வழிநடத்தினார். ஆம், பிரியமானவர்களே! இதே ஆண்டவருடைய கண்கள் உங்களையும் பார்த்துக்கொண்டிருக்கிறது. இதேபோல் உங்களுடைய வாழ்வில் குறைவுகள் பல இருந்தாலும் நீங்கள் அவரை நோக்கிப் பார்த்து ஜெபம் செய்யும்போது, இன்றைக்கு தடையாக உள்ள சகல காரியங்களிலிருந்தும் அவருடைய பிரசன்னம் உங்களை விடுதலையாக்கும்.

கர்த்தரை அதிகமாக நேசித்த ஒரு மகனுடைய வாழ்க்கையில் திடீரென்று எதிர்பாராத வேளையில் ஒரு புயல் ஏற்பட்டது. இதிலிருந்து நான் எப்படி மீட்கப்படப் போகிறேன்? என்ற கவலையோடு ஒருநாள் ஆண்டவரை நோக்கிப் பார்த்தான். உம்மையன்றி இந்த சூழ்நிலையில் எனக்கு உதவி செய்வார் யாரும் இல்லையே என்று மன்றாடி பிரார்த்தனை செய்தான். கர்த்தரை இவ்வாறு அவன் உண்மையாக தேடத்தேட அவருடைய பிரசன்னம் அவனை நிரப்பியது. எல்லாத் தடைகளையும் தம்முடைய வல்லமையால் அகற்றி, தமது கண்களை அவன்மேல் வைத்து, தம்முடைய பிரசன்னத்தின் இன்பத்தால் அவனை நிரப்பினார். ஜெபம்பண்ணப் பண்ண, ஒவ்வொரு தடையாக விலகியதை அவன் உணர்ந்தான். சரீரப்பிரகாரமான தடைகள் யாவும் மாறி, தெய்வீக சுகம் அவனை நிரப்பியது. ஆச்சரியமாக விடுதலை பெற்றான். அதுமட்டுமல்ல, குடும்பத் தேவைகள் மற்றும் சகல தேவைகளையும் ஆண்டவரிடத்திலே சமர்ப்பித்து, அவர் கேட்கிறதற்கும், விரும்புகிறதற்கும் அதிகமான நன்மையை செய்கிறவரானபடியால் (எபே. 3:20) உடனடியாக சகல பாக்கியங்களையும் அற்புதமான விதத்தில் பெற்று, ஆசீர்வதிக்கப்பட்டான்.

அன்பானவர்களே! கர்த்தருடைய கரத்திலே ஆசீர்வாதம் நிறைந்திருக்கிறது. ஆகவே, தடைகள் நிமித்தம் பாடுகள், ஏமாற்றம், சோர்வு வரும்போது அவரை நினைத்துக்கொள்ளுங்கள் (சங். 121:1,2). அப்பொழுது அவர் ஆச்சரியமான விதத்தில் தடைகள் யாவையும் அகற்றி, உங்களுக்கு முன்பாகக் கடந்து போவார் (மீகா 2:13).

ஜெபம்: "அன்பின் தெய்வமே! உம்முடைய கண்கள் என் வாழ்வில் இருக்கும்படியாகவும், எனக்கு முன்னதாக இருக்கிற தடைகள் யாவற்றையும் நீர் அகற்றிபோடுகிறவராகவும் இன்றுமுதல் என்னோடுகூட தங்கியிரும். இந்த உலகில் நீர் ஒருவரே ஆறுதல்! சகாயர்! ஆகவே, தடைகள் எல்லாவற்றையும் அகற்றி அருள்செய்ய வேண்டுமென்று இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் பிதாவே. ஆமென்!"

கர்த்தர் கூடவே இருந்து பெரியவனாக்குவார்!

"...தேவனாகிய கர்த்தர் அவனுடனே இருந்து அவனை மிகவும் பெரியவனாக்கினார்"
(2 நாளாகமம் 1:1).

சாலொமோன் கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டான். நிறைவான ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொண்டான். ஏனென்றால், ஆரம்பம் முதல் கர்த்தர் அவனோடிருந்தபடியால், இந்த பாக்கியங்களுக்கு உரியவனாக அவன் மாறினான். ஞானம் வேண்டுமென்று கேட்ட அவனுக்கு தேவன் யாருக்கும் கொடுக்காத அளவுக்கு ஞானத்தை நிறைவாய் கொடுத்து, அதோடுகூட பேரையும் புகழையும் அருளிச்செய்தார் (1 இராஜா. 3:12,13; 4:29,31). செல்வத்தையும் அப்படியே வாரி வழங்கினார். ஆம்! அவர் ஐசுவரியசம்பன்னர் (ரோமர் 10:12). ஐசுவரியமும் கனமும் அவராலே வருகிறது; எவரையும் மேன்மைப்படுத்தவும், பலப்படுத்தவும் அவராலே ஆகும் (1 நாளா. 29:12). ஆம், பிரியமானவர்களே! நீங்கள் பலவித குறைவுகளோடு இன்று காணப்படுகிறீர்களா? கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு ஒன்றுமில்லையே என்று கவலைப்படுகிறீர்களா? கர்த்தர் உங்கள் களஞ்சியத்தை நிறைவாக சகலவிதத்திலும் ஆசீர்வதித்து பெருகச் செய்ய வல்லமை படைத்தவர் என்பதை நினைவில் வைத்து, அவரை நோக்கிப் பார்த்து, நிறைவான ஆசீர்வாதத்தை அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளுங்கள். கர்த்தருக்கென்று ஊழியம் செய்ய உங்களை ஒப்புக்கொடுப்பீர்களானால், அவரே உங்களை வழிநடத்தி, உங்களை பலுகிப் பெருகச் செய்வார் என்பதையும் நினைத்து சந்தோஷப்படுங்கள் (நீதி. 8:20).

அன்னை தெரஸா வெளிநாடு ஒன்றிலிருந்து இந்தியா வந்து தங்கி ஏழை எளிய மக்கள், விசேஷமாக குஷ்டரோக வியாதியினால் கஷ்டப்படுகிறவர்களுக்கு ஊழியம் செய்யும்படி தன்னை அர்ப்பணித்திருந்தார். ஒரு சமயம் நன்றாக படித்த ஒரு பெண் அவரிடம் வந்து, உங்களைப்போல் நானும் ஊழியம் செய்ய வேண்டும் என்றாள். ஆனால், அவர்கள் செய்த எளிய காரியமாகிய குஷ்டரோகம் பிடித்தவர்களை பொறுமையோடு சுத்திகரிக்கிற ஊழியத்தை அவள் பார்த்தபொழுது, இது என்னால் முடியாது என்று ஒரே ஓட்டமாக ஓடிப் போய்விட்டாள். ஆனால், இந்த அம்மையாரை பாருங்கள். உலகம் போற்றும் வண்ணம் இந்த ஊழியத்தில் கடைசிவரை உண்மையாயிருந்து, சமாதானத்திற்கான நோபல் பரிசைப் பெற்றது எவ்வளவு பெரிய காரியம்! ஆம், இன்றும் கர்த்தருடைய ஊழியத்தை செய்பவர்களுக்கும் மற்றும் அவரை தேடுபவர்களுக்கும், ஆண்டவர் அப்படியே நிறைவான பலனைத் தந்து, அவர்களை கனப்படுத்துவார்.

அன்பானவர்களே! ஐயோ, நான் குறைவான நிலைமையில் இருக்கிறேனே! படிப்பு ஏறவில்லையே, வேலை இல்லையே, பதவியில் உயர்வின்றி, அப்படியே ஒரே நிலையில் இருக்கிறேனே! என் குடும்பம் மட்டும் குறைவுபட்ட நிலைமையில் இருக்கிறதே, என்றெல்லாம் கவலைப்படுகிறீர்களோ? உங்களையும் ஆண்டவர் உயர்த்த முடியும் என்பதை விசுவாசித்து, அவருக்கு பிரியமான நீதியின் வழியில் நடந்து, அவர் கரத்திலிருந்து அவரால் உண்டாகும் உயர்வை பெற்றுக்கொள்ளுங்கள் (சங். 75:10).

ஜெபம்: "என் அன்பு தெய்வமே! உம்மைத் தேடுகிறவர்களுக்கு நீர் கொடுக்கிற தெய்வீக உயர்வு எவ்வளவு இனிமையானது! மேன்மைபெற்றது! நானும் உமக்கு முன்பாக என்னைத் தாழ்த்தி, நீர் காண்பிக்கிற வழியிலே நடந்து, உம்மை சந்தோஷப்படுத்த, இந்த உலகில் நீர் தரும் மேன்மையைப் பெற்று வாழ, எனக்கும் அருள் தாரும். இன்றுமுதல் இந்த தேவ கிருபையால் என் வாழ்வையும் நிரப்பும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்!

"சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" (மத்தேயு 5:9).

குடும்ப வாழ்க்கையிலே சமாதானம் இல்லாமல், வேலை ஸ்தலத்திலேயும் அதேபோன்று சண்டை சச்சரவுகளுடன் வாழ்கிறவர்கள் இன்றைக்கும் அநேகம்பேர். ஆனால், இந்த வசனத்தின்படி, யார் கர்த்தரை நோக்கிப் பார்த்து, "ஆண்டவரே, நீர் சமாதானப் பிரபு, இன்று முதல் என் குடும்பத்தில், நான் பணிபுரியும் இடத்தில், நான் கவலையோடு இருக்கும்போது, உம்முடைய தெய்வீக சமாதானம் தாரும்" என்று கர்த்தரை நோக்கிக் கண்ணீரோடு மன்றாடும்போது, கர்த்தர் தமது சமாதானத்தால் நிரப்புவார் (யோவான் 14:27). அதோடுகூட தன்னுடைய உள்ளம் இந்த தெய்வீக சமாதானத்தை பெற்றபின், சமாதானமில்லாமல் தவிக்கிற ஏனையோருக்காக பிரார்த்தனை செய்து அல்லது ஆலோசனை கூறி தேவனுடைய புத்திரராக வாழும் பாக்கியமும் தருவார்.

ஓர் உண்மையான தேவ மனிதன் ஆண்டவரை நேசிக்கிறவராக வாழ்க்கையை ஆரம்பித்தார். அவரிடத்தில் பணமில்லை, அவருக்கென்று ஒரு குடும்பமும் இல்லை. தனி மனிதனாக இருந்தபடியால், எந்த நேரமும் கர்த்தருடைய சமுகத்தில் காத்திருந்த அவர் வாழ்வில், தேவ சமாதானம் நிலை பெற்றிருந்தது. அவரைத் தேடி சமாதானமற்ற நிலையில் வாழ்ந்த அநேகர் தங்களுக்காக பிரார்த்தனை செய்யும்படி வந்தனர். அவர், அவர்களுக்காக நேரத்தையும் பாராது, அவர்கள் யார் என்பதையும் கவனியாது, அவர்கள் தேவைக்கு ஏற்றபடி கருத்தாய் பிரார்த்தனை செய்தார். கர்த்தர், அநேகருடைய குடும்ப வாழ்க்கையில் அதினிமித்தம் சமாதானத்தை கட்டளையிட்டார். பலருடைய தனிப்பட்ட வாழ்க்கையில், விசேஷமாக அநேக வாலிபர்கள் அவரைத் தேடி வந்து, தங்கள் வாழ்க்கையின் போராட்டங்களை ஒளிவு மறைவின்றி கூறி, அவருடைய பிரார்த்தனையின் மூலம் தேவ சமாதானம் பெற்றுக்கொண்டனர்.

அன்பானவர்களே! தனிமையில் இருக்கிறேனே, எனக்கு அது இல்லையே, இது இல்லையே, உதவி செய்வார் இல்லையே, என்னைப் பார்க்க யாரும் வரவில்லையே என்றெல்லாம் நினைத்து, இருக்கிற கொஞ்சம் சமாதானத்தையும்கூட நாம் இழந்து போகிறோம் அல்லவா? அப்படியிராதபடி இந்த தேவ மனிதனுடைய வாழ்க்கையைப்போல், நாமும் கர்த்தரை உறுதியாகத் தேடி, அவரையே முழுவதும் நம்பிக்கையுடன் சார்ந்து அவருடைய சமாதானத்தால் நாமும் நிறைந்து மற்றவர்களுக்கும் அந்த தெய்வீக சமாதானத்தை தேவனிடமிருந்து வாங்கிக் கொடுக்கிற தெய்வீக வழிகளையும் பின்பற்றி, பாக்கியவான்களாக மாறுவோம் (ஏசாயா 26:3).

ஜெபம்: "அன்பின் தெய்வமே! இந்த உலகத்தில் எத்தனை பிரச்சினைகள் வந்தாலும், சமாதானத்தின் தேவனாகிய உம்முடைய சமாதானத்தை பெற்றுக்கொண்டவனாக மட்டுமல்லாது, சமாதானத்தை மற்றவர்களுக்கும் பெற்றுத் தரும் சமாதானம் பண்ணுகிறவனாக நானும் வாழ்ந்து, பிறரையும் வழிநடத்த இன்றுமுதல் எனக்கும் கிருபை தாரும். அதன்மூலம் தேவனுடைய புத்திரராக என்றென்றும் வாழ அருள் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"

கர்த்தரைத் தேடினால் காரியங்கள் வாய்க்கும்!

"தேவனுடைய தரிசனங்களில் புத்திமானாயிருந்த சகரியாவின் நாட்களிலே தேவனைத் தேட மனதிணங்கியிருந்தான்; அவன் கர்த்தரைத் தேடின நாட்களில் தேவன் அவன் காரியங்களை வாய்க்க செய்தார்" (2 நாளாகமம் 26:5).

வேதபுத்தகத்திலே உசியா என்ற அரசன் இவ்வாறு தேவனைத் தேடினான். ஆகவே, அவன் காரியங்கள் யாவற்றையும் கர்த்தர் வாய்க்க செய்தார் என்று வாசிக்கிறோம். இவ்விதமாகவே நம்முடைய அனுதின வாழ்க்கையிலும்கூட நாம் கர்த்தரை கருத்தாய் தேடும்பொழுது, ஒவ்வொரு காரியத்திலும் கர்த்தர் எவ்வளவு அழகாய் வாய்க்க செய்கிறார், வழி நடத்துகிறார் என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். ஒருவேளை பலவித பிரச்சினைகளோடு இந்த பகுதியை இன்று நீங்கள் வாசித்துக் கொண்டிருப்பீர்களானால், அல்லது உங்கள் வாழ்க்கையில் உங்களை கண்ணீர் சூழ்ந்திருக்குமானால், இப்பொழுது முழங்காற்படியிட்டு, நீங்களும் கர்த்தரை தேடுங்கள். உண்மையாய் தம்மைத் தேடுகிறவர்களுக்கு கர்த்தர் சமீபமாயிருக்கிறார் (சங். 145:18). ஆகவே, ஆண்டவருக்கு எல்லாம் தெரியும் என்று எண்ணாமல், அவர் பாதத்தில் முழங்காற்படியிட்டவர்களாய், உங்கள் சஞ்சலங்களை, வேதனைகளை, பிரச்சினைகளை ஒவ்வொன்றாக அவரிடத்திலே ஒப்படையுங்கள். அப்பொழுது அவர் எவ்விதமாக உங்கள் காரியங்களை வாய்க்கப்பண்ணுகிறார் என்பதை நீங்களே அறிந்து கொள்வீர்கள்.

ஒரு இளம் வாலிபன் படித்து பட்டம் பெற்றான். அவனுடைய அறிவுக் கூர்மைக்கு உடனே நல்ல வேலை கிடைத்துவிடும் என்று எண்ணினான். ஆனால், நாட்கள் கடந்தனவேயொழிய வேலை கிடைத்தபாடில்லை. மனம் சலித்து, மிகவும் சோர்வுற்ற நிலையில் ஒரு தேவ ஊழியரால் வழிநடத்தப்பட்டு, வேதத்தை வாசிக்க ஆரம்பித்தான். சவுல் பவுலான வாழ்வை வாசித்தபோது, "ஐயோ, நானும் ஆண்டவரை இன்னும் அறிந்து கொள்ளவில்லையே! என் மனம்போல் தானே வாழ்கிறேன். பவுல் வாழ்க்கையிலே, இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார் என்று எழுதியிருக்கிறதே" (கலா. 2:20) என்று அந்த பகுதியை திரும்பத் திரும்ப வாசித்து, முழங்காற்படியிட்டு, தன்னை ஆண்டவருக்கென்று அர்ப்பணித்தான். அவரோடு ஒரு சிநேகிதன் பேசுவது போல தன் மனதின் காரியங்களையெல்லாம் ஒப்படைத்தான். அப்படியே, அவனுடைய நண்பர்கள் எல்லோருக்கும் மேலாக ஒரு அருமையான வேலை கிடைத்தபோது, "நான் கர்த்தரைத் தேடினதால், அவர் என் காரியங்களை வாய்க்கும்படி செய்தார்" என்று சந்தோஷமாய் அவரைக் குறித்து சாட்சி கூறி மகிழ்ந்தான்.

அன்பான வாலிபர்களே, உங்கள் வாழ்விலும் இல்லாமையினிமித்தம் சோர்ந்து போகாமல்; குடும்பத்தின் மக்களே, கவலைகளினால் மனம் சலித்துப் போகாமல்; வயதானவர்களே, நான் ஏன் வாழ வேண்டும்? ஆண்டவர் என்னை எடுத்துக்கொள்ளமாட்டாரா? என்று கலங்காமல்; ஆண்டவரையே நோக்கிப்பாருங்கள். எபேசியர் 3:20-ன்படி, சகல ஆசீர்வாதங்களையும் நிறைவாய் தருவார்.

ஜெபம்: "அன்பு இரட்சகரே! நானும் இன்றுமுதல் கவலைக்கு இடங்கொடாமல் உம்மையே தேடவும், அதின்மூலம் என் காரியங்கள் யாவும் வாய்க்கும்படியும் அருள்தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

நான் எப்பொழுதும் வந்தடையத்தக்க கன்மலையாயிரும்!

(சங்கீதம் 71:3).

உலக வாழ்க்கை என்பது சஞ்சலமும், சந்தோஷமும், துன்பமும், இன்பமும் மாறி மாறி வருகிற ஒன்றுதான். பிரச்சினைகள் தொடர்ந்து வரும்போது சோர்ந்து போகிறோம். யாவும் ஆசீர்வாதமாய் நடக்கும்போது மகிழ்ச்சியடைகிறோம். ஆனால், எந்த நிலைமையிலும் சந்தோஷமாயிருக்க, மனநிறைவோடிருக்க முடிகிறதா? இப்படிப்பட்ட வாழ்க்கை எப்போது கிடைக்கும்? இந்த வசனத்தின்படி, கர்த்தரை கன்மலையாக நாம் கண்டடையும்போது தான் அத்தகைய பேரின்பத்தை எல்லா நாளும் பெற்று அனுபவிக்க முடியும். ஆண்டவர் நம்மை அன்போடு அழைக்கிறார். "பாவம், பாரம், அக்கிரமம் எல்லாவற்றோடு என்னிடத்தில் வா, நீ ஏன் சுமந்து வேதனைப்படுகிறாய்? நான் அவைகளை மாற்றி, உனக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று நம்மை நோக்கிக் கூப்பிடுகிறார். அவரண்டை வருகிறவர்களுக்கு கன்மலையாகிய அவர் இளைப்பாறுதல் தருவது நிச்சயமான காரியம் (மத்தேயு 11:28).

ஒரு பெற்றோர் தங்கள் மகளுக்கு திருமணம் செய்து வைக்க தீர்மானித்தனர். எத்தனையோ வரன்களை பார்த்தும் ஒன்றும் கைக்கூடி வரவில்லை. மகளுக்கும் வயதாகிக் கொண்டே போனது. மிகவும் வேதனையோடு செய்வதறியாது திகைத்து நின்றனர். அந்த சமயத்தில் "இயேசு அழைக்கிறார்" தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றை பார்க்கும்படியான வாய்ப்பை பெற்றார்கள். ஆண்டவர் உதவி செய்வார் என்பதையே கொஞ்சமும் அறியா்திருந்த அந்த தம்பதியர், தங்களைப் போன்று திருமணமாகாத பெண்ணின் நிமித்தம் கவலை கொண்டிருந்த ஒரு பெற்றோர், எப்படி ஆசீர்வாதம் பெற்றார்கள் என்பதை அன்று வந்த நிகழ்ச்சியிலே பார்த்தார்கள். அப்பொழுதுதான் அவர்களுடைய தவறு அவர்களுக்கு நினைவுக்கு வந்தது. இந்த மக்களைப்போல நாம் ஆண்டவரை தேடாமல், கன்மலையாகிய அவர் நமக்கு போதுமானவர் என்பதை உணராமல் போனோமே என்று கலங்கி ஆண்டவரிடம் மன்னிப்புக் கேட்டு, தங்கள் வேதனையை ஆண்டவரிடம் சமர்ப்பித்தார்கள். கர்த்தர் அந்த நிலைமையிலும்கூட அவர்களுடைய குறைவுகளை மன்னித்து, அவர்கள் விருப்பத்தை உடனடியாக நிறைவேற்றி கொடுத்தார்.

ஆம், பிரியமானவர்களே! இன்றைக்கும் இந்தவிதமாக அற்புதங்களை செய்கிற ஆண்டவர் உயிரோடிருக்கிறார். நாம் செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்று தான். கன்மலையாகிய அவருடைய செட்டைகளின் மறைவின் கீழே நாம் வந்து, "அப்பா! இன்றுமுதல் நீரே என் வாழ்வை பொறுப்பெடுத்துக்கொள்ளும். எனக்கு இன்னது தேவை என்பதை நீர் அறிந்திருக்கிறீர். ஆகவே, கன்மலையாகிய நீரே எனக்கு உதவி செய்யும்" என்று அவரிடம் மன்றாடுவோம்; அப்பொழுது உங்கள் வாழ்விலும் அற்புதங்களையும், அடையாளங்களையும் அவர் நடப்பித்து ஆசீர்வதிப்பார் (சங். 81:16).

ஜெபம்: "அன்பு தெய்வமே! இன்றுமுதல் எனக்கும் நீர் கன்மலையாக இருந்து, உம்முடைய செட்டைகளின் மறைவிலே என்னையும் மறைத்துக்கொள்ளும். பிசாசு காணாதபடி, வேறெந்த பிரச்சினைகளும் என்னைத் தாக்காதபடி, உம்முடைய நீதியின் வலதுகரத்தினால் என்னை தாங்கிக்கொள்ளும். எனக்கு இன்னது தேவை என்று நீர் அறிந்திருக்கிறபடியால், ஒவ்வொரு நாளும் என்னை கரம்பிடித்து நடத்தும். நீர் அப்படி செய்யப்போகிறபடியால் உமக்கு ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"

கர்த்தர் உன் பாதம் இடறாதபடிக்கு காப்பார்!

''உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னை தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள்'' (சங்கீதம் 91:12).

உன்னதமான தேவனுடைய மறைவில் வாசம்பண்ணுவது எத்தனை அருமையானது! ஆம்! சர்வவல்லவராகிய அவருடைய நிழல் நம் யாவருக்கும் ஆறுதலையும், சகாயத்தையும் தரவல்லது! இது ஒரு தெய்வீக அனுபவம்! கர்த்தரை நூற்றுக்கு நூறு சதவீதம் நம்பி, விசுவாசித்து, அவரை உள்ளத்தில் இரட்சகராக ஏற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு, இந்த மேலான வாழ்வை ஆண்டவர் கொடுப்பார். எனவே, முதலாவது உங்களுடைய வாழ்க்கையை ஆண்டவரிடத்திலே அர்ப்பணியுங்கள். என்னென்ன காரியங்களில் உங்கள் வாழ்க்கையில் குறைவுகள் காணப்படுகிறதோ அந்த குறைவுகளையெல்லாம் அவரிடம் அறிக்கையிடுங்கள். அவருடைய இரத்தம் உங்களை சுத்திகரிக்கும். அதோடுகூட மேற்கண்ட வசனத்தின்படி, நீங்கள் நடந்து செல்லும்போது, கர்த்தர் உங்கள் பாதங்களைக் காப்பார். அவருடைய தூதர்களை அனுப்பி, நீங்கள் இடறாதபடி அவர்கள் தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டு போகும்படியான தெய்வீக கிருபையையும் தந்து, பாதங்களை விசாலத்திலே நிறுத்துவார் (சங். 31:8).

பல ஆண்டுகளுக்கு முன்பு சகோதரர் தினகரன் அவர்கள் சென்னையில் பணிபுரிந்து கொண்டிருந்தபோது, நாங்கள் குடும்பமாக நந்தனம் என்ற பகுதியில் வாழ்ந்து வந்தோம். அப்பொழுது மகன் பால் தினகரனுக்கு ஒரு வயது. எங்களிடம் கார் வசதியும் அப்போது கிடையாது. அவர் வேலை முடித்து ஒருநாள் இரவு பதினொரு மணிக்கு பேருந்திலிருந்து இறங்கியபோது, வெளியே சுற்றிலும் இருள் சூழ்ந்திருந்தது. அப்பொழுதெல்லாம் நந்தனம் பகுதியில் அதிகம் வீடுகள் கிடையாது. சரியான விளக்கு வெளிச்சமும் இருக்காது. இருண்ட பாதையில் வழி நடந்து வந்தபோது, ஒரு பெரிய கற்குவியல் மேல் அவர் விழப்போனார். அந்த கற்குவியலில் உள்ள கற்களின் ஓரம் கூர்மையானதாக இருந்தது. அந்த நிலையில் அவர் ஆண்டவரோடு பேசிக் கொண்டே வந்தபடியால், அந்த வசனத்தின்படி கர்த்தருடைய தூதர்கள் அவரை கரம்பிடித்து விழாதபடி தாங்கிக்கொண்டார்கள். வீடு வந்து சேரும்வரை தேவ பிரசன்னம் வெளிச்சமாக இருந்து, அவர் பாதம் கல்லில் இடறாதபடி தெய்வீக ஒளி அவரை வழி நடத்தியது. இது ஏறக்குறைய 1964ஆம் ஆண்டு ஆரம்பத்தில் நடந்த ஓர் அற்புதம். வீடு வந்த பிறகு இந்த அற்புதத்தை நாங்கள் கேள்விப்பட்டு, கர்த்தரை ஸ்தோத்திரித்தோம்.

ஆம், பிரியமானவர்களே! கர்த்தர் தனிமையான நிலையிலும், இருள் சூழ்ந்த வாழ்க்கை நிலையிலும் நமக்கு வெளிச்சமாக நம்மோடிருந்து நம்மை தூக்கியெடுப்பார். நம் பாதம் கல்லில் இடறாதபடிக்கு தமது தூதர்கள் மூலமாய் காத்துக்கொள்வார். நம்மை தம்முடைய கரங்களில் ஏந்தியவராய் நம்மை சுமப்பார், தப்புவிப்பார், தாங்குவார் (ஏசாயா 46:4). ஆகவே, அவரது பிரசன்னத்தை நாடித்தேடி, அவரோடு நெருங்கி வாழ்கிற தெய்வீக வாழ்வை தெரிந்துகொண்டு ஆசீர்வாதம் பெறுங்கள்.

ஜெபம்: ''அன்பு தெய்வமே! என் வாழ்விலும் இருளின் மத்தியில் கீழே விழுகின்றதைப் போன்ற நிலைமையிலும் என்னைக் கரம்பிடித்து தாங்க, நீர் போதுமானவராயிருக்கிறீர் என்று நான் விசுவாசிக்கிறேன். என் பாதம் கல்லில் இடறாதபடிக்கு உமது தூதர்களைக் கொண்டு இன்றுமுதல் பாதுகாக்கப் போகிறதற்காக உமக்கு ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!''

கர்த்தர் உங்களை பிரகாசிக்கப்பண்ணுவார்!

"கர்த்தர் நம்மை பிரகாசிப்பிக்கிற தேவனாயிருக்கிறார்..." (சங்கீதம் 118:27).

மோசேயுடைய வாழ்க்கை மிகவும் ஆச்சரியமான ஒன்று! அவன் பிறப்பே மிகவும் வியப்பானது! அவன் தாய் மூலம் கர்த்தர் அவனை தீங்குக்கு, மரணத்திற்கு விலக்கி பாதுகாத்தார். வாலிப வயதானபோது, எகிப்தின் சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு, வாக்கிலும் செய்கையிலும் வல்லவனானான். எனினும், தேவ அழைப்போ அவனை வேறு திசையில் திருப்பினது. அந்த ராஜாங்க வாழ்வை அவன் துறந்து, கர்த்தருடைய வழியில் திருப்பப்பட்டான். ஒருநாள் தேவாதி தேவன் அவனுக்கு தரிசனமாகி, தான் அழைத்த அழைப்பை வெளிப்படுத்தினார். அவனோ அதை விரும்பாமல், எத்தனையோ சாக்குப் போக்குகளை கூறியபொழுதிலும், முடிவில் ஆண்டவர் தாம் அழைத்த அழைப்பில் உறுதியாயிருந்தபடியால், அவனை அதற்கென்று ஏற்படுத்தினார். அவனோ ஆண்டவருடைய சமுகத்தில் தன்னை ஒப்படைத்து, அவர் பாதத்தில் உபவாசத்தோடு பல நாட்கள் காத்திருந்து, அவரது சித்தத்தை நிறைவேற்றினான் (எபி. 11:24–26). இந்த ஊழியத்தை அவன் செய்ய செய்ய, அவன் முகத்திலே ஒரு தெய்வீகப் பிரசன்னம் இருப்பதை இஸ்ரவேல் மக்கள் காணும்படி ஆண்டவர் செய்தார் (யாத். 34:35). எகிப்தில் அடிமைகளாய் பட்ட பாடுகளில் இருந்து இஸ்ரவேல் ஜனங்களை மீட்டு இரட்சிக்கும் மிகப் பெரிய பணியை தேவன் மோசேக்கு கொடுத்தார். அதை நிறைவேற்ற பெலனையும் கொடுத்து, அதினிமித்தம் இஸ்ரவேல் மக்கள் மத்தியில் அவனை பெரிய தலைவனாக பிரகாசிக்கவும் செய்தார்.

மோசேயைப் போன்று தன்னுடைய குடும்ப வாழ்க்கையைக் குறித்து சற்றும் திருப்தி இல்லாமல் எத்தனையோ பாடுகள் மத்தியிலே, என்னால் ஒன்றும் செய்ய முடியாது என்று தவித்த ஒரு பெண்ணை கர்த்தர் சந்தித்தார். அவளுடைய வாழ்வு திருப்தி இல்லாமல் யாவருக்கும் கசப்பையும், எரிச்சலையுமே கொடுத்தது. ஆனால், ஆண்டவர் அவளைத் தெரிந்து கொண்டபொழுதோ, அவருடைய பிரசன்னம், ஜெபத்தின் மூலமாக அவரைத் தேடும்படியாய் அவளை பெலப்படுத்தியது. அவ்வாறு பெலனடைந்த அவள் அதற்குப்பிறகு எந்த வாழ்க்கை கசப்பு என்றாளோ, என்னால் நிறைவேற்ற முடியாது என்று நினைத்தாளோ, அதை வெற்றியோடு நிறைவேற்றி முடிக்க, யாவருடைய போற்றுதலையும் பெற்றுக்கொள்ள, கர்த்தர் கிருபை புரிந்தார். குடும்பத்தினர் யாவர் முன்பாகவும் அவளுடைய முகம் பிரகாசித்தது. காரணம், தேவ பிரசன்னம் அவ்வளவாய் அவளை நிரப்பி, அவள் தேவனால் வழிநடத்தப்பட்டாள்.

என் அன்பு சகோதர, சகோதரிகளே! நீங்களும்கூட இது கடினம், அது கடினம், என்னால் முடியாது என்றெல்லாம் சொல்லாமல், கர்த்தர் எனக்கு போதுமானவர், அவரே என்னை வழிநடத்தி, என்னை பிரகாசிக்கச் செய்வார் என்ற நம்பிக்கையோடு அவரை உறுதியாய் தேடுங்கள். நீங்களும் நிறைவாய் ஆசீர்வதிக்கப்படுவீர்கள் (நீதி. 4:18).



ஜெபம்: "அன்பின் தெய்வமே! எத்தனை பயங்கரமான சூழ்நிலை, என்ன ஆகுமோ என்ற பிரச்சினைகள், இவ்வாறு பல சந்தர்ப்பங்கள் எனக்கு நேரிட்டாலும், இன்று உம்முடைய பெலனையும், உம்மை உறுதியாய் பற்றிக்கொள்கிற சிந்தையையும் எனக்கு தாரும். அதன் மூலமாய் என் வாழ்வின் எல்லாப் பிரச்சினைகளையும் மாற்றி, பிரகாசமான வாழ்வை எனக்கும் நிறைவாய் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தரில் வாஞ்சையாயிருக்கையில் உயர்ந்த அடைக்கலத்தில் வைப்பார்!

"அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன்; என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன்"

(சங்கீதம் 91:14).

"மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது" (சங். 42:1) என்ற வசனத்தின்படி, நம்முடைய இருதயத்தின் சிந்தைகள், நினைவுகள் ஆண்டவருடைய காரியங்களில் வாஞ்சையாய் இருக்கிறதா? பக்தியாய் அவரை பின்பற்றுகிறோமா? என்று சற்று யோசித்துப் பாருங்கள். அப்படிப்பட்ட வாஞ்சை, அவரைக் குறித்த தாகம் இருக்கும்பொழுது, கர்த்தர் உங்களைக் குறித்து பெருமைப்படுவார். நீங்கள் விரும்புகிறதற்கும் அதிகமாக உங்களை தம்மோடு இணைத்துக்கொள்வார். சகல காரியங்களிலும் உங்களை ஆசீர்வதித்து, வழிநடத்தி, தம்முடைய அடைக்கலத்திற்குள் ஒளித்து வைத்துக்கொள்வார். ரூத் என்ற மோவாபியப் பெண் அப்படித்தான் ஆண்டவருடைய பாதத்தை வாஞ்சையுடன் பற்றிக் கொண்டபடியால் நிறைவான பலனை தேவனிடமிருந்து பெற்றுக்கொண்டாள் (ரூத் 2:12).

ஆண்டவரை அறியாதிருந்த ஒரு தம்பதியர் இருந்தனர். அவர்களுடைய உறவினரில் ஒருவர் ஆண்டவரை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார். எனவே, ஒவ்வொரு உறவினருக்காகவும், அவர்களும் தன்னைப்போல் ஆண்டவர் இயேசுவை இரட்சகராக அறியும்படி ஜெபம் செய்தார். அவருடைய கருத்தான ஜெபத்தின் மூலமாக இந்த தம்பதியரும் அவரை கண்டுகொள்ளும்படி ஆண்டவர் அருள்புரிந்தார். இவர்களுடைய வாழ்க்கை மாறியதைக் கண்ட அந்த பக்திமான் அவர்கள் வீட்டிற்கு அடிக்கடி சென்று ஆழமான ஆவிக்குரிய இரகசியங்களை வேதபுத்தகத்திலிருந்து கற்றுக்கொடுத்தார். இதினிமித்தம் அந்த குடும்பத்தில் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் அவர்களை நிரப்பவும், வல்லமையாக அவர்கள் உபயோகப்படவும் ஆண்டவர் வரங்களையும் வல்லமையையும் அருளிச்செய்தார். இதனால், மற்ற உறவினர்கள், இதன் மேன்மையை உணராமல் அவர்களை எள்ளி நகையாடினர். ஆனால், இந்த தம்பதியரோ ஒன்றுக்கும் கவலைப்படவில்லை. கர்த்தர் மேல் இருந்த வாஞ்சை அதிகரிக்க அதிகரிக்க, ஆண்டவரும் அவர்களை ஆசீர்வதித்து உயர்த்தினார். இந்த உயர்வைக் கண்ட ஏனைய உறவினர்கள் ஆச்சரியமடைந்து, ஒன்றும் இல்லாமல் இருந்த இவர்களுக்கு இவ்வளவு ஆசீர்வாதம் எப்படி வந்தது? என்று வியந்து, அதன்பிறகு தாங்களும் இந்த தெய்வீக ஆசீர்வாதங்களை ஒவ்வொரு குடும்பமாய் நிறைவாய் பெற்று கர்த்தருக்கென்று நற்சாட்சிகளாக மாறினர். அத்தனை பேருக்கு முன்னதாக அந்த தம்பதியரின் முகம் பிரகாசித்தது.

அன்பானவர்களே! இப்படித்தான் நீங்களும் ஆண்டவருடைய சமுகத்திலிருந்து அவருடைய அடைக்கலத்தை பெற்றுக்கொள்வதோடு, உங்கள் உறவினர், நண்பர்கள் யாவரும்கூட அவருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலம் பெற்றுக்கொள்ள, உங்கள் முழு இருதயத்தோடும் அவரில் அன்பு வைத்து ஆசீர்வாதம் பெறுங்கள் (யோவேல் 3:16).

ஜெபம்: "அன்பு தெய்வமே! உம்மை எப்பொழுதும் கண்டுகொள்ளுகிற ஒரு வாழ்வை எனக்கு தாரும். உமது பிரகாசத்தை. உமது அடைக்கலத்தை எனக்கு தந்து, இன்றுமுதல் என்னை கரம்பிடித்து நடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

நெருக்கத்தில் கேட்டருளி, விசாலத்தில் வைப்பார்!

"நெருக்கத்திலிருந்து கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன், கர்த்தர் என்னைக் கேட்டருளி விசாலத்திலே வைத்தார்" **(சங்கீதம் 118:5).**

யோனா என்ற தேவ ஊழியன் கர்த்தருக்கு பிரியமானவனாக வாழ்ந்தபொழுதிலும், ஆண்டவர் கூறின திசையிலிருந்து வேறு திசைக்கு தன்னை திருப்ப துணிகரம் கொண்ட போது, கர்த்தர் அப்படியே விட்டுவிடவில்லை. பல துன்பங்களை அவன் அடையும்படி, தன் குறைவை உணரும்படி செய்தார். மீனின் வயிற்றுக்குள் விழுங்கப்பட்ட யோனா, அங்கிருந்து கர்த்தரை நோக்கி கெஞ்சினான். அவனுடைய விண்ணப்பம் ஆண்டவருடைய பரிசுத்த ஆலயத்திலே வந்து சேர்ந்தபொழுது, ஆச்சரியமாக கர்த்தர் வழி திறந்து, அவன் வெளியே வரும்படி செய்தார் (யோனா 2:2–10). மறுபடியும் அதே ஊழியத்தை நிறைவேற்றி முடிக்கவும் அவனை வழிநடத்தினார். ஆம்! நம்முடைய ஆண்டவர் நெருக்கத்திலிருக்கிற நம்முடைய ஜெபத்தைக் கேட்டு, கூக்குரலை அங்கீகரித்து, தாம் விரும்பிய வழியிலே நம்மை நடத்த வல்லமையுள்ளவர். இன்று நீங்களும் யோனாவைப்போல, கர்த்தருடைய வார்த்தையைக் கேளாமல், நெருக்கத்தில் மாட்டிக்கொள்ளாதபடி, என்ன நெருக்கம் வந்தாலும் இயேசு போதும் என்று அவரையே நோக்கிப் பார்க்க கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது ஆண்டவர் விடுதலை கொடுத்து உங்களை ஆசீர்வதிப்பார்.

ஒரு இளம் தம்பதியர் திருமணம் முடிந்து, அடுத்த ஆண்டு திருமணநாள் அன்று ஒருவருக்கொருவர் வெகுமதி கொடுக்க விரும்பினர். ஆனால், பணமோ கொஞ்சமும் இல்லை. நெருக்கமான வாழ்வு! இதில் எப்படி பரிசு கொடுப்பது? என்று ஒரே கவலை. ஒருவருக்கொருவர் தெரியாமல் இருவரும் கர்த்தரை நோக்கி மன்றாடினர். அந்த நெருக்கத்தை மாற்றி, எப்படியாவது எங்களுக்கு இந்த விருப்பத்தை நிறைவேற்றும் என்று ஜெபித்தனர். நடந்தது என்ன தெரியுமா? அவர்கள் திருமணத்திற்கு வர முடியாத ஒரு உறவினர் வெளிநாடு ஒன்றிலிருந்து இந்த முதலாவது திருமணநாள் அன்று அவர்களுக்கென ஒரு வெகுமதியை பணமாக அனுப்பியிருந்தார். அதை பார்த்தவுடன் இருவருக்கும் ஒரே மகிழ்ச்சி! அதை வைத்து இரண்டு பேரும் தங்கள் திருமணநாளை சந்தோஷமாக கொண்டாடியதோடு, ஒருவருக்கொருவர் வெகுமதி கொடுக்கவும் கர்த்தர் அவர்களது நெருக்கத்திலே உதவி செய்தார். இளம் வயதிலேயே ஆண்டவருடைய வல்லமையை அவர்கள் உணர்ந்து கொள்ளும்படியும் அருள்புரிந்தார்.

ஆம், அன்பானவர்களே! என்ன நெருக்கம் வந்தாலும் ஒன்றுக்கும் பயப்படாதிருங்கள். கர்த்தரை நோக்கிப் பார்த்து, அவர் சமுகத்தில் உங்கள் சஞ்சலங்களை ஊற்றுங்கள் (சங். 142:1,2). அவர் உங்களுக்காக யுத்தம் செய்வார், ஆசீர்வதித்து வழிநடத்துவார். நீங்கள் அற்புதங்களை காணும்படி செய்வார்.

ஜெபம்: "அன்பின் தேவனே! என் வாழ்வில் நெருக்கம் வரும்பொழுதெல்லாம், நான் உம்மையே நோக்கிப் பார்க்கவும், உம்மிடத்திலிருந்து மேலான ஆசீர்வாதங்களை, அற்புதங்களை உமது நாமத்தினால் பெற்றுக்கொள்ளவும். இன்றுமுதல் நீரே எனக்கு வழிகாட்டியாயிருந்து, நெருக்கத்திலே என்னைக் கேட்டருளி, விசாலத்திலே என்னை வையும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

பாவம் செய்யாதபடி உம் வாக்கை என் இருதயத்தில் வைத்தீர்!

"நான் உமக்கு விரோதமாய் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்" (சங்கீதம் 119:11).

கர்த்தரை அறிந்துகொண்டபிறகு, அவருக்கு விரோதமாக பாவம் செய்யாதபடி, ஆண்டவரே பெலன் கொடுக்கிறார். ஆகவேதான், யோபு, "என் கண்களோடே உடன்படிக்கைபண்ணின நான் ஒரு கன்னிகையின்மேல் நினைப்பாயிருப்பதெப்படி?" (யோபு 31:1) என்று சவால் விடுகிறான். அப்படியானால், பாவம் செய்யாதபடி ஆண்டவருடைய வாக்கை எவ்வளவாய் அவன் தன் இருதயத்திலே பதித்து வைத்து நடந்திருக்கிறான் என்பதை யோசித்துப் பாருங்கள். அதேபோன்றுதான் யோசேப்பு, இளம் வாலிபனாக இருந்தபொழுதும், "வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுகிறதினால்தானே" (சங். 119:9) என்ற வசனத்தின்படி, எந்த சூழ்நிலையிலும் பாவம் செய்யாமலிருக்க, ஜாக்கிரதையாய் நடந்து கொண்டான். ஆம்! கர்த்தருடைய வசனம் நம்மை அவ்விதமாகவே காத்துக்கொள்கிறது. ஆகவே, அன்பானவர்களே, இவ்விதமாய் பாவமற்ற பரிசுத்தராக வாழ உங்கள் வழியையும் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுங்கள். அவருடைய வார்த்தையை கவனமாய் பயபக்தியுடன் வாசித்து, பதிய வைத்து, பாவமற்ற வாழ்க்கை வாழுங்கள்.

ஒரு இளம் மகனுக்கு, தாய் சிறு வயதிலேயே கர்த்தர் விரும்புகிற ஒழுக்கம், பரிசுத்தம் இவைகளை கற்பித்து கொடுத்திருந்தார். அநேக தேவனுடைய வார்த்தைகளை அவனுடைய உள்ளத்திலே பதிய வைத்தாள். ஆனால், அத்தகைய பரிசுத்த வாழ்வின் மத்தியிலும் தீங்கு அவனை தொடர்ந்தது. கெட்ட நண்பர்கள் அவனை சுற்றி வந்தனர். அதை அவன் இன்பமாக அனுபவித்தான். ஆனால், அந்த தாயோ அவனுக்காக கண்ணீரோடு பிரார்த்தனை செய்து, "ஆண்டவரே, உம் வசனங்கள் அவன் உள்ளத்தை திருப்பட்டும்" என்றார்கள். அப்படியே ஒருநாள் வந்தது. அதுவரை வெறுத்து ஒதுக்கி தூரமாய் வைத்திருந்த வேத வார்த்தைகள் அவனோடு பேச ஆரம்பித்தன. "இந்த பகுதியை எடுத்து வாசித்துப் பார்" என்ற சத்தத்தை அவன் கேட்டபொழுது, உடனடியாக வேதத்தைத் திறந்து வாசிக்க ஆரம்பித்தான். அது அவனுக்கு அதிக சந்தோஷத்தை கொடுத்தது. இப்படியே அவன் தேவ ஒத்தாசையைக் கொண்டு, பாவத்துக்கு விலகி, பரிசுத்தமாய் வாழ தேவன் அவனுக்கு அனுக்கிரகம் பண்ணினார்.

ஆம், பிரியமானவர்களே! தேவனுடைய வார்த்தை பாவத்திற்கு விலக்கி, பரிசுத்த வழியிலே நம்மை நடத்தும். ஆகவேதான், அனுதினமும் அதை கருத்தாய் வாசிப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாகும். அது நடக்கும்போது வழிகாட்டும், விழிக்கும்போது சம்பாஷிக்கும் (நீதி. 6:22). அதை கண்மணிபோல காத்து வழிநடக்கையில் சகல விதத்திலும் ஆண்டவரின் ஆசீர்வாதம் நம்மீது தங்கும்.

ஜெபம்: "அன்பின் தெய்வமே! என் வாழ்விலும் உமக்கு பயப்படும் பயம், வேத வாசிப்பு இவைகளை பலுகிப் பெருகப்பண்ணும். இன்றுமுதல் உமது வாக்கை என் இருதயத்தில் வைத்து, பாவம் செய்யாத பரிசுத்த வாழ்வைத் தந்து, என்னை நிறைவாய் ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

செம்மையானவர்களின் ஜெபமோ அவருக்கு (ஆண்டவருக்கு) பிரியம்!

(நீதிமொழிகள் 15:8).

"ஜெபம்" என்பது ஆண்டவரோடு பக்தர்கள் தங்கள் உள்ளத்தைத் திறந்து ஊற்றுவது! இதன் இன்பத்தை அறிந்து கொள்ளுகிறவர்கள், ஜெபவேளையை ஏனோதானோ என்று எண்ணமாட்டார்கள். மோசே ஒரு சாதாரண மனிதன் தான். ஆனால், தேவனால் அவர் தம் சேவைக்கென்று அழைக்கப்பட்டபொழுதோ, அவர் தம் பாதத்தில் பல நாட்கள் இரவும், பகலும் உண்ணாமல், உறங்காமல் பிரார்த்தனை செய்தான் என்பதாக வாசிக்கிறோமல்லவா? (யாத். 34:28). ஆம்! அவன் தேவாதி தேவனோடு முகமுகமாய் பேசின ஓர் மனிதன் (யாத். 33:11). நம்மைப்போன்ற ஓர் மனிதன், இவ்விதமாக ஜெப வாழ்க்கையின் மூலமாக தேவனோடு வாசம்பண்ணி, முகம் பிரகாசமடைந்திருக்க, நீங்களும் நானும்கூட அவ்வாறு ஆண்டவர் சமுகத்தில், ஆண்டவரோடு பேசுவது சாத்தியமான காரியம் தானே! நாம் எவ்வளவு தூரம் ஆண்டவரை பிரியப்படுத்துகிறோம் என்பதை சிந்தித்து, உங்கள் ஜெபவாழ்வை இன்றுமுதல் தேவ பெலனால் நிறைந்ததாக மாற்றிக்கொள்ளுங்கள்.

ஏறக்குறைய எட்டு வயது நிரம்பிய சிறுவன் ஒருவன் தன் தாய் இறந்தபின்பு, மாற்றாந்தாயின் கொடுமையால் மனம் சலித்தவனாய், தன் சபை போதகரிடம் ஓடிச் சென்று அழுதான். அவர் அவனை தன் ஜெப அறைக்கு அழைத்து சென்று, ஆண்டவரோடு பேச, தன் வேதனைகளை ஜெபமாக ஊற்ற அவனுக்கு கற்றுக்கொடுத்தார். கவலையோடு வந்த அவன் உள்ளம் தேவ சமாதானத்தால் நிறைந்தது. எனவே, எங்காவது தனியிடம் சென்று, தினமும் ஆண்டவரோடு பேசி வந்தான். அவன் முகம் பிரகாசமடைந்தது. அவன் மனதின் பாரங்கள், கவலைகள் ஓடி மறைந்தன. மாற்றாந்தாயை நேசிக்கும் மனப்பக்குவத்தையும் ஆண்டவர் கொடுத்தார். இவன் வாழ்வின் மாற்றத்தைக் கண்ட மாற்றாந்தாய்க்கு அவனைக் குறித்த ஓர் பயம் ஏற்படும்படி தேவன் கிருபை புரிந்தார். இருவரும் ஒருவரையொருவர் வெறுப்பதற்கு பதிலாக தெய்வீக அன்பினால் நிறையும்படி, குடும்பத்தில் சமாதானம், தேவ பிரசன்னம், தெய்வீக ஒளியின் பிரகாசம் யாவும் நிறைந்து, யாவருக்கும் ஓர் நற்சாட்சியாக விளங்கினர். இவை யாவுக்கும் காரணம், அந்த சிறுவனின் ஜெப வாழ்வு அல்லவா!

ஆம், பிரியமானவர்களே! நீங்களும் உங்கள் வாழ்வில் எவ்வளவு பயங்கரமான பிரச்சினைகளின் நடுவே வாழ்ந்தாலும், மனம் கசந்து சஞ்சலப்படாமல், கர்த்தரிடம் மேற்கண்ட சிறுவனைப்போல், ஜெபத்தின் மூலம் யாவற்றையும் மனம் திறந்து ஊற்றி, அதன்மூலம் கர்த்தரை பிரியப்படுத்தி, ஆசீர்வாதமான வாழ்வை பெற்றுக்கொள்ளுங்கள் (சங். 142:1,2).



ஜெபம்: "அன்பின் தகப்பனே! உம்மோடு பேசுவது எத்தனை சமாதானமும், பேரின்பமும் தரும் வாழ்வு என்பதை அறிந்துகொண்டேன். நானும் இன்றுமுதல் உம்மோடு பேசி ஜெபிப்பதின் மூலம் சகலவித ஆசீர்வாதங்களையும் நிறைவாய் பெற்று, உம்மை பிரியப்படுத்த எனக்கும் உம் தெய்வீக கிருபையை தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

நீதிமானுடைய வேர் கனிகொடுக்கும்!

(நீதிமொழிகள் 12:12).

ஒரு மனிதன் அல்லது மனுஷி கர்த்தருக்கு பயந்து, நீதியின் வழிகளில் சகல காரியங்களையும் சிந்திக்கும்போதும், செயல்படும்போதும் ஆண்டவர் அவர்கள்மேல் பிரியமாயிருந்து, அவர்களை ஆசீர்வதிக்கிறார். ஆபிரகாம், நோவா, யோபு போன்ற பக்தர்கள் எல்லாம் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டு, அவர்கள் மட்டுமல்ல, அவர்கள் சந்ததியும் அதினிமித்தமாக ஆசீர்வாதம் பெற, கர்த்தருக்கென்று கனி கொடுக்க, கர்த்தர் அவர்கள்மேல் கிருபை பாராட்டியிருக்கிறார். மனுஷன் எவ்வளவோ முயற்சித்தாலும் இந்தவிதமாக அன்பைப் பொழிய முடியாது. வியாபாரத்தில் செழித்து ஓங்குகிற தகப்பன், மகன் தனக்கு துணையாக பிற்காலத்தில் எழும்புவான் என்று யோசிக்கிறான். ஆனால், அந்த மகனோ தனக்கு பிரியமான வேறு விதங்களிலே தன் வாழ்வை அர்ப்பணிக்க எத்தனிக்கிறான். எனக்கு வியாபாரம் வேண்டாம், நான் நிறைய படித்து பட்டம் பெற்று, உயர் பதவி வகிக்க வேண்டும் என்கிறான். ஆம்! உலகப்பிரகாரமான அன்பு இப்படிதான், நினைப்பது ஒன்று, நடப்பது வேறொன்றாக தாறுமாறாகிறது. ஆனால், பக்தர்களுக்கோ, கர்த்தரையே தேடுகிற நீதிமான்களுக்கோ பரம தகப்பன் பட்சமாய் இருந்து, அவர்களுடைய சந்ததியும் கனி கொடுத்து, ஆசீர்வாதம் பெற அருள்புரிகிறார் (யோவான் 15:5,8).

ஒரு இளைஞன் வாலிப வயதிலே ஆண்டவரை உறுதியாய் பற்றி பிடித்துக்கொண்டான். திருமணமாக வேண்டிய சமயத்தில் தன் மனைவி பக்தியுள்ளவளாய் வர வேண்டுமென்று பிரார்த்தனை செய்தான். மனைவியும் அவனோடு சேர்ந்து, கர்த்தரை தேடுவதிலும், அவருக்காக உழைப்பதிலும் ஒன்றுபட்டவளாய் இருக்கும்படி ஆண்டவர் அருள்புரிந்தார். அவர்களுக்கு ஒரு அருமையான குமாரன் பிறந்தான். இவனை சீரும் சிறப்போடு வளர்த்து ஆளாக்கின பெற்றோர், அவன் பெரியவனானபொழுது, அவன் விரும்பும் வழியை தெரிந்துகொள்ளட்டும் என்று, தேவ சித்தத்திற்கும், மகனுடைய பிரியத்திற்கும் விட்டுவிட்டார்கள். கர்த்தருடைய தயவினால் மகன் வளர்ந்து பெரியவனாகி, நிறைய பட்டங்கள் பெற்றான். அநேக கல்லூரிகளில் பேராசிரியராக பணிபுரிய மக்கள் அவனை தேடி வந்தனர். ஆனால், அந்த மகன் என்ன கூறினான் தெரியுமா? "என் தகப்பன் ஆண்டவருக்கென்று செய்கிற நற்பணிகளை நானும் தொடர்ந்து செய்து அவர் செய்வதைவிட மேலாக கர்த்தருக்கென்று, அவர் நாமம் மகிமைப்படும்படி உழைக்க ஆண்டவருக்கு முற்றிலுமாய் என்னை தத்தம் செய்கிறேன்" என்றான். அவனுடைய பிள்ளைகளும் அப்படியே தேவ பக்தியுள்ள சந்ததியாய், ஆண்டவருடைய ஊழியத்தை தொடர்ந்து செய்ய தேவன் அருள்புரிந்தார்.

ஆம், பிரியமானவர்களே! நீதிமானுடைய வேர் கனி கொடுக்கும் என்பது எத்தனை உண்மையானது பாருங்கள்! யார் என்ன குற்றச்சாட்டு கூறினாலும், அவதூறு பேசினாலும் கவலைப்படாமல், கர்த்தரை சார்ந்து நீதிமானாய் வாழ்ந்து, நம்முடைய வேரும் கனி கொடுக்கத்தக்கதாக கர்த்தர் கிருபைபுரிய அவரை நோக்கி பார்ப்போமா? (நீதி. 12:12).

ஜெபம்: "அன்பு தெய்வமே! பக்தர்களைப்போல நானும்கூட நீதிமானாய் நடந்து, சந்ததி சந்ததியாக, உமக்கென்று கனி கொடுத்து, நிறைவான ஆசீர்வாதம் பெற, இன்றுமுதல் உம்முடைய தெய்வீகக் கிருபையை எனக்கும் தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தர் முன்னேயும், பின்னேயும் உங்களைக் காப்பார்!

"...கர்த்தர் உங்கள் முன்னே போவார்; இஸ்ரவேலின் தேவன் உங்கள் பிறகே உங்களைக் காக்கிறவராயிருப்பார்" **(ஏசாயா 52:12).**

இந்த வாக்குத்தத்தத்தை போன்றே யாத்திராகமம் 33:14–ல், ஆண்டவர் நமக்கு அருளிச் செய்கிற மற்றொரு ஆசீர்வாதம், "என் சமுகம் உனக்கு முன்பாக செல்லும், நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்பதாகும். ஆண்டவர் ஒவ்வொரு நாளும் நமக்கு முன்னும் பின்னும் இருப்பாரானால், நாம் எவ்வளவு பாக்கியம் பெற்றவர்களாய் இருப்போம்! நன்றாக யோசித்துப் பாருங்கள், அண்டசராசரத்தையும் படைத்த ஆண்டவர் இவ்வாறு நம்மோடு கூறுகிறார். நாம் தான் அவரைத் தேடாமல், உறக்கத்தையும், உணவையும், மாம்ச இச்சைகளையும், பல்வேறு ஆசைகளையும் மனதில் கொண்டு, அவரை விட்டு தூரமாய் வாழ்கிறோம். அவர் நம் ஒவ்வொருவரையும் பார்த்து, நம்முடைய குறைவுகளையெல்லாம் நினைக்காமல் "என் மகனே, என் மகளே, நீ ஏன் பாரம் சுமக்கிறாய்? என்னிடத்தில் வா, நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று அன்புடன் அழைக்கிறார் (மத்தேயு 11:28). இந்த பாக்கியமான வாழ்வுக்கு நான் அருகதையாக இருக்கிறேனா? ஒவ்வொருநாளும் இதை நாடித் தேடுகிறேனா? என்று யோசித்துப் பார்த்து, உங்கள் வாழ்வின் குறைவுகளை மாற்றி, கர்த்தர் தரும் இந்த மேலான ஆசீர்வாதத்தை நிறைவாய் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஒரு பக்தியுள்ள தாய், தன் இரண்டு பெண் பிள்ளைகளையும், அவர்கள் பள்ளியிலே சென்ற சுற்றுலாவிற்கு பேருந்தில் செல்ல புறப்படும் முன் கர்த்தருடைய கரத்திலே ஜெபித்து ஒப்புக் கொடுத்தார்கள். இந்த பிள்ளைகளும் பக்தியோடு புறப்பட்டு சென்றார்கள். போகும் வழியிலே அந்த பேருந்து ஒரு மரத்தில் மோதி இரண்டு முறை உருண்டு ஒரு விபத்துக்குள்ளானது. அந்த பேருந்தில் சென்ற அநேக மாணவிகளுக்கு பலத்த காயம் ஏற்பட்டது. ஆனால், இந்த இரண்டு மாணவிகளுக்கும் ஒரு சிறு சிராய்ப்புகூட சரீரத்தில் இல்லை. காரணம், அந்த தாயின் பக்தியுள்ள ஜெபம்! அவர்கள் இரண்டுபேரும் கீழே இறங்கி அந்த பேருந்தை நோக்கிப் பார்த்தபொழுது, அதில் ஒரு வசனத்தைக் கண்டார்கள். "கர்த்தர் உங்களைக் காக்கிறவர்" என்று எழுதப்பட்டிருந்தது. அப்பொழுதுதான் இரண்டு பேருக்கும், ஆண்டவர் இந்த காரியத்தினிமித்தமாகத் தான் நம்மை சேதமின்றி பாதுகாத்தார், நம்மோடு கூடவே அவர் வந்திருக்கிறார் என்று சந்தோஷமடைந்தார்கள். ஒரு நல்ல பாடத்தையும் அன்று கற்றுக் கொண்டார்கள்.

அன்பானவர்களே! இதேவிதமாக நீங்களும்கூட வெளியில் போகும்போதும், மற்றும் எதை செய்தாலும் கர்த்தரை கருத்தாய் ஜெபத்தின் மூலம் தேடுவீர்களானால், ஆண்டவர் இந்த வசனத்தின்படியே உங்களையும் காப்பார், தேவையான ஞானம் தருவார், ஆசீர்வதிப்பார். உங்கள் பிள்ளைகளையும்கூட இந்த தாய் செய்ததுபோல ஜெபத்துடன் அனுப்பி வையுங்கள். கர்த்தர் உங்களையும், உங்கள் பிள்ளைகளையும், இந்த வாக்குத்தத்தத்தின்படியே பாதுகாப்பார் (சங். 121:1,8).

ஜெபம்: "அன்பின் தெய்வமே! நீர் எனக்கு அருளிச்செய்யும் பாதுகாப்பு எவ்வளவு விசேஷமானது! ஆகவே, இன்றுமுதல் நான் முழுமனதோடும் உம்மை கருத்தாய் தேடவும், எதை செய்தாலும் உம்மிடத்தில் வேண்டிக்கொண்டு, உம்முடைய துணையோடு செய்யவும் எனக்கு கற்பித்தமைக்கு உமக்கு நன்றி. இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தருக்குப் பயப்படும் பயத்தை இருதயத்தில் வைப்பார்!

"அவர்களுக்கு நன்மை செய்யும்படி, நான் அவர்களை விட்டுப்பின் வாங்குவதில்லையென்கிற நித்திய உடன்படிக்கையை அவர்களோடே பண்ணி, அவர்கள் என்னைவிட்டு அகன்று போகாதபடிக்கு, எனக்கு பயப்படும் பயத்தை அவர்கள் இருதயத்திலே வைப்பேன்" (எரேமியா 32:40).

கர்த்தருக்கு பயப்படும் பயம் நமக்குள் இருக்குமானால், வேதத்திலே பல இடத்தில் கூறப்பட்டிருக்கிறபடி, குடும்ப வாழ்க்கையிலும், தனிப்பட்ட வாழ்க்கையிலும் நிறைவான ஆசீர்வாதத்தை நாம் நிச்சயமாக பெற்றுக்கொள்ளலாம். தேவபயம் நிறைந்த குடும்பங்கள், தேவனுடைய பிரசன்னத்தை தங்களுடைய வீடுகளிலும், தங்கள் இருதயத்திலும் நிறைவாய் பெற்றுக்கொள்வார்கள். அவர்களுடைய பேச்சு, செயல், நடவடிக்கை, யாவும் தேவபயம் நிறைந்ததாய், மற்றவர்களுக்கு முன் ஒரு நற்சாட்சி நிறைந்ததாய் இருக்கும். ஏனென்றால், அவ்விதமாய் அவர்கள் வாழும்படி ஆண்டவர் கூடவே இருந்து அவர்கள் பின்வாங்காதபடி தமது நித்திய உடன்படிக்கையை அவர்களோடு பண்ணுவார். அவரோ தமக்கு பயப்படும் பயத்தை அத்தகையோர் இருதயத்தில் வைப்பார் (சங். 25:12).

ஒரு பெற்றோர் தங்கள் பிள்ளைகள் நான்கு பேரையும் கருத்தாய் சிறுவயதிலிருந்தே பக்தியுடன் வளர்த்தனர். ஆனால், அவர்களோ ஆழமான பக்தியை அறியாமல், வேத வாசிப்பு, ஜெபம் செய்வது, இவைகளையெல்லாம் அனுதின பழக்கமாகவும், ஓய்வு நாளன்று ஆலயம் செல்வதோடும் நிறுத்திக்கொண்டார்கள். அவர்கள் கடைசி மகளையோ சற்று செல்லமாக வளர்த்தபடியால், அவள் கர்த்தரை விட்டு வெகுதூரம் போன நிலைமையில் இருந்தாள். ஆனால், ஒருநாள் அவள் மனதிலே ஒரு பலத்த சஞ்சலம் ஏற்பட்டபொழுது, கர்த்தரை நோக்கிப் பார்த்தாள். "ஆண்டவரே, நான் இத்தனை நாட்களும் என் பெற்றோர் எனக்கு காண்பித்த நல்ல தெய்வீக வழியிலே நடவாமல், என் மனம்போல் வாழ்ந்தேன். அதினிமித்தம், இன்று என் உள்ளத்திலே சமாதானம் இல்லை. ஏதோ இனம் தெரியாத ஒரு கவலை என் உள்ளத்தை வாட்டுகிறது. அநேகர் உம்மை கண்டுகொண்டு உமக்கு பிரியமாய் வாழ்கிறார்களே! என் மீதும் கருணைகூர்ந்து, என் வாழ்வையும் மாற்றும்" என்று தன்னையுமறியாமல் ஆண்டவரை நோக்கி கண்ணீர்விட்டு அழுதாள். ஆண்டவர் அவள் விரும்பியபடியே, தமக்கு பயப்படும் பயத்தை, தமது இரட்சிப்பின் சந்தோஷத்தை, சமாதானத்தை அவள் உள்ளத்திலே வைத்தார். அவளுடைய குடும்பத்தாருக்கும் அவளைக் குறித்து எல்லையில்லாத சந்தோஷம் உண்டாயிற்று. கர்த்தருக்கென்றே வாழ்கிற ஒரு பெண்ணாய், விவாகம்கூட செய்யாமல் தன் வாழ்நாள் முழுவதும் ஆண்டவருக்கென்று தன்னை அர்ப்பணித்து, அருட்பணி செய்தாள்.

அன்பானவர்களே! நீங்களும் கூட உங்கள் குறைகளையெல்லாம் ஆண்டவருடைய சமுகத்தில் அறிக்கையிட்டு, தெய்வீக ஆசீர்வாதங்களை ஆண்டவரிடம் கேட்டு பெற்று மகிழுங்கள். அவரே தமக்கு பயப்படும் பயத்தினால் உங்களையும் அலங்கரிப்பார் (சங். 115:13).

ஜெபம்: "அன்பு தெய்வமே! இன்றுமுதல் என் வாழ்விலும் எல்லாக் குறைவுகளையும் நீரே உம்முடைய இரத்தத்தால் கழுவி, எனக்கு புது வாழ்வைத் தாரும். நானும் உமக்கு ஊழியம் செய்ய உம் தெய்வீக அருளைத்தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்!

(யோவான் 3:30).

தேவனுடைய ஊழியனாக தெரிந்துகொள்ளப்பட்ட யோவான்ஸ்நானன் தனக்கு பின் வந்த தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை குறித்துதான் இவ்வண்ணமாக கூறுகிறார். “இயேசு கிறிஸ்து உன்னதத்திலிருந்து வருகிறவர்! எல்லோரிலும் மேலானவர்! நானோ அவருக்கு முன்பாக அனுப்பப்பட்ட தூதன், அவ்வளவுதான்! ஆகவேதான், அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்” என்று கூறுவதாக வாசிக்கிறோம். நாமும்கூட இதே சிந்தையோடு “ஆண்டவரே, உம்முடைய நாமம் உயர்த்தப்படட்டும், உம்முடைய புகழ் ஓங்கட்டும், நான் உமக்கு அடிமை, என் மூலமாக நீர் அப்படிப்பட்ட கனத்தையும் மகிமையையும் பெறுவதே என் பாக்கியம்” என்று சொல்லி, அவருக்கு பயப்படும் பயத்தோடு, அவர் நாமம் போற்றப்படும்படியாய் அல்லது உயர்த்தப்படும்படியாய் நாம் வாழ்ந்து, அவரை சந்தோஷப்படுத்துவதுதான் யோவான் நமக்கு முன்மாதிரியாக வைத்த பக்தியுள்ள மார்க்கம். இதே தாழ்மையை நாமும் பெற்று கர்த்தரை கனப்படுத்துவோம் (யாக். 4:10)!

ஒரு கம்பெனியில் சாதாரண உத்தியோகஸ்தராக ஒரு மனிதர் பணிபுரிந்தார். அவர் எப்போதும் மிகவும் சுத்தமாக ஆடைகளை அணிவார். அவர் என்ன வேலை செய்தாலும் யாரும் குறை கண்டுபிடிக்க முடியாதபடி அவைகளை செவ்வனே செய்வார். அவர் பேசுவதிலும்கூட ஞானத்தின் வார்த்தைகள் மட்டும்தான் வெளிவரும். ஒரு சாதாரண நிலைமையில் அவர் இருந்தாலும், அவரோடு பணிபுரிந்த மேலதிகாரிகளும்கூட அவரைக் கண்டு நடுங்குவார்கள். ஏனென்றால், அத்தனையாய் அவருடைய வாழ்க்கை தூய்மையானதாக இருந்தது. அவர் என்ன செய்வார் தெரியுமா? ஒவ்வொரு நாளும் அதிகாலையில் எழுந்திருப்பார், தன் வாழ்க்கையை ஆராய்ந்து பார்ப்பார். “ஆண்டவரே, நான் ஒன்றும் இல்லாதவன், குறைவுகள் நிறைந்தவன். உம்மைப்போல என்னையும் நீர் மாற்றி, வேதம் சொல்லுகிறபடி, உம்முடைய சாயலை எனக்கு தாரும். மகிமையின் மேல் மகிமையடைந்து, மறுரூபமடைந்தவனாய் வாழ நீரே எனக்கு அருள்தாரும்” (2 கொரி. 3:18) என்று, கர்த்தர் ஜெபத்தைக் கேட்டார் என்ற நிச்சயம் வரும்வரை கருத்தாய் ஜெபிப்பார். யாவரிடமும் சமாதானமாய் இருக்க, தன்னால் இயன்ற வரை கவனமாக இருப்பார். இதினிமித்தம் தான் இத்தனை ஆசீர்வாதம் அவருக்கு கிடைத்தது.

ஆம், அன்பானவர்களே! நாமும்கூட இந்த தேவமனிதனைப்போல, நம்முடைய வாழ்வை கர்த்தருடைய சந்நிதியில் ஆராய்ந்து பார்ப்போம். அதில் உள்ள குறைகளை ஆண்டவரிடம் அறிக்கையிட்டு, அந்த பக்தன் ஜெபித்ததுபோல, நாமும் “உம்மைப்போல என்னை மாற்றும், நீர் பெருகவும், நான் சிறுகவும் வேண்டும்” என்று ஒவ்வொருநாளும் ஜெபிப்போம். கர்த்தர் அதன்மூலம் நம்மை பாக்கியம் பெறச்செய்வார் (லூக்கா 1:48).

ஜெபம்: “அன்பின் தெய்வமே! உம்மோடு உறவாடுகிற, உமக்கு பயந்து நடக்கிற, உம்முடைய சாயலாய் மாறுகிற அனுபவம் எத்தனை தெய்வீகமானது என்பதை அறிந்துகொண்டேன். நானும் இதேவண்ணமாக உம்மிடத்திலே மன்றாட இன்றுமுதல் நீரே எனக்கு அருள்தாரும். ஆசீர்வதித்து வழிநடத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!”

அவர் சமுகத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றிவிடுங்கள்!

"ஜனங்களே, எக்காலத்திலும் அவரை நம்புங்கள்; அவர் சமுகத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றிவிடுங்கள்; தேவன் நமக்கு அடைக்கலமாயிருக்கிறார்"

(சங்கீதம் 62:8).

இது ஒவ்வொரு தேவபக்தியுள்ள மனுஷனும், மனுஷியும் செய்ய வேண்டிய காரியம். கஷ்டங்கள், துன்பங்கள் வரும்போது மட்டும் கர்த்தரை தேடுகிறோம். எல்லாம் நலமாய் இருக்கும்போது, அவரை நினைத்துக்கூட பார்ப்பதில்லை. இதுதான் நம்மில் அநேகர் செய்கிற ஒரு தவறான காரியம். இல்லை பிரியமானவர்களே! ஒவ்வொருநாளும் வேதாகம பக்தர்களைப்போல அதிகாலையில் இருந்து இரவு படுக்கைக்கு போகும்வரை, இரவிலே எழுந்திருந்தாலும்கூட கர்த்தரை நோக்கி பிரார்த்தனை செய்ய கற்றுக்கொள்வோம். ஆண்டவராகிய இயேசு அப்படித் தான் மாதிரியை நமக்கு வாழ்ந்து காண்பித்தார் (மத்தேயு 14:23, மாற்கு 1:35, லூக்கா 6:12). இதேபோன்று நம்மைப்போன்ற ஒரு சாதாரண மனிதனாகிய தாவீதும்கூட ஒவ்வொருநாளும் கடைபிடித்ததாக வாசிக்கிறோம் (சங். 63:1,6; 55:17). இப்படி ஒரு மனிதன் செய்ததை நாம் செய்யக்கூடாதா?

ஒரு தாய் முதல் முதலாக கர்ப்பம் தரித்தபொழுது, தன் கணவன் குடும்பத்தினரால் ஆண்பிள்ளையை பெற்றால் மட்டும் எங்கள் வீட்டுக்கு வா என்று சொல்லப்பட்டு, ஒரு கடினமான கட்டளையோடு தன் வீட்டிற்கு பிரசவத்திற்கு வந்தாள். பிரசவ நாள் நெருங்க நெருங்க, ஒரே பயம்! ஒருநாள் இதை ஆண்டவரிடம் சமர்ப்பித்தால் என்ன என்று எண்ணி, வேதத்தில் காணும் அன்னாளைப்போல, ஆலயத்திற்குள் சென்றாள். மேற்கண்ட வசனத்தின்படி ஆண்டவருடைய சமுகத்தில் தன் வேதனையை ஊற்றினாள். கர்த்தர் ஜெபத்தை கேட்டார். அருமையான ஒரு பாலகனைக் கொடுத்தார். அந்த பாலகன், சாமுவேலைப்போல, கர்த்தரை அறிகிற அறிவிலும், மனுஷருக்கு பயப்படும் பயத்திலும் வளர்ந்து, ஒரு தீர்க்கதரிசியாக மாறினான். இந்த மகன் மூலமாக இந்த தாயை ஆரம்ப நாட்களில் கடினமாய் நடத்தின கணவன் வீட்டாரும் கர்த்தாண்டை வரவும், அவர்கள் குடும்பமும் மற்றும் ஆயிரமாயிரமான ஜனங்களும் தேவ ஆசீர்வாதம் பெறத்தக்கதாக அந்த மகனை ஆண்டவர் ஆசீர்வதித்தார்.

அன்பானவர்களே! நான் முன்பே கூறியதுபோல ஒரு கஷ்டம் வரும்போது மட்டுமல்ல, அனுதினமும் பயபக்தியோடு ஆண்களோ, பெண்களோ யாராக இருந்தாலும் கர்த்தரை கருத்தாய் தேடி அவர் சமுகத்தில் இருதயத்தை ஊற்றும் பழக்கம் இருக்குமானால் (புலம்பல் 2:19), அந்த வாழ்க்கை அந்த தாய் பெற்ற ஆசீர்வாதத்தைப்போல பல மடங்கு நிறைவான ஆசீர்வாதமாய் இருக்கும் என்பதை உணர்ந்து, அதையே உங்கள் வாழ்விலும் பின்பற்றுவதில் ஜாக்கிரதையாய் இருப்பீர்களா?

ஜெபம்: "அன்பின் தெய்வமே! உம்மோடு உறவாடி, உம்மிடத்தில் இருதயத்தை திறந்து ஊற்றி, உம்முடைய ஆசீர்வாதத்தைப் பெறுவது எத்தனை இன்பமான வாழ்க்கை என்பதை அறிந்து கொண்டேன். இன்றுமுதல் எனக்கும் அனுதினமும் தாவீதைப்போல, அன்னாளைப்போல உம்மைத் தேட அருள்தாரும். கரம்பிடித்து வழிநடத்தும். அதன் மூலம் நிறைவான ஆசீர்வாதம் அருளிச்செய்யும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

உங்கள் ஜெபத்தை ஒருபோதும் தள்ளாத தேவன்!

"என் ஜெபத்தைத் தள்ளாமலும், தமது கிருபையை என்னைவிட்டு விலக்காமலும் இருந்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக" (சங்கீதம் 66:20).

நாம் சாதாரண மனிதர். ஆனால், நம்முடைய ஆண்டவர் தேவாதி தேவன்! சர்வவல்லவர்! ஆண்டவருடைய சமுகத்தில் பயந்து, நடுங்கி அவரைத் தேடுவதில், அவரோடு உறவாடுவதில், அவருக்கு பிரியமாய் நடப்பதில் ஜாக்கிரதையாயிருக்க கற்றுக்கொள்வோம். அப்படி அவருக்கு பிரியமாய் நாம் வாழும்போது, நாம் எப்பொழுதெல்லாம் அவரை நோக்கிப் பார்த்து பிரார்த்தனை செய்கிறோமோ அப்பொழுதெல்லாம், அந்த ஜெபத்தை அவர் நிச்சயமாய் கேட்பார். ஒருபோதும் இந்த எளிய ஜெபத்தை, அவர் தள்ளிவிடமாட்டார். ஆகவே, உங்களை தாழ்த்தி, ஆண்டவரிடத்தில் ஜெபம் செய்வதில், அவர் சமுகத்தில் உங்கள் உள்ளத்தை திறந்து அவரோடு பேசுவதில், குறைவில்லாதவர்களாய், இன்றே அவரை நாடித்தேடுங்கள் (நீதி. 15:8).

ஒரு தாய் தன் பிள்ளைகள் யாவரையும் தனக்கு தெரிந்த அளவிலே பக்தியாய் வளர்த்து வந்தாள். யாவரும் அவளுக்கு கீழ்ப்படிந்து வாழ்ந்தனர். ஆனால், ஒரு மகன் மட்டும் தன் நண்பர்களோடு சேர்ந்துகொண்டு, "நான் இனி வீட்டுக்கு வரமாட்டேன். நானே சம்பாதித்து என் வாழ்க்கையை பார்த்துக்கொள்வேன்" என்று கூறிவிட்டு, போக முயன்றான். தாயோ கண்ணீரோடு, "மகனே, நீ எத்தனை தூரம் போனாலும் கர்த்தர் உன்னை திரும்பவும் கொண்டு வருவார். நான் விரும்புகிறதுபோல, உனக்காக ஆண்டவரிடம் வேண்டிக்கொள்ளுகிறதுபோல, நீ ஆண்டவருடைய ஊழியனாக மாறும்படியும் ஆண்டவர் அருள்புரிவார்" என்று கூறி அனுப்பினாள். வருடங்கள் சில உருண்டோடின! ஒரு நாள் அவன் எல்லாவற்றையும் இழந்து, "இனி எனக்கு யாரும் இல்லை, என் நண்பர்களும் என்னிடத்தில் இல்லை" என்று வேதனையுடன் தனிமையில் கண்ணீரோடு இருக்கும்போது, தாயின் வார்த்தைகள் அவனது நினைவுக்கு வந்தன. தாயைப் பார்க்க திரும்ப புறப்பட்டு வந்தான். தாயோ அவனுடைய பரிதாப நிலைமையைப் பார்த்து அவனிடத்தில் அன்பு செலுத்தினாள். அதோடுகூட அந்த தாய் விரும்பியபடியே கர்த்தர் ஜெபத்தை கேட்டு, அவனுக்கு பக்தி வைராக்கியத்தைக் கொடுத்து அவனை ஓர் தேவ ஊழியனாக மாற்றினார். அந்த தாய் மரிக்கும் முன் அவனை அழைத்து, "என் மகனே, உன்னை குறித்து நான் பெருமையடைகிறேன். நீ செய்யும் திருப்பணி வளரட்டும். உன் உடன் பிறந்தவர்களும் உன் வழியைப் பின்பற்ற, அவர்கள் மீதும் அன்பு செலுத்து" என்று சொல்லி, சமாதானத்துடன் மரித்தார்கள்.

அன்பானவர்களே, நாம் செய்கிற ஒவ்வொரு சிறு ஜெபத்தையும், கர்த்தர் கேட்கிறவராய், ஒருபோதும் தள்ளாதவராய், அதை நிறைவேற்றுவதில் ஜாக்கிரதையாய் இருப்பார். இன்றே நம்முடைய குறைவுகளையெல்லாம் ஆண்டவருடைய சமுகத்திலே அறிக்கையிட்டு, கர்த்தருடைய ஆசீர்வாதத்தை பெற்று மகிழுவோம் (சங். 65:2).



ஜெபம்: "அன்பு தெய்வமே! என் ஜெப வாழ்க்கையில் உள்ள குறைகளை நீர் மன்னித்து, உம்மைத் தேடுவதில் இந்த தாயைப்போல, வைராக்கியமாய் இருக்க, இன்றுமுதல் எனக்கும் அருள்தாரும். ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்!"

ஞானமுள்ளவன் பெலமுள்ளவன்!

(நீதிமொழிகள் 24:5).

உலகத்தில் சிறந்து விளங்கவும், தேவனோடு இசைந்து வழி நடப்பதிலும், சீர் பெற்று விளங்க தெய்வீக ஞானம் நமக்கு மிகவும் தேவை! இந்த ஞானம் நம்முடைய சொந்த ஞானமாக இருக்கையில் அதில் ஒரு பயனும் இல்லை. எனவே, நாம் ஒவ்வொருவரும் தெய்வீக வழியில் சிறந்து விளங்கவும், உலக காரியங்களில் முன்னேறவும், ஆண்டவரை நோக்கி அனுதினமும் பிரார்த்தனை செய்ய வேண்டியது நம் ஒவ்வொருவருடைய கடமையாகும். கர்த்தரோ தம்மை நோக்கி வேண்டுதல் செய்கிறவர்களுக்கு, விசேஷமாக, ''நீதிமான்களுக்கென்று மெய்ஞ்ஞானத்தை வைத்துவைத்திருக்கிறார்'' (நீதி. 2:7). சாலொமோன் ஒரு பெரிய அரசனாக இருந்தபொழுதிலும், ஞானத்தின் அவசியம் எத்தனை என்பதை உணர்ந்து ஆண்டவரிடம் அதை மட்டும் கேட்டான். கர்த்தரோ, ஞானத்தையும் மற்றும் அவன் கேட்காத பல ஆசீர்வாதங்களையும்கூட கொடுத்தார். அது தான் தேவாதி தேவனின் அன்பு! இதே தேவனிடம் நாமும் கேட்போம். உலக வேலையிலே ஞானம் தேவை! கல்வி கற்பதற்கு ஞானம், அறிவு தேவை! குடும்ப வாழ்க்கையை சீராய் அமைப்பதற்கும் ஞானம் தேவை! இப்படிப்பட்ட பல்வேறு காரியங்களிலே ஞானமில்லாமல் வாழ முடியுமா? ஆகவே, யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிற தேவனிடத்தில் ஞானத்திற்காய் நாம் இறைஞ்சுவோம் (யாக். 1:5). தேவனிடத்திலே இந்த ஆசீர்வாதத்தை கேட்டு பெற்றுக்கொள்வது நம்முடைய கடமையாகும்.

உயர்ந்த குடும்பத்தை சார்ந்த பிள்ளைகள் படிக்கும் ஒரு பள்ளியில் ஒரு நடுத்தர குடும்பத்தினரின் மகன் வந்து சேர்ந்தான். யாவரும் அழகாக உடை அணிந்து, காரில் வந்து இறங்குவார்கள். இவனோ, துவைத்து துவைத்து அணியும் சாதாரண உடையோடு, சைக்கிளில்தான் பள்ளிக்கு வருவான். இதனால், மற்றவர்கள் அவனை எள்ளி நகையாடினர். ஆனால், அவனோ எல்லாவற்றுக்கும் சிரித்துக்கொள்வான். யாரிடமும் சண்டை போடமாட்டான். முதல்முதலாக யாவருக்கும் பரீட்சை வந்தது. மதிப்பெண்களை ஆசிரியர் வாசித்தபொழுது, மாணவர்கள் யாவரும் ஆச்சரியமடைந்தனர். ஏனென்றால், அந்த ஏழை மாணவன் ஒவ்வொரு பாடத்திலும் மிகச்சிறந்த மதிப்பெண்களை பெற்றிருந்தான். அப்பொழுது உடன் படித்த மாணவர்கள் அவனைக் குறித்து தாழ்வாக எண்ணினதற்காக வெட்கி, அவனண்டை வந்து, இவ்வளவு மதிப்பெண்கள் வாங்க உன்னால் எப்படி முடிகிறது? என்று கேட்டனர். ஆண்டவரை தேடி, அவர் மீது சார்ந்திருப்பதால், அவர் தரும் ஞானமே இவ்வளவு ஆசீர்வாதத்தை கொடுத்ததாக அவன் கூறினபொழுது, மற்றவர்களும் இந்த தெய்வீக வழியை பின்பற்ற அவன் ஒரு காரணமாக மாறினான்.

அன்பானவர்களே! கர்த்தர் கொடுக்கும் ஞானத்தைக் கொண்டவர்களாய் நாமும் நாம் பணிபுரியும் இடங்களிலும், கல்வி கற்கும் ஸ்தலங்களிலும் சிறந்து விளங்குவோமானால், நாமும் நம்மை அவ்வாறு பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே பூரண பெலன் பெற்று வாழலாம் அல்லவா? (பிலி. 4:13, 2 கொரி. 12:9).

<u>ஜெபம்</u>: ''என் அன்பின் தெய்வமே! ஞானமற்ற நிலையிலே நீர் ஞானமாக என்னை பெலப்படுத்துகிறபடியால் உமக்கு ஸ்தோத்திரம். <u>இன்றுமுதல்</u> எனக்கும் எந்தெந்த நேரங்களிலே உம்முடைய தெய்வீக ஞானம் அவசியமோ, அப்பொழுதெல்லாம் நீர் என்னை பெலப்படுத்தும். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!''

கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்!

''கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்; அவர் உன் ஆத்துமாவைக் காப்பார்'' (சங்கீதம் 121:7).

''கர்த்தரை தெய்வமாகக் கொண்டிருக்கிற ஜனம் பாக்கியமுள்ளது'' (சங். 144:15; 33:12) என்று வேதத்தில் வாசிக்கிறோம். அப்படி தம்மை தெய்வமாகக் கொண்டு, தம்மையே எப்பொழுதும் தியானித்து, அவருக்கு பிரியமாய் வாழ்ந்து, அவருக்கு விருப்பமில்லாதவைகளை வெறுத்து, நீதியின் வழிகளில் நடக்கிறவர்களை அவர் மேற்கண்டவண்ணமாக எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார். அவர்கள் ஆத்துமாவையும் பெலப்படுத்தி காப்பார். இது எத்தனை தெய்வீகம் நிறைந்த ஒரு வாழ்க்கை! இன்று விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே இத்தகைய தெய்வீக வழிகளை பயபக்தியுடன் பின்பற்றுகிறார்கள். வேதத்தில் காணப்படும் அநேக பக்தர்கள், இவ்விதமான வழியில் நடப்பதில் மிகவும் கவனமாக இருந்தனர். ஆகவே, நாமும் கர்த்தரோடு இணைந்து வாழவும், அவர் தரும் தெய்வீகப் பாதுகாவலில் யாதொரு தீங்கும் தொடாமல் காக்கப்படவும் ஜெபிப்போம் (செப். 3:15).

ஒரு ஊழியர் மற்றொரு ஊருக்கு ஊழியம் செய்வதற்காக ஒரு குறிப்பிட்ட இரயிலைப் பிடிக்க புறப்பட்டார். ஆனால், புறப்பட்டு வாசலுக்கு வருவதற்கும், ஒரு குடும்பத்தார் கண்ணீரோடு அவரை தேடி வருவதற்கும் சரியாக இருந்தது. ஒருபுறம், ''ஐயோ நேரமாகி விட்டதே'' என்று நினைத்தாலும், மறுபுறம் அவர்களை அன்போடு அழைத்து, அவர்களுக்கு தேவையான சகல ஆலோசனைகளையும் கூறி, ஜெபித்து முடித்து அவர் இரயில் நிலையத்திற்கு போவதற்கும், இரயில் புறப்படுவதற்கும் சரியாக இருந்தது. சரி, இனி என்ன செய்வது என்று எண்ணி, பேருந்து நிலையம் சென்றார். அங்கே ஆயத்தமாக இருந்த ஒரு பேருந்தில் ஏறி சென்று, போக வேண்டிய இடத்திற்கு சற்று தாமதமாக போய் சேர்ந்தார். அங்கு போனபோது, யாவரும் அவரைக் கண்டு வியந்தனர். ''நீங்கள் எப்படி வந்தீர்கள்? நீங்கள் வர இருந்த இரயில் வழியிலே விபத்துக்குள்ளானது என்று கேள்விப்பட்டு நாங்களெல்லாம் பயந்து போயிருந்தோமே'' என்று அங்குள்ளவர்கள் கூறியபோது, கர்த்தருடைய ஞானம் அவருக்கு அப்பொழுது தான் விளங்கியது. ஒருவேளை ஜெபத்திற்காக அந்த மக்கள் தன்னைத்தேடி வராதிருந்திருந்தால், தானும் அந்த விபத்தில் பலியாகியிருப்பேனே, அதினிமித்தமாகவே கர்த்தர் அந்த மக்களை தன்னிடம் அனுப்பியிருக்கிறார். அந்த பயங்கரமான தீங்குக்கு விலக்கிக் காப்பாற்றியிருக்கிறார் என்று அறிந்து ஆண்டவருக்கு கண்ணீரோடு ஸ்தோத்திரம் செலுத்தி, மற்றவர்களுக்கும் இந்த நற்சாட்சியைக்கூறி தேவனை மகிமைப்படுத்தினார்.

ஆம், பிரியமானவர்களே! ஆண்டவர் தம்மை நம்புகிற அடியார்களை எவ்வளவு கவனமாய் பாதுகாத்துக்கொள்கிறார் பாருங்கள்! எனவே, நாமும், அவருக்கு பிரியமாய் நடக்க, அவரை சார்ந்துகொள்ள, அவர் காண்பிக்கும் வழிகளில் அனுதின வாழ்க்கையில் நடந்துகொள்ள, அவரையே பின்பற்றுவோம் (கொலோ. 1:10).



ஜெபம்: ''அன்பின் தெய்வமே! உம்மைத் தேடுகிறவர்களை நீர் எவ்வளவு தூரம் பாதுகாக்கிற தேவனாயிருக்கிறீர் என்பதை தெரிந்துகொள்ள கிருபை செய்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம். நானும் அவ்விதமே தெய்வீக வழியிலே அனுதினமும் நடக்க இன்றுமுதல் எனக்கும் அருள்தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!''

நெருக்கத்தில் கூப்பிடும்போது தப்புவிப்பார்!

"நெருக்கத்திலே நீ கூப்பிட்டாய், நான் உன்னை தப்புவித்தேன்" (சங்கீதம் 81:7).

தேவனுடைய ஊழியர்களாகிய பவுலும் சீலாவும், ஊழியத்தினிமித்தம் பொல்லாத மனுஷர்களால் அடிக்கப்பட்டார்கள். தொழுமரத்தில் கட்டப்பட்டவர்களாய் சிறையில் அடைக்கப்பட்டார்கள். இந்த நிலையில் அவர்கள் இருவரும் கவலைப்பட்டு, பயம் நிறைந்தவர்களாய் இருந்தார்களா? இல்லவே இல்லை. இரண்டு பேரும் தேவனை நினைத்தவர்களாய் அந்த நோத்திலும் வர்யைத் திறந்து, உண்மையாய் இருதயத்தின் ஆழத்திலிருந்து ஆண்டவர் செய்த நன்மைகளை எண்ணி, அவரை ஸ்தோத்திரித்து துதி பாடினார்கள். வேதம் சொல்லுகிறபடி, துதிகளின் மத்தியில் வாசம்பண்ணுகிற தேவன் அங்கு இறங்கி வந்தார் (சங்.22:3). அவர்களுடைய துதியை, சுகந்த வாசனையாக முகர்ந்தார். அதோடுகூட அவர்களுடைய கட்டுகள், அதாவது, சங்கிலியால் கட்டப்பட்ட கட்டுகள் யாவும் கழன்றுபோகும்படி கிருபை புரிந்தார். சிறைச்சாலையின் அஸ்தி பாரங்கள் அசையும்படியாக பூமி மிகவும் அதிர்ந்தது. கதவுகள் எல்லாம் திறவுண்டன. அதினிமித்தமாக அந்த இரவு வேளையில், அதைக்கண்ட சிறைச்சாலைக்காரன் கர்த்தரை இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும், குடும்பத்தார் தேவனிடத்தில் விசுவாசமுள்ள வர்களாகி மனமகிழ்ச்சியடையவும் தேவன் அருள்புரிந்தார் (அப். 16:23–34).

ஒரு சாதாரண நடுத்தரக் குடும்பத்தை சார்ந்த ஒரு சகோதரி, "எஸ்தர் ஜெபக்குழு" ஊழியத்தை ஆரம்பித்து நடத்தினார்கள். அந்த வீட்டின் சொந்தக்கார அம்மையாரோ, ஆண்டவரைக் குறித்து அறியாமல் இருந்தபடியால், நாளடைவில் அவர்களுக்கு அதிகம் தொல்லை கொடுக்க ஆரம்பித்தார்கள். உடனடியாக வீட்டை காலி செய்து தரும்படி கட்டாயப்படுத்தினார்கள். வேறு வீடு பார்க்கவோ, பணம் செலவு செய்யவோ அவர்களால் இயலாத நிலை. அதைக் குறித்து கலங்குவதற்கு பதிலாக, கர்த்தரை நோக்கி தனது நெருக்கத்தில் உதவி செய்யும்படி கெஞ்சினார்கள். ஆண்டவர் ஒரு அற்புதம் செய்தார். அந்த வீட்டுக்கார அம்மையாருடைய மகன் திடீரென்று ஒரு விபத்திற்குள்ளாகி, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டான். அப்பொழுது இந்த எஸ்தர் ஜெபக்குழு தலைவி, அவர்களை அன்போடு மருத்துவமனைக்கு அழைத்து சென்று, தைரியப்படுத்தி, மருத்துவமனையில் அந்த மகனுக்காகவும் அனுதினமும் கருத்தாய் பிரார்த்தனை செய்து, அன்பு பாராட்டினார்கள். இதைக் கண்ட அந்த வீட்டுக்கு சொந்தக்கார அம்மையார், அந்த சகோதரியை நோக்கி, இனி நீங்கள் இந்த வீட்டைவிட்டு எங்கும் போகவே வேண்டாம். இங்கேயே தங்கியிருந்து உங்கள் ஜெபத்தை தொடர்ந்து நடத்துங்கள். நானும் அதில் பங்கெடுக்க எனக்கும் உதவி செய்யுங்கள் என்று கேட்டுக் கொண்டார்கள். இது எத்தனை ஆச்சரியமாய் இருக்கிறது பாருங்கள்.

ஆம், அன்பானவர்களே! நீங்களும் நெருக்கத்தில் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள். அவர் உங்களையும் எல்லாத் தீங்கினின்றும் அற்புதமாக விலக்கி, அதிசயமாய் வழிநடத்துவார் (சங். 9:9, ஏசாயா 63:9).

<u>ஜெபம்:</u> "அன்பின் தெய்வமே! நெருக்கத்தின் மத்தியிலும் உம்மைத் தேட எனக்கும் கற்றுத் தாரும். இன்றுமுதல் நெருக்கங்களில் உம்மை நோக்கி துதிப் பாடல் பாடவும், உம்மை மகிமைப்படுத்தவும், அதினிமித்தமாக விடுதலை பெறவும் நீரே எனக்கு அனுக்கிரகம் செய்ய வேண்டுமென்று ஜெபிக்கிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"

விலையுயர்ந்த அன்பளிப்பு!

"நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்..." (1 யோவான் 3:1).

தேவன் மனுஷனை தமது சாயலாகவே (ஆதி. 1:27) செம்மையானவனாக உண்டாக்கினார். ஆனால், நாளடைவில் அவனோ அநேக உபாய தந்திரங்களை தேடி தன்னை கெடுத்துக் கொண்டான் (பிர. 7:29). அவனுக்குள்ளே பாவம் பிரவேசித்தது. ஆனாலும் தேவனுடைய அன்பு மேற்கண்ட வசனத்தின்படியே மனுஷன்மேல் பெருகியது. எனவே, அவனை பாவத்தின் பிடியிலிருந்து நிரந்தரமாக மீட்டெடுத்து, தமக்கு சொந்தமானவனாக மாறும்படியாக, தமது ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையே இவ்வுலகிற்கு தேவன் அனுப்பி தமது அன்பை வெளிப்படுத்தினார்! இதையே நாம் கிறிஸ்துமஸ் பண்டிகையாக கொண்டாடுகிறோம். இயேசு என்ற பெயரின் பொருளே "இரட்சகர்" (மத்தேயு 1:21) என்பதுதான். ஏற்ற சமயம் அவர் தம்மையே சிலுவையிலே தியாக பலியாக அர்ப்பணித்ததின் நிமித்தம், இன்று கோடிக்கணக்கான மக்களை பாவங்களிலிருந்து இரட்சித்திருக்கிறார். இந்த தெய்வீக அன்பு விலையேறப் பெற்ற அன்பல்லவா?

ஒரு வாலிபன் தன் நண்பர்களோடு கிறிஸ்துமஸ் பண்டிகை தினத்தன்று நன்றாக குடித்து வெறித்து, காலை விடியும்வரை கொண்டாடிக்கொண்டிருந்தான். அவன் நண்பர்களோ, அவனை விட்டுவிட்டு தங்கள் வீடுகளுக்கு சென்று விட்டனர். இவனோ பரிதாப நிலைமையில் படுத்துக் கிடந்தான். அந்த நேரத்தில் ஒரு தரிசனம் கண்டான். இயேசு ஒருபுறம் மாட்டுத் தொழுவத்தில் பிறந்த குழந்தையாக, மறுபுறம் சிலுவையில் அடிக்கப்பட்டவராக காட்சியளிப்பதைக் கண்டான். "மகனே, இந்த ஈவு உனக்கு வேண்டாமா?" என்று ஆண்டவர் கேட்பதைப் போலவும், அந்த குழந்தையும் அவனைப் பார்த்து அப்படியே கேட்பது போலவும், அவனுக்கு தென்பட்டது. "ஐயோ, எவ்வளவு கேவலமான வாலிபன் நான்! தேவாதி தேவன் உலகில் மனிதனாக அவதரித்ததையும், தேவ குமாரனாகிய இயேசு சிலுவையில் தன்னையே எனக்காக அர்ப்பணித்ததையும் அலட்சியம் செய்து வாழ்ந்தேனே! இந்த ஈவின் மேன்மையை அறியாமல் போனேனே!" என்று அழுது புரண்டான். அவனுடைய வாழ்வை தேவன் தலைகீழாக மாற்றினார்.

அன்பானவர்களே! இதை வாசிக்கிற உங்கள் வாழ்வில் இந்த ஈவின் மேன்மையை அறிந்திருக்கிறீர்களா? அல்லது இந்த வாலிபனைப்போல உலகப்பிரகாரமான கொண்டாட்டங்களினால் மட்டுமே பண்டிகையை கொண்டாடுகிறீர்களா? "தேவ குமாரனாகிய இயேசுவே! நீர் என் பாவங்களையெல்லாம் மன்னித்து, இரட்சகராக என் உள்ளத்தில் வந்து தங்கும்" என்று அவரை நோக்கிக் கூப்பிடுங்கள். இந்த விலையுயர்ந்த அன்பளிப்பை நிச்சயம் நீங்களும் பெறுவீர்கள் (ஏசாயா 12:3,4). மற்றவர்களுக்கும் அதை அன்பளிப்பாகக் கொடுத்து ஆசீர்வாதம் பெறுங்கள்.

ஜெபம்: "அன்பு இரட்சகரே! தேவாதி தேவனின் அன்பின் ஈவாக இவ்வுலகில் பிறந்த நீர், என் உள்ளத்திலும் பிறந்து இன்றுமுதல் உமது இரட்சிப்பின் சந்தோஷத்தினால் என்னை நிறைத்து, இந்த அன்பளிப்பை மற்றவர்களும் தங்கள் வாழ்வில் பெற்றுக்கொள்ளும்படியான கருவியாக என்னையும் மாற்றியருள அருள்[illegible]ரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

இசைந்த மனதுடன் இறைவனைத் தேடுவோம்!

"அப்படியே கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்"
(1 கொரிந்தியர் 6:17).

ஆண்டவரோடு இசைந்து வாழும் வாழ்க்கை எத்தனை இன்பமானது என்பதை நாம் அனுபவித்து பார்த்தால்தான் உணர முடியும். கொடியானது செடியிலே இணைந்து நிறைவான கனிகளைக் கொடுப்பதுபோல, நம் வாழ்வும் இருக்கிறதா? (யோவான் 15:4) என்று சற்று ஆராய்ந்து பார்ப்போம்! ஆண்டவரைத் தேடத்தேட ஆண்டவருடைய முக சாயல் நம்மிலே விளங்கும். அதைத்தான் பக்தன், உமது சாயலால் திருப்தியாவேன் என்று கூறினான் (சங். 17:15). இவ்வாறு அவரைத் தேடுவதிலும், அவரோடு சம்பாஷிப்பதிலும், அவரோடு இசைந்துகொள்ளும் வாழ்க்கையை தம் பக்தர்களுக்கு ஆண்டவர் கொடுக்க வல்லமையுள்ளவராய் இருக்கிறார்.

ஒரு பெண்ணுக்கு திருமணம் நிச்சயமானது. எல்லோரும் உன் கணவர் யார்? எப்படிப்பட்டவர்? என்று விசாரித்தபோது, அவர் நிறைய படித்தவர், அழகுள்ளவர், செல்வாக்கு நிறைந்தவர் என்று பெருமையாக கூறினாள். அப்படியே திருமணம் முடிந்த பிறகு மிகவும் சந்தோஷமாக, ஆண்டவரை மறந்தவளாய் இல்வாழ்க்கை நடத்தி வந்தாள். சில மாதங்கள் சந்தோஷமாக உருண்டன. திடீரென்று ஒரு நாள் அலுவலகத்திற்கு நன்றாய் சென்ற கணவர் மாரடைப்பால் மரித்தவராய் கொண்டு வரப்பட்டார். உள்ளம் சுக்குநூறாக உடைந்தது! வாழ்வே இருளான நிலையில் அமர்ந்திருந்தாள் அந்த பெண்மணி! அப்பொழுதுதான் அநேக பக்தர்கள் வந்து அவளை ஆற்றித் தேற்றி, தேவனுடைய வழியை நாடித்தேடும்படியும், அதன்மூலமாய் இளைப்பாறுதல் அடையும்படியும் ஆலோசனை கொடுத்து அவளைத் தேற்றினர். "ஐயோ, இத்தனை நாள் நான் பெற்ற சந்தோஷத்தால், ஆண்டவரை முற்றிலும் மறந்துவிட்டேனே, அவரைத் தேடாமல் போனேனே" என்று அழுது புரண்டு, கர்த்தருடைய வழிகளுக்கு தன் மனதைத் திறந்தாள். ஆண்டவர் அவளை தம்முடைய பரிசுத்த ஆவியால் நிரப்பி, "என் உள்ளத்தில் விசாரங்கள் பெருகுகையில், உம்முடைய ஆறுதல்கள் என் ஆத்துமாவைத் தேற்றுகிறது" (சங். 94:19) என்ற வசனத்தின்படி, அவளை ஆற்றித் தேற்றினார், ஆறுதல் செய்தார். அதன்பிறகு ஆண்டவரோடு அவள் இசைந்துகொண்டு, அவருக்கென்று வாழ தன் வாழ்வை அர்ப்பணித்தாள். அப்பொழுதுதான் அத்தகைய வாழ்வின் மேன்மையை உணர்ந்துகொண்டாள்.

எனக்கு அன்பானவர்களே! இந்தவிதமாக இழப்புகளை சந்திக்கும் முன்னதாக, ஒவ்வொரு நாளிலும் எந்தவிதமான உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்கள் எவ்வளவு அருமையானதாக நம்மை நாடி வந்தாலும்கூட, அதன் மத்தியிலும் கர்த்தரை முதலாவது வைத்து, அவரை தேடுவதில் கவனமாய், அவரோடு இணைந்து வாழ்வதில் ஜாக்கிரதையாய் இருப்பீர்களானால், நிச்சயம் உங்கள் வாழ்வு கனி நிறைந்ததாய் இருக்கும் (மத்தேயு 6:33, சங். 34:10).

ஜெபம்: "அன்பு இரட்சகரே! செடியோடு இணைகிற கொடியைப்போல உம்மோடு நானும் இணைந்துகொள்ள, உம்மோடு உறுதியான வாழ்க்கை வாழ இன்றுமுதல் எனக்கும் கிருபை தாரும். உலக ஆசாபாசங்கள் என்னை இழுக்காதபடி எப்பொழுதும் உம்முடைய பிரசன்னம் என்னை காத்துக்கொள்வதாக. நீர் அப்படி செய்யப்போகிறபடியால் உமக்கு ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"

உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்

(2 கொரிந்தியர் 9:7).

ஆண்டவர் விரும்புகிற பலவித நற்கிரியைகளில் ஒன்று, உற்சாகமாய் அவருக்கென்று கொடுப்பது! "ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான்" (நீதி. 19:17) என்றபடி, நம்மை சுற்றி நெருங்கி நிற்கிற ஏழைகள் பலருடைய தேவைகளுக்கு நம்மால் இயன்ற அளவு உதவி செய்யும்போது, இந்த வசனத்தின்படியே, கர்த்தர் அதை கடனாக பெற்றுக்கொண்டதுபோல, நமக்கு திரும்பக் கொடுப்பதில் ஜாக்கிரதையாய் இருப்பார். அதேபோன்று கர்த்தருடைய ஊழியத்திற்கு நம்மால் இயன்றதை செய்யும்போது, பல மடங்கு அதை திரும்ப கொடுப்பார். ஒரு சிறு கலசம் தண்ணீர் கொடுத்தாலும் அதன் பலனை நமக்கு நிச்சயம் அருளிச்செய்வார். ஏனென்றால், "மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதை செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்" (மத்தேயு 25:40) என்று அவரே சொல்லியிருக்கிறார்.

ஒரு வாலிபப் பெண் ஆண்டவருடைய கல்வாரி அன்பை உணராதவளாயும், யாவரோடும் சண்டை போடுகிறவளாயும், ஒருவருக்கும் ஒன்றும் கொடுக்க மனமற்றவளாயும் இருந்தாள். ஆண்டவர், தமது அளவற்ற கிருபையினால், அவளது கடின வாழ்வை தலைகீழாக மாற்றினார். "என் ஆண்டவர் எனக்காக தம்மையே தியாக பலியாக அர்ப்பணித்திருக்க, நான் வேண்டாத விருப்பங்களுடன், என் மனம்போல் நடப்பது எவ்வளவு தவறு" என்று உணர்ந்து, அன்றுமுதல், ஏழை மக்கள், எளியோர், விதவைகள், ஊழியர்கள் இவர்களை தாங்குவதில் முழுஉற்சாகம் காண்பித்தாள். அவள் மனதிற்கு அது இணையற்ற மகிழ்ச்சியை அருளியது. "இவ்வளவுநாள் இந்த இன்பத்தை அறியாமற் போனேனே! இனி, என் வாழ்நாள் முடியும்வரை, இதைத் தொடருவேன்" என்று தீர்மானித்தாள். அதின்படியே செய்து, தேவ ஆசியையும் நிறைவாய் பெற்றாள்.

ஆம், பிரியமானவர்களே! நாமும்கூட, கர்த்தர் விரும்புகிற இந்த வழிகளையெல்லாம் கற்றுக்கொண்டு, நம்மால் இயன்ற அளவுக்கு ஏழை எளியவர்களை தாங்கவும், திக்கற்றோருக்கு உதவி செய்யவும், ஊழியர்களை கனப்படுத்தவும் முயற்சிப்போமா? அப்பொழுது இந்த வாலிபப் பெண் ஆசீர்வதிக்கப்பட்டதுபோல கர்த்தர் நம்மையும் வாலாக்காமல் தலையாக்குவார் (உபா. 28:14). இன்றைய நாட்களில் தேவனுடைய ஊழியங்களை உண்மையும் உத்தமுமாய் பல ஊழியர்கள் செய்கிறார்கள். ஆனால், அதை நிறைவேற்ற எவ்வளவோ பணத் தேவைகளினால் கஷ்டப்படுகிறார்கள். அதை பார்த்துக் கொண்டு சும்மாயிராதபடி, நாமும் நம்மாலியன்ற அளவு அவர்களைத் தாங்குவோமானால், கர்த்தர் நம்மீது பிரியமாயிருப்பார் (கலா. 6:10).

ஜெபம்: "அன்பு இரட்சகரே! மேற்கண்ட பெண்ணைப்போல, நானும்கூட இவ்வுலகில் ஏழை எளியோருக்கு இரக்கம் காண்பித்தும், சிறுமைப்பட்டவர்கள்மேல் சிந்தை வைத்தும் நீர் விரும்புகிறபடியே நற்காரியங்களை செய்து, உம்மை மகிமைப்படுத்த, உமக்குப் பிரியமான வழியிலே நடக்க இன்றுமுதல் நீரே எனக்கும் கற்றுத்தாரும். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

சமாதானமாய் இருக்கும்படி தேவன் உங்களை அழைத்திருக்கிறார்!

(1 கொரிந்தியர்.7:15).

ஆண்டவர் நம்முடைய வாழ்க்கையிலே நாம் கடைபிடிக்க வேண்டுமென்று விரும்புகிற ஒரு காரியம், யாவரோடும் சமாதானமாயிருப்பது (ரோமர் 12:18)! இது எப்படி சாத்தியமாகும் என்று ஒருவேளை நீங்கள் நினைக்கலாம். சமாதானத்தின் தேவனாகிய கர்த்தர் நமக்குள்ளே இரட்சகராக நம் உள்ளத்தை நிரப்பும்பொழுது, அவர் தரும் தெய்வீக சமாதானம் நமக்குள் நிரம்புகிறது (யோவான் 14:27). இந்த சமாதானம் அனுதினமும் அவரை தேடத்தேட நமக்குள் நிலைத்திருக்கும். அவரைத் தேடுவதில் குறைவுபடும் பொழுதோ இந்த சமாதானம் நம்மை விட்டு விலகவும் வழி ஏற்படலாம். ஆகவே, ஆண்டவரை கருத்தாய் பயபக்தியுடன் ஜெபத்தோடு, வேத வாசிப்போடு, தேடுவது எவ்வளவு அவசியம் பாருங்கள்! அதோடுகூட அப்படிப்பட்ட தெய்வீக சமாதானத்தால், தினமும் தம்மைத் தேடுகிறவர்களை நிரப்பி, அதன்மூலமாக யாவரோடும் சமாதான வாழ்வை பகிர்ந்துகொள்ளும் தெய்வீக பாக்கியத்தையும்கூட ஆண்டவர் தருவார் (மத்தேயு 5:9). இந்தவிதமான பாக்கியங்களை நாம் பெற்றிருக்கிறோமா? யாவரோடும் சமாதானமாய் இருக்கிறோமா? என்று சற்று ஆராய்ந்து பாருங்கள்.

ஒரு மனைவி, தன் கணவன் வீட்டாரோடு சேர்ந்து பக்தியுள்ளவளாய், தெய்வீக சமாதானத்தால் நிரம்பியிருந்தாள். ஆனால், அவளுடைய உறவினர்களோ யாவரும் ஒருவருக்கொருவர் எப்பொழுதும் சண்டை போட்டுக்கொண்டு கர்த்தரை அறிந்தும் அறியாதவர்களைப்போல நடந்து கொண்டனர். அவளோ அதைக் குறித்து கவலையில்லாமல், தன் வாழ்வை மாத்திரம் தேவ சமாதானத்தால் நிரம்பிய நிலையிலே பாதுகாத்துக் கொண்டாள். கர்த்தர் அவளைப் பார்த்து ஒருநாள், "உன் குடும்பத்தாரின் சமாதானத்தைப் பற்றி உனக்கு கவலையில்லையா?" என்று கேட்டபொழுதுதான் தன் தவறை அவள் உணர்ந்தாள். அதற்காக என்ன செய்ய வேண்டுமென்று கர்த்தரை நோக்கி ஜெபம் பண்ணினாள். கர்த்தர் காண்பித்த வழியை பின்பற்றி, அவர்களுக்கு தெய்வீக அன்பைக் காண்பித்து, யாவரும் ஒருமனதோடு சமாதானம் நிறைந்து வாழ, தேவ ஒத்தாசையோடு உதவி புரிந்தாள். இதினிமித்தமாக குடும்பத்தினர் யாவரும் அவளை மேன்மைபடுத்தினர். கர்த்தரையும் கண்டுகொண்டு அவருக்கென்று வாழ ஆரம்பித்தனர். அதினிமித்தம் அவளை கர்த்தர் தம்முடைய ஊழியத்திலே பலருக்கும் சமாதானம், சந்தோஷம் தரும் பாத்திரமாக உயர்த்தி ஆசீர்வதித்தார்.

அன்பானவர்களே! இப்படித்தான் ஒவ்வொரு குடும்பத்திலும், ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, சமாதானத்தோடு வாழ்வதற்கு ஒருவருக்காக ஒருவர் பிரார்த்தனை செய்தால் எவ்வளவு நலமாயிருக்கும்! இதை நீங்களும் செய்து பாருங்கள். எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்களிலும், உங்கள் குடும்பத்திலும் நிறைவாய் இருக்க கர்த்தரும் மனமிரங்குவார் (பிலி. 4:7).

ஜெபம்: "அன்பின் தெய்வமே! தெய்வீக சமாதானத்தையும், யாவரோடும் அந்த தெய்வீக சமாதானத்தை பகிர்ந்துகொள்ளும் பரலோக பாக்கியத்தையும் எனக்குத் தாரும். இன்றுமுதல் என் வாழ்விலே நீரே இதற்குரிய தெய்வீக வழியிலே நானும் நடக்க எனக்கும் கற்றுத் தாரும். நீர் அப்படி செய்கிறபடியால் உமக்கு ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"

கர்த்தர் சாபத்தை ஆசீர்வாதமாக மாற்றுவார்!

"...உன் தேவனாகிய கர்த்தர் உன்மேல் அன்புகூர்ந்தபடியினால், உன் தேவனாகிய கர்த்தர் அந்த சாபத்தை உனக்கு ஆசீர்வாதமாக மாறப்பண்ணினார்"

(உபாகமம் 23:5).

உலக வாழ்விலே எத்தனையோ சாபங்களை குடும்ப வாழ்க்கையிலே அநேகர் அனுபவிப்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். நாமும்கூட சில நேரங்களில் அந்த வேதனையை வாழ்வில் அனுபவிக்க நேரிடுகிறது. ஆனால், கர்த்தர் சிலுவை மரத்திலே தன்னை ஒப்புக்கொடுத்தபொழுது, நமக்கு வர வேண்டிய சாபத்தை தாமே சுமந்து, சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார் (கலா. 3:13). இந்த வசனத்தின்படி அவர் நம் மீது எவ்வளவாய் அன்புகூர்ந்து, நமக்கு வர வேண்டிய சாபத்தையெல்லாம் ஆசீர்வாதமாக மாற்றும் அன்பே உருவான தெய்வமாகவும் இருக்கிறார் என்று அறிகிறோம். இத்தகைய ஆண்டவரின் அன்பை அலட்சியம் பண்ணாமல், நன்றி செலுத்துவோம்.

ஒரு சகோதரிக்கு, கர்ப்பத்தில் குழந்தை உண்டாகும்; பின்பு சில மாதங்களில் அது கலைந்துபோகும். இப்படியாக கஷ்டப்பட்டபோது, ஒருநாள் தேவ ஊழியர் ஒருவரிடம் தங்கள் கஷ்டத்தை கூறி, அந்த பெண்ணுக்காக அதிகமாக ஜெபித்ததின்பேரில், மறுபடியும் அவள் கர்ப்பவதியானாள். அப்பொழுது அந்த ஊழியர் அவர்களுக்காக அதிகமாக தினமும் ஜெபித்து வந்தார். பிரசவ நேரம் வரையில் கர்ப்பத்தில் குழந்தையை கர்த்தர் காப்பாற்றினார். பிரசவத்திற்கு சில நாட்களுக்கு முன்னதாக ஸ்கேன் எடுத்து பார்த்தபொழுது, திடீரென்று மருத்துவர் "ஐயோ, வயிற்றில் குழந்தை மரித்திருக்கிறதே, இதை உடனே அறுவைசிகிச்சை செய்து எடுத்துவிட வேண்டுமே" என்று கூறியபொழுது, அந்த தம்பதியர் கலங்கினர். அந்த ஊழியரிடம் வந்து உடனே அதை அறிவித்தனர். அவர் அதற்காக கருத்தாய் ஜெபித்து, கர்த்தரிடம் கேட்டார். "இல்லை, அந்த குழந்தை நான் கொடுத்தது, அது இறந்துபோக வாய்ப்பு இல்லை" என்று ஆண்டவர் சொன்னதை அப்படியே சொன்னபோது, அவர்கள் விசுவாசம் பலப்பட்டது. மருத்துவரிடம் சென்று, "ஐயா, நீங்கள் திரும்ப ஒருமுறை எங்களுக்காக ஸ்கேன் எடுத்துப் பாருங்கள்" என்று சொல்ல, அவரும் அதற்கு இசைந்து ஸ்கேன் எடுத்துப் பார்த்துபொழுது, மருத்துவர் ஆச்சரியமடைந்தார். இரண்டு ஸ்கேனையும் எடுத்து ஒப்பிட்டு பார்த்தபொழுது, "இந்த மரித்த குழந்தை எப்படி உயிர் பெற்றது?" என்று ஆச்சரியமடைந்தார். இவ்விதமாக, தம்மை நோக்கிப் பார்க்கிற யாவருக்கும் எந்தவித சாபத்தையும் ஆசீர்வாதமாக மாற்ற ஆண்டவர் சர்வவல்லமை பொருந்திய அன்பின் தகப்பனாக இருக்கிறார்.

அன்பானவர்களே! ஐயோ, இப்படி சாபம் வந்துவிட்டதே, இந்த வீட்டில் இருக்க முடியவில்லையே, என்றெல்லாம் இனி கலங்க வேண்டிய அவசியம் உங்களுக்கு இல்லை. இந்த தம்பதியரைப்போல, கர்த்தரை உறுதியாய் பிடித்துக்கொள்ளுங்கள். உங்கள் வாழ்விலும் சகல சாபங்களையும் கர்த்தர் ஆசீர்வாதமாக மாற்றுவார் (ஏசாயா 26:3).

ஜெபம்: "என் அன்பு தெய்வமே! எத்தனை வல்லமையுள்ளவராய், மகிமையுள்ளவராய் நீர் உயிரோடிருக்கிறீர். யார் எனக்கு எதிராக சாபமிட்டாலும் எனக்கு பயமில்லை. ஏனென்றால், நீர் சாபத்தை ஆசீர்வாதமாக்குகிற வல்லமை நிறைந்த தெய்வம் என்று அறிந்துகொண்டேன். உமக்கு நன்றி! இன்றுமுதல் என் வாழ்வையும் நீர் பொறுப்பெடுத்துக்கொள்ளும். இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்!"

விசுவாசித்தால் எல்லாம் கூடும்!

"இயேசு அவனை நோக்கி: நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும். விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார்"
(மாற்கு 9:23).

எந்த நிலைமையிலும் கர்த்தரை நோக்கிப் பார்க்க, அவரிடத்தில் நம்முடைய இருதயத்தை ஊற்ற நாம் கற்றுக் கொண்டோமானால், அவர் இப்படிப்பட்ட தெய்வீக நம்பிக்கையோடு கூடிய திடமான விசுவாசத்தை நமக்கு தருவார். அதுமட்டுமின்றி, அவருடைய வசனத்தை வாசிக்கிறபொழுதும், கேட்கிறபொழுதும், இந்த மேலான விசுவாசத்தையும் தருவார். எனவே, இவைகளையெல்லாம் நம் அனுதின வாழ்க்கையில் கடைபிடிக்க கவனமாயிருக்கும்பொழுது, நாம் விசுவாச வீரர்களாய், வீராங்கனைகளாய் நிச்சயம் திகழ முடியும். இந்த வசனத்தின்படி என்ன பிரச்சினைகள் வந்தாலும், எந்த நிலைமையிலும் விசுவாசித்து, உறுதியோடு ஆண்டவரை பற்றிக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் அதை அப்படியே நிறைவேற்றி ஆசீர்வதிப்பார். இன்று சிறிய காரியங்களுக்கும், மக்கள், விசேஷமாக பெண்கள் சலித்து, சோர்ந்து போகிறோம். அதற்கு பதிலாக கர்த்தரை உறுதியாய் தேடும்பொழுது, இந்த தெய்வீக விசுவாசத்தை கர்த்தர் நிச்சயம் அப்படிப்பட்டவர்களுக்கு கொடுப்பார் (மத்தேயு 21:22).

மாரத்தான் ஓட்டப்பந்தயத்தில் ஓடுவதற்கு ஒரு பெண் பயிற்சி பெற்றாள். இந்த பயிற்சியின் போது, அவளுடைய கணவர் கூடவே இருந்து, "வெற்றி பெற கொஞ்ச தூரம்தான், உன்னால் கூடும், உன்னால் கூடும்" என்று சொல்லிக்கொண்டே அவளை உற்சாகப்படுத்துவார். ஓட்டப்பந்தய நாளும் வந்தது. ஓடுவதற்கு ஆயத்தமானாள். பந்தயத்தை முடிப்பதற்கு கொஞ்ச தூரத்திற்கு முன்பாக அவளுடைய கால்கள் திடீரென்று மரத்துப்போனதுபோலாகிவிட்டது. இதற்கு மேல் ஒரு அடிகூட வைக்க முடியாது என்ற நிலையில் செய்வதறியாது திகைத்தாள். அப்பொழுது அவளுடைய கணவன் சொன்ன வார்த்தைகள் அவள் காதுகளில் ரீங்காரமிட்டது. "கொஞ்ச தூரம்தான், உன்னால் கூடும், உன்னால் கூடும்" என்ற வார்த்தைகளை அவள் நினைத்துப் பார்த்தாள். ஒரு புதுபெலன் வந்ததுபோல, முன்னைக் காட்டிலும் வேகமாக ஓடினாள். முடிவில் பந்தயத்தில் மிகவும் சுலபமாக வெற்றி பெற்றாள்.

அன்பானவர்களே! இதுதான் விசுவாசம். இவ்விதமாக உங்களை விசுவாசத்தில் பலப்படுத்தும் வார்த்தைகளை வாசியுங்கள், கேளுங்கள். அப்பொழுது நீங்களும் வெற்றி பெறுவீர்கள். விசுவாசம் என்பது கர்த்தர்மேல் வைக்கும் நம்பிக்கையின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது (எபி. 11:1). மரித்து, அடக்கம் பண்ணப்பட்டவனாகிய லாசருவின் சகோதரி மார்த்தாளை நோக்கி, ஆண்டவர், "நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையை காண்பாய்" (யோவான் 11:40) என்று உறுதியாக கூறினாரே! அதை மெய்யாய் செயல்படுத்தியும் காண்பித்தாரே! உங்கள் வாழ்விலும் அவ்வாறு செய்யமாட்டாரா?

ஜெபம்: "அன்பு தெய்வமே, இந்த உலக வாழ்க்கையும், பந்தயம் போன்றதுதான். அதில் எத்தனையோ மேடு பள்ளங்கள், பிரச்சினைகள். ஆனாலும், உம்முடைய வசனத்தை வாசித்து அதன்மூலமாக உம்மோடு ஜெபத்தில் உறவாட, விசுவாசத்தில் நிலைத்து விளங்க, என் வாழ்க்கையிலே வெற்றி பெற இன்றுமுதல் எனக்குப் உம்முடைய தெய்வீக விசுவாசத்தை நிறைவாய் தாரும். நீர் அப்படி தருகிறபடியால் உமக்கு ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"



உலகத்தின் முடிவுபரியந்தம் தேவன் நம்மோடிருப்பார்!

"...இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" (மத்தேயு 28:20).

இது எத்தனை இன்பமான ஒரு வாக்குத்தத்தம்! இந்த வருடத்தின் முடிவு நாளாகிய இன்று மட்டுமல்ல, என்றென்றும் ஆண்டவர் நம்மோடுகூட இருப்பார் என்கிறதுதான் இந்த வாக்குத்தத்தம். ஆகவே, துன்பமோ, வேதனையோ, கண்ணீரோ, சந்தோஷமோ, ஆசீர்வாதமோ, சாபமோ எப்படிப்பட்ட நிலைமையிலும் நாம் கலங்க வேண்டிய அவசியமில்லை. முடிவுபரியந்தம் அவர் நம்மோடிருந்து, ஒவ்வொரு நாளிலும் ஆற்றித் தேற்றி நமக்கு ஆலோசனை தந்து, நம்மை கரம்பிடித்து வழிநடத்த வாஞ்சையுள்ளவராக இருக்கிறார். நம்முடைய குடும்ப வாழ்க்கையிலே நம்மோடு உலாவி, நமக்கு தகப்பனாக இருந்து, நம்மை கரிசனையோடு பாதுகாத்து, கவலைகளையெல்லாம் மாற்றி, சந்தோஷத்தால் நிரப்ப ஆண்டவர் போதுமானவராக இருக்கிறார். ஆகவே, நாமும் அவரை அனுதினமும் முடிவுபரியந்தம் தேடுவதில், அவருக்குள் நிலைத்திருப்பதில் ஜாக்கிரதையாய் இருப்போம். அப்பொழுது அவர் நம்மை முற்றுமுடிய இரட்சிப்பார் (எபி. 7:25).

குடும்பத்தில் முதல் மகனாகப் பிறந்த ஒரு வாலிபன் வருடத்தின் ஆரம்பத்தில் தந்தையையும், சில மாதங்களுக்குள்ளாக தாயையும் இழந்தான். குடும்பத்தின் பொறுப்பு அவன்மேல் விழுந்தது. தானும் தன் தம்பி, தங்கைகளும் படித்துக்கொண்டிருந்த நிலைமை! தன் தம்பி, தங்கைகளை படிக்க வைக்க தன் படிப்பை நிறுத்தி, வேலையில் சேர்ந்தான். கஷ்டப்பட்டு உழைத்து, அவர்களை படிக்க வைத்து, வேலையில் சேரவும் உதவினான். இந்த நிலைமையில் தன்னை வழிநடத்த கர்த்தர் ஒருவரே போதுமானவர் என்று, எப்படியோ ஒரு போதகர் மூலமாய் ஆழமாய் அறிந்துகொண்டான். அதினிமித்தமாக மிகவும் சந்தோஷமடைந்தான். "அப்பா, அம்மா இல்லாத வேளையிலே ஆண்டவரை அறிந்து கொண்டேனே! இனிமேல் அவர் எனக்கு போதுமானவராய் இருப்பார். நான் கவலைப்படவேண்டிய அவசியமே இல்லை" என்று கர்த்தருக்குள் சந்தோஷமாயிருந்தான். இவனுடைய நல்ல பண்புகளைக் கண்ட மேலதிகாரி அவனை இன்னும் மென்மேலும் தானே படிக்க வைத்து, அதினிமித்தம் அவனுக்கு உயர்வான பதவியைக் கொடுத்து, அவனை தன்னுடனே உதவிக்கு வைத்துக்கொண்டார். பெற்றோரை இழந்த அந்த மகனுக்கு எத்தனை பாக்கியம் பாருங்கள்! கர்த்தரை தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது (சங். 34:10)!

ஆம், பிரியமானவர்களே! இன்று அன்பானவர்களை இழந்துவிட்டோமே, இனி என் வாழ்வு எப்படி இருக்குமோ? விசேஷமாக பெற்றோரை இழந்து நிற்கும் பிள்ளைகள் இனி என் வாழ்வு அவ்வளவுதான் என்று கலங்க வேண்டிய அவசியமில்லை. இந்த மகனைப் போன்று கர்த்தரைத் தேடி, அவருக்கு உங்கள் வாழ்வை அர்ப்பணியுங்கள். அவர் உங்கள் கவலைகளையெல்லாம் பொறுப்பெடுத்து, அதை மாற்றிப்போடுவார். உங்களை வாழ வைப்பார், உங்களோடு துணை நின்று கடைசி பரியந்தம் உங்களை உயர்த்துவார்.

ஜெபம்: "அன்பு இரட்சகரே! உம்மை அறிந்தவர்களுக்கு இழப்பு என்பதே இல்லை. அதன் மத்தியிலும் நீர் சந்தோஷத்தையும், ஆறுதலையும், நிறைவான ஆசீர்வாதத்தையும் அருளிச் செய்கிறீர் என்பதை நானும் அறிந்து, இன்றுமுதல் உம்மோடு இணைந்து வாழ்ந்து, முடிவுபரியந்தம் உம்முடைய ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள எனக்கும் அருள்தாரும். நீர் அப்படி செய்கிறபடியால் உமக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்! இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!"



சகோதரி ஸ்டெல்லா தினகரன்

எழுதிய மற்ற புத்தகங்கள்

- விலையுயர்ந்த முத்து
- முள்ளில் ரோஜா
- என் வேண்டுதலின் சத்தம்
- புத்தியுள்ள ஸ்திரீ
- கனிதரும் செடி
- சின்னஞ்சிறு தீபம்
- பாக்கியம் பெறும் குடும்பம்
  (குடும்பமாக சேர்ந்து எழுதிய புத்தகம்)
- ஜெபமே ஜெயம்

மற்றும் விபரங்களுக்கு:

சகோதரி ஸ்டெல்லா தினகரன்,

16, கிரீன்வேஸ் சாலை, சென்னை – 600 028.

இமெயில்: stella@jesuscalls.org

கவலையா....!

கண்ணீரா....!

தனிமையா....!

பிணியா....!

இரவோ, பகலோ 24 மணி நேரமும் உங்களுக்கு உதவி செய்ய காத்து நிற்கிறது, "இயேசு அழைக்கிறார்" ஜெப கோபுரம்!

உங்கள் ஜெப வேண்டுகோளைத்

தொலைபேசிமூலம் பெற்று உங்களுக்காக

ஆண்டவர் இயேசுவிடம் பிரார்த்தனை செய்ய

காத்திருக்கிறார்கள்,

"இயேசு அழைக்கிறார்" ஜெப வீரர்கள்!

நீங்கள் தொடர்புகொள்ள வேண்டிய

தொலைபேசி எண்: **044- 24955555**

ஆசிரியரைப் பற்றி

ஞானிகளை வெட்கப்படுத்தும்படியும், உள்ளவைகளை அவமாக்கும்படியும் உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும் தேவன் தெரிந்துகொண்டார் (1 கொரி. 1:27,28) என்ற வேத வாக்கிற்கிணங்க, இந்த புத்தகத்தின் ஆசிரியர் திருமதி. ஸ்டெல்லா தினகரனை தேவன் தமது ஒப்பற்ற கிருபையினால், தமது ஊழியத்திற்கென்று தெரிந்து கொண்டார்.

பல வருடங்களுக்கு முன்பு, ஆஸ்திரேலியா நாட்டிலிருந்து சென்னைக்கு வந்து ஊழியம் செய்த, தீர்க்கதரிசன வரம் பெற்ற ஒரு ஊழியர் மூலம் அறிவிக்கப்பட்டபடியே, திருமதி. ஸ்டெல்லா தினகரன் பரிசுத்த ஆவியானவர் தந்த தேவபெலத்தினாலும், ஞானத்தினாலும் "விலையுயர்ந்த முத்து" என்ற முதல் புத்தகத்தை, தனது அன்பு மகள் ஏஞ்சலை இழக்கக் கொடுத்து வேதனையின் உச்சக்கட்டத்தில் இருந்த நாட்களில், சகோதரி மைதிலி பீட்டர் என்ற ஓர் அன்பு சகோதரியின் உதவியோடுகூட வெளியிட தேவன் அருள் புரிந்தார். அதற்குபிறகு அடுத்தடுத்து, முள்ளில் ரோஜா, புத்தியுள்ள ஸ்திரீ, கனி தரும் செடி, என் வேண்டுதலின் சத்தம், ஜெபமே ஜெயம் போன்ற புத்தகங்களை பெண்களின் நல்வாழ்விற்கென்றும், சிறுவர்கள், வாலிபர்கள் ஆண்டவருக்கென்று தீபமாக எவ்வாறு பிரகாசிப்பது என்பதை விளக்கும் "சின்னஞ்சிறு தீபம்" என்ற புத்தகத்தையும் வெளியிட உதவி செய்தார்.

தற்போது "விலையுயர்ந்த முத்து" என்ற பெயரில் மாதாந்திர பத்திரிகையை வெளியிடவும் அருள்புரிந்து வருகிறார். இப்பொழுது ஆவியானவரின் வழிநடத்துதலின்படியே "நாளுக்கு ஓர் நல் வார்த்தை" என்ற தினசரி தியான புத்தகம் ஆண்டவரின் நாம மகிமைக்காக வெளியிடப்படுகிறது.

"அவர்கள் முதிர்வயதிலும் கனிதந்து, புஷ்டியும் பசுமையுமாயிருப்பார்கள்" (சங்கீதம் 92:15) என்ற வசனத்தின்படியே, ஆண்டவர் இந்நாட்களிலும் "பெண்கள் மாநாடு", குடும்ப ஆசீர்வாதகூட்டம், எஸ்தர் ஜெபக்குழு என பல்வேறு ஊழியங்கள் மூலம் உலகம் முழுவதிலும் அநேகம் பெண்களுக்கு 'ஆறுதலின் தாயாக' இவர்களை உபயோகித்து வருகிறார்.

"இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய்" (யோவான் 1:50) என்ற வாக்கின்படியே, ஆண்டவர் மென்மேலும் இவர்களை தம் ஊழியத்தில் அவர் நாம மகிமைக்கென்று உபயோகிப்பாராக!